இலக்கண விளக்கம்

பொருளதிகாரம்

(மூலமும் உரையும்)

திருவாரூர்
வைத்தியநாத தேசிகர்
இயற்றியது

பதிப்பாசிரியன்:
இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை
வித்துவான். சோம. இராமலிங்க தேசிகன்

உரிமை பதிவு செய்யப்பட்டது. விலை 4-8-0

இலக்கண விளக்கம்

பொருளதிகாரம்

(மூலமும் உரையும்)

திருஆரூர்
வைத்தியநாத தேசிகர்
இயற்றியது.

பதிப்பாசிரியன் :
இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை
வித்துவான். சோம. இராமலிங்க தேசிகன்

உரிமை பதிவு செய்யப்பட்டது.] விலை ரூ. **3-8-0**

Formes 1 to 60 Printed
AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

பொருளடக்கம்

முன்னுரை

பதிப்புரை

ஆசிரியர் வரலாறு

பதிகம்

அகத்திணையியல் 1

புறத்திணையியல் 258

அணியியல் 349

செய்யுளியல் 459

பாட்டியல் 1

சூத்திர முதற்குறிப்பகராதி 60

இலக்கண இலக்கிய மேற்கோளகராதி 67

முன்னுரை

ஸ்ரீ வைத்தியநாத தேசிகரைக் குறித்தும் அவர் இயற்றிய அரும்பெருந் தமிழ் நூலாகிய இலக்கண விளக்கத்தைக் குறித்தும் தமிழறிஞர்களுக்கு யாதும் எடுத்துச்சொல்ல வேண்டும் அவசியமே இல்லை. தேசிகருடைய பேரறிவும், ஆழ்ந்தகன்ற கல்விப் பரப்பும், நுண்ணிய ஆராய்ச்சித் திறனும் இந்நூலின் கண்ணே நன்கு விளங்கிக் கிடக்கின்றன. இந்நூல்தானும் ஐந்திலக்கணங்களையும் தெளிவுற விளக்குவதாய், கற்போர்க்குப் பெரும் பயன் அளிக்கவல்லதாயுள்ளது. இதனைக் '**குட்டித் தொல்காப்பியம்**' என வழங்கியவர்கள் தொல்காப்பியத்தின் மீது தமக்குள்ள பேரன்பையுணர்த்தினார்களெனக் கொள்ள வேண்டுமேயன்றி, உண்மை தெரிந்தாரெனக் கொள்ளுதல் கூடாது. ஏனெனின், இந்நூலகத்தே தொல்காப்பியப் பேரிலக்கணம் முழுமையுமே காணக் கிடக்கின்றது.

முதன் முதலில் இந்நூல் அச்சின் வாய்த் தோன்றியது சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பாகும். பிரதிகள் கிடைப்பது அருமையாயிருத்தல் பற்றி, இந்நூலாசிரியரின் மரபில் வந்தவரும் சென்னைப் பல்கலைக் கழகத்து லெக்ஸிகன் ஆபீஸில் தமிழ்ப் பண்டிதருமாகிய எனது நண்பர் ஸ்ரீ ச. சோமசுந்தர தேசிகரவர்கள் புதிய பதிப்பொன்று சிறந்த முறையில் வெளியிடவேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கருத்துக் கொண்டிருந்தார்கள். தம்முன்னோர்களிற் பெரும் புகழ்பெற்று விளங்கிய தமிழ்ப்பெருமகனொருவரது பெருநூல் குறித்து இவர்கள் இக்கருத்துக்கொண்டது மிகவும் பொருத்தமுடையதே. கருத்து முற்றுப் பெறுதற்குரிய முயற்சிகளையும் எனது நண்பர் செய்து வந்தார்கள்; தம் கைப்புத்தகத்தில் ஆங்காங்கு வேண்டுந் திருத்தங்கள் செய்திருந்தார்கள்; மேற்கோள் அகராதிக்கு வேண்டுங் குறிப்புக்களையும் சேகரித்தார்கள். ஆனால்,

> 'நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும்
> பெருமை யுடைத்திவ் வுலகு'

என்பது பொய்யா மொழியன்றோ? இவர்களைத் திடீரெனத் தமிழுலகம் இழந்துவிட்டது. இவர்களுடைய ஆராய்ச்சித் திறனும் பரந்துபட்ட கல்வியறிவும் இப்பதிப்பிற்கு உதவ வில்லையே என்பது என்போன்றவர்களுக்கு நீங்கா வருத்தம் விளைவிப்பதேயாகும்.

இனி, இலக்கண விளக்கப் பதிப்பு வெளிவருமோ என்ற ஐயப்பாடுகூட எனக்குத் தோன்றியதுண்டு. ஆனால் ஸ்ரீ சோம சுந்தர தேசிகரவர்களின் மூன்றும் புதல்வரும் வித்துவானு மாகிய சிரஞ்சீவி இராமலிங்க தேசிகர் தம்தந்தையின் அவாவை முற்றுவிக்க முன் வந்தனர். இச்செயல் மிகவும் பாராட்டிக் கூறத்தக்கது. ஆண்டில் இளையராயினும், இவர் ஊக்கத்திலும் உழைப்பிலும் கல்வியறிவிலும் சிறந்தவர். இலக்கண விளக்க முழுவதையும் ஏட்டு பிரதிகள் கொண்டு நன்குபரிசோதித்து, மேற்கோள் - அகராதி முதலிய அங்கங்களுடன் இப்போது வெளியிட்டுள்ளார். இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளும நோயற்ற நலவாழ்வும் அருள் புரிக!

இக்காலத்தில் இலக்கணவுணர்ச்சி குன்றி வருகிறது; அதைப் பழித்துரைப்பாரும் சிலர் உளராயினர். ஆனல உண்மையான தமிழுணர்ச்சி வேண்டுமாயின், இலக்கண வுணர்ச்சியும் அவசியமாகும. மொழி வரலாற்று முறைப்படி, தமிழிலக்கணம புதுவதாய் எழுதப்படவேண்டு மெனப் பலருங் கருதுகின்றனர். இதற்கும இவ் இலக்கண விளக்கம் முதலிய நூல்கள் உபகாரப் படுவனவேயாம். இந்நூல் வெளியிட்டிஞல் தமிழுலகம் பயனடையத் தவருதென நம்புகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் 26—6—41 } ஸ. வையாபுரிப் பிள்ளை, தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்.

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை S. சோமசுந்தர தேசிகர்

பதிப்புரை

பண்டைக்காலத்து இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் ஒன்றே முழுவதும் நாம் காணக்கிடைப்பது. தமிழில் இருந்தனவாக உரைகாரர் பலரால் குறிக்கப்பெற்றுள்ள பல இலக்கிய இலக்கண நூல்கள் இப்பொழுது கிடைத்தற்கு அரியவாயின. மொழி வளர்ச்சியடையும்பொழுது, சில வழக்குக்கள் மாறுதலடையும், புதிய சில வழக்குக்களும் தோன்றும். இவற்றிற்கு ஏற்ப, இலக்கண நூல்கள் காலந்தோறும் பெரிதும் சிறிதுமாகச் செய்யப் பெறுதல் இன்றியமையாததாகும். இவ்வின்றியமையாமை நோக்கி, 300 ஆண்டுகட்குமுன்னர் இயற்றப்பெற்ற நூலே இப்போது வெளியிடப்பெறும் இலக்கண விளக்கம். இதன் ஆசிரியராகிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்னும் பெரியார் பதினேழாம் நூற்றாண்டில் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துவந்த பேராசிரியர்களுட் சிறந்தவராவர். நூல் உரை போதகாசிரியராக அவர் விளங்கினமை தமிழுலகம் நன்கு அறிந்ததே.

இவ்வாசிரியர், நன்னூல் தண்டியலங்காரம் முதலிய நூல்களில் தம் காலத்துக்குப் பொருந்தாதனவற்றை விலக்கியும், ஏற்பனவற்றைத் தழுவியும், ஐந்திலக்கணங்களையும் விளக்கி இலக்கண விளக்கம் எனப் பெயர் தந்து இந்நூலை இயற்றினார் என்பர். இந்நூல் முதன்முதலாக யாழ்ப்பாணம் இராவ்பகதூர், சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களால் 1890ம் ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்றது. அப்பதிப்பு இப்போது கிடைத்தற்கில்லை.

இவ்வாசிரியரது பரம்பரையில் தோன்றிய எனது தந்தையார் ஸ்ரீ ச. சோமசுந்தர தேசிகர் அவர்கள் (தமிழ்ப் பண்டிதர் தமிழ்லெக்ஸிகன் ஆபீஸ், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.) இந்நூலைச் சிறப்பாக நல்ல வடிவில் அச்சிட்டுத் தமிழுலகுக்கு உதவப் பேரவாக்கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களைத் தமிழுலகம் திடீரென்று இழக்க நேர்ந்துவிட்டது. அவர்கள் தங்கள் இலக்கண விளக்கப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்த திருத்தங்களோடு இப்பொழுது இப்பதிப்பை வெளியிடும் பேறு எனக்கு வாய்த்தது. இப்பதிப்பை என் தந்தையார்

கண்டு அவர்கள் மனத்தில் இருந்த அவாத் தணிவதற்கில்லையே
என்ற வருத்தம் என்னை விட்டு அகலவில்லை.

இந்நூலை அச்சிடுங்காலத்தில் இலக்கண விளக்க ஏட்டு
பிரதிகள் இரண்டைத் தந்து இப்பதிப்புக்குப் பயன்பட
செய்தவரும், என்னிடம் அன்புடையவருமாகிய சென்னை
பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர், இராவ்சாகி
ஸ்ரீமான் ச. வையாபுரிப் பிள்ளை அவர்களுடைய உத
என்றென்றும் என்னால் மறக்கற்பாலதன்று. இந்நூலுக்
முன்னுரையும் எழுதித்தந்த அவர்கட்கு என் மனமார்ந்
வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

பதிப்பிக்கும்போது அச்சுத்தாள்களில் பல திருத்தங்க
செய்து ஐயங்களை நீக்கி இடைவிடாது ஊக்கமூட்டிய பென்னா
தூர் உயர்தரப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் பிரும்மஸ்ரீ
வே. துரைசாமி ஐயர் அவர்கள் செய்த பேருதவி என்றென்று
என்னால் மறக்கற்பாலதன்று. அவருக்கு என்னுடைய வண
க்கம் உரியதாகுக.

அச்சிடுங்காலத்தில் உடனிருந்து உதவிய ஐயங்கொண்ட
சோழபுரம் வித்துவான், கி. இராமசாமி (ஆசிரியர், திரு
நாட்டாண்மைக் கழகப் பள்ளி) அவர்கட்கும் என் நன்றி உரி
தாகுக.

இந்நூலில் சில பகுதிகளை வித்துவான் பரீக்ஷைக்குப் பாட
மாக வைத்து ஆதரித்த சென்னைச் சர்வகலாசாலைப் பாட
புத்தகக் குழுவினர்க்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பாட
புத்தகக் குழுவினர்க்கும் என் நன்றியும், பணிவும் உரியன
வாகுக. அவர்கள் உதவி மேன்மேலும் சிலவாண்டுகளுக்கு நீடி
திருக்குமேல், எழுத்ததிகாரத்தையும் சொல்லதிகாரத்தையு
விரைவில் அச்சிட இயலும். எல்லாம் வல்ல இறைவனரு
முன்னிற்க.

மயிலாப்பூர்
26-6-1941

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை
சோம. இராமலிங்க தேசிகன்.

ஆசிரியர் வரலாறு

மன்னுதென் கமலை வைத்திய நாதன்
பொன்னடிக் கமலப் போதினைச்
சென்னியிற் சேர்த்துது மதிசிறந் திடவே

என்பது இலக்கண விளக்க நூலின் முகப்பு ஏடுகளிற் காணப்படும் செய்யுள். இச்செய்யுளிற் கண்ட வைத்தியநாத தேசிகர் திருவாரூரிலே பரம்பரைச் சைவாசாரியார் மரபிலே தவவணைக் குடியில்[1] வந்த வன்மீகநாத தேசிகரின் முதன் மனைவியின் புத்திரராவர். இளமையிலே தாயை யிழக்க நேர்ந்தமையாலும், மாற்றாந் தாயினது பராமரிப்புக் குறைவாலும் வைத்தியநாதர் சிறிது துன்பமடைந்து வருந்தினாரென்று அவரது பரம்பரையினர் கூறுவர். ஆயினும் அத் துன்பம் நீண்டநாள் நிலைத்திருக்கவில்லை. அவருடைய தந்தையாரான வன்மீகநாத தேசிகரிடம் கல்வி பயின்றவரும், அக்காலத்திலே ஸ்ரீகமலை வசந்தத்தியாகேசனது அபிஷேகக்கட்டளை அன்னதானக்கட்டளைகளின் விசாரணைக் கர்த்தராயுமிருந்த அகோர முனிவர் என்பார், வைத்திய நாதரது நிலையையறிந்து அவரை யழைத்துவந்து தம்மோடு வைத்துக் கொண்டு கல்வி கற்பித்து வந்தார். கவலை யொழியவே, வைத்திய நாதர் தம் காலத்தை வீண் போக்காது கல்வி கற்பதையே நோக்க மாகக் கொண்டார். ஆசிரியராயமைந்த அகோர முனிவரும், தமது குருபுத்திரரைப் பலவிதத்திலும் அன்போடு பாதுகாத்து வந்தன ினும் கல்விப் பயிற்சியில் மட்டும் கண்டிப்பாகவே யிருந்தாரென்று ரபரம்பரைச் செய்தி கூறும். கல்வி பயிலுங்கால் இவர் சோர் ல் ஆசிரியர் தம்கையிலுள்ள கரகநீரைப் பெய்து விடுவர் என்று றுவர். இவ்வாறாகப் பல நாள் வடமொழி, தென்மொழி யிரண்டையுங் கற்றுவந்தார்.

அக்காலத்தே காசிபோந்து கங்கையாடி வருவது பெரும்பேறாகக் கருதப்பட்டு வந்தது. அகோர முனிவரும் காசி யாத்திரை செல் லும் நோக்குடையராய் அப்பயணத்திற்கு ஆவன புரிந்துவந்தார். ஒரு நாள் தம் மாணாக்கர்க்கு முனிவரர் தமது காசி யாத்திரையைக் குறித்

---

[1]தவவணை என்பது, கோத்திர (குடி)ப்பெயர் எனக் கொள்ளாமல் 'தவமணை எனத்திருத்துக' என்று கூறுவர். (பெருந்தொகை 1715. விசேடக் குறிப்பு, பக்கம் 639.) வைத்தியநாததேசிகரது புதல்வரான சதாசிவ தேசிகரே 'பிறவித்துன்பம் முழுவதையும் போக்குந் தவத்திற்கோர் அணையாயினேன்' என்று கூறுவர்; இதனை வடமொழியில் தபஸ்வின் என்று கூறுவர்.

துக் கூறினர்; கூறுதலும், மாணவராகிய வைத்தியநாதரும் தமக்கு அப்பொழுது திருவாரூரிலே ஒருபற்றுக்கோடுமின்மையால் தாமும் ஆசிரியரோடு காசிக்கு வருவதாகக் கூறினர். ஆசிரியர் அவருக்கு இளமையையும் இல்லறவாழ்க்கை நிலையினையும் வழியினது அருமையையும் எத்துணை எடுத்துக் கூறியும், அவரது மனம் அமைதியுறவில்லை. அதனைக் கண்ட முனிவரரும், காசியாத்திரைக்குத் தம்முடன் வர ஒருவாறு ஒருப்பட்டார்.

இருவரும் ஒரு நன்முகூர்த்தத்திலே திருவாரூரை விட்டுப் புறப்பட்டு இடையிலுள்ள பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருஅண்ணுமலையை யடைந்து ஒரு மடத்திற் றங்கினர்கள். முனிவரர் தமது ஆன்மார்த்த பூசை செய்யச் சென்றனர். வைத்தியநாதர் நித்திய கடன்களைக் கழித்தவளவிலே தமது பாடப் புத்தகத்தைக் கையிற்கொண்டவாறே பட்டைகட்டி யோகம் பயிலப் புகுந்தவர் மெய்மறந்து நின்றார். ஆசிரியர் தமது பூஜையை முடித்துக்கொண்டு வந்து மாணவரைப் பார்த்தார். மாணவர் இருந்தநிலை, முனிவரர்க்கு எவ்வாறு தோன்றியதோ அஃது அறிவதற்கில்லை. அவர் வைத்தியநாதரை மும்முறை வலம்வந்து சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, இனித் தாம் சீடரும் வைத்தியநாதர் குலமுறைப்படி குருவுமாயினரெனக் கூறிக் குருவுக்குரிய சிறப்புக்களையுஞ் செய்தனர்.

அகோரமுனிவரர்க்கும் வைத்தியநாத தேசிகர்க்கும் அதுவரை இருந்துவந்த தொடர்பு வேறுபட்டமையால் இனித் தேசிகர் தம்மோடு காசி வருவது ஏற்றதன்றெனக் கூறி, உடன்சாலை மாணவரும், வாயுமுள்ளா ரொருவர் திருநெல்வேலியில் இருப்பதாகவும், அவ்(செல்லுமாறும் வேண்டிக் கொண்டதோடு அவ்வன்பினருக்கு[1] முடங்கலும் எழுதிக் கொடுத்துத் தேசிகரை ஊர்போக விடுத்து, தாம் காசி நோக்கிச் சென்றார்.

வைத்தியநாத தேசிகர் திருஅண்ணுமலையிலிருந்து புறப்பட்டுத் திருவாரூர் சென்றனர். சிறிதுகாலங் கழித்து, ஆரூரினின்றும் புறப்பட்டுத் திருநெல்வேலி நோக்கிச் சென்றார். இடையிலே கயத்தாற்றில் அப்பொழுது மதுரையை யாண்ட திருமலைநாயக்கரது காரியகர்த்தராகவிருந்த திருவேங்கடநாதையரைச் சந்தித்தார். தேசிகருடைய கல்வித் திறமையையும் அடக்கம் வாய்மை பொறுமை முதலாய நற்குணங்களையும் கண்ட திருவேங்கடநாதையர் தேசிகரைத்

[1]இவ்வன்பினர் யாவரென இதுபொழுது தெரிதற்குரிய சான்றுகள் கிடைத்தில.

தமது மக்களுக்குத் தமிழாசிரியராக அமர்த்தினர். பாடங்கற்பித்து வரு நாளிலே, இலக்கணபாடம் சொல்லிவருகையில் தாம் கற்ற நன்னூ லும் சைன முனிவரான மயிலைநாதர் செய்த உரையும் பல இடங்களில் தொல்காப்பியர்கருத்துக்கு மாறுபடுவது கண்டு இயன்றவரை நன்னூற் சூத்திரங்களை வைத்துக்கொண்டு வேண்டிய விடங்களிற்றிருத்தியும் புத்துரை வகுத்தும் பாடம் போதித்து வந்தாரென்று கூறுவர். அதுவே நாளடைவில் இலக்கண விளக்கம் எனப் பெயர் பெற்றது.

வைத்தியநாத தேசிகர், மலையாளஞ்சென்று அந்நாட்டு அரசர் மேற் பல பிரபந்தங்கள் பாடி, அவராற் பல சன்மானங்களும் ஊர் களும் முற்றூட்டாகப் பெற்றதோடு அவரது அவைக்களத்தினரால்

ஓதும்பர பந்தங்க ளொருகோடி நிமிஷத் துரைக்கும்ப்ர சண்டவாக்கி
உத்தண்ட வமிர்தரச சித்திரவித் தாரகவி யுபயகவி ராசராசன்
போதும் பசுந்தமிழ்ப் பலகையுங் குடிபுகப் புலமக ளெனுங் குமாரி
புதுநலந் தனைநுகர்ந் தவனுநீ யாகிலுன் புலமையை வழுத்த வசமோ
காதுங் கடுங்கொலைப் பாகடுங் கடதடக் களியானை யரசவெள்ளங்
களிசுவைப் பரணிமட லந்தாதி தூதுலாக் காதல்செய வோதவல்லாய்
மோதுந் தனிக்கொற்ற வாயிலாய் மூதண்ட முழுதும் பரந்தகீர்த்தி
முருகுகமழ் தருகமலை வருவயித்ய நாதகுரு முத்தமிழ்க் கவிராசனே.

எனத் துதிக்கப்பட்டார். பின்னர் வடநாடு சென்று திண்டிவனத்தை யடுத்த மயிலாசலத்திலே எழுந்தருளியிருந்த சிவஞான பாலையர்மீது **பாசவதைப்பரணி** என்ற நூலும் மயிலாசலபதியான முருகன்மீது **பிள்ளைத்தமிழும்** பாடி அரங்கேற்ற, அவற்றிற்குச் சன்மானமாகப் பாலையருக்குச் சொந்தமாயிருந்ததும் சூளும்பேட்டிலுள்ளதுமான பத்துக்காணி நிலமும் ஓராள் சாகுபடி செய்யும் உப்பளமும் மானிய மாகப் பெற்றார்.[1]

திருவாரூரில் இருக்கின்ற காலத்திலே தியாகேசப் பெருமான் மீது **திருவாரூர்ப் பன்மணிமாலை, கமலாலய அம்மை பிள்ளைத்தமிழ்** என்ற சிறு பிரபந்தங்களைச் செய்தார். திரிசிராப்பள்ளியை யடுத்த கருவூர்ப்பக்கங்களில் வாழும் பன்னிரண்டாஞ் செட்டிகளென்ற ஒரு

---

[1]இந்நிலமும் உப்பளமும் இவருடை சந்ததியாரிடமிருந்து கி. பி. 1894-ம் ஆண்டில் கைமாறியது,

[2]பன்னிரண்டாஞ் செட்டிகளைக் குறித்துத் திரிசிராப்பள்ளி கஜட்டீர் தொகுதி 1-லும் எட்கர் தர்ஸ்டன் எழுதிய சாதிகள் வரலாறு (Castes and Tribes) தொகுதி ii, 93-லும் பார்க்க.

வகை வணிகமரபினரது[2] வேண்டுகோட்கிணங்க, திருவாட்போக்கிப் புராணம் பாடினார். பின்னர் அமர்நீதி நாயனார் வாழ்ந்து முத்தியடைந்த திருப்பதியான திருநல்லூரின்மேல் நல்லூர்ப் புராணம் பாடினார். இந் நல்லூர்ப் புராண ஏடுகளின் இறுதியிலே,

தவிப்பார்க் குறுதுணை வன்மீகநாதன் றனய னிந்தப்
புவிப்பாற் புலவன் வயித்திய நாதன் புகன்ற செஞ்சொற்
கவிப்பாகந் தேவர்க் கவிப்பாகம் போலின்பங் காட்டுங் கற்றோர்
செவிப்பாலுள் ளேசென்று சித்தத்தி லேநின்று தித்திக்குமே.

பொன்னெடுஞ் சடிலத் தெம்பிரா னல்லூர்ப் புராணமாக் காதைசெந் தமிழாற்
கன்னலுந் தேனு மமுதமு மதுரக் கனியும்போற் கட்டுரை செய்தான்
பன்னுமெய்ப் புகழான் றவவணை முதல்வன் பாரெலாம் வணங்குதென் கமலை
மன்னவன் கல்விக் கடலெனச் செழித்த வயித்திய நாததே சிகனே.

'இது சொன்னான் புதுப்பத்தூர்த் தவவணை கோத்திரத்தான் ஒப்பிலாமணி யென்றறிக' என்றெழுதப்பட்டுளது கொண்டு இந்நூலின் பெருமை விளங்கும்.

தேசிகர் நூல் செய்தலில் வல்லவரா யிருத்தல் போலவே பாடஞ் சொல்லுதலினும் வல்லவராவர். இவர் இடைவிடாது பாடஞ்சொல்லும் வழக்கமுடையவரென்ப. அவ்வாறு ஓயாது பாடஞ்சொல்லுவதாலுண் டாகுந் தாள்வலியைப் போக்கத் தவிட்டை வறுத்து ஒத்தடம் கொடுப்பது வழக்கமாம். அவர் தமது மனைவியாரை அழைத்து,

'தகதக தங்கம் தாளை வலிக்குது
தவிடு வறுத்துத் தா'

என்று கூறுவராம். இவரிடம் கல்வி கற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்ந் தோர் பல்லோராவர். அவர்களுள்,

கூடுஞ் சபையிற் கவிவா ரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குருவே முன்னின் தந்தை தம்மாற்
பாடும் புலவர்க ளானேமின் றிச்செம்மற் பட்டியெங்குங்
காடுஞ் செடியுமன் றோதமிழ்க் காரிகை கற்றதுவே.

என்று பாடியவர் படிக்காசுப் புலவர்.

குடந்தைப் புராணம்[1] பாடிய அரசூர் சோக்கப் புலவர் மற்றொரு சீடர். இவர் தமது ஆசிரியரைக் குடந்தைப் புராணத்தில்,

---

[1] குடந்தைப்புராணம் அச்சாகவில்லை. இது சகசி மகாராஜாவின் சபையில் அரங்கேற்றப் பட்டது.

அவமொழித் தென்னுளத் தமுத மூறுநீஞ்
சுவையெனத் தமிழ்வளஞ் சுரந்து நல்குமே
தவமெனக் கமலையி லிருந்த தேசிகன்
றவவணை வயித்திய நாதன் ருள்களே.

என்று துதித்திருக்கின்றார். சிவரகசியம் பாடிய ஒப்பிலாமணி தேசிகர் மற்றொரு சீடர் என்பது அவர் நல்லூர்ப் புராணத்தைக் குறித்துப் பாடிய சிறப்புப் பாயிரத்தால் நன்கு விளங்கும்.

இவர் கல்விச் செல்வம் பெற்றிருந்ததுபோல மக்கட் செல்வமும் நிரம்பப் பெற்றிருந்தார். இவரது மனைவியார் 'தங்கம்' எனப் பேர் பெறுவர். சதாசிவம், தியாகராஜன், சிதம்பரநாதன், வடுகநாதன், வன் மீகநாதன் என்ற பழனி என ஐவர் மக்களுண்டு. இவர்கள் ஐவரும் நன்கு கல்வி கற்ற வித்துவான்களாகவே வாழ்ந்தனர்.

இவரது காலம், திருவேங்கடநாதரது காலமாகிய பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியே யாகும். இவரது சீரையுஞ் சிறப்பையுங் குறித்து இலக்கணக் கோத்து எழுதிய சுவாமிநாத தேசிகர்,

"என்கண் காணத் திருவா ரூரிற்
[1]சிறப்புற் றிலகும் வயித்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்"

என்று கூறியுள்ளார். மேலும் இவருடைய பெருமையையும் திறமை யையும் குறித்து அக்காலத்திலே வாழ்ந்த அந்தகக் கவி வீரராகவ முதலியார் கூறிய சான்று வருமாறு :—

ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவிடா ரோநாற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பரோ—இம்பர்புகழ்
வன்மீக நாதனருள் வயித்தியநா தன்புடவி
தன்மீதந் நாட்சரித்தக் கால்[2].

வைத்தியநாத தேசிகர் செய்தனவாக இது பொழுது தெரிந்த நூல்களாவன:—

1. இலக்கணவிளக்கம் : இது எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்ற ஐந்திலக்கணங்களையும் செவ்வனே விளக்கு மொருநூல்.

---

[1]நாவலர் அச்சிட்ட இலக்கணக் கொத்தில் சிறப்புற்றிலகும் என்பது திருக்கூட்டத்தில் என்று பதிப்பிக்கப் பட்டுள்ளது.

[2]இச்செய்யுள், அந்தகக்கவி பாடியதன்றென்பது இக்கால ஆராய்ச்சியாள ரொருவது அபிப்பிராயம். 'அவர்காலம் முற்பட்ட தாகலின் அவர் மரபினரான புலவரொருவர் பாடியதுபோலும்' என்று கூறுவர் (பெருந்தொகை, விசேடக் குறிப்பு 1711.)

இது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையுடைய தாய் முறையே 158, 214, 388 சூத்திரங்களையுடையது. ஆசிரியராலேயே எழுதப்பட்ட விரிந்தஉரையையுடையது. இது குட்டித்தோல் காப்பியம் என வழங்குவதுகொண்டே இந்நூலின் பெருமை விளங்கும். 17, 18-ம் நூற்றுண்டிலிருந்த புலவர் பலர் ஓதிய இலக்கண நூல் இதுவேயாம்.

இனி, சின்னுள் முன்னர் "இலக்கணவிளக்கம் நூலும் உரையும் வைத்தியநாத தேசிகர் செய்தனவா அன்றி உரை வேறொருவர் எழுதியதா" என்ற ஒரு வினவை யெழுப்பி அதுகுறித்துப் பெரு விவாதம் பத்திரிகைகளில் நடைபெற்றது. அதுகாலை புலவரொருவர், அவரது பரம்பரையில் வந்த அடியேனை இதனுண்மைபற்றி உசாவினர். 'அடியேன் இலக்கண விளக்கம் என்ற நூற்பெயரையேனும் கேட்டதுண்டோ' என்று கேட்ட பண்டிதராக விளங்கு மொருவரும் உடனிருந்தனர்.

'என்கண் காணத் திருவா ரூரிற்
சிறப்புற் றிலகும் வைத்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்'

என்று ஈசானதேசிகரெனச் சிறப்புப்பெயர்பெற்ற இலக்கணக்கொத்து சுவாமிநாத தேசிகரே கூறியிருக்கும்போது அடியேனது கருத்து வேண்டாத தொன்றென்று விடைபகர்ந்தேன். இவ்வினு எழுதற்குக் காரணமாக விருப்பது,

முதலு முடிவுஞ் சிதர்தரப் பலவாய்க்
கிடந்த வியலைத் தொடர்ந்தொரு வழிப்பட
வீட்டலா னிலக்கண விளக்க மென்ன
நாட்டினன் வயித்திய நாத தேசிக
னன்னவன் றவத்தி னலவ தரித்த
முன்னவன் பாயிர மொழிந்துசொல் லணியுந்
தற்பவ முதன்மூன் றிற்பட நாடிப்
பகர்ந்தன னிளவல்பன் னூலு மாராய்ந்
துகந்துதொல் காப்பியத் துண்மை தோன்ற
வைந்திய லுந்தன் புந்திசான் முகத்
தந்தைமுன் னுரைத்தநூ முன்முடி பெய்த
வந்த ணுரூர்ச் சந்திர மௌலி
யருளுட் கொண்டு மருண்மன நீங்கிப்

பவங்கொளப் பாட்டிய லிலங்க வுரைத்தனன்
வாய்மைதரு தியாக ராயதே சிகனே

என்ற பாட்டியற் பதிகமேயாம். ஆயினும் ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் கூறுமாறு "தந்தையார் சூத்திரமிவை மைந்தனார் சூத்திரமிவை என்று பாகுபாடு செய்வதற்குரிய ஏது யாதுங் காண்கிலம். பாட்டியலுக்கும் இச்சிறப்புப்பாயிரமின்றேல் வைத்தியநாதரது வாக்காகவே கொள்ளப்படுதலில் யாதொரு தடையுமில்லை." என்பதே.

இனி, இது யான் முன்னர்க் கூறியது போலத் திருவேங்கட நாதரது புத்திரர்கட்குப் பாடஞ் சொல்லும்போது சதாசிவதேசிகரும் உடன்சென்று பாடஞ்சொல்லி யிருந்தாலு மிருக்கலாம். இவைகளைக் குறித்து உறுதியாகக் கூறத்தக்க சான்றுகளொன்றுமில்லை.

2. மயிலம் பிள்ளைத்தமிழ்: திண்டிவனத்தை யடுத்த மயிலாசலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பிரான்மீது பாடிய பிள்ளைத் தமிழ் நூலாகும். இது நூறுபாக்கள் கொண்டது. சொற்சுவை பொருட்சுவைகளையுடையது. இதுபொழுது முருகப்பிரான் திருமுன்னர் மாலைவேளையில் ஓதப்பட்டு வருகிறது. அச்சிடப்பட்டுளது. ஈண்டு மாதிரிக்காகச் சில செய்யுட்களைக் காட்டுவாம்.

நயகுண விலாசச் செருக்கினால் நலியுமல ரேவைத் துரக்குமோர்
செயவனிதை தாளைப் பழிச்சியே தினமு முடிசூடிச் செழித்துமே
அயிலை நெடுமாவைப் பிளக்கவே யருளிவிடு வானைத் தருக்கியே
மயிலமலை வாழக் களிப்பினால் வருமுருக வேளைப் புரக்கவே.
(காப்பு. 8.)

செங்கயற் பெருநயன தேவகுஞ் சரியன்பு செப்புமுக பதுமமுத்துஞ்
சிறுமுறுவல் புரியுமுக கமலமுத் தமுமூடல் தீர்க்குமுக முளரிமுத்தும்
மங்கையர்க் கரசிபுது மந்தார மாலையொரு வனசரர் குலக்கொழுந்து
வாரிதியில் வாராத வாரமுத மெனவந்த வள்ளியிரு வள்ளநிகருங்
கொங்கையொ டிணைத்தமுக புண்டரிக முத்தமுங் குமுதவா யமுதநுகருங்
கோகநக முத்தமும் மாகனக லதையனைய கோதையவள் காதல்புகழும்
பங்கயந் தருமுத்தும் வேண்டுமயி லைச்சயில பவளவாய் முத்தமருளே
பருதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா பவளவாய் முத்தமருளே. (43)

3. பாசவதைப்பரணி: இஃது அம்மயூராசலத்திலே எழுந்தருளியிருந்த சித்தமூர்த்தியான சிவஞானபாலய தேசிக சுவாமிகள்மீது பாடப்பட்ட பரணி நூலாகும். இது (i) கடவுள்வாழ்த்து, (ii) கடைதிறப்பு, (iii) காடுபாடியது, (iv) பேய்களைப்பாடியது, (v) கோயிலைப்

பாடியது, (vi) தேவியைப்பாடியது, (vii) பேய்முறைப்பாடு, (viii) கூளி கூறியது என்ற பகுதிகளோடு 736 தாழிசைகளையுடையது. இது மிக்க சுவையுடையதொரு நூலாகும்.

இதன் ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் என்பதற்குப் போதிய ஆதாரமில்லை யென்பது சிலரது கருத்து. இந்நூலும் மயிலம்பிள்ளைத் தமிழும் பாடியதற்காகவே சூளும்பேட்டு ஜமீனிலுள்ள நிலமும் அளமும் ஆசிரியரது பரம்பரையினர்க்கு மானியமாக அளிக்கப்பட்டு, அவரது பரம்பரையினரால் வெகுகாலம் அநுபவிக்கப்பட்டு வந்தமை ஒன்றே அக்கூற்றை மறுத்தற்குப் போதியதாகும். இந்நூல் அச்சிலுண்டு.

4. திருவாரூர்ப் பன்மணிமாலை : இது சப்தவிடங்க க்ஷேத்திரங்களி லொன்றான திருவாரூர்த் தியாகேசன்மீது பாடப்பட்ட சிறு நூலாகும். அநேக சரிதங்களை அமைத்துப் பாடியது. இது நூறு பாக்களைக் கொண்டது. அச்சேறியது.

> காவா யெனச்சிறு தெய்வந் தனைத்தினங் கைதொழுது
> நாவாய் தழும்பப் புகழ்ந்தென் பயன்கதி நாடின்மும்மை
> தேவாய தேவிற்குங் கோவாய் மணிப்பொற்சிங் காதனஞ்சேர்
> பூவாய் மதிக்கண்ணி யாரூர்ப் பிரான்பதம் போற்றுமினே.

என்பது பன்மணிமாலையில் உள்ளதொரு பாட்டு.

5. நல்லூர்ப்புராணம் : இஃது ஆண்டார் நல்லூர் என்று இது பொழுது கூறப்படும் திருநல்லூர்ச் சிவபிரானது பெருமையைக் கூறுவது. சைவசித்தாந்தக் கருத்து மலிந்தது. இது 27 சருக்கங்கொண்ட 1013 திருவிருத்தங்களையுடையது.

(i) பாயிரம். 7, (ii) நைமிசாரணியச் சருக்கம் 153, (iii) கைலாசச் சருக்கம் 60, (iv) சுந்தராசலச் சருக்கம் 42, (v) பிரமதேவ ரருச்சனை புரிந்த சருக்கம் 42, (vi) பிரமதீர்த்தச் சருக்கம் 26, (vii)பஞ்சாக்கரச் சருக்கம் 78, (viii) அக்கினி தீர்த்தச் சருக்கம் 82, (ix) அகத்தியர்க்கு மணக்கோலங் காட்டிய சருக்கம் 23, (x) சத்த சாகரம் வரவழைத்த சருக்கம் 45, (xi) சமுத்திர ராசன் செப்பேசுரம் பணிந்துமீண்ட சருக்கம் 26, (xii) பிரமதேவர் வரம் பெற்ற சருக்கம் 33, (xiii) ஐராவதம் வரம்பெற்ற சருக்கம் 39, (xiv) சுமதி காந்தனை யடைந்த சருக்கம் 40, (xv) சங்குகன்னச் சருக்கம் 23, (xvi) கிராத மோட்சச் சருக்கம் 33, (xvii) தருமசேனச் சருக்கம் 49, (xviii) தீர்க்கதுண்டச் சருக்கம் 25, (xix) எக்கியகுத்தச் சருக்கம் 12, (xx) கோவிதாரத்துவசச் சருக்கம் 22, (xxi) தலவிசிட்டச் சருக்கம் 20, (xxii) மாயவருச்சனைச் சருக்கம் 20, (xxiii) தேவர்களருச்சனைச் சருக்கம் 11, (xxiv)

தீர்த்தமான்மியச் சருக்கம் 28, (xvv) கழுகு மோசனச் சருக்கம் 10, (xxvi) வீதிவிடங்கச் சருக்கம் 28, (xxvii) அமர்நீதிநாயனார் சருக்கம் 26, ஆகத் திருவிருத்தம் 1013.

இருவினைவெண் டிரைமாயக் கருங்கடலைத் தணித்தேற்றி
யெண்ணி லாற்றற்
பொருவருமா ணவச்சேறு கருணைநீ ராற்கழுவிப்
போக்கிப் போகா
நிரதிசயா னந்தநெடு நிலவெறிப்ப வுயர்முத்த
நெடிய தாம
மருவுதன தணியாக மகிழ்காசி வாரணத்தை
வணங்கி வாழ்வாம்.
உலகெலாம் படைத்தருளி நிலைபெறுத்தி யிளைப்பொழிய
வொடுக்கி மீட்டுந்
தொலைவிலா வினைப்பயன்க டுய்ப்பவவை திரோபவித்துத்
தொடர்ந்து நீங்கா
வலகிலா ணவச்சத்தி யாவரண விடநீக்கி
யருளா நிற்குந்
தலைவர்மே தகுநல்லூர் சவுந்தரநா யகரவர்தா
டலைமேற் கொள்வாம்.

என்பன காப்புச் செய்யுட்கள்.

ஈறில் போக மெவர்க்கு மளிப்பதும்
மாறி லாத வரகதி யுய்ப்பதுந்
தேறில் யாதது தேர்ந்துரை செய்யெனக்
கூறி னைவ னுங்குறித் தோதுவான்.

* * *

உறுதி யாவு முதவுமத் தன்மைய
திறுதியில் லைந்தெழுத் தன்றி யில்லையா
னறும லர்க்கம லத்துறை நான்முக
னறிதி நீதென வாங்கவர்க் கோதினான்.

* * *

எங்களு யகனே போற்றி யெவர்க்குமே லவனே போற்றி
பொங்கரா வணிந்தாய் போற்றி புரிசடைப் புனிதா போற்றி
செங்கண்மா லறியாய் போற்றி திருமலைச் சோக்கி யென்னும்
மங்கைபங் குடையாய் நல்லூர் வரதனே போற்றி போற்றி.

* * *

இத்திறம் பற்பல வினிதெடுத் தெம்பிரா
னத்தகை யஞ்செழுத் தமைதியவ் வானவர்க்

குத்தம முனிவிர்கா ளோங்குதா ரகமுடன்
சித்தமின் புறவுப தேசஞ் செய்தான்.

இவை பஞ்சாக்கரச் சருக்கத்திற் காணப்படுவன.

பொங்குநீர்ப் பொன்னி நாட்டிற் போதவிழ்த் தளிபண் பாடும்
பங்கயப் பழன வேலிப் பழையாறைப் பதியில் வாழ்வார்
மங்கல மிகுந்த செல்வ வணிகர்தங் குலத்தில் வந்தார்
அங்கணர்க் கன்பு மிக்கா ரமர்நீதி யென்னும் பேரார்.

எந்தையா ரடியார்க் கென்று மீறில்பே ரன்பு தன்றாற்
பந்திபந் திகளாய் வைத்துப் பாங்குட னன்ன மிட்டுக்
கந்தைகோ வணங்க ளீவார் காலினுங் கலத்தி னாலும்
வந்திடு நிதிக ளுய்த்து வான்கதிப் பயனைக் கொள்வார்.

* * *

கோவண மொளித்த கள்வர் குரைகழற் சரணம் போற்றி
காவல்கொண் டுய்த்தி யென்னக் கருணையா லென்கைத் தந்த
தாவில்கோ வணத்தைக் காணேன் றமியனேன் றவறெண் ணாது
பூவணப் பட்டு நூலார் புனைந்தகோ வணங்கொள் கென்றார்.

என்றலுஞ் சினந்து பெம்மா னெரியெழ விழித்து நோக்கி
நின்றவர் தம்மைச் சீறி நிகரில்கோ வணங்கள் கொள்வா
னொன்றிய வன்பன் போல வுலகினை மருட்டு கின்றாய்
சென்றது கொணர்தி யுன்பொய்ச் சிமிழ்ப்பினிற் படேன் யானென்றான்.

என்பன அமர்நீதிச் சருக்கப் பாக்களுட் சிலவாம்.

"தவிப்பார்க் * * சிந்தத்திலே நின்று தித்திக்குமே"

"பொன்னெடுஞ் சடிலத் தெம்பிரா * * நாத தேசிகனே"

என்பன ஏடுகளின் இறுதியில் எழுதப்பட்டுள்ள சிறப்புப்பாயிரம்.

6. திருவாட்போக்கிப்புராணம்: இஃது இரத்தினகிரியென்றும், மாணிக்கமலை யென்றும், ஐயர்மலை யென்றும், சிவாயமலை யென்றும் சொல்லப்படும் வாட்போக்கி க்ஷேத்திர மகிமையைக் கூறுவது. இப்புராணம் இவர் பாடிய செய்தி முன்னர்க் கூறப்பட்டுளது. இந்தப் புராணத்தில்.

நலங்கொளா ரணிய மென்னு நைமிச மான வாறு
மிலங்குமா ணிக்கக் குன்ற மிருநிலத் தடைந்த வாறுந்
துலங்குமக் குன்ற மேவுந் தொல்புகழ்ச் சிறப்பி னோடுஞ்
சலங்கொளும் வாயு சேடன் சார்ந்தருச் சித்த வாறும்.

இந்திரன் பணிந்த வாறு மிடியருச் சித்த வாறுஞ்
செந்தமிழ் முனிவன் பூசைச் சிறப்போடு ரோம சப்பே
ரந்தமின் முனிவன் பூசித் தரனருள் பெற்ற வாறுஞ்
சந்திர காசம் கொண்டு தடவரை பிளந்த வாறும்.

என்ற அளவுமட்டில் ஸ்ரீ தேசிகராற் செய்யப்பட்டன.

அன்னமார் வயல்சூழ் மாணிக்க மலையி னுரிய மொழிப்புரா ணத்தைக்
கன்னலுந் தேனு மமுதமும் போலக் கனிந்தசெந் தமிழினாற் செய்தான்
பன்னுசெந் தமிழுக் ககத்தியன் போலப் பாரினில் வந்தவ தரித்து
மன்னுதென் கமலை மாநகர் மருவும் வைத்திய நாததே சிகனே.

என்பது அப்புராணச் சிறப்புப் பாயிரம்.

ஆனால் அச்சிடப்பட்டுள்ள வாட்போக்கிப் புராணத்தில் தேசிகருடைய பாக்களின் இடையே வேறு செய்யுட்கள் மடுக்கப்பட்டும் ஆரியராசன் சருக்கம், சிற்றுயனார்ச் சருக்கம் என்பவை திருவாவடுதுறை இராமலிங்கத் தம்பிரானால் பாடிச் சேர்க்கப்பட்டும், வயிரப் பெருமாள் சருக்கம் முத்துசாமி சுவாமி யென்பவராலும், பொன்னிடு பாறைச் சருக்கம் அ. சிவானந்தசாகர யோகீசுரராலும் பாடிச்சேர்த்தும் அச்சிடப்பட்டுமுளது. தேசிகர் பாடிய புராணச் செய்யுள் நானூறுக்கு உட்பட்டதாகவே யிருக்க, அச்சிடப்பட்ட புராணம் 845 செய்யுட்களையுடையதாய் 'கமலைமாநகர்' வயித்தியநாத தேசிகரா லியற்றப்பட்டது என்று வழங்குகிறது. இது கம்பன் தன்னுடைய வாழ்நாளிலேயே தன் இராமாயணத்தில் தன்பாக்களும் இடையிடையே சில கேட்டதுண்டு என்ற கதையை உறுதிப்படுத்தும்.

7. கமலாலய அம்மை பிள்ளைத்தமிழ் : இது திருவாரூரிற் கோயில் கொண்டிருக்கும் பராசத்தியின் மேற்று. நூறுபாக்களோடு காப்புங் கொண்டது. இதுவே இவர் பாடிய முதல் பிரபந்தம் என்று தோற்று கிறது.

மங்கலம் பொலியுஞ் செங்கண் மாலே
சங்கு சக்கரந் தரித்த லானுங்
காவற் கடவு ளாத லானும்
பூவினட் புணர்த லானுமுற் கூறிக்
கங்கையும் பிறையுங் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதுல கீன்ற பழுதறு மிமயப்
பருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்து
நாமகள் கொழுநன் மாமுகி லூர்தி

யொற்றைக் கொம்பன் வெற்றி வேல
னெழுவர் மங்கைய ரிந்திரை வாணி
யுருத்திர ரருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை யூர்தியிற் பொலிவோ ரனைவருங்
காப்ப தாகக் காப்புக் கூறல்.

முறையே யாயினும் இவர் வீரபத்திரக் கடவுளுக்கும் காப்புக் கூறியுள்ளார். 'மயிலம் பிள்ளைத்தமி'ழிலும் வயிரவருக்குக்காப்புண்டு. பாக்கள் மிகுந்த நயமுடையனவாயும் ஓசையும் அழகுமுடையனவாயும் உள்ளன. அம்பிகையின் அருள் பெற்றதாகச் செய்யுள்கள் காணப்படுகின்றது. 'என் சிந்தையுள்ளே, யோர்பூத்த பாட்டளி துதையாக் கமலத் திருந்தருள்செய் கவுரிமாதா' என்றும் 'மன்சரிதை விட்டிழந்த மடம்பெற்றேனை மகிழ்ந்தெடுத்து' என்றுங் கூறுவர். பன்மணிமாலையிற் கூறியாங்கு 'செத்துப் பிறக்குங் கடவுளரைச் சிந்தையெண்ணியுழலாது, என்று கூறுவர். இச்சிறுநூலிற் காணக்கிடக்கும் கதைகள் அளப்பில. பலகதைகள் விளங்கவில்லை.

துண்டப் பிறையணி சோதியிடந்திகழ் தூய துகிற்கொடியே
சுற்று மடியவர் பச்சிலை கொண்டடி சூடு மருட்கடலே
கண்டந் தரிவிட மண்டி யெழாவகை கைமலர் பற்றமுதே
காயும் பவவிருள் மாயும் படிவிடு காந்தத் தனிமணியே
கொண்டல் படிந்திடு மாளிகை மேலுறை கோல நுதற்றிருவார்
கூருகிர் தைவரும் யாழிசை மென்மொழி கூறும் படியறியா
அண்டர் மகிழ்ந்துறை யாரூர் தருமயி லாடுக செங்கீரை
ஆதிப் பரையுமை கோடிக் கதிர்மணி யாடுக செங்கீரை.

8. *மெய்ஞ்ஞானவிளக்கம் என்னும் தமிழ்ப் பிரபோத சந்திரோதயம்: இதனைக்குறித்த செய்திகளைத் திருவேங்கடநாதர் சரிதத்திற் காண்க.

* எனது தந்தையார் எழுதிய 17-ம் நூற்றாண்டுப் புலவர் என்னும் நூலிற் காண்க.

பதிகம்

பொன்மலை நின்று தென்மலை யுற்ற
வகத்திய முனிவன் சகத்தவர்க் காகச்
செந்தமி ழிலக்கண முந்துநூல் கிளப்பப்
பல்கா லுன்னித் தொல்காப் பியமுனி
யியற்றமிழ் முதலினின் றெடுத்துரைத் திடவத
ேனட்பங் கண்டு தட்பங் கூறா
தைந்திய லுந்தம் புந்தியின் வேறுகொண்
டுரைத்த புலவர் வரைந்த வுரையான்
முதலு முடிவுஞ் சிதர்தரப் பலவாய்க்
கிடந்த வியலைத் தொடர்ந்தொரு வழிப்பட
வீட்டலா னிலக்கண விளக்க மென்ன
நாட்டினன் வைத்திய நாத தேசிக
னன்னவன் றவத்தி னுலவ தரித்த
முன்னவன் பாயிர மொழிந்துசொல் லணிபுந்
தற்பவ முதன்முன் றிற்பட நாடிப்
பகர்ந்தன னிளவல்பன் னூலு மாராய்ந்
துகந்துதொல் காப்பியத் துண்மை தோன்ற
வைந்திய லுந்தன் புந்திசான் றுகத்
தந்தைமுன் னுரைத்தநூ ருன்முடி பெய்த
வந்த ணூரர்ச் சந்திர மௌலி
யருளுட் கொண்டு மருண்மன நீங்கிப்
புலங்கொளப் பாட்டிய லிலங்க வுரைத்தனன்
வாய்மைதரு தியாக ராய தேசிகனே.

இது தொன்றூற்பொருளை இந்நூலுறச்செய்த கருத்தன் வழிமுறைதெரித்துக் கிரமையின்முற்றிய பரிசும் பகர்ந்தது.

(இ-ள்.) *மேருவரையினின்று பொதியவரையுற்ற அகத்திய மகாமுனி தமிழ்நாட்டுள்ளோர்க்கு உறுதிபயப்ப இயலிசை நாடகமென்னுஞ் செவ்விய தமிழிலக்கணங்களை முதனூற் பிறவிதோன்றக்கூற; அந்நூலைப் பலகாலும் ஆராய்ந்து பழைய காப்பியக்குடியின்வைகுதலாற தொல்காப்பிய னென்னுங் காரணபெயருந் திரணதூமாக்கினியெனத் தந்தையாகிய சம தக்கினியார் இட்ட இயற்பெயருமுடைய இருடி முதனூலி*

னின்றும் இயற்றமிழிலக்கணத்தை எடுத்துக்கொண்டு "மயங்கா மரபி னெழுத்து முறை காட்டி" உரைக்க; அந்நூலிற் கூறிய அறிவின்முதிர்ச்சி நோக்கிக் குளிர்ந்த நலத்தை விரும்பாமல் எழுத்துஞ் சொல்லும் பொருளும் அணியும் யாப்புமென்னும் ஐந்திலக்கணங்களையும் முறைபிறழ்ந்தும் முடிபொவ்வாதும் பயப்பாடின்றியும் பரிசுபெறாது மயங்கியும் வழுவியும் ஆசிரியர் கருத்துக்கொப்பக் கூறாது வேறாக இலக்கணங் கொண்டு கூறிய புலவர் பலராகையான் அவரவர் வரம்புறக் கூறிய உரைத்திறனும் பலவாக, முதலொடு முடிவுஞ் சிந்திப் பலவாகிக் கிடந்த இலக்கணங்களையெல்லாந் தொடர்ந்து ஒரு திறனமைவுறக், கேட்போர்க்கு இனிமையுற, இலக்கணங்களைத் தீபமொப்ப விளக்குதலான் இலக்கணவிளக்கமென்று பெயர்விளங்க, வைத்தியநாததேசிகன் இந்நூலுரைத்து உரையிட்டு நிலைநிறுத்தினான். அத்தன்மையுடையோன் அரியதவத்தினாற் திருவவதாரஞ்செய்த மூத்தபுதல்வனான சதாசிவ தேசிகன் இந்நூற்குச் சிறப்புப்பாயிரங் கூறிச் சொல்லணி இலக்கணமுந் தற்பவந் தற்சமந் தேசியமாகிய மூவகைச்சொற்களிற் பட ஆராய்ந்து கூறினான். அவற்குப் பின்னர் அவதரித்தோன், தமிழ்நூல் பலவும் ஆராய்ந்து உயர்ந்து, அந்நூல்களிற் கூறிய பொருளினுக்கு வேறுறாமற், தொல்காப்பியநூலிற்கூறிய மெய்மைவிளங்க, ஐந்திலக்கணங்களையுந் தனது மதியே கரியாகத், தந்தை முன்செய்த இலக்கணவிளக்கநூல் முற்றுப்பெறத், தன்னிடைவந்து இரந்தோர்க்கு அறிவின் முதிர்ச்சியைப் பயக்குந் "திருவாரூரி னரியணையதன்மேற் பரிவுட னமர்ந்து—வளர்திட வெண்ணி யிளம்பிறை முடித்தோன்" திருவருளை உட்கொண்டு, மனத்திடத்துள்ள மயக்கம் நீங்கிக், கேட்குநர்க்கு "அறிவினூறு மமுதென நிறையப்" பாட்டியலிலக்கணத்தை விளங்கச்செய்தான் கிரியையொழுக்கமும் ஞானவொழுக்கமும் உணர்த்தி என்கண் அவிச்சைநீங்க இன்பமாகிய வீடுபேற்றின் உபாயத்தினை எனக்கு அருளாநிற்குந் தியாகராச தேசிகனென்னும் இயற்பெயரையுடைய குரவன். (எ-று.)

இப்பதிகச் செய்யுள் செய்தான் வைத்தியநாத தேசிகன் மகன் பாட்டியல் பகர்ந்த தியாகராச தேசிகன் மாணுக்கனாகிய புதல்வன் வைத்தியநாததேசிகனென்றறிக.

இந்நூலில் மேற்கோளாக எடுத்தாண்ட நூற்கள்

அகநானூறு—அகம்
அத்தியூர்க்கோவை
அம்பிகாபதிக்கோவை—அம்பி
ஆசாரக்கோவை
இலக்கண விளக்கம்—இ. வி
இறையனார் களவியல்
ஐங்குறுநூறு—ஐங்—தனி
ஐந்திணையைம்பது—ஐந்தி - 50
கப்பற்கோவை—கப்பற்
கலித்தொகை—கலி
குறுந்தொகை—குறுந்
சிற்றெட்டகம்
சிறுபாணாற்றுப்படை = சிறுபாண
சீவக சிந்தாமணி—சீவக
செயிற்றியம்
தகடூர் யாத்திரை—தகடூர்
தஞ்சைவாணன் கோவை—தஞ்சை—தஞ்சை—தனி
[1]தண்டியலங்காரம்—தண்டி
திணைமாலை நூற்றைம்பது — திணைமாலை - 150
திணைமொழி ஐம்பது
திருக்குறள்—குறள்
திருக்கோவையார் — கோவையார் — கோவை
தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் பக்கம்—தொ-பொ-இளம். பக்
தொல்காப்பியம் பொருளதிகாரம் சூத்திரம்—தொல் - பொருள். சூ
[2]தொல்காப்பியம் பொருளதிகாரம் பக்கம்—தொல் - பொருள். பக்
நம்பியகப்பொருள்—நம்பியகப்
நற்றிணை—நற்
நாலடியார்—நாலடி
நெடுநல்வாடை—நெடுநல்
நெல்லைக்கோவை
பட்டினப்பாலை—பட்டினப்
பழமொழி
பன்னிரு படலம்
பாரதம்
புறநானூறு—புறம்
புறப்பொருள் வெண்பாமாலை—பு. வெ
பெரும்பாணாற்றுப்படை — பெரும்பாண்
பொருநராற்றுப்படை
மதுரைக்காஞ்சி
மதுரைக்கோவை
மலைபடுகடாம்—மலைபடு
முத்தொள்ளாயிரம்—முத்தொள்
யாப்பருங்கலக் காரிகை பக்கம்—யா - கா - பக்
யாப்பருங்கல விருத்தி பக்கம்—யா-வி-பக்

[ ] * புத்தகத்தில் இக்குறிகள் இடப்பட்ட இடங்கள் சில ஏட்டுப் பிரதிகளில் காணப்படவில்லை.

[1] கழகப் பதிப்பு.

[2] கனகசபாபதி பிள்ளை பதிப்பு.

குறிப்பு :—இக்காலத்தார் கடினசந்திகளை விலக்கிவரும் முறைக்கு ஏற்ப, இந்நூலின் உரையிற் பல இடங்களிலே சந்தியை ஒருபால் தழுவியும் ஒருபால் தழுவாதும் அச்சிட்டுள்ளேன். 'அம்முதற் பொருளாற் - றோன்றுதல் பற்றி' (பக். 6. வரி - 29), 'நிலமக்களுட் தலைமக்களும்' (பக். 26. வரி - 13) என்பன உதாரணங்கள். திரு. தாமோதரம் பிள்ளையவர்களும் இவ்வாறே அச்சிட்டுள்ளார்கள். இப்புது முறையினையே நான் பின்பற்றியிருக்கிறேன்.

உ

சிவமயம்

இலக்கண விளக்கம்

மூன்றாவது

பொருளதிகாரம்.

க-வது அகத்திணையியல்

1. உமையுரு வுருமடுத் துலகினைப் பொழிக்கும்
இமையவ னடிபணிந் தியம்புவன் பொருளே.

என்பது சூத்திரம். மேற் பாயிரத்துள் "எழுத்துமுதன் மூன்றை யும்" என நிறுத்தமுறையானே எழுத்துஞ் சொல்லும் உணர்த்திப் பொருள் உணர்த்துகின்றாராகலின் இவ்வதிகாரம் பொருளதிகாரமென் னும் பெயர்த்து. பொருளை உணர்த்திய அதிகாரமென விரிக்க. பொரு ளென்றது அதன் இலக்கணம்; அதிகாரமென்றது முறைமை. பொருளா வது மேல் உணர்த்திப்போந்த சொற்றொடர் கருவியாக உணரப்படுவதாக லின் மேல் அதிகாரத்தோடு இயைபுடைத்தாயிற்று. இவ்வதிகாரத்துள் ஐவகையோத்தினாற் பொருளிலக்கணம் உணர்த்துகின்றார். அவற்றுள் இம்முதலோத்து அகத்திணை இயல்பு உணர்த்திற்றாகலான் அகத்திணை யியலென்னும் பெயர்த்து. அகமென்றது உள்ளம், திணையென்றது ஒழுக்கம், இயலென்றது இலக்கணம்; எனவே, அகத்திணையியலென்றது உள்ளத்தின்கண்ணே நிகழும் இன்பமாகிய ஒழுக்கத்தினது இலக்கணம் என்றவாறாயிற்றென்பது. இதனுள், இத்தலைச்சூத்திரங் கூறத்தொடங் கிய பொருள் இனிது முடியும்பொருட்டு வணக்கமும் அதனான் முடி பெய்தும் பொருளும் உணர்த்துவதாகிய சிறப்புப்பாயிரங் கூறுகின்றது.

(இ-ள்.) உமாதேவியினது திருவுருவைத் தனது திருவுருவின் கண்ணே அடக்கி உலகத்து இளைப்பினை ஆற்றும் இறைவனது தாளை வணங்கி யான் சொல்லுவன் பொருளிலக்கணத்தை. (எ-று.)

ஈண்டு உலகமென்றது உலகினையும் உலகினுள்ள சீவான்மாக்களை யும், ஆகுபெயராற் பொருளென்றது அதன் இலக்கணத்தையும் உணர்த்

திநின்றன. ஏனையவற்றிற்கும் ஏற்குமாறு "மலைமகளொருபால்" என்னுஞ் சூத்திரத்திற்கு உரைத்தாங்குப் பொருள் விரித்து உரைத்துக் கொள்க. (1)

2. போக்கறு மரபிற் பொருளெனப் படுவது
நோக்கரும் வீடு நுவற்சிசெல் லாமையின்
அறம்பொரு ளின்ப மாகுமற் றதுவே
அகனும் புறனுமென் றுயிரு பாற்றாய்
வகைபட வந்த வணிநலந் தழீஇச்
செய்யு ளிடவயிற் புல்லிய நெறித்தே.

இது கூறுவலென்ற பொருளாவது, விரித்துக்கூறும் உலக நடையானும் வேதநடையானும் இத்துணைப் பகுதிப்படுமெனவும் அதுவே தொகுத்துக்கூறுந் தமிழ்நடையான் இத்துணைப் பகுதிப்பட்டு இவ்வாறாகி இன்னுழிவிளங்கும் இயல்பிற்றெனவுங் கூறுகின்றது.

(இ-ள்.) *குற்றமற்ற இயல்பினையுடைய பொருளென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, மனத்தான் நோக்குதற்கு எட்டாத வீடு துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறுதற்கு எட்டாமையின் அதனை விடுத்து, விரித்துக்கூறும் உலக நடையானும், வேதநடையானும், அறமும், பொருளும், இன்பமுமென மூன்றுவகைப்படும். அங்ஙனம் விரித்துக்கூறப்படும் பொருளே தொகுத்துக் கூறுந் தமிழ்நடையான் அகப்பொருளும் புறப்பொருளுமென இரண்டு வகைத்தாய்க், குணமும் அலங்காரமுமெனக் கூறுபட வந்த அணியான் உளதாகிய சிறப்பினைப் பொருந்திச், செய்யுளிடத்தே சார்ந்து விளங்கும் இயல்பினையுடைத்தாம். (எ-று.)*

அறமாவது, மனுமுதலிய நூல்களின் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூன்றுவகைப்படும். அவற்றுள் ஒழுக்கமாவது, அந்தணர்முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளில் நின்று அவற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல். வழக்காவது, ஒரு பொருளைத் தனித் தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள்மேற் செல்வது; அது கடன்கோடல் முதலிய பதினெட்டுப் பதத்ததாம். தண்டமாவது, அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினோரை அந்நெறி நிறுத்தற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தகவொறுத்தல்.

இனி, இல்லறத்தின் வழிப்படுவனவாகிய பொருள் இன்பங்களுட் பொருளாவது அரசநீதி துணைக்காரணமாக ஈட்டப்படுவது; அது மணி பொன் நெல் முதலாயினவாம். இன்பமாவது, பொருள் துணைக்காரண

மாக ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலன்களும் நுகர்தற்சிறப்புடைய தாம். அறம் இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலானும், பொருள் இம்மை மறுமையென்னும் இரண்டனையும் பயத்தலானும், இன்பம் இம்மை யொன்றனையே பயத்தலானும் இம்முறை வைத்தார்.

சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்துவழிப் படூஉந் தோற்றம் போல. —[புறம். 31]

என்றார் பிறரு மெனக் கொள்க. அகம் முதலாயினவற்றின் விகற்பமெல்லாம் மேலே கூறுபவாகலின் அவை ஆங்காங்கு உணர்க. (2)

3. அகமெனப் படுவது வகையோரு மூன்றனுள்
இன்ப மென்னு மியல்பிற் றாகி
அகத்துநிக ழொழுக்க மாதல் வேண்டும்.

இது மேல் நிறுத்தமுறையானே அகப்பொருளாவது இன்னதென அதன் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்.) அகமென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது மேற்கூறிப் போந்த அறமுதலாகிய மூவகைப் பொருள்களுள் இன்பமென்னும் இயல்பினையுடைத்தாகி உள்ளத்தின்கண்ணே நிகழும் ஒழுக்க மாதலை விரும்பும் ஆசிரியன். (எ-று.)

ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியுங் கூடுகின்ற கூட்டத்திற் பிறந்த இன்பம், அக்கூட்டத்தின் பின்னர், அவ்விருவரும் ஒருவர்க் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாகலின் அதனை அகமென்றார். எனவே, அகத்தே எழுகின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயராம். (3)

4. அதுவே கைக்கிளை யைந்திணை யேனைப்
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்.

இது மேல் அகமெனப்பட்ட பொருட்கு வகையும் பெயருங் கூறுகின்றது.

(இ-ள்.) மேல் அகப்பொருளெனக் கூறிப்போந்த அகத்திணைதான் கைக்கிளைத்திணையும் ஐந்திணையும் ஒழிந்த பெருந்திணையு மென எழியல் பினையுடைத்தாம். (எ-று.)

'கைக்குடை கையேடு கைவாய்க்கால்' எனப் பெருமையில்லாதன வற்றை வழங்குபவாகலிற் கையென்பது சிறுமைபற்றி வருவதோர் இடைச் சொல்லென்றுங் கிளையென்பது உறவென்றும் பொருள்கொண்டு, கைக்கிளையென்பதற்குப் பெருமையில்லாத தலைமக்கள் கிளைமையென்று

பொருள்கூறுவாரும்[1] உளர். அற்றன்று; மேற் கைக்கிளை ஒருதலைக்காம மென்பதற்கு இயைய, அதற்கு யாம் ஒருமருங்குபற்றிய கேண்மை யென்றே பொருள்கூறுதும். ஐந்திணை ஐந்துதிறத்தனவாகிய ஒழுக்கம். அவையாமாறு மேற்கூறுப. எல்லாவற்றினும் பெரிதாகிய திணையாகலிற் பெருந்திணையாயிற்று. என்னை? எண்வகை மணத்தினுள்ளும் கைக்கிளை முதல் ஆறு திணையும் நான்கு மணம் பெறத் தான் ஒன்றுமே நான்கு மணம் பெற்று நடத்தலானென்பது. (4)

5. கைக்கிளை யைந்திணை பெருந்திணை முறையே
ஒருதலைக் காமமு மன்புடைக் காமமும்
பொருந்தாக் காமமும் பொருந்துத லுடைய.

இது முற்கூறிய எழுவகைத்திணைக்கு உரிய காமப்பொருள் உணர்த்துகின்றது.

(இ-ள்.) கைக்கிளையும் ஐந்திணையும் பெருந்திணையும் முறையானே ஒருதலைக்காமமும் ஒத்தகாமமும் ஒவ்வாக்காமமுமாகிய காமப் பகுதிகளைப் பொருந்துதலுடையனவாம். (எ-று.)

எனவே, அகத்திணை விகற்பமாகிய ஏழனுள்ளும் அகமெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவன ஐந்திணையே என்பதூஉம் ஏனையிருதிணையும் அத்துணைச் சிறப்புடையவல்ல என்பதூஉம் கூறியவாறாயிற்றென்பது.(5)

6. அவைதாம்,
புனைந்துரை யுலகிய லெனுந்திற மிரண்டினுந்
தொல்லியல் வழாமற் சொல்லப் படுமே.

இஃது எழுவகைத்திணையும் இத்துணைப் பகுதியான் இவ்வாறு கூறப்படுமென்கின்றது.

(இ-ள்.) மேற் காமப்பகுதிக்கு உரிமைகூறிய அகத்திணை ஏழும் நாடகவழக்கும் உலகியல்வழக்குமென்னும் இருபகுதியானுஞ் சங்கமரீஇனுரை உள்ளிட்ட சான்றோர் பாடலுட் பயின்று தொன்றுதொட்டு வரும் இயல்பிற் றிரியாது கூறப்படும். (எ-று.)

ஈண்டு நாடகவழக்கென்றது, எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல்போலாது, உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரைவகையாற் கூறும் நாடக இலக்கணம்போல, யாதானும் ஒரோவழி ஒருசாரார்மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி, இடமுங் காலமும் நியமித்துக் கூறுஞ் செய்யுள் வழக்கென்றே கோடும். மற்று இல்லோன் தலைவனாக இல்லது புணர்க்கும் நாடகவழக்குப்போலப் புனைந்துரை வகையாற் கூறுவதென்னின்,

---

1. இளம்பூரணர்.

உலகியல் இன்றாம். இன்றாகவே, ஆகாயப்பூ நாறிற்றென்றுழி அது சூடக் கருதுவாருமின்றி மயங்கிக் கூறினாரென்று உலகம் இழித்திடப்படுமாறு போல இழித்திடப்படுதலானும், இல்லதொன்று கேட்டார்க்கு மெய்ப் பாடு பிறந்து இன்பஞ்செய்யாதாகலானும், உடன்கூறிய உலகியல்வழக் கினை ஒழித்தல் வேண்டுமாகலானும் பொருந்தாதென்க.

அவைதாம்' எனப் பொதுப்படக் கூறினாரேனுந் 'தொல்லியல் வழா மல்' என்றலின் இங்ஙனம் பயின்றுவருவது ஐந்திணையுமே ஆதலின் அவையே இவ்வாறு கூறப்படுமென்றும் ஏனைக் கைக்கிளையும் பெருந் திணையும் அங்ஙனம் பயின்றுவாராமையிற் சிறுபான்மை கூறப்படுமென் றும் உய்த்துணர்ந்துகொள்க.

வரலாறு:—

மனைநெடு வயலை வேழஞ் சுற்றுந்
துறைகே ழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே
அல்ல னென்னுமென் றடமென் றோளே. —[ஐங். 11]

இவ்வைங்குறுநூற்றுள் முதற்பொருள் முதலிய மூன்றுங் கூறலின் நாடகவழக்கும், தலைவனைத் தலைவி கொடுமைகூறல் உலகியலாகலின் உலகியல்வழக்கும் உடன்வந்தது. இவ்விரண்டுங் கூடிவருதலே புலனெறி வழக்கமெனப்படுமெனக் கொள்க. புலனெறிவழக்கமெனினுஞ் செய்யுள் வழக்கமெனினும் ஒக்கும்.

முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே -[குறுந். 167]

இஃது உலகியல் வழக்கே வந்தது. பிறவும் அன்ன. (6)

7. குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்த லெந்திணைக் கெய்திய பெயரே.

இது மேல் ஐந்திணையென்றவற்றின் பெயரும் முறையுங் கூறுகின் றது.

(இ-ள்.) குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலும் மேல் ஐந்திணையெனக் கூறிப்போந்தவற்றிற்குப் பொருந்திய பெயராம். (எ-று.)

முதற்பொருள் முதலிய மூன்றுங் கொண்டே இவ்வைந்திணையா மென மேற் கூறுபவாகலின் இவற்றிற்கு இப்பெயரும் முறையும் முறை யானே கருப்பொருள்பற்றியும் உரிப்பொருள்பற்றியும் ஆயினபோலும் என்பது. அற்றேற் கருப்பொருள் பலவன்றே? அவற்றுட் குறிஞ்சி முத லாயினவற்றாற் பெயர்பெற்றவாறு என்னையெனின்,

கருங்கோற் குறிஞ்சி —[குறுந். 3]

எனவும்,

கொடிறுபோல் காய வாலிணர்ப் பாலை —[நற். 107]

எனவும்,

முல்லையந் தண்பொழில்

எனவும்,

மருதமர நிழல் —[அகம். 37]

எனவும்,

பாசடை நிவந்த கணைக்கா னெய்தல் —[குறுந். 9]

எனவுஞ் சான்றோரான் எடுத்துக் கூறப்படுதலின் அவற்றுள் அவை சிறத்தலானென்க. உரிப்பொருள்பற்றி முறையாயினவாறு மேல் உரிப் பொருள் உரைப்புழிக் காண்க. (7)

8. அவைதாம்,
முதற்பொருள் கருப்பொரு ளுரிப்பொரு ளெனமுறை
நுதற்பொருண் மூன்றினு நுவலப் படுமே.

இது, மேற் குறியீடு எய்திய ஐந்திணையும் இப்பொருட்பகுதி பற்றித் திணையாமென்கின்றது.

(இ-ள்.) மேற்குறிஞ்சி முதலிய குறியீடு எய்திய ஐந்திணையும் முதற் பொருளுங் கருப்பொருளும் உரிப்பொருளுமென முறையானே பாடலுட் பயின்றவாற்றான் ஒன்றினொன்று சிறந்தமை கருதுதலுடைய பொருள் மூன்றானுந் திணையாதல் கருதப்படும். (எ-று.)

கருப்பொருள் தோற்றுதற்கும் உரிப்பொருள் நிகழ்தற்குங் காரண மாய் முதனிற்றலின் முதற்பொருளென்றும், அம்முதற்பொருளாற் தோன்றுதல்பற்றிக் கருப்பொருளென்றும், இவையிரண்டினுஞ் சிறந்து திணைக்கு உரித்தாய் நிற்றலின் உரிப்பொருளென்றும் ஆயின என்பது. ஒன்றினொன்று சிறத்தலாவது, முதலிற் கருவுங், கருவினுரியுஞ் சிறந்து வருதலாம். உம்மையான் மூன்றானும் அவற்றுட் சிலவற்றானும் நுவலப் படுமெனக் கொள்க. உதாரணம் மேற்பெறப்படும். (8)

9. நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே.

இது நிறுத்தமுறையானே முதற்பொருள் இத்துணைப் பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) நிலமும் பொழுதுமென முதற்பொருள் இரண்டு கூற்றினையுடைத்தாம். (எ-று.) (9)

10. வரையே சுரமே புறவே பழனந்
திரையே யவையவை சேர்தரு மிடனே
யெனவீ ரைந்து மியம்பிய நிலனவை
குறிஞ்சி முதலா வகனைந் திணைக்கும்
உறுந்திற முறையா னிரண்டிரண் டுரிய.

இது மேற்கூறிய நிலனென்னும் முதற்பொருள் இத்துணைப்பகுதித்தென்பதூஉம், அப்பகுதிகளுள் இப்பகுதி இத்திணைக்கு உரித்தென்பதூஉங் கூறுகின்றது.

(இ-ள்.) வரையும், சுரமும், காடும், பழனமும், கடலும் அவ்வவற்றைச் சார்ந்த இடமுமாகிய பத்து வகையினை யுடைத்தாம் முற்கூறிய நிலனென்னும் முதற்பொருள். அங்ஙனங் கூறப்பட்ட பகுதிகள் குறிஞ்சி முதலாகிய நடுவண் ஐந்திணைக்கும் பொருந்தும் பகுதிக்கண் முறையானே இரண்டிரண்டு உரியனவாம். (எ-று.)

அவற்றுள்,

நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே. —[தொல். அகத். சூ. 2]

என்பனவாகலின் பாலைத்திணைக்கு நிலங்கூறுதல் மலைவாம்பிறவெனின், மதுரைக் காஞ்சியுள்

பாலைசான்ற சுரஞ்சேர்ந்த தொருசார். —[314]

என்பதனானும் பிறவாற்றானும் மலைவாகாது அமைவுடைத்தென்க. (10)

11. பெரும்பொழு தென்று சிறுபொழு தென்று
இரண்டு கூற்ற தியம்பிய பொழுதே.

இது மேற்கூறிய பொழுதென்னும் முதற்பொருளின் பாகுபாடு உணர்த்துகின்றது.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட பொழுதென்னும் முதற்பொருள் பெரும்பொழுதென்றுஞ் சிறுபொழுதென்றும் இரண்டு பகுதியினை உடைத்து. (எ-று.) (11)

12. காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றுங்
கிருமூன்று திறத்தது பெரும்பொழு தவைதாம்
ஆவணி முதலா விரண்டிரண் டாக
ஆடி யிறுதிய வாயுங் காலே.

இது நிறுத்தமுறையானே பெரும்பொழுது இப்பகுதித்து என்ப தூஉம் அப்பகுதிகள் இக்காலவரையறைய என்பதூஉம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) *கார்முதலாக வேனிலீறாகச் சொல்லப்பட்ட ஆறுபகுதி யினை யுடைத்தாம் பெரும்பொழுது. அங்ஙனம் அறுவகைப்பட்ட பெரும் பொழுதுகடாங் கால உரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்க ஓரை முதலாக இரண்டிரண்டு ஓரையாகத் தண்மதிக்கு உரிய கர்க்கடக ஓரையீறாக வந்து முடிவனவாம் ஆராயுங்காலத்து. (எ-று.)* (12)

13. மாலை யாமம் வைகுறு வென்று
காலை நண்பக லெற்பா டென்று
அறுவகைத் தென்ப சிறுபொழு தவைதாம்
படுசுட ரமையந் தொடங்கி யையிரு
கடிகை யளவைய காணுங் காலே.

இது மேற்கூறிய சிறுபொழுது இப் பகுதித்து என்பதூஉம் அப்பகுதி கள் இத்துணைக் காலவரையறைய என்பதூஉங் கூறுகின்றது.

(இ-ள்.) *மாலையும் இடையாமமும் வைகுறுவுங் காலையும் நண் பகலும் எற்பாடுமென்ற ஆறுபகுதியினை உடைத்துச் சிறுபொழுதென்று கூறுவர் ஆசிரியர். அங்ஙனம் அறுவகைப்பட்ட சிறுபொழுதுகடாம் அத்தஞ்சென்று அடைந்த ஞாயிற்றினது அமையந்தொடங்கி ஓரோ வொன்று பப்பத்து நாழிகையளவை உடையனவாம் ஆராயுங்காலத்து. (எ-று.)*

உதயந் தொடங்கியதன்வழி உதயங்காறும் ஒருவாரமாமன்றே? அதனமையத்தைக் கால உரிமை எய்திய ஞாயிற்றின்மேல் ஏற்றிப் படு சுடரமையமென்றும்,

> *வைகுறுவிடியன் மருதம்* —[தொல். அகத். சூ. 8]

என ஆசிரியர் தொல்காப்பியனார் ஓதிய வைகுறுவிடியலென்பதற்குப் பொருள்காணாது அதனை ஒருபொழுதாகவுங்கொண்டார்

> *மாலை யாமம் வைகறை யெற்படு*
> *காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்*
> *கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.*
> —[நம்பி. அகப். சூ. 12]

என்பார்மன். இனிச் செவியறிவுறுத்தலைச் "செவியறிவுறூஉ" என்றாற் போல வைகுறுவை வைகுறுதலெனக்கொண்டு வைகுறுதலும் விடியலு மென்று உம்மைத்தொகையாக நோக்கிற் சிறுபொழுது அறுவகைத்தென் பார் 'காணுங்கால்' என்றுங் கூறினார். எனவே, மாலையும் இடையாமமுங் கழியுந்துணையும் அக்கங்குல் வைகுறுதலை வைகுறு என்றாரென்பதா யிற்று. கங்குல் வைகிய அறுதியாதலை நோக்கி வைகறை யெனவும் பாடம் ஓதுப. நாள்வெயிற்காலையை விடியலென்றார்,

விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறை. —[கலி. 45]

என்பவாகலின்.

விடியல் வைகறை யிடூஉ மூரன் —[அகம். 196]

என்றது விடியற்கு முன்னர்த்தாகிய வைகறையென உருபுதொக்கு முன் மொழிநிலையலாயிற்று. (13)

14. அவற்றுட்,

கூதிர் யாம முன்பனி யென்றிவை
ஓதிய குறிஞ்சிக் குரிய வாதலும்
வேனி னண்பகல் பின்பனி யென்றிவை
பான்மையி னுரிய பாலைக் கேற்றலும்
மல்குகார் மாலை முல்லைக்கு வகுத்தலும்
மருத நெய்த லென்றிவை யிரண்டற்கும்
உரிய பெரும்பொழு தாறூடு முறையே
வைகுறு விடியன் மருதத்திற் குறுதலும்
வெய்யோன் பாடு நெய்தற்குச் சிறத்தலும்
எய்து மென்மனு ரியல்புணர்ந் தோரே.

இது மேற்கூறிய காலப்பகுதிகள் திணைக்கு உரியவாமாறு கூறு கின்றது.

(இ-ள்.) மேற்கூறிய காலமென்னும் முதற்பொருட்பகுதி பன்னி ரண்டனுட் கூதிர்க்காலமும் இடையாமமும் முன்பனிக்காலமுமென்று கூறப்பட்ட காலப்பகுதிகள் மேற்கூறிய குறிஞ்சித்திணைக்குச் சிறந்தன வாதலும், வேனிற்காலமும் நண்பகலும் பின் பனிக்காலமுமென்று கூறப் பட்ட காலப்பகுதிகள் ~~ஊழான்~~ அடுத்த பாலைத்திணைக்குச் சிறந்தன வாதலும், கருப்பொருள் பொலிதற்கு ஏதுவாகிய கார்காலமும் மாலையும் முல்லைத்திணைக்குச் சிறந்தனவாகக்கூறுதலும், மருதமும் நெய்தலுமென்று கூறப்பட்ட இருதிணைக்குஞ் சிறந்த பெரும்பொழுது ஆறுமே முறை யானே வைகுறுவும் விடியலும் மருதத்திணைக்குச் சிறந்தனவாதலும், எற்பாடு நெய்தற்றிணைக்குச் சிறந்தனவாதலும் பொருந்துமென்று கூறுவர் அகப்பொருளிலக்கணங்களை அறிந்தோர். (எ-று.)

கூதிர்வேனிலென்பனவற்றோடு முன்பனி பின்பனிகளைச் சாரக் கூறாது பிற்படக்கூறினார் இவை அவைபோலச் சிறந்தனவல்ல என்பது உணர்த்துதற்கென்க. (14)

15. ஆரணங் குயர்ந்தோ ரல்லோர் புள்விலங்
கூர்நீர் பூமர முணாப்பறை யாழ்பண்
தொழிலெனக் கருவீ ரேழுவகைத் தாகும்.

இது நிறுத்தமுறையானே கருப்பொருள் இத்துணைப்பகுதித்து என்கின்றது.

(இ-ள்.) *தெய்வம் முதலாகத் தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்குவகையினையுடைத்தாம் மேற்கூறிப்போந்த கருப்பொருள்.* (எ-று.) (15)

16. விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயின் மறப்புலி குடாவடி
கறையடி சீயஞ் சிறுகுடி யருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்
ஆரந் தேக்ககி லசோக நாகம்
வேர லைவனந் தோரை யேனல்
கறங்கிசைத் தொண்டகங் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோ ளைவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை காத்தல் செந்தே னழித்தல்
செழுங்கிழங் ககழ்தன் முழங்கிவீ ழருவியோடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக்கருப் பொருளே.

பொதுவகையாற் கூறிய கருப்பொருட்பகுதி பதினான்கினையுஞ் சிறப்புவகையால் திணைக்கு உரிமையெய்துவிப்பான் புகுந்தவற்றுள் இது முறையானே குறிஞ்சித்திணைக்கு உரிய கருப்பொருள் இவையென்கின்றது.

(இ-ள்.) *வெற்றியையுடைய முருகவேளாகிய தெய்வம் முதலாகச் சுனையாடலாகிய தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு பகுதியுங் குறிஞ்சித்திணைக்குச் சிறந்த கருப்பொருளாம்.* (எ-று.) (16)

17. கன்னி விடலை காளை மீளி
இன்னகை யெயிற்றி யெயின ரெயிற்றியர்
மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை
கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு

குழிவறுங் கூவல் குராஅ மராஅ
உழிஞை பாலை யோமை யிருப்பை
வழங்குகதிக் கோண்டன செழும்பதிக் கவர்ந்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்சூறை யாடல் பாலைக்கருப் பொருளே.

இது முறையானே பாலைத்திணைக்கு உரிய கருப்பொருள் இவை யென்கின்றது.

(இ-ள்.) *சயமடந்தையாகிய தெய்வம் முதலாகச் சூறையாடலாகிய தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினன்கு பகுதியும் பாலைத்திணைக்குச் சிறந்த கருப்பொருளாம். (எ-று.)* (17)

18. நெடுமால் குறும்பொறை நாடன் றோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி
இடைய ரிடைச்சிய ராய ராய்ச்சியர்
கான வாரண மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை
நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவங்
கொன்றை காயா மன்றலங் குருந்தந்
தாற்றுக்கதிர் வரகோடு சாமை முதிரை
ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
சாமை வரகு தாமுடன் வித்தல்
அவைகளை கட்ட லரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழ லூதல்
மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னுடன் முல்லைக்கருப் பொருளே.

இது முறையானே முல்லைத்திணைக்கு உரிய கருப்பொருள் இவை யென்கின்றது.

(இ-ள்.) *நெடிய மாயோனுகிய தெய்வம் முதலாகக் கான்யாருட லாகிய தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினன்கு பகுதியும் முல்லைத் திணைக்குச் சிறந்த கருப்பொருளாம். (எ-று.)* (18)

19. இந்திர னூரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பிற் கிழத்தி மனைவி
உழவ ருழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலை வண்டான மகன்றி னுரை

அன்னம் போதா னன்னிறக் கம்புள்
குருகு தாரா வெருமை நீர்நாய்
பெருகிய சிறப்பிற் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிண றிலஞ்சி தாமரை
நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதஞ்
செந்நெல் வெண்ணெ லங்கே லரிகிணை
மன்றல் முழவ மருதயாழ் மருதம்
மன்றணி விழாக்கோள் வயற்களை கட்டல்
அரிதல் கடாவிட லகன்குளங் குடைதல்
வருபுன லாடன் மருதக்கருப் பொருளே.

இது முறையானே மருதத்திணைக்கு உரிய கருப்பொருள் இவை யென்கின்றது.

(இ-ள்.) இந்திரனாகிய தெய்வம் முதலாக யாறாடலாகிய தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு பகுதியும் மருதத்திணைக்குச் சிறந்த கருப்பொருளாம். (எ-று.) (19)

20. வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பரும வல்குற் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்
அளவ ரளத்திய ரலைகடற் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டினம்
உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டக மடம்பு
கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்
புலவுமீ னுப்பு விலைகளிற் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்தல்
உணங்கவை விற்றன்மீ னுணக்கல்புள் ளோப்பல்
நெடுங்கட லாடல் நெய்தற்கருப் பொருளே.

இது முறையானே நெய்தற்றிணைக்கு உரிய கருப்பொருள் இவை யென்கின்றது.

(இ-ள்.) வருணனாகிய தெய்வம் முதலாகக் கடலாடுதலாகிய தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு பகுதியும் நெய்தற்றிணைக்குச் சிறந்த கருப்பொருளாம். (எ-று.)

முறையானே ஐந்திணைக்கும் இங்ஙனம் எடுத்தோதிய பகுதி பதி ஞன்கனுள் எடுத்தோதாதனவும் பாடலுட் பயின்று வருமேல் அவையுங் கொள்க. (20)

21. புணர்தலும் பிரிதலு மிருத்தலு மூடலும்
இரங்கலு மிவற்றி னிமித்தமு மெனவாங்
கேய்திய வுரிப்பொரு ளீயிரு வகைத்தவை
யோரிரண் டோரிரண் டுரைத்தவைந் திணைக்கு
நேரு மென்மனுர் நெறியுணர்ந் தோரே.

இது நிறுத்தமுறையானே உரிப்பொருள் இத்துணைப்பகுதித்து என் பதூஉம் அப்பகுதிகள் தாம் இன்ன இன்ன திணைக்கு உரியவென்பதூஉம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும் இரங்கலும் இவற்றின் நிமித்தமுமென மேற்கூறிப்போந்த உரிப்பொருள் பத்து வகையினை உடைத்தாம்; அவைதாம் முறையானே இரண்டிரண்டு முற் கூறிய ஐந்திணைக்குஞ் சிறந்தனவாமென்று கூறுவர் பாடல்சான்ற புல னெறிவழக்கினை உணர்ந்தோர். (எ-று.)

அகப்பொருளாவது புணர்ச்சியாகலானும் அஃது இருவர்க் கும் ஒப்ப நிகழ்தலானும் முன்னர்ப் புணர்ச்சியும், புணர்ந்துழியல்லது பிரிவின்மையானும் அது தலைவன்கண்ணதாகிய சிறப்பானும் அதன் பின்னர்ப் பிரிவும், பிரிந்துழிக் கற்பாற் தலைவி ஆற்றியிருத்தல் வேண்டு தலின் அதன்பின்னர் இருத்தலும், பிரிவின்திறனுகிய பரத்தையிற் பிரிந்துழித் தலைவன்றவறு நோக்கித் தலைவி கலாய்த்தல் இயல்பாகலானுங் காமத்திற்குச் சிறத்தலானும் அதன்பின்னர் ஊடலும், ஏனைப் பிரிவுநீட் டித்துழிக் காமங்கைமிக்கு அழுங்கல் இயல்பாகலின் அதன்பின்னர் இரங் கலும் வைக்கப்பட்டன.

[1]"முதற்பொருள்கருப்பொருள்" என்பதுமுதற் "புணர்தலும் பிரித லும்" என்பதீறுகக் கிடந்த சூத்திரங்களாற் போந்தன:—பொதுவகை யான் முதற்பொருள் முதலிய மூன்றுங்கொண்டும் அவற்றுட் சிலகொண் டும் ஐந்திணையுமாமென்பதூஉம், சிறப்புவகையான் வரையும் வரைசார்ந்த இடமுமாகிய நிலனும் இருள் தூங்கித் துளிமிகுதலானும், பனியானுஞ் சேறல் அரிதாகலானும், பாறுட் கங்குலிற் பரந்துடன் வழங்காது மாவும் புள்ளுந் துணையுடன் இன்புற்று வதிதலிற் காமக்குறிப்புக் கழியவே பெருகுதலானுங், காவன்மிகுதிநோக்காதுவருந் தலைவனைக் குறிக்கண் எதிர்ப்பட்டுப் புணருங்காற் தலைவிக்கு இன்பம் பெருகுதலானுங், கூதிர்க்

[1] 8-21 சூ.

காலமும், அதனைத் தொடர்ந்த முன்பனிக்காலமும், அவற்றிடை இடையாமமுமென்னுங் காலமுமாகிய முதற்பொருளும், அந்நிலத்துவாழும் குறவர் முதலாயினோர் குழீஇ வேண்டிய வேண்டியாங்கு எய்தும்பொருட்டு வெறியயர்பவாகலின் ஆண்டு வெளிப்படூஉம் முருகவேளும், முதற்பொருள்பற்றித் தோன்றும் எனைக்கருப்பொருளும், புணர்தலும் புணர்தனிமித்தமுமாகிய உரிப்பொருளும், ஒன்றற்கொன்று பொருத்தமுடையவாய்க் குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துநிற்றலின் அவை அதற்குச் சிறந்தன என்பதூஉம்; சுரமுஞ் சுரஞ்சார்ந்த இடனுமாகிய நிலனுங் காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலை தேம்பிக், கூவன்மாறி நீரும் நிழலுமின்றி, நிலம் பயந்துறந்து புள்ளும்மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம்பெருகுவதொரு காலமாதலின், இன்பத்திற்கு இடையூறுகிய பிரிவிற்கு முதிர்வேனிற்காலமும் அதனிடை நண்பகலும்,

தெள்ளறல் யாற்றுத் திரைமண லடைகரை
வண்டுவரி பாடத் தண்போ தலர்ந்து
தாதுந் தளிரு மேதகத் துவன்றிப்
பல்பூஞ் சோலைப் பன்மலர் நாற்றமொடு
செவ்வித் தென்ற னுவ்வித் தாகிக்
குயில்கூக் குரலும் பயில்வதன் மேனு
நிலவுஞ் சாந்தும் பலவுறு முத்தும்
இன்பம் விளைக்கு நன்பொருள் பிறவும்
பண்டைய போலா தின்பம் மிகத்தரும்.—[தொ. பொ பக். 39]

இளவேனிற்காலத்துப் பொழில்விளையாடியும் புதுப்பூக்கொய்தும் அருவியாடியும் முன்னர் விளையாட்டின் நிகழ்ந்தமைபற்றிப் பிரிந்த கிழத்தி மெலிந்துரைக்குங் கிளவி பயின்றுவருதலானும், உடன்போக்கின்கண் அக்காலம் இன்பம்பயக்குமாதலானும், இளவேனிற்காலமும் அதனிடை நண்பகலும் அவ்வேனிலைத் தொடர்ந்த பின்பனிக்காலமும் அதனிடை நண்பகலுமென்னுங் காலமுமாகிய முதற்பொருளும், அந்நிலத்துவாழும் மறவர் முதலாயினோர் குழீஇ விறல் மேன்மேற் கிளைப்பப் பெறலரும் உயிர்ப்பலிபேணலின் ஆண்டு வெளிப்படூஉஞ் சயமடந்தையும், முதற்பொருள்பற்றித் தோன்றும் எனைக்கருப்பொருளும், பிரிதலும் பிரிதனிமித்தமுமாகிய உரிப்பொருளும் ஒன்றற்கொன்று பொருத்தமுடையவாய்ப் பாலைத்திணையைச் சிறப்பித்துநிற்றலின் அவை அதற்குச் சிறந்தன என்பதூஉம்; காடுங் காடுசார்ந்த இடனுமாகிய நிலனும் வெப்பமுந் தட்பமு மிகாது இடை நிகர்த்ததாகி ஏவல்செய்துவரும் இளைஞருக்கு நீரும் நிழலும் பயத்தலானும், ஆர்புதுமிக்கு நீரும் நிழலும் பெறுதலிற் கவின் சிறந்து மாவும்புள்ளுந் துணையொடின்புற்று விளையாடுவென கண்டு வினைவ

யிற்பிரிந்து பாசறையினின்று விரைபரித்தேரூர்ந்து மீளுந் தலைவற்குக் காமக்குறிப்பு மிகுதலானும், கார்காலமும் புல்லைமேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றாக் கன்றை நினைந்து மன்றிற் புகுதரவுந் தீங்குழலிசைப்பவும் பந்தர்முல்லை வந்து மணங்கஞற்றவும் வருகின்ற தலைவற்கும் இருந்த தலைவிக்குங் காமக்குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப் பொழுதுமென்னுங் காலமுமாகிய முதற் பொருளும், அந்நிலத்துவாழுங் கோவலர்குழீஇ ஆகுதிபயக்கும் ஆபலகாக்கவெனக் குரவைதழீஇ மடைபல கொடுத்தலின் ஆண்டு வெளிப்படூஉம் நெடுமாலும், முதற்பொருள் பற்றித் தோன்றும் ஏனைக்கருப்பொருளும், இருத்தலும் இருத்தனிமித்தமுமாகிய உரிப்பொருளும் ஒன்றற்கொன்று பொருத்தமுடையவாய் முல்லைத்திணையைச் சிறப்பித்து நிற்றலின் அவை அதற்குச் சிறந்தன என்பதூஉம்; பழனமும் பழனஞ்சார்ந்த இடனுமாகிய நிலனும் பரத்தையிற் பிரிந்த தலைவன் ஆடலும் பாடலுங் கண்டுங்கேட்டும் பொழுதுகழிப்பிப் பிறர்க்குப் புலனாகாமை மீளுங் காலம் அதுவாகலானுந், தலைவிக்குங் கங்குல்யாமங் கழியாது நெஞ்சழிந்து ஆற்றாமை மிகுதலான் ஊடலுணர்த்தற்கு எளிதாவதோர் உபகாரமுடைத்தாகலானும், வைகுறுவும் இனித் தலைவி விடியற்காலஞ் சிறுவரைத்தாகலின் அதனாற் பெறும்பயனின்றென முனிந்து வாயிலடைத்து ஊடனீட்டிப்பவே அவ்வைகுறுவழித் தோன்றிய விடியற்கண்ணும் இவன் மெய் வேறுபாடு விளங்கக் கண்டு வாயில்புகுத்தல் பயத்தலின் விடியலுமாகிய சிறுபொழுதும், பெரும்பொழுது ஆறுமென்னுங் காலமுமாகிய முதற்பொருளும், அந்நிலத்து வாழ்வோர் பலருங் குழீஇ ஊடலுங்கூடலுமாகிய காமச்சிறப்பு நிகழ்தற்கும் மழைவளந் தருதற்கும் விழாவெடுத்தலின் ஆண்டு வெளிப்படூஉம், ஆடலும் பாடலும் ஊடலும் உணர்த்தலும் உள்ளிட்ட இன்பவிளையாட்டு இனிது நுகரும் இமையோர்க்கும் இன்குரலெழிலிக்கும் இறைவனாகிய இந்திரனும், முதற் பொருள்பற்றித் தோன்றும் ஏனைக்கருப்பொருளும், ஊடலும் ஊடனிமித்தமுமாகிய உரிப்பொருளும் ஒன்றற்கொன்று பொருத்தமுடையவாய் மருதத்திணையைச் சிறப்பித்து நிற்றலின் அவை அதற்குச் சிறந்தனவென்பதூஉம்; கடலுங் கடல் சார்ந்த இடனுமாகிய நிலனும் வெஞ்சுடர் வெப்பந்தீரத் தண்ணறுஞ் சோலை தாழ்ந்து நிழற்செய்யவுந், தண்பதம் பட்ட தெண்கழி மேய்ந்து பல்வேறு வகைப்பட்ட புள்ளெல்லாங் குடம்பை நோக்கி யடங்கு பெயரவும், புன்னை முதலிய பூவினாற்ற முன்னின்று கஞற்றவும், நெடுந்திரை யழுவத்து நிலாக் கதிர் பரப்பவுங், காதல் கைமிக்குக் கடற்கானினுங் கானற்கானினுந் தன் நிறைகடந்து வேட்கைபுலப்பட உரைத்தலின் ஆண்டுக் காமக் குறிப்பு வெளிப்பட்டு இரங்கற் பொருள் சிறத்தலான் எற்பாடாகிய சிறுபொழுதும் பெரும்பொழுது ஆறுமென்னுங் காலமுமாகிய முதற்பொரு

ளும், அந்நிலத்துவாழும் நுளையர்க்கு வலைவளந்தப்பின் ஆங்குவாழும் மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக்கோடு நாட்டிப் பரவுக்கடன் கொடுத்தலின் ஆண்டு வெளிப்படும் வருணனும், முதற்பொருள் பற்றித் தோன்றும் ஏனைக்கருப்பொருளும், இரங்கலும் இரங்கனிமித்தமுமாகிய உரிப்பொருளும் ஒன்றற்கொன்று பொருத்தமுடையவாய் செய்தற்றிணையைச் சிறப்பித்து நிற்றலின் அவை அதற்குச் சிறந்தன வென்பதூஉம் ஆயின வென்க.

இனி இவற்றிற்கு முறையே உதாரணம் :—

கிளைபா ராட்டுங் கடுநடை வயக்களிறு
முளைதரு பூட்டி வேண்டுகுள கருத்த
வாணிற வுருவி னொளிறுபு மின்னிப்
பருவுறைப் பலெறுளி சிதறிவா னவின்று
பெருவரை நளிர்சிமை யதிர வட்டித்துப்
புயலே றுரைஇய வியலிரு ணடுநாள்
விறலிழைப் பொலிந்த காண்பின் சாயற்
றடைஇத் திரண்டநின் றோள்சேர் பல்லதைப்
படாஅ வாகுமெங் கண்ணென நீயு
மிருண்மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி
வரிவயங் கிரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் வரவரி தென்னாய்
வரலெளி தாக வெண்ணுதி யதனா
னுண்ணிதிற் கூட்டிய படுமா ணாரந்
தண்ணிது கமழு நின்மார் பொருநா
ளடைய முயங்கே மாயின் யாமும்
விறலிழை நெகிழச் சாஅய்து மதுவே
யன்னை யறியினு மறிக வலர்வா
யம்பன் மூதூர் கேட்பினுங் கேட்க
வண்டிறை கொண்ட வெரிமரு டோன்றியோ
டொண்பூ வேங்கை கமழுந்
தண்பெருஞ் சாரற் பகல்வந் தீமே. —[அகம். 218]

இஃது இடத்துய்த்துப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டானே வரைவு கடாயது: இம்மணிமிடைபவளத்தும்,

வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ
லுருவக் குதிரை மழவ ரோட்டிய

முருக னற்போர் நெடுவே ளாவி
அறுகோட் டியானைப் பொதினி யாங்கட்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியல மென்ற சொற்று
மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த
வேய்மருள் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக
அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
நிழறேய்ந் துலறிய மரத்த வறைகாய்
பறநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர்தலின்
உகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குந ரின்மையின் வௌவுநர் மடியச்
சுரம்புல் லென்ற வாற்ற வலங்குசினை
நாரின் முருங்கை நவிரல் வான்பூச்
சூரலங் கடுவளி யெடுப்ப வாருற்
றுடைதிரைப் பிதிர்விற் பொங்கிமுன்
கடல்போற் றோன்றல காடிறந் தோரே. —[அகம். 1]

இது பிரிவிடையாற்றாது தோழிக்குக் கூறியது: இக்களிற்றியானை நிரையுள்ளும்,

முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறங் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்
உதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்

போதவிழ் மலரி னூறும்
ஆய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே. —[அகம். 4.]

இது குறித்த காலம் வந்தது அவரும் வந்தாரென்று ஆற்றுவித்தது: இக்களிற்றியானை நிரையுள்ளும்,

சேற்றுநில முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலி னோன்றளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டினி னீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடனிரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமல ராரு மூர
யாரை யோநிற் புலக்கேம் வாருற்
றுறையிறந் தொளிருந் தாழிருங் கூந்தற்
பிறளு மொருத்தியை யெம்மனைத் தந்து
வதுவை யயர்ந்தனை யென்ப வஃதியாங்
கூறேம் வாழிய ரெந்தை செறுநர்
களிறுடை யிருஞ்சமந் ததைஇய நூறும்
ஒளிறுவாட் டானைக் கொற்கைச் செழியன்
பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவெம்
ஒண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே. —[அகம். 46.]

இது வாயின்மறுத்தது: இக்களிற்றியானை நிரையுள்ளும்,

கானன் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனார் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
அசைவண் டார்க்கு மல்குறு காலைத்
தாழை தளரத் தூக்கி மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காம நெஞ்சங் கையறு பினையத்
துயரஞ் செய்துநம் மருளா ராயினும்
மறாஅ லியரோ வவருடைக் கேண்மை
அளியின் மையி னவணுறைவு முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெல் லரிநர் பின்றைத் ததும்புந்

தண்ணுமை வெரீஇய தடந்தா ணாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
யகமடற் சேக்குந் துறைவன்
இன்றுயின் மார்பிற் சென்றவென் னெஞ்சே.—[அகம். 40.]

இது பொருட்பிரிவிடைத் தோழிக்கு உரைத்தது: இக்களிற்றி யானை நிரையுள்ளும் முறையானே குறிஞ்சி முதலிய ஐந்திணைக்கும் முதலுங் கருவும் வந்து உரிப்பொருளாற் சிறப்பெய்தி முடிந்தவாறு காண்க. பிறவும் அன்ன.

நறைபரந்த சாந்த மறவெறிந்து நாளால்
உறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
ஏமரை போந்தன வீண்டு. —[திணைமாலை. 1.]

இது மதியுடம் படுத்தது. முதற்பொருளின்றி வந்த குறிஞ்சி.

முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே.—
[யாப். வி. பக். 122.]

இது நாணநாட்டம். முதலுங் கருவுமின்றி வந்த குறிஞ்சி.

நாளு நாளு மாள்வினை யழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழெனா
ஒண்பொருட் ககல்வர்நங் காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே. —[சிற்றெட்டகம்]

இது வற்புறுத்தாற்றியது. உரிப்பொருளொன்றுமே வந்த பாலை.

திருநகர் விளங்கு மாசில் கற்பின்
அரிமதர் மழைக்கண் மாஅ யோளொடு
நின்னுடைக் கேண்மை யெவனோ முல்லை
யிரும்பல் கூந்த னாற்றமு
முருந்தேர் வெண்ப லொளியுநீ பெறவே.

இது பொருளிற்பிரிந்தோன் சுரத்துநினைந்து உரைத்தது. முதற் பொருளின்றிவந்த முல்லை.

கரந்தை விரைஇய தண்ணறுங் கண்ணி
இளைய ரேவ வியங்குபரி கடைஇப்

பகைமுனை வலிக்குந் தேரொடு
வினைமுடித் தனர்நங் காத லோரே.

இது வந்தாரென்றுற்றுவித்தது. முதலுங் கருவுமின்றி வந்த முல்லை.

பூங்கொடி மருங்கி னெங்கை கேண்மை
முன்னும் பின்னு மாகி
யின்னும் பாண னெம்வயி னோனே.

இது வாயின்மறுத்தது. உரிப்பொருளொன்றுமே வந்தமருதம்.

அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
யேதின் மாக்களு நோவர் தோழி
யென்று நோவா ரில்லைத்
தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே.

இது கழிபடர். பேரானும் உரிப்பொருளானும் நெய்தலாயிற்று. பிறவும் அன்ன. (21)

22. முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாராது மயங்கலு முரிய.

இது முதற்பொருள் முதலிய மூன்றற்குமாவதோர் புறனடை கூறுகின்றது, தமக்கு உரியதனோடன்றிப் பிறவற்றோடும் மயங்குமென்றலின்.

(இ-ள்.) முதல்கருவுரியென்னும் மூன்றுகூற்றவாகிய பொருளுந் தமக்குத் தமக்கு உரிய திணையொடு கூடி இலக்கணமுறையானே வாராது பிறவற்றிற்கு உரிய திணையொடு கூடி மயங்கிவருதலும் உரியவாம். (எ-று.)

மரபின்வாராதென்ற மிகையானே சிலவென்னும் முதற்பொருளொழித்து ஏனையவே மயங்கிவருமெனக் கொள்க.

(உ-ம்.)

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே. —[குறுந். 47]

என இக்குறுந்தொகையுட் பாலைக்கு உரிய வேனில் வந்ததூஉம்,

தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே. —[கலி. 52]

என இப்பாட்டுள் மருதத்திணைக்குரிய தாமரைப்பூ வந்ததூஉம்,

அறியே மல்லே மறிந்தன மாதோ
பொறிவரிச் சிறைய வண்டின மொய்ப்பச்
சாந்து நாறு நறியோள்
கூந்த னாறுநின் மார்பே தெய்யோ. —[ஐங். 240]

எனப் புறத்தொழுக்கம் இன்றென்றார்க்குத் தோழிகூறிய இவ்வைங் குறுநூற்றுள் ஊடல்வந்ததூஉம் முறையே குறிஞ்சித்திணையோடு முதற் பொருண்முதலிய மூன்றும் மயங்கிவந்தன.

அம்ம வாழி தோழி சிறியிலைக்
குறுஞ்சினை வேம்பி னறும்பழ முணீஇய
வாவ லுகக்கு மாலையும்
இன்றுகொல் காதலர் சென்ற நாட்டே. —[ஐங். 339]

என இவ்வைங்குறுநூற்றுள் முல்லைத்திணைக்கு உரிய மாலை வந்ததூஉம்,

கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னாதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்கொல்.
—[கலி. 27]

என இப்பாலைக்கலியுட் குறிஞ்சித் திணைக்குரிய மயில்வந்ததூஉம்,

உடையிவ ளுயிர்வாழா ணீநீப்பி னெனப்பல
விடைகொண்டியா மிரப்பவு மெமகொள்ளா யாயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன. —[கலி. 3]

என இப்பாலைக்கலியுள் மருதத்திணைக்குரிய பூ வந்ததூஉம்,

அன்னாய் வாழிவேண் டன்னை யென்றோழி
பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை
கொன்னே கடவுதி யாயி னென்னதூஉம்
அறிய வாருமோ மற்றே
முறியிணர்க் கோங்கம் பயந்த மார்பே. —[ஐங். 366]

என இவ்வேறுபாடு என்னென்ற செவிலிக்குத் தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நின்ற இதனுட் புணர்ச்சி வந்ததூஉம்,

வண்சினைக் கோங்கின் றண்கமழ் படலை
இருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப

நீநயந் துறையப் பட்டோள்
யாவ ளோவெம் மறையா தீமே. —[ஐங். 370]

எனப் பரத்தையர்க்குப் பூவணிந்தமைகேட்ட தலைவி அஃதின்றென்றற்குக் கூறிய இதனுள் ஊடல் வந்ததூஉம் முறையே பாலைத்திணையொடு முதற்பொருண்முதலிய மூன்றும் மயங்கிவந்தன.

மழையில் வான மீனணிந் தன்ன
குழையமன் முசுண்டை வாலிய மலர
வரிவெண் கோடல் வாங்குகுலை வான்பூப்
பெரிய சூடிய கவர்கோற் கோவலர்
எல்லுப்பெய லுழந்த பல்லா நிரையொடு
நீர்திகழ் கண்ணிய ஊர்வயிற் பெயர்தர
நனிசேட் பட்ட மாரி தளிசிறந்
தோதரு காட்டுநீர் தெருவுதோ றொழுகப்
பேரிசை முழக்கமொடு சிறந்துநனி மயங்கிக்
கூதிர்நின் றன்றாற் பொழுதே காதலர்
நந்நிலை யறியா ராயினுந் தந்நிலை
அறிந்தனர் கொல்லோ தாமே யோங்குநடைக்
காய்சின யானை கங்குற் சூழ
அஞ்சுவர விறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே. —[அகம். 264]

எனத் தோழிக்குத் தலைவி கூறிய இம்மணிமிடைபவளத்துக் கூதிர்வந்ததூஉம்,

மங்குன் மாமழை விண்ணதிர்பு முழங்கித்
துள்ளுப்பெயல் கழிந்த பின்றைப் புகையுறப்
புள்ளிநுண் டுவலை பூவக நிறையக்
காதலர்ப் பிரிந்த கையறு மகளிர்
நீர்வார் கண்ணிற் கருவிளை மலரத்
துய்த்தலைப் பூவின் புதலிவ ரீங்கை
நெய்த்தோய்த் தன்ன நீர்நனை யந்தளிர்
இருவகி ரிருளி னீரிய துயல்வர
அவரைப் பைம்பூப் பயில வகல்வயற்
கதிர்வார் காய்நெற் கட்கினி திறைஞ்சச்
சிதர்சினைத் தூங்குமற் சீர்வரை நாடர்
காய்சின வேந்தன் பாசறை நீடி

நந்நோ யறியா வறனி லாளர்
இந்நிலை களைய வருகுவர் கொல்லென
ஆனு தெறிதரும் வாடையொடு
நோனேன் றோழியென் றனிமை யானே. —[அகம். 294]

எனப் பருவ வரவின்கண் வற்புறுத்துந் தோழிக்குத் தலைவி கூறிய இம் மணிமிடைபவளத்துள் முன்பனி வந்ததூஉம் முல்லைத்திணையோடு மயங்கிவந்தன.

கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்றாக்
காதற் குழவிக் கூறுமுலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருதும்
ஒண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே. —[ஐங். 92]

என நின் தமர் வாராமையின் எமர்வரைவு நேர்ந்திலரென்று தோழி கூறக்கேட்ட தலைவன் தலைவிக்குக் கூறிய இவ்வைங்குறுநூற்றுட் குறிஞ்சித்திணைக்கு உரிய புணர்தல் மருதத்திணையோடு மயங்கிவந்தது.

தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போல்
எல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பின்
அல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர
எல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை
* * * *
பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழல்
இனிவரி னுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் டினைதியோ வெம்போல
இனியசெய் தகன்றாரை யுடையையோ நீ. —[கலி. 129]

என இக்கலியுட் கங்குலும் மாலையும் முன்பனியும் வந்ததூஉம்

கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே. —[ஐங். 122]

என இவ்வைங்குறுநூற்றுட் பெதும்பைப் பருவத்தாளோர் தலைவியொடு வேட்கை நிகழ்ந்தமையைத் தலைவி கூறித் தலைவன் குறிப்புணர்ந்த தூஉம் முறையே நெய்தற்றிணையொடு முதலும் உரிப்பொருளும் மயங்கி வந்தன. ஒழிந்தனவும் இவ்வாறே மயங்குமாறு வந்துழிக் காண்க. (22)

23. ஒருதலைக் காமமு மொவ்வாக் காமமும்
விரவியும் வரூஉ மரபின வென்ப.

இஃது எய்தாதது எய்துவிக்கின்றது, கைக்கிளை பெருந்திணைக்கு உரிய உரிப்பொருளும் இவற்றோடு மயங்கு மென்றலின்.

(இ-ள்.) கைக்கிளைத்திணைக்கு உரிய ஒருதலைக்காமமென்னும் உரிப்பொருளும் பெருந்திணைக்கு உரிய பொருந்தாக்காமமென்னும் உரிப்பொருளுங் குறிஞ்சித்திணைமுதலிய ஐந்திணையோடும் மயங்கியும் வரும் இயல்பையுடையனவென்று கூறுவர் ஆசிரியர். (எ-று.)

(உ-ம்.) "ஊர்க்கானிவந்த" என்னுங் குறிஞ்சிக்கலியுள்

ஆய்தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினலம்
மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ. —[கலி. 56]

எனக் குறிஞ்சித்திணையோடு கைக்கிளையும்,

எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தாற்
றொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த வடக்கமு நாணொடு
வறிதாகப் பிறரென்னை நகுபவு நகுபுடன்
மின்னவிர் நுடக்கமுங் கனவும்போன் மெய்காட்டி
யென்னெஞ்ச மென்னோடு நில்லாமை நனிவௌவித்
தன்னலங் கரந்தாளைத் தலைப்படுமா றெவன்கொல்லோ
மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை யாவிரை யெருக்கொடு பிணித்தியாத்து
மல்லலூர் மறுகின்க ணிவட்பாடு மிஃதொத்தன்
எல்லீருங் கேட்டீமி னென்று. —[கலி. 138]

இக்கலியுள் நெய்தற்றிணையொடு பெருந்திணையும் மயங்கி வந்தன. ஒழிந்தனவற்றோடும் இவ்வாறே மயங்குமாறு வந்துழிக்காண்க. பிறவும் அன்ன. (23)

24. அளவி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.

இது மேற்கூறிப்போந்த ஐந்திணைக்கு உரிய கைகோள்வரையறை கூறுகின்றது.

(இ-ள்.) வரம்பிலின்பத்தையுடைய ஐந்திணையிடத்துக் களவுங் கற்புமென இரண்டொழுக்கம் நிகழும். (எ-று.) (24)

25. இயற்கைப் புணர்ச்சி யிடந்தலைப் பாடு
பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்
றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே.

இது நிறுத்தமுறையானே களவிற்புணரும் புணர்ச்சி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *இயற்கைப்புணர்ச்சியும், அப்புணர்ச்சி நிகழ்ந்த நிலைக்களத்தைப் பின்னர்த் தலைப்பெய்து புணரும் புணர்ச்சியும், பாங்கனாற் புணரும் புணர்ச்சியும், பாங்கியாற் புணரும் புணர்ச்சியுமென முற்கூறிய களவென்னுங் கைகோளிற் புணர்ச்சி நான்குவகையினையுடைத்தாம்.* (எ-று.) (25)

26. மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்
கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப.

இஃது ஆசுரமும் இராக்கதமும் பைசாசமுமாகிய சிறப்பில்லாக் கைக்கிளைபோலன்றிக் காமஞ்சாலா இளமையோள்வயிற் கைக்கிளை போலச் சிறந்த காமஞ்சான்ற இளமையோள்வயிற் கைக்கிளை இன்னுழி நிகழுமென்கின்றது.

(இ-ள்.) *பொருள்படு கிளைநரம்பினைப் பொருந்திய யாழினையுடைய கந்தருவர் விரும்பும் இயற்கைப்புணர்ச்சி முன் காட்சிமுதலாக மேற்கூறப்படும் நால்வகைக் குறிப்பிற்றாகிய கைக்கிளை நற்காமத்திற்கு இன்றியமையாமையின் வருதல் முறைமை.* (எ-று.)

இது தலைவி வேட்கைக்குறிப்புத் தன்மேல் நிகழ்வதனைத் தலைவன் அறிவதற்குமுன்னே தன் காதல் மிகுதியாற் கூறுங் கூற்றதாகலிற் கைக்கிளையாயிற்று. இது தலைவற்கே உரியதென்பது "மடமா னேக்கி"

—[இல. வி. 117]

என்னுஞ் சூத்திரத்துக் கூறுதும்.

இவை புணர்ச்சிநிமித்தமாய்க் குறிஞ்சித்திணையாகாவோ வெனின் காட்சிப்பின் தோன்றிய ஐயமுந் துணிவுங் குறிப்பறிதலும் நன்றெனக் கோடற்கும் அன்றெனக்கோடற்கும் பொதுவாகலின் அவை ஒருதலையாக நிமித்தமாகா வழிநிலைக்காட்சியே நிமித்தமாமென்று உணர்க. (26)

27. அதுவே,
காமஞ் சான்ற விளமை யோள்வயிற்
குறிப்பறி காறுங் குறுகாது நின்று
குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்.

இது கைக்கிளையது இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்.) மேற்கூறிப்போந்த கைக்கிளையாவது, காமம்நுகர்தற்கு அமைந்த இளமைப்பருவத்தாளாகிய தலைமகளிடத்து உண்டாகிய குறிப்பினைத் தான் அறியுமளவும் அவளைத் தலைமகன் அடாதுநின்று தன் வழித்தாகிய நெஞ்சினொடு சொல்லுதலாம். (எ-று.) (27)

28. மறையோர் மன்னர் வணிகர் சூத்திரரெனு
மிறையோர் தத்தமக் கெய்துமற் றதுவே
மொழிந்தோர் நால்வரு மொழிந்தைந் நிலத்துறை
யிழிந்தோர் தம்மு ளுயர்ந்தோரு மெய்துப.

இது கைக்கிளைக்கு உரியார் இவரென்கின்றது.

(இ-ள்.) மேற்கூறிய கைக்கிளை அந்தணரும் அரசரும் வணிகருஞ் சூத்திரருமென்னும் நால்வகை வருணத்துத் தலைமக்கள் தமக்குத் தமக்குப் பொருந்துவதாம். அக்கைக்கிளையை மேற்கூறிய நால்வகைத் தலைமக்களுமன்றி ஐவகைநிலத்தும் உறையும் நிலமக்களுட் தலைமக்களும் பெறுவர். (எ-று.)

உம்மை இழிவுசிறப்பாதலாற் சிறுபான்மைநோக்கி நின்றது. (28)

29. தெய்வந் தன்னி னெய்தவுங் கிழத்தியி
னெய்தவும் படூஉ மியற்கைப் புணர்ச்சி.

இஃது இயற்கைப்புணர்ச்சி இத்துணைப்பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) மேற்கூறிய நால்வகைப் புணர்ச்சியுள்ளும் இயற்கைப் புணர்ச்சியாவது தெய்வத்தாற் பெறவுந் தலைமகளாற் பெறவும்படும். (எ-று.)

படும் என்பதனை இரண்டிடத்துங் கூட்டுக. (29)

30. இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தி னெய்துழி
முயற்சி யின்றி முடிவ தாகும்.

இது மேற்கூறிய இயற்கைப்புணர்ச்சி இரண்டனுள் தெய்வப் புணர்ச்சியது இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தாற் பெறுங்காலத்து முயற்சியின்றித் தானே முடிவதாம். (எ-று.)

எனவே, இயற்கைப்புணர்ச்சி தலைமகளாற் பெறுங்காலத்து முயற்சியானே முடிவதாமென்பதாயிற்று. (30)

31. உள்ளப் புணர்ச்சியு மெய்யுறு புணர்ச்சியுங்
கள்ளப் புணர்ச்சியுட் காதலர்க் குரிய.

இது மேற்கூறிப்போந்த களவிற்புணர்ச்சிக்கு எய்தியதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) உள்ளத்தாற் புணரும் புணர்ச்சியும் மெய்யுற்றுப் புணரும் புணர்ச்சியுமென்னும் இருகூற்றுப் புணர்ச்சியுங் களவென்னுங் கைகோளின்கட் புணரும் புணர்ச்சிக்கட் காதலையுடைய தலைவற்குந் தலைவிக்கும் உரியவாம். (எ-று.) (31)

32. பொருவிறந் தோற்றுப் பெருமையு முரனு
நன்னுதற் கச்சமு நாணு மடனு
மன்னிய குணங்க ளாதலின் முன்ன
ருள்ளப் புணர்ச்சி யுரிய தாகும்.

மேற்கூறிய இருகூற்றுப்புணர்ச்சியுள் இந்த உள்ளப்புணர்ச்சி முன் நிகழ்தற்கு ஏது கூறுகின்றது.

(இ-ள்.) நிகரில்லாத தலைமகற்குப் பெருமையும் உரனும், நன்னுதலை உடையளாகிய தலைமகட்கு அச்சமும் நாணும் மடனும் நிலைபெற்ற குணங்களாதலின் மேற்கூறிப்போந்த இருகூற்றுப்புணர்ச்சியுள்ளும் உள்ளப்புணர்ச்சி முன் நிகழ்தற்கு உரித்தாம். (எ-று.)

பெருமையாவது, அறிவும் ஆற்றலும் புகழுங் கொடையும் ஆராய்தலும் பண்பும் நண்பும் பழிபாவமஞ்சுதலும் முதலியவற்றின் மேம்பாடு. உரனாவது, கடைப்பிடியும் நிறையுங் கலங்காது துணிதலும் முதலியவற்றின் திண்மை. அச்சமாவது, தன் அன்புகாரணத்தாற் தோன்றிய உட்கு. நாணாவது, காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோர் உள்ளவொடுக்கம். மடமாவது, செவிலியர் கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை.

இனி ஒன்றெனை முடித்தலாற் கண்டறியாதன கண்டுழி மனங்கொள்ளாத பயிர்ப்பும் செயத்தகுவது அறியாத பேதைமையும், நிறுப்பதற்கு நெஞ்சு உண்டாம் நிறையுங் கொள்க. மடங் குடிப்பிறந்தோரது செய்கையதாகலின் அச்சமும் நாணும்போல மெய்யுறுபுணர்ச்சியை விலக்குவதாம்.

இவை இருவர்க்கும் மன்னிய குணங்களாகலின் மெய்யுறுபுணர்ச்சிக்கு உரியரல்லராயினும் இவ்விலக்கணத்திற் திரியாது நின்றே மெய்யுறுபுணர்ச்சிக்கு உரியராவரென்பார், 'முன்னர் உள்ளப் புணர்ச்சி உரியதாகும்' என்றார். அங்ஙனமாதல் மேற்கூறுமாற்றானும் உணர்க. (32)

33. காட்சி வேட்கை யுள்ளுதன் மெலித
லாக்கஞ் செப்ப னாணுவரை யிறத்த
னோக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்ற
வையிரண் டவத்தையும் பெய்கழற் காளையும்
புகுமுகம் புரிதன் முதல வாகிக்

காட்சிமுதன் மூன்றையுங் கருதிநந் நான்கா
யாட்சியி னமைந்தவீ ராறுமெய்ப் பாடு
முருந்திள முறுவலும் பொருந்துத லுறினே
மெய்யுறு புணர்ச்சி யெய்துதற் குரித்தே.

இது மெய்யுறுபுணர்ச்சி நிகழுங்காலம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) காண்டலும், பெறல்வேண்டுமென்னும் உள்ளநிகழ்ச்சியும், இடைவிடாது நினைத்தலும், அங்ஙனம் நினைத்தல் காரணமாக உடம்பு வாடுதலும், வாடியபின் தன் நெஞ்சின் வருத்தம் மிகுகின்றபடியைப் பிறர்க்கு உரைத்தலும், நாணத்தின் எல்லையைக் கடத்தலுந், தன்னாற் காணப்பட்டனவெல்லாந் தான் கண்ட உறுப்புப்போலுதலும், பித்தாதலும், மோகித்தலும், இறந்துபடுதலுமெனக் கூறப்பட்ட பத்து அவத்தையும் ஒருங்குநிகழும் அளவாயிற் தலைமகனும்; புகுமுகம்புரிதல் முதலியன வாகிக் காட்சிமுதலிய மூன்று அவத்தையினையும்பற்றி ஒரோவவத்தைக்கு நான்குநான்காய் ஆட்சியான் அமைவுபெற்ற பன்னிரண்டு மெய்ப்பாடுந் தலைமகளும் பொருந்துதலுற்றாலே அவ்விருவர்க்கும் மெய்யுறுபுணர்ச்சி பொருந்துதற்கு உரித்தாம். (எ-று.)

நான்காம் அவத்தை தொடங்கி ஆறும் அவத்தைகாறும் பற்றி வரும் பாராட்டெடுத்தல் முதலாகக் கையறவுரைத்தல் ஈறாகக் கிடந்த பன்னிரண்டு மெய்ப்பாடும் புணர்ச்சிப்பின்னர் நிகழ்வனவாகலானும், ஏழாம் அவத்தை தொடங்கிப் பத்தாம் அவத்தைகாறும் பற்றி வரும் மெய்ப்பாடெல்லாம் அகனைந்திணைக்காகாது பெருந்திணைப்பாற்படுவன வாகலானும், புகுமுகம்புரிதன் முதலிய பன்னிரண்டு மெய்ப்பாடுமே ஈண்டைக்கு இயைவனவென்பார் 'ஆட்சியின் அமைந்த' என்றார்.

வரலாறு :

உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறுஞ் செவ்வாய்க் கமழகில்
ஆர நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கட் கொடிச்சி
மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே. —[குறுந். 286]

இஃது ஒருதலையுள்ளுதற்கும்

ஒண்டொடி யரிவை கொண்டன ணெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத் தொண்டி யாங்கண்
உரவுக்கட லொலித்திரை போல
இரவி னானுந் துயிலறி யேனே. —[ஐங். 172]

இஃது ஆக்கஞ்செப்புதற்கும்

காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு. —[குறள் 1247]

இது நாணுவரையிறத்தற்கும்

ஓங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லுங்
காந்தட் கிவருங் கருவிளம் பூக்கொள்ளு
மாந்தளிர்க் கையிற் றடவரு மாமயில்
பூம்பொழி னோக்கிப் புகுவன பின்செல்லுந்
தோளெனச் சென்று துளங்கொளி வேய்தொடு
நீள்கதுப் பிஃதென நீரற லுட்புகும். —[இளம். பக்-148]

என்றாற்போல்வன நோக்குவவெல்லாம் அவையேபோறற்கும் உதாரணமாம். பிறவும் வந்தவழிக் காண்க. புகுமுகம்புரிதல் முதலியவற்றிற்குப் பொருளும் உதாரணமும் மெய்ப்பாடு கூறும்வழிப் பெறப்படும். அவை ஆண்டு உணர்க.

இனி, இவற்றின்வழித் தோன்றும் மெய்யுறுபுணர்ச்சிக்கு உதாரணம்

கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடையிடுபு விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாயது முயங்கற்கு மினிதே. —[குறுந். 62]

எனவரும் (33)

34. பகற்குறி யிரவுக் குறியெனும் பான்மைய
புகற்சியி னமைந்தோர் புணர்ச்சிநிக ழிடனவற்
றில்வரை யிகந்தது பகற்குறி யிரவுக்குறி
யில்வரை யிகவா வியல்பிற் றாகும்.

இது மேற்கூறிப்போந்த புணர்ச்சி நிகழும் இடம் இத்துணைப் பகுதித்தெனவும் அப்பகுதிகள் இவ்வியல்பினவெனவுங் கூறுகின்றது.

(இ-ள்.) பகற்குறியும் இரவுக்குறியுமென்னும் பகுதியையுடையவாம் அன்பான் அமைந்தோர் புணர்ச்சிநிகழும் இடங்கள். அவற்றுள் இல்லின் எல்லையைக் கடந்தது பகற்குறியாம், இரவுக்குறி அதனைக் கடவாத இயல்பினையுடைத்தாம். (எ-று.) (34)

35. ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றிருவகைத் தாகு
நிறைதரு காதன் மறையினிற் பிரிவே.

இது நிறுத்தமுறையானே களவென்னுங் கைகோளிடத்துப் பிரியும் பிரிவு இத்துணைப் பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) *ஒருவழித்தணத்தலும் வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதலுமென்று இரண்டுபெகுதியினையுடைத்தாம் நிறைந்த காதலையுடைய களவின்கட்பிரியும் பிரிவு. (எ-று.)*

அவற்றுள், ஒருவழித்தணத்தலாவது ஓர் ஊரின்கண்ணும் ஒரு நாட்டின்கண்ணும் பிரிதல். வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலாவது காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிதல். (35)

36. அவற்றுள்,
ஒருவழித் தணத்தற்குப் பருவங் கூறார்.

இஃது அப்பிரிவு இரண்டனுட் காலவரையறை கூறப்படாதது இதுவென்கின்றது.

(இ-ள்.) *மேற்கூறிய பிரிவு இரண்டனுள் ஒருவழித் தணத்தல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படாமையின் அதற்குக் காலவரையறை சொல்லார் ஆசிரியர். (எ-று.)* (36)

37. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலோ
ரிருதுவி னெல்லைத் தென்மனார் புலவர்.

இது காலவரையறை கூறப்படுவது இதுவென்கின்றது.

(இ-ள்.) *வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிதலின் அஃது இரண்டு திங்களின் வரம்பையுடைத்தென்று சொல்லுவர் அறிவுடையோர். (எ-று.)* (37)

38. களவு வெளிப்படா முன்னும் பின்னும்
வினையு நேறித்தென விளம்பினர் வரைவே.

இது மேலைச்சூத்திரத்துட் தோற்றுவாய் செய்யப்பட்ட வரைவுநிகழும் இடங் கூறுகின்றது.

(இ-ள்.) *களவு வெளிப்படாமுன்னும், களவு வெளிப்பட்டபின்னும் வரைவுநிகழும் நெறியினையுடைத்தாமென்று சொல்லுவர் அறிவுடையோர். (எ-று.)*

வெளிப்படாமுன்னும் என்பதனுல் வெளிப்பட்டபின்னுமெனத் தந்துரைக்கப்பட்டது. (38)

39. நான்குவகைப் புணர்வினுந் தான்றேருண்டு வரைதலும்
பாங்கனிற் பாங்கியிற் றேருளுற்று வரைதலுங்
களவுவெளிப் படாமுன் வரைத லாகும்.

இது களவுவெளிப்படாமுன் நிகழும் வரைவுக்கு இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட இயற்கைப்புணர்ச்சி முதலாகிய நான்குவகைப் புணர்ச்சிக்கண்ணுந் தலைமகன் தானே தெருண்டு வரைதலும் பாங்கனுணர்தல் பாங்கியாளுணர்தல் தெருட்டப்பட்டு வரைதலுமாகிய இவை களவுவெளிப்படாதமுன் வரைவாம். (எ-று.) (39)

40. உடன்போய் வரைதலு மீண்டு வரைதலு
முடன்போக் கிடையீ டுற்று வரைதலுங்
களவுவெளிப் பட்டபின் வரைத லாகும்.

இது களவுவெளிப்பட்டபின் நிகழும் வரைவுக்கு இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்.) புணர்ந்துடன்போய்த் தலைமகன் தன் ஊரின்கண்ணே வரைதலும் மீண்டுவந்து தம்மூரின்கண்ணே வரைதலும் உடன்போக்கிடையீடுற்றுத் தலைமகன் தலைமகள் தமரைவழிபட்டு வரைதலுமாகிய இவை களவுவெளிப்பட்டபின் வரைதலாம். (எ-று.) (40)

41. அவற்றுள்,
உடன்போய் வரைத லொருவகைத் தாகும்.

இஃது உடன்போய்வரைதலின் வகை உணர்த்துகின்றது.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட மூவகை வரைவினுள் உடன்போய்த் தன் ஊரின்கண்ணே வரைதல் ஒருவகையினையுடைத்தாம். (எ-று.) (41)

42. அவண்மனை வரைதலுந் தன்மனை வரைதலு
மெனமீண்டு வரைத லிருவகைத் தாகும்.

இது மீண்டுவரைதலின் வகை உணர்த்துகின்றது.

(இ-ள்.) தலைமகள் மனையின்கண்ணே வரைதலும் தலைமகன் மனையின்கண்ணே வரைதலுமென இரண்டுவகையினையுடைத்தாம் உடன்போய் மீண்டு தம் ஊரின்கண்ணே வரைதல். (எ-று.) (42)

43. ஆற்றா றஞ்சினு மவன்வரைவு மறுப்பினும்
வேற்றுவரைவு நேரினுங் காப்புக் கைமிகினு
மாற்றுறத் தோன்று மறத்தொடு நிலையே.

இது மேற்கூறிய வரைவிற்கு நிமித்தங் கூறுகின்றது.

(இ-ள்.) தலைமகன் வருவழி ஏதத்தினை அஞ்சிய இடத்தும், தமர் அவன் வரைவு எதிர்கொள்ளாத இடத்தும், பிறர்வரைவுநேரும் இடத்தும், காவல் கைமிகுந்த இடத்தும் நெறிப்படப் புலப்படும் அறத்தொடுநிலை. (எ-று.)

அறத்தொடுநிலை அறத்தோடு மாறுகொள்ளாத நிலை. (43)

44. தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்குஞ்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கு
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தோடு
நிற்கு மென்ப நெறியுணர்ந் தோரே.

இஃது இவர் இவர்க்கு அறத்தொடுநிற்றற்குரிய ரென்கின்றது.

(இ-ள்.) *தலைவி முதலிய நால்வரும் பாங்கி முதலாகிய நான்கு திறத்தார்க்கும் முறையே அறத்தொடுநிற்றற்கு உரியரென்று சொல்லுவர் அகப்பொருளிலக்கணம் அறிந்தோர். (எ-று.)* (44)

45. ஒருபுணர் வொழிந்தவற் றொருவழித் தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியவு
மிறைவனைச் செவிலி குறிவயிற் காணவு
மனைவயிற் செறிப்பவும் வருத்தங் கூரின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணு
மனநடைக் கிழத்தி யறத்தோடு நிற்கும்.

இது தலைவி அறத்தொடு நிற்குங் காலம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) *பாங்கியிற் கூட்டமாகிய ஒன்று நீங்கிய ஏனை இயற்கைப் புணர்ச்சி முதலாய மூன்று புணர்ச்சிக்கண்ணுந் தலைவன் ஒருவழித்தணத்தலானும் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலானுந் தலைவனைச் செவிலி குறியிடத்துக் காண்டலானும் மனையிடத்துச் செறித்தலானுந் தனக்கு வருத்தம் மிகுமாயின் தன்னைப் பாங்கி வினவிய இடத்தும் வினவாத இடத்துந் தலைவி அவட்கு அறத்தொடு நிற்கும். (எ-று.)*

பாங்கியென்பது அதிகாரத்தான் வந்தது. (45)

46. முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளிற்
சின்மொழிப் பாங்கி செவிலிக் குணர்த்தும்.

இது பாங்கி அறத்தொடுநிற்குந் திறங் கூறுகின்றது.

(இ-ள்.) *முன்னிலைப் புறமொழியும் முன்னிலை மொழியுமாகிய இரண்டினும் பாங்கி செவிலிக்கு அறத்தொடுநிற்கும். (எ-று.)* (46)

47. செவிலி நற்றாய்க்குக் கவலையின் றுணர்த்தும்.

இது செவிலி அறத்தொடுநிற்குந் திறங் கூறுகின்றது.

(இ-ள்.) *செவிலி அறத்தொடுநிற்குங் காலத்து நற்றாய்க்கு விளங்க அறிவிக்கும். (எ-று.)* (47)

48. நற்றா யறத்தோடு நிற்குங் காலைக்
குரவனுந் தன்னையுங் குறிப்பி னுணர்ப.

இது நற்றாய் அறத்தொடுநிற்குந் திறங் கூறுகின்றது.

(இ-ள்.) *நற்றாய் அறத்தொடுநிற்குங் காலத்துச் சொல்லாடப் பெறாளாகலின் தலைமகள் தந்தையுந் தன்னையும் அவள் குறிப்பினானே அறிவர்.* (எ-று.) (48)

49. பாங்கி தலைவியை வினவுஞ் செவிலி
பாங்கியை வினவும் பாங்கி தன்னையு
நற்றாய் தானும் வினவுஞ் செவிலியிற்
போற்றேடிக் கிழத்தியை யுற்று நோக்கின்.

இஃது அறத்தொடுநிற்பார்க்கு வினாநிகழுமிடங் கூறுகின்றது.

(இ-ள்) *தலைமகள்மாட்டு வேறுபாடு கண்டுழிப் பாங்கி முதலாகிய மூவரும் இவ்வாறு வினவப்பெறுவர்.* (எ-று.)

'பாங்கி தன்னையு நற்றாய் தானும்' என்ற உம்மைகள் முறையே நற்றாய் செவிலியை வினவுதலும் பாங்கியைச் செவிலி வினவுதலுமன்றி என்னும் பொருள்பட நின்றன. இவ்வாறு நற்றாய் வினவுவது செவிலியைப்போலத் தலைமகளை உற்றுப்பார்த்த இடத்தெனக்கொள்க. (49)

50. ஆங்குடன் போயுழி யறத்தோடு நிற்ப
பாங்கியுஞ் செவிலியும் பயந்த தாயும்.

இஃது அறத்தொடுநிலை முறையானன்றி ஒருங்கு நிகழும் இடங் கூறுகின்றது.

(இ-ள்.) *தலைமகளுந் தலைமகனும் புணர்ந்து உடன்போயகாலத்து அறத்தொடுநிற்பர் தோழியுஞ் செவிலியும் நற்றாயும்.* (எ-று.)

ஆங்கவென்னும் அசைநிலை ஈண்டு அகரந்தொக்கு நின்றது. (50)

51. களவின்வழி வந்த கற்பும் பொற்பமை
களவின்வழி வாராக் கற்புமென் றாங்கு
முற்படக் கிளந்த கற்பிரு வகைத்தே.

இது நிறுத்தமுறையானே கற்பின் பாகுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) *மேற்கூறிப்போந்த கற்பு, களவிற்புணர்ச்சி வழியான் வந்த கற்பும், களவிற் புணர்ச்சி வழியான் வாராக் கற்புமென இரண்டு பகுதியினையுடைத்தாம்.* (எ-று.)

களவின் வழிவந்த கற்பினை முற்கூறினார் அதனது சிறப்பு நோக்கி.

5

52. குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்டமென்
றிருவகைத் தாகுங் கற்பிற் புணர்ச்சி.

இது கற்பிற்புணர்ச்சி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *கற்பென்னுங் கைகோளிடத்துப் புணரும் புணர்ச்சி குரவ ராற் புணரும் புணர்ச்சியும் வாயில்களாற் புணரும் புணர்ச்சியுமென இரண்டு பகுதியினையுடைத்து. (எ-று.)*

குரவரிற்புணர்ச்சி வதுவைகூட்டிப் புணரும் புணர்ச்சி. வாயிலிற் கூட்டம் புலவிதீர்த்துப் புணரும் புணர்ச்சி. (52)

53. அவற்றுட்,
களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி
கிளைஞரி னெய்தாக் கேண்மையு முடைத்தே
உடன்போய் வரைதலு முண்மை யான.

இது களவின்வழிவந்த கற்பிற்புணர்ச்சிக்கு எய்துவதோர் வேறுபாடு உணர்த்துகின்றது.

(இ-ள்.) *மேற்சொல்லப்பட்ட இருவகைக் கற்பினுள்ளும், களவின் வழிவந்த கற்பினுட் புணரும் புணர்ச்சி தலைமகள் சுற்றத்தாராற் பெறப் படாத கோட்பாட்டினையுமுடைத்தாம், புணர்ந்துடன் போய்த் தலைமகன் தன் ஊரின்கண்ணே வரைந்துகோடலும் உண்டாதலான். (எ-று.)*

கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான [தொல்-கற்-சூ. 2]

என்பவாகலின். (53)

54. மறையிற் புணர்ச்சியு மன்றற் புணர்ச்சியும்
இறைவற் கெய்தலுண் டிருவகைக் கற்பினும்.

இது தலைமகற்குக் கற்புக்காலத்து நிகழும் புணர்ச்சி வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) *மேற்சொல்லிய இருவகைக் கற்பின்கண்ணுந் தலைமகற் குக் களவிற்புணர்ச்சியும் வதுவைப்புணர்ச்சியும் பொருந்துதலுண்டு. (எ-று.)* (54)

55. காதற் பரத்தையர் காமக் கிழத்தியர்
பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்
றன்னவ ருரிய ரவையிரண் டற்கும்

இஃது அவ்விருவகைப் புணர்ச்சிக்கும் உரிய மகளிர் இவரென் கின்றது.

(இ-ள்.) *காதற்பரத்தையர் முதலாகிய மூவகையோருந் தலைமகன் அவ்வாறு புணரும் புணர்ச்சி இரண்டற்கும் உரியர். (எ-று.)* (55)

56. அவருட்,
காதற் பரத்தையர் களவிற் குரியர்.

இது களவிற்கு உரிய மகளிர் இவரென்கின்றது.

(இ-ள்.) *மேற்சொல்லப்பட்ட மூவகையோருள்ளும் காதற்பரத்தையர் களவிற்புணர்ச்சிக்கு உரியர். (எ-று.)* (56)

57. ஒழிந்தோர் மன்றற் புணர்ச்சிக் குரியர்.

இது வதுவைப்புணர்ச்சிக்கு உரிய மகளிர் இவரென்கின்றது.

(இ-ள்.) *காமக்கிழத்தியும் பின்முறைவதுவைப் பெருங்குலக்கிழத்தியுமாகிய இருதிறத்தோரும் வதுவைப்புணர்ச்சிக்கு உரியர். (எ-று.)* (57)

58. பரத்தையிற் பிரித லோதற்குப் படர்தல்
அருட்டகு காவலோடு தூதிற் ககறல்
உதவிக் கேக னிதியிற் கிகத்தலென்
றுரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே.

இது கற்பிற்பிரியும் பிரிவுவரையறை உணர்த்துகின்றது.

(இ-ள்.) *பரத்தையிற் பிரிதல் முதலாக நிதியிற்கிகத்தல் ஈறாக அறுவகையினையுடைத்தாம் கற்பின்கட் பிரியும் பிரிவு. (எ-று.)* (58)

59. அயன்மனைப் பிரிவயற் சேரியி னகற்சி
புறநகர்ப் போக்கிவை புரவலற் குரிய
பரத்தையிற் பிரியும் பருவத் தான.

இது தலைமகன் பரத்தையிற் பிரியுங்காலத்து இவ்விடங்களிற் பிரியுமென்கின்றது.

(இ-ள்.) *அயல்மனை முதலிய மூன்றிடத்துப் பிரிவுந் தலைவற்கு உரியவாம் பரத்தையிற் பிரியுங் காலத்து. (எ-று.)* (59)

60. கெழீஇய காமக் கிழத்தியர் பொருட்டாய்த்
தழீஇய வயன்மனைத் தலைவன் பிரியும்.

இது நிறுத்தமுறையானே அயல்மனைப் பிரிவுக்கு ஏது கூறுகின்றது.

(இ-ள்.) *பொருந்திய காமக்கிழத்தியர் காரணமாகத் தலைமகன் தோள் தோய்ந்த அயல்மனைக்கண்ணே பிரியும். (எ-று.)* (60)

61. பின்னர் வரைந்த பேதும்பையும் பரத்தையும்
இன்னியல் விழவு மேது வாக
அவனயற் சேரியி னகலு மென்ப.

இஃது அயற்சேரியிற் பிரிவுக்கு ஏது உணர்த்துகின்றது.

(இ-ள்.) இரண்டாவது வரைந்துகொள்ளப்பட்ட பெதும்பைப்பருவக் கிழத்தியுங் காதற்பரத்தையும் விழவுங் காரணமாகத் தலைமகன் அயற்சேரியின்கண்ணே பிரியும். (எ-று.) (61)

62. விருந்தியற் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்டு
இளமரக் காவின் விளையா டற்கும்
புனலா டற்கும் புறநகர்ப் போகும்.

இது புறநகர்ப்போக்கிற்கு ஏது உணர்த்துகின்றது.

(இ-ள்.) இளமரக்காவின்கண்ணே விளையாடுதல் காரணமாகவும் புனலாடுதல் காரணமாகவுந் தலைமகன் புதியளாகிய பரத்தையைத் தேர்மேல் ஏற்றிக்கொண்டு நகர்ப்புறத்திலே போம். (எ-று.)

புனலாடல் கூறவே, அதற்கு ஏதுவாகிய புதுப்புனல் வரவுங் கொள்ளப்படும்; அதற்குச் செய்யுள்;

ஏராடு சிந்துர விந்திர சாப மிறைஞ்சுநுதல்
வேர்வாட நீல விழிசிவப் பாட விளங்கிழையார்
தாராடு பைங்குழற் பின்னக மாடத் தழூஉஞ்சிவிறிப்
போராட வந்தது தண்புன லாடற் புரவலற்கே.

[அம்பி. 474]

எனவரும். புனலாடற்குச் செய்யுள்;

குருகோடு கம்புட் குலமிரிந் தார்ப்பக் கொடுந்திரைசூ
ழிருகோடு மள்ள ரெறிபறை யார்ப்ப விடுமணற்குன்
றருகோடு தண்புனல் வண்புன லூரனோ டாடுதற்கு
வருகோடி யன்புடை யாரொரு கோடி மடந்தையரே.

எனவரும். இளமரக்காவின் விளையாடற்கு உதாரணம் வந்துழிக்காண்க.

63. ஊட லவ்வழிக் கூடுங் கிழத்திக்கு.

இது தலைவிக்கு ஊடல் நிகழும் இடங்கூறுகின்றது.

(இ-ள்.) அம்மூன்று பிரிவின்கண்ணுந் தலைமகட்கு ஊடல் பொருந்தும். (எ-று.) (63)

64. கோளைவல பாணன் பாடினி கூத்தர்
இளையோர் கண்டோ ரிருவகைப் பாங்கர்
பாங்கன் பாங்கி செவிலி யறிவர்
காமக் கிழத்தியர் காதற் புதல்வன்
விருந்தாற் றுமை யென்றிவை யூடன்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்க ளாமே.

இது மேற்சொல்லப்பட்ட வாயில்களாவன இவையென்கின்றது.

(இ-ள்.) பாணன் முதலாக ஆற்றுமை ஈறாகச் சொல்லப்பட்ட இவையனைத்துந் தலைமகளுடனே மருந்தாய்த் தீர்க்கும் வாயில் களாம். (எ-று.) (64)

65 ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்.

இஃது ஓதற்றொழிற்கு உரியதோர் சிறப்புணர்த்துகின்றது.

(இ-ள்.) வேதமோதலென்னுந் தொழில் அந்தணர் அரசர் வணிக ரென்கின்ற மூவர்க்கும் உரித்து. (எ-று.) (65)

66. அல்லாக் கல்வி யெல்லார்க்கு முரித்தே.

இஃது ஒழிந்த கல்வியது தன்மை உணர்த்துகின்றது.

(இ-ள்.) வேதம் அல்லாத கல்வி நால்வர்க்கும் உரித்து. (எ-று.)

67. படைக்கலம் பயிறலும் பகடுபிற வூர்தலும்
உடைத்தோ ழிலவர்க்கென வுரைத்திசி னோரே.

இது நாவினுற் கற்குந் தொழிலல்லாத கல்வித்தொழிலுரிமை உணர்த்துகின்றது.

(இ-ள்.) படைக்கலங்களைக் கற்றலும், யானையுந் தேருங் குதிரை யும் முதலாயின ஊர்தலும், மூவர்க்கும் உடைமையாகிய தொழிலெனக் கூறினர் புலவர். (எ-று.)

'பிற' என்றதனுற் தேருங் குதிரையும் முதலாயின கொள்ளப் பட்டன. 'பகடுபிற' என்பது உம்மைத்தொகை. (67)

68. அறப்புறங் காவ னுடு காவலெனச்
சிறப்புறு காவற் றிறமிரு வகைத்தே.

இது காவற்பிரிவு இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்) அறப்புறங் காத்தற்குப் பிரியும் பிரிவும், நாடு காத்தற்குப் பிரியும் பிரிவுமென மேம்பாடுற்ற காவற்குப் பிரியும் பிரிவு இருவகை யினையுடைத்து. (எ-று.) (68)

69. அவற்றுள்,
அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தே.

இது நிறுத்தமுறையானே முன்னையதற்கு உரிமைகூறுகின்றது.

(இ-ள்.) மேற்சொல்லிய இரண்டனுள் அறப்புறங் காத்தற்குப் பிரியும் பிரிவு அந்தணர் முதலிய நால்வர்க்கும் உரித்து. (எ-று.) (69)

70. மற்றைக் காவல் கோற்றவர்க் குரித்தே.

இது பின்னையதற்கு உரிமைகூறுகின்றது.

(இ-ள்.) ஏனை நாடுகாத்தற்குப் பிரியும் பிரிவு அரசர்க்கு உரித்து. (எ-று.) (70)

71. வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்குந்
தூது போதற் றொழிலுரித் தாகும்.

இது நிறுத்தமுறையானே தூதிற்குப் பிரியும் பிரிவுக்கு உரியார் இவரென்கின்றது.

(இ-ள்.) *அந்தணரும் அரசருமென்னும் இருதிறத்தார்க்குந் தூது நிமித்தம் பிரியும் பிரிவுதொழில் உரித்து. (எ-று.)*

வரலாறு;—

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
ஏணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே. —[புறம். 305]

என்பதனானும்,

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா லாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே.
—[சிலப். ஆய்ச். படர்க். 3]

என்பதனானும் முறையே அவ்விருவர்க்குந் தூது நிமித்தம் பிரியும் பிரிவு தொழில் உரித்தாயவாறு காண்க. (71)

72. சிறப்புப் பெயர்பெறிற் செப்பிய விரண்டும்
உறற்குரி மரபின வொழிந்தோ ரிருவர்க்கும்.

இது மேலனவற்றிற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) *அரசனாற் சிறப்புப்பெயர் பெற்றாராயின் மேற்கூறிய நாடு காவற்பிரிவுந் தூதிற்பிரிவும் பொருந்துதற்கு உரிய மரபினவாம் ஏனை வணிகருஞ் சூத்திரருமென்னும் இருதிறத்தார்க்கும். (எ-று.)*
உரியமரபு உரிமரபென விகாரமாயிற்று. (72)

73. உதவி யந்தண ரொழிந்தோர்க் குரித்தே.

இது நிறுத்தமுறையானே உதவிநிமித்தம் பிரியும் பிரிவிற்கு உரியார் இவரென்கின்றது.

(இ-ள்.) *அரசர்க்குப் பகைவரான் ஊறுற்றுழி உதவிக்குப் பிரியும் பிரிவு அந்தணர் ஒழிந்த மூவர்க்கும் உரித்தாம். (எ-று.)* (73)

74. பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவும்
உரைத்த நால்வர்க்கு முரிய வாகும்.

இது நிறுத்தமுறையானே பரத்தையிற்பிரிவிற்கும் பொருள்வயிற் பிரிவிற்கும் உரியார் இவரென்கின்றது.

(இ-ள்.) *பரத்தையிற்பிரிவும் பொருள்வயிற்பிரிவுமாகிய இரண்டும் மேற்சொல்லப்பட்ட நால்வர்க்கும் உரியவாம். (எ-று.)* (74)

75. இழிந்தோர் தமக்கு மிவற்றுண்மேம் பட்டவை
ஒழிந்தன வாமென மொழிந்தனர் புலவர்.

இது நிலமக்களுட் தலைமக்கட்கு உரியன கூறுகின்றது.

(இ-ள்.) *இவ்வாறுவகைப் பிரிவுள்ளும் மேம்பட்டனவாகிய ஓதலும் நாடுகாவலுந் தூதுபோதலுமாகிய மூன்றும் ஒழித்து அல்லாதனவெல்லாம் ஒழிந்தோராகிய நிலமக்களுட் தலைமக்கட்கும் உரியவாமெனச் சொல்லுவர் அறிவோர். (எ-று.)* (75)

76. கல்வி முதலா வெல்லா வினைக்குஞ்
சொல்லி யகறலுஞ் சொல்லா தகறலும்
உரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு.

இது பிரியுந் தலைமகற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) *கல்வி முதலாகிய ஐந்து வினைக்குந் தலைமகன் தலைமகட்குச் சொல்லிப்பிரிதலுஞ் சொல்லாது பிரிதலும் உரியன் (எ-று.)* (76)

77. சொல்லா தகலினுஞ் சொல்லும் பாங்கிக்கு.

இதுவுமது.

(இ-ள்.) *தலைமகன் தலைமகட்குச் சொல்லாது பிரியுமாயினுந் தோழிக்குச் சொல்லியே பிரியும். (எ-று.)* (77)

78. குறிப்பி னுணர்த்தும் பெறற்கருங் கிழத்திக்கு.

இதுவுமது.

(இ-ள்.) *தலைமகன் சொல்லாது பிரியுமாயினுங் குறிப்பினன் உணர்த்துந் தலைமகட்கு (எ-று.)* (78)

79. காலிற் சேறலுங் கலத்திற் சேறலும்
ஊர்தியிற் சேறலு நீதி யாகும்.

இது பிரியுங் காலத்து நால்வர்க்கும் பொதுவாகியதோர் இயல்பு உணர்த்துகின்றது.

(இ-ள்.) *காலிற்சேறல் முதலாகிய மூன்றும் எல்லாப் பிரிவின் கண்ணும் எல்லார்க்கும் இயல்பாம். (எ-று.)* (79)

80. புலத்திற் சிறந்த புரிநூன் முதல்வர்க்குக்
கலத்திற் சேறல் கடனன் றென்ப.

இஃது அந்தணர்க்கு ஆகாததோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்.) *காலிற்சேறல் முதலாகிய மூன்றனுள்ளும் கலத்திற்சேறல் அறிவினான் மிக்க அந்தணர்க்கு முறைமையன்றென்று சொல்லுவர் புலவர். (எ-று.)* (80)

81. வலனுயர் சிறப்பின் மற்றை மூவர்க்குங்
குலமட மாதரோடு கலமிசைச் சேறலும்
பாசறைச் சேறலும் பழுதென மொழிப.

இஃது அரசர் முதலாகிய மூவர்க்கும் ஆகாததோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்.) *குலமடமாதரோடுகூடக் கலமிசைச் சேறலும் பாசறைக்கட் சேறலுமாகிய இரண்டும் வெற்றியுயர் சிறப்பினையுடைய வேந்தர் முதலாகிய மூவர்க்குங் குற்றமெனச் சொல்லுவர் கற்றுவல்லோர். (எ-று.)*

*"மணமலி பூங்கானல் வருகலங்க ணோக்கிக்
கணவன்வரக் கல்லுருவ நீத்தாள்"* [சிலப்-வஞ்சின. 16]

எனவும்,

*பனியிருங் கங்குலுந் தமிய ணீந்தித்
தம்மூ ரோளே நன்னுத லியாமே
யிரவுத் துயின் மடிந்ததானை
உரவுச்சின வேந்தன் பாசறை யோமே*

எனவும் வருவனவற்றான் முறையே குலமடமாதரோடு கலமிசைச் செல்லாமையும் பாசறைக்கட் செல்லாமையும் அறிக.

குலமடமாதரோடு செல்லாரெனவே பரத்தையரோடு செல்வரென்பது பெற்றாம்.

*துயிலின்றி யாநீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளி யறியாத விரிமலர்த் தண்காவிற்
குயிலாலும் பொழுதெனக் கூறுந ருளராயின்*
[கலித். 30]

என்பதனாற் பரத்தையரோடு பாசறைக்கட் சென்றவாறு அறிக. ஏனையது வந்துழிக் காண்க. (81)

82. ஓதன் முதலா வோதிய வைந்தினும்
பிரிவோ னழுங்கற்கு முரிய னாகும்.

இதுவுந் தலைமகற்குப் பிரிவிடத்து உரியதோர் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) ஓதல் முதலாகச் சொல்லப்பட்ட ஐந்தின்கண்ணும் பிரியுந் தலைமகன் போதற்கேயன்றிப் போதாமைக்கும் உரியன். (எ-று.)(82)

83. இல்லத் தழுங்கலு மிடைச்சுரத் தழுங்கலும்
ஒல்லு மவற்கென வுரைத்திசி னோரே.

இதுவுமது.

(இ-ள்.) பிரியக்கருதிய தலைமகன் இல்லின் கண்ணே செலவழுங்குதலும், இடைச்சுரத்தின்கண்ணே செலவழுங்குதலுமென இரண்டிற்கும் உரியனெனக் கூறுவர் புலவர். (எ-று.)

புணரிற் புணராது பொருளே பொருள்வயிற்
பிரியிற் புணராது புணர்வே யாயிடைச்
செல்லினுஞ் செல்லா யாயினு
நல்லதற் குரியை வாழிய நெஞ்சே. —[நற். 16]

எனவும்,

தொழுது வணங்கி மணங்கமழ் தார்பெய்து தொய்யின்
லெழுதி முயங்கி மயங்கின மாக விருங்கயற்க [மெய்யி
ணழுது சிவந்து பசந்தது நாமிங் ககலுவமேற்
பழுது பிறந்து விடுந்தனி யாவி பணிமொழிக்கே.
—[அம்பி. 548]

எனவும்,

சென்றே வினைமுற்றி மீளுவ தன்றெனிற் றேர்ந்திதனை
யன்றே தவிர்தலன் றேவறி வோர்தொழி லாரழற்றின்
குன்றே நெருங்குங் கொடுஞ்சுரத் தென்னையுங் கொண்டுவந்து
நின்றே வருந்துநெஞ் சேயென்செய் வேனிந் நிலைதனக்கே.
—[அம்பி. 550]

எனவும் இவை முறையே ஒருங்குவருதலுந் தனித்தனி வருதலுங் காண்க. (83)

84. தலைவி தன்னையுந் தன்மனந் தன்னையும்
அலமர லொழித்தற் கழுங்குவ தல்லது
செல்வத் தோன்றல் செல்லா னல்லன்.

இஃது எய்தியது விலக்குகின்றது.

(இ-ள்.) இல்லத்துத் தலைமகளையுந் தன்னெஞ்சினையுந் தேற்றுதல் காரணமாகவும் இடைச்சுரத்துத் தன்னெஞ்சினைத் தேற்றுதல் காரணமாகவும் அழுங்கு மாத்திரமல்லது தலைமகன் போகானல்லன்.

இல்லத்துத் தலைமகளைத் தேற்றியதற்குச் செய்யுள்;

பொன்னு மணியும் போலும் யாழநின்
னன்னர் மேனியு நாறிருங் கதுப்பும்
போதும் பணையும் போலும் யாழநின்
மாத ருண்கணும் வனப்பின் றோளு
மிவைகாண் டோறு மகமெலிந் தியானு
மறநிலை பெற்றோ ரனையே னதன்றலைப்
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத் திலனே நினையின்
யாதனிற் பிரிகோ மடந்தை
காத லுனுங் கடலினும் பெரிதே.'' —[நற். 166]

எனவரும். பிறவும் அன்ன. (84)

85 அவற்றுள்,
ஓதற் பிரிவுடைத் தோருமூன் றியாண்டே.

இஃது ஓதற்பிரிவுக்குக் காலவரையறை உணர்த்துகின்றது.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட பிரிவுள் ஓதற்குப் பிரியும் பிரிவு மூன்று யாண்டெல்லை உடைத்து. (எ-று.) (85)

86. தூதிற் பிரிவுந் துணைவயிற் பிரிவும்
பொருள்வயிற் பிரிவு மோர்யாண் டுடைய.

இது தூதிற்பிரிவு முதலாய மூன்றுபிரிவிற்கும் காலவரையறை உணர்த்துகின்றது.

(இ-ள்.) தூதுகாரணமாகப் பிரியும் பிரிவுந் துணையிடமாகப் பிரியும் பிரிவும் பொருள்காரணமாகப் பிரியும் பிரிவும் ஓர்யாண்டின் எல்லையினையுடையவாம். (எ-று.)

பரத்தையிற்பிரிவுக்குங் காவற்பிரிவுக்குங் காலவரையறை கூறாராயினார், அவை காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படாமையின். (86)

87. பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீரா டியபின் னீராறு நாளுங்
கருவயிற் றுறூஉங் கால மாதலிற்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்.

இது பரத்தையிற் பிரியுந் தலைவற்கு உரியதோர் இயல்பு உணர்த்துகின்றது.

(இ-ள்.) நீராடியபின் பன்னிருநாளுங் கரு வயிற்றின்கட்படுங் காலமாதலாற் பரத்தையிற்பிரியுந் தலைவன் அப்பன்னிருநாளுந் தலைவியைப் பிரியப்பெறான் பூப்புநிகழுங் காலத்து. (எ-று.)

“ தீண்டாநாண் முந்நாளு நோக்கார்நீ ராடியபி
னீராறு நாளு மிகவற்க வென்பதே
பேரறி வாளர் துணிவு.” —[ஆசாரக்கோவை 43]

என்றார் **பெருவாயின் முள்ளியாரும்** என்க. (87)

88. ஓதற் ககன்றோ னொழிந்திடை மீண்டு
போதற் கியையவும் புலம்பவும் பெறுஅன்.

இஃது ஓதற்குப்பிரியுந் தலைமகனால் நிகழ்த்துதற்காகாத செய்தி கூறுகின்றது.

(இ-ள்.) *ஓதற்குப் பிரிந்த தலைவன் ஏனையோர்போல அவ்வோதலையொழிந்து இடையே மீண்டு வருவதற்கு உடம்படவும் அவ்விடத்துத் தலைமகளை நினைந்து புலம்பவுந் தகான். (எ-று.)* (88)

89. தூதுந் துணையு மேது வாகச்
சென்றோ னவ்வினை நின்றுநீட் டித்துழிப்
புலந்து பாசறைப் புலம்பவும் பெறுமே.

இது தூதுந் துணைமையுங் காரணமாகப் பிரிந்த தலைவற்காவதோர் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) *தூது காரணமாகவும் உதவி காரணமாகவும் பிரிந்த தலைவன், அத்தொழில்கள் அப்பிரிவிற்கு உரிய ஓர் யாண்டின்கண் முடியாது நீட்டித்த காலத்துப் பாசறைக்கண்ணே இருந்து தலைவியை நினைத்து வெறுத்துப் புலம்புதல் செய்யவும் பெறும். (எ-று.)*

உம்மையாற் புலம்பல் ஒருதலையன் றென்க. (89)

90. பூத்தமை சேடியிற் புரவலர்க் குணர்த்தலும்
நீத்தமை பொறாஅது நின்றுகிழ வோனைப்
பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறலும்
கிழவோற் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனோ டுவந்தெதிர் கோடலு மவனொடும்
பாங்கொடும் பரத்தையைப் பழித்தலு நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்
சோலையுங் காவு மாலையங் கழனியும்
மாலைவெள் ளருவியு மலையுங் கானமுங்
கண்டுவிளை யாடலுங் கடும்புனல் யாறும்
வண்டிமிர் கமல வாவியுங் குளனும்
ஆடிவிளை யாடலுங் கூடுங் கிழத்திக்கு.

இது தலைவிக்குக் கற்புக்காலத்துக்கு உரிய ஒழுகலாறெல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) பூத்தமை சேடியிற் புரவலற்கு உணர்த்தல் முதலாகக் குளனுடல் ஈறாகச் சொல்லப்பட்டன எல்லாங் கற்புக்காலத்துத் தலைமகட்குப் பொருந்தும். (எ-று.)

கற்பென்பது அதிகாரத்தான் வந்தது.

இவற்றுட் தலைவி புனலாடற்குச் செய்யுள்:—

அடங்கா வசுரர் குலமறுத்தோ ரத்தி யூரர்வென்றி
மடங்காத நேமி வரதர்நன் னாட்டிற்றன் மைந்தனுடன்
முடங்காம லந்த மனைவியும் போய்முயன் றாரனுடன்
றடங்காவும் யாறுங் குளனுஞ்சென் றாடவுந் தக்கதுவே.
—[அத்தியூர்க்கோவை]

எனவும், பரத்தையைப் பழித்தற்குச் செய்யுள்;—

முருகார் முளரியு முள்ளியு முண்டக மூரியரம்
பொருகா ரிரும்புங் கனகமும் பொன்பொங்கு தாரகையுங்
குருகார் துறுங்கழிக் கெண்டையு நேரெங் குரிசிலுக்கு
வருகாத னல்கிய வெங்கையும் யானு மடந்தையரே.
—[அம்பி. 481]

எனவும் வரும். ஏனையவற்றிற்கு உதாரணம் மேல் வந்துழிக் காண்க. (90)

91. வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலும்
சேயிழை யூட றீர்த்தலும் போயுழி
அவணலந் தோலைவுகண் டழுங்கலு மவன்வயிற்
செல்ல விரும்பலுஞ் சென்றவற் குணர்த்தலும்
சொல்லிய கூற்றெனச் சொல்லுங் கிழவோன்
வரவு மீண்டுவந் தரிவைக் குணர்த்தலும்
அணிநலம் பெற்றமை யறியான் போன்றவட்
பணிவோடு வினுதலும் பாணற் குரிய.

இது மேற்கூறிப்போந்த வாயில்களுட் பாணற்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) வாயில்வேண்டல் முதலாகச் சொல்லப்பட்டன எல்லாம் பாணற்கு உரியனவாம். (எ-று.) (91)

92. செலவிற் றேற்றலும் புலவியிற் றணித்தலும்
வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலுந்
தேரியிழை விறலிக் குரிய வாகும்.

இது விறலிக்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) செலவிற்றேற்றல் முதலாகச் சொல்லப்பட்டன எல்லாம் விறலிக்கு உரியனவாம். (எ-று.) (92)

93. செல்வம் வாழ்த்தலு நல்லறிவு கொளுத்தலுங்
கலனணி புணர்த்தலுங் காமநுகர் புணர்த்தலும்
புலவிமுதிர் காலைப் புலங்கொள வேதுவிற்
றேற்றலுஞ் செய்மை செப்பலும் பாசறை
மேற்சென் றுரைத்தலு மீண்டுவர வுரைத்தலுங்
கூற்றரு மரபிற் கூத்தற் குரிய.

இது கூத்தற்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *செல்வம்வாழ்த்தல் முதலாகச் சொல்லப்பட்டன எல்லாங் கூத்தற்கு உரியனவாம். (எ-று.)* (93)

94. மடந்தையை வாயில் வேண்டலும் வாயி
லுடன்படுத் தலுமவ ளூட றீர்த்தலுங்
கோற்றவற் காத்தலுங் குற்றேவல் செய்தலுஞ்
சென்றுமுன் வரவு செப்பலு மவன்றிற
ஞொன்றினின் றுரைத்தலும் வினைமுடி புரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலு மிளையோர் தொழிலென மொழிப.

இஃது இளையோர்க்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *மடந்தையை வாயில்வேண்டல் முதலாகச் சொல்லப்பட்டன எல்லாம் இளையோர்க்கு உரிய தொழில்களாமெனக் கூறுவர். (எ-று.)*

95. தீதுடைப் புலவி தீர்த்தலு மவன்வரல்
காதலிக் குரைத்தலுங் கண்டோர்க் குரிய.

இது கண்டோர்க்கு உரியனஎல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *புலவிதீர்த்தல் முதலாகிய எல்லாங் கண்டோர்க்கு உரியனவாம். (எ-று.)* (95)

96. இளமையும் யாக்கையும் வளமையு மேனவு
நிலையாத் தன்மை நிலையெடுத் துரைத்தலுஞ்
செலவழுங்கு வித்தலுஞ் செலவுடன் படுத்தலும்
பிறவு மெல்லா மறையோர்க் குரிய.

இஃது இருவகைப்பாங்கருட் பார்ப்பனப் பாங்கர்க்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *இளமைமுதலாயினவும் அவைபோல்வனபிறவும் நிலையாத இயல்பின் நிலைமையை எடுத்துக்கூறலுஞ் செலவழுங்குவித்தலுஞ் செலவுடன்படுத்தலும் பிறவும் எல்லாம் பார்ப்பனப் பாங்கர்க்கு உரியனவாம். (எ-று.)* (96)

97. நன்மையி னிறுத்தலுந் தீமையி னகற்றலுஞ்
சொன்னவை பிறவுஞ் சூத்திரர்க் குரிய.

இது சூத்திரப்பாங்கர்க்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *நன்மையினிறுத்தலுந் தீமையின் விலக்கலும் மேற்கூறிப் போந்தன பிறவுஞ் சூத்திரப்பாங்கர்க்கு உரியனவாம்.* (எ-று.)

சொன்னவையும் பிறவுமென்க. பிறவாவன: வாயில்வேண்டல் முதலாயின. (97)

98. சேயிழைக் கிழத்தியை வாயில் வேண்டலும்
வாயினேர் வித்தலும் வயங்குதுனி தீர்த்தலும்
வினைமுடித் ததன்பின் வியன்பதி சேய்த்தென
வினைவோற் றேற்றலும் பாகற் கியல்பே.

இது பாகற்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *தலைமகளை வாயில்வேண்டல் முதலாகச் சொல்லப்பட்டன எல்லாம் பாகற்கு இயல்பாம்.* (எ-று.) (98)

99. பிரிவுழி விலக்கலும் பிரிவுடன் படுத்தலும்
பிரிவுழித் தேற்றலும் பிரிவுழி யழுங்கலும்
பிறவு முரிய விறைவனைப் பாங்கிக்கு.

இது பாங்கிக்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *பிரிவுழிக்கலங்கல் முதலாகச் சொல்லப்பட்டனவும் பிறவும் எல்லாம் பாங்கிக்கு உரியனவாம்.* (எ-று.)

பிறவாவன: வாயில்வேண்டல் முதலாயின. (99)

100. முன்வரு நீதியு முயங்கியன் முறைமையும்
பின்வரும் பேற்றியும் பிறவு மெல்லாந்
தேற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கு
முற்ற வறிவர்க்கு முரிய வாகும்.

இது செவிலித்தாய்க்கும் அறிவர்க்கும் உரியன எல்லாந் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *முன்வருநீதி முதலாகச் சொல்லப்பட்டனவும் பிறவும் எல்லாந் தெளியச்சொல்லுதல் செவிலித்தாய்க்கும் பொருந்திய அறிவர்க்கும் உரியனவாம்.* (எ-று.)

பிறவாவன: வாயில்வேண்டல் முதலாயின. (100)

101. குடிப்பிறந் தோரை வடுப்படுத் துரைத்தலு
மனைவியைப் பழித்தலும் வாடா வூடலு
ளனையவட் கழறலு மனைவிக் கமைந்த
வொழுக்கமுங் காமக் கிழத்தியர்க் குரிய.

இது காமக்கிழத்தியர்க்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்து கின்றது.

(இ-ள்.) *குடிப்பிறந்தோரை வடுப்படுத்துரைத்தல் முதலாகச் சொல்லப்பட்டன எல்லாங் காமக்கிழத்தியர்க்கு உரியனவாம்.* (எ-று.)

102. கிழவோன் றன்னையுங் கிழத்தி தன்னையும்
இகழ்தலுந் தம்மைப் புகழ்தலு நிகழ்பொருள்
காத்தலும் பரத்தையர் கடனென மொழிப.

இது பரத்தையர்க்கு உரியன எல்லாந் தொகுத்து உணர்த்து கின்றது.

(இ-ள்.) *தலைமகனையுந் தலைமகளையும் இகழ்தல் முதலாகச் சொல்லப்பட்டன எல்லாம் பரத்தையர் முறைமையென்று கூறுவர் ஆசிரியர்.* (எ-று.)

இவற்றுட் கிழவோற்பழித்தற்குச் செய்யுள்:—

கோடலஞ் செங்கைநல் லார்கொங்கை யேற்றமென் கோங் [கினுடன்
பாடலங் காவும் பருமணற் குன்றும் பயின்றுநம்பா
லாடலும் பாடலுங் கண்டுகொண் டாடுவ தன்றியன்பி
னூடலுங் கூடலு முண்டுகொல் லோபொய்கை யூரனுக்கே.
[அம்பி. 482]

எனவும், தலைவியை இகழ்தற்குச் செய்யுள்;—

தேமே குவளையுஞ் செந்நெலுங் கன்னலுஞ் சேரநன்ன
ராமேய் கழனி யகன்புன லூர னகலமெல்லாம்
யாமே விரும்பின மென்றெம்மை யேசுவர் போலத்தம்மைத்
தாமே பழிப்பர் தலைவியர் தாமுந் தனம்படைத்தே.
[அம்பி. 480]

எனவும், பரத்தையர் தம்மைப்புகழ்தற்குச் செய்யுள்:—

அரியார் விழிவஞ்சி யாயமுந் தானு மகன்றுறைவாய்
விரியார் நறுந்தொடை மன்புறங் காப்பினு மென்புறமே

புரியா தொழிருவ னேலழி யாத புகழ்படையாக்
கரியார் திருவிற் றரியா துடைகவென் கைச்சங்கமே.

—[அம்பி. 476]

எனவும்வரும். நிகழ்பொருள்காத்தற்கு உதாரணம் வந்துழிக் காண்க.(102)

103. பரத்தையர் காதற் பரத்தையைப் புகழ்தலுந்
தம்மை யிகழ்தலுந் தம்முளுங் கூறுப.

இது பரத்தையர்க்கு உரியதோர் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) காதற்பரத்தையைப் புகழ்தலுந் தம்மை இகழ்தலுந் தம்முள்ளேயுங் கூறுவர் பரத்தையர். (எ-று.)

பரத்தையர் காதற்பரத்தையைப் புகழ்ந்து தம்மை இகழ்தற்குச் செய்யுள்;—

திணைகாணு நன்னிதி யன்னானைத் தன்வசஞ் செய்தவஞ்சி
துணைகாணு மாமுலைத் தோற்றங்கண் டிரந்தத் தோன்றலம்
[பொற்
பணைகாணுந் திண்புயம் புல்லாது வீணிற் பருத்தகொங்கை
யிணைகா ளுமக்கிந்த மேம்பா டுறுவ தியல்பல்லவே.

எனவரும். (103)

104. இளையர் கிழவோற் கிரவும் பகலுங்
களைத லில்லாக் கவயம் போல்வார்.

இது மேற்கூறிப்போந்த இளையராவார் இவரென்கின்றது.

(இ-ள்.) இளையராவார் தலைமகற்கு நீங்காக் கவசம்போலுந் தன்மையார் இரவும் பகலும். (எ-று.) (104)

105. இருவகைப் பாங்கரு மொருபெருங் குரிசிற்
கின்னுயிர்த் துணையா விருபெருங் குரவருந்
தன்வசப் படுத்த தகைமை யோரே.

இது பாங்கராவார் இவரென்கின்றது.

(இ-ள்.) பார்ப்பனப் பாங்கருஞ் சூத்திரப் பாங்கருமென்னும் இருதிறத்தோருந் தலைமகற்கு இனிய உயிர்த்துணையாக அவன் தாயுந் தந்தையும் அவனை அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட தன்மையோர். (எ-று.) (105)

106. தோழி செவிலி மகளாய்ச் சூழ்தலோ
டுசாத்துணை யாகி யசாத்தணி வித்தற்
குரிய காதன் மருவிய துணையே.

இது தோழியாவாள் இவளென்கின்றது.

(இ-ள்.) *தோழியென்பாள் செவிலிக்கு மகளாய் நன்மையுந் தீமையும் ஆராய்தலுடனே தலைமகட்கு உசாத்துணையாய் அவளது வருத்தந் தீர்த்தற்கு உரிய அன்புபொருந்திய துணையாம். (எ-று.)* (106)

107. செவிலி நற்றாய் தோழி யாகி
யவல நீக்கி யறிவுமா சாரமுங்
கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே.

இது செவிலியாவாள் இவளென்கின்றது.

(இ-ள்.) *செவிலியென்பாள் தலைமகளுடைய நற்றாய்க்குத் தோழியாய்த் தலைமகட்கு வரும் குற்றங்களைக் களைந்து நல்லறிவும் ஆசாரமுங் கொளுத்தித் தலைமகளை வளர்த்த தாய். (எ-று.)* (107)

108. அறிவர் கிழவோன் கிழத்தியென் றிருவர்க்கும்
உறுதி மொழிந்த வொருபெருங் குரவர்.

இது அறிவராவார் இவரென்கின்றது.

(இ-ள்.) *அறிவரென்பார் தலைமகற்குந் தலைமகட்கும் உறுதியைப் பயக்கும் உபதேசங்களைச் சொன்ன மேம்பட்ட குரவராவர்.(எ-று.)* (108)

109. ஒருவன் றனக்கே யுரிமை பூண்டு
வருகுலப் பரத்தையர் மகளி ராகிக்
காமக்கு வரைந்தோர் காமக் கிழத்தியர்.

இது காமக்கிழத்தியராவார் இவரென்கின்றது.

(இ-ள்.) *காமக்கிழத்தியரென்பார் சேரிப்பரத்தையர்போலப் பலர்க்கும் உரியாரன்றி ஒருவற்கே உரிமைபூண்டு வருகுலப்பரத்தையர் மகளிராகிக் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டார். (எ-று.)* (109)

110. யாரையு நயவா வியல்பிற் சிறந்த
சேரிப் பரத்தையர் மகளி ராகிக்
காதலிற் புணர்வோர் காதற் பரத்தையர்.

இது காதற்பரத்தையராவார் இவரென்கின்றது.

(இ-ள்.) *காதற்பரத்தையரென்பார் யாவரையும் விரும்பாத இயல்பினான்மிக்க சேரிப்பரத்தையருடைய மகளிராய்த் தம்விருப்பினாற் தலைமகனோடு கூடுவோர். (எ-று.)* (110)

111. அவருளும் வரைதற் குரியோ ருளரே.

இது காதற்பரத்தையர்க்கு உரியதோர் சிறப்பு உணர்த்துகின்றது.

(இ-ள்.) *காதற்பரத்தையருள்ளும் உளர் தலைமகனால் வரைந்து கோடற்கு உரியர். (எ-று.)* (111)

112. மக்களோடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப.

இது தலைவனுந் தலைவியுந் துறவறங் காக்குங் காலம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) *மக்களோடு மகிழ்ந்து இல்லறத்தினைக் காத்துத் தமக்குப் பொருந்திய காமவேட்கை யெல்லாந் தீர்ந்த காலத்துத் தலைமகனுந் தலைமகளுந் தம்மூரினீங்கி வனத்தின்கட் சென்று எல்லையில்லாச் சுற்றத்தாரோடுந் துறவறங் காப்பர். (எ-று.)* (112)

113. அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டினுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்.

மேற்கூறிப் போந்த கைகோளிரண்டினையும், விரித்து உணர்த்துவான் தொடங்கினவற்றுள் இது நிறுத்த முறையானே களவென்னுங் கைகோளது இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) *அன்பினுடைய ஐந்திணையுட் களவெனப்பட்ட கைகோளாவது, பார்ப்பாரது அரிய வேதநூலிடத்து மகட்கோடலாறு எட்டனுட் கந்தருவ நெறியோடு ஒப்பதென்று கூறுவர் அறிந்தோர். (எ-று.)*

அன்பாவது,

அடுமரந் துஞ்சுதோ ளாடவரு மாய்ந்த
படுமணிப் பைம்பூ ணவருந்—தடுமாறிக்
கண்ணெதிர்நோக் கொத்தவண் காரிகையிற் கைகலந்
துண்ணெகிழச் சேர்வதா மன்பு.

—[தொல். பொரு. பக். 371]

என்பதனான் அறிக.

பிறர்க்கு உரித்தென்று இருமுதுகுரவராற் கொடையெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது, இருவருங் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவாதலிற், பிறர்க்கு உரிய பொருளை மறையிற்

கொண்டு கைகுறைக்கவுங் கால் குறைக்கவுங் கழுவேற்றவும்பட்டுப் பழியும் பாவமுமாக்கி, நரகத்தின் உய்க்கும் ஏனை உலகத்துக் களவுபோலாது, இது மேன்மக்களானும் புகழப்பட்டு ஞான ஒழுக்கத்தோடு ஒத்த இயல்பிற்றாய்த் துறக்க வீடுகளை முடிக்குமென்பார் அச்சிறப்புத் தோன்றக் 'களவெனப்படுவது' என்றார்; பிற ஊரினுஞ் சிறந்தது இவ்வூரென்பார், "ஊரெனப்படுவதுறையூர்" என்றாற்போல. அதனானே ஈண்டுக் களவென்றது வேதத்தை மறைநூலென்றதுபோல நின்றதாயிற்று.

வேதமாவன, இருக்கு முதலியனவாம்.

மன்றல் எட்டாவன; பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பனவாம்.

அறநிலை யொப்பே பொருள்கோ டெய்வம்
யாழோர் கூட்ட மரும்பொருள் வினையே
யிராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய
மறையோர் மன்ற லெட்டிவை யவற்றுட்
டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பிதன்
பொருண்மை யென்மனார் புலமை யோரே.

—[இறை. சூ. 1 உரை]

என்பவாகலின். அவற்றுட் பிரமமாவது, ஒத்தகோத்திரத்தானாய் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தாற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது;

கயலேர் மலருண்கண் கன்னிப்பூப் பெய்தி
யயல்பே ரணிகலன்கள் சேர்த்தி—யியலி
னிரலொத்த வந்தணற்கு நீரிற் கொடுத்தல்
பிரமமண மென்னும் பெயர்த்து.

—[தொல். களவு. சூ. 1 நச்.]

என்பவாகலின். பிரசாபத்தியமாவது, மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம் மகட்கு ஈந்து கொடுப்பது;

அரிமத ருண்க ணாயிழை யெய்துதற்
குரியவன் கொடுத்த வொண்பொரு ளிரட்டி
திருவின் றந்தை திண்ணிதிற் சேர்த்தி
யரியதன் கிளையோ டமைவரக் கொடுத்தல்
பிரித லில்லாப் பிரசா பத்தியம்.

—[தொல். களவு. சூ. 1. நச்.]

என்பவாகலின். ஆரிடமாவது, தக்கோனொருவற்கு ஆவும், ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறீஇப் பொன் அணிந்து, நீரும் இவைபோலப் பொலிந்து வாழ்வீரென நீரிற் கொடுப்பது;

தனக்கொத்த வொண்பொரு டன்மகளைச் சேர்த்தி
மனைக்கொத்த மாண்புடையாற் பேணி—யினக்கொத்த
வீரிடத் தாவை நிறீஇயிடை யீவதே
யாரிடத்தார் கண்டமண மாம்.

—[தொல். களவு. சூ. 1 நச்.]

என்பவாகலின். தெய்வமாவது, பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒத்த ஒருவற்கு அவ்வேள்வித்தீ முன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது;

நீளி நெடுநகர் நெய்பெய்து பாரித்த
வேள்வி விளங்கழன் முன்னிறீஇக்—கேள்வியாற்
கைவைத்தாம் பூணாளைக் காமுற்றாற் கீவதே
தெய்வ மணத்தார் திறம். —[தொல். களவு. சூ. 1 நச்.]

என்பவாகலின். ஆசுரமாவது, கொல்லேறுகோடல், திரிபன்றியெய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து கோடல்;

முகையவிழ் கோதையை முள்ளெயிற் றரிவையைத்
தகைநலங் கருதுந் தருக்கின ருளரெனி
னிவையிவை செய்தாற் கெளியண்மற் றிவளெனத்
தொகைநிலை யுரைத்த பின்றைப் பகைவலித்
தன்னவை யாற்றிய வளவையிற் றயங்க
றொன்னிலை யசுரந் துணிந்த வாறே.

—[தொல். களவு. சூ. 1 நச்.]

என்பவாகலின். இராக்கதமாவது, தலைமகடன்னினுந் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது;

மலிபொற்பைம் பூணாளை மானுற்ற மைந்தர்
வலிதிற்கொண் டாள்வதே யென்ப—வலிதிற்
பராக்கதஞ் செய்துழலும் பாழி நிமிர்தோ
ளிராக்கதத்தார் மன்ற லியல்பு.

—[தொல். களவு. சூ. 1 நச்.]

என்பவாகலின். பைசாசமாவது, மூத்தோர், களித்தோர், துயின்றோர் புணர்ச்சியும், இழிந்தோளை மணஞ்செய்தலும், ஆடைமாறுதலும் பிறவுமாம்.

எச்சார்க் கெளிய ரியைந்த காவலர்
பொச்சாப் பெய்திய பொழுதுகொ ளமையத்து
மெய்ச்சார் பெய்திய மிகுபுகழ் நண்பி
னுசாவார்க் குதவாக் கேண்மைப்
பிசாசர் பேணிய பெருமைசா லியல்பே.

—[தொல். களவு. சூ. 1 நச்.]

எனவும்,

இடைமயக்கஞ் செய்யா வியல்பிணி னீங்கி
யுடைமயக்கி யுட்கறுத்த லென்ப—வுடைய
துசாவார்க் குதவாத வூனிலா யாக்கைப்
பிசாசத்தார் கண்டமணப் பேறு.

எனவுங் கூறுபவாகலின். இனிக் கந்தருவமாவது, கந்தருவகுமாரருங் கன்னியருந் தம்முள் எதிர்ப்பட்டு இயைந்ததுபோலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது;

அதிர்ப்பில்லைம் பூணுரு மாடவருந் தம்மு
ளெதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப—கதிர்ப்பொன்யாழ்
முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
கந்திருவர் கண்ட கலப்பு.

என்பகவாகலின். மாலைசூட்டல் யாதனுள் அடங்குமெனின், அதுவும் ஒத்த அன்பினராய் நிகழ்தலிற் கந்தருவப்பாற்படும். இவற்றுள் ஆசுர முதலாகிய மூன்றுங் கைக்கிளைக்கு உரியவாம்; பிரமமுதலாகிய நான்கும் பெருந்திணைக்கு உரியவாம்;

முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே.

—[தொல். கள. சூ. 14]

என்பவாகலின். களவொழுக்கம் பொதுவாகலின் நான்குவருணத்தார்க்கும் ஆயர்முதலியோர்க்கும் உரித்து. வில்லேற்றுதல் முதலியன பெரும்பான்மை அரசர்க்கு உரித்து. அவற்றுள் ஏறுதழுவல் ஆயர்க்கே சிறந்தது. இராக்கதம் அந்தணரொழிந்தோர்க்கு உரித்து, வலிதிற்பற்றிப் புணர்தலின். அரசர்க்கும் இது பெருவரவிற்றன்று. பேய் இழிந்தோர்க்கே உரித்து. இக்களவொழுக்கம் வேதமுடிபென்பார்,

அந்தண ரருமறை மன்ற லெட்டினுட்
கந்தருவ வழக்கம்.

என்றார். கந்தருவ வழக்கத்தோடு ஒத்த வழக்கினைக் கந்தருவ வழக்க மென்றது உபசாரவழக்கு. (113)

114. காட்சி யையந் துணிவுகுறிப் பறிவென
மாட்சியி னான்கு வகைத்தே கைக்கிளை.

இது மெய்க்கிளையாழோர் வேண்டும் புணர்ச்சிமுன் நிகழ்வதாக மேற் கூறிய கைக்கிளைப்பகுதி கூறுகின்றது.

(இ-ள்.) *காட்சிமுதலாகச் சொல்லப்பட்ட மாட்சிமையுடைய நான்கு வகையினையுடைத்து நற்காமத்திற்கு உரிய கைக்கிளை.* (எ-று.) (114)

115. ஒன்றே வேறே யென்றிரு பால்வயி
னொன்றி யுயர்ந்த பால தாணையி
னொத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே.

இது மேற்கூறிய கைக்கிளைப்பகுதியுள் நிறுத்தமுறையானே காட்சி யது இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) *உம்மைப்பிறப்பினுங் காமம் நுகர்ந்தார் இருவரையும் மறுபிறப்பினும் ஒன்றுவித்தலும் வேறுக்கலுமாகிய இருவகை ஊழினுள் இருவரையும் ஒன்றுவித்து உயர்தற்கு ஏதுவாகிய ஊழினது ஆணையாலே மேற் (சூ. 116) கூறும் பிறப்பு முதலாயின பத்தும் ஒத்த தலைவனுந் தலைவியும் எதிர்ப்படுவர்; அவ்வாறு எவ்வாற்றானும் ஒவ்வாது, பிறப்பு, கல்வி, பருவம் முதலிய சிலவற்றாற் தலைவன் மிகுந்தானாயினும் அம்மிகுதி பற்றிக் கடிதல் கடிதலின்று.* (எ-று.)

எனவே, இவற்றுள் யாதொன்றாயினுந் தலைவி மிக்காளாயின் அம் மிகுதிபற்றி அவளைக் கடிதல் கடிதலுடைத்து என்றவாறும். 'உயர்ந்தபால்' என்பது 'நோய்தீர்ந்தமருந்து' போல உயர்ந்ததன்மேற் செல்லும் மன நிகழ்ச்சிக்கு ஏதுவாயிருந்த பாலென ஏதுப்பொருட்டாய் நின்றது, அத னது ஆணையால் இழிந்ததன்மேற் சேறலின்றாகலின். கிழவன் கிழத்தி யெனவே, பலபிறப்பினும் ஒருவர்க்கொருவர் உரிமைபூண்டு நின்றமையும் பெற்றாம். காண்பவெனப் பொதுப்படக்கூறிய அதனானே இருவர்க்கும் பொதுவாகிய ஒரு நிலத்தும், ஒருவர்க்குச் சிறந்த வேற்றுநிலத்துங் காண்ப ரெனக் கொள்க. ஈண்டு நிலமென்றது அவ்வொழுக்கத்திற்குச் சிறந்த குறிஞ்சித்திணைக்கு உரிய வரையும் வரைசார்ந்த இடமுமெனக் கொள்க.

இவனிவ ளைம்பால் பற்றவு மவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவுங்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னே
நல்லைமன் றம்ம பாலே மெல்லியற்

றிணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மனமகி ழியற்கை காட்டி யோயே. —[குறுந். 229]

இஃதுஊரென்றதாம்.

இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை. —[கலி. 41]

என்புழிப் பொய்த்தவன் மலையும் இலங்கும் அருவித்தெ‌ன வியந்து கூறித் தம்மலைக்கு நன்றி இயல்பென்றலின் இது வரை வேறென்பதாம். பிறவாறு வருவன உளவேல் அவையும் ஈண்டே அமைத்துக்கொள்க.

இக்களவொழுக்கம், கொடுப்போரும் அடுப்போரும் இன்றித் தாமே தனியிடத்து எதிர்ப்பட்டுப் புணருங் கந்தருவத்தோடு ஒக்குமென்றலின், இவரும் அவ்வாறு ஓரிடத்தும், வேற்றிடத்துங் காண்புழித் தனித்துக் காண்பரென்பதூஉம் பெற்றாம். பெறவே இருவரும் முட்டில் செல்வத்தராதலின், தலைவனுங் கறங்குங் கந்துகத் தேரேறிப், போத்துங் கடுங்கண்யானையுந், தறுகட்பன்றியுங், கருவரையும், இருநிலனும் பெருவிசும்பும் அனையார், ஆளிமொய்ம்பின் அரிமான்றுப்பினர், பற்பன்னூருயிரவர், கூர்வேலிளைஞர் தற்சூழ வேட்டைவிருப்பாற் செல்வானென்பது முடிந்தது. தலைவியும் உடன் பிறந்து, உடன் வளர்ந்து, நீர் உடனாடிச், சீர் உடன்பெருகி, ஓல் உடனாட்டப், பால் உடனுண்டு, பல் உடனெழுந்து, சொல் உடன்கற்றுப், பழமையும் பயிற்சியும், பண்பும் நண்பும், விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார், பற்பன்னூருயிரவர் கண்ணும் மனமுங் கவரும் ஒண்ணுதன் மகளிர் தற்சூழத், தாரகைநடுவண் தண்மதிபோலப், பொழில்விளையாட்டு விருப்பாற் செல்வாளென்பது முடிந்தது. முடியவே, தனித்துக்காண்டன் முடியாதெனின், முடியும்; என்னை? அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும், விளையாட்டுவிருப்பினால் ஒவ்வொருவரின் முன்னந் தழைவிழைந்தன தொடுத்துமென்றும், கண்ணி தண்ணறுநாற்றத்தன செய்துமென்றும், போது மேதக்கன கொய்துமென்றும், மயிலொடு மாறுடுதுமென்றும், குயிலொடு மாறுகூறுதுமென்றும், அருவியாடி அஞ்சுனை குடைகுதுமென்றும், வாசமலர்க்கொடியி னூசலாடுதுமென்றும் பரந்து, அப்பாலார் இப்பாலாருள்ளாள் கொல்லோவென்றும் இப்பாலார் அப்பாலாருள்ளாள்கொல்லோ என்றும் இவ்வகை நினைத்துப் பிரிவரென்க. இவ்வகை தமியளாகப் பிரிவரோவெனின், எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படுங் குலத்துள்ளா ளல்லாளாதலானும் பான்மை அவ்வகைத்தாதலானும் பிறவாறு நினையார் பிரிவரென்க. ஆயின், இவ்வகைப்பட்ட ஆயத்திடை மேனாள் பிரிந்தறியாதாள் தமியளாய்நிற்குமோவெனின், நிற்கும்; தான்பயின்ற இடமுந் தன்னையத்தோடு ஒக்குமாதலானென்க. யாங்ஙனம்

நிற்குமோவெனின், சந்தனமுஞ் சண்பகமுந், தேமாவுந் தண்பலாவும், ஆசினியும் அசோகமுங், கோங்கமும் வேங்கையுங், குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும், நறவும் நந்தியும், மாதவியும் மல்லிகையும், மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கினொடு முகைதிறந்து, வண்டறைந்து, தேனார்த்து, வரிக்குயிலினம் வரிபாடச், சிறுதென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழில்துன்றி, அவணதோர் மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்புதுடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறும் நறுமலர் வேங்கை கண்டாள். கண்டு பெரியதோர் காதற்களிகூரத் தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்புகிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலரணிகொம்பர் நடைகற்பதென நடந்துசென்று, நறுவிய வேங்கை நாண்மலர்கொய்தாள். கொய்த இடத்து, மரகதவிளிம்படுத்த மாணிக்கச்சுனை மருங்கின் ஒரு மாதவி வல்லி மண்டபத்திற், போதுவேய்ந்த பூநாறுபொழில் நிழற்றக், கடிக்குருக்கத்திக் கொடிப்பிடித்துத் தகடுபடு பசும்பொற்சிகரங்களின் முகடுதொறும் ஞான்று வந்து இழியும் மணியருவி, பொன்கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தோடு வயிரம் உந்தி அணிகிளர் அருவி ஆடகப் பாறைமேல் அதிர்குரன் முரசின் இரட்ட, வண்டுந் தேனும் யாழ் முரல, வரிக்குயிலுங் கிளியும் பாடத், தண்டாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை, ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக்கலாபம் விரித்து, இளஞாயிற்றின் எதிர்கதிர் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது கண்டு நின்றாளென்க. அப்பால், தலைவனும் பற்பன்னூறாயிரவர் கூர்வேலிளைஞரொடு குளிர்மலைச்சாரல் வேட்டம்போய் விளையாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடமானின் பின்னோடிக், காவலிளைஞரைக் கையகன்று, நெடுமான்றேரொடு பாகனை நிலவுமணற் கான்யாற்றில் நிற்கச்செய்து, தொடுகழல் அடியதிரச் சுருளுறுகுஞ்சி பொன்னாணிற் பிணித்துக்கட்டிக், கமழ்நறுங் கண்ணிக்கண் வண்டு மணமயர, அஞ்சாந்தின் நறுநாற்றந் தண்பொழிலிடைப் பரந்து நாற, வரிசிலை எதிர்கணை ஏந்தி வடிவுகொண்ட காமன்போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில் புகும். அஃது யாங்ஙனமோவெனின், வடகடலிட்ட ஒருநுக ஒருதுளை, தென்கடலிட்ட ஒருகழி சென்று, கோத்தாற்போலவும், வெங்கதிர்க்கனலியுந் தண்கதிர்மதியமுந் தங்கதி வழுவித் தலைப்பெய்தாற்போலவும் புகுமென்க. அதனால் ஒருவர் ஒருவரைத் தலைப்பெய்து காண்பரென்பது.

அதுவே,

தானே யவளே தமிரர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல். —[சூ. 2.]

என்றார் ஆசிரியர் இறையனாருமெனக்கொள்க.

இங்ஙனங் கூறிப்போந்த காட்சிக்குச் செய்யுள்;

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே
—[கோவையார் 1]

எனவரும். இக்காட்சிக்கட் தலைவனைப்போலத் தலைவியும் அவனை வியந்து கூறுதல் வேண்டுமோவெனின், அது புலனெறிவழக்கன்றெனமறுக்க.(115)

116. பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயி
னிறையே யருளே யுணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே.

மேல் 'ஒத்த கிழவனுங் கிழத்தியும்' (115) என்றார். இஃது அவ்வொப்பின் பாகுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) ஒத்தபிறப்பு முதலிய பத்துவகையினையுடைய மேல் நெறிப்படக்கூறிய ஒப்பினது பாகுபாடு. (எ-று.)

பிறப்பு-குடிப்பிறத்தல்; குடிமை-அதற்குத்தக்க ஒழுக்கமுடைமை; ஆண்மை-ஆள்வினை; ஆண்டு-பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பன்னீராண்டும் பதினாறாண்டுமாகிய பருவம்; உருவு-பெண்மைவடிவும் ஆண்மைவடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்த வனப்பு; நிறுத்தகாமவாயில்-நிலைநிறுத்தப்பட்ட புணர்ச்சிக்கு வாயிலாகிய அன்பு; நிறை-மறைபிறரறியாமை நெஞ்சினைநிறுத்தல் ; அருள்-பிறர்வருத்தத்துக்குப் பரியுங் கருணை ; உணர்வு-உலகியலாற் செய்யத்தகுவது அறிதல்; திரு-செல்வம். (116)

117. மடமா னோக்கி வடிவுங் கண்ட
விடமுஞ் சிறந்துழி யெய்துவ தையம்.

இஃது ஐயநிகழும் இடம் உணர்த்தியமுகத்தான் அதன் இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) தலைமகள்வடிவும் அவளைத் தான்கண்ட இடமுஞ் சிறந்த காலத்துத் தெய்வமோ மக்களுள் உள்ளாளோவென ஐயுறுவது யாம் மேற்கூறிய ஐயமாம். (எ-று.)

எனவே, அவை சிறப்புடையவல்லாக்காலத்து இழிபுசுட்டப்படுதலான் ஐயம் நிகழாதென்பதாம்; என்னை ?

சிறந்துழி யையஞ் சிறந்த தென்ப
விழிந்துழி யிழிபே சுட்ட லான. —[தொல். கள. சூ. 3]

என்பவாகலின். அதற்குச் செய்யுள்:

போதோ விசும்போ புனலோ பணிக ளதுபதியோ
யாதோ வறிகுவ தேது மிதி யமன்விடுத்த
தூதோ வனங்கன் றுணையோ விணையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயி லோவென நின்றவர் வாழ்பதியே.

—[கோவையார் 2]

எனவரும. ஏற்புழிக்கோடலான் இங்ஙனம் ஐயுறுதல் தலைவன்மேற்றே எனக்கொள்க. தலைவற்குத் தெய்வமோ என ஐயம் நிகழ்ந்தவழி அதனை நீக்கி நூன்முதலியவற்றாற் தெய்வமன்மை உணர்தற்கு அறிவுடையனாதலானும், தலைவிக்கு முருகனோ இயக்கனோ என ஐயம் நிகழின் அதனை நீக்கி உணர்தற்குக் கருவியிலளாகலான் அவட்கு அச்சமேயன்றிக் காமக் குறிப்பு நிகழாதாகலானுமென்பது. (117)

118. எழுதிய வல்லியுந் தொழில்புனை கலனும்
வாடிய மலருங் கூடிய வண்டு
நடைபயி லடியும் புடைபெயர் கண்ணும்
அச்சமும் பிறவு மவன்பா னிகழுங்
கச்சமி லையங் கடிவன வாகும்.

இஃது ஐயங்கடியுங் கருவி கூறுமுகத்தாற் றுணிவிலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்.) முலையினுந் தோளினும் வரித்த தொய்யிற்கொடியும், ஒருவரால் இழைக்கப்பட்ட அணிகலன்களும், கைக்கொண்டு மோந்து உயிர்த்தலானும், சூடித்துவளுதலானும், வாடியபூவும், தாதூதப்படிந்த வண்டும், நிலந்தோய்ந்து நடத்தற்றொழிலோடு பயின்ற அடியும், பக்கத்தே பெயர்ந்து பிறழுங் கண்ணும், ஆண்மகனைக் கண்டுழி மனத்திற்பிறக்கும் அச்சமும், அவைபோல்வன பிறவும் மேல் அங்ஙனம் ஐயுற்ற தலைவன் மாட்டு நிகழாநின்ற எண்ணிலா ஐயங்களைப் போக்குவனவாம். (எ-று.)

பிறவாவன: நிழலீடும் வியர்த்தலும் கூறைமாசுணலும் முதலாயின. இவை தெய்வமகளிர்க்கு இல்லாதன ஆகலான் ஐயங் கடிவனவாயின வென்க.

இதற்குச் செய்யுள் :—

பாயும் விடையரன் றில்லையன் னாள்படைக் கண்ணிமைக்குந்
தோயும் நிலத்தடி தூய்மலர் வாடுந் துயரமெய்தி
ஆயும் மனனே யணங்கல்ல ளம்மா முலைசுமந்து
தேயும் மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுநுதலே.

—[கோவையார் 3]

எனவரும். (118)

119. அரிவை நாட்ட மகத்துநிகழ் வேட்கை
தெரிய வுணர்த்துங் குரிசிற் கென்ப.

இது குறிப்பறிதற்கு ஏதுக் கூறுமுகத்தான் அதற்கு இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) *தலைமகள் கண்ணானது அவள் உள்ளத்து நிகழாநின்ற வேட்கையினை விளங்க அறிவிக்குந் தலைமகற்கு, அவன் அவட்கு அவ்வாறு தன்குறிப்பினை விளங்க உணர்த்தல் உற்று நோக்கும் நோக்கிற்கு எதிர்நோக்கியென்று கூறுவர் ஆசிரியர். (எ-று.)*

இக்குறிப்பறிதலே வழிநிலைக்காட்சியாய்ப் புகுமுகம்புரிதலென்னும் மெய்ப்பாடு கூறியதூஉ மாயிற்றென்பது. இதற்குச் செய்யுள்:

நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. —[குறள் 1082]

எனவரும்.

அணியு மமிழ்துமென் னாவியு மாயவன் றில்லைச்சிந்தா
மணியும்ப ராரறி யாமறை யோனடி வாழ்த்தலரின்
பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே.

இதுவும் அது. —[கோவையார் 5]

இன்னும் மேல், மாட்சி.—[சூ. 141] என்ற மிகையானே துணிந்த வழி வியத்தலும், குறிப்பறிந்த வழித்தெய்வத்தை மகிழ்ந்துரைத்தலும், அதன் வழித் தெய்வப்புணர்ச்சி துணிதலும் வரவும் பெறும். அவற்றுள் துணிந்தவழி வியத்தற்குச் செய்யுள்:—

அகல்கின்ற வல்குற் றடமது கொங்கை யவையவநீ
புகல்கின்ற தென்னைநெஞ் சுண்டே யிடையடை யார்புரங்கள்
இகல்குன்ற வில்லிற்செற் றோன்றில்லை யீசனெம் மானெதிர்ந்த
பகல்குன்றப் பல்லுகுத் தோன்பழ னம்மன்ன பல்வளைக்கே.
—[கோவையார் 4]

எனவும், குறிப்பறிந்தவழித் தெய்வத்தை மகிழ்ந்துரைத்தற்குச் செய்யுள்:—

வளைபயில் கீழ்கட னின்றிட மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே.
—[கோவையார் 6]

எனவும், தெய்வப்புணர்ச்சி துணிதற்குச் செய்யுள்:—

ஏழுடை யான்பொழி லெட்டுடை யான்புய மென்னைமுன்னாள்
ஊழுடை யான்புலி யூரன்ன பொன்னிவ் வுயர்பொழில்வாய்ச்
சூழுடை யாயத்தை நீக்கும் விதிதுணை யாமனனே
யாழுடை யார்மணங் காணணங் காய்வந் தகப்பட்டதே.

—[கோவையார் 7]

எனவும் வரும். இவை ஒருதலைக்காமம் அல்லவேனும் புணர்ச்சிநிகழாமையிற் கைக்கிளைப்பாற்படும். (119)

120. இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்
இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி யுடம்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி யிடையீடு
இரவுக் குறியே யிரவுக்குறி யிடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாத
லொருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றொருபதி னேழுங்
களவிற் குரிய கிளவித் தொகையே.

இது களவென்னுங் கைகோளிற்கு உரிய கிளவித்தொகை இத்துணைப்பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) இயற்கைப்புணர்ச்சி முதலாக வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழுங் களவென்னுங் கைகோளிற்கு உரிய கிளவிகளின் தொகையாம். (எ-று.) (120)

121. கலந்துழி மகிழ்தலு நலம்பா ராட்டலு
மேற்புற வணிதலு மென்னுமிம் மூன்றும்
போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே.

நிறுத்தமுறையானே இயற்கைப்புணர்ச்சிக்குரிய வகையும் விரியுங் கூறுவனவற்றுள், இஃது அதன்பகுதியாக மேற்கூறிப் போந்த தெய்வப்புணர்ச்சிக்கு வகையின்றாகலின் அதன்விரி கூறுகின்றது.

(இ-ள்.) தெய்வப்புணர்ச்சி துணிந்தபின் வேட்கை மிக, அதனால் அவன் இன்றியமையாமையிற் புணருமன்றே! புணர்ந்துழி அப்புணர்ச்சியின்பத்தை மகிழ்ந்துரைத்தலும், புணர்ச்சிதான் புணராதமுன் நின்ற வேட்கை புணர்ந்தபின்னும் மீதூர்தலான் அந்நலத்தைப் புகழ்ந்துரைத்தலும், புணர்ச்சியாற் சிதைந்தனவற்றைப் பண்டுபோலப் பொருந்த அணி

தலுமென்னும் இம்மூன்று கிளவியும் மேற்போற்றப்பட்ட தெய்வப் புணர்ச்சியின் விரியாம். (எ-று.)

மேற் போற்றப்பட்டவாறென்னையெனின்,

தெய்வந் தன்னி னெய்தவுங் கிழத்தியின்
எய்தவும் படூஉ மியற்கைப் புணர்ச்சி. —[சூ. 29]

எனவும்,

இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தி னெய்துழி
முயற்சி யின்றி முடிவ தாகும். —[சூ. 30]

எனவுங் கூறிப்போந்தமையாமென்க.

'போற்றிய' என்ற மிகையானே, இங்ஙனம் புணர்ச்சியின்பத்தை மகிழ்ந்துசொல்லக் கேட்ட தலைமகள் நாணம் மிக்குச் சொல்லாடா ளன்றே! அவள் உறுப்புக்கண்டு சொற்கேட்க விரும்புதலும், அங்ஙனம் விரும்புதலான் அன்பு மீதூரப்பட்ட தலைமகன் இவள் வாய்போல நாறும் ஆம்பல் மலர்கள் உளவோவென, வண்டிற்கு உரைப்பானாய் அவ்விருப்பங் கூறிச் சொற்கேளாத அயர்வு நீங்குதலும் நலம்பாராட்டலின்பின் வரவும் பெறும்.

கலந்துழிமகிழ்தற்குச் செய்யுள்:—

சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பிற்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே.

—[கோவையார் 8]

எனவும், நலம்பாராட்டற்குச் செய்யுள்:—

உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிற் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே.

—[கோவையார் 9]

எனவும், சொற்கேட்க விரும்புதற்குச் செய்யுள்:—

அளவியை யார்க்கு மறிவரி யோன்றில்லை யம்பலம்போல்
வளவிய வான்கொங்கை வாட்டடங் கண்ணுதன் மாமதியின்
பிளவியன் மின்னிடை பேரமை தோளிது பெற்றியென்றால்
கிளவியை யென்னோ வினிக்கிள்ளை யார்வயிற் கேட்கின்றதே.

—[கோவையார் 10]

எனவும், சொற்கேளாது அயர்வு நீங்கியதற்குச் செய்யுள்:—

கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரின்
தேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ டங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோவளி காணும் மகன்பணையே.

—[கோவையார் 11]

எனவும், ஏற்புறவணிதற்குச் செய்யுள்:—

தூசுங் கலையுந் தொலையா வழகெறிக் குந்தொடியும்
வாசங் கமழு மதுமல ரோதியும் வண்களபம்
பூசுங் கனதனம் பூணுமுத் தாரமும் பூங்குழையு
மாசும் பழுதில்பொன் னேபண்டு போல வணிந்தனமே.

—[அம்பி. 7]

எனவும் வரும். (121)

122. வேட்கை யுணர்த்தன் மறுத்த லுடன்படல்
கூட்டமேன் றிறைவியிற் கூட்டநால் வகைத்தே.

இது நிறுத்தமுறையானே தலைவியிற்புணர்ச்சிவகை இத்துணைப் பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) வேட்கையுணர்த்தல் முதலாகக் கூட்டம் ஈறாகச் சொல்லப்பட்ட நான்குவகையினையுடைத்து தலைமகளாற் புணரும் புணர்ச்சி. (எ-று.) (122)

123. இரந்துபின் னிற்றற் கெண்ணலு மிரந்து
பின்னிலை நிற்றலு முன்னிலை யாக்கலு
மெய்தோட்டு பயிறலும் பொய்பா ராட்டலு
மிடம்பெற்றுத் தழாஅலும் வழிபாடு மறுத்தலு
மிடையூறு கிளத்தலு நீடுநினைந் திரங்கலு
மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலு
முறுவற்குறிப் புணர்தலு முயங்குத லுறுத்தலும்
புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலும் பிறவு
முணர்த்திய தலைவியிற் புணர்ச்சியின் விரியே.

இது, தலைவியிற்புணர்ச்சியின் விரி இத்துணைப்பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) இரந்துபின்னிற்றற்கெண்ணல் முதலாகப் புகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினைந்து கிளவியும் பிறவும் மேற்சொல்லப்பட்ட தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் விரியாம். (எ-று.)

'உணர்த்திய தலைவியிற் புணர்ச்சி' என்றதற்குப் 'போற்றிய தெய்வப் புணர்ச்சி.' —[சூ. 121]

என்றதற்கு உரைத்தாங்கு உரைக்க.

'பிற' என்றதனானே முன்னிலையாக்கலின் பின்னர் மருங்கணைதலும், புகழ்தற்குப் பின் ஏற்புறவணிதலும் வரவும் பெறும்.

இரந்து பின்னிற்றற்கெண்ணற்குச் செய்யுள்:—

மருந்திற் றீராது மணியி னாகாது
அருந்தவ முயற்சியி னகறலு மரிதே
தான்செய் நோய்க்குத் தான்மருந் தாகிய
தேனிமிர் நறவின் தேறல் போல
நீதர வந்த நிறையழி துயரநின்
னாடுகொடி மருங்கு லருளி னல்லது
பிறிதிற் றீரா தென்பது பின்னின்று
அறியக் கூறுக மெழுமோ நெஞ்சே
நாடுவிளங் கொண்புகழ் நடுதல் வேண்டித்தன்
னாடுமழைத் தடக்கை யறுத்துமுறை நிறுத்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்
கொற்கையம் பெருந்துறைக் குணிதிரை தொகுத்த
விளங்குமுத் துறைக்கும் வெண்பற்
பன்மாண் சாயற் பரதவர் மகட்கே. —[குணநாற்பது]

எனவரும். ஆடுகொடிமருங்குலென்பது, அண்மைவிளி. ஆடுகொடி மருங்குலாய் நீ தரவந்த நிறையழிதுயரம் நின்னருளினல்லதெனப் பொருளுரைத்துக்கொள்க. இதனைத் தலைவன் தோழியையிரந்து பின்னிற்றற்கு இயைந்து கூறுதலாகவும் உரைப்ப.

இரந்து பின்னிலை நிற்றற்குச் செய்யுள்:—

செறிவேழ வெஞ்சிலை வேடஞ்சை வாணன் றிருந்தலர்மேல்
எறிவேலை வென்றகண் ணென்னுயிர்க் கேவி யிருண்டறல்போல்
நெறிவே யலங்கன் முடித்தலை சாய்த்திங்ங னிற்பதுதான்
அறிவே யறிந்த வுனக்கலர் மாளிகை யாரணங்கே.

—[தஞ்சை. 6]

எனவும். முன்னிலையாக்கற்குச் செய்யுள்:—

வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்றென் மாறைவண்டு
கொழுதிய லார்செய் குழன்மட வீர்நுங்குற் றேவல்செய்து
தொழுதிய லாயத் தொகுதியொ டாடிச் சுனைகுடையா
தெழுதிய பாவையைப் போனின்ற வாறென் னியம்புமினே.
—[தஞ்சை. 7]

எனவும், மருங்கணைதற்குச் செய்யுள்:—

கோலத் தனிக்கொம்ப ரும்பர்புக் கஃதே குறைப்பவர்தம்
சீலத் தனகொங்கை தேற்றகி லேஞ்சிவன் றில்லையன்னாள்
நூலொத்த நேரிடை நொய்ம்மையெண் ணாதுநண் டேனசையாற்
சாலத் தகாதுகண் டீர்வண்டு காள்கொண்டை சார்வதுவே.
—[கோவையார் 45]

எனவும், மெய்தொட்டுப்பயிற்றற்குச் செய்யுள்:—

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள். —[குறள் 1106]

எனவும் வரும்.

அளகந் திருத்தி மதிநுத னீவி யணியகற்றிப்
புளகஞ்செய் தோளிற் புரிவளை யேற்றிப் புதியதென்றற்
கிளருங் கொழுந்தளிர் மெல்லடி தைவந்த வின்பமுறக்
களபஞ் செறிதனத் தாய்பெற்ற வாவென் கரதலமே.
—[அம்பி. 31]

இதுவும் அது. பொய் பாராட்டற்குச் செய்யுள்:—

மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி. —[குறள் 1118]

என வரும்.

பருந்தொன்று கூரிலை வேற்படை வாணன் பரிமளப்பூஞ்
செருந்தொன்று சோலைத்தென் மாறையன் னீர்செழுந் திங்களுங்கள்
முருந்தொன்று கோப முகங்கண்டு நாணி முயன்மறுத்தீர்
மருந்தொன்று தேடியன் றோமக மேரு வலங்கொள்வதே.
—[தஞ்சை. 9]

இதுவும் அது. இடம் பெற்றுத்தழாஅற்குச் செய்யுள்:—

மடைக்கண் டரளஞ் சொரிவயை நாடன்ன வையமொரு
குடைக்கண் டனிபுரப் பார்சொக்க நாயகர் கூடலன்னார்
கடைக்கண் கருணையுண் டாருமில் லாதபொற் காவுமுண்டு
புடைக்குந் தருண வனமுலை யாமின்று புல்லுவமே.
—[மதுரை. 39]

எனவும், வழிபாடுமறுத்தற்குச் செய்யுள்:—

அகலிடந் தாவிய வானோ னறிந்திறைஞ் சம்பலத்தின்
இகலிடந் தாவிடை யீசற் றொழாரினின் னற்கிடமாய்
உகலிடந் தான்சென் றெனதுயிர் நையா வகையொதுங்கப்
புகலிடந் தாபொழில் வாயெழில் வாய்தரு பூங்கொடியே.

—[கோவையார். 42]

எனவும் வரும். வழிபாடுமறுத்தல் - இடம்பெற்றுத் தழுவியபின் தலைவி வேட்கைக் குறிப்புக்கண்டு தலைவன் சார்தலுற்றவழி அவள் அதற்கு உடம்படாது மறுத்தல். இடையூறுகிளத்தற்குச் செய்யுள்:—

தாழச்செய் தார்முடி தன்னடிக் கீழ்வைத் தவரைவிண்ணோர்
சூழச்செய் தானம் பலங்கை தொழாரினுள் ளந்துளங்கப்
போழச்செய் யாமல்வை வேற்கண்பு தைத்துப்பொன் னேயென்னைநீ
வாழச்செய் தாய்சுற்று முற்றும் புதைநின்னை வாணுதலே.

—[கோவையார். 43]

எனவும், நீடுநினைந்திரங்கற்குச் செய்யுள்:—

காதன் மடந்தையர் கையகல் காலையு மெய்யகலா
மேதகு நாணு மெலியவென் றோவிழி போலுநெய்தற்
போதவிழ் மென்மலர்ப் புன்னையங் கானற் பொருந்துமிந்த
மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ்விப்பதே.

—[அம்பி. 36]

எனவும், மறுத்தெதிர்கோடற்குச் செய்யுள்:—

குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக் கூத்தனை யேத்தலர்போல்
வெருநாள் பிறவற்க வாழிய ரோமற்றென் கண்மணிபோன்
றொருநாள் பிரியா துயிரிற் பழகி யுடன்வளர்ந்த
அருநா ணளிய தழல்சேர் மெழுகொத் தழிகின்றதே.

—[கோவையார். 44]

எனவும், வறிதுநகை தோற்றற்குச் செய்யுள்:—

பூணுந் தரள நிரையவிர் தோற்றமும் பூந்தளவின்
சேணுங் கமழு முகையின் றகையுஞ் செழுஞ்சிலம்பிற்
காணுங் கலாப மயினெடும் பீலியின் காலுஞ்சிந்தை
நாணுங் கெடவறி தேநகைத் தாண்மதி நன்னுதலே.

—[அம்பி. 38]

எனவும், முறுவற்குறிப்புணர்தற்குச் செய்யுள்:—

முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு. —[குறள். 1274]

எனவும் வரும்.

மிகலே யொழியக் குறைவற நீடிய வெந்துயர்க்கோர்
புகலேது மின்றிப் புலம்பனெஞ் சேபொருந் தார்வருந்த
விகலே செயுமயி லன்னகண் ணார்முகத் தெல்லியன்றிப்
பகலே நிலவும் பவளத்துள் ளேவந்து பாரித்ததே.
—[அம்பி. 39]

இதுவும் அது. முயங்குதலுறுத்தற்குச் செய்யுள்:—

வானக் கதிரவன் மண்ணக மாதை மணந்த தன்றே
நானக் குழலியை நாணின்று பெற்றது நாவலர்க்குத்
தானக் களிறு தரும்புயல் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
கானக் கடிவரை வாய்விரை நாண்மலர்க் காவகத்தே.-[தஞ்சை. 17]

எனவும், புணர்ச்சியின் மகிழ்தற்குச் செய்யுள்:—

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள. —[குறள். 1101]

எனவும், புகழ்தற்குச் செய்யுள்:—

திரண்மா மரகதச் செய்குன்று [1]காளென்றுஞ் செவ்வனநீர்
முரண்மா தவங்கண் முயன்றுசெய் தாலு முளரிமங்கை
சரண்மாறை வாணன் றமிழ்த்தஞ்சை நாட்டென் றனியுயிர்க்கோ
ரரண்மா னனையகண் ணாள்கொங்கை போற லரிதுமக்கே.
—[தஞ்சை. 19]

எனவும் வரும். ஏற்புறவணிதற்குச் செய்யுள்:—

'தூசுங் கலையும்.' —[அம்பி. 7]

என மேற் (பக்-62) காட்டியதனையே ஈண்டும் உய்த்துரைத்துக் கொள்க.

இவற்றுள், இரந்துபின்னிற்றற்கெண்ணல் முதலாக நீடுநினைந் திரங்கல் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதனுள்ளும், வழிபாடு மறுத்தல் ஒன்றொழித்து அல்லாதன வேட்கையுணர்த்தற்கும், வழிபாடு மறுத்தலாகிய ஒன்றுந் தலைமகள் மறுத்தற்கும், மறுத்தெதிர்கோடலும் வறிதுநகை தோற்றலும் என்னும் இரண்டுந் தலைமகள் உடன்பாட்டிற்கும், முறுவற் குறிப்புணர்தலும் முயங்குதலுறுத்தலுமென்னும் இரண்டுந் தலைமகன் உடன்பாட்டிற்கும், புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலுமென்னும் இரண்டுந் தலைமகன் கூட்டத்திற்கும் உரியவாமெனக் கொள்க. (123)

(பா - ம்.) 1. 'ளொன்று செப்புவனீர்'

124. ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்
றெய்திய வன்புறை யிருவகைத் தாகும்.

நிறுத்தமுறையானே வன்புறை யுணர்த்துவனவற்றுள் இஃது அதன்வகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) ஐயந்தீர்த்தலும் பிரிவறிவுறுத்தலுமென மேற்கூறிய வன்புறை இரண்டு கூற்றினையுடைத்தாம். (எ-று.)

வன்புறை - வற்புறுத்தல். (124)

125. அணிந்துழி நாணிய துணர்ந்துதெளி வித்தலும்
பெருநயப் புரைத்தலுந் தெய்வத்திறம் பேசலும்
பிரியே னென்றலும் பிரிந்துவரு கென்றலும்
இடமணித் தென்றலு மென்றிவை யாறு
மடனறத் தெரிந்த வன்புறை விரியே.

இது, வன்புறைவிரி இத்துணைப் பகுதித் தென்கின்றது.

(இ-ள்.) அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல் முதலாக இடமணித்தென்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும், தலைமகளது அறிவின்மை நீங்க ஆராய்ந்து கூறிய வன்புறையின் விரியாம். (எ-று.)

அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தற்குச் செய்யுள்:—

நாவியுங் காரகி லாவியுந் தோய்குழ லணியஞ்சேல்
வாவியுஞ் சோலையுஞ் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவயற்
காவியுஞ் சேலுங் கமலமுங் காட்டுநின் கண்மலரும்
ஆவியும் போலினி யாரணி யாக வணிந்தனனே.

—[தஞ்சை. 20]

எனவும், பெருநயப்புரைத்தற்குச் செய்யுள்:—

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

—[குறுந். 2]

எனவும் வரும். இது குறுந்தொகை. தெய்வத்திறம் பேசற்குச் செய்யுள்:—

தேவரிற் பெற்றநஞ் செல்வக் கடிவடி வார்திருவே
யாவரிற் பெற்றினி யார்சிதைப் பாரிமை யாதமுக்கண்
மூவரிற் பெற்றவர் சிற்றம் பலமணி மொய்பொழில்வாய்ப்
பூவரிற் பெற்ற குழலியென் வாடிப் புலம்புவதே.

—[கோவையார். 14]

பிறைக்கும்

எனவும், பிரியேனென்றற்குச் செய்யுள்:—

சிந்தா மணிதெண் கடலமு தந்தில்லை யானருளால்
வந்தா லிகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேனின்னை யானகன் றுற்றுவனோ
சிந்தா குலமுற்றென் னோவென்னை வாட்டந் திருத்துவதே.
—[கோவையார். 12]

எனவும், பிரிந்து வருகென்றற்குச் செய்யுள்:—

தெளிவளர் வான்சிலை செங்கனி வெண்முத்தந் திங்களின்வாய்ந்
தளிவளர் வல்லியன் னாய்முன்னி யாடுபின் யானளவா
ஒளிவளர் தில்லை யொருவன் கயிலை யுகுபெருந்தேன்
துளிவளர் சாரற் கரந்துங்க னேவந்து தோன்றுவனே.
—[கோவையார். 16]

எனவும், இடமணித்தென்றற்குச் செய்யுள்:—

வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே.
—[கோவையார். 15]

எனவும் வரும். இவற்றுள் முன்னைய மூன்றும் ஐயந்தீர்த்தற்கும் ஏனைய பிரிவறிவுறுத்தற்கும் உரியவெனக் கொள்க.

'மடனறத் தெரிந்த' என்ற மிகையானே, தெய்வத்திறம் பேசிய பின்னர்ப் பருவரலுணர்தலும், அதன் பின்னர்ப் பிரிவச்சமும், அதன் பின்னர் இன்றியமையாமை எடுத்துரைத்தலும், பிரியேனென்றலின் பின்னர்த் தீராத்தேற்றமும் வரவும் பெறும். தீராத்தேற்றம்-தீராதவாறு தேற்றுதல். பருவரலுணர்தற்குச் செய்யுள்:—

கறியுறு சாரற் களியுறு தோகைக் கணநடஞ்செய்
வெறியுறு சோலை விழைவுற நாடி வெருவுறுமான்
மறியுறு செங்கண் மதுமலர்க் கோதை நொதுமலர்வந்
தறியுறல் கூடுமென் றோதிரு மேனி யழுங்குவதே-[அம்பி.11]

எனவும், பிரிவச்சத்திற்குச் செய்யுள்:—

நீங்கிற் சிறிது பொழுதுநில் லாவுயிர் நேரிழைக்கின்
றீங்கிப் படிவைகி லெய்தும் பழிநமக் கென்றுசிந்தித்
தோங்கற் சிலம்பிடை நின்றாச லாடி யுயங்குநம்மைத்
தாங்கத் தகுந்துணை யாதுகொல் லோவென் றனிநெஞ்சமே.
—[அம்பி. 12]

எனவும், இன்றியமையாமை யெடுத்துரைத்தற்குச் செய்யுள்:—

நீங்கரும் பொற்கழற் சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமு மெய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்மமிர் துஞ்செழுந் தேனும்பொ திந்துசெப்புங்
கோங்கரும் புந்தொலைத் தென்னையு மாட்கொண்ட கொங்கைகளே
—[கோவையார். 46]

எனவும், தீராத்தேற்றத்திற்குச் செய்யுள்:—

மெல்லிய லரிவைநின் னல்லகம் புலம்ப
நிற்றுறந் தமைகுவ னாயி னெற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே. —[குறுந். 137]

எனவும் வரும். இது குறுந்தொகை. (125)

126. தலைவன் மாற்றந் தலைவி தேற்றந்
தெளிவா மென்ப தெளிந்திசி னோரே.

இது நிறுத்தமுறையானே தெளிவிற்கு வகையும் விரியும் இன்மையின் அதன் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்.) தலைமகன் சொல்லைத் தலைமகள் தெளிதலைத் தெளிதலென்று சொல்லுவர் புலவர். (எ-று.)

அதற்குச் செய்யுள்:—

எத்துந் தமதுரை தேறிநின் றேனையிங் கேதனியே
வைத்தங் ககன்று மறைந்துறை யார்வறி யோர்கவர
முத்துந் துகிரு மிரங்குந் தரங்க முகந்தெறிந்து
தத்தும் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றமிழ்வெற்பரே.
—[தஞ்சை. 26.]

எனவரும். (126)

127. செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தொடு
சொல்லலும் பாகனொடு சொல்லலு மிரண்டும்
பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே.

இது நிறுத்தமுறையானே பிரிவுழிமகிழ்ச்சிக்கு வகையின்மையின் அதன்விரி இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) அவ்வாறு அவ்விடத்து நீங்கித் தலைமகள் தன்னைக் காணாமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் நின்ற தலைமகன், புணர்ச்சிக்களத்து நின்றும் போகாநின்ற தலைமகளது செலவு கண்டு தன்னெஞ்சொடு கூறலும், பாகனொடு கூறலுமாகிய இரண்டும் பிரிவுழிமகிழ்ச்சியின் விரியாமெனக் கொள்க. (எ-று.)

செல்லுங்கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லற்குச் செய்யுள்:—

காணு மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅங் காண்டுமெம் மரும்பெற லுயிரே
சொல்லு மாடு மென்மெல வியலுங்
கணேக்கா னுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே.

—[தொல். பொரு. பக். 392]

எனவும், பாகனெடு சொல்லற்குச் செய்யுள்:—

தென்பாற் றிலகமன் ஞன்றஞ்சை வாணன்றென் மாறைமுந்நீர்
வன்பாற் றிரண்முத்த வண்டலின் மேல்வரு மேதமஞ்சி
முன்பார்த்தென் னெஞ்சம் வரும்வழி பார்த்து முறைமுறையே
பின்பார்த் தொதுங்குதல் காண்வல வாவொரு பெண்ணணங்கே.

—[தஞ்சை. 28.]

எனவும் வரும். (127)

128. மருளுற் றுரைத்த றெருளுற் றுரைத்தலென்
றிருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்.

இது பிரிவுழிக்கலங்கலின் வகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) மருளுற்றுரைத்தலுந் தெருளுற்றுரைத்தலுமென இரண்டு வகையினேயுடைத்தாம் பிரிவுழிக்கலங்கல். (எ-று.) (128)

129. ஆய வெள்ளம் வழிபடக் கண்டிது
மாயமோ வென்றலும் வாயில்பெற் றுய்தலும்
பண்புபா ராட்டலும் பயந்தோர்ப் பழிச்சலுங்
கண்படை பெறாது கங்குலே தலுமெனு
மைந்தும் பிரிவுழிக் கலங்கல்விரி யாகும்.

இது பிரிவுழிக்கலங்கலின் விரி இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) தலைமகளை ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இது மாயமோ வென்றல் முதலாகக் கண்படைபெறாது கங்குலேதல் ஈறாகச் சொல்லப் பட்ட ஐந்தும் பிரிந்தவழிக்கலங்கலின் விரியாம். (எ-று.)

ஆயவெள்ளம் வழிபடக் கண்டிதுமாயமோவென்றற்குச் செய்யுள்:—

புணர்ப்போ னிலனும் விசும்பும் பொருப்புந்தண் பூங்கழலின்
துணர்ப்போதெனக்கணியாக்குந்தொல்லோன் றில்லைச் சூழ்பொழில்வாய்
இணர்ப்போ தணிகுழ லேழைதன் னீர்மையி னீர்மையென்றூற்
புணர்ப்போ கனவோ பிறிதோ வறியேன் புகுந்ததுவே.

—[கோவையார். 17]

எனவும், வாயில்பெற்றுய்தற்குச் செய்யுள்:—

உயிரொன் றுளமுமொன் றொன்றேசிறப்பிவட்கென்றெடென்னப்
பயில்கின்ற சென்று செவியுற நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிரொன்று முப்புரஞ் செற்றவன் றில்லைச்சிற் றம்பலத்துப்
பயில்கின்ற கூத்த னருளென லாகும் பணிமொழிக்கே.

—[கோவையார். 18]

எனவும், பண்புபாராட்டற்குச் செய்யுள்:—

குன்ற நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையு
மஞ்சி லோதி யசையியற் கொடிச்சி
கண்போன் மலர்தலு மரிதிவ
டன்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே. —[ஐங். 299.]

எனவும், பயந்தோர்ப்பழிச்சற்குச் செய்யுள்:—

தூயசெந் தாமரைப் பொன்னையென் றுவித் துணையைத்தந்த
தாயருந் தந்தையுந் தாரணி மேலுந்தி தந்தவண்ண
லாயுவுந் தந்தை யருளும் புராரி யழகெறிக்குந்
தேயுவு மிந்திரன் செல்வமுங் கூடிச் சிறக்கநின்றே.-[அம்பி. 23.]

எனவும், கண்படைபெறாது கங்குனோதற்குச் செய்யுள்:—

மயில்போ லினியமென் சாயனல் லாருடன் வல்வினையேன்
றுயில்போன தின்னமுந் தோன்றவுங் காண்கிலன் சோலையிளங்
குயில்போன் மொழியவர் தங்குழல் போலிருள் கூர்ந்துகொற்ற
வயில்போன் மறஞ்செய்கண் போலற நீளு மருங்கங்குலே.

—[அம்பி. 24]

எனவும் வரும். இவற்றுள், ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இதுமாயமே
வென்றல் மருளுற் றுரைத்தற்கும், ஏனைய நான்குந் தெருளுற்றுரைத்தற்கும் உரிய.

இனி ஒன்றெனமுடித்தலாற் பிரிந்துழிக் கலங்கி நெஞ்சொடு கூறலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள் :—

இல்லோ னின்பங் காமுற் றாஅங்
கரிதுவேட் டனையே நெஞ்சே காதலி
நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே. —[குறுந். 120]

எனவரும். (129)

130. தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்
றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே.

இது நிறுத்தமுறையானே இடந்தலைப்பாட்டின் வகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) தெய்வந்தெளிதலுங் கூடலும் விடுத்தலுமென இடந்தலைப்பாடு மூன்றுவகையினையுடைத்து. (எ-று.) (130)

131. தந்த தெய்வந் தருமெனச் சேறலு
முந்துறக் காண்டலு முயங்கலும் புகழ்தலு
முடன்புண ராயத் துய்த்தலு மெனவைந்
திடந்தலைப் பாட்டி னிலக்கண விரியே.

இஃது, இடந்தலைப்பாட்டின் விரி இத்துணைப்பகுதித்து என்கின்றது.

(இ-ள்.) தந்ததெய்வந்தருமெனச்சேறல் முதலாக ஆயத்துய்த்தல் ஈறாக இடந்தலைப்பாட்டின் இலக்கணவிரி ஐந்தாம். (எ-று.)

தந்ததெய்வந் தருமெனச் சேறற்குச் செய்யுள்:—

என்னறி வால்வந்த தன்றிது முன்னுமின் னும்முயன்றால்
மன்னெறி தந்த திருந்தன்று தெய்வம் வருந்தனெஞ்சே
மின்னெறி செஞ்சடைக் கூத்தப் பிரான்வியன் றில்லைமுந்நீர்
பொன்னெறிவார் துறைவாய்ச் சென்று மின்றோய்பொழி லிடத்தே.
—[கோவையார். 49]

எனவும், முந்துறக்காண்டற்குச் செய்யுள்:—

நேயத்த தாய்நென்ன லென்னைப் புணர்ந்துநெஞ் சந்நெகப்போய்
ஆயத்த தாயமிழ் தாயணங் காயா னம்பலம்போல்
தேயத்த தாயென்றன் சிந்தைய தாய்த்தெரி யிற்பெரிதும்
மாயத்த தாகி யிதோவந்து நின்றதென் மன்னுயிரே.
—[கோவையார். 39]

எனவும், முயங்கற்குச் செய்யுள்:—

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள். —[குறள். 1105]

எனவரும்.

சுரும்பெமு கூந்தலுஞ் செவ்வாய் மழலையுஞ் சோதிநுத
லரும்பிய வேர்வு மலமரு நோக்கு மசைந்தொசியுங்
கரும்புரு வச்சிலை யுந்நிலை சோருங் கலையுங்கண்டு
விரும்பின மேமன மேகளி கூரின்ப வெள்ளத்தையே-[அம்பி. 41]

இதுவும் அது. புகழ்தற்குச் செய்யுள்:—

கனமே கருங்குழல் கங்குலன் றேகண் கருங்கயலி
னினமே குவளையு நெய்தலு மல்ல விவற்கிடையென்
மனமே வளரிளம் வஞ்சியன் றேவஞ்ச மாரன்வைத்த
தனமே தனங்கன கத்தட மேருச் சயிலமன்றே.—[அம்பி. 42]

எனவும், உடன்புணராயத் துய்த்தற்குச் செய்யுள்:—

சூளா மணியும்பர்க் காயவன் சூழ்பொழிற் றில்லையன்னாய்க்
காளா பொழிந்ததென் னாருயி ராரமிழ் தேயணங்கே
தோளா மணியே பிணையே பலசொல்லி யென்னைதுன்னும்
நாளார் மலர்ப்பொழில் வாயெழி லாயம் நணுகுகவே.
—[கோவையார். 47]

எனவும் வரும். இவற்றுட் டந்தெய்வந் தருமெனச் சேறலாகிய ஒன்றுந் தெய்வந்தெளிதற்கும்; காண்டலும், முயங்கலும், புகழ்தலுமாகிய மூன்றுங் கூடற்கும்; ஆயத்துய்த்தலாகிய ஒன்றும் விடுத்தற்கும் உரியவாம்.

'இலக்கணவிரி' என்ற மிகையானே தந்தெய்வந் தருமெனச் சென்றபின்னர்த் தலைவன் நெஞ்சொடு வினாதலும், அதன்பின்னர்க் கிள்ளைவாழ்த்தலும், அதன்பின்னர் அவளெதிர்ப்பட்ட இடத்தினை அவளாகக் கூறுதலும், அதன்பின்னர் மன்னனை நினைந்து மின்னிடைமெலிதலும், முந்துறக்காண்டலின் பின்னர்த் தனிநிலைகண்டு தளர்வகன்றுரைத்தலும், தானீங்கியவழிப் பிறந்தவருத்தமும் வேட்கையும் அவளறியுமாறு தலைவன்கூறுதலும், அதன்பின்னர்க்கூடற்கு அரிதெனவாடியுரைத்தலும், ஆயத்துய்த்தபின்னர் நீங்கற்கருமை நின்று நினைதலும் வரவும் பெறும்.

தலைவன் நெஞ்சொடு வினாதற்குச் செய்யுள்:—

நீடுங்கொல் லோகொண்ட நேயமென் [1]னாயத் தவரிடையிற்
றேடுங்கொல் லோவந்து செல்லுங்கொல் லோவந்தச் செவ்வியின்னுங்
கூடுங்கொல் லோவிதி கூட்டுங்கொல் லோவென்று கொம்பினுள்ளம்
வாடுங்கொல் லோவறி யேன்மலைச் சாரலில் வந்துநின்றே.
—[அம்பி. 26]

எனவும், கிள்ளைவாழ்த்தற்குச் செய்யுள்:—

வெள்ள வரம்பி னூழி போகியுங்
கிள்ளை வாழிய பலவே யொள்ளிழை
யிரும்பல் கூந்தற் கொடிச்சி
பெருந்தோட் காவல் காட்டி யவ்வே.'—[ஐங். 281.]

(பா-ம்) 1. 'னாயத்தர் நிலையிற்'

எனவும் வரும். இஃது ஐங்குறுநூறு. அவளை யெதிர்ப்பட்ட இடத்தினை அவளாகக் கூறுதற்குச் செய்யுள்:—

காம்பிணை யாற்களி மாமயி லாற்கதிர் மாமணியால்
வாம்பிணை யால்வல்லி யொல்குத லான்மன்னு மம்பலவன்
பாம்பிணை யாக்குழை கொண்டோன் கயிலைப் பயில்புனமுந்
தேம்பிணை வார்குழ லாளெனத் தோன்றுமென் சிந்தனைக்கே.
—[கோவையார். 38]

எனவும், மன்னனை நினைந்து மின்னிடை மெலிதற்குச் செய்யுள்:—

ஆவியன் னாய்கவ லேலக லேமென் றளித்தொளித்த
ஆவியன் னார்மிக் கவாவின ராய்க்கெழு மற்கழிவுற்
றாவியன் னார்மன்னி யாடிடஞ் சேர்வர்கொ லம்பலத்தெம்
ஆவியன் னான்பயி லுங்கயி லாயத் தருவரையே.
—[கோவையார். 37]

எனவும் வரும்.

தனிநிலைகண்டு தளர்வகன் றுரைத்தற்குச் செய்யுள்:—

தாதிவர் போதுகொய் யார்தைய லாரங்கை கூப்பநின்று
சோதி வரிப்பந் தடியார் சுனைப்புன லாடல்செய்யார்
போதிவர் கற்பக நாடுபுல் லென்னத்தம் பொன்னடிப்பாய்
யாதிவர் மாதவ மம்பலத் தான்வரை யெய்துதற்கே.
—[கோவையார். 40]

எனவும், முன்னர்த் தானீங்கியவழிப் பிறந்த வருத்தமும் வேட்கையும் அவளறியுமாறு தலைவன் கூறுவதற்குச் செய்யுள்:—

நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்.
—[குறள். 1104]

எனவும், கூடற்கரிதென வாடியுரைத்தற்குச் செய்யுள்:—

காவிநின் றேர்தரு கண்டர்வண் டில்லைக்கண் ணார்கமலத்
தேவியென் றேயையஞ் சென்றதன் றேயறி யச்சிறிது
மாவியன் றன்னமென் னோக்கிநின் வாய்திற வாவிடிலென்
னாவியன் றேயமிழ் தேயணங் கேயின் றழிகின்றதே.
—[கோவையார். 41]

எனவும் வரும்.

நீங்கற்கருமை நின்று நினைந்திரங்கற்குச் செய்யுள்:—

பொய்யுடை யார்க்கரன் போலக லும்மகன் றூற்புணரின்
மெய்யுடை யார்க்கவ னம்பலம் போல மிகநணுகும்
மையுடை வாட்கண் மணியுடைப் பூண்முலை வாணுதல்வான்
பையுடை வாளர வத்தல்குல் காக்கும்பைம் பூம்புனமே.

—[கோவையார். 48.]

எனவரும். (131)

132. சார்தல் கேட்டல் சாற்ற லெதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்
றாங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்.

இது நிறுத்தமுறையானே பாங்கற்கூட்டத்தின் வகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) சார்தல் முதலாகப் பாங்கிற்கூட்டல் ஈறாக எழுவகைத் தாம் பாங்கற்கூட்டம். (எ-று.)

ஆங்கு - அசை. (132)

133. தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்
றலைவனை யுற்றது வினுதலுந் தலைவ
னுற்ற துரைத்தலுங் கற்றறி பாங்கன்
கழறலுங் கிழவோன் கழற்றெதிர் மறுத்தலுங்
கிழவோற் பழித்தலுங் கிழவோன் வேட்கை
தாங்கற் கருமை சாற்றலும் பாங்கன்
றன்மனத் தழுங்கலுந் தலைவனோ டழுங்கலு
மெவ்விடத் தெவ்வியற் றென்றலு மவனஃ
திவ்விடத் திவ்வியற் றென்றலும் பாங்க
னிறைவனைத் தேற்றலுங் குறிவழிச் சேறலு
மிறைவியைக் காண்டலு மிகழ்ந்ததற் கிரங்கலுந்
தலைவனை வியத்தலுந் தலைவியை வியத்தலுந்
தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறலுந்
தலைவன் சேறலுந் தலைவியைக் காண்டலுங்
கலவியின் மகிழ்தலும் புகழ்தலுந் தலைவியைப்
பாங்கியோடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்
கூட்டலு மென்றீங் கீட்டுநா லாறுங்
காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.

இது பாங்கற்கூட்டத்துவிரி இத்துணைப்பகுதித் தென்கின்றது.

(இ-ள்.) தலைவன் பாங்கனைச்சார்தல் முதலாகப் பாங்கிற்கூட்டல் ஈறாக இவ்விடத்துத் தொகுத்த இருபத்துநான்கு கிளவியும் மேற்காட்டிய பாங்கற்கூட்டத்து விரியாம். (எ-று.)

தலைவன் பாங்கனைச்சார்தற்குச் செய்யுள்:—

பூங்கனை யார்புனற் றென்புலி யூர்புரிந் தம்பலத்துள்
ஆங்கெனை யாண்டுகொண் டாடும்பி ரானடித் தாமரைக்கே
பாங்கனை யானன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால்
ஈங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை யெய்துதற்கே.
—[கோவையார். 19]

எனவும், பாங்கன் தலைவனை உற்றதுவினாதற்குச் செய்யுள்:—

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே.
—[கோவையார். 20]

எனவும், தலைவன் உற்றதுரைத்தற்குச் செய்யுள்:—

கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்றாள்
ஆம்பொற் றடமலர் சூடுமென் னாற்ற லகற்றியதே.
—[கோவையார். 21]

எனவும், கற்றறிபாங்கன் கழறற்குச் செய்யுள்:—

உளமாம் வகைநம்மை யுய்யவந் தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமிழ் தாக்கிய தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து நின்றொர்வஞ் சிம்மருங்கு
லிளமான் விழித்ததென் றோவின்றெம் மண்ண லிரங்கியதே.
—[கோவையார். 22]

எனவும், கிழவோன் கழற்றெதிர் மறுத்தற்குச் செய்யுள்:—

சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத் தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான் கயிலை மயிலைமன்னும்
பூணிற் பொலிகொங்கை யாவியை யோவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை மென்றோட் கரும்பினையே.
—[கோவையார். 23]

எனவும், கிழவோற் பழித்தற்குச் செய்யுள்:—

இளங்கொம் பொருதனி நின்றிருஞ் சாரலி லென்னையிங்ஙன்
உளங்கொண் டுறுதுயர் செய்ததென் றுய்விண் ணொளிருமின்போல்
விளங்குங் கதிர்வடி வேலண்ண லேதென்றன் மீதசையத்
துளங்குஞ் சிறுகொடிக் கோமத வேழந் துவக்குண்பதே.

—[அம்பி. 49]

எனவும், கிழவோன் வேட்கைதாங்கற்கருமைசாற்றற்குச் செய்யுள்:—

தலைப்படு சால்பினுக் குந்தள ரேன்சித்தம் பித்தனென்று
மலைத்தறி வாரில்லை யாரையுந் தேற்றுவ னைத்துணையுங்
கலைச்சிறு திங்கண் மிலைத்தசிற் றம்பல வன்கயிலை
மலைச்சிறு மான்விழி யாலழி வுற்று மயங்கினனே.

—[கோவையார். 25]

எனவும், பாங்கன் தன்மனத் தழுங்கற்குச் செய்யுள்:—

யானு மறிவு கொளுத்துகிற் பேனிங்ங னேறனையான்
றானு மறிவு தளர்ந்துநிற் பான்செந் தளவரும்புந்
தேனு மினிய நுதலைச்செவ் வாயிளஞ் செவ்விநவ்வி
மானு மிவனை மயங்கவிவ் வாறு வருத்துவதே.

—[அம்பி. 51]

எனவும், தலைவனோ டழுங்கற்குச் செய்யுள்:—

ஆலத்தி னாலமிர் தாக்கிய கோன்றில்லை யம்பலம்போற்
கோலத்தி னாள்பொருட் டாக வமிர்தங் குணங்கெடினுங்
காலத்தி னான்மழை மாறினு மாறாக் கவிகைநின்பொற்
சீலத்தை நீயு நினையா தொழிவதென் றீவினையே.

—[கோவையார். 27]

எனவும், எவ்விடத்தெவ்வியற்றென்றற்குச் செய்யுள்:—

நின்னுடை நீர்மையு நீயுமிவ் வாறு நினைத்தெருட்டும்
என்னுடை நீர்மையி தென்னென்ப தேதில்லை யோர்கொண்முக்கண்
மன்னுடை மால்வரை யோமல ரோவிசும் போசிலம்பா
என்னிடம் யாதியல் நின்னையின் னேசெய்த வீர்ங்கொடிக்கே

—[கோவையார். 28]

எனவும், அவன் அஃது இவ்விடத் திவ்வியற்றென்றற்குச் செய்யுள்:—

விழியாற் பிணையாம் விளங்கிய லான்மயி லாமிழற்றும்
மொழியாற் கிளியாம் முதுவா னவர்தம் முடித்தொகைகள்
கழியாக் கழற்றில்லைக் கூத்தன் கயிலைமுத் தம்மலைத்தேன்
கொழியாத் திகழும் பொழிற்கெழி லாமெங் குலதெய்வமே.
—[கோவையார். 29]

எனவும், பாங்கன் இறைவனைத் தேற்றற்குச் செய்யுள்:—

குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட்செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் டியான்போய் வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை நண்ணும் பளிக்கறையே
—[கோவையார். 30]

எனவும், குறிவழிச் சேறற்குச் செய்யுள்:—

கொடுங்கால் குலவரை யேழேழ் பொழிலெழில் குன்றுமன்றும்
நடுங்கா தவனை நடுங்க நுடங்கு நடுவுடைய
விடங்கா லயிற்கண்ணி மேவுங்கொ லாந்தில்லை யீசன்வெற்பிற்
றடங்கார் தருபெரு வான்பொழி னீழலந் தண்புனத்தே.
—[கோவையார். 31]

எனவும், இறைவியைக் கண்டற்குச் செய்யுள்:—

வடிக்கண் ணிவைவஞ்சி யஞ்சு மிடையிது வாய்பவளந்
துடிக்கின்ற வாவெற்பன் சொற்பரி சேயான் றொடர்ந்துவிடா
வடிச்சந்த மாமல ரண்ணல்விண் ணோர்வணங் கம்பலம்போற்
படிச்சந் தமுமிது வேயிவ ளேயப் பணிமொழியே.
—[கோவையார். 32]

எனவும், பாங்கன் இகழ்ந்ததற்கிரங்கற்குச் செய்யுள்:—

பண்ணூர் பணிமொழி வண்ணமுந் தண்ணாறும் பைங்குவளைக்
கண்ணூ லருள்செய்த காதலுங் காடக் கனல்கொளுத்திப்
புண்ணூன நெஞ்சமுந் தஞ்சமில் லாதவன் வன்பொறையு
மெண்ணூ தருவினை யேனிகழ்ந் தேனெம் மிறைவனையே.
—[அம்பி. 62]

எனவும், தலைவனை வியத்தற்குச் செய்யுள்:—

குவளைக் களத்தம் பலவன் குரைகழல் போற்கமலத்
தவளைப் பயங்கர மாகநின் றண்ட வவயவத்தின்

இவளைக்கண் டிங்குநின் றங்குவந் தித்துணை யும்பகர்ந்த
கவளக் களிற்றண்ண லேதிண்ணி யானிக் கடலிடத்தே.
—[கோவையார். 33]

எனவும், தலைவியை வியத்தற்குச் செய்யுள்:—

துறைமேய் வலம்புரி தோய்ந்து மணனுழுத தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர் நுண்டாது போர்க்குங் கானி
னிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
வுறைமதி யுய்யலோ வூர்சுணங்கின் மென்முலையே தீர்க்கும்போலும்.
—[சிலப். கானல். 8]

எனவும், தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறற்குச் செய்யுள்:—

பணந்தா ழரவரைச் சிற்றம் பலவர்பைம் பொற்கயிலைப்
புணர்ந்தாங் ககன்ற பொருகரி யுன்னிப் புனத்தயலே
மணந்தாழ் பொழிற்கண் வடிக்கண் பரப்பி மடப்பிடிவாய்
நிணந்தாழ் சுடரிலை வேலகண் டேனென்று நின்றதுவே.
—[கோவையார். 34]

எனவும், தலைவன் சேறற்குச் செய்யுள்:—

எயிற்குல மூன்றிருந் தீயெய்த வெய்தவன் றில்லையொத்துக்
குயிர்குலங் கொண்டுதொண் டைக்கனி வாய்க்குளிர் முத்தநிரைத்
தயிற்குல வேல்கம லத்திற் கிடத்தி யனநடக்கு
மயிற்குலங் கண்டதுண் டேலது வென்னுடை மன்னுயிரே.
—[கோவையார். 36]

எனவும், தலைவியைக் காண்டற்குச் செய்யுள்:—

மறக்கும் பரிசறி யாவண்ட லாய மறந்துவந்து
சிறக்குங் கமலத் திருநின்ற வாசெங்கண் முத்தரும்ப
நிறக்கும் பசலையு மேனியு மாய்நெஞ்சி னீடுயிர்ப்பும்
பிறக்கும் பெருநல னும்மட நாணும் பிணங்கவிட்டே.
—[அம்பி. 66]

எனவும், கலவியின் மகிழ்தற்குச் செய்யுள்:—

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்.—[குறள். 1105]

எனவும்,

மெய்வாய்கண் மூக்குச் செவியென்னு நாமங்கண் மேவப்பெற்ற
வைவா யினுநின் றருந்தின ரோவருந் தானவர்முன்

னுய்வான் மலைகொண் டொலிநீர்க்[1]கடைந்தவன் றம்பரென்போன்
மைவா ரளக மடந்தைநின் போனு மருந்தினையே. —[அம்பி. 69]

எனவும், புகழ்தற்குச் செய்யுள்;

தழல்கண்ட தன்ன கலிவெம்மை யாறத்தன் றண்ணளியா
நிழல்கண்ட சந்திர வாணன்றென் மாறை நிழல்பொலியுங்
கழல்கண்ட தன்ன கதிர்முத்த மாலிகைக் காரிகைநின்
குழல்கண்ட பின்னல்ல வோவறனீருட் குளித்ததுவே.
—[தஞ்சை. 60]

எனவும், தலைவியைப் பாங்கியொடுவருகெனப் பகர்தற்குச் செய்யுள்:—

முன்ஞுவி வந்த முருகன்வை வேற்கண் முனைகவர்ந்த
வென்ஞுவி நல்கு மிதுநினை யேலின்று போலினிய
நன்ஞுவி வாச நறுங்குழ லாய்வரில் நாளையிங்கு
நின்ஞுவி யன்னவள் முன்ஞக வன்றி நிலையிலையே.
—[அம்பி. 70]

எனவும், பாங்கிற்கூட்டற்குச் செய்யுள்:—

முற்றும் பழுதற்ற மொய்ம்முலை யாக முயங்குமின்பம்
பெற்றும் பெறாத பெருநலந் தந்தனிர் பேரளிகள்
சுற்றும் பரிமளச் சோலையி லாயந் தொழுவருவி
யெற்றும் பனிவரைச் சீறூர் நலம்பெற வெய்துகவே.
—[அம்பி. 71]

எனவும் வரும். இவற்றுள், முன்னையமூன்றுஞ் சார்தல் கேட்டல் சாற்ற லென்னும் மூன்றற்கும், பாங்கன்கழறல் முதலாகக் கிழவோன் வேட்கை தாங்கற் கருமைசாற்றல் ஈருகச் சொல்லப்பட்ட நான்கும் எதிர்மறைக் கும், பாங்கன்றன்மனத்தழுங்கல் முதலாகத் தலைவன்றனக்குத் தலைவி நிலைகூறல் ஈருகச் சொல்லப்பட்ட பதினொன்றும் நேர்தற்கும், தலைவன் சேறல் முதலாகத் தலைவியைப்புகழ்தல் ஈருகச் சொல்லப்பட்ட நான் கும் கூடற்கும், தலைவன் தலைவியைப் பாங்கியொடுவருகெனப் பகர்த லும் பாங்கிற் கூட்டலுமாகிய இரண்டும் கூட்டற்கும் உரியவாம்.

'காட்டிய' என்ற மிகையானே தலைவனுற்றதுரைத்தலின் பின்னர்ப் பாங்கனை நின்குறையாக இது முடிக்கவேண்டுமென்றலும், கிழவோன் கழற்றெதிர்மறுத்தலின் பின்னர்ப் பாங்கனை ஆண்டுச் செலல்வேண்டு மென்றலும், பாங்கன் குறிவழிச்சென்றபின்னர்த் தலைவி உருவு வெளிப் பட்டமைகண்டு தலைவன் கூறுதலும், அதன் பின்னர் அவ்விடத்துக் காணுங்கொல்லோவெனத் தலைவன் ஐயுற்றிரங்கலும், பாங்கன் இறை

(பா-ம்.) 1. 'ஒலிநீர்க் கடல்கடைந் தும்ப ரென்போல்'

வியைக் கண்டபின்னர் அவளை எளிதிற்காட்டிய தெய்வத்தை வணங்குத லும், தலைவன் சேறற்குமுன்னர்த் தலைவி தலைவன் வருங்கொல்லோ வென நினைத்தலும், கலவியின் மகிழ்தலின் பின்னர்ப் பாங்கனை உண் மகிழ்ந்து உரைத்தலும் வரவும்பெறும்.

பாங்கனை நின்குறையாக இது முடிக்கவேண்டு மென்றற்குச் செய்யுள்:—

இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.—[குறு. 58]

எனவரும். இது குறுந்தொகை.

பாங்கனை ஆண்டுச் செலல்வேண்டு மென்றற்குச் செய்யுள்:—

காயா வீன்ற கணவீ ராற்ற
மாயா முன்றில் வருவளி துரக்கு
மாகோள் வாழ்நர் சிறுகுடி யாட்டி
வேயோர் மென்றோள் விலக்குநர்
யாரோ வாழிநீ யவ்வயிற் செலினே.—[தொல். பொ. ப. 403]

எனவரும்.

தலைவி உருவுவெளிப்பட்டமைகண்டு தலைவன் கூறுதற்குச் செய்யுள்:—

விம்முறு துயரமொடு வெந்நோ யாகிய
வெம்முறு துயரந் தீரிய சென்ற
நான்மறை நவிற்றிய நூனெறி மார்பன்
கண்டனன் கொல்லோ தானே தண்டாது
புருவக் கொடுவிற் கோலிப் பூங்கட்
செருவப் பகழியிற் சேர்த்தழி வுறீஇ
யேத்தொழி றொடங்கி யேமுறத் தகன்ற
மடமா னோக்கிற் றடமென் றோளியைத்
தண்டழை ததும்பிய வின்னிழ லொருசிறை
யுடனா டாயத்து நீங்கி
யிடனு நின்ற வேமுறு நிலையே.—[தொல். பொரு. பக். 405]

எனவும், அவ்விடத்துக் காணுங் கொல்லோவெனத் தலைவன் ஐயுற் றிரங்கற்குச் செய்யுள்:—

என்னுறுநோய் தீர்த்தற் கிருபிறப்பி னன்மறையோன்
தன்னுறுநோய் போலத் தளர்கின்ற—னின்னினிய
சுற்றத்திற் றீர்ந்த சுடரிழையைச் செவ்வியாற்
றெற்றெனக் கண்ணுறுங்கொ லென்று. —[பாரதம்]

எனவும்வரும்.

இறைவியை எளிதிற்காட்டிய தெய்வத்தை வணங்குதற்குச் செய்யுள்:—

அளிதோ தானே யருண்மிக வுடைத்தே
களிவாய் வண்டினங் கலந்துண் டாடு
மொளிதார் மார்பி னோங்கெழிற் குரிசிலைப்
பிரியாத் துயரமொடு பேதுறத் தகன்ற
கிளியோர் மழலைக் கேழ்கிளர் மாத
ரார்ந்த சுற்றமொடு தமரி னீக்கத்
தானே தமியள் காட்டிய
வானோர் தெய்வம் வணங்குவல் யானே.
—[தொல். பொரு. பக். 403]

எனவரும்.

தலைவி தலைவன்வருங்கொலென நினைத்தற்குச் செய்யுள்:—

புறவார் நறுமுல்லை போனகை யார்பொய்த லாடுஞ்சிற்றி
னறவாடு சந்தன நாறுதண் சார னயந்தவின்ப
மறவாத நெஞ்சம் வனமுலை தோயு மணிப்புயமு
முறவாடி நிற்பர்கொல் லோவென்னை யாளு மொருவர்வந்தே.
—[அம்பி. 25]

எனவரும்.

பாங்கனையுண் மகிழ்ந்துரைத்தற்குச் செய்யுள்:—

நெய்வளை ரைம்பா னேரிழை மாதரை
மெய்ந்நிலை திரியா மேதகு சுற்றமொ
டெய்துத லரிதென றின்னண மிரங்கிக்
கையறு நெஞ்சமொடு கவன்றுறநனி பெயர்ந்தவென்
பைத னெஞ்சம் பரிவு நீக்கித்
தெய்வத் தன்ன தெரியிழை மென்றோ

ளெய்தத் தந்த வேந்தலொ டெம்மிடை
நற்பாற் கேண்மை நாடொறு மெய்த
லப்பாற் பிறப்பினும் பெறுகமற் றெமக்கே.
[தொல். பொரு. பக். 405.]

எனவரும். (133)

134. முன்னுற வுணர்தல் குறையுற வுணர்த
லிருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
றேருமூன் றென்ப தோழிக் குணர்ச்சி.

இது நிறுத்தமுறையானே மதியுடன்பாட்டின் வகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) முன்னுறவுணர்தலும், குறையுறவுணர்தலும், இருவரு முள்வழி யவன்வரவுணர்தலுமென மூன்றுவகையாம் மேற்கூறிப்போந்த பாங்கிமதியுடம்பாடு. (எ-று.) (134)

135. நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்புஞ் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினு மையமுற் றோர்தலு
மவ்வகை தம்மா லையந் தீர்தலு
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருட் சொல்லி னுடலும்
பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுத்தோன்
கண்ணியுந் தழையு மேந்தி நண்ணி
யூர்பெயர் கெடுதியோ டொழிந்தவும் வினவுழி
யாரே யிவர்மனத் தெண்ணம் யாதெனத்
தேர்தலு மெண்ணந் தெளிதலு மாங்கவ
னிருவரு முள்வழி யொருமையிற் போந்து
கையுறை யேந்திநின் றவ்வகை வினவுழி
யெதிர்மொழி கொடுத்தலு மிறைவனை நகுதலு
மதியினி லவரவர் மனக்கருத் துணர்வுமென்
றீங்கன மியம்பிய விருநான்கு கிளவியும்
பாங்கி மதியுடன் பாட்டது விரியே.

இது மதியுடன்பாட்டின்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) நாற்றம் முதலாகப் பயில்வு ஈறாகச் சொல்லப்பட்ட மூன்றுபுணர்ச்சியை உள்ளுறுத்துவரூஉம் இத்திறம் ஏழானும் எம்பெருமாட்டிக்குப் பண்டைத்தன்மையன்றால் இவ்வேறுபாடு எற்றினையிற்

றெனத் தோழி தன் உள்ளத்துள்ளே ஐயமுற்று ஆராய்தலும், அவற்றானே ஐயந்தீர்ந்து புணர்ச்சியுண்டென்பதனைத் தெளிதலும், அங்ஙனந் தெளிந்தபின்னல்லது தலைவிமாட்டுச் சொன்னிகழ்த்தாளாதலின் அவ்வாறு தெளிந்தபின்னர்த், தோழி தலைவியுடன் ஆராயுங்கால் தன் மனத்து நிகழ்ந்தனவற்றை மறைத்துக்கூற வேண்டுதலின், மெய்யினானும் பொய்யினானுங் குற்றேவல் தப்பாமற் பலவாய் வேறுபட்ட இருபொருட்பட்ட சொற்களைக் கூறி அவ்வாற்றான் ஆராய்தலும், இயற்கைப் புணர்ச்சிப்பின்னர்ப் பேணப்பட்ட தோழியாகிய வாயிலைப் பெற்றுப் பின்னர் இரந்துகுறையுறுதலை வலியுறுத்த தலைவன், கண்ணியுந்தழையும் ஏந்திச் செவ்விபார்த்துச் சார்ந்து ஊரும் பெயரும் வேழமுதலியகெடுதியும் வழிமுதலிய ஒழிந்தனவுமாகியவற்றை 'இவன் என்னின் ஆயதோர் குறையுடையன்' என்று அவள்கருதுமாறு வினாயவிடத்து, இவர்யாரெனவும் இவர் மனத்து எண்ணம் யாதெனவுந் தோழி ஆராய்தலும், ஆராய்ந்து அவனகத்தெண்ணத்தினைத் தெளிதலுந், தலைமகன் கிழவியுந் தோழியும் ஒருங்குதலைப்பெய்த செவ்விக்கண் ஒருதலையாகச் சென்று கண்ணியுந் தழையும் ஏந்திநின்று முன்போல ஊர்பெயர்முதலாயின வினாய இடத்துத் தோழி அதற்கு எதிர்மொழி கொடுத்தலும், இறைவனை நகுதலும், மதியினின் அவரவர் மனக்கருத்து உணர்வுமென்று இவ்வாறு கூறிய எட்டுக்கிளவியும் பாங்கிமதியுடன்பாட்டு விரியாம். (எ-று.)

இதனுள், நாற்றமாவது - ஓதியும் நுதலும் முதலியன பேதைப் பருவத்துக்குத்தக நாறாது தலைவன்கூட்டத்தான் மான்மதச்சாந்து முதலியனவும் பலபூக்களும் விரவிநாறுதல். தோற்றமாவது - நீண்டும் பிறழ்ந்தும் பிள்ளைப்பருவத்து வெள்ளைநோக்கின்றி யுள்ளொன்று கொள்ள நோக்குங்கண்ணுந் தந்நிலை திரிந்து துணைத்து மெல்கிப் பணைத்துக்காட்டுந் தோளும் முலையும் என்றின்னோரன்னவற்றின் பொலிவு. ஒழுக்கமாவது - பண்ணையாயத்தோடு முற்றிலான் மணற்கொழித்துச் சோறமைத்தல் முதலாயின முனிந்த குறிப்பினளாய்ப் பெண்டன்மைக்கேற்ப ஒழுகுதலுந் தெய்வந்தொழாமை முதலியனவுமாம். உண்டியாவது—பண்டையிற் குறைந்த உண்டி. செய்வினை மறைத்தலாவது—முன்போலாது இக்காலத்து நினைவுஞ் செயலுந் தலைவனொடு பட்டனவாகலான் அவை பிறர்க்குப் புலனாகாமை மறைத்தல்; அஃது ஆயத்தொடு கூடாது இடந்தலைப்பாட்டிற்கு ஏதுவாக நீங்கி நிற்றலாம். செலவாவது - பண்டுபோல வேண்டியவாறு நடவாது சீர்பெற நடந்து ஓரிடத்திற் சேறல். பயில்வாவது-செவிலி முலையிடைத் துயில்வேண்டாது வேறோரிடத்துப்பயிறல்.

நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்பினுஞ் செலவினும் பயில்வினும்

புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து வரூஉ
முணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை. [தொல். கள. சூ. 23]

எனவும்,

ஆங்குணர்ந் தல்லது கிழவோ டேஎத்துத்
தான்குறை யுறுத லோழிக் கில்லை. —[இறை. சூ. 8]

எனவும் ஓதுபவாகலின்,

இவ்வகை யேழினு மையமுற் றோர்தலு
மவ்வகை தம்மா லையந் தீர்தலும்
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருட் சொல்லி னுடனும்.

என்று கூறினர். பெருநாணும் பேரச்சமும் உடையாள் தலைவி யாதலின் இறந்துபாடு பயப்பன கூறி நாடாமைக்கன்றே

நாணவு நடுங்கவு நாடா டோழி
காணுங் காலைத் தலைமக டேஎத்து.—[இறை. சூ. 7-ல் மேற்.]

எனச்சூத்திரம் பிறந்ததாகலின், இங்ஙனங்கூறி நாடாமைக்கு 'மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருட் சொல்லி னுடல்' என்றார். இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பின்றைத் தன்னையவள் காணாமைத் தான் அவளைக்காணுவதோர் அணுமைக்கண் நின்றானாக, மற்றையாரெல்லாந் தலைமகட்குச் செய்யும் வழிபாடும், தோழி விசேடத்தாற் செய்யும் வழிபாடும், எல்லார்க்குந் தலைமகள் செய்யும் அருளிச்செய்கையும், தோழிக்கு விசேடத்தாற் செய்யும் அருளிச்செய்கையுங் கண்டு இவளேபோலும் இவட்குச் சிறந்தாள் இதுவும் எனக்கொரு சார்பாமென உணர்ந்து தலைவன்முன் பேணினமையால் 'பெட்டவாயில்' என்றார். இயற்கையானுதல், இடந்தலைப்பாட்டானுல், பாங்கனானுதல் புணர்ந்த தலைவன் பின்னரே தெருண்டுவரைதல் தலை; அல்லாது விடின் இரந்து குறையுறுத்தற்கு உரியனாதலின் 'இரவுவலியுறுத்தோன்' என்றார்.

காமப் புணர்ச்சியு மிடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையு மடைந்த சார்பொடு
மறையென மொழிதன் மறையோ ராறே.
—[தொல். சூ. 498]

எனவும்,

புணர்ந்த பின்றை யாங்ஙன மொழுகாது
பணிந்த மொழியாற் றோழி தேஎத்
திரந்துகுறை யுறுதலுங் கிழவோன் மேற்றே.
—[இறை. அக. சூ. 5]

எனவும் ஓதுபவாகலின். அங்ஙனம் வினவுவான் ஏதிலார்போல ஊரினை முன்வினாய்ச், சிறிது உறவுதோன்றப் பெயரினைப் பின் வினாய், அவ்விரண்டினும் மாற்றம் பெறாதான் ஒன்றுகெடுத்தானாகவும், அதனை அவர் கண்டார்போலவும் வினாய், அவற்றினும் மாற்றம் பெறாதான் பிற வாற்றானும் வினவுதலின் இம்முறைவைத்தார். ஒழிந்தனவாவன:— வழிவினாதலும், மொழியாமை வினாதலும், இடைவினாதலும் பிறவுமாம்.

குறையுறவுணர்தற்கும், இருவருமுள்வழி அவன்வரவுணர்தற்கு முரிய கிளவிகள் ஐந்துமேயன்றி, அக்கிளவி நிகழ்தற்கு நிமித்தமாகிய பெட்டவாயில் பெற்றுச் சேறலும், இரவு வலியுறுத்தலும், இருவருமுள் வழி ஒருதலையாகச் சேறலும் முதலிய தலைவன் கூற்றுக்களும், அனுவாத முகத்தான் ஈண்டே நிகழ்தலுங் கொள்க. ஒன்றென முடித்தலாற் புனங் கண்டுமகிழ்தலும், புனத்திடைக்கண்டு மகிழ்தலுமாகிய தலைவன் கூற்றுக் களும் ஈண்டேகொள்ளப்படும்.

எதிர்மொழிகொடுத்தன் முதலிய மூன்றும் இருவருமுள்வழி அவன் வந்துழியே தோழி மதியுடம்படுமாற்றான் நிகழ்தலும், பெட்டவாயில் பெற்று இரவுவலியுறுத்த தலைவன், தலைவியும் தோழியும் ஒருங்குதலைப் பெய்த செவ்விநோக்கியாயினுந் தோழி தனித்துழியாயினும், ஊர்பெயர் கெடுதியொடு ஒழிந்தவும் வினாய்த் தோழியை மதியுடம்படுத்துமாற்றான் நிகழ்தலுங் கொள்க; என்னை ?

பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினு
மூரும் பேருங் கெடுதியும் பிறவு
நீரிற் குறிப்பி னிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும். —[தொல். சூ. 102]

எனவும்,

இரந்துகுறை யுறாது கிழவியுந் தோழியு
மொருங்கு தலைப்பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப்
புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து
மதியுடம் படுத்தற்கு முரிய னென்ப —[இறை. சூ. 6]

எனவும் வருவன ஓத்தாகலான். இன்னுஞ் சான்றோர் செய்யுட்களானும் உணர்க.

நாற்ற முதலிய எழானும் ஐயமுற்றோர்தற்குச் செய்யுள்:—

பூங்கேச மன்றல் புனையா வெழில்வெண் புதுமதிகண்
டாங்கே யிகழ்த லருகிய வுண்டி யருஞ்செலவு
தீங்கே தங்காத்த லொருவயி னேசென்று சென்றுநிற்ற
ருங்கே வலமல்ல வந்ததென் னோவிந்தத் தையலுக்கே.
—[அம்பி. 74.]

எனவரும்.

இனி, அவை தனித்தனி வருமாறுங் காட்டுதும். நாற்றத்தான் ஐய முற்றோர்தற்குச் செய்யுள்:—

கங்கைச் சடிலர் மதுரா புரீசர் கடம்பவனத்
தெங்கட் குளதன்றி யெங்குள தோவிவட் காரமும்பூந்
தொங்கற் புதுமண முந்திருப் பாவைபொற் றோளுமிரு
கொங்கைக் குவடு மளகா டவியுங் குடிகொண்டதே.
—[மதுரை. 95]

எனவும், தோற்றத்தான் ஐயமுற்றோர்தற்குச் செய்யுள்:—

தோளிற் குழைவுங் களபா சலந்தரு சோபையும்வை
வாளிற் சிறந்த விழியுங் கண்டாற் சசிவட்டமென்னுங்
கோளிற் றிகழ்குடை யார்கூடல் வாழுங் கொடியிடைக்கு
நாளிற் புதுமை சிறந்தொரு கோடி நலந்தருமே. —[மதுரை. 96]

எனவும், ஒழுக்கத்தான் ஐயமுற்றோர்தற்குச் செய்யுள்:—

கந்தா டியகளிற் றூர்கடம் பாடவிக் காவின்மின்போல்
வந்தா ளொழுக்க வழக்கென்சொல் வேன்வண்ட லாடலும்பூஞ்
சந்தாடு சோலை மணியூச லாடலுந் தண்டரளப்
பந்தா டலுமறந் தாளென்ன பாவம் பலித்ததுவே.—[மதுரை. 97]

எனவும், உண்டியான் ஐயமுற்றோர்தற்குச் செய்யுள்:—

பெருந்தா மரைப்பதம் போற்றிநிற் பார்பிற விப்பிணிக்கு
மருந்தா கியபெரு மான்மது ரேசர் வரையிலிந்தக்
கருந்தாரை வேற்கண்ணிக் கென்னகண் மாயங் கலந்ததண்ட
ரருந்தா வமுதருந் தப்புகுந் தாலு மருந்திலளே. —[மதுரை. 98]

எனவும், செய்வினைமறைப்பான் ஐயமுற்றோர்தற்குச் செய்யுள்:—

யாமேயு மின்றி யினவாய வெள்ளமு மின்றியிவர்
தாமே புரியுந் தவமென் கொலோதண் டரளமணி
வாமே கலைப்பங்கர் வாழ்மது ராபுரி வைகைசுற்றும்
பூமேவு சோலையுஞ் செய்குன்று மாகப் புகுந்துநின்றே.—[மதுரை 99.]

எனவும், செலவுகண்டு ஐயமுற்றோர்தற்குச் செய்யுள்:—

கரிக்கும்ப கம்பக் கடாசலத் தார்கடம் பாடவிமான்
பரிக்குஞ் சிலம்பு சிலம்புபொற் பாதம் பதுமமலர்
விரிக்குந் தவிசின் மெலநடந் தாலும் மெலிவதராத்
தரிக்குந் திருவுடலுங் கன்றவே நடை தந்ததுவே. [மதுரை. 100]

எனவும், பயில்வான் ஐயமுற்றோர்தற்குச் செய்யுள்:—

வன்னந் தருமவு லிச்சொக்க நாதர் மதுரையின
வன்னந் தனிநடை கற்பநின் றுடன் னமுதச்செவ்வா
யின்னந் துணைமுலைப் பான்மணம் போயின தில்லையிவ
டன்னந் தனிபயிலக் கற்றவா றென்கொல் சாற்றுவதே.
—[மதுரை. 101]

எனவும் வரும்.

அவ்வகைதம்மாலையந்தீர்தற்குச் செய்யுள்:—

முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே. —[யாப். வி. 122]

எனவும் வரும்.

'மெய்யினும் பொய்யினும் வழிநிலைபிழையாது பல்வேறு கவர் பொருட் சொல்லினுட' லுட்பிறைதொழு கென்றற்குச் செய்யுள்:—

மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு மறந்துமற்றைப்
பொய்வா னவரிற் புகாதுதன் பொன்னடிக் கேயடியே
னுய்வான் புகவொளிர் தில்லைநின் றோன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே.
—[கோவையார். 67]

எனவும், கரந்துரைத்தற்குச் செய்யுள்:—

கோடியர் தண்பிறை தோய்குன்ற மீதுபைங் கொன்றையென்ன
நீடிய பூங்குழ னேரிழை யாய்நென்ன னின்னையொழிந்
தாடிய பூஞ்சுனை வாயளி மூசி யளித்தவண்ணம்
வாடிய தன்றி வருந்திய காரண மற்றில்லையே. —[அம்பி. 76]

எனவும், கரவுநாட்டத்திற்குச் செய்யுள்:—

நீலம் பவளம் படரப் பவள நிறந்தரளக்
கோலம் புனைய நுதல்குறு வேர்வெழக் கோமளமே
போலுந் திருநிறம் பொன்னிற மாகவிப் பூஞ்சுனைநீ
ரேலங் கமழ்குழ லாய்கிடை யாதுகொ லெங்களுக்கே.
—[அம்பி. 77]

எனவும், சுனைவியந்துரைத்தற்குச் செய்யுள்:—

பருங்கண் கவர்கொலை வேழப் படையோன் படப்படர்தீத்
தருங்கண் ணுதற்றில்லை யம்பலத் தோன்றட மால்வரைவாய்க்
கருங்கண் சிவப்பக் கனிவாய் விளர்ப்பக்கண் ணாரளிபின்
வருங்கண் மலைமலர் சூட்டவற் றோமற்ற வான்சுனையே.

—[கோவையார். 70]

எனவும் வரும்.

செந்நிற மேனிவெண் ணீறணி வோன்றில்லை யம்பலம்போ
லந்நிற மேனிநின் கொங்கையி லங்கழி குங்குமமு
மைந்நிற வார்குழன் மாலையுந் தாதும் வளாய்மதஞ்சே
ரிந்நிற மும்பெறில் யானுங் குடைவ னிருஞ்சுனையே.

—[கோவையார். 69]

என்பது நாணநாட்டம்.

ஆவா விருவ ரறியா வடிதில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்கநின் றோனையுன் னாரின்முன்னித்
தீவா யுழுவை கிழித்ததந் தோசிறி தேபிழைப்பித்
தாவா மணிவேல் பணிகொண்ட வாறின்று நாண்டகையே.

—[கோவையார். 72]

எனவும்,

பண்டிப் புனத்துப் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற்—றொண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணா
யுதிர முடைத்திதன் கோடு. —[சிற்றெட்டகம்]

எனவும் வருவன நடுங்கநாட்டம். இன்னோரன்ன காட்டின், இறந்துபாடுபயத்தலான் வழிநிலைபிழைத்தனவாமாதலின் ஈண்டைக்கு ஏலாவென மறுக்க.

பெட்டவாயில்பெற்றுச் சேறற்குச் செய்யுள்:—

எளிதன் றினிக்கனி வாய்வல்லி புல்ல லெழின்மதிக்கீற்
றொளிசென்ற செஞ்சடைக் கூத்தப்பி ரானையுன் னாரினென்கட்
டெளிசென்ற வேற்கண் வருவித்த செல்லலெல் லாந்தெளிவித்
தளிசென்ற பூங்குழற் றோழிக்கு வாழி யறிவிப்பனே.

—[கோவையார். 50]

எனவும், இரவுவலியுறுத்தற்குச் செய்யுள்:—

குவளைக் கருங்கட் கொடியே ரிடையிக் கொடிகடைக்க
ணுவளைத் தனதுயி ரென்றது தன்னொ டுவமையில்லா
தவளைத்தன் பால்வைத்த சிற்றம் பலத்தா னருளிலர்போற்
றுவளத் தலைவந்த வின்னலின் னோயினிச் சொல்லுவனே.

—[கோவையார். 51]

எனவும், ஊர்வினாதற்குச் செய்யுள்:—

ஒருங்கட லூழெவயி லொற்றைக் கணைகொள்சிற் றம்பலவன்
கருங்கட லூன்றுகு நால்வாய்க் கரியுரித் தோன்கயிலை
யிருங்கட லூடும் பொழிலெழிற் கொம்பரன் னீர்களின்னே
வருங்கட லூர்பகர்ந் தாற்பழி யோவிங்கு வாழ்பவர்க்கே.

—[கோவையார். 55]

எனவும், பெயர்வினாதற்குச் செய்யுள்:—

தாரென்ன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள்வைத்த
காரென்ன வாருங் கறைமிடற் றம்பல வன்கயிலை
யூரென்ன வென்னவும் வாய்திற வீரொழி வீர்பழியேற்
பேரென்ன வோவுரை யீர்விரை யீர்ங்குழற் பேதையரே.

—[கோவையார். 56]

எனவும் வரும்.

ஊரும் பிறவும் உடன்வினாதற்குச் செய்யுள்:—

அருவி யார்க்கும் பெருவரை நண்ணிக்
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்குங் கொழுஞ்சுளைப் பெரும்பழங்
குழவிச் சேதா மாந்தி யயலது
வேய்பயி லிறும்பின் ஞூறல் பருகும்
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதெனச்
சொல்லவுஞ் சொல்லீ ராயிற் கல்லெனக்
கருவி மாமழை வீழ்ந்தென வெழுந்த
செங்கே ழாடிய செழுங்குரற் சிறுதினைக்
கொய்புனங் காவலு நுமதோ
கோடேந் தல்கு னீரோ ளீரே.

—[நற். 213]

எனவரும். இது நற்றிணை. கெடுதியுள் வேழம்வினாதற்குச் செய்யுள்:—

இருங்களி யாயின் றியானிறு மாப்பவின் பம்பணிவோர்
மருங்களி யாவன லாடவல் லோன்றில்லை யான்மலையீங்
கொருங்களி யார்ப்ப வுமிழ்மும் மதத்திரு கோட்டொருநீள்
கருங்களி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே.
—[கோவையார். 52]

எனவும், மரைவினுதற்குச் செய்யுள்:—
நறைபரந்த சாந்த மறவெறிந்து நாளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வீண்டு. —[திணை. நூற். 1.]

எனவும் கலைமான் வினுதற்குச் செய்யுள்:—
கருங்கண் ணனையறி யாமைநின் றோன்றில்லைக் கார்ப்பொழில்
வருங்கண் ணனையவண் டாடும் வளரிள வல்லியன்னீ [வாய்
ரிருங்கண் ணனைய கணைபொரு புண்புண ரிப்புனத்தின்
மருங்கண் ணனையதுண் டோவந்த தீங்கொரு வான்கலையே.
—[கோவையார். 53]

எனவும், வன்றி வினுதற்குச் செய்யுள்:—
தங்குறிப்பி னோருந் தலைச்சென்று கண்டக்கா
லெங்குறிப்பி னேமென் றிகழ்ந்திரார்—நுங்குறிப்பின்
வென்றி படர்நெடுங்கண் வேய்த்தோளீர் கூறீரே
வன்றி படர்ந்த வழி. —[தொல். பக். 408]

எனவும் வரும். வன்றி-பன்றி. மானோடு மனம்வினுதற்குச் செய்யுள்:—
கனம்வந் திறைஞ்சுங் கடம்பா டவியர் கருணையென்னத்
தனம்வந் தரும்புஞ் சரிகுழ லீரென் சரத்தொடுமா
னினம்வந்த தோவந்த மான்பிணை தேடி யிளைத்துமற்றென்
மனம்வந்த தோவுரை யிருங்கள் காவன் மலிபுனத்தே.
—[மதுரை. 87]

எனவரும்.

ஒழிந்தவற்றுள், வழிவினுதற்குச் செய்யுள்:—
சிலம்பணி கொண்டசெஞ் சீறடி பங்கன்றன் சீரடியார்
குலம்பணி கொள்ள வெனைக்கொடுத் தோன்கொண்டு தானணியுங்
கலம்பணி கொண்டிட மம்பலங் கொண்டவன் கார்க்கயிலைச்
சிலம்பணி கொண்டநுஞ் சீறூர்க் குரைமின்கள் சென்னெறியே.
—[கோவையார். 54]

எனவும், மொழியாமைவினுதற்குச் செய்யுள்:—

இரத முடைய நடமாட் டுடையவ ரெம்முடையர்
வரத முடைய வணிதில்லை யன்னவ ரிப்புனத்தார்
விரத முடையார் விருந்தொடு பேச்சின்மை மீட்டதன்றேற்
சரத முடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே.

—[கோவையார். 57]

எனவும், இடைவினுதற்குச் செய்யுள்:—

கலைக்கி முகலல்குற் பாரம தாரங்கண் ணார்ந்திலங்கு
முலைக்கீழ்ச் சிறிதின்றி நிற்றன்முற் றுதன் றிலங்கையர்கோன்
மலைக்கீழ் விழச்செற்ற சிற்றம் பலவர்வண் பூங்கயிலைச்
சிலைக்கீழ்க் கணையன்ன கண்ணீ ரெதுநுங்கள் சிற்றிடையே.

—[கோவையார். 59]

எனவும், உரைத்ததுரையாது கருத்தறிவித்தற்குச் செய்யுள்:—

வின்னிற வாணுதன் வேணிறக் கண்மெல் லியலைமல்லற்
றன்னிற மொன்றி லிருத்திநின் றோன்றன தம்பலம்போன்
மின்னிற நுண்ணிடைப் பேரெழில் வெண்ணகைப் பைந்தொடி
பொன்னிற வல்குலுக் காமோ மணிநிறப் பூந்தழையே. [யீர்

—[கோவையார். 58]

எனவும் வரும். பிறவும் அன்ன.

யாரேயிவர் மனத்தெண்ணம்யாதெனத் தேர்தற்குச் செய்யுள்:—

பல்லில னாகப் பகலைவென் றோன்றில்லை பாடலர்போ
லெல்லில னாகத்தொ டேனம் வினவிவன் யாவன்கொலாம்
வில்லில னாகத் தழைகையன் வேட்டைகொண் டாட்டமெய்யோர்
சொல்லில னாகற்ற வாகட வானிச் சுனைப்புனமே.

—[கோவையார். 60]

எனவும், எண்ணங்தெளிதற்குச் செய்யுள்:—

ஆழமன் னோவுடைத் திவ்வையர் வார்த்தை யனங்கனைந்து
வீழமுன் னோக்கிய வம்பலத் தான்வெற்பி னிப்புனத்தே
வேழமுன் னாய்க்கலை யாய்ப்பிற வாய்ப்பின்னு மென்றழையாய்
மாழைமென் னோக்கி யிடையாய்க் கழிந்தது வந்துவந்தே.

—[கோவையார் 61]

எனவும், இருவரு முள்வழி யொருமையிற்றலைவன் கையுறையேந்திச் சேறற்குச் செய்யுள்:—

தண்டா மரைமலர்ப் பொன்னையும் பார்மங்கை தன்னையும் போல்
வண்டார் குழன்மட வார்மணந் தார்சென்று வாணன்றஞ்சை
நுண்டா தணிபொங்கர் நீழலின் கீழ்நின் நுடங்கிடையார்க்
கண்டா தரவையெல் லாஞ்சொல்ல வேநல்ல காலமிதே.

—[தஞ்சை. 76]

எனவும், கையுறையேந்திநின்றவ்வகை வினுதற்குச் செய்யுள்:—

தழைக்கின்ற சந்தனத் தண்ணறுஞ் சாரற் றவழுங்கொண்டன்
மழைக்குன்ற வாணர் மடவிய ரேநும் மலர்க்கண்களா
லுழைக்கன் றையுமொழி யாலொரு கோடிபைங் கிள்ளையையு
மழைக்கின்ற வுங்களை யோபுனங் காவல ராக்குவதே.

—[அம்பி. 94]

எனவும் வரும். தோழி தனித்துழித் தலைவன் குறையுற்று மதியுடம்படுத்தல் வந்துழிக் காண்க. மற்றிவற்றையே ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவியாக்கி உதாரணமாக்குதலும் ஒன்று.

கையுறையேந்திநின்றவ்வகை வினவுழி எதிர்மொழிகொடுத்தற்குச் செய்யுள்:—

உடுக்குங் கலையன்றி யிங்கொரு நாளு மொருவர்வந்து
கெடுக்குங் கலைகண் டறிகில மியாங்கிளர் வானுலகை
யடுக்குங் கலைமதி துஞ்சுமஞ் சார லருவிவெற்பா
தொடுக்குங் கலையினி வேறுமுண் டாயினுஞ் சொல்லுகவே.

—[அம்பி. 91]

எனவும், இறைவனை நகுதற்குச் செய்யுள்:—

மின்னே தழைகொண்டு வேழமெய் தாரந்த வேழம்வந்து
பின்னே பிணைபிரி யுங்கலை யானது பேசிவின்னங்
கொன்னே புகழுங் குறும்புய லாகவுங் கூடுங்கொல்லோ
யென்னே யுலகி லிவரையொப் பாரில்லை யெவினுக்கே.

—[அம்பி. 92]

எனவும், மதியினின் அவரவர் மனக்கருத்துணர்தற்குச் செய்யுள்:—

ஏனல் காவ லிவளு மல்லண்
மான்வழி வருகுவ னிவனு மல்ல
னரந்தங் கண்ணி யிவனொ டிவளிடைக்
கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே
நம்மு ணுணுநர் போலத் தம்முண்

மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
வுள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாப கண்ணி னோனே. —[பொருளியல்.]

எனவும் வரும்.

இவற்றுள், நாற்றம் முதலிய ஏழானும் ஐயமுற்றோர்தலும் அவ்வகை தம்மால் ஐயந்தீர்தலும், மெய்யினும் பொய்யினும் வழிநிலைபிழையாது, பல்வேறுகவர்பொருட் சொல்லினுடலும் என்னும் மூன்றும் முன்னுற வுணர்தற்கும்; கண்ணியுந்தழையும் ஏந்தி நண்ணி ஊர், பெயர் கெடுதி யோடு ஒழிந்தவும் வினவுழி, யாரேயிவர்மனத் தெண்ணம்யாதெனத் தேர்தலும், எண்ணந்தெளிதலும் என்னும் இரண்டுங் குறையுறவுணர் தற்கும்; கையுறையேந்திநின்று, அவ்வகை வினவுழி எதிர்மொழி கொடுத் தலும், இறைவனை நகுதலும், மதியினினவரவர் மனக்கருத்துணர்வும் என் னும் மூன்றும் இருவருமுள்வழி அவன் வரவுணர்தற்கும் உரியவாம்.

புனங்கண்டு மகிழ்தற்குச் செய்யுள்:—

உவரும் புலவு மொழிக்குங் கழிப்புன்னை யொண்மலர்த்தா
திவருந் துறையன்ன மென்னடை யாரித னோறமுல்லைப்
பவருங் கொடியும் படர்கொழுஞ் சாரற் பசுந்தினையைக்
கவருங் கிளியினுக் கின்றுகைம் மாறென்றுங் கண்டிலமே.
—[அம்பி. 83]

எனவும், புனத்திடைக்கண்டு மகிழ்தற்குச் செய்யுள்:—

தினைக்காவ லிந்தத் திருவைவைப் பாரந்தச் செங்கமல
மனைக்கா ருளரென் றறிந்தல்ல ரோவருள் பாரிவெள்ளச்
சுனைக்காவி யங்கண்ணி தோய்வா ரழகிய சொக்கர்வெற்பில்
வினைக்கா னவரறி விப்படி யோமுன் விதித்ததுவே.
—[மதுரை. 78]

எனவும் வரும். (135)

136. இரந்துபின் னிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக் குடன்படன் மடற்கூற் றொழிதல்
குறைநயப் பித்த னயத்தல் கூட்டல்
கூட லாயங் கூட்டல் வேட்டலென்
றீரறு வகைத்தே யிகுளையிற் கூட்டம்.

இது நிறுத்தமுறையானே பாங்கியிற்கூட்டத்தின் வகை இத் துணைத்தென்கின்றது.

(இ-ள்.) இரந்துபின்னிற்றல் முதலாக வேட்டல் ஈறாகச் சொல் லப்பட்ட பன்னிரண்டு வகையினையுடைத்துப் பாங்கியிற் கூட்டம். (எ-று.) (136

137. தலைவ னுட்கோள் சாற்றலும் பாங்கி
குலமுறை கிளத்தலுந் தலைவன் றலைவி
தன்னை யுயர்த்தலு நன்னுதற் பாங்கி
யறியாள் போன்று வினாதலு மிறையோ
னிறைவி தன்மை யியம்பலும் பாங்கி
தலைவி யருமை சாற்றலுந் தலைவ
னின்றியமை யாமை யியம்பலும் பாங்கி
நின்குறை நீயே சென்றுரை யென்றலும்
பாங்கியைத் தலைவன் பழித்தலும் பாங்கி
பேதைமை யூட்டலுங் காதலன் றலைவி
மூதறி வுடைமை மொழிதலும் பாங்கி
முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறலுந்
தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
யுலகிய லுரைத்தலுந் தலைமகன் மறுத்தலும்
பாங்கி யஞ்சியச் சுறுத்தலு மாங்கவன்
கையுறை புகழ்தலுந் தையன் மறுத்தலு
மாற்றா நெஞ்சினோ டவன்புலத் தலுமவ
ளாற்றுவித் தகற்றலு மாகுநா லைந்து
மிரந்துகுறை பெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்
குலகின் மேல்வைத் துரைத்தலு மதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமக ளவயவத் தருமை சாற்றலுந்
தலைமகன் றன்னைத் தானே புகழ்தலு
மலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தலுங்
கொண்டுநிலை கூறலு மென்றிவை யேழுந்
தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தலுந் தலைவன் றலைவி
வருத்திய வண்ண முரைத்தலும் பாங்கி
செவ்வி யருமை செப்பலுந் தலைவன்
செவ்வி யெளிமை செப்பலும் பாங்கி
யென்னை மறைப்பி னெளிதென நகுதலு
மந்நகை பொறாஅ தவன்புலம் பலுமவ
டேற்றலுங் கையுறை யேற்றலுங் கிழவோ

ஞற்றலு மென்னு மவ்வோன் பானு
மிறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி
யிறைவிக் கவன்குறை யுணர்த்தலு மிறைவி
யறியாள் போன்று குறியாள் கூறலும்
பாங்கி யிறையோற் கண்டமை பகர்தலும்
பாங்கியைத் தலைவி மறைத்தலும் பாங்கி
யென்னை மறைப்ப தென்னெனத் தழாலுங்
கையுறை புகழ்வுமென் றிவ்விரு மூன்றுந்
தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தலு
மறுத்தற் கருமை மாட்டலுந் தலைவன்
குறிப்பு வேறாக நெறிப்படக் கூறலுந்
தலைவியை முனிதலுந் தலைவி பாங்கி
தன்னை முனிதலுந் தன்கைக் கையுறை
யேற்றலு மெனமுறை சாற்றிய வாறு
மிறைவி கையுறை யேற்றமை பாங்கி
யிறைவற் குணர்த்தலுங் குறியிடங் கூறலுங்
குறியிடத் திறைவியைக் கொண்டு சேறலுங்
குறியிடத் துய்த்து நீங்கலு மிறையோ
னிடத்தெதிர்ப் படுதலு மியைதலும் புகழ்தலும்
விடுத்தலும் பாங்கி மெல்லியற் சார்ந்து
கையுறை காட்டலு மையுறை கண்ணியைப்
பாங்கிற் கூட்டலு நீங்கித் தலைவற்
கோம்படை சாற்றலு முலகியன் மேம்பட
விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை
விரும்பலு மெனமுறை தெரிந்த பன்மூன்றே
டற்றமில் சிறப்பினிவ் வறுபத் தோன்றுங்
குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே.

இது பாங்கியிற்கூட்டத்து விரி இத்துணைப் பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) *தலைவனுட்கோள்சாற்றல் முதலாகப் பாங்கி யாற்றுவித்தகற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபதும், இரந்துகுறைபெறாது வருந்தியகிழவோன் மடலேபொருளெனமதித்தல் முதலாகக் கொண்டுநிலை கூறல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும், தலைவி யிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல் முதலாகக் கிழவோனாற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதும், இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கவன்குறை*

யுணர்த்தல் முதலாகப் பாங்கி கையுறைபுகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும், தோழி கிழவோன்றுயர்நிலை கிளத்தல் முதலாகக் கையுறையேற் றல் ஈறாக முறையே சொல்லப்பட்ட ஆறும், இறைவி கையுறையேற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல் முதலாகத் தலைமகன் விருந்திறைவிரும்பல் ஈறாக ஆராய்ந்த பதின்மூன்றேடு கூட மிகுந்த சிறப்பினையுடைய இவ் வறுபத்தொருகிளவியுந் தீமையில்லாத பாங்கியிற்கூட்டத்து விரியாம். (எ-று.)

தலைவ னுட்கோள்சாற்றற்குச் செய்யுள்:—

மடுக்கோ கடலின் விடுதிமி லன்றி மறிதிரைமீன்
படுக்கோ பணிலம் பலகுளிக் கோபரன் றில்லைமுன்றிற்
கொடுக்கோ வளைமற்று நும்மையர்க் காயகுற் றேவல்செய்கோ
தொடுக்கோ பணியீ ரணியீர் மலர்நுஞ் சுரிகுழற்கே.
—[கோவையார். 63]

எனவும், பாங்கி குலமுறைகிளத்தற்குச் செய்யுள்:—

தெங்கம் பழங்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர்குளிர் நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்ச் சிறுமியென் றேமொழியே
—[கோவையார். 100]

எனவும், தலைவன் தலைவிதன்னை உயர்த்தற்குச் செய்யுள்:—

மாடஞ்செய் பொன்னக ருந்நிக ரில்லையிம் மாதர்க்கென்னப்
பீடஞ்செய் தாமரை யோன்பெற்ற பிள்ளையை யுள்ளலரைக்
கீடஞ்செய் தென்பிறப் புக்கெடத் தில்லைநின் றோன்கயிலைக்
கூடஞ்செய் சாரற் கொடிச்சியென் றேநின்று கூறுவதே.
—[கோவையார். 129]

எனவும், பாங்கியறியாள் போன்றுவினுதற்குச் செய்யுள்:—

விண்ணிறந் தார்நிலம் விண்டவ ரென்றுமிக் காரிருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத் தார்கழுக் குன்றினின்று
தண்ணறுந் தாதிவர் சந்தனச் சோலைப்பந் தாடுகின்று
ரெண்ணிறந் தாரவர் யார்கண்ண தோமன்ன நின்னருளே.
—[கோவையார். 107]

எனவும், இறையோன் இறைவிதன்மை இயம்பற்குச் செய்யுள்:—

குவவின கொங்கை குரும்பை குழல்கொன்றை கொவ்வைசெவ்வாய்
கவவின வாணகை வெண்முத்தங் கண்மலர் செங்கழுநீர்

தவவினை தீர்ப்பவன் றம்பொழிற் சிற்றம் பலமனையாட்
குவவின நாண்மதி போன்றொளிர் கின்ற தொளிமுகமே.

—[கோவையார். 108]

எனவும், பாங்கி தலைவியருமை சாற்றற்குச் செய்யுள்:—

நெருநலு முன்னா ளெல்லையு மொருசிறைப்
புதுவை யாகலிற் கிளத்த லாணி
நேரிறை வளைத்தோ ணின்றோழி செய்த
வாரஞர் வருத்தங் களையா யோவென
வெற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
யெம்பதத் தெளிய ளல்ல ளெமக்கோர்
கட்காண் கடவு ளல்லளோ பெரும
வாய்கோன் மிளகி னமலையங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறந் தைவரு
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே.

—[இறை. மேற் சூ. 12]

எனவும், தலைவன் இன்றியமையாமை இயம்பற்குச் செய்யுள்:—

பொருளா வெனைப்புகுந் தாண்டு புரந்தரன் மாலயன்பா
லிருளா யிருக்கு மொளிநின்ற சிற்றம் பலமெனலாஞ்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் துடியிடையீ
ரருளா தொழியி லொழியா தழியுமென் னுயிருமே.

—[கோவையார். 73]

எனவும், பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றற்குச் செய்யுள்:—

அந்தியின் வாயெழி லம்பலத் தெம்பர னம்பொன்வெற்பிற்
பந்தியின் வாய்பல வின்சுளை பைந்தே னொடுங்கடுவன்
மந்தியின் வாய்க்கொடுத் தோம்புஞ் சிலம்ப மனங்கனிய
முந்தியின் வாய்மொழி நீயே மொழிசென்றம் மொய்குழற்கே.

—[கோவையார். 99]

எனவும் வரும். பாங்கியைத் தலைவன் பழித்தற்குச் செய்யுள்:—

மாதர் குறைமுடிக்க வல்லாயை வல்லையெனக்
காதல் சிறப்பக் கருதியது—மேதகைய
பாம்படுதே ரல்குற் பயம்படுநீர் மானமான்
றேம்படுதேர் மீது செலல். —[சிற்றகத்தியம்.]

என வரும். இது சிற்றகத்தியம். பாங்கி பேதைமையூட்டற்குச் செய்யுள்:-

நறுந்தண் டகரம் வகுள மிவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது வேண்டி—யெறிந்துழுது
செந்திணை வித்துவார் நங்கை பிறர்நோய்க்கு
நொந்திணைய வல்லளோ நோக்கு.'' —[திணை. நூற். 24]

என வரும். காதலன் தலைவிமூதறிவுடைமை மொழிதற்குச் செய்யுள்:—

அணங்குடைப் பனித்துறைத் தொண்டி யன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கின னுணங்கிடைப்
பொங்கரி பரந்த வுண்க
ணங்கலுழ் மேனி யசைஇய வெமக்கே. —[ஐங். 174]

என வரும். இஃது ஐங்குறுநூறு. பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையறக் கூறற்குச் செய்யுள்:—

நறுந்தண் கூந்தற் குறுந்தொடி மடந்தை
சிறுமுதுக் குறைவி யாயினள் பெரிதென
நின்னெதிர் கிளத்தலு மஞ்சுவ லெனக்கே
னின்னுயி ரன்ன ளாயினுந்
தன்னுறு விழுமங் கரத்த லானே. —[பொருள் பக். 492]

என வரும். தன்னிலை தலைவன் சாற்றற்குச் செய்யுள்:—

தோளுங் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் றொண்டி யன்னவெற்
கண்டு நயந்துநீ நல்காக் காலே. —[ஐங். 178]

என வரும். இஃது ஐங்குறுநூறு. பாங்கி உலகிய லுரைத்தற்குச் செய்யுள்:-

கோடீ ரெல்வளைக் கொழுமணிக் கூந்த
லாய்தொடி மடவரல் வேண்டுதி யாயிற்
றெண்கழிச் சேயிறாஅப் படூஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மே. —[ஐங். 196]

என வரும். இஃது ஐங்குறுநூறு. தலைமகன் மறுத்தற்குச் செய்யுள்:—

சிலைமேன் முகிலன்ன நன்னுதன் மீது செறிகுழலாண்
முலைமேன் முயங்குவ னீசொன்ன வாறு முழுமணியின்
கலைமே லணிதழை யல்குனல் லாய்முன் கவிகொணர்ந்த
மலைமேன் மருந்துவர் தோதலை மேல்விட மாற்றுவதே.
—[அம்பி. 111]

எனவும், பாங்கி அஞ்சி அச்சுறுத்தற்குச் செய்யுள்:—

முனிதரு மன்னையு மென்னையர் சாலவு மூர்க்கரின்னே
தனிதரு மிந்நிலத் தன்றைய குன்றமுந் தாழ்சடைமேற்
பனிதரு திங்க ளணியம் பலவர் பகைசெகுக்குங்
குனிதரு திண்சிலைக் கோடுசென் றுன்சுடர்க் கொற்றவனே.

—[கோவையார். 98]

எனவும், ஆங்கவன் கையுறை புகழ்தற்குச் செய்யுள்:—

வில்லும் பிறையுந் திறையிடு வாணுதன் மெல்லியலா
யெல்லுங் குமுத மலருங்கண் டாயிருங் கோங்கரும்பும்
வல்லும் பொருத வனமுலைக் கான மணியிதுபோர்
சொல்லும் பொழுது பிரமனு மாலுந் தொழத்தகுமே.

—[அம்பி. 141]

எனவும், தையன் மறுததற்குச் செய்யுள்:—

ஆரத் தழையரா பூண்டம் பலத்தன லாடியன்பர்க்
காரத் தழையன் பருளிநின் றோன்சென்ற மாமலயத்
தாரத் தழையண்ண றந்தா லிவையவ ளல்குற்கண்டா
லாரத் தழைகொடு வந்தா ரெனவரு மையுறவே.

—[கோவையார். 91]

எனவும், ஆற்றா நெஞ்சினோ டவன் புலத்தற்குச் செய்யுள்:—

கடுந்தே ரேறியுங் காலிற் சென்றுங்
கொடுங்கழி மருங்கி னடம்பமலர் கொய்துங்
கைதை தூக்கியு நெய்தல் குற்றும்
புணர்ந்தாம் போல வுணர்ந்த நெஞ்சமொடு
வைகலு மினைய மாகவுஞ் செய்தார்ப்
பசும்பூண் வேந்த ரழிந்த பாசறை
யொளிறுவே லழுவத்துக் களிறுபடப் பொருத
பெரும்புண் ணுறுநர்க்குப் பேஎய் போலப்
பின்னிலை முனியா நம்வயி
னென்னென நினையுங்கொல் பரதவர் மகளே.—[நற். 349]

எனவும் அவளாற்றுவித் தகற்றற்குச் செய்யுள்:—

யாழார் மொழிமங்கை பங்கத் திறைவ னெறிதிரைநீ
ரேழா யெழுபொழி லாயிருந் தோனின்ற தில்லையன்ன
சூழார் குழலெழிற் றொண்டைச்செவ் வாய்நவ்வி சொல்லறிந்தாற்
றாழா தெதிர்வந்து கோடுஞ் சிலம்ப தருந்தழையே.

—[கோவையார். 93]

எனவும், இரந்துகுறைபெறாது வருந்தியகிழவோன் மடலேபொருளென மதித்தற்குச் செய்யுள்:—

காம முழந்து வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி. —[குறள். 114]

எனவும் வரும்.

தலையாய நண்புடை யார்தளர்ந் தாருயிர் தாங்குதற்கோர்
நிலையாக வைத்துமுன் னின்றில ரேல்வெய்ய நீணெடுங்கண்
வலையால் வளைப்புண்டு வார்குழற் கண்ணியில் வந்துபட்ட
கலையார் விடுக்கவல் லார்விடு வாரெவர் கைப்பட்டதே.
—[அம்பி. 118]

இதுவும் அது. பாங்கிக் குலகின்மேல் வைத்துரைத்தற்குச் செய்யுள்:—

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் தென்புலியூ
ரீசன சாந்து மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே.

எனவரும். —[கோவையார். 74]

மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே. —[குறுந். 17]

இதுவும் அது.

பிறிதுமாகுப என்றது வரைபாய்தலை.

அம்மடலேற்றினைத் தலைமகன் தன்மேல்வைத்துச்சாற்றற்குச் செய்யுள்:—

கழிகின்ற வென்னையு நின்றநின் கார்மயி றன்னையும்யான்
கிழியொன்ற நாடி யெழுதிக்கைக் கொண்டென் பிறவிகெட்டின்
றழிகின்ற தாக்கிய தாளம் பலவன் கயிலையந்தேன்
பொழிகின்ற சாரனுஞ் சீறூர்த் தெருவிடைப் போதுவனே.
—[கோவையார். 76]

எனவும், தலைமகளவயவத்து அருமை பாங்கி சாற்றற்குச் செய்யுள்:—

அடிச்சந்த மால்கண் டிலாதன காட்டிவந் தாண்டுகொண்
முடிச்சந்த மாமல ராக்குமுன் னோன்புலி யூர்புரையுங்[டென்
கடிச்சந்த யாழ்கற்ற மென்மொழிக் கன்னி யனநடைக்குப்
படிச்சந்த மாக்கும் படமுள வோநும் பரிசகத்தே.
—[கோவையார். 78]

எனவும், தலைமகன் தன்னைத்தானே புகழ்தற்குச் செய்யுள்:—

காரார் கொடைத் தடக்கைக் கருமாணிக்கன் கப்பல்வெற்பி
னேராக நீர்கொண்ட நெஞ்சுதந் தாலந்த நெஞ்சுகொண்டே
யேரார் திருவுரு வெல்லா மெழுத வருமெனக்கு
வாரா திருப்பதையோ மடவீ ருங்கள் வன்கண்மையே.

—[கப்பற். 90]

எனவும், பாங்கி அருளியல் கிளத்தற்குச் செய்யுள்:—

நடனும் வணங்குந்தொல் லோனெல்லை நான்முகன் மாலறியாக்
கடனு முருவத் தரன்றில்லை மல்லற்கண் ணார்ந்தபெண்ணை [து
யுடனும் பெடையொடொண் சேவலு முட்டையுங் கட்டழித்
மடனும் புனைதரின் யார்கண்ணை தோபன்ன வின்னருளே.

—[கோவையார். 77]

எனவும், பாங்கி கொண்டுநிலை கூறற்குச் செய்யுள்:—

ஊர்வா யொழிவா யுயர்பெண்ணைத் திண்மடல் நின் குறிப்புச்
சீர்வாய் சிலம்ப திருத்த விருந்தில மீசர் தில்லைக்
கார்வாய் குழலிக் குன் றுதர வோதிக்கற் பித்துக்கண்டா
லார்வாய் தரினறி வார்பின்னைச் செய்க வறிந்தனவே.

—[கோவையார். 80]

எனவும்வரும்.

இறந்துபடுவானை இச்சொற் றாங்கிக்கொண்டு நின்றமையிற் கொண்டுநிலையாயிற்று.

தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற் குணர்த்தற்குச் செய்யுள்:—

உருகு தலைச்சென்ற வுள்ளத்து மம்பலத் தும்மொளியே
பெருகு தலைச்சென்று நின்றோன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை முடியா முலைபொடியா
வொருகு தலைச்சின் மழலைக்கென் னோவைய வோதுவதே.

—[கோவையார். 104]

எனவும், தலைவன் றலைவிவருத்தியவண்ணை முரைத்தற்குச் செய்யுள்:—

அளைதா மரவு மரியும்வெந் தீயு மரசுமெங்ங
ணிளைதா யினுங்கொல்லு மென்பது நீவந் திருஞ்சுரும்பின்
கிளைதாழ் குழல்வஞ்சி கேட்டிலை யோவிளங் கிள்ளைமென்சொன்
முளைவா ணகைப்பெண் ணரசல்ல வோவந்த மொய்குழலே.

—[அம்பி. 126]

எனவும், பாங்கி தலைவி செவ்வியருமை செப்பற்குச் செய்யுள்:—

கற்றில கண்டன்ன மென்னடை கண்மலர் நோக்கருளப்
பெற்றில மென்பிணை பேச்சுப் பெருகிள்ளை பிள்ளையின்றன்
றற்றில ளுற்ற தறிந்தில ளாகத் தொளிமிளிரும்
புற்றில வாளரவன்புலி யூரன்ன பூங்கொடியே.

—[கோவையார். 97]

எனவும், தலைவன் செவ்வியெளிமை செப்பற்குச் செய்யுள்:—

தேன்வந்த வாயிதழ்ச் சேயிழை யாயிளஞ் செவ்விநவ்வி
மான்வந்த வாள்விழி வஞ்சிக்கு நீதஞ்சை வாணன்வெற்பில்
யான்வந்த வாசென் றியம்புதி யேலவர் யாவரென்று
டான்வந்த வாவுட னேநின்னை யாரத் தழீஇக்கொள்ளுமே.

—[தஞ்சை. 111]

எனவும், பாங்கி என்னைமறைப்பின் எளிதென நகுதற்குச் செய்யுள்:—

பண்டா லியலு மிலைவளர் பாலகன் பார்கிழித்துத்
தொண்டா லியலுஞ் சுடர்க்கழ லோன்றொல்லைத் தில்லையின்வாய்
வண்டா லியலும் வளர்பூந் துறைவ மறைக்கிலென்னைக்
கண்டா லியலுங் கடனில்லை கொல்லோ கருதியதே.

—[கோவையார். 105]

எனவும், அந்நகை பொறாது அவன் புலம்பற்குச் செய்யுள்:—

மத்தகஞ் சேர்தனி நோக்கினன் வாக்கிறந் தூறமுதே
யொத்தகஞ் சேர்ந்தென்னை யுய்யநின் றோன்றில்லை யொத்திலங்கு
முத்தகஞ் சேர்மென் னகைப்பெருந் தோளி முகமதியின்
வித்தகஞ் சேர்மெல்லெ னோக்கமன் றேவென் விழுத்துணையே.

—[கோவையார். 106]

எனவும் வரும்.

பெருந்தோளி, அண்மைவிளி.

பாங்கி தலைமகனைத் தேற்றற்குச் செய்யுள்:—

எனக்காவி நின்னை வருத்திய மானவ் விளங்கிழைமான்
றனக்காவி யானுந் தடமலை நாட தளையவிழ்பூஞ்
சினைக்காவி னீகொய்த தேமென் றழையுஞ் சிலம்பிலந்தண்
சுனைக்காவி யுங்கரு கத்துவ ளேலிறை சோரநின்றே.

—[அம்பி. 231]

எனவும், கையுறையேற்றற்குச் செய்யுள்:—

தோலாக் கரிவென்ற தற்குந் துவள்விற்கு மில்லின்றொன்மைக்
கேலாப் பரிசுள வேயன்றி யேலே மிருஞ்சிலம்ப
மாலார்க் கரிய மலர்க்கழ லம்பல வன்மலையிற்
கோலாப் பிரசமன் னட்கைய நீதந்த கொய்தழையே.

—[கோவையார். 110]

எனவும், கிழவோன் ஆற்றற்குச் செய்யுள்:—

உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
லொல்லை யுணரப் படும். —[குறள். 110]

எனவும்வரும்.

மொய்ம்மால் வரையென்ன விம்மா வெழுமென் முகிழ்முலைக்கு
நம்மால் வரையினை நாடொறுஞ் சொல்லி நலஞ்சிறக்க
வெம்மா லொருபய னில்லா தருந்தழை யேற்றசெங்கை
மைம்மான் விழிக்கொரு கைம்மாறு கண்டிலம் வையகத்தே.

—[அம்பி. 133]

இதுவும் அது. இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கு அவன்குறை யுணர்த்தற்குச் செய்யுள்:—

தாதேய் மலர்க்குஞ்சி யஞ்சிறை வண்டுதண் டேன்பருகித்
தேதே யெனுந்தில்லை யோன்சே யெனச்சின வேலொருவர்
மாதே புனத்திடை வாளா வருவர்வந் தியாதுஞ்சொல்லார்
யாதே செயத்தக் கதுமது வார்குழ லேந்திழையே.

—[கோவையார். 82]

எனவும், இறைவி அறியாள்போன்று குறியாள்கூறற்குச் செய்யுள்:—

சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறலவு
துங்க மலிதலை யேந்தலி னேந்திழை தொல்லைப்பன்மா
வங்க மலிகலி நீர்தில்லை வானவ னேர்வருமே.

—[கோவையார் 85]

எனவும், பாங்கி இறையோற் கண்டமை பகர்தற்குச் செய்யுள்:—

வளையணி முன்கை வாலெயிற் றின்னகை
யிளைய ராடுந் தளையவிழ் கானற்
[1]குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தே ரண்ணலைக் கண்டிகும் யாமே. —[ஐங். 198]

(பா. ம்) 1. விருந்தென வினவி

எனவும், பாங்கியைத் தலைவி மறைத்தற்குச் செய்யுள்:—

இறவார் குருகினந் தங்குறைபங் கானலி லின்றளவும்
பிறவா தவொன்று பிறந்தது வேபெரு நீருலகிற்
சுறவார் கொடியுயர்த் தோன்றொண்டை மான்கப்பல் சூழ்திருநாட்
டுறைவார் தமக்கிது வுந்தகு மோசொல்லு மொண்ணுதலே.

—[கப். 104]

எனவும், பாங்கி என்னை மறைப்ப தென்னெனத் தழாற்குச் செய்யுள்:—

மஞ்சறி யாமின்னும் வானறி யாத மருந்துமற்றுன்
னெஞ்சறி யாத நினைவுமுண் டோநெடு நீருலகி
னஞ்சறி யாவன்பி னல்லை ரூட்டினு நாணியசெம்
பஞ்சறி யாத பணிமலர்ச் சீறடிப் பைந்தொடியே.

—[அம்பி. 140]

எனவும், பாங்கி கையுறை புகழ்தற்குச் செய்யுள்:—

தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட
செவ்வரை மேனியன் சிற்றம் பலவன் செழுங்கயிலை
யவ்வரை மேலன்றி யில்லைகண் டாயுள்ள வாறருளான்
இவ்வரை மேற்சிலம் பன்னெளி திற்றந்த வீர்ந்தழையே.

—[கோவையார். 114]

எனவும், தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தற்குச் செய்யுள்:—

மைத்தழை யாநின்ற மாமிடற் றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற வன்பினர் போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா வினுய்க்கையில் வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ராலென்ன பாவம் பெரியவரே.

—[கோவையார். 102]

எனவும், மறுத்தற்கருமை மாட்டற்குச் செய்யுள்:—

நீகண்ட னையெனின் வாழலை நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதொர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகிநின் றானப் பெருந்தகையே.

—[கோவையார். 84]

எனவும், தோழி தலைமகன்குறிப்புவேறாக நெறிப்படக்கூறற்குச் செய்யுள்:

மேவியந் தோலுடுக் குந்தில்லை யான்பொடி மெய்யிற்கையி
லோவியந் தோன்றுங் கிழிநின் னெழிலென் றுரையுளதாற்
றாவியந் தோகையன் னாயென்ன பாவஞ்சொல் லாடல்செய்யான்
பாவியந் தோபனை மாமட லேறக்கொல் பாவித்ததே.
—[கோவையார். 88]

எனவும், தோழி தலைவியை முனிதற்குச் செய்யுள்:—

உள்ளப் படுவன வுள்ளி யுரைத்தக் கவர்க்குரைத்து
மெள்ளப் படிறு துணிதுணி யேலிது வேண்டுவல்யான்
கள்ளப் படிறர்க் கருளா வரன்றில்லை காணலர்போல்
கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே.
—[கோவையார். 87]

எனவும், தலைவி பாங்கிதன்னை முனிதற்குச் செய்யுள்:—

வாளாது வந்தெனை வந்தன சொல்லி மணிவரைவேய்த்
தோளாய் புலந்து துயர்வதென் னோதொன்று தொட்டுவந்திந்
நாளாக வொன்றி நயந்தநங் கேண்மையி னாளுமுன்சொற்
கேளா தனவுமுண் டோவென்கொ லோவென்னைக் கேட்கின்றதே.
—[அம்பி. 146]

எனவும், தலைவி பாங்கிதன்கைக் கையுறை யேற்றற்குச் செய்யுள்:—

தீதாகி லென்னன்றி நன்றாகி லென்றிண் சிலம்பர்தந்த
போதார் தழையும் புதுநறுங் கண்ணியும் பூங்குவளைத்
தாதார் மலர்க்குழற் றையனல் லாய்வையஞ் சாற்றுவன
யாதாகி லென்வந்து நின்கைய தானதின் றென்கையதே.
—[அம்பி. 147]

எனவும், இறைவி கையுறையேற்றமை பாங்கி இறைவற் குணர்த்தற்குச் செய்யுள்:—

பாசத் தளையறுத் தாண்டுகொண் டோன்றில்லை யம்பலஞ்சூழ்
தேசத் தனசெம்ம லீதந் தனசென்றி யான்கொடுத்தேன்
பேசிற் பெருகுஞ் சுருங்கு மருங்குல் பெயர்ந்தரைத்துப்
பூசிற் றிலளன்றிச் செய்யா தனவில்லை பூந்தழையே.
—[கோவையார். 115]

எனவும், குறியிடங் கூறற்குச் செய்யுள்:—

வானுழை வாளம் பலத்தரன் குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாவிரு ளாய்ப்புற நாப்பண்வண் டாரகைபோற்
தேனுழை நாக மலர்ந்து திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றாங்கெழில் காட்டுமொர் கார்ப்பொழிலே.
[கோவையார். 116]

எனவும், குறியிடத்து இறைவியைக்கொண்டுசேறற்குச் செய்யுள்:—

புயல்வள ரூசன்முன் னூடிப்பொன் னேபின்னைப் போய்ப்பொலியு
மயல்வளர் குன்றினின் றேற்று மருவி திருவுருவிற்
கயல்வளர் வாட்கண்ணி போதரு காதரந் தீர்த்தருளுந்
தயல்வளர் மேனிய னம்பலத் தான்வரைத் தண்புனத்தே.

—[கோவையார். 117]

எனவும், குறியிடத்துய்த்து நீங்கற்குச் செய்யுள்:—

நரல்வே யினநின தோட்குடைந் துக்கநன் முத்தஞ்சிந்திப்
பரல்வே யறையுறைக் கும்பஞ் சடிப்பரன் றில்லையன்னாய்
வரல்வேய் தருவனிங் கேநிலுங் கேசென்றுன் வார்குழற்கீர்ங்
குரல்வே யளிமுரல் கொங்கார் தடமலர் கொண்டுவந்தே.

—[கோவையார். 119]

எனவும் வரும். ஒன்றெனமுடித்தலான், நீங்குந்தோழி தலைவற் குணர்த்தலும் வரவும் பெறும். அதற்குச் செய்யுள்:—

பனியோர் நறுமலர்ப் பாயலிற் கண்வளர் பாவையொரு
தனியே கிடந்தழுந் தாயுமிங் கில்லைத் தடஞ்சிலம்பா
முனியேல் விடைகொள்வன் முற்றுநின் காவன்முகிணகைச்செங்
கனியே யனையசெவ் வாய்நவ்வி மான்விழிக் காரிகையே.

—[அம்பி. 153]

என வரும். இறையோனிடத் தெதிர்ப்படுதற்குச் செய்யுள்:—

படமா சுணப்பள்ளி யிக்குவ டாக்கியப் பங்கயக்கண்
நெடுமா லெனவென்னை நீநினைந் தோநெஞ்சத் தாமரையே
யிடமா விருக்கலுற் றோதில்லை நின்றவ னீர்ங்கயிலை
வடமார் முலைமட வாய்வந்து வைகிற்றிவ் வார்பொழிற்கே.

—[கோவையார். 120]

எனவும், இயைதற்குச் செய்யுள்:—

செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம் பலவன் றிருக்கழலே
கெழுநீர் மையிற்சென்று கிங்கிணி வாய்க்கொள்ளுங் கள்ளகத்த
கழுநீர் மலரிவள் யானதன் கண்மரு விப்பிரியாக்
கொழுநீர் நறப்பருகும்பெரு நீர்மை யளிகுலமே.

—[கோவையார். 123]

எனவும், புகழ்தற்குச் செய்யுள்:—

மயனார் விதித்தன்ன மாமதில் சூழ்தஞ்சை வாணன் வெற்பிற்
பயனார் பயோதரப் பாவையன் னீர்பசும் பொற்குழைதோய்
நயனார விந்தத்து நஞ்சு நும் வாயிதழ் நல்லமுதும்
அயனார் படைத்தில ரேலடங் காதவ் வரனுக்குமே.-[தஞ்சை. 135]

எனவும், தலைமகளைத் தலைமகன் விடுத்தற்குச் செய்யுள்:—

கொழுந்தா ரகைமுகை கொண்டலம் பாசடை விண்மடுவி
லெழுந்தார் மதிக்கம லம்மெழி றந்தென விப்பிறப்பி
லழுந்தா வகையெனை யாண்டவன் சிற்றம் பலமனையாய்
செழுந்தா தவிழ்பொழி லாயத்துச் சேர்க திருத்தகவே.

—[கோவையார். 124]

எனவும் வரும். இன்னும் 'அற்றமில் சிறப்பின்' என்றதனானே தலைவி சோர்தலுங் கொள்க; அதற்குச் செய்யுள்:—

பொன்றாத காதற் பொறையாரு மாவி புலம்பினைய
வின்றாரு மின்றி யிருந்தனன் யானிக் குருந்திடையே
குன்றாத வன்பொடு கூடியும் வாடியுங் கோலங்கொண்டு
சென்றார் மணிநெடுந் தேருடன் போனதென் சிந்தையுமே.

—[அம்பி. 157]

எனவரும். பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டற்குச் செய்யுள்:-

பொன்னனை யான்றில்லைப் பொங்கர வம்புன் சடைமிடைந்த
மின்னனை யானருண் மேவலர் போன்மெல் விரல்வருந்த
மென்னனை யாய்மறி யேபறி யேல்வெறி யார்மலர்க
ளின்னன யான்கொணர்ந் தேன்மணந் தாழ்குழற் கேய்வனவே.

—[கோவையார். 125]

எனவும், பாங்கி தலைவியைப் பாங்கிற்கூட்டற்குச் செய்யுள்:—

அறுகானிறைமல ரைம்பா னிறையணிந் தேனணியார்.
துறுகான் மலர்த்தொத்துத் தோகைதொல் லாயமெல் லப்புகுக
சிறுகான் மருங்குல் வருந்தா வகைமிக வென்சிரத்தி
னுறுகால் பிறர்க்கரி யோன்புலி யூரன்ன வொண்ணுதலே.

—[கோவையார். 126]

எனவும், பாங்கி தலைவியை நீங்கி ஓம்படைசாற்றற்குச் செய்யுள்:—

பெடைநின்று காண வுடனின்ற தோகை பெருநடஞ்செய்
புடைநின்ற சோலைப் பொதியில்வெற் பாபொற் குழைதொடருங்
கடைநின் றுகுபுனற் கண்ணிக்கு நின்புவி காவலுக்கு
மிடைநின்ற பாவிக்கு மேதரு முவெண்ண மெண்ணுகவே.

—[அம்பி. 161]

எனவும், விருந்து விலக்கற்குச் செய்யுள்:—

தழங்கு மருவியெஞ் சீறூர் பெருமவி துமதுவுங்
கிழங்கு மருந்தி யிருந்தெம்மொ டின்று கிளர்ந்துகுன்றர்
முழங்குங் குரவை யிரவிற்கண் டேகுக முத்தன்முத்தி
வழங்கும் பிரானெரி யாடிதென் றில்லை மணிநகர்க்கே.

—[கோவையார். 127]

எனவும், விருந்திறைவிரும்பற்குச் செய்யுள்:—

சூதார் வனமுலைத் தோகையன் னீருங்கள் செங்கைதொட்ட
தேதா யினுமெனக் கின்னமு தாமெல்லி சாயுமெல்லை
தாதார் மலர்ப்பொழிற் றங்களு மாமிங்ங னுங்கள்வெற்புக்
காதார் நறுங்குழைக் கானவர் வானவர் காவலின்றே.
—[அம்பி. 163]

எனவும்வரும்.

இவற்றுள், இயைதலும் அதன்பாற்படும்; இடத்தெதிர்ப்படுதலும் புகழ்தலும் விடுத்தலும் விருந்திறைவிரும்பலுமாகிய தலைவன் கூற்றுக்கள் ஐந்தும், இயைதனிமித்தமாகி நிகழுந் தோழிகூற்று முப்பத்து நான்குமாக, ஈண்டைக்கு உரிய புணர்தலும் புணர்தனிமித்தமுமாகிய கிளவிகள் முப்பத்தொன்பதுமேயன்றித், தோழிகூற்று நிகழ்தற்குநிமித்தமாகிய ஏனைத் தலைவன் கூற்றுப்பதினெட்டுந், தலைவிகூற்று நான்குமாக, ஈண்டைக்கு உரியவல்லவாகிய இருபத்திரண்டும், அனுவாதமுகத்தான் ஈண்டேநிகழப்பெறுதலின் இவற்றையும் அவற்றோடு தலைப்பெய்து இவ்வறுபத்தொன்றும் பாங்கியிற் கூட்டத்து விரியென ஒருங்கு தொகுத்தோதினர். அற்றேல், ஆசிரியர் தொல்காப்பியனார் தலைவன் கூற்றுந் தலைவிகூற்றும் பாங்கிகூற்றுந் தனித்தனியெடுத்தோதுபவாகலின் இவர்பாங்கிகூற்றோடு ஏனை யிருதிறத்தோர் கூற்றையும் விரவித்தொகுத்தோதியது மாறுகொளக் கூறலாம் பிறவெனின், ஆகாது; இது புடைநூலாகலினென்க. இவ்வாறு வருவழி யெல்லாம் இக்கடாவிடைகளை மத்திமதீபமாக்கி முன்னும் பின்னும் உய்த்துரைத்துக்கொள்க.

தலைவனுட்கோள்சாற்றல் முதலாகப் பாங்கியாற்றுவித்தகற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபதனுள் தலைவன் கூற்றாயினவெல்லாம் இரந்து பின்னிற்றற்கும், தோழிகூற்றாயினவெல்லாஞ் சேட்படுத்தற்கும், இரந்துகுறைபெறாது வருந்தியகிழவோன் மடலே பொருளென மதித்தல் முதலாகக் கொண்டுநிலைகூறல் ஈறாகச்சொல்லப்பட்ட ஏழனுட் தலைவன் கூற்றாயினவெல்லாம் மடற்கூற்றிற்குந் தோழிகூற்றாயினவெல்லாம் மடல் விலக்கிற்குந், தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல் முத முதலாகக் கிழவோனாற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதனுள் தோழி கூற்றாயினவெல்லாம் உடன்படற்கும், தலைவன் கூற்றாயினவெல்லாம் மடற்கூற்றொழிதற்கும், இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கவன்குறையுணர்த்தல் முதலாகப் பாங்கிகையுறைபுகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறனுள் பாங்கிகூற்றாயினவெல்லாம் மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தற்கும், தலைவிகூற்றாயினவெல்லாம் வலிதாகச் சொல்லி மறுத்தற்கும், தோழி கிழவோன்றுயர்நிலைகிளத்தல் முதலாகக் கையுறையேற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறனுள் தோழிகூற்றாயின

வெல்லாம் வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தற்கும், தலைவிகூற்றாயின வெல்லாம் மெலிதாகச் சொல்லிக் குறைநயத்தற்கும், இறைவிகையுறை யேற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல் முதலாகத் தலைவன் விருந்திறை விரும்பல் ஈறாகச் சொல்லப்பட்ட பதின்மூன்றனுள் தோழிகூற்றாயின வெல்லாங்கூட்டற்கும், தலைவன்கூற்றாயினவெல்லாங் கூடற்குங் கூட்டற் கும் வேட்டற்கும் உரியவெனக் கொள்க. (137)

138. கூட்டல் கூடல் பாங்கிற் கூட்டல்
வேட்டலென் றொருநால் வகைத்தே பகற்குறி.

நிறுத்தமுறையானே பகற்குறிகூறுவனவற்றுள், இஃது அதன்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *கூட்டல் முதலாக வேட்டல் ஈறாக நான்கு வகையினை யுடைத்துப் பகற்குறி.* (எ-று.) (138)

139. குறியிடங் கூறன் முதலாப் பெறலரும்
விருந்திறை விரும்ப லீறாப் பொருந்தப்
பகர்ந்தபன் னிரண்டும் பகற்குறி விரியே.

இது பகற்குறிவிரி இத்துணைப்பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) *குறியிடங்கூறல் முதலாக விருந்திறை விரும்பல் ஈறாக மேற்பாங்கிற்கூட்டத்துள் எடுத்தோதப்பட்ட பன்னிரண்டும் பகற்குறி விரியாம்.* (எ-று.)

உதாரணம் மேற்காட்டியவெனக் கொள்க. (139)

140. இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்தலென்
றொருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி.

இஃது ஒருசார் பகற்குறிவகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *இரங்கலும் வன்புறையும் இச்செறிப்புணர்த்தலுமென மூன்றுவகையினையுடைத்து ஒரு கூற்றுப் பகற்குறி.* (எ-று.) (140)

141. கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்
பொழுதுகண் டிரங்கலும் பாங்கி புலம்பலுந்
தலைவ னீடத் தலைவி வருந்தலுந்
தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
முன்னிலைப் புறமொழி மொழிதலு மின்னுயிர்ப்
பாங்கியோடு பகர்தலும் பாங்கியச் சுறுத்தலு
நீங்கற் கருமை தலைவிநினைந் திரங்கலுந்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுஞ்
சிறைப்புற மாகச் செறிப்பறி வுறுத்தலு

முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தலு
முன்னின் றுணர்த்தலு முன்னின் றுணர்த்தி
யோம்படை சாற்றலு மேம்படு கிழவோன்
றஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலு
மென்றவீ ரேழு மெல்லுக்குறி விரியே.

இஃது ஒருசார் பகற்குறிவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண் டிரங்கல் முதலாகக் கிழவோன்றஞ்சம் பெறாது நெஞ்சொடுகிளத்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கும் ஒருசார் பகற்குறிவிரியாம். (எ-று.)

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கற்குச் செய்யுள்:—

பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
தகலோன் பயிறில்லைப் பைம்பொழிற் சேக்கைகண் ணோக்கினவா
லகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே.

—[கோவையார். 188]

எனவும், பாங்கி புலம்பற்குச் செய்யுள்:—

பொன்னார் நறுமலர்ப் புன்னையங் கானற் புளினந்தங்கி
யந்நாண் மணந்து மறந்தவர் போல வருக்கன்சென்ற
பின்னாவதன் முன்ன மேசெக்கர் மாலை பிறந்ததினி
யென்னாகு மென்றறி யேன்வளங் கோதை யிளங்கொடிக்கே.

—[அம்பி. 165]

எனவும், தலைவனீடத் தலைவி வருந்தற்குச் செய்யுள்:—

மூவ றழீஇய வருண்முத லோன்றில்லைச் செல்வன்முந்நீர்
நாவ றழீஇயவிந் நானிலந் துஞ்சு நயந்தவின்பச்
சேவ றழீஇச்சென்று தான்றுஞ்சும் யான்றுயி லாச்செயிரெங்
காவ றழீஇயவர்க் கோதா தளிய களியன்னமே. —[கோவை.191]

எனவும், தலைவியைப் பாங்கி கழறற்குச் செய்யுள்:—

சிறந்தார் தெரிந்த செழுந்தமிழ் வாணன்றென் மாறைவெற்பர்
துறந்தா ரெனையென்று சோருவ தேனிந்தத் தொல்லுலகிற
பிறந்தா ரெவர்க்கும் பிரிவெய்துமா வெய்ய பேரமர்க்கட்
புறந்தாழ் கரிய குழற்செய்ய வாயைய பூங்கொடியே.

—[தஞ்சை. 145]

எனவும், தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதற்குச் செய்யுள்:—

யாவது மறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தே
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே. —[குறுந். 152]

எனவும், தலைவி பாங்கியொடு பகர்தற்குச் செய்யுள்:—

புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதல
ரின்னா செய்த றோமென் னெஞ்சே. —[குறுந். 202]

எனவும், தலைவியைப் பாங்கியஞ்சி யச்சுறுத்தற்குச் செய்யுள்:—

மனங்கா வலருழை வைத்துமென் கூர்வளை வாய்ப்பசும்பு
ளினங்காவன் மாற்றிய வேனல்கண் டாலன்னை யெப்படியுங்
கனங்காவல் கொண்ட கழையிருஞ் சாரற் கனங்குழைநின்
புனங்காவன் மாற்று மதன்பினிற் காவலும் பூணும்வந்தே.
—[அம்பி. 171]

எனவும், நீங்கற்கருமை தலைவிநினைந்திரங்கற்குச் செய்யுள்:—

இமையாத வேழமொ ரெட்டுங் குலகிரி யேழு முற்றுஞ்
சுமையாற வந்தரு ளுந்தொண்டை மான்கப்பற் றோகையன்னீ
ரமையாத வன்புதந் தார்பிரிந்தா லரிதாற்றுவதென்
றமையா ளறிந்தல்ல வோசிவந்தா டன்றொருபக்கமே.
—[கப். 130]

எனவும், தலைவிக்கு அவன்வரல் பாங்கிசாற்றற்குச் செய்யுள்:—

சேணார் கொடிநெடுந் தேர்மணி யோசை செவிப்படுமிவ்
வாணாக மேல்வரு கின்றனர் போனுவர் வந்துநம்மைக்
காணா தலமரு துன்பமுங் காதலுங் காணவிங்ங
னீணாக நீழன் மறைதுவம் போது நிரைவளையே [அம்பி. 168]

எனவும், தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குச் செறிப்பறிவுறுத்தற்குச் செய்யுள்:—

இயலுங் கலவ மயிலுமென் மானு மினக்கிளியு
முயலுந் தவங்கண் முடிவது போலு முதுமறலி
செயலுங் கமலமுஞ் செங்கழு நீருஞ் செழியர்வெற்றிக்
கயலும் பொருங் கணல் லாயின்று நாளை கடிபுனத்தே.
—[அம்பி. 175]

எனவும், தோழி முன்னிலைப்புறமொழி மொழிந்து இற்செறிப்புணர்த்தற்குச் செய்யுள்:—

> பயில்காள பந்திப் புயலன்ன வோதியைப் பைங்கிளிகாள்
> மயில்காள் சிறிது மறக்கப் பெறீர்தஞ்சை வாணன்வெற்பில்
> குயில்காள மெங்கு மியம்புதண் சோலையிற் கூடியின்ப
> மயில்காள வெங்கதிர் வேலன்பர் சால வயர்ப்பினுமே.
>
> —[தஞ்சை. 152]

எனவும், பாங்கி தலைவன் முன்னின்று இற்செறிப்புணர்த்தற்குச் செய்யுள்:—

> மால்வரை வெற்ப வணங்கு குரலேனல்
> காவ லியற்கை யொழிந்தோம்யாம்—தூவருவி
> பூக்கண் கழூஉம் புறவிற்றாய்ப் பொன்விளையும்
> பாக்க முதுவெம் மிடம். —[ஐந். ஐம். 12]

எனவும், பாங்கி தலைவன் முன்னின்று இற்செறிப்புணர்த்தி ஓம்படைசாற்றற்குச் செய்யுள்:—

> காவைப் பொருவுசெங் கைக்கரு மாணிக்கன் கப்பல்வள்ளிக்
> கோவைப் பொருசெய்ய வேற்கொற்ற வாநின் குறைநயந்து
> மாவைக் குளிர்நிழ லாக்கியவென்னை மறப்பினுமென்
> பூவைக் குநல்லுயிர்நீ யுடம்பேகொண்டு போகின்றதே.
>
> [கப். 133]

எனம்வு, தலைவன் றஞ்சம்பெறாது நெஞ்சொடுகிளத்தற்குச் செய்யுள்:—

> ஏவல ரேவிழி யாந்தளிர் மேனிய ரேனலினிக்
> காவல ரேவனங் காத்தனம் யாங்களி யானைசெம்பொ
> னுவல ரேபெற நல்குங் கைமேக நறுங்குவளை
> மாவல ரேதொடை யான்றஞ்சை வாணன் வரையில்வந்தே.
>
> —[தஞ்சை. 155]

எனவும் வரும்.

இவற்றுட், கிழவோன்பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கலும், பாங்கிபுலம்பலும், தலைவனீடத் தலைவிவருந்தலும், முன்னிலைப்புறமொழி மொழிதலும், பாங்கியொடு பகர்தலும், நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கலும், கிழவோன் றஞ்சம் பெறாதுநெஞ்சொடுகிளத்தலுமாகிய ஏழும் இரங்கற்கும், இவற்றுட் கிழவோன் றஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலொழித்து ஏனைய ஆறும் வரைதல் வேட்கைக்கும், தலைவியைப் பாங்கிகழறலும் தலைவியைப்பாங்கி யஞ்சியச்சுறுத்தலுந்தலைவிக்கு அவன் வரல் பாங்கிசாற்றலுமாகிய மூன்றும் வன்புறைக்கும், சிறைப்புறமாகச்

செறிப்பறிவுறுத்தலும், முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தலும், முன்னின்றுணர்த்தலும் முன்னின்றுணர்த்தி யோம்படை சாற்றலுமாகிய நான்கும் இற்செறிப்புணர்த்தற்கும் உரியவெனக் கொள்க. இன்னுன்கும் வரைவுகடாதற்குமாம். (141)

142. விலக்கல் சேறல் கலக்க மென்றுங்
கிளப்பின்மூ வகைத்தே பகற்குறி யிடையீடு

இது நிறுத்தமுறையானே பகற்குறியிடையீட்டுவகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) விலக்கலுஞ் சேறலுங் கலக்கமுமென மூன்றுவகையினை யுடைத்தாம் பகற்குறியிடையீடு. (எ-று.) (142)

143. இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கலு
மிறைவியைக் குறிவரல் விலக்கலு மிறைமக
ளாடிட நோக்கி யழிதலும் பாங்கி
யாடிடம் விடுத்துக்கோண் டகறலும் பின்னு
ணெடுந்தகை குறிவயி னீடுசென் றிரங்கலும்
வறுங்கள நாடி மறுகலுங் குறுந்தொடி
வாழுமூர் நோக்கி மதிமயங் கலுமெனு
மேழும் பகற்குறி யிடையீட்டு விரியே

இது பகற்குறியிடையீட்டுவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) இறைவனைப் பாங்கிகுறிவரல் விலக்கல் முதலாகக் குறுந் தொடிவாழுமூர்நோக்கிமதிமயங்கல் ஈறுகச் சொல்லப்பட்ட ஏழும் பகற்குறியிடையீட்டுவிரியாம். (எ-று.)

இறைவனைப் பாங்கிகுறிவரல்விலக்கற்குச் செய்யுள்:—

வடிவார் வயற்றில்லை யோன்மல யத்துநின் றும்வருதேன்
கடிவார் களிவண்டு நின்றலர் தூற்றப் பெருங்கணியார்
நொடிவார் நமர்க்கினி நோதக யானுமக் கென்னுரைக்கேன்
றடிவார் தினையெமர் காவேம் பெருமவித் தண்புனமே.
—[கோவையார். 159]

எனவும், பாங்கி இறைவியைக்குறிவரல் விலக்கற்குச் செய்யுள்:—

அதுநா மறிந்தில மன்னையிப் போதனி நீர்த்துவரைத்
துதிநா வலர்புக ழுந்தொண்டை மான்வெற்பிற் றேண்மெலிவும்
புதுநாண் மதிநுதல் வண்ணமும் பார்த்துப் புகையுயிர்த்தா
ளிதுநா மினியன்னமே வண்ட லாடு மிடமல்லவே.
—[கப். 136]

எனவும், இறைமகள் ஆடிடநோக்கியெழிதற்குச் செய்யுள்:—

பரிவுசெய் தாண்டம் பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வா
யருவிசெய் தாழ்புனத் தைவனங் கொய்யவு மிவ்வனத்தே
பிரிவுசெய் தாலரி தேகொள்க பேயொடு மென்னும்பெற்றி
யிருவிசெய் தாளி னிருந்தின்று காட்டு மிளங்கிளியே.

—[கோவையார். 144]

எனவும், பாங்கி ஆடிடம்விடுத்துக் கொண்டகறற்குச் செய்யுள்:—

கணியார் கருத்தின்று முற்றிற் றியாஞ்சென்றுங் கார்ப்புனமே
மணியார் பொழில்காண் மறத்திர்கண் டீர்மன்னு மம்பலத்தோ
னணியார் கயிலை மயில்கா ளயில்வே லொருவர்வந்தாற்
றுணியா தனதுணிந் தாரென்னு நீர்மைகள் சொல்லுமினே.

—[கோவையார். 145]

எனவும், பின்னுணெடுந்தகை குறிவயினீடுசென்றிரங்கற்குச் செய்யுள்:—

பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன் புலியூ ரரன்பொருப்பே
யிதுவெனி லென்னின் றிருக்கின்ற வாறெம் மிரும்பொழிலே
யெதுநமக் கெய்திய தென்னுற் றனிரறை யீண்டருவி
மதுவினிற் கைப்புவைத் தாலொத்த வாமற்றிவ் வான்புனமே.

—[கோவையார். 146]

எனவும், தலைமகன் வறுங்களநாடிமறுகற்குச் செய்யுள்:—

தொடைவந்த தண்ணந் துழாய்த்தொண்டைவேந்தன் றுவரைவெற்பி
னிடைவந்த கானவ ரேகென்ற போதி லிருங்கயற்கட்
கடைவந் துகுபுனற் கச்சிள நீர்புக்க கால்களங்கு
னடைவந்த தோமயில்கா ளென்னை வாழ்வித்த நன்னுதற்கே.

—[கப். 141]

எனவும், தலைமகன் தலைமகள் வாழுமூர்நோக்கி மதிமயங்கற்குச் செய்யுள்:-

ஆனந்த மாக்கட லாடுசிற் றம்பல மன்னபொன்னின்
றேனுந்து மாமலைச் சீறூ ரிதுசெய்ய லாவதில்லை
வானுந்து மாமதி வேண்டி யழுமழப் போலுமன்னோ
நானுந் தளர்ந்தன னீயுந் தளர்ந்தனை நன்னெஞ்சமே.

—[கோவையார். 147]

எனவும் வரும்.

இவற்றுள் முன்னைய இரண்டும் விலக்கற்கும், பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டகறலாகிய ஒன்றுஞ் சேறற்கும், ஏனையநான்குங் கலக்கத்திற்கும் உரியவாம் என்றவாறு.

உரையிற்கோடலாற், பாங்கி ஆடிடம்விடுத்துக்கொண்டகறற்பின்னர் அவனுருவுவெளிப்பட இரங்கலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

அழியு மிரும்புன மும்மழி யாமணை லாழிதொட்ட
சுழியு மறிந்த விதணமும் பார்த்துத் துணைவிழிநீர்
பொழிய விருந்து புலம்புமென் னுவியும் பாவியெம்மூர்
வழியு மறிந்திங்ங னேவந்த வரவெம் மனைவள்ளலே.
—[அம்பி. 186]

எனவரும். (143)

144. வேண்டன் மறுத்த லுடன்படல் கூட்டல்
கூடல்பா ராட்டல் பாங்கிற் கூட்ட
லுயங்க னீங்கலென் றேன்பது வகைத்தே
யியம்பிப் போந்த விரவுக் குறியே.

இது நிறுத்தமுறையானே இரவுக்குறிவகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) வேண்டல் முதலாக நீங்கல் ஈறுகச் சொல்லப்பட்ட ஒன்பது வகையினை யுடைத்து மேற்சொல்லிப்போந்த இரவுக்குறி. (எ-று.)

145. இறையோ னிருட்குறி வேண்டலும் பாங்கி
நேறியின தருமை கூறலு மிறையோ
னேறியின தெளிமை கூறலும் பாங்கி
யவனாட் டணியியல் வினுதலுங் கிழவோ
னவனாட் டணியியல் வினுதலு மவற்குத்
தன்னாட் டணியியல் பாங்கி சாற்றலு
மிறைவிக் கிறையோன் குறையறி வுறுத்தலு
நேரா திறைவி நேஞ்சொடு கிளத்தலு
நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத் தலுமவ
ணேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தலுங்
குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதலு
மிறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தலு
மவட்கோண்டு சேறலுங் குறியுய்த் தகறலும்
வண்டுறை தாரோன் வந்தேதிர்ப் படுதலும்
பெருமக ளாற்றின தருமைநினைந் திரங்கலும்
புரவலன் றேற்றலும் புணர்தலும் புகழ்தலு
மிறைமக ளிறைவனைக் குறிவிலக் கலுமவ
னிறைவியை யில்வயின் விடுத்தலு மிறைவியை
யெய்திப் பாங்கி கையுறை காட்டலு

மிற்கோண் டேகலும் பிற்சென் றிறைவனை
வரவு விலக்கலும் பெருமகன் மயங்கலுந்
தோழி தலைமக டுயர்கிளந்து விடுத்தலுந்
திருமகட் புணர்ந்தவன் சேறலு மென்றாங்
கிருபத் தேழு மிரவுக்குறி விரியே.

இஃது இரவுக்குறிவிரி இத்துணைப்பகுதித்தென்கின்றது.

(இ-ள்.) இறையோனிருட்குறிவேண்டல் முதலாகத் திருமகட் புணர்ந்தவன்சேறல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தேழும் இரவுக்குறி விரியாம். (எ-று.)

இறையோனிருட்குறிவேண்டற்குச் செய்யுள்:—

மருந்துநம் மல்லற் பிறவிப் பிணிக்கம் பலத்தமிழ்தா
யிருந்தனர் குன்றினின் றேங்கு மருவிசென் றேர்திகழப்
பொருந்தின மேகம் புதைந்திருண் டேங்கும் புனையிறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறா ரதனுக்கு வெள்வளையே.

—[கோவையார். 148]

எனவும், பாங்கி நெறியினதருமைகூறற்குச் செய்யுள்:—

விசும்பினுக் கேணி நெறியன்ன சின்னெறி மேன்மழைதூங்
கசும்பினிற் றுன்னி யளைநுழைந் தாலொக்கு மையமெய்யே
யிசும்பினிற் சிந்தைக்கு மேறற் கரிதெழி லம்பலத்துப்
பசும்பனிக் கோடு மிலைந்தான் மலையத்தெம் வாழ்பதியே.

—[கோவையார். 149]

எனவும்வரும். இசும்பு ஏற்றிழிவு. தலைவன் நெறியினதெளிமை கூறற்குச் செய்யுள்:—

அரவுக்கு மெல்லியல் சாயனுள் ளேயுண் டறவிருண்ட
விரவுக் கினிய திருமுகந் தோன்று மெடுத்தவெண்ணைக்
கரவுக் கடியுண்ட மால்கரு மாணிக்கன் கப்பலன்று
யுருமுக்கு நீதந்த காமவெந் தீயுண்டெ னுள்ளத்திலே.

—[கப். 145]

எனவும், பாங்கி அவனுட்டணியியல்வினுதற்குச் செய்யுள்:—

வரையன் றொருகா லிருகால் வளைய நிமிர்த்து வட்கார்
நிரையன் றழலெழ வெய்துநின் றோன்றில்லை யன்னநின்னூர்
விரையென்ன மென்னிழ லென்ன வெறியுறு தாதிவர்போ
துரையென் னவோசிலம் பாநலம் பாவி யொளிர்வனவே.

—[கோவையார். 152]

எனவும், தலைமகன் அவளுட்டணியியல்வினாதற்குச் செய்யுள்:—

செம்மல ராயிரந் தூய்க்கரு மாறிருக் கண்ணணியு
மொய்ம்மல ரீர்ங்கழ லம்பலத் தோன்மன்னு தென்மலயத்
தெம்மலர் சூடிநின் றெச்சாந் தணிந்தென்ன நன்னிழல்வா
யம்மலர் வாட்கணல் லாயெல்லி வாய்நும ராவதே.

—[கோவையார். 153]

எனவும், அவற்குத் தன்னுட்டணியியல்பாங்கிசாற்றற்குச் செய்யுள்:—

பனைவளர் கைமாப் படாத்தம் பலத்தரன் பாதம்விண்ணோர்
புனைவளர் சாரற் பொதியின் மலைப்பொலி சந்தணிந்து
சுனைவளர் காவிகள் சூடிப்பைந் தோகை துயில்பயிலுஞ்
சினைவளர் வேங்கைகள் பாங்கணின் றோங்குஞ் செழும்பொழிலே.

—[கோவையார். 154]

எனவும், பாங்கி இறைவிக்கிறையோன் குறையறிவுறுத்தற்குச்செய்யுள்:-

மோட்டங் கதிர்முலைப் பங்குடைத் தில்லைமுன் னோன்கழற்கே
கோட்டந் தருநங் குருமுடி வெற்பன் மழைகுழுமி
நாட்டம் புதைத்தன்ன நள்ளிரு ணாக நடுங்கச்சிங்கம்
வேட்டந் திரிசரி வாய்வரு வான்சொல்லு மெல்லியலே.

—[கோவையார். 156]

எனவும், நேராதிறைவி நெஞ்சொடு கிளத்தற்குச் செய்யுள்:—

செழுங்கார் முழவதிர் சிற்றம் பலத்துப் பெருந்திருமால்
கொழுங்கான் மலரிடக் கூத்தயர் வோன்கழ லேத்தலர்போன்
முழங்கா ரரிமுரண் வாரண வேட்டைசெய் மொய்யிருள்வாய்
வழங்கா வதரின் வழங்கென்று மோவின்றெம் வள்ளலையே.

—[கோவையார். 157]

எனவும், நேரிழை பாங்கியொடுநேர்ந்துரைத்தற்குச் செய்யுள்:—

ஓங்கு மொருவிட முண்டம் பலத்தும்ப ருய்யவன்று
தாங்கு மொருவன் றடவரை வாய்த்தழங் கும்மருவி
வீங்குஞ் சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கு மவர்க்கறி யேன்சிறி யேன்சொல்லும் வாசகமே.

—[கோவையார். 158]

எனவும், நேர்ந்தமைபாங்கி நெடுந்தகைக்குரைத்தற்குச் செய்யுள்:—

ஏனற் பசுங்கதி ரென்றாழ்க் கழிய வெழிலியுன்னிக்
கானக் குறவர்கள் கம்பலை செய்யும்வம் பார்சிலம்பா
யானிற்றை யாமத்து நின்னருண் மேனிற்க லுற்றுச்சென்றேன்
றேனக்க கொன்றையன் றில்லையு றார்செல்லுஞ் செல்லல்களே.

—[கோவையார். 159]

எனவும், பாங்கி தலைமகனைக் குறியிடத்துநிறுத்திவந்து தாய்துயிலறிதற்குச் செய்யுள்:—

கூடா ரரணெரி கூடக் கொடுஞ்சிலை கொண்டவண்டன்
சேடார் மதின்மல்லற் றில்லையன் னாய்சிறு கட்பெருவெண்
கோடார் கரிகுரு மாமணி யூசலைக் கோப்பழித்துத்
தோடார் மதுமலர் நாகத்தை நூக்குநஞ் சூழ்பொழிற்கே.
—[கோவையார். 161]

எனவும், பாங்கி தலைவிக்குத் தலைவன் வரவறிவுறுத்தற்குச் செய்யுள்:—

முன்னு மொருவ ரிரும்பொழின் மூன்றற்கு முற்றுமிற்றாற்
பின்னு மொருவர்சிற் றம்பலத் தார்தரும் பேரருள்போற்
றுன்னுமொ ரின்பமென் றோகைதந் தோகைக்குச் சொல்லுவபோன்
மன்னு மரவத்த வாய்த்துயில் பேரு மயிலினமே.
—[கோவையார். 160]

எனவும், பாங்கி தலைவியைக் குறியிடத்துக்கொண்டுசேறற்குச் செய்யுள்;

விண்ணுக்கு மேல்வியன் பாதலக் கீழ்விரி நீருடுத்த
மண்ணுக்கு நாப்ப ணயந்துதென் றில்லைநின் றோன்மிடற்றின்
வண்ணக் குவளை மலர்கின் றனசின வாண்மிளிர்நின்
கண்ணுக்கு மேற்கண்டு காண்வண்டு வாழுங் கருங்குழலே.
—[கோவையார். 162]

எனவும், பாங்கி தலைவியைக்குறியிடத்துய்த்து நீங்கற்குச் செய்யுள்:—

நந்தீ வரமென்னு நாரண னுண்மலர்க் கண்ணிற்கெந்நாக்
தந்தீ வரன்புலி யூரனை யாய்தடங் கண்கடந்த
விந்தீ வரமிவை காணின் னிருள்சேர் குழற்கெழில்சேர்
சந்தீ வரமுறி யும்வெறி வீயுந் தருகுவனே. —[கோவையார். 163]

எனவும், தலைவன் தலைவியைக்குறியிடத்தெதிர்ப்படுதற்குச் செய்யுள்:—

காமரை வென்றகண் ணோன்றில்லைப் பல்கதி ரோனடைத்த
தாமரை யில்லி னிதழ்க்கத வந்திறந் தோதமியே
பாமரை மேகலை பற்றிச் சிலம்பொதுக் கிப்பையவே
நாமரை யாமத்தென் னோவந்து வைகி நயந்ததுவே.
—[கோவையார். 164]

எனவும், தலைவி ஆற்றினதருமை நினைந்திரங்கற்குச் செய்யுள்:—

பெயல்கான் மறைத்தலின் விசும்புகா ணலரே
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலரே
யெல்லை சேறலி னிருள்பெரி தட்டன்று

பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே. —[குறுந். 355]

எனவும், புரவலன் தேற்றற்குச் செய்யுள்:—

மேகஞ் சிறந்த குழனிழ லோடிய வேனெடுங்கண்
மாகஞ் சிறந்த மதிநுத லாய்மல்கு மல்குலுக்கு
மாகஞ் செறிந்த முலைக்குமுன் றோற்ற வடலெயிற்று
நாகங்க ளென்னை நலிவுசெய் யாதுங்க ணண்பனென்றே.
—[அம்பி. 207]

எனவும, புணர்தற்குச் செய்யுள்:—

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு. —[குறள், 1107]

எனவும், வரும்.

அரியார் மதர்விழி யாலமன் னீர்சொல் லமிழ்தமன்னீர்
புரியார் தளையவிழ் பூமலர்க் காவிற் புணர்ந்திங்ஙனே
தரியாத வன்பு தயங்க முயங்குந் தகைபகலும்
பிரியாம லிங்கெவர்க்குந்தெரி யாவிஞ்சை பெற்றிலமே.
—[அம்பி. 208]

இதுவும் அது. புகழ்தற்குச் செய்யுள்:—

அழுந்தே னரகத் தியானென் றிருப்பவந் தாண்டுகொண்ட
செழுந்தேன் றிகழ்பொழிற் றில்லைப் புறவிற் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுத மிவள்யான் குழூஉச்சுடர்கொண்
டெழுந்தாங் கதுமலர்த் தும்முயர் வானத் திளமதியே.
—[கோவையார். 166]

எனவும், தலைவி தலைவனைக்குறிவிலக்கற்குச் செய்யுள்:—

மூரற் கதிர்முத்த வார்முலை யாவியின் மூழ்கநனி
வாரற்க நீதஞ்சை வாணன்வெற் பாவய மாவழங்கும்
வேரற் கடிய கவலையி னூடு வெயிலவற்குஞ்
சாரற் கருமைய தாயிருள் கூருமெஞ் சாரலிலே.
—[தஞ்சை. 182]

எனவும், தலைமகன்றலைவியை இல்வயின்விடுத்தற்குச் செய்யுள்:—

சுரும்புறு நீலங்கொய் யற்றமி நின்று துயில்பயின்மோ
வரும்பெறற் றோழியொ டாயத்து நாப்ப ணமரரொன்னா
ரிரும்புறு மாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசையன்றோர்
துரும்புறச்செற்றகொற் றத்தெம்பிரான்றில்லை சூழ்பொழிற்கே
—[கோவையார். 167]

எனவும், பாங்கி இறைவியையெய்திக் கையுறைகாட்டற்குச் செய்யுள்:—

செஞ்சேல் பொருகுழை சேர்க்குங் குவளையுந் தேனிரங்கு
மஞ்சேர் குழற்கணி மவ்வலுங் கொய்திவண் வந்தனன்முன்
னஞ்சே லரிவையஞ் சேலடி யேன்விட் டகன்றதற்கு
நெஞ்சேது பட்டது நீயேது பின்னை நினைந்தனையே.
—[அம்பி. 211]

எனவும், பாங்கி தலைவியை இற்கொண்டேகற்குச் செய்யுள்:—

புழற்கா னறுங்குவ ளைச்செவிப் போதும் புயலைவென்ற
குழற்கான மவ்வலுங் கொய்தன மாயிற் கொடியவன்னை
யழற்கால் விழித்துயி னீத்துண ராமுன் னடைகுவம்யாங்
கழற்கான் மதன்கணை போல்விழி யார்தம் கடிமனைக்கே.
—[அம்பி. 212]

எனவும், பாங்கி தலைவனை வரவுவிலக்கற்குச் செய்யுள்:—

நற்பகற் சோம னெரிதரு நாட்டத்தன் றில்லையன்ன
விற்பகைத் தோங்கும் புருவத் திவளின்மெய் யேயெளிதே
வெற்பகச் சோலையின் வேய்வளர் தீச்சென்று விண்ணினின்ற
கற்பகச் சோலை கதுவுங்கன் னாடவிக் கல்லதரே.
—[கோவையார். 168]

எனவும், தலைமகன் மயங்கற்குச் செய்யுள்:—

பைவா யரவரை யம்பலத் தெம்பரன் பைங்கயிலைச்
செவ்வாய்க் கருங்கட் பெரும்பணைத் தோட்சிற் றிடைக்கொடியை
மொய்வார் கமலத்து முற்றிழை யின்றென்முன் னைத்தவத்தா
லிவ்வா றிருக்குமென் றேநிற்ப தென்றுமெ னின்னுயிரே.
[கோவையார். 169]

எனவும், தோழி தலைமகள் துயர்கிளர்ந்துவிடுத்தற்குச் செய்யுள்:—

இடிக்கொத் தொளிறு மிலங்கெயிற் றுளி யிபமருப்பை
யொடிக்கத் திரியு முழுவையஞ் சாரலி லொருதனியே
வடிக்கைச் சுடர்வடி வேன்மன்ன நீசெல் வழிக்கிரங்கு
கொடிக்குப் படர்கொம்பு கூடின் சாரற் குறித்தகொம்பே.
—[அம்பி. 217]

எனவும், தலைமகட்புணர்ந்தவன் சேறற்குச் செய்யுள்,—

இருங்குன் றனமதி லெம்பதிக் கேக லெளிதுசெம்மை
தருங்குங் குமமுலைத் தையனல் லாய்தஞ்சை வாணன்வெற்பிற்
கருங்குஞ் சரவினம் வெண்சிங்க வேறஞ்சுங் கங்குலினெம்
மருங்குஞ் சுடர்விளக் காமட வார்குழை மாணிக்கமே.
—[தஞ்சை. 189]

எனவும் வரும்.

* உரையிற்கோடலால், தலைமகன் நெறியினதெளிமைகூறற் பின் பாங்கியிரவுக் குறிக்குடன்படலும், நேராதிறைவி நெஞ்சொடு கிளத்தற் பின் பாங்கியிரவுக்குறியேற்பித்தலும், தலைவியைக் குறியிடத் தெதிர்ப்படு தற்பின் சார்தல்பயனுகப் புகழ்தலும் வரப்பெறும். அவற்றிற்குச் செய் யுள் முறையே: —

கூளி நிரைக்கநின் றம்பலத் தாடி குரைகழற்கீழ்த்
தூளி நிரைத்த சுடர்முடி யோயிவ டோணசையா
லாளி நிறைத்தட லானைக டேரு மிரவில்வந்து
மீளி யுரைத்தி வினையே னுரைப்பதென் மெல்லியற்கே.

எனவும், —[கோவையார். 151]

மலவன் குரம்பையை மாற்றியம் மான்முதல் வானர்க்கப்பாற்
செலவன்பர்க் கோக்குஞ் சிவன்றில்லைக் கானலிற் சீர்ப்பெடையோ
டலவன் பயில்வது கண்டஞர் கூர்ந்தயில் வேலுரவோன்
செலவந்தி வாய்க்கண் டனனென்ன தாங்கொன்மன் சேர்துயிலே.

எனவும், —[கோவையார். 155.]

அகிலின் புகைவிம்மி யாய்மலர் வேய்ந்தஞ் சனமெழுதத்
தகிலுந் தனிவடம் பூட்டத் தகாள் சங்கரன்புலியூ
ரிகலு மவரிற் றளருமித் தேம்ப லிடைஞெமியப்
புகலு மிகவிங்ங னேயிறு மாக்கும் புணர்முலையே.

எனவும் வரும். —[கோவையார். 165.]

இவற்றுள், இறையோன் இருட் குறிவேண்டலும், நெறியினதெளிமை கூறலும், அஃதுணட்டணியியல்விறுதலும், பாங்கியிறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தலுமாகிய நான்கும் வேண்டற்கும்; பாங்கி நெறியினதருமைகூறலும், இறைமகளிறைவனைக் குறிவிலக்கலும், பாங்கியிறைவனை வரவுவிலக்கலுமாகிய மூன்றும் மறுத்தற்கும்; பாங்கியவனுட்டணியியல்விறுதலும், அவர்க்குத்தன்னுட் டணியியல்சாற்றலும், நேரிழைபாங்கியொடு நேர்ந்துரைத்தலுமாகிய மூன்றும் உடன்படற்கும். தலைமகனேர்ந்தமை பாங்கி தலைமகற்குணர்த்தலும், குறியிடைநிறீஇத் தாய் துயிலறிதலும், இறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தலும், அவட்கொண்டுசேறலுமாகிய நான்கும் கூட்டற்கும்; தலைமகளையெதிர்ப்படுதலும், தேற்றலும், புணர்தலுமாகிய மூன்றுங் கூடற்கும்; புகழ்தலும், கையுறைகாட்டலுமாகிய இரண்டும் பாராட்டற்கும்; தலைமகனிறைவியை இல்வயின்விடுத்தலும், பாங்கி தலைமகளை இற்கொண்டேகலுமாகிய இரண்டும் பாங்கிற்கூட்டற்கும், நேரா திறைவிநெஞ்சொடுகிளத்தலும், தலைமகளாற்றின தருமைநினைந்திரங்கலும் பெருமகன்மயங்கலும் தோழிதலைமகடுயர்கிளந்து விடுத்தலுமாகிய நான்கும் மயங்கற்கும்; பாங்குறியுய்த்தலுந், திருமகட்புணர்ந்தவன் சேறலு மாகிய இரண்டும் நீங்கற்கும் உரியவாமென்க. இவற்றுள் நேராதிறைவி நெஞ்சொடுகிளத்தலும், பெருமகளாற்றினதருமை நினைந்திரங்கலும், இறைமகளிறைவனைக் குறிவிலக்கலுமாகிய மூன்றும் வரைதல்வேட்கைக்கும்; பாங்கிநெறியினதருமைகூறலும், இறைவனைவரவுவிலக்கலும், தலைமகடுயர்கிளந்துவிடுத்தலுமாகிய மூன்றும் வரைவுகடாதற்கும் உரியவாமாறுணர்க. (145)

146. அல்லகுறி வருந்தொழிற் கருமை யென்றுங்
கெல்லிக்குறி யிடையீ டிருவகைத் தாகும்.

இது நிறுத்தமுறையானே இரவுக்குறியிடையீட்டுவகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) அல்லகுறியும் வருந்தொழிற்கருமையுமென இரண்டு வகையினையுடைத்து இரவுக்குறியிடையீடு. (எ-று.)

'குறியல்ல' வென்பது அல்லகுறியென முன்பின்னுகத் தொக்குநின்றது; 'கடைக்கண்'போல. அதுதான் தலைமகனுல் நிகழ்த்தப்படும் புள்ளெழுப்பல் முதலியன பிறிதொன்ருல் நிகழ்த்தப்படுதலாம். (146)

147. இறைவிக் கிகுளை யிறைவர வுணர்த்துழித்
தான்குறி மருண்டமை தலைவியவட் குணர்த்தலும்
பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பலும்
புலந்தவன் போதலும் புலந்தபின் வறுங்களந்

தலைவிகண் டிரங்கலுந் தன்றுணைக் குரைத்தலுந்
தலைமக ளவலம் பாங்கி தணித்தலு
மிறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றலு
மிறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றலு
மவள்குறி மருண்டமை யவளவற் கியம்பலு
மவன்மொழிக் கொடுமைசென் றவளவட் கியம்பலு
மென்பிழைப் பன்றென் றிறைமக ளுலைதலுந்
தாயு நாயு மூருந் துஞ் சாமையுங்
காவலர் கடுகலு நிலவுவெளிப் படுதலுங்
கூகை குழறலுங் கோழிகுரற் காட்டலு
மாகிய கிளவி யப்பதி னெட்டு
மிரவுக் குறியிடை யீட்டது விரியே.

இஃது, இரவுக்குறி இடையீட்டுவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ - ள்.) இறைவிக்கு இருளை இறைவரவுணர்த்துழித் தான் குறிமருண்டமை தலைவி அவட்குணர்த்தல் முதலாகக் கோழிகுரற் காட்டல் ஈறாகக் கிடந்த கிளவி பதினெட்டும் இரவுக்குறியிடையீட்டின் விரியாம். (எ-று.)

அனுவாதமுகத்தான் எண்ணும் இறைவிக்கு இருளை இறைவரவுணர்த்தல் வரப்பெறும்; அதற்குச் செய்யுள்:—

மின்னங் கலருஞ் சடைமுடி யோன்வியன் றில்லையன்னா
யென்னங் கலமர லெய்தியதோவெழின் முந்தந்தொத்திப்
பொன்னங்கலர்புன்னைச் சேக்கையின்வாய்ப்புலம்புற்றுமுற்று
மன்னம் புலருமளவுந் துயிலா தழுங்கினவே.

எனவரும். —[கோவையார். 172]

தான்குறிமருண்டமை தலைவிபாங்கிக்குணர்த்தற்குச் செய்யுள்:—

அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமா பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன்—கனிவிரும்பு
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா
யுள்ளுடை நெஞ்சினேன் யான். —[ஐந். ஐம். 50]

எனவும், பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பற்குச் செய்யுள்:—

கொடுமுண் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ
விடையு ளிழுதொப்பத் தோன்றிப்—புடையெல்லாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி. [ஐந். ஐம். 49]

எனவும், தலைவன்புலந்துபோதற்குச் செய்யுள்:—

நம்போ லெளியவ ரில்லைநெஞ் சேயிந்த நானிலத்தில்
வம்போட வென்ற வனமுலை மாதர்க்கு மாளிகையின்
றம்போ ருகமென் றறிந்தும்வம் பேயென்னை நீயலைத்து
வெம்போ தகந்திரி கங்குலென் ஞெவிங்கு மேவியதே.
—[அம்பி. 223]

எனவும், புலந்தபின் வறுங்களந்தலைவிகண்டிரங்கற்குச் செய்யுள்:-

நாம்வந்த வேற்கை நரபால னுவலர் போய்வழுத்துந்
தோம்வந் தடர்வழித் தொண்டையர் கோன்கடல்சூழ்துறையிற்
றேம்வந் தலர் புன்னைகாள் கைதைகாணெய்தற் சேர்ப்பர்கங்குற்
றும்வந் தனர்கொலியான் வந்துபோனபின் சாற்றுமினே.
[கப்: 171]

எனவும், தலைவிபாங்கியொடுரைத்தற்குச் செய்யுள்:—

* வரலிங் கரிய மயங்கிருள் யாமத்து வந்தனர்வேய்
நரலுஞ் சிலம்பர் நவமணி யாழி நறவுண்வண்டு
முரலுந் தளையவிழ் மொய்ம்மலர்க் காந்தளஞ் செம்முகைக்கை
விரலென் றுகொல்செறித் தார்நெறித் தாழ்குழன் மெல்லியலே.
[அம்பி. 225]

எனவரும்.

நெய்தற் படப்பை நிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலிற் கண்டநாட் போலானுற்
செய்தகுறியும் பொய்யா யினவாற் சேயிழை
யையகொ லான்றூர் தொடர்பு. [திணைமொழி. 50. 41.]

இதுவும் அது. தலைமகளவலம் பாங்கிதணித்தற்குச் செய்யுள்:—

பொய்யா தவர்தங் குறியிழை யாரவர் பூண்டவன்பு
மெய்யாத றேறி யழுங்கன்மின் னேபுய வெற்பிரண்டான்
மையாழி வைய நிலையிட்ட வாணன்றென் மாறைவெற்பின்
உய்யான மென்கழு நீர்நறு மாலை யுடைத்தல்லவே.
[தஞ்சை 196]

எனவும், இறைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றற்குச் செய்யுள்:—

காமங் கடவ வுள்ள முளைய
யாம்வந்து காணும் பருவ மாயி
னோங்கித் தோன்று முயர்வரைக்
கியாங்கெனப் படுநம தாரே நெய்யோ. [ஐங். 237]

எனவும்வரும். இஃதைங்குறுநூறு. இறைவிமேலிறைவன் குறிபிழைப்பேற்றற்குச் செய்யுள்:—

மழைவர வறியா மஞ்ஞை யானு
மடுக்க னல்லூ ரசைநடைக் கொடிச்சி
தானெம் மறந்தன ளாயினு
மியாந்தன் னுள்ளுபு மறந்தறி யேமே. [ஐங். 298]

எனவும் வரும். இஃதைங்குறு நூறு. அவள் குறிமருண்டமை யவளவற்கியம்பற்குச் செய்யுள்:—

கடுங்கா லெறியக் கயத்துகு மாவின் கனியையெல்லா
மொடுங்கா வரவல்கு லுன்குறி யாக வுளமகிழ்ந்து
நடுங்கா விருள்வந்து நாண்மலர்ச் சோலையி னண்ணியபின்
னடுங்காய் களிற்றண்ண லேயெண்ணு மாறொ ரளவில்லையே.
[அம்பி. 229]

எனவும்,அவன்மொழிக்கொடுமைசென்றுஅவளவட்கியம்பற்குச்செய்யுள்;

வருமந்த வெல்லையின் வல்லையின் றேவந்து வைகிருண்மாந்
துருமந் தருங்கனி யெல்லாந் தொலைத்துத் துணைபிரியா
வருமந்த வன்னங்கள் சேக்கைகொள் ளாம லமுங்குவித்துத்
தெருமந்து நின்றுவிட் டேனென்ப ராலன்பர் சேயிழையே.
[அம்பி. 230]

எனவும், என்பிழைப்பன்றென்றிறைமகளோதற்குச் செய்யுள்:—

கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே. [குறு. 138]

எனவும் வரும்.

*"உரைபெறவகுத்த" என்றமிகையானே தலைவி விருந்தென வந்த பெருந்தகை நிலைமை கூறலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

கனையிருள் வந்து குறிபிழைத் தார்சிறு காலையினம்
மனையிடை வந்து விருந்தின னென்ன விருந்தென்றன்னை
புனையிழை நீசென்று போற்றுகென் றாளன்னை போற்றுதற்குன்
னினைவறி யாதுசென்றே னகன்றாரவர் நீடுயிர்த்தே.
—[அம்பி. 234]

எனவரும்.

தாய்துஞ்சாமைக்குச் செய்யுள்:—

மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீயரோ வன்னை
நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே —[குறுந். 292]

எனவும், நாய்துஞ்சாமைக்குச் செய்யுள்:—

தண்ணென் புனல்வைகை சூழ்தஞ்சை வாணன் றரியலர்போற்
பெண்ணென் பிறவியும் பேறுடைத் தன்றிப் பெரும்பதிநங்
கண்ணென் பவர்வரக் கங்குலின் ஞாளிக் கணங்குரைத்துத்
துண்ணென் கடுங்குரல் வாயன்னை துஞ்சினுந் துஞ்சிலவே.
—[தஞ்சை. 203]

எனவும், ஊர்துஞ்சாமைக்குச் செய்யுள்:—

ஓங்கண்ணல் வெம்பகை நீந்திவந் தோரை யுடன்றுதும்பைத்
தேங்கண்ணி சூடிச் செருவென்ற வாணன்றென் மாறைமின்னே
தாங்கண் ணனையர் தமைப்பிரிந் தோரந் தனிமைகண்டோ
நாங்கண் ணுறங்கினு மோவுறங் கார்கண் ணகரவரே.[தஞ்சை.204]

எனவும், காவலர்கடுகற்குச் செய்யுள்:—

புயற்கண் ணியதலைப் பூகமென் பாளைப் புதுமதுநீர்
வயற்கண் ணிறைதஞ்சை வாணன்றென் மாறையில் வஞ்சியன்னாள்
கயற்கண் ணிணையஞ்சி நீர்மல்கக் காவலர் கைப்பறையின்
செயற்கண் ணிணையல்லவோபடு கின்றன திண்கடிப்பே.[தஞ்.205]

எனவும், நிலவுவெளிப்படுதற்குச் செய்யுள்:—

கருங்கால் வேங்கை வீயுறு துறுக
லிரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே. —[குறுந். 47]

எனவும், கூகைகுழறற்குச் செய்யுள்.—

நம்பே றுடைமை யிருக்கின்ற வாகடன் ஞாலத்துள்ளோர்
தம்பே றெனவந்த சந்திரவாணன் றரியலர்போல்
வம்பேறு கொங்கை மயிலிய ளுமஞ்ச மன்றமராங்
கொம்பேறி நள்ளிருள் வாய்க்குழ றுகின்ற கூகைகளே.
—[தஞ்சை. 207]

எனவும், கோழிகுரல்காட்டற்குச் செய்யுள்:—

மன்பதை தாழுய்ய வந்தருள் வாணன்றென் மாறைவெற்பா
கொன்பதி வேல்வலங் கொண்டுவந் தாற்றங்கள் கோனடைந்தா
னென்பது தேறி யிடையிரு ளூரை யெழுப்பும்வெம்முட்
பொன்பதி தாள்வளை வாய்ச்செய்ய சூட்டுவன் புள்ளினமே.
—[தஞ்சை. 208]

எனவும் வரும். இவற்றுள் இறைவிக்கிகுளையிறைவரவுணர்த்துழித் தான் குறிமருண்டமை றலைவியவட்குணர்த்தல் முதலாக என்பிழைப்பன்றென் றிறைவிநோதல் ஈறாகக் கிடந்த பதினொன்றும் அல்லகுறிக்கும்; தாய் துஞ்சாமை முதலாகக் கோழிகுரல்காட்டல் ஈறாகக் கிடந்த எழும் வருந் தொழிற்கருமைக்கும் உரியவெனக்கொள்க. (147)

148. அச்ச முவர்த்த லாற்று மையேன
மேச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே.

இது நிறுத்தமுறையானே வரைதல்வேட்கை வகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) அச்சமும் உவர்த்தலும் ஆற்றுமையுமென மூன்றுவகை யினையுடைத்தாம் வியக்கத்தக்க வரைதல்வேட்கை. (எ-று.) (148)

149. பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி
யருமறை சேவிலி யறிந்தமை கூறலுந்
தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலுந்
தலைமக னூர்க்குச் செலவொருப் படுதலும்
பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி
யிறையோன் றன்னைநேர்ந் தியற்பட மொழிதலுங்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலுந்
தன்றுயர் தலைவற் குரைத்தல் வேண்டலுந்
துன்புறு பாங்கி சொல்லெனச் சொல்லலு
மலர்பார்த் துற்ற வச்சக் கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியுங்
காம மிக்க கழிபடர் கிளவியுந்
தன்னுட் கையா றெய்திடு கிளவியு
நெறிவிலக்கு வித்தலுங் குறிவிலக்கு வித்தலும்
வெறிவிலக்கு வித்தலும் பிறவிலக்கு வித்தலுங்
குரவரை வரைவெதிர் கொள்ளுவித் தலுமேன
வுரைபெற வகுத்த வொன்பதிற் றிரட்டியும்
வரைதல் வேட்கை விரியெனப் படுமே.

இது வரைதல்வேட்கைவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) பருவரல்வினவிய பாங்கிக்கு இறைவி அருமறைசெவிலி யறிந்தமைகூறல் முதலாகக் குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் ஈறாகச் சொற்பெற வகுத்த பதினெட்டுக்கிளவியும் வரைதல் வேட்கைவிரியாம். (எ-று)

அனுவாதமுகத்தாற் பாங்கி தலைவியைப் பருவரல்வினவுதலும் வரப்பெறும். அதற்குச்செய்யுள்:—

மீனறி யாத விரிகடல் போலும் விழிபசந்து
தூநெறி யார்குழற் போதுந் துறந்தனை துங்கமலி
வானறி யாத மதிமுகத் தாயிற்றை வைகனின்ற
யானறி யாத வருத்தமென் னோவுனக் கெய்தியதே.—

எனவரும். [அம்பி. 237]

பருவரல்வினவியபாங்கிக்கிறைவி அருமறைசெவிலி யறிந்தமை கூறற்குச் செய்யுள்:—

துறைவன் றுறந்தெனத் துறையிருந் தழுதவென்
மம்மர் வாண்முக நோக்கி யன்னைநின்
னவல முரையென் றனளே கடலென்
பஞ்சாய்ப் பாவை கொண்டு
வண்டலஞ் சிறுமனை சிதைத்ததென் றேனே.

—[பொருள். பக். 456]

எனவும், தலைமகன்வருந் தொழிற்கருமைசாற்றற்குச் செய்யுள்:—

இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகு
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
பிணிகோ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவ
ரிலங்குவே லிளையர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகுளு
மரவவாய் ஞமலி குரையாது மடியிற்
பகலுரு வுறழ நிலவுக்கான் றுவிசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருள் மடியி
னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்

மனைச்செறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலை யொருநா
ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரே, அதனால்
* அரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே. —[அகம். 122]

எனவும், தலைமகனூர்க்குச்செலவொருப்படுதற்குச் செய்யுள்:—

அருங்கடி யன்னை காவ னீவிப்
பெருங்கடை யிறந்து மன்றம் போகிப்
பகலே பலருங் காண வாய்விட்
டகல்வயிற் படப்பை யவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி பன்னாட்
கருவி வானம் பெய்யா தாயினு
மருவி யார்க்கு மயங்கிகழ் சிலம்பின்
வான்றோய் மாமலைக் கிழவனைச்
சான்றோ யல்லை யென்றனம் வரற்கே. —[நற். 365]

எனவும், பாங்கியிறைவனைப்பழித்தற்குச் செய்யுள்:—

சுறவார்நறுங்குழைத் தூநகையாய்நந் துணைவருட
னிறவார்குருகினந் தங்குபைங் கானலி லின்னளிசூழ்
நறவார்மலர்ப்புன்னை நன்னிழல் வாய்முன் னயந்தசெல்வி
மறவா நமைமறந் தாரவர் போலில்லை வன்னெஞ்சரே.
—[அம்பி. 243]

எனவும், தலைமகளியற்படமொழிதற்குச் செய்யுள்:—

யாமைதன் பார்ப்பை யிகந்துயிர் காக்கு மிருந்துறைவன்
றீமைநம் பாற்செயல் சிந்திக்கு மோசெவ்வி போ யொழிந்த
மாமையும் பார்த்தவன் வாய்மையும் பார்த்து வருந்தன் மன்றற்
பூமணம் பார்த்தளி புல்லுமல் லார்குழற் பூங்கொடியே.
—[அம்பி. 244]

எனவும், கனவுநலிபுரைத்தற்குச் செய்யுள்:—

கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கன மருட்ட வேற்றெழுந்

தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே. —[குறு. 30]

எனவும், கவினழிபுரைத்தற்குச் செய்யுள்:—

மின்னே யவர்தந்த வேட்கையை மீட்கும் விரகறிய
முன்னே தவங்கண் முயன்றில மேமுன்செய் தீவினையா
லென்னே யருங்கவி னெல்லா மெனக்கு மவர்க்கு மின்றிக்
கொன்னே பசலை திருந்தவிவ் வாறு குறைக்கின்றதே.
—[அம்பி. 245]

எனவும், தன்றுயர்தலைவற்குரைத்தல்வேண்டற்குச் செய்யுள்:—

இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே. —[குறு. 98]

எனவும், பாங்கி நின்குறைநீயே சென்றுரையென்றற்குச் செய்யுள்:—

தேமாம் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்துவிண் ணோர்வணங்க
நாமா தரிக்க நடம்பயில் வோனைநண் ணாதவரின்
வாமாண் கலைசெல்ல நின்றார் கிடந்தநம் மல்லல்கண்டாற்
றுமா வறிகில ராயினென் னாஞ்சொல்லுந் தன்மைகளே.
—[கோவையார். 263]

எனவும், தலைமகள் அலர்பார்த்துற்ற வச்சக்கிளவிக்குச் செய்யுள்:—

அலரா யிரந்தந்து வந்தித்து மாலா யிரங்கரத்தால்
அலரார் கழல்வழி பாடுசெய் தாற்கள வில்லொளிகள்
அலரா விருக்கும் படைகொடுத் தோன்றில்லை யானருள்போன்
றலராய் விளைகின்ற தம்பல்கை மிக்கைய மெய்யருளே.
—[கோவையார். 180]

எனவும், தலைமகளாறுபார்த்துற்ற வச்சக்கிளவிக்குச் செய்யுள்:—

தாருறு கொன்றையன் றில்லைச் சடைமுடி யோன்கயிலை
நீருறு கான்யா றளவில நீந்திவந் தானினது
போருறு வேல்வயப் பொங்குரு மஞ்சுக மஞ்சிவருஞ்
சூருறு சோலையின் வாய்வரற் பாற்றன்று தூங்கிருளே.
—[கோவையார். 176]

எனவும், காமமிக்க கழிபடர்கிளவிக்குச் செய்யுள்:—

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லி தில்லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காளெழிற் புள்ளினங்கா
ளேதுற்ற றிதியென் னீர்மன்னு மீர்ந்துறை வர்க்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீரிது வோநன்மை செப்புமினே.

—[கோவையார். 174]

எனவும், தலைவி தீண்ணுட்கையாறெய்திடு கிளவிக்குச் செய்யுள்:—

விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கு
மண்டல மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே.

—[கோவையார். 177]

எனவும், தலைமகனெறிவிலக்குவித்தற்குச் செய்யுள்:—

ஒருநாள் வரினு முறுபழி தூற்று முயர்சிலம்பில்
வருநாள் பலவுண்டு மாமலை நாடர் வரநினையும்
பெருநா ளொழிய வினிவரி லேதம் பிறக்குமென்று
குருநாண் மலர்க்குழ லாய்மொழி நீசென்று கொற்றவர்க்கே.

—[அம்பி. 252]

எனவும், குறிவிலக்குவித்தற்குச் செய்யுள்:—

வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடீஇயர்
செல்கென் றோளே யன்னை யெனநீ
சொல்லி னெவனோ தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை யிரும்புலிக் கொலைவல் லேற்றைப்
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிரு ணடுநாள் வருதி
சார னாட வாரலோ வெனினே. —[குறு. 141]

எனவும், வெறி விலக்குவித்தற்குச் செய்யுள்:—

மின்னு திடித்தென வன்னைகொண் டாள்வெறி விந்தைமங்கை
மன்னுண்மை மன்னிய வாணன்றென் மாறைவரையில் வண்டியா
ழென்னு வசுண மிறைகொள்ளு நாட னெனக்கருளான்
முன்னுளருளியநோய் தணிப்பானின்று மொய்குழலே.

—[தஞ்சை 225]

எனவும், பிற விலக்குவித்தற்குச் செய்யுள்:—

வருவன செல்வன தூதுக ளேதில வான்புலியூ
ரொருவன தன்பரி னின்பக் கலவிக ளுள்ளுருகத்
தருவன செய்தென தாவிகொண் டேகியென் னெஞ்சிற்றம்மை
யிருவின காதல ரேதுசெய் வானின் றிருக்கின்றதே.

—[கோவையார். 281]

எனவும், குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தற்குச் சய்யுள்:—

போற்றுந் தினைவிளை யும்புனற் சாரற் புகர்முகத்துச்
சீற்றஞ் சிறந்த களிற்றுரு வாய்நம்மைத் தேடிவந்த
கூற்றங் கடிந்தநங் கோமான் வரைவெதிர் கொள்ளும்வண்ணஞ்
சாற்றுந் திறமென்கொ லோதைய லாய்நந் தமர்களுக்கே.

—[அம்பி. 258]

எனவும் வரும். இவற்றுட் பருவரல்வினவியபாங்கிக்கிறைவி அருமறை செவிலி யறிந்தமைகூறலும், அலர்பார்த்துற்றவச்சக்கிளவியும், ஆறுபார்த்துற்றவச்சக்கிளவியும், நெறிவிலக்குவித்தலும், குறிவிலக்குவித்தலும், வெறிவிலக்குவித்தலும், பிறவிலக்குவித்தலுங், குரவரைவரைவெதிர் கொள்ளுவித்தலுமாகிய எட்டும் அச்சத்திற்குந், தலைமகனூர்க்குச் செல வொருப்படுதலும், பாங்கியிறைவனைப்பழித்தலும், பூங்கொடி யிறையோன் றன்னை நொந்தியற்படமொழிதலுங், கவினழிபுரைத்தலும், பாங்கி நின் குறை நீயே சென்றுரை யென்றலுமாகிய ஐந்தும் உவர்த்தற்குந், தலைவன் வருந்தொழிற்கருமைசாற்றலுங், கனவுநலிபுரைத்தலுந், தன்றுயர் தலைவற் குரைத்தல் வேண்டலுங், காமமிக்க கழிபடர்கிளவியுந், தன்னுட்கையா றெய்திடுகிளவியுமாகிய ஐந்தும் ஆற்றாமைக்கும் உரியவாம். (149)

150. பொய்த்தன் மறுத்தல் கழறன் மெய்த்தலென்
றோருநால் வகைத்தே வரைவு கடாதல்.

இது சிறுத்தமுறையானே வரைவுகடாதல் கூறுவனவற்றுள் இஃது அதன்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) பொய்த்தல் முதலாக மெய்த்தல் ஈருக நான்குவகையினை யுடைத்து வரைவுகடாதல். (எ-று.) (150)

151. வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலு
மலரறி வுறுத்தலுந் தாயறி வுறுத்தலும்
வெறியச் சுறுத்தலும் பிறர்வரை வுணர்த்தலும்
வரைவெதிர் வுணர்த்தலும் வரையுநா ளுணர்த்தலு
மறிவறி வுறுத்தலுங் குறிபெயர்த் திடுதலும்

பகல்வரு வானை யிரவுவரு கென்றலு
மிரவுவரு வானைப் பகல்வரு கென்றலும்
பகலினு மிரவினும் பயின்றுவரு கென்றலும்
பகலினு மிரவினு மகலிவ ணென்றலு
முரவோ ருடு முருங் குலனு
மரபும் புகழும் வாய்மையுங் கூறலு
மாறுபாஅத் துற்ற வச்சங் கூறலு
மாற்றுத் தன்மை யாற்றக் கூறலுங்
காவன்மிக வுரைத்தலுங் காமமிக வுரைத்தலுங்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலு
மேனமுறை நாடி யியம்பிய விருபதும்
வரைவு கடாதல் விரியெனப் படுமே.

இது வரைவுகடாதலின் விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *வினவியசெவிலிக்கு மறைத்தமை விளம்பல் முதலாகக் கவினழிபுரைத்தல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபதும் வரைவுகடாதல் விரியெனப்படும்.* (எ-று.)

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பற்குச் செய்யுள்:—

சுளையார் பொழிற்றுவ ரைத்தொண்டை மான்கப்பல் சூழ்துறைவா
யிளையாள் வருந்துவ தென்னையென் றுளன்னை யாமிருந்து
விளையா டுசிற்றிலை வெண்டலைத் தெண்டிரை வேலையெற்றும்
வளையா லழித்ததென் றுளென்செய் வாள்பின்னை வாணுதலே.

—[கப்பல். 196]

எனவும், அலரறிவுறுத்தற்குச் செய்யுள்:—

சுற்றுஞ் சடைக்கற்றைச் சிற்றம் பலவற் றொழாதுதொல்சீர்
கற்று மறியல ரிற்சிலம் பாவிடை நைவதுகண்
டெற்றுந் திரையின் னமிர்தை யினித்தம ரிற்செறிப்பார்
மற்றுஞ் சிலபல சீறூர் பகர்பெரு வார்த்தைகளே.

—[கோவையார். 134]

எனவும், தாயறிவுறுத்தற்குச் செய்யுள்:—

பனித்துண்டஞ் சூடும் படர்சடை யம்பல வன்னுலகந்
தனித்துண் டவன்றொழுந் தாளோன் கயிலைப் பயில்சிலம்பா
கனித்தொண்டை வாய்ச்சி கதிர்முலைப் பாரிப்புக் கண்டழிவுற்
றினிக்கண் டிலம்பற்றுச் சிற்றிடைக் கென்றஞ்சு மெம்மனையே

—[கோவையார். 132]

எனவும், வெறியச்சுறுத்தற்குச் செய்யுள் :—

மையுற்ற நீலக்கண் மாமங்கை கோன்றஞ்சை வாணன்வெற்பி
னெய்யுற்ற வேலன்ப நீதணி யாமையி னெஞ்சினுள்ளே
யையுற் றயர்வுற்றெம் மன்னையு மாயுமென் ஞரணங்கின்
மெய்யுற்ற நோய்தணிப் பான்வெறி யாடல் விரும்பினரே.

—[தஞ்சை. 231]

எனவும், பிறர்வரைவுணர்த்தற்குச் செய்யுள் :—

மணியக் கணியு மரனஞ்ச மஞ்சி மறுகிவிண்ணோர்
பணியக் கருணை தரும்பரன் றில்லையன் னுடிறத்துத்
துணியக் கருதுவ தின்றே துணிதுறை வாநிறைபொன்
னணியக் கருதுகின் றூர்பலர் மேன்மே லயலவரே.

—[கோவையார். 195]

எனவும், வரைவெதிருணர்த்தற்குச் செய்யுள் :—

வழியு மதுவன்னை யென்னின் மகிழும்வந் தெந்தையுநின்
மொழியின் வழிநிற்குஞ் சுற்றமுன் னேவய மம்பலத்துக்
குழியும்ப ரேத்துமெங் கூத்தன்குற் றாலமுற் றும்மறியக்
கெழியும்ம வேபணைத் தோள்பல வென்னோ கிளக்கின்றதே.

—[கோவையார். 135]

எனவும் வரும்.

கெழீஇய கெழியென விகாரமாய் நின்றது. உம்ம உம்மனவென உளப்பாட்டுப் பன்மையாய் நின்றது.

வரையுநாளுணர்த்தற்குச் செய்யுள் :—

மையார் கதலி வனத்து வருக்கைப் பழம்விழுதே
னெய்யாத யின்றிள மந்திகள் சோரு மிருஞ்சிலம்பா
மெய்யா வரியதெ னம்பலத் தான்மதி யூர்கொள்வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கைபொன் மாலையின் முன்னினவே.

—[கோவையார். 262]

எனவும், தலைமகளறிவு தலைமகற்கறிவுறுத்தற்குச் செய்யுள் :—

தன்னையுந் தோழியுந் தோளினில் லாவரிச் சங்கையுங்கண்
டென்னையிங் கோது முறுபழி நாணி யுளங்கிடந்த
வன்னையுஞ் சேரியு மாயத்துள் ளாரு மயனுமன்றி
யென்னையுங் கூடவெற் பாமறைத் தாளென் னிளங்கொடியே.

—[அம்பி. 266]

எனவும் வரும். குறிபெயர்த்திடுதற்குச் செய்யுள் :—

வாமா னுகளு மணிவரைச் சாரலில் யாம்வளர்த்த
பூமா தவியிது பூஞ்சிலம் பாபுல்ல நீநினையிற்
றேமாலை மென்குழ லார்செறி யாவருஞ் சேணெறிக்க
ணீமாறி வேறொரு நீழலுண்டாக நினைந்தருளே.

—[அம்பி. 267]

என வரும். இஃதிருவகைக்குறிக்கும் ஏற்குமாறு உணர்க. பகல்வருவானை இரவுவருகென்றற்குச் செய்யுள் :—

களிறுற்ற செல்லல் களைவயிற் பெண்மரங் கைஞ்ஞெரித்துப்
பிளிறுற்ற வானப் பெருவரை நாட பெடைநடையோ
டொளிறுற்ற மேனியன் சிற்றம்பலநெஞ் சுறுதவர்போல்
வெளிறுற்ற வான்பழி யாம்பக னீசெய்யு மெய்யருளே.

—[கோவையார் 254]

எனவும், இரவுவருவானைப் பகல்வருகென்றற்குச் செய்யுள்:—

கடந்தொறும் வாரணை வல்சியி னுடிப்பல் சீயங்கங்கு
லிடந்தொறும் பார்க்கு மியவொரு நீயெழில் வேலின்வந்தாற்
படந்தொறுந் தீயர வன்னம்பலம்பணி யாரினெம்மைத்
தொடர்ந்தொறுந் துன்மென்ப தேயன்ப நின்னரு டோன்றுவதே.

[கோவையார். 253]

எனவும், பகலினுமிரவினும் பயின்றுவருகென்றற்குச் செய்யுள்:—

கங்குற் கலைநிறை திங்களுங் காலைக் கமலமுநின்
றுங்கப் புயத்தை வெறுப்பவந் தாலென் சொரிமதத்து
வெங்கைக் களிற்றின் மருப்பைப் பறித்ததன் வேரருந்துஞ்
சிங்கத் தடவரு விச்சிலம் பாவின்று சேரினன்றே.

—[அம்பி. 271]

எனவும், பகலினுமிரவினு மகலிவணென்றற்குச் செய்யுள்:—

சுழியா வருபெரு நீர்சென்னி வைத்தென்னைத் தன்றொழும்பிற்
கழியா வருள்வைத்த சிற்றம் பலவன் கரந்தருமான்
விழியா வரும்புரி மென்குழ லாடிறத் தையமெய்யே
பழியாம் பகல்வரி னீயிர வேதும் பயனில்லையே.

—[கோவையார். 261]

எனவும், உரவோனூரும் ஊருங் குலனும் மரபும் புகழும் வாய்மையுங்கூறற்குச் செய்யுள்:—

குறைவிற்குங் கல்விக்குஞ் செல்விற்கு நின்குலத் திற்கும்வந்தோர்
நிறைவிற்கு மேதகு நீதிக்கு மேற்பினல் லாணிணையி
னிறைவிற் குலாவரை யேந்திவண் டில்லைய னேழ்பொழிலு
முறைவிற் குலாநுத லாள்விலை யோமெய்ம்மை யோதுநர்க்கே.
—[கோவையார். 266]

எனவும், ஆறுபார்த்துற்றவச்சங்கூறற்குச் செய்யுள்:—
பற்றொன்றி லார்பற்றுந் தில்லைப் பரன்பரங் குன்றினின்ற
புற்றொன் றரவன் புதல்வ னெனநீ புகுந்துநின்றான்
மற்றுன் றமமல ரிட்டென்னை வாழ்த்திவந் தித்தலன்றி
மற்றொன்று சிந்திப்ப ரேல்வல்ல ளோமங்கை வாழ்வகையே.
—[கோவையார் 178]

எனவும், ஆற்றாத்தன்மையாற்றக் கூறற்குச் செய்யுள்:—
எழுங்குலை வாழையி னின்கனி தின்றிள மந்தியந்தண்
செழுங்குலை வாழை நிழலிற் றுயில்சிலம் பாமுணமே
தொழுங்கொலை வேற்றிருச் சிற்றம்பலவரை யுன்னலர்போ
லழுங்குலை வேலன்ன கண்ணிக்கென் னோநின் னருள்வகையே.
—[கோவையார் 250]

எனவும், காவன்மிகவுரைத்தற்குச் செய்யுள்:—
நறைக்கண் மலிகொன்றை யோனின்று நாடக மாடுதில்லைச்
சிறைக்கண் மலிபுனற் சீர்நகர் காக்குஞ்செவ் வேலிளைஞர்
பறைக்கண் படும்படுந் தோறும்படாமுலைப் பைந்தொடியாள்
கறைக்கண் மலிகதிர் வேற்கண் படாது கலங்கினவே.
—[கோவையார். 258]

எனவும், காமமிகவுரைத்தற்குச் செய்யுள்:—
வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. —[குறு. 18]

எனவும், கனவுநலிபுரைத்தற்குச் செய்யுள்:—
அரவுங் களிறு மணங்கு முலாவு மருநெறிநீ
வரவுங் குறியிடை வந்தெதிர் புல்லவும் வல்லிநலம்
பரவும் பணிமொழி யுள்ளம் படுக்கவும் பாயலிடை
விரவுங் கனவை நனவென்று பாவம் விழித்தனளே.
—[அம்பி. 276]

எனவும், கவினழிபுரைத்தற்குச் செய்யுள்:—

வருமந்த மாருதம் வண்டமிழ் நாறு மலையவெற்பா
தெருமந்த நெஞ்சிற் றிருவனை யாடிரு மார்பகலம்
பொருமந்த மென்முலை புல்லப்பெ றாதுபொன் போர்க்கவென்போ
லருமந்த வண்ணமெலா மவமேயின் றழிகின்றதே.

எனவும் வரும். —[அம்பி. 277]

இவற்றுள், வினவியசெவிலிக்கு மறைத்தமைவிளம்பல் முதலாகப் பிறர்வரைவுணர்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்தும் பொய்த்தற்கும், குறிபெயர்த்திடுதல் முதலாகப் பகலினுமிரவினு மகலிவணென்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்தும் மறுத்தற்கும், உரவோன் நாடும் ஊருங் குலனும் மரபும் புகழும் வாய்மையுங் கூறலாகிய ஒன்றுங் கழறற்கும், வரைவெதிருணர்த்தலும் வரையுநாளுணர்த்தலும் அறிவறிவுறுத்தலும் ஆறு பார்த்துற்றவச்சங்கூறல் முதலாகிய ஒன்பதும் எய்த்தற்கும் உரியவாம். (151)

152. சேலவறி வுறுத்தல் சேலவுடன் பாடாமை
சேலவுடன் படுத்தல் சேலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்க றேற்றி யாற்றுவித்தல்
வந்துழி நொந்துரை யென்றேழு வகைத்தே
யொன்றக் கூறிய வொருவழித் தணத்தல்.

இது நிறுத்தமுறையானே ஒருவழித்தணத்தல் கூறுவனவற்றுள் இஃது அதன்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) செலவறிவுறுத்தல் முதலாக வந்துழிநொந்துரை ஈறாக எழுவகையினையுடைத்து மேற்சொல்லிப்போந்த ஒருவழித் தணத்தல். (எ-று.)

* ஒருவழித்தணத்தல் நெட்டாறு சேறலன்றி, அணிமைக்கட் பிரி வென்று கோடும்; என்னை ?

"தாளாணெதிரும் பிரிவினானும்"

என்பவாகலின்.

153. தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றலு
மென்சோற் பாங்கி விலக்கலுந் தலைவ
னீங்கல் வேண்டலும் பாங்கி விடுத்தலுந்
தலைவிக் கவன்செல வுணர்த்தலுந் தலைவி
நெஞ்சோடு புலத்தலுஞ், சென்றே னீடலிற்
காம மிக்க கழிபடர் கிளவியுங்
கோற்றேடிப் பாங்கி யாற்றுவித் தலுமவன்

வந்தமை யுணர்த்தலும் வந்தோன் றன்னொடு
நொந்து வினாதலும் வெந்திறல் வேலோன்
பாங்கியோடு நொந்து வினாதலும் பாங்கி
யிறைவியை யாற்றுவித் திருந்த வருமை
கூறலு மென்னு மாறிரு கிளவியு
மொருவழித் தணத்தல் விரியெனப் படுமே.

இஃது ஒருவழித்தணத்தலின்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றல் முதலாகப் பாங்கி இறைவியையாற்றுவித்திருந்த அருமைகூறல் ஈறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு கிளவியும் ஒருவழித்தணத்தலின் விரியென்று சொல்லுவர் புலவர். (எ-று.)*

தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றற்குச் செய்யுள்:—

ஒடிக்குங் கரும்பி னுடுக்குலந் தோன்றுமெம் மூர்வயிற்போய்
முடிக்குங் குறையுண்டு நீயிசைந் தான்முழு முத்தணியுங்
கொடிக்குங் குமமுலை வல்லிக்கு நீயிது கூறுசென்று
வடிக்கின்ற வேல்விழி யாய்வரு கேனிற்றை வைகல்சென்றே.

—[அம்பி. 279]

எனவும், மென்சொற்பாங்கிவிலக்கற்குச் செய்யுள்:—

அறையுங் கடலன்ன வன்பினெம் மாவியி னும்மரிய
குறையிங் குமக்கு முடிப்பதுண் டேற்கொண்ட காதலுட
னுறையும் பதிக்க ணொருப்பட்ட போதுநின் னுள்ளஞ்செல்ல
விறையுந் தவிர்க்ககில் லேமெம்பி ரானின் றெழுந்தருளே.

—[அம்பி. 280]

எனவும், தலைவனீங்கல்வேண்டற்குச் செய்யுள்:—

உள்ளந் தடுப்ப வினையே யெனையிங் குறைபதிக்குத்
தள்ளும் பரிசு தலைக்கொண் டதுதணந் தாலும்வந்து
வெள்ளஞ் சுரும்பு விரும்புபைங் கோதை விளங்கிழையாய்
நள்ளென் பகல்வரு வேனெனுங் காவுண் ணடுங்கலையே.

—[அம்பி. 281]

எனவும், தலைவனைப்பாங்கிவிடுத்தற்குச் செய்யுள்:—

உமையா டலைவனை யொன்றிய வாறிவ ளுன்னையன்றி
யமையா நிலைமை யறிந்தனை யேலைய லேபுயலின்
சுமையார் தடம்பொழில் சூடும்வெற் பாநின் றுணிவையெய்தி
யெமையாள வெண்ணினை யேலின்று நாளை யெழுந்தருளே.

எனவும் வரும். —[அம்பி. 282]

* இருகாலு மில்லை வலவனுகேனு மெழுபரித்தேர்க்
கொருகா லொழிய வொருகாலு மிங்கில்லை யொண்சிலம்பா
குருகாலும் வாரிதி யேழுமெண் குன்றமுஞ் சூழ்ந்திரவி
வருகால மென்றுகொ லன்றுகொ னீயும் வருவதுவே.
—[அம்பி. 283]

என இரவுநிலையுணர்த்தலும் இதன்பாற்படும். பாங்கிதலைவிக்கவன் செலவுணர்த்தற்குச் செய்யுள்:—

கருநாண் மலர்க்குழற் காரிகை யாயொரு காரணத்தா
லொருநா ணமைவிட் டுறையவும் வேண்டின ரொன்றியநின்
பெருநாண் மடமை பிணிக்கப் பிணிப்புண்ட பேரறிவின்
மருநாண் மலர்த்தொங்கன் மன்னரென் னேதம் வசமொழிந்தே.
—[அம்பி. 284]

எனவும், தலைவிநெஞ்சொடு புலத்தற்குச்செய்யுள்:—

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு. —[குறள் அதி. 116]

எனவும்வரும்.

ஒருநாட் பிரிய நினைத்தவர் நம்மை யொழிந்தவெல்லை
வருநாண் மறக்கவும் வல்லரன் றேமறப் பார்நினைவார்
செருநாண் மலர்க்கணைத் திண்சிலை வேள்வந்து சிந்துமெல்லை
யருநா ளுடனெங்ங னுவியு நாமுமின் றுற்றுவதே.
—[அம்பி. 285]

இதுவும் அது. சென்றோர்ணீடலிற் காமமிக்ககழிபடர் கிளவிக்குச் செய்யுள்:—

ஆரம் பரந்து திரைபொரு நீர்மூகின் மீன்பரப்பிச்
சீரம் பரத்திற் றிகழ்ந்தொளி தோன்றுந் துறைவர்சென்றார்
போரும் பரிசு புகன்றன ரோபுலி யூர்ப்புனிதன்
சீரம்பர் சுற்றியெற் றிச்சிறந் தார்க்குஞ் செறிகடலே.
—[கோவையார். 182]

எனவரும். போதரும்பரிசு போரும்பரிசென விகாரமாய்நின்றது. தலைவியைப் பாங்கியாற்றுவித்தற்குச் செய்யுள்:—

அருகுங் கலவி யளித்தகன் றாரரு ளின்மையெண்ணி
யுருகுந் தனிநெஞ்சு முண்மகிழ் கூரவந் தொண்மதியைப்
பொருபைங் கதலியும் பூகமுங் கன்னலும் பூவுங்கொண்டு
வருகின்ற தாலவ ரூர்மலி நீருந்தி வாணுதலே.—[அம்பி. 286]

எனவரும்.

* பாங்கியாற்றுவித்துழித்,

தேறாத வன்பினர் சென்றுழிச் சென்றவென் சிந்தைகண்டு
மாறாது கூட வரநின்ற தோவிங்கு வந்தென்வண்ணம்
வேறா னதுகண்டு மீண்டது வோவன்றி மாண்டதுவோ
வாறா துமையலுற் றேனறி யேன்வந் தடுத்ததுவே.—[அம்பி. 287]

எனத்தலைவி நெஞ்சுநினைந்திரங்கலும்.

யாயுங் கடலு மலைப்பவிவ் வூரிலிங் கென்னைவைத்துப்
போயங்கு நம்மை மறந்தவர் பாற்சென்று பூண்முலைமேற்
பாயுங் கணீரும் பசலையு மாய்நின்ற பாவிநெஞ்சே
நீயென் சொனுய்பின் னவரென் சொனுநுன் னினைவறிந்தே.

—[அம்பி. 289]

என நெஞ்சொடுகிளத்தலும்,

அவிகொண்ட வெங்கன லம்புகொண் டெய்தன ரன்றியும்புன்
கவிகொண்டு நின்னைக் கடந்தன ரென்றுகொல் கன்றினர்தம்
புவிகொண்டு வண்புகழ் போர்ப்பவர் தேர்வழி தூர்ப்பதுநீ
குவிகொண்ட வுண்டமிழ் தெண்டிரை மோதுங் குரைகடலே.

—[அம்பி. 290]

எனக் கடலொடுபுலம்பலும்,

மறைவந்தென் மேனி மணந்துயிர் வாடத் தணந்தசைநின்
றிறைவன் கொடுமை யியம்புத ஞணி யிரங்கிமெய்யை
நரையுந் தியமலர்த் தூசான் மறைத்திந் நகர்ப்புறம்போ
நிறையுந் திநீயென்செய் வாயிது வாகிலென் னீள்வினையே.

—[அம்பி. 291]

என ஆற்றொடுபுலம்பலும்:—

எங்கா தலர்செல்ல வென்னையிவ் வாறுகண் டேசுமவர்
தங்கா தலரைத் தணந்தறி யார்கொல் மணந்துறையுஞ்
செங்கான லோதிமங் காள்கருங் கானற் சிறையன்றில்கா
ளுங்கா தலர்செல்லி னீருடன்போமிக் குடம்பைவிட்டே.

—[அம்பி. 292]

எனப் புள்ளொடு புலம்பலும்,

நன்றே யினியவர் நண்பு நமக்கு மவர்க்குமுயி
ரொன்றே நினையி னுரையுமொன் றேயுயர் வெண்மணற்றிண்
குன்றே குலவன்ன மேகுரு கேநங் கொடிநெடுந்தே
ரன்றே வருவலென் முரிருந் தேன்மெய் வருந்தியுமே.

—[அம்பி. 294]

எனக்கையறு கிளவியும்,

முளைக்கும் பிறையை முனியுந் திருநுதன் முத்தரும்ப
விளைக்கும் பசலை விழியிணை காட்ட விடாதவண்டர்
கிளைக்குந் தெரிவருங் கேதகை நீழலின் கீழிருந்து
வளைக்குஞ் சுழிக்கு மழிக்குமொண் கூடல் வளைக்கைகொண்டே.
—[அம்பி. 295]

எனக் கூடலிழைத்தலும்,

புறந்தாழ் விரிசினைப் புன்னையங் கானன்மென் பூந்துறைவர்
சிறந்தாழ் கருங்கடற் றெய்வமுந் தீதுகொல் சிந்தைமென்னுண்
டுறந்தாவி சோர்வதென் னென்றற் றைநாளுற்ற சூள்முழுது
மறந்தா ரிருக்க மறவாத வெம்மை வருத்தியதே.
—[அம்பி. 297]

எனச் சூளுறவுபொய்யென்றலும்,

விடவா யரவை மிதித்து மதித்த விலங்கன்றியே
நடவா விரவி னடந்தநங் காதலர் நம்மையினிக்
கடவா ரெனநினைந் தேனிங்ங னானதென் கண்ணுமெய்யு
மடவா ரறிவதுண் டோவுர வோர்செயும் வண்கண்மையே.
—[அம்பி. 298]

என மடமைகூறியதும்,

மாயக் கலவி மணந்தகன் றார்திரு மார்பகலந்
தோயப் பெறாது சுடுகின்ற மேனி துறந்தவர்தந்
தேயத்து நின்று வருநதிநீரிற் றிளைத்தனமேற்
சாயக் குளிருமின் றேயவர் சாரற் றழைபடுத்தே. —[அம்பி. 299]

எனத் தன்னுள்ளேசொல்லுதலும் உரையிற்கோடலான் வரப்பெறும்.

பாங்கி தலைமகட்குத் தலைமகன் வந்தமையுணர்த்தற்குச் செய்யுள்:—

சந்தார் வனமுலை தங்கும் பசப்புந் தனிமையுநின்
சிந்தா குலமுஞ் சிதையும் படிசிறை வண்டினஞ்சேர்
கொந்தா ரலங்கற் குழலணங் கேதங் குறைமுடித்து
வந்தார் விரைய மணிநெடுந் தேரினம் மன்னவரே. —[அம்பி. 300]

எனவும், வந்தோன்றன்னொடு பாங்கிநொந்து வினாதற்குச் செய்யுள்:—

வளருங் கறியறி யாமந்தி தின்றுமம் மர்க்கிடமாய்த்
தளருந் தடவரைத் தண்சிலம் பாதன தங்கமெங்கும்
விளரும் விழுமெழும் விம்மு மெலியும்வெண் மாமதிநின்
றொளிருஞ் சடைமுடி யோன்புலி யூரன்ன வொண்ணுதலே.
—[கோவையார். 193]

எனவும், தலைவன் பாங்கியொடுநொந்து வினுதற்குச் செய்யுள்:—

ஐவா யரவுற்ற தன்னவின் னுவிட ராற்றியென்போல்
எவ்வா றிருந்தனி ரெல்வளை யீரெதிர்ந் தாரைவென்று
மைவா ரணங்கொண்ட வாணன்றென் மாறை மருவலர்போல்
ஒவ்வா வலரையுங் கொண்டிரு வீரு மொருதனியே.

—[தஞ்சை. 258]

எனவும், பாங்கி தலைவியையாற்றுவித்திருந்தவருமை தலைமகற்குச் சொலற்குச் செய்யுள்:—

இவளா ருயிர்புரந் தியானிருந் தேன்செக்க ரிந்துவென்னப்
பவளா டவியிற் பயினித் திலம்பங் கயங்குவியத்
தவளா தபஞ்சொரி தண்டுறை வாதஞ்சை வாணன்றெவ்விற்
றுவளாம லாற்றுவி யென்றன்று நீசொன்ன சொன்னினைந்தே.

—[தஞ்சை. 259]

எனவும் வரும்.

இவற்றுள், தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றலும் பாங்கிதலைவிக்கவன் செலவுணர்த்தலுமாகிய இரண்டுஞ் செலவுவறிவுறுத்தற்கும், தலைமகளைப் பாங்கி விலக்கலாகிய ஒன்றுஞ் செலவுடன் படாமைக்கும், நீங்கல் வேண்டலாகிய ஒன்றுஞ் செலவுடன் படுத்தற்கும், பாங்கி விடுத்தலாகிய ஒன்றுஞ் செலவுடன்படுதற்குந் தலைமகனெஞ்சொடு புலத்தலுங், காம மிக்க கழிபடர்கிளவியுமாகிய இரண்டுஞ் சென்றுழிக் கலங்கற்கும், தலைமகளைப் பாங்கியாற்றுவித்தலுந், தலைமகன் வந்தமை தலைமகட்குணர்த்தலுமாகிய இரண்டுந் தேற்றியாற்றுவித்தற்கும், பாங்கி வந்தோன்றன்னொடு நொந்துவினுதன்முதலாகிய மூன்றும் வந்துழிநொந்துரைக்கும் உரியவாம். (153)

154. பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றேருமையிற் கூறிய வொன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.

இது நிறுத்தமுறையானே வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் கூறுவனவற்றுள் இஃது அதன்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்). பிரிவறிவுறுத்தல் முதலாக வந்துழிமகிழ்ச்சி ஈறாக ஒன்பதுவகையினையுடைத்தாம் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல். (எ-று). (154)

155. என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றலு
நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றலு
நீடே னென்றவ னீங்கலும் பாங்கி
யோடரிக் கண்ணிக் கவன்செல வுணர்த்தலும்
பூங்குழை யிரங்கலும் பாங்கி கொடுஞ்சொற்
சொல்லலுந் தலைவி கொடுஞ்சொற் சொல்லலும்
வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும்
பருவங் கண்டு பெருமகள் புலம்பலு
மிகுளைவம் பென்றலு மிறைமகண் மறுத்தலு
மவர்தூ தாகிவந் தடைந்ததிப் பொழுதெனத்
துணைவி சாற்றலும் பிணைவிழி யாற்றலு
மவனவட் புலம்பலு மவன்வருங் காலைப்
பாகன் றன்னொடு மேகந் தன்னொடுஞ்
சோகங் கொண்டவன் சொல்லலும் பாங்கி
வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தலும்
வலம்புரி கிழத்தி வாழ்த்தலும் வந்துழி
நினைத்தமை வினாதலு நினைத்தமை செப்பலு
மனத்தகை யவளை யாற்றுவித் திருந்தமை
பாங்கி கூறலுமென வாங்கெழு மூன்றும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின்
விரியென விளம்பினர் தெரிபுணர்ந் தோரே.

இது வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதலின் விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *என் பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல் முதலாகத் தலைமகளை யாற்றுவித்திருந்தவருமை பாங்கிகூறல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தொன்றும், வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிவின் விரியென மொழிந்தனர் ஆய்ந்தறிந்தோர்.* (எ-று.)

என் பொருட்பிரிவுணர்த்தேந்திழைக் கென்றற்குச் செய்யுள்:—

குன்றங் கிடையுங் கடந்துமர் கூறு நிதிகொணர்ந்து
மின்றங் கிடைநும்மை யும்வந்து மேவுவ னம்பலஞ்சேர்
மன்றங் கிடைமரு தேகம்பம் வாஞ்சிய மன்னபொன்னைச்
சென்றங் கிடைகொண்டு வாடா வகைசெப்பு தேமொழியே.

—[கோவையார். 268]

எனவும், பாங்கி நின்பொருட் பிரிவுரை நீயவட்கென்றற்குச் செய்யுள்:—

கேழே வரையுமில் லோன்புலி யூர்ப்பயில் கிள்ளையன்ன
யாழேர் மொழியா ளிரவரி னும்பகற் சேறியென்று
வாழே னெனவிருக் கும்வரிக் கண்ணியை நீவருட்டித்
தாழே னெனவிடைக் கட்சொல்லி யேகு தனிவள்ளலே.
—[கோவையார். 269]

எனவும், நீடேனென்றவணீங்கற்குச் செய்யுள்:—

மதிமுற் றியதன்ன வாண்முகத் தாளை வரையவல்லே
நிதிமுற்றி மீள்குவ னீடநில் லேனெய்த னீலவுண்க
ணுதிமுற் றியகுழை நுண்ணிடை யாயெதிர் கொண்டுநுங்கள்
பதிமுற்றி மங்கலம் பாடிநின் றூடப் பரிசிலரே.-[அம்பி. 305]

எனவும், பாங்கி தலைமகட்குத் தலைவன் செலவுணர்த்தற்குச் செய்யுள்:—

நல்லாய் நமக்குற்ற தென்னென் றுரைக்கே னமர்தொடுத்த
வெல்லா நிதியு முடன்விடுப் பானிமை யோரிறைஞ்சு
மல்லார் கழலழல் வண்ணர்வண் டில்லை தொழார்களல்லாற்
செல்லா வழற்கட மின்றுசென் றார்நஞ் சிறந்தவரே.
—[கோவையார். 271]

எனவும், தலைமகளிரங்கற்குச் செய்யுள்:—

அருந்தும் விடமணி யாமணி கண்டன்மற் றண்டர்க்கெல்லா
மருந்து மமிழ்தமு மாகுமுன் னோன்றில்லை வாழ்த்தும்வள்ள
றிருந்துங் கடனெறி செல்லும்மிவ் வாறு சிதைக்குமென்றால்
வருந்தும் மடநெஞ்ச மேயென்ன யாமினி வாழ்வகையே.
—[கோவையார். 272]

எனவும், பாங்கி கொடுஞ்சொற் சொல்லற்குச் செய்யுள்:—

மதுமலர்ச் சோலையும் வாய்மையு மன்பு மருவிவெங்கான்
கதுமெனப் போக்கு நிதியின ருக்குமுன் னிக்கனுழ்ந்தா
ஞெதுமலர் நோக்கமோர் மூன்றுடை யோன்றில்லை நோக்கலர்போ
லிதுமலர்ப் பாவைக்கென் னோவந்த வாறென்ப ரேந்திழையே.
—[கோவையார். 275]

எனவும், தலைவி கொடுஞ்சொற் சொல்லற்குச் செய்யுள்:—

வந்தாய் பவரையில் லாமயின் முட்டை யிளையமந்தி
பந்தா டிரும்பொழிற் பல்வரை நாடன்பண் போவினிதே
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்றென் றில்லைதொழார் குழுப்போற்
சிந்தா குலமுற்றுப் பற்றின்றி நையுந் திருவினர்க்கே.
—[கோவையார். 276]

எனவும், வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தற்குச் செய்யுள்:—

கானமர் குன்றர் செவியுற வாங்கு கணைதுணையா
மானமர் நோக்கியர் நோக்கென மானற் றொடைமடக்கும்
வானமர் வெற்பர்வண் டில்லையின் மன்னை வணங்கலர்போற்
றேனமர் சொல்லிசெல் லார்செல்லல் செல்ல றிருநுதலே.

—[கோவையார். 274]

எனவும், பருவங்கண்டு பெருமகள் புலம்பற்குச் செய்யுள்:—

தார்கால மன்றலங் கொன்றையங் கானற் றடஞ்சிறைவண்
கூர்கால நாரை யுடன்குருகு காலக் கொழுங்கயற்கண்
ணீர்கால வாடக மென்னிறங் காலப் பிறங்குமழைக்
கார்காலம் வந்தது வாரார்கொ லின்னமுங் காதலரே.

—[அம்பி. 313]

எனவும், இகுளைவம்பென்னற்குச் செய்யுள்:—

கருந்தினை யோம்பக் கடவுட் பராவி நமர்கலிப்பச்
சொரிந்தன கொண்மூச் சுரந்ததன் பேரரு ளாற்றொழும்பிற்
பரிந்தெனை யாண்டசிற் றம்பலத் தான்பரங் குன்றிற்றன்றி
விரிந்தன காந்தள் வெருவரல் காரென வெள்வளையே.

—[கோவையார். 279]

எனவும், இறைமகள் மறுத்தற்குச் செய்யுள்:—

சொல்லிய சொல்வழு வாத்தொண்டைவேந்தன் றவளைவெற்பிற்
புல்லி யருஞ்சுரம் போனவர்வார்த்தையிற் பொய்மையொன்று
மில்லையெ னுங்கொடி யேயது போக விதுவும்பொய்யோ
மல்லிகை முல்லை செருந்தியிற் பார்சொல்லும் வார்த்தைகளே.

—[கப்பற். 243]

எனவும், அவர் தூதாகிவந்தடைந்தது இப்பொழுதெனத் துணைவி சாற்றற்குச் செய்யுள்:—

பருவ மடுத்தது வந்திலர் காதல ரென்றும்பைம்பொன்
னுருவ மடப்பிடி யேயுய ங்கேலுயங் காதவண்ணம்
பொருபகை செற்றபொற் றேர்வெற்றி வேந்தர் பொருண் முடித்து
வருவது னைப்பமுன் னேவந்த தாலிம்மழை முகிலே.

—[அம்பி. 317]

எனவும், தலைமகளாற்றற்குச் செய்யுள்:—

கருங்கால வெண்குரு குங்கண்டல் வாய்விட வஞ்சுங்கொண்டல்
பொருங்கா லழிந்து புலம்புநெஞ் சேதண் புறவமயி
லொருங்கால மேக மிடித்துறை கால வறைகழலார்
வருங்காலம் வந்ததும் போங்கால மில்லைநம் மன்னுயிர்க்கே.
—[அம்பி. 318]

எனவும், அவனவட்புலம்பற்குச் செய்யுள்:—
விழிகுழி யும்படி தேர்வழி பார்த்தனை வீழ்ந்துவண்டு
கொழுதி மிருங்குழல் சோரக் கிடந்துங் குடங்கையின்மே
லொழுகிய வஞ்சன வெள்ளத்துணங்கு மணங்கைமுன்சென்
றெழுகெனு நெஞ்சமென் னேயவரோவெனி லென்சொனுமே.
—[அம்பி. 319]

எனவும், மீண்டுவருகின்ற காலத்துத் தலைமகன் பாகனொடு சொல்லற்குச் செய்யுள்:—
மொய்யா டகமுடித் தேர்வல வாமுன் மொழிந்ததெல்லாம்
பொய்யா னதென்று புலந்துரை யாடப் பொருள் விரும்பி
மையார் குழலியை வாழ்வித்த பாவி மனத்தையின்றன்
கையா கவும்பரிக் காலா கவுமயன் கண்டிலனே. —[அம்பி. 320]

எனவும், தலைமகன் மேகத்தொடு சொல்லற்குச் செய்யுள்:—
கிளைத்துக் கிடந்தெனைக் கேட்குந் தொறுங்கனும் கெண்டையுமுன்
வளைத்துக் கிடந்த வரிமணற் கூடலும் வண்ணமெல்லாம்
விளைத்துக் கிடந்த பசலையு மாயுள்ளம் விம்மிவிம்மி
யிளைத்துக் கிடந்தவர்க் கென்சொல மேகங்கண் முன்செல்வதே.
—[அம்பி. 322]

எனவும், பாங்கிவலம்புரிகேட்டு அவன்வரவறிவுறுத்தற்குச் செய்யுள்:—
பொருகின்ற செங்கயல் போல்விழி யாய்பண்டு போயபின்கைக்
குருகின் றுவந்திறை கொள்வது காண்கநங் கொண்கர்பொற்றேர்
தருகின்ற சங்கந் தருவன்ன வாணன் றமிழ்த்தஞ்சைவாய்
வருகின்ற தென்றுமுன் னேபோகை கூறும் வலம்புரியே.
—[தஞ்சை. 277]

எனவும், வலம்புரி கிழத்தி வாழ்த்தற்குச் செய்யுள்:—
மால்வண் டெனமன்னி வாணன்றென் மாறைமன் னன்புகழே
போல்வண் டமிழ்மன்னர் போற்ற விளங்குக பொன்கொழிக்குங்
கால்வண்டல் வையைக் கரைமல்கு மல்லிகைக் கான்முகையின்
மேல்வண் டிருந்தது போற்கரு மாமுக வெண்சங்கமே.
—[தஞ்சை. 277]

எனவும், தலைமகன்வந்துழிப் பாங்கி நினைத்தமைவினுதற்குச் செய்யுள்:-

கடந்தந்த வெங்கைக் களிற்றுவெங் கானங் கடந்துசென்று
தடந்தந்த தாமரைத் தண்புன னாட்டுத் தடங்கடனீர்
விடந்தந் தமுதந் தருமட னோக்கிவண் மேவமனத்
திடந்தந் தறிவதுண் டோவொரு நாளெம் மிறையவனே

[அம்பி. 324]

எனவும், தலைமகன் நினைத்தமை செப்பற்குச் செய்யுள்:—

கோவையை வென்றசெவ் வாய்க்கொடி யேபொருள் கூட்டவென்னுந்
தேவையை மேற்கொண்டு தீவினை யேன்சென்ற சென்றவிடம்
யாவையு மூங்க ளிளமரக் காவு மிழைத்தகுன்றும்
பாவையு நீயும் பரிமளச் சோலையும் பண்ணையுமே. —[அம்பி. 325]

எனவும், தலைமகளையாற்றுவித்திருந்த அருமை பாங்கி கூறற்குச் செய்யுள்:—

மதிகாட் டியநுதல் வல்லிசிந் தாகுல மாற்றியதுன்
பதிகாட் டியுமுன் பணிவரை காட்டியும் பாய்திரைநீர்
நதிகாட் டியும்புது நல்விருந்தாகி நடந்ததிண்டேர்க்
கதிகாட் டியுமுன் கலந்தசந் தாடவி காட்டியுமே.

—[அம்பி. 328]

எனவும் வரும்.

உரையிற் கோடலாற் தலைவன் ஆற்றுவித்திருந்த அருமை வினுதலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

சிமையார் தடவரைச் சேணெறிச் சென்றருஞ் செம்பொருளுக்
குமையா னொழிந்தங் குறைந்தவந் நாளிங் குடனிருந்து
மிமையா விழிக்கின்ற வித்துணைப் போதினு மென்னையன்றி
யமையா வணங்கின ணங்கையெவ் வாறிருந் தாற்றினையே.

—[அம்பி. 327]

எனவரும்.

இவற்றுள், என்பொருட்பிரிவுணர்த் தேந்திழைக்கென்றலாகிய ஒன்றும் பிரிவறிவுறுத்தற்கும்; பாங்கி நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றலாகிய ஒன்றும் பிரிவுடன் படாமைக்கும்; தலைவன்நீடேனென்றவ னீங்கலாகிய ஒன்றும் பிரிவுடன்படுத்தற்கும்; பாங்கி எடரிக் கண்ணிக் கவன் செலவுணர்த்தலாகிய ஒன்றும் பிரிவுடன் படுதற்கும்; தலைமகள் இரங்கலும், கொடுஞ்சொற்சொல்லலும், பருவங்கண்டு புலம்பலும், மறுத்தலும், தலைமகன் சேணிடைப்புலம்பலுமாகிய ஐந்தும்பிரிவுழிக்கலங்கற்கும்;

பாங்கி கொடுஞ்சொற் சொல்லலும், வருகுவர் மீண்டெனப் பாங்கிவலித்த லும், பருவமன்று வம்பென்றலும், அவர் தூதாகிவந்தடைந்த திப்பொழு தென்றலுமாகிய நான்கும் வன்புறுத்தற்கும்; தலைமகளாற்றலாகிய ஒன் றும் வன்பொறைக்கும்; தலைமகன் மீண்டுவருங்காலைப் பாகனொடுசொல் லலும், மேகமொடு சொல்லலுமாகிய இரண்டும் வருவழிக்கலங்கற்கும்; பாங்கி வலம்புரி கேட்டவன் வரவறிவுறுத்தல் முதலாகிய ஐந்தும் வந் துழிமகிழ்ச்சிக்கும் உரியவாம். (155)

156. வரைவெனப் படுவ துரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையுங்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் வந்துழி வரையுமன்றே; அவ்வரைவாவது இவ்வியல்பிற்றென இஃது அதன் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்.) வரைவென்று சொல்லப்படுவது தலைமகன் தலைமகளைக் குரவர்முதலோர் கொடுப்பவும் கொடாதொழியவும் வதுவைச் சடங் கொடு பொருந்த மணஞ்செய்து கோடல். (எ-று.)

வரைவு கற்பிற்கு ஒருதலையாக வேண்டுதலின் அச்சிறப்புத்தோன்ற வரைவெனப்படுவதென்றும், குரவரேயன்றி அவரோடு ஒரு தன்மைய ராகிய தாயத்தாருந் தாயொடுபிறந்தாரும் அவரில்லாதவழிச் சான்றோ ருந் தேவருங் கொடைக்குரிய மரபினராகலிற் குரவர் முதலோரென்றுங் கொடுப்பவென்றும்,

> கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
> புணர்ந்துடன் போகிய காலை யான. —[தொல். சூ. 143]

என்பவாகலின் கொடாமையுமென்றும்,

> கரணம் பிழைக்கின் மரணம் பயக்கும்

என்பார் 'கரணமொடுபுணர' என்றுங்கூறினர். குரவராவாரிவரென்பது:-

> அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்முன்
> னிகரில் குரவரிவ ரைவ ரிவரைத்
> தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
> யாவருங் கண்ட நெறி —[ஆசார. 17]

என்பதனான் அறிக. வதுவைச்சடங்கு இவளை நீ இன்னவாறு பாது காப்பாயெனவும், இவற்கு இன்னவாறே நீ குற்றேவல் செய்து ஒழு கெனவும் அங்கியங் கடவுள் அறிகரியாக மந்திரவகையாற் கற்பித்தல்.

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவைப்
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
றண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிரு ளகன்ற கவின்பெறு காலைக்
கோள்கா னீங்கிய கொடுவெண் டிங்கட்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
வுச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவு முறைமுறை தரத்தரப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த வீரித ழலரிப்
பல்லிருங் கதுப்பி னெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுந்து
பேரிற் கிழத்தி யாகென மாத
ரோரிற் கூட்டிய வுடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்
தொடுங்கினள் கிடந்த வோர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
வஞ்சின ளுயிர்த்த காலை யாழநின்
னெஞ்சம் படர்ந்த தெஞ்சா துரையென
வின்னகை யிருக்கைப் பின்யான் வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
வகமலி யுவகைய ளாகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே மாவின்
மடங்கொண் மதைஇய நோக்கி
னொடுங்கீ ரோதி மாஅ யோளே. —[அகம். 86]

இதனுள், வதுவைக்கேற்ற கரணங்கள் நிகழ்ந்தவாறும் தமர் கொடுத்தவாறும்,

பறைபடப் பணில மார்ப்ப விறைகொளத்
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கைநம் மடந்தை நட்பே.— [குறுந். 15]

என்பதனுள் வாயாகின்றே எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும் விடலையெனப் பாலைத்தலைவன்பெயர் கூறினமையானும் கொடுப்போரின்றிக் கரணம் நிகழ்ந்தவாறுங் காண்க. (156)

157. வரைவு மலிவே யறத்தொடு நிலையென்
றுரையமை யிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளந்தனர் புலவர்.

இது வரைவின் தொகை இத்துணைப்பகுதித் தென்கின்றது.

(இ-ள்.) வரைவுமலிவும் அறத்தொடு நிலையுமென்கின்ற இரண்டும் வரைவிற்குரிய கிளவியின் தொகையென்று கூறினார் அறிவுடையோர். (எ-று.) (157)

158. வரைவுமுயல் வுணர்த்தல் வரைவெதி ருணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பரவல்கண் டுவத்தலென்
றோருநால் வகைத்தே வரைவு மலிதல்.

இது, நிறுத்தமுறையானே வரைவுமலிவு உணர்த்துவானவற்றுள் இஃது அதன்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) வரைவுமுயல்வுணர்த்தல் முதலாகப் பரவல்கண்டுவத்தல் ஈறாக நான்குவகையினையுடைத்தாம் வரைவுமலிதல். (எ-று.) (158)

159. காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி
காதலிக் குணர்த்தலுங் காதலி நற்றா
யுள்ள மகிழ்ச்சி யுள்ளலும் பாங்கி
தமர்வரை வெதிர்ந்தமை காதலிக் குணர்த்தலு
மவளுவகை யாற்றா துளத்தொடு கிளத்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவி
மணம்பொருட் டாக வணங்கைப் பராநிலை
காட்டலுங் கண்டோன் மகிழ்வுமென் றீட்டிய
விருமூன் றொன்றும் வரைவுமலி தற்காம்
விரியென விளம்பினர் மெய்யுணர்ந் தோரே.

இது வரைவுமலிதலின்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக் குணர்த்தன் முதலாகக் கண்டோன் மகிழ்தல் ஈறாகத் தொகுத்த ஏழுகிளவியும் வரைவுமலிதற்கு உரிய விரியெனக் கூறுவர் அகப்பொருளை உணர்ந்தோர். (எ-று.)

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தற்குச் செய்யுள்:—

என்கடைக் கண்ணினும் யான்பிற வேத்தா வகையிரங்கித்
தன்கடைக் கண்வைத்த தண்டில்லைச் சங்கரன் றாழ்கயிலைக்
கொன்கடைக் கண்டரும் யானை கடிந்தார் கொணர்ந்திறுத்தார்
முன்கடைக் கண்ணிது காண்வந்துதோன்று முழுநிதியே.
—[கோவையார். 298]

எனவும், காதலி நற்றாயுள்ள மகிழ்ச்சியுள்ளற்குச் செய்யுள்:—

கயமா மலரெனுங் கன்னியைவண்டெனுங் காளைபல்புள்
ளியமா மணம்புண ரீர்ந்துறை நாட ரெதிர்ந்தவர்மேல்
வயமா நடத்திய வாணன் றென்மாறை வருகுவரே
னயமா மணவணி கண்டியாயு மின்புறு நம்மினுமே.—[தஞ்சை.282]

எனவும், பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தற்குச் செய்யுள்:—

கூர்முண் முண்டகக் கூனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரிக்குந் தூமணிச் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயுநனி வெய்ய
ளெந்தையுங் கொடீஇயர் வேண்டு
மம்பலூரு மவனொடு மொழிமே. —[குறுந். 51]

எனவும், தலைமகளுவகையாற்றாதுளத்தொடு கிளத்தற்குச் செய்யுள்:—

இன்னு நெறியுங் குறியிடை யீடு மிலங்கிழையார்
பின்னு ளிழைத்த பெருவெறி யாட்டும் பிறர்வரைவு
நின்னு குலமுந் தவிரநெஞ் சேயினி நின்னுயிரை
யன்னார் மணமுர சார்க்கின்ற தானம் மகநகர்க்கே.—[அம்பி.333]

எனவும், தலைவனைப் பாங்கி வாழ்த்தற்குச் செய்யுள்:—

கொண்டல் வெளுக்குங் கருங்குழலா ண்மனக் கோட்டமுநின்
வண்டணி பைந்தழை வாட்டமுங் கண்டகண் மாலுமந்த
விண்டலர் தாமரைத் தேவியும்போலிங்ஙன் மேவியது
கண்டன மேயிறை வாவிது வோவின்னங் காண்பதுவே.
—[அம்பி. 334]

எனவும், தலைவி மணம் பொருட்டாக வணங்கைப் பராநிலை காட்டற்குச் செய்யுள்:—

அணங்கர வல்குலரிவைய ராரத் தனமருப்புச்
சுணங்கலர் வேங்கைத் தொடைமலை நாட துளங்குமின்போல்
வணங்கிடை மாதுன் மணம்பொருட் டாக வளையவிழ்பூங்
கணங்கமழ் சார வணங்கைப் பராநிலை கண்டருளே.

—[அம்பி. 335]

எனவும், பராநிலைகண்ட தலைமகன் மகிழ்தற்குச் செய்யுள்:—

பாணூர் சுரும்பு விரும்புதண் சாரற் பனியருவிச்
சேணூர் சிலம்பி னுறையுங் கடவுளைத் தேமலர் தூஉய்
வாணுடு கண்ணி மணம்பொருட் டாக வழுத்துமன்பு
காணாய் மடநெஞ்ச மேவஞ்ச மோகங்கள் காதன்மையே.

—[அம்பி. 336]

எனவும் வரும்.

இவற்றுட், காதலன்முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தலும், தலைவிமணம்பொருட்டாக அணங்கைப்பராநிலை பாங்கி தலைமகற்குக்காட்டலுமாகிய இரண்டும் வரைவுமுயல்வுணர்த்தற்கும்; பாங்கி தமர் வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தலாகிய ஒன்றும் வரைவெதிர் வுணர்த்தற்கும்; தலைவி நற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளலும், உவகையாற்றாதுளத்தொடுகிளத்தலும், தலைமகனைப் பாங்கி வாழ்த்தலுமாகிய மூன்றும் வரைவறிந்து மகிழ்தற்கும்; தலைமகனணங்கைப் பராநிலைகண்டுமகிழ்தலாகிய ஒன்றும் பரவல்கண்டுவத்தற்கும் உரியவாம். (159)

160. முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்
கன்னவிரு வகைத்தே யறத்தொடு நிலையே.

இஃது, அறத்தொடுநிலையின் வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) முன்னிலைமொழியும் முன்னிலைப்புறமொழியுமென இரு வகையினையுடைத்தாம் அறத்தொடுநிலை. (எ-று.)

மொழியென்பதனை முன்னும் பின்னுங் கூட்டுக. (160)

161. கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
கலுழ்தற் காரணங் கூறலுந் தலைவன்
றெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
யெய்தக் கூறலு மிகந்தமை யியம்பலு
மியற்பழித் துரைத்துழி யியற்பட மொழிதலுந்
தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றலு

மில்வயிற் செறித்தமை சொல்லலுஞ் செவிலி
கனையிரு ளவன்வரக் கண்டமை கூறலு
மெனமுறை யிறைவி யியம்பிய வேழோ
டெறிவளை வேற்றுமைக் கேதுவி னவினும்
வெறிவிலக் கியவழி வினவினும் பாங்கி
பூவே புனலே களிறே யென்றிவை
யேது வாகத் தலைப்பா டியம்பலு
மின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினவுழி
முன்னிலை மொழியான் மொழிதலுஞ் செவிலி
யென்றுட னியம்பிய வெல்லாங் களவிய
னின்றுழி யறத்தொடு நிற்றலின் விரியே.

இஃது, அறத்தொடுநிற்றலின் விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) கையறுதோழிகண்ணீர் துடைத்துழிக் கலுழ்தற்காரணங் கூறல் முதலாகச் செவிலிகனையிருளவன் வரக்கண்டமைகூறல் ஈறாகக் கிடந்த தலைவிகூற்றுக்கள் ஏழும், செவிலி தலைமகள் வேற்றுமைக்குக் காரணங்கேட்பினும், தான் வெறிவிலக்கியவழிக் காரணங்கேட்பினும், பூவும் புனலுங் களிறுமாகிய இவைகாரணமாகப் புணர்ச்சியினை அறிவித்தலாகிய பாங்கிகூற்றுக்கள் மூன்றும், தலைமகள்வேறுபாடுகண்டு நற்றாய் தன்னைவினவியவிடத்து முன்னிலைமொழியானே செவிலிகூறுங்கூற்றுமென்று ஒருங்குகூறப்பட்ட எல்லாக்கிளவிகளும் களவொழுக்கம் வெளிப்படாதுநின்ற இடத்து அறத்தொடுநிற்றலின் விரியாம். (எ-று.)

அனுவாதமுகத்தாற் கையறுதோழி கண்ணீர்துடைத்தலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்;—

வாரண மாவின் மருப்பும் பொருப்பு மலைந்தகொங்கை
பூரண மாகும் பொலங்கொடி யேபொற்பு நீயழியுங்
காரண மாலொன்று கண்டிலை மாற்கண் கலுழ்வதென்னோ
தோரண மாமறு கிற்பலர் கண்டலர் தூற்றுதற்கே.

—[அம்பி. 337]

எனவும், தலைமகள்கலுழ்தற் காரணங்கூறற்குச் செய்யுள்:—

பண்டு நமக்குப் பரிந்துமை யூட்டிய பங்கயக்கை
யொண்டொடி சோர வுயங்குத னோக்கித் தயங்குமுது
தண்டலை தன்னிற் றலைப்பட்ட நாளிற் றலைவனைநாங்
கண்டது கொண்டல்ல வோவென்று போலுங் கலுழ்கின்றதே.

—[அம்பி. 338]

எனவும், தலைமகன் தெய்வங்காட்டித்தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறற்குச் செய்யுள்:—

கழியார் கருங்கடற் றெய்வமுங் காட்டிக் கலந்தவன்று
மொழியா தனவில்லை முன்னுற வாய்முன் மொழிந்தவண்ண
மொழியார் நமையொரு நாளுமென் றேகொண்ட துள்ளமுமென்
விழியா னதுகளும் வானறி யேனென்று மெல்லியலே.-[அம்பி.339]

எனவும், தலைவனிகந்தமையியம்பற்குச் செய்யுள்:—

யாரு மில்லைத் தானே கள்வன்
றானவன் பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் காஅல
வொழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே. —[குறுந். 25]

எனவும் வரும். அனுவாதமுகத்தான் அதுகேட்டதோழி இயற்பழித் துரைத்தலும் வரப்பெறும். அதற்குச்செய்யுள்:—

மழுவே துறந்து மறந்தவர் போற்றஞ்சை வாணன்வென்றி
முழவே முந்நீர் முழங்கிருங் கானன் முழுதுலகுந்
தொழுவே தகுந்தெய்வ நோக்கிச்செல் லேனென்று சொல்லியுநீ
யழுவே துறந்தன ரேநல்லர் நல்லர்நம் மாடவரே.—[தஞ்சை. 292]

எனவும், தலைமகளியற்படமொழிதற்குச் செய்யுள்:—

அடும்பமர் நெடுங்கொடி யுள்புதைந் தொளிப்ப
வெண்மணல் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடிய னாயினு மாக
வவனே தோழியென் னுயிர்கா வலனே. [ஐங்-தனி-6]

எனவும், தெய்வம்பொறைகொளச் செல்குவமென்றற்குச் செய்யுள்:—

மாதங்க நல்குங்கை வாணன்றென் மாறைவை யைத்துறைவர்
ஏதம் பயந்தில ரெங்கட்கு நீயெம் மிகந்ததனூற்
கோதம் படாதி கொடுந்தெய்வ மேயென்று கூர்பலிதூஉய்ப்
பாதம் பரவநல் லாயிரு வேமும் படர்குவமே. —[தஞ்சை. 294]

எனவும், இல்வயிற்செறித்தமைசொல்லற்குச் செய்யுள்:—

கொன்னே வெகுண்டு மணிவண்ட லாடக் கொடிமருங்குற்
பொன்னே யினிப்புறம் போகலென் றாளன்னை பூந்தொடிக்கை
மின்னே பசந்தவென் மேனியும் பார்த்துள்ளம் வெய்துயிர்த்தா
ளென்னே விளைந்ததென் னேயறி யாரன்ப ரீங்கொன்றுமே.
—[அம்பி. 344]

எனவும், செவிலி கனையிருளவன்வரக்கண்டமை கூறற்குச் செய்யுள்:—

ஆயின்றெ றனக்கு மணிமுன்றில் வாய்நென்ன லல்லியல்லி
வாயொன்று தேனுமிழ் மாதவிப் பந்தரில் வார்கழற்காற்
சேயொன்றி நின்ற திறமறி யாமற் செறியிருட்கட்
பேயொன்று கண்டஞ்சி னேனென்று கூறினள் பெய்வளையே.

—[அம்பி. 345]

எனவும் வரும். [இவற்றுட் களூழ்தற்காரணங்கூறலாகிய ஒன்றுமொழித்து ஏனையவெல்லாம் பாங்கி வினவாதொழியவுந் தலைமகள் அறத்தொடு நிலைக்கு உரியவாமாறு அறிந்துகொள்க.]

அனுவாதமுகத்தான் எறிவளைவேற்றுமைக்கேதுவினவலும், வெறி விலக்கலும், வெறிவிலக்கியவழிவினுதலும் ஈண்டேவரப்பெறுமெனக் கொள்க.

செவிலி தலைமகள்வேற்றுமைகண்டு பாங்கியைவினுதற்குச் செய் யுள்:—

வேயின மென்றோள் மெலிந்தொளி வாடி விழிபிறிநாய்ப்
பாயின மேகலை பண்டைய ளல்லள் பவளச்செவ்வி
யாயின வீச னமரர்க் கமரன்சிற் றம்பலத்தான்
சேயின தாட்சியிற் பட்டன ளாமித் திருந்திழையே.

—[கோவையார். 282]

எனவும், வெறிவிலக்கற்குச் செய்யுள்:—

கடவுட் கற்சுனை யடையவிழ்ந் தலமந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மக
ளருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்து மாறுது
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே. —[நற். 34]

எனவும், வெறிவிலக்கியவழிச் செவிலி தோழியைவினுதற்குச் செய்யுள்:-

மண்குன்ற வந்த கலியினை மாற்றிய வாணன்றஞ்சை
யொண்குன்ற மங்கையர் முன்னர்மின் னேயுமை யாண்மகனைப்
பண்குன்ற வென்றசொல் வள்ளிதன் கோனைப்பைந் தாரயிலால்
வெண்குன்றெ றிந்தசெவ் வேளையிவ் வாறென் விளம்பியதே.

—[தஞ்சை. 299]

எனவும், தோழி பூத்தருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றற்குச் செய்யுள்:-

போருறை நீக்கணை போலுநின் கண்கண்டு போதவஞ்சி
நீருறை நீலமு நீயுநண் பாகென்று நின்மகட்கோர்
தாருறை தோளவர் தந்தனர் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
காருறை சோலையில் யாம்விளை யாடிய காலையிலே.—[தஞ்சை. 300]

எனவும், புனறருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றற்குச் செய்யுள்:—

ஒழிதோற் றியசொல்லி யுன்மக ளோதிக் குடைந்தகொண்டல்
பொழிதோற் றிரளுந்தி வந்தசெந் நீருந்திப் பொறற்பினுக்கோர்
சுழிதோற் றிடும்பகை தீர்க்கின்ற போதொரு தோன்றலுமவ்
வழிதோற் றிவந்தெடுத் தான்றஞ்சை வாணன்றென் வையையிலே.

—[தஞ்சை. 301]

எனவும், களிறுதருபுணர்ச்சியான் அறத்தொடுநிற்றற்குச் செய்யுள்;—

மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்றென் மாறைவெற்பி
லண்ணலை யாயிழை பாகனெனன் றஞ்சின மஞ்சனந்தோய்
கண்ணலை நீரிடப் பாகமு மேல்வந்த கைக்களிற்றின்
புண்ணலை நீர்வலப் பாகமுந் தோயப் பொருதவன்றே.

—[தஞ்சை. 302]

எனவும் வரும். இம்மூன்றனுள் ஒன்றுன் அறத்தொடுநிற்க அமையு மெனக்கொள்க.

அனுவாதமுகத்தாற் றலைமகள்வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினுதலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

குணங்குற்ற மென்னுமிக் கூறறி யாத குதலைமென்சொ
லணங்குற்ற மைய லறிந்தனை யோவரும் பாமுலைகள்
சுணங்குற் றனவளை தோளுற் றனவில்லைச் சொற்றளரு
நிணங்குற் றவேற்க ணிறம்பசப் பூர நிரைவளையே.

—[அம்பி. 358]

எனவும், செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியான் அறத்தொடுநிற்றற் குச் செய்யுள்:—

இளையா ளிவளையென் சொல்லிப் பரவுது மீரெயிறு
முளையா வளவின் முதுக்குறைந் தாண்முடி சாய்த்திமையோர்
வளையா வழுத்தா வருதிருச் சிற்றம் பலத்துமன்னன்
றிளையா வருமரு விக்கயி லைப்பயில் செல்வியையே.

—[கோவையார். 294]

எனவும் வரும். நற்றாய்குறிப்பினன்றி அறத்தொடுநிற்கப் பெறாளென்றமையால் அதற்கு உதாரணமின்று. (161)

162. போக்கே கற்போடு புணர்ந்த கவ்வை
மீட்சியேன் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவி வெளிப்படு தொகையே.

இது, களவுவெளிப்பாட்டிற்கு உரிய கிளவித்தொகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) போக்கு முதலாக மீட்சி ஈறாகச் சொல்லப்பட்ட மூன்றுங் களவு வெளிப்பாட்டிற்கு உரிய கிளவித்தொகை. (எ-று)

163. போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்த றேற்றலென்
றியாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே.

இது, நிறுத்தமுறையானே களவுவெளிப்படைக்கிளவித்தொகை மூன்றனுட் போக்குவகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) போக்கறிவுறுத்தல் முதலாகத் தேற்றல் ஈறாக எட்டு வகையினையுடைத்தாம் அன்பமைந்த உடன்போக்கு. (எ-று.)

164. பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தலு
மாங்கவன் மறுத்தலு மவளுடன் படுத்தலுந்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக் குடன்போக் குணர்த்தலுந் தலைவி
நாணழி பிரங்கலுங் கற்புமேம் பாடு
பூண்முலைப் பாங்கி புகறலுந் தலைவி
யொருப்பட் டெழுதலும் விருப்புடைப் பாங்கி
சுரத்திய லுரைத்துழிச் சொல்லலும் பாங்கி
கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலு
மவன்சுரத் துய்த்தலு மசைவறிந் திருத்தலு
முவந்தலர் சூட்டி யுண்மகிழ்ந் துரைத்தலுங்

கண்டோ ரயிர்த்தலுங் காதலின் விலக்கலுந்
தன்பதி யணுமை சாற்றலுந் தலைவன்
றன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தலு
மென்றிவை யோன்பதிற் றிருவகைக் கிளவியு
மொன்றிய வன்பி னுடன்போக்கு விரியே

இஃது, உடன்போக்குவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல் முதலாகத் தலைவன் தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட கிளவிகள் பதினெட்டும் பொருந்திய அன்பினையுடைய உடன் போக்குவிரியாம். (எ-று.)

['ஒன்றிய அன்பின்' என்ற இலேசானே தலைவி ஒருப்பட்டெழுந்த வழி அங்ஙனம் ஒருப்பட்டெழுந்தமை பாங்கி தலைவற்குணர்த்தலும், கண்டோர் தம்பதியணுமை சாற்றியபின்னர்த் தலைவன் தன்பதியணுமை தலைவிக்குச்சாற்றலும், அவட்குத் தன்னகர்காட்டலும், தலைவன் தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தியபின்னர்த் தலைவியோடு தன்மனைசார்தலும் வரவும்பெறும்.]

பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தற்குச் செய்யுள்:—

மைந்நீர் நெடுங்கண் மடந்தை யுடன்றஞ்சை வாணன்வெற்பா
செந்நீர் விழவணி நின்னகர்க் கேசென்று சேர்ந்தருண்மற்
றிந்நீர்மை யன்றியொ ராறுமின் றாலிங்கெம் மையரென்றான்
முந்நீ ருலகுங்கொள் ளார்விலை யாக முலையினுக்கே.

—[தஞ்சை. 305]

எனவும், தலைவன் [உடன்போக்கு] மறுத்தற்குச் செய்யுள்:—

மெல்லியல் கொங்கை பெரியமின் னேரிடை மெல்லடிபூக்
கல்லியல் வெம்மைக் கடங்கடுந் தீக்கற்று வானமெல்லாஞ்
சொல்லிய சீர்ச்சுடர்த் திங்களங் கண்ணித்தொல் லோன்புலியூ
ரல்லியங் கோதைநல் லாயெல்லை சேய்த்தெம் மகனகரே.

—[கோவையார். 201]

எனவும், பாங்கி தலைமகனை யுடன்படுத்தற்குச் செய்யுள்:—

பிணையுங் கலையும்வன் பேய்த்தே ரினைப்பெரு நீர்நசையா
லணையு முரம்பு நிரம்பிய வத்தமு மையமெய்யே
யிணையு மளவுமில் லாவிறை யோனுறை தில்லைத்தண்பூம்
பணையுந் தடமுமன் றேநின்னொ டேகினெம் பைந்தொடிக்கே.

—[கோவையார். 202]

எனவும், தலைவன் போக்குடன்படுதற்குச் செய்யுள்:—

இன்னாத கானு மினிதென்று நீரிங் கியைந்தவன்பு
மன்னா ளளித்த வணங்குமுண் டேயென தாவியன்னார்
மின்னார் திருந்திழை மெய்வருந் தாவகை மெல்லமெல்லப்
பன்னாள் படவு முடன்கொண்டு சேறும் பணிமொழியே.

—[அம்பி. 365]

எனவும், பாங்கி தலைவிக்கு உடன்போக்குணர்த்தற்குச் செய்யுள்:—

குறப்பாவை நின்குழல் வேங்கையம் போதொடு கோங்கம்விராய்
நறப்பா டலம்புனை வார்நினை வார்தம்பி ரான்புலியூர்
மறப்பா னடுப்பதொர் தீவினை வந்துறிற் சென்றுசென்று
பிறப்பா னடுப்பினும் பின்னுந்துன் னத்தகும் பெற்றியரே.

—[கோவையார். 205]

எனவும், தலைவிநாணழிபிரங்கற்குச்செய்யுள்:—

மறவாகை வேலங்கை வாணனை மாறையர் மன்னனைத்தம்
முறவாக வெண்ணி யுருதவர் போனுயி ரோம்பியென்றுந்
துறவாத நாணந் துறப்பது வேண்டலிற் றொல்லுலகிற்
பிறவா தொழிகைநன் றேயொரு காலமும் பெண்பிறப்பே.

—[தஞ்சை. 310]

எனவும், கற்புமேம்பாடு பூண்முலைப்பாங்கி புகறற்குச் செய்யுள் :—

தாயிற் சிறந்தன்று நாண்டைய லாருக்கந் நாண்டகைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே.

—[கோவையார். 204]

எனவும், தலைவி ஒருப்பட்டெழுதற்குச் செய்யுள் :—

மற்பாய் விடையோன் மகிழ்புலி யூரென்னொ டும்வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர் விருப்புப் புகுந்துநுந்தக்
கற்பார் கடுங்கால் கலக்கிப் பறித்தெறி யக்கழிக
விற்பாற் பிறவற்க வேழையர் வாழி யெழுமையுமே.

—[கோவையார். 208]

எனவும், [அங்ஙனம் ஒருப்பட்டெழுந்தமை பாங்கி தலைவற்குணர்த்தற் குச் செய்யுள்:—

[1]மின்னே மருங்கு னெருங்குழைபைங் கோதை விளங்கிழைநின்
பின்னே வருதல் கருதிய போதுமென் பிள்ளைக்கிள்ளை
யன்னே மகவன்பு மற்றனை யோவென் றரற்றவன்பின்
கொன்னே யருமந்த கொங்கைகண் ணீரிற் குளித்தனவே.

—[அம்பி. 369]

எனவும், பாங்கி சுரத்தியல் புரைத்துழித் தலைமகள் சொல்லற்குச் செய்யுள்:—

செல்லிற் கொடிய களிற்றண்ணல் வாணன்றென் மாறையன்ன
வில்லிற் கொடிய புருவமின் னேயென் விளம்புதிநீ
சொல்லிற் கொடியநம் மன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கு
மில்லிற் கொடியகொல் லோசெல்லு நாட்டவ் விருஞ்சுரமே.

—[தஞ்சை. 313]

எனவும், பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடைகொடுத்தற்குச் செய்யுள்:—

பறந்திருந் தும்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் றில்லையன் னாடிறத் துச்சிலம்பா
வறந்திருந் துன்னரு ளும்பிறி தாயி னருமறையின்
றிறந்திரிந் தார்கலியும் முற்றும் வற்றுமிச் சேணிலத்தே.

—[கோவையார். 213]

எனவும், பாங்கி வைகிருள்விடுத்தற்குச் செய்யுள் :—

ஊருங் கலிகெழு சேரியுந் தாயரு முட்புலம்பத்
தேரும் பழிபுக ழாக்கிவந் தெய்துவை சேயனையாய்
வாரும் பருமணி வம்பும் பொருமுலை வல்லியுடன்
யாருந் துயில்கொள்ளு நள்ளிருள் யாமத் தெழுந்தருளே.

—[அம்பி. 371]

எனவும், தலைவியைத் தலைவன் சுரத்துய்த்தற்குச் செய்யுள் :—

பேணத் திருத்திய சீறடி மெல்லச்செல் பேரரவம்
பூணத் திருத்திய பொங்கொளி யோன்புலி யூர்புரையு
மாணத் திருத்திய வான்பதி சேரு மிருமருங்குங்
காணத் திருத்திய போலுமுன் னுமன்னு கானங்களே.

—[கோவையார். 215]

---

1. (பா - ம்) மின்னே மருங்கு விளங்கு பைங்கோதை.

எனவும், தலைமகன் தலைமகளைசைவறிந்திருத்தற்குச் செய்யுள் :—

வரமானவை வேற்படை வாணன்றென் மாறை வணங்கலர்கள்
புரமான வல்லழற் பொங்குவெங் கானிற் பொருந்தியகூ
ரரமாய கல்லுன் னடிமல ராற்றல வாதலினுஞ்
சுரமாறு மெல்லைநல் லாயிருப் பாமிந்தச் சோலையிலே.

—[தஞ்சை. 317]

எனவும், தலைமகன் தலைமகளை உவந்து அலர்சூட்டி உண்மகிழ்ந்துரைத்தற்குச் செய்யுள்:—

அடிமலர் போற்றவும் போற்றிசெய் யாவிவ ளாய்முடிக்கியான்
கடிமலர் சூட்டவுங் காட்டிய தாற்கள்வர் காய்ந்தெறியுந்
துடிமலர் சீர்க்கெதிர் கூகை யிரட்டுஞ் சுரத்திடையோர்
வடிமலர் வேற்படை யான்வாணன் மாறையென் மாதவமே.

—[தஞ்சை. 318]

எனவும், கண்டோரயிர்த்தற்குச்செய்யுள் :—

கருவார் புயலென் றுங் கண்டறி யாதவிக் கானகத்தே
வருவார் சிலரிவர் மற்றிவ ரியாவர்கொல் வாரிதந்த
திருவா மெனிவிவள் செங்கையிற் பங்கய மில்லைச்செல்வன்
மருவார் துளவணி மாலெனின் மார்பின் மறுவில்லையே.

—[அம்பி. 377]

எனவும் வரும்.

ஒன்றெனமுடித்தலாற் கண்டோர்மகிழ்தலும் இரங்கலும் வரப்பெறுதல் கொள்க. அவற்றிற்குச் செய்யுள்:—

முன்செல்ல நாணு முகிணகை வல்லி முருகனிவன்
பின்செல்ல வெண்ணும் பிடிநடை காணவிப் பேருலகிற்
புன்செல்வர் தேடும் பொருள்போ லிறகப் பொதிந்தவன்பை
யென்சொல்லி யெங்ஙன் றொலைந்ததிவ் வாறிவ் விருஞ்சுரமே.

—[அம்பி. 378]

எனவும்,

பேதைப் பருவங் கழிந்தில ளின்னமும் பேணியதன்
காதற் கொழுநன் விழுமிய கேண்மையைக் காதலித்துப்
போதற் கரிய புகையழற் கானகம் போந்தவிந்த
மாதைப் பயந்த மடந்தையெவ் வாறுயிர் வாழ்ந்தனளே.

—[அம்பி. 380]

எனவும் முறையே காண்க.

கண்டோர் காதலின்விலக்கற்குச் செய்யுள் :—

எம்மூ ரல்ல தூர்நணித் தில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப
விளையண் மெல்லியண் மடந்தை
யரிய சேய பெருங்கான் யாறே. [சிற்றெட்டகம்]

எனவும், கண்டோர்தம்பதி யணுமைசாற்றற்குச் செய்யுள் :—

மின்றங் கிடையொடு நீவியன் றில்லைச்சிற் றம்பலவர்
குன்றங் கடந்துசென் றானின்று தோன்றுங் குரூஉக்கமலந்
துன்றங் கிடங்குந் துறைதுறை வள்ளைவெள் ளைநகையார்
சென்றங் கடைதட மும்புடை சூழ்தரு சேணகரே.
—[கோவையார். 221]

எனவும், [தலைவிக்குத் தலைவன் தன்பதியணுமைசாற்றற்குச் செய்யுள்:—

முன்னோ னருண்முன்னு முன்னா வினையின் முனகர்துன்னு
மின்னாக் கடறிதிப் போழ்தே கடந்தின்று காண்டுஞ்சென்று
பொன்னா ரணிமணி மாளிகைத் தென்புலி யூர்ப்புகழ்வார்
தென்னா வெனவுடை யானட மாடுசிற் றம்பலமே.
—[கோவையார். 217]

எனவும், தலைவிக்குத் தன் நகர்காட்டற்குச் செய்யுள்:—

மின்போல் கொடிநெடு வானக் கடலுட் டிரைவிரிப்பப்
பொன்போல் புரிசை வடவரை காட்டப் பொலிபுலியூர்
மன்போற் பிறையணி மாளிகை சூலத்த வாய்மடவாய்
நின்போ னடையன்னந் துன்னிமுன் றோன்றுநன் னீணகரே.
[கோவையார். 222]

எனவும்,] தலைவன்றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தற்குச் செய்யுள்:

செய்குன் றுவையிவை சீர்மலர் வாவி விசும்பியங்கி
நைகின்ற திங்களெய்ப் பாறும் பொழிலவை ஞாங்கரெங்கும்
பொய்குன்ற வேதிய ரோதிட முந்திட மிந்திடமு
மெய்குன்ற வார்சிலை யம்பல வற்கிட மேந்திழையே.
[கோவையார். 223]

எனவும். [தலைவன்றலைவியொடு தன்னகர்சார்தற்குச் செய்யுள்:—

சங்க முழங்க மணிமுர சார்ப்பத் தமரெதிர்கொ
ளங்க ணலந்திக ழாவணம் போயகன் மாளிகையிற்
பொங்கிலை வேலனும் பூவையு மேயினர் புண்டரிகச்
செங்கை வலந்தி கிரித்திரு மாலுந் திருவுமொத்தே. [அம்பி. 384]

எனவும் வரும்.]

இவற்றுட் பாங்கி தலைமகற் குடன்போக்குணர்த்தலும், தலைவிக் குடன்போக்குணர்த்தலுமாகிய இரண்டும் போக்கறிவுறுத்தற்கும்; தலைமகன் மறுத்தலும், தலைவிநாணழிபிரங்கலுமாகிய இரண்டும் போக்குடன் படாமைக்கும்; பாங்கி தலைவனையுடன்படுத்தலும், தலைவிக்குக் கற்புமேம்பாடுகூறலுமாகிய இரண்டும் போக்குடன் படுத்தற்கும்; தலைவன் போக்குடன்படுதலும், தலைவியொருப்பட்டெழுதலும், சுரத்தியலுரைத்துழிச் சொல்லலுமாகிய மூன்றும் போக்குடன்படுதற்கும்; பாங்கி கையடைகொடுத்தலும், வைகிருள் விடுத்தலும், தலைமகன் தலைமகளைச் சுரத்துய்த்தலுமாகிய மூன்றும் போக்கற்கும்; தலைவன் தலைவியை அசைவறிந்திருத்தலும், கண்டோர்காதலின் விலக்கலுமாகிய இரண்டும் விலக்கற்கும்; தலைவன் தலைவியை உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தலும், கண்டோரயிர்த்தலுமாகிய இரண்டும் புகழ்தற்கும்; கண்டோர் தம்பதியணுமைசாற்றலும், தலைவன் தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தலுமாகிய இரண்டுந் தேற்றற்கும் உரியவாம். 164

165. செவிலி புலம்ப னற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கஞ்
செவிலிபின் றேடிச் சேறலென் றாங்குக்
கற்போடு புணர்ந்த கவ்வையை வகைத்தே.

கற்பொடு புணர்ந்த கவ்வை கூறுவனவற்றுள் இஃது அதன் வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) செவிலிபுலம்பல் முதலாகச் செவிலி பின்றேடிச் சேறல் ஈறாக ஐந்துவகையினையுடைத்தாங் கற்பொடு புணர்ந்த கவ்வை. (எ-று.)

மனையெனினும் நற்றாயெனினும் ஒக்கும். 165

166. வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
யினைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலுந்
தன்னறி வின்மை தன்னைநோந் துரைத்தலுந்
தெய்வம் வாழ்த்தலு மிவ்வொரு மூன்றுஞ்
செவிலி யறத்தோடு நிற்றலிற் கவலையில்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடு
மயலார் தம்மொடும் பயிலிடந் தன்னொடுந்
தாங்கல ளாகிச் சாற்றிய நான்கு
நிமித்தம் போற்றலுஞ் சுரந்தணி வித்தலுந்
தன்மகண் மென்மைத் தன்மைக் கிரங்கலு
மிளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலு

மச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கலு
மாகிய வைந்தும் போகிய விறைமக
ளாயமுந் தாயு மழுங்கக் கண்டு
காதலி னிரங்குங் கண்டோ ரிரக்கமு
மாற்றுத் தாயைத் தேற்றலு மாற்றிடை
முக்கோற் பகவரை வினுதலு மிக்கோ
ரேதுக் காட்டலு மெயிற்றியோடு புலம்பலுங்
குரவோடு புலம்பலுஞ் சுவடுகண் டிரங்கலுங்
கலந்துடன் வருவோர்க் கண்டுகேட் டலுமவர்
புலம்ப றேற்றலும் புதல்வியைக் காணுது
கவலைகூர் தலுமெனு மிவையோன் பானுமேன்
றித்திற மியம்பிய வெழுமூன் றுமோன் றுங்
கற்போடு புணர்ந்த கவ்வையின் விரியே.

இது, கற்பொடு புணர்ந்தகவ்வையின் விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *வினவிய பாங்கியினுணர்ந்தகாலை இனையலென்போர்க்கெதிரழிந்துமொழிதல் முதலாகத் தெய்வம் வாழ்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட இவ்வொருமூன்றும், செவிலியறத்தொடு நிற்றலிற் கவலையில் பாங்கிதன்னொடு புலம்பல் முதலாகப் பயிலிடந் தன்னொடு புலம்பல் ஈறாகச் சொல்லப்பட்ட நான்கும், நிமித்தம் போற்றல் முதலாக அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல் ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்தும், போகியதலைமகள் ஆயத்தாரும் நற்றாயும் இரங்குமாறு கண்டு அன்பினுன் இரங்குங் கண்டோரிரக்கமாகிய ஒன்றும், ஆற்றுத்தாயைத்தேற்றல் முதலாகப் புதல்வியைக்காணுது கவலைகூர்தல் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதுமென்று இவ்வாறுகூறிய இருபத்திரண்டு கிளவியுங் கற்பொடு புணர்ந்த கவ்வையின்விரியாம்.* (எ-று.)

அனுவாதமுகத்தாற் செவிலி பாங்கியைவினவலும் பாங்கி செவிலிக்குணர்த்தலுஞ் செவிலி நற்றாய்க்கறத்தொடுநிற்றலும் வரப்பெறும்.

[*ஒன்றெனமுடித்தலாற் செவிலி நற்றாய்க்கறத்தொடுநிற்றலின் பின்னர் நற்றாய் தன்னுள்ளே இரங்கலும், நற்றாய் பாங்கிதன்னொடு புலம்பலின் பின்னர்த் தோழியழுங்க நற்றாய்புலம்பலும், அயலார் தம்மொடு புலம்பலின் பின்னர்த் தத்தையொடுபுலம்பலும், நிமித்தம் போற்றலின் பின்னர்த் தலைவன் மிகவன்புசெய்கவென்றுதெய்வத்திற்குப் பராயதூஉம், முக்கோற்பகவரை வினுதலின்பின்னர் மாவிரதியரைவினுதலும், அதன் பின்னர் உய்த்துணர்வோரை உரையினென்றலுங், குரவொடுபுலம்பின பின்னர்ப் புறவொடுபுலம்பலும் வரவும்பெறும்.*]

அவற்றுட் செவிலிபாங்கியைவினாதற்குச் செய்யுள்:—

மயிலெனப் பேர்ந்திள வல்லியி னொல்கிமென் மான்விழித்துக்
குயிலெனப் பேசுமெங் குட்டனெங் குற்றதென் னெஞ்சகத்தே
பயிலெனப் பேர்ந்தறி யாதவன் றில்லைப்பல் பூங்குழலா
யயிலெனப் பேருங்கண் ணாயென்கொ லாமின் றயர்கின்றதே.

[கோவையார். 224]

எனவும், பாங்கி செவிலிக்குணர்த்தற்குச் செய்யுள்:—

ஆளரிக் கும்மரி தாய்த்தில்லை யாவருக் கும்மெளிதாந்
தாளரிக் குன்றிற்றன் பாவைக்கு மேவித் தழறிகழ்வேற்
கோளரிக் குந்திக ரன்னா ரொருவர் குரூஉமலர்த்தார்
வாளரிக் கண்ணிகொண் டாள்வண்ட லாயத்தெம் வாணுதலே.

[கோவையார். 225]

எனவும், பாங்கியினுணர்ந்தசெவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதற்குச் செய்யுள்:—

வடித்தான் வகிர்மலர் கண்ணிக்குத் தக்கின்று தக்கன்முத்தீக்
கெடுத்தான் கெடலிறொல் லோன்றில்லைப் பன்மலர் கேழ்கிளர
மடித்தான் குடைந்தன் றழுங்க வழுங்கித் தழீஇமகிழ்வுற்
றெடுத்தாற் கினியன வேயினி யாவன வெம்மனைக்கே.

[கோவையார். 226]

எனவும், செவிலி தன்னறிவின்மைதன்னை நொந்துரைத்தற்குச் செய்யுள்:—

முறுவலக் காறந்து வந்தென் முலைமுழு வித்தழுவிச்
சிறுவலக் காரங்கள் செய்தவெல் லாமுழு துஞ்சிதையத்
தெறுவலக் காலனைச் செற்றவன் சிற்றம் பலஞ்சிந்தியா
ருறுவலக் கானகந் தான்படர் வானு மொளியிழையே.

[கோவையார். 227]

எனவும் வரும்.

முழுவி - முத்தங்கொண்டு; வலக்காரம் - விரகு.

செவிலி தெய்வம்வாழ்த்தற்குச் செய்யுள்.—

வேமாறு செய்யபவென் மெல்லிய லாளை விதித்தனைநீ
யாமாறு செய்தனை யாரணங் கேநின் னருளொழிந்தால்
ஏமாறு வண்ண மிதற்கொன் றில்லையொ ரேதிலன்பின்
போமாறு செய்வித்த நீவரு மாறும் புரிந்தருளே. [அம்பி.389]

எனவும், செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்றற்குச் செய்யுள்:—

தொடுப்பார் தொடுத்தலர் தூற்றும் பழிவந்து சூழ்விதியைத்
தடுப்பா ரெவரினிச் சாற்றுவ தென்கொ றடத்தின்முன்வீழ்ந்
தெடுப்பா ரொருவ னிருப்பநின் றூர்தம் மிருநிதிக்குக்
கொடுப்பா னிசைந்தன மென்றுசொன் னாணங் குலக்கொடியே.
—[அம்பி. 390]

எனவும், [நற்றாய் தன்னுள்ளே இரங்கற்குச் செய்யுள்:—

பூவையுண் டோபுனக் கிள்ளையுண் டோவெண் புதியமணற்
பாவையுண் டோபெற்ற பாவியுண் டோகுன்று பார்த்தழைக்குந்
தேவையுண் டோகற்ற சிற்றிலுண் டோமற்றென் சுற்றமுண்டோ
யாவையுண் டோமக ளேசெல்லு நீயிவ் வருஞ்சுரமே.[அம்பி. 391]

எனவும்,] நற்றாய் பாங்கிதன்னொடு புலம்பற்குச செய்யுள்:—

முன்னே யிதனை மொழிந்திலை யேனுந்தை முந்தைமணம்
பின்னே குழலி பெறுளல்ல ளேபிற ழாதெவர்க்குந்
தன்னேயம் வைத்தரு ளுந்தஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பிற்
பொன்னே யனையநல் லாயவ மேசுரம் போக்கினையே[தஞ்சை.329]

எனவும், [தோழியமுங்க நற்றாய்புலம்பற்குச் செய்யுள்:—

தாயென்செய் தாளென்று தள்ளியென் பாவைதன் பான்மயங்க
மாயஞ்செய் தானொரு வள்ளல்பின் னேயழல் வெஞ்சுரத்துப்
போயென்செய் தாளென் றறிகில னென்றும் பொறியிலியை
நீயென்செய் வாய்மக ளேகண் கணீர்மல்க நின்றுநின்றே.
[அம்பி. 392]

எனவும்,] நற்றாய் பாங்கியர்தம்மொடு புலம்பற்குச் செய்யுள்:—

புறந்தாழ் புரிகுழற் பூவைதன் பாவை புனையலங்கற்
சிறந்தா னொருவள்ளல் செங்கைய தாலெனத் தெய்வந்தொழா
ளறந்தா னிலைபெற் றரும்பழி காக்கு மறிவுநெஞ்சிற்
பிறந்தா ளருஞ்சுரம் பின்செல்ல வேண்டுங்கொல் பேதையரே.
[அம்பி. 393]

எனவும், அயலார்தம்மொடும் புலம்பற்குச செய்யுள்:—

யாழியன் மென்மொழி வன்மனப் பேதையொ ரேதிலன்பின்
றோழியை நீத்தென்னை முன்னே துறந்துதன் னோர்கண்முன்னே
வாழியிம் மூதூர் மறுகச்சென் றாளன்று மால்வணங்க
வாழிதந் தானம் பலம்பணி யாரி னருஞ்சுரமே.[கோவையார். 230]

எனவும், [தத்தையொடுபுலம்பற்குச் செய்யுள்.—

கொன்னுனை வேலம் பலவற் றொழூரிற்குன் றங்கொடியோ
ளென்னணுஞ் சென்றன ளென்னணுஞ் சேரு மெனவயரா
வென்னனை போயினள் யாண்டைய ளென்னைப் பருந்தடுமென்
றென்னனை போக்கன்றிக் கிள்ளையென் னுள்ளத்தை யீர்கின்றதே.

—[கோவையார். 231]

எனவும்,] நற்றாய் தலைமகள்பயிலிடந்தன்னொடு புலம்பற்குச் செய்யுள்:—

நன்றே யுமக்கவர் நல்லதெல் லாஞ்சொல்லி நவ்வியிளங்
கன்றே யருமணிக் கந்துக மேகண் கலந்தழைக்குங்
குன்றே குவலயங் கொய்தட மேயெதிர் கூங்குயிலே
யென்றேகொ லும்மையு மென்னையுங் காணவந் தெய்துவதே

—[அம்பி. 365]

எனவும், நிமித்தம்போற்றற்குச் செய்யுள்:—

பணங்களஞ் சாலும் பருவர வார்த்தவன் றில்லையன்ன
மணங்கொளஞ் சாயலு மன்னனு மின்னே வரக்கரைந்தா
லுணங்கலஞ் சாதுண்ணா லாமொண் ணிணப்பலி யோக்குவன்மாக்
குணங்களஞ் சாற்பொலி யுந்நல சேட்டைக் குலக்கொடியே.

—[கோவையார். 235]

எனவும், தலைவன் மிக அன்புசெய்கவென்று தெய்வத்திற்குப் பராய தற்குச் செய்யுள்:—

ஈன்று புறந்தந்த வெம்மு முள்ளாள்
வான்றோ யிஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை
நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்
முனையா தந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிபடத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரந்
துணிந்துபிற ளாயின ளாயினு மணிந்தணிந்
தார்வ நெஞ்சமொ டாய்நல னளைஇத்தன்
மார்புதுணை யாகத் துயிற்றுக தில்ல
துஞ்சா முழவிற் கோவற் கோமா

னெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கு
நெறியிருங் கதுப்பினென் பேதைக்
கறியாத் தேஎத் தாற்றிய துணையே. —[அகம். 35]

எனவும் வரும். இஃது அகம். நற்றாய் சுரந்தணிவித்தற்குச் செய்யுள்:—

பெற்றே னெடுங்கிள்ளை வாட முதுக்குறை பெற்றிமிக்கு
நற்றேன் மொழியழற் கானடந் தாண்முக நானணுகப்
பெற்றேன் பிறவி பெருமற்செய் தோன்றில்லைத் தேன்பிறங்கு
மற்றேன் மலரின் மலர்த்திரந் தேன்சுடர் வானவனே.

—[கோவையார். 232]

எனவும், நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கற்குச் செய்யுள்:—

தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத் தண்ணனிச்சப்
பூமேன் மிதிக்கிற் பதைத்தடி பொங்குநங் காயெரியுந்
தீமே லயில்போற் செறிபரற் கானிற் சிலம்படிபா
யாமே நடக்க வருவினை யேன்பெற்ற வம்மனைக்கே.

—[கோவையார். 228]

எனவும், நற்றாய் தலைமகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந்திரங்கற்குச் செய்யுள்:—

வைம்மலர் வாட்படை யூரற்குச் செய்யுங்குற் றேவன்மற்றென்
மைம்மலர் வாட்கண்ணி வல்லள்கொல் லாந்தில்லை யான்மலைவாய்
மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென் றெண்ணித்துண் ணென்றொளித்துக்
கைம்மல ராற்கண் புதைத்துப் பதைக்குமெங் கார்மயிலே.

—[கோவையார். 233]

எனவும், நற்றாய் தலைமகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கற்குச் செய்யுள்:—

நாண்மா தவிமலர் நாறிருங் கூந்த னடந்தவழிக்
கோண்மா குளிறுங் கொடுங்குரல் கேட்டொறுங் கூர்ங்கணையால்
வாண்மா முனைவென்ற வாணன்றென் மாறை மணிவரைவேய்த்
தோண்மா வெருவுங்கொல் லோவென்றெ ஞருயிர் சோர்கின்றதே.

—[தஞ்சை. 338]

எனவும், தலைமகள் ஆயமுந் தாயும் அழுங்கக்கண்டு காதலினீரங்கும் கண்டோரிரக்கத்திற்குச் செய்யுள்:—

நொந்துங் கலுழ்ந்துந் துணைவிய ராற்றலர் நோக்கொடின்சொற்
றந்திங் கவையுந் தணந்துசென் றாளெனத் தாள்பணியார்

மைந்துங் கதமுங் கடிந்தருள் வாணன்றென் மாறையன்னாள்
பந்துங் கழங்குமெல் லாங்கண்டு வாடும் பயந்தவளே [தஞ்சை. 339]

எனவும், செவிலி ஆற்றாத்தாயைத்தேற்றற்குச் செய்யுள்:—

வேயின தோளி மெலியல்விண் ணோர்தக்கன் வேள்வியின்வாய்ப்
பாயின சீர்த்திய னம்பலத் தானைப் பழித்துமும்மைத்
தீயின தாற்றல் சிரங்கண் ணிழந்து திசைதிசைதாம்
போயின வெல்லையெல் லாம்புக்கு நாடுவன் பொன்னினையே.

—[கோவையார். 234]

எனவும், முக்கோற்பகவரைவினாதற்குச் செய்யுள்:—

வெதிரேய் கரத்துமென் றோலேய் சுவல்வெள்ளை நூலிற்கொண்மூ
வதிரேம் மறையினிவ் வாறுசெல் வீர்தில்லை யம்பலத்துக்
கதிரேய் சடையோன் கரமா னெனவொரு மான்மயில்போ
லெதிரே வருமே சுரமேவெறுப்பவொ ரேந்தலொடே.

—[கோவையார். 243]

எனவும், மாவிரதியரைவினாதற்குச் செய்யுள்:—

சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கஞ் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தி னீர்புலி யூரம் பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பணைத்திறு மாந்த பயோதரத்தோர்
பித்திதற் பின்வர முன்வரு மோவொர் பெருந்தகையே.

—[கோவையார். 242]

எனவும், உய்த்துணர்வோரை உரைமினென்றற்குச் செய்யுள்:—

முன்னுங் கடுவிட முண்டதென் றில்லைமுன் னோனருளா
லின்னுங் கடியிக் கடிமனைக் கேமற் றியாமயர
மன்னுங் கடிமலர்க் கூந்தலைத் தான்பெறு மாறுமுண்டே
லுன்னுங் கடிதின்றி யோதுங்க ளுண்மறை யுத்தமரே

—[கோவையார். 236]

எனவும், மிக்கோர் ஏதுக்காட்டற்குச் செய்யுள்:—

சுரும்பிவர் சந்துந் தொடுகடன் முத்தும்வெண் சங்குமெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணி யாம்வியன் கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம்பலமனைய
கரும்பன மென்மொழி யாருமந் நீர்மையர் காணுநர்க்கே.

—[கோவையார். 248]

எனவும், செவிலி எயிற்றியொடு புலம்பற்குச் செய்யுள்:—

பேதைப் பருவம்பின் சென்றது முன்றி லெனைப்பிரிந்தா
லூதைக் கலமரும் வல்லியொப் பாண்முத்தன் றில்லையன்னா

ளேதிற் சுரத்தய லாஞெடின் றேகினள் கண்டனையே
போதிற் பொலியுந் தொழிற்புலிப் பற்குரற் பொற்ஞெடியே.

—[கோவையார். 239]

எனவும், செவிலி குரவொடு புலம்பற்குச் செய்யுள்:—

பாயும் விடையோன் புலியூ ரனையவென் பாவைமுன்னே
காயுங் கடத்திடை யாடிக் கடப்பவுங் கண்டுநின்று
வாயுந் திறவாய் குழையெழில் வீசவண் டோலுறுத்த
நீயுநின்பாவையு நின்று நிலாவிடு நீள்குரவே.

—[கோவையார். 241]

எனவும், புறவொடு புலம்பற்குச் செய்யுள்:—

புயலன் றலர்சடை யேற்றவன் றில்லைப் பொருப்பரசி
பயலன் றனைப்பணி யாதவர் போன்மிகு பாவஞ்செய்தேற்
கயலன் றமியனஞ் சொற்றுணை வெஞ்சுர மாதர்சென்று
வியலன் றெனக்கிற் றிலைமற்று வாழி யெழிற்புறவே.

—[கோவையார். 240]

எனவும், சுவடுகண்டிரங்கற்குச் செய்யுள்:—

தெள்வன் புனற்சென்னி யோனம்ப லஞ்சிந்தி யாரினஞ்சேர்
முள்வன் பரன்முரம் பத்தின்முன் செய்வினை யேனெடுத்த
வொள்வன் படைக்கண்ணி சீறடி யிங்கிவை யுங்குவையக்
கள்வன் பகட்டுர வோனடி யென்று கருதுவனே.

—[கோவையார். 237]

எனவும், கலந்துடன் வருவோர்க்கண்டு கேட்டற்குச் செய்யுள்:—

பைந்தார்விடலையு நீயுந்தகவிப் பரிசெதிரே
வந்தார்சிலருள ரோமகளேவண்ட லாடுமந்தண்
சந்தார்தடமுலை யாயமுந்தாயருந் தான்வளர்த்த
செந்தார்மழலைக் கிளியுமென்போலின்று தேடவைத்தே.

—[அம்பி. 405]

எனவும், கலந்துடன் வருவோர் புலம்பதேற்றற்குச் செய்யுள்:—

மீள்வது செல்வதன் றன்னையிவ் வெங்கடத் தக்கடமாக்
கீள்வது செய்த கிழவோ ஞெடுங்கிளர் கெண்டையன்ன
நீள்வது செய்தகண் ணுளிந் நெடுஞ்சுர நீந்தியெம்மை
யாள்வது செய்தவன் றில்லையி னெல்லை யணுகுவரே.

—[கோவையார். 247]

எனவும், செவிலி புதல்வியைக்காணாது கவலைகூர்தற்குச் செய்யுள்:—

கல்லார் சுரத்து வருவா ரிருவரைக் கண்டவெல்லை
யெல்லா மவரவ ரென்றிருந்தேனவ ரெம்மிருவ
ரல்லாநிலைமை யருவினையேனிங் கறிந்தபின்னுஞ்
செல்லாதுமீண்டொருகா லிருகாலுமென் சிந்தையுமே.
—[அம்பி. 407]

எனவும், வரும்.

இவற்றுள், வினவியபாங்கியினுணர்ந்தகாலை இனையலென்போர்க்கு எதிரழிந்திரங்கல் முதலிய மூன்றுஞ் செவிலிபுலம்பற்கும், செவிலியறத்தொடுநிற்றலிற் கவலையில் பாங்கிதன்னொடு புலம்பல் முதலிய நான்கும் நற்றாய் புலம்பற்கும், நிமித்தம்போற்றல் முதலிய ஐந்தும் மனைமருட்சிக்கும், கண்டோரிரக்கமாகிய ஒன்றுங் கண்டோரிரங்கற்கும், ஆற்றாத்தாயைத்தேற்றல் முதலிய ஒன்பதுஞ் செவிலிபின்றேடிச்சேறற்கும் உரியவாமெனக்கொள்க. (166)

167. தெளித்தன் மகிழ்ச்சி வினாதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே

மீட்சி கூறுவனவற்றுள் இஃது அதன் வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) தெளித்தல் முதலாகச் செப்பல் ஈறாக நான்குவகையினையுடைத்தாம் மீட்சி. (எ-று.) (167)

168. தலைவிசே ணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தலுந்
தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலுந்
தலைவிமுன் செல்வோர் தம்மொடு தன்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலு மாங்கவர்
பாங்கியர்க் குணர்த்தலும் பாங்கியர் கேட்டு
நற்றாய்க் குணர்த்தலு நற்றாய் கேட்டவ
னுளங்கொள வேலனை வினாதலு மெனவுடன்
விளம்பிய விருமூன்று மீட்சியின் விரியே.

இது, மீட்சியின்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல் முதலாக நற்றாய் தலைமகனுளங்கொள வேலனைவினாதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் மீட்சியின் விரியாம். (எ-று.)

ஒன்றென முடித்தலால் உடன்போய்வரைந்த நெடுந்தகை மீட்சியுரைத்தலும் வரப்பெறும்.

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தற்குச் செய்யுள்:—

சேடார் மலர்க்குழல் வல்லியை யன்னைவெந் தீவினையே
னூடா வயினில்லை ஞாலத் தகல்வயி னன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடு கடந்துதன்னூர்
வாடா வளமனைக் கொண்டுசென் றானொரு வள்ளலின்றே.

—[அம்பி. 408]

எனவும், உடன்போய்வரைந்த நெடுந்தகை மீட்சியுரைத்தற்குச் செய்யுள்:

அனைத்தாய தன்னக ரான்றபொன் மாளிகைச் சான்றவர்முன்
னனைத்தாய பல்கிளை யேத்த மணம்புரிந் தின்புறுநாண்
மனைத்தாயர் தந்தைதன் னூர்வண்ட லாய மறந்த வெல்லாம்
நினைத்தா ணிரைவளை மீண்டா னறிந்து நெடுந்தகையே.

—[அம்பி. 409]

எனவும், தலைவன்றம்மூர்சார்ந்தமை சாற்றற்குச் செய்யுள்:—

துப்போது சேயிதழ்த் தூநகை யாய்வெஞ் சுரத்திடைநா
மப்போ திருந்த வகன்பொழி லாயத்துன் னூர்முலைக்
கொப்போ தியமென் முகைக்கன்னி காரமிம் முற்றத்துநீ
யெப்போதும் வைகு மிளமரக் காவு மிலஞ்சியுமே.

—[அம்பி. 410]

எனவும், தலைவி முன்செல்வோர்தம்மொடு தம்வரல் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தற்குச் செய்யுள்:—

ஒன்றே யுளங்கொண் டிருபிறப் பெய்திமுத் தீயுமுய்த்து
நன்றே நவில்கின்ற நான்மறை யீர்தம்மை நானகன்ற
வன்றே தொடங்கி யலமரு மாயத் தரிவையர்க்குச்
சென்றே வருவ துரைமின்கள்யாமத் திருநகர்க்கே.

—[அம்பி. 411]

எனவும், முன்செல்வோர் பாங்கியர்க்குணர்த்தற்குச் செய்யுள்:—

நண்போ டினியதொர் நல்விருந் தெய்துவிர் நாளையெல்லைத்
தண்போ தணிகுழற் றையனல் லீர்செய்ய தண்டமிழ்தோய்
பண்போ லினிய பணிமொழிச் செந்தளிர்ப் பைந்தொடிதன்
கண்போ லொருவர் கலந்துடன் மீள்வது கண்டனமே.

—[அம்பி. 412]

எனவும், பாங்கியர் கேட்டு நற்றாய்க்குணர்த்தற்குச் செய்யுள்:—

மேவியொன் றெரெம்மை மெய்த்துணை போக விடுத்திருந்த
பாவியென் றவகை பாக்கியஞ் செய்தனம் பாயரிக்கண்

காவியன் ளுளரும் கானக நீந்திநம் மாநகர்வா
யாவியன் ளுருடன் வந்தனர் காணென்ப ரந்தணரே.
—[அம்பி. 413]

எனவும், நற்றாய் தலைமகளுளங்கொள வேலனை விளுதற்குச் செய்யுள்:—
தென்மாறை நன்னகர் மன்னவன் வாணன் செழுந்தஞ்சைசூழ்
பொன்மா திரத்துப் புலனுணர் வீர்சுரம் போய்வருவோன்
என்மா தரையென் மனைத்தருமோ தன்னை யீன்றநற்றாய்
தன்மா மனையுய்க்குமோ சொல்லு வீரொன்று தானெனக்கே.
—[தஞ்சை. 354]

எனவும் வரும்.

இவற்றுட் தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தலும் தலைவன் தம்மூர்சார்ந்தமைசாற்றலுமாகிய இரண்டுந் தெளித்தற்கும், தலைவி முன்செல்வோர்தம்மொடு தம்வரல் பாங்கியர்க்குணர்த்திவிடுத்தலும் பாங்கியர் நற்றாய்க்குணர்த்தலுமாகிய இரண்டும் மகிழ்ச்சிக்கும், நற்றாய் தலைமகனுளங்கொள வேலனைவிளுதலாகிய ஒன்றும் விளுதற்கும், முன்செல்வோர் பாங்கியர்க்குணர்த்தலாகிய ஒன்றுஞ் செப்பற்கும் உரியவாம். (168)

169. மடந்தையை யுடன்போய் வரைந்துமீடற்கு
மவண்மனை வரைதற்குந் தன்மனை வரைதற்கு
மியைதலு முரிய செவிலிகூற் றொழித்தே.

இது, மேற்கூறியவற்றுள் வரைதற்கும் உரியன இவையென்கின்றது.

(இ-ள்.) மடந்தையை உடன்போய்வரைந்துமீடற்கும் வரையாமல் மீண்டு அவளது மனையின்கண்ணேயாதல் தன்மனையின்கண்ணேயாதல் வரைந்துகோடற்கும் இலக்கணத்தான் உரியவாஞ் செவிலிகூற்றாகிய ஒன்றையும் ஒழித்து அல்லாத ஐந்தும். (எ-று.) (169)

170. விளுதல் செப்பன் மேவலென் றிறைவன்
றனுதில் வரைவு தான்மூ வகைத்தே.

தன்மனைவரைதல் கூறுவனவற்றுள் இஃது அதன்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) விளுதலுஞ் செப்பலும் மேவலுமென மூன்றுவகையினையுடைத்தாம், தலைமகன் மீண்டுவந்து தன்மனையின்கண்ணே வரைதல் (எ-று.) (170)

171. பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற்
செவிலியை விளுதலுஞ் செவிலிக் கிகுளை
வரைந்தமை யுணர்த்தலும் வரைந்தமை செவிலி
நற்றாய்க் குணர்த்தலு முற்றாங் கிருவருந்

தலைவியில் வந்துழித் தலைவன் பாங்கிக்
கியான்வரைந் தமைநுமர்க் கியம்புசென் றென்றலுந்
தானது முன்னே சாற்றிய துரைத்தலு
மென்னுமிவ் வைந்து மின்னிலை வேலோன்
மன்னிய தன்மனை வரைதலின் விரியே.

இது, தன்மனைவரைதல்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *பணிமொழிநற்றாய் மணனயர்வேட்கையிற் செவிலியை வினாதல் முதலாகப் பாங்கி தானதுமுன்னே சாற்றியதுரைத்தல் ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்தும் மீண்டதலைமகன் தலைமகளைத் தன்மனையின் கண்ணே வரைந்துகோடலின் விரியாம்.* (எ-று.)

பணிமொழிநற்றாய் மணனயர்வேட்கையிற் செவிலியைவினாதற்குச் செய்யுள்:—

தாமாக மேவினு நம்மனைக் கேவந்து தண்சிலம்பர்
மாமா திணைமணஞ் செய்வதற் கேமரு வார்கமலப்
பூமாது கேள்வன் புகழ்த்தஞ்சை வாணன் பொருப்பிலினி
யாமா றுயிரனை யாய்சொல்வ மோவவ ரன்னையர்க்கே.

—[*தஞ்சை*. 355]

எனவும், செவிலிக்கிகுளை வரைந்தமையுணர்த்தற்குச் செய்யுள்:—

என்னா மியம்புவ தியாய்க்கினி நாமன்னை யின்றுதம்மிற்
கொன்னாரு நித்திலக் கோதைநம் மாதைக் கொடிநெடுந்தேர்க்
கன்னாடர் மண்கொண்ட வாணன்றென் மாறையிற் காதலர்தாம்
நன்னாண் மணம்புணர்ந் தாரென்று தூதர் நவின்றனரே.

[*தஞ்சை*. 356]

எனவும், வரைந்தமை செவிலி நற்றாய்க்குணர்த்தற்குச் செய்யுள்:—

எனைக்கே ளிருநின் றியற்றவங் கேமண வின்பமெய்தி
யனைக்கேண்மை நண்ணிய வண்ணல் பின்னாகநம் மன்னையின்றிம்
மனைக்கே வருமென வந்துசொன் னார்தஞ்சை வாணன் வெற்பிற்
சுனைக்கேழ் மலர்க்கழு நீர்க்குழ லாய்சில தூதர்முன்னே.

—[*தஞ்சை*. 357]

எனவும், உற்றாங்கிருவருந் தலைவியில் வந்துழித் தலைவன் பாங்கிக்கு யான்வரைந்தமை நுமக்கியம்பு சென்றென்றற்குச் செய்யுள்:—

ஓங்கும் பலவுங் கதலியுஞ் சூழுமெம் மூர்வயிற்போய்ப்
பாங்கொன் றியசெழும் பாவகன் முன்னர்ப் பணிமொழியாய்
வாங்குஞ் சிலைநுதன் மங்கைக்கு மங்கல நாண்புனைந்த
தீங்குன் பெருந்தமர் யாவர்க்கு நீசென் றியம்புகவே. [*அம்பி*. 416]

எனவும். தான் அதுமுன்னே சாற்றினனென்றற்குச் செய்யுள்:—

அன்னைக் கியம்பின ளுண்டகை யான்முன் னறிந்தெதென்னன்
றன்னைப் பணிந்துற் றேவல்செய் யாது சமரெதிர்ந்த
மன்னைப் புறங்கண்ட வாணன்றென் மாறை வரையிலெங்கள்
பொன்னைக் கொணர்ந்துநுங் கேண்முன்னர் நீபொன் புனைந்ததுமே.
—[தஞ்சை. 359]

எனவும் வரும்.

இவற்றுள் நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுத லாகிய ஒன்றும் வினுதற்கும், வரைந்தமை பாங்கி செவிலிக்குணர்த்த லும் வரைந்தமை செலிலி நற்றாய்க் குணர்த்தலும் பாங்கி தான் அது முன்னே சாற்றிய துரைத்தலுமாகிய மூன்றுஞ் செப்பற்கும், தலைமகன் வரைந்தமை நுமர்க்கியம்புசென்றென்றலாகிய ஒன்றும் மேவுதற்கும் உரியவாம். (171)

172. ஆதி யொன்றொழித் தல்லன நான்கு
மாதினை யுடன்போய் வரைந்து மீடற்கு
நீதியி னுரிய நினையுங் காலே.

இது மேற்கூறியவற்றுள் வரைந்துமீடற்கு உரியன இவையென்கின்றது.

(இ-ள்.) நற்றாய் மணனயர் வேட்கை யொன்றும் ஒழித்து அல்லாத நான்குந் தலைமகன் புணர்ந்துடன் போய்த் தலைமகளைத் தன்னூரின் வரைந்து மீடற்கும் உரியவாம் ஆராயுங்காலத்து (எ-று.) (172)

173. இருவரில் லிற்கு மியைந்தபன் னொன்று
மொருவகை மீண்டு வரைதலின் விரியே.

இஃது ஒருவகைமீண்டுவரைதலின் விரி இத்துணைத்தெனத் தொகுத் துணர்த்துகின்றது.

(இ-ள்.) தலைமகன் தம்மூர்சார்ந்தமையுணர்த்தல் முதலாகப் பாங்கி தானதுமுன்னே சாற்றியதுரைத்தல் ஈறாகச் சொல்லப்பட்ட அவண்மனைவரைதற்குந் தன்மனைவரைதற்கும் உரிய கிளவி பதினொன்றும் உடன்போய் மீண்டுவரைந்துகோடலின் விரியாம் ஒரு படியாக. (எ-று.) (173)

ஒருபடியென்றது மேற்சூத்திரங்களுட் கவர்ச்சி நீக்குதற்கெனக் கொள்க.

174. போக்கறி வுறுத்தல் வரவறி வுறுத்த
னீக்க மிரக்கமோடு மீட்சி யென்றாங்
குடன்போக் கிடையீ டொருநான்கு வகைத்தே.

உடன்போக்கிடையீடு கூறுவனவற்றுள் இஃது அதன்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) போக்கறிவுறுத்தல் முதலாக மீட்சி ஈறாக நான்கு வகையினையுடைத்தாம் உடன்போக்கிடையீடு. (எ-று.) (174)

175. நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணர்த்தி விடுத்தலுந் தன்செல
வீன்றாட் குணர்த்தி விடுத்தலு மீன்றாட்
கந்தணர் மொழிதலு மறத்தொடு நிற்றலிற்
றமர்பின் சேறலைத் தலைவிகண் டுரைத்தலு
மவன்விடுத் தகறலுந் தமரோடுஞ் செல்பவ
ளவன்புற நோக்கிக் கவன்றரற் றலுமெனு
மிருமூன் று முடன்போக் கிடையீட்டு விரியே.

இஃது உடன் போக்கு இடையீட்டுவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) நீக்குங்கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தல் முதலாகத் தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றரற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் உடன்போக்கு இடையீட்டுவிரியாம். (எ-று.)

உரையிற் கோடலால் தமர் பின்சேறலைக்கண்டோர் இரங்கலும் வரப்பெறும்.

நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தற்குச் செய்யுள்:—

இன்னே யிரங்குமென் னையத்தவ ருக்குமீன் றெடுத்த
வன்னே யெனவருந் தன்னையருக்குமிவ் வாண் டகைதன்
பின்னே வளங்கெழு தண்ணுறுங் கானகம் போகின்றவா
சொன்னே னுமக்கெம தூர்செல்லுவீரிது சொல்லுமின்றே.

—[அம்பிகா. 418]

எனவும், தலைமகள் தன்செலவு ஈன்றாட்குணர்த்தி விடுத்தற்குச் செய்யுள்:—

நீட்டச் சொல்லா மழுவார் நெல்லை நாதர் சிலம்பிற்கல்வி
நாட்டச் சொல்லீர்முல்லைப் பந்தர்க்குக் கானவ்வி நாவுலரா
தூட்டச்சொல்லீர்புன றேடுமென்பூவை யுறங்கத்தொட்டி
லாட்டச்சொல்லீரந்தணீர் பெற்றபாவி யளவுஞ்சென்றே.

—[நெல்லைக்கோவை. 43]

எனவும், நற்றாய்க்கு அந்தணர் மொழிதற்குச் செய்யுள்:—

அன்பே மருவி யருஞ்சிலை பூண்டகை யாண்டகைபி
னின்பேதை சென்றன ணீணிழற் கானிடை நீபுலம்புற்

றென்பே துறுவ திலங்கிழை யாயிங்ங னெய்தியமான்
றன்பே ரறிவுக் குயர்வட மீனுந் தகுவதன்றே.—[அம்பி. 419]

எனவும், நற்றாயறத்தொடு நிற்றலிற் றமர்பின்சேறலைத் தலைவிகண்டுரைத்தற்குச் செய்யுள்:—

உவலைப் பதுக்கை முரம்பு செல்லாம லுலகமங்கை
தவலைத் தவிர்த்த தமிழ்த்தஞ்சை வாணன் றரியலர்போங்
கவலைக் கடத்துச் சிலைத்திரை கோலிக் கடும்பகழித்
துவலைப் படைக்கட ரேன்றல்பொற் றேர்வங்கஞ் சூழ்கின்
றதே.—[தஞ்சை. 363]

எனவும், தமர் பின்சேறலைக் கண்டோரிரங்கற்குச் செய்யுள்:—

இருகுன்றனைய விளமுலைமாது டனேகுமிவ
ளொருகுன்றெனநின் றுடனும்வெங்கூற்ற மடல்குறித்து
வருகின்றவான்றொடர் வேங்கையைப்போலு மறவர்கெட்டே
னருகொன்றநின்றினியார் தடுப்பாரென் றறிகிலமே.
—[அம்பி. 423]

எனவும், தலைவியைத் தலைவன் விடுத்தகறற்குச் செய்யுள்:—

கொடித்தேர் மறவர் குழாம்வெங் கரிநிரை கூடிலென்கை
வடித்தே ரிலங்கெஃகின் வாய்க்குத வாமன்னு மம்பலத்தோ
னடித்தே லரென்ன வஞ்சுவ னின்னைய ரென்னின்மன்னுங்
கடித்தேர் குழன்மங்கை கண்டிடிவ் விண்டோய் கனவரையே.
—[கோவையார். 216]

எனவும், தமருடன்செல்பவள் அவன் புறநோக்கிக் கவன்றரற்றற்குச் செய்யுள்:—

ஏமா னெனவஞ்ச மேற்காத் தலினவ் விரவிபொற்றேர்
வாமானின் வாழ்வன வாகபன் ஞட்டஞ்சை வாணனென்னார்
போமா னதரிடத் தென்னையர் தோன்றப் புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரகதமே.
—[தஞ்சை. 365]

எனவும் வரும். இவற்றுள் முன்னையமூன்றும் போக்கறிவுறுத்தற்கும் பின்னையமூன்றும் வரவறிவுறுத்தல் முதலாகிய மூன்றற்குந் தனித்தனி உரியவெனக்கொள்க. (175)

176. தன்னூர் வரைதலுந் தன்மனை வரைதலு
மென்னுமிவ் விரண்டொழித் தேவற்றினுங் கிழவோ
னந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலந்
தந்தனன் வரைத றகுதி யென்ப.

இஃது; இவ்வகைவரைவொழித்து எவ்வகைவரைவின்கண்ணும் நிகழுந்திறங் கூறுகின்றது.

(இ-ள்.) உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலும் மீண்டு வந்து தன் மனையின்கண்ணே வரைதலுமாகிய இரண்டுமொழித்து அல்லாத எல்லாவரைவின்கண்ணுந் தலைமகன் அந்தணரையுஞ் சான்றோரையும் முன்னிட்டு அருங்கலங்கொடுத்து வரைதல் உலகியற்கையென்று சொல்லுவர் புலவர். (எ-று.)

இவ்வாறு வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறியதற்குச் செய்யுள்:—

பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரண நீடுக தூரிய மார்க்கதொன் மாலயற்குங்
காரண னேரணி கண்ணுத லோன்கடற் றில்லையன்ன
வாரண வும்முலை மன்றலென் றேங்கு மணமுரசே.

—[கோவையார். 296]

எனவரும். (176)

177. பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலு மூட லுணர்த்தலும்
பிரிவும் பிறவு மருவிய தாகும்.

இது நிறுத்தமுறையானே களவென்னுங் கைகோளுணர்த்தி வரைவின்வழித்தாகிய கற்புணர்த்துவான் புகுந்து அவற்றுள் இஃது அதன் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) பொலிவமைந்த சிறப்பினையுடைய கற்பென்று சொல்லப்படுவது உள்ளமகிழ்ச்சியும் ஊடலும் ஊடலுணர்த்தலும் பிரிவும் பிறவும் பொருந்தியதாம். (எ-று.)

பிரமமுதலியனவுங் கற்பாதலொக்குமேனுங் கந்தருவம்போல ஒத்த அன்புடையராதல் ஒருதலையன்மையின் அவை கைக்கிளைபெருந்திணைப் பாற் படுதலின் அவைபோலாது சிறந்த அளவிலின்பத்து ஐந்திணை மருங்கிற் கற்பென்பார் 'பொற்பமை சிறப்பிற் கற்பெனப்படுவது' என்றார். அஃதாவது, கொண்டானிற்சிறந்த தெய்வமின்றெனவும் அவனை இன்னவாறேவழிபடுகவெனவும் இருமுதுகுரவரானும் அந்தணர் திறத்துஞ் சான்றோர்தேத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகு மொழுக்கமுந் தலைமகனானுங் கற்பித்தவாறொழுகுதலும். இனித் தலைமகனுங் களவின்கண் ஓரையும் நாளுந்தீதென்றதனைத் துறந்தொழுகினாற் போல ஒழுகாது ஓத்தினுங் கரணத்தினும்யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்திற் செல்லுந்துணையும் இல்லறநிகழ்த்தலுமாம். பிறவென்றதனாற் பிரிந்துழிவரும் விகற்பமெல்லாங் கொள்ளப் படும். (177)

178. இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே
யோதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே
பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய வேழும்
வளமலி கற்பிற் கிளவித் தொகையே.

இது, கற்பென்னுங் கைகோளின் கிளவித்தொகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) *இல்வாழ்க்கைமுதலாகப் பொருள் வயிற்பிரிதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழுங் கற்பென்னுங் கைகோளின் கிளவித்தொகையாம்.* (எ-று.) (178)

179. கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென்
றீங்கு நால்வகைத் தில்வாழ்க் கையே.

நிறுத்தமுறையானே இல்வாழ்க்கை கூறுவனவற்றுள் இஃது அதன் வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *கிழவோன்மகிழ்ச்சி முதலாகச் செவிலிமகிழ்ச்சி ஈறாகச் சொல்லப்பட்ட நாலுவகையினையுடைத்தாம் இல்வாழ்க்கை.*(எ-று.) (179)

180. தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலுந்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலுந் தலைவியை
வரையுநா ளளவும் வருந்தா திருந்தமை
யுரையா யென்றலும் பெருமக ளுரைத்தலுந்
தலைவனைப் பாங்கி வரையுநா ளளவு
நிலைபெற வாற்றிய நிலைமை வினாதலு
மன்றன் மனைவரு செவிலிக் கிகுளை
யன்புற வுணர்த்தலும் வாழ்க்கைநன் றறைதலு
மணமனைச் சென்று வந்த செவிலி
பொற்றொடி கற்பிய னற்றாய்க் குணர்த்தலு
நன்மனை வாழ்க்கைத் தன்மை யுணர்த்தலு
மன்னவர் காத லறிவித் தலுமென
வின்னவை பத்துமில் வாழ்க்கை விரியே.

இஃது; இல்வாழ்க்கைவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *தலைவன் தலைவிமுன் பாங்கியைப்புகழ்தல் முதலாக அன்னவர்காதலறிவித்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பத்தும் இல்வாழ்க்கை விரியாம்.* (எ-று.)

தலைவன் தலைவிமுன் பாங்கியைப்புகழ்தற்குச் செய்யுள்:—

அன்னாண் முதலின் றளவுள வாய வரும்படர்போய்ப்
பொன்னா ரமளி பொருந்தினம் யாம்பொருந் தாதவர்மு
னின்னா வரும்பிணிக் கின்மருந் தாகவிடை நின்றநீ
முன்னாண் முயன்ற முயற்சி யிவ்வாறு முடிந்ததுவே.

—[அம்பி. 435]

எனவரும். ஒன்றெனமுடித்தலாற் தலைவனைப்பாங்கிபுகழ்தலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

பனிநின்ற சோலைப் பலவுச் சினைகலை பாய்ந்துகளக்
கனிநின்று நீளுங் கணமலைநாட கழைக் கரும்பை
நுனிநின்ற ருந்திய தொக்குமென் றேமின்னுட ங்கிடையா
டனிநின்ற நாணந் தடுக்க நின்னோடு தொடுத்தவன்பே.

—[அம்பி. 436]

எனவரும். தலைவனைப் பாங்கி வாழ்த்தற்குச் செய்யுள்:—

தேற்றிய வஞ்சினம் பொய்யா வகைநின் றிருப்புயத்தி
லேற்றிய தொங்க லிவள்குழற் கேற்றி யிலங்கிழையார்
தூற்றிய போல வருந்தொலையா வென்கண் சோர்புனலு
மாற்றிய வெம்பெருமான் வாழி வாழி வளஞ்சிறந்தே

—[அம்பி. 434]

எனவும், வரையுநாளளவும் வருந்தாதிருந்தமைபாங்கி தலைவியைவினாதற்குச் செய்யுள்:—

தினைக்காவன்மாறி மலைக்கும்வெம்போர்வெஞ் சிலைக்குறவர்
மனைக்காவலிற்றனி வைகியநாளும் வரைவிடைவைத்
துனைக்காதலர்விட் டுறைந்தவந்நாளு மொளித்ததெங்கே
சுனைக்காவியன்னகண்ணாய் தொலையாநலந் துய்க்குமன்பே.

—[அம்பி. 439]

எனவும், தலைமகள் வருந்தாதிருந்ததற்குக் காரணங்கூறற்குச் செய்யுள்:-

பாங்காய வின்பப் பனிமொழியா யிப்பரிசு நெஞ்சிற்
றாங்கா வருநலந் தாங்கரி தோதலை நாளளித்த
பூங்காவி யுண்டு புரவலர் தாம்வந் திரவுபக
னீங்காத நெஞ்சுமுண் டென்றஞ்ச மாகிய நீயுமுண்டே.

—[அம்பி. 440]

எனவும், பாங்கி தலைவனை வரையுநாளளவு நிலைபெறவாற்றிய நிலைமை வினாதற்குச் செய்யுள்:—

முருகவி ழுங்குளமேன் மோந்தவந்து முலைபுளகித்
துருக முயங்கி மயங்கியு நீருல வாதவின்பம்

பெருகுவ தன்றி யலம்பிற வாயின்னை யானுமக்கிங்
கருகிய நாளென்செய்தி ரையனே யிந்த வன்பு கொண்டே.
—[அம்பி. 438]

எனவும், பாங்கி மணமனைச் சென்ற செவிலிக்கு இருவரன்புமுரைத்தற்குச் செய்யுள்:—

சீரிய லாவியும் யாக்கையு மென்னச் சிறந்தமையாற்
காரியல் வாட்கண்ணி யெண்ணக லார்கம லங்கலந்த
வேரியுஞ் சந்தும் வியறந் தெனக்கற்பி னிற்பரன்னே
காரியல் கண்டர் வண்டில்லை வணங்குமெங் காவலரே.
—[கோவையார். 30]

எனவும், பாங்கி செவிலிக்கு இல்வாழ்க்கை நன்றுணர்த்தற்குச் செய்யுள்:—

பானு றடிசிலு மூனுர் கொழுங்குறைப் பாகுமுற்ற
தேனுர் கருனையுந் தீம்புளிப் பாகுநின் சேயிழையா
ளானுத வன்பி னமைத்திமிழ் வாரி யமிழ்தினன்பன்
றுனுர நல்கி யகமகிழ் கூருந் தகுதியளே. —[அம்பி. 445]

எனவும், மணமனைச் சென்றுவந்த செவிலி பொற்றொடி கற்பியனற்றாய்க் குணர்த்தற்குச் செய்யுள்:—

அருந்தும் பசியு மடுமணற் சோறு மயர்த்திறைவன்
வருந்தும் பசிக்கு வருந்துமில் வாழ்க்கையும் வேட்கையுடன்
பொருந்தும் விருந்தும் புறந்தரு நீர்மையும் போற்றியவன்
றிருந்துந் திறஞ்செய லுங்கற்ற வாநின் றிருமகளே.
—[அம்பி. 446]

எனவும் வரும். ஒன்றென முடித்தலாற் கற்புப்பயந்த அற்புதமுரைத்தலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

சிறப்பந் திகழ்தரு திண்மதிற் றில்லைச்சிற் றம்பலத்துப்
பொறப்பந் தியன்ன சடையவன் பூவண மன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனுங் கடக்கும் படிகடந்து
மிற்பந்தி வாயன்றி வைகல்செல் லாதவ னீர்ங்களிறே.
—[கோவையார். 305]

எனவரும். செவிலி நற்றாய்க்கு நன்மனைவாழ்க்கையுணர்த்தற்குச் செய்யுள்:—

தொண்டின மேவுஞ் சுடர்க்கழ லோன்றில்லைத் தொன்னகரிற்
கண்டின மேவுமி னியவ ணின்கொழு நன்செழுமென்

றண்டின மேவுதிண் டோளவன் யானவ டற்பணிவோள்
வண்டின மேவுங் குழலா ளயன்மன்னு மிவ்வயலே.

—[கோவையார். 302]

எனவும், செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தற்குச் செய்யுள்:—

மன்னவன் றெம்முனை மேற்செல்லு மாயினு மாலரியே
றன்னவன் றேர்புறத் தல்கல்செல் லாது வரகுணனாந்
தென்னவ னேத்துசிற் றம்பலத் தான்மற்றைத் தேவர்க்கெல்லா
முன்னவன் மூவலன் னாளுமற் றோர்தெய்வ முன்னலளே.

—[கோவையார். 306]

எனவும் வரும்.

இவற்றுட், தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தலாகிய ஒன்றுங் கிழவோன்மகிழ்ச்சிக்குந், தலைவனைப் பாங்கி வாழ்த்தல் முதலாகச் செவிலிக்கு வாழ்க்கை நன்றறைதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறனுட் பெருமகளுரைத்தலாகிய ஒன்றுங் கிழத்திமகிழ்ச்சிக்கும், மற்றவை பாங்கி மகிழ்ச்சிக்கும், செவிலி நற்றாய்க்குத் தலைமகள் கற்பியலுணர்த்தல் முதலாகிய மூன்றுஞ் செவிலிமகிழ்ச்சிக்கும் உரியவாம்.

181. வாயில் வேண்டல் வாயின் மறுத்தல்
வாயினேர் வித்தல் வாயினேர் தலென்
றாய பரத்தையி னகற்சிநால் வகைத்தே.

பரத்தையிற் பிரிவுணர்த்துவனவற்றுள் இஃது அதன்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *வாயில்வேண்டல் முதலாக வாயினேர்தல் ஈறாக நான்கு வகையினையுடைத்தாம் பரத்தையிற் பிரிவு. (எ-று.)* (181)

182. காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்
கேதுவி தாமிவ் விறைவிக் கென்றலுந்
தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கலு
மீங்கிது வென்னெனப் பாங்கி வினாதலு
மிறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தலுந்
தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
யவ்வணி யுழையர்கண் டழுங்கக் கூறலும்
பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தைய
ருலகிய னோக்கி விடுத்தலிற் றலைவன்
வரவுகண் டுவந்து வாயில்கண் மொழிதலும்

வரவுணர் பாங்கி யரிவைக் குணர்த்தலு
முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சியு மகிழ்வுமென் றுரைத்தபன் னொன்று
முணர்த்த வுணரு மூடற் குரிய.

இஃது இளையகலாமாகிய ஊடல்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) காதலன்பிரிவுழிக் கண்டோர் புலவிக்கேதுவீதாமிவ் விறைவிக்கென்றல் முதலாகப் புணர்ச்சியின்மகிழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் உணர்த்த உணரும் ஊடற்கு உரியவாம். (எ-று.)

காதலன்பிரிவுழிக் கண்டோர் புலவிக்கேதுவீதாம் இவ்விறைவிக்கென்றற்குச் செய்யுள்:—

பங்கே ருகத்தண் பழனநல் லூரன் பவனிவரக்
கொங்கேய் நறுங்குழற் கோதையர் கண்டு குவித்தகையு
மங்கே யவரவ ரன்புக் கருள்செய் தமைத்தகையும்
பொங்கே ரிளமுலை யாள்புல வாவகை போவதன்றே.

—[அம்பி. 447]

எனவும், தனித்துழி இறைவி துனித்தழுதிரங்கற்குச் செய்யுள்:—

அப்புற்ற சென்னியன் றில்லை யுறாரி னவருறுநோ
யொப்புற் றெழினல லூரன் கவரவுள் ளும்புறம்பும்
வெப்புற்று வெய்துயிர்ப் புற்றுத்தம் மெல்லணை யேதுணையாச்
செப்புற்ற கொங்கையர் யாவர்கொ லாருயிர் தேய்பவரே.

—[கோவையார். 354]

எனவும் வரும். ஒன்றெனமுடித்தலாற்,

தேவா சுரரிறைஞ் சுங்கழ லோன்றில்லை சேரலர்போ
லாவா கனவு மிழந்தே னனவென் றமளியின்மேற்
பூவா ரகலம்வந் தூரன் றரப்புலம் பாய்நலம்பாய்
பாவாய் தழுவிற் றிலேன்விழித் தேனரும் பாவியனே.

—[கோவையார். 355]

எனக் கனவிற்கண்டிரங்கலுஞ்,

செய்ம்முக நீல மலர்தில்லைச் சிற்றம் பலத்தரற்குக்
கைம்முகங் கூம்பக் கழல்பணி யாரிற் கலந்தவர்க்குப்
பெய்ம்முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன் றென்றிலையே
நெய்ம்முக மாந்தி யிருண்முகங் கீழு நெடுஞ்சுடரே.

—[கோவையார். 356]

எனச் செஞ்சுடர்க்குரைத்ததூஉம்,

பூங்கு வளைப்பொலி மாலையு மூரன்பொற் றோளிணையு
மாங்கு வளைத்துவைத் தாரேனுங் கொள்கநள் ளாரரணந்

நீங்கு வளைத்தவில் லோன்றில்லைச் சிற்றம் பலத்தயல்வா
யோங்கு வளைக்கரத் தார்க்கடுத் தோமன் னுருவரையே.

—[கோவையார். 357]

என வாரம்பகர்ந்ததூஉம்,

அலையேற் றியவிப்பி வைத்தடுப் பாக வரும்பவிழ்தே
னுலையேற் றியசங்கி னித்திலம் பெய்தன லொண்டுகிராற்
கலையேற் றியநுதல் நாமடுஞ் சோறிடக் கைக்கமலத்
திலையேற்ற வெம்பசி யின்றில்லை யோநம் மிறையவர்க்கே.

—[அம்பி. 449]

என அடிசிலமைத்த மடவரலிரங்கலுங்,

காவும் பருமணற் கானலும் போயருங் கங்குலினும்
வாவும் பரிநெடுந் தேர்வரக் காண்கிலம் வாவிதொறு
மேவுங் கருங்கயல் செங்கழு நீரின் மிசைபிறழப்
பூவும் புலவுங் கமழ்புன லூரன் புகற்சிநன்றே. [அம்பி. 450]

எனத் தலைவன் பிரிந்தமைக்கிரங்கலும் வரப்பெறும்.

ஈங்கிதுவென்னெனப் பாங்கிவினுதற்குச் செய்யுள்:—

எம்மா திரமும் புரவலர்த் தேடி யிரந்துழல்வோர்
தம்மா துயரந் தவிர்த்தருள் வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
நம்மாவி யன்னவர் நாடொறு நாடொறு நல்கவுநீ
விம்மாவருந்துவதேன் பிரிந்தாரின் விளங்கிழையே.

—[தஞ்சை. 379]

எனவும், இறைமகன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தற்குச் செய்யுள்:—

தாராக நல்கினர் காரிகை யாய்தஞ்சை வாணன்றன்னைச்
சேரா தவரெனத் தீவினை யேனையச் செங்கண்வன்கட்
காரான் கழனிக் கரும்பினஞ் சாயக் கதழ்ந்துசெந்நெ
லாரா தயலின்பஞ்சா யாருமூர னயலவர்க்கே. [தஞ்சை.380]

எனவும், தலைவியைப் பாங்கிகழறற்குச் செய்யுள்:—

மாலைக் குமுத மலர்தருந் தேனுண்ட வண்டுவரக்
காலைக் கமலங் குவிந்தது வோவருங் கற்பினுக்கு
மேலைக் கருங்குழல் மங்கையர் காதல ரென்செயினுஞ்
சீலத்தி யல்புகுன் றூர்வருந் தேல்மெய் திருந்திழையே.

—[அம்பி. 453]

எனவும் வரும்.

செவ்வணியணிந்து சேடியைவிடுப்புழி அவ்வணியுழையர்கண்டழுங்கக்கூறலுமெனவே, அனுவாதமுகத்தாற் செவ்வணியணிந்து சேடியை

விடுவாயென்றலும் விடுத்தலும் வரப்பெறும். அவற்றுள் விடுவாயென்றற்குச் செய்யுள்:—

பருதி நிறத்துப் பணித்துகி லார்த்துப் பணைமுலைமேற்
குருதி நிறத்துகிர் குங்குமஞ் சேர்த்தியிக் கோலங்கொண்டு
கருதிய கற்புக் கடனெறி கூறிநங் காதலர்க்கு
வருதி யெனப்பகர்ந் தேவிடு சேடியை வாணுதலே.

[அம்பி. 454]

எனவும், விடுத்தற்குச் செய்யுள்:—

அரத்த முடீஇ யணிபழுப்பப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் சூட்டிப்—பரத்தை
நினைநோக்கிக் கூறினு நீமொழிய லென்று
மனைநோக்கி மாண விடும். —[திணை 150-ல் 144]

எனவும் வரும்.

அவ்வணியுழையர் கண்டழுங்கக் கூறற்குச் செய்யுள்:—

வேளாண் மரபு விளக்கிய வாணன்மின் னூர்கழல்சூழ்
தாளான் வளங்கெழு தஞ்சையன் னீர்சங்கந் தந்தநன்னீர்த்
தோளா மணியன்ன தொல்குல வோடையிற் றோன்றியபூ
வாளா வலர்தொடப் பார்க்கெங்ங னேவந்து வாய்த்ததுவே.

—[தஞ்சை. 382]

எனவும், பரத்தையர்கண்டு பழித்தற்குச் செய்யுள்:—

தண்ணந் துறைவன் மனையுறை பாவை தருதிசொல்லிற்
பண்ணென் றியமொழி யீர்வகை யேபணி வார்குவளைக்
கண்ணுங் குழலுங் கருகித் துகிலுங் கனதனமும்
வண்ணஞ் சிவந்து வெளுத்தது நாணு மடமையுமே

—[அம்பி. 456]

எனவும், வரவுகண்டு வந்து வாயில்கள் மொழிதற்குச் செய்யுள்:—

வில்லைப் பொலிநுதல் வேற்பொலி கண்ணி மெலிவறிந்து
வல்லைப் பொலிவொடு வந்தமை யானின்று வான்வழுத்துந்
தில்லைப் பொலிசிவன் சிற்றம்ப லஞ்சிந்தை செய்பவரின்
மல்லைப் பொலிவய லூரன்மெய் யேதக்க வாய்மையனே.

—[கோவையார். 368]

எனவும், தலைமகன்வரவு பாங்கி தலைவிக்குணர்த்தற்குச் செய்யுள்:—

புறத்தா றெழுகி வரினும்இப் போது புகையுயிர்த்த
லறத்தாறுமன்பு மருளுமன் றேயன்பர் தேர்கடவி

மறத்தாரை வாள்விழி யாய்திரு மாளிகை வாசல்வந்துன்
றிறத்தார்வ முற்றுநின் றூரெதிர் கோடல் சிறப்புடைத்தே.
—[அம்பி. 457]

எனவும், தலைவனைத் தலைவி எதிர்கொண்டுபணிதற்குச் செய்யுள்:—

மருவிற் பெருநல மன்னுவ தாந்தஞ்சை வாணன்வெற்ப
ரொருவிற் பசலை யுருக்குவ தாமெமக் கூடலெவ்வா
றிருவிற் புருவ விளங்கொடி யேயெய்து மெய்தலில்லாத்
திருவிற் புனைநறுந் தார்வரைமார்பர் திருமுனின்றே.
—[தஞ்சை. 386]

எனவும் வரும்.

உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தேன் புலந்து. —[அதிகாரம். 129]

இதுவும் அது. புணர்ச்சியின் மகிழ்தற்குச் செய்யுள்:—

உள்ளத் துவகை யொருதலைப் பட்ட விருதலைப்பைம்
புள்ளொத் தினிய புதுமலர்க் காவிற் புணர்ந்தவின்ப
வெள்ளக்கடலிடை வீழ்ந்துடனீந்துவர் மெய்மறந்து
வள்ளக் கமல வளவய லூரனு மாதருமே. —[அம்பி. 460]

எனவரும். (182)

183. வெள்ளணி யணிந்து விடுப்புழிப் புள்ளணி
மாலைவே லண்ணல் வாயில் வேண்டலுந்
தலைவிநேய் யாடிய திகுளை சாற்றலுந்
தலைவன் றன்மனத் துவகை கூர்தலுந்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுந்
தலைவி யுணர்ந்து தலைவனோடு புலத்தலும்
பாணன் முதலாப் *பாங்க னீறுப்
பேணிய வாயில்கள் பேரியோன் விடுத்துழி
மறுத்தலும் விருந்தோடு வந்துழிப் பொறுத்தல்கண்
டிறையோன் மகிழ்தலு மிறைமகள் விருந்துகண்
டொளித்த வூடல் வெளிப்பட நோக்கிச்
சீறே லென்றவள் சீறடி தொழலுமஃ
தெங்கையர் காணி னன்றன் றென்றலு
மங்கவர் யாரையு மறியே னென்றலுங்
காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலுந்
தாமக் குழலியைப் பாங்கி தணித்தலுந்

* பாங்கியீறாக.—[நம்பி. சூ. 206].

தணியா ளாகத் தலைமக னூடலு
மணிவளைப் பாங்கி யன்பிலை கொடியையென்
றிணர்த்தார் மார்பனை யிகழ்தலும் பிறவு
முணர்த்த வுணரா வூடற் குரிய.

இது முதியகலாமாகிய ஊடல்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) வெள்ளணியணிந்துவிடுப்புழித் தலைவன் வாயில்வேண்டல் முதலாகப் பாங்கி தலைவனை அன்பிலைகொடியையென்றிகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்டனவும் பிறவும் உணர்த்தவுணராவூடற்கு உரியவாம். (எ-று.)

அநுவாதமுகத்தால் வெள்ளணியணிந்துவிடுத்தலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

துதையுஞ் சுரும்புறை மல்லிகை வேய்ந்துவெண் டூசுபுனைந்
திதயங் களிவர நித்திலம் பூண்டெதிர்ந் தாருடலம்
புதையம் பனைய விழிமட மாதர்பொற் பூண்புதல்வ
னுதயம் புகல வகலமுன் னேடின னூரனுக்கே. [அம்பி. 462]

எனவரும்.

வெள்ளணியணிந்துவிடுப்புழிப் புள்ளணிமாலைவேலண்ணல் வாயில் வேண்டற்குச் செய்யுள்:—

என்பாற் குறையை நினைந்து மறுதெதிர் கொள்ளவல்லே
தன்பாற் புலவி தணிசென்று நீதஞ்சை வாணன்வைய
மன்பாற் பரவும் புகழுடை யானரு ளேயனையா
ளுன்பாற் புலவி யுறுள்வண்ண வார்குழ லொண்ணுதலே.

—[தஞ்சை. 388]

எனவும், தலைவிநெய்யாடியது இகுளைசாற்றற்குச் செய்யுள்:—

கையார் வரிவளைக் காரிகை நீயுங் கடும்பரியு
மையார் விழிவிலை மங்கைய ரில்ல மறந்துவந்த
தெய்யா திருந்தில் ளய்யா வருமணி யீன்றெடுத்த
மெய்யா றவும்விர வுந்துனியாறவும் வேண்டுமின்றே.

—[அம்பி. 464]

எனவும், தலைவன் தன்மனத்துவகைகூர்தற்குச் செய்யுள்:—

செய்யுந் தவமுடை யேன்சென்று காண்குவ தென்றுசெவ்வி
மையுண் குவளை மடங்கெழு நோக்கு மனமகிழ்வுங்
கையுங் குழலியுந் தீம்பா லெறிக்குங் கனதனமு
நெய்யும் பசந்து நிலவெழு மேனியு நீர்மையுமே.

—[அம்பி. 465]

எனவும், தலைவிக்கவன்வரல் பாங்கிசாற்றற்குச் செய்யுள்:—

மருவார் குழலி வருந்திய மெய்யு மகவுங்கையும்
பருவார் முணிந்த பயோதர பாரமும் பச்சுடம்பு
மொருவாத வுள்ளத் துவகையுங் காணநம் மூரர்நின்பொற்
றிருவாசல் வந்துநின் றூரறி யேனின் றிருவுளமே.

—[அம்பி. 466]

எனவும், தலைவியுணர்ந்து தலைவனொடுபுலத்தற்குச் செய்யுள்:—

ஆம்பால் விரவின தன்பா லறிந்தயி லன்னமன்னீர்
போம்பா லனையசொற் பூவையர் சேரியிற் புல்லியிங்ஙன்
யாம்பா லனைக்கொண் டினிவைகல் போக்குது மெம்முலையிற்
றீம்பால் படிலவர்செய்குறி மார்பிற் சிதையுமன்றே.

—[அம்பி. 471]

எனவும், பாணன்முதலாப் பாங்கனீறுப் பேணியவாயில்கள் பெரியோன் விடுத்துழித் தலைமகள் மறுத்தலுட்பாணன்மறைக்குச் செய்யுள்:—

மைகொண்ட கண்டார் வயல்கொண்ட தில்லைமல் கூரர்நின்வாய்
மெய்கொண்ட வன்பின ரென்பதென் விள்ளா வருள்பெரியர்
வைகொண்ட வூசிகொற் சேரியின் விற்றெம்மில் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை யாத்தின்னி போந்ததுவே.

—[கோவையார். 386]

எனவும் வரும்.

பிறவென்றதனால் வாயின் மறுக்கப்பட்ட பாணன் கூறலுந்தலைமகள் பாணனைச் சொல்லலும் வரப்பெறும். அவற்றிற்குச் செய்யுள்:—

கொல்லாண் டிலங்கு மழுப்படை யோன்குளிர் தில்லையன்னாய்
வில்லாண் டிலங்கும் புருவ நெரியச்செவ் வாய்துடிப்பக்
கல்லாண் டேடேல்கருங் கண்சிவப் பாற்று கறுப்பதன்று
பல்லாண் டடியே னடிவலங் கொள்வன் பணிமொழியே.

—[கோவையார். 387]

எனவும்,

வண்புன லூர்வையை சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போற்
கண்புன லூருநின் காதல்கண் டேனென் கடைத்தலைக்கே
தண்புன லூரன்வந் தானென்று சாற்றினை தானமுறுப்
பண்புன லூர்களெல் லாம்பாடி யேற்கின்ற பாண்மகனே.

—[தஞ்சை. 395]

எனவும் வரும்.

விறலிவாயின் மறுத்தற்குச் செய்யுள்:—
அயிலுங் கயலு மனையகண் ணஞ்சன மாற்றிவஞ்சத்
துயிலுந் துடைத்தவன் றேசெவி தூர்ந்தது சோர்ந்ததுள்ளம்
மயிலின் புறத்து முருகனைப் போல வருமகிழ்நன்
பயிலும் பரத்தையர் பாடியிற் பாடினி பாடினியே.
—[அம்பி. 487]

எனவும், கூத்தர்வாயின் மறைக்குச் செய்யுள்:—
வடிக்கண் ணியரொடும் வந்தனை நீவந் தனைசெயலுன்
னடிக்கும் பழைய நடத்தி லொன்றோவிந் நடிமறவா
ரடிக்கண் ணதிர்கழல் வீரிய நாமங்கொ ளாரியவிப்
படிக்கண் ணகர்முழு தும்பாடி யாடும் பரத்தையரே.
—[அம்பி. 488]

எனவும், பாங்கி வாயின்மறைக்குச் செய்யுள்:—
உடைமணி கட்டிச் சிறுதே ருருட்டி யுலாத்தருமிந்
நடைமணி யைத்தந்த பின்னர்முன் னுன்முகன் மாலறியா
விடைமணி கண்டர்வண் டில்லைமென் றோகையன் னார்கண்முன்னங்
கடைமணி வாணகை யாயின்று கண்டனர் காதலரே.
—[கோவையார். 385]

எனவும், விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தற்குச் செய்யுள்:—
கருந்துன்று வார்குழற் கன்னியில் வாழ்க்கையுங் கையுஞ்செவ்வாய்
முருந்தொன்று மூரல் முறுவலுங் காண முகமறியா
விருந்தொன்று வேறொன்றின் மீளா வருந்துனி மீட்கநல்ல
மருந்தொன்று வந்திங்ஙனே மனமே வந்து வாய்த்ததுவே.
—[அம்பி. 492]

எனவும் வரும்.

[அனுவாதமுகத்தால் விருந்துடன்வந்துழிப் பொறுத்தலும் வரப் பெறும். அதற்குச் செய்யுள்:—
வண்டார் மகிழ்நன் வருவது கேட்டு மலர்க்கணம்பு
கொண்டாள் புருவச் சிலைகுனித் தாள்குளிர் வெண்பனிசூழ்
வெண்டா மரைவியர்த் தாளுயிர்த் தாணல் விருந்தயலே
கண்டாள் முகமலர்ந் தாள்புரந் தாளருங் கற்பினையே.
—[அம்பி. 491]

எனவரும்.]

தலைமகள் விருந்துகண்டொளித்தவூடல் பள்ளியிடத்துவெளிப்படத் தலைமகனோக்கிச் சீறேலென்று அவள் சீறடிதொழுதற்குச் செய்யுள்:—

படர்ந்த கலாமின்ன தென்றுரை யாமற் பயிலமளி
கடந்த கலாபங் கலைபுறஞ் சூழக் கதந்தணியத்
தொடர்ந்த கலாத துணையடித் தாமரை சூடிவலிம்
மடந்தை கலாமகலா மலிநீர் கண்கள் மல்கினவே.

—[அம்பி. 494]

எனவும் வரும்.

அனுவாத முகத்தான் ஒளித்தவூடல் வெளிப்படலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

திருத்தி யன்போடு திளைக்கின்ற செவ்விச் செருக்கிடையே
கருத்திலங் குற்ற கலாமிங் கறிந்திலங் காதலியா
ளொருத்தியென் றன்னை யொருவனென் றேயிருந் தேனினிநீ
யிருத்தியென் றேமொழி யாவிழிந்தாள் பள்ளி யின்னகையே.

—[அம்பி. 493]

எனவரும்.

இஃது எங்கையர்காணின் நன்றன்றென்றற்குச செய்யுள்:—

தொடிவைத்த செங்கை யலவ னுலாவுந் துறைசெயத்தோர்
வடிவொத்த சிந்தை மலிபுன லூர வணங்கியநின்
முடிவைத்த செங்கையு மென்முலை யாக முயங்கவந்தென்
னடிவைத்த செங்கையு மெங்கையர் காணி லறவுநன்றே.

—[அம்பி. 495]

எனவும், நின்னலைது அங்கவர்யாரையும் அறியேனென்றற்குச் செய்யுள்:—

மன்னும் புலவியை மாற்றியுந் தேற்றியும் வல்லவண்ண
மின்னந் தெளியிலை யென்னையென்னே யென்செய் கேனிதற்கு
முன்னம் படிந்து முழுகுநன் னீர்க்கங்கை முன்றுறைநீத்
தன்னம் படியுங்கொல் லோவுவ ராழியி லாரணங்கே.

—[அம்பி. 478]

எனவும், காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தற்குச் செய்யுள்:—

ஐயுற வாய்நம் மகன்கடைக் கண்டுவண் டேருருட்டு
மையுறு வாட்கண் மழவைத் தழுவமற் றுன்மகனே
மெய்யுற வாமிதுன் னில்லே வருகென வெள்கிச்சென்றாள்
கையுறு மான்மறி யோன்புலி யூரன்ன காரிகையே.

—[கோவையார். 391]

எனவும், தலைமகளைப் பாங்கி புலவிதணித்தற்குச் செய்யுள்:—

உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல். —[குறள் 2. அதிகாரம். 131]

எனவும் வரும்.

மாவா ரணமன்ன வாணன்றென் மாறைநம் மன்னனின்னைப்
பாவாய் பணியவும் பார்க்கிலை நீயிடப் பாகமங்கை
தாவாத சங்கரன் கங்கைதன் கொங்கை தழீஇயிதழிப்
பூவார்சடைமுடிமேல் வைத்தபோதும் பொறுத்தனளே.

—[தஞ்சை. 401]

இதுவுமது.

[அனுவாதமுகத்தாற் தலைவி புலவி தணியாளாகலும் வரப்பெறும். அதற்குச் செய்யுள்:—

பங்கய மல்லற் பழனநன் னாடும் பதியுமில்லை
மெங்கையர் போல வினியமல் லோமெங்கள் பாற்றொடர்பு
செங்கயல் பாயக் கருங்கய மேவிய சேவலன்னஞ்
சங்கய லேதிரி தண்புன லூர தருவதன்றே. —[அம்பி. 496]

எனவரும்.]

தலைமகள் தணியாளாகத் தலைமகனூடற்குச் செய்யுள்:—

திருந்தே னுயநின்ற சிற்றம் பலவர்தென் னம்பொதியி
லிருந்தே னுயவந் திணைமலர்க் கண்ணினின் னேக்கருளிப்
பெருந்தே னெனநெஞ் சுகப்பிடித் தாண்டநம் பெண்ணமிழ்தம்
வருந்தே லதுவன் றிதுவோ வருவதொர் வஞ்சனையே.

—[கோவையார். 394]

எனவும், பாங்கி அன்பிலை கொடியையென்று இணர்த்தார் மார்பனை இகழ்தற்குச் செய்யுள்:—

நெறியா ரலங்கன் மணிமுடியா யென்று நின்னையன்றி
யறியாவி வளிங் கரியளன்றே மண்ணி லாரிடத்துங்
குறியா தவன்புடைக் கொம்பனை யாரைக் குறுகியந்தண்
முறியார் களப முலைமுகந் தோறு முயல்கசென்றே.

—[அம்பி. 499]

எனவும் வரும்.

[அனுவாதமுகத்தான் அன்பிலை கொடியை யென்றலும் வரப் பெறும் அதற்குச் செய்யுள்:—

வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும், அதுவே
வெய்ய வுவர்க்கு மென்றனி
ரைய வற்றா லன்பின் பாலே.

—[குறுந். 196]

எனவரும்.]

பிறவென்றதனால், மகப்பொறை கூர்ந்தவண்ண முரைத்தலுந் தலைவன் புதல்வனைக் காண்டலும் பள்ளியினமர்ந்தலும்,

பரத்தையர் காதற்பரத்தையைப் புகழ்ந்து தம்மை இகழ்தலும் தலைவிபுனலாடலும் பரத்தையரோடு புனலாடியதில்லை யென்ற வழி உரைத்தலும் பரத்தையைப் பழித்தலுங் காமக்கிழத்தி வாயில் வேண்டலும் பாங்கி வாயினேர்வித்தலும்,

புதல்வன் வாயிலும் புதல்வர்ப் புலத்தலும் மகற்கறிவுறுத்தலும் மகப்பழித்து நெருங்கலும் வரப்பெறும். அவற்றுட் புதுப்புனல் வரவுரைத்தல் முதலிய ஏழற்கும் பரத்தையைப் பழித்தற்குஞ் செய்யுள் முன்னர்க் காட்டினும்.

மகப்பொறைகூர்ந்த வண்ணமுரைத்தற்குச் செய்யுள் :—

சீலந் தகைபெறு சாலியன் ஞள்சிறு வற்றரித்த
காலந் தமது கவினிறம் பெற்றன காலமின்னுங்
கோலந் தருஞ்செங் குமுதமு நீலமுங் குன்றெடுத்த
பாலன் றுயில்கொண்ட பாயலுங் காலைப் பதுமமுமே.

—[அம்பி. 461]

எனவும், தலைவன் புதல்வனைக் காண்டற்குச் செய்யுள்:—

ஆவுங் கனகமு மந்தணர்க் கீந்தங் கமரர்க்கெல்லாம்
பூவும் புகையும் பொழிந் தவியேற்றிப் புதியபண்ணும்
பாவும் புனைந்து பரிசிலர் பாடப் பருவநன்றி
யாவும் பெறவெடுத் தான்குடித் தோன்றலை யேந்தலுமே.

—[அம்பி. 468]

எனவும், தலைவன் பள்ளியினமர்ந்தற்குச் செய்யுள்:—

துணையேது மின்றி நடுங்குமின் போலுந் துடிமருங்குற்
பிணையே மடநடைப் பெண்ணமுதே யின்பப் பேருததிப்
புணையே யனையபொற் றேரூர் தனமுமிப் பொங்கமளி
யணையே பொருந்த வரும்புற மோவெமக் காவதின்றே.

—[அம்பி. 472]

எனவும்,

[பதங்கம்பழிச்சற்குச் செய்யுள்:—

அறவோர் மொழிந்த வரிந்தமன் காத்த வகன்புறவக்
குறவோ பதங்கம் விகங்கமன் றேவுத விக்குதவி
நறவோடு தண்புன ஞடனென்றே யென்க ணல்கியதால்
மறவோ மிதற்குள்ள வாசியெந் நாளு மடமயிலே.

—[அம்பி. 473]

எனவும்,]

காமக்கிழத்தி வாயில் வேண்டற்குச் செய்யுள்:—

வெறுக்கத் தருவன செய்யினு மூரன் விளங்கிழைநீ
பொறுக்கத் தகாதவெம் போலலை யேவெம் புரவியின்றிச்
சிறுக்கைத் தலங்கொண்டு தேர்கடவா நின்ற சிங்கம்பெற்றுங்
கறுக்கத் தருவதன் றேசிவப் பூரநின் கண்ணிணையே.

—[அம்பி. 489]

எனவும், பாங்கிவாயினேர்வித்தற்குச் செய்யுள்:—

பூவேய னையர் புரிகுழல் பூவையர் பூவையயின்
மாவே யனையர் வரிகழற் காளையர் வாணெடுங்க
ணேவே யனைய விலங்கிழையாய் நின் றிரங்கலென்னே
நீவே யனைய நிரைவளைத் தோளி நிறம்பசந்தே.

—[அம்பி. 500]

எனவும்,

[புதல்வற் புலத்தற்குச் செய்யுள்:—

மைவார் குழன்மட மங்கையர் தங்கள் வதுவையுன்னிக்
கைவா ரணங்கட வும்பெரு மாளைக் கலுழ்ந்தழைத்துன்
செவ்வாய் முதல வணிந்தசெஞ் சாந்தஞ் சிதையப்புல்லி
யிவ்வாறு செய்ததெல் லாம்யாவர் மேலினி யேறுவதே.

—[அம்பி. 503]

எனவும், மகற்கறிவுறுத்தற்குச் செய்யுள்:—

கொய்யுஞ் சுவற்பரி யுங்குலப் பாகுமுட் கோலுமில்லா
வையங் கடவு மழகளி றேவருந் தாமலெங்கை
செய்யும் பெருந்தவ மேகலந் தாருழைத் தீமையுமப்
பொய்யுங் கல்லாதொழி வாய்புன லூரனைப் போலவின்றே.

—[அம்பி. 504]

எனவும், மகற்பழித்து நெருங்கற்குச் செய்யுள்:—

வலத்தியல் சூல மதுரேசர் கோயில் வலஞ்செயப்போய்ச்
சலத்தியல் செய்து வருங்களி றேவிலை சாற்றிவிற்கு

நலத்தியர் சேரிக்கு நல்விருந் தாவது நாளுமுங்கள்
குலத்தியல் பாயிருந் தாலுன்னை யோநொந்து கூறுவதே.
—[மதுரைக்கோவை. 349]

எனவும் வரும்.] (183)

பிறவுமன்ன.

184. ஆயிழை மைந்தனு மாற்ற மையும்
வாயி லாக வரவெதிர் கோடலு
மணந்தவன் போயபின் வந்த பாங்கியோ
டிணங்கின மைந்தனை யினிதிற் புகழ்தலுந்
தலைவனைப் புகழ்தலுஞ் சிலைநுதற் பாங்கி
மனைவியைப் புகழ்தலு மினையவும் பிறவு
மனைவகை மொழிந்த வதன்பாற் படுமே.

இஃது உணர்த்த வுணராவூடற்குரிய ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்) ஆயிழைமைந்தனும் ஆற்றமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகளெதிர்கோடல் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்டனவும் பிறவும் அத்தன்மைத்தாகிய உணர்த்த வுணராவூடற்கு உரியவாம். (எ-று.)

இவற்றை வேறுகூறியது அவைபோலாத ஊடற்சிறுபான்மை நோக்கியென்க.

மகனும் ஆற்றமையும் வாயிலாகத் தலைமகன்வந்துழித் தலைமகளெதிர்கோடற்குச் செய்யுள் :—

வெள்ளம் பரந்தன்ன வேட்கைசென் றாலு மிகப்பெரியோ
ருள்ளஞ் சிறியவர் மேற்செல்வரே வொளிர் கோமளஞ்சேர்
வள்ளங் கமல மலர்த்தஞ்சை வாணன்றென் மாறையன்னப்
புள்ளம் புனல்வய லூரபுன் காமம் புகல்வதன்றே.
—[தஞ்சை 404]

எனவும், தலைமகனைப் புணர்ந்து நீங்கியபின் வந்தபாங்கியொடு தன் மகனைப் புகழ்ந்துரைத்தற்குச் செய்யுள்:—

இருமையி லேயும் பயன்களெல் லாந்தன்னை யீன்றநமக்
கொருமையிலேவந்துறத்தகைந்தான்மைந்தனெஞ்சுடர்போல்
வருமயி லேகொண்டு மாதடிந் தானன்ன வாணன்றஞ்சைத்
திருமயி லேயனை யாய்புன லூரனைத் தேருடனே.
—[தஞ்சை 405]

எனவும், தலைவி தலைவனைப் புகழ்தற்குச் செய்யுள்:—

கொண்டானிற் றுன்னிய கேளிர்மற் றில்லைக் குறிப்பினென்று
தண்டா தவர்சொன்ன சால்புகண் டேன்றல கேழ்புரக்கும்

வண்டார் மணிப்புயன் வாணன்றென் மாறை மகிழ்நர்முன்னு
ளுண்டா கியபழங் கேண்மையி்ந் நாளு மொழிந்திலரே.

—[தஞ்சை 406]

எனவும், பாங்கி தலைவியைப் புகழ்தற்குச் செய்யுள்:—

சிறந்தார் புகழ்தருந் தீம்புன லூரன்செய் தீமையெல்லா
மறந்தார்வ மெய்தி வணங்குத லாலிவள் வாணன்றஞ்சை
நிறந்தா ரகையன்ன நித்திலம் போலுநன் னீள்குலத்திற்
பிறந்தார் நிறைந்தகற் போர்வடி வேபெற்ற பெற்றியளே.

—[தஞ்சை 407]

எனவும் வரும். (184)

185. மூன்று சூத்திரத்து மொழிந்தவை யெல்லா
மான்ற பரத்தையி னகற்சியின் விரியே.

இது பரத்தையிற் பிரிவின்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) காதலன் பிரிவுழிக்கண்டோர் புலவிக்கேதுவீதாமிவ் விறைவிக்கென்றல் முதலாகப் பாங்கிமனைவியைப் புகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பரத்தையிற் பிரிவின்விரியாம். (எ-று.)

வாயில்வேண்டல் முதலாக நான்குவகைக்கும் ஏற்குமாறு அறிந்து கொள்க. (185)

186. பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தப் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்போறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைய
கல்வி முதலா வெல்லாப் பிரிவும்.

நிறுத்தமுறையானே இது கல்வி முதலிய பிரிவின்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) பிரிவறிவுறுத்தல் முதலாக வந்துழிமகிழ்ச்சி ஈறாகக் கூறப்பட்ட ஒன்பது வகையினையுடையவாங் கல்வி முதலாகிய ஐந்துவகைப் பிரிவும். (எ-று.)

ஒருமையிற் கூறுதல், ஒரு தன்மைபற்றிக் கூறுதல்.

ஒரு தன்மைபற்றிக் கூறுதலான் ஒன்பது வகையவாமெனவே, பல தன்மைபற்றிக் கூறிற் பல்வேறு வகையவாமென்பதூஉம் பெற்றாம். பெறவே, வகைவேறுபாடே விரியாகலின் அவற்றின் விரியும் உடன் கூறினாரென்பது. பிரிவறிவுறுத்தல் ஒரு தன்மைபற்றிக் கூறுமிடத்து ஒன்றாயினும், தலைவன் பாங்கிக்குப் பிரிவறிவுறுத்தலும் அவள் அதனைத்

தலைவிக் கறிவுறுத்தலும் எனப் பலதன்மைபற்றிக் கூறுமிடத்துப் பலவாமாறுங் காண்க. ஏனையவற்றிற்கும் எற்புழி இவ்வாறே உய்த்துணர்க.

கல்விப்பிரிவு பாங்கிக்குத் தலைவனறிவுறுத்தற்குச் செய்யுள்:—

சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையி
ரைள வில்லா வளவுஞ்சென் றூரம் பலத்துணின்ற
வோரளவில்லா வொருவ னிருங்கழ லுன்னினர்போ
லேரள வில்லா வளவின ராகுவ ரேந்திழையே.

—[கோவையார். 308]

எனவும், கல்விப்பிரிவு தலைவிக்குப் பாங்கியறிவுறுத்தற்குச் செய்யுள்:—

வீதலுற் றார்தலை மாலையன் றில்லைமிக் கோன்கழற்கே
காதலுற் றார்நன்மை கல்விசெல் வீதரு மென்பதுகொண்
டோதலுற் றாருற் றுணர்தலுற் றார்செல்லன் மல்லழற்கான்
போதலுற் றார்நின் புணர்முலை யுற்ற புரவலரே.

—[கோவையார். 309]

எனவும், கல்விக்குப்பிரிந்துழிக் கார்ப்பருவங்கண்டு தலைவி வருந்தியதற்குச் செய்யுள்;—

யாணர்க் குழன்மொழி யென்செய்கு வேன்கல்வி யெல்லையெல்லாங்
காணப் பிரிந்தவர் காண்கில ராற்கடன் மேய்ந்துதஞ்சை
வாணற் கெதிர்ந்தவர் மங்கையர் போலுமென் வல்லுயிரி
னூணற்ப மென்னவெண் ணுவரு மேகமுருமுடனே.

—[தஞ்சை. 409]

எனவும், கார்ப்பருவங்கண்டு வருந்திய தலைவியைத் தோழியாற்றுவித்தற்குச் செய்யுள்:—

திருமா லறியாச் செறிகழற் றில்லைச்சிற் றம்பலத்தெங்
கருமால் விடை யுடையோன்கண்டம் போற்கொண்ட லெண்டிசையும்
வருமா லுடன்மன் பொருந்த திருந்த மணந்தவர்தேர்
பொருமா லயிற்கணல் லாயின்று தோன்றுநம் பொன்னகர்க்கே.

—[கோவை. 326]

எனவும்,

காவற்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தற்குச் செய்யுள்:—

அல்ல வைநீக்கி யறப்புறங் காக்கவு மாதுலர்கள்
சொல்லுவ கேட்டவர் துன்பந் துடைக்கவுஞ் சூழ்கடற்பா
ரெல்லைபி னென்னையொன் றின்னா செயுமிகல் வாட்டுதற்குஞ்
செல்லுவ தேகட னாடு காவல் சிறந்தவர்க்கே.

—[அம்பி. 519]

எனவும்,

[பாங்கி காவற்பிரிவுடன் படாமைக்குச் செய்யுள்:—

பண்காவல் கொண்ட பணிமொழிச் செங்கைப் பசுங்கிளிக்குன்
கண்காவ லென்பதுங் கண்டுஞ்செல் வீர்கொல் கருங்கடல்சூழ்
மண்காவல் கொண்ட மணிநெடு வேன்முடி மன்னவர்க்குப்
பெண்காவல் கொள்கை பெரும்பழி போலும் பெருந்தகையே.

—[அம்பி. 520]

எனவும்,]

காவற்பிரிவு தலைவிக்குப் பாங்கியறிவுறுத்தற்குச் செய்யுள்:—

மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்
வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகங்
காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர் கார்க்கயற்கட்
பூப்பா னலமினி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே.

—[கோவை. 312]

எனவும்,

காவற்குப் பிரிந்துழித் தலைவி கூதிர்ப் பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—

நிறைசூ லெழிலி பொழிந்துகண் மாறிய பின்னைநின்ற
குறைசூழ் புறவு குழைபயன் சோருங் குறுந்துளிகொண்
டறைசூறை வாடை யலைக்குநன் ஞளிங் கறிகிலர்கொ
னறைசூழ் மலர்க்குழலாய்நாடு காவ னயந்தவரே.

—[அம்பி. 522]

எனவும், கூதிர்ப்பருவங்கண்டு வருந்தியதலைவியைத் தோழியாற்றுவித்தற்குச் செய்யுள்:—

பணிவார் குழையெழி லோன்றில்லைச் சிற்றம் பலமனைய
மணிவார் குழன்மட மாதே பொலிகநம் மன்னர்முன்னுப்
பணிவார் திறையும் பகைத்தவர் சின்னமுங் கொண்டுவண்டே
ரணிவார் முரசினொ டாலிக்கு மாவொ டணுகினரே.

—[கோவை. 330]

எனவும்,

[வினைமுற்றிமீண்டமை பாங்கி தலைவிக்குணர்த்தற்குச் செய்யுள்:—

புங்கம் படவண் டிமிர்நறுங் கோதைப் புரிகுழலா
யங்கம் படர்கொண் டழிவதென் னேயினி யாடினரைப்
பங்கம் படவென்ற பன்மணித் தேர்வெம் பரிகடவிச்
சங்கம் படக முழங்கவந் தார்நந் தலைவரின்றே. —[அம்பி. 536]

எனவும் வரும். இவை இரண்டும் வன்பொறைக்குரியவாம். பிறவும் அன்ன.]

தூதிற்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தற்குச் செய்யுள்:—

மூளா வரும்பழி மூண்டிரு வேந்தர்கண் மொய்யமரின்
மாளா வகைசென்று மாற்றுதல் வேண்டி மணிவரைவேய்த்
தோளாய் பிரிந்து வருநா ளளவுஞ் சுரும்பிமிர்பூந்
தாளார் மலர்க்குழ லாள்வருந் தாவகை சாற்றுகவே.[அம்பி. 523]

எனவும்,

[பாங்கி பிரிவுடன்படாமைக்குச் செய்யுள்:—

வேயுங் கரும்பும் விரும்பிய தோளிந்த மெல்லியலும்
யாயும் பகைகண் டிருக்கவைத் தோவெதிர்ந் தார்முனையிற்
பாயும் புரவிப் படையிரு வேந்தர் பகைத்தவரைப்
போயுந் தணித்துப் பொருந்திடு மாறு வருந்துவதே.

—[அம்பி. 524]

எனவும்,

தூதிற்பிரிவு தலைவிக்குப் பாங்கியறிவுறுத்தற்குச் செய்யுள்:—

மிகைதணித் தற்கரி தாமிரு வேந்தர்வெம் போர்மிடைந்த
பகைதணித் தற்குப் படர்தலுற் றூர்நமர் பல்பிறவித்
தொகைதணித் தற்கென்னை யாண்டுகொண் டோன்றில்லைச் சூழ்
முகைதணித்தற்கரிதாம் புரிதாழ்தரு மொய்குழலே. [பொழில்வாய்

—[கோவை. 314]

எனவும்,] தூதிற்பிரிந்துழித் தலைவி முன்பனிப்பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—

பருந்தார் சுடரிலை வேற்பகை வேந்தர் பகைதணிப்பப்
பிரிந்தார் வருகிலர் பெய்வளை யாய்பிர சம்புலந்து
கருந்தா மரையெனச் செந்தா மரைகரு கப்பெருக
வருந்தார் வருந்துற மஞ்சுதெற் கோட வரும்பனியே.

—[அம்பி. 526]

எனவும், தூதிற்பிரிந்துழி முன்பனிப்பருவங்கண்டு வருந்தியதலைமகளைத் தோழியாற்றுவித்தற்குச் செய்யுள்:—

சுற்றுங் குழனின் பிணிவிடுப் பான்வந்து தோன்றினர்பார்
முற்றும் பொழிகின்ற முன்பனி நாண்முகி லுங்கடலும்
வற்றும் பருவத்து மண்புரப் பான்றஞ்சை வாணனென்னார்ச்
செற்றும் படையின்வெம் போர்தணிப் பானன்று சென்றவரே.

—[தஞ்சை. 416]

எனவும் வரும். பிறவுமன்ன. துணையிற்பிரிவு தலைமகனுணர்ந்த தோழி அதற்குடன்படாமைக்குச் செய்யுள்:—

கன்னற் சிலைமதன் காதுஞ் செருவிற் கலங்குகின்ற
வின்னற் குதவிசெய் தாலென்ன தாகு மிருஞ்செருவின்
மன்னர்க் குதவி செயப்பிரி யும்வரி யுங்கழற்காற்
செந்நெற் பழனக் கழனிநல் லூரவெஞ் சேயிழைக்கே.

—[அம்பி. 528]

எனவும், துணைவயிற்பிரிவு தலைவிக்குப் பாங்கியறிவுறுத்தற்குச் செய்யுள்:—

போது குலாய புனைமுடி வேந்தர்தம் போர்முனைமேன்
மாது குலாயமென் னோக்கிசென் றார்நமர் வண்புலியூர்க்
காது குலாய குழையெழி லோனைக் கருதலர்போ
லேது கொலாய்விளை கின்றதின் றோன்று ரிடுமதிலே.

—[கோவை. 316]

எனவும், துணைவயிற்பிரிந்துழித் தலைவி பின்பனிப்பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—

சுற்றின வீழ்பனி தூங்கத் துவண்டு துயர்கவென்று
பெற்றவ ளேயெனைப் பெற்றாள் பெடைசிற கின்றொடுக்கிப்
புற்றில வாளர வன்றில்லைப்புள்ளுந்தம் பிள்ளைதழீஇ
மற்றினஞ் சூழ்ந்து துயிலப் பெறுமிம் மயங்கிருளே.

—[கோவை. 320]

எனவும் வரும்.

[தலைவி பாணனைப் பாசறைவிடுத்தற்குச் செய்யுள்:—

தகைமெலி யக்கொங்கை தங்குபைம் பொன்னும்வெஞ்சாயகப்பூந்
தொகைமெலி யப்படுந் துன்பமுஞ் சொல்லு தொழுதிறைஞ்சாப்
பகைமெலி யத்தங்கு பாசறை மேற்செல்லு பாணன்முல்லை
முகைமெலி யப்புனை தொங்கலெங் கேள்வர்தம் முன்புசென்றே.

—[அம்பி. 530]

எனவும், தலைவன் பாணனை வினவுதற்குச் செய்யுள்:—

[1]தேதா வெனமுரல் செவ்வழி யாழ்கொண்டு சேரிவிட்டுப்
போதாத பாணரெப் போதுவந் தீர்புல வுண்பருந்து
மீதாடு பாசறை வாய்வினை யேனுக்கு வேனெடுங்கட்
சூதார் வனமுலைத் தோகையென் னோநின்று சொல்லியதே.

—[அம்பி. 531]

1. (பா—ம்) சேதாவனமுலைச் செவ்வழியாய்

எனவும், தலைவனுக்குப் பாணன்கூறற்குச் செய்யுள்:—

திருவடி வீழ்ந்தடி யேன்திரு வேவிடை யென்றுசெப்பப்
பருவர லெம்பெரு மாட்டி பகர்ந்தது பற்றலரைப்
பொருதிகல் வென்ற புனைமணித் தேரும் புரவலரும்
வருவது கண்டிட யாம்பெற்றி லேமென்னும் வாசகமே.

—[அம்பி, 532]

எனவரும். இது சொல்லிய கூற்றெனச் சொல்லியதாகலின் பிரிவுழித் தலைவிகலங்கற்பாற்படும். தலைவன் பாசறைப்புலம்பற்குச் செய்யுள்:—

சாந்தங் கமழுந் தடமுலை யாணின்ற தன்மையிது
வேந்தன் பகைமுற்றி மீளவெண் ணேன்வெயில் போயொளித்துக்
காந்துங் கடுங்கன லும்பொடி போர்க்குங் கடைப்பனிநாள்
போந்திங் கிருந்துவிட் டேனென்ன பாவம் புகல்வதுவே.

—[அம்பி. 533]

எனவரும். தலைவிபிரிந்துழிக் கனவுகண்டிரங்கற்குச் செய்யுள்:—

வனவேய் பொருதடந் தோள்வடந் தோய்முலை வல்லுப்புல்ல
நனவே யெனவுன்னி நாட்டந் துறந்துநன் ஞானமில்லா
ரெனவே தனிநின் றிரங்கவெங் கானத்தி கலுங்கங்குற்
கனவே யுனக்குங் கனவெய்து மாலொரு காலத்திலே.

—[அம்பி. 551]

எனவும் வரும் இவை ஆறும் பிரிவுழிக் கலங்கற்கு உரியவாம்.]

பின்பனிப் பருவங் கண்டுவருந்திய தலைவியைத் தோழியாற்றுவித்தற்குச் செய்யுள்:—

வடுக்கண் டனையகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பி
லடுக்கங் குளிர வசைகின்ற வாடை யகன்றவர்க்கு
நடுக்கஞ்செய் பின்பனி நாளின்வந் தாரமர் நண்பனுற்ற
விடுக்கண் களையவன் றேயகன் கான மிகந்தவரே.

—[தஞ்சை. 419]

எனவரும்.

தூதுந் துணையு மேதுவாகச்
சென்றோ னவ்வினை நின்றுநீட்டித் துழிப்
புலந்துபாசறைப் புலம்பவும்பெறுமே. —[இ. வி. சூ. 461]

என்பவாகலின், வினை ஓர் யாண்டின்முடியாது நீட்டித்தவழித் தலைவன் தலைமகளுருவு வெளிப்பாடுகண்டு சொல்லியதற்குச் செய்யுள்:—

மைக்குஞ் சரநிரை யாற்றஞ்சை வாணன் மருவலரைக்
கைக்குங் களங்கெழு பாசறை யூடு கயலும்வில்லு

மொய்க்குஞ் சுடரிள வம்புலி தானு முயங்கியெல்லாத்
திக்குந் தொழவரு மேசுருளோலைத் திருமுகமே.

—[தஞ்சை. 423]

எனவரும். இது வன்பொறைக்குரித்து. வினைமுடித்ததன்பின் வியன் பதிசேய்த்தென வினைதற்குச் செய்யுள்:—

முன்னிட்ட வாசி நுகம்பூட் டறாமுன்பின் னுக்குதிண்டேர்
பின்னிட்ட வோட்டங் கடிந்துநண் பாபொரும் பேரரசர்
வென்னிட்ட வேல்வல வாணன்றென் மாறைசெல் வெண்புரிமின்
றன்னிட்ட மேசென்ற காரென்செய் யாது தனிச்சியையே.

—[தஞ்சை. தனி,]

எனவும் வரும் வினைமுற்றிமீண்டவன் உருவுவெளிப்பாடுகண்டு கூறிய தற்குச் செய்யுள்:—

வரிதரு காஞ்சி மணிநெடுந் தேரும் வயங்கெழுவான்
பரியுமி ருங்கட் பகடுமை வாட்படை யுங்குவிந்து
திரியமு னிந்தது தேர்வல வாவகல் வார்செருவிட்
டிரியமு னிந்திறை கொண்டகல் காலையி லெத்திக்குமே.

—[அம்பி. 534]

எனவும் வரும். இவையிரண்டும் வருவழிக்கலங்கற்குரியவாம். பாசறை முற்றிமீண்டு ஊர்வயின்வந்த தலைமகன் பாகற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:—

மால்கொண்ட வாரண வாணன்றென் மாறை வலவநண்ணார்
கால்கொண்ட வாளமர் கையகல் பாசறைக் கைவயின்முட்
கோல்கொண்ட வாறுநின் னேவல்கொண் டியானிக் கொடிநெடுந்
மேல்கொண்ட வாறுநம் மூர்வந்த வாறும் வியப்பெனக்கே. [தேர்

—[தஞ்சை. 424]

எனவரும். இது வந்துழிமகிழ்ச்சி. பிறவும் அன்ன.

பொருள்வயிற்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தற்குச் செய்யுள்:—

முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியுமெனப்
பனிவருங் கண்பர மன்றிருச் சிற்றம் பலமனையாய்
துனிவரு நீர்மையி தென்னென்று தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோவென்று வந்திக்கு நன்னுதலே.

—[கோவை. 332]

எனவும், பொருள்வயிற்பிரிவு தலைவிக்குப் பாங்கி அறிவுறுத்தற்குச் செய்யுள்:—

வறியா ரிருமை யறியா ரெனமன்னு மாநிதிக்கு
நெறியா ரருஞ்சுரஞ் செல்லலுற் றார்நமர் நீண்டிருவ

றறியா வளவுநின் றேன்றில்லைச் சிற்றம் பலமனைய
செறிவார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் திருநுதலே.
—[கோவை. 333]

எனவும் வரும்.

திருநூ ரகத்துநின் றோர்திருப் பாடகத் துள்ளிருந்தோர்
மருவூர் பொழில்வெஃ கணைக்கிடந் தோர்வண் டிலாவுமலர்த்
தருவூர் பொழிற்றந்தி வெற்பின்மின் னோநந் தனமுழுது
மொருவூர் கலத்திற்சென் றார்தன மாக வுணர்ந்திலரே.
—[திருப்பதிக் கோவை]

இதுவும் அது பாங்கி தலைவிக்குடன்படுத்தற்குச் செய்யுள்:

இருங்கற் புடையவ ரின்புறு மாடவ ரேகுவது
மருங்கற் புடையவ ராற்றுந் திறனு மணியிழைப்பென்
மருங்கிற் படர்முலை யாயவர் மீண்டு வருவதுவுங்
கருங்கற் புடைதழு வுங்கடன் ஞாலங் கடனென்றுமே.
—[அம்பி. 547]

எனவரும்.

இத்து எனையவற்றிற்கும் ஒக்கும். பொருள்வயிற்பிரிந்துழித் தலைவி இளவேனிற்பருவங்கண்டு வருந்தியதற்குச் செய்யுள்:—

வாழும் படியொன்றுங் கண்டிலம் வாழியிம் மாம்பொழிற்றேன்
சூழு முகச்சுற்றும் பற்றின வாற்றொண்டை யங்கனிவா
யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பல மாதரியாக்
கூழின் மலிமனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே.
—[கோவை. 322]

எனவும், இளவேனிற்பருவங் கண்டு வருந்தியதலைவியைத் தோழியாற்றுவித்தற்குச் செய்யுள்:—

வார்த்தன பார மடமயி லேகுயின் மாருதமாந்
தேர்த்தனி வீரன் றிருநா ளிதுவந்து சேர்மினென்று
தார்த்தட மொரு வெனும்புயன் வாணன்றஞ் சாபுரிநின்
றூர்த்தது கேட்டுவந் தார்பொரு டேட வகன்றவரே.
—[தஞ்சை. 422]

எனவும்,

தலைவிக்குத் தோழி நிமித்தங்கூறற்குச் செய்யுள்:—

அரவிசைக் குந்திரு வல்குனல் லாயடை யார்மடியப்
பொரவிசைக் கும்பரி பூண்டுபொற் றேர்நம் புரவலர்தாம்

வரவிசைக் கும்பல்லி வாமந் துடிக்கும் வரிநெடுங்க
ணிரவிசைக் குங்குழ லோடிள வாடையின் றென்செயுமே.
—[அம்பி. 535]

எனவும், தலைவன் வரவுணர்த்தற்குச் செய்யுள்:—

குரவலர் பூங்குழ லார்நெடு வீதி குறுகிவண்டு
விரவலர் தூவி மிகமிக வாழ்த்த வியந்துமுன்னின்
றிரவல ரேத்த வினவளை யார்ப்ப வியமுழங்கப்
புரவல ரின்றுவந் தார்திரு வேதம் பொருண்முடித்தே.
—[அம்பி. 556]

எனவும், தலைவனைப் பாகன்றேற்றற்குச் செய்யுள்:—

திண்காட் டிருஞ்சுரஞ் சேய்த்தென வேங்கின் றிருவுளத்துப்
புண்காட் டனைந்து புலம்பா தொழிபொறை காட்டுகின்ற
மண்காட்டு திண்புயத் தான்வாணன் மாறையின் மன்னவநின்
கண்காட்டு முன்னங் கடிதினின் வாழ்பதி காட்டுவனே.
—[தஞ்சை. 341]

எனவும் வரும். இவை நான்கும் வன்புறைக்கு உரியவாம். பொருள்வயிற்பிரிந்து மீண்ட தலைமகன் சுரத்திடைத் தலைவியை நினைத்தற்குச் செய்யுள்:—

சேணுந் திகழ்மதிற் சிற்றம் பலவன்றெண் ணீர்க்கடனஞ்
சூணுந் திருத்து மொருவன் றிருத்து முலகினெல்லாங்
காணுந் திசைதொறுங் கார்க்கய லுஞ்செங் கனியொடுபைம்
பூணும் புணர்முலை யுங்கொண்டு தோன்றுமொர் பூங்கொடியே.
—[கோவை. 341]

எனவரும். இது வருவழிக்கலங்கற்கு உரித்து. தலைமகன் வந்துழித் தலைவி மகிழ்ச்சிக்குச் செய்யுள்:—

பரியுங் கரியும் பரிநெடுந் தேரும் படைநவின்று
விரியுங் கடலன்ன தானையும் வேந்தும்வெம் போர்கடந்து
வரியுங் கழல்முடி மன்னர் நின்றேத்த வரும்பரிசுந்
தெரியுந் தெரியிழையீர் காண வாருமிச் சேணிலத்தே.
—[அம்பி. 537]

எனவும், தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங்கண்டு உவந்து சொல்லியதற்குச் செய்யுள்:—

கொத்தல ரோதியங் கொம்பரன் னாள்பொங்கு கொங்கைவிம்ம
முத்தல ராகமுயங்கினம் யாமுழு நீர்விழிபோல்

மைத்தலர் நீல மலர்வயல் சூழ்தஞ்சை வாணன்வ ரைமைக்
கைத்தல மான வினிப்பொழி வாழிய கார்ப்புயலே.
—[தஞ்சை. 425]

எனவும் வரும், பிறவும் அன்ன.

187. கூறிய வகப்பொரு ளாறிரு வகைத்தாய்ப்
பாட்டுறுப் பாய்வரூஉம் பண்பிற் றென்ப
போக்கரு மரபிற் புல்லிய நெறித்தே.

மேற்கூறியவாற்றான் அகப்பொருளிலக்கணம் அகத்திணையியலுள்ளும் புறப்பொருளிலக்கணம் புறத்திணையியலுள்ளும் அணியிலக்கணம் அணியியலுள்ளுஞ் செய்யுளிலக்கணஞ் செய்யுளியலுள்ளும் உணர்த்தி அவற்றின் ஒழிபிலக்கணங்களுள் ஒவ்வொன்றற்குச் சிறந்தனவற்றை அவ்வவோத்துக்களுள் உணர்த்தி அந்நான்கற்கும் பொதுவாய் எஞ்சி நின்றனவற்றைப் பாட்டியலுள் உணர்த்துவான் தொடங்கி அவ்வாறு அகத்திணையியலுணர்த்தி அதனொழிபுணர்த்திய புகுந்தவற்றுள் "செய்யுளிடவயிற் புல்லியநெறித்தே." என்பதனான் இச்சூத்திரம் அகப்பொருள் செய்யுளகத்து வருங்கால் இத்துணைப் பகுதிப்பட்டு இவ்வாறு வருமென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

என்னை ? பொதுப்படச் "செய்யுளிடவயிற்புல்லிய நெறித்தே." என்றதுணையல்லது பன்னிருபகுதிப்பட்டு உறுப்பாய் வருமென்னும் விசேடவிதி ஆண்டுப் பெறப்படாமையின்.

(இ - ள்.) மேற்கூறிப் போந்த அகப்பொருள் செய்யுளகத்து வருங்காற் பன்னிருபகுதியையுடைத்தாய்ச் செய்யுட்கு உறுப்பாய் வந்து விளங்கும் இயல்பினையுடைத்தாம். (எ - று.)

ஒழிபெனப் படுவ தகப்பாட் டுறுப்பும்
வழுவு மமைதியுந் தழுவிய தாகும். —[நம்பி. சூ. 210]

என இப்பன்னிரண்டையும் அகப்பாட்டு உறுப்பாக நோக்கி அகத்திணையொழிபாக்கின் அது பொருந்தாது; செய்யுளுறுப்பாக நோக்கியவழி அவை செய்யுளிலக்கணமாவதல்லது அகத்திணையொழிபாகாமையின். (187)

188. திணையே கைகோள் கூற்றே கேட்போ
ரிடனே காலம் பயனே முன்ன
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென
வப்பா லாகுமவ் வாறிரு வகையே.

இது மேல் ஆறிருவகையென்றார் அவை இவையென்கின்றது.

(இ - ள்.) திணைமுதலாகத் துறையீறாகக் கிடந்த அப்பகுதிகளாம் மேற்கூறிய பன்னிருவகை. (எ - று.) (188)

189. முன்னவை யிரண்டுஞ் சொன்னவை யாயவற்
றொன்றவண் வருத லொன்றித் தோன்றும்.

இது, நிறுத்தமுறையானே எழுவாயெண்ணு முறைமைக்கண் நின்ற திணையும் இரண்டாமெண்ணு முறைமைக்கண் நின்ற கைகோளும் இவ் வியல்பினவாய்ச் செய்யுட்கு உறுப்பாய் வருமென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) *முதற்கணின்ற திணையுங் கைகோளும் மேற்கூறிய இலக்கணத்தனவாகிக், கைக்கிளை முதலிய எழு பெரு திணையுள் ஆண்டைக்கு இயைபுடைய யாதானுமொரு திணை செய்யுளகத்து அதற்கு உறுப்பாய் வருதலும், களவுங் கற்புமாகிய கைகோளிரண்டனுள் ஆண்டைக்கு இயைபுடைய யாதானுமொரு கைகோள் செய்யுளகத்து அதற்குறுப்பாய் வருதலும் பொருந்தித், தோன்றும். (எ-று.)*

முன்னவையிரண்டுஞ் சொன்னவையாகுமென்று ஒழிபிற்கூறியது கூறலாமல்லது அகத்திணை யொழிபாகாமையின் வருமென்றும், ஒன்றவண் வருமென்னுது வாளாவருமெனின் அவைவரினும் வரும் வாராதொழியினும் ஒழியுமெனப்படுதலான் ஒன்றவண் வருமென்றுங் கூறினார் என்றுணர்க. (189)

190. பார்ப்பான் பாங்கன் றோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
டளவியன் மரபி னறுவகை யோருங்
களவியற் கிளவிக் குரிய ராகலும்
பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த வறுரோடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பியற் கிளவிக்
குரிய ராகலு முரிய வாகும்.

இது மூன்றுமெண்ணு முறைமைக்கண் நின்ற கூற்று இருவகைக் கைகோளினும் செய்யுட்கு உறுப்பாய் வருங்கால் அஃது இத்துணைத் தாய் வருமென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) *பார்ப்பான் முதலாகச் சொல்லப்பட்ட கலந்தொழுகும் மரபினையுடைய அறுவகையோருங் களவென்னுங் கைகோள்பற்றிச் செய்யுளகத்து நிகழுங் கிளவி கூறுதற்கு உரியராகலும் பாணன் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகையோரும் மேற்சொல்லப்பட்ட பார்ப்பான் முதலாகிய அறுவகையாரோடுங்கூடப் பன்னிருவருங் கற்பென்னுங் கைகோள்பற்றிச் செய்யுளகத்து நிகழுங்கிளவி கூறுதற்கு உரியராகலுஞ் சிறந்தனவாம். எ - று.*

தொன்னெறி மரபென்றதனாற் பாகனுந் தூதனுங் கூறவும் அமையும் அவர் ஏனையர்போலச் சிறப்பிலராயினும் எனக்கொள்க.

பார்ப்பான் நன்றுந் தீதும் ஆராய்ந்து உறுதிகூறும் உயர்குலத்தோனாகிய தோழன். பாங்கன் பெரும்பாலும் தலைவன் வழி நின்றொழுகும் ஒத்தகுலத்தோனாகிய தோழனும் இழிந்தகுலத்தோனாகிய தோழனுமாம்.

கலந்தொழுகும் மரபென்றதனாற் பார்ப்பாரினும் பாங்கரினுஞ் சிலரே அதற்கு உடன் படுவாரெனவுந் தொன்னெறி மரபிற்கிளவியென்றதனான் அவர் குலந்தோறுங் கிளந்து வருகின்ற நெறியை உடையரென்றுங் கொள்க.

பெயர்த்தனன் முயங்கயான் வியர்த்தன னென்றனள்
—[குறு. 84.]

இது செவிலிகூற்று.

பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி. —[அகம். 48.]

என்பதும் அது.

கேளிர் வாழி கேளிர் —[குறு. 280.]

இது கிழவன்கூற்று.

விளங்குதொடி முன்கை வளைந்து புறஞ்சுற்றி
நின்மார் படைதலி னினிதா கின்றே. —[அகம். 58.]

இது கிழத்திகூற்று.

ஆடலிற் பயின்றனை யென்ற தென்னுரை
யூடலிற் றெளிதல் வேண்டும். —[தொல். 502. சூ. உதா.]

இது கூத்தன் கூற்று. பிறவும் அன்ன;

191. ஊரு மயலுஞ் சேரி யோரு
நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்னையுங்
கொண்டெடுத்து மொழியப் படுவ தல்லது
கூற்றவ ணின்மை யாப்புறத் தோன்றும்.

இஃது எய்தாதது எய்து விப்பதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) ஊரிலுள்ளாரும் அயன்மனையுள்ளாரும் சேரியினுள்ளாரும் நோய்ப்பக்கங் குறிப்பினால் அறிந்தோருந் தந்தையுந் தமயனுமென இவ்வெண்ணப்பட்ட அறுவகையோரும் இருவகைக் கைகோளும்பற்றிச் செய்யுளகத்துக்கூற்று நிகழ்த்துங்கால் அந்நிகழ்ச்சி கொண்டெடுத்து மொழியப்படுவதல்லது முகத்துரையாக நிகழ்த்தும் நிகழ்ச்சி ஆண்டில்லாமை வலியுறத்தோன்றும். (எ - று.)

கொண்டெடுத்து மொழிதல் இவர் கூற்றாகப் பிறர்கூறுதல்.

ஊஉ ரலரெழச் சேரி கல்லென. —[குறு. 262]

எனவும்,

எந்தையு
நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
வெவனிலகுறுமக ளியங்குதி யென்னும். —[அகம். 12]

எனவும் வரும்.

யாப்புறத்தோன்றும் என்பதனான் அகத்திணைக்கண் அவ்வாறு நிகழு மெனவும் புறத்திணைக்கண் அவர் கூறவும்பெறுமெனவுங் கொள்க. (191)

192. கிழவோன் றன்னொடுங் கிழத்தி தன்னொடு
நற்றாய் கூறன் முற்றத் தோன்றாது.

இது நற்றாய்கூற்றிற்கு உரிய மரபு விலக்கியல்வகையான் விதிப்பது ஆயதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) தலைவனொடுந் தலைவியோடும் இடையிட்டு நற்றாய்கூறுதல் நிரம்பத்தோன்றாது. (எ-று.)

நற்றாயென்று ஒருமைகூறியவதனாற் தலைமகள் தாயே கொள்ளப் படும். இதனானே தந்தை தன்னை என்பனபோல்வனவற்றுக்கும் இஃதொக்கும். முற்றவென்றதனாற் தானேதலைவனுதலாற் தலைவன்றமர் யாவருங் கூறார் முற்கூறப்பட்டாரல்லாரென்பதுங் கொள்க. முற்றா தென்னாது தோன்றாதென்றதனாற் புறத்திணைக்கண் இவை வரைவின்றி வழக்கினொடுபொருந்துமாற்றாற் கொள்ளப்படுமென்பது. கிழவோன்றன் னொடுங் கிழத்திதன்னொடுங் கூறாளெனவே அல்லுழிச்சொல்லப்பெறும் நற்றாயென்பதாம். அஃது,

எம்வெங் காம மியைவ தாயின்
மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகை காவிற் றுளுநாட் டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பிற்
செறிந்த சேரிச் செம்மன் மூதூ
ரறிந்த மாக்கட் டாகுக தில்ல
தோழி மாரும் யானும் புலம்பச்
சூழி யானைச் சுடர்ப்பூ ணன்னன்
பாழி யன்ன கடியுடை வியனகர்ச்
செறிந்த காப்பிகந் தவனொடு போகி
யத்த விருப்பை யார்கழல் புதுப்பூத்

துய்த்த வாய துகணிலம் பரக்கக்
கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுதி
வன்கை யெண்கின் வயநிரை பரக்கு
மின்றுணைப் படர்ந்த கொள்கையொ டொராங்குக்
குன்ற வேயிற் றிரண்டவென்
மென்றோ ளஞ்ஞை சென்ற வாறே. —[அகம். 15]

எனவரும். (192)

193. புணர்ந்துடன் போய துணர்ந்த பின்றை
யந்தணர் தெய்வ மயலோ ரறிஞர்
சிந்தைநோ யறிவோர் செவிலி பாங்கியோடு
கண்டோர்க் குரைத்தல் பண்புடைத் தாய்க்குந்
தாயோடு பாங்கி தான்முத லாரோ
டாயிடை யுரைத்தல் சேயிழைச் செவிலிக்கு
முரிய வென்மனு ருணர்ந்திசி னோரே.

இது நற்றாயுஞ் செவிலித்தாயுங் கூற்றுநிகழ்த்துங்கால் அக்கூற்று அவர்க்கு இன்னரோடு இன்னுழியாமென்பதோர் ஒழிபுகூறுகின்றது.

(இ-ள்.) *தலைமகள் புணர்ந்துடன்போயவாறு தானறிந்தபின்னர் அந்தணர்முதலாகிய அனைவர்க்குங் கூறுதல் நற்றாய்க்கும், அங்ஙனம் புணர்ந்துடன்போயவாறு தானறிந்தபின்னர் நற்றாய்முதலிய அனைவரோடுங் கூறுதல் தலைமகள் செவிலித்தாய்க்கும் உரிய என்று கூறுவர் அறிந்தோர். (எ-று.)* (193)

194. தாயர் பாங்கியர் தலைவன் றலைவியோ
டேயு மென்ப கண்டோர் கூற்றே.

இது கண்டோர் கூற்றுநிகழ்த்துங்கால் அக்கூற்று இனையரோடு நிகழ்த்துவரென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) *நற்றாயுஞ் செவிலித்தாயும் அவள் மகளாகிய உயிர்ப் பாங்கியும் ஏனைப்பாங்கியருந் தலைவனுந் தலைவியுமாகிய இவரோடு கண்டோர் கூறுதல் பொருந்துமென்று கூறுவர் ஆசிரியர். (எ-று.)*

தாயர் பாங்கியர் என்றாற்போல உய்த்துணரக்கூறாது தலைவன் தலைவியெனச் செவ்வனந்தோன்றக் கூறியவதனால் அவ்விருவர்கூட்டத்துமன்றி அவர் தனித்துழிக் கண்டோர்கூற்று இல்லையெனக் கொள்க. (194)

195. தமர்வரி னிடைச்சுரந் தன்னிற் கிழத்தியோ
டமர்தரு கிழவோ ளுணையுங் கூறும்.

இதுவுங் கூற்றுவிகற்பங் கூறுவதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) புணர்ந்துடன்போகின்றகாலத்துத் தமர் பின்தொடர்ந்து வருவராயின் அவர்கேட்பச் சுரத்தின்கட் தலைமகளோடு இன்புற்றுச் செல்லுந் தலைவன் அவளோடு ஆணையுங் கூறும். (எ-று.)

ஆணை ஆக்கினையென்னும் வடமொழிச்சிதைவு. மெல்லிய காமம் நிகழுமிடத்து ஆணைகூறுதல் மரபன்றாயினுங் கூறாக்கால் இராக்கதம் போன்று காட்டுதலின் நீதிநூல்வழக்கால் அவ்விடத்துக் கூறவேண்டுதலின் ஆணையுங்கூறுமென்றார்.

இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கு முரியன்.—[தொல். சூ.50ப்]

என்பவாகலின். ஏற்புழிக்கோடலாற் தமர் தலைமகள் தமரென்றே கொள்க.

வரலாறு :—

நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கி னிருபுறம் பொருந்தி
யமர்வரி னஞ்சேன் பெயர்க்குவெ
னுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே.—[நற். 362]

எனவரும்.

உம்மையாற் கிழத்தியொடு மருட்டிக்கூறவும் பெறுமென்பது.

அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாயிற்
பொரிப்பூம் புன்கி னெழற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குபடத் திமிரி
நிழல்காண் டோறு *நெடிது வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ் குயிலாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே. —[நற். 9]

எனவரும். (195)

196. உடன்போய் மீண்ட கொடுங்குழை மடந்தை
பிரிவுழித் தலைவனொடு சுரத்தியல்பு பேசலும்
பிரிந்துழி நெஞ்சொடும் பிறரொடும் வருந்திச்
சொல்லலு முரியள் சொல்லுங் காலே.

இதுவும் அது.

(பா - ம்.) * நெடியவை நீவி

(இ-ள்.) தலைவனுடன்போய் மீண்டதலைவி தலைவன்பிரிவுழி அவனோடு சுரத்தின் தன்மைகூறலும் பிரிந்தவிடத்துத் தன்னெஞ்சோடும் பிறரோடும் வருத்தமுற்றுச் சொல்லுதலும் உரியளாஞ் சொல்லுமிடத்து. (எ-று.)

தலைவன் பிரியுங்காலத்து அவனோடு சுரத்தியல்பு கூறற்குச் செய்யுள் :

நினைக்கினு மரிதரோ வைய வன்றுநாம்
பணைத்தா ளோமைப் படுசினை பயந்த
பொருந்தாப் புகர்நிழ லிருந்தனெ மாக
நடுக்கஞ் செய்யாது நண்ணுவழித் தோன்றி
பொடித்துமிசைக் கொ......புலம்பிய சுரனே. [நற். 318]

எனவரும். இக்கூற்றுப்பகுதிக்கட் காட்டாதொழிந்தனவற்றிற்கு உதாரணம் மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் காண்க. (196)

197. சாற்று வனைவருந் தலைவன் றலைவியோ
டேற்றன கூறுப விடந்தோறு மிடந்தோறும்.

இது மேல் விதந்தோதப்படாதார்க்கு உரிய மரபு உணர்த்துகின்றது.

(இ-ள்.) மேல் விதந்து ஓதப்படாத பார்ப்பானும் பாங்கனும் பாங்கியும் பாணனுங் கூத்தனும் விறலியும் பரத்தையும் அறிவருமாகிய அனைவருந் தலைவனோடுந் தலைவியோடும் இடந்தொறுமிடந்தொறும் பொருந்துவனவற்றைக் கூறுவர். (எ று.) (197)

198. நோயு மின்பமு மிருவகை நிலையிற்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
வெட்டன் பகுதியும் விளங்க வொட்டிய
வுறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன்
மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியு
மவரவ ருறுபிணி தமபோற் சேர்த்தியு
மறிவும் புலனும் வேறுபட நிறீஇ
யிருபெயர் மூன்று முரிய வாக
வுவம வாயிற் படுத்தலு முவம
மோன்றிடத் திருவர்க்கு முரியபாற் கிளவி.

இஃது ஒருசார் காமப்பொருண்மைபற்றித் தலைவன்மாட்டுந் தலைவி மாட்டும் நிகழ்வதோர் கூற்றுவழுவமைதி கூறுகின்றது.

(இ-ள்.) துன்பமும் இன்பமுமாகிய இருவகைநிலையினையுமுடைய காமத்தைக் குறித்த மரபு இடையீடு படுதலாலே நகைமுதலிய

மெய்ப்பாடு எட்டனுடைய கூறுபாடுந் தோன்றப், பொருந்திய உறுப்புடையது போலவும் உணர்வுடையதுபோலவும் மறுத்துரைப் பதுபோலவுந் தன்னெஞ்சொடு புணர்த்திச் சொல்லியும், வார்த்தை சொல்லாத முறைமையுடையனவாகிய புள்ளும் மாவும் மரனுங் கடலுங் கானலும் முதலியவற்றோடே அவை வார்த்தைசொல்லுவன வாகப் பொருந்தி அவை செய்தல் ஆற்றாதமுறைமையையுடைய தூதாகச்சொல்லலும் வருதலும் உளபோலக் கூறுமவைபோல்வன தொழில்களை அவற்றின்மேலே ஏற்றிச் சொல்லியும், யாவர் சிலர் யாதொரு பிணியுற்றார் அவருற்ற பிணியைத் தாமுற்ற பிணிபோலச் சேர்த்திச் சொல்லியும், அறிவையும் அறியப்படும் பொருளையுந் தத்த நிலைமையொழிய வேறுபடநிறுத்தி உவமப்பெயரும் உவமிக்கப்படும் பொருட்பெயருமாகிய இருவகைப்பட்டபெயருந் தொழிலும் பண்பும் பயனும் ஆகிய மூவகைப்பட்ட பொருட்கு உரியவாக உவமம் பொருந்துமிடத்து உவமத்தின் வழியிலே படுத்திச்சொல்லுதலுந் தலைமகற்குந் தலைமகட்கும் உரிய இலக்கணத்திற் பக்கக்கூற்றும். (எ-று.)

இடைதெரிய என்பதனை ;

“—இன்ப

மிடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா

றடைவொழிந்தா ரான்றமைந் தார்” —[நாலடி. துறவு 4]

என்றாற் போலக் கொள்க. தெரியவென்னுஞ் செயவெனச்சம் ஏதுப் பொருண்மைகுறித்து நின்றது. அவரவரென உயர்திணைப்பன்மை யாகக் கூறினும் இருதிணை யைம்பாலுங்கொள்ளப்படும் ;

ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்

வருவன தாமே வழக்கென மொழிப.

—[தொல். பொருள். சூ. 218]

என்பவாகலின். ஒன்றிடத்தும் மென்றதனை உவமமொன்றிடத்தென்று மாற்றுக.

வரலாறு :—

கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்

பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்

தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ

நாணொடு மிடைந்த கற்பின் வாணுத

லந்தீங் கிளவிக் குறுமகண்

மென்றோள் பெறனசை இச்சென்றவென்னெஞ்சே.[அகம்.9]

இதனுள் உவகைபற்றி நெஞ்சினை உறுப்புடையதுபோலக் கூறிய தலைவன் கூற்று.

உள்ளம் பிணிகொண் டோள்வயி னெஞ்சஞ்
செல்ல நீர்கஞ் செல்வா மெனினும். —[அகம். 44]

இஃது இளிவரல்பற்றி நெஞ்சினை யுணர்வுடையதுபோலக் கூறிய தலைவன் கூற்று.

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது. —[குறள். 1291]

இஃது இளிவரல்பற்றி நெஞ்சினை மறுத்துரைப்பதுபோலக் கூறிய தலைவி கூற்று.

கானலுங் கழறாது கழியுங் கூறாது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையு மொழியா
தொருநின்னல்லது பிறிதியாது மிலனே
யிருங்கழி மலர்ந்த கண்போ னெய்தற்
கமழிதழ் நாற்ற மமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறைஇத் தளருந் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமா லலவ. —[அகம். 170]

இஃது அழுகைபற்றிச் சொல்லா மரபினவற்றொடுகெழீஇச் செய்யாமரபிற் றொழிற்படுத்திக் கூறிய தலைவிகூற்று.

பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடற்
றூவறத் துறந்தனன் றுறைவனென் றவன்றிற
நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்றாரை யுடையையோ நீ. —[கலி. 129]

இஃது அவரவருறுபிணி தமபோலச் சேர்த்திக் கூறிய தலைவிகூற்று.

ஓங்கெழிற் கொம்பர் நடுவிதெனப் புல்லுங்
காந்தட் கிவருங் கருவிளம் பூக்கொள்ளு
மாந்தளிர்க் கையிற் றடவரு மாமயில்
பூம்பொழி னோக்கிப் புகுவன பின்செல்லுந்
தோளெனச் சென்று துளங்கொளி வேய்தொடு
நீள்கதுப் பிஃதென நீரற லுட்புகும்
வாளொளி முல்லை முகையை முறுவலென்
றுள்வலி மிக்கா னஃதறி கல்லான்.
—[தொல். பொருள். பக். 707]

இஃது அறிவும் புலனும் வேறுபடநிறீஇ உவமவாயிற்படுத்திக் கூறியது. இதனுள் இடையுங் கையும் முதலாகிய உறுப்புக்களைப்பற்றி உவமவாயிற் படுத்து அறியும் அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட

நிறுத்தி உவமம் பொருந்தியவழிக் கூறியவாறு காண்க. வேயைத் தோள்போலுமென்னாது தோளென்று தொட்டமையால் அறியப்படும் பொருள் வேறுபட்டது. அதனைத் திரியக்காண்டலால் அறிவு வேறுபட்டது. பித்துங் களியும்போல மூலையெனச்சென்று வேயைத்தொடும் என்னாது தோளெனச்சென்று வேயைத் தொடும் என்றமையால் உவமமொன்றியவழி உவமவாயிற்படுத்தது. ஏனையவற்றிற்கு இலக்கியம் வந்துழிக் காண்க. ஈண்டு உரைப்பிற்பெருகும். (198)

199. கனவு முரித்தா லவ்விடத் தான.

இது மேற்கூறிய நிலைமை கனவின்கண்ணும் நிகழுமெனக் கூற்று வழுவமைதி கூறுகின்றது.

(இ-ள்.) மேற்கூறியவாற்றாற் காமம் இடையீடுபட்டுழிக் கனாக்காண்டலும் உரித்து. (எ-று.)

* இன்னகை யினைய மாகவு மெம்வயி
னூடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுத னீவி
நறுங்கதுப் புளரிய நன்ன ரமயத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவி
னேற்றேக் கற்ற வலமரல்
போற்று யாகலிற் புலத்தியா லெம்மே. —[அகம். 39]

இது தலைவன் கனாக்கண்டு கூறியது.

கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியன் யானே. —[குறு. 30]

இது தலைவி கனாக்கண்டு கூறியது. (199)

200. எம்முறை யோரு மியாரொடு மின்றித்
தம்மொடு தாமே சாற்றியு மமைவர்.

இது கூற்றிற்கு உரியார் அனைவர்க்கும் ஆவதோர் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட தலைமகன் முதலாகிய அனைவருந் தாந் தாங் கூறப்படுவோர் எவரோடுங் கூறாது தம்மொடு தாமே கூறியும் அமைவர். (எ-று.) (200)

உம்மையால் அங்ஙனம் அமைதல் சிறுபான்மை என்றுணர்க.

(பா - ம்.) * இன்னகை யினையமாகவு மெம்வயின்

201. இறையோன் கூற்று மிறைவி கூற்று
மறையோன் முதலாப் பதின்மரு முறையான்
மறையோள் கூற்று மறிஞர் கூற்று
மிறையோன் முதலா மேனைவருங் கேட்ப.

இது நான்காமெண்ணுமுறைமைக்கண் நின்ற கேட்போர் இவர் என வரையறுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) *தலைவன் கூற்றுந் தலைவி கூற்றும் பார்ப்பான் முதலாகிய பதின்மரும், முறையானே பார்ப்பான்கூற்றும் அறிஞர்கூற்றுந் தலைமகன் முதலாகிய எல்லாருங் கேட்பர்.* (எ-று.)

தலைவன் கூற்றுந் தலைவிகூற்றுந் தாங் கேட்டல் விதந்தோதல் வேண்டுவதன்று அவை தங்கூற்றாகலினென்க. முறை என்ற மிகையானே

"ஊர்க பாக வொருவினை கழிய" —[*அகம்.* 44]

எனத் தலைவன்கூறப் பாகன் கேட்டலுங் கொள்க. (201)

202. ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங்
கரும நிகழ்ச்சி யிடமென மொழிப.

இஃது ஐந்தாமெண்ணுமுறைமைக்கண் நின்ற இடம் இவ்வியல்பிற் றென்கின்றது.

(இ-ள்.) *பலவும் ஒருவழிப்பட்டு ஓரிலக்கணத்தான்முடியுங் கரும நிகழ்ச்சி இடமென்று கூறப்படும்.* (எ-று.)

ஒருசெய்யுட்கேட்டால் இஃது இன்ன இடத்து நிகழ்ந்ததென்று அறிதற்கு ஏதுவாகியதோர் உறுப்பினை இடமென்றார் என்பது. இடமெனினுங் களமெனினும் ஒக்கும். ஒருநெறிப்படுதலென்பது ஒருவழிப்பலவுந் தொகுத்தல். ஓரியலென்பது அவற்றுக்கெல்லாம் இலக்கணமொன்றுதல். எனவே, இயற்கைப்புணர்ச்சி வன்புறை முதலிய கிளவித்தொகைகளே ஈண்டு இடமெனப்பட்டன என்பதாயிற்று. இது வினைசெய்யிடம். நிலமாயின முன்னர்த் திணையெனப்பட்டனவாம். காலம் முன்னர்ச் சொல்லுப. (202)

203. இறப்பே நிகழ்வே யெதிர தென்னுந்
திறத்தியன் மருங்கிற் றெரிந்தன ருணரப்
பொருணிகழ் வுரைப்பது கால மாகும்.

இஃது ஆறாமெண்ணுமுறைமைக்கண் நின்ற காலம் இவ்வியல்பிற் றென்கின்றது.

(இ-ள்.) *இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமுமென்னுங் கூறுபாட்டான் நிகழும்பக்கத்தின் ஆராய்ந்து புலனாமாறு செய்யுளுட் தோன்றப் பொருணிகழ்ச்சியைக் கூறுவது காலமென்னும் உறுப்பாம்.* (எ-று.)

பொருணிகழ்ச்சியைக் காலமென்றது என்னை? காலமென வேறு பொருளில்லதுபோல எனின் அஃது ஈண்டு ஆராய்ச்சியின்று; நியாய நூலாராய்ச்சியென்க.

வில்லோன் காலன கழலே தொடியோண்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே. —[குறுந். 7]

என்னும் பாட்டினுள் வில்லோனுந் தோடியோளும் என்பன பொருளெனப்படும்.

"வேய்பயி லழுவ முன்னி யோரே" —[குறுந். 7]

என்பது அப்பொருணிகழ்ச்சியான் இறந்தகாலமெனப்படும், அப்பாட்டிற்குச் சிறந்தார் அவராகலின் இவரே பொருளாயினரென்பது.

"மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே"
—[குறுந். 71]

என்பது நிகழ்காலமும்.

பகலும் பெறுதியிவ டடமென் றோளே. —[கலி. 49]

என்பது எதிர்காலமுமெனப்படும் அவ்வப்பொருணிகழ்ச்சியானென் றுணர்க. புறத்திற்கும் இவ்வாறே இன்றியமையாதென்பது. பெரும் பொழுது சிறுபொழுது என்பன ஈண்டுத் திணையெனப்பட்டு அடங்கின. என்னை? முதலுங் கருவும் உரிப்பொருளுங் கூட்டத்திணையாகலின். (203)

204. இதுநனி பயக்கு மிதனா னென்னுந்
தொகைநிலைக் கிளவி பயனெனப் படுமே.

இஃது ஏழாமெண்ணுமுறைமைக்கண் நின்ற பயன் இவ்வியல்பிற் றென்கின்றது.

(இ-ள்.) இது மிகவும் பயக்கும் இதனானெனத் தொகுத்துச் சொல்லப்படும் பொருள் பயனென்னும் உறுப்பாம். (எ-று.)

மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே —[யா. வி. பக். 369]

என்னும் பாட்டுத் தோழி தூதுவிடுவோளாதற் பயன்பட வந்தது. இவ்வாறே எல்லாப் பாட்டும் பயனுறுப்பாகவன்றி வாராவெனக் கொள்க. (204)

205. இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரியவேன்
றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.

இஃது எட்டாமெண்ணு முறைமைக்கண் நின்ற முன்னம் இவ்வியல் பிற்றாய் வருமென்கின்றது.

(இ-ள்.) யாதோரிடத்தானும் யாதானுமொருமொழி தோன்றியக் கால் அம்மொழி சொல்லுதற்கு உரியாருங் கேட்டற்கு உரியாரும்

இன்னு ரென்றறியுமாற்றான் அங்ஙனம் அறிதற்கு ஓரிடநாட்டிக் கூறு வார்க்குங் கேட்பார்க்கும் ஏற்ற உரை செய்யுட்கு ஈடாகச் சொல்லுவது முன்னம். (எ-று.)

யாரிவ னெங்கூந்தற் கொள்வா னிதுவுமோ
ரூராண்மைக் கொத்த படிறுடைத்து. —[கலி. 89]

என்றக்கால் இம்மாற்றஞ் சொல்லுகின்றாள் தலைவியெனவுஞ் சொல்லப் பட்டான் தலைமகனெனவும் முன்னத்தான் அறியப்படுதலின் இது முன்னமாயிற்று. பிறவும் அன்ன. (205)

206. உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டதுதா
னகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்
றப்பா லெட்டா மவ்வகை யெட்டு
மெள்ள லிளமை பேதைமை மடமே
யிளிவே யிழவே யசைவே வறுமை
மூப்பே பிணியே வருத்த மென்மை
புதுமை பெருமை சிறுமை யாக்க
மணங்கே விலங்கே கள்வர்தம் மிறையே
கல்வி தறுக ணிசைமை கொடையே
யுறுப்பறை குடிகோ ளலைகோலை யவற்றோடு
செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டெனப்
புல்லித் தோன்றும் பொருள்வகை யவற்று
ளொன்று நான்குசெய் துறழவெண் ணுன்கா
மென்று கூறுப வியல்புணர்ந் தோரே.

இஃது ஒன்பதாமெண்ணுமுறைமைக்கண் நின்ற மெய்ப்பாடு இவ் வியல்பிற்றாய் இத்துணைப்பகுதிப்பட்டுச் செய்யுட்கு உறுப்பாய் வரும் என்கின்றது.

(இ-ள்.) . உய்த்துணர்ச்சியின்றி அவ்விடத்துவந்த பொருளானே சொல்லப்படும்பொருள் தானே வெளிப்பட்டாங்குக் கண்ணீரரும்பன் மெய்ம்மயிர் சிலிர்த்தன் முதலாகிய சத்துவம் படுமாற்றான் வெளிப்படச் செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம். அம்மெய்ப்பாட்டுறுப்புத்தான் வகையானே நகை முதலாக உவகை ஈறாகக்கிடந்த அப்பகுதி யெட்டாம்; அப்பகுதி யெட்டும் விரியானே எள்ளல் முதலாக விளையாட்டு ஈறாக இயைபுபடத் தோன்றாநின்ற பொருட்பகுதிகளான் ஒன்றை நான்காகச் செய்துமாற, முப்பத்திரண்டாமென்று கூறுவர் அவற்றின் தன்மையை அறிந்தோர். (எ-று.)

கவிப்பொருளுணர்ந்தஅதனானே சொல்லப்படும் பொருளுய்த்து வேறுகண்டாங்கறிதலே மெய்ப்பாடென்றார். அது தேவருலகங் கூறி னும் அதனைக்கண்டாங்கு அறியச்செய்தல் செய்யுளுறுப்பா மென்ற வாறும். ஆகவே, மெய்ப்பாடு பொருட்பாடாயிற்றென்பது. அது,

மையற விளங்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெறா மழலையின் விளங்குபூ ணனைத்தர. —[கலி. 81]

என்றாற்போல்வது. நகை, சிரிப்பு, அழுகை, அவலம். அது, தானே அவலித்தலும் பிறர் அவலங்கண்டு அவலித்தலுமெனை இருவகைப் பட்டு ஒன்று கருணையெனவும் ஒன்று அவலமெனவும் பெயர்பெற்றுச் சுவை ஒன்பதாதலும் உடையவென்பது. இளிவரல், இழிபு. மருட்கை, வியப்பு. அற்புதமெனினும் அமையும். அச்சம், பயம். பெருமிதம், வீரம். எல்லாரோடும் ஒப்பநில்லாது பேரெல்லையாகி நிற்றலின் அது பெருமிதமெனப்பட்டது. வெகுளி, உருத்திரம். உவகை, காம முதலிய மகிழ்ச்சி. இம்மெய்ப்பாடு எட்டினையுஞ் சுவையெனவுங் குறிப்பென வும் வழங்கினும் அமையும். இவ்வெட்டின் கிடக்கைமுறைமைக் காரணங்களும் ஓர்ந்துணர்க. ஈண்டு உரைப்பிற்பெருகும். மற்றிவ் வெட்டினோடுஞ் சமநிலைகூட்டி ஒன்பதென்னுமோ நாடகநூலுட் போலவெனின், அதற்கோர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறிற்றில மென்பது. அதற்கு விகாரமுண்டெனின் முன்னையெட்டினுள்ளுஞ் சார்த்திக்கொள்ளப்படும். அல்லதூஉம், அஃது உலகியல் நீங்கினார் பெற்றியாகலின் ஈண்டு உலகவழக்கினுட் சொல்லற்பாற்றன்றென்பது. சத்துவமுங் குறிப்புஞ் சுவையுமென்னும் மூன்றற்கும் முதற்கண்ணவாக லான் அம்மூன்றனையும் அடக்கிய பொருட்பகுதியைப் ‘ புல்லித்தோன் றும் பொருள்வகையென்றார் ’ என்பது. இஃது என்சொல்லியவாறோ எனின், சுவைக்கப்படும் பொருள்பற்றிப் பொறியுணர்வாகிய சுவையும், அச்சுவைபற்றி உள்ளநிகழ்ச்சியாகிய குறிப்பும், அக்குறிப்புப்பற்றிப் புறத் துட்டோன்றும் மெய்ம்மயிர் சிலிர்த்தல் கண்ணீரரும்பல் முதலிய விறலும் பிறத்தலின் இங்ஙனங்கூறிய முப்பத்திரண்டு சுவைப்பொருளும் அம்மூன்றனையும் உள்ளடக்கி அவை பிறத்தற்கு முறையே காரணமாய் நிற்கும் என்றவாறுமென்க. விறலெனினுஞ் சத்துவமெனினும் ஒக்கும். எள்ளல், இகழ்ச்சி. இளமை, குழத்தன்மை. பேதைமை, அறிவின்மை. மடம், கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை. இளிவு, பிறரான் இக ழப்பட்டு எளியனாதல், இழவு, தந்தையுந் தாயும் முதலாகிய சுற்றத்தா ரையும் இன்பம்பயக்கும் நுகர்ச்சி முதலாயவற்றையும் இழத்தல். அசைவு, பண்டைநிலைமைகெட்டு வேறொருவாறாகி வருந்துதல். வறுமை, போகந்துய்க்கப்பெறாத பற்றுள்ளம். மூப்பு, கிழம். பிணி, நோய், வருத்தம், முயற்சி, மென்மை, மெல்லிதாதற்றன்மை, புதுமை, புதி

தாதற்றன்மை; அது காணுதனகண்டவற்றின்மேல் நிகழ்வது. பெருமை, பெரிதாதற்றன்மை ; அது பண்டுகண்ட பொருள்கள்போலாது கழியப் பெரியவாயினவற்றின்மேல் நிகழ்வது. சிறுமை, சிறிதாதற்றன்மை. அது கடுகின்கட் பலதுளைபோல இறப்பச் சிறியவாயினவற்றின்மேல் நிகழ்வது. ஆக்கம், ஒன்று ஒன்றாய்த்திரிதல். அணங்கு, அணங்குதற்றொழில வாகிய பேய் பூதம் பாம்பு நிரயபாலர் சவந்தின்பெண்டிர் உருமிசை இத் தொடக்கத்தன. விலங்கு, யாளி புலி இத்தொடக்கத்தன. கள்வர், பிறருடைமையை அவரை வஞ்சித்துக்கொள்ளும்பொருட்டு தீத்தொழில் புரிவார். இறை, அரசனுந் தந்தையும் ஆசானும் முதலியோர். கல்வி, நூன்முதலியனபயிறல். தறுகண், அஞ்சத்தக்கன கண்டுழி அஞ்சாமை. இசைமை, இன்பமும் பொருளும் இறப்பப்பயப்பினும் பழியொடுவருவனசெய்யாமை. கொடை, உயிரும் உடம்பும் உறுப்பும் முதலிய எல்லாப் பொருளுங்கொடுத்தல். உறுப்பறை, கையுங் கண்ணும் முதலிய உறுப்புக்களை அறுத்தல். குடிகோள், தாரமுஞ் சுற்றமுங் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கட் கேடுசூழ்தல். அலை, கோல்கொண்டு அலைத்தல் முதலாயின. கொலை, அறிவும் புகழும் முதலாயவற்றைக் கொன்று உரைத்தல். செல்வம், நுகர்தற்கு உரியனவற்றின் நுகர்ச்சி. புலன், கல்விப் பயனாகிய அறிவுடைமை. 'புணர்வு, காமப்புணர்ச்சி முதலாயின. விளையாட்டு, பதியிகந்து யாறுங் குளனுங்காவும் ஆடிவருதல் முதலாயின. எள்ளல் முதலாக ஆக்கம் ஈறாகக்கிடந்த நான்கும் ஒன்றிரண்டாகி நாலெட்டாதலுமுடைய. அங்ஙனம் ஆதல் மேற்காட்டும் உதாரணங் களான் உணர்க.

['எள்ளி நகினும் வரூஉம்' —[கலி. 61]

எனத் தன்கண் நிகழ்ந்த எள்ளலுந், தன்மகள் தன்னைமதியாது இகழ்ந்தாளென்றலின்

'நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே' —[அகம். 248]

எனப் பிறரெள்ளியதும்,

'நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே' [—கலி. 13]

எனத் தன் இளமையும்,

'நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்' —[அகம். 16]

எனப் பிறரிளமையுந், தான்செய்த தவற்றிற்குத் தாய்தன்னைவெகுண்டது தனக்கு நகையாகக்கொண்டமையின்

'நகைநீ கேளாய் தோழி' . —[அகம். 248]

எனத் தன் பேதைமையும்,

'நகையா கின்றே தோழி

....

மம்மர்நெஞ்சினன் றொழுதுநின்ற துவே' —[அகம். 56]

எனப் பிறன்பேதைமையும், நீயிர் கூறியதனையே மெய்யெனக்கொண்டு மகிழ்ந்து நக்கனம் என்றமையின்

'நம்மொடு நக்க வால்வெள் ளெயிறே' —[குறு. 169]

எனத் தன்மடமும்,

'நாணகை யுடைய நெஞ்சே நம்மொடு
தான்வரு மென்ப தடமென் றோளி' —[அகம். 121]

எனப் பிறர்மடமும் பொருளாக நகையும் பரத்தையை நீயெள்ளினை யென்று அழுது வருகின்றாளென்று தலைமகற்குச் சொல்லியதாகலின்,

எழுதெழில் சிதைய வழுதன ளேங்கி
யடித்தென வுருத்த தித்திப் பல்லூழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரற் றிருகுபு
கூர்நுதி மழுங்கிய வெயிற்ற
ளூர்முழுது நுவலுநிற் காணிய சென்மே —[அகம். 176]

எனத் தன் இளிவுந், தலைமகள் இளிவந்தொழுகுவது காரணமாகச்

'சேயேன்மன் யானுந் துயருழப்பேன்' —[கலி. 37]

என்றமையின்,

'கயமல ருண்கண்ணாய் காணாய்' —[கலி. 37]

என்னும் பாட்டினுட்,

'தானுற்ற, நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்'

எனப் பிறன்கட்டோன்றிய இளிவும், (இது கருணைச்சுவைக்குப் பொருளெடுப்பதும்.) கணவனையிழந்தாள் அவற்குப் பலிக்கொடை கொடுத்தற்கு மெழுகுகின்றாளைக் கண்ணீரே நீராக மெழுகுகின்றாளென்றமையின்,

'மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே —[புறம். 249]

எனத் தன்கட்டோன்றிய இழவுந், தலைவன் பிரிவிற்குத் தோழி படர்கூர்ந்தாளெனச் சொல்லினமையின்,

'பின்னொடு முடித்த மண்ணா முச்சி' —[அகம். 73]

என்னும் பாட்டினுள்,

அணங்குறு கற்பொடு மடங்கொளச் சாஅய்
நின்னோய்த் தலையையு மல்லை தெறுவர
வென்னா குவள்கொ லளிய டானெனை
வென்னழி பிரங்கு நின்னொ டியானும்

எனப் பிறன்கட்டோன்றிய இழவுந்,

துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சேன். [கலி. 139]

எனத் தன்கட்டோன்றிய அசைவும், அள்ளிலைத்தாளி கொய்யாநின்றான் இதுபொழுதென்று அவலித்துச் சொன்னமையின்,

இல்வழங்கு மடமயில் பிணிக்குஞ்
சொல்வலை வேட்டுவ னாயினன் முன்னே. —[புறம். 252]

எனப் பிறன்கட்டோன்றிய அசைவும்,]

இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்து முகநோக்கி.
—[புறம். 164]

எனத் தன்கட் தோன்றிய வறுமையும்,

[நீரொடு நிறைந்த விரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண. —[புறம். 164]

எனப் பிறர்கட்தோன்றிய வறுமையும் பொருளாக அவலமும், இளமைக் காலத்துச் செய்தனசெய்யமாட்டாது இளிவந்தனம் இக்காலத்தென்ற மையின்,]

தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே. —[புறம். 243]

எனத்தன்கட் தோன்றியமூப்பும்,

[மூத்துத்தலை யிறைஞ்சிய நின்னொ டியானே
போர்த்தொழி றொடங்க நாணுவ லதனான்.
—[தொல். பொருள் பக். 797]

எனப் பிறன்கட்டோன்றிய மூப்பும், மலையைத்துளக்கும் ஆற்றலையுடையாய் காமப்பிணிகூர்ந்தோரை அலைப்பது நினக்குத் தகுவதன்றென இளிவந்து வாடைக்குக்கூறினமையின்,

இமயமுந் துளக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிரிஃ தெவனோ. —[குறுந். 158]

எனத் தன்கட்டோன்றிய பிணியும், நெஞ்சினைவேறுநிறீஇக் கூறினமையிற்,

குணகடற் றிரையது பறைதபு நாரை
***நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே. —[குறுந்.128]

எனப் பிறன்கட்டோன்றிய பிணியும், பின்னின்ற தலைமகன் கூறியதாகலின்,

'யான்ற னறிவ றானறி யலளே.' —[குறு. 337]

எனத் தன்கட்டோன்றிய வருத்தமும், அவன் இவ்வாறொழுகுதல் நமக்கிளிவரலாமென்னுங் குறிப்பினாற் கூறிக் குறைநயப்பித்தமையின்,

'ஒன்று, இரப்பான்போ லிளிவந்துஞ் சொல்லும்.'
—[கலி. 47]

எனப் பிறன்கட்டோன்றிய வருத்தமும், மெலியார் இளிவந்தன கூறுவ ராயினும் வலியார் மீக்கூறுவாராயினும் இவன் அவைசெய்யானென்ற மையின்,

வலியரென வழிமொ ழியலன்
மெலியரென மீக்கூறலன். —[புறம். 239]

எனத் தன்கண்ணும் பிறன்கண்ணுந் தோன்றிய மென்மையும் பொரு ளாக இளிவரலும்,

ஒருகை யுடைய தெறிவலோ யானு
மிருகை சுமந்து வாழ் வேன். —[பொருள் பக். 207]

என்பது வீரம்பற்றிய இளிவரல். இதுவும் அதன்பாற்படுத்துக. தன் கருத்து வெளிப்படாது தன்மெய்க்கட்டோன்றிய புதுமையை வியந்தாள் போலத் தோழிக்கு அறத்தொடு நின்றமையின்,

மலர்த்தார் மார்ப னின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோரியா னாகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே. —[அகம். 82]

எனத் தன்கட்டோன்றிய புதுமையும், பண்டொருகாலுங் கண்டறியாத படி ஆடிற்று மயிலென்றமையின்,

மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
* விழவுக்கள விறலியிற் றோன்று நாடன். —[அகம். 82]

எனப் பிறபொருட்கட்டோன்றிய புதுமையும், கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழிமுறையாற் பெருகற்பால தாகிய நட்பு மற்றவனைக் கண்ணுற்ற ஞான்றே நிலத்தினதகலம்போலவும் விசும்பினுயர்ச்சிக்கம்போலவுங் கடலினாழம்போலவும் ஒருகாலே பெருகிற் றென்றமையின்,]

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே. —[குறுந். 3]

எனத் தன்கட்டோன்றிய பெருமையும், [(இது தலைமகன் கருத்தினை நட்பிற்குக் கொள்ளுங்காற் பிறன்கட்டோன்றிய பெருமையுமாம்.)

(பா-ம்.) * நனவுப்புகு விறலி

மைம்மல ரோதி மணிநகைப் பேதைதன்
கொம்மை வரிமுலை யேந்தினு—மம்ம
கடையிற் சிறந்த கருநெடுங்கட் பேதை
யிடையிற் சிறியதொன் றில் —[பொருள் பக். 799]

எனப் பிறன்கட்டோன்றிய சிறுமையுந் (தன்கட்டோன்றிய சிறுமை வந்துழிக் காண்க.) நரிவெரூஉத்தலையார் தம்முடம்பு பெற்று வியந்துகூறிய பாட்டாகலின்,

எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும. —[புறம். 5]

எனத் தன்கட்டோன்றிய ஆக்கமும்,

உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்கு. —[நாலடி. 38]

எனப் பிறபொருட்கட்டோன்றிய ஆக்கமும், இனிக்

கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டு. —[புறம். 77]

எனவும்,

அன்னா ளொருவன்ற னாண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டி சுடரிழாய். —[கலி. 47]

எனவும், முறையே சிறியோன் பெருந்தொழில் செய்ததூஉம் பெரியோன் சிறுதொழில் செய்ததூஉம் பொருளாக வியப்புப் பிறந்ததும் ஈண்டுக் கூறிய சிறுமைபெருமையென்றவற்றின்பாற் படுத்திக்கொள்க.]

யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூர்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை. —[பெரும். 134-6]

இதனுள் அணங்கும் விலங்கும்,

[ஒரூஉநீ யெங்கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை. —[கலி. 87]

இதனுட் தலைவனைக் கள்வன்பாற் சார்த்தி உரைத்தமையிற் கள்வரும்,

எருத்துமே னோக்குறின் வாழலே மென்னுங்
கருத்திற்கை கூப்பிப் பழகி—யெருத்திறைஞ்சிக்
கால்வண்ண மல்லாற் கடுமான்றேர்க் கோதையை
மேல்வண்ணங் கண்டறியா வேந்து.
—[தொல். பொருள் பக். 802]

இதனுள் இறையும் பொருளாக அச்சமும் (இது பிறிதுபொருள்பற்றியே வரும்.)

வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள். —[கலி. 141]

இதனுள், என்னையுங் கல்லாமைகாட்டினளெனத். தன்பெருமிதங் கூறின மையிற் கல்வியும்,]

அடன்மாமே லாற்றுவே னென்னை மடமாமேன்
மன்றம் படர்வித் தவள். —[கலி. 141.]

இதனுட் தறுகண்ணும்:—

கழியாக் காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வரூஉ மின்பம் வெஃகார். —[அகம். 112]

இதனுட் புகழும்:

வையம், புரவூக்கு முள்ளத்தே னென்னை யிரவூக்கு
மின்னு விடும்பைசெய் தாள். —[கலி. 141]

இதனுட் கொடையும் பொருளாகப் பெருமிதமும், (இது தன்கட் டோன்றிய பொருள் பற்றியே வரும்.)

முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று.
—[கலி. 52]

இதனுள் உறுப்பறையும், நின்மகன் படையழிந்து மாறினனென்று பலர் கூற

மண்டமர்க் [1]குலைந்தன னாயி னுண்டவென்
[2]முலையறுத் திடுவென் யானெனச் சினைஇ —[புறம். 278]

இதனுட் தன்மகன் மறக்குடிக்குக் கேடு சூழ்ந்தானென்று சினங்கொண் டாளாகலிற் குடிகோளும்,

[வரிவயம் பொருத வயக்களிறு போல
வின்னு மாறாது சினனே. —[புறம். 100]

இதனுட் புலியான் அலைக்கப்பட்ட யானை பொருதுபோந்தும் அவ்வலைப் புண்டலை நினைந்து சினங் கொள்ளாநின்ற தென்றமையின் அலையும்,

உறுதுப் பஞ்சா துடல்சினன் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை. —[புறம். 72]

இதனுட் சிறுசொற்சொல்லுதல் என்பது புகழ்கொன்றுரைத்தலாதலிற் கொலையும் பொருளாக வெகுளியும், (இவை நான்கும் பிறிது பொருள் பற்றி வரும்.)

உரனுடை யுளத்தை செய்பொருண் முற்றிய
வளமையா னாகும் பொருளிது வென்பாய் —[கலி. 12]

இதனுள் வளமையானாகும் மனமகிழ்ச்சி இது வெனக் கூறினமையிற் செல்வமும்,

(பா-ம்) 1. குடைந்தன. 2. முளையறுத்திடுவன்.

'நன்கலம் பெற்ற வுவகையர்' —[தொல்-பொருள் பக். 806]
என்பதும் அது.

பெண்டிர் நலம்வெளவித் தண்சாரற் றாதுண்ணும்
வண்டிற் றுறப்பான் மலை. —[கலி. 40]

இதனுள் முகைப்பதம்பார்க்கும் வண்டுபோல தலைவியரை நகைப்பதம் பார்க்கும் அறிவுடைமை காமத்திற்கு ஏதுவாகாமலிற் புலனும்,

இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பாம். —[நாலடி. 137]

என்பதும் அது.

'இலமல ரன்ன வஞ்செந் நாவின்'

என்னும் மணிமிடை பவழத்துட்

தொடிக்கண் வடுக்கொள முயங்கினள்
வடிப்புறு நரம்பிற் றீவிய மொழிந்தே. —[அகம். 142]

என்று அவள் இவ்வாறு முயங்கினமையான்,

'உவவினி வாழிய நெஞ்சே.' —[அகம். 87]

என்றமையிற் புணர்வுந்,]

துயிலின்றி யானீந்தத் தொழுனையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான் மன்னோ.
—[கலி. 30]

இதனுள், "ஆறடி விளையாடி—மயிலியலார் மருவுண்டு மறைந்தமைகு வான்மன்" என்றமையின் விளையாட்டுப்பொருளாக உவமையும் பிறந்தமை கண்டுகொள்க. இது பிறன்கட்டோன்றிய இன்பம் பொருளாக வரும். பிறவும் அன்ன,

[பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளுங்
கண்ணிய புறனே நானான் கென்ப.
—[தொல்-பொருள். சூ. 245]

எனவும்,

'நாலிரண் டாகும் பாலுமா ருண்டே' —[சூ. 246]

எனவும், ஆசிரியர் தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியல் தொடங்குதற் கண்ணே ஓதிய இவற்றையொழித்து ஒழிந்தனவற்றிற்கே இவரிலக்கணங் கூறியது என்னையெனின், நன்று சொன்னாய்! முடியுடை வேந்தருங் குறுநிலமன்னரும் முதலாயினோர் நாடகமகளிர் ஆடலும் பாடலுங் கேட்டுக் காம நுகரும் இன்ப விளையாட்டினுட்டோன்றிய முப்பத்திரண்டு பொருளுங் கருதிய பொருட்பகுதி பதினாறாகி அடங்குமெனவும், அம் முப்பத்திரண்டு மெய்ப்பாடும் பதினாறுதலேயன்றி எட்டாதலுமுண்டெனவும், பிறன்கோட் கூறல் என்னும் உத்திவகையாற் கூறியதல்லது தன்றுணி

புரைத்த தன்மையின் ஈண்டு இவர் கூறிற்றிலரென்க. சுவைக்கப் படும் பொருளும் அதனை நுகர்ந்த பொறியுணர்வும் அது மனத்துட்பட்ட வழி உள்ளத்து நிகழுங் குறிப்பும், குறிப்புகள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீரரும்பலும் மெய்ம்மயிர்சிலிர்த்தலும் முதலாக உடம்பின் கண்வரும் வேறுபாடாகிய சத்துவங்களுமாகிய நான்கினையும் சுவை யெட்டொடுங் கூட்டி ஒன்று நான்கு செய்து உறழ முப்பத்திரண்டா மெனவுஞ், சுவைப்பொருளும் பொறியும் வேறுவேறுநின்றவழிச் சுவைபிறவாமையா னும் அவ்விரண்டுங் கூடிய வழிச் சுவை பிறத்தலானும் அச்சுவைப் பொருளும் பொறியுணர்வும் ஆகிய ஈரெண்பகுதியும் எட்டாமெனப்படும் எனவுங் குறிப்புஞ் சத்துவமும் உள்ள நிகழ்ச்சியும் உடம்பின் வேறுபாடு மாகலின் அவ்வுள்ள நிகழ்ச்சியை வெளிப்படுப்பது சத்துவமாகலான் அவ்வீரெண்பகுதியும் எட்டெனப் படுமெனவும், இங்ஙனம் அடக்கிப் பதினாறுமெனவுங், சுவையுணர்வும் பொருளும் ஒன்றாக அடக்கிச் சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென மூன்றாக்கி வெவ்வேறிலக்கணங்கூறி அவற்றை

> எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
> நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப—[செயிற்றியம்]

என நாடகநூலின் வழிநூல் செய்த ஆசிரியர் செயிற்றியனார் ஓதுப வாகலின் அவை பதினாறும் வீரம் அச்சம் வியப்பு இழிபு காமம் அவலம் நகை நடுவுநிலை என எட்டாயடங்கு மெனவும், இவற்றின் விகற்பமெல் லாஞ் செயிற்றியம் முதலிய நூல்களான் ஓர்ந்துணர்க. ஈண்டு உரைப்பிற் பெருகுமாதலானென்பது. (206)

207. ஆங்கவை யொருபா லாக வொருபா
லுடைமை யின்புற னடுவுநிலை யருள
றன்மை யடக்கம் வரைத லன்பெனுஅக்
கைம்மிக னலிதல் சூழ்ச்சி வாழ்த்த
னாண றுஞ்ச லரற்றுக் கனவெனுஅ
முனித னினைதல் வெரூஉதன் மடிமை
கருதலா ராய்ச்சி விரைவுயிர்ப் பெனுஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்த லைய மிகைநடுக் கெனுஅ
விவையு முளவே யவையலங் கடையே.

இது மேற்கூறிவந்த எண்ணான்குமன்றி இவை முப்பத்திரண்டும் அவைபோல மெய்ப்பாடெனப்படும் என்கின்றது.

(இ-ள்.) இளிவரன் முதலாக விளையாட்டு இறுதியாகச் சொல்லப் பட்ட முப்பத்திரண்டும் ஒருகூறாக, இனிச் சொல்லுகின்ற ஒரு கூறு

உடைமை முதலாக நடுக்கு ஈருகக்கிடந்த அம்மூப்பத்திரண்டும் ஈண்டு மெய்ப்பாடெனப்படும் ஈண்டு எண்ணப்பட்டவையே ஆண்டு அடங்குவன வும் உள்ளவாகலின் அப்பொருண்மைய அல்லாத இடத்து. (எ று.)

உடைமை, செல்வம். செல்வநுகர்ச்சியாயின் உவகைப்பொருளாம். இஃது அன்னதன்றி நுகராதே அச்செல்வந் தன்னை நினைந்து இன்புறு தற்கு ஏதுவாகிய பற்றுள்ளம். அஃதாவது நிதிமேனின்ற மரம்போலச் செல்வமுடைமையான்வரும் மெய்வேறுபாடு. இன்புறல், அவ்வுடை மையை நினையுந்தோறும் இடையிட்டுப் பிறக்கும் மனமகிழ்ச்சி. நடுவுநிலை, ஒன்பது சுவையுளொன்றென நாடகநிலையுள் வேண்டப்படுஞ் சமநிலை. அஃதாவது,

செஞ்சாந் தெறியினுஞ் செத்தினும் போழினு
நெஞ்சோர்ந் தோடா நிலைமை. —[பழமொழி-95]

அது காமம் வெகுளி மயக்கம் நீங்கினோர்கண்ணே நிகழ்வது. இது சிறு வரவிற்றுகலான் இவற்றொடு கூறினர். அருளல் மக்கள் முதலிய சுற்றத்தாரை அருளுதல். அது,

'அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்.'—[கலி.11]

என்றாற்போலவருவது. ஆண்டைக் கருணையினை அழுகையென்றமையின் இஃது அதனோடடங்காது. தன்மை, சாதித் தன்மை. அவையாவன பார்ப்பாராயிற் குந்திமிதித்துக் குறுநடை கொண்டு வந்து தோன்றலும், அரசராயின் எடுத்த கழுத்தோடும் அடுத்த மார்போடும் நடந்துசேறலும், இடையராயிற் கோற்கையுங் கொடுமடியுடையும் விளித்தவிளையும் வெண்பல்லுமாகித் தோன்றுதலுமென்று இன்னோரன்ன வழக்கு நோக்கிக் கொள்க. அடக்கம், உயர்ந்தோர்முன் அடங்கியொழுகும் ஒழுக்கம். அவை பணிந்தமொழியுந் தணிந்த நடையுந் தானைமடக்கலும் வாய்புதைத்தலும் முதலாயின. வரைதல், காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம். அவை பார்ப்பாராயின் முத்தீவேட்டலும் புலவுங்கள்ளும் முதலாயினகடிதலும் என்றின்னோரன்ன கொள்க. வரைதல் தொழிலாகலான் இது தன்மையெனப்படாது. அன்பு, அருட்கு முதலாகி மனத்துநிகழும் நேயம். அஃதுடையார்க்குப் பிறர்கட் துன்பங் கண்டவழிக் கண்ணீர் விழுமாதலின் அவ்வருளானே அன்புடைமை விளங்குமென்பது. இவையெல்லாந் தத்தமனத்தி னிகழ்ச்சியை வெளிப் படுப்பனவாதலின் மெய்ப்பாடெனப்பட்டன. இனி வருகின்றவற்றிற்கும் இஃதொக்கும். கைம்மிகல், ஒழுக்கக்கேடு. அது சாதித் தருமத்தினை நீங்கினமை தன்னுள்ள நிகழ்ச்சியானே பிறரறியுமாற்றால் ஒழுகுதல் நலிதல், பிறர்க்கின்னசெய்து நெருங்குதல். அது தீவினைமாக்கட் கண்ணிகழும். அவரைக்கண்டு அச்சம் எழுந்ததாயின் அஃது அச் சத்தினுள் அடங்குமாதலின் அஃதன்று இதுவென்பது. சூழ்ச்சி

சுழற்சி; சூழ்வருவானைச் சுழல்வருமென்பவாகலின். அது வெளிப்படுவ தோர்குறிப்பு அவன்கட்டோன்றின் அதுவும் மெய்ப்பாடு. அஃதாவது மனத்தடுமாற்றம். வாழ்த்தல், பிறரால் வாழ்த்தப்படுதல். வாழ்த்தல் பிறன்வினையன்றோவெனின் ஒருவனை நீடுவாழ்கவென்று வாழ்த்தல் பிறன்வினையாயினும் அவற்றான் வாழ்விக்கப்படுதலின் அவ்வாறு கூறல் அமையுமென்பது. நாணல், நாணுள்ளம் பிறர்க்கு வெளிப்பட நிகழும் நிகழ்ச்சி. துஞ்சல், உறக்கம். அது நடந்துவருகின்றான்கண்ணும் விளங்கித்தோன்றுதலின் அதுவும் மெய்ப்பாடெனப்பட்டது. அரற்றல், அழுகையன்றிப் பலவுஞ்சொல்லித் தன்குறை கூறுதல். அது காடுகெழு செல்விக்குப் பேய்கூறும் அல்லல்போல வழக்கினுள்ளார் கூறுவன. கனவு, வாய்வெருவுதல். அதனானும் அவனுள்ளத்து நிகழ்கின்ற தொன்று உண்டென்றறியப்படும். முனிதல், வெறுத்தல். அஃது அருளுஞ் சினமுமின்றி இடைநிகர்த்தாதல். வாழ்க்கை முனிந்தானெனவும்,

'உறையுண் முனியுமவன் செல்லு மூரே.' —[புறம் 96]

எனவுஞ் சொல்லுபவாகலின். நினைதல், விருப்புற்று நினைதல். நின்னை மிகவும் நினைத்தேன் என்பது வழக்காகலின். அந்நினைவுள்ளம் பிறர்க்குப் புலனாதலின் மெய்ப்பாடாயிற்று. வெரூஉதல், விலங்கும் புள்ளும் போல வெருவி நிகழும் உள்ளநிகழ்ச்சி. அஃது அஞ்சவேண்டாதன. கண்டவழியுங் கடிதிற்பிறந்து மாறுவதோர்வெறி. மடிமை, சோம்பு. கருதல், மறந்ததனைநினைத்தல். ஆராய்ச்சி, ஒரு பொருளை நன்று தீதென்றாராய்தல். விரைவு, இயற்கைவகையானன்றி ஒரு பொருட்கண் விரைவு தொழில்பட உள்ளநிகழுங் கருத்து. உயிர்ப்பு, வேண்டியபொருளைப் பெறாதவழிக் கையறவெய்தியகருத்து. அது நெட்டுயிர்ப்புக்கு முதலாகலின் அதனையும் உயிர்ப்பென்றாரென்பது. கையாறு, அவ்வுயிர்ப்புமின்றி வினையொழிந்தயர்தல். இடுக்கண், மலர்ந்த நோக்கமின்றி மையனோக்கம்படவரும் இரக்கம். பொச்சாப்பு, அற்றப்படுதல். அஃதாவது பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கண் யாதானுமோர்நிகழ்ச்சியான் இடையறவுபடுதல். பொறாமை, அழுக்காறு. அஃதாவது பிறர்செல்வங் கண்டவழி வேண்டாதிருத்தல். வியர்த்தல், பொறாமை முதலாயினபற்றி மனம்புழுங்குதல். ஐயம், ஒரு பொருண்மேல் இரு பொருட் தன்மைகருதி வரும் மனத்தடுமாற்றம். மிகை, கல்லாமையுஞ் செல்வமும் இளமையும் முதலாகவரும் உள்ள மிகுதி. நடுக்கம், அன்பும் அச்சமும் முதலாயின உடம்பிற் புலப்படுமாற்றான் உள்ளநடுங்குதல். புதல்வற்குப் பிணியில் வழியும் எவனாங்கொலென்று நடுங்குதல் அன்பால் நடுங்குதலாம். அச்சம் என்னுஞ் சுவைபிறந்ததன்பின்னர் அதன்வழித் தோன்றிய நடுக்கம் அச்சத்தாற்றோன்றிய நடுக்கமாமென்றுணர்க. மற்று இவற்றை எண்ணிய மாத்திரையல்லது இலக்கணங் கூறிற்றிலர் சொல்லின்

முடியும் இலக்கணத்தவாகலின். உதாரணம் இக்கூறியவாற்றான் வழக்குநோக்கியுஞ் செய்யுணோக்கியுங் கண்டுகொள்க] (207)

208. புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்த
னகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மை
கூழை விரித்தல் காதொன்று களைத
லூழணி தைவர லுடைபெயர்த் துடுத்த
லல்கு றைவர லணிந்தவை திருத்த
லில்வலி யுறுத்த லிருகையு மெடுத்தலொடு
பாராட் டெடுத்தல் மடந்தப வுரைத்த
லீரமில் கூற்ற மேற்றலர் நாணல்
கொடுப்பவை கோட லுளப்படத் தொகைஇத்
தெரிந்துடம் படுத றிளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி யுவத்தல்
புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற வுரைத்தலெனக்
காட்சிமுத லாறையுங் கண்ணியோன் றீரிரண்
டாட்சிபெற வருநா லாறுமெய்ப் பாடு
மன்ன பிறவு மகனைந் திணைக்கட்
டுன்னு மென்ப துணிந்திசி னோரே.

இஃது அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகி வரும் மெய்ப்பாடு எல்லாங்கூறி இனி அகத்தின் ஐந்திணைக்கட் பெரும்பான்மையுங் களவிற்குச் சிறந்து காட்சி முதலிய அவத்தை ஆறினையும்பற்றி ஒன்றற்கு நான்கு நான்காகி வரும் மெய்ப்பாடு இருபத்து நான்கு உள வென்கின்றது.

(இ-ள்.) புகுமுகம்புரிதல் முதலாகக் கையறவுரைத்தல் ஈறுகக் காட்சி முதலிய ஆறவத்தையினையும்பற்றி ஓரோரவத்தை நான்கு நான்கு பொருந்துதலுளவாகவரும் இருபத்துநான்கு மெய்ப்பாடும் அவை போல்வன பிறவும் அகனைந்திணைக்கட் பொருந்துமென்று கூறுவர் தெளிந்தோர். (எ-று.)

ஆட்சிபெற என்றமையான் ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட வழிக் கரந்தொழுகும் உள்ள நிகழ்ச்சி பெண்பாலதாகலான் ஈண்டுக் கூறுகின்ற மெய்ப்பாடு தலைமகள் கண்ணே சிறந்தனவென்பதூஉம், அவற்றுட் புகுமுகம்புரிதல் முதலிய பன்னிரண்டும் புணர்ச்சி நிகழ்வதற்கு முன்னும் பாராட்டெடுத்தல் முதலிய பன்னிரண்டும் புணர்ச்சி நிகழ்ந்த பின்னும் நிகழுமென்பதூஉம், அவைதாம் ஒன்றற்கொன்று நிமித்தமாய்த் தொடர்ந்துவருமென்பதூஉம், அங்ஙனம் ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து

வருங்கால் உயிர்மெலிவிடத்து இடையறவுபடவும் நிகழுமென்பதூஉங் கொள்க. இன்னும் அதனானே கைக்கிளை பெருந்திணைக்கும் இவை வைத்தமுறையானே வரையறுத்துக் கூறப்படாது வருதற்கு உரியன வந்துழிக் கொள்ளப்படுமென்பதூஉங் கொள்க.

அவற்றுட் புகுமுகம்புரிதல் ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட வழித் தன்னை அவன் நோக்குதற்கண் விரும்பும் உள்ள நிகழ்ச்சி. புகுதல், தலைமகன் நோக்கிய நோக்கெதிர் தான்சென்று புகுதல். [முகம், அங்ஙனந் தான்புகுதற்கு இடமாகிய நோக்கு. நோக்கெதிர் நோக்குதலை முகநோக்குதல் என்பவாகலின் நோக்கினை முகமென்றாரென்பது. புரிதல், மேவுதல். அஃதாவது தலைமகன் காண்டலைத் தலைமகள் வேட்டலென்றவாறும். மற்றிது தலைமகற்கு உரித்தன்றோ எனின் அவன்தான் காண்பினல்லது தற்காண்டலை நயவான் அது தலைமையன்றாகலின். அது,

யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும். —[குறள்-1094]

எனவரும்.] பொறிநுதல் வியர்த்தல் தலைமகன் தன்னை நோக்கியவழி உட்கும் நாணும் ஒருங்கு வந்தடைதலின் வியர்ப்பொறித்த நுதலாளாதல். அது,

[பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவிய
ருறுவளி யாற்றச் சிறுவரை *நில்லே. —[அகம். 136]

எனவரும். இம்மெய்ப்பாடுந் தலைமகற்கு உரித்தன்று; உட்கும் நாணும் அவற்கின்மையின்.] நகுநயமறைத்தல் அதன்பின்னர்த் தலைமகன்கட் டோன்றிய குறிப்புக்களான் அதற்கு ஏதுவாகிய நயனுடைமை மனத்திற் பிறந்தவழியும் நகாது நிற்றல். [அது,

முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு. —[குறள்-1274]

எனவரும். இது மடமையாற் றோன்றிய நகையாகலின் இது மறைத்தலுந் தலைமகற்கு உரித்தன்று. எனவே அவற்காயின் நகை தோன்றப் பெறும் என்பதாம்.] சிதைவுபிறர்க்கின்மை அங்ஙனம் நகுநயமறைத்த வழியும் உள்ளஞ் சிதைந்து நிறையழியுமாகலின் அச்சிதைவு புறத்தார்க்குப் புலனாகாமை நெஞ்சினைநிறுத்தல். அது,

அகமலி யுவகைய ளாகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே. —[அகம். 86]

எனத் தலைமகன் அறிய மெய்ப்பட்டது என்பது. இதுவுந் தலைமகற்கு உரித்தன்று, தன்சிதைவு உணர்த்தினல்லது மறைக்குந்துணைச் சிதையின்மையின்; என்னை?

* நிறவெள

"பெருமையு முரனு மாடூஉ மேன."
—[தொல். பொருள். சூ. 95]

என்பவாகலின்.

இனி இவை நான்கும் முறையானே ஒருங்குவந்த செய்யுள் வருமாறு :—

யான்றற் காண்டொறுந் தான்பெரிது மகிழாள்
வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி
மிகைவெளிப் படாது நகைமுகங் கரந்த
நன்னுத லரிவை தன்மனஞ் சிதைந்ததை
நீயறிந் திலையா னெஞ்சே
யானறிந் தேனது வாயா குதலே.—[தொல்.பொருள் பக்.814]

எனவரும். இவை நான்கும் முதல் அவத்தைக்கண் நிகழ்வன.

கூழைவிரித்தல், தன் உள்ளத்து நிகழ்ந்த வேறுபாட்டினை அக்காலத்துத் தலைமகள் நிறையுடையளாதலாற் கரந்தொழுகற்பாலளே; அங்ஙனங் கரக்குங்காற் தன்வயத்ததாகிய உடம்புபற்றிவரும் வேறுபாட்டினைத் தாங்கும்; அங்ஙனந் தாங்குங்கால் உடம்பொடு தொடர்புடைய வாகி வேறுபட்ட தலைமயிரினதுமுடி உள்ள நெகிழ்ச்சியானே தன் வயத்ததன்றி நெகிழ்தல். அக்கூழை விரிதற்கு ஏதுவாயினாள் இவளாகலின் அதனைச் சினைவினையானன்றி முதல் வினையாற் கூறினா ரென்பது. காதொன்று களைதல், உறுப்பிடைப் பூட்டுறப்புனையாதுபெய்து வைத்தனவாதலாற் தோடுமுதலாயின எளிதின் வீழ்வனவாயின.மற்றவை வீழ்தற்கேதுவாகிய நெகிழ்ச்சி நிரம்பத்தோன்றாது இடைநிகர்த்த தாதலின் ஒன்று நிற்ப ஒன்றுவீழ்தல் எனப்பட்டது. இது கூழை போலாது, ஊறுணர்வுடைய உறுப்பாகலிற் காதின் வேறுபாட்டினைக் கூழை வேறுபாட்டின் பின்வைத்தார்; என்னை ? கூழையிற் காது தனக்கு உறவுடைமையின். ஊழணிதைவரல், அக்கூழையுந் தோடும் போலப் பெய்யப்படும் முறைமையவாகிய வளைகளை முன்கைமேல் இறுகச் செறித்தலும் விரற்செறியினைத் திருத்தலும் முதலாயின. இவை தோடுபோலச் செறிவில்லன அன்மையின் அவற்றுப்பின் வைத்தார். உடைபெயர்த்துடுத்தல், உடுத்த உடையினைப்பலகாலும் அழித்துடுத்தல். [அது கழறொடிபோலாது செறிவுடைமையின் அவ்வுடை நெகிழ்ச்சியைத் தொடிநெகிழ்ச்சிக்குப் பின்வைத்தார். மற்றுத்

"தொடிநெகிழ்ந் தனவே தோள்சா யினவே." —[குறுந். 239]

எனப் பிரிவின்கண்வந்த வேறுபாட்டினை ஈண்டுக் கூறாரோவெனின், அவை இன்னதன்பின்னர் இன்னது தோன்றுமென்னும் முறைமைய அல்லவாகலின் ஈண்டுக் கூறார். அவை,

"வினையுயிர் மெலிவிடத் தின்மையு முரித்தே"
—[தொல். பொருள் சூ. 268]

என்பவாகலின் உயிர்மெலிவிடத்து இடையறவுபட நிகழ்ந்தனவாகலா மென்பது.

இவற்றிற்குச் செய்யுள் :—

விண்ணுயர் விறல்வரைக் கவாஅ னொருவன்
கண்ணா னோக்கிய தல்லது தண்ணென
வுரைத்தலு மில்லை மாதோ வவனே
வரைப்பாற் கடவுளு மல்ல னதற்கே
யோதி முந்துறக் காதொன் றொகிழ
நிழலவிர் மணிப்பூ ணைஞ்சொடு கழலத்
துகிலும் பன்முறை நெகிழ்ந்திமிர்ந் தனவே
நீயறி குவையதன் முதலே
யாதோ தோழியது கூறுமா றெமக்கே.
—[தொல். பொருள் பக். 816]

எனவரும். கவாஅன், கள்வன். இவை நான்கும் இரண்டாம் அவத்தைக்கண் நிகழ்வன.

அல்குல்தைவரல், மேல் உடை பெயர்த்துடுத்தவள் அது பெரிது நெகிழ்ந்து காட்டினதனைப் பாதுகாத்தல். அணிந்தவை திருத்தல், அங்ஙனம் பாதுகாத்தவள் உடைநெகிழ்ச்சியைப் போற்றிக் கடிசூத்திரம் முதலாயின திருத்தல். இல்வலியுறுத்தல், அங்ஙனந் திருத்தினவள் புணர்ச்சியை வேண்டாதாள்போல வன்மைபடைத்துக்கொண்டு செய்தல். இல்வலியென்பதற்கு இற்பிறத்தலான தன்வலிதோன்ற நிற்றல் எனவுஞ் சொல்லுப. இருகையுமெடுத்தல் அங்ஙனம் படைத்துக்கொண்ட வலியானுந் தடுக்கப்படாது நிறையழியிற் கைகள் தாமே முயங்கல்விருப்பத்தான் எழுவனபோல்வதோர் குறிப்பு. இவை நான்கும் மூன்றாம் அவத்தைக்கண் நிகழ்வன.

உதாரணம் :—

ஓதியு நுதலு நீவி யான்றன்
மாதர் மென்முலை வருடலிற் கலங்கி
யுள்ளத் துருநள் போல வல்குலின்
ஞெகிழ்நூற் கலிங்கமொடு புகுமிட னறியாது
மெலிந்தில ளாகி வலிந்துபொய்த் தொடுங்கவும்
யாமெடுத் தணைத்தொறுந் தாமியைந் தெழுதலி
னிம்மை யுலகத் தன்றியு நம்மை

நீளரி நெடுங்கட் பேதையொடு
கேளறிந் தனகொலிவள் வெய்யமென் றோளே.

—[தொல். பொருள் பக். 818]

எனவரும்.

பாராட்டெடுத்தல், அங்ஙனம் பன்னிருவகை மெய்ப்பாடும் நிகழ்ந்த வழிப் புணர்ச்சி நிகழுமன்றே! அதன் பின்னர்த் தலைமகளை இயற்பட நினையுங் குறிப்பு. பாராட்டென்றது எடுத்தலென்றதனால் இதனை உள்ள மெடுத்தன் மேற்கொள்க. மடந்தபவுரைத்தல், விளையாடும் பருவத்து நிகழ்ந்த அறிமடம் நீங்கிக் காமப் பொருட்கண்ணே சிறிது அறிவு தோன்றப் பாங்கிக்குச் சில கூற்றுமொழி கூறல். மடந்தபவுரைத்தற்கு ஏதுவாகிய கருத்து ஈண்டு மெய்ப்பாடெனப்படும். ஈரமில்கூற்றமேற்றலர் நாணல், அங்ஙனம் அறிமடங்கெடச் சொற் பிறந்தவழி இன்றளவுந் தமராற் கூறப்படாத கடுஞ்சொல் உளவாமன்றே; அவற்றை முனியாது ஏற்றுக்கொண்டு புறத்தார்க்கு இது புலனாங்கொல் என்று நாணுதல். கொடுப்பவை கோடல், தலைமகனாற் கொடுக்கப்பட்ட தழையுங் கோதையுந் தாருங் கண்ணியுந் தோண்மாலையும் முதலாயின கொண்டு கையுறை பாராட்டுதல். இவை நான்காம் அவத்தைக்கண் நிகழ்வன.

இவற்றிற்குச் செய்யுள் :—

ஒருநாள் வந்து பலநாள் வருத்து
நின்னே போலு நின்றழை யென்வயி
னிற்பா ராட்டியுஞ் சொற்கொள லின்றியும்
யாயெதிர் கழறலிற் பேரலர் நாணியு
மபல்கூர் மாதர்க்குத் துயர்மருந் தாயினு
நோய்செய் தன்றாற் றோனே
நீதொடக் கரிதலி னேரிடத் தானே.

எனவரும் —[தொல். பொருள் பக் 820]

தெரிந்துடம்படுதல், அங்ஙனங் கொடுப்பவைகோடல் நிகழ்ந்தவழி அவ்வொழுகலாறு புறத்தார்க்கெல்லாம் ஐயமாகலின் அதன்வழித் தலைமகளைத் தலைமகள் இவ்வொழுகலாறு நிகழ்ந்தவாற்றைப் பட்டாங் குணராதார் தலைமை செய்தனள்இவளெனவுந் தகாத ஒழுக்கத்தினள் இவ ளெனவும் பல்லாற்றானும் இவள் கண்ணே ஏதமிட்டுத் துணிந்துந் துணியா தும் உரைப்பாராகலான் அதற்கு நாணி இனி யாது கொல்லோ செயற் பாலதென்று ஆராய்ந்து இவ்வொழுகலாற்றினை அறிவிப்பேங்கொல் அறிவியேங்கொல்லெனத் தடுமாறிப் பின் ஒருவகையான் ஆராய்ந்து முழுவதூஉஞ் சொல்லாது தன் குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பெண்டன் மைக்கும் ஏற்றவகையான் வேண்டுவன தெரிந்துகொண்டு இன்னவாறு

பட்டதென்று தோழிக்கு உடன்படுதலுந் தோழியாற் செவிலிக்கு உடன் படுதலுமென இன்னோரன்ன குறிப்பினைத் தெரிந்து உடன்படுதல். திளைப்புவினை மறுத்தல், அங்ஙனந் தமர்க்குத் தான் உடன்பட்டதன் பின்னர்த் தலைமகனோடு பகலும் இரவும் பண்டுதிளைத்தவாறு திளைத்தலை அச்சமும் நாணும் மடனுங் காரணமாக மறுத்தல், கரந்திடத்தொழிதல் அக்காலத்து இற்செறிக்கப்படுதலாற்றான் அவனை மறுத்த ஏதத்திற்கு நாணியும் அஞ்சியும் அவற்குவெளிப் படாது ஒழுகுதல். தன்இடத்தே தங்குதலை இடத்தொழிதல் என்றார். கண்டவழியுவத்தல், அங்ஙனங் கரந்தொழுகுங்காலத்து அவனை ஒருஞான்று கண்டவழிக் கழியுவகை மீதூர்தல். இவை நான்கும் ஐந்தாம் அவத்தைக்கண் நிகழ்வன.

இவற்றிற்குச் செய்யுள் :—

அறியாய் கொல்லோ நீயே தெறுவர
நோக்குதொறும் பனிக்கு நெஞ்சமொ டிவளே
யாய்க் கறிவுறலி னின்னெதிர் நாணி
மனைவயிற் பிரியலண் மன்னே யதற்கே
நினைவில ளிவளென வுரைத்தி
புனைதார் மார்ப காண்டியோ வதுவே.

எனவரும் —[தொல். பொருள் பக் 822]

புறஞ்செயச் சிதைதல், பூவுஞ் சாந்தும் பூணுந் துகிலும் முதலாயின கொண்டு புறத்தேகோலஞ்செய்ய அகத்தே சிதைவுண்டாதல். மேல் நின்றது கண்டவழி உவத்தலாகலானும் இது காணாத வழி நிகழ்கின்றதாகலானும் அதற்கு இனமின்றியும் அதன் வழித்தாயிற்றென்பது, புலம்பித்தோன்றல், அங்ஙனம் புனைந்தகோலந் துணையொடு கழியப்பெறாமையிற் புல்லென்றழிந்த நெஞ்சினளாகலான் எல்லாச் சுற்றத்தார்க்கும் இடைநின்றேயுந் தனியளென்பது அறிவியாநிற்றல். கலங்கி மொழிதல் கையொடுபட்ட கள்வரைப்போலச் சொல்லுவனவற்றைத் தடுமாற்றந் தோன்றச் சொல்லுதல். அஃதாவது தன்மனத்து நிகழாநின்றன தன்னையறியாமற் சில புலப்படச்சொல்லுதலாயிற்று. கையறவுரைத்தல், கலங்காது சொல்லுங்காற் செயலறவு தோன்றச் சொல்லுதல். அஃதாவது வன்புறை எதிரழிந்து சொல்லுவனபோல்வன. இவை நான்கும் ஆறும் அவத்தைக்கண் நிகழ்வன. கையறவுரைத்தலை ஈற்று வைத்தார், களவொழுக்கத்தினுள் இதனினூங்கு மெய்ப்பாடு கூறப்படாதென்றற்கு. என்னை ? கையறவுரை தோன்றியதற்பின் நிகழ்வன கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் மெய்ப்பாடாவதன்றி நற்காமத்திற்காகாமையின். என்னை? கையறவுரைத்தல் என்பது சொல்லாமரபி னவற்றொடுகெழீஇச் செய்யாமரபிற் தொழிற்படுத்தடக்குதலை எல்லையாகவுடைமையின்

அதனினும்பர்த்தோன்றுவன மன்றத்திருந்த சான்றவரறியத் தன்றுணை வன்பெயரும் பெற்றியுங் கூறி அழுதும் அரற்றியும் பொழுதொடுபுலம் பியும் புள்ளொடுசொல்லியும் நிகழும் மெய்ப்பாடாகலான், அவை நடு வணைந்திணையெனப்பட்ட நற்காமத்திற்கு இலக்கணவகையான் ஏலாவா கலின் என்பது. இக்கருத்தானன்றே அவத்தைபத்தும் பற்றி மெய்ப்பாடு கூறுது 'காட்சி முதல் ஆறையுங்கண்ணி ஒன்று ஈரிரண்டு ஆட்சிபெற வரும் நாலாறு மெய்ப்பாடும் அகனைந்திணைக் கட்டுன்னும்' என்றநூஉம் எனக்கொள்க.

புறஞ்செயச்சிதைதல் முதலிய நான்கற்குச் செய்யுள் ;—

இவளே, அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇப்
பல்கிளை நாப்ப ணில்கிளை போல
மொழிவகை யறியாள் பொழிக ணீர்துடைத்
தியானே கையற வலமருங்
கூறுப் பெருமகிற் றேறுமாறே.— [தொல்.பொருள்-பக் 825]

எனவரும்.

இனி, அன்ன பிறவாவன புகுமுகம் புரிதற்கட் தலைமகன் நோக்கிய வழி ஒருவல்லிப்பொதும்பரானும் மற்றொன்றானுஞ் சார்புபெற்று மறைதலும் அவையில்லாத வழி இடர்ப்படுதலும் என்றூற்போல்வன அடங்குதலும். [நகுநய மறைக்குங்கால் இதழ்மொக்குளுட் தோன்றுவது நகையெனப்படாது அதன்பாற்படுதலும், அமர்த்து நோக்காது அலமர நோக்குதலும் நிலங்கிளைத்தலுஞ் சிதைவு பிறர்க்கின்மைக்கண் அடங்குதலும் முதலியனவாம்.

இம்மெய்ப்பாட்டினுட் கைக்கிளை பெருந்திணைக்கு வருவன வருமாறு :—

ஒருக்குநா மாடுங் குரவையு ளம்மை
யருக்கினன் போனேக்கி யல்லனேய் செய்தல்
குரூஉக்கட் கொலையேறு கொண்டேன்யா னென்னுந்
தருக்கன்றோ வாயர் மகன். —[கலி. 104]

எனப் புகுமுகம்புரிதல் கைக்கிளைக்கண்வந்தது. தொன்மையுந் தோலும் முதலிய வனப்புகளுட் புகுமுகம்புரிதல் முதலாயின பெருந்திணைப் பொருள் பற்றி வருவன வருமாறு அறிந்து கொள்க.] மற்ற இவ்விருபத்து நான்கு மெய்ப்பாடுங் கற்பினுள் இம்முறையானே வரல்வேண்டுவதின் மையின் களவிற்கே விதந்தோதினர். இனி இங்ஙனமன்றிக் கற்பினுள் வருமாறு ;—

இனிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.[குறுந்.167]

என நகுநயமறைத்தல் வந்தது. பிறவும் அன்ன.

இன்னும் அதனானே,

இன்பத்தை வெறுத்த றுன்பத்துப் புலம்ப
லெதிர் பெய்து பரித லேத மாய்தல்
பசியட நிற்றல் பசலைபாய்த
லுண்டியிற் குறைத லுடம்புநனி சுருங்கல்
கண்டுயின் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடன் மெய்யே யென்ற
லையஞ் செய்த லவன்றமர் னுவத்த
லறனளித் துரைத்த லாங்குநெஞ் சழித
லெம்மெய் யாயினு மொப்புமை கோட
லொப்புவழி யுவத்த லுறுபெயர் கேட்ட
னலத்தக நாடிற் கலக்கமு மதுவே.—[தொல் பொருள். 270]

எனவும்,

[முட்டுவயிற் கழறன் முனிவுமெய்ந் நிறுத்த
லச்சத்தி னகற லவன்புணர்வு மறுத்த
றாதுமுனி வின்மை துஞ்சிச்சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்
றுயிரு நான்கே யழிவில் கூட்டம். —[தொல் பொருள். 267]

எனவும்,

தெய்வ மஞ்சல் புரையறந் தெளித
லில்லது காய்த லுள்ள துவர்த்தல்
புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாக்க
மருண்மிக வுடைமை யன்புதொக நிற்றல்
பிரிவாற் றாமை மறைந்தவை யுரைத்தல்
புறஞ்சொன் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே
—[தொல் பொருள். 268. சூ]

எனவும் ஓதுவன ஓத்தாகலின், முறையே இன்பத்தை வெறுத்தல் முதலாகக் கலக்கம் ஈறாகக் கிடந்த இருபதும் புணர்ச்சிக்கு நிமித்தமாகாதன போன்று காட்டினும் அவற்றை மிகவும் ஆராய்ந்து உணரிற் புணர்ச்சி நிமித்தமாய மெய்ப்பாடாமென்றும், முட்டுவயிற்கழறல் முதலாகக்கட்டுரை யின்மை ஈறாகக்கிடந்த எட்டும் பின்னொருகாலும் அழியாத வரைந் தெய்துங் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடென்றுந், தெய்வமஞ்சல் முதலாகப் புறஞ்சொன்மாணாக்கிளவி ஈறாகக் கிடந்த பதினொன்றும்

அழிவில் கூட்டம் நிகழ்ந்த பின்னர்க் கற்பின்கண் நிகழும் மெய்ப்பாடா மென்றுங் கொள்க.

அவற்றுள், இன்பத்தை வெறுத்தல், யாழும் குழலும் பூவுஞ்சாந்தும் முதலாக இன்பத்திற்கு ஏதுவாகிய பொருள் கண்டவழி அவற்றின்மேல் வெறுப்புத் தோன்றுதல். அது

கல்லாக் கோவல ரூதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே. —[அகம். 74]

எனவரும். துன்பத்துப் புலம்பல், பிரிவாற்றாது துன்புறுங்கால் அவ் வாற்றாமை தலைமகற்கின்றித் தானே துன்புறுகின்றாளாகச் சொல்லுதல் அது

நின்னுறு விழுமங் களைந்தோ
டன்னுறு விழும நீந்துமோ வெனவே —[அகம். 170]

எனவரும். எதிர்பெய்துபரிதல், உருவெளிப்பாடு. அது தலைமகனையும் அவன் தேர்முதலாயினவற்றையுந் தன்னெதிர்பெய்துகொண்டு பரிந் துரைத்தல். அது

வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
துயின்மறந் தனவாற் றோழியென் கண்ணே —[குறுந். 301]

எனவரும். ஏதமாய்தல், கூட்டத்திற்குவரும் இடையூறு உண்டென்று பலவும் ஆராய்தல். அது நொதுமலர் வரையக் கருதுவர்கொல்லெனவும், பிரிந்தோர் மறந்து இனிவாரார் கொல்லெனவுந் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. அது

வாரார் கொல்லெனப் பருவருந்
தாரார் மார்பநீ தணந்த ஞான்றே —[அகம். 150]

எனவரும். பசியடநிற்றல், பசிவருத்தவும் அதற்குத் தளராது உணவு மறுத்தல். அது,

அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி. —[அகம். 48]

எனவரும். பசலைபாய்தல், பசலைபரத்தல். அது,

கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டுந்
திதலை யல்குலெம் மாமைக் கவினே. —[குறுந். 27]

எனவரும். உண்டியிற் குறைதல், பசியடநிற்றலே யன்றிச் சிறிது உண்டியூட்டியவழிப் பண்டுபோலாது கழியவுஞ் சிறிது உண்டல். அது,

தீம்பா லூட்டினும் வேம்பினுங் கைக்கும்
வாரா யெனினு மார்வமொடு நோக்கு
நின்னிற் சிறந்ததொன் றிலளே
யென்னினும் படாஅ ளென்னிதற் படலே.

—[தொல். பொருள் பக். 832]

எனவரும். உடம்பு நனிசுருங்கல், அவ்வுண்ணுமை உயிரிற் செல்லாது உடம்பிற்காட்டுதல். அது,

தொடிநிலை நெகிழச் சாஅய்த் தோளவர்
கொடுமை கூறிய வாயினுங் கொடுமை
நல்வரை நாடற் கில்லை தோழி
நெஞ்சிற் பிரிந்தது மிலரே
குன்ற நோக்கங் கடிந்தது மிலரே.[தொல். பொருள். பக் 833]

எனவரும். கண்டுயின்மறுத்தல், இரவும் பகலுந் துஞ்சாமை. அது,

புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்ப னின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோரியா னாகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே. —[அகம். 82]

எனவரும். கனவொடுமயங்கல், அரிதினிற் துயிலெய்தியவழித் தலைமகனைக் கனவிற்கண்டு பின்னர் அவனன்மையின் மயங்கும் மயக்கம். அது,

அலந்தாங் கமையலே னென்றானைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும் —[கலி. 128]

எனவரும். பொய்யாக்கோடல், மெய்யைப் பொய்யாகக்கோடல். அது,

கனவினு னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குநின் மார்பு. —[கலி. 68]

எனவரும். மெய்யேயென்றல், பொய்யை மெய்யென்று துணிதல். அது,

கழங்கா டாயத் தன்றுநம் மருளிய
பழங்க ணோட்டமு நலிய
வழுங்கின னல்லனோ வயர்ந்தநன் * மணனே. —[அகம் 66]

எனவரும். ஐயஞ்செய்தல், அது,

(பா - ம்) * மன்னே.

தூதவர் விடுதரார் துறப்பார்கொ லேனுதக
விருங்குயி லாலு மரோ. —[கலி. 33]
எனவரும். அவன்றமருவத்தல்,
ஊரன் ஊரன் போலுந்
தேரும் பாணன் றெருவினுனே.-[தொல். பொருள் பக். 834]
எனவரும். அறனளித்துரைத்தல், அறக்கிழவனை யன்பு செய்தல். அது,
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகுமாலை நின்றோ ளெய்தி. —[அகம். 9]
எனவரும். ஆங்கு நெஞ்சழிதல், அங்ஙனம் உரைக்குங்கால் நெஞ்சழிந்து உரைத்தல். அது,
பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவென் வந்தனெ னென்னெஞ்ச
மழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ வென்று. —[கலி. 143]
எனவரும். எம்மெய்யாயினுமொப்புமைகோடல், யாதானுமொருபொருள் கண்ட இடத்துத் தலைமகனோடு ஒப்புமைகோடல். அது,
கணைகழி கல்லாத கல்பிறங் கதரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையுங் காணிரோ பிரியுமோ வவையே. —[கலி 20]
எனவரும். ஒப்புவழியுவத்தல், ஒப்புமையுண்டாகியவழியே உவமை கொண்டு அதனோனே உவகைதோன்றுவது. அது,
காமரு நோக்கினை யத்தத்தா வென்னுநின்
றேமொழி கேட்ட லினிதுமற் றின்னுதே —[கலி. 80]
எனவரும். உறுபெயர்கேட்டல், தலைமகன் பெரும்புகழ் கேட்டு மகிழ்தல். அது,
பலவின் பழத்துட் டங்கு
மலைகெழு வெற்பனைப் பாடுகம் வா. —[கலி. 41]
எனவரும். கலக்கலும், சொல்லத்தகாதன சொல்லுதல். அது,
பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து. —[கலி. 142]
எனவும்,
பிறங்கிரு முந்நீர் வெறுமணலாகப்
புறங்காலிற் போக விறைப்பேன் முயலி
னறம்புணை யாகலு முண்டு. —[கலி. 144]
எனவும் வரும்.

இங்ஙனம் ஓதிய இருபது மெய்ப்பாடுந் தலைமகற்கும் ஏற்றவகை யானே கொள்ளப்படும். அவை,

எவ்வி யிழந்த * வறுமை யாழ்ப்பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
† றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே. —[குறுந். 19]

இது துன்பத்துப் புலம்பல் தானே துன்புறுகின்றானாகத் தலைமகன் உரைத்தமையின். ஒழிந்தனவுந் தலைமகற்கு உரியவாகி வருவன வந்தவழிக் கண்டுகொள்க. இவ்வெண்ணப்பட்டனவெல்லாம் உள்ளத்து நிகழ்ந்தனவற்றை வெளிப்படுப்பனவாகலான் மெய்ப்பாடெனப்பட்டன. மேல்வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

முட்டுவயிற்கழறல், தலைக்கூட்டத்திற்கு முட்டுப்பாடாகிய வழிக் கழறியுரைத்தல். அது,

நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முது புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே. —[அகம். 122]

எனவரும். முனிவுமெய்ந்நிறுத்தல், தலைமகள் உள்ளத்து வெறுப்பு வெளிப்படநிற்கும் நிலைமை. அது,

இன்னுயிர் கழிவதாயினு நின்மக
ளாய்மல ருண்கட் பசலை
காம நோயெனச் செப்பா தீமே. —[அகம். 52]

எனவரும். அச்சத்தினகறல், தலைமகன் கண்வரும் ஏதம் அஞ்சி அவனை நீங்குங்குறிப்பு. அது,

மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே
கொன்றோ ரன்ன கொடுமையோ டின்றே
யாமங் கொளவரிற் கனைஇக் காமங்
கடலினு முரைஇக் கரைபொழி யும்மே
யெவன்கொல் வாழி தோழி மயங்கி
யின்னண மாகவு நன்னர் நெஞ்ச
மென்னொடு நின்னொடுஞ் சூழாது கைமிக்
கிறும்புபட் டிருளிய வீட்டருஞ் சிலம்பிற்‡

(பா - ம்) * வறுமையர். $ யின்ன
(பா - ம்) † றினையல்மதி ‡ விட்டருஞ்

குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப் புறத்தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்
பிட்டருங் கண்ண படுகுழி யியவி
னிருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடித் தாங்கிய சென்ற தின்றே. —[அகம். 128]

எனவரும். அவன் புணர்வு மறுத்தல், இரவிற்குறியும் பகற்குறியும் விலக்குதற்கு எழுந்த உள்ள நிகழ்ச்சி. அது தமரையஞ்சி மறுத்தமையானும் இது வரைவுகடாவுதற்குக் கருத்தாகலானும் திளைப்புவினை மறுத்தலோடு இது வேற்றுமையுடைத்து. இது

நல்வரை நாட நீவரின்
$மெல்லிய லோருந் தான் வாழலளே. —[அகம். 12]

எனவரும். தூதுமுனிவின்மை, புள்ளும் மேகமும் போல்வனகண்டு சொல்லுமின் அவர்க்கென்று தூதிரந்து பன்முறையானுஞ் சொல்லுதல். அது,

கானலுங் கழறாது கழியுங் கூறாது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையு மொழியா
தொருநீ யல்லது பிறிதியாது மிலனே
யிருங்கழி மலர்ந்த கண்போ னெய்தல்
கமழிதழ் நாற்ற மமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறவை கிளருந் துறைவனை நீயே
சொல்ல வேண்டுமா லலவ. —[அகம். 170]

எனவரும். துஞ்சிச்சேர்தல், மனையகத்துப் பொய்த்துயிலோடு மடிந்து வைகுதல். அது,

என்மலைந் தனன்கொ றோனே தன்மலை
யார நாறுமார் பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே. —[குறு. 161]

எனவரும். காதல் கைம்மிகல், காமங் கையிகந்தவழி நிகழும் உள்ள நிகழ்ச்சி. அது,

உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி

$ மெல்லியா ளொரு நாள் வாழலளே

வான்றோய் வற்றே காமஞ்
சான்றோ ரல்லர் யாமரீஇ யோரே. —[குறு- 102]

எனவரும். கட்டுரையின்மை, உரைமறுத்திருத்தல். அது,

யான்ற னறிவ றுளெ றி யலளே
யாங்கா குவள்கொ றுனே
பெருமுது செல்வ ரொருமட மகளே. —[குறு. 337]

எனவரும்.

தெய்வமஞ்சல், தலைமகற்குத் தொழுகுலமாகிய தெய்வமும் அவற் காசிரியராகிய தாபதரும் இன்னர் என்பது அவனான் உணர்த்தப்பட்டு உணர்ந்த தலைமகள் அத்தெய்வத்தினை அஞ்சியொழுகும் ஒழுக்கம் அவள்கட்டோன்றுதல். அது,

சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ —[கலி. 16]

எனவும்,

அச்சாறாக வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுவல். —[கலி. 75]

எனவும் வரும். புரையறந்தெளிதல், தனக்கொத்த இல்லறம் இன்னது என்று தலைமகள் மனத்துப்படுதல். அது

விரியுளைக் கலிமான் *றேரொடும் வந்த
விருந்தெதிர் கோடலை மறப்ப லென்றும். —[கலி. 75]

எனவரும். இஃது அவனோடு சொல்லாடாது ஊடியிருப்பேனாயின், விருந்துகொண்டு புகுதரும், அதனால் ஊடலைமறப்பேன் என்றமையின் புரையறந்தெளிதலாயிற்று. இல்லதுகாய்தல், களவின்கட்போலாது தலைமகற்கு இல்லாததனை உண்டாக்கிக்கொண்டு காய்தல். அது,

நற்றா ரகலத்துக் கோர்சார ரமேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப் பாடாகலு முண்டு. —[கலி- 93]

எனவரும். உள்ளதுவர்த்தல், தலைமகனாற் பெற்ற தலையளி உள்ளதேயாயினும், அதனை உண்மையென்றேதெளியாது அருவருத்துநிற்கும் உள்ள நிகழ்ச்சி. அது

கடல்கண்டன்ன கண்ணகன் பரப்பின்

என்னும் பாட்டினுள்

வேப்பு நனையன்ன நெடுங்கண் ணீர்ஞெண்
டிரைதேர் வெண்குரு கஞ்சி யயல
தொலித்த பகன்றை யிருஞ்சேற் றள்ளற்

(பா-ம்) * றேரொடு

றிதலையின் வரிப்ப வோடி விரைந்துதன்
னீர்மலி மண்ணளைச் செறியு மூர. —[அகம். 176]

என்புழித் தலைமகன் வாயில்வேண்டச் சென்றானைப் பிறர்கூறும் பழிக்கு வந்தாயென்றமையின் இஃது உள்ளதுவர்த்தலாயிற்று. புணர்ந்துழியுண்மை, முற்கூறிய இல்லது காய்தலும் உள்ளதுவர்த்தலுமாகிய விகாரமின்றிப் புணர்ச்சிக்காலத்துச் செய்வன சென்ற உள்ளநிகழ்ச்சி. அது

குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதா—மொளியிழா
யூடி யிருப்பினு மூர னறுமேனி
கூடலினிதா மெனக்கு. —[ஐந்தி-50ல். 30]

எனவரும். பொழுது மறுப்பாக்கம், களவின்கட்பகற்குறியும் இரவுக் குறியுமென வரையறுத்தாற் போல்வதோர் வரையறையின்மையின் அப்பொழுதினை மறுத்தலாகிய ஆக்கம். எனவே களவுக்காலத்துப் பொழுது வரைந்துபட்ட இடர்ப்பாட்டினீங்கிய மனமகிழ்ச்சி ஆக்க மெனப் படும். அது

அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர்ந்த தூம்புடைத் திரள்கா
லாம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவ
ளிடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
கரிய மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே. —[குறு. 178]

எனவரும். அருண்மிகவுடைமை, களவுக்காலத்துப்போலத் துன்பமிகுத லின்றி அருண் மிகத் தோன்றிய நெஞ்சினளாதல். அது

நின்ற சொல்லி னீடு தோறினிய
ரென்று மென்றோள் பிரிபறி யலரே —[நற்றி. 1]

எனவரும். அன்பு தொகநிற்றல், களவுக்காலத்துப் பிரிந்த அன்பெல்லாம் இல்லறத்து மேற் பெருகிய விருப்பினானே ஒருங்குதொக நிற்றல் அது

எம்போற், புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின் றுறைவா
ளென்ன கடத்தளோ மற்றே. —[அகம். 176]

என்புழிப் புதல்வற்பயந்து நின்னின்றுறையுங் கடத்தினம் யாமென்றமையின் இஃது அன்புதொக நிற்றலாயிற்று. பிரிவாற்றாமை, களவிற் பிரிவாற்றுதல் வேண்டுமாறுபோலக் கற்பினுட் பிரிவாற்றுதல் வேண்டாமை. அது,

இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிளிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போற் றொழுதேத்த வயங்கிய கற்பினா
டடமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை.

—[கலி. 2]

எனவரும். மறைந்தவையுரைத்தல், களவுக்காலத்து நிகழ்ந்தனவற்றைக் கற்புக்காலத்துக் கூறுதல். அது,

முயங்கல் விடாஅ லிவையென மயங்கி
யானோ மென்னவு மொல்லார் தாமற்
றிவைபா ராட்டிய பருவமு முளவே, யினியே
புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்
திதலை யணிந்த தேங்கொண் மென்முலை
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுத ரோமஞ் சினரே.

—[அகம். 26]

எனவரும். புறஞ்சொன் மாணாக்கிளவி, தலைமகற்கு வந்த புறஞ்சொல்லின் பொல்லாங்கு குறித்து எழுந்த கிளவி. அது,

களிறுகவர் கம்பலை போல
வலரா கின்றது பலர்வாய்ப் பட்டே.

—[அகம். 96]

எனவரும். பிறவும் அன்ன.

இன்னும்,

நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
யின்புற லேழைமை மறப்போ டொப்புமை
யென்றிவை யின்மை யென்மனார் புலவர்.

—[தொல். பொருள் சூ. 274]

என்றமையாற் காமக்குறிப்பாகாத இவையெல்லாமின்றி வருதலைத் தலைமகன்கண் நிகழும் மெய்ப்பாடென அவை தம்மை வரையறுத்துக் கூறாது அவற்றுக்காகாதென வரையறுத்துக் கூறியவாறுந், தலைமகட்குரிய மெய்ப்பாடாயின வரையறுத்துக் கூறினமையின் அவற்றுக்காகாதெனக் கூறல்வேண்டாதவாறுங் கண்டுகொள்க. ஆகாதனவற்றிற்கு உதாரணங் காட்டலாவதில்லை. நிம்பிரி, பொறாமை தோன்றுங் குறிப்பு. அவை

இந்நாட் சிறிது பொறுத்தாயென்றாற்போல்வன. கொடுமை, கேடுசூழ் நினையுந் தீவினையுள்ளம். வியப்பு, தலைமகள்பாற் தெய்வத்தன்மை கண்டான்போல் வியந்தொழுகுதல். புறமொழி, புறங்கூற்று. வன்சொல், கண்ணோட்டமின்றிச் சொல்லுஞ் சொற்கள். பொச்சாப்பு, கடைப்பிடியின்றி நெகிழ்ந்திருத்தல். மடிமை, சோம்புள்ளம். குடிமை, இவள் இழிந்த பிறப்பினளெனத் தன்னை நன்குமதித்தொழுகுதல். இன்புறல், ஒருவர் ஒருவரிற் தாமே இன்புறுகின்றாராக நினைத்தல். ஏழைமை, நுழைந்த உணர்வினரன்றிவரும் வெண்மை. மறப்பு, மறவி. ஒப்புமை, இன்னாளை ஒக்கும் இவளென்று அன்புசெய்தல். எனவுணர்க.]

209. சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை
புல்லிய கிளவி யெச்ச மாகும்.

இது பத்தாமெண்ணு முறைமைக்கண் நின்ற எச்சம் இவ்வியல்பிற் றாய்ச் செய்யுட்கு உறுப்பாய் வருமென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) கூற்றினானுங் குறிப்பினானும் முடிக்கப்படும் இலக்கணத்தோடு பொருந்திய கிளவி எச்சமென்னும் உறுப்பாம். (எ-று.)

ஈண்டுச் சொல்லென்றது சொல்லோத்தினுட் சொல் இசை குறிப்பென்ற மூன்றனுட் சொல்லென்றதென உணர்க.

'முடிவுகொளியற்கை' எனவே, செய்யுளின் கண்ணதன்றிப் பின் கொணர்ந்து முடிக்கப்படுமென்பதும் பெற்றாம்.

உதாரணஞ் சொல்லோத்தினுட் குறிப்பெச்சம் உணர்த்திய வழிக் காட்டினாம். அற்றேல் அஃதாக மாட்டேற்றான் எய்துவியாது இதனை எடுத்தோதி விதந்ததென்னையெனின், ஆண்டு எச்சமென்ற துணையல்லது அகப்பொருளொழிபாய்ச் செய்யுட்கு உறுப்பாமென்னும் விசேடவிதி ஆண்டுப்பெறப்படாமையின் விதந்தோதல் வேண்டுமென்க.

[இனிச்,

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே. —[குறுந். 1]

என இதனையே, செய்யுண்முடிந்தவழியும், இவற்றால் யாங்குறையுடையம் அல்லமென்று தலைமகற்குச் சொன்னாளேற் கூற்றெச்சத்திற்குங், காண்பாயாகிற் காணெனத் தலைமகட்குச் சொன்னாளேற் குறிப்பெச்சத்திற்கும் உதாரணமாகக் காட்டினும் அமையும்.] (209)

210. இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவு
மொழுக்கமு மென்றிவை யிழுக்குநெறி யின்றி
யிதுவா கித்திணைக் குரிப்பொரு ளென்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை யென்ப.

இது பதினோராமெண்ணு முறைமைக்கண் நின்ற பொருள் வகை இவ்வியல்பிற்றாய்ச் செய்யுட்கு உறுப்பாய் வருமென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்) இன்பமும் துன்பமும் புணர்தலும் பிரிதலும் ஒழுக்கமுமென்னப்பட்ட இவை இழுக்காதவாற்றான் இத்திணைக்கு இது பொருளென்று ஆசிரியன் ஓதிய உரிப்பொருளன்றி அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலவனாற் செய்யப்படுவது பொருட் கூற்றெனப்படும். (எ-று.)

அது

பிடிக்கை யன்ன பின்னகந் *தீண்டித்தன்
றொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ.

—[அகம். 9]

என்றாற் போலச் செய்யுள் செய்வான் தான் வகுப்பனவெல்லாங் கோடல். இது பாலைப் பாட்டினுள் வந்ததாயினுங் குறிஞ்சி முதலாயினவற்றிற்கும் பொதுவாமென்பது. பொதுமை, எல்லா உரிப்பொருட்கும் ஏற்பப் பல் வேறுவகையாற் செய்தல். (210)

211. அவ்வ மாக்களும் விலங்கு மன்றிப்
பிறவவண் வரினுந் திறவதி னாடித்
தத்த மியல்பின் மரபொடு முடியி
னத்திறந் தானே துறையெனப் படுமே.

இது பன்னிரண்டாமெண்ணுமுறைமைக்கண் நின்ற துறை இவ்வியல்பிற்றாய்ச் செய்யுட் குறுப்பாய் வருமென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

இ-ள். ஐவகை நிலத்திற்கு உரியரெனப்படும் பல்வேறு வகைப்பட்ட மக்களும் மாவும் புள்ளும் ஓதிவந்தவாறன்றிப் படைத்துச் செய்யினும் அவ்வத்திணைக்கேற்ற இலக்கணமும் வரலாற்று முறைமையும் பிறழாமற் செய்யின் அது மார்க்கமெனப்படும். எ-று.

மார்க்கமெனினுந் துறையெனினும் ஒக்கும்.

"ஊர்க்கா னிவந்த பொதும்பரு ணீர்க்கால்" —[கலி. 56]

என்னுங்கலியுட்

கொழுநிழன் ஞாழன் முதிரிணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை

என நெய்தற்றலைமகள்போலக் கூறி அவளை மருத நிலத்துக்கண்டான் போல,

"ஊர்க்கா னிவந்த பொதும்பருள்."

எனவுஞ் சொல்லிப்பின் குறிஞ்சிப்பொருளாகிய புணர்தலுரிப்பொருளான்

* தீண்டித் தொடிக்கை

முடித்தான்; அவ்வாறு மயங்கச் செய்யினுங் குறிஞ்சித்துறைப் பாற் படச் செய்தமையின் அத்துறையுறுப்பான் வந்ததென்பது. இதுவும் மேலைப்பொருள்வகைபோலப் புலவராற் செய்து கொள்ளப்படுவதாகலான் அதற்குப்பின் வைக்கப்பட்டது.

[இன்னனங் கூறியவாற்றான் உரைப்போர் கேட்போர் உண்மையின்றி உரைக்குங்கவியே உரைப்பதூஉந் துறையென்னும் உறுப்பாதல் பெற் றாம்.

எறிதே னலம்புஞ் சிலம்பினெப் போது மிரந்திவள்பின்
வெறிதே திரிந்து மெலிந்தனம் யாமுள்ள மெல்லியற்குப்
பிறிதேகொ லென்னும் பெருந்தகைத் தேறப் பெரிதுயிர்த்து
வறிதே முறுவல்செய் தாள்தஞ்சை வாணன் வரையணங்கே.

—[தஞ். கோவை. 15]

இதனுட் கூற்றிற்கு உரியனல்லாத கவிக்கூற்றும் அதற்கு உரியார் கூற்றின்பாற் படுத்தி அடக்கப்பட்டவாறு காண்க.]

முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாராது மயங்கலு முரிய. —[இ-வி. 394. சூ]

என்றதனன் அடங்குதலின் இச்சூத்திரம் வேண்டாவெனின், அதனன் மயங்குமென்னுந் துணையல்லது அகப்பொருளொழிபாய்ச் செய்யுட்கு உறுப்பாமென்னும் விசேடவிதி ஆண்டுப் பெறப்படாமையின் வேண்டு மென்பதென்க. (211)

212. உவமப் பொருளு மிறைச்சிப் பொருளுந்
திணையுணர் வகையா னிணையும் பாட்டினுள்.

இன்னும் ஒருவாற்றான் அகப்பொருளொழிபு உணர்த்துவான் புகுந்தவற்றுள் இது திணையுணர்தற்கருவியாவன சிலபொருள் செய்யுட் கண் வருமாறு கூறுகின்றது.

இ-ள். உவமப்பொருளுங் கருப்பொருட்கு நேயமாகிய இறைச்சிப் பொருளுமென்று இருபகுதிப்பட்ட பொருளுந் திணையுணருங்கூற்றாற் பொருந்துஞ் செய்யுட்கண். எ-று. (212)

213. உள்ளுறை யுவமம் வெளிப்படை யுவமமென
வெள்ளரு முவம மிருவகை யுடைத்தே.

இது மேற்கூறிய உவமப்பொருள் இத்துணைத்தென்கிறது.

இ-ள். உள்ளுறையுவமமும் வெளிப்படையுவமமும் என முன்னர்க் கூறிய இகழ்தற்பாடில்லாத உவமப்பொருள் இருவகையினையுடைத்தாம். எ-று. (213)

214. அவற்றுள்,

உள்ளுறை யுவம முய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளோடும் விலங்கோடும் பிறவோடும் புலப்படும்.

இது முறையானே உள்ளுறையுவமம் இவ்வியல்பிற்றென்கின்றது.

(இ-ள்.) மேற்கூறிய இரண்டனுள் உள்ளுறையுவமமாவது ஆராய்ந்தறியும் பகுதியினையுடைத்தாய்ப் புள்ளுமுதலிய கருப்பொருள்களே தனக்குத் தோன்று நிலனாகக்கொண்டு அவற்றானே புலப்படும். (எ-று.)

எனவே, புள்ளு முதலியபற்றிவரும் அப்பொருணிகழ்ச்சி பிறிதொன்றற்கு உவமமாகச் செய்தலும், அங்ஙனஞ் செய்யுங்காற் பவளவாயென்றாற்போல உவமையும் உவமிக்கப்படும் பொருளும் புலப்படக் கூறாது உள்ளத்தான் உணருந் திறத்தான் உவமமாத்திரமே கூறலும் உள்ளுறையுவமத்திற்கு இலக்கணமாயிற்றென்பது.

உள்ளுறை, உள்ளுறுத்தல்.

வீங்குநீ* ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்
டோங்குய ரெழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடிக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லைப்
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர; —[கலி. 66]

இதனுள், வீங்குநீர் பரத்தையர் சேரியாகவும், அதன்கண் வீழ்ந்த நீலங் காமச்செவ்வி நிகழ்ந்த பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரேற்றிக்கொண்டுவரும் பாணர் முதலிய வாயில்களாகவும், அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுஉறைந்த வண்டுகள் வந்த வண்டிற்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப்பரத்தையர் தமது நலத்தை அத்தலைவனை நுகர்வித்தலாகவுங், கங்குலின் வண்டு முல்லையை ஊதுதல் இற்பரத்தையருடன் இரவு துயிலுதலாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத்தல் தலைவியை மறத்தலாகவும் பொருள் தந்து, ஆண்டுப் புலப்படக்கூறிய கருப்பொருள்கள் புலப்படக் கூறாத மருதத்திணைப் பொருட்கு உள்ளுறையு வமமாய்க் கேட்டோனுள்ளத்தே விளங்கி நின்றவாறு காண்க. பிறவும் அன்ன. (214)

215. வெளிப்படை யுவமம் வினைபயன் மெய்யுரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும்.

(பா · ம்) * நீர் வீழ் நீலம்.

இது முறையானே வெளிப்படையுவமம் இவ்வியல்பிற்றென்கின்றது.

(இ-ள்.) வெளிப்படையுவமமாவது தொழிலும் பயனும் வடிவும் வண்ணமுந் தம்மோடு உவமிக்கப்படும் பொருளோடு அடுத்து உள்ளத்தான் உணரவேண்டாது சொல்லிய சொற்றொடரே பற்றுக் கோடாகத் தாமே புலப்படநின்று விளங்குவதாம். (எ-று.)

அஃது அங்ஙனமாமாறு அணியியலுட் காண்க. (215)

216. இறைச்சி தானே பொருட்புறத் ததுவே.

இது முறையானே இறைச்சிப்பொருள் இவ்வியல்பிற்றென்கின்றது.

(இ-ள்.) கருப்பொருட்கு நேயமாகிய இறைச்சிப்பொருள்தான் கூற வேண்டுவதோர் பொருளின்புறத்தே புலப்பட்டு அதற்கு உபகாரப்படும் பொருட்டன்மையை உடையதாம். (எ-று.)

[இலங்கு மருவித் திலங்கு மருவித்தே.
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை; —[கலி. 41]

சூளைப் பொய்த்தானென்பதே கூறவேண்டும் பொருள். அதன்புறத்தே இங்ஙனம் பொய்த்தான் மலையகத்து நீர்திகழ் வான் என இறைச்சிப் பொருள் தோன்றியவாறு காண்க.

"சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே." —[குறுந். 3]

இதில் நாட்டிற்கு அடையாகிவந்த குறிஞ்சிப்பூவுந் தேனும் இறைச்சிப் பொருளென்று கொள்க.] (216)

217. காமஞ் சாலா விளமை யோள்வயி
னேமஞ் சாலா விடும்பை யெய்தி
நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற்
றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே.

இஃது ஒருதலைக் காமப் பொருண்மைத்தாக மேற்கூறிப்போந்த கைக்கிளைக்குச் சிறந்த பொருள் இதுவென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) காமக்குறிப்பிற்குஅமைதியில்லாத இளமைப் பிராயத்தாள் ஒருத்திகண்ணே ஒருதலைவன் இவள் எனக்கு மனைக்கிழத்தியாக யான் கோடல் வேண்டுமெனக்கருதி, மருந்து பிறிதில்லாப் பெருந்துயரெய்தி, நன்மையுந் தீமையு மென்கின்ற இரண்டு

கூற்றான் மிகப்பெருக்கிய சொற்களைத் தன்னோடும் அவளோடுங் கூட்டிச்சொல்லி, அச்சொல்லிற்கு எதிர்மொழிபெறாதே பின்னுந் தான் சொல்லி இன்புறுதல் பொருந்தித்தோன்றுங் கைக்கிளைக்குறிப்பு. எ-று.

அவளுந் தமருந் தீங்குசெய்தாராக அவளோடு தீங்கைப் புணர்த்துந் தான் ஏதஞ்செய்யாது தீங்கு பட்டானாகத் தன்னோடு நன்மையைப் புணர்த்துமென நிரனிறையாக உரைக்க. இருதிறத்தாற் தருக்கிய எனக் கூட்டுக.

உ-ம்.

வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்றோட்
பேரெழின் மலருண்கட் பிணையெழின் மானோக்கிற்
காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதற்
கூரெயிற்று முகைவெண்பற் கொடிபுரையு நுசுப்பினாய்
நேர்சிலம் பரியார்ப்ப நிரைதொடி வீசினை
யாருயிர் வௌவிக்கொண் டறிந்தீயா திறப்பாய் கேள் ;

உளனாவென் னுயிரையுண் டுயவுநோய் கைம்மிக
விளமையா னுணராதாய் நின்றவ றில்லானுங்
களைநரி னோய்செய்யுங் கவினறிந் தணிந்துதம்
வளமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

நடைமெலிந் தயர்வுறீஇ நாளுமென் னலியுநோய்
மடமையா னுணராதாய் நின்றவ றில்லானு
மிடைநில்லா தெய்க்குநின் னுருவறிந் தணிந்துதம்
முடைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

அல்லல்கூர்ந் தழிவுற வணங்காகி யருடருநோய்
சொல்லினு மறியாதாய் நின்றவ றில்லானு
மொல்லையே யுயிர்வௌவு முருவறிந் தணிந்துதஞ்
செல்வத்தாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

எனவாங்கு,

ஒறுப்பின்யா னொறுப்பது நுமரையான் மற்றிந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்குழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவென் போல்வன்யா னீபடு பழியே. —[கலி. 58]

எனவரும். அவளைச் சொல்லுதலே தனக்கு இன்பமாகலிற் சொல்லியின்புறல் என்றார். இது புல்லித்தோன்றுங் கைக்கிளை எனவே, காமஞ்சான்ற விளமையோள்கண் நிகழுங் கைக்கிளை இத்துணைச்சிறப்பின்றாயிற்று ; அஃது அசுரம் முதலிய மூன்றுமாம். இயற்கைப்புணர்ச்சிக்குமுன் நிகழுங்

காட்சி முதலிய நான்குங் காமஞ்சான்ற விளமையோள்வயிற்கைக்கிளையா மேனும், நற்காமத்திற்கு இன்றியமையாது வருதலின் ஈண்டுக்கூறிய சிறப்புடைக் கைக்கிளையாதற்கு உரிமையுடையவாயின. என்னை

"முன்னைய நான்கு முன்னதற் கென்ப."

—[தொல் பொருள். 55-சூ]

என்பவாகலின். குறிப்பென்றதனாற் சொல்லியின்புறினுந் தலைவன் குறிப்பு நிகழ்ந்தது புறத்தார்க்குப் புலனாகாவென்பதூஉம் அகத்துநிகழ்ச்சி அறியும் மனைவியர்க்காயிற் புலனாமென்பதூஉங் கொள்க. (217)

218. அதுவே,

இறைமையி லோர்க்கு மிழிகுலத் தோர்க்கு
முறைமையி னுரித்தே முன்னுங் காலே.

இஃது அஃது இத்தன்மையோர்க்கு உரித்தென்கின்றது.

(இ-ள்.) மேற்கூறிய கைக்கிளைதான் தலைமைப்பாடில்லாதார்க்கும் இழிகுலத்தார்க்கும் குறைமையான் உரித்தாம் ஆராயுங்காலத்து எ-று.

முன்னுங்காலை என்றதனால் இது பயின்றுவாராதெனக்கொள்க.(218)

219. ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிற
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

இது பொருந்தாக் காமம் பொருண்மைத்தாக மேற்கூறிப்போந்த பெருந்திணைக்குப் பொருள், இவையென்பதோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) மடன்மாக்கூறுதலன்றி மடலேறுதலுந் தலைவற்கு இளைய ளாகாது ஒத்த பருவத்தாளாதலும் இருபத்துநான்காம் மெய்ப்பாட்டின் நிகழ்ந்து ஏழாம் அவத்தை முதலாகவரும் அறிவழிகுணனுடையளாதலுங் காமமிகுதியானே எதிர்ப்பட்டுழி வலிதிற்புணர்ந்த இன்பத்தோடே கூட்டப்பட்டுக் கந்தருவத்துப்பட்டு வழீஇயிற்றாகச் செப்பிய இந்நான்கும் பெருந்திணைக்கருத்தாம். (எ-று.)

மடன்மாக்கூறுதல் கைக்கிளையாம். மடற் றிறமென்றதனான் அதன் திறமாகிய வரைபாய்தலுங்கொள்க. இளமைதீர்திறமென்றதனாற் தலைவன் முதிர்ச்சியும், இருவரும் முதிர்ந்தபருவத்துந் துறவிற் சேறலன்றிக் காமநுகர்தலுங் கொள்க.

உ-ம்.

சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனா லிவ்விருந்த
சான்றீ ருமக்கொன் றறிவுறுப்பென் மான்ற

துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சே
னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணியலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
வோங்கிரும் பெண்ணை மடலூர்ந்தெ னெவ்வநோய்
தாங்குத றேற்றா விடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறுத்து ;

யாமத்து மெல்லையு மெவ்வத் திரையலைப்ப
மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
றேமொழி மாத ருறாஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு ;

உய்யா வருநோய்க் [1]குயவாகு மைய
லுறீஇயா ளீத்தவிம் மா ;

காணுந ரெள்ளக் கலங்கித் தலைவந்தெ
ணாணெழின் முற்றி யுடைத்[2]துள் ளழிதரு
மாணிழை மாதரா ளேஎரெனக் காமன
தாணையால் வந்த படை ;

காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா ;

அகையெரி யானாதென் னாருயி ரெஞ்சும்
வகையினா லுள்ளஞ் சுடுதரு மன்னோ
முகையே ரிலங்கெயிற் றின்னகை மாதர்
தகையாற் றலைக்கொண்ட நெஞ்சு ;

அழன்மன்ற காம வருநோய் நிழன்மன்ற
நேரிழை யீத்தவிம் மா ;

ஆங்கதை, அறிந்தனி ராயிற் சான்றவிர் தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்றோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவ
ருயர்நிலை யுலக முறீஇ யாங்கென்
றுயர்நிலை தீர்த்த னுந்தலைக் கடனே. —[கலி. 139]

எனவும்,

(பா-ம்.) 1 குயலாகு 2 உளழித்தரு

உளைத்தவர் கூறு முரையெல்லா நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம்—விளைத்த
பழங்கள் எனைத்தாய்ப் படுகளி செய்யு
முழங்கு புனலூரன் மூப்பு. —[பு. வெ. பெருந். 14]

எனவும்,

அரும்பிற்கு முண்டோ வலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல்—சுரும்போ
டதிரும் புனலூரற் காரமுத மன்றே
முதிரு முலையாண் முயக்கு. —[பு. வெ. பெருந். 13]

எனவும் வருவனவும்

புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கட்
செயனின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது
நயனின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
பயனின்று மன்றம்ம காம மிவண்மன்னு
மொண்ணுத லாயத்தா ரோராங்குத் திளைப்பினு
முண்ணுனை தோன்றாமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினு முகத்தினு நகுபவள் பெண்ணின்றி
யாவருந் தண்குரல் கேட்ப நிரைவெண்பன்
மீயுயர் தோன்ற நகாஅ நக்காங்கே
பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழினுண்க
ணாயிதழ் மல்க வழூஉம் ;

ஓஒ ! அழிதகப் பாராதே யல்லல் குறுகினங்
காண்பாங் கனங்குழை பண்பு ;

என்று, எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ
நல்ல நகாஅலிர் மற்கொலோ யானுற்ற
வல்லல் லுறீஇயான் மாய மலர்மார்பு
புல்லிப் புணரப் பெறின் ;

எல்லாநீ, உற்ற தெவனோமற் றென்றீரே லெற்சிதை
செய்தா னிவனென வுற்ற திதுவென
வெய்த வுரைக்கு முரனகத் துண்டாயிற்
பைதல வாகிப் பசக்குவ மன்னோவென்
னெய்தன் மலரன்ன கண் ;

கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று

நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
யாடையான் மூட யகப்படுப்பென் சூடிய
காணான் றிரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன் ;

தெள்ளிய மென்றுரைத்துத் தேரா தொருநிலையே
வள்ளியை யாகென நெஞ்சை வலியுறீஇ
யுள்ளி வருகுவர் கொல்லோ வுளைந்தியா
னெள்ளி யிருக்குவென் மற்கொலோ நல்லிருண்
மாந்தர் கடிகொண்ட கங்குற் கனவினாற்
றோன்றினா னாகத் தொடுத்தேன்மன்* யான்றன்னைப்
பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து ;

கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயி
னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
துயிர்திரியா மாட்டிய தீ ;

மையில் சுடரே மலைசேர்தி நீயாயிற்
பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு மாத்திரை
கைவிளக் காகக் கதிர்சில தாராயென்
றொய்யில் சிதைத்தானைத் தேர்கு ;

சிதைத்தானைச் செய்வ தெவன்கொலோ வெம்மை
நயந்து நலஞ்சிதைத் தான் ;

மன்றப் பணைமேன் மலைமாந் தளிரேநீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டு மறிதியோ
மென்றோண் ஞெகிழ்த்தான் றகையல்லால் யான்காணே
னன்றுதீ தென்று பிற ;

நோயெரி யாகச் சுடினுஞ் சுழற்றியென்
னாயித ழுள்ளே கரப்பன் கரந்தாங்கே
நோயுறு வெந்நீர் தெளிப்பிற் றலைக்கொண்டு
வேவ தளித்திவ் வுலகு ;

மெலியப் பொறுத்தேன் களைந்தீமின் சான்றீர்
நலிதருங் காமமுங் கௌவையு மென்றிவ்
வலிதி னுயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழும மிரண்டு ;

* யான்றன்னைப்

எனப்பாடி,

இனைந்துநொந் தழுதன ளினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தன வென்றெண்ணி யெல்லிரா
நல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல
மணியுட் பரந்தநீர் போலத் துணிபாங்
கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றா
ணல்லெழின் மார்பனைச் சார்ந்து. —[கலி. 142]

எனவும்,

ஏஎ யிஃதொத்த ஞணிலன் றன்னெடு
மேவேமென் பாரையும் மேவினன் கைப்பற்று
மேவினு மேவாக் கடையு மஃதெல்லா
நீயறிதி யானஃ தறிகல்லேன் பூவமன்ற
மெல்லிணர் செல்லாக் கொடியன்னாய் நின்னையான்
புல்லினி தாகலிற் புல்லினெ னெல்லா
தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று;

சுடர்த்தொடீஇ,
போற்றாய் களைநின் முதுக்குறைமை போற்றிக்கேள்
வேட்டார்க் கினிதாயி னல்லது நீர்க்கினிதென்
றுண்பவோ நீருண் பவர்;

செய்வ தறிகல்லேன் யாதுசெய் வேன்கொலோ
வைவா யரவி னிடைப்பட்டு நைவாரா
மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலு மறனெனக் கண்டன்று;

அறனு மதுகண்டற் றாயிற் றிறனின்றிக்
கூறுஞ்சொற் கேளா னலிதரும் பண்டுநாம்
வேறல்ல மென்பதொன் றுண்டா லவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு. —[கலி 62]

எனவும், ஏறியமடற்றிறம் முதலிய நான்கற்கும் முறையே காண்க.

செப்பிய நான்கெனவே, செப்பாதனவாய் அத்துணைக்கந் தருவமாகக் கூறுகின்ற

'பின்னர் நான்கும் பெருந்திணை பெறும்'
—[தொல் பொருள் சூ. 105]

என்ற பெருந்திணை நான்கு உளதென்று கொள்க. குறிப்பென்றதனால் அந்நான்கும் பெருந்திணைக்குச் சிறந்த என்றும், ஈண்டுக் கூறியன கைக்கிளைக்குச் சிறந்த என்றுங் கொள்க. (219)

220. பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவனெனப்
பாட்டினுட் பாடப் படுவோ ரிருவர்.

இஃது அகப்பாட்டிற்கு உரியதோர் ஒழிபு கூறுகின்றது,

(இ-ள்) பாட்டிற்கு உரிமைபூண்ட தலைவனும் கிளவிக்கு உரிமை பூண்ட தலைவனும் என அகப்பொருள்பற்றிவரும் பாட்டினுட் பாடப் படுவோர் இருவர். (எ-று) (220)

221. அவருள்,
உயர்ந்தோன் பாட்டுடை யுரவோ னாகும்.

இஃது அவருள் ஒருவருக்கு உயர்ச்சி கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய இருவருள்ளும் உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவனாம். (எ-று)

கழித்துறை செறியா வாளுடை யெறுழ்தோ
ளிரவுத்துயின் மடிந்த தானை
யுரவுச்சின வேந்தன் பாசறை யோமே. —[நெடுநல்]

என்றதனாற் பாட்டுடைத்தலைவன் உயர்ந்தோனாதல் அறிக. வேந்தன் பாண்டியன். பிறவும் அன்ன. (221)

222. நிலப்பெயர் வினைப்பெயர் பண்புப் பெயரொடு
குலப்பெய ரியற்பெயர் கூறுப வவர்க்கே.

இது மேற்கூறிய இருவகைத்தலைவர்க்கும் உரிய பெயர் இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்) நிலப்பெயர் முதலிய ஐந்துபெயருங் கூறுவர் மேற் சொல்லப்பட்ட தலைமக்கள் இருவர்க்கும். (எ-று)

நிலப்பெயர்:—மலைநாடன், சோணாடன், பாண்டிநாடன், வெற்பன், சேர்ப்பன் என்றாற்போல்வன. வினைப்பெயர்:—கடம்பெறிந்தான், தூங் கெயிலெறிந்தான், அடியலம்பநின்றான், கோவலன், வேட்டுவன் என்றாற் போல்வன. பண்புப்பெயர்:—நெடுஞ்சேரலாதன், இளஞ்சேட்சென்னி, முதுகுடுமிப்பெருவழுதி, தோன்றல், அண்ணல் என்றாற்போல்வன. குலப்பெயர்:—சோழன், சேரன், பாண்டியன், குறவன், ஆயன் என்றாற் போல்வன. இயற்பெயர்:—குரவராற்பெற்ற பெயர். (222)

223. அவற்றுள்,
இயற்பெயர் கிளவித் தலைவற் கிசையார்.

இஃது ஒன்றற்கு எய்தியது விலக்குகின்றது.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட பெயருட் குரவராற் பெற்ற பெயரினைக் கிளவித்தலைவற்குச் சொல்லார் ஆசிரியர். (எ-று) (223)

224. இருவரு மோருங்கே வருதலுந் தனித்தனி
வருதலு மிருவரும் வாரா தொழிதலு
முரிய வென்மனா ருணர்ந்திசி னோரே.

இஃது அத்தலைவர்க்கு ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட தலைமக்கள் இருவரும் கூடவருதலும் அவருள் ஒருவரே வருதலும் அவ்விருவரும் வாராதொழிதலும் உரிய என்று கூறுவர் அறிந்தோர். (எ-று) (224)

225. அகம்புறப் பாட்டு மிகப்பில வவையே.

இஃது எதிரதுபோற்றி இங்ஙனங் கூறிய இலக்கணம் புறப்பொருட்கும் எய்துவிக்கின்றது; இதன்வழிக் கூறப்படுவது புறத்திணையியலாகலின்.

(இ-ள்) அகப்பாட்டிற்குச் சொன்ன இலக்கணங்களைக் கடவாது அகப்புறப்பாட்டும். (எ-று)

பொருந்துவ பொருந்துமென்பார் 'இகப்பிலவவை' என்றார்; என்னை ? அனைத்தும் வரவேண்டுமென்னும் யாப்புறவின்மையின். (225)

226. கூறிய வல்ல வேறுபிற தோன்றினுங்
கூறிய வற்றொடு கூட்டி மெய்கொளக்
கூறி யுணர்த்தல் குணத்தோர்க் கியல்பே.

(இ-ள்.) இஃது இவ்வகத்திணையியற்கு ஆவதோர் புறனடை கூறுகின்றது.

(இ-ள்) யாங்கூறிய பொருளன்றி வேறுபிறவாற்றாற் றோன்றிய வாயினும் அவற்றையும் எடுத்தோதப்பட்ட பொருள்களோடு ஒருவாற்றாற் சார்த்தி உண்மை புலப்படச் சொல்லிப் பிறர்க்கு உணர்த்துதல் நற்குணங்களை யுடையார்க்கு மரபு. (எ-று)

வேறுபிறவாவன:— பேரும்பொருளகத்துப் பல்வேறுவகையாகக் கூறிய அகப்பொருளிலக்கணங்களை. அவையெல்லாம் ஈண்டு உரைப்பிற் பெருகும். அவை ஆங்காங்கே கண்டு கொள்க. ஈண்டுக் கூறிய ஒழிபிலக்கணங்களுள் உதாரணங் காட்டாதவற்றிற்கெல்லாம் மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் காண்க (226)

முதலாவது
அகத்திணையியல் முற்றிற்று

இரண்டாவது
புறத்திணையியல்.

227. ஆன்ற காட்சியி னகனன் குணர்ந்தோர்
தோன்றக் கூறிய புறனெனப் படுவ
தறம்பொரு ளென்னு மியல்பிற் றாகிப்
புறம்பயி லொழுக்க மென்மனார் புலவர்.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே புறத்திணையிலக்கணம் உணர்த்திற்றாகலான் இவ்வோத்துப் புறத்திணையியலென்னும் பெயர்த்து. மேல் அகத்திணையிலக்கணம் உணர்த்தி அதற்குப் புறனாகிய புறத்திணையிலக்கணம் உணர்த்தினமையின் மேலோத்திேனாடு இயைபுடைத்தாயிற்று. இதனுள் இத்தலைச் சூத்திரம் மேற்கூறிய புறப்பொருளாவது இன்னதென அதன் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்.) நிறைந்த அறிவானே அகப்பொருளிலக்கணத்தை ஐயந்திரிபற ஆராய்ந்தறிந்தோர் விளங்கக்கூறிய புறனென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது மேற்கூறிப் போந்த அறமும் பொருளுமென்று சொல்லப்படும் இயல்பினையுடைத்தாய்ப் புறம்பே நிகழும் ஒழுக்கமென்று கூறுவர் அறிந்தோர். (எ-று.)

அகம்போல ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லாரானுந் துய்த்து உணரப்படுதலானும், இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் இது புறமாயிற்று. எனவே, அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்திற்குப் புறமென்றது ஓர் ஆகுபெயராம்.

'ஆன்ற காட்சியி னகனன் குணர்ந்தோர்,
தோன்றக் கூறிய புறனெனப்படுவது'

என்றார், குறிஞ்சி முதலியவற்றிற்கு வெட்சி முதலிய புறனாங்கால் அவ்விலக்கணங்கள் ஒருபுடை ஒப்புமைபற்றிச்சார்புடையவாதல் கூறல்வேண்டுதலின்.

"ஆன்ற சிறப்பி னறம்பொரு ளின்பமென
மூன்றுவகை நுதலிய துலக மவற்று
ளறமு மின்பமு மகலா தாகிப்
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே."

எனப் **பன்னிருபடலத்துள்** அறஞ் சார்பாகப் புறம், பொருள் குறித்து வருமென்றது என்னையெனின், அது மயங்கக்கூறலாம்; ஆசிரியர் தொல்காப்பியனார் சார்பாகக் கூறாது வாகைத்திணைக்கட் கட்டினீத்த பால் முதலாகக் காமநீத்தபால் ஈறாக அறத்தையே விதந்து கூறுதலின்.

228. வெட்சி வஞ்சி யுழிஞை தும்பை
யுட்குவரு சிறப்பின் வாகையோடு காஞ்சி

பாடாண் டிணையு முளப்படத் தொகைஇ
நாடுங் காலை யெழுவகைத் ததுவே.

இது மேற் புறனெனப்பட்ட பொருட்கு வகையும் விரியும் பெயருங் கூறுகின்றது.

(இ-ள்.) *வெட்சியும் வஞ்சியும் உழிஞையும் தும்பையும் அஞ்சுதகவரூஉஞ் சிறப்பினையுடைய வாகையுமாகிய ஐந்திணையுடனே காஞ்சியும் பாடாணுமாகிய இரண்டு திணையுங் கூடத் தொகுதலால் ஆராயுங்காலத்து ஏழுகூற்றதாம் மேற்கூறிப்போந்த புறத்திணைதான். (எ-று.)*

இங்ஙனம் வகுத்தும் விரித்துங் கூறினார், உரிமைவகையால் நிலம் பெறுவனவாகிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் அகனைந்திணைக்கும் முறையே வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை என்னும் ஐந்தும் புறனாகலானும், நிலனின்றி அந்நிலத்திடை நிகழும் பெருந்திணையுங் கைக்கிளையுமாகிய அகத்திணை இரண்டற்கும் முறையே காஞ்சி பாடாண் என்னும் இரண்டு திணையும் புறனாகலானும் என்பது. அகங்கை இரண்டுடையார்க்குப் புறங்கை நான்காகாது இரண்டாகியவாறுபோல அகத்திணை ஏழென்றார்க்குப் புறத்திணை ஏழென்றலே பொருத்தமுடைத்தென்பார் ‘நாடுங்காலையெழுவகைத்து’ என்றார். எனவே, அகத்திணைக்குப், புறத்திணை அவ்வந்நிலத்து மக்கள் வகையாற் பிறந்த செய்கை வேற்றுமையாகலின் ஒன்றற்கொன்று இன்றியமையாதவாறாயிற்று

இக்குறிகள் காரணக்குறிகளாம் பூக்களாற் போந்தனவாகலின்; அற்றேல்.

“ஆங்ஙன முரைப்பி னவற்றது வகையாற்
பாங்குறக் கிளந்தன ரென்ப வவைதாம்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
யுட்குவரு சிறப்பி னுழிஞை நொச்சி
முரண்மிகு சிறப்பிற் றும்பையுள் ளிட்ட
மறனுடை மரபின வேழே யேனைய
வாகோண் மரபின் வாகையுஞ் சிறந்த
பாடாண் பாட்டொடு பொதுவிய லென்ப
கைக்கிளை யேனைப் பெருந்திணை யென்றாங்
கத்திணை யிரண்டு மகத்திணைப் புறனே.

எனப் பன்னிரு படலத்துப் புறத்திணை பன்னிரண்டெனக் கூறுபவாலெனின்,

“கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப.” [தொல். அகத்தி. 1]

எனக்கூறிய ஆசிரியர் தொல்காப்பியனார்க்குப் பிற்படக் கிளக்கப்படும் புறத்திணை ஏழென்பதே கருத்தாகலானும், கரந்தையும் நொச்சியும் முறையே வெட்சிக்கும் உழிஞைக்கும் மறுதலையாய் அவற்றின்பாற் படுமாதலானும், பொதுவியலென்பது,

"பல்லமர் செய்து படையுட் டப்பிய
நல்லரண் மாக்க ளெல்லாரும் பெறுதலிற்
றிறப்பட மொழிந்து தெரிய விரித்து
முதற்பட வெண்ணிய வெழுதிணைக்கு முரித்தே."

என அவர்தாமே கூறுபவாகலானுங், கைக்கிளையும் பெருந்திணையும் புறமாயின் அகத்திணை ஏழென்றது ஐந்தெனல் வேண்டுதலானும், பிரமம் முதலாகச் சொல்லப்பட்ட மணம் எட்டினுள்ளும் யாழோர் கூட்டமாகிய மணம் ஒன்றனையும் ஒழித்து ஏனைய ஏழும் புறமாதல் வேண்டுதலானும், முனைவனூலிற்குங் கலிமுதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் இயையாமையானும் அங்ஙனங் கூறுதல் பொருந்தாதென மறுக்க. (2)

229. வெட்சியு முழிஞையும் வேற்றுவினை யுடைமையி
னுட்குவரு கரந்தையு நொச்சியுஞ் சூடுத
லவ்வினை மருங்கி னமைந்ததொல் வழக்கே.

இது மேற்கூறியவற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுகின்றது.

(இ-ள்.) வெட்சியும் உழிஞையும் முறையே நிரைகோடலாகிய ஒரு தொழிலேயன்றி அதன் மறுதலைத் தொழிலாகிய நிரைமீட்டலும், எயி லழித்தலாகிய ஒரு தொழிலேயன்றி அதன் மறுதலைத் தொழிலாகிய எயில் காத்தலுமாகிய வேறுபட்ட தொழில்களை உடைமையின் அவ்வேறு பட்ட தொழிற்கண் முறையே அஞ்சுதலுடைய கரந்தையும் நொச்சியுஞ் சூடுதல் அமைதிபெற்ற பழைய நெறியாம். (எ-று.) (3)

230. அவற்றுள்,
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
யுட்குவரப் பொருபோ ருறுமுறை தொடங்கிய
வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவி
னாதந் தோம்பலு மந்நிரை மீட்டலு
மேனவிரு பாற்றே யஃதெனை மொழிப.

இது வெட்சித்திணை, குறிஞ்சித்திணைக்குப் புறனென்பதூஉம் அதன் பொருட்டிறனுங் கூறுகின்றது.

(இ-ள்.) மேற்கூறிய புறத்திணை எழனுள் வெட்சித்திணை முற் கூறிய அகத்திணை எழனுட் குறிஞ்சித்திணைக்குப் புறனாம். அச்சந்

தோன்றப் பொரும்போரைத் தனக்குரிய அறநெறியால் எடுத்துக் கொண்ட வேந்தனால் விடப்பட்ட முனைப்புலங்காத்திருக்கும் தண்டத் தலைவர் பகை நிலத்துச் சென்று களவினாலே ஆநிரையைக் கைக்கொண்டு போந்து மீளாமற் பாதுகாத்தலும், நிரைகோட்கேட்ட வேந்தனால் விடுக் கப்பட்ட தண்டத்தலைவர் அந்நிரையினை மீட்டலுமென இரண்டு வகையினை யுடைத்தாம் மேற்கூறிய அத்திணை. (எ-று.)

கவர்ந்தோர்க்கு மறுதலையராகிய மீட்டோர் வருவித்துரைக்கப் பட்டது. 'அவற்றுள்' என்பதனை மேல் இவ்வாறு வருவனவற்றிற்கெல் லாம் உய்த்துரைத்துக்கொள்க.

புறத்திணை பலவற்றுள் 'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' என இதனைப் பிரித்து ஓதினார், களவொழுக்கமும் மலைசார்ந்த இட னுங் கங்குற் காலமும் அந்நிலத்துப் பூவாகிய வெட்சிசூடலுங் காவலர் கடுகினுந் தாங்கருதிய பொருளை இரவின்கண் முடித்துமீடலும் போல்வன ஒத்தலின் என்பது. எனவே, வெட்சித்திணை குறிஞ்சித் திணைக்குப் புறனென்றல் ஆணைகூறலன்றாயிற்று. மன்னுயிர்காக்கும் அன்புடை வேந்தர்க்கு மறத்துறையும் அறமேயாகும் ஆதலின், 'உட்குவரப் பொருபோ ருறுமுறை தொடங்கிய, வேந்து.' என்றார். உறுமுறைதொடங்கலாவது:—இருபெருவேந்தர் பொருவது கருதி யக்கால், ஒருவர், ஒருவர் நாட்டுவாழும் அந்தணரும் ஆவும் முதலின தீங்குசெயத் தகாத சாதிகளாதலின் அவற்றை ஆண்டுநின்றும் அகற்றல் வேண்டிப்போதருக எனப் புகறலும், அங்ஙனம் போதருதற்கு அறிவில் லாத ஆவினைக் களவினாற் றாமேகொண்டுவந்து மீளாமற் பாதுகாத்தலும் முதலியனவாம். அஃது

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வற் பெறாஅ தீரு
மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
வறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின். —[புறம். 9.]

எனச் சான்றோர் கூறியவாற்றான் உணர்க. மேல் ஊர்கொலையுங் கூறுவர், அகநாட்டின்றிப் புறஞ்சிறைப்பாடியில் ஆநிரைகாக்குங் காவலரைக் கொன்றே நிரைகொள்ளவேண்டுதலின். இக்களவொழுக்கந் தீதெனப் படாது அறமேயா மென்பார், 'ஆதந்தோம்பலும்' என்றார். எனவே, புறப்பொருட்குரிய அறனும் பொருளுங் கூறத்தொடங்கி ஈண்டு அறத்தாற் பொருளீட்டுமாறுங் கூறினார். 'ஆதந்தோம்பலும் அந்நிரைமீட்டலுமென இருபாற்று' என்றது,

"தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்
றன்ன விரு வகைத்தே வெட்சி"

எனப் பன்னிருபடலத்துட் கூறியவாறு கூறின் முன்வருகின்ற வஞ்சி முதலியவற்றின் பொருளாகிய எடுத்துச்செலவு முதலியன வேந்தன்மேல் இயன்றுவருதலானும் வேந்துறுதொழிலே யன்றித் தன்னுறுதொழிலுங் கூறின் வேந்தனது ஆணையைக்கடந்து தன்னுட்டும் பிறனுட்டுங் களவு நிகழ்த்தினுராபவாகலானும் அது மரபன்றென மறுக்க. (4)

231. மண்டமர்க் கிவர்ந்தோன் மருவலர் நிரையினைத்
தண்டத் தலைவரைத் தருகெனப் பணித்தல்
பணிதலைக் கோடல் படையியங் கரவந்
தணியல ரேழுந்தோர் சமரவாய்ப் பறீஇயர்
விரிச்சி யோர்த்தல் வேண்டா வீரம்
வரிச்சிலை மறவர் வழியிடைச் சேற
லோற்றி ஞகிய வேயே வேய்ப்புற
முற்றி ஞகிய புறத்திறை முற்றிய
வூர்கொலை யாகோள் பூசன் மாற்றே
நோயின் றுய்த்த னுவல்வழித் தோற்றந்
தந்துநிறை பாதீ டுண்டாட் டுறுகோடை
புலனறி சிறப்பொடு பிள்ளை வழக்கே
பெருந்துடி நிலையோ டருந்திறற் கலையூர்
கோற்றவை நிலையோடு வெறியாட் டுளப்படத்
தேருண்டுமுன் வகுத்த கவர்ந்தனர் கோட
லிரண்டுதலை யிட்ட வைந்நான்கு துறைத்தே.

இது மேற்கூறிய வெட்சிப்பகுதி இரண்டனுள் முன்னையது இத் துணைத்துறையுடைத்தென்கின்றது.

(இ-ள்.) மண்டமர்க்கிவர்ந்தோன் மருவலர்நிரையினைத் தண்டத் தலைவரைத் தருகெனப்பணித்தல் முதல், ஈருகக் கிடந்த வெறியாட்டுங் கூடத் தொகுத்து எண்ணுதலால் ஆராய்ந்து மேல் வகுக்கப்பட்ட கவர்ந்தனர்கோடல் இருபத்திரண்டு துறையினையுடைத்தாம். (எ-று)

அகத்திணைக்கட் துறையுட்பகுதிகளெல்லாம் விரித்துரைத்தாங்கு உரையாது புறத்திணைக்கட் துறையுட்பகுதிகளெல்லாம் அத்துறைக்கட் துறத்துக் கூறுதலிற் துறையாயிற்று. துறுத்தலாவது ஒன்றன்காரண மாயினவற்றையெல்லாம் அவற்றின் காரியமாகிய அதன்கட் செறித்தல். அஃதாவது படைத்தலைவரைத் தருக என்றலும், படையைக்கூய் வருக என்றலும், அவர் வருதலும் முதலியகாரணங்களை அவற்றின் காரியமாகிய

நிரையினைத் தண்டத்தலைவரைத் தருகெனப்பணித்தற்கண் அடக்குதல். பிறவும் அன்ன.

அவற்றுட், படையைக்கூய்வருக என்றற்குச் செய்யுள்;—

கடிமனைச் சீறூர்க் கடுங்கட் கறவை
வடிநவில் வேலான் மறித்தோம்ப லொட்டா
னடிபுனை தோலி னரண்சேர்ந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை. —[தொல். பொருள் பக். 190.]

எனவரும். ஏனையவற்றிற்கும் வந்துழிக் காண்க.

மண்டமர்க்கிவர்ந்தோன் மருவலர் நிரையினைத் தண்டத்தலைவரைத் தருகெனப் பணித்தற்குச் செய்யுள் :—

மண்டு மெரியுண் மரந்தடிந் திட்டற்றுக்
கொண்ட கொடுஞ்சிலையான் கோறெரியக்—கண்டே
யடையார் முனையலற வையிலைவேற் காளை
விடையாயங் கொள்கென்றான் வேந்து.—[பு. வெ. வெட். 1.]

எனவரும். இதனைத் திணைப்பாட்டென்பாரும் உளர். திணைப்பாட்டாயின் அத்திணைக்கட் கூறுந் துறையெல்லாம் அகப்படத்தழீஇ வருதல்வேண்டும். அங்ஙனம் வாராது வேந்தன் தண்டத்தலைவரை நிரைகவர்க என ஒரு தொழிலே குறித்துவந்தமையிற் துறைப்பாட்டேயாவதல்லது திணைப் பாட்டாகாதென மறுக்க. மேல் இங்ஙனம் வருவனவற்றிற்கெல்லாம் இக்கடாவிடை உய்த்துரைத்துக்கொள்க.

பணிதலைக்கோடற்குச் செய்யுள்:—

அறுஅநிலைச் சாடி யாடுறு தேறன்
மறுஅன் மழைத்தடங் கண்ணி—பொறுஅன்
கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை
நெடுங்கடைய நேரார் நிரை. [பு. வெ. வெட். 2]

எனவரும். பொறுஅனென்பதற்கு அரசனேவுதலாற் பாணித்தலிலனாகி யெனப் பொருளுரைத்துக்கொள்க. தன்னுறுதொழிலும் உளதென்று கொண்டார்அதற்கும்இப்பாட்டினையேஉதாரணமாக்கிப் பொறுஅனென்ப தற்குத் தனிசுபொறுனென்று உரைப்ப.

படையியங்கரவத்திற்குச் செய்யுள்:—

நெடிபடு கானத்து நீள்வேன் மறவ
ரடிபடுத் தாரதர் செல்வான்—றுடிபடுத்து
வெட்சி மலைய விரவார் மணிநிரைக்
கட்சியுட் காரி கனும்ம். [—பு. வெ. வெட். 3]

எனவரும்,

தணியலரெழுந்தோர் சமரவாய்ப்பறீஇயர் விரிச்சியோர்த்தற்குச் செய்யுள்:—

(பா-ம்) 1. லொட்டா

எழுவணி சீறா ரிருண்மாலை முன்றிற்
குழுவினங் கைகூப்பி நிற்பத்—தொழுவிற்
குடக்கணா கொண்டுவா வென்றாள் குனிவிற்
றடக்கையாய் வென்றி தரும். —[பு. வெ. வெட். 4]

எனவரும். அரசனேவலாற் போந்தோர்க்கு விரிச்சியோர்த்தல் இயல் வதன்றேனும் இன்னதொன்று வினைவாய்க்குமென்று அறிதற்பொருட்டு இயலுமென்பார் 'சமரவாய்ப்பநீஇயர் விரிச்சியோர்த்த' லென்றார்.

வேண்டாவிரத்திற்குச் செய்யுள்:—

"நாளும் புள்ளுங் கேளா வூக்கமொ
டெங்கோ னேயின னாதலின் யாமத்துச்
செங்கால் வெட்சியுந் தினையுந் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதுக ளவிப்ப
விரிச்சி யோர்த்தல் வேண்டா
வெயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே."

—[தகடூர்யாத்.]

எனவரும். வரிச்சிலைமறவர் வழியிடைச் சேறற்குச் செய்யுள்:—

கூற்றினத் தன்னார் கொடிவி லிடனேந்திப்
பாற்றினம் பின்படர முன்படர்ந்—தேற்றின
நின்ற நிலைகருதி யேகினார் நீள்கழைய
குன்றங் கொடுவில் லவர். —[பு. வெ. வெட். 5]

எனவரும். ஒற்றாகிய வேய்க்குச் செய்யுள்:—

நிலையு நிரையு நிரைப்புறத்து நின்ற
சிலையுஞ் செருமுனையுள் வைகி—யிலைபுனைந்த
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோய் சென்றறிந்து
நள்ளிருட்கண் வந்தார் நமர். —[பு. வெ. வெட். 6]

எனவரும். ஒற்றாகியவேய், ஒற்றுகையான் உணர்த்திய குறளைச்சொல்.

வேய்ப்புறம் முற்றாகிய புறத்திறைக்குச் செய்யுள்:—

உய்ந்தொழிவா ரீங்கில்லை யூழிக்கட் டீயேபோன்
முந்தமரு ளேற்றார் முரண்முருங்கத்—தந்தமரி
னொற்றினா ரொற்றி யுரவோர் குறும்பினைச்
சுற்றினார் போகாமற் சூழ்ந்து. —[பு. வெ. வெட். 7]

எனவரும். வேய்ப்புறமுற்றாகியபுறத்திறை - வேய்க்கப்பட்ட இடத் தின் புறத்தினைச் சூழ்தலாகிய புறத்திறை.

முற்றிய ஊர்கொலைக்குச் செய்யுள்:—

இகலே துணையா வெரிதவழச் சீறிப்
புகலே யரிதென்னார் புக்குப்—பகலே

தொலைவிலார் வீழத் தொடுகழ லார்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு —[பு. வெ. வெட். 8]

எனவரும். ஆகோடற்குச் செய்யுள்:—

கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தா
னெடுவரை நீள்வேய் நரலு—நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை. —[பு. வெ. வெட். 9]

எனவரும். பூசன்மாற்றிற்குச் செய்யுள்:—

சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குணியத்—தாழ்ந்த
குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையா ரெய்த
புலவுக் கணைவழியே புள். —[பு. வெ. வெட். 10]

எனவரும். சோயின்றுய்த்தற்குச் செய்யுள்:—

புன்மேய்ந் தசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வின்மே லசைஇயகை வெல்கழலான்—றன்மேற்
கடுவரை நீரிற் கடுத்துவாக் கண்டு
நெடுவரை நீழ னிரை —[பு. வெ. வெட். 11]

எனவரும். நுவல்வழித்தோற்றத்திற்குச் செய்யுள்:—

மொய்யண லாநிரை முன்செல்லப் பின்செல்லு
மையணற் காளை மகிழ்துடி—கையணல்
வைத்த வெயிற்றியர் வாட்க ணிடனுடை
வுய்த்தன் றுவகை யொருங்கு —[பு. வெ. வெட். 12]

எனவரும். நுவல்வழித் தோற்றந் தமர்கவன்றுரைத்தனர் அவர் மகிழ்தற்குக் காரணமான தோற்றரவு. தந்து நிறைக்குச் செய்யுள்:—

தண்டா விருப்பின டன்னை தலைமலைந்த
வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று—கண்டா
ளணிநிரை வாண்முறுவ லம்மா வெயிற்றி
மணிநிரை மல்கிய மன்று. —[பு. வெ. வெட். 13]

என்வரும். பாதீட்டிற்குச் செய்யுள்:—

ஒள்வாண் மலைந்தார்க்கு மொற்றுய்த் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்—விள்வாரை
மாறிட்ட வென்றி மறவர்தஞ் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை. —[பு. வெ. வெட். 14]

எனவரும். ஈத்தலும் ஈதலும் போலப் பாத்தலும் பாதலும் ஒன்றாதலிற் பாதீடாயிற்று. உண்டாட்டிற்குச் செய்யுள்:—

இளிகொண்ட தீஞ்சொ லிளமா வெயிற்றி
களிகொண்ட நோக்கங் கவற்றத்—தெளிகொண்ட
வெங்கண் மலிய விளிவதுகொல் லேற்றூர்மேற்
செங்கண் மறவர் சினம். —[பு. வெ. வெட். 15]

எனவரும். உறுகொடைக்குச் செய்யுள்:—

அங்கட் கிணையன் றுடியன் விறலிபாண்
வெங்கட்கு வீசும் விலையாகுஞ்—செங்கட்
செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி
வரிச்சிலையாற் றந்த வளம் —[பு. வெ. வெட். 16]

என்டவரும். புலனறிசிறப்பிற்குச் செய்யுள்:—

இறுமுறை யெண்ணு திரவும் பகலுஞ்
செறுமுனையிற் சென்றறிந்து வந்தார்—பெறுமுறையி
னட்டுக் கனலு மயில்வேலோ யொன்றிரண்
டிட்டுக் கொடுத்த லியல்பு —[பு. வெ. வெட். 17]

எனவரும். புலனறிசிறப்பு - வெம்முனைநிலை உணர்த்தியோர்க்குத் தம்மினும் மிக்க சிறப்புச்செய்தல். பிள்ளைவழக்கிற்குச் செய்யுள்:—

புல்லார் நிரைகருதி யாஞ்செல்லப் புண்ணலம்
பல்லா ரறியப் பகர்ந்தார்க்குச் சொல்லாற்
கடஞ்சுட்ட வேண்டா கடுஞ்சுரையா நான்கு
குடஞ்சுட் டினத்தாற் கொடு. —[பு. வெ. வெட். 18]

எனவரும். பிள்ளைவழக்கு - கரும்பிள்ளை நிமித்தங் கூறியார்க்கு விதந்து கொடுத்தல். பெருந்துடிநிலைக்குச் செய்யுள் :—

முந்தை முதல்வர் துடிய ரிவன்முதல்வ
ரெந்தைக்குத் தந்தை யிவனெனக்கு—வந்த
குடியொடு கோடா மரபினாற் கின்னும்
வடியுறு தீந்தேறல் வாக்கு. —[பு. வெ. வெட். 19]

எனவரும். கொற்றவை நிலைக்குச் செய்யுள் :—

ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை—மீளி
யரண்முருங்க வாகோள் கருதி னடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும். —[பு. வெ. வெட். 20]

எனவரும். வெறியாட்டிற்குச்செய்யுள் :—

காணி லரனுங் களிக்குங் கழன்மறவர்
பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண்—வாணுத

(பா-ம்) ஞன்கு

றுன்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளேப்ப
வேன்முருகற் காடும் வெறி. —[பு. வெ. வெட். 21]

எனவரும். முருகு - நறுநாற்றம். (5)

232. நிரைகோட் கேட்ட குரைகழ லரசன்
விரைசெலன் மறவரை மீட்கெனப் பணித்தல்
படையியங் கரவம் பறவாப்புட் டெரிதந்
னடைவயிற் சேற னன்குண ருசாஅப்
புறத்திறை யதனோடு திறப்படப் பொருதல்
புண்ணோடு வருதல் போர்க்களத் தொழித
லாளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவு
பிள்ளை யாட்டோடு கையறு நிலையே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியன் மலிபொடு மிகுகுடி நிலையே
யாபெயர்த்துத் தருதலோ டருஞ்சமர் விலக்கல்
நலிவின் றுய்த்த னண்ணுவழித் தோற்ற
நிறைத்தல் பாதீ டுண்டாட்டுக் கொடையோடு
துடிநிலை கொற்றவை நிலையவை யிரண்டுங்
கூட்டுத லுறுத்த மீட்டனர் கோட
லேழுதலைப் பெய்த விருபதிற் றுறைத்தே.

இது முற்கூறிய வெட்சிப்பகுதி இரண்டனுட் பின்னையது இத் துணைத்துறையுடைத்தென்கின்றது.

(இ-ள்.) *நிரைகோட்கேட்ட குரைகழலரசன் விரைசெலன் மறவரை மீட்கெனப்பணித்தல் முதலியவற்றொடு துடிநிலையுங் கொற்றவை நிலையுமாகிய அவ்விரண்டினையுங் கூட்டி எண்ணுதலால் மீட்டனர் கோடல் இருபத்தேழு துறையினையுடைத்தாம்* (எ-று.)

நிரைகோட்கேட்ட குரைகழலரசன் விரைசெலன் மறவரை மீட்கெனப் பணித்தற்குச் செய்யுள் :—

அழுங்கனீர் வையகத் தாருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண் டற்றாற்—செழுங்குடிக
டாரார் கரந்தை தலைமலைந்து தாங்கோட
னேரார்கைக் கொண்ட நிரை —[பு. வெ. கரந். 1.]

எனவரும். செழுங்குடிகள் தாரார் கரந்தை தலைமலைந்து நேரார் கைக் கொண்ட நிரை தாங்கோடல் அழுங்கல் நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம் விழுங்கியபின் விடுதல் கொண்டாற்போல அரிதாகலான் விரைந்து

மீட்பீராக என்பது குறிப்பெச்சமாகப் பொருளுரைத்துக் கொள்க.

படையியங்கரவத்திற்குச் செய்யுள்:—

காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார்—காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
யுளர்ந்தார் நிரைப்பெயர்வு முண்டு. —[பு. வெ. கரந். 2.]

எனவரும். பறவாப்புட்டெரிதற்குச் செய்யுள் :—

வந்தநீர் காண்மினென் றுபெயர்ப்போர் மாட்டிசைத்த
பைந்தொடியார் கூறும் பறவாப்பு—ளுய்ந்த
நிரையளவைத் தன்றியு நீர்சூழ் கிடக்கை
வரையளவைத் தாவதா மண்.

எனவரும். பறவாப்புள், வெளிப்படை. நடைவயிற் சேறற்குச்செய்யுள்:—

சங்குங் கருங்கோடுந் தாழ்பீலிப் பல்லியமு
மெங்கும் பறையோ டெழுந்தார்ப்ப—வெங்க
லழற்சுரந் தாம்படர்ந்தா ரான்சுவட்டின் [1]மீதே
நிழற்கதிர்வேன் மின்ன நிரைத்து. —[பு. வெ. கரந். 3.]

எனவரும். நன்குணருசாவிற்குச் செய்யுள் :—

நெடுநிலை யாயத்து நிரைசுவ டொற்றிப்
படுமணி யாயம் பகர்ந்தோய்—நெடிது
மனக்குரிய காதல் வயவேந்த னென்று
நினக்குரிய வாக நிரை. —[தகடூர்]

எனவரும். புறத்திறைக்குச் செய்யுள்:—

இருநில மருங்கி னெப்பிறப் பாயினு
மருவின் மாலையோ வினிதே யிரவி
னோகோண் மள்ளரு மருள்வரக் கானத்து
நாம்புறத் திறுத்தன மாகத் தாந்தாங்
கன்குரல் கேட்டன போல
நின்றுசெவி யேற்றன சென்றுபடு நிரையே. —[தகடூர்]

எனவரும். திறப்படப்பொருதற்குச் செய்யுள் :—

புலிக்கணமுஞ் சீயமும் போர்க்களிறும் போல்வார்
வலிச்சினமு மானமுந் தேசு—மொலிக்கு
மருமுனை வெஞ்சுரத் தான்பூசற் கோடிச்
செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து. —[பு. வெ. கரந்4]

எனவரும். புண்ணொடுவருதற்குச் செய்யுள் :—

(பா-ம்.) 1 மேலே

வெங்குருதி மல்க விழுப்புண் [1]ணுகுதோறு
மிங்குலிகஞ் சோரும் வரையேய்க்கும்—பைங்கண்
ணினம்போக்கி நின்றா ரிகல்வாட்டி வேந்தன்
மனம்போல வந்த மகன். —[பு. வெ. கரந். 5.]

எனவரும். போர்க்களத் தொழிதற்குச் செய்யுள் :—

உரைப்பி னதுவியப்போ வொன்னார் கைக்கொண்ட
நிரைப்பி னெடுந்தகை சென்றான்—புரைப்பின்
றுளப்பட்ட வாயெல்லா மொள்வாள் கவரக்
களப்பட்டான் றானொன்றான் கரந்து. —[பு. வெ. கரந் 6]

எனவரும். ஆளெறி பிள்ளைக்குச் செய்யுள் :—

பிள்ளை கடுப்பப் பிணப்பிறங்க வாளெறிந்து
கொள்ளைகொ ளாயந் தலைக்கொண்டா—ரெள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளா
னொருதனியே நின்றா னுளன். —[பு. வெ. கரந் 7]

எனவரும். ஆளெறிபிள்ளை, ஆளை எறியும் பிள்ளைத்தன்மையன்.

பிள்ளைத் தெளிவுக்குச் செய்யுள்:—

மேவா ருயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்
பூவா ளுறைகழியாப் போர்க்களத்து—ளோவான்
றுடியிரட்டி விம்மத் தொடுகழலார் முன்னின்
றடியிரட்டித் திட்டாடு மாட்டு —[பு. வெ. கரந். 8]

எனவரும். இது கவந்தம் ஆடியது.

பிள்ளையாட்டிற்குச் செய்யுள் :—

மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய வெல்கைங் குடர்மாலை—சூட்டியபின்
மாறிரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேறிரிய விம்முந் துடி. —[பு. வெ. கரந். 9]

எனவரும். கையறுநிலைக்குச் செய்யுள் :—

நாப்புலவர் சொன்மாலை நண்ணார் படையுழக்கித்
தாப்புலி யொப்பத் தலைக்கொண்டான்—பூப்புனையு
நற்குலத்துட் டோன்றிய நல்லிசையாழ்த் தொல்புலவீர்
கற்கொலோ சோர்ந்திலவெங் கண். —[பு. வெ. கரந். 10]

எனவரும். நெடுமொழிகூறற்குச் செய்யுள் :—

ஆளமர் வெள்ளம் பெருகி [2]னதுவிலங்கி
வாளொடு வைகுவேன் யானாக—நாளுநங்

(பா-ம்.) 1 ணுகுதொறூஉ 2 இது விலக்கி

கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோ யீயப்
பிழிமது வுண்பார் பிறர். —[பு-வெ. கரந். 11]

எனவரும். பிள்ளைப்பெயர்ச்சிக்குச் செய்யுள் :—

[1]பிணங்கமருட் பிள்ளை பெயர்ப்ப பெயரா
தணங்கனூர்செய் தாளெறிந தேக்கி—வணங்காச்
சிலையளித்த தோளான் சினவிடலைக் கன்றே
தலையளித்தான் றண்ணடையுந் தந்து. —[பு. வெ. கரந். 12.]

எனவரும். பிள்ளை - காரிப்பிள்ளை. வேத்தியன் மலிபிற்குச்செய்யுள் :—

அங்கையு ணெல்லி யதன்பய மாதலாற்
கொங்கலர் தாரான் குடைநிழற்கீழ்த்—தங்கிச்
செயிர்வழங்கும் வாளமருட் சென்றடையார் வேல்வா
யுயிர்வழங்கும் வாழ்க்கை யுறும். —[பு. வெ. கரந். 13]

எனவரும். குடிநிலைக்குச் செய்யுள் :—

பொய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர்—கையகலக்
கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி. —[பு. வெ. கரந். 14.]

எனவரும். ஆபெயர்த்துத் தருதற்குச் செய்யுள் :—

கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரி தெய்தின மாதோ—தொடலைக்
கரந்தை மறவர் [2]கருதார் குழாஅந்
துரந்து நிரைமீட்ட தோள்.
[—பெரும்பொருள் விளக்கம்]

எனவரும். அருஞ்சமர்விலக்கற்குச் செய்யுள் :—

[3]ஆவூ ரெறிந்து நிரையொடுபெ யர்ந்த
வெட்சி மறவர் வீழவு முட்காது
கயிறியல் பாவை போல வயிறிரித்
துழைக்குரற் குணர்ந்த வளைப்புலி போல
முற்படு பூசல் கேட்டனர் பிற்பட
நிணமிசை யிழுக்காது தமர்பிண மிடறி
நிலங்கெடக் கிடந்த கருந்தலை நடுவண்
மாக்கட னெருப்புப் போல நோக்குபு
வெஞ்சிலை விடலை வீழ்ந்தன
னஞ்சுதக் கன்றாற் செஞ்சோற்று நிலையே.
—[தொல். பொருள். பக். 186]

(பா-ம்) 1 பிழிமகிழ் 2 கருதாதாருள்ளத் 3 இரவூ

எனவரும். நலிவின் றுய்த்தற்குச் செய்யுள் :—

கல்கெழு சீறூர்க் கடைகாண் விருப்பினன்
மெல்ல நடவா விரையு—நிரையென்னோ
தெள்ளறற் கானியாற்றுத் தீநீர் பருகவு
மள்ளர் நடவா துவகை. —[பெரு. விளக்கம்]

எனவரும். நண்ணுவழித்தோற்றத்திற்குச் செய்யுள் :—

காட்டகஞ் சென்றுயிர் போற்றான் கடுஞ் சுரையான்
மீட்ட மகனை [1]வினவுமு—னோட்டந்து
தன்னெதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக்கலுழு
மென்னெதிர்ப் பட்டாயோ வென்று. —[பெரு. விளக்கம்]

எனவரும். நிறைத்தற்குச் செய்யுள் :—

கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத்
தொழுவிடை யாயந் தொகுமி—னெழுவொழித்தாற்
போமே[2] யிவற்றைநீர் போற்றுமின் புல்லொடுநீர்
தாமேய் புலம்போலத் தந்து. —[தொல். பொருள் பக். 188]

எனவரும். பாதீட்டுக்குச் செய்யுள் :—

யாமே பகுத்திடல் வேண்டா வினநிரை
தாமே தமரை யறிந்தனகொ—லேமுற
வன்றீன்ற தம்மை யறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீண்டு மாங்கவர்பாற் சென்று —[பெரு. விளக்கம்]

எனவரும். உண்டாட்டுக்குச் செய்யுள் :—

பகைவர் கொண்ட படுமணி யாய
மீட்டிவ ணடைந்த வாட்டிறற் குரிசில்
முழவுத்துயின் மறந்த மூதா ரூர்கண்
விழவுத்தலைக் கொண்ட விளையாட் டாயத்
தூன்சுடு கொழும்புகைக் கருங்கொடி யும்பர்
மீன்சுடு புகையின் விசும்புவாய்த் தன்றே
கைவல் கம்மியர் பல்கூட் டாரமொடு
நெய்பிழி நறுவிரை நிலம்பரந் தன்றே
காவிற் காவில் கணங்கொள் வண்டெனப்
பூவிலை மகளிர் புலம்படர்ந் தனரே
சந்தியுஞ் சதுக்கமும் பந்தர் போகிய

(பா-ம்) 1. வினவுருளோட்டந்து 2. யிவையிவற்றைப்

வாடுறு நறவின் சாடி தோறுங்
கொள்வினை மாற்றுக் கொடையொடு
கள்விலை யாட்டியுங் கைதூ வாளே—[தொல். பொ. பக் 189]

எனவரும். கொடைக்குச் செய்யுள் :—

கொடைத்தொழி லெல்லாங் குறைவின்றிப் பண்டே
முடித்தன னென்றிருந்த மூத்தோன்—கொடைக்கு
வரம்பில னென்றே மருண்டா னிரைகோட்
கரந்தையங் கண்ணியா கண்டு. —[ஷை 189]

எனவரும். துடிநிலைக்குச் செய்யுள்:—

நித்திலஞ்செய் பட்டமு நெற்றித் திலதமு
மொத்திலங்க மெய்ப்பூசி யோர்ந்துடீஇத்—தத்தந்
துடியரோ டேர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிலை பாராட்டிக் கொண்டு. [ஷை 192]

எனவரும். கொற்றவைநிலைக்குச் செய்யுள் :—

அருமைத் தலைத்தரு மாநிரையு ளையை
யெருமைப் பலிகோ ளியைந்தா—ளரசனும்
வேந்தன்மேற் செல்வான் விறல்வஞ்சி சூடானென்
றியாந்தன்மேற் சீறும லின்று. [ஷை. 193

எனவரும். (6)

233. வஞ்சி தானே முல்லையது புறனே
யெஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த
னஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே.

இது வஞ்சித்திணை முல்லைத்திணைக்குப் புறனென்பதூஉம் அதன் பொருளுங் கூறுகின்றது.

(இ-ள்) மேற்கூறிய புறத்திணை ஏழனுள் வஞ்சித்திணை முற்கூறிய அகத்திணை ஏழனுள் முல்லைத்திணைக்குப் புறனும்; அஃது ஒழியாத மண்ணை நச்சுதலையுடைய வேந்தனை மற்றொரு வேந்தன் ஆண்டு வாழ்வோர்க்கு அஞ்சுதலுண்டாக அந்நாட்டிடத்தே சென்று வேறலைக் குறித்தது. (எ-று)

புறத்திணை பலவற்றுள் 'வஞ்சி தானே முல்லையது புறனே' என இதனைப் பிரித்து ஓதினர். முதலெனப்பட்ட காடுறையுலகமுங் கார்கால மும் அந்நிலத்திற்கு ஏற்ற கருப்பொருளும் அரசன் பாசறைக்கட் தலைவியைப் பிரிந்திருத்தலும் அவள் தலைவி அவனைப்பிரிந்து மனைவயி னிருத்தலுமாகிய உரிப்பொருளும் ஒப்பச்சேறலின் என்பது. எனவே வஞ்சித்திணை முல்லைத்திணைக்குப்புறனென்றலாணைகூறலன்றாயிற்று. (7)

234. வாடா வஞ்சி மலைதலு மோடாப்
படையியங் கரவமுங் குடைநாட் கோளும்
வாளுட் கோளும் பேணு ருட்குங்
கொற்றவை நிலையும் வெற்றிவே லுழவர்
செய்தொழில் கூறிய மற்றதன் பகுதியு
மறிதிரை யுலகம் வணங்கவேஎ குயர்த்த
குரிசிலை வழுத்திய கொற்ற வஞ்சியும்
வேந்தனைப் புகழ்ந்து வேற்றுநா டழிபு
கூர்ந்தமைக் கிரங்கிய கொற்ற வள்ளையும்
பொருமுறை பகையொடு பொருத வீரர்க்குப்
பெரிதருள் சுரந்த பேராண் வஞ்சியு
மருந்திறை யளப்ப வாறிய சினத்தொடு
பெரும்பூண் மன்னவன் பெயர்ந்த பக்கமுந்
திண்ணிய வேந்திற் சிறப்புற் றோர்பெறூஉம்
வண்மை கூறிய மாராய வஞ்சியுஞ்
செறியலர் போர்க்களஞ் சென்றுதன் னுண்மை
நெறியெடுத் தியம்பிய நெடுமொழி வஞ்சியுந்
தொன்னெறி மரபின் வாட்குடித் தோன்றிய
முன்னவ னிலைபுகன் முதுமொழி வஞ்சியுங்
கூடலர் நாட்டுக் கொடிநெடு வியலூ
ரூடெரி யூட்டிய வுழபல வஞ்சியுங்
குறுகல ரருமனை கொள்ளை சாற்றி
மறுகுறக் கவர்ந்த மழபுல வஞ்சியு
நீடவுங் குறுகவு நிவப்பவுந் தூக்கிப்
பாடிய பாணர்க்குப் பயந்தகொடை வஞ்சியு
மடுத்த வேந்தற்கு வழங்குவ வழங்கிக்
குடிக்கருள் சுரந்த குறுவஞ்சி யானு
மட்டூர் தெரியன் மறங்கெழு வேந்தன்
கட்டூர் வகைமை கட்டுரைத்த பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
வொருவன் றாங்கிய வொருதனி நிலையு
மழியுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மைத் தழிஞ்சியு மதாஅன்று

மதிக்குடை வேந்தன் மாற்றலர் வணங்கவும்
பதிப்பெயர் கில்லாப் பாசறை வஞ்சியு
முன்னடை யாதார் வளங்கெழு நாட்டைப்
பின்னுமெரி யூட்டிய பெருவஞ்சி யானு
மிறையவன் வயவர்க் கிருஞ்சோற் றமலே
பெறுமுறை யுதவிய பெருஞ்சோற்று நிலையும்
வெளிகெடப் பகைமுனை யிறுத்த வேந்தன்
நளிவிறன் மிகுத்த நல்லிசை வஞ்சியு
மிறுத்தபி னூடழி பிரங்கிமறுத் துரைத்த
பக்கமு மெனமுறை தொக்க வையைந்து
நல்லிசைப் புலவர் நாடினர் தெளிந்து
சொல்லிய வஞ்சித் துறையெனப் படுமே.

இது முற்கூறிய வஞ்சித்திணை இத்துணைத்துறையுடைத் தென்கின்றது.

(இ-ள்.) *வாடாவஞ்சிமலைதல் முதலாக இறுத்தபின் நாட்டழிபிரங்கி மறுத்துரைத்த பக்கம் ஈறாக முறையே தொக்க இருபத்தைந்தும் நல்லிசைப் புலவர் ஆராய்ந்து தெளிந்து சொல்லிய வஞ்சித்துறையென்று கூறப்படும்.* (எ-று.)

வாடாவஞ்சிமலைதற்குச் செய்யுள் :—

செங்கண் மழவிடையிற் றண்டிச் சிலைமறவர்
வெங்கண் மகிழ்ந்து [1]விழவயர—வங்குழைய
வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக்
குஞ்சி மலைந்தானெங் கோ. —[பு. வெ. வஞ். 1]

எனவரும். ஓடாப்படை யியங்கரவத்திற்குச் செய்யுள் :—

பௌவம் பணைமுழங்கப் பற்றார்மண் பாழாக
வவ்விய வஞ்சி வலம்புனையச்—செவ்வே
லொளிறும் படைநடுவ ணூழித்தீ யன்ன
களிறுங் களித்ததிருங் கார். —[பு. வெ. வஞ். 2]

எனவரும். குடைநாட்கோட்டற்குச் செய்யுள் :—

முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்
துன்னருந் துப்பிற் றொழுதெழா—மன்ன
ருடைநா ளுலந்தனவா லோதநீர் வேலிக்
குடைநா ளிறைவன் கொள. —[பு. வெ. வஞ். 3]

(பா-ம்) 1. *விழவமர.*

எனவரும். வாளுட்கோடற்கு செய்யுள்:—

அறிந்தவ ராய்ந்தநா ளாழித்தேர் மன்ன
னெறிந்தில கொள்வா ளியக்க—மறிந்திகலிப்
பின்பகலே யன்றியும் பேணா ரகநாட்டு
நன்பகலுங் கூகை நகும். —[பு. வெ. வஞ். 4]

எனவரும். பின்பகல், இரவு. கொற்றவை நிலைக்குச் செய்யுள் :—

அணங்குடை நோன்றாள் பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக்—கணம்புகலக்
கையி[1]ரீஇ மண்டைக் கணமோடி காவலற்கு
மொய்யிரியத் தான்முந் துறும். —[பு. வெ. வஞ். 5]

எனவரும். நோலை, எட்கசிவு. வெற்றிவேலுழவர் செய்தொழில் கூறிய மற்றதன் பகுதிக்குச் செய்யுள் :—

தமருட் டலையாத ரூர்தாங்கி நிற்ற
லெமருள்யா மின்னமென் றெண்ண—லமரின்
முடுகழலின் முந்துறுதன் முல்லைத்தார் வேந்தன்
றொடுகழலின் மைந்தர் தொழில். —[பு. வெ. வஞ். 6]

எனவரும். மறிதிரையுலகம் வணங்க எஃகுயர்த்த குரிசிலைவழுத்திய கொற்றவஞ்சிக்குச் செய்யுள் :—

அழலடைந்த மன்றத் தலந்தபரா நின்றூர்
நிழலடைந்தே நின்னையென் றேத்திக்—கழலடையச்
செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக்
கொற்றங்கொண் டெஃகுயர்த்தான் கோ.—[பு. வெ. வஞ். 7]

எனவரும். வேந்தனைப் புகழ்ந்து வேற்றுநாடழிபு கூர்ந்தமைக்கு இரங்கிய கொற்றவள்ளைக்குச் செய்யுள் :—

தாமார மார்பினன் றாமரைக்கண் சேர்ந்தனவாற்
பாழாய்ப் பரிய விளிவதுகொல்—யாழாய்ப்
புடைத்தே னிமிர்கண்ணிப் பூங்கட் புதல்வர்
நடைத்தே ரொலிகறங்கு நாடு. —[பு. வெ. வஞ். 8]

எனவரும். வள்ளை, உலக்கைப்பாட்டு. பொருமுறை பகையொடு பொருத வீரர்க்குப் பெரிதருள்சுரந்த பேராண்வஞ்சிக்குச் செய்யுள் :—

பலிபெறு நன்னகரும் பள்ளி யிடனு
மொலிகெழு நான்மறையோ ரில்லு—நலிவொரீஇப்
புல்லா ரிரியப் பொருதார் முனைகெடுத்த
வில்லார்க் கருள்சுரந்தான் வேந்து. —[பு. வெ. வஞ். 9]

(பா-ம்) 1. கையிரிய

எனவரும். அருந்திறையளப்ப ஆறிய சினத்தோடு பெரும்பூண் மன்னவன் பெயர்ந்த பக்கத்திற்குச் செய்யுள் :—

கூடி முரசிரங்கக் கொய்யுளைமா முன்னுகளப்
பாடி [1]பெயர்த்திட்டான் பல்வேலான்—கோடி
நிதியந் திறையளந்தார் நேராருந் தன்கீழ்
முதியமென் றூறி முரண். —[பு. வெ. வஞ். 10]

எனவரும். திண்ணியவேந்திற் சிறப்புற்றோர் பெறூஉம் வண்மைகூறிய மாராயவஞ்சிக்குச் செய்யுள் :—

நேராரம் பூண்ட நெடுந்தகை நேர்கழலான்
சேரார் முனைநோக்கிக் கண்சிவப்பப்—போரார்
நறவே கமழ்தெரிய னண்ணா ரெறிந்த
மறவே விலைமுகந்த மார்பு. —[பு. வெ. வஞ். 11]

எனவரும். செறியலர் போர்க்களஞ் சென்றுதன்னுண்மை நெறியெடுத் தியம்பிய நெடுமொழி வஞ்சிக்குச் செய்யுள் :—

இன்ன ரெனவேண்டா வென்னோ டெதிர்சீறி
முன்னர் வருக முரணகலு—மன்னர்
பருந்தார் படையமருட் பல்லார் புகழ
விருந்தா யடைகுறுவார் விண். —[பு. வெ. வஞ். 12]

எனவரும். தொன்னெறிமரபின் வாட்குடித்தோன்றிய முன்னவனிலை புகல் முதுமொழி வஞ்சிக்குச் செய்யுள் :—

குளிறு முரசங் குணில்பாயக் கூடா
ரொளிறுவாள் வெள்ள முழக்கிக்—களிறெறிந்து
புண்ணொடு வந்தான் புதல்வற்குப் பூங்கழலோய்
தண்ணடை நல்க றகும். —[பு. வெ. வஞ். 13]

எனவரும். கூடலர்நாட்டுக் கொடிநெடுவியனூர் ஓடெரியூட்டிய உழபுல வஞ்சிக்குச் செய்யுள் :—

அயிலன்ன கண்புதைத் தஞ்சி யலறி
மயிலன்னார் மன்றம் படரக்—குயிலகவ
வாடிரிய வண்டிமிருஞ் செம்ம லடையார்நாட்
டோடெரியுள் வைகின வூர். —[பு. வெ. வஞ். 14]

எனவரும். குறுகலருமுனை கொள்ளைசாற்றி மறுகுறக்கவர்ந்த மழபுல வஞ்சிக்குச் செய்யுள் :—

களமர் கதிர்மணி காலேகஞ் செம்பொன்
வளமனை பாழாக வாரிக்—கொளன்மலிந்து

(பா-ம்) 1. பெயர்ந்திட்டான்

கண்ணார் சிலையார் கவர்ந்தார் கழல்வேந்த
னண்ணார் கிளையலற நாடு. —[பு. வெ. வஞ். 15]

எனவரும். நீடவுங் குறுகவு நிவப்பவுந் தூக்கிப் பாடிய பாணர்க்குப் பயந்த கொடை வஞ்சிக்குச் செய்யுள் :—

சுற்றிய சுற்ற முடன்மயங்கத் தம்வயி
றெற்றி மடவா ரிரிந்தோட—முற்றிக்
குரிசி லடையாரைக் கொண்டகூட் டெல்லாம்
பரிசின் முகந்தன பாண். —[பு. வெ. வஞ். 16]

எனவரும். மடுத்தவேந்தற்கு வழங்குவ வழங்கிக் குடிக்கருள்சுரந்த குறுவஞ்சிக்குச் செய்யுள் :—

தாட்டாழ் தடக்கைத் தனிமதி வெண்குடையான்
வாட்டானை வெள்ளம் வரவஞ்சி—மீட்டான்
மலையா மறமன்னன் மால்வரையே போலுங்
கொலையானை பாய்மா கொடுத்து. —[பு. வெ. வஞ். 17]

எனவரும். மட்டேர்தெரியல் மறங்கெழுவேந்தன் கட்டேர்வகைமை கட்டுரைத்த பக்கத்திற்குச் செய்யுள் :—

அவிழ்மலர்க் கோதைய ராட வொருபா
லிமிழ்முழவ மியாழோ டியம்பக்—கவிழ்மணிய
காய்கடா யானை யொருபாற் களித்ததிரு
மாய்கழலான் கட்டூ ரகத்து. —[பு. வெ. வஞ். 18]

எனவரும். வருவிசைப்புனலைக் கற்சிறைபோல ஒருவன் தாங்கிய ஒருதனிநிலைக்குச் செய்யுள் :—

வீடுணர்ந் [1]தோர்க்கும் வியப்பாமா லிந்நின்ற
வாடன் முதியாள் வயிற்றிடங்—கூடார்
பெரும்படை வெள்ள நெரிதரவும் பேரா
விரும்புலி சேர்ந்த விடம். —[பு. வெ. வஞ். 19]

எனவரும். அழியுநர்புறக்கொடை அயில்வா ளோச்சாக் கழிதறுகண்மைத் தழிஞ்சிக்குச் செய்யுள் :—

கான்படு தீயிற் கலவார்தன் மேல்வரினுந்
தான்படை தீண்டாத் தறுகண்ணன்—வான்படர்தல்
கண்ணியபின் னன்றிக் கறுத்தார் மறந்தொலைத
லெண்ணியபின் [2]போக்குமோ வெஃகு. —[பு. வெ. வஞ். 20]

எனவரும். தழிஞ்சி-தழுவல். மதிக்குடைவேந்தன் மாற்றலர் வணங்கவும் பதிப்பெயர்கில்லாப் பாசறைவஞ்சிக்குச் செய்யுள் :—

(பா-ம்) 1. தார்க்கு. 2. ஞேக்குமோ.

கரும்பொடு காய்நெற் கனையெரி யூட்டிப்
பெரும்புனல் வாய்திறந்த பின்னுஞ்—சுரும்பின்
றொகைமலிந்த தண்குவளைத் தூமலர்த் தாரான்
பகைமெலியப் பாசறையு ளான். —[பு. வெ. வஞ். 21]

எனவரும். முன்னடையாதார் வளங்கெழு நாட்டைப் பின்னும் எரியூட்டிய பெருவஞ்சிக்குச் செய்யுள் :—

பீடிலா மன்னர் நடுங்கப் பெரும்புகை
யூடிலாய் வானத் தொளிமறைப்ப—நாடெலாம்
பின்னும் பிறங்கழல் வேய்ந்தன பெய்கழற்கான்
மன்னன் கனல மறம். —[பு. வெ. வஞ். 22]

எனவரும். இறையவன் வயவர்க்கு இருஞ்சோற்றமலை பெறுமுறை யருளிய பெருஞ்சோற்று நிலைக்குச் செய்யுள் :—

இயவர் புகழ வெறிமுர சார்ப்பக்
குயவரி வேங்கை யனைய—வயவர்
பெறுமுறையாற் பிண்டங்கோ ளேவினன் பேணா
ரிறுமுறையா லெண்ணி யிறை. —[பு. வெ. வஞ். 23]

எனவரும். வெளிகெடப் பகைமுனை இறுத்தவேந்தன் அளிவிறன் மிகுத்த நல்லிசை வஞ்சிக்குச் செய்யுள் :—

மடங்கலிற் சீறி மலைத்தெழுந்தார் மண்மே
லிடங்கெடச் சென்றிறுத்த பின்னு—நுடங்கெரிபோல்
வெல்லப் பெருகும் படையாற்கு வேந்தர்மேற்
செல்லப் பெருகுஞ் சினம். —[பு. வெ. வஞ். 24]

எனவரும். இறுத்தபின் நாடழிபு இரங்கி மறுத்துரைத்த பக்கத்திற்குச் செய்யுள் :—

குரையழன் மண்டிய கோடுயர் மாடஞ்
சுரையொடு [3]பீரஞ் சுமந்த நிரைதிண்டேர்ப்
பல்லிசை வென்றிப் படைக்கடலான் சென்றிறுப்ப
நல்லிசை கொண்டடையார் நாடு. —[பு. வெ. வஞ். 25]

எனவரும்.

235. உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுத லரண முற்றலுங் காத்தலு
மெனவிரு வகைய தகுவென மொழிப.

இஃது உழிஞைத்திணை மருதத்திணைக்குப் புறனென்பதூஉம் அதன்பொருட்டிறனுங் கூறுகின்றது.

(பா-ம்.) 3. பீர்க்குஞ் சுமந்த.

(இ-ள்.) மேற்கூறிய புறத்திணை ஏழனுள் உழிஞைத்திணை முற்கூறிய அகத்திணை ஏழனுள் மருதத்திணைக்குப் புறனும்; வேற்று வேந்தன்குலத்திற்கெல்லாம்எஞ்சாத முதலாய் வருகின்றஅரணைச் சென்ற வேந்தன் வளைந்துகோடலும் இருந்த வேந்தன் காத்துக் கோடலுமென இரண்டு வகையினையுடைத்தாம் அத்திணையென்று கூறுவர் அறிந்தோர். (எ-று.)

புறத்திணை பலவற்றுள் 'உழிஞைதானே மருதத்துப்புறனே' என இதனைப் பிரித்தோதினர், இருபெரு வேந்தர் தம்முள் மாறுகொண்ட வழி எதிர்செலற்காற்றாது போய் மதிலகத்திருந்த வேந்தன்மதில் பெரும் பான்மையும் மருதத்திடத்ததாகலானும், அம்மதிலை முற்றுவோனும் அந்நிலத்திருத்தலானும், ஒருவன் வாயில் வேண்டத் திறவாது அடைத் திருந்த ஒப்புமையானும், உள்ளிருந்தவனும் புறப்பட விரும்புதலானும், மருதம்போல் இதற்கும் பெரும்பொழுது வரைவின்மையானுஞ், சிறுபொழுதும் விடியற்காலமே போர்செய்தற்குக் காலமாதலானும் என்பது. எனவே, உழிஞைத்திணை மருதத்திணைக்குப் புறனென்றல் ஆணை கூறலன்றாயிற்று. (9)

236. முடிமிசை யுழிஞை சூடி யொன்னார்
கொடிநுடங் கெயில்கொளக் குறித்த வுழிஞையுங்
குடைநாட் கோளொடு வாணாட் கோளுங்
கடைநாட் பௌவத் ததிர்முர சுழிஞையும்
பற்றலர் மதில்கொளப் பரந்தெழு தானையொடு
கொற்றவ னெழுதரு கொற்ற வுழிஞையு
மிகப்படு முக்கமுதல் வேந்துறு தலினர
ணகப்படு மென்ற வரச வுழிஞையும்
வண்ண மலர்த்தார் மன்னனைச் சோவெறி
கண்ணனென் றேத்திய கந்தழி யுழிஞையு
மியங்கர ணழித்தன னிறையுமிது புனைந்தென
வயங்கிண ருழிஞையை வழுத்துமுற் றுழிஞையுங்
காந்தள் வேய்ந்தனன் சேந்தனும் போர்க்கெனின்
வேந்தரி லெவர்பூ விரும்பா ரென்றலு
மறத்துறை மலிந்து மண்டி மாற்றார்
விறற்கொடி மதிலின் புறத்தொருங் கிறுத்தலும்
வாஅண் மறவர் வணங்கார் வைகிய
நீஇண் மதிலி னிலையெடுத் தியம்பலும்
வென்றியொடு நெடும்புகழ் விளக்குமென் றிறைவன்

றேன்று வந்த தோன்மலி புரைத்தலுங்
கருதார் காக்குங் கடிமதிற் குமரிமே
லொருதா ளுகி யுடன்றகுற் றுழிஞையும்
வளையின மொலிப்ப வயிர்கிளர்ந் தார்ப்ப
மிளைபிறக் கொழிய விரைந்த பக்கமொடு
பாடருந் தோற்படை யீடுசான் மறவ
ராடலோ டடைந்த பக்கமு மதா அன்று
விண்டோ யருமிளை கடந்துகுண் டகழிப்
புறத்துவந் திறுத்தலும் போர்க்கருங் கிடங்கிற்
பற்றல ரோடுபொரூஉம் பாசி நிலையுந்
தோடுகழன் மறவர் துன்னித் துன்னு
ரிடுசூட் டிஞ்சியி னேணி சார்த்தலு
மாடுத லோல்லா வரண்கா வலவ
ரீடற வேணியி னிவரேயிற் பாசியும்
வேஎய் பிணங்கிய மிளைசூ ழரணம்
பாஅய் புள்ளிற் பாய்ந்தமு துழிஞையு
முரணகத் தவிய முதுசினஞ் சிறந்தோ
ரரணகத் தோரை யடலகற் றுழிஞையு
மருமுர ணதனு லமர்வர வறியாச்
செருமதி லோர்சிறப் புரைத்த பக்கமு
மகத்தோன் காலை யதிர்முர சியம்பப்
புறத்தோன் வஞ்சினம்புகன் முற்று முதிர்வு
மேவலர்க் கடந்து வேலற்கருங் காவலோடு
யானைகைக் கொண்ட யானைகைக் கோளு
முற்றுவிட் டகல மற்றொரு வேந்தன்
வெற்றியம் படைவரூஉம் வேற்றுப்படை வரவு
மெண்ணு ராரெயில் கழுதை யேரி
னுண்ணு வரகுகோள் ளுழுதுவித் திடுதலும்
புண்ணிய நீரிற் புரையோ ரேத்த
மண்ணுதல் புரிந்த வாண்மங் கலமுங்
கோமக னடிமலர் குறுகலர் புனைய
மாமதிற் குமரியோடு மணந்தமங் கலமுந்
தொடர்ந்தெயில் கொண்டோன் சூழ்மதில் வேந்தன்
மடந்தையை வேண்டிய மகட்பா லிகலுந்
தூவடி வேலவன் றேகுத்த நிதியளந்து

சேவடி வணங்கத் திறைகொண்டு பெயர்தலும்
பேணு மன்னர் பெருமறங் காற்றி
யாணை போக்கி யடிப்பட லிருத்தலு
மெம்மதி லுள்ள விகலுடை வேந்தரு
மம்மதி லடியி னடைந்ததொகை நிலையுமென
முரண்டரு புரிசை முற்றினன் கோட
லிரண்டுதலை யிட்ட முப்பதிற்றுத் துறைத்தே.

இது மேற்கூறிய உழிஞைப்பகுதி இரண்டனுள் முன்னையது இத்துணைத்துறையுடைத்தென்கின்றது.

(இ-ள்) முடிமிசை உழிஞைசூடி ஒன்னார் கொடிநுடங்கெயில் கொளக்குறித்த உழிஞை முதல் எம்மதிலுள்ள இகலுடை வேந்தரும் அம்மதிலடியின் அடைந்த தொகைநிலை ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு துறையுடைத்தாம் மாறுபாட்டை விளைக்கும் மதிலைச்சென்ற வேந்தன் முற்றிக்கோடல். (எ-று.)

முடிமிசை உழிஞைசூடி ஒன்னார் கொடிநுடங்கெயில் கொளக்குறித்த உழிஞைக்குச் செய்யுள்:—

உழிஞை முடிபுனைந் தொன்னுப்போர் மன்னர்
விழுமதில் வெல்களிறு பாயக்—கழிமகிழ்
வெய்தாரு மெய்தி யிசைநுவலுஞ் சீர்த்தியனே
கொய்தார மார்பினெங் கோ. [பு. வெ. உழி. 1]

எனவரும். குடைநாட்கோடற்குச் செய்யுள் :—

நெய்யணிக செவ்வே னெடுந்தேர் நிலைபுகுக
கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக—வையகத்து
முற்றக் கடியரண மெல்லா முரணவிந்த
கொற்றக் குடைநாட் கொள. —[பு. வெ. உழி. 2]

எனவரும். வாணாட்கோடற்குச் செய்யுள் :—

வாணாட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடும் பேமதிற்—பூணு
ரணிகொள் வனமுலையா ராடரங்க மேறிப்
பிணிகொள்பே யாடும் பெயர்த்து. —[பு. வெ. உழி. 3.]

எனவரும். கடைநாட்பௌவத்ததிர் முரசுழிஞைக்குச் செய்யுள் :—

கதிரோடை வெல்களிறு பாயக் கலங்கி
யுதிரா மதிலு முளகொ—லதிருமாற்
பூக்கண் மலிதார்ப் புகழ்வெய்யோன் கோயிலுண்
மாக்கண் முரச மழை. —[பு.வெ. உழி. 4.]

எனவரும். பற்றலர்மதில்கொளப் பரந்தெழுதானையொடு கொற்றவனெழு தரு கொற்ற உழிஞைக்குச் செய்யுள் :—

வெள்வாட் கருங்கழற்கால் வெஞ்சுடர்வேற் றண்ணளியான்
கொள்வான் கொடித்தானை கொண்டெழுந்தா—னள்ளாதா
ரஞ்சுவரு வாயி லருமிளைக் குண்டகழி
மஞ்சிவரு ஞாயின் மதில். —[பு. வெ.உழி. 5]

எனவரும். மிகப்படுமூக்கமுதல் வேந்துறுதலில் அரண் அகப்படு மென்ற அரசஉழிஞைக்குச் செய்யுள்:—

ஊக்க முரண்மிகுதி யொன்றிய நற்சூழ்ச்சி
யாக்க மவன்க ணகலாவால்—வீக்க
நகப்படா வென்றி நலமிகு தாரார்
ககப்படா வில்லை யரண் —[பு.வெ. உழி. 6]

எனவரும். வண்ணமலர்த்தார் மன்னனைச் சோவெறி கண்ணனெனன் றேத்திய கந்தழியுழிஞைக்குச் செய்யுள்:—

அன்றெறிந் தானு மிவனு லரண்வலித்
தின்றிவன் மாறு வெதிர்வார்யா—ரென்று
மடையார் மணிப்பூ ணடையாதார் மார்பிற்
சுடராழி நின்றெரியச் சோ. —[பு. வெ. உழி. 7]

எனவரும். இயங்கரண் அழித்தனன் இறையும் இது புனைந்தென வயங் கிணருழிஞையை வழுத்துமுற்றுழிஞைக்குச் செய்யுள்:—

மயங்காத தார்ப்பெருமை மற்றறிவார் யாரே
யியங்கரண மூன்று மெரித்தான்—றயங்கிணர்ப்
பூக்கொ ளிதழிப் புரிசெஞ் சடையானு
மாக்கொ ளுழிஞை மலைந்து. —[பு. வெ. உழி. 8]

எனவரும். காந்தள் வேய்ந்தனன் சேந்தனும்போர்க்கெனின் வேந்தரி லெவர்பூ விரும்பாரென்றற்குச் செய்யுள்:—

குருகு பெயரிய குன்றெறிந் தானு
முருகெழு காந்தண் மலைந்தான் —பொருகழற்
கார்கருதி வார்முரசு மார்க்குங் கடற்றானைப்
போர்கருதி யார்மலையார் பூ. —[பு. வெ. உழி. 9]

எனவரும். மறத்துறைமலிந்து மண்டிமாற்றார் விறற்கொடி மதிலின் புறத்தொருங்கிறுத்தற்குச் செய்யுள் :—

புல்லார் புகலொடு போக்கொழியப் பொங்கினனுய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி—யொல்லார்
நிறத்திறுத்த வாட்டானை நேரார் மதிலின்
புறத்திறுத்தான் பூங்கழலி னன். —[பு. வெ. உழி. 10]

எனவரும். வாஅண்மறவர் வணங்கார் வைகிய நீஇண்மதிலின் நிலையெடுத்தியம்பற்குச் செய்யுள் :—

மயிற்கணத் தன்னார் மகிழ்தேற லூட்டக்
கயிற்கழலார் கண்கனல் பூப்ப—வெயிற்கண்ணார்
வீயப்போர் செய்தாலும் வென்றி யரிதரோ
மாயப்போர் மன்னன் மதில். —[பு. வெ. உழி. 11]

எனவரும். வென்றியொடு நெடும்புகழ் விளக்குமென்றிறைவன் தொன்றுவந்த தோன்மலிபுரைத்தற்குச் செய்யுள் :—

நின்ற புகழொழிய நில்லா வுயிரோம்பி
யின்றுநாம் வைக லிழிவாகு—மென்றொளிறும்
பாண்டி னிரைதோல் பணியார் பகையரணம்
வேண்டி லெளிதென்றான் வேந்து. —[பு. வெ. உழி. 12]

எனவரும். பாண்டில்-கண்ணாடி. தோல் ஈண்டுஆகுபெயர். கருதார்காக்குங் கடிமதிற்குமரிமேல் ஒருதானாகி உடன்றகுற்றுழிஞைக்குச் செய்யுள் :—

குளிறு முரசினான் கொண்டா னரணங்
களிறுங் கதவிறப் பாய்ந்த—வொளிறு
மயிற்றுப் படைந்த வணியெழு வெல்லா
மெயிற்றுப் படையா லிடந்து. —[பு. வெ. உழி. 13]

எனவரும். வளையினமொலிப்ப வயிர்கிளர்ந்தார்ப்ப மிளைபிறக்கொழிய விரைந்த பக்கத்திற்குச் செய்யுள் :—

அந்தரந் தோயு மணிமயோங் கருமிளை
மைந்தர் மறிய மறங்கடந்து—பைந்தார்
விரைமார்பின் வின்னரல வெங்கணை தூவார்
வரைமார்பின் வைகின வாள். —[பு. வெ. உழி. 14]

எனவரும். வில் - வின்னாண். தூவுவார்தூவாரென விகாரம்பெற்று நின்றது. பாடருந்தோற்படை ஈடுசான்மறவர் ஆடலோடடைந்த பக்கத்திற்குச் செய்யுள் :—

நிரைபொறி வாயி னெடுமதிற் சூழி
வரைபுகு புள்ளின மான—விரைபடைந்தார்
வேலேந்து தானை விறலோன் விறன்மறவர்
தோலேந்தி யாட றொடர்ந்து. —[பு. வெ. உழி. 15]

எனவரும். பொறி, தூற்றுவரைக் கொல்லி முதலிய இயந்திரங்கள். விண்டோயருமிளைக் கடந்து குண்டகழிப்புறத்து வந்திறுத்தற்குச் செய்யுள் :—

கோள்வாய் முதலைய குண்டகழி நீராக
வாள்வாய் மறவேந்தன் வந்திறுத்தா—னீள்வாயி

லோங்க லரணத் தொளிவளையார் வெய்துயிர்ப்ப
வாங்கொ லரிய வமர். —[பு. வெ. உழி. 16]

எனவரும். போக்கருங்கிடங்கிற் பற்றலரொடுபொரூஉம் பாசிநிலைக்குச் செய்யுள் :—

நாவாயுந் தோணியு மேல்கொண்டு நள்ளாதா
ரோவார் விலங்கி யுடலவும்—பூவா
ரகழி பரந்தொழுகு மங்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர். —[பு. வெ. உழி. 17]

எனவரும். பாசிநிலைபோல் ஒழிப்பவும் ஒழியாது பொருதலிற் பாசிநிலையாயிற்று. நாவாய் - ஓடம். தோணி - ஒரு மரத்தான் இயன்றது. தொடுகழன்மறவர் துன்னித்துன்னூர் இடுசூட்டிஞ்சியின் ஏணிசார்த்தற்குச்செய்யுள் :—

கற்பொறியும் பாம்புங் கனலுங் கடிகுரங்கும்
விற்பொறியும் வேலும் விலக்கவும்—பொற்புடைய
பாணி நடைப்புரவிப் பல்களிற்றூர் சார்த்தினா
ரேணி பலவு மெயில். —[பு. வெ. உழி. 18]

எனவரும். பாணிநடை-தாளத்திற்கொப்பச் சதிபாய்தல். ஆடுதலொல்லா அரண்காவலவர் ஈடறவேணியின் இவரெயிற்பாசிக்குச் செய்யுள் —:

சுடுமண் ணெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுரண் ணெஃகங் கழிய—வடுமுரண்
ணூறினா ரன்றி யரவு முடும்பும்போ
லேறினா ரேணி பலர். —[பு. வெ. உழி 19]

எனவரும். எயிலைப் பாசிபோல விடாதுபற்றி ஏறுதலின் எயிற்பாசியாயிற்று. ஆடுதல், ஆடுதலென விகாரமாய் நின்றது. வேயெய்பிணங்கிய மிளைசூழரணம் பாஅய்புள்ளிற் பாய்ந்த மூதுழிஞைக்குச் செய்யுள் :—

கோடுயர் வெற்பி னிலங்கண் டிரைகருதுந்
தோடுகொள் புள்ளின் [1]றொகையொப்பக்—கூடார்
முரணகத்துப் பாற முழவுத்தோண் மள்ள
ரரணகத்துப் பாய்ந்திழிந்தா ரார்த்து. —[பு. வெ. உழி 20]

எனவரும். முரணகத்தவிய முதுசினஞ் சிறந்தோர ரணகத்தோரை யடலகற்றுழிஞைக்குச் செய்யுள் :—

செங்கண் மறவர் சினஞ்சொரிவாள் சென்றியங்க
வங்கண் விசும்பி னணிதிகழுந்—திங்கண்
முகத்தா ரலற முகினுரிஞ்சுஞ் சூழி
யகத்தாரை வென்று ரமர். —[பு. வெ. உழி 22]

(பா-ம்) 1 றொகையேய்ப்ப

எனவரும். அருமுரணத்தனுல் அமர்வரவறியாச் செருமதிலோர் சிறப்புரைத்த பக்கத்திற்குச் செய்யுள் :—

அறியார் வயவ ரகத்திழிந்த பின்னு
நெறியார் நெடுமதிலு ளோரார்—மறியாங்
கிளியொடு நேராங் கிளவியார் வாட்கட்
களியுறு காமங் கலந்து. —[பு. வெ. உழி 21]

எனவரும். அகத்தோன்காலை அதிர்முரசியம்பப் புறத்தோன் வஞ்சினம் புகன்முற்று முதிர்வுக்குச் செய்யுள் :—

காலை முரச மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோ னோக்குதலு—மாலை
யடிக மடிசிலென் றம்மதிலு ளிட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு. —[பு. வெ. உழி 23]

எனவரும். மேவலர்க்கடந்து வெலற்கருங்காவலொடு யானைகைக்கொண்ட யானைகைக்கோளுக்குச் செய்யுள் :—

ஏவ லிகன்மறவர் வீய விகல்கடந்து
காவலும் யானையுங் கைக்கொண்டான்—மாவலான்
வம்புடை யொள்வாண் மறவர் தொழுதேத்த
வம்புடை ஞாயி லரண். —[பு. வெ. உழி 24]

எனவரும். முற்றுவிட்டகல மற்றொரு வேந்தன் வெற்றியம்படை வருஉம் வேற்றுப்படை வரவுக்குச் செய்யுள் :—

உவனின் றுறுதுயர முய்யாமை நோக்கி
யவனென் றுலகேத்து மாண்மை—யிவனன்றி
மற்றியார் செய்வார் மழைதுஞ்சு நீளரண
முற்றியார் முற்று விட. —[பு. வெ. உழி 25]

எனவரும். எண்ணாரரெயில் கழுதையேரின் உண்ணுவரகுகொள் உழுது வித்திடுதற்குச் செய்யுள்:—

எழுதெழின் மாடத் திடனெலா நூறிக்
கழுதையேர் கையொளிர்வேல் கோலா—வுழுததற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற்
கள்விரவு தாரான் கதம். —[பு. வெ. உழி 26]

எனவரும். புண்ணியநீரிற் புரையோரேத்த மண்ணுதல்புரிந்த வாண்மங்கலத்திற்குச் செய்யுள் :—

தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்
கூர்த்தவாண் மண்ணிக் கொடித்தேரான்—போர்த்து
மிடியார் பணைதுவைப்ப விம்மதிலுள் வேட்டான்
புடையா ரறையப் புகழ். —[பு. வெ. உழி 27]

எனவரும். கோமகனடிமலர் குறுகலர்புனைய மாமதிற்குமரியொடு மணந்த மங்கலத்திற்குச் செய்யுள் :—

எங்கண் மலர வெயிற்குமரி கூடிய
மங்கல நாள்யா மகிழ்தூங்கக்—கொங்கலர்தார்ச்
செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி. —[பு. வெ. உழி 28]

எனவரும். தொடர்ந்தெயில்கொண்டோன் சூழ்மதில் வேந்தன் மடந்தையை வேண்டிய மகட்பாலிகலுக்குச் செய்யுள் :—

அந்தழை யல்குலு மாடமை மென்றோளும்
பைந்தளிர் மேனியும் பாராட்டித்—தந்தை
புறமதில் வைகும் புலம்பே தருமே
மறமதின் மன்னன் மகள். —[பு. வெ. உழி 29]

எனவரும். தூவடிவேலென் றொகுத்த நிதியளந்து சேவடிவணங்கத் திறைகொண்டு பெயர்தற்குச் செய்யுள் :—

கோடும் வயிரு மிசைப்பக் குழூமிளை
யோடெரி வேய வுடன்றலாஅய்ப்—பாடி
யுயர்ந்தோங் கரணத் தொன்னார் பணியப்
பெயர்ந்தான் பெருந்தகையி னன். —[பு. வெ. உழி 30]

எனவரும். பேணுமன்னர் பெருமறங்காற்றி ஆணைபோக்கி அடிப்பட விருத்தற்குச் செய்யுள் :—

ஒன்றி யவர்நா டொருவழித்தாய்க் கூக்கேட்ப
வென்றி விளையா விழுமதிலோ—ரென்றும்
பருந்தார் செருமலையப் பாடி பெயரா
திருந்தா னிகன்மறவ ரேறு. —[பு. வெ. உழி 31]

எனவரும். எம்மதிலுள்ள இகலுடைவேந்தரும் அம்மதிலடியின் அடைந்த தொகைநிலைக்குச் செய்யுள் :—

நாவல் பெயரிய ஞாலத் தடியடைந்
தேவ லெதிரா திகல்புரிந்த—காவலர்
வின்னின்ற தானை விறல்வெய்யோற் கம்மதிலின்
முன்னின் றவிந்தார் முரண். —[பு. வெ. உழி 32]

எனவரும்.

237. ஏப்புழை ஞாயி லேந்துநிலை யரணங்
காப்போர் நோச்சிப் பூப்புனை புகழ்ச்சியுந்
துண்ணென வருஉந் தூசு தாங்கி
விண்விருந் தாக விளிந்தமறப் பாசியு

மருமிளை யொடுகிடங் கழியா திகலி
யுருகெழு மறவ ருடன்றவூர்ச் செருவு
மாழ்ந்துபடு கிடங்கோ டருமிளை காத்து
வீழ்ந்த வேலோர் விறன்மேம் படுத்தலு
மதிதோடு புரிசை வாமான் கடுப்பிற்
கெதிரன்மி னென்னு மிவுளி மறமும்
வாள்வடுப் பட்டும் வடுப்படா தகத்தோர்
தோள்வடுப் படப்பகை தொலைத்தவெயிற் போருந்
துணிவுடை யடுபடைத் தொடுகழன் மறவ
னணிமணி யெயின்மிசை யழிந்த நொச்சியு
மிழிபு மேன்மே லெழுதலு மிகலி
யழிபடை யானேறிந் தழிபடை தாங்கலும்
வெம்முர ணுன்மகள் வேண்டலு மதனுக்
கம்மதி லோர்மறுத் துரைத்தலு மெனமுறை
கூறிய வொன்பதுங் குண்டக ழுடுத்த
வீறெயில் காத்தல் விரியெனப் படுமே.

இது முற்கூறிய உழிஞைப்பகுதி இரண்டனுட் பின்னையது இத்துணைத் துறையுடைத்தென்கிறது.*

(இ-ள்.) எப்புழைஞாயிலேந்து நிலையரணங் காப்போர்நொச்சிப் பூப்புனைபுகழ்ச்சி முதல் வெம்முரணுன்மகள்வேண்டலும் அதனுக்கு அம்மதிலோர் மறுத்துரைத்தல் ஈறாக முறையேகூறிய ஒன்பது துறையும் ஆழ்ந்த அகழியைப்பொருந்தின ஒப்பில்லாத எயில் காத்துக்கோடலின் விரியென்று சொல்லப்படும். எ-று.

எப்புழைஞாயில் ஏந்துநிலையரணங் காப்போர்நொச்சிப் பூப்புனை புகழ்ச்சிக்குச் செய்யுள் :—

ஆடரவம் பூண்டா னழலுணச் சீறிய
கூடரணங் காப்போர் குழாம்புரையச்—சூடினா
ருச்சி மதிவழங்கு மோங்கு மதில்காப்பா
னொச்சி நுதிவே லவர். —[பு. வெ. நொச். 1.]

எனவரும். துண்ணெனவருஉந் தூசிதாங்கி விண்விருந்தாக விளிந்தமறப் பாசிக்குச் செய்யுள் :—

பாயினார் மாயும் வகையாற் பலகாப்பு
மேயினா ரேய விகன்மறவ—ராயினா
ரொன்றி யவரற வூர்ப்புலத்துத் தார்தாங்கி
வென்றி யமரர் விருந்து. [பு. வெ. நொச். 2]

* இப்பகுதியை நொச்சியென்பர் ஐயனரிதனார்.

எனவரும். அருமிளையொடுகிடங்கு அழியாதிகலி உருகெழுமறவர் உடன்றவூர்ச்செருவுக்குச் செய்யுள் :—

வளையும் வயிரு மொலிப்பவாள் வீசி
யிளையுங் கிடங்குஞ் சிதையத்—தளைபரிந்த
நோனார் படையிரிய நொச்சி விறன்மறவ
ராஞ ரமர்விலக்கி யார்ப்பு. [பு. வெ. நொச். 3]

எனவரும். ஆழ்ந்துபடு கிடங்கோடு அருமிளைகாத்து வீழ்ந்தவேலோர் விறன்மேம்படுத்தற்குச் செய்யுள் :—

ஈண்டரில் சூழ்ந்த விளையு மெரிமலர்க்
காண்டகு நீள்கிடங்குங் காப்பாராய்—வேண்டார்
மடங்க லனைய மறவேலோர் தத்த
முடம்பொடு நாவ லுயிர். [பு. வெ. நொச். 4]

எனவரும். மதிதொடுபுரிசை மாமான்கடிப்பிற்கு எதிரன்மினென்னும் இவுளி மறத்திற்குச் செய்யுள் :—

தாங்கன்மின் றாங்கன்மின் றானை விறன்மறவி
ரோங்கன் மதிலு ளொருதனிமா—ஞாங்கர்
மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்ற
ருயிருணிய வோடி வரும். [பு. வெ. நொச். 5]

எனவரும். வாள்வடுப்பட்டும் வடுப்படாதகத்தோர் தோள்வடுப்படப் பகை தொலைத்த எயிற்போர்க்குச் செய்யுள் :—

மிகத்தாய செங்குருதி மேவரு மார்பி
னுகத்தா முயங்கியக் கண்ணு—மகத்தார்
புறத்திடைப் போதந் தடல்புரிந்தார் பொங்கி
மறத்திடை மானமேற் கொண்டு. [பு. வெ. நொச். 6]

எனவரும். துணிவுடையபடைத் தொடுகழன்மறவன் அணிமணி யெயின்மிசை அழிந்தநொச்சிக்குச் செய்யுள் :—

அகத்தன வார்கழ னோன்ற ளரணின்
புறத்தன போரெழிற் றிண்டோ—ளுறத்தழீஇத்
தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட
வாட்குரிசில் வானுலகி னான். [பு. வெ. நொச். 7]

எனவரும். இழிபு மேன்மேல் எழுதலுமிகலி அழிபடையானெறிந்து அழி படைதாங்கற்குச் செய்யுள் :—

பரிசை பலகடந்து பற்ற ரெதிர்ந்தா
ரெரிசெ யிகலரணங் கொண்மார்—புரிசை
யகத்தடி யுய்யாமை யஞ்சுடர்வா ளோச்சி
மிகத்தடிந்தார் மேனின் றவர். [பு. வெ. நொச். 8]

எனவரும். வெம்முரணுன்மகள் வேண்டலும் அதனுக்கு அம்மதிலோர் மறுத்து உரைத்தபக்கத்திற்குச் செய்யுள் :—

ஒள்வாண் மறவ ருருத்தெழுந் தும்பர்நாட்
கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால். [பு. வெ. நொச். 9]

எனவரும். (11)

238. தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

இது தும்பைத்திணை நெய்தற்றிணைக்குப் புறனென்பதூஉம் அதன் பொருளுங் கூறுகின்றது.

(இ-ள்.) மேற்கூறிய புறத்திணை ஏழனுட் தும்பைத்திணை முற்கூறிய அகத்திணை ஏழனுள் நெய்தற்றிணைக்குப் புறனாம். அது தனது வலியினை உலகம் மீக்கூறுதலே தனக்குப் பெறும்பொருளாகக் கருதி மேற்சென்ற வேந்தனை அங்ஙனம் மாற்றுவேந்தனும் அவன்கருதிய மைந்தே தான் பெறுபொருளாக எதிர்சென்று தலைமையைத் தீர்க்குஞ் சிறப்பினையுடைத் தென்று சொல்லுவர் ஆசிரியர் எ-று.

புறத்திணை பலவற்றுட் 'தும்பை தானே நெய்தலது புறனே' என இதனைப் பிரித்தோதினர், நெய்தற்கு உரிய பெருமணலுலகம் போலக் காடும் மலையுங் கழனியுமல்லாத களரும் மணலும் பொருகளமாக வேண்டுதலானும், பெரும்பொழுது வரைவின்மையானும், எற்பாடு போர்த்தொழின்முடியுங் காலமாதலானும், இரக்கமுந் தலைமகட்கே பெரும்பான்மை உளதாயவாறுபோலக் கணவனை இழந்தார்க்கன்றி வீரர்க்கு இரக்கமின்மையானும், அவ்வீரக்குறிப்பின் அருள் பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குபவாகலானும் ஒருவரும் ஒழியாமற் பட்டுழிக் கண்டார் இரங்குபவாகலானும். பிற காரணங்களானுமென்பது. எனவே, தும்பைத்திணை நெய்தற்றிணைக்குப் புறனென்றல் ஆணைகூறலன்றாயிற்று. இதனை மைந்துபொருளாகப் பொருதலின் மண் இடையீடாகப் பொரும் வஞ்சிக்கும், மதில் இடையீடாகப் பொரும் உழிஞைக்கும் பிற்கூறினர். (12)

239. கருங்கழல் வேந்தன் செங்களங் கருதிப்
பசுந்துணர்த் தும்பை வெண்பூச் சூடலுஞ்
சூடிய பின்னர்த் தொடுகழல் வயவர்க்கு
நாடுமுதல் கொடுத்த பீடுபெறு மரவமுந்
தாஞ்செருப் புரியாத் தன்மையா லவரை

யோம்படுத் துயர்த்திய தானை மறமும்
பூம்பொழிற் காவல் பூண்டமன் னவனை
யோம்படுத் துரைத்த மற்றதன் பகுதியும்
வண்ணவேற் றானை மறமிகுத் துரையா
வெண்ணல ரழிபினுக் கிரங்கிய பக்கமும்
யானை மறத்தொடு குதிரை மறமு
முன்னெழு வயப்படை தாங்குவல் யானென
மன்னவற் குரைத்த தூசி நிலையும்
வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி யொருவன்
றன்மீண் டெறிந்த மற்றதன் பகுதியு
முறிமலர் நறுந்தார் மொய்கழல் வேந்தன்
செறிமணித் தேர்மறஞ் சிறந்தமை கூறலு
மையல் யானை யெறிந்துமாய்ந் தோர்க்குக்
கைவல்யாழ்ப் பாணர் கடன்முறை கழித்தலு
மிருவர் தலைவர் தபுதிக் கண்ணும்
பொருபடை யகலாப் போர்புரி நிலையுங்
குருதிவே லொருவன் கூழை தாங்கி
யிரிபடைப் பின்னின்ற வெருமை மறமும்
வேற்படை களிற்றொடு போக்கிமெய் வலியி
னேற்றுடன் றடரு மேம வெருமையு
நேரலர் பனிப்ப நெஞ்சிடைக் குளித்த
கூரயில் பறித்துக் கைக்கொண்ட நூழிலு
மாறிரு வேந்தன் வயப்படை யுடைய
வேறிரித் தாடிய நூழி லாட்டு
மின்னவிர் கழலார் வேந்தன் வெஃறோர்
முன்ன ராடிய முன்றேர்க் குரவையு
மன்னரொடு விறலிய ராண்டகை நெடுந்தேர்ப்
பின்ன ராடிய பின்றேர்க் குரவையு
மன்னவ னூரு மறமிகு மணித்தேர்
பின்னு முன்னும் பேயாடு குரவையு
மொளிற்றெஃ கிற்பட வீழ்ந்தவொண் மருப்பிற்
களிற்றுடன் கண்படு களிற்றுட னிலையும்
வடிவாள் விதிரா வயவர் மன்னவ
னுடனுட் டயர்ந்த வொள்வா ளமலையு

மிருபாற் படையு மேத்த நெடுந்தகை
பொருடோர்ப் பொலிந்த தானை நிலையுங்
கணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற்
சென்ற வுயிரி னின்ற யாக்கை
யிருநிலந் தீண்டா வருவரு நிலையு
மருவரை மார்புதம் மலர்முலை குளிப்பத்
தெரிவையர் முயங்கிய சிருங்கார நிலையும்
வாள்வாய்த் திட்ட வடுவாழ் யாக்கைக்
கேள்கண்டு கலுழ்ந்த வுவகைக் கலுழ்ச்சியுந்
தம்முடை யிறைவன் விசும்படைந் தானென
வெம்முர ணுயிர் வேள்வி வேட்டலுங்
காய்கதிர் நெடுவேற் கணவனைக் காணிய
வாயிழை சென்ற பக்கமு மதாஅன்
றிருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமு
மொருவரு மொழியாத் தொகைநிலை யுளப்படச்
செப்பிய நாலேழ் திறத்தன வெல்லாந்
துப்பமை தும்பைத் துறையெனப் படுமே.

இது முற்கூறிய தும்பைத்திணை இத்துணைத்துறையுடைத் தென்கின்றது.

(இ-ள்.) *கருங்கழல்வேந்தன் செங்களங்கருதிப் பசுந்துணர்த்தும்பை வெண்பூச்சூடல் முதலியனவும் ஈருகக் கிடந்த இருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமும் ஒருவருமொழியாத் தொகைநிலையுங்கூடச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுவகையும் வலியமைந்த தும்பைத்திணையின் துறையென்று சொல்லப்படும். (எ-று.)*

கருங்கழல்வேந்தன் செங்களங்கருதிப் பசுந்துணர்த்தும்பை வெண்பூச்சூடற்குச் செய்யுள் :—

கார்கருதி நின்றதிருங் கௌவை விழுப்பணையான்
சோர்குருதி சூழா நிலநனைப்பப்—போர்கருதித்
துப்புடைத் தும்பை மலைந்தான் றுகளறசீர்
வெப்புடைத் தானையெம் வேந்து [பு. வெ. தும். 1.7]

எனவரும். சூடியபின்னர்த் தொடுகழல்வயவர்க்கு நாடுமுதல்கொடுத்த பீடுபெறும் அரவத்திற்குச் செய்யுள் :—

வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங்
கொல்களிறு மாவுங் கொடுத்தளித்தான்—பல்புரவி

நன்மணித் திண்டேர் நயவார் தலைபணிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு. —[பு. வெ. தும். 2]

எனவரும். தாஞ்செருப்புரியாத் தன்மையாலவரை யோம்படுத்துயர்த்திய தானைமறத்திற்குச் செய்யுள் :—

கழுதார் பறந்தலைக் கண்ணுற்றுத் தம்மு
ளிழுதார்வேற் றானை யிகலிற்—பழுதாஞ்
செயிர்காவல் பூண்டொழுகுஞ் செங்கோலார் செல்வ
முயிர்காவ லென்னு முரை. —[பு. வெ. தும் 3]

எனவரும். பூம்பொழிற் காவல் பூண்டமன்னவனை ஓம்படுத்துரைத்த மற்றதன்பகுதிக்குச் செய்யுள் :—

வயிர்மேல் வளைஞரல வைவேலும் வாளுஞ்
செயிர்மேற் கனல்விழிப்பச் சீறி—யுயிர்மேற்
பலகழியு மேனும் பரிமான்றேர் மன்னர்க்
குலகழியு மோர்த்துச் செயின். —[பு. வெ. தும். 4]

எனவரும். வண்ணவேற்றானை மறமிகுத்துரையா எண்ணலரழிபினுக்கு இரங்கியபக்கத்திற்குச் செய்யுள் :—

மின்னார் சினஞ்சொரிவேன் மீளிக் கடற்றானை
யொன்னார் நடுங்க வுலாய்நிமிரி—னென்னாங்கொ
லாழித்தேர் வெல்புரவி யண்ணல் மதயானைப்
பாழித்தோண் மன்னர் படை. —[பு. வெ. தும். 5]

எனவரும். யானைமறத்திற்குச் செய்யுள் :—

அடக்கருந் தானை யலங்குதார் மன்னர்
விடக்கு முயிரு மிசையக்—கடற்படையுட்
பேயு மெருவையுங் கூற்றுந்தன் பின்படரக்
காயுங் கழலான் களிறு. —[பு. வெ. தும். 6]

எனவரும். குதிரைமறத்திற்குச் செய்யுள் :—

குந்தங் கொடுவிற் குருதிவேல் கூடாதார்
வந்த வகையறியா வாளமருள்—வெந்திற
லார்கழன் மன்ன னலங்குளைமா வெஞ்சிலை
வார்கணையின் முந்தி வரும். —[பு. வெ. தும். 7]

எனவரும். முன்னெழுவெயப்படை தாங்குவல்யானென மன்னவற்குரைத்த தூசிநிலைக்குச் செய்யுள் :—

உறுசுடர் வாளோ டொருகால் விலங்கிற்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டா—யெறிசுடர்வேற்

தேங்குலாம் பூந்தெரியற் றேர்வேந்தே நின்னொடு
பாங்கலா மன்னர் படை. —[பு. வெ. தும். 8]

எனவரும். வேன்மிகு வேந்தனை மொய்த்தவழியொருவன் தான்மீண்டெறிந்த மற்றதன் பகுதிக்குச் செய்யுள் :—

காலான் மயங்கிக் கதிர்மறைத்த கார்முகில்போல்
வேலான்கை வேல்பட வீழ்ந்தனவே—தோலா
வில்லபுனை தண்டா ரிறைவன்மேல் வந்த
மலைபுரை யானை மறிந்து. —[பு. வெ. தும். 9]

எனவரும். முறிமலர்நறுந்தார் மொய்கழல்வேந்தன் செறிமணித்தேர் மறஞ்சிறந்தமை கூறற்குச் செய்யுள் :—

செருமலி வெங்களத்துச் செங்குருதி வெள்ள
மருமுரா ணுழி தொடர—வருமரோ
கட்டார் கமழ்தெரியற் காவலன் காமர்தே
ரொட்டார் புறத்தின்மே லூர்ந்து. —[பு. வெ. தும். 10]

எனவரும். மையல்யானை எறிந்துமாய்ந்தோர்க்குக் கைவல்யாழ்ப்பாணர் கடன்முறைகழித்தற்குச் செய்யுள் :—

தளரிய றுய்புதல்வர் தாமுணா ராமைக்
களரிக் கனன்முழங்க மூட்டி—விளரிப்பண்
கண்ணினார் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்க்கு
விண்ணினார் செய்தார் விருந்து. —[பு. வெ. தும். 11]

எனவரும். இருவர் தலைவர் தபுதிக்கண்ணும் பொருபடையகலாப் போர் புரிநிலைக்குச் செய்யுள் :—

காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்த ரிருவரும் விண்படர—வேந்து
பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி
யிருபடையு நீங்கா விகல். —[பு. வெ. தும். 12]

எனவரும். குருதிவேலொருவன் கூழைதாங்கி இரிபடைப்பின்னின்ற எருமைமறத்திற்குச் செய்யுள் :—

கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி
நெடுங்கைப் பிணத்திடை நின்று—னடுங்கமரு
ளாள்வெள்ளம் போகவும் போகான்கை வேலூன்றி
வாள்வெள்ளந் தன்மேல் வர. —[பு. வெ. தும். 13]

எனவரும். எருமைபோலச் சிறக்கணித்து நிற்றலின் எருமைமறமாயிற்று. வேற்படை களிற்றொடும் போக்கிமெய்வலியின் எற்றுடன்றடரும் ஏமவெருமைக்குச் செய்யுள் :—

மருப்புத்தோ ளாக மதவிடையிற் சீறிச்
செருப்புகன்று செங்கண் மறவன்—நெருப்பிமையாக்
கைக்கொண்ட வெஃகங் கடுங்களிற்றின் மேற்போக்கி
பெய்க்கொண்டான் பின்னரு மீட்டு. —[பு. வெ. தும். 14]

எனவரும். நேரலர்பணிப்ப நெஞ்சிடைக்குளித்த கூரெயில்பறித்துக் கைக்கொண்டநூழிற்குச் செய்யுள் :—

மொய்யகத்து மன்னர் முரணினி யென்னுங்கொல்
கையகத்துக் கொண்டான் கழல்விடலை—வெய்ய
விடுசுடர் சிந்தி விளையகலம் போழ்ந்த
படுசுட ரெஃகம் பறித்து. —[பு. வெ. தும். 16]

எனவரும். நூழில் - கொன்றுகுவித்தல். மாறிநவேந்தன் வயப்படை யுடைய வேறிரித்தாடிய நூழிலாட்டிற்குச் செய்யுள் :—

ஆட லமர்ந்தா னமர்வெய்யோன் வீழ்குடர்
சூடன் மலைந்த சுழல்கட்பேய்—மீடன்
மறந்தவேன் ஞாட்பின் மலைந்தவர் மார்பந்
திறந்தவேல் கையிற் றிரித்து. —[பு. வெ. தும். 15]

எனவரும். மின்னவிர்கழலார் வேந்தன்வெஃறேர் முன்னராடிய முன்றேர்க்குரவைக்குச் செய்யுள் :—

ஆனா வயவர்முன் னாட வமர்க்களத்து
வானார்மின் னாகி வழிநுடங்கு—நோனாக்
கழுமணிப் பைம்பூட் கழல்வேந்த னூருங்
குழுமணித் திண்டேர்க் கொடி. —[பு. வெ. தும். 17.]

எனவரும். அன்னரொடுவிறலிய ராண்டகை நெடுந்தேர்ப் பின்னராடிய பின்றேர்க்குரவைக்குச் செய்யுள் :—

கிளையாய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப் பாணும்
வளையா வயவரும் பின்னாக்—கொளையாய்ந்
தசைவிளங்கும் பாடலொ டாட வருமே
திசைவிளங்குந் தானையான் றேர். —[பு. வெ. தும். 18.]

எனவரும். கேள்வி-சுருதி. மன்னவனூரும் மறமிகுமணித்தேர்ப் பின்னு முன்னும் பேயாடுகுரவைக்குச் செய்யுள் :—

முன்னரும் பின்னரு மூரிக் கடற்றானை
மன்ன னெடுந்தேர் மறனேத்தி—யொன்னார்
நிணங்கொள்பேழ் வாய நிழல்போ னுடங்கிக்
கணங்கொள்பே யாடுங் களித்து. —[பு வெ. தும். 19.]

எனவரும். ஒளிற்றெஃகம்பட வீழ்ந்தவொண்மருப்பிற் களிற்றுடன் கண்படு களிற்றுடனிலைக்குச் செய்யுள் :—

இறுவரை வீழ வியக்கற் றவிந்த
தறுகட் டகையரிமாப் போன்றான்—சிறுகட்
பெருங்கைக் களிறெறிந்து பின்னதன்கீழ்ப் பட்ட
கருங்கழற் செவ்வே லவன். —[பு. வெ. தும். 20.]

எனவரும். வடிவாள்விதிரா வயவர் மன்னவன் உடனாட்டயர்ந்த ஒள்வாளமலைக்குச் செய்யுள் :—

வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையா
ராளமர் வென்றி யடுகளத்துத்—தோள்பெயராக்
காய்ந்தடு துப்பிற் கழன்மறவ ராடினார்
வேந்தொடு வெள்வாள் விதிர்த்து. —[பு. வெ. தும். 21.]

எனவரும். இருபாற்படையும் ஏத்த நெடுந்தகை பொருபோர்ப்பொலிந்த தானைநிலைக்குச் செய்யுள் :—

நேரார் படையி னிலைமை நெடுந்தகை
யோரா னுறைகழியா னொள்வாளுந்—தேரார்க்கும்
வெம்பரிமா வூர்ந்தார்க்கும் வெல்களிற்றின் மேலார்க்குங்
கம்பமாய் நின்றான் களத்து. —[பு. வெ. தும். 22.]

எனவரும். கணையும்வேலுந் துணையுறமொய்த்தலிற் சென்றவுயிரின் நின்ற யாக்கை இருநிலந்தீண்டா வெருவரு நிலைக்குச் செய்யுள் :—

வெங்கண் முரசதிரும் வேலமருள் வில்லுதைப்ப
வெங்கு மருமத் திடைகுளிப்பச்—செங்கட்
புலவா னெடுந்தகை பூம்பொழி லாகங்
கலவாமற் காத்த கணை. —[பு. வெ. தும். 23.]

எனவரும். அருவரைமார்பு தம் அலர்முலைகுளிப்பத் தெரிவையர்முயங்கிய சிருங்காரநிலைக்குச் செய்யுள் :—

எங்கணவ னெங்கணவ னென்பா ரிகல்வாடத்
தங்கணவன் றார்சும் முலைமுகப்ப—வெங்கணைசேர்
புண்ணுடை மார்பம் பொருகளத்துப் புல்லினார்
நுண்ணிடைப்பே ரல்கு லார். —[பு. வெ. தும். 24.]

எனவரும். வாள்வாய்த்திட்ட வடுவாழ்யாக்கைக் கேள்கண்டுகலுழ்ந்த உவகைக்கலுழ்ச்சிக்குச் செய்யுள் :—

வெந்தொழிற் கூற்றமு நாணின்று வெங்களத்து
வந்த மறவர்கை வாடுமிப்பப்—பைந்தொடி
யாடரிமா வன்னான் கிடப்ப வகத்துவகை
யோடரிக்கண் ணீரா யுக. —[பு. வெ. தும். 25.]

எனவரும். தம்முடையிறைவன் விசும்படைந்தானென வெம்முரணு னுயிர்வேள்வி வேட்டற்குச் செய்யுள் ,—

வான மிறைவன் படர்ந்தென வாடுப்பா
மானமேநெய் யாக மறம்விறகாத்—தேனிமிரும்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளம
ரோராள்ள முனுள் வேட்டா னுயிர். —[பு. வெ. தும். 26.]

எனவரும், காய்கதிர் நெடுவேற் கணவனைக்காணிய ஆயிழைசென்ற பக்கத்திற்குச் செய்யுள் :—

கற்பின் விழுமிய தில்லைக் கடையிறந்
திற்பிறப்பு நாணு மிடையொழிய—நற்போ
ரணங்கிய வெங்களத் தாருயிரைக் காண்பான்
வணங்கிடை தானே வரும். —[பு. வெ. தும். 27.]

எனவரும். இருபெரு வேந்தர் தாமுஞ்சுற்றமும் ஒருவருமொழியாத் தொகை நிலைக்குச் செய்யுள் :—

மண்டமர்த் திண்டோண் மறங்கடைஇ மண்புலம்பக்
கண்டிரள்வேன் மன்னர் களம் பட்டார்—பெண்டிர்
கடிதெழு செந்தீக் கழூனு ரின்னுங்
கொடிதேகா ணூர்ந்தின்று கூற்று. —[பு. வெ. தும். 28.]

எனவரும், கண்டிரள்வேல்-காம்பு கண் திரண்டவேல். (13)

240. வாகை தானே பாலையது புறனே
தாவில் கோள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப.

இது வாகைத்திணை பாலைத்திணைக்குப் புறனென்பதூஉம் அதன் பொருளுங் கூறுகின்றது.

(இ-ள்.) மேற்கூறிய புறத்திணை ஏழனுள் வாகைத்திணை முற்கூறிய அகத்திணை ஏழனுட் பாலைத்திணைக்குப் புறனும். அது கேடில்லாத கோட்பாட்டினையுடைய தத்தமக்குள்ள இயல்பை இரு வேறுபட மிகுதிப்படுத்தல். (எ-று.)

புறத்திணை பலவற்றுள் 'வாகை தானே பாலையது புறனே' என இதனைப் பிரித்தோதினர், புணர்ச்சியினீங்கி இல்லறம் நிகழ்த்திப் புகழெய்துதற்குப் பிரியுமாறுபோலச் சுற்றத் தொடர்ச்சியினீங்கி அறப் போர்செய்து துறக்கம்பெறுங் கருத்தினாற் சேறலானும், அன்றியும் பாலை இயற்கை வகையானன்றிச் செயற்கை வகையால் நால்வகை நிலமும் பற்றி நிலம்பெறுமாறுபோல முற்கூறிய புறத்திணை நான்கும்பற்றி வாகைத்திணை நிகழ்தலானுமென்பது. எனவே, வாகைத்திணை பாலைத் திணைக்குப் புறனென்றல் ஆணைகூறலன்றாயிற்று. (14)

241. அலைகடற் றானை யரசட் டிறையோ
னிகல்புனை வாகை சூடலு மிகன்றோர்
வெண்கண்ணி யொடுகருங் கழல்செங் கச்சினிப்
புண்டவிர்ந் தாமெனப் புனைதரு மரவமு
மைவகை மரபி னரச வாகையு
மொய்கழ லான்பதி முரசுநிலை யுரைத்தலு
மன்னனை யுழவனெனு மறக்கள வழியு
மன்னவ னணங்கா ரடுகளம் வேட்டலும்
வென்ற வேந்தன் மீளியந் தேர்முன்
னின்றுபே யாட னிகழ்த்திய குரவையும்
பெய்கழல் வேந்தன் பிறங்கொலித் தேர்ப்பின்
மொய்வளை விறலியர் வயவரோ டாடலு
மறுவகைப் பட்ட பார்ப்பன வாகையு
மிருமூன்று மரபி னேனோர் வாகையும்
புகழொடு பெருமையு நோக்கி யாரையு
மிகழே லென்ற பொருந வாகையு
முக்கால நிகழ்வு முறையுளி யறியுந்
தக்கோ னிலைபுக லறிவன் வாகையு
நாலிரு வழக்கிற் றாபத வாகையுங்
கூதிர் வாடை யென்றிரு பாசறைக்
காதலி னொன்றிக் கண்ணிய நிலைமையுந்
தண்ணளி பெருகத் தரையகம் புரக்கு
மண்ணலியல் புரைத்த வரச முல்லையு
நண்புறு பொருட்டா நடுவுநிலை யரசற்குப்
பண்புறச் சொல்லும் பார்ப்பன முல்லையு
மெட்டுவகை நுதலிய வவைய முல்லையும்
பனியும் வெயிலுங் கூதிரு மயர்வுந்
துனியில் கொள்கையொடு நோன்மை யெய்தித்
*துணிவற் றிகழ்ந்த கணிவன் முல்லையு
மேதமி லாடவர்க் கன்றி யிகன்மறம்
பேதையர்க் கும்புகன் மூதின் முல்லையு
மருஞ்சமம் வழிவழி யாற்றியே றுண்ட
விருங்குடி மறம்புக லேறுண் முல்லையு
மில்லும் பதியு மியல்புங் கூறி
வல்லோனை மிகுத்த வல்லாண் முல்லையுந்

(பா - ம்) * தணிவற்றிகழ்ந்த

தொடுகட லுலகினைத் துளங்கா திறைதன்
கடனெனக் காத்த காவன் முல்லையுந்
தக்கன பிறபிற சாற்றுமக் கூற்றேடு
மிக்ககள மரசுகோள் பேராண் முல்லையும்
வெள்வாள் வேந்தன் வேண்டிய தீயவுங்
கொள்ளாது மறவன் கோதித்தமற முல்லையுங்
குடைபுகழ் முல்லையுங் கண்படை நிலையு
மடல்கெழு மறவ ரவிப்பலி கொடுத்தலும்
வான்றோய் புகழோடு வயங்குமோரு நிலைமைச்
சான்றோர் நெறிபுகல் சால்பு முல்லையு
மலிவய லுழவனை வறுமைதீர் பெருவளம்
பொலிகெனக் கிணைவன் புகழ்ந்த களவழியு
மெய்யில் வையகத்து விழவினை யறுத்துப்
பொய்யி றத்துவப் பொருளொடு புகறலுங்
கவ்வைநோ யாக்கை கழியுமுன் னுலகத்
தவ்விய ஞேக்கி யருளோடு நீங்கலு
மென்றவெண் ணுன்கு மியம்பிய வாகைக்
கொன்றிய துறையென வுணர்ந்தனர் கொளலே.

இது முற்கூறிய வாகைத்திணை இத்துணைத் துறையுடைத்தென்கின்றது.

(இ-ள்.) அலைகடற்றனை அரசட்டிறையோன் இகல்புனைவாகை சூடல் முதலாய் ஈருகிய கவ்வைநோயாக்கை கழியுமுன்னுலகத்து அவ்வியஞேக்கி அருளொடுநீங்கலுமென்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் மேற்கூறிய வாகைத்திணைக்குப் பொருந்தியதுறையென அறிந்துகொள்க. (எ-று.)

அலைகடற்றனை அரசட்டிறையோன் இகல்புனைவாகைசூடற்குச் செய்யுள் :—

சூடினான் வாகைச் சுடர்த்தெரியல் சூடுதலும்
பாடினர் வெல்புகழ் பல்புலவர்—கூடா
ருடல்வே லழுவத் தொளிதிகழும் பைம்பூ
ணடல்வேந்த னட்டார்த் தரசு. —[பு. வெ. வா. 1.]

என்னும். இசன்றோர் வெண்கண்ணியொடு கருங்கழல் செங்கச்சு இனிப் புண்டகூர்ந்தாமெனப் புனைதரும் அரவத்திற்குச் செய்யுள் :—

அணை வமரு ளயில்போழ் விழுப்புண்
ணிணைய வினிக்கவலை யில்லைப்—புனைக

வழலோ டிமைக்கு மணங்குடைவாண் மைந்தர்
கழலோடு பூங்கண்ணி கச்சு. [பு. வெ. வா. 2]

எனவரும். ஐவகைமரபின் அரசவாகைக்குச் செய்யுள் :—

காவ லமைந்தான் கடலுலகங் காவலா
லோவ லறியா துயிர்க்குவகை—மேவருஞ்சீ
ரைந்தொழி லான்மறை முத்தீ யிருபிறப்பு
வெந்திறற் றண்ணளியெம் வேந்து. [பு. வெ. வா. 3]

எனவரும். ஐந்தொழில்-ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல். மொய்கழலான்பதி முரசுநிலையுரைத்தற்குச் செய்யுள்:-

மதியேர் நெடுங்குடை மன்னர் பணிந்து
புதிய புகழ்மாலை வேய—நிதியம்
வழங்குந் தடக்கையான் வான்றோய் நகருண்
முழங்கு மதிரு முரசு. [பு. வெ. வா. 4]

எனவரும். மன்னனையுழவனெனும் மறக்களவழிக்குச் செய்யுள் :—

அஞ்சவருந் தானை யமரென்னு நீள்வயலுள்
வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்குஞ்—செஞ்சுடர்வேற்
பைங்கட் பணைத்தாட் பகடுழவ னல்கலா
னெங்கட் கடையா விடர். [பு. வெ. வா. 5]

எனவரும். அன்னவன் அணங்கார் அடுகளம் வேட்டற்குச் செய்யுள்: —

பிடித்தாடி யன்ன பிறழ்பற்பே யாரக்
கொடித்தானை மன்னன் கொடுத்தான்—முடித்தலைத்
தோளொடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக
மூளையஞ் சோற்றை முகந்து. [பு. வெ. வா. 6]

எனவரும். பிடித்தாடி-பலு. வென்றவேந்தன் மீளியந்தேர்முன் நின்று பேயாடல் நிகழ்த்தியகுரவைக்குச் செய்யுள் :—

உலவா வளஞ்செய்தா னூழிவாழ் கென்று
புலவாய புன்றலைப்பே யாடுங்—கலவா
வரசதிர நூறி யடுகளம் வேட்டான்
முரசதிர வென்றதேர் முன். [பு. வெ. வா. 7]

எனவரும். பெய்கழல்வேந்தன் பிறங்கொலித்தேர்ப்பின் மொய்வளைவிறலியர் வயவரோடாடற்குச் செய்யுள் :—

வஞ்சமில் கோலானை வாழ்த்தி வயவரு
மஞ்சொல் விறலியரு மாடுபவே—வெஞ்சமத்துக்
குன்றே மழகளிறுங் கூந்தற் பிடியும்போற்
பின்றேர்க் குரவை பிணைந்து. [பு. வெ. வா. 8]

எனவரும். அறுவகைப்பட்ட பார்ப்பனவாகைக்குச் செய்யுள் :—

ஓதங் கரைதவழ்நீர் வேலி யுலகினில்
வேதங் கரைகண்டான் வீற்றிருக்கு—மேதஞ்
சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த
விடுசுடர் வேள்வி யகத்து. [பு. வெ. வா. 9]

எனவரும். அறுவகையாவன. ஓதல்-ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், என இவை. இருமூன்றுமரபின் ஏனோர்வாகை இரண்டனுள் வாணிகவாகைக்குச் செய்யுள் :—

உழுது பயன்கொண் டொலிநிரை யோம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து—முழுதுணர
வோதி யழல்வழிபட் டோம்பாத வீகையா
னாதி வணிகர்க் கரசு. [பு. வெ. வா. 10]

எனவரும். வேளாண்வாகைக்குச் செய்யுள்:—

மூவரு நெஞ்சமர முற்றி யவரவ
ரேவ லெதிர்கொண்டு மீண்டுரையா—னேவல்
வழுவான் வழிநின்று வண்டார் வயனு
ளுழுவா னுலகுக் குயிர். [பு. வெ. வா. 11]

எனவரும். புகழொடு பெருமைநோக்கி யாரையுமிகழேலென்ற பொருநவாகைக்குச் செய்யுள் :—

வெள்ளம் போற்றானை வியந்து விரவாரை
யெள்ளி யுணர்த லியல்பன்று—தெள்ளியா
ராறுமே லாறியபி னன்றித்தங் கைக்கொள்ளார்
நீறுமேற் பூத்த நெருப்பு. [பு. வெ. வா. 12]

எனவரும். முக்காலநிகழ்வு முறையுளியறியுந் தக்கோணிலைபுகல் அறிவன் வாகைக்குச் செய்யுள் :—

இம்மூ வுலகி னிருள்கடியு மாய்கதிர்போ
லம்மூன்று முற்ற வறிதலாற்—றம்மி
னுறழா மயங்கி யுறழினு மென்றும்
பிறழா பெரியார்வாய்ச் சொல். [பு. வெ. வா. 13]

எனவரும். உறழாமயங்கியுறழ்தலாவது, பால்புளித்தலும் பகலிருளலும் நால்வேதநெறிதவறுதலும் முதலியவாம். நாலிருவழக்கிற் றாபத வாகைக்குச் செய்யுள் :—

நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி—யூரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி. [பு. வெ. வா. 14]

எனவரும். கூதிர்வாடையென்றிருபாசறைக் காதலின்ஒன்றிக்கண்ணிய நிலைமை இரண்டனுட் கூதிர்ப்பாசறைக்குச் செய்யுள் :—

கவலை மறுகிற் கடுங்கண் மறவ
ருவலைசெய் கூரை யொடுங்கத்—துவலைசெய்
கூதிர் நலியவு முள்ளான் கொடித்தேரான்
மூதின் மடவாண் முயக்கு. [பு. வெ. வா. 15

எனவரும். உவலை-தழை. வாடைப்பாசறைக்குச் செய்யுள் :—

வாடை நலிய வடிக்கணா டோணசைஇ
யோடை மழகளிற்ற னுள்ளான்கொல்—கோடன்
முகையோ டலம்வர முற்றெரிபோற் பொங்கிப்
பகையொடு பாசறையு ளான். [பு. வெ. வா. 16]

எனவரும். தண்ணளிபெருகத் தரையகம்புரக்கும் அண்ணலியல்புரைத்த அரசமுல்லைக்குச் செய்யுள் :—

செயிர்க்க ணிகழாது செங்கோ லுயரி
மயிர்க்கண் முரச முழங்க—வுயிர்க்கெல்லா
நாவ லகலிடத்து ஞாயி றனையனாய்க்
காவலன் சேறல் கடன். [பு. வெ. வா. 17]

எனவரும். முயற்சியாற் பெற்ற வென்றியை வாகையெனவும் இயல்பாகப் பெற்ற வென்றியை முல்லையெனவும் கூறுபவாகலின், இவரும் வாகையென்றும் முல்லையென்றுங் கூறினர். நண்புறுபொருட்டாய் நடுவுநிலையரசற்குப் பண்புறச் சொல்லும் பார்ப்பனமுல்லைக்குச் செய்யுள் :—

ஒல்லெனீர் ஞாலத் துணர்வோ விழுமிதே
நல்லிசை முச்செந்தீ நான்மறையோன்—செல்லலும்
வென்றன்றி மீளா விறல்வேந்தர் வெம்பகை
யென்றன்றி மீண்ட திலர். [பு. வெ. வா .18]

எனவரும். எட்டுவகைநுதலிய அவையமுல்லைக்குச் செய்யுள் :—

தொடைவிடை யூழாத் தொடைவிடை துன்னித்
தொடைவிடை யூழிவை தோலாத்—தொடைவேட்
டழிபட லாற்ற லறிமுறையேன் றெட்டின்
வழிபடர்தல் வல்ல தவை. —[பு. வெ. வா. 19.]

எனவரும். எட்டாவன:—

குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி யாக்கங்—கெடுக்கு
மழுக்கா றவாவின்மை யவ்விரண்டோ டெட்டு
மிழுக்கா வவையின்க ணெட்டு.

என்பன.

பனியும் வெயிலுங் கூதிரும் அயர்வுந் துனியில் கொள்கையொடு நோன்மையெய்தித் துணிவற்றிகழ்ந்த கணிவன் முல்லைக்குச்செய்யுள்:—

புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத்—திரிவின்றி
விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாங்
கண்ணி யுரைப்பான் கணி. —[பு. வெ. தும். 20.]

எனவரும். ஏதமிலாடவர்க் கன்றியிகன்மறம் பேதையர்க்கும்புகன் மூதின் முல்லைக்குச் செய்யுள் :—

வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து
வெந்திற லெஃகி மிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு. —[பு. வெ. வா. 21.]

எனவரும். அருஞ்சமம்வழிவழி ஆற்றியேறுண்ட இருங்குடிமறம்புகல் ஏறாண்முல்லைக்குச் செய்யுள் :—

கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
யெய்போற் கிடந்தானென் னேறு. —[பு. வெ. வா. 22.]

எனவரும். இல்லும்பதியும் இயல்புங்கூறி வல்லோனை மிகுத்த வல்லாண் முல்லைக்குச் செய்யுள் :—

வின்முன் கணைதெரியும் வேட்டைச் சிறுசிறார்
முன்முன் முயலுகளு முன்றிற்றே—மன்முன்
வரைமார்பின் வேன்மூழ்க வாளமூவந் தாங்கி
யுரைமாலை சூடினா னூர். —[பு. வெ. வா. 23.]

எனவரும். தொடுகெடலுலகினைத் துளங்கா திறைதன்கடனெனக்காத்த காவன்முல்லைக்குச் செய்யுள் :—

பெரும்பூட் சிறுதகைப் பெய்ம்மலர்ப் பைந்தார்க்
கருங்கழல் வெண்குடையான் காவல்—விரும்பா
னொருநாண் மடியி னுலகின்மே லில்லா
திருநால் வகையா ரியல்பு. —[பு. வெ. வா. 24.]

எனவரும். இருநால்வகை மேற்கூறிய குடிப்பிறப்பு முதலியன.

தக்கனபிறப்ிறர் சாற்றுமக்கூற்றுக்குச் செய்யுள் :—

ஊறின் றுவகையுள் வைக வுயிரோம்பி
யாறிலொன் றானா தளித்துண்டு—மாறின்றி

வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலுந்
தான்காவல் கொண்ட டரும். —[பு. வெ. வா. 25.]

எனவரும். மிக்ககளமரசுகொள் பேராண்முல்லைக்குச் செய்யுள் :—

ஏந்துவாட் டானை யிரிய வுறைகழித்துப்
போந்துவாண் மின்னும் பொருசமத்து—வேந்த
ரிருங்களி யானை யினமிரிந் தோடக்
கருங்கழலான் கொண்டான் களம். —[பு. வெ. வா. 26.]

எனவரும். வெள்வாள் வேந்தன் வேண்டியதீயவுங் கொள்ளாமறவன் கொதித்த மறமுல்லைக்குச் செய்யுள் :—

வின்னவி றோளானும் வேண்டிய கொள்கென்னுங்
கன்னவி றிண்டோட் கழலானு—மன்னன்று
ஞென்று னழல்விழியா வொள்வாள் வலனேந்தி
நின்றா னெடிய மொழிந்து. —[பு. வெ. வா. 27]

எனவரும். குடைபுகழ் முல்லைக்குச் செய்யுள் :—

வேயுள் விசும்பு விளங்கு கதிர்வட்டந்
தாய புகழான் றனிக்குடைக்குத்—தோய
மெதிர்வழங்கு கொண்மூ விடைபோழ்ந்த சுற்றுக்
கதிர்வழங்கு மாமலை காம்பு. —[பு. வெ. வா. 28.]

எனவரும். சுற்று-சுற்றுத்தாமம். கண்படை நிலைக்குச் செய்யுள் :—

கொங்கலர்தார் மன்னருங் கூட்டளப்பக் கூற்றணங்கும்
வெங்கதிர்வேற் றண்டெரியல் வேந்தர்க்குப்—பொங்கு
புனலாடை யாளும் புனைகுடைக்கீழ் வைகக்
கனலா துயிலேற்ற கண். —[பு. வெ. வா. 29]

எனவரும். அடல்கெழுமறவர் அவிப்பலி கொடுத்தற்குச் செய்யுள் :—

சிறந்த திதுவென்னச் செஞ்சோறு வாய்ப்ப
மறந்தரு வாளம ரென்னும்—பிறங்கழலு
ளாருயி ரென்னு மவிவேட்டா ராங்கவைதால்
வீரியரெய் தற்பால வீடு. —[பு. வெ. வா. 30.]

எனவரும். வான்றோய் புகழொடு வயங்குமொருநிலைமைச் சான்றோர்நெறி புகல் சால்பு முல்லைக்குச் செய்யுள் :—

உறையார் விசும்பி னுவாமதி போல
நிறையா நிலவுத லன்றிக்—குறையாத
வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேறாமோ
சங்கப்போல்* வான்மையார் சால்பு. —[பு. வெ. வா. 31.]

(பா - ம்) * வாய்மையார்

எனவரும். மலிவயலுழவனை வறுமைதீர்பெருவளம் பொலிகெனக் கிணைவன் புகழ்ந்த களவழிக்குச் செய்யுள் :—

பகடுவாழ் கென்று பனிவயலு ளாமை
யகடுபோ லங்கட் டடாரித்—துகடுடைத்துக்
குன்றுபோற் போர்விற் குரிசில் வளம்பாட
வின்றுபோ மெங்கட் கிடர். —[பு. வெ. வா. 32.]

எனவரும். மெய்யில் வையகத்து விழைவினையறுத்துப் பொய்யில்தத்துவப் பொருளொடுபுகறற்குச் செய்யுள் :—

ஆமினி மூப்பு மகன்ற திளமையுந்
தாமினி நோயுந் தலைவரும்—யாமினி
மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
வையைந்து மாய்வ தறிவு. —[பு வெ வா. 33.]

எனவரும். ஐயைந்தும் ஆய்தல்—புருடன்முதல் நிலன் ஈறாகக் கிடந்த இருபத்தைந்து தத்துவங்களை ஆராய்தல். அது, மூலப்பகுதி ஒன்றிற் தோன்றியதன்மையிற் பகுதியேயாமெனவும், அதன்கட் தோன்றுவன அதனைநோக்க விகுதியாமெனவும், தங்கட் தோன்றுவனவற்றைநோக்கப் பகுதியாமெனவும், அவற்றின்கட் தோன்றிய மனமும் ஞானேந்திரியங்களைந்துங் கன்மேந்திரியங்களைந்தும் பூதங்களைந்துந் தங்கட் தோன்றுவன இன்மையின் விகுதியேயாமெனவும், புருடன் ஒன்றிற் தோன்றாமையானுந் தன்கட் தோன்றுவன இன்மையானும் அவை இரண்டு மாகானெனவுந் தெரிதல். கவ்வைநோயாக்கை கழியுமுன்னுலகத்து அவ்வியனேக்கி அருளொடு நீங்கற்குச் செய்யுள் :—

கயக்கிய நோயவாய்க் கையிகந்து நம்மை
யியக்கிய யாக்கை யிறுமுன்—மயக்கிய
பட்படா வைகும் பயன்ஞால நீள்வலை
யுட்படாம் போத னுறும். —[பு. வெ. வா. 34]

எனவரும். (15)

242. காஞ்சிதானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.

இது காஞ்சித்திணை பெருந்திணைக்குப் புறனென்பதூஉம் அதன் பொருளுங் கூறுகின்றது.

(இ-ள்) இது மேற்கூறிய புறத்திணை எழனுட் காஞ்சித்திணை முற் கூறிய அகத்திணை எழனுட் பெருந்திணைக்குப் புறனும்; அஃது ஒன்றற் கொன்று உரிமையாதல் அரிய சிறப்பினுல் யாக்கை, செல்வம், இளமை முதலிய பல நெறியானும் நிலையாத உலகியற்கையைப் பொருந்திய நெறியினையுடைத்து. (எ-று.)

புறத்திணை பலவற்றுட் 'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே' என இதனைப் பிரித்தோதினர்; எண்வகைமணத்தினும் நான்குமணம் பெற்ற பெருந்திணைபோல இக்காஞ்சியும் அறமுதலாகிய மும்முதற்பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய ஆறனுள்ளும் நிலையின்மை மூன்றிற்கும் உரித்தாய் எல்லாத் திணைகட்கும் ஒத்தமரபிற்றாகலானும், "பின்னர் நான்கும் பெருந்திணை பெறும்" என்ற நான்குஞ் சான்றோர் இகழ்ந்தாற்போல அறமுதலியவற்றது நிலையின்மை உணர்ந்து அவற்றை அவர் இகழ்தலானும், ஏறியமடற்றிறம் முதலிய நான்கும் பொருந்தாக்காமமாயினவாறுபோல உலகியனோக்கி நிலையாமை நற்பொருளன்றாகலானும், உரிப்பொருள் இடமயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணைபோல அறம்பொருளின்பம்பற்றியன்றி வேறு நிலையாமையென்பதோர் பொருளின்றாதலொப்புமையானுமென்பது. எனவே, காஞ்சித்திணை பெருந்திணைக்குப் புறனென்றல் ஆணைகூறலன்றாயிற்று. (16)

243. வருபடை நோனன் மடுத்தெதி ரூன்றக்
கருதிவே லுழவன் காஞ்சி சூடுதலு
மேல்வரு படைவர மிகவு மாற்றா
வேல்வ லாடவர் விறன்மிகுத் தெதிர்தலும்
வந்துபுலத் திறுத்தோர் வரம்பு கடவாமைத்
தந்தங் கடவை தழீஇய தழிஞ்சியும்
வடிசுடர் வேலோன் வாட்குடி யவர்க்குப்
படுசுட ரிமைக்கும் படைபல வழங்கலும்
வழங்கலு மறவரவ் வரிசை யேத்தித்
தழங்கொலி முரசிற் சாற்றிய பக்கமுந்
தாங்குவிறன் மறவர் தத்தந் தோள்வலி
வீங்குபடை நாப்பண் விளைத்தபெருங் காஞ்சியு
மருமுனை யிறுத்தோ னறைகூ வியபின்
செருமுனைச் செல்கெனச் செப்புவாள் செலவு
முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்
கோதியழல் வேலோன் குடைமுனைச் சேறலு
மின்னது பிழைப்பி னிதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினக் காஞ்சியு
நேர்பொரு மள்ளர் நெடுங்குடை வேந்தன்
போரெதிர் பூக்கோ ணிலையு மதாஅன்று
தூசி தாங்கிவீழ் சுழல்விழி மறவ
னேசில்வான் றலைச்சிறப் பியம்புதலைக் காஞ்சியு

மந்தமில் பெருஞ்சிறப் பமர்வீ ழருந்தலை
தந்தவர்க் கீந்த தலைமா ராயமு
முலையு முகனுஞ் சேர்த்திக் கொண்டோன்
றலையொடு முடிந்த நிலையொடு தொகைஇத்
திறங்கொள்வேற் றரசருஞ் சென்னி துளக்க
மறங்க டாவிய வயங்குமறக் காஞ்சியும்
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியு மத்துறைக் கூற்று
மேமச் சுற்ற மின்றிப் புண்ணோற்
பேயோம் படுத்த பேயோம் புதலு
மாஅய களத்தி லவிந்தவா ளுழவர்க்குப்
பேஎ யஞ்சிய பேஎய்க் காஞ்சியும்
வியன்மனை விடலை விழுப்புண் காப்பவுந்
துயன்முலைப் பேஎய்மக டொட்ட காஞ்சியு
மின்னகை மனைவி பேஎய் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியு
மின்னனென் றிரங்கிய மன்னைக் காஞ்சியு
மன்னன்மற வர்க்குமட் டீந்தகட் காஞ்சியுங்
காதற் கணவனொடு கனையெரி மூழ்கு
மாதர் மலிபுரைத்த வாஞ்சிக் காஞ்சியு
மன்னுயிர் நீத்த வேலின மனையோ
ளின்னுயிர் நீத்த வத்துறைப் பகுதியுங்
கறுத்தவா ளுழவனிக் கன்னியைத் தருகென
மறுத்துரை யாடிய மகட்பாற் காஞ்சியு
மன்னவ னிகன்மற மடங்கவே லிறைவன்
முன்னிருந் தருமனை முரித்தமுன் னிருப்பு
மென்றுமுறை நவின்ற வெழுமூன்று நான்குஞ்
சென்றெதிர் காஞ்சித் திணையது விரியே.

இது முற்கூறிய காஞ்சித்திணை இததுணைத்துறையுடைத்தென்கின்றது.

(இ-ள்) *வருபடை நோனன் மடுத்தெதிரூன்றக் கருதிவேலுழவன் காஞ்சிசூடுதல் முதல் ஈருகிய மன்னவனிகன்மறம் மடங்க வேலிறைவன் முன்னிருந்தருமனை முரித்தமுன்னிருப்புமென முறையே சொல்லப் பட்ட இருபத்தைந்து துறையுஞ் சென்றெதிரூன்றலாகிய காஞ்சித் திணையினது விரியாம். (எ-று.)*

வருபடை நோனுன் மடுத்தெதிருன்றக் கருதிவேலுழவன் காஞ்சி சூடுதற்குச் செய்யுள் :—

அருவரை பாய்ந்திறுது மென்பார்பண் டின்றிப்
பெருவரைச் சீறூர் கருதிச்—செருவெய்யோன்
காஞ்சி மலையக் கடைக்கணித்து நிற்பதோ
தோஞ்செய் மறவர் தொழில். —[பு. வெ. காஞ். 1]

எனவரும் மேல்வருபடைவர மிகவுமாற்ரு வேல்வலாடவர் விறன்மிகுத் தெதிர்தற்குச் செய்யுள் :—

மன்மேல் வருமென நோக்கான் மலர்மார்பில்
வென்வேன் முகந்தபுண் வெய்துயிர்ப்பத்—தன்வேல்
பிடிக்கலு மாற்ருப் பெருந்தகை யேவத்
துடிக்கண் புலையன் றெுடும். —[பு. வெ. காஞ். 2]

எனவரும். வென்—வெற்றி. வந்து புலத்திறுத்தோர் வரம்பு கடவாமை தந்தங்கடவை தழீஇயதழிஞ்சிக்குச் செய்யுள்.

குலாவுஞ் சிலையார் குறும்புகொள வெலீகி
யுலாவு முழப்பொழிக வேந்தன்—கலாவு
மினவேங்கை யன்ன விகல்வெய்யோர் காவல்
புனவேய் நரலும் புழை. —[பு வெ. காஞ். 3]

எனவரும். வடிசுடர்வேலோன் வாட்குடியவர்க்குப் படிசுடரிமைக்கும் படைபலவழங்கற்குச் செய்யுள் :—

ஐயங் களைந்திட் டடல்வெங்கூற் ருலிப்ப
வையிலை யெஃக மவைபலவு—மொய்யிடை
யாட்கடி வெல்களிற் றண்ணல் கொடுத்தளித்தான்
வாட்குடி வன்க ணவர்க்கு. —[பு. வெ. காஞ். 4]

எனவரும். வழங்கலுமறவரவ் வரிசையேத்தித் தழங்கொலிமுரசிற் சாற்றியபக்கத்திற்குச் செய்யுள் :—

துன்னருந் துப்பிற் றொடுகழலார் சூழ்ந்திருப்பத்
தன்னம ரொள்வாளென் கைதந்தான்—மன்னற்கு
மண்ணகமோ வைகின் று மாலை நெடுங்குடைக்கீழ்
விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து. —[பு. வெ. காஞ். 5.]

எனவரும். தாங்குவிறன்மறவர் தத்தந்தோள்வலி வீங்குபடை நாப்பண் விளைத்தபெருங்காஞ்சிக்குச் செய்யுள் :—

வில்லார் குறும்பிடை வேறுவே ருர்த்தெழுந்த
கல்லா மறவர் கணைமாரி—யொல்லா
வெருவி மறவேந்தர் வெல்களி றெல்லா
மிருவி வரைபோன்ற வின்று. —[பு. வெ. காஞ். 6.]

எனவரும். இருவி-தினைத்தாள். அருமுனையிறுத்தோன் அறைகூவியபின் செருமுனைச்செல்கெனச் செப்புவாள் செலவுக்குச் செய்யுள் :—

உணங்கு புலவறு வொன்னார் குரம்பை
நுணங்கரில் வெம்முனை நோக்கி—யணங்கிய
குந்தமலியும் புரவியான் கூடாதார்
வந்தபின் செல்கென்றான் வாள். —[பு. வெ. காஞ். 7.]

எனவரும். முதுகுடிமறவர் முன்னுறச்சூழக் கொதியழல்வேலோன் குடைமுனைச் சேறற்குச் செய்யுள் :—

தெம்முனை தேயத் திறல்விலங்கு தேர்த்தானை
வெம்முனை வெற்றி விறல்வெய்யோன்—றம்முனை
நாட்டிப் பொறிசெறித்து நண்ணார்மேற் செல்கென்று
கூட்டிநாட் கொண்டான் குடை. —[பு. வெ. காஞ். 8.]

எனவரும். இன்னதுபிழைப்பின் இதுவாகியரெனத் துன்னருஞ்சிறப்பின் வஞ்சினக்காஞ்சிக்குச் செய்யுள் :—

இன்று பகலோ னிறவாமு னொன்னாரை
வென்று களங்கொள்ளா வேனுயர்ப்பி—னென்று
மரணவியப் பாயு மடையார்மு னிற்பேன்
முரணவிய முன்முன் மொழிந்து —[பு. வெ. காஞ். 9.]

எனவரும். நேர்பொருமள்ளர் நெடுங்குடை வேந்தன் போரெதிர்பூக் கோள் நிலைக்குச் செய்யுள் :—

பருதிசெல் வானம் பரந்துருகி யன்ன
குருதியா றுவதுகொல் குன்றார்—கருதி
மறத்திறத்தின் மாறு மறவருங் கொண்டார்
புறத்திறுத்த வேந்திரியப் பூ. —[பு. வெ. காஞ். 10.]

எனவரும். தூசுதாங்கிவீழ் சுழல்விழிமறவன் எசில்வான்றலைச்சிறப்பு இயம்பு தலைக்காஞ்சிக்குச் செய்யுள் :—

விட்டிடிலென் வேந்தன் விலையிடினெ னிவ்வுலகி
னிட்டுரையி னெய்துவ வெய்திற்று—லொட்டாதார்
போர்தாங்கி மின்னும் புலவா ளுறைகழியாத்
தார்தாங்கி வீழ்ந்தான் றலை. —[பு. வெ. காஞ். 11.]

எனவரும். அந்தமில் பெருஞ்சிறப் பமர்வீழருந்தலை தந்தவர்க்கீந்த தலை மாராயத்துக்குச் செய்யுள் :—

உவன்றலை யென்னு முறழ்வின்றி யொன்று
ரிவன்றலையென் றேத்த வியனு—மவன்றலை
தந்தார்க்கு நல்கல் வியப்போ கிளந்தேத்தி
வுந்தார்க் குவந்தீயும் வாழ்வு. —[பு. வெ. காஞ். 12.]

எனவரும். மூலையுமுகனுஞ் சேர்த்திக்கொண்டோன் தலையொடுமுடிந்த நிலைக்குச் செய்யுள் :—

கொலையானுக் கூற்றங் கொடிதே கொழுநன்
றலையானை யலாள் கண்டே—முலையான்
முயங்கினள் வாண்முகமுஞ் சேர்த்தின ளாங்கே
யுயங்கின ளோங்கிற் றுயிர். —[பு. வெ. காஞ். 13.]

எனவரும். திறங்கொள்வேற்றரசருஞ் சென்னிதுளக்க மறங்காடவிய வயங்கு மறக்காஞ்சிக்குச் செய்யுள் :—

கருந்தலையும் வெண்ணிணமுஞ் செந்தடியு மீராப்
பருந்தோ டெருவை படர—வருந்திறல்
வேறாய மன்னர் வியப்பக் கடாயினான்
மாறா மறவன் மறம். —[பு. வெ. காஞ். 14.]

எனவரும். பண்புறவரூஉம் பகுதிநோக்கிப் புண்கிழித்து முடியுமத்துறைக் கூற்றுக்குச் செய்யுள் :—

நகையமர் ராய நடுங்க நடுங்கான்
றொகையமர் ரோட்டிய துப்பிற்—பகைவர்மு
னுங்கிச் சினவுத லொன்னா னுதிவேலாற்
பொங்கிப் பரிந்திட்டான் புண். —[பு. வெ. காஞ். 15.]

எனவரும். ஏமச்சுற்றமின்றிப் புண்ணோற்பே யோம்படுத்த பேயோம்புதற் குச்செய்யுள் :—

ஆயு மடுதிறலார்க் கன்பிலா ரில்போலுந்
தோயுங் கதழ்குருதி தோள்புடைப்பப்—பேயுங்
களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தா
னுளம்புகல வோம்ப லுறும். —[பு. வெ. காஞ். 16.]

எனவரும். ஆஅயகளத்தில் அவிந்த வாளுழவர்க்குப் பேஎயஞ்சிய பேஎய்க் காஞ்சிக்குச் செய்யுள் :—

கொட்கு நிமிருங் குறுகுங் குடர்சூடிப்
பெட்ப நகும்பெயரும் பேய்மக—ளுட்கப்
புனலங் குருதிப் புலால்வாய்க் கிடந்து
கனல விழிப்பவற் கண்டு. —[பு. வெ. காஞ். 17]

எனவரும். வியன்மனைவிடலை விழுப்புண்காப்பவுந் துயன்முலைப்பேஎய் மகள் தொட்டகாஞ்சிக்குச் செய்யுள்:—

கொன்றுருத்த கூர்வே லவற்குறுகிக் கூரிருள்வாய்
நின்றுருத்து நோக்கி நெருப்புமிழாச்—சென்றெருத்தி
யொட்டார் படையிடந்த வாளுப்பு ணேந்தகலந்
தொட்டாள் பெருகத் துயில். —[பு. வெ. காஞ். 18.]

எனவரும். இன்னகைமனைவி பேஎய்புண்ணோற்றுன்னுதல்கடிந்த தொடாக்காஞ்சிக்குச் செய்யுள்:—

ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர்தூய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி—மொய்யிணர்ப்
பூப்பெய் தெரிய னெடுந்தகைபுண் யாங்காப்பப்
பேய்ப்பெண் பெயரும் வரும். —[பு. வெ. காஞ். 19.]

எனவரும். இன்னனென்றிரங்கிய மன்னைக்காஞ்சிக்குச் செய்யுள்—

போர்க்குப் புணைமன் புரையோர்க்குத் தானுவம
னூர்க்கு முலகிற்கு மோருயிர்மன்—யார்க்கு
மறந்திறந்த வாயி லடைத்ததா லண்ண
னிறந்திறந்த நீளிலை வேல். —[பு. வெ. காஞ். 20.]

எனவரும். மன்னன் மறவர்க்கு மட்டீந்தகட்காஞ்சிக்குச் செய்யுள்—

ஒன்ற முனையோர்க் கொழிக வினித்துயின்
மன்னன் மறவர் மகிழ்தூங்கா—முன்னே
படலைக் குரம்பைப் பழங்கண் முதியாள்
விடலைக்கு வெங்கள் விடும். —[பு. வெ. காஞ். 21.]

எனவரும். காதற்கணவனொடு கனையெரிமூழ்கும் மாதர்மலிபுரைத்த ஆஞ்சிக்காஞ்சிக்குச் செய்யுள—

தாங்கிய கேளொடு தானு மெரிபுகப்
பூங்குழை யாயம் புலர்கென்னு—நீங்கா
விலாழிப் பரித்தானை வெந்திறலார் சீறூர்ப்
புலாழித் தலைக்கொண்ட புண். —[பு. வெ. காஞ். 22.]

எனவரும். மன்னுயிர்நீத்த வேலின்மனையோள் இன்னுயிர்நீத்த அத் துறைப் பகுதிக்குச் செய்யுள்—

கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோ—னவ்வேலே
யம்பிற் பிறழுந் தடங்க ணவன்காதற்
கொம்பிற்கு மாயிற்றே கூற்று. —[பு. வெ. காஞ். 23.]

எனவரும். கறுத்தவாளுழவனிக் கன்னியைத்தருகென மறுத்துரையாடிய மகட்பாற்காஞ்சிக்குச் செய்யுள்—

அளிய கழல்வேந்த ரம்மா வரிவை
யெளியளென் றெள்ளி யுரைப்பிற்—குளியாவோ
பண்போற் கிளவிப் பல்வளையாள் வாண்முகத்த
கண்போற் பகழி கடிது. —[பு. வெ. காஞ். 24.]

எனவரும். மன்னவனிகல்மறம் மடங்கவேலிறைவன் முன்னிருந் தருமுனை முரித்தமுன் னிருப்புக்குச் செய்யுள்—

கடிகமழ் வேரிக் கடைதோறுஞ் செல்லக்
கொடிமலி கொல்களி றேவித்—துடி மகிழ
வார்த்திட் டமரு ளடையாரை யம்முனையிற்
பேர்த்திட்டான் பெய்கழலி னன். —[பு. வெ. காஞ். 25]

எனவரும். (17)

244. பாடாண் டிணையே கைக்கிளைப் புறனே
பாடுதற் குரிய வாடவன் றனது
பாடமை யொழுக்கம் பாடுமந் நெறித்தே.

இது பாடாண்டிணை கைக்கிளைத்திணைக்குப் புறனென்பதூஉம் அதன் பொருளுங் கூறுகின்றது.

(இ-ள்.) மேற்கூறிய புறத்திணை எழனுட் பாடாண்டிணை முற்கூறிய அகத்திணை எழனுட் கைக்கிளைத்திணைக்குப் புறனும்; அது தான் பாடுதற்கு உரிய ஆண்மகனது பெருமைபொருந்திய ஒழுக்கத்தைப் பாடுகின்ற அம்முறையினையுடைத்து. (எ-று.)

புறத்திணை பலவற்றுட் 'பாடாண் டிணையே கைக்கிளைப் புறனே' என இதனைப் பிரித்தோதினார், ஒருதலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட ஒரு புலவன் வீடுபேறு முதலிய பரிசில்வேண்டலின் அவை தம்மின்வேறாகிய ஒருதலைக்காமமாகிய கைக்கிளையோ டொத்தலா னென்பது. (18)

245. ஒளியு மாற்றலு மோம்பா வீகையு
மளியு மென்றிவை யாய்ந்தினி துரைத்தலுஞ்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானுங்
காவல் கண்ணிய கழலோன் கைதொழு
மூவரி லொருவனை முறையுளி வாழ்த்தலு
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையு
மொருவனை யவனொடு மொழிந்த வானவரொடும்
பொருவினன் புகழ்ந்த மற்றதன் பகுதியு
மண்ணகங் காவன் மன்னவன் முன்ன
ரெண்ணிய பரிசி லிதுவென வுரைத்தலு
மின்னோ ரின்னவை கொடுத்தனர் நீயு
மன்னர்போ லருள்கென வியன்மொழி வாழ்த்து

மயலறு சீர்த்தி மான்றேர் மன்ன
னியல்பினை மொழியு மத்துறைப் பகுதியு
நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்குங்
கடுந்தேர் மன்னவன் கண்படை நிலையு
மயில்வேன் மன்னனை யருளிய வெழுகெனத்
துயிலிடை யெடுப்பிய துயிலெடை நிலையுங்
கங்குற் கனைதுயி லெழுந்தோன் முன்னர்
மங்கலங் கூறிய மங்கல நிலையு
மன்னிய சிறப்பின் மங்கல மரபிற்
றுன்னின னென்ற வத்துறைப் பகுதியுந்
துளக்கமி லரசன் வெற்றி காட்டும்
விளக்குநிலை விளம்பிய விளக்கு நிலையு
மடரவிர் பைம்பூ ணரசன் றன்னைச்
சுடரோடு பொரூஉ மத்துறைப் பகுதியு
முவகையோடு வேந்த ஞெலிமறை யவர்க்குக்
கபிலை யீந்த கபிலை நிலையு
மந்தமில் புகழா னமரரவி முகப்ப
வெந்தீ வேட்ட வேள்வி நிலையு
மண்மிசைக் கொண்மூ மழைவளந் தருமென
விண்மிசைத் தோற்றிய வெள்ளி நிலையுந்
தாட்டாழ் தடக்கைத் தாம மார்ப
னூட்டுவள னுரைத்த நாடு வாழ்த்தும்
வாழ்மனை புகீஇ வைகறை முழக்கிய
கேழ்கிளர் கிணைவன் கிளந்த கிணைநிலையுஞ்
செங்களத் தீட்டிய செல்வம்வெண் டுறையாழ்
மங்கலப் பாணர் மறுத்த களவழியுங்
கூற்றிருந் தாலுங் கொலைவேன் மன்னவன்
வீற்றினி திருந்த பெருமங் கலமு
நெடுமதி லெறிந்த நிரைதார் மன்னன்
குடுமி களைந்த புகழ்சாற்று நிலையு
மிகலடு தடந்தோ ளேறிவே லிறைவன்
மகளிரோடு மணந்த மணமங் கலமுங்
கதமிக் கெழுபடைக் காவல் வேந்தன்
புதல்வற் பயந்த பொலிவுமங் கலமும்
வாட்படைத் தானை மன்னவன் பிறந்த

நாட்சிறப் புரைத்த நாண்மங் கலமும்
விரைந்துகொடை பெற்றும் விடைபெரு திரவலன்
பரிந்துகடைக் கூட்டிய பரிசி னிலையும்
வண்புக ழுறைந்தோர்க்கு மன்னவ னுதவிப்
பண்புற விடுத்த பரிசில் விடையு
நிறைவினை முற்றிய நீள்கழ லோன்மனை
யறன்மலி புரைத்த வாள்வினை வேள்வியுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றெதிரத் தெரித்த வாற்றுப் படையு
மொழியுமெங் கடுஞ்சொன் முறையுளி நிற்பின்
வழிபயன் படூஉமெனும் வாயுறை வாழ்த்தும்
புரையோர் நாப்ப ணவிதல் கடனெனப்
பெரியோர் பேணிய செவியறி வுறுவு
நாற்பெருந் திசையு நன்கினிது கவித்த
கோக்குடை பழிச்சுங் குடைமங் கலமுங்
காய்வார் காயக் கண்கனல் வேந்தன்
வாய்வா ளேத்திய வாண்மங் கலமு
யெண்ணருஞ் சீர்த்தி யிறையோ னெய்தி
மண்ணுதல் புரிந்த மண்ணு மங்கலமு
மறிவோர் வேந்தனுக் காய்ந்திவை செய்கென
வுறுதி கூறிய வோம்படை நிலையும்
வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்து
மூவர் கொடியுளு மொன்றொடு பொரீஇ
மேவர வுரைத்த வியன்கொடி நிலையுஞ்
சோவினை யழித்த துளவணி மாயோன்
மேவரு விறலினை வியந்த கந்தழியு
மெரிசுடர் வேலற்க் கிளகிய வுள்ளத்
தரிமலர்க் கண்ணிய ராடிய வள்ளியும்
விரும்பிய தரூஉம் விண்ணவர் தம்முழை
யரும்பெறற் புலவரை யாற்றுப் படுத்தலும்
வீற்றதோன் றெய்துகம் வியனிலத் தியாமெனப்

போற்றரு மிறைக்கெதிர் புகழ்ந்தனர் பரவலும்
விடுசுட ரேறிக்கு மேனிவா னவனைப்
படுபயன் கருதிப் பழிச்சினர்ப் பணிதலு
மருமலர்க் கோதை மடவர றலைவனை
விரிமலர்த் தாமம் விழைந்த கைக்கிளையு
மல்லிடை விரும்பா தவன்முயக் கமர்ந்து
செல்பவள் செல்வகை தெரிந்தபெருந் திணையும்
வில்லேர் நுதலி விறலோன் மார்பும்
புல்லேம் யாமெனப் புலந்த புலவியும்
படிமிசை யியங்காப் பணிமொழி மகளிர்
கடவுளை நயந்த கடவுட் பக்கமும்
பூதலத் தரிவையர் பொருவில்வா னவரைக்
காதலித் துரைத்த கடவுட் பக்கமு
மிழையணி மங்கைய ரீறில காமங்
குழவி மருங்கிற் கூறிய பகுதியு /
நீங்காக் காதன் மைந்தரு மகளிரும்
பாங்குறக் கூடும் பதிநிலை யுரைத்தலு
மெனமுறை தொகுத்த வேழேழ் துறையும்
வினவிய பாடாண் டிணையது விரியே.

இது முற்கூறிய பாடாண்டிணை இத்துணைத்துறையுடைத்தென் கின்றது.

(இ-ள்) ஒளியும் ஆற்றலும் ஓம்பாவீகையும் அளியுமென்றிவை ஆய்ந்தினிதுரைத்தல் முதலாக நீங்காக்காதல் மைந்தரும் மகளிரும் பாங்குறக்கூடும் பதிநிலையுரைத்தல் ஈறாக முறையே தொகுத்த நாற்பத் தொன்பது துறையும் மேற்சொல்லப்பட்ட பாடாண்டிணையது விரியாம். (எ-று)

ஒளியும் ஆற்றலும் ஓம்பாவீகையும் அளியுமென்றிவை ஆய்ந் தினிதுரைத்தற்குச் செய்யுள்;

மன்னர் மடங்கன் மறையவர் சொன்மாலை
யன்ன நடையினார்க் காரமுதம்—துன்னும்
பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தா
ரெரிசினவேற் றானையெங் கோ. [பு. வெ. பா. 1]

எனவரும். சேய்வரல்வருத்தம்வீட வாயில்காவலர்க் குரைத்த கடை நிலைக்குச் செய்யுள்:—

நாட்டிய வாய்மொழி நாப்புலவர் நல்லிசை
யீட்டிய சொல்லா னிவனென்று—காட்டிய
காயலோங் கெஃகிமைக்குங் கண்ணார் கொடிமதில்
வாயிலோய் வாயி லிசை. [பு. வெ. பா.2]

எனவரும். காவல்கண்ணிய கழலோன் கைதொழும் மூவரிலொருவனை முறையுளிவாழ்த்தற்குச் செய்யுள்:—

வைய மகளை யடிப்படுத்தாய் வையகத்தா
ருய்ய வுருவம் வெளிப்படுத்தாய்—வெய்ய
வடுந்திற லாழி யரவணையா யென்று
நெடுந்தகை நின்னையே யாம். [பு. வெ. பா. 3]

எனவரும். மாயோன்மேய மன்பெருஞ்சிறப்பிற் றாவிழுப்புகழ்ப் பூவைநிலைக்குச் செய்யுள்:—

பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோ
யாவை விழுமிய யாமுணரேம்—மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான். [பு. வெ. பா. 4]

எனவரும். ஒருவனையவனொடும் ஒழிந்த வானவரொடும் பொருவினன் புகழ்ந்த மற்றதன்பகுதிக்குச் செய்யுள்:—

ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனுங்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனு
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனு
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தியொண் செய்யோ னும்மென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வ ருள்ளுங்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே யிகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலி
னாங்காங் கவரவ ரொத்தலின்
யாங்கு மரியவு முளவோ நினக்கே. [புறம். 56]

எனவரும்.

ஒன்றெனமுடித்தலான் இங்ஙனமன்றிக்,

குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த படியெமக்குக் காட்டாய்—மரம்பெறு
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மார்பிற் கிடந்த மறு. [தொல். பொருள். பக். 201]

எனவும்,

ஏற்றார்தி யானு மிகல்வெம்போர் வானவனு
மாற்றலு மாள்வினையு மொத்தொன்றி னொவ்வாரே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன் றிரண்டேயா
மாற்றல்சால் வானவன் கண். [முத்தொள்ளாயிரம்]

எனவும்,

இந்திர னென்னி லிரண்டேக ணேறூர்ந்த
வந்தரத்தா னென்னிற் பிறையில்லை—யந்திரத்திற்
கோழியா னென்னின் முகனொன்றே கோதையை
யாழியா னென்றுணரற் பாற்று. [தொல். பொருள். பக். 201]

எனவுஞ் சிறிது வேறுபட வருவனவெல்லாம் அதன்பாற் படுத்துக.

மண்ணகங்காவல் மன்னவன்முன்னர் எண்ணியபரிசில் இதுவென வுரைத்தற்குச் செய்யுள்:—

வரிசை கருதாது வான்போற் றடக்கைக்
குருசினீ நல்கயாங் கொள்ளும்—பரிசி
லடுகளி மார்ப வமரோட்டித் தந்த
படுகளி நால்வாய்ப் பகடு. —[பு. வெ. பா. 5]

எனவரும். இன்னோரின்னவை கொடுத்தனர் நீயும் அன்னர்போலருள் கெனும் இயன்மொழி வாழ்த்திற்குச் செய்யுள்:—

முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையு
மெல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
யிரவாம லீந்த விறைவர்போ னீயுங்
கரவாம லீகை கடன். —[பு. வெ. பா. 6]

எனவரும். மயலறுசீர்த்தி மான்றேர்மன்னன் இயல்பினை மொழியும் அத்துறைப்பகுதிக்குச் செய்யுள்:—

ஒள்வா ளமரு ளுயிரோம்பான் றானீயக்
கொள்வார் நடுவட் கொடையோம்பான்—வெள்வாள்
கழியாமே மன்னர் கதங்காற்றும் வேலோ
னொழியாமே யோம்பு முலகு. —[பு. வெ. பா. 7]

எனவரும். நெடுந்தேர்த்தானை நீறுபடநடக்குங் கடுந்தேர் மன்னவன் கண்படைநிலைக்குச் செய்யுள்:—

மேலா ரிறையமருண் மின்னார் சினஞ்சொரியும்
வேலான் விறன்முனை வென்றடக்கிக்—கோலாற்
கொடிய வுலகிற் குறுகாம லெங்கோன்
கடிய துயிலேற்ற கண். —[பு. வெ. பா. 8]

எனவரும். அயில்வேன் மன்னனை அருளியவெழுகெனத் துயிலிடை யெடுப்பிய துயிலெடைநிலைக்குச் செய்யுள்:—

அளந்த திறையா ரகலிடத்து மன்னர்
வளந்தரு வேலோய் வணங்கக்—களந்தயங்கப்
பூமலர்மேற் புள்ளொலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்
தூமலர்க்க ணேற்க துயில். —[பு. வெ. பா. 9]

எனவரும். கங்குற்கனைதுயில் எழுந்தோன்முன்னர் மங்கலங்கூறிய மங்கலநிலைக்குச் செய்யுள்:—

விண்வேண்டின் வேருதன் மங்கலம் வேந்தர்க்கு
மண்வேண்டிற் கைகூப்பன் மங்கலம்—பெண்வேண்டிற்
றுன்னன் மடவார்க்கு மங்கலந் தோலாப்போர்
மன்னன் மலைபுரையு மார்பு. —[பு. வெ. பா. 10]

எனவரும். மன்னிய சிறப்பின் மங்கலமரபிற் றுன்னினனென்ற அத்துறைப்பகுதிக்குச் செய்யுள்:—

தீண்டியுங் கண்டும் பயிற்றியுந் தன்செவியால்
வேண்டியுங் கங்குல் விடியலு—மீண்டிய
மங்கல மாய நுகர்ந்தான் மறமன்னர்
வெங்களத்து வேலுயர்த்த வேந்து. —[பு. வெ. பா. 11]

எனவரும். துளக்கமிலரசன் வெற்றிகாட்டும் விளக்குநிலைவிளம்பிய விளக்குநிலைக்குச் செய்யுள்:—

வளிதுரந்த கண்ணும் வலந்திரியாப் பொங்கி
யொளிசிறந் தோங்கி வரலா—லளிசிறந்து
நன்னெறியே காட்டும் நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு. —[பு. வெ. பா. 12]

எனவரும். அடரவிர்பைம்பூண் அரசன்றன்னைச் சுடரொடுபொரூஉம் அத்துறைப்பகுதிக்குச் செய்யுள்:—

வெய்யோன் கதிர்விரிய விண்மே லொளியெல்லா
மையாந் தொடுங்கி மறைந்தாங்கு—வையகத்துக்
கூத்தவை யேத்துங் கொடித்தேரான் கூடியபின்
வேத்தவையு மையாக்கும் வேந்து. —[பு. வெ. பா. 13]

எனவரும். மையாத்தல்—புற்கென்றல். உவகையொடுவேந்தன் ஒலி மறையவர்க்குக் கபிலையீந்த கபிலைநிலைக்குச் செய்யுள்:—

பருக்காழுஞ் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்
குருக்கட் கபிலை கொடுத்தான்—செருக்கோ
டிடிமுரசத் தானை யிகலிரிய வெங்கோன்
கடிமுரசங் காலை செய. —[பு. வெ. பா. 14]

எனவரும். அந்தமில்புகழான் அமரரவிமுகப்ப வெந்திவேட்ட வேள்வி நிலைக்குச் செய்யுள்:—

கேள்வி மறையோர் கிளைமகிழ்த லென்வியப்பாம்
வேள்வி விறல்வேந்தன் றான்வேட்ப—நீள்விசும்பி
னீர்ந்தா ரிமையோரு மெய்தி யழல்வாயா
லார்ந்தார் முறையா லவி. —[பு. வெ. பா. 15]

எனவரும். மண்மிசைக் கொண்மூ மழைவளந்தருமெனத் விண்மிசைத் தோற்றிய வெள்ளி நிலைக்குச் செய்யுள்:—

சூழ்கதிர் வான்விளக்கும் வெள்ளி சுடர்விரியத்
தாழ்புயல் வெள்ளந் தருமரோ—சூழ்புரவித்
தேர்விற்றார் தாங்கித் திகழ்ந்திலங்கு வேலோய்நின்
மார்பிற்றார் கோலி மழை. —[பு. வெ. பா. 16]

எனவரும். தாட்டாழ்தடக்கைத் தாமமார்பன் நாட்டுவளனுரைத்த நாடுவாழ்த்திற்குச் செய்யுள்:—

எண்ணி னிடரெட்டு மின்றி வயற்செந்நெற்
கண்ணின் மலரக் கருநீலம்—விண்ணின்
வகைத்தாய் வளனொடு வைகின்று வென்வே
னகைத்தாரான் றான்விரும்பு நாடு. —[பு. வெ. பா. 17]

எனவரும். இடரெட்டாவன,

விட்டில் கிளிநால்வாய் வேற்றரசு தன்னரசு
நட்டம் பெரும்பெயல் *காலெட்டு.

என இவை. வாழ்மனைபுகீஇ வைகறைமுழக்கிய கேழ்கிளர்கிணைவன் கிளந்த கிணைநிலைக்குச் செய்யுள்:—

வெள்ளி முளைத்த விடியல் வயலாமை
யள்ளகட் டன்ன வரிக்கிணை—வள்ளியோன்
முன்கடை தட்டிப் பகடுவாழ் கென்றுமு
னென்கடை நீங்கிற் றிடர். —[பு. வெ. பா. 18]

(பா.ம்). * காற்றெட்டு, காலோடெட்டு.

எனவரும். அரி - அழகு. செங்களத்தீட்டிய செல்வம் வெண்டுறையாழ் மங்கலப்பாணர் மறுத்த களவழிக்குச் செய்யுள் :—

ஈண்டி யெருவை யிறகுளரும் வெங்களத்து
வேண்டியாங் கொண்ட விறல்வேழம்—வேண்டாள்
வளைகள் வயிரியம்பும் வாட்டானை வேந்தே
விளைகட் பகர்வாள் விலை. —[பு. வெ. பா. 19]

எனவரும். கூற்றிருந்தாலுங் கொலைவேல் மன்னவன் வீற்றினிதிருந்த பெருமங்கலத்திற்குச் செய்யுள் :—

அழலவிர் பைங்க ணரிமா னமளி
நிழல்விர் பூண் மன்னர்நின் றேத்தக்—கழல்புனைந்து
வீமலிதார் மன்னவனும் வீற்றிருந்தான் வீங்கொலிநீர்ப்
பூமலி நாவற் பொழிற்கு. —[பு வெ. பா. 20]

எனவரும். நெடுமதிலெறிந்த நிரைதார் மன்னன் குடுமிகளைந்த புகழ்சாற்று நிலைக்குச் செய்யுள் :—

பூந்தா மரையிற் பொடித்துப் புகல்விசும்பின்
வேந்தனை வென்றான் விறன்முருக—னேந்து
நெடுமதில் கொண்டு நிலமிசையோ ரேத்தக்
குடுமி களைந்தானெங் கோ. —[பு. வெ. பா. 21]

எனவரும். குடுமிகளைதல் - மயிர்ச்சிகையைக் கூட்டிமுடித்தல்.

இகலடு தடந்தோள் எறிவேலிறைவன் மகளிரொடுமணந்த மணமங்கலத்திற்குச் செய்யுள் :—

அணக்கருந் தானையா னல்லியந்தார் தோய்ந்தோண்
மணக்கோல மங்கலம்யாம் பாட—வணக்கருஞ்சீ
ராரெயின் மன்னன் மடமக ளம்பணைத்தோட்
கூரெயிற்றுச் செவ்வாய்க் கொடி. —[பு. வெ. பா. 22]

எனவரும். கதமிக்கெழுபடைக் காவல்வேந்தன் புதல்வற்பயந்த பொலிவு மங்கலத்திற்குச் செய்யுள் :—

கருங்கழல் வெண்குடைக் காவலற்குச் செவ்வாய்ப்
பெருங்கட் புதல்வன் பிறப்பப்—பெரும்பெயர்
விண்ணோர் மகிழ்ந்தார் வியலிடத்தா ரேத்தினு
ரெண்ணா ரவிந்தா ரிகல். —[பு. வெ. பா. 23]

எனவரும். வாட்படைத்தானை மன்னவன் பிறந்த நாட்சிறப்புரைத்த நாண்மங்கலத்திற்குச் செய்யுள் :—

கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்
விரும்பி மகிழ்தல் வியப்போ—சுரும்பிமிர்தார்

வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து
தம்மதி ருந்திறப்பர் தாள். —[பு. வெ. பா. 24]

எனவரும். விரைந்து கொடைபெற்றும் விடைபெறுதிரவலன் பரிந்து கடைக்கூட்டிய பரிசினிலைக்குச் செய்யுள் :—

வெல்புரவி பூண்ட விளங்கு மணித்திண்டேர்
நல்கிய பின்னு நனிநீடப்—பல்போர்
விலங்குங் கடற்றானை வேற்றார் முனைபோற்
கலங்கு மளித்தென் கடிம்பு. —[பு. வெ. பா. 25]

எனவரும். வண்புகழ்நிறைந்தோர்க்கு மன்னவனுதவிப் பண்புறவிடுத்த பரிசில்விடைக்குச் செய்யுள் :—

படைநவின்ற பல்களிறும் பண்ணமைந்த தேரு
நடைநவின்ற பாய்மாவு நல்கிக்—கடையிறந்து
முன்வந்த மன்னர் முடிவணங்குஞ் சேவடியாற்
பின்வந்தான் பேரருளி னான். —[பு. வெ. பா. 26]

எனவரும். நிறைவினைமுற்றிய நீள்கழலோன்மனை அறன்மலிபுரைத்த ஆள்வினைவேள்விக்குச் செய்யுள் :—

நின்ற புகழொடு நீடுவாழ் கிவ்வுலகி
லொன்ற வுயிர்களிப்ப வோம்பலால்—வென்றமருள்
வாள்வினை நீக்கி வருக விருந்தென்னு
மாள்வினை வேள்வி யவன். —[பு. வெ. பா. 27]

எனவரும். கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக்காட்சி உறழத்தோன்றிப் பெற்றபெருவளம் பெறாஅர்க்கறிவுறீஇச் சென்றெதிரத்தெரித்த ஆற்றுப்படையுட் கூத்தராற்றுப்படைக்குச் செய்யுள்:-

கொலைவிற் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின்
றலைவ தவிரா துசேறி—சிலைகுலாங்
காரினை வென்ற கவிகையான் கைவளம்
வாரினை கொண்டு வரற்கு. —[பு. வெ. பா. 29]

எனவரும். பாணராற்றுப்படைக்குச் செய்யுள் :—

இன்றொடை நல்லிசையாழ்ப் பாணநீ யெம்மேபோற்
கன்றுடை வேழத்த கான்கடந்து—சென்றடையிற்
காமரு சாயலாள் கேள்வன் கயமலராத்
தாமரை சென்னி தரும். —[பு. வெ. பா. 28]

எனவரும். பொருநராற்றுப் படைக்குச் செய்யுள் :—

தெருவி னலமருந் தெண்கட் டடாரிப்
பொருவில் பொருநநீ செல்லிற்—செருவி

லடுந்தடக்கை நோன்ற ளமர்வெய்யோ னீயு
நெடுந்தடக்கை யானை நிரை. —[பு. வெ. பா. 30]

எனவரும். விறலியாற்றுப் படைக்குச் செய்யுள் :—

சில்வளைக்கைச் செவ்வாய் விறலி செருப்படையான்
பல்புகழ் பாடிப் படர்தியே—னல்லவையோ
ரேத்த விழையணிந் தின்னே வருதியாற்
பூத்த கொடிபோற் பொலிந்து. —[பு. வெ. பா. 31]

எனவரும். மொழியுமெங்கடுஞ்சொல் முறையுளிநிற்பின் வழிபயன் படூஉமெனும் வாயுறை வாழ்த்துக்குச் செய்யுள் :—

எஞ்சொல் லெதிர்கொண் டிகழான் வழிநிற்பிற்
குஞ்சர வெல்படையான் கொள்ளானே—வெஞ்சு
மிகலிட மின்றி யெறிமுந்நீர் சூழ்ந்த
வகலிட மங்கை யகத்து. —[பு. வெ. பா. 32]

எனவரும். புரையோர்நாப்பண் அவிதல்கடனெனப் பெரியோர்பேணிய செவியறிவுறூஉவிற்குச் செய்யுள் :—

அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதா யென்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டன் முறை. —[பு. வெ. பா. 33]

எனவரும். நாற்பெருந்திசையும் நன்கினிதுகவித்த கோக்குடைபழிச்சுங் குடைமங்கலத்திற்குச் செய்யுள் :—

தண்ணிழலோ ரெல்லோர்க்குந் தண்கதிராந் தற்சேரா
வெந்நிழலோ ரெல்லோர்க்கும் வெங்கதிரா—முன்னிலைவேல்
மூவா விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்
கோவா யுயர்த்த குடை. —[பு. வெ. பா. 34]

எனவரும். கோவாய் - அரசுதொழிற்கு அமைந்ததாய். காய்வார்காயக் கண்கனல் வேந்தன் வாய்வாளேத்திய வாண்மங்கலத்திற்குச் செய்யுள்:—

கொங்கவி ழைம்பான் மடவார் வியன்கோயின்
மங்கலங் கூற மறங்கனலுஞ்—செங்கோ
னிலந்தரியச் செல்லு நிரைதண்டார்ச் சேரன்
வலந்தரிய வேந்திய வாள். —[பு. வெ. பா. 35]

எனவரும். எண்ணருஞ்சீர்த்தி இறையோனெய்தி மண்ணுதல் புரிந்த மண்ணுமங்கலத்திற்குச் செய்யுள் :—

கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாண்
மங்கலங் கூற மலிவெய்திக்—கங்கையாள்

பூம்புன லாகங் கெழீஇயினன் போரடுதோள்
வேம்பார் தெரியலெம் வேந்து. —[பு. வெ. பா. 36]

எனவரும். அறிவோர் வேந்தனுக்கு ஆய்ந்திவைசெய்கென உறுதிகூறிய ஓம்படைநிலைக்குச் செய்யுள் :—

ஒன்றி லிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே—சென்றுலா
மாழ்கடல்சூழ் வையகத் தைந்துவென் றாறகற்றி
யேழ்கடிந் தின்புற் றிரு. —[பு. வெ. பா. 37]

எனவரும். ஒன்று-ஞானம்; ஆன்மா என்றுமாம். இரண்டு-காரண காரியங்கள்; புண்ணியபாவம் என்றுமாம். மூன்று-நட்புப் பகை நொதுமல், உச்சாகசத்தி, பிரபுசத்தி, மந்திரசத்தி என்றுமாம். நான்கு-யானை, தேர், குதிரை, காலாள்; சாம தான பேத தண்டம் என்றுமாம். ஐந்து-செவி, மெய், கண், வாய், மூக்கு எனப் பெயரிய பொறிகள். ஆறும் ஏழும்

நாடிய நட்புப் பகைசெலவு நல்லிருக்கை
கூடி னரைப்பிரித்தல் கூட்டலா—நீடிலா
வேட்டங் கடுஞ்சொல் மிகுதண்டஞ் சூதுபொரு
ளீட்டங்கட் காமமிவை யேழ்.

என முறையே இவையாம். வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப் பொலிமி னென்னும் புறநிலைவாழ்த்திற்குச் செய்யுள் :—

கொடிபடு முத்தலைவேற் கூற்றக் கணிச்சிக்
கடிபடு கொன்றையான் காப்ப—நெடிதுலகிற்
பூமலி நாவற் பொழிலகத்துப் போய்நின்ற
மாமலைபோன் மன்னுக நீ. —[பு. வெ. பா. 38]

எனவரும். மூவர்கொடியுளும் ஒன்றொடு பொரீஇ மேவரவுரைத்த வியன் கொடிநிலைக்குச் செய்யுள் :—

பூங்க ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல—வோங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி. —[பு. வெ. பா. 39]

எனவரும். சோவினையழித்த துளவணிமாயோன் மேவருவிறலினை வியந்த கந்தழிக்குச் செய்யுள் :—

மாயவன் மாய மதுவான் மணிநிரையு
ளாயனு வெண்ண லவனருளான்—காயக்
கழலவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்
சுழலழலுள் வைகின்று சோ. —[பு. வெ. பா. 40]

எனவரும். எரிசுடர்வேலவற்கு இளகியவுள்ளத் தரிமலர்க்கண்ணியர் ஆடியவள்ளிக்குச் செய்யுள் :—

வேண்டுதியா னீயும் விழைவோ விழுமிதே
யீண்டியம் விம்ம வினவிளையார்—பூண்டயங்கச்
சூலமோ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு
வேலனோ டாடும் வெறி. —[பு. வே. பா. 41]

எனவரும். விரும்பிய தரூஉம் விண்ணவர்தம்முழை அரும்பெறற் புலவரை ஆற்றுப்படுத்தற்குச் செய்யுள் :—

வெறிகொ ளறையருவி வேங்கடத்துச் செல்லி
னெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்
கிருளீயும் ஞாலத் திடரெல்லா நீங்க
வருளீயு மாழி யவன். —[பு. வெ. பா. 42]

எனவரும். வீற்றதொன்றெய்துகம் வியனிலத்தியாமெனப் போற்றரு மிறைக்கெதிர் புகழ்ந்தனர் பரவற்குச் செய்யுள் :—

சூடிய வான்பிறையோய் சூழ்சுடலை நீற்றங்கத்
தாடி யசையா வடியிரண்டும்—பாடி
யுரவுநீர் ஞாலத் துயப்போக வென்று
பரவுதும் பல்காற் பணிந்து. —[பு வெ. பா. 43]

எனவரும். விடுசுடரெறிக்கும் மேனிவானவனைப் படுபயன்கருதிப் பழிச்சினர் பணிதற்குச் செய்யுள் :—

ஆட லமர்ந்தா னடியடைந்தா ரென்பெறு
ரோடரி யுண்க ணுமையொருபாற்—கூடிய
சீர்சா லகலத்தைச் செங்க ணழனாகந்
தாராய்த் தழுவப் பெறும். —[பு. வெ. பா. 44]

எனவரும். மருமலர்க்கோதை மடவரறலைவன் விரிமலர்த்தாமம் விழைந்த கைக்கிளைக்குச் செய்யுள் :—

மங்குன் மனங்கவர மான்மாலை நின்றேற்குப்
பொங்கு மருவிப் புனனாடன்—கங்குல்
வருவான்கொல் வந்தென் வனமுலைமேல் வைகித்
தருவான்கொன் மார்பணிந்த தார். —[பு. வெ. பா. 45]

எனவரும். அல்லிடை விரும்பாது அவன் முயக்கமர்ந்து செல்பவள் செல்வகை தெரிந்தபெருந்திணைக்குச் செய்யுள் :—

வயங்குளைமான் றென்னன் வரையகலந் தோய
வியங்கா விருளிடைச் செல்வேன்—மயங்காமை

யோடரிக் கண்ணு யுறைகழிவாண் மின்னின்ருன்
மாட மறுகின் மழை. —[பு. வெ. பா. 46]

எனவரும். வில்லேர்நுதலி விறலோன் மார்பம் புல்லேம் யாமெனப் புலந்தபுலவிக்குச் செய்யுள் :—

மலேபடு சாந்த மலர்மார்ப யாநின்
பலர்படிசெல்வம் படியேம்—புலர்விடியல்
வண்டினங்கூட் டுண்ணும் வயல்சூழ் திருநகரிற்
கண்டனங் காண்டற் கினிது. —[பு. வெ. பா. 47]

எனவரும். இம்மூன்றும் பாட்டுடைத் தலைவனையே கிளவித் தலைவனுகக் கூறலின் அகமாகாது புறமாயின. படிமிசையியங்காப் பணிமொழி மகளிர் கடவுளை நயந்த கடவுட் பக்கத்திற்குச் செய்யுள் :—

நல்கெனி னுமிசையா ணேமென்னுஞ் சேவடிமே
லொல்கெனி னுச்சியா ணேமென்னு—மல்கிரு
ளாட லமர்ந்தாற் கரிதா லுமையாளை
யூட லுணர்த்துவதோ ராறு. —[பு. வெ. பா. 48]

எனவரும். பூதலத்தரிவையர் பொருவில் வானவரைக் காதலித்துரைத்த கடவுட்பக்கத்திற்குச் செய்யுள் :—

அரிகொண்ட கண்சிவப்ப வல்லினென் ஞகம்
புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி—வரிவண்டு
பண்ணலங்கூட் டுண்ணும் பனிமலர்ப் பாசூரெ
னுண்ணலங் கூட்டுண்டா னூர். —[பு. வெ. பா. 49]

எனவரும். இழையணி மங்கையர் ஈறிலகாமங் குழவிமருங்கிற் கூறிய பகுதிக்குச் செய்யுள் :—

வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா
வரிக்கண்ணி வஞ்சி யலற—வெரிக்கதிர்வேற்
செங்கோல னுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினு
மெங்கோலந் தீண்ட லினி. —[பு. வெ. பா. 50]

எனவரும். நீங்காக்காதன் மைந்தருமகளிரும் பாங்குறக்கூடும் பதிநிலை யுரைத்தற்குச் செய்யுள் :—

ஊடிய வூட லகல வுளநெகிழ்ந்து
வாடிய மென்றேள் வளையொலிப்பக்—கூடியபின்
யாமநீ டாகென்ன யாழ்மொழியார் கைதொழூஉ
மேமநீர்க் கச்சியெம் மூர். —[பு. வெ. பா. 51]

எனவரும்

246. சாற்று தொழிந்தவுஞ் சாற்றிய திணைவயி
னேற்றன பொதுவு மெனவிரு திறனு
மோதிய புறப்பொரு ளொழிபெனப் படுமே.

இது புறப்பொருளொழிபு இவையென்கின்றது.

(இ-ள்.) *மேற்கூறாது ஒழிந்தவும் மேற்கூறிப்போந்த திணைகளினிடத்து இயைவனவாகிய பொதுவுமென்ற இருகூற்றுத் துறைகளும் முற்கூறிய புறப்பொருளொழிபென்று சொல்லப்படும்.* (எ-று.)

அங்ஙனம் இருவகைத்தாதல் மேற்கூறுந் துறைகளானும் அவற்றிற்குக் காட்டும் உதாரணங்களானும் உய்த்துணர்ந்துகொள்க. (20)

247. வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப்
போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவுந்
துன்னருஞ் சிறப்பிற் றொடுகழன் மன்னனை
யுன்னஞ் சேர்த்திய வன்ன நிலையு
மேழக மூரினு மின்ன னென்றவன்
றாழ்வி லூக்கத் தேழக நிலையு
மேந்துபுக ழிறைமக ளிளமை நோக்கான்
வேந்தியல் பூண்ட மற்றதன் பகுதியுந்
துளக்கமில் வயவன் றொடுகழல் புனைதலுங்
களத்திடை வீழ்ந்தோர்க்குக் கற்கண் டிடுதலுங்
கற்கோ ணிலையுங் கன்னீர்ப் படுத்தலு
மற்றவை நிரைத்த வத்துறைப் பகுதியுங்
கன்னாட் டுதலுங் கன்முறை பழிச்சலும்
பொன்னு ரிற்கொடு புகுதலு மதாஅன்று
நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலை யானும்
வாகை வேலவன் வழங்கருஞ் சுரத்திடைத்
தோகையை யிழந்து துளங்குசுர நடையு
மனைவியை யிழந்து மனைவயி னிருந்தோன்
றனிநிலை யுரைத்த தபுதார நிலையு
மிவர்பூண் மொய்ம்ப னிறந்தபின் மனையோ
டவமேற் கொண்ட தாபத நிலையு
மாய்பெருஞ் சிறப்பிற் சிறுவற் பயந்த
தாய்தப வரூஉந் தலைப்பெய னிலையும்

பல்லிதழ் மழைக்கட் பாலகன் மாய்ந்தெனப்
புல்லிய பெருங்கிளைப் பூசன் மயக்கமும்
வேந்தன் மாய்ந்தென வியலிடம் புலம்பிய
வாய்ந்த வத்துறைப் பகுதியு மீமத்து
நல்லோள் கணவனொடு நளியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட மாலை நிலையுங்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமுங்
கொடியான் கூர்ங்கணை குளிப்பத் தன்றோழின்
முடியா னவிந்த வத்துறைப் பகுதியு
மாடமைத் தோளி விரிச்சியுஞ் சோகியும்
வேறுபட வஞ்சி விதும்பா னந்தமுந்
தவப்பே ரியதோர் வெஞ்சமங் குறுகு
மவற்கி ரங்கிய வத்துறைப் பகுதியுந்
தலைவன்விண் புகவுயிர் தாங்கின னென்றணங்
கலமர லெய்திய வானந்தப் பையுளுங்
கொடித்தேர் மன்னவன் மாய்ந்தெனக் குறைவுற்
றடுத்தோர் புலம்பிய கையறு நிலையொடு
கழிந்தோன் றன்புகழ் காதலித் துரைத்த
மொழிந்த மற்றதன் பகுதியு மதாஅன்
றேதமி லறமுத லியல்பிவை யென்னு
முதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சியு
மாற்றருங் கூற்றம் வருமுனந் தீதோரீஇப்
போற்றுமி னன்றெனப் புகல்பெருங் காஞ்சியு
மேதகு முனிவர் விளம்பிய நெறிமுறை
போதக வென்ற பொருண்மொழிக் காஞ்சியு
நிலமிசை யுலகி னெறிமை கூறிய
புலவ ரெய்தும் புத்தே ளுடுந்
தலைவரும் பொருளைத் தக்காங் குணர்த்தி
நிலையாமை யுரைத்த நீண்முது காஞ்சியு
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
துவர்வாய்ப் பேதையைத் தோய்ந்து காதலன்
கவலையி லேமெனக் கழறிய முல்லையு

மேரா ரகட்டு ரேய்திய காதலன்
வாரா முன்கார் வந்தகார் முல்லையும்
வார்கழற் பகைஞரை வணக்கிய மன்னவன்
றேர்வர வுரைத்த தேளர் முல்லையு
மாண்டகை யகல வணங்கழி யில்வயி
னுண்டுணை யாவுறாஉ நாஅண் முல்லையும்
புல்வளம் பழித்துப் புரவலற் புகழ்ந்துதம்
மில்வள மிகுத்த வில்லாண் முல்லையும்
வயலுழ பகட்டோடு மஞளனை மனையாள்
பயிலுறப் போரீஇய பகட்டு முல்லையு
மாலை மார்பன் மடந்தையைப் புணர்த்த
பாலை வாழ்த்திய பாஅன் முல்லையு
மாரமு தத்தினு மன்ப னல்கிய
கர்ரட கினிதெனுங் கற்பு முல்லையு
மேவரு கணவன் றணப்பத் தன்னிறைக்
காவல் கூறலுங் கடிநக ரடைந்தவ
னன்னவன் பெருவள னேத்தலு மாகிய
முன்னதன் பகுதியோ ரிரண்டு மதாஅன்று
கோடுப்போ ரேத்திக் கோடாஅர்ப் பழித்தலும்
விடுத்த லறியா விறல்புரி வாகையுள்
வாணிகன் வென்றியு முழவன் வென்றியுங்
கோணெறி பிழையா மல்ல வென்றியு
மிகல்புரி யேறுடு கோழியு மெதிர்வன்
றகருடன் யானை தணப்பில்வெண் பூழொடு
சிவல்கிளி பூவை செழும்பரி தேரோ
டிவர்தருஞ் சூதியாழ் பாட லாடல்
பிடியென நின்ற பெரும்பெயர் வென்றியோ
டடைவுறக் கிடந்த வறுபதிற் றிரண்டு
மின்னன பிறவு மெழுவகைத் திணையுட்
டுன்னிய வொழிபெனத் தூக்கினர் கொளலே.

இது முற்கூறிய ஒழிபு இத்திணைத்துறையுடைத்தென்கின்றது.

(இ-ள்.) *வேந்திடைதெரிதல் வேண்டியேந்துபுகழ்ப் போந்தைவேம்பே ஆரெனவரூஉம் மாபெருந்தானையர் மலைந்தபூமுதல் ஈறாகிய பிடியென நின்ற பெரும்பெயர்வென்றியுமெனப் பொருத்தமுறக் கிடந்த அறுபத்*

திரண்டுதுறையும் இவை போல்வனபிறவும் வெட்சிமுதலாக மேற்கூறிய எழுவகைத்திணையுள்ளுஞ் செறிந்த ஒழிபென்று ஆராய்ந்துகொள்க (எ-று) வேந்திடைதெரிதல்வேண்டி ஏந்துபுகழ்ப் போந்தைவேம்பே ஆரென்வரூஉம் மாபெருந்தானையர் மலைந்தபூவென்றனுட் போந்தைக்குச் செய்யுள்:

குடையலர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய்த்
தொடையவிழ் தண்குவளை சூடான்—புடைதிகழுந்
தேரதிரப் பொங்குந் திருந்துவேல் வானவன்
போரெதிரிற் போந்தையாம் பூ. —[பு. வெ. பொது. 1]

எனவரும். வேம்புக்குச் செய்யுள்:—

தொடியணிதோ ளாடவர் தும்பை புனையக்
கொடியணிதேர்க் கூட்டணங்கும் போழ்தின்—முடியணியுங்
காத்தல்சால் செங்கோற் கடுமா னெடுவழுதி
யேத்தல்சால் வேம்பி னிணர். —[பு. வெ. பொது. 2]

எனவரும். ஆர்க்குச் செய்யுள்:

கொல்களி றார்வர் கொலைமலி வாண்மறவர்
வெல்கழல் வீக்குவர் வேலிளையர்—மல்குங்
கலங்க லொலிபுனற் காவிரி நாட
னலங்க லமராழுவத் தார். —[பு. வெ. பொது. 3]

எனவரும். துன்னருஞ் சிறப்பிற் றொடுகழன்மன்னனை உன்னஞ்சேர்த்திய உன்னநிலைக்குச் செய்யுள்:—

துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க—மன்னரு
மீடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுநின்
கோடெலா முன்னங் குழை. —[பு வெ. பொது. 4]

எனவரும். ஏழகமூரினும் இன்னனென்றவன் தாழ்வின்றுக்கத்து ஏழகநிலைக்குச் செய்யுள் :—

எம்மனை யாமகிழ வேழக மேற்கொளினுந்
தம்மதி றாழ்வீழ்த் திருக்குமே —தெம்முனையுண்
மாறொடு தோன்றி மறலுங்கா லேழகத்
தாறொடு நேரா மரசு. —[பு. வெ. பொது. 5]

எனவரும். ஏந்துபுகழிறைமகன் இளமை நோக்கான் வேந்தியல்பூண்ட மற்றதன் பகுதிக்குச் செய்யுள் :—

வேண்டார் பெரியர் விறல்வேலோன் றானிளையன்
பூண்டான் பொழில்காவ லென்றுரையா—மீண்டு
மருளன்மின் கோள்கருது மால்வரை யாளிக்
குருளையுங் கொல்களிற்றின் கோடு. —[பு. வெ. பொது. 6]

எனவரும். துளக்கமில் வயவன் தொடுகழல்புனைதற்குச் செய்யுள்:—

வாளமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ
கேளலார் நீக்கிய கிண்கிணிக்காற்—காளை
கலங்கழல் வாயிற் கடுத்தீற்றி யற்றாற்
பொலங்கழல் கான்மேற் புனைவு. —[பு. வெ. பொது. 7]

எனவரும். களத்திடை வீழ்ந்தோர்க்குக் கற்கண்டிடுதற்குச் செய்யுள் :—

மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்
புகையணங்கப் பூமாரி சிந்திப்—பகையணங்கும்
வேளைக் கடுங்கணையான் வேறாகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டமைத்தார் கல். —[பு. வெ. பொது. 8]

எனவரும். கற்கோணிலைக்குச் செய்யுள் :—

பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நன்கியம்ப—மேவா
ரழன்மறங் காற்றி யவிந்தாற்கென் றேத்திக்
கழன்மறவர் கைக்கொண்டார் கல். —[பு. வெ. பொது. 9]

எனவரும். கன்னீர்ப்படுத்தற்குச் செய்யுள் :—

காடு கனலக் கனலோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ளப்—பாடி
நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்
கயத்தகத் துய்த்திட்டார் கல். —[பு. வெ. பொது. 10]

எனவரும். மற்றவைநிரைத்த அத்துறைப்பகுதிக்குச் செய்யுள் :—

கணனேர்ந் துவப்பக் கடுங்கண் மறவர்
பிணனேர்ந்து பேய்வழங்கு ஞாட்பி—னிணனேர்
விழுக்கினால் வேய்ந்த விறல்வேலோர் கல்லை
யொழுக்கினா ரொன்றொருவர் முன். —[பு. வெ. பொது. 11]

எனவரும். கல் நாட்டுதற்குச் செய்யுள்:—

மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்
பீலி யணிந்து பெயர்பொறித்து—வேலமரு
ளாண்டக நின்ற வமர்வெய்யோற் காகென்று
காண்டக நாட்டினார் கல். —[பு. வெ. பொது. 12]

எனவரும். கன்முறைபழிச்சற்குச் செய்யுள் :—

அடும்புகழ் பாடி யழுதழுது நோனா
திடும்பையுள் வைகிற்றிருந்த—கடும்பொடு
கைவண் குரிசிற்கற் கைதொழூஉச் செல்பாண
தெய்வமாய் நின்றான் றிசைக்கு. —[பு. வெ. பொது. 13]

எனவரும். கடும்பு - குடும்பம். பொன்னார் இற்கொடுபுகுதற்குச் செய்யுள்:—

¹வாட்புகா வூட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி யன்ன குரிசிற்க—லாட்கடிந்து
விற்கொண்ட வென்றி விறன்மறவ ரெல்லோரு
மிற்கொண்டு புக்கா ரியைந்து. —[பு. வெ. பொது. 14]

எனவரும். ² நனிமிகுசுரத்திடைக் கணவனையிழந்து தனிமகள் புலம்பிய முதுபாலைக்குச் செய்யுள் :—

நீர்மலி கண்ணொடு நின்றே னிலையிரங்காய்
தார்மலி மார்பன் றகையகலஞ்—சூர்மகளே
வெள்ளில் விளைவுதிரும் வேயோங்கும் வெஞ்சுரத்துக்
கொள்ளனீ கோடல் கொடிது. —[பு. வெ. சி. பொது. 1]

எனவரும். வாகைவேலவன் வழங்கருஞ்சுரத்திடைத் தோகையையிழந்து துளங்குசுரநடைக்குச் செய்யுள் :—

உரவெரி வேய்ந்த வுருப்பவிர் கானுள்
வரவெதிரின் வைவேல்வாய் வீழ்வாய்—கரவினாற்
பேதையைப் பெண்ணியலைப் பெய்வளையையென்மார்பிற்
கோதையைக் கொண்டொளித்த கூற்று.—[புவெ.சி.பொது. 2]

எனவரும். மனைவியையிழந்து மனைவயினிருந்தோன் தனிநிலையுரைத்த தபுதாரநிலைக்குச் செய்யுள் :—

பைந்தொடி மேனுலக மெய்தப் படருழந்த
மைந்தன் குரிசில் மழைவள்ள—லெந்தை
தபுதாரந் தாழ்ந்த தனிநிலைமை கேளாச்
செவிடா யொழிகென் செவி. —[பு. வெ. சி. பொது. 3]

எனவரும். இவர்பூண்மொய்ம்பன் இறந்தபின் மனையோள் தவமேற் கொண்ட தாபதநிலைக்குச் செய்யுள் :—

கலந்தவனைக் கூற்றங் கரப்பக் கழியா
தலந்தினையு மவ்வளைத் தோளி—யுலந்தவன்
றூரொடு போங்கி நிலனசைஇத் தான்மிசையுங்
காரடகின் மேல்வைத்தாள் கை. —[பு. வெ. சி. பொது. 4]

எனவரும். ஆய்பெருஞ்சிறப்பிற் சிறுவற் பயந்த தாய்தபவரூஉந் தலைப் பெயனிலைக்குச் செய்யுள் :—

(பா-ம்.) 1. வாடபட்டி.

2. பு வெ. மாலை யாசிரியர் இது முதல் சிறப்பிற் பொதுவியல் என்று கூறுவர்.

இடம்படு ஞாலத் தியல்போ கொடிதே
தடம்பெருங்கட் பாலக னென்னுங்—கடன்கழித்து
முள்ளெயிற்றுப் பேதையாள் புக்காள் முரணவியா
வள்ளெயிற்றுக் கூற்றத்தின் வாய். —[பு. வெ. சி. பொது. 5]

எனவரும். பல்லிதழ்மழைக்கட் பாலகன்மாய்ந்தெனப் புல்லிய பெருங்கிளைப் பூசன்மயக்கத்திற்குச் செய்யுள் :—

அலர்முலை யஞ்சொ [1]லவளொழிய வவ்விற்
குலமுதலைக் கொண்டொளித்த லன்றி—நிலமுறப்
புல்லிய பல்கிளைப் பூசல் பரியுமோ
கொல்லிய வந்தொழியாக் கூற்று. —[பு. வெ. சி. பொது. 6]

எனவரும். வேந்தன்மாய்ந் தென வியலிடம்புலம்பிய ஆய்ந்த அத்துறைப் பகுதிக்குச் செய்யுள் :—

எண்ணி னிகல்புரிந்தோ ரெய்தாத தில்போலுங்
கண்ணிநுளிர் வேலான் கரந்தபி—னண்ணல்
புகழொடு பூசன் மயங்கிற்றாற் பொங்கு
மகழ்கடல் வேலி யகத்து. —[பு வெ. சி. பொது 7]

எனவரும். ஈமத்து நல்லோள் கணவனொடு நளியழற்புகீஇச் சொல் லிடையிட்ட மாலைநிலைக்குச் செய்யுள் :—

சோலைமயி லன்னா டன்கணவன் சொல்லியசொல்
மாலை நினையா மனங்கடைஇக்—காலைப்
புகையழல் வேலோன் புணர்ப்பாகி நின்றா
ளகையழ லீமத் தகத்து. —[பு. வெ. சி. பொது. 8]

எனவரும். இதனைப் பாலையென்று பாடமோதுவாரும் உளர்; அது பாட மன்மை **உரையாசிரியர் உரையானும்** மாலையீடென்னும் வழக்கானும் உணர்க. கணவனொடுமுடிந்த படர்ச்சிநோக்கிச் செல்வோர்செப்பிய மூதானந்தத்துக்குச் செய்யுள் :—

ஒருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க்
கீருயி ரென்ப ரிடைதெரியார்—போரில்
விடனேந்து வேலாற்கும் வெள்வளையி னாட்கு
முடனே யுலந்த துயிர். —[பு. வெ. சி. பொது. 9]

எனவரும். ஆனந்தம் - சாக்காடு. மூதானந்தமென்றார், உழுவலன்புபற்றி இறத்தலின். கொடியான்கூர்ங்கணை குளிப்பத்தன்றொழில் முடியா னவிந்த அத்துறைப்பகுதிக்குச் செய்யுள்:—

(பா-ம்.) 1. லவனொழிய

முந்தத்தான் மாவொடு புக்கு முனையமருட்
சிந்தத்தான் வந்தார் செருவிலக்கிக்—குந்தத்தாற்
செல்கணை மாற்றிக் குரிசில் சிறைநின்றான்
கொல்கணைவாய் வீழ்தல் கொடிது—[பு. வெ. சி. பொது. 10]

எனவரும். சிறை - கரை. ஆடமைத்தோளி விரிச்சியுஞ்சோகியும் வேறுபட வஞ்சி விதும்பானந்தத்திற்குச் செய்யுள்:—

வேந்தார்ப்ப வெஞ்சமத்து வேலழுவந் தாங்கினான்
சாந்தா ரகலத்துத் தாழ்வடுப்புண்—டாந்தணியா
மன்னு சொகின மயங்கின வாய்ப்புளு
மென்னுங்கொல் பேதை யினி. —[பு. வெ. சி. பொது. 11]

எனவரும். தவப்பெரியதோர் வெஞ்சமங்குறுகும் அவற்கிரங்கிய அத்துறைப் பகுதிக்குச் செய்யுள்:—

[1] இன்னு சொகின மிசையா விரிச்சியு
மன்னு வலமருமென் னுருயிரு—மென்னுங்கொ
ளுக்கார் மறமன்னர் தோலாத் துடிகறங்கப்
புக்கான் விடலையும் போர்க்கு. —[பு. வெ. சி. பொது. 12]

எனவரும். தலைவன்விண்புக உயிர் தாங்கினனென்றணங்கு அலமர லெய்திய ஆனந்தப்பையுளுக்குச் செய்யுள்:—

புகழொழிய வையகத்துப் பூங்கழற் காளை
திகழொளிய மாவிசும்பு சேர—விகழ்வார்முன்
கண்டே கழிகாத வில்லையாற் கைசோர்ந்து
முண்டே யளித்தென் னுயிர். —[பு. வெ. சி. பொது. 13]

எனவரும். கொடித்தேர்மன்னவன் மாய்ந்தெனக்குறைவுற்று அடுத்தோர் புலம்பிய கையறுநிலைக்குச செய்யுள் :—

தாயன்னான் றார்விலங்கி வீழத் தளர்வொடு
நீயென்னாய் நின்றாயென் னெஞ்சளியை—யீயென்றார்க்
கில்லென்ற றேற்றா விகல்வெய்யோன் விண்படரப்
புல்லென்ற நாப்புலவர் போன்று.—[பு. வெ. சி. பொது 14]

எனவரும். கழிந்தோன் றன்புகழ் காதலித்துரைத்த மொழிந்தமற்றதன் பகுதிக்குச் செய்யுள்:—

நின்று நிலமிசையோ ரேத்த நெடுவிசும்பிற்
சென்று கழிந்தான் செருவெய்யோ—னென்று
மழலுங் கதிர்வே லவன்புகழ் பாடி
யுழலு முலகத் துயிர். —[பு. வெ. சி. பொது. 15]

(பா-ம்) 1. இன்னுத சோகி

எனவரும். 2. ஏதமிலறமுதல் இயல்பிவையென்னும் மூதுரைபொருந்திய முதுமொழிக்காஞ்சிக்குச் செய்யுள்:—

ஆற்றி னுணரி னருளறமா மாற்றார்க்குப்
போற்றார் வழங்கிற் பொருள்பொருளா—மாற்றிப்
புகலா தொழுகும் புரிவளையார் மென்றோ
ளகலா தளித்தொழுக லன்பு. —[பு. வெ. கா. பொது. 1]

எனவரும். மாற்றருங்கூற்றம் வருமுனந்தீதொரீஇப் போற்றுமினன்றெனப் புகல்பெருங்காஞ்சித்துச் செய்யுள்:—

ஆயா தறிவயர்ந் தல்லாந் தகலிடத்து
மாயா நிதிய மனைச்செறீஇ—யீயா
திறுகப் பொதியன்மி னின்றொடு நாளைக்
குறுக வருமரோ கூற்று. —[பு. வெ. கா. பொது. 2]

எனவரும். மேதகுமுனிவர் விளம்பிய நெறிமுறை போதகவென்ற பொருண்மொழிக்காஞ்சிக்குச் செய்யுள்:—

ஆய பெருமை யவிர்சடையோ ராய்ந்துணர்ந்த
பாய நெறிமேற் படர்ந்தொடுங்கித்—தீய
விருளொடு வைகா திடம்படு ஞாலத்
தருளொடு வைகி யகல். —[பு. வெ. கா. பொது. 3]

எனவரும். நிலமிசையுலகின் நெறிமைகூறிய புலவரெய்தும் புத்தேணாட்டுக்குச் செய்யுள்:—

பொய்யில் புலவர் புரிந்துறையு மேலுலக
மையமொன் றின்றி யறிந்துரைப்பின்—வெய்ய
பகலின் றிரவின்று பற்றின்று துற்றின்
றிகலின் றிளிவரவு மின்று. —[பு. வெ. கா. பொது. 4]

எனவரும். தலைவரும்பொருளைத் தக்காங்குணர்த்தி நிலையாமையுரைத்த நீள்முதுகாஞ்சிக்குச் செய்யுள்:—

இளமை நிலைதளர மூப்போ டிறைஞ்சி
யுளமை யுணரா தொடுங்கி—வளமை
வியப்போவ வில்லா வியலிடத்து வெஃகா
துயப்போக லெண்ணி னறம். —[பு. வெ. கா. பொது. 5]

எனவரும். மலர்தலை யுலகத்து மரபுநன்கறியப் பலர்செலச்செல்லாக் காடுவாழ்த்துக்குச் செய்யுள்:—

2. பு. வெ. மாலை யாசிரியர் இது முதல் காஞ்சிப் பொதுவியல் என்பர்.

முன்புறந் தான்காணு மிவ்வுலகை யிவ்வுலகிற்
றன்புறங் கண்டறிவார் தாமில்லை—யன்பி
னழுதார்கண் ணீர்விடுத்த வாருடிக் கூகை
கழுதார்ந் திரவழங்குங் காடு. —[பு. வெ. கா. பொது. 6]

எனவரும். 1 துவர்வாய்ப்பேதையைத் தோய்ந்துகாதலன் கவலையிலே மெனக்கழறியமுல்லைக்குச் செய்யுள்:—

ஊதை யுளர வொசிந்து மணங்கமழுங்
கோதைபோன் முல்லைக் கொடிமருங்குற்—பேதை
குவைஇ யணைந்த குவிமுலை யாகங்
கவைஇக் கவலை யிலம். —[பு. வெ. முல். பொது. 1]

எனவரும். ஏராரகட்டேரெய்திய காதலன் வாராமுன்கார்வந்த கார்முல்லைக்குச் செய்யுள்:—

புனையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துணைபடைத் துன்னார்—முனையு
ளடன்முகந்த தானை யவர்வாரா முன்னங்
கடன்முகந்து வந்தன்று கார். —[பு. வெ. முல். பொது. 2]

எனவரும். வார்கழற்பகைஞரை வணக்கிய மன்னவன் தேர்வரவுரைத்த தேர்முல்லைக்குச் செய்யுள்:—

தீர்ந்து வணங்கித் திறையளப்பத் தெம்முனையு
ளூர்ந்துநங் கேள்வ ருழைவந்தார்—சார்ந்து
பரிகோட்ட மின்றிப் பதவார்ந் துகளுந்
திரிகோட்ட மாவிரியத் தேர். —[பு. வெ. முல். பொது. 3]

எனவரும். பரி-செலவு. ஆண்டகையகல அணங்கழியில்வயின் நாண்டுணையாவுறூஉம் நாண்முல்லைக்குச் செய்யுள்:—

கொழுந்தார மார்பிற் கொழுநன் றணந்தபின்
பெய்வளை யாட்குப் பிறிதில்லை—வெய்ய
வளிமறையு மின்றி வழக்கொழியா வாயி
னளிமனைக்கு நற்றுணை நாண். —[பு. வெ. முல். பொது. 4]

எனவரும். வளிமறை-கதவு. புல்வளம்பழித்துப் புரவலற்புகழ்ந்துதம் இல்வளமிகுந்த இல்லாண்முல்லைக்குச் செய்யுள்:—

கல்லெனீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி
யொல்லும் வகையால் விருந்தோம்பிச்—செல்லுந்த
மிற்செல்வ மன்றி யிரந்தவர்க் கீகல்லாப்
புற்செல்வம் பூவா புகழ். —[பு. வெ. முல். பொது 5]

---

1. இதுமுதல் முல்லைப்பொதுவியல் என்பர் பு. வெ. ஆசிரியர்.

எனவரும். வயலுழுபகட்டொடு மனைமனையாள் பயிலுறப்பொரீஇய பகட்டுமுல்லைக்குச் செய்யுள்:—

உய்த்தல் பொறுத்த லொழிவின் றுழவியலு
ளெய்த்த லறியா திடையின்றி—வைத்த
படுநுகம் பூண்ட பகட்டொடு மானு
நெடுமொழி யெங்கணவ னோர். —[பு. வெ. முல் பொது. 6]

எனவரும். மாலைமார்பன் மடந்தையைப் புணர்த்த பாலைவாழ்த்திய பான்முல்லைக்குச் செய்யுள்:—

திங்கள் விளங்குந் திகழ்ந்திலங்கு பேரொளி
யங்கண் விசும்பி னகத்துறைக—செங்கட்
குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்
பயில்வளையை நல்கிய பால். [—பு. வெ. முல் பொது. 7]

எனவரும். ஆரமுதத்தினும் அன்பனல்கிய காரடகினிதெனுங் கற்பு முல்லைக்குச் செய்யுள் :—

நெய்கொ ணிணந்தூ நிறைய வமைத்திட்ட
குய்கொ ளடிசில் பிறர்நுகர்க—வைகலு
மங்குழைக் கீரை யடகு மிசையினு
மெங்கணவ னல்க லினிது. —[பு. வெ. முல் பொது. 8]

எனவரும். மேவருகணவன் தணப்பத்தன்னிறைக் காவல்கூறற்குச் செய்யுள் :—

மௌவல் விரியு மணங்கமழ் மான்மாலைத்
தையன் முதுகுரம்பைத் தான்றமியள்—செவ்வ
னிறைகாக்கு மிவ்வுலகி னிற்பிறந்த நல்லா
ணிறைகாப்ப வைகு நிறை. —[பு. வெ. முல் பொது. 9]

எனவரும். கடிநகரடைந்தவள் அன்னவன் பெருவளனேத்தற்குச் செய்யுள் :—

ஊழிதோ றூழி தொழப்பட் டுலைவின்றி
யாழிசூழ் வையத் தகமலிய—வாழி
கருவரை மார்பினெங் காதல னல்க
வருவிருந் தோம்பு வளம். —[பு. வெ. முல் பொது. 10]

எனவரும். [1]கொடுப்போரேத்திக் கொடாஅர்ப்பழித்தற்குச் செய்யுள்:—

சீர்மிகு நல்லிசை பாடிச் செலவயர்துங்
கார்முகி லன்னார் கடைநோக்கிப்—போர்மிகு

---

1. இது முதல் வென்றிப்பெருந்திணை யென்பர் ஆசிரியர், பு. வெ. மாலை ஆசிரியர்.

மண்கொண்ட வேன்மற மன்னரே யாயினும்
வெண்கொண்ட லன்னுரை விட்டு. —[பு. வெ. ஒழிபு. 1]

எனவரும். வாணிகன்வென்றிக்குச் செய்யுள் :—

காடுங் கடுந்திரை நீர்ச்சுழியுங் கண்ணஞ்சான்
சாடுங் கலனும் பலவியக்கி—நீடும்
பலிசையாற் பண்டம் பகர்வான் பரியான்
கலிகையா னீக்கல் கடன். —[பு. வெ. ஒழிபு. 2]

எனவரும். உழவன்வென்றிக்குச் செய்யுள்:—

மண்பத னோக்கி மலிவயலும் புன்செய்யுங்
கண்பட வேர்பூட்டிக் காலத்தா—லெண்பதனுந்
தத்துநீ ரார்க்குங் கடல்வேலித் தாயர்போல்
வித்தித் தருவான் விளைவு. —[பு. வெ. ஒழிபு. 3]

எனவரும். எண்பதம்—நெல் வரகு முதலிய எட்டு உணவு. மல்லவென்றிக் குச் செய்யுள்:—

கண்டான் மலைந்தான் கதிர்வானங் காட்டியே
கொண்டான் பதாகை மறமல்லன்—வண்டார்க்கு
மாலை துயலு மருவிய [1]மாமலையே
போலுந் திரடோள் புடைத்து. —[பு. வெ. ஒழிபு. 4]

எனவரும். ஏற்றுவென்றிக்குச் செய்யுள்:—

குடைவரை யேந்தியநங் கோவலனை கொண்டா
னடையவிழ் பூங்கோதை யஞ்சன்—விடையரவ
மன்றங் கறங்க மயங்கப் பறைபடுத்
தின்று நமர்விட்ட வேறு. —[பு. வெ. ஒழிபு. 5]

எனவரும். கோழிவென்றிக்குச் செய்யுள்:—

பாய்ந்து மெறிந்தும் படிந்தும் பலகாலுங்
காய்ந்தும்வாய்க் கொண்டுங் கடுஞ்சேவ—லாய்ந்து
நிறங்கொண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டுந் தான்வருமே போர்க்கு. [—பு.வெ. ஒழிபு. 6]

எனவரும். தகர்வென்றிக்குச் செய்யுள்:—

அருகோடி நீங்கா தணைதலு மின்றித்
திரிகோட்ட மாவிரியச் சீறிப்—பொருகளம்
புக்கு மயங்கப் பொருது புறவாயை
நக்குமா நல்ல தகர். —[பு. வெ. ஒழிபு. 7]

(பா-ம்.) 1. மாமலை

எனவரும். யானைவென்றிக்குச் செய்யுள்:—

கஞ்சுகம் வாய்த்த கவளந்தன் கைக்கொண்ட
குஞ்சரம் வென்ற கொலைவேழந்—துஞ்சா
தழலையும் பாய்ந்திறுத் தோடாது தான்ற
னிழலையுந் தான்சுளிக்கு நின்று. —[பு. வெ. ஒழிபு. 8]

எனவரும். கஞ்சுகம்—அட்டி மதுரம்.

பூழ்வென்றிக்குச் செய்யுள் :—

சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்காற்
சொல்லும் பலவுள சொன்னபின்—வெல்லு
நலம்வர நாடி நடுங்காது நூற்கட்
புலவரா லாய்ந்தமைத்த பூழ். —[பு. வெ. ஒழிபு. 9]

எனவரும். சொல்லுஞ்சுவட்டவர்—குறும்பூழாளிகள். சொல்லும் பலவுள என்பது, தீற்றும் அரிசி மந்திரம், பச்சிலை பிசைந்து தடவும் மந்திரம், செவியுளூறுத்தும் மந்திரம் முதலியவாம். சிவல்வென்றிக்குச் செய்யுள்:—

ஒட்டியா ரெல்லா முணாரார் புடைத்தபின்
விட்டோட வேண்டுமோ தண்ணுமை—விட்ட
சுவடேற்கு மாயிற் சுடரிழாய் சோர்ந்து
கவடேற்க வோடுங் களத்து. —[பு. வெ. ஒழிபு 10]

எனவரும். கிளிவென்றிக்குச் செய்யுள் :—

இலநா முரைப்பதன்க ணெல்வளை நாணப்
பலநாட் பணிபதமுங் கூறிச்—சிலநாளுட்
பொங்கரி யுண்கணாள் பூவைக்கு மாறாகப்
பைங்கிளியைக் கற்பித்தாள் பாட்டு. —[பு. வெ. ஒழிபு. 11]

எனவரும். பூவைவென்றிக்குச் செய்யுள் :—

புரிவொடு நாவினுற் பூவை புணர்த்துப்
பெரிய வரியவை பேசுந்—தெரிவளை
வெள்ளெயிற்றுச் செவ்வாய் வரியுண்க ணாள்வளர்த்த
கிள்ளை கிளந்தவைகீண் டிட்டு. —[பு. வெ. ஒழிபு. 12]

எனவரும். குதிரைவென்றிக்குச் செய்யுள் :—

ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையுங்
கந்து மறமுங் கறங்குளைமா—முந்துற
மேல்கொண் டவைசெலீஇ வென்வேலான் மேம்பட்டான்
வேல்கொண்ட கண்ணாளை மீட்டு. —[பு. வெ. ஒழிபு. 13]

எனவரும். கதி—தாரை. சாரியை—சுற்றுவரவு. தேர்வென்றிக்குச் செய்யுள் :—

ஒலிமணிக் கிண்மே றுடையாரை வெல்லுங்
கலிமணிக் கிண்மேடாற் காளைக்—கலிமாப்
பலவுடன் பூட்டிப் படர்சிறந் தைந்து
செலவொடு மண்டிலஞ் சென்று. —[பு. வெ. ஒழிபு. 14]

எனவரும். சூதுவென்றிக்குச் செய்யுள் :—

கழகத் தியலுங் கவற்றி னிலையு
மழகத் திருநுதலா ளாய்ந்து—புகழகத்துப்
பாய வகைபாற் பணிதம் பலவென்று
ளாய வகையு மறிந்து. —[பு. வெ. ஒழிபு. 16]

எனவரும். பணிதம்—ஒட்டம்.

யாழ்வென்றிக்குச் செய்யுள்:—

பாலை படுமலை பண்ணி யதன்கூட்டங்
கோலஞ்செய் சீறியாழ் கொண்டபின்—மேலைச்
சுவையெலாந் தோன்ற வெழீஇயினாள் சூழ்ந்த
வவையெலா மாக்கி யணங்கு. —[பு. வெ. ஒழிபு. 15]

எனவரும். பாடல்வென்றிக்குச் செய்யுள் :—

வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்
வெண்டுறையுஞ் செந்துறையும் வேற்றுமையாக்—கண்டறியக்
கின்னரம் போலக் கிளையமைந்த தீந்தொடையா
ழந்நரம்பு மச்சுவையு மாய்ந்து. —[பு. வெ. ஒழிபு. 18]

எனவரும். ஆடல்வென்றிக்குச் செய்யுள் :—

கைகால் புருவங்கண் பாணி நடைதூக்குக்
கொய்பூங்கொம் பன்னாள் குறிக்கொண்டு—பெய்பூப்
படுகளிவண் டார்ப்பப் பயில்வளைநின் றாடுந்
தொடுகழன் மன்னன் றுடி. —[பு. வெ ஒழிபு. 17]

எனவரும். பிடிவென்றிக்குச் செய்யுள் :—

குவளை நெடுங்கட் கூரெயிற்றுச் செவ்வா
யவளொடு மாமையொப் பானை—யிவளொடு
பாணியுந் தூக்கு நடையும் பெயராமைப்
பேணிப் பெயர்ந்தாள் பிடி. —[பு. வெ. ஒழிபு. 19]

எனவரும். பிடிபோலப் பெயர்ந்தாடலிற் பிடிவென்றியாயிற்று.

ஆண்பாற் கூற்று :—

காட்சி யையந் துணிவே யுட்கோள்
பயந்தோர்ப் பழிச்ச னலம்பா ராட்ட

னயப்புற் றிரங்கல் புணரா விரக்கம்
வெளிப்பட விரத்த லெனவிவ் வொன்பது
மாண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும். —[பு. வெ. சூ. 14]

எனக்கூறி, இவற்றிற்கு முறையே உதாரணம்.

கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய்த் தளிரா
வரும்பிவர் மென்முலை தொத்தாப்—பெரும்பணைத்தோட்
பெண்டகைப் பொலிந்த பூங்கொடி
கண்டேங் காண்டலுங் களித்தவெங் கண்ணே. [காட்சி. 1]

எனவும்,

தாமரைமேல் வைகிய தையல்கொ றாழ்தளிர்ப்
காமருவும் வானோர்கள் காதலிகொ—றேமொழி
மையம ருண்கண் மடந்தைக
ணைய மொழியா தாழுமென் னெஞ்சே. [ஐயம். 2]

எனவும்,

திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடு
மிருநிலஞ் சேவடியுந் தோயு—மரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கு
மாகு மற்றிவ ளகலிடத் தணங்கே. [துணிதல். 3]

எனவும்,

கௌவை பெருகக் கரந்தென் மனத்திருந்து
செவ்வாய்ப் பெருந்தோட் டிருநுதலா—ளவ்வாயி
லஞ்சொன் மாரிபெய் தவியா
னெஞ்சம் பொத்தி நிறைசுடு நெருப்பே. [உட்கோள். 4]

எனவும்,

கல்லருவி யாடிக் கருங்களிறு காரதிரு
மல்லலஞ் சாரன் மயிலன்ன—சில்வளைப்
பலவொலி கூந்தலைப் பயந்தோர்
நிலவரை மலிய நீடுவா ழியரே. [பயந்தோர்ப்பழிச்சல். 5]

எனவும்,

அம்மென் கிளவி கிளிபயில வாயிழை
கொம்மை வருமுலை கோங்கரும்ப—விம்மலை
நறும்பூஞ் சார லாங்கட்
குறுஞ்சுனை மலர்ந்தன தடம்பெருங் கண்ணே.
[நலம்பாராட்டல். 6]

எனவும்,

பெருமட நோக்கிற் சிறுநுதற் செவ்வாய்க்
கருமழைக்கண் வெண்முறுவற் பேதை—திருமுலை
புல்லும் பொறியி லேனுழை
நில்லா தோடுமென் னிறையி னெஞ்சே. [நயப்புற்றிரங்கல். 7]

எனவும்,

இணரார் நறுங்கோதை யெல்வளையாள் கூட்டம்
புணராமற் பூச றரவு—முணராது
தண்டா விழுப்படர் நலியவு
முண்டா லென்னுயி ரோம்புதற் கரிதே. [புணராவிரக்கம். 8]

எனவும்,

உரவொலி முந்நீ ருலாய்நிமிர்ந் தன்ன
கரவருங் காமங் கனற்ற—விரவெதிர
முள்ளெயி றிலங்கு முகிழ்நகை
வெள்வளை நல்காள் விடுமென் னுயிரே.

எனவும், [வெளிப்பட விரத்தல். 9]

பெண்பாற் கூற்று :—

காண்ட னயத்த லுட்கோண் மெலிதன்
மெலிவொடு வைகல் காண்டல் வலித்தல்
பகன்முனி வுரைத்த லிரவுநீடு பருவரல்
கனவி னரற்ற னெஞ்சொடு மெலிதல்
பெண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும். —[பு. வெ. சூ. 15]

எனக்கூறி, இவற்றிற்கு முறையே உதாரணம்,

கடைநின்று காம னலியக் கலங்கி
யிடைநின்ற வூரலர் தூற்றப்—புடைநின்ற
வெற்கண் டிலனாந் நெடுந்தகை
தற்கண் டனென்யான் கண்ட வாறே. —[காண்டல். 1]

எனவும்,

கன்னவி றோளானைக் காண்டலுங் கார்க்குவளை
யன்னவென் கண்ணுக் கமுதமா—மென்னை
மலைமலிந் தன்ன மார்ப
முலைமலிந் தாழும் முயங்குங் காலே. —[நயத்தல். 2]

எனவும்,

உள்ள முருக வொளிவளையுங் கைநில்லா
கள்ளவிழ் தாரானுங் கைக்கணையா—னௌளிச்
சிறுபுன் மாலை தலைவரி
னுறுதுய ரவலத் துயலோ வரிதே. —[உட்கோள். 3]

எனவும்,

குரும்பை வரிமுலைமேற் கோல நெடுங்க
ணரும்பிய வெண்முத் துகுப்பக்—கரும்புடைத்தோட்
காதல்செய் காமங் கனற்ற
வேதி லாளற் கிழந்தனெ னெழிலே. —[மெலிதல். 4]

எனவும்,

பிறைபுரை வாணுதல் பீரரும்ப மென்றோ
ளிறைபுனை யெல்வளை யேக—நிறைபுணையா
யாம நெடுங்கட னீந்துவேன்
காம வொள்ளெரி கனன்றகஞ் சுடுமே.

—[மெலிவொடு வைகல். 5]

எனவும்,

வேட்டவை யெய்தி விழைவொழிதல் பொய்போலு
மீட்டு மிடைமணிப் பூணுனைக்—காட்டென்று
மாமை பொன்நிறம் பசப்பத்
தூமலர் நெடுங்கண் டுயிறுறந் தனவே.

—[காண்டல் வலித்தல். 6]

எனவும்,

தன்க ணளியவாய் நின்றேற்குத் தார்விடலை
வன்கண்ண னல்கா னெனவாடு—மென்க
ணிடரினும் பெரிதா லெவ்வம்
படரினும் பெரிதாற் பாவியிப் பகலே.

—[பகன் முனிவுரைத்தல். 7]

எனவும்,

பெண்மே னலிவு பிழையென்னும் பேதுறீஇ
விண்மே லியங்கு மதிவிலக்கி—மண்மே

னினக்கே செய்பகை யெவன்கொ
லெனக்கே நெடியை வாழிய ரிரவே. —[இரவு நீடுபெருவரல்.8]

எனவும்,

அயர்வொடு நின்றே னரும்படர் நோய்தீர
நயவரும் பள்ளிமே னல்கிக்—கயவா
நனவிடைத் தமியேன் வைகக்
கனவிடைத் தோன்றிக் கரத்தனீ கொடிதே.
—[கனவினரற்றல். 9]

தோடவிழ்தார் யானுந் தொடர வவனுமென்
பாடகச் சீறடியின் மேற்பணிய—நாடகமா
வைகிய கங்கு றலைவரி
னுய்குவெ னுலகத் தளியேன் யானே. —[கனவினரற்றல். 10]

எனவும்,

மல்லாடு தோளா னளியவாய் மாலிருட்கட்
செல்லா மொழிக செலவென்பாய்—நில்லாய்
புனையிழை யிழந்த பூச
னினையினு நினைதியோ வாழியென் னெஞ்சே.
—[நெஞ்சொடு மெலிதல். 11]

நல்வளை யேக நலந்தொலைவு காட்டிய
செல்லல் வலித்தேனச் செம்மன்முன்—பில்லாத
வம்ப வுரையொடு மயங்கிய
வம்பற் பெண்டிரு மறைகவெம் மலரே. —[இதுவுமது 12.]

எனவும்,

பெண்பாற்கூற்று :—

* வேட்கைமுந் துறுத்தல் பின்னிலை முயறல்
பிரிவிடை யாற்றல் வரவெதிர்ந் திருத்தல்
வாராமைக் கழிதலிரவுத்தலைச் சேற
லில்லவை நகுதல் புலவியுட் புலம்பல்
பொழுதுகண் டிரங்கல் பரத்தையை யேசல்
கண்டுகண் சிவத்தல் காதலிற் களித்தல்
கொண்டகம் புகுதல் கூட்டத்துக் குழைத
லூடலு ணெகிழ்த லுரைகேட்டு நயத்தல்
பாடகச் சீறடி பணிந்தபி னிரங்கல்

---

*[பன்னிரண்டாவது] பெருந்திணைப்படல மென்பர், பு. வெ. ஆசிரியர்

பள்ளிமிசைத் தொடர்தல் செல்கென விடுத்தலென
வொன்பதிற் றிரட்டியோ டொன்று முளப்படப்
பெண்பாற் கூற்றுப் பெருந்திணைப் பால. —[பு. வெ. சூ. 16]

எனக்கூறி, இவற்றிற்கு முறையே உதாரணம்,

எழுதெழின் மார்ப மெனக்குரித் தாகென்
றழுதழுது வைகலு மாற்றேன்—றொழுதிரப்பல்
வல்லிய மன்ன வயவேலோய் வாழ்கென
வல்லியந்தார் நல்க லறம். —[வேட்கை முந்துறுத்தல். 1]

எனவும்,

மற்கொண்ட திண்டோண் மறவே னெடுந்தகை
தற்கண்டு மாமைத் தகையிழந்த—வெற்காணப்
பெய்களி யானைப் பிணரெருத்திற் கண்டியான்
கைதொழுதேன் றன்கண் டிலன். —[பின்னிலை முயறல். 2]

எனவும்,

ஓடுக கோல்வளையு மூரு மலரறைக
தோடவிழ் தாழை துறைகமழக்—கோடுடையும்
பூங்கானற் சேர்ப்பன் புலம்புகொண் மான்மாலை
நீங்கானென் னெஞ்சகத்து ணின்று.—[பிரிவிடை யாற்றல். 3]

எனவும்,

காம நெடுங்கட னீந்துங்காற் கைபுனைந்த
பூமலி சேர்க்கைப் புணைவேண்டி—நீமலிந்து
செல்லாய் சிலம்பன் வருவதற்குச் சிந்தியா
யெல்லாக நெஞ்ச மெதிர். —[வரவெதிர்ந்திருத்தல். 4]

எனவும்,

நுடங்கருவி யார்த்திழியு நோக்கருஞ் சார
லிடங்கழி மான்மாலை யெல்லைத்—தடம்பெருங்கட்
டாரார மார்பன் றமியே னுயிர்தளர
வாரான்கொ லாடும் வலம். —[வாராமைக் கழிதல். 5]

எனவும்,

பணையா வறைமுழங்கும் பாயருவி நாடன்
பிணையார மார்பம் பிணையத்—துணையாய்க்
கழிகாம முய்ப்பக் கனையிருட்கட் செல்கேன்
வழிகாண மின்னுக வான். —[இரவுத்தலைச் சேறல். 6]

எனவும்,

முற்று முலையார் முயங்க விதழ்குழைந்த
நற்று ரகல நகைதரலி—னற்றூர்
கலவே மெனநேர்ந்துங் காஞ்சிநல் லூர
புலவேம் பொறுத்த லரிது. —[இல்லவை நகுதல். 7]

எனவும்,

ஓங்கிய வேலான் பணியவு மொள்ளிழை
தாங்காள் வரைமார்பிற் றூர்பரிந்—தாங்கே
யடும்படர் மூழ்கி யமைமென்றோள் வாட
நெடும்பெருங்க ணீந்தின நீர். —[புலவியுட் புலம்பல். 8]

எனவும்,

இறையே யிறந்தன வெல்வளை யுண்க
ணுறையே பொழிதலு மோவா—நிறையைப்
பருகாப் பகல்கரந்த பையுள்கூர் மாலை
யுருகா வுயங்கு முயிர். —[பொழுது கண்டிரங்கல். 9]

எனவும்,

யாமுயங்கு மென்முலையால் யாணர் வயலூரன்
றேமுயங்கு பைந்தார் திரைமுயங்க—யாமுயங்க
வெவ்வையர் சேரி யிரவு மிமைபொருந்தாக்
கௌவை கருதிற் கடை. —[பரத்தையையேசல். 10]

எனவும்,

கூடிய கொண்கன் குறுகக் கொடிமார்பி
னூடிய சாந்தி னணிதொடர்ந்து—வாடிய
தார்க்குவளை கண்டு தரியா விவண்முகத்த
கார்க்குவளை காலுங் கனல். —[கண்டுகண்சிவத்தல். 11]

எனவும்,

காதல் பெருகிக் களிசெய்ய வக்களியாற்
கோதையுந் தாரு மிடைகுழைய—மாதர்
கலந்தாள் கலந்து கடைக்கண்ணூற் கங்குல்
புலந்தாள் புலரியம் போது. —[காதலிற் களித்தல். 12]

எனவும்,

கண்டுகளித்துக் கயலுண்க ணீர்மல்கக்
கொண்டகம் புக்காள் கொடியன்னாள்—வண்டினங்
காலையாழ் செய்யுங் கருவரை நாடனை
மாலையான் மார்பம் பிணித்து, —[கொண்டகம் புகுதல். 13]

எனவும்,

மயங்கி மகிழ்பெருக மால்வரை மார்பிற்
றயங்கு புனலூரன் றண்டார்—முயங்கியும்
பேதை புலம்பப் பிரிதியோ நீயென்னுங்
கோதைசூழ் கொம்பிற் குழைந்து.-[கூட்டத்துக் குழைதல்.14]

எனவும்,

தெரிவின்றி யூடத் தெரிந்துநங் கேள்வர்
பிரிவின்றி நல்கினும் பேணாய்—திரிவின்றித்
துஞ்சே மெனமொழிதி தூங்கிருண் மான்மாலை
நெஞ்சே யுடைய நிறை. —[ஊடலுணெகிழ்தல். 15]

எனவும்,

ஆழ விடுமோ வலரொடு வைகினுந்
தாழ்குர லேனற் றலைக்கொண்ட—தூழில்
விரையாற் கமழும் விறன்மலை நாட
னுரையாற் றளிர்க்கு முயிர், —[உரைகேட்டு நயத்தல். 16]

எனவும்,

அணிவரும் பூஞ்சிலம் பார்க்கு மடிமேன்
மணிவரை மார்பன் மயங்கிப்—பணியவும்
வற்கென்ற நெஞ்சம் வணங்காய் சிறுவரை
நிற்கென்றி வாழியர் நீ. -[பாடகச்சீறடிபணிந்தபினிரங்கல்.17]

எனவும்,

யானை தொடருங் கொடிபோல யானுன்னைத்
தானை தொடரவும் போதியோ—மானை
மயக்கரிய வுண்கண் மடந்தைதோ ளுள்ளி
யியக்கருஞ் சோலை யிரா. —[பள்ளிமிசைத் தொடர்தல். 18]

எனவும்,

விலங்குந ரிங்கில்லை வென்வேலோய் சென்றீ
யிலங்கிழை யெவ்வ நலியக்—கலங்கிக்
குறியுள் வருந்தாமைக் குன்றுசூழ் சோலை
நெறியுள் விரிக நிலா. —[செல்கென விடுத்தல். 19]

எனவும்,

[இருபாற் பெருந்திணை.]

*சீர்செல வழுங்கல் செழுமட லூர்த
றாதிடை யாட றயரவுற் குரைத்தல்

(பா-ம்) * செல்லல்

கண்டுகை சோர்தல் பருவ மயங்க
லாண்பாற் கிளவி பெண்பாற் கிளவி
தெங்கமழ் கூந்தற் றெரிவை வெறியாட்
டரிவைக் கவற்றுணை பாண்வர வுரைத்தல்
பரிபுரச் சீறடிப் பரத்தை கூறல்
விறலி கேட்பத் தோழி கூறல்
வெள்வளை விறலி தோழிக்கு விளம்பல்
பரத்தை வாயில் பாங்கிகண் டுரைத்தல்
பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல்
குற்றிசை யேனைக் குறுங்கலி யுளப்பட
வொத்த பண்பி னொன்றுதலை யிட்ட
வீரெண் கிளவியும் பெருந்திணைப் பால. [பு. வெ. சூ. 17]

எனக்கூறி, இவற்றிற்கு முறையே உதாரணம்,

நடுங்கி நறுநுதலா ணன்னலம்பீர் பூப்ப
வொடுங்கி யுயங்க லொழியக்—கடுங்கணை
வில்லே ருழவர் விடரோங்கு மாமலைச்
செல்லேன் மொழிக செலவு. —[செலவழுங்கல். 1]

எனவும்,

இன்றிப் படரோடி யானுழப்ப வைங்கணையான்
வென்றிப் பதாகை யெடுத்தானு—மன்றிற்
றனிமடமா னேக்கி தகைநலம்பா ராட்டிக்
குனிமடன்மாப் பண்ணிமேல் கொண்டு. —[மடலூர்தல். 2]

எனவும்,

வள்வாய்ந்து பண்ணுக திண்டேர் வடிக்கண்ணு
ளொள்வாள்போன் மாலை யுயல்வேண்டுங்—கள்வாய
தாதொடு வண்டிமிருந் தாம வரைமார்ப
தூதொடு வந்தேன் றொழு. —[தூதிடையாடல். 3]

எனவும்,

உள்ளத் தவலம் பெருக வொளிவேலோ
யெள்ளத் துணிந்த விருண்மாலை—வெள்ளத்துள்
தண்டா ரகலந் தழூஉப்புணையா நீநல்கி
னுண்டாமென் றோழிக் குயிர். —[துயரவற் குரைத்தல். 4]

எனவும்,

ஆம்ப னுடங்கு மணிவளையு மேகின
கூம்பன் மறந்த கொழுங்கயற்கண்—காம்பி

னெழில்வாய்ந்த தோளி யெவனுங்கொல் கானற
பொழிலெல்லா மீயும் புலம்பு. —[கண்டுகை சோர்தல். 5]

எனவும்,

பெரும்பணை மென்றோள் பிரிந்தாரெம் முள்ளி
வரும்பருவ மன்றுகொ லாங்கொல்—சுரும்பிமிரும்
பூமலி கொன்றை புறவெலாம் பொன்மலரு
மாமயிலு மாலு மலை. —[பருவமயங்கல். 6]

எனவும்,

பொறிமயி லாலின பொங்க ரெழிலி
சிறுதுவலை சிந்தின சிந்த—நறிய
பவர்முல்லை தோன்றி பரியாம லீன்ற
வவர்வருங் காலமீ தன்று. —[இதுவுமது. 7]

எனவும்,

கயற்கூடு வாண்முகத்தாட் கண்ணிய நெஞ்ச
முயற்கூடு முன்னதாக் காணி—னுயற்கூடுங்
காணு மரபிற் கடும்பகலுங் கங்குலு
நாணுநு மேயா நகை. —[ஆண்பாற்கிளவி. 8]

எனவும்,

வானத் தியலு மதியகத்து வைகலுங்
கானத் தியலு முயல்காணுந்—தானத்தி
னுள்வளை யோடவு முள்ளான் மறைந்துறையுங்
கள்வனைக் காணுதிவ் வூர். —[பெண்பாற் கிளவி. 9]

எனவும்,

வெய்ய நெடிதுயிரா வெறப வளிங்னையா
வைய நனிநீங்க வாடினுண்—மைய
லயன்மனைப் பெண்டிரோ டன்னைசொ லஞ்சி
வியன்மனையு ளாடும் வெறி. —[வெறியாட்டு. 10]

எனவும்,

அஞ்சொற் பெரும்பணைத்தோ ளாயிழையாய் தாநொடியும்
வஞ்சந் தெரியா மருண்மாலை—யெஞ்சேரிப்
பண்ணியல் யாழொடு பாணனுர் வந்தாரா
லெண்ணிய தென்கொலோ வீங்கு [பாண்வரவுரைத்தல். 11]

எனவும்,

பலவுரைத்துக் கூத்தாடிப் பல்வய லூர
னிலவுரைக்கும் பூணவர் சேரிச்—செலவுரைத்து
வெங்கட் களியால் விறலி விழாக்கொள்ள
லெங்கட் கவன்று ரெளிது. —[பரத்தைகூறல். 12]

எனவும்,

அரும்பிற்கு முண்டோ வலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல்—சுரும்போ
டதிரும் புனலூரற் காரமிர்த மன்றே
முதிரு முலையார் முயக்கு. [விறலிகேட்பத் தோழி கூறல். 13]

எனவும்,

உளைத்தவர் கூறு முரையெல்லா நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம்—விளைத்த
பழங்க ளனைத்தாய்ப் படுகளி செய்யு
முழங்கும் புனலூரன் றோய்பு. —[விறலி தோழிக்கு விளம்பல். 14]

எனவும்,

மாணலங் கொள்ளு மகிழ்நன் றணக்குமேற்
பேணலம் பெண்மை யொழிகென்பார்—காணக்
கலவ மயிலன்ன காரிகையார் சேரி
உலவ னெடுந்தேர் வரும். —[பரத்தை வாயில் பாங்கி கண்டுரைத்தல். 15]

எனவும்,

தண்டா ரணியவாந் தையலார் சேரியுள்
வண்டார் வயலூரன் வைகினமை—யுண்டா
லறியே னடியுறை யாயிழையாற் பெற்றேன்
சிறியேன் பெரிய சிறப்பு. —[பிறர்மனைத்துயின்றமை விறலி கூறல். 16]

எனவும்,

கரிய பெருந்தடங்கண் வெள்வளைக்கை யாளை
மரிய கழிகேண்மை மைந்த—தெரியின்
விளிந்தாங் கொழியினும் விட்டகலார் தம்மைத்
தெளிந்தாரிற் றீர்வது தீது. —[குற்றிசை. 17]

எனவும்,

பண்ணவாந் தீஞ்சொற் பவளத் துவர்ச்செவ்வாய்ப்
பெண்ணவாம் பாரல்குற் பெய்வளை—கண்ணவா
நன்னலம் பீர்பூப்ப நல்கார் விடுவதோ
தொன்னல முண்டார் தொடர்பு. —[குறுங்கலி. 18]

எனவும் எடுத்தோதி இவற்றை அகத்திணைப்புறமென்றுகொண்டு பொதுவியலுட்கூறுவாரும் உளர். அங்ஙனம் ஆகாமை மேற்கூறிப் போந்த வெட்சி, வஞ்சியென்னுஞ் சூத்திரத்துரையானுணர்க. (21)

இரண்டாவது புறத்திணையியல் முற்றிற்று.

மூன்ருவது

அணியியல்.

248. அணியெனப் படுவது துணிபுறக் கிளப்பிற்
குணமலங் கார மெனவிரு திறத்தாற்
பொருள்புலப் படுப்ப தென்மனார் புலவர்.

என்பது சூத்திரம். இவ்வோத்து நிறுத்தமுறையானே அகனும் புறனுமாகிய இருவகைப் பொருளும் உணர்த்தி அவற்றை விளக்கும் அணி யிலக்கணம் உணர்த்திற்ருகலான் அணியியலென்னும் பெயர்த்து. மேலோத்திஞேடு இதற்கு இயைபுடைமையும் இதனுனே விளங்கும். இதனுள் இத்தலைச்சூத்திரம் அணியாவது இவ்வாற்ருன் இவ்வியல் பிற்ருமென அதன் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்.) *அணியென்று சிறப்பித்துச்சொல்லப்படுவது தெளிவுறக் கூறுமிடத்துக் குணமும் அலங்காரமுமாகிய இருவகையாற் பொருளை விளக்கிநிற்பதென்று கூறுவர் அறிவுடையோர். (எ-று.)*

பொருள் முற்கூறிய அகப்பொருளும் புறப்பொருளு மென்று உணர்க. (1)

249. பொருட்கிடஞ் செய்யு ளாதலி னதனைத்
தெரிப்பது மதனது திறனெனல் வரையார்.

இது மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) *மேற்கூறிய பொருட்பகுதி இரண்டற்கும் இடஞ்செய்யு ளாதலின் அதனை விளக்கிநிற்பதும் அவ்வணியினது இயல்பென்று சொல்லுதலை நீக்கார் கொள்வர். (எ-று.)* (2)

செய்யுள்வகை.

250. செய்யு ளென்பவை தெரிவுறக் கிளப்பின்
முத்தகங் குளகந் தொகைதொடர் நிலையென
வெத்திறத் தனவு மீரிரண் டாகும்.

செய்யுள் உணர்ந்தே அணியுணரவேண்டுதலின் இஃது ஈண்டு ஒரு வாற்ருன் அவற்றிற்குப் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ-ள்.) செய்யுளென்று முற்கூறப்பட்டவற்றை விளங்கக் கூறு மிடத்து முத்தகச்செய்யுளுங் குளகச் செய்யுளுந் தொகைநிலைச் செய்யுளுந் தொடர்நிலைச் செய்யுளுமென மேற் செய்யுளியலுட் கூறும் பல்வேறுவகைப்பட்ட செய்யுட்களும் நான்காம். (எ-று.) (3)

முத்தகச்செய்யுள்.

அவற்றுள்,

251. முத்தகச் செய்யு டனிநின்று முடியும்.

இது முத்தகச்செய்யுளது இயல்பு கூறுகின்றது.

(இ-ள்.) மேற்கூறிய நால்வகைச் செய்யுளுள் முத்தகச்செய்யுளென்பது தனியேநின்று பொருள் பயந்து முற்றுப்பெறும். (எ-று.)

வரலாறு :—

என்னேய் சிலமடவா ரெய்தற் கெளியவோ
பொன்னே யநபாயன் பொன்னெடுந்தோண்—முன்னே
தனவேயென் றுளுஞ் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு. [தண்டி. பக். 3]

எனவரும். (4)

குளகச்செய்யுள்.

252. குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்.

இது குளகச் செய்யுள தியல்பு கூறுகின்றது.

(இ-ள்.) குளகச்செய்யுளென்பது பலபாட்டாய் ஒருவினை கொண்டு முடிவது. (எ-று.)

வினையென்றது ஈண்டு முடிக்குஞ் சொல்லை, வினைப்படுதொகுதி யென்றாற்போல. (5)

தொகைநிலைச் செய்யுள்.

253. தொகைநிலைச் செய்யு டோன்றக் கூறி
னொருவ னுரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருளிடங் காலந் தொழிலென நான்கினும்
பாட்டினு மளவினுங் கூட்டிய தாகும்.

இது தொகைநிலைச்செய்யுளது இயல்பு கூறுகின்றது.

(இ-ள்.) இது தொகைநிலைச்செய்யுளென்பதனை விளங்கக்கூறின் ஒருவனால் உரைக்கப்பட்டுப் பலபாட்டால் வருவனவற்றையும் பலரால் உரைக்கப்பட்டுப் பலபாட்டால் வருவனவற்றையும் பொருள் முதலிய நான்கினானும் பாட்டினானும்அளவினானுந் தொகுத்துக்கூறுவதாம்.(எ-று.)

ஒருவரான் உரைத்தன திருவள்ளுவப்பயன் முதலியன. பலரான் உரைத்தன நெடுந்தொகை முதலியன. இஃது இவ்வறுவகைத் தொகைக்கும் பொது இலக்கணம். பொருளாற்றொகுத்தன புறநானூறு முதலியன.

இடத்தாற் ெறுத்தன களவழிநாற்பது முதலியன. காலத்தினாற் றொகுத்தன கார்நாற்பது முதலியன. தொழிலாற் றொகுத்தன ஐந்திணை முதலியன. பாட்டாற் றொகுத்தன கலித்தொகை முதலியன. அளவாற் றொகுத்தன குறுந்தொகைமுதலியன. ஆகுமென்றதனானே பிறவாற்றாற் பெயர்பெற்று வருவனவுங் கொள்க. (6)

தொடர்நிலைச் செய்யுள்.

254. பொருளினுஞ் சொல்லினு மிருவகை தொடர்நிலை.

இது தொடர்நிலைச்செய்யுளாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பொருளினாற் றொடர்தலுஞ் சொல்லினாற் றொடர்தலு மென இருவகைப்படுந் தொடர்நிலைச்செய்யுள். (எ - று.)

எனவே, பொருட்டொடர்நிலைச்செய்யுளுஞ் சொற்றொடர்நிலைச் செய்யுளுமெனத் தொடர்நிலைச்செய்யுள் இரண்டுவகைப்படு மென்பதாயிற்று. இரண்டென்னாது வகையென்ற மிகையானே மூன்றாவது பொருளினானுஞ்சொல்லினானுந் தொடர்தலும் உண்டெனக் கொள்க. (7)

பொருட்டொடர்நிலைச் செய்யுளின் பகுப்பு.

255. அவற்றுட்,
பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்
கிரண்டா வியலும் பொருட்டொடர் நிலையே.

இது பொருட்டொடர்நிலை இத்துணைத்தென்கின்றது.

(இ - ள்.) மேற்கூறிய இரண்டனுட் பொருட்டொடர்நிலைச் செய்யுள் பெருங்காப்பியமும் காப்பியமுமென இரண்டுவகைப்படும். (எ - று.)

கவியாற் பாடப்படுவன எல்லாம் காப்பியமாமேனும் பொருட்டொடர்நிலைச்செய்யுளையே காப்பியமென்றது சேற்றிற் றோன்றுவன எல்லாம் பங்கயமாமேனுந் தாமரையினையே பங்கயமென்றாற்போல என்று உணர்க. இயலுமென்ற மிகையானே முற்கூறிய முத்தகம் முதலிய மூன்றும் இதற்கு உறுப்பாய் வருமெனக்கொள்க. (8)

பெருங்காப்பியம்.

256. பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாக முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட னாடு வளநகர் பருவ
மிருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து

நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாட
றேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

இது பெருங்காப்பியமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பெருங்காப்பியத்தியல்பு கூறுமிடத்து வாழ்த்து முதலிய மூன்றனுட் பொருந்துவதாக ஒன்று முன்வரநடந்து, அறம் முதலிய நான்கினையும் பயக்கும் ஒழுகலாறுடைத்தாய்த், தனக்கு நிகரில்லாத நாயகனையுடைத்தாய், மலை முதலிய இன்னோரன்ன வருணனைகளையுடைத்தாய், நன்மணம்புணர்தல் முதலிய இன்னோரன்ன செய்கைச் சிறப்புப் புகழ்ந்து தொடுக்கப்பட்ட நல்லொழுக்கமுடைத்தாய், மந்திரம் முதலியன சந்திபோலத் தொடர்புபட்டுச், சருக்கம் முதலிய கூற்றின் ஒருதிறத்தாற் பகுக்கப்பட்டு, இடைவிடாத எண்வகைச் சுவையும் மெய்ப்பாடுங் கேட்போர் மதிக்கப் புலவராற் புனையப்படுந் தன்மையினையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.)

பேசுங்காலை என்றதனால் வாழ்த்து முதலிய மூன்றனுள் ஒன்றேயன்றி இரண்டும் மூன்றும் ஒருங்குவரினும் இழுக்கின்றென்பது. இனையனபுனைந்து என்றதனான் வனமும் நதியும் இருசுடர்த்தோற்றமேயன்றி அவற்றின் அத்தமனம் முதலியன புனைதலுங் கொள்க.

சந்தியென்பது நாடகத்தின்கண்ணதோர் உறுப்பு. அஃதாவது வித்தல் விளைத்தல் விளைவுதுய்த்தலென்பதாம். (௯)

புறனடை.

257. கூறிய வுறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர்.

இது மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) மேற்கூறிய உறுப்பிற் சில குறைந்துவரினும் பெருங்காப்பியத்தின் வேறுபாடில்லையெனக் கூறுவர் அறிந்தோர். (எ - று.)

குறைதலாவது நாற்பொருளிற் குறையாது வருணனைகளிற் சில குறைதலாம். என்னை? நால்வகைப்பொருளிற் குறைபாடுடையது காப்பியமென்றலின். (10)

காப்பியம்.

258. அறமுத னான்கிற் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப் படுமே.

இது காப்பியமாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) *அறம் முதலிய நான்கனுட் சில குறைந்துவருவது காப்பிய மென்று கருதப்படும். (எ - று.)* (11)

காப்பிய நடை.

259. அவைதாம்,

ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினு
முரையும் பாடையும் விரவியும் வருமே.

இது மேலனவற்றிற்கோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) *மேற்கூறிய பெருங்காப்பியமும் காப்பியமும் ஒருவகைச் செய்யுளானும் பலவகைச் செய்யுளானும் உரையும் பாடையும் விரவியும் வரும். (எ - று.)*

உம்மையான் விரவாது வருதலே வலியுடைத்தெனக் கொள்க (12)

சொற்றொடர் நிலை.

260. செய்யுளந் தாதி சொற்றொடர் நிலையே.

இது சொற்றொடர் நிலையாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) *ஒரு செய்யுளிறுதி மற்றொரு செய்யுட்கு முதலாகத் தொடுப்பது சொற்றொடர்நிலைச் செய்யுளாம்.* (எ - று.)

அவை கலம்பகம் முதலியன. இவற்றுக்கு இலக்கியம் வந்த வழிக் கண்டு கொள்க. ஈண்டு உரைப்பிற் பெருகும். (13)

செய்யுள் நெறி.

261. வைதருப் பம்மே கௌட மென்றுங்.
கெய்திய குணமோ ரிருவகைப் படுமே.

பொருள் புலப்படுப்பது அணியெனத் தம் மேற்கோள் கூறி அப் பொருட்குச் செய்யுள் இடமாதலின் அதனைப் புலப்படுப்பதூஉம் அவ்வணிக்கு இயல்பெனக் கோடலின் அச்செய்யுளை ஒருவாற்றாற் றொகுத்துக்கூறி அணியிலக்கணங் கூறுவான் தொடங்கி அவற்றுள் இது சிறந்த முறையானே குணவணி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) *வைதருப்பமுங் கௌடமுமென மேற்கூறிய குணவணி இருவகைப்படும். (எ - று.)*

வைதருப்பங் கௌடம் என்பன ஆகுபெயர்; அவைபோலும் பாக்களை உணர்த்தலின். (14)

வைதருப்ப நெறி.

262. நெகிழிசை யின்றிய செறிவி னானும்
பொருள்புலப் படவருந் தெளிவி னானும்
விரவத் தொடுக்குஞ் சமநிலை யானுஞ்
சொல்லினும் பொருளினுஞ் சுவைபடு நெறியா
னல்லன தொகுக்கு மின்பத் தானும்
வெறுத்திசை யில்லா வொழுகிசை யானுங்
குறிப்பி னொருபொரு ணெறிப்படத் தோன்றுஞ்
சிறப்புடை மரபி னுதாரத் தானுங்
கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற்
குரியசொல் லுடைய வுய்த்தலில் பொருண்மையு
முலகொழுக் கிறவா வுயர்புகழ்க் காந்தமுந்
தொகைமிக வருஉந் தகைமிகு வலியு
முரிய பொருளன்றி யொப்புடைப் பொருண்மேற்
றருவினை புணர்க்குஞ் சமாதியு மெனமுறை
யாய்ந்தவை தருப்ப மையிரு வகைத்தே.

இது மேற்கூறிய வைதருப்பம் இவ்வியல்பான் இத்துணைத் தாமென்கின்றது.

(இ-ள்.) *நெகிழிசையில்லாச் செறிவு முதலாகச் சமாதி ஈறாக முறையே ஆராய்ந்த வைதருப்பம் பத்துக்கூற்றினை உடைத்தாம்.* (எ-று.)

கௌட நெறி.

263. கௌடமென்பது கருதிய பத்தொடுங்
கூடா தியலுங் கொள்கைய தென்ப.

இது கௌடமாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) *கௌடமென்று சொல்லப்படுவது மேற்கூறிய பத்துக் குண அலங்காரங்களோடுங் கூடாது நடக்கும் ஒழுக்கமுடையது.* (எ-று.)

முற்றும்மையை எச்சமாக்கிச் சிலவற்றோடு கூடியும் இயலுமெனக் கொள்க.

நெகிழிசையில்லாச் செறிவு வருமாறு :—

சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப! தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது. [தண்டி. பக். 13.]

எனவரும். இதன் மறுதலைக் கௌடம் வருமாறு:—

விரவலராய் வாழ்வாரை வெல்வா யொழிவா
யிரவுலவா வேலை யொலியே—வரவொழிவா
யாயர்வா யேயரிவை யாருயிரை யீராவோ
வாயர்வாய் வேயோ வழல். [தண்டி. பக். 13.]

எனவரும்.

பொருள்புலப்படுக்குந் தெளிவு வருமாறு:—

பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். [குறள். 319]

எனவரும். இதன் மறுதலைக் கௌடம் வருமாறு:—

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. [குறள். 297]

எனவரும்.

விரவத்தொடுக்குஞ் சமநிலை வருமாறு:—

[1]சோக மெவன்கொ லிதழிபொன் றூக்கின சோர்குழலாய்
மேக முழங்க விரைசூழ் தளவங் கொடியெடுப்ப
டாக நெருங்கவண் டானங் களிவண்டு பாடவெங்குந்
தோகை நடஞ்செயு *மன்பர்தந் தேரினித் தோன்றியதே.

எனவரும். விரவுதல் - வன்மை மென்மை இடைமை தம்முள் விரவுதல். இதன் மறுதலைக் கௌடம் வருமாறு:—

[2]இடர்த்திறத் தைத்துற பொற்றொடி நீயிடித் துத்தடித்துச்
சுடர்க்கொடித் திக்கனைத் திற்றடு மாறத் துளிக்கு மைக்கார்
மடக்குயிற் கொத்தொளிக் கக்களிக் கப்புக்க தோகைவெற்றிக்
கடற்படைக் கொற்றவன் பொற்கொடித் தேரினிக் கண்ணுற்
[றதே.

எனவரும்.

சொல்லினும் பொருளினுஞ் சுவைபடு நெறியான் நல்லன தொடுக்கும் இன்பங்களுட் சீரிடையிட்ட வழிமோனை முதலியன வரச் சொல்லின்றொடுக்கும் இன்பம் வருமாறு:—

[3]முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் போக
வன்னைக்கு ரைப்ப னறிவாய் கடலேயென் றலறிப் பேருந்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தந் தயங்குகானற்
புன்னையரும் பேய்ப்பப் போவாரைப் பேதுறக்கும் புகாரே
[யெம்மூர்.]

(பா-ம்.) * வன்பர்திண் டேரினித்

1, 2. தண்டி பக்கம் 15. 3. சிலப்பதிகாரம் கானல் வரி.

எனவரும். இதன் மறுதலைக் கௌடம் வருமாறு:—

துணைவருநீர் துடைப்பவராய்த் துவள்கின்றேன்
றுணைவிழிசேர் துயிலை நீக்கி
யினைவளைபோ லின்னலஞ்சோர்ந் திடருழப்ப
விறந்தவர்நாட் டில்லை போலுந்
தனியவர்க டளர்வெய்தத் தடங்கமலந்
தளையவிழ்க்குந் தருண வேனிற்
பனிமதுவின் பசுந்தாது பைம்பொழிலிற்
பரப்பிவரும் பருவத் தென்றல். [தண்டி. பக். 17]

எனவரும். பொருளின்பம் வருமாறு:—

மானேர் நோக்கின் வளைக்கை யாய்ச்சியர்
கான முல்லை சூடார் கதுப்பிற்
பூவைப் புதுமலர் சூடித் தாந்த
மடங்காப் பணைமுலை யிழைவளர் முற்றத்துச்
சுணங்கின் செவ்வி மறைப்பினு மலர்ந்த
பூவைப் புதுமலர் பரப்புவர் பூவயி
ஞநிரை வருத்தம் வீட மலையெடுத்து
மாரி காத்த காளை
நீல மேனி நிகர்க்குமா லெனவே. [தண்டி. பக். 18]

எனவரும். இப்பொருளின்பம் இருவகைநெறிக்கும் ஒக்கும். பொருளின்பமாவது மதுக்காரணமாக மதுகரங்கட்கு வருவதோர் மகிழ்ச்சி போலப் பொருட்காரணமாக அது கேட்டார்க்கு வருவதோர் மகிழ்ச்சி. இவ்வாறு தொடுக்குங்காற் கிராமியச்சொல்லும் பொருளும் இடக்கர்ச் சொல்லும் பொருளுந் தீண்டாமல் தொடுத்தல்வேண்டுமெனக் கொள்க.

வெறுத்திசையில்லா ஒழுக்கிசை வருமாறு:—

இமையவர்கண் மௌலி யிணைமலர்த்தாள் சூடச்
சமையந் தொறுநின்ற தையல்—சிமைய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண். [தண்டி. பக். 19]

எனவரும். இதன் மறுதலைக் கௌடம் வருமாறு:—

ஆக்கம் புகழ்பெற்ற தாவி யிவள்பெற்றாள்
பூக்கட் குழற்கார் பொறைபெற்ற—மாக்கடல்சூழ்
மண்பெற்ற வொற்றைக் குடையாய் வரப்பெற்றெங்
கண்பெற்ற வின்று களி. [தண்டி. பக். 19]

எனவரும்.

குறிப்பினொருபொருளை நெறிப்படத்தோன்றுஞ் சிறப்புடை மரபின் உதாரம் வருமாறு:—

செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்ன—ரொருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருணசையாற் பாராவாங்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண். [தண்டி. பக். 20]

எனவரும். இதனுள், வறுமைதீரக் கொடுப்பனென்பது குறிப்பு. இவ்வுதாரணம் இருவகைநெறிக்கும் ஒக்கும்.

கருதியபொருளைத் தெரிவுறவிரித்தற்கு உரியசொல்லுடைய உய்த்தலில் பொருண்மை வருமாறு :—

இன்றுமையாண் மாசிலா வாண்முகங்கண் டேக்கற்றே
வன்றி விடவரவை யஞ்சியோ—கொன்றை
யுளராரவா றேடு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்னோ மதி. [தண்டி. பக். 22]

எனவரும். இதன் மறுதலைக் கௌடம் வருமாறு :—

ஒல்லேலங் குவளைப் புலா அல் மகன்மார்பிற
புல்லெருக்கங் கண்ணி நறிது. [தொல். சொல். சேன. சூ. 46.]

எனவரும்.

உலகொழுக்கிறவா உயர்புகழ்க் காந்தம் வருமாறு :—

ஒருபே ருணர்வுடனே யொண்ணிறையுந் தேய
வருமே துறவென்பால் வைத்த—வொருபெண்மை
போதளவு வாசப் புரிகுழல்சூழ் வாண்முகத்துக
காதளவு நீண்டிலவுங் கண். [தண்டி. பக். 23]

எனவரும். இதன் மறுதலைக் கௌடம் வருமாறு:—

ஐயோ வகலல்குல் சூழ்வருதற் காழித்தே
வெய்யோற் கநேகநாள் வேண்டுமால்—கைபரந்து
வண்டிசைக்குங் கூந்தன் மதர்விழிகள் சென்றுலவ
வெண்டிசைக்கும் போதா திடம். [தண்டி. பக். 23.]

எனவரும். தொகைமிகவுரூஉந் தகைமிகு வலி வருமாறு :—

செங்கலசக் கொங்கைச் செறிகுறங்கிற் சீறடிப்போர்ப்
பொங்கரவ வல்குற் பொருகயற்கட்—செங்கனிவாய்க்
காருருவக் கூந்தற் கதிர்வளைக்கைக் காரிகைத்தா
மோருருவென் னுள்ளத்தே யுண்டு. [தண்டி. பக். 25]

எனவரும். தொகைமிகவருஉம்வலி - தொகைச்சொற்றொடர்பு உண்டாக வல்லெழுத்து மிகுதற்சிறப்பு உடைத்தாய் வருதல்.

இதன் மறுதலைக்கெளடம் வருமாறு :—

காணிமிர்த்தாற் கண்பரிய வல்லியோ புல்லாதார்
மானனையார் மங்கலநா ணல்லவோ—தான
மழைத்தடக்கை வார்கழற்கான் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு. —[தண்டி. பக். 25]

எனவரும்.

உரிய பொருளன்றி ஒப்புடைப்பொருண்மேற் தருவினைபுணர்க்குஞ் சமாதி வருமாறு:—

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி [பெரும்பாண். 1,2]

எனவரும். "வினை"யென்றரேனுங் கன்னிமெயில் குமரிஞாழலென்றாற் போலவருவனவுங் கொள்க. இச்சமாதி இருவகை நெறிக்கும் ஒக்கும்.

மாங்கனியுந் தீம்பாலும் வருக்கைச்சுளையுஞ் சருக்கரையுந் தம்முள் வேறுபட்ட சுவையவாயினுங் கூறல் மதுரமென்றன்றே? அதுபோல எழுத்துச்செறிவுஞ் சொற்செறிவும் பொருட்செறிவுஞ் செறிவென்றே செப்புவதல்லது பிறிதொருவகை பேசிற் பெருகிய அகலமுடைத்தா மாகலின் அவையெல்லாம் உய்த்துணர்ந்து கொள்க. பிறவற்றிற்கும் ஈதொக்கும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் உவமம் ஒன்றனையுமே அணியாகக் கூறி ஒழிந்தமையின் ஈண்டுக் கூறிய குணமும் மேற்கூறும் உவமை யொழிந்த பொருளணியுஞ் சொல்லணியுமாகிய அலங்காரங்கள் இவர் யாண்டுப்பெற்றாரெனின், மேற் பாயிரத்துள் "முன்னோர் நூலின் முடிபு நோக்கி" என்றதனாற் பெரும்பான்மையுந் தொல்காப்பியம் முதலியதமிழ் நூல்களுள்ளுஞ் சிறுபான்மை அலங்காரம் முதலிய வடநூல்களுள்ளும் பெற்றாரென்க. அற்றேல், வடநூல் முதனூலாயவாறென்னையெனின்; சொல்வேறுபாடன்றிப் பொருள் வேறுபாடின்மையானும், அன்றியும் ஸமஸ்கிருதம் பாகதம் அபப்பிரஞ்சமென மூன்றுவகைப்படுத்தி, அவற்றுள் ஸமஸ்கிருதம் புத்தேளிர் மொழியெனவும் அபப்பிரஞ்சம் பாமரசாதிகளாகிய இழிசனர் மொழியெனவும்கூறிப், பாகதம் எல்லாநாட்டும் வழங்கும் மேலோர் மொழியென விளக்கி, அப்பாகதத்தைத் தற்பவம் தற்சமம் தேசியமெனப் பகுத்து, அவற்றுட் தற்பவம்

"நிதியந்துஞ்சம்" —[மலைபடு. 478]

எனவும்;

"தசநான் கெய்திய" —[நெடுநல். 115]
எனவும், வடசொல் திரிந்து ஆவனவென்றுந் தற்சமங் குங்குமம் உலகம் மலயமாருதம் என வடசொல்லும் பிறபாடைச்சொல்லுமாய்ப் பொதுவாய் வருவனவென்றும் தேசியம், நிலம் நீர் தீ என அவ்வந்நாட்டுச் சொல்லே யாய்ப் பிறபாடை நோக்காதெனவென்றுங் கோடலின் அச்சொல் வேறுபாடும் இன்மையானுமாமென்க. (16)

அணிவகை.

264 பொருளணி சொல்லணி யெனவலங் கார
மிருவகை நெறியா னியலு மென்ப.

நிறுத்தமுறையானே அலங்காரம் உணர்த்துவனவற்றுள் இஃது அஃதித்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) பொருளானுளதாகிய அணியுஞ் சொல்லானுளதாகிய அணியுமென அலங்காரம் இருதிறத்தியலான் நடக்கும் என்று கூறுவர் ஆசிரியர். (எ-று.) (17)

பொருளணி வகை

265 தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப்பொருள் வைப்பே வேற்றுமை விபாவனை
யொட்டே யதிசயந் தற்குறிப் பேற்ற
மேது நுட்ப மிலேச நிரனிறை
யார்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயித முதாத்த
மரிதுண ரவநுதி சிலேடை விசேட
மொப்புமைக் கூட்ட மெய்ப்படு விரோத
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்தொடு சங்கீ ரணம்பா விகமெனப்
பொற்றுமே ழைந்தும் பொருளணி யென்ப

இது நிறுத்தமுறையானே பொருளணி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) தன்மை முதற் பாவிகம் ஈறாகப் பேணிய முப்பத்தைந்தும் பொருளணியென்று கூறுவர் ஆசிரியர். (எ-று.)

தன்மை இயல்பாகலான் முதற்கண்ணும் உவமைவிகாரமாய் மிக்க வாவிற்றாய்ப்பிறவக்கிரநடையலங்காரங்கட்கு உபகாரமுடைத்தாகலான் அதன்பின்னும் எண்ணப்பட்டன. ஒழிந்தனவும் இவ்வாறு உய்த்துணர்ந்து கொள்க. (18)

க. தன்மையணி.

266. அவற்றுள்,

எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மை யதுதான்
பொருள்குணஞ் சாதி தொழிலொடு புலனும்.

இது நிறுத்தமுறையானே தன்மையது பொது இலக்கணமும் அது தோன்றும் நிலைக்களம் இத்துணைத்தென்பதூஉங் கூறுகின்றது.

(இ-ள்) முற்கூறிய முப்பத்தைந்தனுள் எவ்வகைப்பட்ட பொருளும் உண்மைக்கூறுபாட்டான் விளக்குஞ் சொன்முறையாற் பாடப்படுவது தன்மையென்னும் அலங்காரம். அது பொருள் முதலிய நான்கு நிலைக்களமாகத் தோன்றும். (எ-று.)

தன்மையெனினுஞ் சொன்னடையெனினும் ஒக்கும்.

1. **பொருட்டன்மை** வருமாறு:—

நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடிய
னூலணிந்த மார்ப னுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
யெம்மா னிமையோர்க் கிறை. —[தண்டி பக். 32]

எனவரும். 2. **குணத்தன்மை** வருமாறு:—

உள்ளந் துளிர வுரோமஞ் சிலிர்த்துரையுந்
தள்ள விழி நீரரும்பத் தன்மறந்தாள்—புள்ளலைக்குந்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன். —[தண்டி. பக். 33]

எனவரும். 3. **சாதித்தன்மை** வருமாறு:—

பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியுந்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற—மெய்த்தவத்தோ
ராகத்தா னம்பலத்தா னாரா வமுதணங்கின்
பாகத்தான் சூடும் பணி. —[தண்டி. பக். 34]

எனவரும். 4. **தொழிற்றன்மை** வருமாறு:—

சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும்—வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு. [தண்டி. பக். 35.]

எனவரும். (19)

உ. உவமையணி.

267. பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றி
னொன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்பி னதுவே
யுவமையா மதன்றிற முணர்ந்தனர் கொளலே.

உவமைகூறுவனவற்றுள் இஃது அதன் பொது இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) பண்பு முதலிய மூன்றுங் காரணமாக ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயையவைத்து ஒப்புமை புலப்படப்பாடின் அஃது உவமையாம். அதன் கூறுபாடுகளெல்லாம் உவமையொன்றனையே விரித்துக்கூறுந் தொல்காப்பியம் முதலிய நூல்களான் அறிந்துகொள்க. (எ-று.)

"வெளிப்படை யுவமம் வினைபயன் மெய்யுரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும்." [இ. வி. பொ. 215.]

என அகத்திணையியலுள் நான்கெனக்கூறி ஈண்டு மூன்றென்றல் மலைவாம்பிறவெனின், மெய்யும் உருவும் பண்பினுள் அடங்குதலின் அடக்கித்தொகுத்துக் கூறுதலான் ஆகாதென்க.

1. பண்புவமை "பவளத்தன்னமேனி" (குறுந்.கட),
"வேய்புரைபணைத்தோள்",
தெம்முனை யிடத்திற் சேயகோ
லம்மா வரிவை யவர்சென்ற நாடே.

எனவும், 2. தொழிலுவமை
களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கி
னொளித்தியங்கு மரபின் வயப்புலி போல. [அகம். 22.]

எனவும், 3. பயவுவமை
மாரி யன்ன வண்கைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மோ. (புறம். 133)

எனவும் வரும்.

"என்றிவற்றி"னெனப் பொதுப்படக் கூறிய அதனாற் பண்பு முதலியனவேயன்றிச் சொற்பொதுமை காரணமாகவும் வரும். அது சிலேடையுவமையென முன்னர்க் கூறப்படும். இன்னும் அவ்விலேசானே பண்பு முதலியன ஒவ்வொன்றேயன்றிக்

கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும். (குறுந். 54)

எனப் பண்புந் தொழிலுந்
காந்த ளணிமலர் நறுந்தா தூதுந் தும்பி
கையாடு வட்டிற் றோன்றும் [அகம். 108]

எனத் தொழிலும் வடிவும் வண்ணமும் விரவியும் வருதல் கொள்க.

'விரவியும் வருஉ மரபின வென்ப.'

[தொல். பொருள். சூ. 277.]

என்பது ஓத்தாகலின். இன்னும் அதனானே

அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மல். —[கலி. 84]

எனப் பல பொருள் விரவி அடையும் போதுங் குடைக்கும் புதல்வற்கும் வடிவான் உவமையாயினுந் தோற்றத்திற்கு அவ்விரண்டும் உவமையாய் ஒருங்கு விரவிவருதலும், தேமொழியெனத் தேனின்கண் உளதாகிய நாவினிமையும் மொழியின்கணுளதாகிய செவியினிமையும் விரவியுவமித்தலும்,

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. [குறள். 277.]

எனவும்,

"கூழின் மலிவனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே."

[திருக்கோவை]

எனவும், பொறியும் புலனும் வேறுயவற்றையும் விரவியுவமித்தலும், இன்னோரன்ன பிறவுங் கொள்க.

ஒன்றும்பலவும் பொருளொடு பொருள் புணர்தல்

"செவ்வானன்னமேனி" [அகம். 11]

என ஒருபொருளோடு ஒருபொருளும்,

"வானிலங்கு பிறை, யன்ன விலங்குவரல் வையெயிறு" [அகம்]

என ஒருபொருளோடு பலபொருளுஞ்,

"சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப" [புறம். 13]

எனப் பலபொருளோடு பலபொருளும்,

பெருவளக், கரிகான் முன்னிலைச் செல்லார்
....
பீடின் மன்னர் போல
வோடுவை மன்னல் வாடைநீ யெமக்கே. —[அகம். 125]

எனப் பலபொருளோடு ஒருபொருளும் இயையவைத்தலா மென்றுணர்க.

மயிற்றோகைபோலுங் கூந்தலென்பதன்றிக் காக்கைச் சிறகன்ன கருமயிர் எனவும், புலிபோலப் பாய்ந்தானென்பதன்றிப் பூசைபோலப் பாய்ந்தானெனவும் யாதானும் ஒரு முகத்தாற் கூறற்க;

"உவமையும் பொருளு மொத்தல் வேண்டும்."

[தொல். பொருள். சூ. 283]

என்பவாகலின். அவ்வுவயங் கேட்போருள்ளங்கொண்டு விளங்கத் தோன்றுவதே யாதல் வேண்டுமென்பார்,

"ஒப்புமை தோன்ற"

என்றார். இங்ஙனஞ் செப்பின் அஃது உவமையெனவே, பவளம் போலுஞ் செய்யவாய் என்னும் அத்தொடர்ச்சொல் முழுவதூஉம்

உவமையாமென்பதாயிற்று. ஆயினும் பவளமும் வாயும் ஒத்த பண்பின வேனும் ஏற்ற இழிபுகளால் வாயிற் பவளஞ் சிறந்தமையானும்,

"உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை." [தொ. பொ. சூ. 278]

என்பவாகலானும் பவளம் உவமையெனவும், வாய் பொருளெனவும், செம்மை அவ்விரண்டனையும் புணர்த்தற்கு ஏதுவாகிய பண்பெனவும், போலுமென்பது அவ்வணியைப் புலப்படுத்துவதோர் உருபெனவும், வேறுவேறு கூறுபடுத்துணர்க. பிறவும் அன்ன.

அதன்றிறனுணர்தலாவது,

சிறப்பே நலனே காதல் வலியோ
டந்நாற் பண்பு நிலைக்கள மென்ப. [தொல். பொருள். சூ.279]

எனவும்,

கிழக்கிடு பொருளோ டைந்து மாகும். [,, ,, 280]

எனவுங் கூறலின்,

முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ. [பொரு. ந. 54-7]

எனச் சிறப்புப்பற்றியும்,

"ஓவத் தன்ன விடனுடை வரைப்பின்" —[புறம். 251]

என நலம்பற்றியும்,

"கண்போல்வா னொருவ னுளன்"

எனக் காதல்பற்றியும்,

அரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
றிருமா வளவன் [பட்டினப். 298]

என வலிபற்றியும்,

"அரவுநுங்கு மதியி னுதலொளி கரப்ப"

என ஒருபொருளினது இழிபு கூறுவான் உவமத்தான் இழிபுதோன்று விக்குமாதலின் கீழ்ப்படுக்கப்படும் பொருள்பற்றியும் உவமம் பிறத்தலின் இவ்வைந்தும் பண்பு முதலிய மூன்றுவமைக்கும் நிலைக்களமாமெனவும் உய்த்துணர்வகைத்தெனப்பட்ட உவமப்போலியாகிய உள்ளுறையுவமமும் ஈண்டே வெளிப்படை யுவமத்திற்கு உரிய விதிபெறுமெனவும் இன்னோ ரன்ன பிற இலக்கணமும் உவமையியலிற் கூறியவாறே உணர்தலும்,

பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள் [பொரு. ந. 44-5]

என இடத்திற்கேற்ற உவமையும்,

"நிழற்கோபமல்க" [தண்டி. பக். 49]

எனக் காலத்திற்கேற்ற உவமையும்,

"கடலும் மலையும் போலக் கரியோய்"

எனப் பொருளிற்கேற்ற உவமையும்

"புலிநா வன்ன புல்லிதழ் டாமரை"

எனப் பண்பிற்கேற்ற உவமையுஞ்,

சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுக்குடிப் பிறந்து
வீற்றிருந் தோரை —[புறம். 27]

எனவும்,

"விலங்கொடு மக்க ளனையர்." —[குறள். 410]

எனவுஞ் சாதிக்கேற்ற உவமையுஞ் செம்பருத்தியுங் கரவீரமுங் கூறாது கயிரவம்போலுஞ்செவ்வாய் பவளம்போலுஞ் செவ்வாயெனக் கூறும் மரபிற்கேற்ற உவமையும் பிறவாறும் உணர்தலும் பிறவுமாம்.

உவமையெனினும் உவமானமெனினும், பொருளெனினும் உவமேய மெனினும் ஒக்கும். (20)

உவமை வகை.

268. உற்றபண் பாதியி னுவமஞ் செய்வுழி
மற்றவை வெளிப்பட வகுத்தவிரி யுவமமு
மன்னவை போலா தாங்கவை கரப்பத்
தொன்னெறிப் புலவர் தொகுத்ததொகை யுவமமும்
பொருளுவமை யாகியு முவமை பொரு ளாகியு
மொருதொட ரிடைவரூஉ மிதர விதரமு
மதனு னன்றி யதனையஃ தொப்ப
திதனு மொக்கு மெனுஞ்சமுச் சயமு
மேதகு வுவமையை விலக்கியப் பொருளையே
யோதி முடிக்கு முண்மை யுவமையு
மோதிய பொருடனக் கொப்பதோர் பொருள்பின்
னீதியி னிறீஇய மறுபொரு ளுவமையு
நினைந்துவ மிக்கு நிலையின்மற் றதனைப்
புனைந்துவ மிக்கும் புகழுவமை யானுஞ்
சிந்தித் தொருவன் சேர்ப்பதோ ருவமையை
நிந்தித் துரைக்கு நிந்தை யுவமையு
மறிவுறி னதனுக் கிதுவே யொப்பென

நெறியுறப் புணர்க்கு நியம வுவமையு
மிதுவே யன்றி யிதனுக் கிதுபோன்
றதுவு மாமெனு மநியம வுவமையு
மெய்திய வுவமையு மியைந்திடு பொருளு
மையுற விளம்பு மையநிலை யுவமையு
மிவ்விய லதனு னிதுவன் றிதுவெனச்
செவ்விதிற் றெளிந்த தேற்ற வுவமையு
மாற்ற வுவமை யாற்றினும் பொருளி
னேற்றமின் றென்னு மின்சொ லுவமையு
மூறி லுவமேய முவமையா யுலகியல்
வேறுபட மாட்டிய விபரீத வுவமையு
மரும்பொரு ளதனை யதுபோலு மென்ன
விரும்புமென் னுளமெனும் வேட்கை யுவமையு
மொருபொரு ளதனுக் கொப்பதோன் றன்றிப்
பலபொருள் காட்டும் பலபொரு ளுவமையுங்
கூறுபடு முவமையின் கோள்கையிற் றாக
வேறுபடுத் திசைக்கும் விகார வுவமையு
மொருபொருண் மீதெழும் வேட்கையான் மயக்க
முறுகுதல் காட்டு மோக வுவமையு
மவனியி னில்லா வன்னதோர் பொருளை
யுவமைசெய் துரைக்கு மபூத வுவமையுஞ்
சொல்லிய வுவமந் தோறுந்தோறும் பொலி
புல்லப் புணர்க்கும் பல்வயிற் போலியு
மொருதொட ரதன்க ணுவமைதொறு மின்றி
யொருவயிற் புணர்க்கு மொருவயிற் போலியுங்
கூடா ததனைக் கூடுவ தாக்கிக்
கோடா துவமைசெய் கூடா வுவமமு
மொருதலை யாக வுவமையை மறுத்துப்
பொருளையே யுவமைசெய் பொதுநீங் குவமையு
மொருபொருட் குவமை யொருங்குபல வரினவை
வருதொடர் பாயிறூஉ மாலை யுவமையோ
டற்புதஞ் சிலேடை யதிசயம் விரோத
மொப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம்
விலக்கே யேதுவென விளம்பிய வெட்டு
முளப்படத் தொகைஇ யுரைத்தவெண் ணான்கும்
விளக்கிய வுவமையின் விரியெனப் படுமே.

இஃது உவமைவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.)மேற்கூறலுற்ற பண்பு முதலிய மூன்றனும் உவமஞ் செய்யுமிடத்து அப்பண்பு முதலிய வெளிப்பட வகுத்த விரியுவமை முதலாக மாலையுவமை ஈறாகக் கிடந்த இருபத்துநான்கோடு அற்புதம் முதலாகக் கூறிய எட்டுங் கூடத் தொகுத்தலான் இங்ஙனங் கூறப்பட்ட முப்பத்திரண்டும் முன் விளக்கிய உவமையலங்காரத்தின் விரியெனப்படும். (எ-று.)

உற்றபண்பாதியின் உவமஞ்செய்வுழி மற்றவைவெளிப்பட வகுத்த விரியுவமை வருமாறு :—

பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண்—மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புனனாடன் கொல்லி
யயல்போலும் வாழ்வ தவர். [தண்டி. பக். 40]

எனவரும்.

அன்னவைபோலாது ஆங்கவைகரப்பத் தொன்னெறிப்புலவர் தொகுத்த தொகையுவமை வருமாறு :—

தாமரை வாண்முகத்துத் தண்டரளம் போன்முறுவல்
காமரு வேய்புரைதோட் காரிகையீர்—தேமருவும்
பூங்குழலின் வாசப் பொறைசுமந்து நொந்ததோ
பாங்குழலுந் தென்றற் பரிசு. [தண்டி. பக்கம் 40]

எனவரும். தான்சுட்டியதனைப் பவளம்போலுஞ் செய்யவாயென விரித்துக்கூறாது பவளவாயெனத் தொகுத்துக் கூறியவழி வன்மையினானுஞ் செல்லுமேனுஞ் செலுத்தாது

சுட்டிக் கூறா வுவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே
[தொல். பொருள் சூ. 282]

என்பவாகலின் சுட்டியதனோடு புணர்க்கப்படுமென்பது தோன்றத் ‘தொன்னெறிப் புலவர் தொகுத்த தொகையுவமம்’ என்றார். ஒன்றெனமுடித்தலாற் பண்பு முதலியன விரிந்துந் தொக்கும் நின்றாற்போல உவம உருபுகளும் பவளம்போலும்வாயென விரிந்தும் பவளவாயெனத் தொக்கும் வருமெனக் கொள்க.

பொருள் உவமையாகியும், உவமைபொருளாகியும், ஒரு தொடரிடை வரூஉம் இதரவிதரவுவமை வருமாறு :—

களிக்குங் கயல்போலு நின்கணின் கண்போற்
களிக்குங் கயலுங் கனிவாய்த்—தளிர்க்கொடியே !
தாமரை போன்மலரு நின்முக நின்முகம்போற்
றாமரையுஞ் செவ்வி தரும். [தண்டி. பக். 41]

எனவரும்.

அதனுனன்றி அதனையஃதொப்பது இதனுனுமொக்குமெனுஞ் சமுச்சயவுவமை வருமாறு :—

அளவே வடிவொப்ப தன்றியே பச்சை
யிளவேய் நிறத்தானு மேய்க்குந்—துளவேய்
கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரந்
தொலைக்குமரி யேறுகைப்பா டோள். —[தண்டி. பக். 41]

எனவரும்.

மேதகுவுவமையை விலக்கியப்பொருளையே ஓதிமுடிக்கும் உண்மையுவமை வருமாறு :—

தாமரை யன்றுமுக மேயீ தீங்கிவையுங்
காமருவண் டல்லக் கருநெடுங்கண்—தேமருவு
வல்லியி னல்ல ளிவளென் மனங்கவரும்
அல்லி மலர்க்கோதை யாள். —[தண்டி. பக். 42]

எனவரும்.

ஓதியபொருடனக்கு ஒப்பதோர்பொருள்பின் நீதியினிறீஇய மறுபொருளுவமை வருமாறு :—

அன்னைபோ லெவ்வுயிருந் தாங்கு மனபாயா
நின்னையா ரொப்பார் நிலவேந்த—ரன்னதே
வாரிபுடை சூழ்ந்த வையகத்திற் கில்லையாற்
சூரியனே போனுஞ் சுடர். —[தண்டி. பக். 42]

எனவரும்.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. —[குறள். 1]

என்புழி இரண்டுபொருள் வேறுவேறு கூறிய தன்றி, அகரம் முதல எழுத்தெல்லாம், அதுபோல என்றுனும், ஆதிபகவன் முதற்றே உலகு, அதுபோல என்றுனும் ஒன்றுகத் துணியுமாற்றுன் உவமையும் பொருளும் நீதியின் நிறுவாமையின் அது வேறுபடவந்த உவமத்தோற்றமாய் இதன் பாற்படும்; என்னை ?

வேறுபட வந்த வுபமத் தோற்றங்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்.
—[தொல். பொருள். சூ. 307]

என்பவாகலின். மறுபொருளுவமையெனினும் எடுத்துக்காட்டுவமையெனினும் ஒக்கும்.

நினைந்துவமிக்கும் நிலையின்மற்றதனைப் புனைந்துவமிக்கும் புகழுவமை வருமாறு :—

இறையோன் சடைமுடிமே லெந்நாளுந் தங்கும்
பிறையேர் திருநுதலும் பெற்ற—நறைகடல்சூழ்
பூவலயந் தாங்கு மரவின் படம்புரையும்
பாவைநின் னல்குற் பரப்பு. —[தண்டி. பக். 43]

எனவரும்.

சிந்தித்தொருவன்சேர்ப்பதோருவமையை நிந்தித்துரைக்கும் நிந்தையுவமை வருமாறு :—

மறுப்பயின்ற வாண்மதியு மம்மதிக்குத் தோற்கு
நிறத்தலரு நேரொக்கு மேனுஞ்—சிறப்புடைத்துத்
தில்லைப் பெருமா னருள்போற் றிருமேனி
முல்லைப்பூங் கோதை முகம். —[தண்டி. பக். 43]

எனவரும்.

அறிவுறினதனுக்கு இதுவேயொப்பென நெறியுறப்புணர்க்கும் நியமவுவமை வருமாறு :—

தாதொன்று தாமரையே நின்முக மொப்பதுமற்
றியாதொன்று மொவ்வா திளங்கொடியே!—மீதுயர்த்த
சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்கு நிகர். —[தண்டி. பக். 43]

எனவரும்.

இதுவேயன்றி இதனுக்கிதுபோன்று அதுவுமாமெனும் அநியமவுவமை வருமாறு :—

கௌவை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு
மௌவல் கமழுங் குழன்மடவாய்!—செவ்வி
மதுவார் கவிரேநின் வாய்போல்வ தன்றி
யதுபோல்வ துண்டெனினு மாம். —[தண்டி. பக். 44]

எனவரும்.

எய்தியவுவமையும் இயைந்திடுபொருளும் ஐயுறவிளம்பும் ஐயநிலையுவமை வருமாறு :—

தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவும் வாண்முகங்கொல்—யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி
யொருபாற் படாதென் னுளம். —[தண்டி. பக். 44]

எனவரும். இதனைத் தடுமாறுவமையென்றுங் கூறுப.

இவ்வியலதனுன் இதுவன்றிதுவெனச் செவ்விதிற்றெளிந்த தேற்றவுவமை வருமாறு :—

தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியுங்
காமர் மதியுங் கறைவிரவு—மாமிதனாற்
பொன்னை மயக்கும் புனைசுணங்கி னார்முகமே
யென்னை மயக்கு மிது. —[தண்டி. பக். 45]

எனவரும்.

ஆற்றவுவமை ஆற்றினும்பொருளின் ஏற்றமின்றென்னும் இன்சொலுவமை வருமாறு :—

மான்விழி தாங்கு மடக்கொடியே! நின் வதனம்
மான்முழுதுந் தாங்கி வருமதிய—மானாலு
முற்றிழை நல்லாய்! முகமொப்ப தன்றியே
மற்றுயர்ச்சி யுண்டோ மதிக்கு. —[தண்டி. பக். 45]

எனவரும்.

ஊறிலுவமேயம் உவமையாயுலகியல் வேறுபடமாட்டிய விபரீதவுவமை வருமாறு:—

திருமுகம் போன்மலருஞ் செய்ய கமலங்
கருநெடுங்கண் போலுங் கயல்க—ளரிவை
யியல்போலு மஞ்ஞை யிடைபோலுங் கொம்பர்
மயல்போலும் யாமினாம் வழி —[தண்டி. பக். 46]

எனவரும்.

வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுகம் மலர்ந்த தெய்வத் தாமரை [சிறுபாண்—72-3.]

எனவும் வரும். இங்ஙனம் வேறு படக் கூறினும் வழுவாகாது; என்னை?

பொருளே யுவமஞ்செய் தனர் மொழியினு
மருளறு சிறப்பினஃ துவமமா கும்.—[தொல். பொருள். சூ.284]

என்பவாகலின்

அரும்பொருளதனை அதுபோலுமென்ன விரும்புமென்னுளமெனும் வேட்கையுவமை வருமாறு:—

நன்றுதீ தென்றுணரா தென்னுடைய நன்னெஞ்சம்
பொன்றுதைந்த பொற்சுணங்கிற் பூங்கொடியே!—மன்றல்
மடுத்ததைந்த தாமரைநின் வாண்முகத்துக் கொப்பென்
றெடுத்தியம்ப வேண்டுகின்ற தின்று. —[தண்டி. பக். 46]

எனவரும்.

ஒருபொருளதனுக்கு ஒப்பதொன்றன்றிப் பலபொருள் காட்டும் பலபொருளுவமை வருமாறு:—

வேலுங் கருவிளையு மென்மானுங் காவியும்
சேலும் வடுவகிரும் செஞ்சரமும்—போலுமாஞ்
சேமருவி யுண்டு நிறைவண் டறைகூந்தற்
காமருவு பூங்கோதை கண். —[தண்டி. பக். 47]

எனவரும்.

கூறுபடுமுவமையின் கொள்கைபிறிதாக வேறுபடுத்திசைக்கும் விகாரவுவமை வருமாறு:—

சீத மதியி னொளியுஞ் செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு—வேதாதன்
கைம்மலரா னன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம். —[தண்டி. பக். 47]

எனவரும்.

ஒரு பொருண்மீதெழும் வேட்கையான்மயக்கம் முறுகுதல் காட்டும் மோகவுவமை வருமாறு:—

கயல்போலு மென்றநின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போற் பிறழுந் திறத்தாற்—கயல்புகழ்வ
லாரத்தா னைமருங்கு லந்தரள வாண்முறுவ
லீரத்தா லுள்வெதும்பும் யான். —[தண்டி. பக். 48]

எனவரும்.

அவனியினில்லா அன்னதோர்பொருளை உவமை செய்துரைக்கும் அபூதவுவமை வருமாறு;—

எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்
வில்லேர் புருவத்து வேனெடுங்கண்—நல்லீர் !
முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழு
மகம்போலு மெங்க ளகம். —[தண்டி. பக். 48]

எனவரும். விகாரவுவமையோடு இதனிடை வேற்றுமை யென்னை யெனின், அது பிறரால் விகாரப்பட்டதாகக் கோடல்; இஃது அன்னதன் றென்க.

சொல்லியவுவமந் தொறுந்தொறும்போலி புல்லப்புணர்க்கும் பல்வயிற்போலி வருமாறு:—

மலர்வாவி போல்வரான் மாதர் கமல
மலர்போலு மாதர் வதனம்—மலர்சூ
ழளிக்குலங்கள் போலு மளக மதனுட்
களிக்குங் கயல்போலுங் கண். —[தண்டி. பக். 49]

எனவரும்.

ஒருதொடரதன்கண் உவமைதொறுமின்றி ஒருவயிற்புணர்க்கும் ஒருவயிற்போலி வருமாறு:—

நிழற்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயாச்
சுழற்கலவ மேல்விரித்த தோகை—தழற்குலவு
தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்
யாம்பிரிந்தோர்க் கென்று மினி. —[தண்டி. பக். 49]

எனவரும்.

கூடாததனைக் கூடுவதாக்கிக் கோடாதுவமைசெய் கூடாவுவமை வருமாறு:—

சந்தனத்திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமா லும்மாற்றம்—பைந்தொடியீர் !
வாவிக் கமல மதிமுகங்கண் டேக்கறுவா
ராவிக் கிவையோ வரண். —[தண்டி. பக். 50]

எனவரும்.

ஒருதலையாக உவமையை மறுத்துப் பொருளையேயுவமைசெய் பொதுநீங்குவமை வருமாறு:—

திருமருவு தண்மதிக்குஞ் செந்தா மரையின்
விரைமலர்க்கு மேலாந் தகையால்—கருநெடுங்கண்
மானே! யிருளளகஞ் சூழ்ந்தநின் வாண்முகந்
தானே யுவமை தனக்கு. —[தண்டி. பக். 50]

எனவரும். இது பண்பு தொழில் பயனென்பன பற்றிப் பொருளோடு பொருள் இயையவையாமையின் வழுவாம்பிறவெனின், ஆகாது; முன்னர் ஒத்தபொருளை எடுத்தோதி அவற்றினுஞ்சிறந்தது இதுவென்ற துணையல்லது ஒப்புமைவேண்டாமை இலனுதலின்.

ஒருபொருட்குவமை ஒருங்குபலவரினவை வருதொடர்பாயிறூஉம் மாலையுவமை வருமாறு:—

மலயத்து மாதவனே போன்று மவன்பா
லலைகடலே போன்று மதனுட்—குலவு
நிலவலைய மேபோன்று நேரியன்பா னிற்கும்
சிலைகெழுதோள் வேந்தர் திரு. [தண்டி. பக். 50]

எனவரும்.

அற்புதம் முதலிய அலங்காரங்கள் எட்டோடும் உவமையலங்காரங் கூடிவருதல்பற்றி அவற்றை வேறு பிரித்தோதினர். அவ்வற்புதம் முதலியவற்றிற்கு இலக்கணம் மேற்பெறப்படும்.

அவற்றுள் அற்புதவுவமை வருமாறு :—

குழை பருகு தாழக் குனிபுருவந் தாங்கி
யுழைய ருயிர்பருகி நீண்ட—விழியுடைத்தாய்
வண்டே டிருளளகஞ் சூழ வருமதியொன்
றுண்டே யிவண்முகத்துக் கொப்பு. [தண்டி. பக். 51.]

எனவரும்.

சிலேடைவகை இரண்டனுட் செம்மொழிச் சிலேடையுவமை வருமாறு :—

செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்பச்
சந்தத் தொடையோ டணிதழுவிச்—செந்தமிழ்நூல்
கற்றூர் புனையுங் கவிபோன் மனங்கவரு
முற்று முலையாண் முகம். [தண்டி. பக். 52]

எனவரும். பிரிமொழிச் சிலேடையுவமை வருமாறு :—

நளிதடத்த வல்லியின் கண்ணெகிழ ஞாலத்
தளவி னிறைகடாஞ் சிந்திக்—களிறிகலுங்
கந்த மலையா நிலவுங் கவடசைய
வந்த மலயா னிலம். [தண்டி. பக். 52]

எனவரும். யானைமேற் செல்லுங்கால் நளி - செறிவு ; தடம் - பெருமை ; வல்லி-விலங்கு ; கண்-மூட்டுவாய் ; நெகிழ்த்தல்-அறுத்தல்; நிறைகடாம் - நிறைந்தமதம் ; சிந்தல்-பொழிதல்; கந்து-தறி; மலைதல்-சீறுதல் ; நிலவுதல்-பொருந்துதல் ; கவடு-புரோசைக்கயிறு ; அசைதல்-பரிதல். இனித் தென்றல்மேற் செல்லுங்கால் நளி - பெருமை ; தடம், பொய்கை ; அல்லி - பூ ; கள் - தேன் ; நெகிழ்தல்-சோர்தல் ; நிறை - ஒழுக்கம் ; சிந்தல் - அழித்தல் ; கந்தம் - விரை ; அலைதல் - நாறுதல்; நிலவுதல் - நெருங்குதல்; கவடு-மரக்கொம்பு ; அசைதல்- அலைதல்.

அதிசயவுவமை வருமாறு :—

நின்னுழையே நின்முகங் காண்டு நெடுந்தடம்
தன்னுழையே தன்னையுங் காண்குவ—மென்னு
மிதுவொன்று மேயன்றி வேற்றுமை யுண்டோ
மதுவொன்று செந்தா மரைக்கு. [தண்டி. பக். 53]

எனவரும்.

விரோதவுவமை வருமாறு :—

செம்மை மரைமலருந் திங்களு நும்முகமுந்
தம்மிற் பகைவிளைக்குந் தன்மையவே—யெம்முடைய
வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியி
ரொப்பாகு மென்பா ருளர். [தண்டி. பக். 54]

எனவரும்.

ஒப்புமைக் கூட்டவுவமை வருமாறு :—

விண்ணின்மேற் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மே லன்னை வயவேந்தே—தண்ணளியிற்
சேரா வவுணர் குலங்களையுந் தேவர்கோ
னேரார்மே லத்தகையை நீ. [தண்டி. பக். 54.]

எனவரும்.

தற்குறிப்பேற்றவுவமை வருமாறு :—

உண்ணீர்மை தாங்கி யுயர்ந்த நெறியொழுகி
வெண்ணீர்மை நீங்கி விளங்குமாற்—றண்ணீர்த்
தரம்போலு மென்னத் தருங்கடம்பை மாறன்
கரம்போற் கொடைபொழிவான் கார். [தண்டி. பக். 55.]

எனவரும்.

விலக்குவமை வருமாறு :—

குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
வுழைபொருதென் னுள்ளங் கவரா—மழைபோற்
றருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல். [தண்டி. பக். 55.]

எனவரும். கயன்மேற் செல்லுங்கால் குழை - சேறு ; குமிழ் - நீர்க் குமிழி ; உழை - பக்கம். கண்ணின்மேற் செல்லுங்கால் குழை - காதிடு பணி ; குமிழ்-குமிழம்பூப்போலும் நாசி ; உழை - மான்.

ஏதுவுவமை வருமாறு:—

வாளரவின் செம்மணியும் வன்னியிளம் பாசிலையு
நாளிளைய திங்க ணகைநிலவு—நீளொளியாற்
றேனுலவும் பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வானுலவு விற்போல் வரும். [தண்டி. பக். 56.]

எனவரும். (21)

உவமவழுவமைதி.

269. மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலு
முதலுஞ் சினையு முரண்கோள வருதலுந்
திணைமாறு படுதலும் பான்மாறு படுதலு
மின்னன பிறவுந் தொன்னெறி மரபாற்
பயப்பா டுள்வழிப் பாங்கென மொழிப.

இது மேலதற்கோர் வழுவமைதி கூறுகின்றது.

(இ-ள்.) உவமேய அடைக்கு உவமான அடை மிகப் புணர்த்தலும் உவமேய அடைக்கு உவமான அடை குறையப்புணர்த்தலும் இழிந்த

உவமையோடு உயர்ந்தபொருளை உவமித்தலும், உயர்ந்த உவமையோடு இழிந்தபொருளை உவமித்தலும், முதலுஞ்சினையுந் தம்முண் மாறுபட உவமித்தலும், உயர்திணையும் அஃறிணையுந் தம்முண் மாறுபட உவமித்தலும், ஆண்பாலும் பெண்பாலுந் தம்முண் மாறுபட உவமித்தலும், ஒருமைப்பாலும் பன்மைப்பாலுந் தம்முண் மாறுபட உவமித்தலும், இவைபோல்வன பிற வேறுபாடுகளும் அடிப்பட்ட நெறிமுறைமையாற் பயன்படுதல் உளவாகிய இடத்து வழுவெனக் களையப்படா, இயல்பென்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

எனவே, பயப்பாடில்வழிக் களையப்படுமென்பதாம்.

வரலாறு :—

சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கு மிழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே. [புறம். 82.]

இதனுள் ஆர்புனைதெரியல் நெடுந்தகை போர்த்தொழிலுவமையாகிய போழ்தூண்டூசித்தொழிற்குப் பல அடைபுணர்ப்பினும் அவையனைத்தும் போர்த்தொழில் விரைவையே சிறப்பித்து வந்தமையால் வழுவாகாது இலக்கணமாமெனவும்,

அவாப்போ லகன்றதன் னல்குன்மேற் சான்றோ
ருசாப்போல வுண்டே மருங்கு—லுசாவினைப்
பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகிற்றே
கோதைக்கொம் பன்னாள் துயம்.
[தொல். பொருள். பக். 869.]

எனவும்.

இரங்கா ழன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்
....
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்குநோ யெல்லாந் தானா யினனே. [புறம். 276.]

எனவும், இறப்ப இழிந்தனவற்றோடும் இறப்ப உயர்ந்தனவற்றோடும் உவமிப்பினும் அவை தத்தம் உவமேயங்களைச் சிறப்பித்து வந்தமையால் வழுவாகாது இலக்கணமாமெனவும்.

நெருப்பி னன்ன சிறுகட் பன்றி. [அகம். 84.]

எனவும்.

அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ. [கலி. 84.]

எனவும் முதற்பொருளோடு சினைப்பொருளுஞ் சினைப்பொருளோடு முதற்பொருளுந் தம்முண் மயங்க உவமிப்பினும் அவை தத்தம் உவமேயங்களைச் சிறப்பித்து வந்தமையால் வழுவாகாது இலக்கணமாமெனவும்,

"கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே." [சீவக. 53.]

எனவும்.

"மல்லன் மலையனைய மாதவரை வைதுரைக்கும்." [சீவக. 2789.]

எனவும், உயர்திணையோடு அஃறிணையும் அஃறிணையோடு உயர்திணையும் மயங்க உவமிப்பினும் அவை தத்தம் உவமேயங்களைச் சிறப்பித்து வந்தமையான் வழுவாகாது இலக்கணமாமெனவும்,

கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால். [யா.வி.]

எனவும்,

களவுடன் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணிநின் றோணிலை கண்டு. [அகம். 16.]

எனவும், ஆண்பாலோடு பெண்பாலும் உயர்திணைப்பன்மைப்பாலோடு அஃறிணையொருமைப்பாலும் மயங்க உவமிப்பினும் அவை தத்தம் உவமேயங்களைச் சிறப்பித்து வந்தமையால் வழுவாகாது இலக்கணமாமெனவுங் கொள்க.

உவமேய அடைக்கு உவமான அடை குறையப்புணர்ப்பினும் பயப்பாடுடைத்தாய் வந்தன வந்துழிக் காண்க.

நீலப் புருவங் குனிய விழிமதர்ப்ப
மாலைக் குழல்சூழ்ந்த நின்வதனம்—போலுங்
கயல்பாய வாசங் கவருங் களிவண்
டயல்பாயு மம்போ ருகம். [தண்டி. பக். 57.]

இதனுள் உவமேய அடைக்கு உவமானம் மிக்கதனால் வருவதோர் பயப்பாடின்மையின் வழுவாமெனவும்,

நாட்டந் தடுமாறச் செவ்வாய் நலந்திகழத்
தீட்டரிய பாவை திருமுகங்—காட்டுமாற்
கெண்டைமீ தாட நறுஞ்சே யிதழ்கிளர
வண்டுசூழ் செந்தா மரை. [தண்டி. பக். 58.]

இதனுள் உவமேய அடைக்கு உவமான அடைகுறையப் புணர்த்ததனால் வருவதோர் பயப்பாடின்மையின் வழுவாமெனவும்

மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்
மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கு—மன்னப்
பெடைபோலுஞ் சந்திரன் பைந்தடங்கள் போலு
மிடைமாசொன் றில்லா விசும்பு. [தண்டி. பக். 58]

இதனுள் இறப்ப இழிந்த நாயோடுந் தடத்தோடும், இறப்ப உயர்ந்த சுடரோனேடும், அன்னப்பெடையாகிய பெண்பாலோடும், முறையே உயர்ந்த வயவரையும் விசும்பினையும் இழிந்த மின்மினியையும் ஆண்பாலாகிய சந்திரனையும் உவமித்ததனால் ஒருவதோர் பயப்பாடின்மையின் வழுவாமெனவுங் கொள்க.

பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்று மென்ப.[தொ. பொருள். சூ. 294.]

என்பவாகலின், இங்ஙனம் பெருமைபற்றியுஞ் சிறுமைபற்றியும் உவமிக்குங்கால் நகை முதலிய மெய்ப்பாடு எட்டும்பற்றித் தோன்றுதல் கொள்க.

அவாப்போ லகன்றத னல்குன்மேற் சான்றோ
ருசாப்போல வுண்டே மருங்குல். [தொல். பொ. பக். 869.]

என்பது பெருமைபற்றியுஞ் சிறுமைபற்றியும் உவமைபிறந்தது.

கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றி. [யா. வி]

என்பது துன்பப்பெருக்கஞ் சொல்லி அவலம்பிறந்தது.

பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு. [முத்தொள்]

என்பது பெருக்கம்பற்றி இளிவரல் பிறந்தது. பிறவும் அன்ன.

இன்னபிறவாவன:—மேற்கூறிய ஐயவுவமையும் பொதுநீங்குவமையும் பண்பு முதலியன பற்றிப் பொருளோடு பொருள் இயையவைத்தலின்மையின் வழுவாமாயினும் அவற்றுள் ஐயவுவமை தாமரைகொல் முகங்கொல் என்புழித் தாமரைக்கும் முகத்திற்கும் ஒப்புமைகருதாது ஐயந்தோன்றுமையின் அதுவும் பொருளோடு பொருள் இயையவைத்தலே யாமென அமைத்துக்கோடலும், பொதுநீங்குவமை

"நின்வாண்முகந் தானே, யுவமை தனக்கு."

என்புழி முன்னர் ஒத்தபொருளை எடுத்தோதி அவற்றினுஞ் சிறந்தது இது வென்றதுணையேயல்லது ஒப்புமைவேண்டாது கூறியதன்மையின் இதுவும் பொருளோடு பொருள் இயையவைத்தலேயாமென அமைத்துக் கோடலும், மேற்கூறும் உருவகத்துள் உவமவுருவகம்.

"வதனமதியம், உதய மதியமே ஒக்கும்."

என்புழி முன்னர் உருவகஞ் செய்த மதியினைப் பின்னரும் உவமித்தல் புனருத்தியாகிய வழுவாமாயினும் முன் இயல்பாகிய விளக்கமுங் குளிர்ச்சியும் நோக்கி வதனமதியமென்று உருவகஞ்செய்து பின்னும் மதுநுகர்ந்தாள் முகத்துச் செயற்கையால் உளவாகிய மதர்ப்புஞ் செம்மையும் நோக்கி உதயமதியம் ஒக்குமென விசேடித்தமையின் வழுவின்றென அமைத்துக் கோடலும் முதலியவெனக் கொள்க. பிறவும் அன்ன. (22)

உவம உருபு

270. போல மறுப்ப வொப்பக் காய்ப்ப
நேர வியப்ப நளிய நந்தக்
கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய
வொட்ட வொடுங்க வோட நிகர்ப்ப
வன்ன வாங்கு மான விறப்ப
வென்ன வுறழத் தகைய நோக்க
வெள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழவென்
றீரெட்டு மெட்டு மிருநான்கு முறையே
தத்த மரபிற் சாற்றுமுன் றுவமைக்கு
மொத்த வுருபா முரைத்தமுத் திறத்தினு
மொன்ற நடுங்க வேர வேற்ப
வென்ற நாட மாற்றப் போற்ப
வார வமர வனைய வற்றே
டேதிர வேய விசைய விகலத்
துணைப்ப மலையத் தூக்கே சேத்தொடு
கெழுதேர் நகைமிகு சிவணிக ரின்னவு
மின்னன பிறவு மெய்துத லுரிய.

இதுமேற்கூறிய உவமைகளை வரையறைவகையானும் அஃதின்மையானும் புலப்படுத்தும் உருபுகள் இவையென்கின்றது.

(இ-ள்.) போலவென்பது முதலிய பதினாறும் அன்னவென்பது முதலிய எட்டும் என்னவென்பது முதலிய எட்டும் முறையே தம்முடைய தம்முடைய வரலாற்றுமுறைமையானே முற்கூறிய உருபுபற்றியும் வடிவுபற்றியும் வரும் பண்புந் தொழிலும் பயனுமாகிய மூன்று உவமைக்கும் பொருந்திய உருபுகளாம் இங்ஙனங் கூறிய மூவகை உவமத்தின்கண்ணும் ஒன்றவென்பது முதல் இன்னவென்பது ஈறாகக் கிடந்த இருபத்தாறும் இவைபோல்வன பிறவும் உருபாதற்குப் பொருந்துதலுரியவாம். (எ-று.)

இங்ஙனம் வரையறுத்தற்கடப்பாடல்லது வேறு காரணம் இன்றென்பார் தத்தமரபிற் சாற்றுமென்றும், இவையும் இவை போல்வன பிறவும் உருபாமிடத்து வினையெச்சநீர்மையவாயும், பெயரெச்சநீர்மையவாயும், முற்றுநீர்மையவாயும், இடைச்சொன்னீர்மையயாயும், வருமென்பார் உருபென்றொழியாது உருபாமென்றுங் கூறினர்.

வரலாறு :—

தன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே. [ஐங். 41]

எனவும்,

மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா. [தொ. பொ. பக். 87]

எனவும்,

ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம். [பரிபாடல்]

எனவும்,

கணைக்கா ணெய்தல் காய்த்திய கண்ணியம்.
[தொல். பொருள். இளம். பக். 348]

எனவும்,

கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர். [அகம். கட.]

எனவும்,

தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி. [தொ. பொ. ப. 878]

எனவும், வண்ணம்பற்றியும்;

நீர்வார் நிகர்மலர் கடுப்ப. [அகம். 11]

எனவும்,

மோட்டிரும் பாறையீட்டுவட் டேய்ப்ப. [அகம். 5]

எனவும்,

வேய்மருள் பணைத்தோள் வில்லிழை நெகிழ. [ஐங். 318]

எனவும்,

உரல்புரை பாவடி. [கலி. 21]

எனவும்,

முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை.
[தொல். பொருள். பக். 877]

எனவும்,

பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்.
[தொல். பொருள். பக். 877]

எனவும்,

செந்தீ யோட்டிய வெஞ்சுடர்ப் பரிதி.
[தொல். பொருள். பக். 877]

எனவும்,

கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை.
[தொல். பொருள். பக். 877]

எனவும், வடிவுபற்றியும் வரும் பண்புவமையும்;

எரியகைந் தன்ன தாமரைப் பழனத்து. [அகம். 106]

எனவும்,

கயநாடு யானையின் முகம்மமர்ந் தாஅங்கு. [அகம். 6]

எனவும்,

புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்.
[பெரும்பாண். 269 - 70.]

எனவும்,

புலிநிறப்ப வொலிதோற்றி. [தொல். பொருள். பக். 874]

எனவும்,

புலியென்னக் கலிசிறந் துராஅய். [தொல். பொருள். பக். 874]

எனவும்,

செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை. [முருகு. அடி. 5]

எனவும்,

பொருகளிற் றெருத்திற் புலித்தகைப் பாய்த்துள்.
[தொல். பொருள். பக். 874]

எனவும்,

மானோக்க நோக்கு மடநடை பாயத்தார்.
[தொல். பொருள். பக். 874]

எனவும், வரும் தொழிலுவமையும்,

எழிலி வான மெள்ளினன் றருஉங்
கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்.
[தொல். பொருள். பக். 875]

எனவும்,

மழைவிளை தடக்கை வயவா ளெழிலி.
[தொல். பொருள். பக். 875]

எனவும்,

புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல.
[தொல். பொருள். பக். 875]

எனவும்,

விண்பொரு புகழ்விறல் வஞ்சி. [புறம். 11]

எனவும்,

கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி.[தொல். பொரு. இளம்.348]

எனவும்,

இருநிதி மதிக்கும் பெருவள் ளீகை.

[தொல். பொருள். பக். 875]

எனவும்,

வீங்குசுரை நல்லான் வென்ற வீகை.

[தொல். பொருள். பக். 875]

எனவும்,

விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும்

வரையாது சுரக்கு முரைசா ஞேன்றல்.

[தொல். பொருள். இளம். 348]

எனவும் வரும் பயனுவமையும் வந்தவாறு காண்க. நளிய நந்த என்பன வந்துழிக் காண்க.

ஒத்த என்ற மிகையானே இங்ஙனம் வரையறை கூறியவற்றுள்

கடல்போற் ஞேன்றல காடிறந் தோரே [அகம். 1]

என வடிவுவமத்தின்கண்ணும்

ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல [அகம். 22]

எனத் தொழிலுவமத்தின்கண்ணும்

அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின் [அகம். 1]

எனப் பயவுவமத்தின்கண்ணும் போலுமென்பதூஉம்,

பொன்னுரை கடுக்குந் திதலையர் [முருகு. 145]

என உருவுவமத்தின்கண்ணுங்

கார்மழை முழக்கிசை கடுக்கும் [அகம். 14]

என வினையுவமத்தின்கண்ணும்

விண்ணதி ரிமிழிசை கடுப்ப [மலைபடு. 2]

எனப் பயவுவமத்தின்கண்ணுங் கடுப்ப என்பதூஉஞ்,

செவ்வானன்னமேனி [அகம். 1]

என உருவுவமத்தின்கண்ணும்

இலங்குபிறை, யன்ன விலங்குவால் வையெயிறு[அகம்.கட]

என வடிவுவமத்தின்கண்ணும்

மாரி யன்ன வண்கை [புறம். 133]

எனப் பயவுவமத்தின்கண்ணும் அன்ன என்பதூஉங் கூறியவாறன்றிச் சிறுபான்மை பிறழ்ந்துவருதலுங் கொள்க. ஏனையவும் பிறழ்ந்துவருவன உளவேற் காண்க.

குன்றியுங் கோபமு மொன்றிய வுடுக்கை

[தொல். பொருள். பக் 872]

என உருவுபற்றியும்

வேயொன்று தோளொருபால்
வெற்பொன்று தோளொருபால்
[தொல். பொருள் பக். 872]

என வடிவுபற்றியும் வரும் பண்புவமத்தின்கண்ணும்

வேலொன்று கண்ணார்மேல் வேட்கைநோய் தீராமோ
கோலொன்று கண்ணொன்று கொண்டு.
[தொல். பொருள் பக். 872]

என வினையுவமத்தின்கண்ணும்

மழையொன்று வண்டடக்கை வள்ளியோர்ப் பாடி.
[தொல். பொருள் பக். 872]

எனப் பயவுவமத்தின்கண்ணும் ஒன்ற என்பதூஉம்,

படங்கெழு நாக நடுங்கு மல்குல்.
[தொல். பொருள் பக் 873]

என வடிவுபற்றிய பண்புவமத்தின்கண் நடுங்க என்பதூஉம்,

முத்தேர் முறுவலாய். [கலி. 28]

என உருவுபற்றிய பண்புவமத்தின்கண் ஏர என்பதூஉம்,

வாயென்றபவழம்.

என உருவுபற்றிய பண்புவமத்தின்கண் என்ற என்பதூஉம்,

வேயொடு நாடிய தோள். [தொல். பொருள் பக். 873]

என வடிவுபற்றிய பண்புவமத்தின்கண் நாட என்பதூஉம்

மணிமாற்றிய மாமேனி. [தொல். பொருள் பக். 872]

என உருவுபற்றிய பண்புவமைக்கண் மாற்ற என்பதூஉம்,

மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்.
[தொல். பொருள் பக். 872]

என வடிவுபற்றிய பண்புவமத்தின்கண் பொற்ப என்பதூஉம் வந்தன. இவற்றுள் ஒழிந்த உவமைபற்றிவந்தனவுங் காட்டாதொழிந்த உருபுகளும் வந்துழிக் காண்க.

இன்னபிறவாவன;—சீர், இற்று, ஐந்தாம் வேற்றுமையுருபாகிய இன் முதலியனவாம்.

பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிற
ரெச்சிற் கிமையாது பார்த்திருக்கு—மச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும். [நாலடி. 206]

எனச் சீர்வந்தது. பிறவும் வந்துழிக் காண்க.

'உவமைச் சொல்லே வரம்பிகந் தனவே'.

என்பவாகலின் எடுத்தோதியொழியாது இன்னபிறவும் என்றார். (23)

௯. உருவகவணி

271. உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினஃ துருவக மாகும்.

நிறுத்தமுறையானே உருவக அலங்காரங் கூறுவனவற்றுள் இஃது அதன் பொது இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்.) *உவமானப்பொருளையும் உவமேயப்பொருளையும் வேறுபாடொழிவித்து ஒன்றென்பதோர் உணர்வுதோன்ற ஒற்றுமைகொளுத்தின் அது மேற்கூறிய உருவகமென்னும் அலங்காரமாம். எ-று.* (24)

உருவக வகை

272. மாட்டேற் றுரைதொகூஉந் தொகையுரு வகமு
மீட்டது விரிந்த விரியுரு வகமுஞ்
சொற்றது தொகுத்துந் தொகாதுமொரு தொடரி
னுற்றுவரு தொகைவிரி யுருவகத் தானும்
பலபொரு ளுருவகப் படுப்பினப் பலவு
மியைவன புணர்க்கு மியையுரு வகமும்
வேட்டன வுருவகம் வேறுவே றியற்றி
யீட்டுதல் புரிந்த வியைபிலுரு வகமு
முக்குபொரு ளுறுப்பெலா முருவகஞ் செயிற்சில
நீக்கின செயும்விய னிலையுரு வகமு
மோர்ந்தடை யுருபிற் றுற்றதை யவற்றுற்
றோர்ந்துரு பிக்குஞ் சிறப்புரு வகமு
முருவகஞ் செய்ததற் குருமர பிவையென
விரியக் காட்டும் விருபகத் தானும்
பாங்கின துருவகப் படுத்தியது பாங்கிலாத்
தீங்குதரல் பிறிதினெனச் செயுஞ்சமா தானமு
முருவகஞ் செய்ததைப் பெயர்த்தும்வே றொன்று
வுருவகஞ் செயுமுரு வகவுரு வகமு
மொட்டிய வுறுப்பினொன் றுருவக மாகக்
கட்டுரை செயுமே காங்கவுரு வகமு
மெண்ணிய வவயவ மெவையுமுரு வகமாக்
கண்ணுதல் செயுமனே காங்கவுரு வகமு
முற்ற வுறுப்புறுப் புடையதெவ் வகையினு
முற்றவுரு வகஞ்செயு முற்றுரு வகமு
முக்கிய வுறுப்பே யுருவக மாக
வாக்குதல் செயுமவ யவவுரு வகமு

முற்றமா ரங்கியே யுருவக மாக
வாற்றல்சா லவயவி யுருவக மவற்றோ
டுவமை யேது வேற்றுமை விலக்கே
யவநுதி சிலேடையென் றவையு முளப்பட
வுளம்புகு நெறியா லுரைத்தமூ வேழும்
விளம்பிய வுருவக விரியெனப் படுமே.

இஃது உருவகவிரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) மாட்டேற்றுரைதொகூஉந் தொகையுருவகம் முதலாக ஊற்றமாரங்கியே உருவகமாக ஆற்றல்சால் அவயவியுருவகம் ஈறாகக் கிடந்த பதினொன்றோடு உவமை முதலாகச் சிலேடை ஈறாகக் கிடந்த ஆறுங் கூடத்தொகுதலான் உள்ளங்கொள்ளும் முறைமையாற் சொல்லப் பட்ட இருபத்தொன்றும் மேற்கூறிய உருவக அலங்காரத்தின் விரி யென்று சொல்லப்படும். (எ-று.)

மாட்டேற்றுரைதொகூஉந் தொகையுருவகம் வருமாறு :—

அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டுங்
கொங்கை முகிழுங் குழற்காருந்—தங்கியதோர்
மாதர்க் கொடியுளதா னண்பா வதற்கெழுந்த
காதற் குளதோ கரை. [தண்டி. பக். 60]

எனவரும். மீட்டதுவிரிந்த விரியுருவகம் வருமாறு :—

கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக
வங்கை மலரா வடிதளிராத்—திங்க
ளளிநின்ற மூர லணங்கா மெனக்கு
வெளிநின்ற வேனிற் றிரு. [ஷை 61]

எனவரும். இவ்விரண்டும் எல்லாவற்றிற்கும்பொது.

சொற்றதுதொகுத்துந் தொகாதுமொரு தொடரின் உற்றுவரு தொகைவிரியுருவகம் வருமாறு :—

வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டுவன்சொன் மாலை
யிடராழி நீங்குகவே யென்று. [பொய்கை. முதல். 1]

எனவரும்.

பலபொருளுருவகப் படுப்பினப்பலவும் இயைவன புணர்க்கும் இயையுருவகம் வருமாறு :—

செவ்வாய்த் தளிரு நகைமுகிழுங் கண்மலரு
மைவா ரளக மதுகரமுஞ்—செவ்வி

யுடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்
துடைத்தாரே யன்றோ துயர். [தண்டி. பக். 62]

எனவரும். இதனுட் தளிர்முதலியன தம்முள் இயைபுடைமையின் இப்பெயர்த்தாயிற்று.

வேட்டனவுருவகம் வேறுவேறியற்றி ஈட்டுதல்புரிந்த இயைபிலுருவகம் வருமாறு :—

தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத்—தான
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு. [ஷை 63]

எனவரும்.

ஊக்குபொருளுறப்பெலாம் உருவகஞ்செயிற்சில நீக்கின செய்யும் வியனிலையுருவகம் வருமாறு :—

செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க
மைவா ணெடுங்கண் மதர்த்துலவச்—செவ்வி
நறவலருஞ் சோலைவாய் நின்றதே நண்டா
குறவர் மடமகளாங் கொம்பு. [தண்டி. பக். 63]

எனவரும்.

ஓர்ந்தடையுருபிற் றுற்றதையவற்றாற் றேர்ந்துருபிக்குஞ் சிறப்புருவகம் வருமாறு :—

விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ காணுச்
சுரநதிபா யுச்சி தொடுத்த—வரிதிருத்தாள்
கூம்பாக வெப்பொருளுங் கொண்டு பெருநாவா
யாம்பொலிவிற் றாயினதா லன்று. [ஷை 64]

எனவரும்.

உருவகஞ்செய்ததற்கு உறுமரபிவையென விரியக்காட்டும் விரூபகம் வருமாறு :—

தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்துள் வைகாது
மண்மருவு தாண்மேன் முகிழாது—நண்ணி
யிருபொழுதுஞ் செவ்வி யியல்பாய் மலரு
மரிவை வதனும் புயம். [ஷை 64]

எனவரும்.

பாங்கின தருவகப் படுத்தியதுபாங்கிலாத் தீங்குதரல்பிறிதினெனச் செய்யுஞ் சமாதானவுருவகம் வருமாறு :—

கைகாந்தள் வாய்குமுதங் கண்ணெய்தல் காரிகையீர்
மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்க—மிவ்வனைத்தும்

வன்மைசேர்ந் தாவி வருத்துவது மாதவமொன்
றின்மையே யன்றோ வெமக்கு. [தண்டி. பக். 65]

எனவரும்.

உருவகஞ்செய்ததைப் பெயர்த்தும்வேறொன்று உருவகஞ் செய்யும் உருவகவுருவகம் வருமாறு :—

கன்னிதன் கொங்கைக் குவடாங் கடாக்களிற்றைப்
பொன்னெடுந்தோட் குன்றே புனைகந்தா—மன்னவநின்
னாகத் தடஞ்சே வகமாக யானைணைப்பல்
சோகித் தருளே றவண்டு. [தண்டி. பக். 65]

எனவரும்.

ஒட்டியவுறுப்பினொன்று உருவகமாகக் கட்டுரை செய்யும் ஏகாங்க வுருவகம் வருமாறு:—

காதலனைத் தாவென் றலவுங் கருநெடுங்க
ணேதிலனு லென்னென்னு மின்மொழித்தேன்—மாதர்
மருண்ட மனமகிழ்ச்சி வாண்முகத்து வந்த
விரண்டினுக்கு மென்செய்கோ யான். [தண்டி. பக். 66]

எனவரும்.

எண்ணியவவயவம் எவையுமுருவகமாக் கண்ணுதல் செய்யும் அநேகாங்கவுருவகம் வருமாறு:—

கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கண்ணென்னு
மைத்தடஞ்சேன் மைந்தர் மனங்கலக்க—வைத்ததோர்
மின்னுளதான் மேக மிசையுளதான் மற்றதுவு
மென்னுளதா னண்பா வினி. [தண்டி. பக். 66]

எனவரும்.

உற்றவுறுப்புறுப்பு உடையதெவ்வகையினும் முற்றவுருவகஞ்செயும் முற்றுருவகம் வருமாறு:—

விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல்—பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து. [தண்டி. பக். 67]

எனவரும். எவ்வகையினும் என்றதனுனே அவயவ வவயவியேயன்றிப்,

பவழவாய்ச் செறுவு தன்னு ணித்திலம் பயில வித்திக்
குழவிநா றெழுந்து காளைக் கொழுங்கதி ரீன்று பின்னுட்
கிழவுதான் விளைக்கும் பைங்கூழ் கேட்டிரேற் பிணிசெய்பன்மா
வுழவிர்காண் மேயுஞ்சீல வேலியுய்த் திடுமி னென்றான்.
[சீவக. 379]

என இதனுட் பிணிசெய்பன்மா மேயாமற்பொருட்டெனக் கருமத்தினை யுஞ் சிலவேலியெனக் கருவியையும் ஒருங்கு உருவகஞ் செய்தலும் முற்று ருவகமெனவும்,

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். [குறள். 10]

எனவும்,

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து. [குறள். 24]

எனவும் முறையே கருமமாகக் கருவியாக ஒன்றனை உருவகஞ்செய்து ஒன்றனை ஆகாது கூறுதல் ஏகதேசவுருவகமெனவும் பெயர் பெறுதல் கொள்க.

வாக்கியவுறுப்பே உருவகமாக ஆக்குதல் செய்யும் அவயவவுருவகம் வருமாறு:—

புருவச் சிலைகுனித்துக் கண்ணம்பெ னுள்ளத்
துருவத் துரந்தா ரொருவ—ரருவி
பொருங்கற் சிலம்பிற் புனையல்குற் றேர்மேன்
மருங்குற் கொடிநுடங்க வந்து. [தண்டி. பக். 67]

எனவரும்.

வாற்றமாரங்கியே உருவகமாக ஆற்றல்சால் அவயவியுருவகம் வருமாறு:—

வார்புருவங் கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய
வேர்வரும்பச் சேந்து விழிமதர்ப்ப—மூர
லளிக்குந் தெரிவை வதனம் புயத்தாற்
களிக்குந் தவமுடையேன் கண். [தண்டி. பக். 68]

எனவரும்.

உவமையுருவகம் வருமாறு:—

மதுமகிழ்ந்த மாதர் வதன மதிய
முதய மதியமே யொக்கு—மதிதளர்வே
வெம்மை தணிய மதராக மேமிருக்குஞ்
செம்மை யொளியாற் றிகழ்ந்து. [தண்டி. பக். 68]

எனவரும். ஏதுவுருவகம் வருமாறு:—

மாற்றத்தாற் கிள்ளை நடையான் மடவன்னந்
தோற்றத்தாற் றண்ணென் சுடர்விளக்கம்—போற்று
மியலான் மயிலெம்மை யிந்நீர்மை யாக்கும்
மயலார் மதர்நெடுங்கண் மான். [தண்டி. பக். 69]

எனவரும். வேற்றுமையுருவகம் வருமாறு:—

வையம் புரக்குமான் மன்னவநின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாருங்—கையா
மிருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கு
மொருகார் பருவ முடைத்து. [தண்டி. பக். 69]

எனவரும். விலக்குருவகம் வருமாறு:—

வல்லி வதன மதிக்கு மதித்தன்மை
யில்லை யுளதே லிரவன்றி—யெல்லை
விளக்கு மொளிவளர்த்து வெம்மையா லெம்மைத்
துளக்கு மியல்புடைத்தோ சொல். [தண்டி. பக். 70]

எனவரும். அவநுதியுருவகம் வருமாறு:—

பொங்களக மல்ல புயலே யிவையிவையுங்
கொங்கை யிணையல்ல கோங்கரும்பே—மங்கைநின்
மையரிக்கண் ணல்ல மதர்வண் டிவையிவையுங்
கையல்ல காந்தண் மலர். [தண்டி. பக். 70]

எனவரும். சிலேடையுருவகம் வருமாறு:—

உண்ணெகிழ்ந்த செவ்வித்தாய்ப் பொற்றோட் டொளிவளரத்
தண்ணளிசூழ்ந் தின்பந் தரமலர்ந்து—கண்ணெகிழ்ந்து
காதல் கரையிறப்ப வாவி கடவாது
மாதர் வதனம் புயம். [தண்டி. பக். 71]

எனவரும். (25)

உருவகவுவமைகட்குப் புறநடை

273. உருவக முவமை யெனவிரு திறத்தவு
நிரம்ப வுணர்த்தும் வரம்புதமக் கின்மையிற்
கூறிய நெறியின் வேறுபட வருபவை
தேறினர் கோட றெள்ளியோர் கடனே.

இது மேலனவற்றிற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) உருவகமும் உவமையுமென்னும் இரண்டுதிறத்து அலங்காரமும் ஒழிவின்றியுணர்த்தும் வரையறை தமக்கின்மையாற் சொல்லப்பட்டநெறியின் வேறுபட வருவனவற்றை அறிந்து அவற்றின்பாற் சார்த்திக் கோடல் அறிவுடையோரது கடன். (எ-று.)

ஈண்டு உருவகம்முற்கூறியது அதிகாரத்தாலெனக் கொள்க.

ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறுக்
காருடைய பீலி கடிகாவா—நீர்வண்ண

னத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு. [தண்டி. பக். 73]

என்பது இயைபுருவகத்தின்பாற்படுமெனவும்,

மழலைவாய் நவ்வி மதர்நெடுங்கண் மஞ்ஞை
குழலின் பொறைசுமந்த கொம்பர்—சுழல்கலவந்
தாங்கிய வன்னந் தடங்கொங்கை யாரமுதந்
தேங்கொள் கமலத் திரு. [தண்டி. பக். 74]

என்பது சிறப்புருவகத்தின்பாற் படுமெனவும்,

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. [குறள். 872]

என்பது ஏதுவுருவகத்தின்பாற்படுமெனவும்,

மலையிற் பயிலா மடமஞ்ஞை வாரி
யலையிற் பிறவா வமுதம்—விலையிட்
டளவாத நித்தில மாராத தேறல்
வளவாண் மதர்நெடுங்கண் மான். [தண்டி. பக். 73]

என்பது விலக்குருவகத்தின்பாற் படுமெனவும்,

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு. [குறள். 408.]

என்பது தேற்றவுவமையின்பாற் படுமெனவும்,

முத்துக்கோத் தன்ன முறுவல் முறுவலே
யொத்தரும்பு முல்லைக் கொடிமருங்குன்—மற்றதன்மேல்
விண்ணளிக்குங் கார்போன் விரைக்கூந்தன் மெல்லியலார்
தண்ணளிக்கு முண்டோ தரம். [தண்டி. பக். 77.]

என்னுமிவ்வொப்புமையுவமை விகாரவுவமத்தின்பாற் படுமெனவும்,

அடிநோக்கி ஞாழ்கடல் வண்ண னவன்றன்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரான்—முடிநோக்கித்
தேர்வளவ னகல் தெளிந்தேன்றன் சென்னிமே
லாரலங்கற் றோன்றியது கண்டு. [தண்டி. பக். 76.]

என்பது பலவயிற்போலியுவமையின்பாற் படுமெனவும்,

ஈர்ந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கு சுணங்குபிதிர்ந்

தியாணர்க் கோங்கின் னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட்டுப் பெண்ணை வளர்த்த நுங்கின்
சேறினின் குருமெ யிற்றின். [சிறுபா. 19-28.]

என்னும் இச்சந்தானவுவமை மாலையுவமையின்பாற் படுமெனவும்,

பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே. [புறம். 107.]

என்பது விலக்குவமையின்பாற்படுமெனவும் அமைத்துக்கொள்க. இன்னும் பிறவாற்றான் வருவனவுளவேல் அவற்றையும் அமையுமாறு அறிந்து அமைத்துக்கொள்க.

அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே.
[தொல். பொருள் சூ. 311]

என்பவாகலின்-இவற்றுள் ஒப்புவமை

முத்துக்கோத் தன்ன முறுவல் முறுவலே
யொத்தரும்பு முல்லைக் கொடிமருங்குல் [தண்டி. பக். 77]

என உவமைக்குவமையாய் அடுக்கிவருதல் வரையப்படுமெனின், படாது;

வெண்டிங்கள் போன்றுளது வெண்சங்கம் வெண்சங்கின்
வண்டியங்கு தாழை வளர்கோடு.

என்றாற்போலாது பயப்பாடுண்மையினென்பது.

உருவகமும் உவமையும் ஓரினமாக்கிப் புறனடைப்படுத்தமையான் உருவகத்திற்கு ஓதிய இலக்கணம் உவமையும், உவமைக்கு ஓதிய இலக்கணம் உருவகமும் பெறுதலுங் கொள்க.

மன்றற் குழலா ருயிர்மேன் மதன்கடவுந்
தென்றற் கரிதடக்குந் திண்கணையம்—மன்றவரைக்
கங்குற் கடலிற் கரையேற்று நீள்புணையாம்
பொங்குநீர் நாடன் புயம். [தண்டி- பக். ʟ4.]

என்பது உவமைபோல அற்புதம் அடுத்துவந்த உருவகம். பிறவும் வந்த வழிக் கண்டுகொள்க.

இனிப் பண்புபற்றி உவமிக்குங்காற்,

கலப மாமயி லெருத்திற் கடிமல ரவிழ்ந்தன காயா
வுலக மன்னவன் றிருநா ளொளிமுடி யணிந்துநின் றவர்போற்
பலவும் பூத்தன கோங்கம் பைந்துகின் முடியணிந் தவர்பி
னுலவு காஞ்சுகி யவர்போற் பூத்தன மரவமங் கொருங்கே.
[சீவக. 1558]

என்றாற்போலன்றிக்

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே. [குறுந். 47.]

என வேறுபடவருதலும் அமைத்துக்கொள்க. பிறவும் அன்ன. (26)

ச. தீவகவணி

274. குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொ
லொருவயி னின்று பலவயிற் பொருடரிற்
றீவக மாகு மதுவே செய்யுளின்
மூவிடத் தியலு மென்மனார் புலவர்.

இது நிறுத்தமுறையானே தீவகமாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) குணமுதலிய நான்கனுள் யாதானுமொன்றனைக் குறித்து ஒரு சொல் ஓரிடத்தினின்று பலவிடத்துநின்ற சொற்களோடு பொருந்தி அப்பொருளைவிளக்குமாயின் மேற்கூறிய தீவகமென்னும் அலங்காரமாம். இது செய்யுளின்கண் முதலிடை கடையென்னும் மூன்றிடத்தும் புலப்படுமென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

எனவே, முதனிலைத்தீவகம் இடைநிலைத்தீவகங் கடைநிலைத்தீவகமென மூன்றாம். அவை குணந் தொழில் சாதி பொருளென்பனவற்றோடு உறழப் பன்னிரண்டாம். அவற்றுட் குணமுதனிலைத்தீவகம் வருமாறு:—

சேந்தன வேந்தன் றிருநெடுங்கண் டெவ்வேந்த
ரேந்து தடந்தோ ளிழிகுருதி—பாய்ந்த
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பு
மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து. [தண்டி. பக். 80]

எனவரும். தொழின்முதனிலைத்தீவகம் வருமாறு:—

சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்பும்—திருமான
வாரந் தழுவுந் தடந்தோ ளகளங்கன்
கோரந் தொழுத கொடிக்கு. [தண்டி. பக். 81.]

எனவரும். சாதிமுதனிலைத்தீவகம் வருமாறு:—

தென்ற லரங்கன் றுணையாஞ் சிலகொம்பர்
மன்றற் றலைமகனும் வான்பொருண்மேற்—சென்றவர்க்குச்
சாற்றவிடுந் தூதாகுந் தங்கும் பெரும்புலவி
யாற்ற வருவிருந்து மாம். [தண்டி. பக். 81.]

எனவரும். பொருண்முதனிலைத்தீவகம் வருமாறு:—

முருகவேள் சூர்மா முதறடிந்தான் வள்ளி
புரிகுழன்மேன் மாலை புனைந்தான்—சரணளித்து

மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலா னிடைகிழித்தான் வெற்பு. [தண்டி. பக். 82.]

எனவரும். குணவிடைநிலைத்தீவகம் வருமாறு:—

எடுத்த நிரைகொணா வென்றனுமே வென்றி
வடித்திலங்கு வைவாளை வாங்கத்—துடித்தனவே
தண்ணார மார்புந் தடந்தோளும் வேல்விழியு
மெண்ணாத மன்னர்க் கிடம். [,, பக். 83.]

எனவரும். தொழிலிடைநிலைத்தீவகம் வருமாறு:—

எடுக்குஞ் சிலைநின் னெதிர்ந்தவருங் கேளும்
வடிக்கொண் டெரந்துணிய வாளி—தொடுக்குங்
கொடையுந் திருவருளுங் கோடாத செங்கோ
னடையும் பெரும்புலவர் நா. [,, பக். 83.]

எனவரும். சாதியிடைநிலைத்தீவகம் வருமாறு:—

கரமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலைய மாகு—மரவரைமே
ஞாண மாற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணும் புனைமாலை யாம். [,, பக். 84.]

எனவரும். பொருளிடைநிலைத்தீவகம் வருமாறு:—

மானமருங் கண்ணாண் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான்—யானைமுக
னோட்டினான் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டினா னம்மேல் வினை. [,, பக். 84]

எனவரும். தொழிற்கடைநிலைத்தீவகம் வருமாறு:—

துறவுளவாச் சான்றோ ரினிவரவுந் தூய
பிறவுளவா வூனளா வூணும்—பறைகறங்கக்
கொண்டா னிருப்பக் கொடுங்குழையா டெய்வமுமொன்
றண்டாக வைக்கற்பாற் றன்று. [,, பக். 85.]

எனவரும். பொருட்கடைநிலைத்தீவகம் வருமாறு:—

புறத்தன வூரன நீரன மாவின்
றிறத்தன கொற்சேரி யவ்வே—யறத்தின்
மகனை முறைசெய்தான் மாவஞ்சி யாட்டி
முகனை முறைசெய்த கண். [,, பக். 86.]

எனவரும். ஏனைய வந்துழிக்காண்க.

ஈண்டுக் கூறியகுணமும் காலமும் புணர்ந்துநின்றமையில் தொழிலன்றோவெனின் இவ்வாறே குணமுந் தொழிலுந் தோன்றுங்கால

காலம் புணர்ந்துநிற்றல் ஒக்குமேனுங் குணம் பொருளது புடைபெயர்ச்சி யாய் நீங்கிநிற்குந் தொழில்போலாது பொருட்குப் பண்பாய்த் தனக்கு வேறுபண்பின்றி அப்பொருளை நீங்காதுநிற்குஞ் சிறப்பாற் குணத்தீவக மென்றார். (27)

இதுவுமது

275. மாலை விருத்த மொருபொருள் சிலேடை
யுவமையுரு வகத்தோடு மொன்றுமா ரதுவே.

இது மேலதற்கோர் ஒழிபு கூறுகின்றது

(இ-ள்.) மாலை முதல் உருவகம் ஈறாகக் கிடந்த ஆறனோடும் பொருந் தும் மேற்கூறிய தீவக அலங்காரம். (எ-று.)

மனைக்கு விளக்க மடவாண் மடவா
டனக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகழ்சா லுணர்வு. [நான்மணி. 103.]

இது மாலாதீவகம்.

வரிவண்டு நாணு மதுமல ரம்பாப்
பொருவெஞ் சிலைக்குப் பொலிவும்—பிரிவின்
விளர்க்கு நிறமுடையார் தம்மேனி மெலிவும்
வளர்க்கு மலயா நிலம். [தண்டி. பக். 87.]

இது விருத்தாதீவகம். ஒருபொருள் இரண்டுகுணஞ் செய்தமையின் அப்பெயர்த்தாயிற்று.

வியன்ஞாலஞ் சூழ்திசைக ளெல்லாம் விழுங்கு
மயலாத் துணைநீத் தகன்ற—டுயிர்பருகும்
விண்கவரும் வேரிப் பொழில்புதைக்கு மென்மயில்கள்
கண்கவரு மீதெழுந்த கார். [தண்டி. பக். 88.]

இஃது ஒரு பொருட்டீவகம். ஒரு பொருட்டிறமே கொண்டுமுடிதலின் இவ்வொருபொருட்டீவகம் பொருட்டீவகத்தின் வேறாயிற்று.

மான்மருவி வாளரிகள் சேர்ந்து மருண்டுள்ளந்
தான்மறுக நீண்ட தகைமையவாம்—கான
வழியு மொருதனிநாம் வைத்தகலும் மாதர்
விழியுந் தருமான் மெலிவு. [தண்டி. பக். 88.]

இது சிலேடைத்தீவகம்.

முன்னங் குடைபோன் முடிநா யகமணிபோன்
மன்னுந் திலகம்போல் வாளிரவி—பொன்னகலந்

தங்கு கவுத்துவம்போ லுந்தித் தடமலர்போ
லங்க ணுலகளந்தார்க் காம். [தண்டி. பக். 89.]

இஃது உவமான தீவகம்.

கானற் கயலாம் வயலிற் கமலமா
மேனற் கருவிளையா மின்புறவின்—மானுங்
கடத்துமேல் வேடர் கடுஞ்சரமா நீங்கிக்
கடத்துமேன் மெல்லியலாள் கண். [தண்டி. பக். 89.]

இஃது ரூபகதீவகம். பிறவும் அன்ன. நீங்கிக் கடத்துமேலென்பதற்கு நெஞ்சமே இவளைத் தனியேயிருத்திப் பிரிந்துவிட்டுப்போவோமாயின் எனப் பொருளுரைத்துக் கொள்க. (28)

ரு. பின்வரு நிலை

276. முன்வரு சொல்லும் பொருளும் பலவயிற்
பின்னும் வருமெனிற் பின்வரு நிலையே.

இது நிறுத்தமுறையானே பின்வருநிலையென்னும் அலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) ஒரு செய்யுளுள் முன்னர்வந்த சொல்லே பின்னர்ப் பல இடத்துவரினும், முன்னர்வந்த பொருளே பின்னர்ப் பல இடத்துவரினும், அது பின்வருநிலையென்னும் அலங்காரமாம் (எ-று.)

மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோ ளாதரித்த மாலையார்—மாலிருள்சூழ்
மாலையின் மால்கட லார்ப்ப மதன்றொடுக்கு
மாலையின் வாளி மலர். [தண்டி. பக். 90.]

இது சொற்பின் வருநிலை. மால் - மயக்கம். மால் - அரி. மாலை - தொடையல். மால்-பெருமை. மாலை-இயல்பு. மாலிருள் - மயங்கியவிருள். மாலை - அந்தி. மால்கடல் - கருங்கடல். மாலை - இடையறுமை.

அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை—மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தட் குலை. [தண்டி. பக். 91.]

இது பொருட்பின்வருநிலை. என்னை? இவ்வனைத்தும் மலர்தற் பொருளவாகலின்.

வருவதென்றது, வருமெனி, னென்ற மிகையானே முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவயின் ஒருங்குவருமாயின் அது சொற்பொருட்பின்வருநிலையெனப் பெயர் பெறுதலுங் கொள்க.

வரலாறு.:—

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவார்
வைகலும் வைகற்றம் வாணாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். [நாலடி. 39.]

எனவரும்.

இன்னும் இவ்விலேசானே பிற அலங்காரங்களோடு கூடி வருதலுங் கொள்க.

செங்கமல நாட்டஞ் செழுந்தா மரைவதனம்
பங்கயஞ் செவ்வாய் பதுமம்போற்—செங்கரங்க
ளம்போ ருகந்தா ளரவிந்த மாரனூர்
தம்போ ருகந்தா டனம். [தண்டி. பக். 92.]

இஃது உவமானப்பொருட்பின்வருநிலை. ஏனையவற்றோடு வருவன வந்துழிக் காண்க. (29)

௩. முன்ன விலக்கணி

277. முன்னத்தின் மறுப்பின் முன்ன விலக்கது
மூவகைக் காலமு மேவிய தாகிப்
பொருள்குணங் காரணங் காரியம் புணரும்.

நிறுத்தமுறையானே முன்னவிலக்கலங்காரங் கூறுவனவற்றுள் இஃது அதன் பொது இலக்கணமும் அதன் திறனுங் கூறுகின்றது.

(இ-ள்.) ஒரு பொருளைக் குறிப்பினுன் விலக்கின் முன்னவிலக்கென்னும் அலங்காரமாம். அவ்வலங்காரந்தான் மூவகைக்காலத்தோடும் பொருந்திப் பொருள் முதலிய நான்கனோடுங் கூடி நடக்கும். (எ-று.)

பொருட் பொலிவுஞ் செய்யுட் சிறப்பும் நோக்கிக் குறிப்பினை எடுத்தோதினுரேனும் மறுப்பதென்னுது, மறுப்பி, னென்ற மிகையான் அதன் மறுதலையாகிய வெளிப்படையான் மறுப்பதூஉங் கொள்க.

வரலாறு:—

பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின்
மேலன்று கண்டுயின்றாய் மெய்யென்ப—ராலன்று
வேலைநீ ரதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல். [பொய்கை. முதல் 99.]

இஃது இறந்தவினைவிலக்கு.

மாதர் நுழைமருங்கு னேவ மணிக்குழைசேர்
காதின் மிசைநீலங் கைபுனைவீர்—மீதுலவு
நீணீல வாட்க ணெடுங்கடையே செய்யாவோ
நாணீலஞ் செய்யு நலம். [தண்டி. பக். 94.]

இது நிகழ்வினைவிலக்கு.

முல்லைக் கொடிநடுங்க மொய்காந்தள் கைகுலைப்ப
வெல்லை யினவண் டெழுந்திரங்க—மெல்லியன்மேற்
றீவாய் நெடுவாடை வந்தாற் செயலறியேன்
போவா யொழிவாய் பொருட்கு. [தண்டி. பக். 93.]

இஃது எதிர்வினை விலக்கு. எல்லை - ஒளி

கண்ணு மனமுங் கவர்ந்தவ ளாடிடமென்
றண்ண லருளு மடையாளந்—தண்ணிழலின்
சுற்றெல்லை கொண்டிலவுஞ் சோதித் திரளல்லான்
மற்றில்லை காணும் வடிவு. [தண்டி. பக். 94.]

இது பொருள் விலக்கு. அடையாளத்தண்ணிழல், அடையாளந்தண்ணிழலென மெலிந்துநின்றது.

மாதர் துவரிதழ்வாய் வந்தெ னுயிர்கவருஞ்
சீத முறுவல் செயலழிக்கு—மீதுலவி
நீண்ட மதர்விழியென் னெஞ்சங் கிழித்துலவும்
யாண்டையதோ மென்மை யிவர்க்கு. [தண்டி. பக். 95.]

இது குண விலக்கு.

மதரரிக் கண்சிவப்ப வார்புருவங் கோட
வதரந் துடிப்ப வணிசேர்—நுதல்வியர்ப்ப
நின்பா னிகழ்வனகண் டஞ்சாதா வென்னெஞ்ச
மென்பாற் றவறின்மை யால். [தண்டி. பக். 95.]

இது காரணவிலக்கு.

மன்னவர் சேயா மயிலகவி யாடலும்
பொன்மலருங் கொன்றையும் பூந்தளவின்—மென்மலரு
மின்னுயிரா நீண்முகிலு மெய்யென்று கொள்வதே
லென்னுயிரோ வின்னு முளது. [தண்டி. பக். 95.]

இது காரியவிலக்கு. (30)

இதுவுமது

278. வன்சொல் வாழ்த்துத் தலைமை யிகழ்ச்சி
துணைசெயன் முயற்சி பரவச முபாயங்
கையறு லுடன்படல் வெகுளி யிரங்க
லைய மென்ற வவைபதின் மூன்றேடும்
வேற்றுப்பொருள் சிலேடை யேதுவு முளப்பட
மேற்கூ றியவதன் விரியீ ரெட்டே.

இஃது அதன்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) வன்சொற் சொல்லி விலக்குவதூஉம் வாழ்த்தி வைத்து விலக்குவதூஉம் தன்பாற் தலைமைதோன்றக் கூறி விலக்குவதூஉம் விலக்குவதற்கு ஏதுவை இகழ்ந்து விலக்குவதூஉம் துணை செய்வாரைப் போலக் கூறி விலக்குவதூஉம் முயற்சிதோன்றக்கூறி விலக்குவதூஉந் தன்வசமல்லாமை தோன்றக் கூறி விலக்குவதூஉம் ஒருபாயங் காரணமாகக் கூறி விலக்குவதூஉம் வேண்டிய பொருண்மேல் முயலும் ஒழுக்கமின்மைதோன்றக் கூறி விலக்குவதூஉம் உடன்பட்டார்போல விலக்குவதூஉம் வெகுளிதோன்றக் கூறி விலக்குவதூஉம் இரங்கல் தோன்றக் கூறி விலக்குவதூஉம் ஐயுற்றதனை விலக்குவதூஉமென்று சொல்லப்பட்ட பதின்மூன்றும் வேற்றுப்பொருள்விலக்குஞ் சிலேடைவிலக்கும் ஏதுவிலக்குமாகிய மூவகைவிலக்கும் உளப்பட முற்கூறிய முன்னவிலக்கென்னும் அலங்காரத்தின் விரி பதினாறும். (எ-று.)

வரலாறு:—

மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு
தையலை நாடத் தகுநினக்கு— நெய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்
கொள்ள வுழலுமாங் கூற்று. [தண்டி. பக். 84.]

எனவும், வள்ளல், அண்மைவிளி.

செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க—வெல்லு
மடற்றோர் விடலை யகன்றுறைவ தியாங்கவ்
விடத்தே பிறக்கவி யாம். [,, 97.]

எனவும், அகன்றுறைவது எவ்விடத்தே சொலல்வேண்டும் யாங்கள் அவ்விடத்தே பிறப்பேமாக என்றாள், இறக்குங்காலத்து உண்டாகிய நினைவு பிறந்தகாலத்துக் கூடுமென்பதை நோக்கி.

பொய்ம்மை நெறிதீர் பொருளு மிகப்பயக்கு
மெம்முயிர்க்கு மேது மிடரில்லை—வெம்மைதீர்ந்
தேக வினிய நெறியணிய வென்றாலும்
போக லொழிவாய் பொருட்கு. [,, பக். 97.]

எனவும்,

ஆசை பெரிதுடையே மாருயிர்மே லப்பொருண்மே
லாசை சிறிது மடைவிலமாற்—றேசு
வழுவா நெறியின் வருபொருண்மே லண்ண
லெழுவா யொழிவா யினி. [,, பக். 98.]

எனவும்,

விளைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெங்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே—விளைதேன்
புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற்
கிடையூறு வாராம லேகு. [தண்டி. பக். 98.]

எனவும்,

மல்லணிந்த தோளா யிதென்கொலோ வான்பொருண்மேற்
செல்க விரைந்தென் றுளந்தெளிந்து—சொல்லுதற்கே
யேன்று முயல்வலியா னேகனீ யென்றிடையே
தோன்றுகின்ற தென்வாயிற் சொல். [,, பக். 99]

எனவும்,

செல்கை திருவுளமேல் யானறியேன் றேங்கமழ்தார்
மல்லகலந் தங்கு மதர்விழியின்—மெல்லிமைக
ளொக்கு விலக்குமே லேவா ளிவள்காதல்
போக்கி யகல்வாய் பொருட்கு. [,, பக். 99]

எனவும்,

இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே யிளவேனின்
மன்னவனுங் கூற்றுவனும் வந்தணைந்தா—லன்னோர்
தமக்கெம்மைத் தோன்றாத் தகைமையதோர் வினைசை
யெமக்கின் றருள்புரிந்தே யேகு. [,, பக். 100]

எனவும்,

வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
யார்த்த வறிவில்லை யம்பலத்துக்—கூத்துடையான்
சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழித்து. [,, பக். 100]

எனவும்,

அப்போ தடுப்ப தறியே னருள்செய்த
விப்போ திவளு மியைகின்று—டப்பிற்
பொருளோ புகழோ தரப்போதிர் மாலை
யிருளோ நிலவோ வெழும். [,, பக். 101]

எனவும்,

வண்ணங் கருக வளைசரிய வாய்புலர
வெண்ணந் தளர்வே மெதிர்நின்று—கண்ணின்றிப்
போதல் புரிந்து பொருட்காதல் செய்வீரால்
யாதும் பயமிலேம் யாம். [,, பக். 101]

எனவும்,

ஊசெ ருழிலிழக்கு மொப்பு மயிலிழக்கும்
வாசஞ் சுனையிழக்கும் வள்ளலே—தேசு
பொழிலிழக்கு நாளையிப் பூங்குழலி நீங்க
வெழிலிழக்கு மந்தோ விவண். [தண்டி. பக். 10]

எனவும்,

மின்னோ பொழிலின் விளையாடு மிவ்வுருவம்
பொன்னோ வெனுஞ்சுணங்கிற் பூங்கொடியோ—வென்னோ
திசையுலவுங் கண்ணுந் திரண்முலையுந் தோளு
மிசையிருளுந் தாங்குமோ மின். [,, பக். 102]

எனவும்,

தண்கவிகை யானுலகந் தாங்கு மநபாயன்
வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை—யுண்டோ
மதியத் துடனிரவி வந்துலவும் வானிற்
பொதியப் படாத பொருள். [,, பக். 103]

எனவும்,

அம்போ ருகஞ்செற் றமுத மயமாகி
வம்பார் முறுவ லொளிவளர்க்க—விம்பர்
முகைமதுவார் கோதை முகமுண் டிலகின்
மிகைமதியும் வேண்டுமோ வேறு. [,, பக். 103]

எனவும்,

பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தார் தாமே கவர்தலா—னீதி
யடுத்துயர்ந்த சீர்த்தி யநபாயா யார்க்குங்
கொடுத்தியெனக் கொள்கின் றிலேன். [,, பக். 103]

எனவும் முறையே காண்க. பிறவும் அன்ன.

வேற்றுப்பொருள்வைப்புமுதலிய அலங்காரங்கள் மூன்றோடு முன்ன விலக்கலங்காரங்கூடி வருதல்பற்றி இவற்றை வேறு பிரித்தோதினார். (31)

எ. வேற்றுப்பொருள் வைப்பணி.

279. முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்ன ரோருபொரு ளுலகறி பெற்றியி
னேற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பது
முழுவதுஞ் சேற லோருவழிச் சேறன்
முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்
கூடா வியற்கை கூடு மியற்கை
யிருமை யியற்கை விபரீதப் படுதலென்
றினைய வோரெட் டியல்பின தென்ப.

நிறுத்தமுறையானே இது வேற்றுப்பொருள் வைப்பின் பொது விதியும் அதன் விரியுங் கூறுகின்றது.

(இ-ள்.) முன் ஒரு பொருட்டிறந் தொடங்கிப் பின்னர் அதனை முடித்தற்கு ஆற்றலுடைய பிறிதொருபொருளை உலகறியும் இயல்பான் எறிட்டுவைத்து மொழிவது வேற்றுப்பொருள் வைப்பென்னும் அலங்காரமாம். அவ்வேற்றுப்பொருள் வைப்பு ஒருதிறம் உரைத்தால் அத்திறம் எல்லாவற்றின்மேலும் முற்றச்செல்ல வைத்தலும் அவ்வாறின்றிச் சிலவற்றின்மேற் செல்லவைத்தலும் தம்முள் மாறுபட்டுத் தோன்றவைத்தலும் முன்னர் வைத்தபொருளையும் பின்னரதனையும் ஒருசொற்றொடர்பான் முடியவைத்தலும் கூடாத இயல்பைக் கூடுவதாக வைத்தலும் கூடு மியல்பைக் கூடுவதாக வைத்தலும் கூடாத இயல்பையுங் கூடுமியல்பையுங் கூடுவதாக ஒருங்கு வைத்தலும் நல்வினைப்பயன் தீதாகவுந் தீவினைப்பயன் நன்றாகவும் வைத்தலுமென்று சொல்லப்பட்ட இத்தன்மையவாகிய எண் வகைத் திறத்தினையுடைத்தாம். (எ-று.)

வரலாறு:—

புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
யிறவாது வாழ்கின்றார் யார் [தண்டி. பக். 105.]

எனவும்,

எண்ணும் பயன்றாக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்குந்—தண்ணறுந்தேன்
பூத்தளிக்குந் தாராய் புகழாளர்க் கெவ்வுயிருங்
காத்தளிக்கை யன்றே கடன். [தண்டி. பக் 105.]

எனவும்,

வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு மழைமுகிலைப் பேணுவரால்—வையத்
திருள்பொழியுங் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ். [தண்டி. பக் 106.]

எனவும்,

எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கு—முற்று
முடியாப் பரவை முழங்குலகத் தென்றுங்
கொடியார்க்கு முண்டோ குணம். [தண்டி. பக் 106.]

எனவும்,

ஆர வடமு மதிசேத சந்தனமு
மீர நிலவு மெரிவிரியும்—பாரிற்
றதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்
விதிவகையான் வேறு படும். [தண்டி. பக் 106.]

எனவும்,

பொய்யுரையார் நண்பர் புனைதேர் நெறிநோக்கிக்
கைவளைசோர்ந் தாவி கரைந்துருவார்—மெய்வெதும்பப்
பூத்தகையுஞ் செங்காந்தட் பொங்கொலிநீர் ஞாலத்துத்
தீத்தகையார்க் கீதோ செயல். [தண்டி. பக் 107.]

எனவும்,

கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குரைகடலுங்
கூவித் தமியோரைக் கொல்லுமாற்—பாவாய்
பெரியோரும் பேணுது செய்வாரே போலுஞ்
சிறியோர் பிறர்க்கியற்றுந் தீங்கு. [தண்டி. பக் 108.]

எனவும்,

தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றங் கடிந்தா—னுலகிற்
றனிமுதன்மை பூண்டியர்ந்தோர் வேண்டுவரேற் றப்பா
வினையும் விபரீத மாம். [தண்டி. பக் 108.]

எனவும் முறையே காண்க. (32)

அ. வேற்றுமையணி.

280. கூற்றினுங் குறிப்பினு மொப்புடை யிருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே
குணம்பொருள் சாதி தொழிலொடு புணரும்.

இது நிறுத்தமுறையானே வேற்றுமை யென்னும் அலங்காரத்தின் பொது இலக்கணமும் அதன் திறனுங் கூறுகின்றது.

(இ-ள்.) கூற்றினானுதல் குறிப்பினானுதல் ஒப்புடையவாயிருப்பன இரண்டு பொருள் தம்முள் வேறுபாடு தோன்ற வந்தால் அது வேற்றுமை யென்னும் அலங்காரமாம்; அவ்வேறுபாடு குணம் முதலியவற்றாற் கூடும். (எ-று.)

வேற்றுமைப்படவரினெனப் பொதுப்படக் கூறியவதனான் அவை ஒருபொருளான் வேற்றுமை செய்தலும் இருபொருளானே வேற்றுமை செய்தலும் அவ்விரண்டின்றி மிகுதி குறைவுகளான் வேற்றுமை செய்தலுங் கொள்க.

வரலாறு:—

அனைத்துலகுஞ் சூழ்போ யரும்பொருள் கைக்கொண்
டினைத்தளவைத் தென்றற் கரிதாம்—பனிக்கடன்
மன்னவநின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்
றென்னு மிதுவொன்றே வேறு. [தண்டி. பக். 109.]

இஃது ஒரு பொருளான் வேற்றுமை செய்தது.

சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்று—ளொன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு. [தண்டி பக். 109.]

இஃது இருபொருளான் வேற்றுமை செய்தது. மலரி, மலர்.

மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும். [தண்டி. பக். 110.]

இது சமனன்றி மிகுதி குறைவான் வேற்றுமைசெய்தது. இவை கூற்று.

கார்க்குலமும் பாய்திரையுங் காட்டுங் கடற்படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமா—லேற்ற
கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர்
பலவுடைத்து வேந்தன் படை. [தண்டி. பக். 111.]

இஃது இருபொருளான் வேற்றுமைசெய்தது. ஒரு பொருளான் வேற்றுமை செய்வது வந்துழிக் காண்க.

பதுமங் களிக்கு மளியுடைத்துப் பாவை
வதன மதர்நோக் குடைத்துப்—புதையிருள்கூ
ழுப்போ தியல்பழியு மம்போ ருகம்வதன
மெப்போது நீங்கா தியல்பு. [தண்டி. பக். 111]

இது சமனன்றி மிகுதிகுறைவான் வேற்றுமை செய்தது. இவை குறிப்பு. பிறவும் அன்ன.

இனிக் குணவேற்றுமை வருமாறு :—

சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானுங்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார்—பொற்றொடியா
யாழி யுடையான் மகன்மாயன் சேயனே
கோழி யுடையான் மகன். [தண்டி. பக். 112]

எனவரும். பொருள்வேற்றுமை வருமாறு:—

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ். [தண்டி. பக். 112.]

எனவரும். சாதிவேற்றுமைவருமாறு:—

வெங்கதிர்க்குஞ் செந்தீ விரிசுடர்க்கு நீங்காது
பொங்கு மதியொளிக்கும் போகாது—தங்கும்
வளமையான் வந்த மனமயக்க மாந்தர்க்
கிளமையான் வந்த விருள். [தண்டி. பக். 113.]

எனவரும். தொழில் வேற்றுமை வருமாறு:—

புனலுடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுவர்—புனலுட
னேற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார் மாயவ
னேற்றிரந்து கொண்டமையா னின்று. [தண்டி. பக். 113.]

எனவரும். பிறவும் அன்ன.

உரையிற்கோடலான் இவ்வேற்றுமை விலக்கியல் சிலேடையின் மேலவும் பெறுமெனக் கொள்க. வரலாறு:—

தம்மாற் பயன்றூக்கா தியாவரையுந் தாங்கினுங்
கைம்மாறுங் கால முடைத்தன்றே—யெம்மாவி
யன்னவனை யாழி யநபா யனையலராண்
மன்னவனை மானுமோ வான். [தண்டி. பக். 114.]

என விலக்கியல்வேற்றுமைக்கும்,

ஏறடர்த்து வின்முருக்கி யெவ்வுலகுங் கைக்கொண்டு
மாறடர்த்த வாழி வலவனைக்—காரெழுதற்
கெஞ்சினு ரில்லெனினு மாய னிகனெடுமால்
வஞ்சியா னீர்நாட்டார் மன். [தண்டி. பக். 114.]

எனச் சிலேடைவேற்றுமைக்கும் வரும். (33)

கூ. விபாவனையணி

281. உலகறி காரண மொழித்தொன் றுரைப்புழி
வேறொரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பினது விபாவனை யாகும்.

இது நிறுத்தமுறையானே விபாவனையலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) ஒன்றன்வினை உரைக்குங்கால் அவ்வினைக்குப் பலரும் அறியவரும் காரணத்தையொழித்துப் பிறிதொரு காரணத்தினை இயல்பினாக குறிப்பினாக வெளிப்பட உரைப்பது விபாவனையென்னும் அலங்காரமாம். எ-று.

வரலாறு:—

தீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும்—வாயிலா
ரின்றிச் சிலருட றீர்ந்தா ரமரின்றிக்
கன்றிச் சிலைவளைக்குங் கார் [தண்டி. பக். 115.]

இது வேறொரு காரணவிபாவனை.

கடையாமே கூர்த்த கருநெடுங்கண் டேடிப்
படையாமே யெய்ந்ததனம் பாவாய்—கடைஞெமிரக்
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே
ரூட்டாமே சேந்த வடி. [தண்டி. பக். 116.]

இஃது இயல்புவிபாவனை.

பாயாத வேங்கை மலரப் படுமதமாப்
பூவாத புண்டரிக மென்றஞ்சி—மேவும்
பிடிதழுவி மாறதிருங் கானிற் பிறைபால்
வடிதழுவும் வேலோய் வரவு. [தண்டி. பக். 118.]

இது குறிப்பு விபாவனை. இதனுட்குறிப்புப் பூத்தவேங்கையைப் புலி யெனக் குறித்தல். பிறவும் அன்ன.

விபாவனையென்னாது ஆகுமென்றதனால் வினையெதிர் மறுத்துப் பொருள்புலப்படுப்பினும் பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பினும் இவ்வியல்பலங்காரமாமெனக் கொள்க.

பூட்டாத விற்குனித்துப் பொங்கு முகிலெங்குந்
தீட்டாத வம்பு சிதறுமா—லீட்டமாய்க்
காணாத கண்பரப்புந் தோகை கடும்பழிக்கு
நாணா தயர்த்தார் நமர். [தண்டி. பக். 117.]

எனவும்.

காரண மின்றி மலயா நிலங்கனலு
மீர மதிவெதும்பற் கென்னிமித்தங்—காரிகையார்க்
கியாமே தளர வியல்பாக நீண்டனகண்
டாமே திரண்ட தனம். [தண்டி. பக். 177.]

எனவும் முறையே காண்க. (34)

௪௦. ஒட்டணி

282. கருதிய பொருடொகுத் ததுபுலப் படுத்தற்
கொத்ததோன் றுரைப்ப தொட்டா மதுவே
யடையும் பொருளு மயல்பட மொழிதலு
மடைபொது வாக்கி யாங்ஙன மொழிதலும்

விரவித் தொடுத்தலும் விபரீதப் படுத்தலு
மெனநால் வகையினு மியலு மென்ப.

நிறுத்தமுறையானே இஃது ஒட்டென்னும் அலங்காரத்தின் பொது விதியும் அதன் விரியுங் கூறுகின்றது.

(இ-ள்.) கவி தன்னுற் கருதப்பட்ட பொருளைமறைத்து அதனை வெளிப்படுத்தற்கு ஒத்தபிறிதொன்றினைச் சொல்லின் அஃது ஒட்டென்னும் அலங்காரமாம்; அவ்வலங்காரங்கூறுகின்ற பொருளும் அதன் அடையும் வேறுபடத்தொடுப்பதும், அடைபொதுவாய்ப் பொருள் வேறுபடத் தொடுப்பதும், அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிவதும், அடை விபரீதப்பட்டுப் பொருள் வேறுபடமொழிதலுமென நான்குவகையான் நடக்கும். (எ-று)

ஒத்ததொன்றுரைப்பின் எனப் பொதுப்படக் கூறியவதனுல் இஃது அகத்திணைபற்றிவருங்காற் புள் முதலிய கருப்பொருள் நிலனுகப் புலப்படுத்தலும் புறத்திணைபற்றிவருங்கால் யாதானும் ஒத்ததொன்று நிலனுகப் புலப்படுத்தலுங் கொள்க.

ஒட்டெனினும் உள்ளுறையுவமமெனினும் உவமப்போலியெனினும் பிறிதுமொழிதலெனினும் நுவலாநுவற்சியெனினும் ஒக்கும்.

வரலாறு:—

வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும்—நிறைமதுச்சேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு. [தண்டி. பக். 119]

இது கருப்பொருளிலதாகப் புலப்பட்டு அடையும்பொருளும் மயல்பட வந்தது.

உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக்—கண்ணெகிழ்ந்து
நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கே
யோங்கியதோர் சோலை யுளது. [தண்டி. பக். 120]

இஃது அடைபொதுவாய்ப் பொருள்வேறுபடவந்தது.

தண்ணளிசேர்ந் தின்சொன் மருவுந் தகைமைத்தா
யெண்ணிய வெப்பொருளு மெந்நாளும்—மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழு முகிலொன்று
தந்ததான் முன்னைத் தவம். [தண்டி. பக். 120]

இஃது அடைவிரவிப் பொருள்வேறுபட வந்தது.

கடைகொ ளுலகியற்கை காலத்தின் றீங்கா
லடைய வரிதாயிற் றன்றே—யடைவோர்க்

கருமை யுடைத்தன்றி யங்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல். [தண்டி. பக். 121]

இஃது அடைவிபரீதப்பட்டுப் பொருள்வேறுபட வந்தது. பிறவும் அன்ன.

உள்ளுறையுவமமும் ஒட்டும் உய்த்துணரக்கூறும் இலக்கணத்தன வாதலின் ஒன்றும்பிறவெனின், அவ்வாற்றான் ஒன்றேயாயினும் புள் முதலிய கருப்பொருள் நிலனாகப் புலப்படுஞ் சிறப்பிலக்கணத்தான் உள்ளுறையுவமும் யாதானும் ஒத்ததொன்று நிலனாகப் புலப்படும் பொது இலக்கணத்தான் ஒட்டும் வேறுமென்றே கோடும். அஃதே அமைக. அன்றியுஞ் சேற்றுட் தோன்றுவன எல்லாம் பங்கயமெனப்பெயர்பெறாது வேறு வேறு பெயர்பெறுமாறுபோல உள்ளுறையுவமையெனவும் ஒட்டெனவும் வேறுவேறு பெயர்பெற்றவென்றலும் ஒன்று. (35)

கக. அதிசயவணி

283. மனப்படு மொருபொருள் வனப்புவிதந் துரைப்புழி
யுலகுவரம் பிறவா நிலைமைத் தாகி
யான்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம்
பொருள்குணந் தொழிலையந் துணிவே திரிவெனத்
தெருளுறத் தோன்றும் விரியின ததுவே.

இது நிறுத்தமுறையானே அதிசய அலங்காரத்தின் பொதுவிதியும் அதன் விரியுங் கூறுகின்றது.

(இ-ள்.) கவியாற் கருதப்பட்ட ஒருபொருளது வனப்பு மிகுத்துச் சொல்லுங்கால் உலகநடையிறவாத தன்மைத்தாகி உயர்ந்தோர் வியப்பத் தோன்றுவது அதிசயமென்னும் அலங்காரமாம். பொருளதிசயம் முதலிய தெளிவுபெறத் தோன்றும் அறுகூற்று விரியினையுடைத்தாம் அவ் வலங்காரம். (எ-று.)

பொருளதிசயம் வருமாறு:—

பண்டு புரமெரிப்ப மேன்மேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பறா—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி. [தண்டி பக். 122]

எனவரும். நெருப்பு, இடி. குண அதிசயம் வருமாறு:—

மாலை நிலவொளிப்ப மாத ரிழைபுனைந்த
நீல மணிக ணிலவுமிழ—மேல்விரும்பிச்
செல்லு மிவள்குறித்த செல்வன்பாற் சேர்தற்கு
வல்லிருளா கின்றே மறுகு. [தண்டி. பக். 122]

எனவரும். தொழிலதிசயம் வருமாறு:—

ஆளும் பரியுங் கரியுஞ் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து—நீள்குடையும்
வள்வார் முரசு மறிதிரைமேற் கொண்டொழுக
வெள்வா ளுறைகழித்தான் வேந்து. [தண்டி. பக். 123]

எனவரும். ஐயவதிசயம் வருமாறு:—

உள்ளம் புகுந்தே யுலாவு மொருகாலென்
னுள்ள முழுது முடன்பருகு—மொள்ளிழைநின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்லே
னுள்ளம் பெரிதோ வுரை. [தண்டி. பக். 123]

எனவரும். துணிவதிசயம் வருமாறு:—

பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீதிரண்டு
செங்கலசக் கொங்கை திகழுமா—லெங்கோன்றன்
றில்லையே யன்னார் திகழல்குற் றேரின்மே
லில்லையோ வுண்டோ விடை. [தண்டி. பக். 124]

எனவரும். திரிபதிசயம் வருமாறு:—

திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுக்கு—மங்கையலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரா
லேந்திழையார் பூந்துகிலா மென்று. [தண்டி. பக். 124]

எனவரும். பிறவும் அன்ன. (36)

கஉ. தற்குறிப்பேற்றவணி

284. பெயர்பொரு ளல்பொரு ளெனவிரு பொருளினு
மியல்பின் விளைதிற னன்றிப் பிறிதோன்று
தான்குறித் தேற்ற றற்குறிப் பேற்ற, மதுவே
யன்ன போலெனு மவைமுத லாகிய
சொன்னிலை விளக்குந் தோற்றமு முடைத்தே.

இது நிறுத்தமுறையானே தற்குறிப்பேற்றமென்னும் அலங்காரமா மாறும் அதன் ஒழிபுங் கூறுகின்றது.

(இ-ள்.) இயங்குதிணையும் நிலத்திணையுமாகிய இருகூற்றுப் பொருளின்கண்ணும் இயல்பினான் நிகழுந்தன்மையொழியக் கவி தன்னாற் பிறிதொன்றைக் கருதி அவற்றுக்கண் ஏற்றிச்சொல்லுவது தற்குறிப் பேற்ற அலங்காரமாம். அவ்வலங்காரம் அன்ன போல் என்பன முதலிய உவமச்சொற்புணர்த்து விளங்குந் தோற்றமும் உடைத்து. (எ-று.)

உதாரணம்:—

மண்படுமேதாட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்—விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉந்
தேயுந் தெளிவிசும்பி னின்று. [தண்டி பக். 125]

எனவும்.

வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத்—தானுடைய
தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில். [தண்டி பக். 125]

எனவும் முறையே காண்க. பிறவும் அன்ன.

சான்றோர் வருந்திய வருத்தமு நுமது
வான்றோய் வன்ன குடிமையு நோக்கி.[தொல். பொ. ப. 320]

அன்னவென்பதூஉம்,

காமருதேர் வெய்யவ னெங்குங் காரம்பரப்பித்
தேமருவு சோலை மலர்திறக்குந்—தாமரையின்
றூக்க விதழ்விரித்துப் பார்க்குந் தொலைந்திருள் போய்ப்
புக்க புரைகிளைப்பான் போல். [தண்டி பக். 126]

எனப் போலென்பதூஉம் வந்தன. ஏனையவும் வந்துழிக்காண்க. (37)

கஅ. ஏதுவணி

285. யாதன் றிறத்தினு மிதனினிது விளைந்ததென்
றேதுவிதந் துரைப்ப தேது வதுதான்
காரக ஞாபக மெனவிரண் டவற்றுண்
முதல்வனும் †கருமமுங் கருவியு மேற்பது
நீக்கமு மிடமு மெனவிவை காரக
மவையல பிறவேன் றறிவது ஞாபகம்.

நிறுத்தமுறையானே ஏதுவலங்காரங் கூறுவனவற்றுள் இஃது அதன் பொது இயல்பும் வகையும் விரியுங் கூறுகின்றது.

(இ-ள்.) யாதானுமொரு பொருட்டிறத்து இதனான் இது நிகழ்ந்ததென்று காரண மிகுத்துச் சொல்லுவது ஏதுவென்னும் அலங்காரமாம். அது காரகவேதுவென்றும் ஞாபகவேதுவென்றும் இரண்டாம். அவற்றுட் கருத்தாவுஞ் [1]கருமமுங் கருவியும் ஏற்பதும் நீக்கமும் இடமுமென்று சொல்லப்பட்ட இவை ஆறுங் காரகவேதுவாம். அவ்வாறும் அல்லாத பிறகாரணங்களால் உய்த்துணரத் தோன்றுவது ஞாபகவேதுவாம்.

†. பொருளுங். 1. செய்ப்படுபொருளும்.

நிலமும் பொருளும் இத்துணைச் சிறப்பின்மையின் எடுத்தோதாரா யினுரேனும் அவையுங் காரகவேதுவாதல் கொள்க.

வரலாறு.—

எல்லைநீர் வையகத் தெண்ணிறந்த வெவ்வுயிர்க்குஞ்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதான்—முல்லைசேர்
தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்ப்பப்
பூதலத்து வந்த புயல். [தண்டி. பக். 127]

என ஆக்கம் பற்றியும்,

கனிகொள் பொழிலருவி கைகலந்து சந்தின்
பனிவிரவிப் பாற்கதிர்க டோய்ந்து—தனியிருந்தோர்
சிந்தை யுடனே யுயிருணக்குந் தென்மலயந்
தந்த தமிழ்மா ருதம். [தண்டி. பக். 127]

என அழிவுபற்றியும் வந்த இவையிரண்டுங் கருத்தாகாரகவேது.

மலையி னலைகடலின் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தாற்—றலைமைசே
ரம்மாதர் புல்லு மபயன் புயம்புணர்தற்
கெம்மா தவம்புரிந்தோம் யாம். [தண்டி. பக். 128]

இது கருமகாரகவேது.

காடத்தான் மாரியுங் கண்ணுல் வெயிலு
நிரைவயிரக் கோட்டா னிலவுஞ்—சொரியுமா
னீளார்த் தொடையபது லனேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம். [தண்டி. பக். 129]

இது கருவிகாரகவேது பிறவும் வந்துழிக் காண்க.

காதலன்பே லூடல் கரையிறத்தல் காட்டுமால்
மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப—மீது
மருங்குவளை வின்முரிய வாளிடெ நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து. [தண்டி. பக். 129]

இது ஞாபகவேது. பிறவும் அன்ன. (38)

அபாவவேது

286. அபாவந் தானு மதன்பாற் படுமஃ
தென்று மபாவமு மின்மைய தபாவமு
மோன்றினென் றபாவமு முள்ளாத னபாவமு
மழிவுபாட் டபாவமு மெனவைந் தாகும்.

இது மேலதற்கோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) ஒன்றினது இன்மையும் அவ்வேதுவின் திறத்ததாம்; அஃது எக்காலத்துமில்லாமையும், இல்லாமையதில்லாமையும், ஒன்றின தின்மையும் அதன்கண் அஃதின்மையும், ஓரிடத்தும் ஒருகாலத்துமுள்ள பொருள் பிறிதோரிடத்தும் பிறிதோர்காலத்தும் இல்லாமையும், முன் னுள்ளதழிவுபட்டில்லாமையுமென ஐவகைப்படும். (எ-று.)

உதாரணம்:—என்றுமபாவவேது வருமாறு:—

யாண்டு மொழிதிறம்பார் சான்றவ ரெம்மருங்கு
மீண்டு மயில்க ளினமினமாய்—மூண்டெழுந்த
காலையே கார்முழங்கு மென்றயரேல் காதலர்தேர்
மாலையே நம்பால் வரும். [தண்டி. பக். 131]

எனவரும். இன்மையதபாவவேது வருமாறு:—

காரார் கொடிமுல்லை நின்குழன்மேற் கைபுனைய
வாராமை யில்லை வயவேந்தர்—போர்கடந்த
வாளையேய் கண்ணி! நுதன்மேன் வரும்பசலை
நாளையே நீங்கு நமக்கு. [„ பக். 131]

எனவரும். ஒன்றினொன்றபாவம் வருமாறு:—

பொய்ம்மை யுடன்புணரார் மேலவர் பொய்மையு
மெய்ம்மைசூழ் மேலாரை மேவாவா—மிம்முறையாற்
பூவலருந் தாரார் பிரிந்தாற் பொலங்குழையார்
காவலர்சொற் போற்றல் கடன். [„ பக். 131]

எனவரும் உள்ளதனபாவம் வருமாறு:—

கரவொடு நின்றார் கடிமனையிற் கையேற்
றிரவொடு நிற்பித்த தெம்மை—யரவொடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம். [„ பக். 132]

எனவரும். அழிவுபாட்டபாவம் வருமாறு:—

கழிந்த திளமை களிமயக்கந் தீர்ந்த
தொழிந்தது காதன்மே லூக்கஞ்—சுழிந்து
கருநெறியுங் கூந்தலார் காதனோய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த துளம். [„ பக். 132]

எனவரும். பிறவும் அன்ன. (39)

சித்திரவேது

287. தூர காரியமு மொருங்குடன் றோற்றமுங்
காரிய முந்துறூஉங் காரண நிலையும்
யுத்தமு மயுத்தமு முத்தையோ டியலும்,

இதுவும் அது.

(இ-ள்.) ஒருவழிக் காரணம் நிகழப் பிறிதொருவழிக் காரியம் நிகழ்தலுங் காரணகாரியங்கள் ஒருங்குநிகழ்தலுங் காரணத்தின் முன்னர்க் காரியம் நிகழ்தலுங் காரணத்திற்கேற்ற காரியம் நிகழ்தலுங் காரணத்திற் கேலாக்காரியம் நிகழ்தலுமாகிய இவ்வனைத்தும் முன்னையலங்காரத்தோடு ஒத்துநடக்கும். (எ-று).

தூரகாரியம் வருமாறு:—

வேறொரு மாதர்மேல் வேந்த னகறுதியா
லூறுதர விம்மா துயிர்வாடும்—வேறே
யிருவரே மெய்வடிவி னேந்திழை நல்லா
ரொருவரே தம்மி லுயிர். [தண்டி. பக். 133]

எனவரும். ஒருங்குடன்றோற்றம் வருமாறு:—

விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும்—பிரிந்தோர்
நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவி
பொறைதளரும் புன்மாலைப் போழ்து. [,, பக். 133]

எனவரும். * காரியமுந்துறூஉங் காரணநிலை வருமாறு:—

தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவே—ளம்பு
பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
வருமென் றிருண்ட மனம். [,, பக். 134]

எனவரும். † யுத்தம் வருமாறு:—

பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவான்
முன்ன ரசைந்து முகுளிக்கும்—தன்னோர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
யரவிந்த நூறு யிரம். [,, பக். 134]

எனவரும். $ அயுத்தம் வருமாறு:—

இகன்மதமால் யானை யநபாய னெங்கோன்
முகமதியின் மூர னிலவா—லகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல. [,, பக். 135]

எனவரும். முடியுமென்னுது இயலுமென்றதனாற் பிறவாற்றான் வருவனவுங் கொள்க.

---

* இதனை காரணமுந்துறூஉங் காரியநிலை என்பர் தண்டியாசிரியர்.

† யுத்தம்—பொருத்தம் எனக் கொள்வர் தண்டியாசிரியர்.

$ அயுத்தம்=பொருத்தமின்மை.

மாத ருமைவாய் மழலை மொழியாலோ
வோது மறையி னொலியாலோ—யாதாலோ
கோல மிருதிறனுக் கொண்டான் றிருமிடற்றி
னால மமிழ்தான வாறு. [தண்டி. பக். 135]

இஃது ஐயம். பிறவும் வந்துழிக் காண்க. (40)

சச. நுட்பவணி

288. தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினு
மரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்.

இது நிறுத்தமுறையானே நுட்பமென்னும் அலங்காரமாமாறு கூறு கின்றது.

(இ-ள்.) தெரிந்து வேறுபடக்கிளவாது குறிப்பினானுதல் தொழிலினானுதல் அரிதாக நோக்கியுணருந் தொழிற்றன்மையையுடையது நுட்பமென்னும் அலங்காரமாம். (எ-று.)

உதாரணம்:—

காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததாற்
பேதைய ராயம் பிரியாத—மாதர்
படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு. [தண்டி. பக். 136]

எனவும்,

பாடல் பயிலும் பணிமொழிதன் பணைத்தோட்
கூட லவாவாற் குறிப்புணர்த்து—மாடவற்கு
மென்றீந் தொடையாழின் மெல்லவே தைவந்தா
ளின்றீங் குறிஞ்சி யிசை. [தண்டி. பக். 136]

எனவும் முறையே காண்க. பிறவும் அன்ன. (41)

சரு. இலேசவணி

289. குறிப்புவெளிப் படுக்குஞ் சத்துவம் பிறிதின்
மறைத்துரை யாட லிலேச மாகும்.

நிறுத்தமுறையானே இஃது இலேசமென்னும் அலங்காரம் உணர்த்து கின்றது.

(இ-ள்.) கருதியது வெளிப்படுக்குஞ் சத்துவங்களைப் பிறிதொன்றி னான் நிகழ்ந்தனவாக மறைத்துச் சொல்லுவது இலேசமென்னும் அலங்காரமாம். (எ-று.)

சத்துவமென்பன வெண்பளிங்கிற் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறம்பொழிந்து தோன்றினாற்போலக் கருதியது புலனாக்குங் குணங்கள். அவை சொற்றளர்வு, மெய்விதிர்பு, கண்ணீர் நிகிழ்ச்சி, மெய் வெதும்பல், மெய்ம்மயிரரும்பல் முதலாயின.

வரலாறு:—

கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசேர்
மெல்லியலார் தோழியர்முன் வேறென்று—சொல்லுவரால்
பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தனவா லென்று. [தண்டி. பக். 137]

எனவும்,

மதுப்பொழிதார் மன்னவனை மால்கரிமேற் கண்ட
விதிர்ப்பு மயிரரும்பு மெய்யும்—புதைத்தாள்
வளவா ரணநெடுங்கை வண்டுவலை தோய்ந்த
விளவாடை கூர்ந்த தென [தண்டி. பக். 138]

எனவும் வரும். பிறவும் வந்துழிக் காண்க. (42)

இதுவுமது

290. புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலு
மவையு மன்னவென் றறைநரு முளரே.

இது பிறர்மதமபற்றி மேலதற்கோர் ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) ஒன்றனைப் புகழ்ந்தாற்போலப் பழித்துரைத்தலும் பழித்தாற்போலப் புகழ்ந்துரைத்தலுமென்னும் இவ்விரண்டும் அவ்விலேசத்தின் பாற்படுமென்று கூறுவாரும் உளர், ஒருசார் தொல்லாசிரியர். (எ-று.)

புகழ்வதுபோலப் பழித்தல் வருமாறு:—

மேய கலவி விளைபொழுது நம்மெல்லென்
சாய றளராற் றுங்குமால்—சேயிழையாய்!
போர்வேட்ட மென்மைப் புகழாளன் யாம்விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான். [தண்டி. பக். 138]

எனவரும். பழித்ததுபோலப் புகழ்தல் வருமாறு:—

ஆடன் மயிலியலி யன்ப னணியாகங்
கூடுங்கால் மெல்லென் குறிப்பறியா—னூட
லினிவந்த செய்கை யிரவாளன் யார்க்கும்
விளிவந்த வேட்கை யிலன். [தண்டி. பக். 139]

எனவரும். (43)

கசு. நிரனிறையணி

291. நிரனிறை முன்னர் நிகழ்த்தியாங் கியலும்.

இது நிறுத்தமுறையானே நிரனிறையலங்காரமாமாறு மாட்டெறிந்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) நிரனிறையது இலக்கணம் ஆண்டுச் சொல்லதிகாரத்துக் கூறினாற்போல நடக்கும் ஈண்டும். (எ-று.)

ஆண்டுச் சொல்லதிகாரத்துக் கூறியவாறு

பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினு
நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே. [இ. வி.]

என்பதாம்.

வரலாறு:—

காரிகையார் மென்மொழியா னோக்காற் கதிர்முலையால்
வார்புருவத் தாலிடையால் வாய்த்தளிரா—னேர்தொலைந்த
கொல்லி வடிநெடுவேற் கோங்கரும்பு வாங்குசிலை
வல்லி தமியேன் மனம். [தண்டி. பக். 139]

எனவும்,

மயில்களிக்கும் வண்டார்க்கும் வார்தளவம் பூக்குங்
குயிலொளிக்குங் கோபம் பரக்கும்—வெயிலொளிக்குங்
கானங் குழைகொள்ளுங் காந்த டுப்பெடுக்கும்
வானம் பொழியு மழை.

எனவும் வரும். இதன்றிறத்தனவெல்லாஞ் சொல்லோத்தினுட் கண்டு கொள்க. (44)

கஎ. ஆர்வமொழியணி

292. ஆர்வமொழி மிகுப்ப தார்வ மொழியே.

இது நிறுத்தமுறையானே ஆர்வமொழியலங்காரமாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) உண்ணிகழ்ந்த ஆர்வமொழியாற் றோன்றச் சொல்லுவது ஆர்வமொழியென்னும் அலங்காரமாம். (எ-று.)

உண்ணிகழ்தல் மேல்வரும் அதிகாரத்தாற் (293) பெற்றும்.

வரலாறு:—

சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்
புல்ல விருதோள் புடைபெயரா—மெல்ல
நினைவோ மெனினெஞ் சிடம்போதா தெம்பால்
வனைதாராய் வந்ததற்கு மாறு. [தண்டி. பக். 141]

எனவரும். மாறு, ஒப்பு. (45)

கஅ. சுவையணி

293. உண்ணிகழ் தன்மை [1]புறத்துத் தோன்ற
வெண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையது
வீர மச்ச மிழிப்போடு வியப்பே

(பி - ம்) 1. புறம்பொழிந் தோங்க.

காம மவல முருத்திர நகையென
வியம்பிப் போந்த விருநான்கு வகைத்தே.

இது நிறுத்தமுறையானே சுவையென்னும் அலங்காரத்தினது இயல்பும் அதன் திறனுங் கூறுகின்றது.

(இ-ள்.) *உண்ணிகழ்தன்மை புறத்துப்புலனாய் விளங்க எண்வகைப் பட்ட மெய்ப்பாட்டானும் இயல்வது சுவையென்னும் அலங்காரம்; அது வீரம் முதலியவாகக் கூறிய எண்வகைத்தாம். (எ-று.)*

'மெய்ப்பாட்டினியல்வதுசுவையே' என்பது, பொன்னி னியன்ற குடம் என்றாற்போலக் கொள்க; சுவை வேறின்மையின்.

வீரச்சுவை வருமாறு:—

சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
யீர்ந்திட் டியர்துலைதா னேறினான்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு. [தண்டி. பக். 142]

எனவரும். அச்சச்சுவை வருமாறு:—

கைநெரித்து வெய்துயிர்ப்பக் காறளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்க ணீர்ததும்ப வாய்புலர்ந்தா—டையல்
சினவேல் விடலையாற் கையிழந்த செங்கட்
புனவேழ மேல்வந்த போது. [தண்டி. பக். 142]

எனவரும். இழிப்புச்சுவை வருமாறு:—

உடைதலையு மூளையு மூன்றடியு மென்புங்
குடருங் கொழுங்குருதி யீர்ப்ப—மிடைபேய்
பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைக் சீறுங் களம். [தண்டி. பக். 143]

எனவரும். வியப்புச்சுவை வருமாறு:—

முத்தரும்பிச் செம்பொன் முறிதழைந்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ்சூழ்ந்தொளிருங்—கொத்தினதாம்
பொன்னோர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்னோர் பொழியுந் தரு. [தண்டி. பக். 144]

எனவரும். காமச்சுவை வருமாறு:—

திங்க ணுதல்வியர்க்கும் வாய்துடிக்குங் கண்சிவக்கு
மங்கைத் தளிர்நடுங்குஞ் சொல்லசையுங்—கொங்கை
பொருகாலு மூடிப் புடைபெயருங் காலு
மிருகாலு மொக்கு மிவட்கு. [தண்டி. பக். 144]

எனவரும். அவலச்சுவை வருமாறு:—

கழல்சேர்ந்த காள்விடலை காதலிமெய் தீண்டி
பழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த
தாமந் தரியா தசையுந் தளிர்மேனி
யீமந் தரிக்குமோ வென்று. [தண்டி. பக். 145]

எனவரும். உருத்திரச்சுவை வருமாறு:—

கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்—வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று
போர்வேந்தன் றூதிசைத்த போது.

எனவரும். நகைச்சுவை வருமாறு:—

நாண்போலுந் தம்மனைக்குத் தான்சேற லிந்நின்ற
பாண்போலும் வெவ்வழலிற் பாய்வதூஉங்—காண்டோழி
கைத்தலங் கண்ணாக் களவுகாண் பாரொருவன்
பொய்த்தலைமுன் னீட்டியற்றும் போந்து. [நந்திக்கலம்பகம்]

எனவரும். இதன்றிறத்து வருவன பிறவற்றிற்கு உதாரணம் அகத்திணையியலுட் காண்க. (46)

கசு. தன்மேம்பாட்டுரையணி

294. தான்றற் புகழ்வது தன்மேம் பாட்டுரை.

இது நிறுத்தமுறையானே தன்மேம்பாட்டுரை அலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) ஒருவன் தன்னைத்தானே மேம்பாடுதோன்ற உரைப்பது தன் மேம்பாட்டுரையென்னும் அலங்காரமாம். (எ-று.)

இஃது அகத்திணைப்பொருள்பற்றி வருங்காற் றலைமகன் றன்னைத்தானே புகழ்தலெனவும் புறப்பொருள் பற்றி வருங்கால் நெடுமொழி கூறலெனவும் பெயர்பெற்று வருமெனக் கொள்க.

வரலாறு:—

எஞ்சினா ரில்லை யெனக்கெதிரா வின்னுயிர்கொண்
டஞ்சினா ரஞ்சாது போயகல்க—வெஞ்சமத்துப்
பேரா தவராகத் தன்றிப் பிறர்முதுகிற்
சாராவென் கையிற் சரம்.

எனவரும். (47)

உ0. பரியாயவணி

295. கருதியது கிளவா தப்பொரு டோன்றப்
பிறிதோன்று கிளப்பது பரியா யம்மே.

இது நிறுத்தமுறையானே பரியாய அலங்காரமாமாறு கூறுகின்றது.

(இ-ள்) தான் கருதியதனைக் கிளவாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றனைச் சொல்லுவது பரியாயமென்னும் அலங்காரமாம். (எ-று)

வரலாறு:—

மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ—தன்னிகராஞ்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
யிந்தீ வரங்கொணர்வல் யான். [தண்டி. பக். 148.]

எனவரும், பிறவும் அன்ன. (48)

உக. சமாகிதவணி

296. முந்துதா முயல்வுறு தொழிற்பயன் பிறிதொன்று
தந்தாமுடிப்பது சமாயித மாகும்.

இது நிறுத்தமுறையானே சமாயிதஅலங்காரமாமாறு கூறுகின்றது.

(இ-ள்) முன்பு தம்மான் முயலப்பட்ட தொழிலதுபயன் அத்தொழிலானன்றிப் பிறிதொன்றான் நிகழ்ந்ததாகச் சொல்லுவது. சமாயிதமென்னும் அலங்காரமாம. எ-று.

வரலாறு:—

அருவியங் குன்ற மரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பரையன் பாவை—பெருமா
னணியாக மாரத் தழுவினா டான்முன்
றணியாத வூட றணிந்து. [தண்டி. பக். 149.]

எனவரும். பிறவும் அன்ன. (49)

உஉ. உதாத்தம்

297. வியத்தகு செல்வமு மேம்படு முள்ளமு
முயர்ச்சிபுனைந் துரைப்ப துதாத்த மாகும்.

இது நிறுத்தமுறையானே உதாத்த அலங்காரமாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) வியக்கதகுக்க செல்வத்தும் மேம்பட்ட உள்ளத்தும் உயர்ச்சியை மிகுத்துச சொல்லுவது உதாத்தமென்னும அலங்காரமாம். (எ-று.)

செல்வமிகுதி வருமாறு:—

கன்றும் வயவேந்த ரினங்கள் புலகவர்ந்து
மென்றும் வறிஞ ரினங்கவர்ந்து—மொன்று
மறிவரிதாய் நிற்கு மளவினதா லம்ம
செறிகதிர்வேற் சென்னி திரு [தண்டி. பக் 150.]

எனவரும. உள்ளமிகுதி வருமாறு:—

மண்ணகன்று தன்கிளையி னீங்கி வனம்புகுந்து
பண்ணுந் தவத்திசைந்த பார்த்தன்றா—னெண்ணிறந்த

மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு. [தண்டி. பக். 150]

எனவரும். பிறவும் அன்ன. (50)

உசு. அவநுதியணி

298. சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்மை
மறுத்துப்பிறி துரைப்ப தவநுதி யாகும்.

இது நிறுத்தமுறையானே அவநுதியலங்காரமாமாறு கூறுகின்றது.

(இ-ள்) சிறப்பினானும் பொருளினானுங் குணத்தினானும் ஆகிய உண்மையை மறுத்து அதற்கு மறுதலையாகிய பிறிதொன்றாக உரைப்பது அவநுதியென்னும் அலங்காரமாம் (எ-று.)

சிறப்பவநுதி வருமாறு:—

நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும்
நிறையு நிலைதளரா நீர்மை—யறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து. [தண்டி. பக். 151]

எனவரும். பொருளவநுதி வருமாறு:—

நிலனும் விசும்பா நிமிர்கானீர் தீயா
மலர்கதிராம் வான்மதியா மன்றி—மலர்கொன்றை
யொண்ணறுந் தாரா னொருவனிய மானனுமா
மெண்ணிறந்த வெப்பொருளு மாம். [தண்டி. பக். 152]

எனவரும். குணவவநுதி வருமாறு:—

மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப்
பணித்தொடையற் பார்த்திபர்கோ னெங்கோன்-றனிக்கவிகை
தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு
வெம்மை நிழற்றாய் விடும். [தண்டி. பக். 152]

எனவரும். பிறவும் அன்ன.

அவநுதியென்றது ஆகுமென்றதனாற் பிற அலங்காரங்களோடு கூடிவருவனவுங் கொள்க. (உ-ம்.)

நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன்—றுறையின்
விலங்காமை நின்று வியன்றமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங் கோ. [தண்டி. பக். 158]

இது வினைபற்றிய சிலேடை அவநுதி. பிறவற்றின்கண் வருவனவும் வந்துழிக் காண்க. (51)

உசு. சிலேடையணி

299 ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி
தெரிவுதர வருவது சிலேடை யதுதான்
செம்மொழி பிரிமொழி யெனவிரு திறப்படும்.

இது நிறுத்தமுறையானே சிலேடையலங்காரமாமாறு உணர்த்துகின்றது.

(இ-ள்.) ஒரு வகையான் நின்ற தொடர்ச்சொற் பல பொருள்களது தன்மை தெரிய வருவது சிலேடையலங்காரமாம். அவ்வலங்காரந்தான் ஒருவகையானின்று பலபொருள்படுஞ் செம்மொழிச் சிலேடையும் ஒருவகையானின்றசொல்லைப் பிரித்துத் தொகைவேறுபடுத்துப் பலபொருள் கொள்ளப்படும்பிரிமொழிச்சிலேடையுமென இரண்டு கூறுபடும். (எ-று.)

'தான்' என்ற மிகையானே தொடர்ச்சொல்லேயன்றி ஒரு சொல்லே பல பொருட்பெற்றி தெரிதர வரினும் அவ்வலங்காரமாமெனக் கொள்க.

செம்மொழிச் சிலேடை வருமாறு :—

செங்கரங்க ளானிரவு நீக்குந் திறம்[1]பயின்று
பங்கய மாதர் நலம்பயிலப்—பொங்குதயத்
தோராழி வெய்யோ னுயர்ந்த நெறியொழுகும்
நீராழி[2] சூழ்ந்த நிலத்து. —[தண்டி பக். 154]

எனவரும். ஆதித்தன்மேற் செல்லுங்காற் கரம் - கதிர்; இரவு - இருள்; மாதர் - காதல்; நலம் - அழகு; பயிறல் - உண்டாதல்; பொங்குதல் - மேனோக்கிவளர்தல்; உதயம் - தோற்றம்; ஆழி - தேர்க்கால்; வெய்யோன் - ஆதித்தன்; நெறி - வழி. இனிச் சோழன் மேற்செல்லுங்காற் கரம் - கை; இரவு - இரத்தல்; மாதர் - திருமடந்தை; நலம்-செல்வம்; பயிறல் - பெருகுதல்; பொங்குதல் - மேம்படுதல்; உதயம் - பொருள்வருவாய்; ஆழி-சக்கரம்; வெய்யோன்-விருப்பமுடையோன்; நெறி-ஒழுக்கம்.

பிரிமொழிச்சிலேடை வருமாறு :—

தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய
வெள்ளா வரிமா னிடர்மிகு ப—வுள்வாழ்தேம்
சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிருவுள்ளம்
நந்துந் தொழில்புரிந்தார் நாடு. —[தண்டி. பக். 55]

எனவரும். சோழனைப் பகையாதார் நாட்டின்மேற் செல்லுங்கால் தள்ளா விடம் - தவறுதநிலம்; ஏர் - உழுமெருது; தடம் - வாவி; தாமரை - பங்கயம்; எள்ளாமை - இகழாமை; அரி - நெற்சூடு; மானிடர்- உழவர் - உள்வாழ்தேம் - உள்ளேயுண்டாகியதேன்; சிந்தல் - பொழிதல்; நந்தல் - ஆக்கம். பகைத்தார் நாட்டின்மேற் செல்லுங்கால் தள்ளா விடத்தேர் - அசையாத விடத்தேர்மரம்; தடம்-மலை; தாமரை - தாவுமரை; அரிமான்-

(பா - ம்) 1. புரிந்து. 2. நீணிலத்துமேல்.

சிங்கப்போத்து ; இடர் - துன்பம் ; உள்வாழ்தேம் - மனம் பொருந்திய நாடு ; சிந்தல் - அழித்தல் ; நந்தல்-கேடு. (52)

இதுவுமது

300. ஒருவினை பலவினை முரண்வினை நியம
நியம விலக்கு விரோத மவிரோத
மெனவெழு வகையினு மியலு மென்ப.

இதுவும் மேலதற்கு ஒருசார் எய்தியதோரியல்பு வகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்.) ஒரு வினையான் வருஞ் சிலேடையும் பல வினையான்வருஞ் சிலேடையும் மாறுபட்ட வினையான் வருஞ் சிலேடையும் சிலேடித்த வற்றை நியமஞ்செய்யுஞ் சிலேடையும் அந்நியமத்தை விலக்குஞ் சிலேடையும் முன்னர்ச் சிலேடித்தவற்றைப் பின்னர் விரோதிப்பச் சிலேடித்தலும் முன்னர்ச் சிலேடித்தவற்றைப் பின்னரும் விரோதியாமற் சிலேடித்தலுமென எழு கூறுபாட்டானும் நடக்கும் அவ்வலங்காரம். ()

ஒருவினைச்சிலேடை வருமாறு :—

அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க—வும்பர்
நவம்புரியும் வானதியு நாண்மதியு நண்ணத்
தவம்புரிவார்க் கின்பந் தரும். —[தண்டி. பக். 156]

எனவரும். பிள்ளையார் மேற்செல்லுங்கால் பொன்-பொலிவு, பணை-பருத்தல், முகம்-வதனம், கோடு-கொம்பு, நாகம்-யானை, வம்பு-கச்சு, உறுதல்-கட்டுதல், ஓடை - பட்டம். மலைமேற் செல்லுங்கால் பொன் - கனகம், பணை-மூங்கில், முகம்-பக்கம், கோடு-சிகரம், நாகம்-மலை, வம்பு-மணம், உறுதல் - உண்டாதல், ஓடை - வாவி.

பலவினைச்சிலேடை வருமாறு :—

தவிரா மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு
செவிமருவிச் செந்நீர்மை தாங்கி—குயிலிசையு
மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கு மேவலா
ரின்னுயிரை யீர்கின் றன. —[தண்டி. பக். 157]

எனவரும். குயிற்குரன்மேற் செல்லுங்கால் மது-நறவு; மருவி-புக்கு; செந்நீர்மை - கோடாத்தன்மை; மேவலார் - பிரிந்தோர். கண்ணின்மேற் செல்லுங்கால் மது-கள்; செவிமருவி-செவியளவுஞ்சென்று; செந்நீர்மை-சிவந்தகுளிர்ச்சி, மேவலார் - புணருந்தலைவர்.

முரண்வினைச்சிலேடை வருமாறு :—

மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்
காலைத் துணைமேவ லார்கடிய—வேலைமிசை

மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்
புக்கார் கலியடங்கும் புள். —[தண்டி. பக். 157]

எனவரும். பிரிந்தார்மேற் செல்லுங்கால் மாலை-மயக்கம்; மதி - கருத்து; திரிதல்-வேறுபடுதல்; மணம்-வாசம்; துணைமேவலார் - துணைவரைப்பிரிந்தார்; கடிதல்-அஞ்சுதல். புணர்ந்தோர்மேற்செல்லுங்கால் மாலை - அந்தி; மதி-திங்கள்; திரிதல் - உலாவுதல்; மணம்-கூட்டம்; துணைமேவலார் - துணைவரைப் பொருந்தினோர்; கடிதல் - விளங்கல்.

நியமச்சிலேடை வருமாறு:—

வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே—பண்ணீர
மென்கோல யாழே யிரங்குவன வேல்வேந்தே
நின்கோ னுலாவு நிலத்து, —[தண்டி. பக். 158]

எனவரும். வெண்ணீர்மை-வெண்ணிறநீர்மையும் அறியாமையும்; வெறி-வாசமும் பித்தும்; கண்ணீர்மை - கள்ளாகிய நீர்மையும் கண்ணினது நீர்மையும் இரங்கல் - இசைத்தலும் புலம்பலும்.

நியமவிலக்குச்சிலேடை வருமாறு :—

சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன
விறைவநீ காத்தளிக்கு மெல்லை—முறையிற்
கொடியன மாளிகையின் குன்றமே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள. —[தண்டி. பக். 159]

எனவரும். சிறை - சிறகுங் கரையுஞ் சிறைப்படுத்தலும்; கொடி - பதாகையும் வல்லியுங்.கொடுமையும். விரோதச்சிலேடை வருமாறு: —

விச்சா தரனேனு மந்தரத்து மேவானு
லச்சுத னேனுமம் மாயனலன்—நிச்ச
நிறைவான் கலையா னகளங்க னீதி
யிறையா னநகனெனங் கோ. [தண்டி. பக். 159]

எனவரும். விச்சாதரன் - தேவனும் விஞ்சையைத்தாங்கிய சோழனும்; அந்தரம்-ஆகாயமுங் கேடும்; அச்சுதன்-மாலுங் கேடில்லாத சோழனும்; மாயம - கறுப்பும் வஞ்சனையும்; கலையான் - கலையையுடைய சந்திரனுங் கல்வியையுடைய சோழனும்; களங்கம் - மாசும் பாவமும்; இறையோன்-சிவனுஞ் சோழனும்; அநகன்-மலையில்பாவமில்லாதோனும். இதனை நகன் அநகனெனப் பிரித்துக்கொள்க. அவிரோதச்சிலேடைய வருமாறு:—

சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கும்
மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கு —மீதா
மனகமதி தோற்றிக் குமுத மளிக்குந்
தனத னிருநிதிக்கோன் றான். [தண்டி. பக். 160]

எனவரும். சோதி-ஒளியும் புகழும்; இரவி - சூரியனுஞ் சோழனும்; கரம்-கதிருங் கையும்; இரவு - இருளும் இரத்தலும்; மாதிடத்தான் - சிவனும் மிக்க திட்பத்தையுடையசோழனும்; மன்மதன் - காமனும் மன்னரது வலியும்; மதி - சந்திரனும் அறிவும்; குமுதம் - ஆம்பலும் மகிழ்ச்சியும்; தனதன் - குபேரனுந் தனத்தையுடையசோழனும்; இருநிதி - சங்க நிதி பதுமநிதியும் மிக்கபொருளும்.

'இயலும்' என்றதனுன் இவ்வாறன்றிப் பிறவேறுபாட்டான் வருவனவுங் கொள்க. அவை வந்துழிக்காண்க. (53)

உரு. விசேடவணி.

301. குணந்தொழின் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட வொருபொருள் விளம்புதல் விசேடம்.

இது நிறுத்தமுறையானே விசேடங்கூறுகின்றது.

(இ-ள்.) குணமுந் தொழிலும் பொருளுஞ் சாதியும் உறுப்பும் முதலாயின குறைபடுதல் காரணமாக ஒருபொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேடமென்னும் அலங்காரமாம் (எ-று.)

குணக்குறைவிசேடம் வருமாறு:—

கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டஞ்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெற.

எனவரும். தொழிற்குறைவிசேடம் வருமாறு:—

ஏங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா—நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை. [தண்டி பக். 162]

எனவரும். சாதிக்குறை விசேடம் வருமாறு:—

மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட
வாயனூர் மாறேற் றமர்புரிந்தார்—தூய
பெருந்திருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்மேற்
புரந்தரனும் வானோரும் போல். [,, ,, ,,]

எனவரும். தொடுவுண்டல் - தோண்டியுண்டல்; போல், ஒப்பில் போலி; பொருட்குறைவிசேடம் வருமாறு:—

தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
யெல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலா

ளோங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமோ
லேங்கொலிநீர்க் காஞ்சி யிடை. [தண்டி. பக். 163]

எனவரும். உறுப்புக்குறைவிசேடம் வருமாறு:—

யானை யிரதம் பரியா ளிவையில்லை
தானு மநங்கன் றனுக்கரும்பு—தேனார்
மலரைந்தால் வென்று வடுப்படுத்தான் மார
னுலகங்கள் மூன்று மொருங்கு. [„ 164]

எனவரும். பிறவும் வந்துழிக் கண்டுகொள்க. (54)

உகூ. ஒப்புமைக்கூட்டவணி.

302. கருதிய குணத்தின் மிகுபொரு ளுடன்வைத்
தொருபொரு ளுரைப்ப தொப்புமைக் கூட்டம்
புகழினும் பழிப்பினும் புலப்படு மதுவே.

இது நிறுத்தமுறையானே ஒப்புமைக்கூட்ட அலங்காரத்தினது பொது இயல்பும் அதன் திறனுங் கூறுகின்றது.

(இ-ள்.) ஒருபொருளைச்சொல்லுமிடத்துத் தான்கருதிய குணம் முதலாயினவற்றான் மிக்க பொருளைக் கூடவைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டமென்னும் அலங்காரமாம்; அது புகழ்தற்கண்ணும் பழித்தற் கண்ணுந் தோன்றும். (எ-று.)

புகழொப்புமைக்கூட்டம் வருமாறு:—

பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்புந்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண்டாங்கு
வண்மைசால் சான்றவருங் காஞ்சி வளம்பதியின்
உண்மையா னுண்டிவ் வுலகு. [„ 165]

எனவரும். பழிப்பொப்புமைக்கூட்டம் வருமாறு:—

கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனு
முள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரு
மில்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள் [திரிகடுகம், 50]

எனவரும். பிறவும் அன்ன. (55)

உஎ. விரோதவணி

303. மாறுபடு சொற்பொருள் மாறுபாட் டியற்கை
விளைவுதர வுரைப்பது விரோத மாகும்.

இது நிறுத்தமுறையானே விரோத அலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) மாறுபட்ட சொல்லானும் பொருளானும் மாறுபாட்டுத் தன்மை விளைவுதோன்ற உரைப்பது விரோதமென்னும் அலங்காரமாம். (எ-று.)

சொல் விரோதம் வருமாறு:—

[1]சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தடங்க
வாலு மயிலினங்க ளார்த்தெழுந்த—ஞாலங்
குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
விளர்ந்த துணைபிரிந்தார் மெய். [தண்டி. பக். 167.]

எனவரும். பொருள்விரோதம் வருமாறு:—

[2]காலையு மாலையுங் கைகூப்பிக் காறொழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாங்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து. [தண்டி. பக். 166.]

எனவரும். பிறவும் அன்ன.

'இயற்கை'யென்ற மிகையானே சிலேடைபற்றியும் வருமெனக் கொள்க. வரலாறு:—

இனமா னிகல வெளிய வெனினும்
வனமேவு புண்டரிகம் வாட்டும்—வனமார்
கரியுருவங் கொண்டு மரிசிதறக் காயும்
விரிமலர்மென் கூந்தல் விழி. [தண்டி. பக். 167.]

எனவரும். வனம் - நீருங் காடும்; புண்டரிகம் - தாமரையும் புலியும்; வனம் - வண்ணமுங் காடும்; கரி - கரியும் யானையும்; அரி - செவ்வரியும் சிங்கமும்; சிதறல் - பரத்தலும் உடைத்தலும். (56)

உஅ. மாறுபடு புகழ்நிலையணி

304. கருதிய பொருண்மறைத் தாங்கது பழித்தற்கு
வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.

இது நிறுத்தமுறையானே மாறுபடுபுகழ்நிலையலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) கவி, தான்கருதிய பொருளை மறைத்து அதனைப்பழித்தற்கு வேறொன்றனைப் புகழ்வது மாறுபடுபுகழ்நிலையென்னும் அலங்காரமாம். (எ-று.)

வரலாறு:—

இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லு—மொருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற்
றுடைத்தனவே யன்றோ துயர். [தண்டி. பக். 169.]

எனவரும்.

(1-2) இச்செய்யுட்களை முறையே பொருள் விரோதமென்றும் சொல்விரோதமென்றும் கூறுவர் தண்டியலங்காரவுரை யாசிரியர்.

போதுந் தளிரும் புனைந்து மணம்புணர்ந்து
சூதப் பணைதழுவித் தோன்றுமால்—மாதே
பலமா தவங்கள் பயின்றதோ பண்டிக்
குலமா தவியின் கொடி. [தண்டி. பக். 169.]

என்றாற்போல்வதூஉம் அது. (57)

உசு. புகழாப் புகழ்ச்சியணி

305. பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.

இது நிறுத்தமுறையானே புகழாப்புகழ்ச்சி அலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) பழித்தல்போலும் பாகுபாட்டான் ஒன்றற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சியென்னும் அலங்காரமாம். (எ-று.)

வரலாறு:—

போர்வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூஉந்
தார்மேவு திண்புயத்தாற் றாங்குவதூஉ—நீர்நாடன்
றேரடிக்கூர் வெம்படையாற் காப்பதூஉஞ் செங்கண்மா
லோரடிக்கீழ் வைத்த வுலகு. [தண்டி. பக். 170.]

எனவரும். தேரடி - சக்கரம்.

நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோ
ரனைவரையும் புல்லினு ளன்றே—மனுநூல்
புணர்ந்த நெறியொழுகும் பூழியர்கோ யிந்நாண்
மணந்த தடமலர்மேன் மாது. [தண்டி. பக். 170.]

இதுவும் அது.

மேற்கூறிய (290) இலேசத்தின் பாற்படும் பழிப்பதுபோலும் புகழ் புலப்படுத்தலோடு இப்புகழாப் புகழ்ச்சிக்கும், புகழ்வதுபோலப் பழித்திறம் புனைதலோடு மேற்கூறிய மாறுபடு புகழ்நிலைக்கும் வேற்றுமை யாதோ வெனின்; பழிப்பதுபோலப் புகழ்புலப்படுத்தல் ஒன்றனையே பழித்தாற் போலப் புகழ்வது. புகழ்வதுபோலப் பழித்திறம்புனைதல் ஒன்றனையே புகழ்ந்தாற்போலப் பழிப்பது. இவை அன்னவன்றி முறையே ஒன்றனைப் பழிப்பது வேறொன்றற்குப் புகழாய்த் தோன்றுதலும் ஒன்றனைப் புகழ வேறொன்றற்குப் பழிப்பாய்த் தோன்றுதலுமாமென்றுணர்க. (58)

உ௰. நிதரிசனவணி

306. ஒருவகை நிகழ்வதற் கொத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை யென்றிவை புலப்பட
நிகழ்வ தாயி னிதரிசன மதுவே.

இது நிறுத்தமுறையானே நிதரிசன அலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) ஒருவகையான் நிகழ்வதொன்றற்குப் பொருந்தியதொரு பயனைப் பிறிதொன்றற்கு நன்மை புலப்பட நிகழ்வதாதல் தீமை புலப்பட நிகழ்வதாதல் செய்து அதனைச் சொல்லுவது நிதரிசனமென்னும் அலங்காரமாம். (எ-று.)

நன்மைபுலப்படவரும் நிதரிசன அலங்காரம் வருமாறு :—

பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வுஞ்
சிறியோர் பொறாத திறமு—மறிவுறீஇச்
செங்கமல மெய்மலர்ந்த தேங்குமுத மெய்யயர்ந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது. [தண்டி. பக். 172]

எனவரும். தீமைபுலப்படவரும் நிதரிசன அலங்காரம் வருமாறு :—

பெரியோ ருழையும் பிழைசிறிதுண் டாயி
னிருநிலத்துள் யாரு மறிதல்—தெரிவிக்குந்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு. [,, பக். 172]

எனவரும். (59)

ருக. புணர்நிலையணி

307. வினைபண் பெனுமிவை யிருபொருட் கொன்றே
புணர மொழிவது புணர்நிலை யாகும்.

இது நிறுத்தமுறையானே புணர்நிலையலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) வினையானும் பண்பானும் இரண்டுபொருளுக்கு ஒன்றே பொருந்தச்சொல்வது புணர்நிலையென்னும் அலங்காரமாம். (எ-று.)

'ஒன்றேமொழிவது' என்றொழியாது 'புணரமொழிவ'தென்ற மிகையானே இவ்வலங்காரம் ஒரு வினையொடுச்சொற் பொருள்படவே வருதல் கொள்க.

அவற்றுள் வினைப்புணர்நிலை யலங்காரம் வருமாறு :—

வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து
நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த—வாண்டகையோர்
மேவல் விரும்பும் † பொருணசையான் மெல்லாவி
காவல் புரிந்திருந்தோர் கண். [,, பக். 173]

எனவரும். பண்புப்புணர்நிலை யலங்காரம் வருமாறு:—

பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போதுடனே
நீங்காத வெம்மையாய் நீண்டனவாற்—றாங்காதல்
வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி
யுய்க்குந் தமியோ ருயிர். [,, பக் 173]

எனவரும். (60)

(பா - ம்) † பெரு நசையான்.

௬௨. பரிவருத்தனையணி

308. பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே.

இது நிறுத்தமுறையானே பரிவருத்தனை யலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) பொருள் ஒன்றற்கு ஒன்று கொடுத்து ஒன்று கொண்டன வாகச் சொல்லுவது பரிவருத்தனையென்னும் அலங்காரம். (எ-று.)

வரலாறு:—

காமனை வென்றோன் சடைமதியுங் கங்கையுந்
தாம நிழலொன்று தாங்கொடுத்து—நாமப்
பருவா ளரவின் பணமணிக டோறு
முருவர் பிரம்பெற் றுள. [தண்டி. பக். 174]

எனவரும். (61)

௬௩. வாழ்த்தணி

309. இன்னார்க் கின்ன தியைக வென்றுதா
முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப.

இது நிறுத்தமுறையானே வாழ்த்தலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) இன்னதன்மையை யுடையார்க்கு இன்னது நிகழ்கவென்று கவிகள் தாம் கருதியதனை விரிப்பது வாழ்த்தென்னும் அலங்காரமாம். (எ-று.)

வரலாறு:—

மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி
யாவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லநபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை. [,, பக். 175]

எனவரும். பிறவும் அன்ன. (62)

௬௪. சங்கீரணவணி

310. மொழியப் பட்ட வணிபல தம்முட்
டழுவ வுரைப்பது சங்கீ ரணமே.

இது நிறுத்தமுறையானே சங்கீரண அலங்காரங் கூறுகின்றது.

(இ-ள்.) மேற்சொல்லப்பட்ட அலங்காரங்கள் பலவுந் தம்முட் பொருந்த உரைப்பது சங்கீரணமென்னும் அலங்காரமாம். (எ-று.)

எனவே, உறுப்பனைத்துங் கூடிய கலவைபோல்வதோர் தன்மைத் தாய் ஒன்றற்கு மிகுதி தோன்றாமல் உரைப்பதாமென்பதாயிற்று. ஆகவே, இரண்டு அணி தம்முட் கூடிவருவனவாக மேற்கூறியனவெல்லாஞ் சங்கீரணமெனப்படா; என்னை? சந்தனத்தோடு கருப்பூரம் விரவினும், சந்தனத்தோடு மான்மதம் விரவினும், சந்தனமுங் கருப்பூரமுஞ் சந்தனமுமான் மதமுமென்பதல்லது கலவையெனப்படாதவாறுபோல என்றுணர்க.

தண்டுறைநீர் நின்ற தவத்தா லளிமருவு
புண்டரிக நின்வதனம் போன்றதா—லுண்டோ
பயின்று ருளம்பருகும் பான்மொழியாய்! பார்மேன்
முயன்றான் முடியாப் பொருள். [தண்டி. பக். 175]

இதனுள் தண்டுறைநீர்நின்றதவமெனத் தற்குறிப்பேற்றமும் தவத்தா லெனக் கரும காரகவேதுவும், அளிமருவுமெனச் சிலேடையும், புண்டரீகம் நின்வதனம் போலுமென உவமையும், உண்டோ முயன்றான் முடியாப் பொருளென வேற்றுப்பொருள்வைப்பும், உயிர்பருகும் பான்மொழியா யெனச் சுவையும் விரவிவந்தவாறு காண்க. பிறவும் அன்ன. (63)

ரு. பாவிகவணி

311. பாவிக மென்பது காப்பியப் பண்பே.

இது நிறுத்தமுறையானே பாவிக அலங்காரம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) பாவிகமென்று சொல்லப்படுவது பொருட்டொடர் நிலைச் செய்யுட்டிறத்துக் கவியாற் கருதிச் செய்யப்படுவதோர் குணமாம். (எ-று.) அஃதாவது அத்தொடர்நிலைச்செய்யுண் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படுவது.

வரலாறு:—

பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப
பொறையிற் சிறந்த கவசமில்லை
வாய்மையிற் கடியதோர் வாளி யில்லை.

எனவரும். இதனுள் என்பன போல்வன தோன்றக் கிடந்தவாறு காண்க.

சொல்லணி

312. சொல்லணி யென்பது சொல்லுங் காலை
மடக்குமதன் வழிப்படூஉஞ் சித்தி ரமுமென
நடக்கு மென்மனார் நயனுணர்ந் தோரே.

இது நிறுத்தமுறையானே பொருளணி உணர்த்திச் சொல்லணி யுணர்த்துவான் புகுந்தவற்றுள் இஃது அஃது இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) சொல்லானுளதாகிய அணியென்று கூறப்படுவது கூறு மிடத்து மடக்கும் அதன்பாற்படுஞ் சித்திரமுமென இருவகைத்தாய் நடக்குமென்று கூறுவர் அதன் இயல்பையுணர்ந்தோர். (எ-று) (65)

க. மடக்கு

313. எழுத்தின் கூட்ட மிடைபிறி தின்றிப்
பெயர்த்துமோரு பொருடரின் மடக்கெனும்
தோரடி முதலா நான்கடி காறுஞ் [பெயர்த்தஃ
சேரு மென்ப தெளிந்திசி னோரே.

இது மேற்கூறிய இருவகைப் பகுதியுள் மடக்கினது பொது இயல்பும் அதன்வகையுங் கூறுகின்றது.

(இ-ள்.) எழுத்துக்களது தொகுதி பிறவெழுத்தானுஞ் சொல்லானும் இடையிடாது தாமே பெயர்த்தும் வேறுபொருளை விளக்குமாயின் அது மடக்கென்னும் பெயரையுடைத்தாம்; அம்மடக்கு நான்கடிச் செய்யுளுள்ளே நடக்குங்கால் ஓரடிக்கண்ணும் இரண்டடிக்கண்ணும் மூன்றடிக்கண்ணும் நான்கடிக்கண்ணும் பொருந்தி நடக்கும். (எ-று.)

எழுத்துக்களது தொகுதியெனவே, இரண்டு முதலிய எல்லா எழுத்துமாமெனவும், மடக்கென்றது 'பெயர்த்'தென்ற மிகையானே இடைபிறிதின்றி வருதலேயன்றி உளதாயும் வருமெனவும், நான்கடிச் செய்யுளென்பது ஆற்றலாற் போந்ததெனவுங் கொள்க. ஓரடிக்கண்வருவன முதல் அடிக்கண்வருதலும் இரண்டாம் அடிக்கண்வருதலும் மூன்றும் அடிக்கண் வருதலும் நான்காம் அடிக்கண் வருதலுமெனவாம். அவை முன்னர்க் காட்டுதும். (66)

314. ஆதி யிடைகடை யாதியோ டிடைகடை
யிடையோடு கடைமுழு தெனவெழு வகைத்தே.

இஃது அவ்வாற்றான் அத்துணைத்தாமென்றதனையே இவ்வாற்றான் இத்துணைத்தாமென்கின்றது.

(இ-ள்.) முற்கூறிய மடக்கு ஆதிமடக்கும் இடைமடக்கும் கடைமடக்கும் ஆதியோடிடைமடக்கும் ஆதியொடு கடைமடக்கும் இடையொடு கடைமடக்கும் முழுவதுமடக்குமென எழு வகைப்படும். (எ-று.)

315. ஓரடி யொழிந்தன தேருங் காலை
யிணைமுதல் விகற்ப மேழு நான்கு
மடைவுறு பெற்றியி னறியத் தோன்றும்.

இதுவும் அதனையே விரித்துணர்த்துகின்றது.

(இ - ள்.) ஓரடிமடக்கொழிந்தன ஆராயுங்காலத்து: மேற் செய்யுளியலுட் கூறப்படும் இணை முதலிய விகற்பத்தொடை எழும் நான்குமாகிய பதினொன்றும்போல விளங்கத் தோன்றும். (எ-று.)

அடைவுறுபெற்றியின் அறியத்தோன்றலாவது: இருசீர்த்தொடை ஆறும் முச்சீர்த்தொடை நான்கும் நாற்சீர்த்தொடை ஒன்றுமாகிய தொடைவிகற்பம் பதினொன்றும்போல[1] முதலடியும் இரண்டாம் அடியும், [2]முதலடியும் மூன்றும் அடியும், [3]முதலடியும் நான்காம் அடியும், [4]மூன்றும் அடியும் நான்காம் அடியும், [5]இரண்டாம் அடியும் நான்காம் அடியும், [6]இரண்டாம் அடியும் மூன்றும் அடியும் மடக்கி வரும் ஈரடிமடக்கு ஆறும், [7]ஈற்றடியொழித்து ஏனைமூன்றடியும், [8]இரண்டாம் அடியொழித்து ஏனைமூன்றடியும், [9]மூன்றும்அடியொழித்து

1. இணை. 2. பொழிப்பு. 3. ஒரூஉ. 4. கடையிணை. 5. இடைப்புணர். 6. பின். 7. கூழை. 8. மேற்கதுவாய். 9. கீழ்க்கதுவாய்.

ஏனைமூன்றடியும்,[1] முதலடியொழித்து ஏனைமூன்றடியும் மடக்கிவரும் மூவடிமடக்கு நான்கும்,[2] நான்கடியும் மடக்கிவரும் முற்றுமடக்கு ஒன்று மென வருதலாம். நாற்சீரடியுள் ஓதுமதனை நான்கடிச் செய்யுட்கண் ஓதினர்; ஒப்பின்முடித்தலென்பதனான். எனவே, இங்ஙனம் கூறிய மூவகையாகிய மடக்குப் பதினொன்றும் மேற்கூறி ஓரடிமடக்கு நான்கு மாகிய பதினைந்தும் ஆதி இடை கடையென்பனவற்றோடு கூட்டியுறழ நூற்றைந்து வகைப்படும். அவையே இடையிடாது வருவனவும் இடையிட்டு வருவனவும் இடையிட்டும் இடையிடாதும் வருவனவுமென்று கூறப்படும் மூன்று வகையோடுங் கூட்டியுறழ முந்நூற்றொருபத்தைந்து வகையவாம். ஆகவே, மடக்கெனத் தொகையானொன்றும் அடியான் வகை நான்கும் அவற்றின் பகுதியாகிய விரியான் மடக்கு முந்நூற்றொருபத்தைந்துமாமென உய்த்துணர்க.

அவற்றுள், முதலடியாதிமடக்கு வருமாறு:—

துறைவா துறைவார் பொழிற்றுணைவர் நீங்க
வுறைவார்க்கு முண்டாங்கொல் சேவல்—சிறைவாங்கிப்
பேடைக் குருகாரப் புல்லும் பிறங்கிருள்வாய்
வாடைக் குருகா மனம். [தண்டி. பக். 185]

எனவரும். இரண்டாமடியாதிமடக்கு வருமாறு:—

கனிவா யிவள்புலம்பக் காவலநீ நீங்கி
லினியா ரினியா ரெமக்குப்—பனிநா
ளிருவராய்த் தாங்கு முயிரன்றி யெங்குண்
டொருவராய்த் தாங்கு முயிர். [தண்டி. பக். 186]

எனவரும். மூன்றாமடியாதிமடக்கு வருமாறு:—

தேங்கானன் முத்தலைக்குந் தில்லைப் பெருந்தகைக்
கோங்காரத் துட்பொருளா மொண்சுடர்க்கு—நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கு மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம். [தண்டி. பக். 186]

எனவரும். ஈற்றடியாதிமடக்கு வருமாறு:—

இவளளவுந் தீயுமிழ்வ தென்கொலோ தோயுங்
குவளை மதமான் கடத்திற்—றிவளு
மலையார் புனலருவி நீயணுகா நாளின்
மலையா மலையா நிலம். [தண்டி. பக். 187]

எனவரும். ஒழிந்த ஓரடிமடக்கு வந்துழிக் காண்க.

முதலீரடியாதிமடக்கு வருமாறு:—

நினையா நினையா நிறைபோ யகலா
வினையா வினையா மிலமா—லனையாள்

---

1. கடைமுரண். 2. முற்று.

சுரவாருங் கூந்தற் குமுதவாய்க் கொம்பிற்
புரவாள நீபிரிந்த போது. [தண்டி. பக். 187]

எனவரும். முதலொடு மூன்றாமடியாதிமடக்கு வருமாறு:—

அடையா ரடையா ரரணழித்தற் கின்ன
லிடையாடு நெஞ்சமே யேழை—யுடையேர்
மயிலா மயிலா மதர்நெடுங்கண் மாற்றங்
குயிலாமென் றெண்ணல் குழைந்து. [தண்டி. பக். 188]

எனவரும். முதலொடுநான்காமடியாதிமடக்கு வருமாறு:—

மானவா மானவா நோக்கின் மதுகரஞ்சூழ்
கானவாங் கூந்தலெங் காரிகைக்குத்—தேனே
பொழியாரந் தார்மேனு நின்புயத்தின் மேலுங்
கழியா கழியா தரவு. [தண்டி. பக். 188]

எனவரும். ஈற்றீரடியாதிமடக்கு வருமாறு:—

மாத ருயிர்தாங்க வள்ளல் வருநெறியிற்
பேதுறவு செய்யும் பெரும்பாந்தள்—யாதும்
வரையா வரையா மெனுமா மதமா
விரையா விரையா வெழும். [தண்டி. பக். 189]

எனவரும். இரண்டாமடியோடீற்றடியாதிமடக்கு வருமாறு:—

மழையார் கொடைத்தடக்கை வாளபய னெங்கோன்
விழையார் விழையார்மெல் லாடை—குழையார்
தழையா முணவுங் கனியா மினமு
முழையா முழையா முறை. [தண்டி. பக். 190]

எனவரும். இடையீரடியாதிமடக்கு வருமாறு:—

குரவார் குழலாள் குவிமென் முலைதாம்
விரவா விரவாமென் றென்ற—லுரவா
வரவா வரவா மெனநினையாய் வையம்
புரவாளர்க் கீதோ புகழ். [தண்டி. பக். 189]

எனவரும். ஒழிந்த ஈரடிமடக்கு வந்துழிக்காண்க.

ஈற்றடியொழிந்த மூவடியாதிமடக்கு வருமாறு:—

இறைவா விறைவால் வளைகாத் திருந்தியா
ருறைவா ருறைவார் புயலா—னறைவாய்
வண்டளவு வண்டளவு நாளின் மயிலாலக்
கண்டளவி னீர்பொழியுங் கண். [தண்டி. பக். 190]

எனவரும். இரண்டாமடியொழிந்த மூவடியாதிமடக்கு வருமாறு:—

கோடியார் கோடியார் மதின்மூன்றுங் கொன்ற
படியார் பணைத்தடக்கை நால்வாய்க்—கடியா
ருரியா ருரியா ரெமையாள வோதற்
கரியார் கரியார் களம். [தண்டி. பக். 191]

எனவரும். மூன்றாமடியொழிந்த மூவடியாதிமடக்கு வருமாறு:—

மலையு மலையு மகிழ்ந்துறையும் வேயுங்
கலையுங் கலையுங் கடவுந்—தொலைவி
லமரி யெமக்கரணு மென்னுமவர் முன்னிற்
குமரி குமரிமேற் கொண்டு. [தண்டி. பக். 191]

எனவரும். முதலடியொழிந்த மூவடியாதிமடக்கு வருமாறு:—

பாலையாழ் தன்னிற் பதிற்றிரட்டி வெய்தன்றே
மாலைவாய் மாலைவா யின்னிசை—மேலுரை
மேவலர் மேவலர் மெல்லாவி வாட்டாதோ
காவலர் காவலராங் கால். [தண்டி. பக். 192]

எனவரும். ஒழிந்தமூவடிமடக்கு வந்துழிக் காண்க.

முற்றாதிமடக்கு வருமாறு:—

வரைய வரைய சுரஞ்சென்றார் மாற்றம்
புரைய புரையவெனப் பொன்னே—யுரையல்
நினைய நினைய தொடைநம்மை வேய்வர்
வினையர் வினையர் விரைந்து. [தண்டி. பக். 192.]

எனவரும். முற்றிடைமடக்கு வருமாறு:—

மனமேங் குழைய குழையவாய் மாந்த
ரினநீங் கரிய கரிய—புனைவதனத்
துள்வாவி வாவிக் கயலொக்கு மென்னுள்ளங்
கள்வாள வாளவாங் கண். [தண்டி. பக். 193.]

எனவரும். முற்றிறுதி மடக்கு வருமாறு:—

மாலை யருளாது வஞ்சியான் வஞ்சியான்
மேலை யமரர் கடைவேலை—வேலை
வளையார் திரைமேல் வருமன்ன மன்ன
விளையா ளிவளை வளை. [தண்டி. பக். 193.]

எனவரும். முற்றாதியிடைமடக்கு வருமாறு:—

கொண்டல் கொண்டலர் பொழிலொறும்
பண்ணையாய்ப் பண்ணையா யத்துள்ளார்

வண்டல் வண்டலர் தாதுகொண்
டியற்றலின் வருமணன் மணன்முன்றிற்
கண்டல் கண்டக மகிழ்செய
வோதிமங் கலந்துறை துறைவெள்ள
மண்டல் மண்டல முழுதுடன்
வளைதரு வளைதரு மணிவேலை. [தண்டி. பக். 194.]

எனவரும். முற்றுதியிறுதி மடக்கு வருமாறு:—

நிரையா நிரையா மணிபோனிறை கோடல் கோடல்
வரையா வரையா விருள்முன் வருமாலை மாலை
விரையா விரையா வெழுமின் ஞெளிர்மேக மேக
முரையா வுரையா ரினுமொல் லைமுல்லை முல்லை. [„ 195.]

எனவரும். முற்றிடையிறுதி மடக்கு வருமாறு:—

வருகம் புளினம் புளினம்பயில் வேலைவேலை
யொருகா லுலவா வுலவாவரு மோதமோத
வருகே தகைகே தகைசேர்தரு மன்னமன்ன
பெருகா தனவே தனவேரசை மாதர்மாதர். [தண்டி. பக். 195.]

எனவரும். முற்றுமுற்றுமடக்கு வருமாறு:—

களைகளைய முளரியரு கடைகடைய
மகளிர்கதிர் மணியு மணியும்
வளைவளைய கரதலமு மடைமடைய
மதுமலரு மலைய மலைய
விளையிளையர் கிளைவிரவி யரியரியின்
மிசைகுவளை மலரு மலருங்
கிளைகிளைகொ ளிசையளிகள் மகிழ்மகிழ்செய்
கெழுதகைய மருத மருதம். [தண்டி. பக். 196.]

எனவரும். இவையெல்லாம் இடையிடாது வந்தன.

முற்றுறி மடக்கு வருமாறு:—

தோடு கொண்டளி முரன்றெழக் கூடையவர் குழல்சேர்ந்த
தோடு கொண்டதே மலர்சுமந் தகில்கமழ்ந் தவர்தம்
தோடு தைந்தசெஞ் சாந்தணி திரண்முலை யிடைதோயத்
தோடு தண்புன னித்திலந் துறைதொறுஞ் சொரியும்.
[தண்டி. பக் 196]

எனவரும். முற்றிடைமடக்கு வருமாறு:—

பரவி நாடொறும் படியவாம் பல்புகழ்ப் பரப்பு
மிரவி சீறிய படியவாம் பரியெரி கவர

விரவி மான்பயில் படியவாம் வேய்தலை பிணங்கு
மருவி வாரணம் படியவாம் புலர்பணை மருதம்.
[தண்டி. பக். 197.]

எனவரும். முற்றிறுதிமடக்கு வருமாறு:—

சொன்ன நாளிது சுரும்பிமி ரிதழிபொன்கால
மின்னு வாள்விட வில்வளைத் தூன்றிய கால
வின்ன கார்முகி லினமிருண் டெழுதரு கால
மன்னர் வாரலர் தான்வரு மயின்மருங் கால. [„ 198.]

எனவரும். இவை இடையிட்டுவந்தன. ஒழிந்தன வந்துழிக் காண்க.

முற்றிடையிறுதிமடக்கு வருமாறு:—

வாமான மான மழை போன்மத மான மான
நாமான மான நகமாமுக மான மான
தீமான மானர் புகாத்திற மான மான
காமான மான கல்சுரங் கனன் மானமான. [„]

இஃது இடையிட்டும் இடையிடாதும் வந்தது. ஒழிந்தன வந்துழிக்காண்க.

வருமறை பலமுறை வசையறப் பணிந்தே
மதியொடு சடைமுடி மருவுமப் பணிந்தே
பருநட நவில்வது மழுகுபெற் றமன்றே
பருளொடு கடவுவ தணிகொள்பெற்ற மன்றே
திருவடி மலர்வன திகழொளிச் சிலம்பே
தெளிவுட னுறைவது திருமறைச் சிலம்பே
பிருவினை கடிபவ ரடைபதத் தன்றே
யிமையவர் புகலவ னெனநினைத் தன்றே. [„ 199.]

இஃது அடிதோறுந் தனித்தனியே வந்த இறுதிமுற்று மடக்கு.

அனைய காவலர் காவலர் காவல
ரினைய மாலைய மாலைய மாலைய
வெனைய வாவிய வாவிய வாவிய
வினைய மாதர மாதர மாதரம். [தண்டி. பக். 200.]

இது நான்கடியும் முதற்சீரொழித்து மடக்கிய முற்றுமடக்கு. இங்ஙனம் வரும் வேறுபாடுகளும் அறிந்துகொள்க. (68)

அடிமுழுது மடக்கு

316. அடிமுழுது மடக்குவ தாங்கதன் சிறப்பே.

இது மேற்கூறிய மடக்கிற் சிறப்புடையது இதுவென்கின்றது.

(இ-ள்.) அடிமுழுதும் மடக்குவது மேற்கூறிய மடக்கினுட் சிறப்புடைத்தெனப்படும். (எ-று.)

அடிமுழுதுமெனப் பொதுப்படக் கூறினாரேனும் இரண்டடி மடக்கு வதும் மூன்றடிமடக்குவதும் நான்கடிமடக்குவதுமென மூன்று வகைப் படும்.

அவற்றுள், ஈரடிமடக்கு வருமாறு:—

விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாகம்
விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாகம்
வரைமேவு நெறியூடு தனிவாரன் மலைவாண
நிரைமேவும் வளைசோர விவளாவி நிலைசோரும்.

[தண்டி. பக். 201]

இது முதலீரடி மடக்கியது.

கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்க
ளுடன்மேவு நிறைசோர மெலிவாட னுயிர்சோர்வு
கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்க
ளுடன்மேவு பெடைகூடி மறுகாது முறையாகொல்.

[தண்டி. பக். 201]

இது முதலடியும் மூன்றாமடியும் மடக்கியது.

மறைநுவல் கங்கை தாங்கினார்
நிறைதவ மங்கை காந்தனார்
குறையென வண்டர் வேண்டவே
மறைநுவல் கங்கை தாங்கினார். [,, பக். 202]

இது முதலடியும் ஈற்றடியும் மடக்கியது.

கொல்லியம் பொருநனைக் கூடார் கோநக
ரில்லெரி மேவுத லியம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின. [,, பக். 203]

இது கடையீரடியும் மடக்கியது.

நலத்தகை பெறவிரு சரண மோதுநங்
குலத்தகை பணிகோளே காம்ப ரத்தனே
நலத்தகை மகளொரு பாக நண்ணுமே
குலத்தகை பணிகோளே காம்ப ரத்தனே. [,, பக். 203]

இஃதிரண்டாமடியும் ஈற்றடியும் மடக்கியது.

கருமாலை தொறுகாதல் கழியாது தொழுதாது
முருமாய மதநைக மடுமாறு புரிவார்முன்
னுருமாய மதநாக மடுமாறு புரிவார்முன்
வருமாய வினைதீர வொருநாளு மருளார் கொல். [,, ,, 202]

இஃது இடையீரடி மடக்கியது.

மூவடிமடக்கு வருமாறு :—

காம ரம்பயி னீரம துகரங்
காம ரம்பயி னீரம துகரங்
காம ரம்பயி னீர மதுகர
நாம ரந்தை யுறநினை யார்நமர். [தண்டி பக். 204.]

இஃது ஈற்றடி யொழித்து ஏனைமூன்றடியும் மடக்கியது.

கடிய வாயின காமரு வண்டின
மடிய வாயகன் றுருறை வாரலர்
கடிய வாயின காமரு வண்டினங்
கடிய வாயின காமரு வண்டினம். [,, பக். 205]

இஃது இரண்டாமடி யொழித்து ஏனைமூன்றடியும் மடக்கியது.

கோவ ளர்ப்பன கோனக ரங்களே
கோவ ளர்ப்பன கோனக ரங்களே
மேவ ளக்கர் வியன்றிரை வேலைசூழ்
கோவ ளர்ப்பன கோனக ரங்களே. [,, பக். 205]

இது மூன்றாமடியொழித்து ஏனைமூன்றடியும் மடக்கியது.

வரிய வாங்குழன் மாதரி ளங்கொடி
யரிய வாங்கயத் தானவ னங்களே
யரிய வாங்கயத் தானவ னங்களே
யரிய வாங்கயத் தானவ னங்களே. [,, பக். 204]

இது முதலடியொழித்து ஏனைமூன்றடியும் மடக்கியது.

நான்கடிமடக்கு வருமாறு :—

வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின. [,, பக். 206]

எனவரும். இந்நான்கடிமடக்கினை ஏகபாதமென்றுங் கூறுவர்.

அதன்சிறப்பென்றது, ஆங்கதன்சிறப்பென்ற மிகையானே ஒரு சொல்லானே நான்கடி முழுவதும் மடக்குஞ் சொன்மடக்கும், இரணடடியாகமடக்கும் பாதமடக்கும், இடையிடாதுவந்த அந்தாதி மடக்கும், இடையிட்டுவந்த அந்தாதிமடக்கும் வரவும்பெறும்.

அவற்றுட், சொன்மடக்கு வருமாறு :—

உமாதர னுமாதர
னுமாதர னுமாதர

னுமாதர னுமாதர
னுமாதர னுமாதரன். [தண்டி. பக். 206]

எனவரும். பாதமடக்கு வருமாறு :—

பணிபவ னந்தன தாக மன்னுவார்
பணிப்வ னந்தன தாக மன்னுவா
ரணியென மேயது மன்ப ராகமே
யணியென மேயது மன்ப ராகமே. [,, பக். 207]

எனவும்,

கலைநி லாவரு மாலை மணங்கோள்வான்
மலையா மாருத மாறல மாதர்கண்
கலைநி லாவரு மாலை மணங்கோள்வான்
மலையா மாருத மாறல மாதர்கண். [,, பக். 208]

எனவும்,

ஓத நின்றல வாவரும் வேலைவாய்
மாத ரங்க மலைக்கு நிகரவே
யோத நின்றல வாவரு வேலைவாய்
மாத ரங்க மலைக்கு நிகரவே. [,, பக். 208]

எனவும் வரும். பிறவும் வந்துழிக் காண்க.

அந்தாதிமடக்கு வருமாறு :—

மாலை யாகவெய் யனங்கவேள் பயிறரு மாலை
மாலை வேட்டவர் மனங்கொலோ வவன்றுழாய் மாலை
மாலை யோவுடைத் ததுநினைந் தெழுதரு மாலை
மாலை யாவுடை யவரைவந் திடர்செயு மாலை. [,, பக். 209]

எனவும்.

கயலேர் பெறவருங் கடிபுனற் காவிரி
காவிரி மலருகக் கரைபொரு மரவ
மரவம் பூஞ்சினை வண்டொடு சிலம்புஞ்
சிலம்புசூழ் தளிரடி திருமனைக் கயலே. [,, பக். 209]

எனவும் வரும். பிறவும் அன்ன. (69)

ஓரெழுத்து மடக்கு

317. ஓரெழுத்து மடக்கலு முரித்தென மொழிப.

இஃது ஓரெழுத்தானும் மடக்குவருமென அதன் வேறுபாடு உணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) எழுத்தின் கூட்டம் இடைபிறிதின்றிச் சீரானும் அடியானும் மடக்குதலேயன்றிப் பெயர்த்தும் வேறுபொருடரின் ஓரெழுத்தான் மடக்குவதும் அம்மடக்கிற்கு உரிமையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர் எ-று

உதாரணம் :—

நாநா நாதங் கூடிசை நாடுந் தொழிலோவாய்
தாதா தாரம் மாகவி ரைத்தண் மலர்மீதே
வாவா வார்தண் சோலையில் வாழும் வரிவண்டே
யாயா யாளிற் சேர்த்துவ தன்பற் கிசையாயால்.

எனவரும். [தண்டி. பக். 210]

'ஓரெழுத்துமடக்கலு'மென்ற உம்மையான் ஓரெழுத்தும் ஈரெழுத்தும் மூவெழுத்தும் நான்கெழுத்தும் உயிராயும்மெய்வருக்கமாயும் இனவருக்கமாயும் வரும். அவ்வாறு வருங்கால் உயிராயும் உயிர்மெய்யாயும் வரும். இவையெல்லாம் ஓரோர் செய்யுண்முழுவதூஉம் வருமெனக்கொள்க.

அவற்றுள், ஒருயிரான் வருவனவற்றிற்குச் செய்யுள் :—

அமலல கலமகல லபய
கமல பவன மவள—[1] தமல
மடர[2] வளக சலச வதன
மடர மதன நட. [தண்டி. பக். 211.]

எனவும்,

தாயாயா ளாராயா டாமாறு தாராயா
யாமாரா வாணாடா மாதாமா தாவாவா
யாவாகா காலாறு காவாகா காணாநா
மாலாறு மாநாதா வா. [தண்டி. பக். 211.]

எனவும் வரும். ஏனைய வந்துழிக்காண்க. இவை ஒருயிர் ஓரலகாயே வந்தன.

மெய்வருக்கத்தான் வருவனவற்றிற்குச் செய்யுள் :—

காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்க—காக்கைக்குக்
கைக்கைக்கை காக்கக்காக் கைக்கிக்குக் கூகைக்கே
கொக்குக்குக் காக்கைக்கை கோ. [யா. வி. பக். 503]

எனவும்,

தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைத்ததா—தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது. [,, ,, ,,]

எனவும்,

நின்னைநா னென்னென்னே நின்னைநா னென்னுன்னே
நின்னைநா நின்னெனே நின்னுனி—னின்னுநு

(பி-ம்) 1. மவள, 2. மதன.

நாநாநா நின்னுநா னுனநீ னந்நானே
நீநா னெனநீ நினே.

எனவும் வரும். ஏனைய வந்துழிக்காண்க.

ஈரெழுத்தான் வருவதற்குச் செய்யுள் :—

மன்னுமான் மான்முன்ன மானமு மீனமா
மின்னமா னேமுன்னு மானினி—மென்மென
மின்னுமா மென்னினு மன்னமு மென்மென
மன்னுமா மானுமான் மான். [தண்டி. பக். 213.]

எனவரும். மூன்றெழுத்தான் வருவதற்குச் செய்யுள் :—

மின்னுவான் முன்னு மேனினு மினிவேனின்
மன்னுவினைவே னெனவினவா—முன்னுன
வானவனை மீனவனை மானவினை வென்வேன்
மானவனை மானுமோ வான். [„ „ „]

எனவரும். நான்கெழுத்தான் வருவதற்குச் செய்யுள் :—

யானக வென்னை யினையநா வாக்கின
கானக யானை யனையானைக்—கோனவனைக்
கொன்னயன வேனக்க கோகனகக் கைக்கன்னி
கன்னிக் கனியனைய வாய். [„ „ 214.]

எனவரும். ஏனைய வந்துழிக் காண்க.

இனம் மூவகைப்படும், வல்லினமும் மெல்லினமும் இடையினமு மென. அவை வருமாறு:—

துடித்தடித்துத் தோற்றத் துடுப்பெடுத்த கோட
டுெடுத்த தொடைகடுக்கை பொற்போற்—பொடித்துத்
தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டிற்றுக் காடு. [„ „ „]

எனவும்,

மானமே நண்ணு மனமென் மனமென்னு
மானமான் மன்னு நனிநாணும்—மீனமா
மாநான் மினன்மின்னி முன்முனே நண்ணினு
மாறு மணிமேனி மான். [„ „ 215.]

எனவும்,

யாழியல் வாய வியலளவா லாயவொலி
யேழிய லொல்லாவா லேழையுரை—வாழி
யுழையே லியலா வயில்விழியை யையோ
விழையே லொளியா விருள். [தண்டி. பக். 215.]

எனவும் வரும்.

நுமந்து புனலி னளியி லரிவை
யமுத விதழி னிகலுங்—குமுத
மருவி நறவு பருக வளரு
முருவ முடைய துரை. [தண்டி. பக். 214.]

என ஒற்றெழுத்தின்றி வருதலுங்கொள்க.

இங்ஙனங் கூறிய மடக்கின் வேறுபாடுகளெல்லாம் விரிந்த நூலுள்ளும் முன்னோர் கூறிய இலக்கியங்களுள்ளும் ஆராய்ந்து அமைத்துக் கொள்க. (70)

2. சித்திரகவி

318. கோமூத் திரியே கூட சதுக்க
மாலை மாற்றே மாத்திரைச் சுருக்க
மாத்திரை வருத்தன மெழுத்து வருத்தன
மொற்றுப் பெயர்த்தல் வினாவுத் தரமே
நாக பந்த முரச பந்தந்
திரிபாதி திரிபங்கி பிறிதுபடு பாட்டுக்
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளஞ் சருப்பதோ பத்திர
மக்கரச் சுதக நிரோட்ட மென்ன
முறைபெற வகுத்த மிறைக்கவி யிருபது
மறிவுறக் கிளந்த வவற்றின் பால.

நிறுத்தமுறையானே இது மிறைக்கவியின் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ-ள்.) கோமூத்திரிமுதல் நிரோட்டகம் ஈறாகச் சொல்லப்பட்ட இத்தன்மையவாய் முறைமைப்படப் பகுத்த மிறைக்கவி இருபதும் முன்னர் எடுத்தோதப்பட்ட அம்மடக்கின் பகுதியனவாம். (எ-று.)

மிறைக்கவியெனினுஞ் சித்திரகவியெனினும் ஒக்கும்.

அவற்றுட், 1. கோமூத்திரியென்பது நான்கடிச் செய்யுளை இரண்டிரண்டு வரியாக எழுதி மேலுங் கீழும் ஒன்றிடைவிட்டு வாசிக்க அப்பாட்டேயாவது.

வரலாறு:—

பருவ மாகவி தோகன மாலையே
பொருவி லாவுழை மேவன கானமே
மருவுமாசை விடாகன மாலையே
வெருவி லாயிழை பூவணி காலமே. [தண்டி. பக். 217]

எனவரும்.

2. கூடசதுக்கமென்பது ஈற்றடியெழுத்து ஏனைமூன்றடியினுங் கரந்துநிற்பச் சொற்சேர்த்துப்பாடுவது. வரலாறு:—

புகைத்தகைச் சொற்படைக் கைக்கதக் கட்பிறைப் பற்கறுத்த
பகைத்திறச் சொற்கெடச் செற்றநச் சிப்பதித் தூர்க்கை [பொற்புத்
தகைத்ததித் தித்ததுத் தத்தசொற் றத்தைபத் தித்திறத்தே
திகைத்தசித் தத்தைத் துடைத்தபிற் பற்றுக்கெடக் கற்பதே.

எனவரும். [தண்டி. பக். 217]

3. மாலைமாற்றென்பது ஒருபாட்டை ஈற்றை முதலாக வாசித்தாலும் அப்பாட்டேயாவது. வரலாறு:—

நீவாத மாதவா தாமோக ராகமோ
தாவாத மாதவா நீ. [,, ,, 219]

எனவரும்.

4. மாத்திரைச்சுருக்கமென்பது ஒரு சொல் ஒரு மாத்திரை குறையப் பிறிதொருசொல்லாய்ப் பிறிதொரு பொருள்வரப்பாடுவது. வரலாறு:

[1] நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமா
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாஞ்—சீரளவு
காட்டொன் றொழிப்ப விசையாங் கவினளவு
மீட்டொன் றொழிப்ப மிடறு. [,, ,, 241]

எனவரும்.

5. மாத்திரைவருத்தனமென்பது இதனையே மறுதலைப்படப் பாடுவது. அது வந்தழிக் (தண்டி. ப. 246) காண்க.

6. எழுத்துவருத்தனமென்பது ஒரெழுத்தான் ஒருமொழியாய்ப் பொருள்பயந்து பின்னோரெழுத்தேற்றப் பிறிதொரு மொழியாய்ப் பொருள்பயந்து அவ்வாறே முறையானே ஏற்ற ஏற்ற ஒவ்வொரு மொழியாய்ப் பொருள்பயப்பப் பாடுவது.

[2] ஏந்திய சங்கமு முன்னு ளெடுத்ததுவும்
பூந்துகிலு மானுந்தி பூத்ததுவும்—வாய்ந்த
வுலைவி லெழுத்தடைவே யோரொன்றாச் சேர்க்கத்
தலைமலையொன் றாமரையென் றாம். [,, ,, 220]

எமவரும்.

---

1. நேரிழையார் கூந்தல் - ஓதி; ஒரு மாத்திரை குறைந்தது - ஒதி (ஒருவகை மரம்). நீர் நிலை - ஏரி; ஒரு மாத்திரை குறைந்தது - எரி. ஒழிந்தனவும் இவ்வாறே கண்டு கொள்க.

2. கம், நகம், காகம், கோகநகம் என முறையே வொட்டிக்கொள்க. கம்பு - சங்கம்.

7. ஒற்றுப்பெயர்த்தலென்பது ஒருமொழியுந் தொடர்மொழியு மாய்ப் பொருள்படுமெவற்றை அப்பொருளொழிய வேறுபொருள்பட வைத்துப் பாடுவது. வரலாறு:—

[3] வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிருஞ் சாயை வளர்க்குமாந்—தண்கவிகைக்
கொங்கா ரலங்கற் குலதீபன் கொப்பொழில்சூழ்
கங்கா புரமா ளிகை. [தண்டி. பக். 240]

எனவரும்.

8. வினவுத்தரமென்பது ஒருசொற்றொடரைப் பிரித்துப் பதந் தோறும் வினயதற்கு உத்தரமாகப் பதப்பொருளுரைத்துக் கடைக்கால் வினயதற்கு உத்தரமாக அத்தொடர்முழுதும் ஒரு பொருளாக்கி உரைப்பது. வரலாறு.—

பூமகள்யார் போவானை யேவுவா னேதுரைக்கு
நாமம் பொருசரத்திற் கேதென்பர்—தாமழகின்
பேரென் பிறைசூடும் பெம்மா னுவந்துறையுஞ்
சேர்வென் திருவேகம் பம். [தண்டி. பக். 222]

எனவரும்.

9. நாகபந்தமென்பது இரண்டு பாம்பாக மாறியெழுதி ஒரு நேரிசை வெண்பாவும் இன்னிசைவெண்பாவுமெழுதிச் சந்திகளினின்ற எழுத்தை மற்றையிடங்களினும் உறுப்பாய்நிற்கப் பாடுவது. வரலாறு:—

அருளின் றிருவுருவே யம்பலத்தா யும்பர்
தெருளின் மருவார்ச்சீர்ச் சீரே—பொருவிலா
வொன்றே யுமையா ளுடனே யுருத்தரு
குன்றே தெருள வருள். [தண்டி. பக். 221]

எனவும்,

மருவினவ ருளத்தே வாழ்சுடராய் நஞ்சு
பெருகொளியான் மேயபெருஞ் சோதித்—திருநிலா
வானஞ் சுருங்கு மிகுசுடரே சித்த
மயரு மளவை யொழி. [,, ,, 222]

எனவும் வரும்.

வா லுளிரு மூன்றுந் தலையி லிரண்டெழுத்து
மூலைக ளொன்றும் வயிறிரண்டு—மைமைவந்தாய்

---

3. கங்காபுரமாளிகை - கங்காபுரம் + ஆளி - கை எனப் பிரித்து கங்காபுரத்தை ஆளும் அநபாயன் கை எனப் பொருள் கொள்ளக் கிடந்தவாறு காண்க.

நாலெட்டு நாலைந்தே ழாகி நடைபெறுமே
சேலிட்ட கண்ணரவின் சீர்.

இதன்வழியே எழுதிக் கண்டுகொள்க.

10. முரசபந்தமென்பது ஓரடியொருவரியாய் நான்குவரியெழுதி மேலிரண்டுவரியுந் தம்முட்கோமூத்திரியாகவும், கீழிரண்டுவரியுந் தம்முட் கோமூத்திரியாகவும், சிறுவார் போக்கியும் மேலில்வரி இரண்டாம் வரியினும், மூன்றாம்வரியினும், நான்காம்வரியினுங் கீழுற்று மீண்டும் மேனோக்கி அவ்வாறே வந்துங் கீழ்நோக்கி அவ்வாறே சிறுவார் போக்கியுங் கீழில்வரியினும் அவ்வாறே மேனோக்கி மேலில்வரியுற்றுக் கத்தரிகை மாறாய்ப் பெருவார் போக்கியும் அவ்வரியேயாகப் பாடுவது. வரலாறு:—

கான வாரண மரியவா யினதோ
தான வாரண மரியவா யினதோ
மான வாரண மரியவா யினதோ
கான வாரண மரியவா யினதோ. [தண்டி. பக். 244]

எனவரும்.

11. திரிபாகியென்பது மூன்றெழுத்துக் கூட ஒருமொழியாய் அதன் முதலெழுத்துங் கடையெழுத்துங் கூட மற்றொருமொழியாய் இடையெழுத்துங் கடையெழுத்துங்கூட மற்றொருமொழியாய்ப் பொருள் வேறுபடப் பாடுவது. வரலாறு;—

மூன்றெழுத்து மெங்கோன் முதலீ றொருவள்ள
லேன்றுலகங் காப்ப திடைகடையா—மேன்றுரைப்பிற்
பூமாரி பெய்துலகம் போற்றிப் புகழ்ந்தேத்துங்
காமாரி காரிமா ரி. [தண்டி. பக். 244.]

எனவரும்.

12. திரிபங்கியென்பது ஒரு செய்யுளுறுப்பமைந்து ஒருபொருள் பயந்ததனையே மூன்றாகப்பிரித்தெழுத வெவ்வேறே தொடையும் பயனிலையும் பொருளும் பயப்பப் பாடுவது. வரலாறு:—

ஆதரந்தீ ரன்னைபோ லினியா யம்பிகா பதியே
மாதர்பங் காவன்னி சேர்சடை யாய்வம்பு நீண்முடியா
வேதமுய்ந் தோரின்னல் சூழ்வினை தீரெம்பி ரானினியா
ரோதுமொன் றேயுன்னு வாரமு தேயும்பர் நாயகனே.

[„ 245]

இதனையே,

ஆதரந்தீர்
மாதர்பங்கா
வேதமுய்ந்தோ
ரோதுமொன்றே. [„ „]

எனவும்,

அன்னேபோ லினியாய்
வன்னிசேர் சடையா
யின்னல்சூழ் வினைதீ
ருன்னுவா ரமுதே. [தண்டி. பக். 245]

எனவும்,

அம்பிகா பதியே
வம்புநீண் முடியா
யெம்பிரா னினியா
ரும்பர்நா யகனே. [„ „]

எனவும் மூன்றாகப் பிரித்து அவ்வாறுதல் கண்டு கொள்க.

13. பிறிதுபடுபாட்டென்பது ஒரு செய்யுளைத் தொடையும் அடியும் வேறுபட உரைப்பச் சொல்லும் பொருளும் வேறுபடாது வேறொரு செய்யுளாகப் பாடுவது. வரலாறு:—

தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும் பரிசுகொண்டு
வரியளி பாட மருவரு வல்லி யிடையுடைத்தாய்த்
திரிதரு காமர் மயிலிய லாயநண் ணுத்தேமொழி
யரிவைதன் னேரென லாமியற் றையயா மாடடமே. [„ 247.]

எனவரும் ஐஞ்சீர் நான்கடிக் கொச்சகக் கலித்துறையே

தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும்
பரிசு கொண்டு வரியளி பாட
மருவரு வல்லியிடை யுடைத்தாய்த் திரிதருங்
காமர் மயிலிய லாய நண்ணுற்
தேமொழி யரிவைதன் னேரென
லாமியற் றைய யாமா டடமே. [„ „ „]

என ஈற்றயலடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் நேரிசை யாசிரியப்பாவா யினவாறு கண்டுகொள்க.

14. காதைகரப்பென்பது[1] ஒருசெய்யுள் முடிய எழுதி அதன் ஈற்று மொழியுள் முதலெழுத்துத் தொடங்கி ஓரோரெழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுளாகப் பாடுவது; வரலாறு:—

தாயேயா நோவவா வீரு வெமதுநீ
பின்னை வெருவா வருவதொ ரத்தப
வெம்புகல் வேறிருத்தி வைத்திசி னிச்சைகவர்
தாவா வருங்கலனீ யே. [„ „ 226.]

எனவரும். இதனுட்,

கருவார் கச்சித்
திருவே கம்பத்

---

1. இதைக் 'கரந்துறைப்பாட்டென்பர் யாப்பருங்கல விருத்திகாரர்.

தொருவா வென்னீ
மருவா நோயே [தண்டி. பக். 226]

எனப் பிறிதொரு செய்யுட் போந்தவாறு கண்டு கொள்க.

15. கரந்துறைச் செய்யுளென்பது[1] ஒரு செய்யுட்குப் பிறிதோர் செய்யுட் சொற் புகுதாது எழுத்துப் பொறுக்கிக் கொள்ளலாம்படி பாடுவது; வரலாறு:—

அகலல்குற் றேரே யதர மமுதம்
பகர்தற் கரிதிடையும் பார்க்கின்—முகமதிய
முத்தென்ன லாமுறுவன் மாதர் முழுநீல
மைத்தடங்கண் வெவ்வேறு வாள். [தண்டி. பக். 227.]

எனவரும். இதனுட்போந்த செய்யுள்:—

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. [குறள். 1.]

எனக் காண்க.

16. சக்கரம் நான்காரற்சக்கரமும் ஆறாரற்சக்கரமும் எட்டாரற் சக்கரமுமென மூன்றுவகைப்படும். அவற்றுள் நான்காரற்சக்கரம் இரண்டு வகைப்படும்; வரலாறு,—

மேரு சாபமு மேவுமே
மேவு மேயுணா வாலமே
மேல வானவ னுயமே
மேய நானடி சாருமே.

இது குறட்டின் நடுவே மே என்னும் எழுத்து நின்று ஆரன்மேல் ஒவ்வோரெழுத்தாக நான்கெழுத்து நின்று சூட்டின்மேற் பன்னிரண்டு எழுத்துநின்று செய்யுள் முடிந்தவாறு காண்க.

மாதவா போதி வரதா வருளமலா
பாதமே யோது சுரரைநீ—தீதகல
மாயா நெறியளிப்பா யின்றன் பகலாச்சீர்த்
தாயே யலகில்லா டாம். [தண்டி. பக். 229.]

இதன் வேறுபாடும் அறிந்துகொள்க. ஆறாரற்சக்கரம் வருமாறு:—

தண்மலர் வில்லிதன் போரா*ன தஞ்சநமக் களித்த
கண்மலர்க் காவிக் கெதி †ராவணவென்று கையளந்த
பண்மலர் யாழ் பயில்வா ரார்வுசேர்பதி நாகைமிக்க
தண்மை யகத்துப் பதுமத்த மாதர் தடங்கண்களே. [,, 229.]

இஃது ஆரன்மேல் ஒன்பதொன்பதெழுத்தாய் நடுவே ரகரமாய்ச் சூழ்ந்த குறட்டிற் போதிவானவன் என்னும் பெயர் நின்று சூட்டின் மேல் இருபத்துநான்கெழுத்தாய் முற்றுப்பெற்றுச் செய்யுண்முடிந்தவாறு காண்க.

---

1. காதை கரப்பென்பர் யாப்பருங்கலவிருத்தி யுடையார்
(பா-ம்) * னமக்குத் தலைவனே' † 'ராவண வன்று கைப் பொலிந்த.

எட்டாரச்சக்கரம் வருமாறு:—

மலர்மலி சோலை யகனலங் கதிர்க்க
மடமயி லியற்றக மாதிரம் புதைத்து
வளர்ந்துபுகன் மேக வல்லிருண் மூழ்க
வரியளி துதைந்த கதுப்பிணி தடைச்சி
மன்னுமா மடமொழி வடிவாள் வளவன்
கன்னித் துறைவன் கனகச் சிலம்பே. [தண்டி. பக். 230.]

எனவரும். இதனுள் ஆரன்மேல் அவ்வாறெழுத்தாய் நடுவே ககரம் நின்று குறட்டின்மேல் அறமேதனமாவது என்னுஞ் சொன்னின்று சூட்டின் மேல் முப்பத்திரண்டெழுத்தாய் முற்றுப்பெற்றுச் செய்யுள் முடிந்தவாறு காண்க.

17. சுழிகுளமென்பது ஒரு செய்யுளை எவ்வெட்டெழுத்தாக நாலடியும் நான்குவரியெழுதி மேனின்று கீழிழிந்தும், கீழ்நின்றுமேலேறியும் முடிய உச்சரித்தாலும் அவ்வரி நான்குமேயாய் அச்செய்யுட்டானே முற்றுப் பெறுவது. வரலாறு.—

கவிமுதியார் பாவே
விலையருமா நற்பா
முயல்வ துறுநர்
திருவழிந் துமாயா.

எனவரும்.

18. சருப்பதோபத்திரமென்பது ஒருநிலை எவ்வெட்டாக அறு பத்துநான்கு அறைகீறி ஓரடி எவ்வெட்டெழுத்தாக நான்கடியாலொரு செய்யுட்பாடி அதனை மேனின்று கீழிழிய நான்கடியும் எழுதி அதனைக் கீழ்நின்று மேலேற நான்கடியும் எழுதி மேனின்று கீழிழியவுங் கீழ்நின்று மேலேறவும் விலங்கி முதல் தொடங்கி இறுதியாகவும் இறுதி தொடங்கி முதலாகவும் மாலைமாற்றாகவும் நான்கு முகத்தாலும் வாசிக்க அச் செய்யுளேயாவது. வரலாறு:—

மாவா நீதா தாநீ வாமா
வாயா வாமே மேவா யாவா
நீவா ராமா மாரா வாநீ
தாமே மாரா ராமா மேதா [தண்டி. பக். 237]

எனவரும். இதனுள் அவ்வாறுதல் கண்டுகொள்க.

19. அக்கரச்சுதகமென்பது ஒரு பொருள் பயப்பதோர் சொற்கூறி அச்சொல்லின் ஓரோரெழுத்தாக நீக்க வேறுவேறு பொருள் பயப்பது. வரலாறு:—

பொற்றாணின் வந்தசுடர் பொய்கை பயந்த வண்ணல்
சிற்றாயன் முன்வனிதை யாகி யளித்த செம்மல்
மற்றியார்கொ லென்னில் மலர்தூவி வணங்கி நாளுங்
கற்றோர் பரவுங் கனகாரி நகாரி காரி. [தண்டி. பக். 239]

எனவரும்.

20. நிரோட்டகமென்பது இதழ்முயற்சியாற் பிறக்கும் மெய்யும் உயிரும் உயிர்மெய்யும் வாராமற் பாடுவது. வரலாறு:—

சீலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா னாராத காதலான்—ஞாலத்தா
லிச்சிக்கச் சாலச் செறிந்தடியேற் கேயினிதாங்
கச்சிக்கச் சாலைக் கனி. [தண்டி. பக். 239]

எனவரும். இதனையுச்சரித்து அவ்வாறுதல் காண்க.

தன்னின முடித்தலென்பதனாற் சதுரங்கவிகற்பமுந் தேர்க்கவி கடகபந்தம் முதலாயவற்றின் வேறுபாடுங் கொள்க. (71)

வழுக்களின் வகை

319. பிரிபொருட் சொற்றொடர் மாறுபடு பொருண்மொழி
மொழிந்தது மொழிவே கவர்படு பொருண்மொழி
நிரனிறை வழுவே சொல்வழு யதிவழுச்
செய்யுள் வழுவே சந்தி வழுவென
வெய்திய வொன்பதோ டிடனே காலங்
கலையே யுலக நியாய மாகம
மெனமலை விருமூன் றும் வரைந்தனர் புலவர்.

இது மேற்கூறிய அணிபெறுஞ் செய்யுட்குப் பொருந்தாத குற்றமாவன இவையென்று தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) பிரிபொருட் சொற்றொடரும் மாறுபட்ட பொருண்மொழியும் மொழிந்தது மொழிதலுங் கவர்படுபொருண் மொழியும் நிரனிறை வழுவுஞ் சொல்வழுவும் யதிவழுவுஞ் செய்யுள் வழுவுஞ் சந்திவழுவு மென்று சொல்லப்பட்ட வழு ஒன்பதனோடு இடமலைவுங் காலமலைவுங் கலைமலைவும் உலகமலைவும் நியாயமலைவும் ஆகமமலைவுமென்னும் மலைவு ஆறும் உள்ளிட்ட பதினைந்தும் அவ்வணிபெறுஞ் செய்யுட்கு ஆகாவென்று களைந்தனர் புலவர். (எ-று.)

ஒன்பதும் ஆறுமாகப் பிரித்தோதினார் முன்னரொன்பதும் பெரும்பான்மை குற்றமாகச் சிறுபான்மை ஒரோவிடத்துக் குணமாதலும், பின்னராறும் ஒருதலையாகவே குற்றமாய்ப் புகழ்ச்சி யிடத்தும் புனைந்துரையாகப் புணர்க்கவல்ல புலவராற் சிறுபான்மை மொழியப்படுதலுமாம் என்றற்கு. அஃதேல், இக்குற்றஞ் செய்யுளோக்கி வருவனவாகலின் செய்யுளியலுட்

கூறாது ஈண்டுக் கூறியதென்னையெனின், நன்று சொன்னாய்! செய்யுளென்பது சட்டகம்; அலங்காரமென்பன அச்சட்டகத்தைப் பொலிவு செய்வனவாகலான் அச்செய்யுட்குப் பொலிவு உணர்த்திப் பொலிவழிவும் ஈண்டே கூறப்பட்டன. அன்றியும், பொருளை விளக்குவது அணிக்கு இலக்கணமாகக் கூறி, மீட்டும் அப்பொருளுக்கு இடமாகிய செய்யுளை விளக்குவதும் அதற்கு இலக்கணமாகக் கூறினமையான் ஈண்டுக் கூறினாரெனினும் அமையும். ஆதலான் அப்பொலிவிற்கு வழுநிலை தனித் தனியே எடுத்துக் கூறி அதன் ஒழிபாகிய வழுவும் வழுவமைதியுந் தொகுத்துக் கூறினாரென்பதூஉமாயிற்று. (72)

புறனடை

320. மேற்கோ ளேது வெடுத்துக்காட் டெனமூன்று
சாற்றுப வவற்றின் பாற்படு வழுநிலை
நிரம்ப வுணர்த்த வரம்பில வாகும்.

இது பிறன்கோட் கூறி மறுக்கின்றது.

(இ-ள்.) மேற்கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டுமெனவும் மூன்று சொல்லுவர் ஆசிரியர். அவற்றின் பகுதிக் கண்ணவாய் வரும் வழுநிலையை ஈண்டு முற்ற உணர்த்த அளவின்றிப் பெருகும். (எ-று.)

எனவே, ஈண்டு அவற்றை உணர்த்திலமென மறுத்ததாயிற்று. அவை நியாயநூலாராய்ச்சியின்பாற் படுவனவாதலானும், மதங்கடோறும் வேறுபட்டு நிற்றலானும், இன்பத்தை உரைக்கும் வரையறையுடையதாய அணியிலக்கணத்திற் பிறிதுபடுதலானும் அவற்றை வேண்டிற்றில மென்க. (73)

1. பிரிபொருட்சொற்றொடர்

321. அவற்றுட்,
பிரிபொருட் சொற்றொடர் செய்யுண் முழுவது
மொருபொருள் பயவா தொரீஇத் தோன்று மதுவே
களிப்பினும் பித்தினுங் கடிவரை யின்றே.

இது நிறுத்தமுறையானே பிரிபொருட்சொற்றொடரும் அதன் அமைதியுங் கூறுகின்றது.

(இ-ள்.) இதனுள் மேற்கூறிய பதினைந்தனுட் பிரிபொருட் சொற்றொடரென்று சொல்லப்படுவது ஒரு செய்யுளின்சொற்கள் முழுவதும் ஒரு பொருளாக உரைக்கப்படாது பிரிந்துதோன்றுவதாம். அது தானே கள்ளுண்டு களித்தார் கூற்றின் கண்ணும் பித்தினான் மயங்கினார் கூற்றின் கண்ணும் வழுவென நீக்கும் நிலைமையின்று. (எ-று.)

பிரிபொருட்சொற்றொடர் - ஒன்றாப்பொருளுடைச் செய்யுள்.

வரலாறு;—

கொண்டன் மிசைமுழங்கக் கோபம் பரந்தனவாற்
றெண்டிரைநீ ரெல்லாந் திருமுனியே—யுண்டுமிழ்ந்தான்
வஞ்சியார் கோமான் வரவொழிக மற்றிவளோர்
பஞ்சியார் செஞ்சீ றடி. [தண்டி. பக். 250]

எனவும்,

காம னுருவங் கரந்தேன்யான் காங்கேயன்
வீம னெதிரே விலங்குமே—தாமரைமேல்
மால்பொழிய வந்தா ரருகர் மனுவுடனே
பால்பொழியு மிவ்வூர்ப் பனே. [தண்டி. பக். 251]

எனவும் முறையே அவ்வாறுதல் கண்டுகொள்க. பித்தினன் மயங்கிக் கூறுதல் வந்துழிக் காண்க.

வரைவின்றென்னுது, கடிவரையின், றென்றதனுற் பிள்ளைத் தன்மையான் மொழியினும் அமையும். அதுவும் வந்துழிக்காண்க.

அவற்று, ளென்பதனை இப்பொருண்மையதிகாரம் முற்றுமளவும் உய்த்துரைக்க. (74)

மாறுபடு பொருண்மொழி

322. மாறுபடு பொருண்மொழி முன்மொழிந் ததற்கு
மாறுபடத் தோன்றி வருமொழித் தாமது
காமமு மச்சமுங் கைம்மிகி னுரித்தே.

இதுவும் அது.

(இ-ள்.) மாறுபடுபொருண்மொழியென்பது முன்மொழிந்த சொற்பொருளோடு மாறுபட்ட பொருடோன்றிய மொழியினையுடைத்தாய் வரும். அதுவே காமங் கைம்மிகுந்தார் கூற்றின்கண்ணும் அச்சங் கைம்மிகுந்தார் கூற்றின்கண்ணும் வழுவாகாது அமைவுடைத்து. (எ-று.)

வரலாறு:—

மின்னார் மணிப்பைம்பூண் வேந்தே நினக்குலகி
லின்னு தவர்யாரு மின்மையா—லொன்னார்
குலமுழுதுங் கூற்றங் கொளவெகுண்டு நீயே
தலமுழுதுந் தாங்க றரும். [தண்டி. பக். 251]

எனவும்,

என்னே யிகல்புரியப் பஞ்சவர்க ளஞ்சாரோ
மின்னனைய பாஞ்சாலி யையைவிடே—னென்னே
மிகல்புரியுங் கூற்றனைய வீம னெதிர்நின்
றிகல்புரிய வாற்றுவலோ யான். [தண்டி. பக். 252]

எனவும் முறையே காண்க. ஏனைய வந்துழிக்காண்க. (75.)

3. மொழிந்தது மொழிவு

323. மொழிந்தது மொழிதல் கூறியது கூறி
வேறுபட வொருபொருள் விளக்கா தாகும்
விரைவினுஞ் சிறப்பினும் வரைவின் றதுவே.

இதுவும் அது.

(இ-ள்.) *மொழிந்ததுமொழிதலென்பது முற்கூறியதனை மீட்டுங் கூறி அதனால் வேறுபட ஒருபொருளை விளக்காதாகும். அதுவே விரைவின் கண்ணுஞ் சிறப்பின் கண்ணுங் கடியப்படாது. (எ-று.)*

வரலாறு:—

அங்க மிலாத வநங்க னமர்புரியும்
வெங்கணையுங் காக்குங்கொல் வேல்வேந்தே—தங்கோ
னிலையார்த் தொடைதந்தோ னேரிழைக்காய் முன்னோர்
மலையாற் கடல்கடைந்த மால். [தண்டி. பக். 253]

எனவும்,

ஒருவ ரொருவர் மேல் வீழ்ந்து வடநாட
ரருவரரு வரரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போய்க்கலிங்க மீதெழுந்த போது. [தண்டி. பக். 254]

எனவும் முறையே காண்க. ஏனையது வந்துழிக்காண்க. (76.)

4. கவர்படு பொருண்மொழி

324. ஒருபொரு டுணிய வுரைக்க வுறுசொல்
லிருபொருட் கியைவது கவர்படு பொருண்மொழி
வழுப்பட லில்வழி வரைவின் றதுவே.

இதுவும் அது.

(இ-ள்.) *ஒரு பொருளைத் தெரிவுற உணர்த்துதற்குப் பொருந்திய சொல் அதனை ஐயுறும்படி பலபொருள்மேலும் நிற்பது கவர்படுபொருண் மொழியாம். அதுவே வழுவில்லாத இடத்துப் பொதுப்பட உரைப் பினும் நீக்குதலின்று. (எ-று.)*

வரலாறு :—

புயலே புறம்பொதிந்து பூந்தா தொழுக்கி
மயலே கடவுளர்க்கு வாய்த்துச்—செயலை
யெரிமருவு பூந்துணர்த்தாய் யாவருமே டாடா
ரரிமருவுஞ் சோலை யகம். [தண்டி. பக். 255]

எனவும்,

வானவர்க டாழ்ந்து பணிகேட்ப மாறாகத்
தானவர்கள் சுற்றந் தடிந்தொடிந்த—மேன்மை
யரியே யனைத்துலகுங் காக்குங் கடவு
ளெரியே மறையோர்க் கிறை. [தண்டி. பக் 256]

எனவும் முறையே காண்க. (77)

5. நிரனிறைவழு

325. ஒருநிரல் முன்வைத் ததன்பின் வைக்கு
நிரனிறை பிறழ்வது நிரனிறை வழுவஃ
துய்த்துணர வருவழி யுடன்பா டுடைத்தே.

இதுவும் அது.

(இ-ள்.) ஒருநிரல் முன்னெண்ணி வைத்து அதன்பின் வைக்கும் நிரல் மாறுபடவைப்பது நிரனிறைவழுவாம். அதுவே அந்நிரனிறை உய்த்துணரத் தோன்றுவதாயின் அமைவுடைத்து. (எ-று.)

வரலாறு :—

தெற்குங் குடக்கும் வடக்குங் குணக்குமே
நிற்குந் திறந்துலகை நீடளிக்கும்—பொற்பினு
நீரெண் கலையோன் வருணா னிரவியமன்
யாரும் புகழியல்பி னார். [,, ,, 256]

எனவும்,

குடபால் வடபால் குணபாறென் பாலென்
றடைவே திசைகாவன் கவற்றா—லிடையிரண்டு
நன்மைபுரி வோர்க்குநந்து நோக்குப வேனைய
வன்மை புரிவோர்க்கே யாம். [,, ,, 257]

எனவும் முறையே காண்க. (78)

6. சொல்வழு

326. சொல்வழு வென்பது சொல்லிலக் கணத்தோடு
புல்லா வாகிப் புகர்படு மொழியது
வழக்கா றுயின் வரைவின் றாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) சொல்வழுவென்று சொல்லப்படுவது சொல்லிலக்கணத்தோடு மாறுபட்டு வழுவிவருஞ் சொற்களைப் புணர்ப்பதாம்; அதுவே உலகத்து அடிப்பட்டு வழங்குஞ் சொற்களாயின் வழுவென்று நீக்குதலின்று. (எ-று.)

வரலாறு :—

யாவகைய தாயார்க்கு மெந்தைக்கு மெங்களுக்கு
மாவி யவளே யனைவேழுந்—கோவே
நுனக்கபய மீந்த நுழைமருங்குன் மாதர்
தனக்கிடரொன் றில்லாமற் றுங்கு. [தண்டி. பக். 258]

எனவும்,

யாவ ரறிவா ரிவரொருவ ரிக்குறிஞ்சிக்
காவலரோ விஞ்சையர்தங் காவலரோ—பாவா
யருமருந் தாரன்ற ரகன்புனம்விட் டேகார்
தெருமந் துழலுந் திறம். [தண்டி. பக். 258.]

எனவும் முறையே காண்க. (79)

7. யதிவழு

327. யதிவழு வென்ப தோசை யறுவழி
நெறிபட வாரா நிலைமைய தவே
வகையுளி யாயின் வழுவின் றாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) யதிவழுவென்று சொல்லப்படுவது ஓசைகொண்டு தளை யறுக்குமிடத்து அறுத்தற்கரிதாய் வேறுபடவருந் தன்மையதாம். அதுவே வகையுளியாகப் பிரித்துக் கூறுமிடத்துக் குற்றமில்லையாம். (எ-று.)

வரலாறு :—

மாடு பயிலும் வரையாளி மால்யானைக்
கோடுபுய்த் துண்டுழலுங் கொள்கைத்தாங்—காடு
அரிதா மியல்பிற் றரையிருட்கண் வாரல்
பெரிதாகு மைய பிழை. [,, ,, 259.]

எனவும்,

மேவிவாழ் வார்மே லருள்நீங்கா தாருமலர்த்
தேவிநீங் காள்செம்பொற் றேளிணைகள்—கோவினனி
சென்னிவிடா மாலினடி வேலினுதி நீலநிறக்
கன்னிவிடா ளீகைவிடா கை [,, ,, 260.]

எனவும் முறையே காண்க. (80)

8. செய்யுள்வழு

328. செய்யுள் வழுவே யாப்பிலக் கணத்தோ
டெய்த லில்லா வியல்பின தவே
யாரிடத் துள்ளு மவைபோல் பவற்றுளு
நேரு மென்மனார் நெறியுணர்ந் தோரே.

இதுவும் அது.

(இ-ள்.) செய்யுள்வழூவென்று சொல்லப்படுவது செய்யுளிலக்கணத்தோடு பொருந்தாத இயல்பினையுடைத்தாம். அதுவே ஆரிடத்துள்ளும் ஆரிடப்போலியுள்ளும் பொருந்துமென்று கூறுவர் இலக்கணங்களையறிந்தோர். (எ-று.)

ஆரிடமென்பன: இருடிகளாற் சொல்லப்படுவன. அவற்றின் போலி யாவன: சாவவுங் கெடவும் வாழவும் பாடவும் மனத்தது பாடவும் வல்லாராற் பாடப்படுவன.

வரலாறு:—

ஆதரந் துயர்தர வயர்தருங் கொடிக்குப்
பூதலம் புகழ்புனை வளவன்—றூதகி
தாங்கரும்பா லன்றித் தகையுமோ தாரநங்கள்
பூங்கரும்பால் வந்தடர்ந்த போர். [தண்டி. பக். 261]

எனவும்,

ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறுக்
காருடைய பீலி கடிகாவா—நீர்வண்ண
னத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு. [„ „ 73]

எனவும்,

கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
வொண்செங் குருதியு ளோலை கிடப்பதே—கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிளர்ந்தாடிப் பன்று
ளழுதகண் ணீர்துடைத்த கை. [„ „ 262]

எனவும் முறையே காண்க. (81)

9. சந்திவழு.

329. சந்தி வழூவே யெழுத்திலக் கணத்துச்
சந்தியோடு மருவாத் தன்மைய ததுவே
யிரண்டாம் வேற்றுமைக் கெதிர்மறுத்து வருமே.

இதுவும் அது.

(இ-ள்.) சந்திவழூவென்று சொல்லப்படுவது எழுத்திலக்கணத்திற் கூறிய சந்தியோடு மாறுபட்ட இயல்பினையுடைத்தாம். அதுவே இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சிக்கண் அவ்வாறு மாறுபட்டு வரும் (எ-று)

வரலாறு:—

என்பூ டுருவ வினையேன் மனங்கலக்கும்
பொன்பூண் சுமந்த புணர்முலையாள்—மின்பூ

ணுடங்கிடைக்குக் காவலாய் நோக்கங் கவரும்
படங்கிடக்கு மல்குற் பரப்பு. [தண்டி. பக். 262]

எனவும்,

இரவி துணைத்தா ளிகல்வேந்தர் சென்னி
விரவு மலர்பொழியு மேவார்—வரைசிறிய
மின்பொழியுஞ் செவ்வேல் வெறியேன் மனங்கவரப்
பொன்பொழியுஞ் செங்கைப் புயல். [,, ,, 263]

எனவும் முறையே காண்க. (82)

10. இடமலைவு.

330. இடமலை யாறு நாடே யவற்றி
ஞென்றன் பொருள்பிறி தோன்றினுள வாகச்
சென்றிட வுரைப்ப திடமலை வென்ப.

நிறுத்தமுறையானே வழுவுஞ் சிறுபான்மை வழுவமைதியுங்கூறி எஞ்சிநின்ற மலைவாறனையுங் கூறுவான் புகுந்து அவற்றுள் இஃது இடமாவதின்னதென்பதூஉம் அதன் மலைவுங் கூறுகின்றது.

(இ-ள்.) இடமென்று சொல்லப்படுவது மலையும் ஆறும் நாடுமாம்; அவற்றுள் ஒன்றற்குரியன பிறிதொன்றினுளவாகப் பொருந்த உரைப்பது இடமலைவென்று சொல்லுவர் புலவர். (எ-று).

மலையென்பது இமயம் பொதியம் முதலாயின; யாறு, கங்கை காவிரி முதலாயின. நாடு, பதினெண்பாடைக்கும் உரிய நிலங்கள்.

வரலாறு:—

தென்மலையின் மான்மதமுஞ் சாமரையுங் காமருசீர்ப்
பொன்மலையிற் சந்தனமு மாரமும்—பன்முறையும்
பொன்னி வளநாடன் முன்றிற் பொதுளுமே
மன்னர் திறைகொணர வந்து. [,, ,, 264]

எனவும்,

தண்பொருநைச் செங்கனக மாதங் கிரித்தரளம்
வண்கலிங்கந் தந்த வயப்புரவி—பண்பு
மருவும் யவனத்து மால்யானை சென்னி
பொருநர்க்கு வீசும் பொருள். [,, ,, ,,]

எனவும், மலையிடமலைவும் ஆற்றிடமலைவும் நாட்டிடமலைவும் முறையே காண்க.

மாதங்கிரியென்பது, ஓராறு. (83

11. காலமலைவு.

331. காலம் பொழுது பருவமென் றிவற்றி
னொன்றற் குரியன வன்றி யொன்றற்
குரியன வாக வுரைப்பதுதன் மலைவே

இதுவும் அது.

(இ-ள்.) *காலமென்று சொல்லப்படுவது சிறுபொழுதும் பெரும் பொழுதுமாம். அவற்றுள் ஒரு காலத்திற்கு உரிய பூவும் புள்ளுந் தொழிலும் பிறிதொருகாலத்திற்கு உளவாகக் கூறுவது காலமலைவாம். (எ-று.)*

வரலாறு:—

செங்கமலம் வாய்குவியத் தேங்குமுதங் கண்மலர
** வெங்கு நெடுவானின் மீனிமைப்பப்—பொங்குதயத்*
தோராழித் தேரோ னுகந்தான் மலர்ந்ததே
நீராழி சூழ்ந்த நிலம். [தண்டி. பக். 266]

எனவரும் பொழுதின்மலைவும்,

காதலர் வாரார் களிக்கு மயிலகவத்
தாதவிழ் பூங்குருந்தின் றண்பணையின்—மீதே
தளவோ முகைநெகிழத் தண்கொன்றை பூப்ப
விளவேனில் வந்த திதோ. [„ „ „]

எனவரும் பருவமலைவும் முறையே காண்க. (84)

12. கலைமலைவு.

332. கலையெனப் படுமவை காண்டக விரிப்பிற்
காமமும் பொருளு மேமுறத் தழுவி
மறுவறக் கிளந்த வறுபத்து நான்கவை
மலைய வுரைப்பன கலைமலை வாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) *கலையென்று சொல்லப்படுவனவற்றை விளங்க விரித்துரைக்குமிடத்து இன்பமும் பொருளும் பொருத்தமுறத் தழுவிக் குற்றமறச் சொல்லப்பட்ட அறுபத்துநான்குமாம்; அவை தம்முள் மயங்க உரைப்பன கலைமலைவாம். (எ-று.)*

வரலாறு:—

ஐந்தா நரம்பாம் பகைவிரவா தாருகி
வந்த கிளைகொள்ள நான்காய—முந்தை
யிணைகொண்ட யாழெழூஉ மேந்திழைதன் னாவித்
துணைவன் புகழே தொடுத்து. [தண்டி-பக். 267]

பா-ம். * வெங்குநெடு வான்மீ னினமிமைப்பப்.

இதனுள், நின்ற நரம்பிற்கு ஐந்தாவது கிளையாதலால் அதனைப் பகையென்றும், ஆறாவது பகையாதலால் அதனைக் கிளையென்றும், நான்காவது நட்பாதலால் அதனை இணையென்றும், எட்டாவதன் பெயர்கொடுத்துச் சொன்னமையாற் கலைமலைவாயிற்று. (85)

13. உலகமலைவு

333. உலகெனப் படுவதீண் டொழுக்கின் மேற்றவ்
வொழுக்கநெறி பிறழ வுரைப்பததன் மலைவே.

இதுவும் அது.

(இ-ள்.) உலகென்று சொல்லப்படுவது பலபொருள் உணர்த்துமேனும் ஈண்டு ஒழுக்கத்தின் மேலிடத்தாம்; அவ்வுலகத்தின் ஒழுக்கநெறியை மாறுபட உரைப்பது உலகமலைவாம். (எ-று.)

வரலாறு:—

அலைகட லேழுந்தூர்த் தந்தரத்தி னூடே
மலையனைய மால்யானை யோட்டிக்—கலவாரை
நீறாக்கி வைய நெடுங்குடையின் கீழ்வைத்தான்
மாறாச்சீர் மானிலத்தார் மன். [தண்டி. பக். 268]

எனவரும். இதனுள் ஒருசில வேந்தனை எழுகடலுந் தூர்த்தானாகவும் ஆகாயத்தே தன் யானையை ஓட்டிப் பகைவரை வென்றானாகவும் உலகொழுக்கோடு மாறுபடக் கூறினமையான் உலகமலைவாயிற்று. (86)

14. நியாயமலைவு

334. நியாய மென்பது நெறியுறக் கிளப்பி
னளவையிற் றெளிக்கும் விளைபொருட் டிறமவை
மாறுபட வுரைப்ப ததன்மலை வென்ப.

இதுவும் அது.

(இ-ள்.) நியாயமென்று சொல்லப்படுவது இலக்கண வகையாற் கூறுங்காற் காண்டல் முதலாகிய அளவைகளால் தெளிவித்து உரைக்கப்படும் பொருள்களது முடிவின் கூறுபாடாம்; அவற்றை அவ்வவர் கூறியவாறு கூறாது மாறுபடக் கூறுவது அதன் மலைவென்று சொல்லுவர் புலவர். (எ-று.)

அளவைகளால் தெளிவித்து உரைக்கப்படும் பொருள்களாவன: அறுவகைப்பட்ட சமயங்களின் முடிவாகிய பொருள்களின் தோற்றமும் நிலையும் அழிவும் இன்னவகையவென்று கூறுதல்.

வரலாறு:—

ஆய பொருள்கள் கணந்தோ றழியுமெனத்
தூய வசோகின் முனியுரைத்த—தாய்வன்றே

காதலர்நீங்க வெழுங்காம வெங்கனல்வாய்
மாத ருயிர்தாங்கு மாறு. [தண்டி. பக். 269]

இதனுட் போன்றும் பொருள்களெல்லாங் கணந்தோறும் அழியுமென்று போதியின்முனி உரைத்தானெனற்பாலதனை அசோகின்முனி உரைத்தானென்றமையான் நியாய மலைவாயிற்று. ஒழிந்தனவும் வந்துழிக் காண்க. (87)

15. ஆகமமலைவு

335. ஆகம மேன்பது மனுமுத லாகி
யறனொடு புணர்ந்த திறனறி நூலவை
தம்மு ளுரைக்கு மொழுக்க நெறியி
னிழுக்க வுரைப்ப தாகம மலைவே.

இதுவும் அது.

(இ-ள்.) ஆகமமென்று சொல்லப்படுவது மனுமுதலாக அறத்தோடு கூடிய திறங்களை அறியும் பதினெண்வகை நூல்களாம்; அந்நூல்களிற் கூறப்படும் அறநெறிகளை அம்முறைமையாற் கூறாது பிறழக் கூறுவது ஆகமமலைவாம். (எ-று.)

வரலாறு:—

தெய்வம் விருந்தொக்க றென்புலத்தார் தாமென்னு
மைவகையுந் தம்பொருள்கொண் டாற்றுவார்—மையிலா
முக்கோலுங் கற்றோய் முழுமடியுந் தாங்கியே
தக்கோ ரெனப்படுவார் தாம். [,, ,, 269]

இதனுள் இல்லறத்தார்க்கு உரிய அறத்தைத் துறவறத்தார்க்கு உரியனவாகச் சொல்லுதலான் ஆகமமலைவாயிற்று. (88)

மலைவமைதி

336. கூறிய நெறியி னறுவகை மலைவு
நாடக வழக்கி னுட்டுதற் குரிய.

இது மேற்கூறிய மலைவு ஆறனையும் இன்னுழியாமென்கின்றது.

(இ-ள்.) இடம் முதலாக ஆகமம் ஈறாக இங்ஙனங் கூறிய முறைமையான் வரும் அறுவகைமலைவும் நாடகவழக்கினிடத்துச் சொல்லுதற்கு உரியனவாம். (எ-று.)

ஈண்டு நாடகவழக்கென்றது இல்பொருளாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்துரைவகையாற் கூறுதலாம்; எனவே, அவ்வாறு புகழ்ச்சியிடத்து நீக்கப்படா, அலங்காரமாயே வருமென்பதாம்.

அவைவருமாறு :—

மரகதச் சோதியுடன் மாணிக்கச் சோதி
யிருமருங்குஞ் சேர்த்தரிவை யெம்மா—னுருவ
மலைக்கு மகில்சுமந் தாரத்து வான்கோ
டலைத்து வரும்பொன்னி யாறு. [தண்டி-பக். 270]

இதனுட் பிறநாட்டிற்கும் பிறமலைக்கும் உரிய மரகதமும் மாணிக்கமும் அகிலுஞ் சந்தனமுங் காவிரி அலைத்துவருமென்றமையான் இடமலைவாய்ப் புகழ்ச்சியிடத்து அலங்காரமாயிற்று.

மண்டபத்து மாணிக்கச் சோதியான் வாவிவாய்ப்
புண்டரிக மாலைப் பொழுதலருந்—தண்டரளத்
தாமஞ் சொரியுந் தகைநிலவான் மெல்லாம்பற்
பூமலருங் காலைப் பொழுது. [,, 271]

இதனுட் காலைமலருங் கமலம் மாலைமலர்வதாகவும் மாலைமலருங் குமுதங் காலைமலர்வதாகவுங் கூறினமையாற் காலமலைவாய்ப் புகழ்ச்சியிடத்து அலங்காரமாயிற்று.

வஞ்சியர்கோன் வஞ்சி மதவேழ வார்தத்தால்
வெஞ்சுடர்சூழ் வேனில் வெயின்மறைப்ப—வஞ்சத்
தளவரும்பப் பூங்கொன்றைத் தண்கொம் பரும்பக்
களிமயில்க ளார்த்திலகுங் காடு.

இதனுட் கார்க்கு உரியன வேனிற்குப் புணர்த்தமையாற் காலமலைவாய்ப் புகழ்ச்சியிடத்து அலங்காரமாயிற்று.

கூடம் விரவிக் குறைநிலத்தா னத்தியன்ற
பாட லமிழ்தம் பருகினு—ளூடுகின்ற
வூசலயற் றேன்றி யொளியிழைக்கு நாணழித்தா
னுசில் வடிவே லவன். [,, பக். 271]

இதனுட் கூடமென்பது ஆறும் நரம்பாகிய பகை நரம்பு. அதனோடுகூடிக் குறைநிலத்தானத்து இயன்றதனைப் பாடல் அமிழ்தமெனக் கலைமலைவாய் ஊசலூர்ந்து ஆடிப்பாடுகின்ற தலைமகளயற் றோன்றிய தலைமகனது தோற்றம் அவட்கு நாண்பயந்தமையாற் பாடல்பிறழ்ந்தும் அவற்கு இன்பம் பயத்தலாற் புகழ்ச்சியிடத்து அலங்காரமாயிற்று.

கடனுன்கும் வந்தலைக்குங் காலாளுந் தேரு
மடல்செய் திருதுணியா மன்றே—யுடலொன்றி
யந்தரமே யேகுவன் காண்மினோ யானியற்று
மிந்திர ஞால மிது. [,, பக். 272]

இதனுட் கலைமலைவாய்ப் பொருள்வந்து இந்திரஞாலமெனப் புகழ்ச்சி யிடத்து அலங்காரமாயிற்று. இது சம்பிரதமெனினும் அமையும்.

வானாகி மண்ணாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாந் திருமாலே—யானாயர்
வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாண்
மண்ணை யுமிழ்ந்த வயிறு. [தண்டி. பக். 27]

இதனுள் எல்லாப் பொருளுமாயினானென்றும் வெண்ணெயை விழுங்கினா னென்றும் மண்ணை உமிழ்ந்தானென்றும் நியாயமலைவாய்ப் புகழ்ச்சியிடத்து அலங்காரமாயிற்று.

காய்கதி ரோனுக்குக் கன்னனையீன் றங்கன்னி
யாகிப்பின் மூவரையு மீன்றளித்த—தோகை
தலைமைசேர் கற்பினாற் றாள்வணங்கு முன்னாண்
மலையெடுத்துக் கார்காத்த மால். [,, 273]

இதனுட் கதிரோற்குக் கருணனைப் பயந்தபின்னரும் கன்னியாயினாளென் றும் பின்னர் மூவர்க்கும் மூவரைப் பயந்தும் கற்புடைமையால் மால்வணங் கினானென்றும் ஆகமமலைவாய்ப் புகழ்ச்சியிடத்து அலங்காரமாயிற்று என வும் வரும். பிறவும் அன்ன.

இவையெல்லாம் புனைந்துரையாய் அலங்காரமாமாறு பொருட்டொ டர்நிலைச் செய்யுளுட் கண்டுகொள்க. (89)

புறனடை.

337. மெய்பெற விதித்த செய்யுட் டிறனு
மெய்திய நெறியு மீரைங் குணனு
மையெழு வகையி னறிவுறு மணியு
மடியினுஞ் சொல்லினு மெழுத்தினு மியன்று
முடிய வந்த மூவகை மடக்குங்
கோமுத் திரிமுதற் குன்று மரபி
னேமுறக் கிளந்த மிறைக்கவி யிருபது
மிவ்வகை யியற்றுதல் குற்ற மிவ்வகை
யெய்த வியம்புத லியல்பென மொழிந்த
வைவகை முத்திறத் தாங்கவை யுளப்பட
மொழிந்த நெறியி னொழிந்தவுங் கோட
லானற காட்சிச் சான்றோர் கடனே.

இஃது இவ்வோத்துட் கூறிய இலக்கணங்களையெல்லாந் தொகுத் துப் பிறவாறு வருவனவுந் தழீஇக்கொள்கவெனப் புறனடை கூறுகின்றது

(இ-ள்.) பொருள்பெற எடுத்தோதப்பட்ட அணியிலக்கணங்களெல்லாந் தொகுத்துக் கூறுமிடத்து, முத்தகங் குளகந் தொகை தொடர்நிலையெனுஞ் செய்யுட்பகுதியும், அச்செய்யுட்கு வைதருப்பங் கௌடமெனப் பொருந்திய நெறியும், அவற்றோடு தொடர்ந்த செறிவு முதலாகச் சமாதி ஈறாகச் சொல்லப்பட்ட குணங்கள் பத்தும், தன்மை முதலாகப் பாவிகம் ஈறாகக் கிடந்த முப்பத்தைந்து அலங்காரமும், அடியினானுஞ் சொல்லினானும் எழுத்தினானுங் கூறி முடிபுபெற வந்த மூவகை மடக்கலங்காரமும், கோமூத்திரி முதலாகக் குறைபாடில்லாத இலக்கணத்திற் பிழைப்பின்றி வந்த மிறைக்கவியலங்காரம் இருபதும் இவ்வாறு கூறுதல் வழுவும் மலைவுமாமென்றும் அவற்றை இவ்வாறு பொருந்தக்கூறுதல் வழக்கென்றுஞ் சொல்லப்பட்ட பதினைந்து வேறுபாடும் உள்ளிட்டுக் கூறப்பட்டனவாம். இங்ஙனங் கூறிய நெறியினொழிந்து வருவனவற்றையுங் கொள்ளுதல் நிரம்பிய அறிவினையுடைய சான்றோர்க்கு முறைமையாம். (எ-று.)

முற்கூறுவதாய எழுத்துமடக்கைப் பிற்கூறியதென்னையெனின், அடிமடக்குஞ் சொன்மடக்கும் எழுத்தின்கூட்டமென்பது அறிவித்தற்கும் ஓரெழுத்தானும் ஓரினத்தானும் வருவனவும் அப்பாற்படுமென்பது அறிவித்தற்கும் கோமூத்திரி முதலாகிய மிறைக்கவியும் ஆராயுங்காற் பெரும்பான்மையும் எழுத்தின்மடக்கின்பாற் படுமென்பதுஅறிவித்தற்குமெனக் கொள்க. முன்னோர் நூலுட் கோமூத்திரியும் மாலைமாற்றுஞ் சுழிகுளமுஞ் சருப்பதோபத்திரமுமாகிய நான்குமே மிறைக்கவியெனக் கூறப்படுதலான் இவர் மிறைக்கவி இருபதென்றல் மலைவாம்பிறவெனின், ஆகாது; ஒன்றினமுடித்தறன்னின முடித்தலென்பதனானும்,

இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும். [நன்னூல். சூ. 8]

என்பதனானுமென்க. (90).

மூன்றாவது
அணியியல் முற்றிற்று.

நான்காவது
செய்யுளியல்

338. செய்யு ளென்பது தெரிவுறக் கிளப்பின்
முன்னர்க் கூறிய முறைமைத் தாகி
யெழுத்தசை சீர்தளை யடிதொடை யென்ற
மூவிரண் டுறுப்பு மேவரச் சிவணிப்
பாவு மினமு மெனவிரு பாற்றே.

என்பதுசூத்திரம். இவ்வோத்துச் செய்யுளது இயல்புணர்த்திற்றாகலாற் செய்யுளியலென்னும் பெயர்த்து. மேல் நிறுத்தமுறை யானே அகத்திணையியலும் புறத்திணையியலும் அணியியலும் உணர்த்தி அங்ஙனம் உணர்த்திய பொருண்மையெல்லாவற்றிற்கும் இஃது இடமாதல்பற்றி அவற்றின்பிற் கூறினமையான் மேலோத்தினோடு இயைபுடைத்தாயிற்று. இதனுள் இத்தலைச்சூத்திரஞ் செய்யுட்குப் பொதுவிதியும் அஃது இத்துணையுறுப்பிற்றாய் இத்துணைத்தாமென்பதூஉங் கூறுகின்றது.

(இ-ள்.) மேல் அகத்திணை யோத்தினுள்

"செய்யு ளிடவயிற் புல்லிய நெறித்தே."

எனத் தோற்றுவாய்செய்த செய்யுளென்று சிறப்பித்துச் சொல்லப் படுவதனை விளங்கக் கூறுமிடத்து, மேற்சொல்லோத்தினுள்

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வது செய்யுள்". [நன்னூல்]

எனக் கூறிய இயல்பிற்றாகி எழுத்து முதலிய அறுவகையுறுப்பினையும் பொருத்தமுறத் தழுவிப் பாவும் பாவினமுமென இருபகுதியையுடைத்தாம் .(எ-று.)

'மூவிரண் டுறுப்பு மேவரச் சிவணி' எனவே மேவாச்சிவணுதனவும் உளவென்பதூஉம் பெற்றாம். அவை எழுத்தோத்தினுட் கூறிய மாத்திரைவகையும் அகத்தோத்தினுட்கூறிய திணை முதலிய பன்னிருவகையும் இவ்வோத்துட் கூறப்படும் வண்ணமும் அம்மை முதலிய வனப் பெட்டும் அவைபோல்வன பிறவுமா மென்று உணர்க. (1)

339. எழுதப் படுதலி னெழுத்தே யவ்வெழுத்
தசைத்திசை கோடலி னசையே யசையியைந்து
சீர்கோள நிற்றலிற் சீரே சீரிரண்டு
தட்டு நிற்றலிற் றளையே யத்தளை
யடுத்து நடத்தலி னடியே யடியிரண்டு
தொடுத்துமன் சேறலிற் றொடையே யத்தொடை
பாவி நடத்தலிற் பாவே பாவோத்
தினமாய் வழங்கலி னினமெனப் படுமே.

இது மேற்கூறிய எழுத்து முதலிய எட்டற்குங் காரணக்குறி கூறுமுகத்தாற் பொது இலக்கணமும் அவற்றின் கிடக்கை முறைமையுங் கூறுகின்றது.

இதற்குப்பொருள் கூறுகின்றிலம்; பெரும்பான்மையுஞ் சூத்திரத் தானே பொருள் விளங்கக்கிடத்தலின்.

மன்னென்ற மிகையானே ஓரடிக்கண்ணவாகிய தொடைவிகற்பமுங் கொள்க. (2)

340. அவற்றுள்,

எழுத்துமேற் கிளந்த வியல்பிற் றாகும்.

இது நிறுத்தமுறையானே எழுத்தாமாறு மாட்டேற்றான் எய்துவிக்கின்றது.

(இ-ள்.) மேற்கூறிய செய்யுளுறுப்பு ஆறனுள் முதலுறுப்பாகிய எழுத்து, மேல் எழுத்தோத்தினுட் கூறிப்போந்த இயல்பினையுடைத்தாம். (எ-று.)

மேற்கூறிப்போந்த இயல்பென்னையெனின், அகரம் முதல் ஔகாரம் இறுவாய் பன்னீரெழுத்தினையும் உயிரென்றும், அவற்றுள் அ இ உ எ ஒ என்னும் ஐந்தினையும் ஓரளபிசைக்குங் குற்றெழுத்தென்றும், ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழினையும் ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்றும், ககரம் முதல் னகரம் இறுவாய் பதினெண்ணெழுத்தினையும் அரையளபிசைக்கும் மெய்யென்றும், அவற்றுட் க ச ட த ப ற என்னும் ஆறனையும் வல்லெழுத்தென்றும், ங ஞ ண ந ம ன என்னும் ஆறனையும் மெல்லெழுத்தென்றும், ய ர ல வ ழ ள என்னும் ஆறனையும் இடையெழுத்தென்றும், நாகியாது எஃகியாது வரகியாது கொக்கியாது குரங்கியாது தெள்கியாது என யகரம்வரக் குற்றுகரங்கெட்டு ஆண்டுத் தோன்றும் இகரமும் கேண்மியா சென்மியா என்னும் உரையசையிடைச் சொல்லிகரமுந் தன் அளவிற் சுருங்கி அரையளபிசைக்கும் புணர்மொழிக்குற்றியலிகரமும் ஒருமொழிக்குற்றியலிகரமு மென்றும், நாகு எஃகு வரகு கொக்கு குரங்கு தெள்கு என ஈரெழுத்தொருமொழியிறுதிக்கண்ணும் ஐவகைத் தொடர்மொழியிறுதிக்கண்ணும் நின்ற வல்லெழுத்தையூர்ந்து வரும் உகரந் தன் அளவிற் சுருங்கி அரையளபிசைக்குங் குற்றுகரமென்றும், எஃகு கஃசு கஃடு கஃது கஃபு கஃறு எனக் குற்றெழுத்தின் முன்னர்த்தாய் உயிரோடுகூடிய வல்லெழுத்தாறன்மிசைத்தாய ஆய்தம் அரையளபிசைத்துவரும் ஆய்தவெழுத்தென்றும், அகரம் முதலிய உயிருங் ககரம் முதலிய மெய்யுங்கூடி ஓரளபும் ஈரளபுமாயே ஒலிக்கும் பன்னிரு பதினெட்டு இருநூற்றெருபத்தாறனையும் உயிர்மெய்யென்றும், வாஅகை ஈஇகை ஊஉகம் பேஎகன் தைஇயல் தோஒரை மௌவல் எனவும்,

இலாஅ அர்க் கில்லை தமர். —[நாலடி. 283]

எனவும் நெட்டெழுத்தேழுந் தமக்கினமொத்த குற்றெழுத்துக்களோடும் இகரவுகரங்களோடுங்கூடி மூன்று மாத்திரையும் ஒரோவழி நான்கு மாத்திரையுமாய் மொழி முதலிடை கடையென்னும் மூன்றிடத்தும் அள

பெடுக்கும் உயிரளபெடை எழென்றும், அரங்கம் முரஞ்சு முரண்டு பருந்து அரும்பு முரன்று குரவ்வை அரைய்யர் குரல்கள் திரள்கள் வரஃஃகு எனக் குறிலிணைக்கீழும் மங்கலம் மஞ்சு மண்ணு பந்து அம்பு மின்னு தெவ்வர் வெய்யர் செல்க கொள்க எஃஃகு எனக் குறிற்கீழும் ஙஞணநமனவயலளவாய்தமென்னும் பதினொரொற்றுந் தம்மொடு தாஞ்சார்ந்து ஒரு மாத்திரையாய் மொழி யிடை கடையென்னும் இரண்டிடத்தும் அளபெடுக்கும் ஒற்றளபெடை பதினொன்றென்றும், ஐப்பசி இடையன் திணை எனவும், ஔவை எனவும், தம்மைச்சுட்டுதற்கண்ணும் அளபெடுத்தற்கண்ணும் அல்லாதவழி வந்த ஐகார ஔகாரங்கள் முறையே முதலிடை கடையென்னும் மூன்றிடத் தும் மொழிமுதற்கண்ணுந் தம் அளவிற் சுருங்கி ஓரளபிசைக்கும் ஐகார ஔகாரக் குறுக்கங்களென்றும், போன்ம், மருண்ம், வாழும்வளவன் என லகரளகரங்கள் திரிந்த னகரணகரங்களின் முன்னும் வருமொழி வகார மிசையும் நின்ற மகரந் தன் அளவிற் சுருங்கிக் கால்மாத்திரையாயிசைக் கும் மகரக்குறுக்கமாமென்றுங் கூறியவாறும் என்க. (3)

341 நேர்நிரை யெனவசை யோரிரண் டாகும்.

இது நிறுத்தமுறையானே அசைவகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) நேரசையென்றும் நிரையசையென்றும் மேற்கூறிய அசை இரண்டு வகையினையுடைத்தாம். (எ-று.) (4)

342. நெடிலுங் குறிலுந் தனித்துமொற் றடுத்து
நடைபெறு நேரசை நான்கு நீங்காக்
குறிலிணை குறினெடிற் றனித்துமொற் றடுத்து
நெறிவரு நிரையசை நான்கு மாகும்.

இது முற்கூறிய அசைகளாமாறும் அவற்றதெண்ணுங் கூறுகின்றது.

(இ-ள்.) நெட்டெழுத்துத் தனித்துங் குற்றெழுத்துத் தனித்தும் நெட்டெழுத்தொற்றடுத்துங் குற்றெழுத்தொற்றடுத்தும் நடத்தலைப் பெறும் நேரசை நான்கும், விட்டிசையாது குறிலிரண்டு தனித்துங் குறி னெடிலிரண்டு தனித்துங் குறிலிரண்டொற்றடுத்துங் குறினெடிலிரண் டொற்றடுத்தும் முறையானே வரும் நிரையசை நான்குமாம். (எ-று.)

வழக்கின்கண் நேரசை நான்கிற்கும் உதாரணம்: ஆ, ழீ, வேள், வேல் எனவும், நிரையசை நான்கிற்கும் உதாரணம்: வெறி, சுறா, நிறம், விளாம் எனவும், செய்யுட்கண் நேரசை நான்கிற்கும் உதாரணம்

போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே. —[யா - கா. பக். 20]

எனவும், நிரையசை நான்கிற்கும் உதாரணம்

அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே. —[யா - கா. பக். 20]

எனவும் வரும்.

தனிநிலை யொற்றிவை தாமல கிலவே
யளபெடை யல்லாக் காலை யான— [யா - கா. பக். 142]

என்பவாகலின் நேரசை ஓரலகும் நிரையசை இரண்டலகும் பெறுமென்பதூஉம் பெற்றாம். (5)

343. இயற்சீ ருரிச்சீர் பொதுச்சீ ரென்று
மயக்கற வகுத்த சீர்மூன் றாகும்.

இது நிறுத்தமுறையானே சீர்வகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) இயற்சீரும் உரிச்சீரும் பொதுச்சீருமென்று ஐயமற வகுக்கப்பட்ட சீர் மூன்று வகைப்படும். (எ-று.) (6)

344. ஈரசை கூடிய சீரியற் சீரஃ
தீரிரண் டாமவை யகவற் கிசைதலு
மூவசை கூடிய சீருரிச் சீரது
நாலிரண் டாகி நடைபெறு மவற்று
ணேரிறு நான்கும் வெள்ளை யல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டிடுதலும்
நாலசை யானு மோரசை யானுஞ்
சீர்பெற நடப்பது பொதுச்சீ ராங்க
தெண்ணிரண் டிரண்டா யியறலு நெறியே.

இது முற்கூறிய சீர்களாமாறும் அவற்றதெண்ணும் அவை செய்யுட்கு உரியவாமாறுங் கூறுகின்றது.

(இ-ள்.) இரண்டு அசையான் வருஞ்சீர் இயற்சீரெனப்படும், அது நேர்நேராயும் நிரைநேராயும் நிரைநிரையாயும் நேர்நிரையாயுந் தம்மிற் கூடி நான்காம், அங்ஙனம் ஆகிய நான்குசீரும் ஆசிரியவுரிச்சீராதலும்; மூவசையான் வருஞ்சீர் உரிச்சீரெனப்படும், அது நேர்நேர்நேராயும், நிரைநேர்நேராயும், நிரைநிரைநேராயும், நேர்நிரைநேராயும் நேர்நேர் நிரையாயும், நிரைநேர்நிரையாயும், நிரைநிரைநிரையாயும், நேர்நிரைநிரையாயும் தம்மிற்கூடி எட்டாகி நடக்கும், அவ்வெட்டனுள் நேரீற்றுரிச்சீர் நான்கும் வெண்பாவுரிச்சீராதலும் நிரையீற் றுரிச்சீர் நான்கும் வஞ்சியுரிச்சீராதலும்; நாலசையானும் ஓரசையானுஞ் சீராந்தன்மைதோன்ற நடப்பது

பொதுச்சீரெனப்படும், அது நேர்நேர்நேர் நேராயும், நிரைநேர்நேர்நேரா யும், நிரைநிரைநேர்நேராயும், நேர்நிரைநேர்நேராயும், நேர்நேர்நிரை நேராயும், நிரைநேர் நிரைநேராயும் நிரைநிரைநிரைநேராயும் நேர்நிரை நிரைநேராயும், நேர்நேர்நேர்நிரையாயும், நிரைநேர்நேர்நிரையாயும், நிரைநிரைநேர்நிரையாயும், நேர்நிரைநேர்நிரையாயும், நேர்நேர்நிரை நிரையாயும், நிரைநேர்நிரைநிரையாயும், நிரைநிரைநிரைநிரையாயும், நேர்நிரைநிரைநிரையாயும், தம்மிற்கூடிப் பதினாறுசீராய் நடத்தலும், நேராயும் நிரையாயும் இரண்டு சீராய் நடத்தலும் முறை. (எ-று.)

'சீர்பெற'வென்ற மிகையானே வெண்பாவினுள் நாலசைச்சீர்வாரா; ஆசிரியத்துள்ளுங் குற்றுகரம் வந்துழியன்றி வாரா; கலியுள்ளும் பெரும் பான்மையுங் குற்றுகரம் வந்துழியன்றி வாரா, வஞ்சியுட் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும்; வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர் ஓரடியுள் அருகிக் கண்ணுற்று நிற்கவும்பெறும்; அல்லனவற்றுட் பெரும்பான்மை யும் ஓரடியுள் ஒன்றன்றி வாரா; இரண்டு வரினுங் கண்ணுற்றுநில்லா, பாவின்றுணைப் பாவினத்துள்ளும் பயின்றுவாரா; நிரையீற்றுப் பொதுச் சீரெட்டும் வஞ்சியுளல்லது வாராவெனவுங் கொள்க. ஈரசைச்சீர் எல்லாச் செய்யுளுள்ளும் பயின்று இனிது நடத்தலின் இயற்சீரென்றும், மூவசைச் சீர் எல்லாச் செய்யுளுள்ளும் வருமெனினும் வெண்பாவிற்கும் வஞ்சிப்பா விற்கும் உரிமையுண்டு நிற்றலின் உரிச்சீரென்றும், ஏனைய பொதுவாய் நிற்றலிற் பொதுச்சீரென்றும் ஆயின.

வழக்கின்கண் ஆசிரியவுரிச்சீர்க்கு உதாரணம்: தேமா புளிமா கருவிளம் கூவிளம் எனவும்,

வெண்பாவுரிச்சீர்க்கு உதாரணம்: தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் கூவிளங்காய் எனவும்,

வஞ்சியுரிச்சீர்க்கு உதாரணம்: தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங் கனி கூவிளங்கனி எனவும்,

நாலசைச்சீர்க்கு உதாரணம்: தேமாந்தண்பூ புளிமாந்தண்பூ கருவிளந் தண்பூ கூவிளந்தண்பூ தேமாநறும்பூ புளிமாநறும்பூ கருவிளநறும்பூ கூவிளநறும்பூ தேமாந்தண்ணிழல் புளிமாந்தண்ணிழல் கருவிளந்தண் ணிழல் கூவிளந்தண்ணிழல் தேமாநறுநிழல் புளிமாநறுநிழல் கருவிளநறு நிழல் கூவிளநறுநிழல் எனவும்,

ஓரசைச்சீர்க்கு உதாரணம்: நாள் மலர் எனவும், செய்யுட்கண் ஆசிரிய வுரிச்சீர்க்கு உதாரணம்:

குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயல
ளைய ளரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே.— [ஐங்குறு. 285]

எனவும், வெண்பாவுரிச்சீர்க்கு உதாரணம்:—

பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபே
ருன்னேனென் றாழுலக்கை பற்றினேற்—கென்னோ
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனலுடன் பேரே வரும். —[யா-கா. பக். 29]

எனவும், வஞ்சியுரிச்சீர்க்கு உதாரணம்:—

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின் மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவு
நாளு, மகிழு மகிழ்தூஉங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே. —[யா-கா. பக். 29]

எனவும், நாலசைச்சீர்க்கு உதாரணம்:—

அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையருங்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
வனந்தசதுட்டய மவையெய்த
நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
வந்தரதுந்துபி நின்றியம்ப
விலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
வினிதிருந், தருணெறி நடாத்திய வாதிதன்
றிருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.
—[திருப்பாமாலை]

எனவும், ஓரசைச்சீர்க்கு உதாரணம்:—

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். —[குறள். 1121]

எனவும்,

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். —[குறள். 1072]

எனவும வரும். பிறவும் அன்ன. (7)

345. தன்சீர் தனதோ டொன்றலு முறழ்தலு
மென்றிரண் டாகு மியம்பிய தளையே.

இது நிறுத்தமுறையானே தளைவகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) தன்சீரிறுதி தன்வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுதலும் ஒன்றாமையுமென இருவகைப்படும் மேற்கூறிய தளை. (எ-று.) (8)

346. நேர்நே ரொன்ற னிரைநிரை யொன்றலென்
றாயிரு தளையு மகவற் கிசைதலும்
வெண்சீ ரொன்ற லியற்சீர் விகற்பமென்
றவ்விரு தளையும் வெள்ளைக் கமைதலு
நிரையீற் றுரிச்சீ ரொன்றலு முறழ்தலும்
வரையாது வருதல் வஞ்சிக்கு வருதலும்
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாதலும்
பண்பினின் வழாஅப் பாங்கின வென்ப.

இது முற்கூறிய தளைகளாமாறும் அவற்றதெண்ணும் அவை செய்யுட்கு உரியவாமாறுங் கூறுகின்றது.

(இ-ள்.) நேரீற்றியற்சீர்முன் நேர்வந்தொன்றுவதாகிய நேரொன்றாசிரியத்தளையும் நிரையீற்றியற்சீர்முன் நிரைவந்தொன்றுவதாகிய நிரையொன்றாசிரியத்தளையுமென அவ்விரண்டுதளையும் ஆசிரியப்பாவுக்கு உரித்தாதலும், வெண்பாவுரிச்சீர்முன் நேர்வந்தொன்றுவதாகிய வெண்சீர்வெண்டளையும் நேரீற்றியற்சீர்முன் நிரையும் நிரையீற்றியற்சீர்முன் நேரும் வந்து உறழ்தலாகிய இயற்சீர்வெண்டளையுமென அவ்விரண்டு தளையும் வெண்பாவிற்கு உரியவாதலும், நிரையீற்றுரிச்சீர்முன் நிரைவந்தொன்றுதலாகிய ஒன்றியவஞ்சித்தளையும் நேர்வந்து உறழ்தலாகிய ஒன்றாதவஞ்சித்தளையுங் கடியப்படாதுவருதல் வஞ்சிப்பாவிற்கு உரியவாதலும், வெண்சீர்முன் நிரை வந்து விகற்பித்தல் கலித்தளைக்கு உரித்தாதலும் தத்தம் இயல்பினின்றுந் தவறாதமுறையான் வருமென்று கூறுவர் ஆசிரியர். (எ-று.)

'பண்பினின்வழாஅ' என்ற மிகையானே, தன்சீரோடு வேற்றுச்சீர் ஒன்றியும் ஒன்றாதும் வருவனவுஞ் சிறப்பிலவேனுந் தன் தளையாமெனவும், நேரீற்றுப் பொதுச் சீரெட்டும் நேரீற்றுரிச்சீர்போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியது வெண்சீர் வெண்டளையாகவும ஒன்றாதது கலித்தளையாகவும் வழங்கப்படுமென்றும், நிரையீற்றுப் பொதுச் சீரெட்டும் நிரையீற்றுரிச்சீர்போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினும் ஒன்றாதுவிடினும் வஞ்சித்தளையாகவும் வழங்கப்படுமென்றும், ஓரசைச்சீர் இயற்சீரே போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு நேரா யொன்றியது நேரொன்றாசிரியத்தளையாகவும் நிரையாயொன்றியது நிரையொன்றாசிரியத்தளையாகவும் ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் வழங்கப்படுமெனவுங் கொள்க.

நேரொன்றாசிரியத்தளையான் வந்த செய்யுள் :—

உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
யலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவள மேய்க்கு
மகில்படு கள்ளியங் காடிறந் தோரே. —[ஐங்குறுநூறு. 232]

எனவும், நிரையொன்றாசிரியத்தளையான் வந்த செய்யுள்:—

*திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே.
—[மலைபடுகடாம். 1, 2]

எனவும், வெண்சீர்வெண்டளையானும் இயற்சீர்வெண்டளையானும் வந்த செய்யுள்:—

சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போழ்து. —[தண்டி. பக். 13]

எனவும், ஒன்றியவஞ்சித்தளையானும் ஒன்றாவஞ்சித்தளையானும் வந்த செய்யுள்:—

மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
யெனவாங், கினிதி னொதுங்கிய விறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே.
— [திருப்பாமாலை]

* முதல் இரண்டடிகளும் மலைபடுகடாம்.

எனவும், கலித்தளையான்வந்த செய்யுள்:—

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போ
யெல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.

—[யா-கா. பக். 36]

எனவும், நாலசைச்சீர் உரிச்சீரேபோலத் தளைவகையெய்திய செய்யுள்:—

அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையருங்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
வனந்தசதுட்டய மவையெய்த
நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
வந்தரதுந்துபி நின்றியம்ப
விலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
வினிதிருந், தருணெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.

—[யா-கா. பக். 31]

எனவும், நிரையசைச்சீர் இயற்சீரேபோலநின்று வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாமையின் இயற்சீர்வெண்டளையாயும் நேரசைச்சீர் இயற்சீரேபோலநின்று வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினமையின் ஆசிரியத்தளையாயும் வந்த செய்யுள்:—

உரிமை யின்கண் ணின்மையா
லரிமதர் மழைக்கண் ணாள்
செருமதி செய் தீமையாற்
பெருமை கொன்ற வென்பவே. —[யா-கா. பக். 36]

எனவும் வரும். பிறவும் அன்ன. (9)

347. குறளடி சிந்தடி யளவடி நெடிலடி
கழிநெடி லடியென வடியைந் தாகும்.

இது நிறுத்தமுறையானே அடிவகை இத்துணைத்தென்கின்றது.

(இ-ள்.) குறளடியுஞ் சிந்தடியும் அளவடியும் நெடிலடியுங் கழிநெடிலடியுமென முற்கூறிய அடி ஐந்து வகைப்படும். (எ-று.) (10)

348. குறளோரு பந்த மிருதளை சிந்தா
முத்தளை யளவடி நாற்றளை நெடிலடி
யைந்தளை முதலா வெழுதளை காறும்
வந்தவும் பிறவுங் கழிநெடி லென்ப.

இது முற்கூறிய அடிகளாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஒருதளையான் வந்த அடியினைக் குறளடியென்றும், இருதளையான் வந்த அடியினைச் சிந்தடியென்றும், முத்தளையான் வந்த அடியினை அளவடியென்றும், நாற்றளையான் வந்த அடியினை நெடிலடியென்றும், ஐந்தளையான் வந்த அடியினையும் அறுதளையான் வந்த அடியினையும் எழுதளையான் வந்த அடியினையும் இவற்றின்மிக்கதளையான் வந்த சிறப்பிலடியினையுங் கழிநெடிலடியென்றுங் கூறுவர் ஆசிரியர். (எ-று.)

இரண்டு முதலா வெட்ட ளுகத்
திரண்ட சீரா னடிமுடி வுடைய
விறந்தன வந்து நிறைந்தடி முடியினுஞ்
சிறந்த வல்ல செய்யு ளுள்ளே. —[காக்கைபாடினியார்]

என்றார் பிறருமெனக் கொள்க.

குறளடியான் வந்த செய்யுள்:—

திரைத்த சாலிகை
நிரைத்த போனிறைந்
திரைப்பத் தேன்களே
விரைக்கொண் மாலையாய். —[சூளா. சீய. 179]

எனவும்,

சிந்தடியான் வந்த செய்யுள்:—

இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய். —[சூளா. சீய. 171]

எனவும்,

அளவடியான் வந்த செய்யுள்:—

தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியு
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே. —[சூளா. நகர் 14]

எனவும்,

நெடிலடியான் வந்த செய்யுள்:—

வென்றான் வினையின் றொகையாக விரிந்து தன்க
ணொன்றாய்ப் பரந்த வுணர்வின் னொழியாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூ ழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.

—[சூளா. காப்பு]

எனவும்,

ஐந்தளையான் வந்த கழிநெடிலடிக்குச் செய்யுள்:—

இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெயர்ந்
தினவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புக டிகழ்ந்தெழ
நுடங்கிய விலையத்தாற்
றிரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு
பொருதல தவியாதே. [சூளா. கல். 51]

எனவும், அறுதளையான் வந்த கழிநெடிலடிக்குச் செய்யுள்:—

கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழா
லணிகொண் டலர்ந்த வனமாலை சூடி
யகிலாவி குஞ்சி கமழ
மணிகுண் டலங்க ளிருபாலும் வந்து
வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு
வருவானி தென்கொ றணிவே. —[சூளா. அரசி. 197]

எனவும், எழுதளையான் வந்த கழிநெடிலடிக்குச் செய்யுள்:—

மூவடிவி னிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலக மூடி யெழின் முளைவயிர நாற்றித்

தூவடிவி னிலங்கு வெண்குடையி னீழற்
சுடரோயுன் னடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டாற்
சேவடிக டாமரையின் சேயிதழ்க டண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்களிகள் சூழ்ந்து
புலங்கொளா வாலெமக்கெம் புண்ணியர்தங் கோவே.
—[துறவு. சூளா. 64]

எனவும், எண்டளையான் வந்த கழிநெடிலடிக்குச் செய்யுள்:—

இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி னெதிர்ந்த தானையை
யிலங்கு மாழியின் விலங்கியோண்
முடங்கு வாலுளை மடங்கன் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள் [தரி
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்
வளங்கொள் பூண்முலை மகிழ்ந்தகோன்
றடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.
—[சூளா. துறவு. 164]

எனவும்; ஒன்பதிற்றுத்தளையான் வந்த கழிநெடிலடிக்குச் செய்யுள்:—

கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ
வங்க புவ்வ மாதி யாய வாதி நூலி
னீதி யோடு மாதி யாய
செங்கண் மாலை காலை மாலை சென்று சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே.
—[ஷை 41]

எனவும் வரும். பிறவும் வந்துழிக் கண்டுகொள்க. (11.)

349. வெண்பா வகவல் கலிநே ரடியு
மொண்பா வஞ்சி குறள்சிந் தடியும்
பாவின மெல்லாப் பாதமும் பெறுமே.

இதுவும் மேற்கூறிய அடிகள் செய்யுட்கு உரியவாமாறு கூறு கின்றது.

(இ-ள்.) வெண்பாவும் ஆசிரியப்பாவுங் கலிப்பாவும் அளவடியும், ஒள்ளிய வஞ்சிப்பாக் குறளடியுஞ் சிந்தடியும், பாவினம் எல்லா அடியும் பெற்று நடக்கும். (எ-று.)

நேரடியெனினும் அளவடியெனினும் ஒக்கும்.

அளவடியான் வந்த வெண்பாவிற்குச் செய்யுள்:—

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக்—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில். —[நாலடி. பழவினை.—3.]

எனவும், அளவடியான் வந்த ஆசிரியப்பாவிற்குச் செய்யுள்:—

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே. —[குறுந். 1.]

எனவும், அளவடியான் வந்த கலிப்பாவிற்குச் செய்யுள்:—

அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி;
(இது தரவு)

அடிதாங்கு மளவன்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;
இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றன்புறாஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;
கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே;

எனவாங்கு; (தனிச் சொல்) (இவை மூன்றுந் தாழிசை)

இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே. இது சுரிதம்
[கலித். 11.]

எனவும், குறளடியான் வந்த வஞ்சிப்பாவிற்குச் செய்யுள்:—

சுறமறிவன துறையெல்லா
மிறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாந்
தேன்றாழ்வன பொழிலெல்லா
மெனவாங்கு, தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே. —[யா. கா. பக். 67]

என்றும், சிந்தடியான் வந்த வஞ்சிப்பாவிற்குச் செய்யுள்:—

தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேற்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
யென்னலத்தகை யிதுவென்னென வெழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்
கெனப்பெரிதுங்,
கலங்கஞ ரெய்தி விடுப்பவுஞ்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே.
[யா. கா. பக். 677]

எனவும் வரும். எல்லா அடியானும் வந்த பாவினங்கட்குச் செய்யுள்:—

"திரைத்தசாலிகை" [யா. கா. பக். 38]

முதலியவாக முற்காட்டியவே கொள்க. பிறவும் அன்ன.

'ஒண்பா' வென்ற மிகையானே வெண்பாவின் ஈற்றடியும் நேரிசை யாசிரியப்பாவின் ஈற்றயலடியுங் கலிவெண்பாவின் ஈற்றடியுஞ் சிந்தடியாயும் இணைக்குறளாசிரியப்பாவின் இடையடி குறளடியாயுஞ் சிந்தடியாயும் வரப்பெறுமெனக் கொள்க. (12)

350. மோனை யெதுகை முரணியை பளபெடை
யானவவ் வைந்து மவற்றொ டொத்துறாஉம்
பாத விணையே பொழிப்போ டொரூஉத்தொடை
கூழை கதுவாய் மேலதூஉங் கீழதூஉஞ்
சீரிய முற்றொடு சிவணு மையெழுந்
தொடையு மத்தொடையின் விகற்பமு மாகும்.

இது நிறுத்தமுறையானே தொடைவகையும் அத்தொடைவிகற்ப வகையும் இத்துணையவென்கின்றது.

(இ-ள்.) அடிமோனையும் அடியெதுகையும் அடிமுரணும் அடியியை பும் அடியளபெடையுமாகிய அவ்வைந்தும், அத்தொடைகளை யொத்து ஓரடிக்கண்ணே வரும் இணைமோனையும் பொழிப்புமோனையும் ஒரூஉ மோனையும் கூழைமோனையும் மேற்கதுவாய்மோனையும் கீழ்க்கதுவாய் மோனையும் முற்றுமோனையும், இணையெதுகையும் பொழிப்பெதுகையும் ஒரூஉவெதுகையும் கூழையெதுகையும் மேற்கதுவாயெதுகையும் கீழ்க் கதுவாயெதுகையும் முற்றெதுகையும், இணைமுரணும் பொழிப்புமுரணும் ஒரூஉமுரணும் கூழைமுரணும் மேற்கதுவாய்முரணுங் கீழ்க்கதுவாய் முர ணும் முற்றுமுரணும், இணையியைபும் பொழிப்பியையும் ஒரூஉவியைபுங் கூழையியைபும் மேற்கதுவாயியைபுங் கீழ்க்கதுவாயியைபும் முற்றியைபும், இணையளபெடையும் பொழிப்பளபெடையும் ஒரூஉவளபெடையும் கூழையளபெடையும் மேற்கதுவாயளபெடையுங் கீழ்க்கதுவாயள பெடையும் முற்றளபெடையுமாகிய இவற்றோடுபொருந்தும் முப்பத்தைந் தும் முற்கூறிய தொடையும் அத்தொடை விகற்பமுமாமென்று கூறுவர் ஆசிரியர். (எ-று.) (13)

351. முதலெழுத் தொன்றின் மோனையு மேனை
யிரண்டா மெழுத்தோ டியையி னெதுகையு
மொழியினும் பொருளினு முரணின் முரணு
மிறுவா யொப்பி னியைபுத் தொடையு
மளபெடுத் தொன்றி னடியள பெடையு
மிருசீர் மிசைவரத் தொடுப்பி னிணையு
முதலொடு மூன்றுஞ் சீர்த்தொடை பொழிப்புஞ்
சீரிரண் டிடைவிடத் தொடுப்பி னொரூஉவு
மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பிற்
கூழையு முதலயற் சீரொழித் தல்லன
மேல்வரத் தொடுப்பின் மேற்கது வாயு
மீற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பிற்
கீழ்க்கது வாயுங் கிளந்த வீரிரண்டு
சீர்தோறுந் தொடுப்பின் முற்று மாகும்.

இது முற்கூறிய தொடையுந் தொடைவிகற்பமுமாமாறு கூறுகின் றது.

(இ-ள்.) அடிதொறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பின் அடி மோனைத்தொடையும், அடிதொறும் ஒழிந்த இரண்டாமெழுத்து ஒன்றி

வரத்தொடுப்பின் அடியெதுகைத்தொடையும், மொழியானும் பொருளானும் மறுதலைப்படத் தொடுப்பின் அடிமுரண்டொடையும், அடிதொறும் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுப்பின் அடியியைபுத்தொடையும், அடிதொறும் அளபெடுத்து ஒன்றிவரத் தொடுப்பின் அடியளபெடைத் தொடையும், முதலிருசீர்க்கண்ணும் மோனைமுதலாயினவரத் தொடுப்பின் இணைத்தொடையும், முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ் சீர்க்கண்ணும் மோனைமுதலாயினவரத் தொடுப்பிற் பொழிப்புத்தொடையும், நடுவிரு சீர்க்கண்ணுமின்றி முதற்சீர்க்கண்ணும் நான்காஞ்சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பின் ஒரூஉத்தொடையும், இறுதிச்சீர்க்கணின்றிஒழிந்த மூன்றுசீர்க்கண்ணும் மோனைமுதலாயினவரத் தொடுப்பிற் கூழைத்தொடையும், முதலயற்சீர்க்கணின்றி ஒழிந்த மூன்றுசீர்க் கண்ணும் மோனைமுதலாயினவரத் தொடுப்பின் மேற்கதுவாய்த்தொடையும், ஈற்றயற்சீர்க்கணின்றி ஒழிந்த மூன்றுசீர்க்கண்ணும் மோனைமுதலாயினவரத் தொடுப்பிற் கீழ்க்கதுவாய்த்தொடையும், சொல்லப்பட்ட நான்குசீர்க்கண்ணும் மோனைமுதலாயினவரத்தொடுப்பின் முற்றுத் தொடையுமாம். (எ-று.)

'ஏனை' யென்றமிகையானே இரண்டாமெழுத்து ஒன்றிவரினும் முதலெழுத்தெல்லாந் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து கட்டென்பதற்குப் பட்டென்பதல்லது பாட்டென்பது எதுகையாகாதெனவும், காட்டென்பதற்குப் பாட்டென்பதல்லது பட்டென்பது எதுகையாகாதெனவும், முதனிலை முதலிய உயிரளபெடை மூன்றுங் குறிலிணைக்கீழுங் குறிற்கீழும் வரும் ஒற்றளபெடை இரண்டுந் தம்முள் ஒன்றிவரத்தொடுப்பது சிறப்புடைத்தெனவுங் கொள்க.

'ஈரிரண்டு' எனவே இணைமோனை முதலிய எல்லாம் அளவடிக் கண்ணே வழங்கப்படுமென்பதூஉம் 'இறுவாயொப்பின் இயைபுத்தொடை' எனவே அதன்விகற்பமாகிய இணையியைபுத்தொடை முதலிய ஏழும் ஈற்றுச்சீரே முதற்சீராகக் கொண்டு வழங்கப்படு மென்பதூஉம் பெற்றாம்.

அடிமோனைத்தொடைக்குச் செய்யுள் :—

மாவும் புள்ளும் *வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடையின்
மாயோ ளின்னுயிர் புறத்திறுத் தற்றே.— [யா. கா. பக். 50]

எனவும், அடியெதுகைத்தொடைக்குச் செய்யுள் :—

வடியேர்க ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல் காட்டு

(பா - ம்.) * வது வயிற்படர்.

ளிடியின் முழக்கஞ்சி யீர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை. [யா. கா. பக். 51]

எனவும், பொருட் சொன்முரண்டொடைக்குச் செய்யுள் :—

இருள்பரந் தன்ன மாநீர் மருங்கி
னிலவுக்குவித் தன்ன வெண்மணலொருசிறை
யிரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா திறைக்குஞ்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே. [,,]

எனவும், அடியியைபுத்தொடைக்குச் செய்யுள் :—

இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
யாடமைத் தோளி கூடலு மணங்கே
யரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலகமு மணங்கே. [,, 50]

எனவும், அடியளபெடைத்தொடைக்குச் செய்யுள் :—

ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரைகொண் டீரளைப் பள்ளியுட்
டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோண்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதா
லோஒ வுழக்குந் துயர். [,, 51]

எனவும், இணைமோனை முதலிய மோனைவிகற்பம் ஏழும் வந்த செய்யுள்:-

அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி
யரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி
யம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
யகன்ற வல்கு லந்நுண் மருங்கு
லரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோ
ளவிர்மதி யனைய திருநுத லரிவை
யயில்வே லனுக்கி யம்பலைத் தமர்ந்த
கருங்கய னெடுங்க ணோக்கமென்
றிருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே. [,, 55]

எனவும், இணையெதுகை முதலிய எதுகைவிகற்பம் ஏழும் வந்த செய்யுள்

பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப்
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி

மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
யென்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை
யன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழ றுன்னிய
மயிலேய் சாயல் வாணுத
லயில்வே லுண்கணெம் மறிவுதொலைத் தனவே.

[யா. கா. பக். 56]

எனவும், இணைமுரண் முதலிய முரண்விகற்பம் ஏழும் வந்த செய்யுள் :—

சீறடிப் பேரக லல்கு லொல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கிக்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணு
மிருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமுந்
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தென முனியா
தென்று மின்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே. [„ 57]

எனவும், இணையியைபு முதலிய இயைபுவிகற்பம் ஏழும்வந்த செய்யுள்:—

மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
மற்றத னயலே முத்துறழ் மணலே
நிழலே யினியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தளவம் பாலே சொல்லே
புயலே குழலே மயிலே யியலே
யதனால், இவ்வயி னிவ்வுரு வியங்கலி
னெவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே. [„ 56]

எனவும், இணையளபெடை முதலிய அளபெடைவிகற்பம் ஏழும் வந்த செய்யுள் :—

தாஅட் டாஅ மரைமல ருழக்கிப்
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை

தேளம் புனலிடைச் சேஎர் பாஅன்
மீஇ றூஉர்ந் துகளுஞ் சீஇ
ரேஎ றூஉ நீஇ ணீஇ
ரூரன் செய்த கேண்மை
யாய்வளைத் தோளிக் கலரா றூவே. [யா. கா. 57]

எனவும் வரும். பிறவும் அன்ன.

இரும்பும்பொன்னும் மாறுபாடுடைமையிற் பொருண்முரணுயிற்றெனவுங் குடியுங்கண்ணும் ஆகாது சிறுமை பெருமை என்னுஞ் சொல்லே மாறுகோடலிற் சொன்முரணுயிற்றெனவுங் கொள்க. (14)

352. செந்தொடை யிரட்டையோ டந்தாதி யெனவும்
வந்த வகையான் வழங்கவும் பெறுமே.

இஃது இவ்வகையானுந் தொடையாமென்கிறது.

(இ-ள்.) செந்தொடையெனவும் இரட்டைத்தொடையெனவும் அந்தாதித்தொடையெனவும் வந்த கூற்றால் நடக்கவும்பெறும் முற்கூறிய தொடை. (எ-று.) (15)

353. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லி நிறுத்தசெந் தொடையுநே ரடியின்
முழுவது மொருசொல் வரினஃ திரட்டையு
மடியுஞ் சீரு மசையு மெழுத்து
முடிவு முதலாச் செய்யுண் மொழியி
னந்தாதித் தொடையுமென் றறிதல் வேண்டும்.

இது செந்தொடை முதலிய மூன்றுமாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) முற்கூறிய தொடைகளோடு வேறுபட்டு நடப்பின் மேற்கூறிப்போந்த செந்தொடையும், நாற்சீரோரடியின் முழுவதும் ஒரு சொல்லேவரத் தொடுப்பின் அஃது இரட்டைத்தொடையும், அடியும் சீரும் அசையும் எழுத்துமாகிய இறுதி மற்றையடிக்கு ஆதியாகச் செய்யுட் செய்யின் அந்தாதித்தொடையுமென்று அறிதலை விரும்பும் ஆசிரியன். (எ-று).

'சொல்லிநிறுத்த' என்ற மிகையானே அசையினுஞ் சீரினும் இசையினுமெல்லாம் இசையாது வருவது சிறப்புடைச் செந்தொடையெனவும் இரட்டைத்தொடை ஈற்றெழுத்தொன்று குறையினும் இழுக்காதெனவுங் கொள்க.

செந்தொடைக்குச் செய்யுள்:—

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே. [யா. கா. பக். 52]

எனவும், இரட்டைத்தொடைக்குச் செய்யுள்:—

ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினுட் சீறெரி யொக்குமே யொக்குங்
குளக்கொட்டிப் பூவி னிறம். [யா. கா. பக். 52]

எனவும், அந்தாதித்தொடைக்குச் செய்யுள்:—

உலகுடன் விளக்கு மொளிகிள ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசன
மாசனத் திருந்த திருந்தொளி யறிவன்
ஆசனத் திருந்த திருந் தொருளி யறிவனை
யறிவுசே ருள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே. [யா. கா. பக். 56]

எனவும் வரும். பிறவும் அன்ன. (16)

354. வெண்பா வாசிரியங் கலியே வஞ்சியெனப்
பண்பாய்ந் துரைத்த பாநான் காகும்

இது நிறுத்தமுறையானே முற்கூறிய பாவகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் வஞ்சிப்பாவு மெனத் தத்தந் தன்மையால் தெரிந்து சொல்லப்பட்ட பா நான்கு வகைப்படும். (எ-று.)

355. தாழிசை துறையே விருத்த மேன்றிவை
பாவினம் பாவொடு பாற்பட் டியலும்.

இது நிறுத்தமுறையானே முற்கூறிய பாவினவகை இத்துணைத் தென்கின்றது.

(இ-ள்.) தாழிசையும் துறையும் விருத்தமுமென்று இம்மூன்றும் பாவினமெனப்படும்; அவை பாவினொடு கூடி அப்பெயர்பெற்று நடக்கும். (எ-று.) (17)

அங்ஙனம் வழங்குமாறு: வெண்டாழிசை வெண்டுறை வெளிவிருத்தம் எனவும், ஆசிரியத்தாழிசை ஆசிரியத்துறை ஆசிரிய விருத்தம் எனவும், கலித்தாழிசை கலித்துறை கலிவிருத்தம் எனவும், வஞ்சித்தாழிசை வஞ்சித்துறை வஞ்சிவிருத்தம் எனவுங் கொள்க (18)

356. செப்ப லிசையன வெண்பா மற்றவை
யந்தடி சிந்தடி யாகலு மவ்வடி
யந்த மசைச்சீ ராகவும் பெறுமே.

இது நிறுத்தமுறையானே வெண்பாவாமாறு பொதுவகையான் உணர்த்துகின்றது.

(இ-ள்.) செப்பலோசையைத் தமக்கு ஓசையாக உடையனவாம் எல்லாவெண்பாவும்; அவ்வெண்பாக்களின் ஈற்றடி முச்சீராதலும் அவ்வீற்றடியின் இறுதி அசைச்சீரான் இறுதலும் பெறும். (எ-று.)

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். [குறள். 1121]

என நேரசைச்சீரானும்

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். [„ 1072]

என நிரையசைச்சீரானும் இறுதலேயன்றி உம்மையாற்

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. [குறள். 984]

எனக் குற்றுகர ஈற்று நேர்பசைச்சீரான் இறுதலும்,

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. [குறள். 1]

எனக் குற்றுகர ஈற்று நிரைபசைச்சீரான் இறுதலும்,

இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு.

என முற்றுகர ஈற்று நேர்நேரியற்சீரான் இறுதலும்,

மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலு
மஞ்சொன் மடவார்க் கருளு. —[யா. கா. பக். 82]

என முற்றுகர ஈற்று நிரைநேரியற்சீரான் இறுதலுங் கொள்க.

மற்றென்ற மிகையானே ஏந்திசைச்செப்பலுந் தூங்கிசைச் செப்பலும் ஒழுகிசைச் செப்பலுமெனச் செப்பலோசை மூன்றுவகைப்படும்;

வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
யேந்திசைச் செப்ப லென்மனார் புலவர்.

எனவும்,

இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்.

எனவும்,

"வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமு
மொன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்"
—[சங்க யாப்பு.]

எனவுங் கூறுபவாகலின்,

இவற்றிற்குச் செய்யுள் :—

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" —[குறள். 397]

எனவும்,

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" —[குறள். 1121]

எனவும்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்" —[குறள். 260]

எனவும் முறையே காண்க.

இவ்வோசையைத் தூங்கென்று ஓர் உறுப்பாக்கி வேறு கூறுவாரும் உளர். மேல் இவ்வாறு வருவனவற்றிற்கும் இவ்வுரை உய்த்துரைக்க. (19)

357. குறளே நேரிசை யின்னிசை பஃறொடை
சிந்திய லெனவஃ தைந்தென மொழிப.

இது மேற் பொதுவகையாற் கூறிய வெண்பாவகை இத்துணைத் தென்கின்றது.

(இ - ள்.) குறள் வெண்பாவும் நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும் பஃறொடை வெண்பாவுஞ் சிந்தியல் வெண்பாவுமென்று முற்கூறிய வெண்பா ஐந்துவகைப்படுமென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.) (20)

358. ஈரடி யான்வரிற் குறளஃ திரண்டாய்ச்
சீரிய வான்றனிச் சொல்லிடை சிவணி
யிருவிகற் பானு மொருவிகற் பானுஞ்
செப்ப லோசையிற் சிதையா தாகி
யத்திறம் வரினே ரிசையடி நான்கா
யொன்றும் பலவும் விகற்பாய்த் தனிச்சொ
லின்றி நடப்பி னின்னிசை யடிபல
துன்னிற் பஃறொடை நேரிசை யின்னிசை
யன்னவாய் மூன்றடி யான்வரிற் சிந்தியல்
வெண்பா வாதலும் விதியெனப் படுமே.

இது முற்கூறிய வெண்பாக்களாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஈரடியான்வரிற் குறள் வெண்பாவாதலும்; அக்குறட்பா இரண்டாய்த் தொடைக்கேற்ற தனிச்சொல் இடைக்கட்பொருந்தி முதலிரண்டடியும் ஒரு விகற்பத்தானுங் கடையிரண்டடியும் ஒரு விகற்பத்தானும் நான்கடியும் ஒரு விகற்பத்தானுஞ் செப்பலோசையின் வழுவாது அவ்வாறுவரின் நேரிசை வெண்பாவாதலும், நான்கடியாய் ஒரு விகற்பத்தானும் பலவிகற்பத்தானுந் தனிச்சொலின்றி வரின் இன்னிசை வெண்பாவாதலும், மேல் வெண்பாவிற்கு நான்கடியுரிமை கூறினமையின் நான்கடியின்மிக்கு ஒரு விகற்பாயும் பலவிகற்பாயும் அடிபலவாய்வரிற் பஃறொடை வெண்பாவாதலும், நேரிசை வெண்பாவேபோல இரண்டாம் அடியிறுதி தனிச்சொற் பெற்று இருவிகற்பாயும் ஒருவிகற்பாயும் மூன்றடியாய் வரின் நேரிசைச் சிந்தியல் வெண்பாவாதலும், இன்னிசை வெண்பாவேபோல ஒரு விகற்பாயும் பல விகற்பாயுந் தனிச்சொலின்றி மூன்றடியாய் வரின் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாதலும் இலக்கணமெனப்படும். (எ - று.)

மேல் வெண்பாச் செப்பலோசைத்தாய் வருமெனக்கூறி ஈண்டுஞ் செப்பலோசையிற் சிதையாதென்றது ஒருசார் பிறபாக்களை உதாரணவாய்பாட்டான் ஓசையூட்டுமிடத்துத் தத்தம் ஓசையிற் சிறிது வழுவி வருவன உளவாயினும் வெண்பாவிற்குச் செப்பலோசை சிறிதும் வழுவலாகாதென்று யாப்புறுத்தற் பொருட்டாகவுஞ், செப்பலோசையிற் சிறிது வழுவிவந்த நேரிசை இன்னிசை வெண்பாக்களை ஒருபுடையொப்புமை நோக்கி வெண்டுறைப் பாற்படுத்தும், செப்பலோசை சிறிது வழுவிவந்த பஃறொடை வெண்பாக்களை ஒருபுடை யொப்புமை நோக்கி வெண்கலிப்பாற்படுத்தும் வழங்கினும் இழுக்காதென்பது அறிவித்தற்குமெனக் கொள்க.

'சீரியவான்றனிச்சொல்' என்ற மிகையானே முதற் குறட்பாவினோடு தனிச்சொல் இடைவேறுபட்டு விட்டிசைப்பின் ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப்படப் பற்றுசிட்டு விளக்கினாற்போல முதற்குறட்பாவின் இறுதிக்கண் ஒன்றும் இரண்டும் அசைகூட்டி உச்சரிக்கப்பட்டு இரண்டு விகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் வருவன உள ஒருசார் ஆசிடை நேரிசை வெண்பாவாமெனவும், நேரிசைவெண்பாவேபோல இரண்டாம் அடியினிறுதி தனிச்சொற்பெற்று மூன்றுவிகற்பத்தான் வருவனவும் மூன்றும் அடியினிறுதி தனிச்சொற்பெற்று இரண்டுவிகற்பத்தான் வருவனவும் அடிதோறுந் தனிச்சொற்பெற்று வருவனவும் பிறவாற்றான் நேரிசைவெண்பாவிற்குச் சிறிது வேறுபட்டு நான்கடியாய் வருவனவுமெல்லாம் இன்னிசை வெண்பாவாமெனவுங் கொள்க.

இருவிகற்பத்தான் வந்த குறள் வெண்பாவிற்குச் செய்யுள்;—

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து. —[குறள். 667]

எனவும், ஒருவிகற்பத்தான் வந்த குறள்வெண்பாவிற்குச் செய்யுள் :—

“ உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர் ” —[குறள். 395]

எனவும், இருவிகற்பத்தான் வந்த நேரிசைவெண்பாவிற்குச் செய்யுள் :—

தடமண்டு தாமரையின் றாதா டலவ
னிடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைநண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்க்கடிந்
தூழி நடாயினா னூர். —[யா - கா. பக். 70]

எனவும், ஒருவிகற்பத்தான் வந்த நேரிசை வெண்பாவிற்குச் செய்யுள் :—

அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வர்
பெரிய வரைவயிரங் கொண்டு. —[யா - கா. பக். 70]

எனவும், ஈரசையான் ஆசிட்டு இருவிகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பாவிற்குச் செய்யுள் :—

தாமரையின் றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையி னாற்றமே தானாறுந்—தாமரைபோற்
கண்ணன் முகத்தான் கரதலத்தான் சேவடியெங்
கண்ணார்வஞ் செய்யுங் கருத்து. —[யா - கா. பக். 70]

எனவும், ஓரசையான் ஆசிட்டு இருவிகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பாவிற்குச் செய்யுள் :—

கருமமு முள்படா போகமுந் துவ்வா
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்று மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம். —[நாலடி. 250]

எனவும், ஈரசையான் ஆசிட்டு ஒருவிகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பாவிற்குச் செய்யுள் :—

வஞ்சியே னென்றவன்றன் னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ. —[யா - கா. பக். 71]

எனவும், ஓரசையான் ஆசிட்டு ஒருவிகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பாவிற்குச் செய்யுள் :—

யாத்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்.

எனவும், ஒருவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பாவிற்குச் செய்யுள் :—

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். —[நாலடி - 39]

எனவும், இருவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பாவிற்குச் செய்யுள் :—

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா றறம். —[நாலடி - 36]

எனவும், பலவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பாவிற்குச் செய்யுள் :—

கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கன்றான் கடந்து விடும். —[நான்மணிக்கடிகை 18]

எனவும், இரண்டாம் அடியிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவிற்குச் செய்யுள் :—

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின். —[நாலடி - 151]

எனவும், மூன்றும் அடியினிறுதி தனிச்சொற்பெற்று இருவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவிற்குச் செய்யுள் :—

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக்—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில். —[ஷை 103]

எனவும், அடிதோறுந் தனிச்சொற் பெற்று மூன்றுவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவிற்குச் செய்யுள் :—

இன்னுமை வேண்டி னிரவெழுக—விங்கிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க—வெல்வது
வேண்டின் வெகுளி விடல். —[நாலடி - 17]

எனவும், ஐந்தடியான் வந்த ஒருவிகற்பப் பஃறொடை வெண்பாவிற்குச் செய்யுள் :—

சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேற்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயற்
றோற்றந் தொழில்வடிவு தம்முட் டடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேட
ராற்றுக்கா லாட்டியர் கண்.

எனவும், ஆறடியான் வந்த பல விகற்பப் பஃறொடை வெண்பாவிற்குச் செய்யுள் :—

பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவி
லென்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா ளல்லளே—பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள்—யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்.

எனவும், ஏழடியான்வந்த பலவிகற்பப் பஃறொடைவெண்பாவிற்குச் செய்யுள்:—

வையக மெல்லாங் கழனியா—வையகத்துச்
செய்யகமே நாற்றிசையிற் றேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு—வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள்—சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங்—கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம். —[யா. கா. பக். 7]

எனவும், இருவிகற்பத்தான் வந்த நேரிசைச்சிந்தியல் வெண்பாவிற்குச் செய்யுள் :—

நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலைநல் வாயில் மகள். —[௸ 79]

எனவும், ஒரு விகற்பத்தான் வந்த நேரிசைச்சிந்தியல் வெண்பாவிற்குச் செய்யுள் :—

அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்ப—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு. —[யா - வி - பக். 226]

எனவும், ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசைச்சிந்தியல் வெண்பாவிற்குச் செய்யுள் :—

நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும்—பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி. —[யா - கா. பக். 79]

எனவும், இருவிகற்பத்தான் வந்த இன்னிசைச்சிந்தியல் வெண்பாவிற்குச் செய்யுள் :—

சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை. —[ஷை 80]

எனவும், மூன்றுவிகற்பத்தான்வந்த இன்னிசைச்சிந்தியல் வெண்பாவிற்குச் செய்யுள் :—

முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்த டுடுப்பீன்ற போயினார்
திண்டேர் வரவுரைக்குங் கார். —[ஷை 80]

எனவும் வரும். பிறவும் வந்துழிக் கண்டுகொள்க.

இனி, செப்பலோசையிற் சிதையாது நேரும் நிரையும் நேர்பும் நிரைபு மாகிய சீர்களை இறுதியாகவுடைய சிந்தடியான் முடியும் வெண்பாக்களை ஓசை யூட்டுமாறு :—

“ பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர் ” —[குறள். 1121]

இதனைக்

“ கூவிளங் கூவிளந் தேமா கருவிளங்
கூவிளங் கூவிளம் நாள் ”

எனவும்

“ நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர் ” —[குறள். 1072]

இதனைக்

" கூவிளங் தேமா புளிமா கருவிளங்காய்
தேமா புளிமா மலர் "

எனவும்,

" கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு " —[குறள். 984]

இதனைத்

" தேமா கருவிளந் தேமா புளிமாங்காய்
தேமா கருவிளங் காசு "

எனவும்,

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு " —[டிை 1]

இதனைப்

" புளிமா புளிமா புளிமாங்காய் தேமா
புளிமா புளிமா பிறப்பு "

எனவும் முறையே அலகிட்டு ஓசையூட்டி அவ்வாறுதல் காண்க. பிறவும் அன்ன. (21)

359. அடியொரு மூன்றுவந் தந்தடி சிந்தாய்
விடினது வெள்ளொத் தாழிசை யாதலு
மூன்றடி முதலா வேழடி காறும்வந்
தீற்றடி சிலசில சீர்குன் றினுமவை
வேற்றொலி விரவினும் வெண்டுறை யாதலு
மொருமூன் றொருநான் கடியடி தோறுந்
தனிச்சொற் றழுவி நடப்பது வெள்ளை
விருத்த மெனப்பெயர் வேண்டலும் விதியே.

இது மேற்கூறிய வெண்பாவிற்கு இனமாகிய தாழிசை துறை விருத்தங் களாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) மூன்றடியான் நடந்து ஈற்றடி முச்சீரடியாய் முடியின் அது வெள்ளொத்தாழிசையாதலும், மூன்றடி முதலாக ஏழடியளவும் நடந்து ஈற்றடியுட் சில அடிகள் சிலசீர் குறையினும் அவ்வாறு வருங்கால் முன்பிற் சில அடி ஓரோசையாய்ப் பின்பிற் சிலஅடி மற்றோரோசையாய் வேற்றொலி விரவிவரினும் வெண்டுறை யாதலும், மூன்றடியும் நான்கடியுமாய் அடிகடோறும் ஒருசொல்லே இறுதிக்கட் தனிச்சொல்லாகப் பொருந்தி நடப்பது வெளி விருத்தமெனப் பெயர்பெறுதலும் இலக்கணமாம். (எ - று.)

உரையிற்கோடலான் வெள்ளொத்தாழிசை முச்சீரான் இறுங்கால் வெண்பாவேபோலக் காசு பிறப்பு நாள் மலரென்னும் வாய்பாட்டான் இறு மெனவும், முதலடி இரண்டும் அளவடியான் வருமெனவும், சிந்தியல்வெண்பா ஒரு பொருண்மேல் மூன்று அடுக்கிவரின் அவையும் வெள்ளொத்தாழிசையா மெனவும், ஒருசார் வெண்டுறையின் ஈற்றடி ஒன்று ஒருசீர் குறைந்து வருவனவும் உளவெனவும், வெளிவிருத்தந் தனிச்சொற் பெற்றுவருங்கால் அளவடியினுட்பட்டு அடங்காது வரல்வேண்டுமெனவுங் கொள்க.

சீர் வரையறுத்திலாமையால் வெண்டுறை எனைத்துச்சீரானும் அடியாய் வருமென்க.

வெள்ளொத்தாழிசைக்குச் செய்யுள் :—

நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர். —[யா - கா. பக். 87]

எனவும், ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த வெள்ளொத்தாழிசைக்குச் செய்யுள் :—

அன்னா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
யொன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் றுறந்து விடல்

ஏடி யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் றுறந்து விடல்

பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் றுறந்து விடல். —[ஷை 90]

எனவும், மூன்றடியான் வந்த ஓரொலிவெண்டுறைக்குச் செய்யுள் :—

தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் *சாய்த்து விடும்பிளிற்றி யாங்கே.—[ஷை 88]

எனவும், நான்கடியான் வந்த ஓரொலி வெண்டுறைக்குச் செய்யுள் :—

குழலிசை வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய
வழலெரியின் மூழ்கினவா லங்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன். [ஷை 88]

எனவும், ஏழடியான் வந்த வேற்றொலிவெண்டுறைக்குச் செய்யுள் :—

பா - ம் :—* சாய்ந்து விழும் பிலிற்றி யாங்கே,

முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலக மேவல்செய
முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் றுக்கரிய
வைவேல் பாடிக்
கலந்துநின் றூரெலாங் கருதலா காவண
மிலங்குவா ளிரண்டினு மிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றூரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றுபவே.—[யா-கா.பக்.89]

எனவும், ஈற்றடி ஒன்று ஒருசீர் குறைந்துவந்த ஓரொலிவெண்டுறைக்குச் செய்யுள் :—

வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினு
முறவுற வருவழி யுரைப்பன வுரைப்பன்மற்
செறிவுறு தகையினர் சிறந்தன ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின். [ஷை 88]

எனவும், மூன்றடியான் வந்த வெளிவிருத்தத்திற்குச் செய்யுள் :—

கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவா—லென்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவா—லென்செய்கோயா
னெண்டிசையுந் தோகை யிருந்தகவி யேங்கினவா—லென்செய்கோயான்.
—[ஷை 86]

எனவும், நான்கடியான்வந்த வெளிவிருத்தத்திற்குச் செய்யுள் :—

ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா—ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா—ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா—ரொருசாரா
ரேகீர் நாய்கீ ரென்செய்து மென்றா—ரொருசாரார்.

எனவும் வரும். பிறவும் வந்துழிக்காண்க. (22)

360. அகவ லிசையன வகவன் மற்றவை
ஏஓ ஈஆய் என்ஐயென் றிறுமே.

இது நிறுத்தமுறையானே ஆசிரியப்பாவாமாறு பொதுவகையான் உணர்த்துகின்றது.

(இ - ள்.) அகவலோசையைத் தமக்கு ஓசையாக உடையனவாம் எல்லா ஆசிரியப்பாவும், அவை ஏயென்றும் ஓவென்றும் ஈயென்றும் ஆயென்றும் என் என்றும் ஐயென்றும் இறும். (எ - று.)

'மற்று' என்ற மிகையானே ஏந்திசையகவலுந் தூங்கிசையகவலும் ஒழுகிசை யகவலுமென அகவலோசை மூன்றுவகைப்படும் :—

நேர்நே ரியற்றளை யான்வரு மகவலு
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலு
மாயிரு தளையுமொத் தாகிய வகவலு
மேந்த றூங்க லொழுக லென்றிவை
யாய்ந்த நிரணிறை யாகு மென்ப. —[யா. வி. பக். 251]

என்பனவாகலின்,

இவற்றிற்குச் செய்யுள் :—

"போதுசாந்தம் *** துன்னுவோரே" —[பக். 462]

எனவும்,

"அணிநிழல் *** பரிசறுப் பவரே" —[பக். 463]

எனவும்,

"குன்றக்குறவன் *** சுணங்கே" —[பக். 464]

எனவும், முறையே காண்க.

"பாடுநனிகேட்டே"

என ஏயும்,

குவளை யுண்க ணிவள்வயிற் பிரிந்து
பெருந்தோள் கதுப்பொடு விரும்பினை நீவி
யிரங்குமென் றழுங்கல் வேண்டா
செழுந்தே ரோட்டிய வென்றியொடு சென்றீ. —[யா.வி.பக்.253]

என ஈயும்,

முள்ளி நீடிய முதுநீ ரடைகரைப்
புள்ளிக் கள்வ னும்ப லறுக்குந்
தண்டுறை யூர னெளிப்பவு
முன்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய். —[ஐங்குறு. 21]

என ஆயும்,

"அலந்த மஞ்ஞை யாமங் கூவப்
புலர்ந்தது மாதோ புரவலர்க் கிரவேன்"
[பெருங்கதை. 154 : 144-5]

என எனவும்,

நின்றன நின்று தன்றுணை யொருசிறைப்
பூந்தண் சிலம்பன் றேந்தழை யிவையெனக்
காட்டவுங் காண்டல் செல்லாள் கோட்டிப்

பூண்முலை நோக்கி யிறைஞ்சி
வாண்முக வெருத்தங் கோட்டினண் மடந்தை.—[யா. வி. பக். 253]

என ஐயும் ஈறுயவாறு காண்க. பிறவும் வந்துழிக் கண்டுகொள்க. (23)

361. நேரிசை யிணைக்குற ணிலைமண் டிலமே
யடிமறி மண்டில மெனநான் ககவல்.

இது மேற் பொதுவகையாற் கூறிய ஆசிரியப்பா வகை இத்துணைத் தென்கின்றது.

(இ - ள்.) நேரிசை யாசிரியப்பாவும் இணைக்குறளாசிரியப்பாவும் நிலை மண்டிலவாசிரியப்பாவும் அடிமறிமண்டில வாசிரியப்பாவுமென நான்குவகைப் படும் ஆசிரியப்பா. (எ - று). (24)

362. அந்த வடியி னயலடி சிந்தடி
வந்திடி னேரிசை யாசிரிய மாதலு
மளவடி யந்தமு மாதியு மாகிக்
குறளடி சிந்தடி யென்ற விரண்டு
மிடைவர நிற்பி னிணைக்குற ளாதலு
மொத்த வடித்தா யுலையா மரபொடு
நிற்பி னிலைமண் டிலமா குதலு
மனப்படு மடிமுத லிடையீ றுயி
னடிமறி மண்டில வாசிரிய மாதலு
நடைதெரி புலவர் நாடினர் கோளலே.

இது முதற்கூறிய ஆசிரியப்பாக்களாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஈற்றடியின் அயலடி முச்சீரடியாக நடப்பின் அது நேரிசை யாசிரியப்பா ஆதலையும், ஈறும் முதலும் நாற்சீரடியாய் இருசீரடியும் முச்சீரடியு மாகிய இரண்டடியும் இடையிடையே வந்து நிலைபெறின் அஃது இணைக் குறளாசிரியப்பா ஆதலையுஞ், சீர் தம்மில் அளவொத்த அடியினையுடைத்தாய்க் கெடாத தன்மையொடு நிற்பின் அது நிலைமண்டிலவாசிரியப்பா ஆதலையும், யாதானும் ஓரடியை முதலடியாக இடையடியாக ஈற்றடியாகக் கூறினும் ஓசை யும் பொருளுஞ் சிதையாமல்வரின் அஃது அடிமறிமண்டிலவாசியப்பா ஆதலை யும் இலக்கணநெறியை அறியும் அறிவுடையோர் ஆராய்ந்து கொள்க. (எ-று).

"குறளடி சிந்தடி யென்ற விரண்டு
மிடைவர நிற்பி னிணைக்குறள்" —[காக்கை பாடினியார்]

என்றரேனும், உரையிற் கோடலாற் சிந்தடி இணைதலும் இணைக்குறளா மெனக் கொள்க.

நேரிசையாசிரியப்பாவிற்குச் செய்யுள் :—

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே. —[குறுந். 3]

எனவும், ஈற்றயலடியிரண்டுஞ் சிந்தடியான் வந்த இணைக்குறளாசிரியப்பா விற்குச் செய்யுள் :—

நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீருஞ்
சார லுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே. —[யா. கா. பக். 93]

எனவும், இருசீரடியும் முச்சீரடியும் இடையிடை வந்த இணைக்குறளாசிரியப் பாவிற்குச் செய்யுள் :—

சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு
நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு
நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா
மெமக்கீயு மன்னே
யம்பொடு வேனுழை வழியெல்லாந்
தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே
யருங்கலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
யிரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பார்வை சோர
வஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
றிருநிறத் திலங்கிய வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வினிப், பாடுநரு மில்லை
பாடுநர்க் கொன் றீகுநரு மில்லை

பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே. —[புறம். 235]

எனவும், நிலைமண்டிலவாசிரியப்பாவிற்குச் செய்யுள் :—

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. —[குறுந். 18]

எனவும், அடிமறிமண்டிலவாசிரியப்பாவிற்குச் செய்யுள் :—

சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார னாட நீவர லாறே. —[யா - கா. பக். 96]

எனவும் வரும். (25)

363. மூன்றடி யொத்து முடிவன வாய்விடி
னான்ற வகவற் றாழிசை யாதலு
மேருத்தடி குன்றியு மிடையிடை குன்றியு
மிவற்றோ டிடைமடக் காகியு நான்கடி
யவற்று னடப்பி னதன்றுறை யாதலுங்
கழிநெடி லடிநான் கொத்திறி னகவல்
விருத்த மாதலும் விதியெனப் படுமே.

இது மேற் கூறிய ஆசிரியப்பாவிற்கு இனமாகிய தாழிசை துறை விருத்தங்களாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) மூன்றடியாய்ச் சீர் தம்முள் அளவொத்து முடியுமாயின் அஃது இலக்கணத்தான் நிறைந்த ஆசிரியத்தாழிசையாதலும், ஈற்றயலடி குறைந்தும் இடையிடைகுறைந்தும்ஈற்றயலடிகுறைந்தும்இடைமடக்காகியும்,இடையிடை குறைந்து இடைமடக்காகியும் நான்கடியான் வரின் அவை ஆசிரியத்துறை யாதலும், கழிநெடிலடி நான்காய்த் தம்மில் அளவொத்து முடியின் அவை ஆசிரிய விருத்தமாதலும் இலக்கணமாம். (எ - று.)

'ஆன்ற' என்ற மிகையானே ஆசிரியத்தாழிசை தனியே வரப்பெறு மாயினும் ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவருவது சிறப்புடைத்தெனக் கொள்க. சீர்வரையறுத்திலாமையால் ஆசிரியத்தாழிசையும் ஆசிரியத்துறையும் **எனைத்துச் சீரானும் அடியாய் வருதல் பெற்றும்.**

ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசைக்குச் செய்யுள் :—

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

—[சிலப். ஆய்ச்சி. குரவை. 1—3]

எனவும், தனியேவந்த ஆசிரியத்தாழிசைக்குச் செய்யுள் :—

வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிறைகழ றொழுதனம்.

—[யா - கா. பக். 97]

எனவும், எருத்தடிகுறைந்த ஆசிரியத்துறைக்குச் செய்யுள் :—

கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்முள்ளி வருவிராயி
னரையிருள் யாமத் தடுபுலியேறு நும்மஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ.

—[யா - கா. பக். 98]

எனவும், இடையிடைகுறைந்துவந்த ஆசிரியத் துறைக்குச் செய்யுள் :—

கொன்றார்ந் தமைந்த குருமுகத் தெழினிறக்
குருதிக் கோட்டின விருந்தாட் பெருங்கைக்
குன்றுமென வன்றுமெனக்
குமுறு நின்றன கொடுந்தொழில் வேழம்
வென்றார்ந் தமைந்த விளங்கொளி யிளம்பிறை
துளங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பரூஉத்தா
ளதிரும் வானென வெதிருங் கூற்றெனச்
சுழலா நின்றன விழிக்கண் யாளி ;
சென்றார்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் தெறுழ்வலிப் புலவுநா றழல்வாய்ப்

புனலாமெனக் கனலாமெனப்
புகையா நின்றன புலிமா னேற்றை
யென்றாங் கிவையிவை யியங்கலி னெந்திறத்
தினிவரல் வேண்டலந் தனிவர லெனத்
தலைவிலக்கலி னிருவரைமிசை யெறிகுறும்பிடை
யிதுவென்னென வதுநோனார் கரவிர விடைக்கள
வுளமதுகற்றோ ரதுகற் பன்றே. —[யா - கா. பக். 9]

எனவும், எருத்தடிகுறைந்து இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறைக்குச் செய்யுள் :—

வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட் சேஎய் வடிவேபோலத்
தண்டளிர்ப் பிண்டித் தழையேந்தி மாவினவித் தணந்தோன்யாரே
தண்டளிர்ப் பூம்பிண்டித் தழையேந்தி வந்துநம்
பண்டைப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து படர்ந்தோ னன்றே.
—[யா. கா. பக். 98]

எனவும், இடையிடைகுறைந்து இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறைக்குச் செய்யுள் :—

இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
வரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனி
லரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்ச மென்செய்த திளவேனில்.
—[ஷை 100]

எனவும், அறுசீர்க்கழிநெடிலடியான் வந்த ஆசிரியவிருத்தத்திற்குச் செய்யுள் :-

விடஞ்சூ ழரவி னிடைநுடங்க விறல்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்க ணீல மலர்தாந்தாந் [யே.
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்கைத் தண்ணுமை
—[ஷை 14]

எனவும் வரும். ஒழிந்த கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தங்கட்குச் செய்யுள் கழிநெடிலடிக்கு முன்னர்க் காட்டியவேகொள்க. பிறவும் வந்துழிக் காண்க. (26)

364. துள்ள லிசையன கலியே மற்றவை
வெள்ளையு மகவலு மாய்விளைந் திறுமே.

இது நிறுத்தமுறையானே கலிப்பாவாமாறு பொது வகையான் உணர்த்துகின்றது.

(இ - ள்.) துள்ளலோசையைத் தமக்கு ஓசையாக உடையனவாம் எல்லாக்கலிப்பாவும்; அக்கலிப்பாக்கள் வெள்ளைச்சுரிதகத்தாற்றான் ஆசிரியச் சுரிதகத்தாற்றான் முற்றுப்பெற்று முடியும். (எ - று.)

மற்றென்ற மிகையானே ஏந்திசைத்துள்ளலும் அகவற்றுள்ளலும் பிரிந் திசைத்துள்ளலுமெனத் துள்ளலோசை மூன்று வகைப்படும் :—

ஏந்திசைத் துள்ளல் கலித்தளை யியையின்
வெண்டளை தன்றளை யென்றிரண் டியையி
னொன்றிய வகவற் றுள்ளலென் றோதுப
தன்றளை பிறதளை யென்றிவை யனைத்தும்
பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல். —[யா - கா. பக். 63]

எனக் கூறுபவாகலின்.

இவற்றிற்குச் செய்யுள் :—

முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே
வருசினநா தருமறைநூல் வழிபிழையா மனமுடையா
ரிருவினைபோய் விழமுனியா வெதிரியகா தியையெறியா
திருமலரா யருவினராய் நிலவுவர்சோ தியினிடையே.

[ஷை 63]

எனவும்,

“செல்வப்போர் * * * ஒளித்ததே” —[பக். 468]

எனவும்,

குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குபிணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப

எனவாங்கு,

ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே. —[யா - கா. பக். 63]

எனவும் முறையே காண்க.

‘விளங்கென்ற’மிகையானே ஒருசார் கொச்சகக்கலிப்பாக் கலியடியானே இறுதலும் கொள்க. இருவகைச் சுரிதகத்தானுங் கலியானும் இறுமாறு இனிக் காட்டுங் கலிப்பாக்களுட் கண்டுகொள்க. (27)

365. ஒத்தா ழிசைக்கலி வெண்கலிப் பாவே
கொச்சகக் கலியொடு கலிமூன் றாகும்.

இது மேற் பொதுவகையாற் கூறிய கலிப்பாவகை இத்துணைத்தென்கின்றது.

(இ - ள்.) *ஒத்தாழிசைக்கலியும் வெண்கலியுங் கொச்சகக்கலியுமென முற்கூறிய கலிப்பா மூன்று வகைப்படும்.* (எ - று.) (28)

366. தரவோன் றாகித் தாழிசை மூன்றாய்த்
தனிச்சொ லிடைநடந்து சுரிதகந் தழுவி
நிகழ்வது நேரிசை யொத்தா ழிசையு
மாங்கத னிடையே யளவடி சிந்தடி
பாங்கமை குறளடி படுநீர்த் திரைபோ
லோய்ந்தோய்ந் துற்றிடு மாயி னன்ன
தம்போ தரங்க வொத்தா ழிசையு
மசையடி மிசைத்தா யராக மவற்றொடு
மிசைவுறின் வண்ணக வொத்தா ழிசையும்
வேற்றுத் தளைதட்டும் வெண்பா வியைந்து
மீற்றடி முச்சீ ராயிறின் முறையே
வெண்கலிப் பாவுங் கலிவெண் பாவுந்
தரவே தரவிணை தாழிசை சிலபல
மரபா னியன்றவு மயங்கிவந் தனவு
மவ்வப் பெயரா னமைந்தகொச் சகமு
மாகு மென்ப வறிந்திசி னோரே.

இது மேற்கூறிய கலிப்பாக்களாமாறு கூறுகின்றது.

(இ - ள்) *முன்னொரு தரவு வந்து அதன் பின்பு மூன்று தாழிசை வந்து அவற்றின் பின்னர்த் தனிச்சொல் வந்து அதன் பின்னர்ச் சுரிதகவுறுப்பு வந்து நடப்பது நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவா மென்றும், நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவினுட் தாழிசைக்குந் தனிச்சொற்கும் இடையே நாற்சீரடியும் முச்சீரடியும் முறையான் அமைந்த இருசீரடியுமாகிய அசையடிகள் தோன்றிய நீர்த்தரங்கம் கரைசாரக் கரைசார ஒருகாலைக்கொருகாற் சுருங்கி வருமாறுபோலக் குறைந்து குறைந்து வருமாயின் அத்தன்மையது அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பாவாமென்றும், அவ்வம்போதரங்க வுறுப்பிற்கு மேலிடத்தாய்த் தரவு தாழிசை தனிச்சொற் சுரிதகமென்னும் நான்கு உறுப்போடுங்கூட அராகவுறுப்பு வந்து இயையுமாயின் அது வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவாமென்றும், வேற்றுத்தளை தட்டு வேற்றோசை தழுவியும் வெண்டளை தட்டு வெள்ளோசை தழுவியும் ஈற்றடி முச்சீரான் முடியுமாயின்*

முறையே வெண்கலிப்பாவாமென்றுங் கலிவெண்பாவாமென்றும், ஒரு தரவே வந்துந் தரவு இரண்டு இணைந்துவந்துஞ் சில தாழிசை வந்தும் பல தாழிசை வந்தும் முறையானே நிகழ்வனவுந் தரவு தாழிசை அராகம் அம்போதரங்கந் தனிச்சொற் சுரிதகமென்னும் ஆறுறுப்புந் தம்முண் மயங்கியும் வெண்பாவி னோடும் ஆசிரியத்தினோடும் மயங்கியும் வந்தனவும் முறையே தரவுகொச்சகந் தரவிணைக்கொச்சகஞ் சிஃறாழிசைக்கொச்சகம் பஃறாழிசைக்கொச்சகம் மயங் கிசைக்கொச்சக மென்னும் பெயர்களான் அமைதிபெற்ற கொச்சகக்கலிப் பாவாமென்றுங் கூறுவர் அறிந்தோர். (எ - று.)

'பாங்கமை குறளடி'என்ற மிகையானே அசையடிதான் அளவடி ஈரடியா னிரண்டும் ஓரடியானான்கும் முச்சீரானெட்டும் இருசீராற்பதினாறுமாய் வருவது சிறப்புடைத்தெனவும், இவை நான்கும் எட்டுமாய்ச் சுருங்கி வரவும் பெறும் எனவும், அங்ஙனம் வருதல் சிறப்பின்றெனவும், வேற்றுத்தளைதட்டு வேற்றோசை தழுவி வருவது வெண்கலிப்பாவெனவே, தன்றளைதட்டுத் தன் னோசை தழுவி வருவது கலிவெண்பாவென்பது தானே போதருமெனவும், மரபென்ற மிகையானே தனிச்சொல்லுஞ் சுரிதகமும் ஒருசார் கொச்சகத்து இடையிடை வரப்பெறுமெனவுங் கொள்க.

அசையடி யெனினும் அம்போதரங்க மெனினும் ஒக்கும்.

வெண்டளைதட்டு வெள்ளோசை தழுவிவருங் கலிவெண்பாப் பன்னீ ரடியின் மிக்கே வருமெனக் கொள்க.

வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவிற்குச் செய்யுள்:—

முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனைவனே
யெத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்துறு திசையனைத்தும் பகைபசி பிணிநீங்க
வுத்தமர்க டொழுதேத்த வொளிர்வரைபோற் செலவினாய்.

இது தரவு

எள்ளனைத்து மிடரின்றி யெழின்மாண்ட பொன்னெயிலி
னுள்ளிருந்த வுன்னையே யுறுதுணையென் றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டு ளுறைகென்றல் விழுமிதோ.

குணங்களின் வரம்பிகந்து கூடிய பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக் காதலித்துன் னடைந்தோரைப்
பிணம்பிறங்கு பெருங்காட்டு ளுறைகென்றல் பெருமையோ

விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச் செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார் வணங்கநின் னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைக வென்பதுநின் றகுதியோ.

இவை மூன்றுந் தாழிசை

எனவாங்கு — தனிச்சொல்

எனைத்துணையை யாயினு மாகமற் றுன்கட்
டினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்தும்
வினைத்தொகையை வீட்டுக வென்று. — இது சுரிதகம்;
—[யா - கா. பக். 105]

எனவரும். ஆசிரியச்சுரிதகத்தாலிற்ற நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவிற்குச் செய்யுள் :—

வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ.

இது தரவு

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே.

சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவா
ஞணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே.

சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே யென்பவாற்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே.

இவை மூன்றுந் தாழிசை

எனவாங்கு — தனிச்சொல்

அருளொனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே.
இது சுரிதகம்; —[யா - கா. பக். 103]

எனவரும்.

எட்டும் பதினாறுங் குறையாதுவந்த அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவிற்குச் செய்யுள் வந்துழிக் காண்க.

எட்டும் பதினாறுங் குறைந்து நான்கும் எட்டுமாய்வந்த அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவிற்குச் செய்யுள் :—

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வானுளைய
வழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கோலமலி தடக்கையோய்.

இது தரவு

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்ல
ரடியொடு முடியிறப்புண் டயர்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ.

ஒலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோவு
மாணுதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ.

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துநிறம் வேறாக
வெருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ.

இவை மூன்றுந் தாழிசை

இளங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅல் நின்னிறம்.
விரியிணர்க் கோங்கமும் வெங்கெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை.

இவை நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம்; இவை இரண்டும் பேரெண்,

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை
யொலியிய லுவண மோங்கிய கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடியினை.

இவை நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்; இவை நான்கும் அளவெண்,

போரவுணர்க் கடந்தோய் நீஇ
புணர்மருதம் பிளந்தோய் நீஇ
நீரகல மளந்தோய் நீஇ
நிழறிகழும் படையோய் நீஇ.

இவை முச்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்; இவை இடையெண்

"ஊழி நீஇ, யுலகு நீஇ, யுருவு நீஇ, யருவு நீஇ,
யாழி நீஇ, யருளு நீஇ, யறமு நீஇ, மறமு நீஇ"

இவை இருசீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்; 'இவை சிற்றெண்;

எனவாங்கு தனிச்சொல்

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைச் செவ்வே லச்சுத
னொன்றுபுரி கடலுலக முழுதுடவது
மொன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே. இது சுரிதகம்;
—[யா. வி. பக். 286]

எனவரும்.

ஆறுறுப்புங் குறையாது வந்த வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவிற்குச் செய்யுள் :—

விளங்குமணிப் பசும்பொன்னின் விசித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்ப்
பரூஉத்தடக்கை மதயானைப் பகட்டெழி லெரிகுஞ்சிக்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்.

இது தரவு

காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் றிரியாத மரபொத்தாய் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
வணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ.

அன்பினா லமிழ்தளைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாய்க்
கதிர்வளைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ.

பாங்கனையே வாயிலாப் பலகாலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ரருளுநின் றகுதியுந் தகுதியோ.

இவை மூன்றுந் தாழிசை

தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலெனவிரிவன பொழில்.
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவன கழி.
நீதுறு திறமறு கெனநனி முனிவன துணையொடு பிணைவன துறை.
மூதுறு தொழிலொடு குழீஇக்கெழு மொழிகலி கடிதொடர் புடையது கடல்.

இந்நான்கும் அராகம்

கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனு
விடுங்கழி யிராவருதல் வேண்டாவென் றுரைத்திலமோ.

கருநிறத் துறுதொழிற் காம்பெரி துடைமையா
னிருணிறத் தொருகானி லிராவார லென்றிலமோ.

இவை நாற்சீர் இரண்டடி இரண்டு அம்போதரங்கம் :

நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே
யாற்றொடு கழிந்தன்று லாரிருளு மாயிழைக்கே
நயப்பொடு கழிந்தன்று னனவதுவு நன்னுதற்கே.

இவை நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்

அத்திறத்தா லசைந்தன தோள்
அலர்தற்கு மெலிந்தன கண்
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்
பொன்னிறத்தாற் போர்த்தன முலை
அழலினு லசைந்தது நகை
யணியினு லொசிந்த திடை
குழலினு னிமிர்ந்தது முடி
குறையினுற் கோடிற்று நிறை.

இவை முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்

உட்கொண்ட தகைத்தொருபால்
உலகறிந்த வலத்தொருபால்
கட்கொண்ட றுளித்தொருபால்
கழிவெய்தும் படித்தொருபால்
பரிவுறாஉந் தகைத்தொருபால்
படர்வுறாஉம் பசப்பொருபால்
இரவுறாஉந் துயரொருபால்
இளிவந்த வெழிற்றொருபால்
மெலிவுறாஉந் தகைத்தொருபால்
விளர்ப்புவந் தடைந்தொருபால்
பொலிவுசென் றகன்றொருபால்
பொறைவந்து கூர்ந்தொருபால்
காதலிற் கதிர்ப்பொருபால்
கட்படாத் துயரொருபால்

ஏதிலசென் றணங்கொருபால்
இயனுணிற் செறிவொருபால்.

இவை இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்

எனவாங்கு தனிச்சொல்

இன்ன திவ்வழக்க மித்திற மிவணல
மென்னவு முன்னாட் டுன்னு யாகிக்
கலந்த வண்மையை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇத் தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே. இது சுரிதகம்;

எனவரும்.

வேற்றுத்தளைதட்டுவந்த வெண்கலிப்பாவிற்குச் செய்யுள் :—

ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்
றார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து.

எனவும், கலித்தளைதட்டுவந்த கலிவெண்பாவிற்குச் செய்யுள் :—

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையால் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையால்
மனையறமுந் துறவறமும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசான் மிகுகுணத்துத் துறவரசைத் தொழுதேத்த
னன்மைசால் வீடெய்து மாறு.

எனவும், வெண்டளை தட்டுவந்த கலிவெண்பாவிற்குச் செய்யுள் :—

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவி னுமாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
ளன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை

யடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன் [கலி. 51]

என வரும்.

தனிச்சொல்லின்றிக் கலியடியானேயிற்ற தரவுகொச்சகக் கலிப்பா விற்குச் செய்யுள் :—

"செவ்வப்போர்க் கதக்கண்ணன் * * * ஒளித்ததே"—[பக். 468]

எனவும், தனிச்சொற்பெற்றுச் சுரிதகத்தாலிற்ற தரவு கொச்சகக் கலிப்பா விற்குச் செய்யுள் :—

"குடநிலைத் தண்புறவிற் * * * சென்றவாறே" —[பக். 496]

எனவும் வரும்.

இடையிடை தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தாலிற்ற தரவிணைக் கொச்சகக் கலிப்பாவிற்குச் செய்யுள் :—

வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனாங்
கொடிபடு வரைமாடக் கூடலார்க் கோமானே.

இது தரவு

எனவாங்கு தனிச்சொல்

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொலைப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துளையாகக் கருதாரே.

இது தரவு

அதனால் தனிச்சொல்

செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே. சுரிதகம்;

எனவரும்.

இடையிடைத் தனிச்சொற் பெற்றுவந்த சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா விற்குச் செய்யுள் :—

பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே.

இது தரவு

ஆங்கொருசார், உச்சியார்க்கிறைவனா யுலகெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங்கைக் காணாத காரணத்தான் மயங்கினரே.

ஆங்கொருசார், அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங்கைக் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே.

ஆங்கொருசார், மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங் [காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே.

இவை மூன்றுந் தாழிசை

அதாஅன்று, கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமா
னின்புக ழொருவன் செம்பூட் சேஎ
யென்றுநனி யறிந்தனர் பலரே தானு
மைவரு ளொருவனென் றறியலாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன்வாழி திருவொடும் பொலிந்தே. —[யா-கா. பக். 118]

இது சுரிதகம்; எனவரும்.

தனிச்சொல் இடைவந்த பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவிற்குச் செய்யுள் :—

தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியோர்ப் பிலையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ.

இது தரவு

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேற்
றளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ.

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் விருப்பாளோ.

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மிவள்மேனி மாசொடு மடிவாளோ.

நாம்பிரியே மினியென்று நன்னுதலைப் பிரிவாயே
லோம்பிரியே மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்துக் கூடியஞான்
றன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ.

சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.

இவை ஆறுந்தாழிசை

எனவாங்கு தனிச்சொல்

*அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே
அதனால், விழுமிய தறிமதி வாழி
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே. —[யா-கா-பக். 119]

இது சுரிதகம்.

கலிக்கு ஓதப்பட்ட ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் வந்து மயங்கிய மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவிற்குச் செய்யுள் :—

மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்ன
மிரைநயந் திறைகூரு மேமஞ்சா றுறைவகேள்.

மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பெயர்ந்தோடு மேமஞ்சா றுறைவகேள்.

இவை இரண்டுந் தரவு

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோ
டொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்.
கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தோ
டெண்பனிநீ ருகக்கண்டுந் தெரியலனே யென்றியால்.

பா - ம்:—*அரும்பெற லமிழ்தினுந் தரும்பொருளதனினும் பெரும்பெற லரிதிவள் வெறுக்கையு மற்றே.

நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.

கனைகுரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்.

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கல்லாத்
தாழுமென் னிலைகண்டு *மகல்கிலனே யென்றியால்.

கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்.

இவை ஆறுந் தாழிசை

அதனால் தனிச்சொல்

அடும்பம லிறும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு.

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்.

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்.

அலங்கொளி ரவிர்சுட ரிலங்கொளி மறைதொறுங்
கலங்தெறி காலொடு புலம்பின பொழில்.

இவை நான்கும் அராகம்

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ.

ஒல்லாது கழலுமென் னொளிவளையுஞ் செறிப்பாய்மன்
னில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப் பாய்மன்
னீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

மறவாத வன்பினேன் மனநிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையா
யேதிலார் தலைசாய யானுய்யுமா றுரையாய்.

இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

இவை ஆறுந் தாழிசை;

எனவாங்கு தனிச்சொல்

பா - ம் :—*தாங்கலனே.

பகைபோன் றதுதுறை ; பரிவா யினகுறி ; நகையிழந் ததுமுகம்
நனிநா ணிற்றுளம்; தகையிழந் தனதோள் ; தலைசிறந் ததுதுயர் ;
புகைபரந் ததுமெய் ; பொறையாயிற் றென் னுயிர்.

இவை இருசீர் ஓரடி எட்டம்போத ரங்கம் ;

அதனால், தனிச்சொல்

இனையது நினைய லனையது பொழுதா
னினையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக வுண்கண்
ணென்னொடு கழிகவித் துன்னிய நோயே. —[யா-கா-பக். 120]

என வரும். இது சுரிதகம் ;

சுரிதகம் இடையிடைவந்த கொச்சகச் செய்யுளும் வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் மயங்கிவந்த மயங்கிசைக் கொச்சகச்செய்யுளும் வந்துழிக் காண்க. (29)

367. அடியெனைத் தாகியு மொத்துவந் தளவினிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையு
நெடிலடி நான்காய் நெறிப்பட நிகழ்வது
கலித்துறை யாதலுங் கலிப்பா விருத்த
மளவடி நான்கின தாதலும் விதியே.

இது மேற்கூறிய கலிப்பாவிற்கு இனமாகிய தாழிசை துறை விருத்தங்களாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அடிகள் பலவாயுஞ் சிலவாயுந் தம்முள் அளவொத்து வந்து ஈற்றடி மிக்குவருவது கலித்தாழிசையாதலும், ஐஞ்சீரடி நான்காய் ஒழுங்குபட நடப்பது கலித்துறையாதலும், நாற்சீரடி நான்கு உடையது கலிவிருத்தமாதலும் இலக்கணமாம். (எ - று.)

'நெறிப்பட' என்றதனனே கலித்தாழிசை தம்முள் அளவொவ்வாதும் வருமெனவும், தனியே வரப்பெறுமாயினும் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்தெனவும், கலித்துறை கட்டளைக்கலித்துறையுங் கலிநிலைக் கலித்துறையு மென்றிருவகைத்தாய் அவற்றுள் நேரசை முதலாகிய கட்டளைக்கலித்துறை ஓரடிக்கு எழுத்துப் பதினாறும் நிரையசை முதலாகிய கட்டளைக்கலித்துறை ஓரடிக்கு எழுத்துப் பதினேழுமாய் வருமெனவுங் கொள்க. சீர்வரையறுத்திலாமையாற் கலித்தாழிசை எனைத்துச்சீரானும் அடியாய் வரப்பெறுமென்பதூஉம் பெற்றும்.

இரண்டடியாய் ஈற்றடிமிக்கு ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்த சிறப்புடைக் கலித்தாழிசைக்குச் செய்யுள் :—

" கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின் "

" ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின் "

" மென்றினை காத்து மிருபூங் கமழ்கானற்
குன்றச் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின் "

—[யா - கா - பா. 125]

எனவரும்.

பல அடியாய் ஈற்றடிமிக்கு ஏனையடிமூன்றுந் தம்மில் அளவொத்துத் தனியேவந்த கலித்தாழிசைக்குச் செய்யுள் :—

வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி னெழாஅல் வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி னெழாதாய்க் குறுலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள். —[ஷை]

என வரும்.

பல அடியாய் ஈற்றடிமிக்கு இரண்டாம்அடி குறைந்து முதலடியும் மூன்றும் அடியுந் தம்முள் அளவொத்துத் தனியேவந்த கலித்தாழிசைக்குச் செய்யுள் :—

பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே. —[ஷை 126]

எனவரும்.

நேரசை முதலாகிய கட்டளைக் கலித்துறைக்குச் செய்யுள் :—

தேனார் கமழ்தொங்கன் மீனவன் கேட்பத் தெண்ணீ ரருவிக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன்னித் தமிழ்நூல்
யானா நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமா
லானா வறிவி னவர்கட் கென்னாங்கொலென் னாதரவே.

—[யா - கா. சூ. 2]

எனவும், நிரையசைமுதலாகிய கட்டளைக்கலித்துறைக்குச் செய்யுள் :—

அடிவரையின்றி யளவொத்துமந்தடி நீண்டிசைப்பிற்
கடிதலில்லாக்கலித் தாழிசையாகுங் கலித்துறையே

நெடிலடிநான்காய் நிகழ்வதுநேரடி யீரிரண்டாய்
விடினதுவாகும் விருத்தந்திருத்தகு மெல்லியலே.
—[யா - கா - சூ. 34]

எனவும் கலிநிலைக்கலித்துறைக்குச் செய்யுள் :—

யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.
—[யா - கா - பக். 126]

எனவும், கலிவிருத்தத்திற்குச் செய்யுள் :—

வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலி
னாய்தலி னெண்சுட ராழியி னன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
னீதலை சென்றுரை நீள்கடை காப்போய். —[சூளா. 127]

எனவும் வரும். பிறவும் அன்ன. (30)

368. தூங்க லிசையன வஞ்சி மற்றவை
யாய்ந்த தனிச்சொலோ டகவலி னிறுமே.

இது நிறுத்தமுறையானே வஞ்சிப்பாவிற்கு ஓசையும் ஈறுமாமாறு கூறுகின்றது.

(இ - ள்) தூங்கலோசையைத் தமக்கு ஓசையாக உடையனவாம் மேற்கூறிய குறளடிவஞ்சிப்பாவுஞ் சிந்தடிவஞ்சிப்பாவும்; அவ்விருவகை வஞ்சிப்பாவும் ஆராய்ந்த தனிச்சொல்லோடு புணர்ந்து ஆசிரியச்சுரிதகத்தான் இறும். (எ - று.)

‘மற்று’ என்ற மிகையானே ஏந்திசைத்தூங்கலும் அகவற்றூங்கலும் பிரிந்திசைத்தூங்கலுமெனத் தூங்கலோசை மூன்றுவகைப்படும் :—

ஒன்றிய வஞ்சித் தளையே வரினு
மொன்றாத வஞ்சித் தளையே வரினு
மென்றிவை யிரண்டும் பிறவு மயங்கினு
மேந்த லகவல் பிரிந்திசைத் தூங்கலென்
றாய்ந்த நிரணிறை யாகு மென்ப.

எனக் கூறுபவாகலின்.

இவற்றிற்குச் செய்யுள் :—

வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை

நினைத்தன்பொடு தொழு தேத்தினர்
நாளு, மயலா நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே.

எனவும்,

வானோர்தொழ வண்டாமரைத்
தேனூர்மலர் மேல்வந்தரு
ளானவருள் கூரறிவனைக்
காணார், மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே.

எனவும்,

"மந்தானிலம் * * * மகிழ்ந்தே" —[பக். 467]

எனவும் முறையே காண்க. தனிச்சொற்பெற்று ஆசிரியச்சுரிதகத்தாலிற்ற குறளடிவஞ்சிப்பாவிற்குச் செய்யுள் :—

"சுறமறிவன துறையெல்லாம் * * * மன்னனூரே"—[பக். 473]

எனவும், தனிச்சொற் பெற்று ஆசிரியச்சுரிதகத்தாலிற்ற சிந்தடிவஞ்சிப் பாவிற்குச் செய்யுள் :—

"தொன்னலத்தின் * * * தற்றே" —[பக். 473]

எனவும் வரும். (31)

369. குறளடி நான்மையிற் கோவை மூன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை யாதலு
மாங்கவை தனிவரி னதன்றுறை யாதலும்
பாங்கமை சிந்தடி நான்காய் நடப்பது
வஞ்சி விருத்த மாதலு மரபே.

இது மேற்கூறிய வஞ்சிப்பாவிற்கு இனமாகிய தாழிசை துறை விருத்தங்களாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) இருசீரானாகிய நாலடியுடைய செய்யுள் ஒருபொருண்மேல் மூன்றாய்வருவன வஞ்சித்தாழிசையாதலும், இருசீரடி நான்காய்த் தனியே வருவது வஞ்சித்துறையாதலும், முறையமைந்த முச்சீரடி நான்காய் நடப்பது வஞ்சிவிருத்தமாதலும் இலக்கணமாம். (எ - று.)

வஞ்சித்தாழிசைக்குச் செய்யுள் :—

மடப்பிடியை மதவேழந்
தடக்கையான் வெயின்மறைக்கு
மிடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண். —[யா - கா. பக். 128]

பேடையை யிரும்போத்துத்
தோகையான் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
யோடுமென் மனனேகாண். —[யா - கா. பக். 128]

இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கு
மருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண். —[௸]

எனவும், வஞ்சித்துறைக்குச் செய்யுள் :—

மைசிறந்தன மணிவரைக்
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய். —[௸]

எனவும், வஞ்சி விருத்தத்திற்குச் செய்யுள் :—

சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயி
னீல வுண்கணிவள் வாழுமே. —[௸ 129]

எனவும் வரும். (32)

370. தளைசீர் வண்ணத் தாங்கெட வரினே
குறுகிய விகரமுங் குற்றிய லுகரமு
மளபெடை யாவியு மலகியல் பிலாமையு
மைகான் குறுகிற் பெய்தலு குறிலியல்
மாய்தமு மொற்று மளபெழூஉ நிற்புழி
வேறல கெய்தும் விதியின வாதலு
மொற்றள பெழாவழிப் பெற்றவல கின்மையும்
பெற்றியேன் றுரைப்பர் கற்றுணர்ந் தோரே.

நிறுத்தமுறையானே எழுத்து முதலிய அறுவகை உறுப்பிலக்கணமும் பாவும் பாவினமுமாகிய இருவகைச் செய்யுளிலக்கணமும் உணர்த்தி அவற்றின் ஒழிபிலக்கணம் உணர்த்துவான் புகுந்தவற்றுள் இஃது ஒருசார் எழுத்துக்கட்கு ஆவதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) தளையுஞ் சீரும் ஓசையும் மேற்கூறிய இலக்கணத்தோடு மாறு கொள்ள வருவழிக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் உயிரளபெடையும் அலகுகாரியம் பெறுமையும், ஐகாரங் குறுகிய இடத்துக் குற்றெழுத்தே போலக்கொண்டு அலகிடப்படுதலும், ஆய்தமும் ஒற்றும் அளபெடுத்துநிற்புழி ஓரலகுபெறுந் தன்மையவாதலும், ஒற்றுக்கள் அளபெழாவழி முற்கூறிய அலகுபெறுமையும் இலக்கணமென்று கூறுவர் கற்றோர். (எ - று.)

ஒற்று அளபெழாவழிப் பெற்ற அலகில எனவே அவ்வொற்றின்பாற் படும் ஆய்தமும் அளபெழாவழி அலகுபெறுமையும் பெற்றும்.

"குழலினி தியாழினி தென்பர்தம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்" —[குறள். 66]

எனவும்,

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்" —[குறள். 254]

எனவும் வரும். இவற்றுட் குற்றியலிகரம் வந்து முறையே ஆசிரியத்தளையுங் 'கலித்தளையுந் தட்டு வெள்ளையுட் பிறதளை விரவா' வென்னும் இலக்கணத்தோடு மாறுபட்டு வெண்பா அழிய நிற்றலின் ஈண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக் கணத்தான் அலகுபெறுவென்று களைய வெண்டளையாம்.

சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா ளைப்
பெறுநன்றி மன்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர். —[யா - கா. பக். 138]

இதனுள் 'இன்றிவர்க்கியாஞ் செய்தக்கா'லென்புழிக் குற்றியலிகரம் வந்து வஞ்சியுரிச்சீராய் 'வெள்ளையுள் நிரையீற்றுரிச்சீர் விரவா'வென்னும் இலக் கணத்தோடு மாறுபட்டு வெண்பா அழியநிற்றலின் ஈண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தான் அலகுபெறுதென்று களைய வெண்சீராம்.

கொன்றுகோடுநீடு குருதிபாயவுஞ்
சென்றுகோடுநீடு செழுமலைபொருவன
வென்றுகோடுநீடு விறல்வேழ
மென்றுழூடுநீடு பிடியுளபோலும்
அதனால்
இண்டிடை யிரவிவ ணெறிவரின்
வண்டுண் கோதை யுயிர்வா மூலளே. —[யா-கா. பக். 139]

என இக்குறளடி வஞ்சிப்பாவினுட் குற்றுகரம் வந்து ஆறசைச்சீரும் ஐயசைச் சீருமாயின அவ்வாறு வருகவென்னும் ஒத்திலாமையால் ஆண்டுக் குற்றுகரங் களை இவ்விலக்கணத்தால் அலகுபெறுவென்று களையச் சீர்சிதையாதாம்.

இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் பேழ்வாய் திறந்து—கடைகடையி
னுப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு. —[யா-கா. பக். 140]

இதனுள் 'உப்போஒ' வென்புழிப் பண்டமாற்றின்கண் அளபெடைவந்து கலித்தளைதட்டு வெண்பா அழியவந்தமையன் ஈண்டு உயிரளபெடையை இவ்விலக்கணத்தான் அலகுபெருதென்று நெட்டெழுத்தே போலக் கொண்டு அலகிடத் தளைசிதையாதாம்.

பிண்ணாக்கோஒ வென்னும் பிணாவின் முகத்திரண்டு
கண்ணாக் குடையனபோற் கட்டுரைக்கும்—பிண்ணாக்குக்
கொள்ளீரோ வென்பாடன் கூரெயிறு காளையரை
யுள்ளீர்வ போல வுள. [யா-வி. பக். 42]

எனவும்,

பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றிலவா—னெல்லுக்கு
நூறேஒ நூறென்பா னுடங்கிடைக்கு மென்முலைக்கு
மாறேமா லன்றளந்த மண். —[யா - வி. பக். 42]

எனவும்,

"களிச்சாத்தாஅஅ வென்றியான் கண்காண நின்று
விளித்தாலும் வாரான் விரைந்து" —[ஷ]

எனவும் வரும். இவற்றுட் பண்டமாற்றின் கண்ணும் விளித்தற்கண்ணும் அளபெடைகள் வந்து வெண்பாவினுள் நாலசைச்சீராய் வண்ணம் அறுக்குங்கால்.

"செப்ப லிசையன வெண்பா"

என்னும் இலக்கணத்தோடு மாறுகொண்டு செப்பலோசை அழியநிற்குமாகலின் ஆண்டு உயிரளபெடைகளை இவ்விலக்கணத்தால் அலகுபெருவென்று களைய வண்ணஞ் சிதையாதாம்.

'இயல்பென்ற' மிகையானே அலகிடும் இடத்துக் குற்றிகரக் குற்றுகரங்கள் ஒற்றியல்பினவாயும் உயிரளபெடை நெட்டெழுத்தியல்பிற்றாயும் நிற்றல் கொள்க.

இனி எதிர்மறுத்தலென்னும் இலக்கணத்தாற் சீருந் தளையுந்திருந்தின் அலகுபெறுமென்பதாயிற்று. அங்ஙனம் அலகுபெறும் இடத்துத் தளைசீர் வண்ணமென முறைபிறழக் கூறியவதனாற் குற்றிகரக் குற்றுகரங்கள் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகுபெறுமெனக் கொள்க.

உயிரளபெடை அலகுபெறுமாறு மேற்பெறப்படும். குற்றிகரக் குற்றுக ரங்கள் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகுபெறுமாறு :—

வந்துநீ சேரினுயிர் வாழும் வாராக்கால்
முந்தியாய் பெய்த வளைகழலு—முந்தியாங்
கோளானே கண்டனங் கோல்குறியா யின்னுமோர்
நாளானே நாம்புணரு மாறு. —[யா-கா. பக். 141]

இதனுள் ‘ வந்துநீ’யென்புழியும் ‘ முந்தியா’யென்புழியும் காண்க.

நடைக்குதிரை யேறி நறுந்தார் வழுதி
யடைப்பையாய் கோறு வெனலு—மடைப்பையான்
சுள்ளற் சிறுகோல் கொடுத்தான் றனைப்பெறினுஞ்
செல்லாதி யாங்காண் டலை. —[டி 142]

எனவும்,

“ கெண்டையை வென்ற கிளரொளி யுண்கணாள்
பண்டைய லல்லள் படி” —[டி]

எனவும்,

“ அன்னையையா னோவ தெவன்மா ணணியிழாய்
புன்னையையா னோவன் புலந்து” —[டி]

எனவும் வரும். இவற்றுள் ஐகாரக்குறுக்கங் குற்றெழுத்தேபோல நின்று குறி லோடுங் நெடிலோடுங் கூடி நிரையசையாயினவாறு காண்க.

“ எஃஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃஃகு வார்க்கில்லை வீடு” —[டி 144]

எனவும்,

கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குல் மேதகு சாயலா
ளென்ன் பிறமகளா மாறு. —[யா-கா. பக். 144]

எனவும் ஆய்தமும் ஒற்றும் அளபெழுந்து ஓரலகுபெற்றவாறு காண்க.

உணர்ந்தார்க் குணர்வரியோன் றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே. —[கோவை. 9]

என இவ்வாறு ஈரொற்றுடனிலையாய் நிற்பினும் அளபெழாமையிற் குற் றெழுத்தின் பயத்தவாய் அலகுபெறுமை காண்க.

"ஈரொற் றாயினு மூவொற் றாயினு
மோரொற் றியல வென்மனார் புலவர்"—[யா-கா. பக். 143]

என்றார் பிறருமெனக் கொள்க.

ஒற்றளபெழாவழி அலகுபெறாதென்றது 'பெற்றவலகு' என்ற மிகையானே ஒற்றளபெழினும் மற்றோரெழுத்தினோடு கூடி நிரையசையாகாவெனக் கொள்க. (33)

371. விட்டிசைத் தன்றி முதற்கட் டனிக்குறி
னேரா காமையு நெட்டெழுத் தளபெழி
னேர்நே ராதலுங் குறினெடி லளபெழி
னிரைநே ராதலு நெறியெனப் படுமே.

இது நிறுத்தமுறையானே ஒருசார் அசைகட்கு ஆவதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) மேற் பொதுவகையாற் தனிக்குறில் நேரசையா மென்றாராயினும் விட்டிசைத்துநின்ற இடத்தல்லது மொழிமுதற்கண் நின்ற குற்றெழுத்து நேரசையாகாமையும் நெட்டெழுத்து அளபெடுத்துவருமெனின் அவ்விரண்டும் நேர்நேராதலும் குற்றெழுத்தோடு புணர்ந்த நெட்டெழுத்து அளபெழுந்தால் அவ்விரண்டும் நிரைநேராதலும் முறையெனப்படும். (எ - று.)

'எனப்படுமென்ற' மிகையானே விட்டிசைத்துவருவது குறிப்பின் கண்ணும் ஏவற்கண்ணுந் தற்சுட்டின்கண்ணும் வினாவின்கண்ணுஞ் சுட்டின் கண்ணுமெனவும், விட்டிசைத்து நின்ற இடத்து மற்றொன்றினோடுகூடி நிரையசையாகாதெனவுங் கொள்க.

உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
றுன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
விழந்தானென் றெண்ணப் படும். —[நாலடி. 9]

இதனுள் 'அஆ' என்புழி அருளின்கட்குறிப்பின் விட்டிசைத்து வந்த குற்றெழுத்து மொழிமுதற்கண் நேரசையாயினவாறு காண்க.

வெறிகமழ் தண்புறவின் வீங்கி யுகளு
மறிமுலை யுண்ணாமை வேண்டிற்—பறிமுன்கை
அஉ வறியா வறிவி னிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ. —[யா - கா. பக். 145]

எனத் தற்சுட்டின்கண்ணும் ஏவற்கண்ணும்,

"அஅவனும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல்"

எனச் சுட்டின்கண்ணும் வினாவின்கண்ணும் விட்டிசைத்து வந்த குற்றெழுத்துக்களும் அன்ன.

விட்டிசையாதவழி மொழிமுதற்கட் தனிக்குறில் குறிலோடும் நெடிலோடுங் கூடி நிரையசையாமென்பதாயிற்று.

> " யால வழுள விடையினமா மேனி
> மரபு பிழை யாத வைப்பு " —[யா - வி. பக். 51]

எனவும்,

> " அமருந்து தானை யதியர்தங் கோவே
> துமருந்து தூயனவே கொண்டு " —[ஷை 51]

எனவும் வரும். இவற்றுட் தற்சுட்டின் கண்ணும் ஏவற்கண்ணுங் குற்றெழுத்தினோடு கூடி நிரையசையாயினவாறு காண்க.

இனி நெட்டெழுத்தளபெழின் நேர்நேராதற்குங் குறிநெடிலளபெழின் நிரைநேராதற்குஞ் செய்யுள் :—

> " ஏஎர் சிதைய வழாஅ லெலாஅ நின்
> சேயரி சிந்திய கண் " —[யா - கா. பக். 147]

எனவரும்.

உரையிற்கோடலான் பின்புநின்ற குற்றெழுத்தினோடுகூடி நிரையசையாகாதெனக் கொள்க.

> " தனிநிலை யளபெடை நேர்நே ரியற்றே "
> " இறுதிநிலை யளபெடை நிரைநே ரியற்றே"—[நத்தத்தனார்]

என்றார் பிறருமெனக் கொள்க. இன்னும் அதனானே

> " தூஉஉத் தீம்புகைத் தொல்விசும்பு " —[மலைபடு - தனி]

எனவும்,

> " போஒஒர்த்தது கொல் "

எனவும்,

> " இலாஅஅர்க் கில்லை தமர் "

எனவும்,

> " செறாஅஅய் வாழியநெஞ்சு " —[குறள். 1200]

எனவும் சிறுபான்மை நேர்நேர்நேராதலும் நிரைநேர்நேராதலுங் கொள்க. (34)

372. நிரைநடு வாகிய வஞ்சி யுரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிதலுங் கலிவயி
னேரீற் றியற்சீர் நிலவுத லின்மையு
மேனைய வெல்லா மெவ்வகைச் சீரோடுந்

தாமயங் குதலுந் தளையொடு மயங்கலும்
வெள்ளையு ணிரையீற் றுரிச்சீர் விரவா
சொல்லிய வெள்ளையுட் பிறதளை தொடரா
வென்றலு மொன்றிய விலக்கண மென்ப.

இஃது ஒருசார் சீர்தளைகட்காவதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் இரண்டுங் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் வாராவென வரைதலும், நேர்நேரும் நிரைநேருமாகிய நேரீற்றியற்சீர் இரண்டுங் கலிப்பாவினுள் வருதலின்மையும், ஒழிந்தசீரெல்லாம் எவ்வகைப்பட்ட சீரோடும் விரவி எல்லாப்பாவினுள்ளும் பாவினத்துள்ளும் வருதலுந், தத்தந்தளையோடு பிறதளைவிரவி எல்லாப்பாவினுள்ளும் பாவினத துள்ளும் வருதலும், எல்லாச்சீரும் எல்லாத்தளையும் எல்லாப்பாவினுள்ளும் பாவினத்துள்ளும் புக்கு மயங்குமெனப் பட்டனவேனும் வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் வந்து மயங்கா, வரைந்தோதிய வெண்பாவினுட் தனக்கோதிய தளையேயன்றி வேற்றுத்தளை வந்துவிரவாவென்று சொல்லுதலும் பொருந்திய இலக்கணமாமென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.)

'தாமென்ற' மிகையானே நேரீற்றியற்சீர் வெண்கலியுள்ளுங் கொச்சகக் கலியுள்ளும் வருதலும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கொச்சகத்து அருகி வருதலுங் கொள்க. விலக்கியன வாராமையும் விதித்தன வருதலும் மேற் காட்டிய செய்யுளகத்தும் பிற சான்றோர் செய்யுளகத்துங் கண்டுகொள்க.

குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு வெண்மணன் மேனின்று—புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிற
ருள்ளம்பு காப்ப துரை. —[யா - கா. பக். 150]

என்றற் றொடக்கத்து ஒருசார் வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் வந்ததேனுந் திருவள்ளுவப் பயனும் நாலடி நானூறும் முதலாகிய கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரம் முதலாகிய பிற சான்றோர் செய்யுளுள்ளும் வஞ்சியுரிச்சீர் வந்திலாமையானும், வேற்றுத்தளை வெண்பாவினுள் விரவுகவென ஓத்திலாமை யானும், இத்தொடக்கத்தன குற்றமல்லது குணமாகாவென்பதே தொல் லாசிரியர் துணிவு. அதுவே இந்நூலுடையார்க்கும் உடன்பாடு. (35)

373. இயற்சீர் வெள்ளடி வஞ்சி யடியிவை
மயக்கப் படுதலும் வெண்சீர் வெள்ளடி
கலியடி யோரோவழி யகவலுட் கலத்தலும்
வெள்ளடி யகவல் கலியுளு மகவலுங்
கலியு மோரோவழி வெண்பா வடியும்

வஞ்சியுண் மயங்கி வருதலு மைஞ்சீ
ரடிகலி யகவலோ டருகிவந் தடுத்தலுங்
கடிநிலை யின்றே கருதுங் காலை.

இது நிறுத்தமுறையானே அடிமயங்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஆசிரியப்பாவினுள் இயற்சீர்வெண்டளையான் வந்த வெண்பா வடியும் வஞ்சியடியும் வந்து மயங்குதலும் அவ்விருவகை அடியுமேயன்றி வெண்சீர்வெண்டளையான் வந்த வெண்பாவடியுங் கலியடியும் ஒரோவழி வந்து மயங்குதலும் கலிப்பாவினுள் வெண்பாவடியும் அகவலடியும் வந்து மயங்கு தலும் வஞ்சிப்பாவினுள் அகவலடியுங் கலியடியும் வந்துமயங்குதலும் அவ்விரு வகையடியுமே யன்றி ஒரோவழி வெண்பாவடி வந்து மயங்குதலும் ஒருசார் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடியும் அருகிவந்து அடுத்தலும் நீக்கு நிலைமையின்று ஆராயுமிடத்து. (எ - று.)

இயற்சீர் வெள்ளடி மயங்கிய ஆசிரியப்பாவிற்குச் செய்யுள் :—

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
வுலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர் சென்ற வாறே
யதுமற் றவலங் கொள்ளாது
நொதுமல கழறுமிவ் வழுங்க லூரே. —[குறுந். 12]

எனவரும்.

"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
குறுந்தொடி யாஞ்செல் சுரம்"

என்று உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

வஞ்சியடி மயங்கிய ஆசிரியப்பாவிற்குச் செய்யுள் :—

இருங்கட லுடுத்தவிப் *பெருநிலங் கவைஇ
யுடைநிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவல
ரிடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்த
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே

பா - ம் :—* பெருங்கண் மாணிலத்.

கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்க
ணுப்பிலாஅ அவிப் புழுக்கல்
கைக்கொண்டு பிறக்கு நோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையு
மின்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே.

—[புறம். 363]

எனவரும். இதனுள் ‘ உப்பிலாஅ அவிப் புழுக்கல் ’ எனவும், ‘ கைக்கொண்டு பிறக்குநோக்கா திழிபிறப்பினோ னீயப்பெற்று ’ எனவும் வஞ்சியடி மயங்கி வந்தவாறுகாண்க. வெண்சீர்வெள்ளடி மயங்கிய ஆசிரியத்திற்குச்செய்யுள்:—

அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
யேதின் மாக்களு நோவர் தோழி
யொன்று நோவா ரில்லைத்
தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே.

—[யா - கா. பக். 153]

எனவரும். இதனுள்

“ அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பொங்கிய பூசல் பெரிது ”

என்று உச்சரித்து வெள்ளடியாமாறு காண்க. கலியடி மயங்கிய ஆசிரியப்பா விற்குச் செய்யுள் :—

குருகுவெண் டாளி கோடுபுய்த் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
மருள்பிடி திரிதருஞ் சார
லருளா னாகுத லாயிழை கொடிதே. —[யா - கா. பக். 153]

எனவரும். இதனுள்,

“ மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
தீவழங்கு சுழல்விழிக்கட் சீயஞ்சென் றழலுமே ”

என்று உச்சரித்துக் கலியடியாமாறு காண்க. வெண்பாவடியும் ஆசிரியவடியும் மயங்கிய கலிப்பாவிற்குச் செய்யுள் :—

“ காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள் ”—[கலி - 39]

என்னும் குறிஞ்சிக் கலியானுணர்க. இம்மயங்கிசைக் கொச்சகத்துள் வெண்பாவடியும் ஆசிரியவடியும் மயங்கிவந்தவாறு கண்டுகொள்க.

"நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்" —[பட்டினப் - 22]

என ஆசிரியவடியும்,

"வயலாமைப் புழுக்குண்டு
வறளடும்பின் மலர்மலைந்து" —[ஷை 64, 65]

எனக் கலியடியும்,

"கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை" —[ஷை 23]

என வெள்ளடியும் பட்டினப்பாலை யென்னும் வஞ்சிநெடும்பாட்டினுள் மயங்கி வந்தவாறு காண்க. ஐஞ்சீரடியான்வந்த கலிப்பாவிற்குச் செய்யுள் :—

"அணிகிளர் *சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே"
—[யா - கா. பக். 155]

எனவும், ஐஞ்சீரடியான்வந்த ஆசிரியப்பாவிற்குச் செய்யுள் :—

உமணர், சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றுறை
யூர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காட்
டின்னா வென்றி ராயி
னினியவோ பெரும தமியோர்க்கு மனையே.—[குறுந்.124]

எனவரும். பிறவும் அன்ன. (36)

374. ஈரடி வெண்பாச் சிறுமை மூவடி
யாசிரி யத்தோடும் வஞ்சி யெஞ்சிய
தோருநான் காகு மிழிபே பெருமை
முந்நான் காயிர மாயிர முடிவில
தென்னு வரூஉ மியல்பின தென்ப.

இது நான்குபாவிற்குஞ் சிறுமைபெருமைக்கு எல்லையாகிய அடி வரையறை உணர்த்துகின்றது.

(இ - ள்.) இரண்டடி வெண்பாவிற்குச் சிற்றெல்லையென்றும், மூன்றடி ஆசிரியப்பாவிற்கும் வஞ்சிப்பாவிற்குஞ் சிற்றெல்லையென்றும், ஒழிந்த கலிப்பாவிற்கு நான்கடி சிற்றெல்லையென்றும் இவற்றிற்கு முறையே பன்னிரண்டடி வெண்பாவிற்கும், ஆயிரமடி ஆசிரியத்திற்கும் வஞ்சிக்கும் பேரெல்லையென்றும் அடிவரையறையில்லதென்று சொல்ல வருகின்ற தன்மையையுடைத்துக் கலிப்பாவிற்கென்றுங் கூறுவர் ஆசிரியர். (எ - று.)

பா - ம் :—* பொறியவிர்.

படைப்போர் குறிப்பினை நீக்கிப் பெருமை
வரைத்தித் துணையென வைத்துவரை யில்லென்
றுரைத்தனர் மாதோ வுணர்ந்திசி னோரே.

என்பவாகவும், ஈண்டுப் பெருமைக்கெல்லை கூறியவாறென்னையெனின், அங்ஙனங் கூறிய காக்கைபாடினியார் பொதுமையே கூறியொழிந்தமையான் இவர் அஃதொழித்து,

"ஆசிரியப்பாவி னளவிற் கெல்லை
யாயிர மாகு மிழிபுமூன் றடியே"—[தொல்.பொரு.சூ.469]

எனவும்,

"ஆசிரிய நடைத்தே வஞ்சி யென்ப" —[ஷெ]

எனவும்,

"நெடுவெண் பாட்டே முந்நான் கடித்தே"
—[தொல். பொரு. சூ. 470]

எனவும்,

கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை யெனவிவை
தொகைநிலை வகையா னளவில வென்ப.
—[தொல். பொரு. சூ. 472]

எனவும்,

"முடிபொரு ளில்லா தடியள விலவே" —[யா-வி. பக். 124]

எனவும் ஆசிரியர் தொல்காப்பியனுர் பொதுவுஞ் சிறப்பும் உடன்கூறினமையான் அக்கருத்தேபற்றிக் கூறியவாறென்று உணர்க.

ஈரடியான்வந்த வெண்பாவிற்குச் செய்யுள் :—

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை" —[குறள். 37]

எனவும், மூன்றடியான்வந்த ஆசிரியப்பாவிற்குச் செய்யுள் :—

முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே. —[யா-கா. பக்.44]

எனவும், மூன்றடியான் வந்த வஞ்சிப்பாவிற்குச் செய்யுள் :—

செங்கண்மேதி கரும்புழக்கி
யங்கணீலத் தலராருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலுஞ்
செழுநீர்,

நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே. —[யா-கா. பக். 45]

எனவும், நான்கடியான் வந்த கலிப்பாவிற்குச் செய்யுள் :—

"செல்வப்போர் * * * ஒளித்ததே". —[பக். 468]

எனவும் வரும்.

வாளா ஆசிரியமென்னுது ஆசிரியத்தொடுமெனப் பிரித்தோதினமையான் ஆசிரியஞ் சுரிதகமாய் வருமிடத்து இரண்டடியானும் வருமென்றும் வஞ்சியை முற்கூறினமையான் வஞ்சிப்பா இரண்டடியானும் வருமென்றுங் காண்க.

இரண்டடியாய்ச் சுருங்கிவந்த வஞ்சிக்குச் செய்யுள் :—

பூந்தண் சினைமலர் மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன் புகழ்பர வாதவர் வினைவெல்லா
ரதனு, லறிவன தடியிணை பரவப்
பெறுகுவர் யாவரும் பிறவா நெறியே.

எனவரும். ஏனைப்பெருமைக்குச் செய்யுள் வந்துழிக் காண்க. (37)

375. வண்ணக மம்போ தரங்கவொத் தாழிசை
நண்ணிய தரவி னடியிரு மூன்று
மேனைய தரவடி யிழிபொரு மூன்றும்
பேணிய பெருமை பெரும்பொருண் முடிபு
மிரண்டடி யிழிபு மிரட்டிமூன் றுக்கமு
மோன்றிய தாழிசை யுறுதலு முறுங்காற்
றரவிற் சுருங்க றகுதியேன் றுரைத்தலு
மளவடி முதலா வனைத்தடி யானும்
வருவது வண்ணகம் வருங்காற் சிறுமை
நாலடி பெருமை நாலிரண் டாகி
நடத்தலு நெறியேன நாட்டினர் புலவர்.

இது கலியுறுப்பாகிய தரவுதாழிசைகட்கு அடிவரையறையும் அராகத்திற்குச் சீர்வரையறையும் அடிவரையறையுங் கூறுகின்றது.

(இ - ள்.) வண்ணகவொத்தாழிசைக்கலியும் அம்போதரங்கவொத்தாழிசைக்கலியும் பொருந்திய தரவுறுப்பிற்குப் பெருக்கச்சுருக்கமின்றி அடிவரையறை ஆறும், ஒழிந்த கலிப்பாவின் தரவடிக்கு வரையறைச் சுருக்கம் மூன்றும் பெருக்கம் பொருண்முடிவும், தாழிசைக்கு வரையறை சிறுமை இரண்டடியும் பெருமை நான்கடியும் மூன்றடியும் பொருந்துதலும், பொருந்துமிடத்து முன்னர் நின்ற தரவடியிற் தாழிசையடி சுருங்கிவருதல் இயல்பென்று சொல்லுதலும், வண்ணகவுறுப்பு அளவடியானும் நெடிலடியானுங் கழிநெடிலடியானும்

வரப்பெறும், அப்படி வருங்கால் அராகவடிக்கு வரையறை சிற்றெல்லைநான்கும் பேரெல்லை எட்டுமாய் நடத்தலும் இலக்கணமாக அமைத்தனர் அறிவுடையோர். (எ - று.)

அராகமெனினும் வண்ணகமெனினும் ஒக்கும். வண்ணகவுறுப்பிற்குச் சீர்விதந்தோதினமையின் ஓதாத தரவு தாழிசைகட்குச் சீர்வரையறை பொதுவகையாற் கலிக்கோதிய அளவடியே கொள்க. ஈண்டோதாத அம்போதரங்கவுறுப்பிற்குச் சீர்வரையறையும் எல்லைவரையறையும் அவ்வுறுப்புடைக்கலிக்கோதிய விதியானே பெற்றாம். எனவே, தனிச்சொல்லுறுப்பு எவ்வகைச் சீரானும் வரப்பெறூஉமென்பதூஉம், சொல்லென்றமையான் எல்லையின்றென்பதூஉம், ஏனையிருவகைச் சுரிதகவுறுப்பிற்குச் சீர்வரையறையும் எல்லைவரையறையுந் தத்தம் விதியானே வரப்பெறுமென்பதூஉம் பெறப்பட்டது.

"ஏனைய தரவடி யிழிபொரு மூன்று" —[இ.வி.பொ.சூ.375]

என்றாரேனுந் தரவுகொச்சகஞ் சிறுமை நான்கடியானேவரும்;

"எஞ்சிய, தொருநான் காகு மிழிபு" [டிடி சூ. 374]

என முற்கூறினமையின்.

இவற்றிற்கு இலக்கியம் மேற்காட்டிய கலிப்பாவினுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. (38)

376. வருக்கமு நெடிலு மினமும் வரினுந்
திறப்படு மெதுகையு மோனையு மாதலு
முயிரும் யரலழ வாசு மிடையிட்டு
மிரண்டடி மூன்று மெழுத்தோன்றி வரினு
மெதுகை யாதலு மிரணத் தொடைக்குங்
கடையே கடையிணை பின்கடைக் கூழை
யிடைப்புணர் பிசைதலு மிசையு மென்ப.

இஃது ஒருசார் தொடைகட்கு எய்தியதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) வருக்கவெழுத்தும் நெடிலெழுத்தும் இனவெழுத்தும் எதுகையும் மோனையுமாய் வந்தாலுங் கூறுபடவரும் வருக்கவெதுகையும் வருக்கமோனையும் நெடிலெதுகையும் நெடின்மோனையும் இனவெதுகையும் இனமோனையுமாதலும், உயிரும் யரலழ என்னும் ஒற்றுக்களிடையே ஆசிட்டும் இடையிட்டும் இரண்டடியும் மூன்றுமெழுத்துத் தம்முள் ஒன்றிவரினும் எதுகையாதலும், முரண்டொடைக்குங் கடைமுரணுங் கடையிணைமுரணும் பின்முரணுங் கடைக்கூழைமுரணும் இடைப்புணர்முரணும் பொருந்துதலும் பொருந்துமென்றுகூறுவர் ஆசிரியர். (எ - று.)

முரண்டொடையெனினும் இரணத்தொடையெனினும் ஒக்கும்.

வருக்க எதுகைக்குச் செய்யுள் :—

நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடும்வண் டஞ்சி யகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்த்தா ருள்ளார் படலொல்லா
பாடமை சேக்கையுட் கண். —[யா-கா. பக். 160]

எனவும், வருக்கமோனைக்குச் செய்யுள் :—

பகலே, பல்பூங்கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப்பிணி யவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நகைஇப்
பூந்தார் மார்ப புனத்துட் டோன்றப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை வெரீஇப்
பொங்குசினங் தணியாப் பூநுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாட்
பௌவத் தன்ன பாயிரு ணீந்தி
யிப்பொழுது வருகுவை யாயி
னற்றூர் மார்ப நீண்டலெங் கதுப்பே.—[யா-கா. பக். 161]

எனவும், நெடிலெதுகைக்குச் செய்யுள் :—

ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா—ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா—ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா—ரொருசாரார்
ஏகீர் நாய்கீ ரென்செய்து மென்றூ—ரொருசாரார்.
—[யா-கா. பக். 87]

எனவும், நெடின்மோனைக்குச் செய்யுள் :—

" ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"—[முதுமொழி. 1]

எனவும் வரும். இனவெதுகை மூன்றுவகைப்படும், வல்லினவெதுகையும் மெல்லினவெதுகையும் இடையினவெதுகையுமென.

அவற்றுள் வல்லின வெதுகைக்குச் செய்யுள் :—

" தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்" —[குறள். 114]

எனவும், மெல்லினவெதுகைக்குச் செய்யுள் :—

“அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு” —[குறள். 74]

எனவும், இடையினவெதுகைக்குச் செய்யுள் :—

“எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு” [குறள். 299]

எனவும் வரும். இனமோனையும் மூன்றுவகைப்படும் ; வல்லினமோனையும் மெல்லினமோனையும் இடையினமோனையுமென.

அவற்றுள், வல்லினமோனைக்குச் செய்யுள் :—

கயலே ருண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழிய ரைய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே.—[யா-கா.பக்.161]

எனவரும். மெல்லின மோனையும் இடையினமோனையும் வந்துழிக்கண்டு கொள்க. உயிரெதுகைக்குச் செய்யுள் :—

துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநா
ளணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம் வலன்வயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே. —[செடி 164]

எனவும், யகர ஆசிடையெதுகைக்குச் செய்யுள் :—

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்து
மேமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே.—[சீவக.31]

எனவும், ரகர ஆசிடையெதுகைக்குச் செய்யுள் :—

மாக்கொடி யானையு மௌவற் பந்தருங்
கார்க்கொடி முல்லையுங் கமழ்ந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பருங் கான ஞாழலுந்
தூக்கொடி கமழ்ந்துதாங் துறக்க மொத்தவே. —[சூளா. நாடு]

எனவும், லகர ஆசிடையெதுகைக்குச் செய்யுள் :—

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு. —[நாலடி. 118]

எனவும், ழகர ஆசிடையெதுகைக்குச் செய்யுள் :—

அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்தரமே போலு மனைவாழ்க்கை—யந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று. —[யா-கா. பக். 165]

எனவும் வரும்.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" —[முதுமொழி-1]

இது ரகரவொற்று ஆசிடையிட்ட வல்லினவெதுகை. பிறவும் வந்துழிக் காண்க.

இடையிட்டெதுகைக்குச் செய்யுள் :—

தோடா ரெல்வளை நெகிழ நாளு
நெய்த லுண்கண் பைதல கலுழ
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைக றோறும் பையயப் பெருகி
நீடா ரிவணென நீமனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலந் தோழி
வாடாப் பௌவ மறமுகந் தெழிலி
பருவம் பெய்யாது வலனேர்பு வளைஇ
யோடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே.—[யா-கா. பக். 165]

எனவரும்.

இரண்டடியெதுகைக்குச் செய்யுள் :—

துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளி
ரவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்த
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலி
னணங்கு மமிழ்தமு மங்கலார் பாடல். —[ௌ 166]

எனவரும். ஒன்றெனமுடித்தலான் இரண்டடிமோனையும் வரும். அதற்குச் செய்யுள் :—

ஆகங் கண்டக ராலற்ற வாடவ
ராகங் கண்டகத் தாலற்ற வன்பினர்
பாகங் கொண்டு பயோதரஞ் சேர்த்தினர்
பாகங் கொண்டு பயோதர *நல்கினர். —[யா-கா.பக். 166]

எனவரும்.

மூன்றாமெழுத்தொன்றெதுகைக்குச் செய்யுள் :—

" பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
றிகழரும் பின்றன புன்னை" —[ஷ்டி 167]

எனவரும். இங்ஙனம் ஒருசாருயிரெதுகை முதலாயின வருதல் உளவாயினும் பெரியதோர் சிறப்பிலவெனக் கொள்க.

'திறப்பட'வென்ற மிகையானே தலையாகெதுகை இடையாகெதுகை கடையாகெதுகை யென்றும், தலையாகுமோனை இடையாகுமோனை கடையாகு மோனை யென்றும் வேண்டலும் ஒன்று :

" சீர்முழு தொன்றிற் றலையா கெதுகை
யோரெழுத் தொன்றி னிடைகடை பிறவே"

என்பவாகலின். மோனைக்கும் இஃதொக்கும்.

தலையாகெதுகைக்குச் செய்யுள் :—

" சிலைவிலங்கு நீள்புருவஞ் * * * போழ்து" —[பக். 467]

எனவும், இடையாகெதுகைக்குச் செய்யுள் :—

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" —[குறள். 1]

எனவும், கடையாகெதுகைக்குச் செய்யுள் :—

" தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்" —[ஷ்டி 114]

எனவும், தலையாகுமோனைக்குச் செய்யுள் :—

" பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" —[குறள். 350]

எனவும், இடையாகுமோனைக்குச் செய்யுள் :—

மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ

பூா - ம் :—*நண்ணினர்.

மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே.—[யா-கா.பக்.40]

எனவும், கடையாகுமோனைக்குச் செய்யுள் :—

பகலே, பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
* * * தீண்டலெங் கதுப்பே. —[பக். 525]

எனவும் வரும்.

இன்னும் அதனானே விட்டிசைவல்லொற்றெதுகை யென்றும் விட்டிசை மோனையென்றுங் கோடலும் ஒன்று. விட்டிசைவல்லொற்றெதுகைக்குச் செய்யுள் :—

"*பற்றிப் பலகாலும் பான்மறி யுண்ணுமை
* * *
நொஅலைய நின்னாட்டை நீ" —[பக். 516]

எனவும், விட்டிசைமோனைக்குச் செய்யுள் :—

"அஅவனும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால்
எஎவனை வெல்லா ரிகல்" —[யா-கா. பக். 167]

எனவும் வரும். இவை வல்லொற்று அடுத்தாற்போல விட்டிசைத்துக் குற்றெழுத்தினோடு புணர்ந்தமையான் விட்டிசைவல்லொற்றெதுகையும் இரண்டடிக்கண்ணும் முதலெழுத்து விட்டிசைத்து வந்தமையால் விட்டிசை மோனையுமாயின. இவை இங்ஙனம் வரினுஞ் சிறப்பிலவெனக் கொள்க.

இன்னும் அதனானே, பாவினங்கள் எல்லாத்தொடையானும் வரப்பெறு மேனும் பெரும்பான்மையுந் தலையாகுமோனையிற் றீர்ந்துந் தலையாகெதுகையிற் றீர்ந்தும் வாராவென்பதூஉம், செந்தொடையொழிந்த எல்லாத்தொடைக்கும் இனவெழுத்து வரத் தொடுப்பதும் வழியெதுகை வரத் தொடுப்பதும் வழி முரண் வரத் தொடுப்பதுஞ் சிறப்புடைத்தென்பதூஉம், இனவெழுத்துப்பெற்று மோனை முதலாகிய தொடையுந் தொடைவிகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது மருட்செந்தொடையாமென்பதூஉங் கண்டுகொள்க.

இன எழுத்தாவன : அகர ஆகார ஐகார ஔகாரங்களும் இகர ஈகார எகர ஏகாரங்களும் உகர ஊகார ஒகர ஓகாரங்களும் ஞகர நகரங்களும் மகர வகரங்களுஞ் சகர தகரங்களுந் தம்முள் இனமாம். இவற்றை அனுவென்பாரும் உளர்.

அகரமொ டாகார மைகார மௌகா
ரிகரமொ டீகார மெஏ—உகரமொ
டூகார மொஓ ஞநமவ தச்சகர
மாகாத வல்ல வனு. —[யா-கா. பக். 168]

என்பவாகலின்.

---

*பாடபேதமுங் காண்க.

இனவெழுத்துப்பெற்ற மருட்செந்தொடைக்குச் செய்யுள் :—

"ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்" —[குறள். 228]

எனவும்,

"அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்" [ஷை 64]

எனவும் வரும். பிறவும் அன்ன.

வழியெதுகைக்குச் செய்யுள் :—

மண்டலம் பண்டுண்ட திண்டேர் வரகுணன் றெண்டியின்வாய்க்
கண்டலந் தண்டுறைக் கண்டதொன் றுண்டு கனமகர [கள்
குண்டலங் கெண்டை யிரண்டொடுந் தொண்டையுங் கொண்டோர் திங்
மண்டலம் வண்டலம் பக்கொண்ட றுழ வருகின்றதே.

—[யா-கா. பக். 169]

எனவும்,

கொங்குதங்கு கோதையோதி மாதரோடு கூடிநீடு மோடைநெற்றி
வெங்கண்யானை வேந்தர் போந்து வேதகீத நாதவென்று நின்றுதாழ
வங்கபுவ்வ மாதியாய வாதிநூலி னீதியோது மாதியாய
செங்கண்மாலை காலைமாலை சென்றுசேர்வர் சோதிசேர்ந்த சித்திதானே.

—[யா-வி. பக். 103]

எனவும் வரும். இதனை வடநூலார் அனுப்பிராசமென்ப.

வழிமுரணுக்குச் செய்யுள்:—

செய்யவாய்ப் பசும்பொ னோலைச் சீறடிப் பரவை யல்கு
லையநுண் மருங்கு னேவ வடிக்கொண்ட குவவுக் கொங்கை
வெய்யவாய்த் தண்ணெ னீலம் விரிந்தென விலங்கி நீண்ட
மையவா மழைக்கட் கூந்தன் மகளிரை வருக வென்றான்.

—[சூளா. 101]

எனவும்,

ஒருமால் வரைநின் றிருசுட ரோட்டிமுந் நீர்க்கிடந்த
பெருமா னிலமுஞ் சிறுவிலைத் தாவுண்டு பேதையர்கண்
பொருமா தவித்தொங்க லெங்கோன் புரவலன் பூம்பொதியிற்
கருமா நிறைவெண்பற் செவ்வாய்ப் பசும்பொற் கனங்குழைக்கே.

—[யா-கா. பக். 170]

எனவும், கடைமுரண்டொடைக்குச் செய்யுள் :—

கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே
தடமுலைத் திவளுந் தனிவடம் வெளிதே
நூலி னுண்ணிடை சிறிதே
யாடமைத் தோளிக் கல்குலோ பெரிதே.—[யா.கா.பக்.157]

எனவும் வரும். இஃது அடிதொறுங் கடைச்சீர்க்கண் மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடைமுரணாயிற்று. கடையிணை முரண்டொடைக்குச் செய்யுள்:—

மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினைக் குழூஉந்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
றேரோ காணலங் காண்டும்
பீரோர் வண்ணமெஞ் சிறுநுதற் பெரிதே.—[யா-கா.பக்.157]

எனவரும். இஃது அடிதொறுங் கடையிருசீரும் மறுதலைப்படத் தொடுத்தமை யாற் கடையிணைமுரணாயிற்று. பின் முரண்டொடைக்குச் செய்யுள் :—

சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமிய மிருந்தன மாக நின்றுதன்
*னயனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி
வீங்குதொடிப் பணைத்தோ ணெகிழத்
துறந்தோ னல்லனெம் மேனியோ தீதே. —[ஷை 158]

எனவரும். இது கடைச்சீரும் இரண்டாஞ்சீரும் மறுதலைப்படத் தொடுத்தமை யாற் பின்முரணாயிற்று. கடைக்கூழை முரண்டொடைக்குச் செய்யுள் :—

காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வெய்புரை தோளு மணங்குமா லெமக்கே. —[ஷை 158]

எனவரும். இது முதலடி நான்குசீரினும் முதற்சீரொழித்து ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடைக்கூழை முரணாயிற்று.

இடைப்புணர் முரண்டொடைக்குக் செய்யுள் :—

போதுவிரி குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த வோங்குவெள் ளருவி
காந்தளஞ் செங்குலைப் பைங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறா ரிழிதரு நலங்கவர்ந்
தின்னா வாயின வினியோர் நாட்டே. —[ஷை 158]

எனவரும். இஃதிடையிருசீர்க்கண்ணும் முரணத்தொடுத்தமையான் இடைப் புணர்முரணாயிற்று.

இரணத்தொடைக்குமென்ற உம்மையால் ஒழிந்ததொடைக்குங் கடை மோனை கடையிணைமோனை பின்மோனை கடைக்கூழைமோனை இடைப்புணர்

பா - ம் :—*நலனுடைப்.

மோனை எனவும், கடையியையு கடையிணையியையு பின்னியையு கடைக்கூழை யியையு இடைப்புணரியையு எனவும், கடையெதுகை கடையிணையெதுகை பின்னெதுகை கடைக்கூழையெதுகை இடைப்புணரெதுகை எனவும், கடையளபெடை கடையிணையளபெடை பின்னளபெடை கடைக்கூழையளபெடை இடைப்புணரளபெடை எனவும் இவ்வாறுகோடலும் ஒன்று. இவற்றிற்கு இலக்கியம் வந்துழிக்காண்க. (39)

377. வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமோடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்து
மொருதலைக் காம முற்றகைக் கிளையும்
வேம்புங் கடுவும் போல்வன வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் திடூஉம்
வாயுறை வாழ்த்தும் பொங்குத லின்றிப்
புரையோர் நாப்ப *ணவிலுதல் கடனெனச்
செவியறி வுறுத்துஞ் செவியறி வுறூஉவு
மாகிய பொருண்மையி னமைந்தநால் வகைமேல்
வெள்ளை முதலா வாசிரிய மிறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்.

இது மருட்பாவாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) நினக்குத் தொழுகுலமாகிய தெய்வம் நின்னைப் பாதுகாப்பக் குற்றந்தீர்ந்த செல்வத்தோடு புதல்வரைப் பயந்து, புதல்வரும் அப்பெற்றியராகி, எல்லீரும் நீடுவாழ்வீரென்று தெய்வத்தைப் புறநிறுத்தி வாழ்த்தும் புறநிலைவாழ்த்தும், ஒருதலைக்காமத்தைப் பொருந்திய கைக்கிளையும், முற்பருவத்துக் கைத்துந் துவர்த்தும் பிற்பருவத்து உறுதிபயக்கும் வேம்புங் கடுவும்போல வெய்யவாய சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்குமெனக் கருதிப் பாதுகாத்துக் கிளக்குங் கிளப்பினுன் மெய்யாக அறிவுறுத்தும் வாயுறைவாழ்த்தும், வியப்பின்றிப் பெரியோர்நடுவண் அடங்கிவாழ்தல் கடப்பாடெனச் சொல்லிச் செவிக்கு அறிவுறுத்துஞ் செவியறிவுறூஉவுமாகிய பொருட்டன்மையின் அமைதிபெற்ற நான்குகூற்றின்கண் வெண்பா முதலாக ஆசிரியம் இறுதியாகக் கொள்ளும்படி தொடுப்பது மருட்பாவாம். (எ - று.)

வெள்ளைமுதலாக ஆசிரியமிறுதியாகத் தொடுப்பவென்றது கொள்ளவென்றதனானே கைக்கிளைப்பொருண்மேல் இறுதிக்கண்வரும் ஆசிரிய அடி இரண்டாய்வந்து ஈற்றயலடி முச்சீரான் வருமென்றும், வெண்பா அடியும் ஆசிரிய அடியும் ஒத்துவருவதனைச் சமனிலைமருட்பாவென்றும் ஒவ்வாது வருவதனை வியனிலைமருட்பாவென்றும் வழங்கப்படுமெனக் கொள்க.

* பா - ம் :—*ணவிதல்.

இன்னுமதனானே புறநிலைவாழ்த்துஞ் செவியறிவுறூஉவும் வாயுறைவாழ்த்தும் இவ்வாறன்றி வெண்பாவேயாயும் ஆசிரியமேயாயும் வரப்பெறுமெனவுங் கலியும்வஞ்சியுமாய் வரப்பெறுதெனவுங் கைக்கிளையெல்லாப்பாவுமாய் வரப்பெறுமெனவுங் கொள்க. மருட்பாவென்னும் யாப்புறவில்லை.

புறநிலைவாழ்த்துமருட்பாவிற்குச் செய்யுள் :—

தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோவூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்புறங் காப்ப
வென்றுந்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே.—[யா-கா.பக்.131]

எனவும், கைக்கிளைமருட்பாவிற்குச் செய்யுள் :—

திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடு
மிருநிலஞ் சேவடியுந் தோயு—மரிபரந்த
*போகித ழுண்கணு மிமைக்கு
மாகு மற்றிவ ளகலிடத் தணங்கே.—[பு. வெ. கைக்கிளை.3]

எனவும், வாயுறைவாழ்த்துமருட்பாவிற்குச் செய்யுள் :—

பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னுண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
விலங்கு மெறிபடையும் †வீரமு மன்புங்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனே டிவ்வாறி னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
தனைத்தாத னீயிருங் காண்டிர்—நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறிநீ ரொழுகிற் சென்றுபயன் றருமே.—[யா-கா.பக்.132]

எனவரும். செவியறிவுறூஉமருட்பாவிற்குச் செய்யுள் :—

பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரொடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியந் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞ
ரடுகளம் வேட்டோன் மருக வடுதிற

பா - ம்:—*சேயித. †ஆற்றலும்.

லாழி நிமிர்தோட் பெருவழுதி யென்ஞான்று
மீர முடையையா யென்வாய்ச் சொற்கேட்டி
யுடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருகா லுழவர்க்கு வேளாண்மை செய்யன்
மழவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டங்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளிய
லமைத்த வரும்பொரு ளாறன்றி வௌவ
லினத்தைப் பெரும! பொருளாசை யாற்சென்று
மன்ற மறுக வகழாதி யென்று
மறப்புற மாக மதுரையா ரோம்பு
மறப்புற மாசைப்ப டேற்க வறத்தா
லவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவிபடைத்தாய்க்
கற்றார்க் கினனுகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
யற்ற மறிந்த மறிவினுய் மற்று
மிவையிவை வீயா தொழுகி னிலையாப்
பொருகட லாடை நிலமக
ளொருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.—[யா-வி.பக்.202]

எனவும் வரும். பிறவும் அன்ன (40)

378. ஒழுகிய லோசையி னொத்தடி யிரண்டாய்
விழுமிய பொருடரும் வெண்செந் துறையு
மந்தடி குறைநவுஞ் செந்துறைச் சிதைவுஞ்
சந்தழி குறளுமாந் தாழிசைக் குறளுங்
குறட்பா வினமாங் கூறுங் காலே.

இது குறள்வெண்பாவிற்கு இனமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஒழுகலோசையினையுடைய தம்மில் அளவொத்த இரண்டடியாகச் சீரிய பொருளையுடைத்தாய்வரும் வெண்செந்துறையும், இறுதியடி குறைந்து வருவனவும் ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளுமின்றி வரும் வெண்செந்துறையுஞ், செப்பலோசையிற் சிதைந்துவருங் குறள்வெண்பாவு மாகிய முக்கூற்றுக் குறட்டாழிசையும் மேற்கூறிய குறட்பாவிற்கு இனமாஞ் சொல்லுமிடத்து. (எ - று.)

● சீர்வரையறுத்திலாமையால் எனைத்துச்சீரானும் அடியாய்வரப்பெறும்.

வரலாறு :—வெண்செந்துறைக்குச் செய்யுள் :—

" ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"—[முதுமொழி.1]

எனவும், ஈற்றடிகுறைந்த குறட்டாழிசைக்குச் செய்யுள் :—

" நண்ணுவார்வினை நையநாடொறு நற்ற வர்க்கரை சாய ஞானநற்
கண்ணினு னடியே யடைவார்கள் கற்றவரே " —[யா-கா.பக்.84]

எனவும் வரும். இதற்கும் அதிகாரத்தான் இரண்டடியே கொள்க. செந்துறைச் சிதைவுக் குறட்டாழிசைக்குச் செய்யுள் :—

" அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வை யினீரே "—[யா.கா. பக். 85]

எனவும், சந்தழிக் குறட்டாழிசைக்குச் செய்யுள் :—

" வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி " —[டி 85]

எனவும் வரும். பிறவும் அன்ன. (41)

379. அடிமுதற் பொருளுற வருவது கூனஃ
திறுதியும் வஞ்சியு ளியலு மென்ப.

மேற்கூறப்பட்ட செய்யுட்கெல்லாம் இன்னுமொருவாற்றுனுவதோர் இலக்கணம் எய்துவிப்பான் புகுந்தவற்றுள் இஃது கூறுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அடிமுதற்கட் செய்யுட் பொருள்படத் தனியேவந்து நிற்பது கூனும்; அக்கூன் வஞ்சியுள் இறுதிக்கண்ணும் வந்து நிற்குமென்று கூறுவர் புலவர். (எ - று.)

கூன்போறலிற் கூனுயிற்று. எனவே, தனிநிற்றல்பெற்றும். இதனைத் தனிச்சொல்லென்பாரும் உளர்.

வரலாறு :—

உதுக்காண்,
சுரந்தானு வண்கைச் சுவணமாப் பூதன்
பரந்தானுப் பல்புகழைப் பாடி—யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளிதேர் மழை. —யா-கா. பக். 172]

என்னும் வெண்பாவினுள், 'உதுக்காணெ' னவும்,

அவரே,
கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையுட் படர்கூர்ந் திசினே

யன்ன ளளிய ளென்னுது மாமழை
யின்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே. —[குறுந். 214]

என்னும் ஆசிரியத்துள், 'அவரே' எனவும் 'யானே' எனவும்,

உலகினுட், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினு
மிருந்தகைய விருவரையி லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெனினும் பிறழ்வின்றி
யுறுதகைமை யுலகிற்கோ ரொப்பாகித் தோன்றுமே.
—[யா - கா. பக். 173]

என்னுங் கலியுள், 'உலகினுள்' எனவும்,

உலகே,
முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவு
முறுதிவழி யொழுகு மென்ப
அதனால், நற்றிற நாடுத னன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே.

என்னும் வஞ்சியுள், 'உலகே' எனவும் அடிமுதற்கண்ணும்,

"மாவழுங்கலின் மயக்குற்றன, வழி" —[புறம். 345]

என்னும் வஞ்சியடியுள், 'வழி' என இறுதிக்கண்ணும் வந்தவாறு காண்க.

இறுதியுமென்ற உம்மையால்

"கலங்கழாலிற், றுறை, கலக்குற்றன"

என்னும் வஞ்சியடியின் இடைக்கட், 'துறை' என வருதலுங்கொள்க. பொதுப் பட்க் கூறியவதனாற் சீரானும் அசையானு மன்றிச்,

"சிறுகுடியீரே சிறுகுடியீரே" —[கலி. 39]

என அடியானுங் கூன்வருதல் கொள்க. பிறவும் அன்ன. (42)

380. அசையுஞ் சீரு மடியு மெல்லா
மிசைய வருபொரு ளியைபு நோக்கா
தோசையே குறிக்கோண் டொடுங்கவும் விரியவு
மலகிடல் வகையுளி யாகு மென்ப.

இது வகையுளியாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அசையுஞ் சீரும் அடியுமாகிய எல்லாவற்றின்கண்ணும் பொருந்த வருகின்ற பொருளியைபைக் குறியாது ஓசையினையே குறித்துக் கூம்பவுங் கூம்பாது அலரவும் அலகிட்டு வண்ணம் அறுத்தல் வகையுளியா மென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.)

(உ - ம்) "கடியார்பூங் கோதை கடாயினுன் றிண்டேர்
சிறியார்தஞ் சிற்றில் சிதைத்து"—[யா-கா. பக். 179]

இதனுட், கடியாரென்றும் பூங்கோதை யென்றுங் கடாயினுனென்றும் இவ்வாறு அலகிட ஆசிரியத்தளையுங் கலித்தளையுந் தட்டுச் செப்பலோசை சிதைதலிற் கடியார்பூ வென்றுங் கோதையென்றும் அலகிட ஓசை சிதையாதாம்.

"மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" —[குறள். 3]

இதனுள் நிலமிசையென்றும் நீடுவாழென்றும் வாரென்றும் அலகிட மாறுபடாதாம்.

பாடுநர்க்கு மாடுநர்க்கும் பண்டுதாங் கண்டவர்க்கு
மூடுநர்க்குங் கூடுநர்க்குங் மொக்ததா
னீடுநீர் நல்வயலூர னறுஞ்சாந் தணியகலம்
புல்லலி னூட லினிது. —[யா-கா. பக். 180]

இதனுள், டுகர நகரம் பிரிந்திசைத்தனவாயினும் இரண்டடியும் நாலசைச்சீராய்ச் செப்பலோசை சிதைதலின் டுகர நகரங்களைக் கூட்டி நிரையசையாக அலகிடச் சிதையாதாம். இவ்வாறே பிறவும் அலகிட்டுக்கொள்க. (43)

381. வாழ்த்து மெய்வாழ்த் திருபுற வாழ்த்தெனப்
போற்றல் வேண்டும் வசையுமவ் வகைத்தே.

இது வாழ்த்தும் வசையுமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) வாழ்த்து மெய்வாழ்த்தும் இருபுறவாழ்த்துமென இருவகைத்தாகப் பாதுகாத்தறிதலை விரும்பும் ஆசிரியன்; வசையும் அவ்விருவகையினையுடைத்தாம். (எ - று.)

வரலாறு :—

கார்நறு நீலங் கடிகயத்துள் வைகலு
நீர்நிலை நின்ற பயன்கொல்லோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியார்
கொண்டிருக்கப் பெற்ற குணம். —[யா - கா. பக். 181]

என மெய்வாழ்த்தும்,

பண்டு மொருகாற்றன் பைந்தொடியைக் கோட்பட்டு
வெங்கடம் வில்லேற்றிக் கொண்டுழந்தான்—றென்களந்தைப்
பூமாண் டிருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ. —[௸ 181]

என இருபுறவாழ்த்தும்,

தந்தை யிலைச்சுமடன் ருய்தொழிலி தான்பார்ப்பா
னெந்தைக்கி தெங்ஙனம் பட்டதுகொல்—முந்தை

யவியுணவி னூர்தெரியி னவதாங் கொல்லோ
கவிகண்ண னூர்தம் பிறப்பு. —[யா - கா. பக். 181]

என மெய்வகையும்,

படையொடு போகாது நின்றெறிந்தா னென்றுங்
கொடையொடு நல்லார்கட் டாழ்ந்தான்—படையொடு
பாடி வழங்குந் தெருவெல்லாந் தான்சென்று
கோடி வழங்கு மகன். —[ஷை 181]

என இருபுறவகையும் வந்தவாறு காண்க. (44)

382. அம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபே புலனே யிழையெனப்
பொருந்திய வெட்டும் வனப்பவை யெட்டனு
ளம்மை தானே யடிநிமிர் பின்றிச்
சின்மென் மொழியாற் சீர்புனைந் தியாத்தலுஞ்
செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பி
னவ்வகை தானே யழகெனப் படுதலுந்
தொன்மை தானே சொல்லுங் காலை
யுரையொடு புணர்ந்த பழைமைமேற் றுகலு
மிழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா லடிநிமிர்ந் தொழுகினு
மன்னவை யிரண்டுந் தோலென வறைதலும்
விருந்து தானே பொருந்தக் கூறின்
புதுவது புனைந்தயாப் பின்மேற் றுகலு
ஞணநம னயரல வழள வென்னும்
புள்ளி யிறுதி யியைபெனப் புகறலுந்
தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனெனப் படுதலும் புலனன் குணர்ந்தோ
ரோற்றெடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி காறு
மோங்கிய சொல்லா லாங்ஙன மொழியி
னிழைபெனப் படுதலு மெய்து மென்ப.

இது வனப்பாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *அம்மை முதலாகப் பொருந்திய எட்டும் வனப்பாம்; அவ் வெட்டனுள் அம்மையாவது சிலவடியாகிச் சிலவாய மெல்லியவாய சொற்க*

ளால் ஒள்ளிய பொருண்மேல் இனிது தொடுக்கப்படுதலையுஞ், செய்யுட்கு உரிய சொற்களால் ஓசை இனியவாகத் தொடுப்பின் அவ்வகைப்பட்ட செய்யுள் அழகென்று சொல்லப்படுதலையும், தொன்மையாவது கூறுமிடத்துப் பழைமைத்தாகி நிகழ்ந்த பெற்றியுரைக்கப்படும் இராகவ சரிதம் பாண்டவ சரிதம் முதலியவற்றின் மேற்றாதலையும், இழுமென்னும் மெல்லியவாய சொற்களால் விழுமியவாய்க் கிடப்பனவும் எல்லாச் சொற்களோடும் பலவடியுடையவாய்க் கிடப்பனவுமென்று இத்தன்மையவாகிய இருதிறத்தினையுந் தோலென்று சொல்லுதலையும், விருந்தாவது பொருந்தக் கூறுமிடத்து இப்பொழுது உள்ளாரைப் பாடுவனவற்றின் மேற்றாதலையும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்த செய்யுட்களை இயைபென்று சொல்லுதலையும், வழக்குச் சொல்லினானே பொருள் தோன்றத் தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவதனைப் புலனென்று சொல்லப்படுதலையும், இலக்கணங்களை அறிந்தோர் ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து யாதுந் தீண்டாது செய்யுளியலுடையார் எழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையானே உடையவாய் ஓங்கிய சொற்களால் அவ்வாறு மொழியின் இழைபென்று சொல்லப்படுதலையும் பொருந்துமென்று கூறுவர் புலவர். (எ - று.)

வரலாறு :—

“ அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை ” —[குறள். 315]

என அம்மையும்,

துணியிரும் *பரப்பகங் குறைய வாங்கி
யணிகிளர் ரடுக்கன் முற்றிய வெழிலி
காவொடு மயங்கிய கனையிரு ணடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்பென விழிதருங்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே.—[யா-கா. பக். 182]

என அழகும்,

“ செறிதொடி யுவகை கேளாய் செஞ்சுடர்த் தெறுகதிர்ச் செல்வன் ”

என்பதூஉம் இராமாயணம் பாரதம் போல்வனவுமாகிய தொன்மையும்,

பாயிருள் பரப்பகங் குறையப் பாம்பி
னுயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துணிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கு

பா - ம் :—*பௌவம்.

மொளியோன் காஞ்சி யெளிதெனக் கூறி
னிம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லை தீமையில்லை
செய்வோ ரில்லைசெய் பொருளில்லை
யறிவோர் யாரஃ திறுவுழி யிறுகென.—[யா-கா. பக். 183]

என இழுமெனமொழியால் விழுமியது நுவன்ற தோலும், (இதுமார்க்கண்டேயனார்காஞ்சி.)

திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே. —[மலைபடு 1-3]

எனப் பரந்தமொழியால் அடிநிமிர்ந்தொழுகிய தோலும், (இது கூத்தராற்றுப் படை,)

பார்க்கடன் முகந்த பருவக் கொண்மூ
வார்ச்செறி முரசின் முழங்கி யொன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவ டிருமுகங் காணக் கடுந்தே
ரின்றுபுகக் கடவுமதி பாக வுதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
விரும்பிடி யுழைய தாகப்
பெருங்காடு மடுத்த காமர் களிறே. —[யா-கா. பக். 184]

எனப் புலனும்,

பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து
வண்டு சூழ விண்டு வீங்கி
நீர்வாய்க் கொண்டு நீண்ட நீல
மூர்வா யூதை வீச வூர்வாய்
மணியேர் நுண்டோ டொல்கி மாலை
நன்மணங் கமழும் பன்னெல் லூர
வமையேர் மென்றோ ளம்பரி நெடுங்க
ணிணையீ ரோதி யேந்திள வனமுலை
யிறும்பமன் மலரிடை யெழுந்த மாவி
னறுந்தழை துயல்வரூஉஞ் செறிந்தேந் தல்கு
லணிநடை யசைஇய வரியமைச் சிலம்பின்
மணிமருள் வணர்குழல் வளரிளம் பிறைநுத

லொளிநிலவு வயங்கிழை யுருவுடை மகளிரொடு
நளிமுழவு முழங்கிய வணிநிலவு நெடுநக
ரிருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடை
கலனளவு கலனளவு நலனளவு நலனளவு
பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ
தொருநீ மறைப்பி னொழிகுவ தன்றே. —[யா-கா.பக்.187]

என இழைபும் வந்தவாறு காண்க. ஈண்டுக் காட்டாதொழிந்தனவும் வந்துழிக் காண்க.

செய்யுளியலுடையார் எழுத்தெண்ணி அடிவகுத்தவாறென்னையெனின், நாற்சீரடிதன்னையே நான்கெழுத்து முதலாக ஆறெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுங் குறளடியென்றும், ஏழெழுத்துமுதலாக ஒன்பதெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுஞ் சிந்தடியென்றும், பத்தெழுத்து முதலாகப் பதினன் கெழுத்தின்காறும் உயர்ந்த ஐந்தடியும் அளவடியென்றும், பதினைந்தெழுத்து முதலாகப் பதினேழெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடியென்றும், பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுங் கழிநெடிலடியென்றும், இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடிப்பாவில்லையென்றுங் கூறியவாறுமென்க. எண்ணுமாறு,

குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமோ
டொற்று மெனவொரு நான்ககற்றிக்—கற்றோ
ருயிரு முயிர்மெய்யு மோதினார் கொள்ளச்
செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு. —[யா-வி. பக். 132]

இதனுணர்க. (45)

383. எழுத்த லிசையென வசைசீ ராக
நிறைக்கப் படுதல் குறிப்பிசை யென்ப

இது குறிப்பிசையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) எழுத்தோசையல்லாத முற்கு வீளை இலதை அனுகரணம் முதலியன செய்யுளகத்துவந்தால் அவற்றையும் அசையுஞ் சீருமாக அலகிட்டுத் தளையும் அடியுந் தொடையும் பிழையாமற்கொண்டு நிரப்புதலைக் குறிப்பிசையென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.)

மன்றலங் கொன்றை மலர்வேய்ந்து தூஉங்குவஃ
கென்று திரியு மிடைமகனே—சென்று
மறியாட்டை யுண்ணுமல் வண்கையால் வல்லே
யறியாயோ வண்ணுக்கு மாறு. —[யா-வி. பக். 375]

எனவரும். ஒழிந்தனவும் இடைக்காடனார் பாடிய ஆசிரியமறியுட் கண்டுகொள்க. (46)

384. ஒப்பேனப் படுவ தோதிய செய்யுளுட்
டப்பினு மொருபுடை சார்த்திமற் றவற்றையுஞ்
செப்பிய பாவொடு சேர்த்தனர் கொளலே.

இஃது ஒப்பாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *ஒப்பென்று சொல்லப்படுவது மேற் சீருந்தளையும் முதலியன வரையறுக்கப்பட்ட செய்யுளுட்சில சொன்ன பெற்றியிற் றிரிந்து மிக்குங் குறைந்தும் வந்தாலும் ஒருபுடையொப்புமை நோக்கிச் சார்த்தி அங்ஙனந் தவறிய செய்யுட்களையும் இலக்கணநெறியால் முன்னோதிய செய்யுட்களின் பாற் படுத்திக்கொள்க.* (எ - று.)

உதாரணம் :—

*கோழியுங் கூவின குக்கில் *குரலியம்புந்*
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ
வாழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்
கூழை நனையக் குடைந்துங் குளிர்புன
லூழியு மன்னவா மென்றேலோ ரெம்பாவாய்.

—[*யா-கா. பக்.* 194]

நாற்சீர்நாலடியான் வருவது கலிவிருத்தமென்று வரையறுத்துக் கூறினார். இஃது ஐந்தடியான் வந்ததாயினும் ஒருபுடையொப்புமைநோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்துக. இதனைத் தரவுகொச்சகமெனினும் இழுக்காது. பிறவும் புராணகவிஞராற் பாடப்பட்ட இலக்கியங்கள் மிக்குங் குறைந்தும் வரினும் இவ்விலக்கணத்தால் ஒன்றன்பாற்படுத்தி வழங்கப்படுதல்கொள்க. (47)

385. வண்ணந் தானே நாலைந் தவைதாம்
பாஅ வண்ணந் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ண மெல்லிசை வண்ண
மியைபு வண்ண மளபெடை வண்ண
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணஞ்
சித்திர வண்ண நலிபு வண்ண
மகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ண
மொழுகு வண்ண மொரூஉ வண்ண
மெண்ணு வண்ண மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றாங்கென மொழிப வறிந்திசி னோரே.

இது வண்ணம் இத்துணையவென்பதும் அவற்றின் பெயருமாமாறு கூறுகின்றது.

பா - ம்:—**குரல்காட்டும்.*

(இ - ள்.) வண்ணம் இருபதாம் அவைதாம் பாஅவண்ணம் முதலாக முடுகுவண்ணம் ஈறாகக் கிடந்தன வென்று கூறுவர் புலவர். (எ - று.)

அவற்றுட் பாஅவண்ணஞ் சொற்சீரடியாகி நூலின்கட் பயின்றுவரும்,

"அவற்றுட், பாஅ வண்ணஞ்
சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்"
—[தொல். பொருள். சூ. 526]

என்பவாகலின். வரலாறு :—

"அஇஉஅம் மூன்றுஞ் சுட்டு" —[தொல். எழுத். சூ. 31]
"கொல்லே யையம்" —[,, சொல். சூ. 268]
"எல்லே யியக்கம்" —[ஷ சூ. 269]

எனவரும்.

தாஅவண்ணம் இடையிட்டெதுகையான்வரும்,

"தாஅவண்ண, மிடையிட்டு வந்த வெதுகைத் தென்ப"
—[தொல். பொருள். சூ. 527]

என்பனவாகலின். வரலாறு:—

"தோடாரெல்வளை" —[பக். 527]

எனவரும்.

வல்லிசைவண்ணம் வல்லெழுத்துமிக்கு வருவது,

"வல்லிசை வண்ணம் வல்லெழுத்துப் பயிலும்" —[தொ.பொ.சூ.528]

என்பவாகலின். வரலாறு :—

*பட்டொட்டி யன்ன தொடர்முடப் புன்னைக்கீழ்க்
கட்டொட்டுக் கண்ணி தொடுப்பவர் தாழம்பூத்
தொட்டிட்டுக் கொள்ளுந் துறைச்சேர்ப்ப நின்னொடு
விட்டொட்டி யுள்ளம் விடாஅது நினையுமேல்
ஒட்டொட்டி நீங்காதோ வொட்டு.

எனவரும்.

மெல்லிசைவண்ணம் மெல்லெழுத்துமிக்கு வருவது,

"மெல்லிசைவண்ண மெல்லெழுத்து மிகுமே"
—[தொல். பொருள். சூ. 529]

என்பவாகலின். வரலாறு :—

"பொன்னி னன்ன புன்னை நுண் டாது
மணியி னன்ன நெய்தலங் கானல்" —[யா-வி. பக். 382]

என வரும்.

இயைபுவண்ணம் இடையெழுத்து மிக்குவருவது,

"இயைபு வண்ண மிடையெழுத்து மிகுமே"—[தொல்.பொ.சூ.530]

என்பவாகலின், வரலாறு :—

பா - ம் ;—*வட்டொட்டி யன்ன வனமுடிப் புன்னைக்கீழ்.

" வால்வெள் ளருவி வரைமிசை யிழியவும்
கோல்வல் லுழுவை விடரிடை யியம்பவும்" —[யா-வி. பக். 383]

எனவரும்.

அளபெடைவண்ணம் அளபெடைபயின்றுவருவது,

" அளபெடைவண்ணம் அளபெடை பயிலும் " –[தொல்.பொ.சூ.531]

என்பவாகலின். வரலாறு :—

" தாஅட் டாமரை மலருழக்கி "

எனவரும்.

நெடுஞ்சீர்வண்ணம் நெட்டெழுத்துப் பயின்றுவருவது,

"நெடுஞ்சீர் வண்ணம்நெட்டெழுத்துப்பயிலும்"—[தொ.பொ.சூ.532]

என்பவாகலின், வரலாறு :—

" நீரூர் பாணு யாறே காடே
நீலூர் காயா மம்பூவீ யாதே " —[யா-வி. பக். 383]

எனவரும்.

குறுஞ்சீர்வண்ணங் குற்றெழுத்துப் பயின்றுவருவது,

"குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும்"—[தொ.பொ.சூ.533]

என்பவாகலின். வரலாறு :—

" உறுபுய லெழிலி தொகுபெயல் பொழியச்
சிறுகொடி யவரை பொதிதளை யவிழ —[யா-வி. பக். 534]

எனவரும்.

சித்திரவண்ணம் நெட்டெழுத்துங் குற்றெழுத்துமாய் வரும்.

" சித்திரவண்ண, நெடியவுங்குறியவு நேர்ந்துடன் வருமே"
—[தொல். பொருள். சூ. 534]

என்பவாகலின். வரலாறு :—

" ஓரூர் வாழினுஞ் சேரி வாரார்
சேரி வரினு மாரமுயங் கார் " —[குறுந். 231]

எனவரும்.

நலிபுவண்ணம் ஆய்தம் பயின்றுவரும்,

" நலிபு வண்ண மாய்தம் பயிலும் " —[தொல். பொருள். சூ.535]

என்பவாகலின். வரலாறு :—

அஃகாமை செல்வத்துக் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள் " —[குறள். 178]

எனவரும்.

அகப்பாட்டுவண்ணம் முடியாத்தன்மையான் முடித்தன் மேலதாம்,

" அகப்பாட்டுவண்ண, முடியாத் தன்மையான் முடித்தன் மேற்றே "
—[தொல். பொருள். சூ. 536]

என்பவாகலின். வரலாறு :—

பன்மீ னுணங்கற் படுபுள் ளோப்பியும்
புன்னை நுண் டாது நம்மொடு தொகுத்தும்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியு
*   *   *   *
மணந்ததற் கொவ்வான் றணந்துபுற மாறி
யினைய னாகி யிங்குனைத் துறந்தோன்
பொய்த லாயத்துப் பொலந்தொடி மகளிரொடு
கோடுயர் வெண்மண லேறி
யோடுகல மெண்ணுந் துறைவன் றோழி. —[யா-வி. பக். 385]

எனவரும். புறப்பாட்டுவண்ணம் முடிந்ததுபோன்று முடியாதாகிவரும்,

" புறப்பாட்டு வண்ண,
முடிந்தது போன்று முடியதாகும் " —[தொ.பொ.சூ.537]

என்பவாகலின். வரலாறு :—

*நிலவுமண லகன்றுறை வலவ னேவலி
னெரிமணிப் புள்ளின மொய்ப்ப நெருநலும்
வந்தன்று கொண்கன் றேரே யின்றும்
வருகுவ தாயி னேற்றுபு துதைந்த
புன்னைத் தாதுகு தண்பொழி லகத்து
மெல்ல மேவர மென்முலை நெருங்கப்
புல்லி னெவனோ மெல்லிய னீயே
நல்காது விடுகுவை யாயின் வைகலும்
படர்மலி யுள்ளமொடு மடன்மா வேறி
யுறுதுய ருலகுட னறியச்
சிறுகுடிப் பாக்கத்துப் பெரும்பழி தருமே.—[யா-வி.பக்.385]

எனவரும். ஒழுகுவண்ணம் ஓசையான் ஒழுகிநடக்கும்.

" ஒழுகு வண்ண மோசையி னொழுகும்."—[தொ. பொ. சூ. 538]

என்பவாகலின். வரலாறு :—

அம்ம வாழி தோழி காதலர்க்
கின்னே பனிக்கு மின்னா வாடையொடு
புன்கண் மாலையு மின்று நலிய
வுய்யல ளிவளென வுணரச் சொல்லிச்
செல்லுநர்ப் பெறினே சேய வல்ல
வின்னளி யிறந்த மன்னவர்
பொன்னணி நெடுந்தேர் பூண்ட மாவே.—[யா-வி. பக். 386]

ஒரூஉவண்ணம் நீங்கின தொடையாகி ஒழுகிநடக்கும்,

---

*இச்செய்யுளின் பாடபேதத்தை யாப்பருங்கல விருத்தியுட் காண்க.

" ஒரூஉ வண்ண மொரீஇத் தொடுக்கும்" —[தொ. பொ. சூ. 539]

எனபனவாகலின், அது செந்தொடை. வரலாறு :—

தொடிநெகிழ்ந் தனவே கண்சேந் தனவே
யான்சென் றுரைப்பின் மாண்பின் றெவனோ
சொல்லாய் வாழி தோழி வரைய
முள்ளாற் பொதுளிய விலங்கு குலைநெடுவெதிர்
பொங்குவர வினமழை துவைப்ப
மணிநிலா விரியுங் குன்றுகிழ வோற்கே. —[யா-வி.பக்.386]

எனவரும். எண்ணுவண்ணம் எண்ணுப் பயின்றுவரும்,

" எண்ணு வண்ண மெண்ணுப் பயிலும்"—[தொ. பொ. சூ. 540]

என்பவாகலின், வரலாறு :—

நிலநீர் வளிவிசும் பென்ற நான்கி
னளப் பரியையே
நாள்கோ டிங்கள் ஞாயிறு கனையழ
லைந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை
* * * வாலிய ரோவிவ் வுலகமோ டுடனே. —[பதிற். 14]

எனவரும். அகைப்பு வண்ணம் அறுத்தறுத்துப் பயிலும்,

" அகைப்பு வண்ண மறுத்தத் தொழுகும்"—[தொ.பொ.சூ.541]

என்பனவாகலின், வரலாறு :—

" தொடுத்த வேம்பின் மிசைத் துதைந்த போந்தையிடை
வசைந்த வாரம்" —[யா-வி. பக். 387]

எனவரும். தூங்கல்வண்ணம் வஞ்சியுரிச்சீர்பயின்றுவரும்,

" தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்" —[தொ.பொ.சூ.542]

என்பவாகலின், வரலாறு :—

" வசையில் புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினும்" —[பட்டின. 1-2]

எனவரும். ஏந்தல்வண்ணம் சொல்லிய சொல்லினானே சொல்லப்பட்டது சிறக்கவரும்,

" ஏந்தல் வண்ணஞ், சொல்லிய சொல்லிற்
சொல்லியது சிறக்கும்" —[தொல். பொருள். சூ. 543]

என்பனவாகலின். வரலாறு :—

கூடுவார் கூடல்கள் கூட லெனப்படா
கூடலுட் கூடலே கூடலுங்—கூட
லரும்பிய முல்லை யரும்பவிழ் மாலைப்
பிரிவிற் பிரிவே பிரிவு. —[யா-வி. பக். 388]

எனவரும்.

உருட்டுவண்ணம் அராகந்தொடுக்கும்,

"உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்"—[தொல்.பொ.சூ.544]

என்பவாகலின், வரலாறு :—

"தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலென விரிவன பொழில்"
—[யா-வி. பக். 388]

எனவரும். முடுகுவண்ணம் நாற்சீரடியின்மிக்கு ஓரடி அராகத்தோடொக்கும்,

"முடுகு வண்ண,
முடிவறியாம லடியிறந் தொழுகி யதனோ ரற்றே"—[தொ.பொ.சூ.545]

என்பவாகலின், வரலாறு :—

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை" —[கலி. 39]

எனவரும். இவ்வாறன்றி இன்னும் ஒருவாற்றான் குறில் நெடில் வல்லினம் மெல்லினம் இடையினம் எனநிறுத்தி அகவல் ஒழுகிசை வல்லிசை மெல்லிசை என்பனவற்றோடு உறழ இருபதாம். அவற்றைத் தூங்கிசை ஏந்திசை அடுக்கிசை பிரிந்திசை மயங்கிசை என்பனவற்றோடு உறழ நூறாம். அவற்றைக் குறிலகவற்றூங்கிசை வண்ணம் நெடிலகவற்றூங்கிசை வண்ணமென வண்ணம் நூறென்பாரும் உளர். அவ்வேறுபாடும் உணர்க. (48)

386. உரைக்கப் படும்பொருட் கோத்தவை யெல்லாம்
புகழ்ச்சியின் மிக்க புனைந்துரை யவைதாம்
பெரிதினைச் சுருக்கலுஞ் சிறிதினைப் பெருக்கலு
மெனவிரண் டாகு மென்மனார் புலவர்.

இது புனைந்துரையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) புலவனாற்கூறப்படும் பொருட்குப் பொருந்திய புனைந்துரையெல்லாம் புகழ்ச்சியான்மிக்க புனைந்துரையாம். அப்புனைந்துரைதான் பெரிதொன்றனைச் சுருக்கிச்சொல்லுதலுஞ் சிறிதொன்றனைப் பெருக்கிச் சொல்லுதலுமென இரண்டுவகைப்படுமென்று கூறுவர் அறிவுடையோர். (எ - று.)

வரலாறு :—

அடையார்பூங் கோதையாட் கல்குலுந் தோன்றும்
புடையார் வனமுலையுந் தோன்று—மிடையாதுங்
கண்டுகொள்ளா தாயினுங் காரிகை நீர்மையாட்
குண்டாகல் வேண்டு நுசுப்பு. —[யா-வி. பக். 407]

இது பெரியதனைச் சுருக்கிச் சொல்லியது.

அவாப்போ லகன்றதன் னல்குன்மேற் சான்றோ
ருசாப்போல வுண்டே மருங்கு—லுசாவினைப்
பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக்கொம் பன்னாள் குயம். —[தொ.பொ.இளம்.பக். 344]

இது சிறியதனைப் பெருக்கிச் சொல்லியது. பிறவும் அன்ன. (49)

387. நிறுவிய போருளுக் கிறுதியைத் தருவ
தறிய வேண்டா வானந்த மதுதா
னியற்பெயர் சார்த்தி யெழுத்தள பெழினே
யியற்பா டில்லா வெழுத்தா னந்தமு
மப்பெயர் மருங்கின் மங்கல மல்லாத்
தொழிற்சொற் புணர்ப்பிற் சொல்லா னந்தமு
மெனவிரண் டாகு மிவைபுண ராமல்
நினைவதை யாப்பென நிகழ்த்துவர் புலவர்.

இஃது ஆனந்தமென்பதூஉம் அதன் பகுதியுங் கூறுகின்றது.

(இ - ள்.) *நிலைபெற்ற பொருளுக்கழிவினைப் பயப்பது ஆராயத்தகாத ஆனந்தமாம்; அவ்வானந்தந்தான் இயற்பெயர்ப்பால் அளபெடைகூறின் பொருத்தமில்லாத எழுத்தானந்தமும், அவ்வியற்பெயர்ப்பால் மங்கலம் ஒழிந்த தொழிற்சொல்லைச் செப்பிற் சொல்லானந்தமுமென இரண்டுவகைப்படும்; இவ்விருவகையானந்தமும் படாமல் நினைந்து சொல்லுஞ் செய்யுளைச் செய்யுளென்று சொல்லுவர் அறிவுடையோர்.* (எ - று.)

(உ - ம்) *ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாந்*
தோழி துணையாத் துயர்தீர்வன்—றோழி
நறுமாலை தாவு திரையவோஒ வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போழ்து. —[யா-வி. பக். 518]

இதனுட் திரையவோஒ என்புழி இயற்பெயர் சார்த்தி அளபெடுத்தமையால் அஃது எழுத்தானந்தமாம்.

என்னிற் பொலிந்த திவண்முக மென்றெண்ணித்
தன்னிற் குறைபடுவான் றண்மதிய—மின்னி
விரிந்திலங்கும் வெண்குடைக்கீழ்ச் செங்கோல் விசய
னெரிந்திலங்கும் வேலி னெழும். —[யா-வி. பக். 519]

இதனுள் விசயனென்னும் பாட்டுடைத் தலைவன்பால் எரிந்தென்னுஞ் சொற்புணர்ந்தமையால் இது சொல்லானந்தமாம். இவ்விருவகையானந்தமு மன்றிப் பிறவாறு உளவேனுங் காண்க. (50)

388. ஓரடி யானும் பலவடி யானு
மோரோவழி யியலு முரைத்தவச் செய்யுள்
அவைதாம், பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொ லங்கதம் வாழ்த்தொடு பிறவு
மாகு மென்ப வறிந்திசி னோரே.

இஃது அடியின்றியும் ஓரடியானும் நடைபெறுஞ் செய்யுட்களும் உள வென்பதூஉம் அவை இவையென்பதூஉங் கூறுகின்றது.

இதற்குப் பொருளுரைத்திலம், சூத்திரத்தானே பொருள் விளங்கலின்.

பிசி-பொய். அங்கதம் - வசை. இவற்றுக்கு உதாரணம் வந்துழிக் காண்க.

நான்காவது

செய்யுளியல் முற்றிற்று

ஐந்தாவது பாட்டியல்

389. எஞ்சிய விலக்கண மெல்லாஞ் சொல்லின்
மாத்திரை முதலா யாத்தினி தமைத்த
பாட்டி னியலு நூலி னியலு
முரையி னியலும் பிசியி னியலு
முதுசொல் லியலு மந்திர வியலுங்
குறிப்புரை யியலொடு திறப்படு மரபும்
வருணத் தியலும் புலவ ரியலு
மவையி னியலு மகலக் கவியைக்
கொடுப்போ ரியலுங் கொள்வோ ரியலோ
டடுத்த வீரேழும் பிறவுமா மென்ப.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே அகத்திணையிலக்கணமும் புறத்திணையிலக்கணமும் அணியிலக்கணமுஞ் செய்யுளிலக்கணமும் உணர்த்தி அந்நான்கிற்கும் பொதுவாய் எஞ்சிநின்ற அகலக்கவி யிலக்கணமும் அளவியற்படாத ஏனை அறுவகைச் செய்யுளிலக்கணமும் உணர்த்தினமையான் இவ்வோத்துப் பாட்டியலென்னும் பெயர்த்து. இதனுன் மேலோத்திஞேடு இயைபுடைமையும் விளங்கும். அற்றேல் மரபிலக்கணமும் வருணத்திலக்கணமும் புலவரிலக்கணமும் அவையிலக்கணமும் அதனைப் பாடுவோரிலக்கணமும் அதனைக் கொள்வோரிலக்கணமும் பிறவும் உணர்த்துமாறென்னை யெனின், அது பாட்டின்கண்ணவாகிய இலக்கணம் உணர்த்தித் தன்ஞேடியை பின்மை நீக்கித் தலைமைபற்றிய பெயராம், 'வெண்குடைப் பெருவிறல்வழுதி' போலவென்க. அற்றேல் இவ்வியலோடு செய்யுளியற்கு வேற்றுமையென்னை யெனின், அது செய்தல் செய்யுளெனநின்று செய்யுட்செய்தலிலக்கணமாயிற்று, "பாய்தல் பாய்த்துள், விக்கல் விக்குள்" என்முற்போல என்க. இதனுள் இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றேவெனின், எஞ்சிய இலக்கணங்களிவையென அவையின் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ - ள்.) *இவ்வதிகாரத்துள்ளும், முன்னின்ற இரண்டதிகாரத்துள்ளுங் கூருதொழிந்த இலக்கணங்களெல்லாவற்றையுஞ் சொல்லுமிடத்து மாத்திரை யென்னும் உறுப்பு ஆதியாக யாப்புறுத்த பாட்டின்கண்ணவாகிய இலக்கணமும் நூலின்கண்ணவாகிய இலக்கணமும் உரையின்கண்ணவாகிய இலக்கண*

மும் பிசியின்கண்ணவாகிய இலக்கணமும் புதுசொற்கண்ணவாகிய இலக்கணமும் மந்திரவாய்மைக்கண்ணவாகிய இலக்கணமுங் குறிப்புமொழிக்கண்ணவாகிய இலக்கணத்துடனே வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் நடக்கும் இருவகை மரபின் இலக்கணமும் நான்கு வருணத்தவர் இலக்கணமும் நாற்புலவர் இலக்கணமும் அவையிலக்கணமும் அகலக்கவியைச்செய்து கொடுப்போர் இலக்கணமும் அதனைக்கொள்வோர் இலக்கணமுமாகிய பதினொன்கனோடும் ஏற்பனபிறவுமாமென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.)

பாட்டு முற்கூறப்பட்டது ஆசிரிய அடியான் இற்ற சூத்திரஞ் செய்யுளாதலானும் குறிப்புமொழி பாட்டின்கண்ணவாகலானும், மேலோத்தினோடு இயைபுடைமையானுமென்க. 'மாத்திரைமுதலா யாத்தினி தமைத்த பாட்டு' என்றதனாற் போந்தது அளவியற் செய்யுள் எல்லாவுறுப்பும் பெறுமென்றும் ஏனைச்செய்யுள் அவ்வாறு பெறுது குறையப்பெறுமென்றுங் கூறியவாறும். 'குறிப்புரை யியலொடு' என ஒடுக்கொடுத்தது பாட்டு முதலிய ஏழும் படலத் தொழிபெனவும், ஏனைய பிண்டத்தொழிபெனவும் அறிதற்கெனக்கொள்க. 'மாத்திரை முதலா யாத்தினி தமைத்த பாட்டு' என்றது அனுவாதம். முதலாக வென்பது முதலாவெனச் செய்யுண்முடிபெய்தி நின்றது. ஆசிரியரென வெளிப்படாத எழுவாய் சொல்லெச்சமாக இயைந்தது.

பிற இலக்கணங்களாவன :—நான்குபாவிற்கும் வருணவுரிமையும் நிலவுரிமையும் நிறவுரிமையும் நாளுரிமையும் இராசியுரிமையுங் கோளுரிமையும் அக்கோள்கட்குஉரிய பூவுஞ் சாந்துங் கலையும் மணியும் அகலக்கவியைக்கொள்ளும் ஓரையுமென்றவாறு. (க)

390. அவற்றுட்,

பாட்டெனப் படுவது பைந்தமிழ் நாட்டகத்
தியாப்புறச் செய்பா வுறுப்பெழுந் திசைக்கும்.

இது நிறுத்தமுறையானே முதற்கண் நின்ற பாட்டு இவ்வியல்பிற்றென்கின்றது.

(இ - ள்.) முற்கூறிய எழுவகைச்செய்யுளுட் பாட்டென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது மூவேந்தரது குளிர்ந்த தமிழ்நாட்டெல்லைக்கண் தொன்றுதொட்டு வழங்கும் யாப்புறச்செய் பாவென்னும் உறுப்பான் மிக்கொலிக்கும். (எ - று.)

எனவே, ஏனையறுவகைச் செய்யுளும் அடிவரையின்றிப் பாவுறுப்பாக இசைக்கப்படா என்பதூஉம் பெற்றும். பெறவே, பாவென்பது பாவின் வேறாய்நின்று உறுப்பாமாறென்னையெனின், அது சேட்புலத்தொருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடம் ஓதுங்கால் அவன் பாடுகின்ற செய்யுளை விகற்பித்து இன்னதென்று உணர்த்தற்கேதுவாகிப் பரந்துபட்டுச்

செல்வதோர் ஓசையே பாவெனநின்று பாவென்பதற்கு உறுப்பான்வந்த பெயராயிற்று. பாட்டென்பது, 'ஆடல் ஆட்டு' என்றாற்போலப் பாடல் பாட்டெனநின்று ஆகுபெயரான் அத்தொழிலுறுகின்ற ஓசைமேல் நின்று அது பாட்டாயிற்று. அன்றிப் பாவினையுடையது பாட்டெனக் குறிப்புவினைமுற்றென்பதூஉமாம். (உ)

391. ஆசு மதுரஞ் சித்திர மகலமென்
றோசை யெழும்பாட் டொருநால் வகைத்தே.

இஃது அப்பாட்டின் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ - ள்.) பாவுறுப்பு மேற்கொண்டொலிக்கும் பாட்டு ஆசுகவியென்றும் மதுரகவியென்றுஞ் சித்திரகவியென்றும் வித்தாரகவியென்றும் நான்கு கூற்றினையுடைத்து. (எ - று.) (ங)

392. எழுத்துச் சொற்பொரு ளணியாப் பிவையின்
விழுத்தக வொருவன் விளம்பிய வுள்ளுறை
யப்பொழு துரைப்ப தாசு கவியே.

இது நிறுத்தமுறையானே ஆசுகவியிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) ஒரு புலவன் இவ்வெழுத்தானுதல் இச்சொல்லானுதல் இப்பொருளானுதல் இவ்வணியானுதல் இப்பாட்டானுதல் இவ்வெழுத்தாதி இவ்வெழுத்தந்தம் இச்சொல்லாதி இச்சொல்லந்தமாகப் பாடுவாயென்று கூற அப்பொழுதே அவன் கருத்துக்கு ஒப்பப்பாடுவது ஆசுகவியாம். (எ - று.) (ச)

393. சொல்லும் பொருளுஞ் சுவைபட நிறீஇச்
செல்வழித் தொடையும் விகற்பமுஞ் செறீஇ
யுள்ளத் துள்ளே கொள்ளு மமுதெனத்
தன்மை யுவமை பின்வரு பெற்றியி
னுருவக முதலாற் றோசை பொலியப்
பாடுதன் மதுர கவியெனப் படுமே.

இது நிறுத்தமுறையானே மதுரகவியிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) சொல்லிலக்கணத்தினும் பொருளிலக்கணத்தினும் சிதையாமல் மெய்ப்பாடுதோன்றக் கூறி அடிசேர்ந்து நடக்குமிடத்து முதற்றொடையும் விகற்பத்தொடையும் நெருங்கி உய்த்துணர்வோர் மனத்தகத்து ஊறும் அமுதம்போலத் தன்மையும் உவமையும் பொருளும் வேற்றுமையின்றி ஒன்றெனமாட்டிக் கூறும் உருவகம் முதலிய அணிகளான் அலங்கரிக்கப்பட்டுக் கேட்போர் செவிக்கு இனிய ஓசைமேற்பட்டுத் தோன்றப் பாடுவது மதுர கவியாம். (எ - று.) (ரு)

394. சித்திர கவிமேற் செப்பிய தாகும்.

இது நிறுத்தமுறையானே சித்திரகவியிலக்கணம் மாட்டேற்றான் எய்துவிக்கின்றது.

(இ - ள்.) *சித்திரகவியாவது மேற்சொல்லணியிற் கூறிய சித்திரகவியே ஈண்டுக் கூறுஞ் சித்திரகவியாம். (எ - று.)*

அது மடக்கும் அதன்வழிப்படூஉஞ் சித்திரமுமா மென்றவாறு. (சு)

395. வித்தார கவியை விளம்புங் காலை
யத்திறந் தொடர்நிலை யடிபல நடக்குந்
தனிப்பா வென்னத் தானிரண் டாகும்.

இது வித்தாரகவியின் பாகுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) *வித்தாரகவியைச் சொல்லுமிடத்துத் தொடர்நிலைப்பாட்டென்றும் பலவடியான் நடக்குந் தனிப்பாட்டென்றும் இரண்டு கூறும். (எ - று.)*

'என்ன'வென்பதனைத் தொடர்நிலை யென்பதனோடும் ' அத்திறம் ' என்பதனை இரண்டென்பதனோடும் பிரித்துக் கூட்டுக.

ஈண்டுக்கூறிய அகலக்கவிக்கு இலக்கணம் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறாராயினர். என்னையெனின், அவர்

வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி. —[தொல். பாயிரம்]

எனக் கூறிப்புகுதலானும்,

முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்.
— [தொல் - சொல் - சூ. 451]

என அகலக்கவியைச் சொன்முடிபு கூறுமுகத்தாற் கூறுதலானும், புறத்திணைக்கண்,

தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவு றீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமுஞ்
சிறந்த நாளணி செற்ற நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமுஞ்
சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமு

நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு
மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமு
மன்னெயி லழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவள னேத்தி
நடைவயிற் றேன்று மிருவகை விடையு
மச்சமு முவகையு மெச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமுங்
காலங் கண்ணிய வோம்படை யுளப்பட
ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பிற்
கால மூன்றொடு கண்ணிய வருமே.—[தொல்-பொ-சூ. 91]

என அகலக்கவியை விதந்து கூறுதலானுஞ், செய்யுளோத்தின்,

அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு
மியன்றுபொருண் முடியத் தந்தன ருணர்த்தன்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.—[ஷை சூ.522]

என்றதனாற் பொருட்டொடர் நிலைச்செய்யுளும்,

மாட்டு மெச்சமு *நாட்ட மின்றி
யுடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே.
—[ஷை சூ. 523]

என்றதனாற் சொற்றொடர் நிலைச்செய்யுளும் பெறப்படூஉமென்க. அவற்றைப் பின்னுள்ளோர் பலரும் பாட்டியலென விரித்துக் கூறினராகலான் இந்நூலுடையாரும் அகலக்கவிக்கு இலக்கணங் கூறினரென உணர்க. (எ)

396. அவற்றுட்,
டொடர்நிலை விகற்பங் கடையில வேன்ப.

இது முதற்கண் நின்ற தொடர்நிலைச் செய்யுட்கு ஆவதோர் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) தொடர்நிலை தனிநிலையென்னும் இரண்டனுட் தொடர்நிலைச் செய்யுட்களின் வேறுபாடுகளைக் கூறுமிடத்து முடிவுடையவல்லவென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.) (அ)

397. விரித்தபா மகட்கும் வேட்கு மிறைக்கும்
பொருத்தமீ ரைந்தும் போற்றல் வேண்டும்.

இது மேல்வகுத்துக்கொண்ட அகலக்கவிக்கு இன்றியமையாச் சிறப்புக் கூறுகின்றது.

(பா - ம்) * நாட்டலின்றி.

(இ - ள்.) மேற்கூறிப்போந்த துறைப்பொருளை விரித்துக் கூறும் பாமடந்தைக்கும் அப்பாமகளை மணம்புணருந் தலைவனுக்கும் பொருத்தம் பத்துஞ் சிதையாமற் பாதுகாத்துச் சொல்லுதலை விரும்பும் ஆசிரியன். (எ - று.)

398. மங்கலஞ் சொற்பால் வருண முண்டி
தானமக் கரநா ளப்பாக் கதிகண
மான வீரைந்து மம்முதற் சீர்க்குப்
பொருத்த மென்னத் தெரித்தனர் புலவர்.

இது வித்தாரகவிக்கு வேண்டுவன இவையெனத் தொகுத்துக் கூறுகின்றது.

(இ - ள்.) மங்கலமுஞ் சொல்லும் பாலும் வருணமும் உண்டியுந் தானமும் எழுத்தும் நாளும் தவறாத கதியுங் கணமுமாகிய பத்தும் அகலக்கவிக்கு முதற்கணின்ற சீர்க்குப் பார்க்கும் பொருத்தமெனத் தெரிந்து கூறுவர் புலவர் (எ - று.)

ஆகுபெயரான் மங்கலச்சொல்லை மங்கலமென்றார். (கo)

399. சீர்பொன் பூமணி திங்கள் பரிதி
கார்திரு வெழுத்துக் கங்கை யானை
கடனிலை மாவுல கஞ்சொன் னீர்தே
ரமுதம் புகழ்நில மாரணங் கடவுள்
திகிரி பிறவுஞ் செப்புமங் கலமே.

இது நிறுத்தமுறையானே முதற்கணின்ற மங்கலமொழி இவையெனகின்றது.

(இ - ள்.) சீர் முதலாகத் திகிரி ஈறாக நின்ற இருபத்துநான்கு சொல்லும் அவைபோல்வன பிறவும் அகலக்கவிக்கு முதற்கணிற்கும் மங்கலச் சொற்களாம். (எ - று.)

பிற என்றதனால் வாழி மாலை சங்கு தார் விசும்பு கவி கயல் சுடர் முரசு கவரி தோகை நன்று தாமரை விளக்கு மலர் பழனம் இடபம் என்பனவும் செல்வஞ் சீர்த்தி கீர்த்தி ஞாயிறு புயல் புனல் வேழங் களிறு பரி மதியம் தீபம் முதலிய பரியாயச் சொற்களுங்கொள்க. (கக)

400. விழுப்பொரு டோன்றல் வேறுபல் பொருளி
னொழுக்கல் வகையுளி யுறுத லிறு
திரித லின்றிச் செய்வது சொல்லே.

இது நிறுத்தமுறையானே இரண்டாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற சொற்பொருத்தமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) முதற்கண் எடுத்த மங்கலச்சொல் விழுமியபொருள் தன்கட் டோன்ற நிற்றலுடனே பல்வேறு பொருள்படக் கூறுதலும் வகையுளியுறுத

லும் ஈறுதிரிதலுமாகிய குற்றம் மூன்றும் இன்றிப் புலவராற் செய்வது சொற் பொருத்தமாம். (எ - று.)

ஏற்புழிக்கோடலான் மங்கலச்சொல்லை இடைக்கண்வைப்புழி ஈறுதிரிதலு முண்டென்றவாறு. (கஉ)

401. ஆடூஉக் குறினெடி லாகு மகடூஉப்
பேடோற் றுய்தம் பெண்ணுண் புகழ்ச்சிக்
கவ்வெழுத்து மயங்கினு மமையு மென்ப.

இது நிறுத்தமுறையானே பாற்பொருத்தமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) குற்றெழுத்தைந்தும் ஆண்பாலாம்; நெட்டெழுத்தேழும் பெண் பாலாம்; ஒற்றும் ஆய்தமும் பேடாம். ஆண்பாலைக் கூறுமிடத்து ஆண்பா லெழுத்துக்களாம்; பெண்பாலைக் கூறுமிடத்துப் பெண்பாலெழுத்துக்களாம்; மயங்கினுமாம். (எ - று.)

ஒற்றும் ஆய்தமும் முதலாகாவெனினும் பாலுரிமை கூறுமுகத்தான் உரிமைகூறினர். மேலும் இவ்வாறு பின்னுள்ளோர் கூறியவாறே கூறினும் பயனில்கூற்றென விலக்கற்பாலவல்லவென்று உய்த்துணர்ந்துகொள்க. (கங)

402. பன்னீ ருயிரு முன்னாேற் றுறு
மன்னிய வந்தணர் வருண மாகும்.

இது நிறுத்தமுறையானே வருணப்பொருத்தங் கூறுவனவற்றுள் மறை யோர்வருணத்திற்கு உரிய எழுத்துக்கள் இவையென்கின்றது.

(இ - ள்.) பன்னிரண்டு உயிரும் க ங ச ஞ ட ண என்னும் ஆறொற்றும் மறையோர் வருணத்திற்கு உரிய எழுத்தாம். (எ - று.)

ஒற்றெனப் பொதுப்படக்கூறினாரேனும் உயிரோடுகூடிய மெய்யென்றே கோடும். மேல்வருனவற்றிற்கும் ஈதொக்கும். (கச)

403. தநபம யரவெனச் சாற்றிய வாறு
மனமகி ழரசர் வருண மாகும்.

இஃது அரசர்வருணங் கூறுகின்றது.

(இ - ள்.) த ந ப ம ய ர என்னும் ஆறும் அரசர்க்கு உரிய. (எ-று.) (கரு)

404. லவறன வென்னு நான்கு புள்ளியு
மிவர்தரு வணிகர்க் கெய்து மென்ப.

இது வணிகர்வருணங் கூறுகின்றது.

(இ - ள்.) ல வ ற ன என்னும் நான்குமெய்யும் பொருட்கண்விரும்பும் வணிகர்க்கு உரிய எழுத்துக்களாமென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.) (கசு)

405. ழளவெனு மிரண்டு வேளமையர்க் காகும்.

இது நான்காம் வருணத்திற்கு உரிய எழுத்துக்கள் இவையென்கின்றது.

(இ - ள்.) ழ ள என்னும் இரண்டெழுத்தும் வேளாள வருணத்திற்கு உரிய எழுத்துக்களாம். (எ - று.) (கஎ)

406. பன்னீ ருயிரு முன்னயன் படைத்தனன்
மன்னிய வரனரி மயிலோன் புனிதன்
ஞாயிறு திங்கள் நடுவன் வருண
னேயு நிதிக்கோ னிரண்டிரண் டாகப்
படைத்தன ரீரோன் பானேற் றையுமே.

இது மேற்கூறிய உயிரொற்றுக்களுக்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

(இ - ள்.) பன்னிரண்டு உயிரினையும் பிரமன் உண்டாக்கினன்; பதினெட்டுமெய்யினையும் இரண்டிரண்டாக முறையே எக்காலத்தும் எப்பொருட்கண்ணும் உளனென நிலைபெற்ற அரனும் அரியும் முருகனும் இந்திரனும் ஆதித்தனுஞ் சந்திரனும் இயமனும் வருணனுங் குபேரனுமாகிய ஒன்பதின்மரும் படைத்தனர். (எ - று.) (கஅ)

407. கசதப நமவ வேழோடு மகர
மிகர முகர மெகர நான்கு
மமுத வெழுத்தென் றறைந்தனர் புலவர்.

• இது நிறுத்தமுறையானே உண்டிகூறுவனவற்றுள் அமுத உண்டி இவையென்கின்றது.

(இ - ள்.) க ச த ப ந ம வ என்னும் ஏழொடும் அகரமும் இகரமும் உகரமும் எகரமுமென்னும் நான்குயிரும் முன்மொழிக்காம் அமுதவெழுத்துக்களென்று கூறினர் புலவர். (எ - று.) (க௯)

408. யரலள வென்னு மெழுத்தினை யூர்ந்த
வாவு மோவு மந்நாற் புள்ளியு
மாய்தமு மஃகான் குறுக்கமு மளபு
மெய்தா நஞ்சென் றிகழ்ந்தனர் புலவர்.

இது நச்செழுத்து இவையென விலக்குகின்றது.

(இ - ள்.) யரலள என்னும் ஒற்றினையூர்ந்த ஆகாரமும் ஓகாரமும் அவ்வொற்றுக்களும் ஆய்தமும் மகரக்குறுக்கமும் அளபெடையும் நச்செழுத்தாம்; இவை ஆதிமொழிக்கு ஆகாதனவென்று கூறுவர் புலவர். (எ - று.)

எய்தாவென்ற மிகையான் எடுத்த மங்கலமொழிக்கண் இவ்வெழுத்துக்கள் வரின் அவை குற்றமுடையவல்ல எனக்கொள்க. (உ0)

409. இத்திறந் தசாங்கத் தயற்கு மியையும்.

இது மேற்கூறியதற்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

(இ - ள்.) அமுதவெழுத்தும் நச்செழுத்தும் முதன்மொழிக்கேயன்றித் தசாங்கத்தயலினும் வருதலும் வாராமையும் பொருந்தும். (எ - று.)

இச்சூத்திரம் பருந்தின் வீழ்வு. (உக)

410. மலைநதி நாடூர் வனைதா ரிவுளி
கோலமத களிறு கோடிமுர சாணை
யிவையே தசாங்க மேன்மனார் புலவர்.

இது தசாங்கமாவன இவையென அவற்றின் பெயரும் முறையுங் கூறுகின்றது.

(இ - ள்.) *மலையும் நதியும் நாடும் ஊரும் புனைதாருங் குதிரையுங் கோறற்றொழிலுற்ற மதவேழமுங் கொடியும் முரசும் ஆக்கினையுமாகிய இவைபத்துந் தசாங்கமென்று கூறுவர் புலவர்.* (எ-று.)

இச்சூத்திரம் பொருளியைபுபற்றிக் கூறினார், சார்புநூலாகலான். (உஉ)

411. குற்றெழுத் தைந்து மோத்தநெட் டெழுத்தோடு
மையௌ வென்னு மாயீ ரெழுத்தை
இஉ என்னு மிரண்டோடுஞ் சேர்த்திப்
பால குமார விராச விருத்த
மரண மென்ன வகுத்திறை வன்பெயர்
முதலெழுத் தினைமுதற் பொருத்தம தாக
முதற்சீ ரிடத்து முதற்க ணின்ற
வெழுத்தோடு தாக்கி யிடமுதன் மூன்றும்
விழுத்தகு மூப்பு மரணமும் விலக்கே.

இது தானப்பொருத்தமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *குற்றெழுத்துக்கள் ஐந்துந் தமக்கு இனமொத்த நெட்டெழுத்துக்களோடும் ஐகார ஔகாரமென்று கூறப்படும் அவ்விரண்டெழுத்தை இகர உகரமென்னும் இரண்டெழுத்தோடுஞ் சேர்த்திப் பாலப்பொருத்தங் குமாரப்பொருத்தம் இராசப்பொருத்தம் விருத்தப்பொருத்தம் மரணப்பொருத்தமென வகுத்து இறைவன் பெயர் முதலெழுத்தினைப் பாலப்பொருத்தமாகக்கொண்டு முதன்மொழி முதலெழுத்தை நேரிட்டுப்பார்க்க முதற்கணின்ற மூன்றும் நன்மைதரும் பொருத்தம் உடையன ; பின்னின்ற விருத்தப்பொருத்தமும் மரணப் பொருத்தமும் விலக்கப்படும்.* (எ - று.)

"*நட்பர ணெதிபகை மரண மைந்தனு*
ளொப்புடைக் குறிக்கோ ளொருமூன் றுகும்"

என்றார் **மாழலர்.** (உங)

412. எண்ணின் மூன்றைந் தேழொன் பான்முத
னண்ணு மக்கர நாலா றெட்டுரு.

இஃது எழுத்துப்பொருத்தமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *முதற்சீரெழுத்தினை எண்ணுமிடத்து வியநிலையாகிய மூன்றெழுத்தும் ஐந்தெழுத்தும் ஏழெழுத்தும் ஒன்பதெழுத்தும் பொருத்த*

முடையனவாம் ; சமநிலையாகிய நான்கெழுத்தும் ஆறெழுத்தும் எட்டெழுத்தும் பொருந்தா. (எ - று.)

எண்ணினென்ற மிகையானே உலகம் அமுதம் ஆரணம் எழுத்து எனப் பிறழ்ந்துவருமேனும் மங்கலத்தான் அமைவுடைய என்க. (உச)

413. ஆவி முதனான் கார லப்பான்
மேவிய வைந்தும் வியன்பூ ராடம்.

நிறுத்தமுறையானே நாட்பொருத்தங் கூறுவான் தொடங்கினவற்றுள் இஃது உயிருள் முதலொன்பதெழுத்திற்கும் நாளுரிமை கூறுகின்றது.

(இ - ள்.) உயிருள் அ ஆ இ ஈ என்னும் நான்கெழுத்தும் கார்த்திகை நாளாம்; உ ஊ எ ஏ ஐ என்னும் அப்பால் ஐந்தெழுத்தும்பூராடநாளாம். (எ-று.)

414. மற்றைய மூன்று முத்திரா டம்மே.

இதுமுதற் பதினொருசூத்திரங் காறுஞ் சூத்திரத்தாற் பொருள் விளங்கக் கிடந்தன. (உரு)

415. ககர வருக்கத் தோருநான்கு மிரண்டும்
திகழ்திரு வோணந் திருவா திரையாம்
பிற்பான் மூன்று மூன்றும் பேசிற்
பொற்புறு புனர்தம் பூசமாகும். (உஎ)

416. சகர வருக்கந் தனின்முத னன்கும்
புகலுங் காலைப் புருட நாண்மே
லைந்து மூன்றச் சுவினி பரணி. (உஅ)

417. உற்ற ஞகரத் தோருமூன் றினையு
மற்றை யவிட்ட மாமெனப் பகர்வர். (உகூ)

418. மன்னிய தகரத் திரண்டேழ் மூன்று
தன்னியற் சோதி விசாகஞ் சதயம். (௩௦)

419. ஆங்குறு நகரத் தாறு மூன்றுமுன்
றேங்கும் பனைதுளங் கொளிபுரட் டாதி. (௩க)

பனையென்பது - அனுடம். துளங்கொளியென்பது - கேட்டை.

420. நற்பக ரத்தி னன்கிரண் டாறு
முற்படு முத்திரந் தோட்டு மூன்றே. (௩உ)

421. ஆறு மூன்றுமூன் றுமக ரத்திற்
றேறு மகங்கட் செவியோண் பூரம்.

கட்செவி - ஆயிலியம். (௩௩)

422. உற்ற யாவோன்று முத்திரட் டாதி
யூயோ விரண்டு மேயு மூலம். (௩௪)

423. எடுத்த வகரத் திருநான் கிற்கு
மடுத்த ரோகிணி மான்றலை யாகும்.

மான்றலை - மிருகசீரிடம். (௩௫)

424. இறைவன் பெயர்முத லெழுத்தை நோக்கி
யுறுநா ளினைமூ வொன்ப தாக்கி
யோன்றுமூன் றைந்தே ழொருமுத் திறத்தினு
மொன்ற வண்ண முறைமுதற் சீர்க்கே.

இது நாட்பொருத்தங்கொள்ளுமாறு எதிர்மறைமுகத்தான் உணர்த்துகின்றது.

(இ - ள்.) *பாட்டுடைத்தலைவன்பெயரின் முதலெழுத்திற்கு உரியநாள் தொடங்கி உறுகின்ற இருபத்தேழு நாளினையும் ஒன்பதொன்பதாகப் பகுத்துச் சென்மம் அநுசென்மம் உபசென்மமென்று கூறப்பட்ட முப்பகுதியினும் ஒன்று மூன்று ஐந்து ஏழு எண்ணின்வந்த நாட்கள் பொருத்தமுடையவல்ல வெனக்கொண்டு இரண்டு நான்கு ஆறு எட்டு இவைகளின் நின்றநாட்களைப் பொருத்தமுடையவாக முதற்சீரையெடுத்துச் சொல்லுவர். (எ - று.)*

பிறநூன்முடிபுதானுடன்படுதலென்னும் நியாயநூல்வழக்கால் இறைவன் பெயர்நாட்கு மூன்றும்பரியாயத்தினின்ற மூன்று ஐந்து ஏழு பொருத்தமுடையவென்று கோடலுஞ் சென்மநாள் தொடங்கிப் பொருத்தங்கோடலுங் கொள்க. (௩௬)

425. எட்டா மிராசியும் வைநா சிகமும்
விட்டு முதற்சீர் விளம்புதன் மரபே.

இஃது அம்முதற்சீர்க்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

(இ - ள்.) *இறைவன்பெயர்நாள் தொடங்கி எட்டாம் இராசிக் கண்ணுற்ற இரண்டேகால்நாளும் எண்பத்தெட்டாங் கால் பொருந்திய வைநாசிகநாளுந் தள்ளிப் பொருத்தமுடைய நாட்களைக்கொண்டு இறைவன்பெயர்க்கு முதற்சீர் எடுத்துக்கூறல் மரபு. (எ - று.)*

உம்மையை எச்சப்படுத்திக் கணநாளின் விலக்கியன ஒழித்துக் கூறப்படுமென்பதூஉங் கொள்க.

இச் சூத்திரம் பருந்தின் வீழ்வு. (௩௭)

426. ஈறில் வன்மை குறிலிமை யோர்க்காங்
கூறு நெடின்முத லுங்கு மென்மை

யந்த மொன்றேழுந் தல்லன மக்கண்
முந்துங் கதியிவை முதன்மொழிக் காகும்.

இது நிறுத்தமுறையானே கதிகூறுவனவற்றுள் முதன்மொழிக்குப் பொருத்தமுடைய கதிகளாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) நகரவொற்றல்லாத ஏனைவல்லொற்றைந்தும் ஒ என்னுங் குற்றுயிரல்லாத ஏனை நாற்குற்றுயிருந் தேவர் கதியின் கூறும்; ஆ ஈ ஊ ஏ என்னும் நான்கெழுத்தும் னகரவொற்றல்லாத ஏனை ஐந்துமெல்லொற்றும் மக்கட்கதிக்கு உரிய எழுத்துக்களாம்; இவ்விருகதியும் முதன் மொழிக்குப் பொருந்தும். (எ - று). (௩அ)

427. ஒஓ யரல ழறவெனு மேழுந்
தோக்க விலங்கின் சூழ்கதி யேனைய
நரகர் கதியிவை நவையெனப் புகல்வர்.

இது விலக்கப்படுங் கதியாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஒகர ஓகாரமும் யகர ரகர லகர ழகர றகரமுமாகிய ஏழெழுத்தும் பலவாகிய விலங்கின் கதியைக் கூறும் எழுத்துக்களாம். ஒழிந்த ஐகார ஔகாரம் வகர ளகர னகரமுமென்னும் ஐந்தெழுத்துக்களும் நரகர் கதிக்கு ஓதிய எழுத்துக்களாம். இவ்விரு கதியையுங் குற்றமுடைய கதியென முதன் மொழிக்கு ஆகாவென்று கூறுவர் புலவர். (எ - று).

தொக்க என்ற மிகையானே எடுத்த மங்கலச் சொல்லின் முதலெழுத்தாமாயிற் குற்றமுடையவல்ல என்றவாறு. (௩௯)

428. ஆதியு மிடையு மிறுதியு முற்று
மோதிய நேரு நிரையு முற்றிடின்
நீர்தீ மாக நிகரில் சுவர்க்க
மாமதி பரிதி வாயு பூகண
மாமுற் றுதி யாமுதற் சீர்க்கே.

இது நிறுத்தமுறையானே கணப்பொருத்தமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஆதியினும் இடையினும் இறுதியினும் முற்றினும் மேற் செய்யுளியலுட் கூறிய நேரசையும் நிரையசையுமாய்வரின் ஆதிநேர் நீர்க் கணமெனவும், இடைநேர் தீக்கணமெனவும், இறுதிநேர் ஆகாயகணமெனவும், முற்றுநேர் சுவர்க்ககணமெனவும், ஆதிநிரை சந்திரகணமெனவும், இடைநிரை சூரியகணமெனவும், இறுதிநிரை வாயுகணமெனவும், முற்றுநிரைபூகண மெனவும் ஆகும்; இவற்றுள் முற்றுநேரும் முற்று நிரையும் ஆதிநேரும் ஆதி நிரையும் முதற்சீர்க்குப் பொருத்தமுடையனவாம். (எ - று).

"நீரது கணமே சீர்சிறப் பெய்துந்
தீயின் கணமே நோயது சேரு

மந்தர கணமே வாணா ளகற்று
மிந்திர கணமே பெருக்கஞ் செய்யுஞ்
சந்திர கணமே வாழ்நாள் தரூஉஞ்
சூரிய கணமே வீரியம் போக்கு
மாருத கணமே சீர்சிறப் பகற்று
நிலக்கணந் தானே மலர்த்திரு விளங்கும்."

என்றார் மாமூலர்.

"நேரசை யாகவு நிரையசை யாகவுஞ்
சீர்பெற வெடுத்தல் சில்லிடத் துளவே."

என்றார் இந்திரகாளியார். இது சிறப்பின்மையின் ஈண்டுத் தொகுத்திலரெனக் கொள்க.

'ஓதிய' என்ற மிகையானே கணநாட் பொருத்தமுங் கொள்க. அவையாமாறு :—

"வருண கணமே சதய மென்ப
சந்திர கணமே மிருக சீரிட
மந்தர கணமே புனர்பூச மாகும்
வாயு கணமே சோதி யாகுஞ்
சூரிய கணமே பூச மென்ப
தீக்கணந் தானே கார்த்திகை யென்ப
யமான கணமே பரணி யென்ப
பூமி கணமே கேட்டையாகும்."

எனக் கணநாட்கூறி,

"நிலையே செல்வஞ் சூலை நலநீக்கல்
கொலைபிணி நன்மை யின்பங் கூறே."

என இந்திரகாளியர் பலமுங் கூறியவாறு அறிந்துகொள்க. (சு0)

429. தானமு நாளுங் கணமுந் தவறா
வூனமுற் றிடினடை யுறுதலு முறுங்காற்
பரியா யச்சொற் பகர்தலு மங்கலக்
குரியமற் றதநடு வுறுமிறு தியினும்.

இது மங்கலச்சொற்கு ஒரோவழி வேண்டுஞ் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ - ள்.) தானப்பொருத்தமும், நாட்பொருத்தமும் கணப்பொருத்தமும் குற்றம்வரல் ஆகா; தலைவன் இயற்பெயரைக் குறித்து மங்கலச்சொற்குக் குற்றப்பாடுளதாயின் அம்மங்கலச் சொற்கு அடைகொடுத்துக் கூறுதலும்

பரியாயச் சொற்கூறுதலும் உரியனவாம்; அம்மங்கலச்சொல் முதற்கணன்றி நடுவினும் இறுதியினும் நிற்கவும்பெறும். (எ - று.)

மங்கலத்திற்கென்பது மங்கலக்கென விகாரப்பட்டு நின்றது. ஆகுபெயரான் மங்கலச்சொல்லை மங்கலமென்றார்.

இங்ஙனம் இவ்வாறு கூறுதலானும் மேற்கூறப் பட்டதனானும் மங்கலத்தைக் குறித்துச் சொற்பொருத்தமும் உண்டிப்பொருத்தமும் எழுத்துப் பொருத்தமும் வேறுபடினும் அமையுமெனவும், தானத்தினையும் நாளினையும் கணத்தினையும் குறித்து மங்கலச்சொல் வேறுபடினும் அமையுமெனவுங் கொள்க. (சக)

430. நேரீற் றியற்சீர் வெண்சீர் முன்னு
நிரையீற் றியற்சீர் கனிச்சீர்ப் பின்னுந்
தேருங் காலைச் சிறப்புறு மவையே
யயன்றிருக் கோக்கரு டன்கண மென்னப்
பயின்றிடு மியற்சீர்ப் பரிசுரைத் திடவே.

இஃது ஆசிரியவுரிச்சீர்க்குக் கணப்பொருத்தம் மாட்டேற்றான் எய்துவித்தலேயன்றி வேறுகணமுங் கூறுகின்றது.

(இ - ள்.) நேரசையிறுதியாகிய தேமாபுளிமாவென்னும் இயற்சீரிரண்டும் வெண்பாவுரிச்சீரின் முன் நின்ற தேமாங்காய் புளிமாங்காய் போல முறையே சுவர்க்ககணமுஞ் சந்திரகணமுமாமெனவும், நிரையசையிறுதியாகிய கருவிளங் கூவிளமென்னும் இயற்சீரிரண்டும் வஞ்சியுரிச்சீரிற் பின் நின்ற கருவிளங்கனி கூவிளங்கனிபோல நிலக்கணமும் நீர்க்கணமுமாமெனவுஞ் சிறப்புப்பெற்று நடக்கும். அன்றியும் அவை பிரமகணமும் இலக்குமிகணமுஞ் சுரபிகணமுங் கருடகணமுமென உரிமைகூறப்பட்டு அகலக்கவி முதற்கட் பயின்று நடக்கும். (எ - று.)

பாட்டியல்செய்தோர் பலராகலான் ஒருசாரார் மூவகைச் சீரே வருமெனக் கூறுதலானும் ஒருசாரார் ஈரசைச்சீர் உடன்கொண்டு கூறுதலானும் ஈரசைச்சீரும் இலக்கியத்திற் பயின்றுவருதலானும் இவ்வாசிரியர் இருதிறனும் நேர்ந்தாரென்பதாம். (சஉ)

431. உற்ற தசாங்கத் தினையோரு சீரான்
முற்ற வுரைத்தன் முறைபிரித் திசைப்பின்
பிழையாம் புணர்மொழிப் பெயரீற் றின்றேகின்
வழுவா காவென வகுத்தனர் புலவர்.

இது தசாங்கத்தினைப் புணர்க்குந் திறத்து ஆவதோர் சிறப்புக் கூறுகின்றது.

(இ - ள்.) பாட்டுடைத்தலைவற்குப் பொருந்திய தசாங்கங்களை ஒரு சீராலே முடிவு பெறப்பாடுவது இலக்கணமாம்; பிரித்து வேறு சொன்முடிபு

கொடுத்துக் கூறல் குற்றமாம் ; பிரித்தவழிப் புணர்மொழிப் பெயரிறுதிக்கண் தொகைச்சொற்கொடுத்து நச்செழுத்தகற்றிக் கூறிற்குற்றமாகா.(எ-று.) (சங)

432. கூறிய விலக்கணங் குறைபா டின்றித்
தேறிய மூவகைச் சீர்முத லாக
வகலக் கவிதா னமையு மென்ப.

இஃது அகலக்கவிக்காவதோர் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) கூறப்பட்ட பத்துவகைப் பொருத்தஇலக்கணத்திற் குறைவின்றிப் பலவாற்றானுந் தெளிந்த மூவகைச்சீர் முதலாக அகலக்கவி பாடப்படும். (எ - று.)

'தேறிய' என்றதனால் உண்டியின் விலக்கிய நச்செழுத்துங் கதியின் விலக்கியஎழுத்தும் எடுத்த மங்கலச்சொல்லின்வரின் அமுதமாய் அமைவுடைத்தெனவுங் கொள்க. அவை முறையே சீர் சொல் யானை எனவும் எழுத்து பொன் கார் சொல் அமிர்தம் எனவும் வருவன. இன்னும் அதனானே மங்கலத்திற்கு அடைகொடுத்த அடைசொல்லின் முதனின்ற எழுத்தேபற்றி எழுத்திலக்கணங் கொள்க.

இவ்வாறு கூறிய இலக்கணங்களாற் போந்தபொருள் மங்கலமுஞ் சொல்லுஞ் சொல் நோக்கியும், கணஞ் சீர் நோக்கியும், பால் முதலிய ஏழும் எழுத்தை நோக்கியுங் கூறினாரென்பது.

இத்துணையும் அகலக்கவிமுதற்சீர்க்கு வேண்டும் பொருத்த இலக்கணங் கூறி இனி அகலக்கவியிலக்கணங் கூறுகின்றார். (சச)

433. பிள்ளைக் கவிமேற் கோள்ளுங் கலம்பகம்
பன்மணி மாலை மும்மணிக் கோவை
யகப்பொருட் கோவை தொகைப்படு செய்யு
ளிணைமணி மாலை யிரட்டைமணி மாலை
மும்மணி மாலை நான்மணி மாலை
யிருபா விருபஃ தொருபா வொருபஃ
தொலியந் தாதி மலிபுக ழின்னிசை
வருக்க மாலை திருத்தகு கைக்கிளை
மங்கல வள்ளை மற்றை யிரட்டை
நற்கீர்த்தி நேரிசை மெய்க்கீர்த்தி மாலை
காப்பு மாலை வேனின் மாலை
பல்சந்த மாலை யங்க மாலை
வசந்த மாலை நவமணி மாலை
பரணி தசாங்கப் பத்திரு பகுதிய
பதிற்றந் தாதி நூற்றந் தாதி

யட்ட மங்கல மலங்கார பஞ்சக
மூசல் சின்னப் பூவொரு போருண்மேற்
பேசுஞ் சதகம் பிறவெண் ணுலுங்
கூறுத லந்தினைக் கோவை யுற்ற
நாழிகை வெண்பா நாளுற் பதனே
டியாழின் மொழிவிழி யிணைமுலைப் பத்து
வில்வாள் வேல்கோல் வேழங் குதிரை
நாடூர் கோடையை நயந்த விருத்த
மாப்பெரும் புலவர்சொல் காப்பிய மென்னப்
பெயர்பெறுந் தொடர்நிலை பிறவு மன்ன.

இஃது அகலக்கவி இரண்டனுட் தொடர்நிலைச்செய்யுள் பெறும் பெயர் வேற்றுமை கூறுகின்றது.

(இ - ள்.) *பிள்ளைக்கவி முதலாகக் காப்பியம் ஈருகச் சொல்லப்பட்ட ஐம்பத்தைந்தும் அவற்றுட் தொகைபெறவகுத்த அகலக்கவி வேறுபாடும் அவைபோல்வன பிறவுமெல்லாந் தொடர்நிலைச்செய்யுளாம்.* (எ - று.) (௫௫)

434. கடுங்கோலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே.

இஃது பிள்ளைக்கவிக்கு இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *கடிய கொலைத்தொழிலை அகற்றி அருணீர்மை தோன்றக் கடவுளைப் புகழ்ந்துகூறி அக்கடவுள் காக்கவெனக் கூறுங்காப்பு முதலாகச் சிறுதேர் ஈருக முறையான்வகுத்த பத்துநிலமும் பெறும் ஆண்பாற்பிள்ளைக் கவி.* (எ - று.)

செங்கீரை - தலையெடுத்து முகமசைத்தல். சிறுபறைமுழக்கலையுஞ் சிற்றில் சிதைத்தலையுஞ் சிறுதேருருட்டலையுஞ் சிறுபறை சிற்றில் சிறுதே ரென்றார், பெயரொடு தொழிற்கு ஒற்றுமையான். (௫௬)

435. அவற்றுட்,
பின்னைய மூன்றும் பேதையர்க் காகா
வாடுங் கழங்கம் மானை யூசல்
பாடுங் கவியாற் பகுத்து வகுப்புட
னகவல் விருத்தத் தாற்கிளை யளவாம்.

இது பெண்பாற் பிள்ளைக்கவிக்கு எய்தியதன்மேற் சில வேறுபாடும் பொது இலக்கணமுங் கூறுகின்றது.

(இ - ள்.) அப்பருவம் பத்தினுள்ளும் பிற்கூறப்படுஞ் சிறுபறை முழக்கலுஞ் சிற்றில்சிதைத்தலுஞ் சிறுதேருருட்டலும் பெண்பாற்கு ஆகா ; கழங்கு அம்மானை ஊசல் பாடுங் கவிகளாற் பாடப்பட்டு வருப்பானும் அகவல் விருத்தத் தானுஞ் சுற்றமுறப் பாடப்படும். (எ - று.) (சுஎ)

436. மங்கலம் பொலியுஞ் செங்கண் மாலே
சங்கு சக்கரந் தரித்த லானுங்
காவற் கடவு ளாத லானும்
பூவினட் புணர்த லானுமுற் கூறிக்
கங்கையும் பிறையுங் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதுல கீன்ற பழுதறு மிமயப்
பருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்து
நாமகள் கொழுநன் மாமுகி லூர்தி
யொற்றைக் கொம்பன் வெற்றி வேல
னெழுவர் மங்கைய ரிந்திரை வாணி
யுருத்திர ருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை யூர்தியிற் பொலிவோ ரனைவருங்
காப்ப தாகக் காப்புக் கூறல்.

இது பருவம் பத்தினுள்ளும் முதற்பருவமாகிய காப்பினுக்கு உரைக்கப் படுங் கடவுளர் பெயரும் முறையுங் கூறுகின்றது.

(இ - ள்.) சுபங்களெல்லாம் பொலியுஞ் சிவந்த கண்ணையுடைய மாயோன் சங்கத்தினையுஞ் சக்கரத்தினையுங் கைக்கோடலானுங் காத்தற்றொழிலுரிமை பூணுதலானும் பூமடந்தையைப் புணர்தலானும் முன்னர்க் கூறி, உலகம் பொலிதற்கு ஏதுவாகிய கங்கையாற்றினையும் நிறைநீர்வான் பிறைமதியினையுங் கார்ப்பருவத்திற் பொலியுங் கொன்றை மாலையினையுஞ்சூடிய உமையோர் பாக னென்று இமையோர்நாதனைப் புகழ்ந்துகூறி, உலகமுழுதீன்ற பனிவரைச் செல்வியை விருப்பம் மேன்மேற் கிளைப்பக் கூறி, நாமடந்தை கேள்வனாகிய அயனைப் புகழ்ந்துகூறிக், கறுத்த மேகவாகனனை அதன்பின் புகழ்ந்துகூறி, ஒற்றைக்கொம்பனைப் புகழ்ந்துகூறி, வீரத்தன்மையைப் பொருந்திய வேலனைப் புகழ்ந்துகூறிச், சத்தமாதர்களைப் புகழ்ந்துகூறித், திருவினைப் புகழ்ந்துகூறி, வாணியைப் புகழ்ந்துகூறிப், பதினொருகோடி உருத்திரரையும் பன்னிரண்டு கோடி ஆதித்தரையும் இரண்டுகோடி மருத்துவரையும் எட்டுக்கோடி வசுக்களை யும் புட்பகவிமானத்தினையுடைய சந்திரனையுங் குபேரனையும் அனைவோரென் றதனாற் காரி முதலிய தேவரையும் பிள்ளையைப் பாதுகாத்தற்பொருட்டுக் காப்புக்கூறுக. (எ - று.)

இரட்டுற மொழிந்ததனாற் 'பூப்புனை யூர்தியிற் பொலிவோர்' என்றது பிரயோகவிபாகத்தான் இருவரையுங் கொள்ளக்கிடந்த தொடர்மொழி. (சஅ)

437. மூன்று முதல்மூ வேழு திங்களி
ஞேற்றை பெற்ற முற்றுறு மதியின்
கொள்ளுக பிள்ளைக் கவியைக் கூர்ந்தே.

இது பிள்ளைக்கவிகொள்ளுங் காலங் கூறுகின்றது.

(இ - ள்.) பிறந்து மூன்றாந்திங்கள் முதல் இருபத்தொரு திங்கள்காறும் ஒற்றித்த திங்களில் நிறைமதிப் பக்கத்திற் பிள்ளைக்கவியை விரும்பிக் கொள்ளுக. (எ - று.) (சகூ)

438. மூன்றைந் தேழா மாண்டினு மாகும்.

இது மேலதற்கோர் புறனடை.

(இ - ள்.) மூன்றாம் ஆண்டினும் ஐந்தாம் ஆண்டினும் ஏழாம் ஆண்டினும் அப்பிள்ளைக்கவியைக் கொள்ளவும் பெறும். (எ - று.) (ரு0)

439. ஒன்பது பதினொன் றென்பது காப்பே.

இது பாடும் வரையறை கூறுகின்றது.

(இ - ள்.) பிள்ளைக்கவியைப் பாடுங்கால் ஒன்பதுபாட்டானும் பதினொரு பாட்டானுங் காப்புப் பாடுக. (எ - று.)

நிலங்கள் பத்துந் தம்மில் ஒப்பக்கொண்டு பாடுமிடத்து ஒற்றைபடப் பாடுதல் சிறப்புடைத்து. இரட்டிக்கப் பாடுமிடத்தும் ஓசைபெயர்த்துப் பாடுக.

உரையிற்கோடலாற் காப்பு முதற்கண் எடுத்த அகவல் விருத்தம் நான் கடிக்கும் எழுத்தொப்பப் பாடுதல் வேண்டுமெனக் கொள்க ;

" முதற்க ணெடுத்த வகவல் விருத்த
மெழுத்தின் ஞெருகுதி யெண்ணினர் கொளலே "

என்பவாகலின். (ருக)

440. ஒருபோகு வெண்பாக் கலித்துறை யுறமுன்
வருபுய மதங்கம் மானை காலஞ்
சம்பிர தங்கார் தவங்குற மறம்பாண்
களிசித் திரங்கல் கைக்கிளை தூது
வண்டு தழைமேற் கோண்டேழ் முசன்
மடக்கு மருட்பா வஞ்சி விருத்த
மகவல் கலியின மகவல் விருத்தம்
வஞ்சிவஞ் சித்துறை வெண்டுறை மருவி
யிடையிடை வெண்பாக் கலித்துறை நடைபெற்
றந்தாதி மண்டலித் தாங்கலம் பகமே.

இது நிறுத்தமுறையானே கலம்பகமாமாறு கூறுகின்றது,

(இ - ள்.) ஒருபோகும் வெண்பாவுங் கலித்துறையும் முதற்கவியுறுப்பாக முற்கூறப்பட்டுக், கலவையின் புயவகுப்பு முதல் ஊசல் ஈறாகிய பதினெட்டுப் பொருட்கூற்றுறுப்புக்களும் இயையுமாறு பிற்கூறப்பட்டு, மடக்கும் மருட்பாவும் ஆசிரியப்பாவுங் கலிப்பாவும் வஞ்சிப்பாவும் ஆசிரியவிருத்தமுங் கலிவிருத்தமும் கலித்தாழிசையும் வஞ்சிவிருத்தமும் வஞ்சித்துறையும் வெண்டுறையுமாகிய கவிக்கூறுகளுமுடைத்தாய் இடையிடை வெண்பாக் கலித்துறை பாடப்பட்டு அந்தாதித்தொடை முற்றும் உற இறுதியும் முதலும் மண்டலித்துப் பாடுவது கலம்பகமாம். (எ - று.)

மண்டலித்துப் பாடுவது அந்தாதித்தொடையாற் கூறுவனவற்றிற்கு எல்லாம் ஒக்கும். 'மேற்கொண்டெழும்' என்றதனால் காலத்தான் மருவிய பிச்சியார் கொற்றியார் முதலியவுங் கொள்க. (ருஉ)

441. அதுவே,

இமையவர்க் கோருநூ றிழிபைந் தையர்க்
கமைதரு மரசர்க் காகுந் தொண்ணூ
றமைச்சருக் கெழுபான் வணிகருக் கைம்பா
னமைத்தனர் பின்னவர் தமக்கா றைந்தே.

இது மேலதற்குப் பாட்டுவரையறை கூறுகின்றது.

(இ - ள்.) மேற்கூறப்பட்ட கலம்பகந்தான் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சருக்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், வேளாளர்க்கு முப்பதுமாகப் பாடுகவென அமைத்தனர் புலவர். (எ - று.)

'அமைதரு'மென்றதனால் அந்தணரைத் தேவர்க்கொப்பவும், குறுநில மன்னரை அரசர்க்கொப்பவும் பாடுதலுங் கொள்க. (ருங)

442. அவற்றுள்,

ஒருபோ கம்மானை யூசலின்றி
வருவது பன்மணி மாலை யாகும்.

இது பன்மணிமாலை இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) அக்கலம்பகந்தானே ஒருபோகும் அம்மானையும் ஊசலுமின்றி ஏனையுறுப்புக்களெல்லாம் வரப்பாடுவது பன்மணிமாலை. (எ - று.) (ருச)

443. அகவல் வெண்பா வசையெண் கலித்துறை
தொகைமுப் பதுபெறச் சோற்றொடர் நிலையிற்
கூறுதல் மும்மணிக் கோவை யாகும்.

இது மும்மணிக்கோவை இலக்கணங் கூறுகிறது.

(இ - ள்) ஆசிரியப்பாவும், வெண்பாவும், நேரசையும் நிரையசையுங் கொண்டு எழுத்தெண்ணிப்பாடுங் கலித்துறையும் முறைமுறை தொகை

முப்பதுபெற அடுக்கி அந்தாதித்தொடையாற் பாடுவது மும்மணிக்கோவையாம். (எ - று.) (௫௫)

444. முதற்பொருள் கருப்பொரு ளுரிப்பொருண் முகந்து
களவு கற்பெனும் வரைவுடைத் தாகி
நலனுறு கலித்துறை நானூ றாக
வாறிரண் டுறுப்பு முறின்றி விளங்கக்
கூறுவ தகப்பொருட் கோவை யாகும்.

இஃது அகப்பொருட்கோவை இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) இருவகைப்பட்ட முதற்பொருளும் பதின்முன்குவகைப்பட்ட கருப்பொருளும் பத்துவகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்திக், கைக்கிளை முதலுற்ற அன்புடைக்காமப் பகுதியவாங் களவொழுக்கத்தினையுங் கற்பொழுக்கத்தினையுங் கூறுதலே எல்லையாகக்கொண்டு, நன்மையுற்ற கட்டளைக்கலித்துறை நானூறாகத், திணை முதலாகத் துறை ஈறாகக் கூறப்பட்ட பன்னிரண்டு அகப்பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப் பாடுவது அகப்பொருட் கோவையாம். (எ - று.) (௫௬)

445. நெடுந்தொகை குறுந்தொகை கலித்தொகை யென்னப்
படுந்தொகைச் செய்யுள் பற்பல வாகும்.

இது தொகைநிலைச் செய்யுள் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) அளவான் நெடுந்தொகையெனவும் குறுந்தொகையெனவும், பாட்டாற் கலித்தொகையெனவும் கூறப்படுந் தொகைநிலைச்செய்யுள் மிகப் பலவாம். (எ - று.)

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தோ ரேத்துங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை."

'பற்பல' என்றதனால் வள்ளுவர்முப்பால் நாலடி நான்மணிக்கடிகை திரிகடுகஞ் சிறுபஞ்சமூலம் ஏலாதி முதலாயினவெல்லாம் ஆமென்றறிக. (௫௭)

446. வெண்பா வகவல் வெண்பாக் கலித்துறை
பண்பா னிரைம் பஃதந் தாதி
யியலின் வகுப்ப திணைமணி மாலை.

இஃது இணைமணிமாலை இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) வெண்பாவும் அகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாக இரண்டிரண்டாக இணைத்து வெண்பாவகவலிணைமணிமாலை வெண்பாக்கலித்

துறையிணை மணிமாலையென நூறுநூறு அந்தாதித்தொடையாக வரப்பாடுவது இணைமணிமாலையாம். (எ - று.) (ருஅ)

447. இருபது வெண்பாக் கலித்துறை யியையின்
வருவ திரட்டை மணிமாலை யாகும்.

இஃது இரட்டைமணிமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) முறையானே வெண்பாவுங் கலித்துறையும் இருபது அந்தாதித் தொடையான் வருவது இரட்டைமணிமாலையாம். (எ - று.) (ருகூ)

448. வெண்பாக் கலித்துறை யகவலந் தாதிப்
பண்பான் முப்பது பகரின் மும்மணி
மாலை யென்று வகுத்தனர் புலவர்.

இது மும்மணிமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) வெண்பாவுங் கலித்துறையும் அகவலும் அந்தாதியாக முப்பது பாடின் அதனை மும்மணிமாலையென்று கூறுவர் புலவர். (எ - று.) (சூ0)

449. வெண்பாக் கலித்துறை விருத்த மகவல்
பின்பேசு மந்தா தியினாற் பதுபெறி
னான்மணி மாலை யாமென நவில்வர்.

இது நான்மணிமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) வெண்பாவுங் கலித்துறையும் அகவலும் பின்னும் முன்னும் ஒன்றிய விருத்தமும் மேற்கூறிய அந்தாதியான் நாற்பதுபாடின் நான்மணி மாலையாமென்று கூறுவர் புலவர். (எ - று.) (சூக)

450. ஒருபது வெண்பா வொருபஃ தகவ
லிருபது வரினிரு பாவிரு பஃதே.

இஃது இருபாவிருபஃதாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பத்துவெண்பாவும் பத்தகவலும் அந்தாதித்தொடையாக இருபது இணைந்துவரின் இருபாவிருபஃது. (எ - று.) (சூஉ)

451. அகவல் வெண்பாக் கலித்துறை யதுகொண்
டொருபா வொருபஃ தறினப் பெயராம்.

இஃது ஒருபாவொருபஃதாமாறு கூறுகின்றது.

பொருள் வெளிப்படை. (சூங)

452. ஈண்டிய வண்ணமீ ரெண்கலை முப்பா
னுண்ட தோலியந் தாதி யாகும்.

இஃது ஒலியந்தாதியாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பலசந்தங் கூடிய பதினாறு கலைவகுப்பானாய முப்பதெண்ணான் ஆளப்பட்டது ஒலியந்தாதியாம். (எ - று.) (௬௫)

453. இறைவன் பெயரூ ரிணையின் னிசையான்
458. முறையிற் றொண்ணூ றெழுபா னைம்பா
னறையி னப்பெய ராகு மென்ப.

இது பெயரின்னிசையும் ஊரின்னிசையுமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பாட்டுடைத்தலைவன் பெயரினையும் ஊரினையுஞ்சார இன்னிசை வெண்பாவாற் றொண்ணூறு எழுபது ஐம்பது பாடிற் பெயரின்னிசை வெண்பாவென்றும் ஊரின்னிசைவெண்பாவென்றும் வழங்கப்படும். (எ - று.)

454. வருக்கத் திணைச்சொலல் வருக்க மாலை.

இது வருக்கமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) மொழிக்கு முதலாம் வருக்க எழுத்தினுக்கு ஒவ்வொரு **கவி** கூறல் வருக்கமாலையாம். (எ - று.)

கூறுதல் அவ்வெழுத்தை முதலாகக்கொண்டு கூறுதலென்று உணர்க. உயிரானுங் க ச த ந ப ம வ என்னும் உயிரோடுகூடிய மெய் ஏழானுமாக எட்டு ஆசிரியப்பா வந்தால் அவை வருக்கமாலையெனவுங் கூறுவாரும் உளர்.

455. ஒருதலைக் காம மோரைந்து விருத்தங்
கருத வுரைத்தல் கைக்கிளை யாகும்.

இது கைக்கிளையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஒருதலைக்காமத்தினை ஐந்து விருத்தத்தாற் பெறக்கூறுதல் கைக்கிளைச் செய்யுளாம். (எ - று.) (௬௭)

456. ஒன்பது வெண்பா வகுப்பா லுயர்குல
மங்கையைப் பாடுதல் மங்கல வள்ளை.

இது மங்கலவள்ளையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) உயர்ந்தகுலத்து உதித்த மடவரலை வெண்பா ஒன்பதனால் வகுப்புறப்பாடுதல் மங்கலவள்ளையாம். (எ - று.) (௬௮)

457. வெண்பா விருத்தம் வியப்புற விருபஃ
தெண்பட வுரைப்பது மிரட்டைமணி மாலை.

இது வேறொரு (447) வகையான் இரட்டைமணிமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) வெண்பா பத்தும் விருத்தம் பத்தும் அந்தாதித் தொடையாற் பாடுதலும் இரட்டைமணிமாலையாம். (எ - று.)

உம்மை, இறந்ததுதழீஇய எச்சவும்மை. மாலையென்பதனால் அந்தாதியென்பது பெற்றாம். (௬௯)

458. இன்னிசை போல விறைவன் பெயரூர்
தன்னி னியல்வது தானே ரிசையே.

இது நேரிசையாமாறு மாட்டேற்றனே அறிவிக்கின்றது.

(இ - ள்.) *இன்னிசை வெண்பாவேபோலப் பாட்டுடைத்தலைவன் பெயரூரைச் சார்ந்துவரத் தொண்ணூறும் எழுபதும் ஐம்பதும் பாடின் அவற்றைப் பெயர்நேரிசையென்றும் ஊர்நேரிசையென்றும் வழங்கப்படும்.* (எ - று.) (எ௦)

459. சொற்சீ ரடியாற் றெழிற்படு புகழை
வேந்தர்பாற் கூறின் மெய்க்கீர்த்தி யாகும்.

இது மெய்க்கீர்த்தியாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *சொற்சீரடியாலே காரியப்புகழை மன்னரிடத்துக் கூறுதல் மெய்க்கீர்த்தியென்னும் பெயரினைப்பெறும்.* (எ - று.) (எக)

460. காப்புமுன் றைந்தேழ் காப்பு மாலையாம்.

இது காப்புமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *காத்தலாக மூன்று கவியானும் ஐந்து கவியானும் எழு கவியானும் பாடுவது காப்புமாலையாம்.* (எ - று.) (எஉ)

461. வேனிலைப் பாடுதல் வேனின் மாலை.

இது வேனின்மாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *இளவேனிலையும் முதிர்வேனிலையுஞ் சிறப்பித்துப் பாடுதல் வேனின்மாலையாம்.* (எ - று.) (எந)

462. பத்து முதலாப் பப்பத் தீறு
வைத்த வண்ண வகைபத் தாகப்
பல்சந்த மாலை பகரப் படுமே.

இது பல்சந்தமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *பத்துக் கவி முதலாக நூறு கவி ஈறாக வைக்கப்பட்ட சந்தம் பத்துப்பத்தாகப் பல்சந்தமாலை கூறப்படும்.* (எ - று.) (எச)

463. மிக்க வுறுப்பை வெண்பா விருத்தந்
மறைந்த தோக்கவோடு முறையாற் றெடர்வுறப் பாடுத
லங்க மாலை யாமெனப் பகர்வர்.

இஃது அங்கமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் எடுத்துக்கூறும் மிக்க அவயவங்களைத் தொக்க அவயவங்களோடும் வெளிவிருத்தத்தாற் கூடிய முறையால் அந்தாதியுறப் பாடுதல் அங்கமாலையெனக் கூறுவர்.* (எ - று.)

முறை, பாதாதிகேசம் கேசாதிபாதம் பிறழாமற் கூறல். தொக்க உறுப்பு உள்ளங்கால் உகிர் விரல். (எரு)

464. வசந்த வருணனை வசந்த மாலை.

இது வசந்தமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) தென்றலை வருணித்து அந்தாதியாகப் பாடுதல் வசந்தமாலை யாம். (எ - று.) (எசு)

465. வெண்பா முதலா வேறே ரொன்பது
நண்பாக் கூற னவமணி மாலை.

இது நவமணிமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமும் ஒன்பதுற அந்தாதியாகப்பாடுதல் நவமணிமாலையாம். (எ - று.) (எஎ)

466. ஆனை யாயிர மமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி.

இது பரணிகொள்வோன் பெருமை கூறுகின்றது.

(இ - ள்.) போரிடை ஆயிரங் களிற்றியானைபட வென்ற வீரத்தன்மை யுள்ளோனுக்குப் பாடப்படுவது பரணி. (எ - று.) (எஅ)

467. கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கோடுங்காளி கோட்டங்
கடிகண முரைத்தல் காளிக் கிதுசோல
லடுபேய்க் கவள்சோல லதனுற் றலைவன்
வண்புக ழுரைத்த லெண்புறத் திணையுற
வீட்ட லடுகளம் வேட்ட லிவைமே
லளவடி முதலா வடியிரண் டாக
வுளமகிழ் பரணி யுரைக்கப் படுமே.

இது பரணி இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) கடவுள் வாழ்த்து முதற் களம்விரும்பல் ஈறாகச் சொல்லப் பட்ட பொருண்மேல் அளவடி முதலாக எனைத்துச் சீரானும் இரண்டடியாகக் கேட்டோர் உள்ளம் மகிழ்ச்சிகூரப் பெரும்புலவரால் உரைக்கப்படும் பரணி. (எ - று.)

'புறத்திணையுற ஈட்ட'லென்றதனாற் பாட்டுடைத் தலைமகனைச் சிறப்பித்த லும் அவன் எடுத்துச் செலவு முறைமையும் மேற்புறத்திணையிற் கூறிய முறையே செருமுடித்தலுங் கூழட்டலும் முதலாயினவெல்லாஞ் சொல்லப் படும். (எக)

468. நேரிசை வெண்பா வானிரு பன்பேறு
தசாங்கத் தினைச்சோல றசாங்கப் பத்தாம்.

இது தசாங்கப்பத்தாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) நேரிசை வெண்பாவாற் சிறப்புத்தோன்ற அரசன் படைத்த முற் (22) கூறிய தசாங்கத்தினைப் பத்துக் கவியாற் கூறுதல் தசாங்கப்பத்தாம். (எ - று.) (அ௦)

469. வெண்பாப் பத்துக் கலித்துறை பத்துப்
பண்புற மொழிதல் பதிற்றந் தாதி.

இது பதிற்றந்தாதியாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பத்துவெண்பா பத்துக்கலித்துறை பொருட்டன்மை தோன்றப் பாடுதல் பதிற்றந்தாதியாம். (எ - று.) (அக)

470. நூறு வெண்பா நூறு கலித்துறை
கூறுத னூற்றந் தாதிக் கோளே.

இது நூற்றந்தாதி இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) வெண்பா நூறு கலித்துறை நூறு அந்தாதித்தொடையாற் கூறுதல் நூற்றந்தாதியிலக்கணக் கொள்கையாம். (எ - று.) (அஉ)

471. கடவுள் காக்க வெனக்கவி யிருநான்
கடைவுற வகவல் விருத்த மதனால்
வகுப்ப தட்ட மங்கல மாகும்.

இஃது அட்டமங்கலமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) கடவுளைப் பாடி அக்கடவுள் காக்கவெனக் கவி எட்டாற் பொருளுற அகவல் விருத்தமதனாற் பாடப்படுவது அட்டமங்கலமாம். (எ-று.)

472. வெள்ளை கலித்துறை யகவல் விருத்த
மெள்ளலில் வண்ண மிவையோ ரைந்து
மலங்கார பஞ்சக மாகு மென்ப.

இஃது அலங்கார பஞ்சகத்தின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) வெண்பாவுங் கலித்துறையும் அகவலும் விருத்தமும் இகழ்தலாகாச் சந்தவிருத்தமுமாகிய இவை ஓரைந்தினையும் அந்தாதியாகப் பாடுதல் அலங்கார பஞ்சகமாமென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.) (அச)

473. அகவல் விருத்தங் கலித்தா ழிசையாற்
பொலிதரு கிளையொடும் புகலுவ தூசல்.

இஃது ஊசலாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஆசிரிய விருத்தத்தானுதல் கலித்தாழிசையானுதல் சுற்றத்தாரோடும் பொலிவதாகக் கூறுதல் ஊசலாம். (எ - று.) (அரு)

474. மிக்க நேரிசை வெண்பா வதனாற்
றக்க தசாங்கந் தன்னை நூறு
தொண்ணூ றெழுப தைம்பது முப்பஃ
தெண்ணப் பாடிற் சின்னப் பூவே.

இது சின்னப்பூவினது இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *சிறந்த நேரிசை வெண்பாவினாற் தகுதிபெற்ற தசாங்கத்தினை நூறு தொண்ணூறு எழுபது ஐம்பது முப்பது என்னும் எண்படப்பாடின் அது சின்னப்பூவாம்.* (எ - று.)

அரசனது சின்னங்களை விரித்துக்கூறுதலாற் சின்னப்பூவாயிற்று. (அசு)

475. விழையு மொருபொருண் மேலொரு நூறு
தழைய வுரைத்தல் சதக மென்ப.

இது சதகமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *கற்று வல்லோரால் விரும்பும் அகப்பொருளொன்றின்மேலா தல் புறப்பொருளொன்றின்மேலாதல் கற்பித்து நூறுகவி பாடுதலே சதகமாம்.* (எ - று.) (அஎ)

476. ஊரையும் பெயரையு முவந்தெண் ணாலே
சீரிதிற் பாடலெண் செய்யு ளாகும்.

இஃது எண்செய்யுளாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *பாட்டுடைத் தலைவன் ஊரினையும் பெயரினையும் உவந்து எண் ணாலே பத்துமுதல் ஆயிரமளவும் பொருட்சிறப்பினாலே பாடுதல் அவ்வவ் வெண்ணாற் பெயர்பெற்று நடக்கும் எண்செய்யுளாம்.* (எ - று.)

அவை முத்தொள்ளாயிரம் [1]அரும்பைத்தொள்ளாயிரம் முதலியன.

'சீரிதி'னென்றதனாற் செய்யுட்கிழமைப் பொருள்பற்றிப் பாரியது பாட்டு கபிலரது பாட்டெனச் செய்தோன் பெயர்பற்றி வருவனவுங் கொள்க. (அஅ)

477. உரிப்பொரு டோன்ற வோரைந் திணையுந்
தெரிப்ப தைந்திணைச் செய்யு ளாகும்.

இஃது ஐந்திணைச்செய்யுள் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *புணர்தல் முதலிய ஐந்து ஒழுக்கமும் விளங்குங் குறிஞ்சி முதலிய ஐந்து திணையினையுந் தெரித்துக் கூறுதல் ஐந்திணைச் செய்யுளாம்.* (எ - று.) (அகூ)

478. தேவ ரரசர் திறனே ரிசையான்
மேவுங் கடிகையின் மேற்சென் றதனை
நாலெட் டுறச்சொல னாழிகை வெண்பா.

இது நாழிகை வெண்பாவாமாறு கூறுகின்றது.

---

[1] *அரும்பைத் தொள்ளாயிரம், ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற நூல்.*

(இ - ள்.) தேவரிடத்தும் அரசரிடத்தும் நிகழுங்காரியங் கடிகையளவிற் தோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு வெண்பாக் கூறல் நாழிகைவெண்பா வாம். (எ - று.) (கூo)

479. கால மிடம்பொருள் கருதி நாற்பான்
சால வுரைத்த லுறுற் பதுவே.

இது நானாற்பதாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) காலமும் இடமும் பொருளும்பற்றி நாற்பது வெண்பாப் பொருந்தவுரைத்தல் நானாற்பதாம். (எ - று.)

காலம்பற்றி வருவது : கார்நாற்பது. இடம்பற்றி வருவது : களவழி நாற்பது. பொருள்பற்றி வருவன : இன்னாநாற்பது இனியா நாற்பதாம். இன்னா வாக்குதலை இன்னாவென்று இனிமையாக்குதலை இனியாவென்றுங் கூறினர்.

480. பணைமுலை நயனத் தினைப்பப் பத்தா
வணைவுறப் புகற லப்பத் தாகும்.

இது பயோதரப்பத்தும் நயனப்பத்துமாமாறு கூறுகின்றது.

பொருள் வெளிப்படை. (கூஉ)

481. வில்வாள் வேல்செங் கோன்மத மாபரி
நாடூர் கொடையை நயந்த பப்பத்து
விருத்த மொன்பதும் விளங்குமப் பெயரான்.

இது வின் முதலிய ஒன்பதுவகை விருத்தமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) வில்லினையும் வாளினையும் வேலினையுஞ் செங்கோலினையும் யானையினையுங் குதிரையினையும் நாட்டினையும் ஊரினையுங் கொடையினையும் பப்பத்தாகக்கூறும் ஒன்பதுவகை விருத்தமும் அவ்வப்பெயரான் விளங்கும். (எ - று.)

என்றது வில்விருத்தம் வாள்விருத்தம் வேல்விருத்தம் செங்கோல்விருத்தம் யானைவிருத்தம் குதிரைவிருத்தம் நாட்டுவிருத்தம் ஊர்விருத்தம் கொடைவிருத்தம் எனப் பெயர்பெற்று வழங்குவனவாமென்றவாறு. (கூங)

482. காப்பிய மிரண்டு மேற்புகன் றனவே.

இது காப்பியத்தின் இலக்கணம் மாட்டேற்றான் உணர்த்துகின்றது.

(இ - ள்.) பெருங் காப்பியத்தினுக்குங் காப்பியத்தினுக்கும் மேல் அணி யியலுட் (256, 258) கூறிப்போந்த இலக்கணமே ஈண்டைக்கும் உரிய இலக்கணமாம். (எ - று.) (கூச)

483. வளமட லுலாமட லுலாவனு ராக
மாலைமெய்க் கீர்த்தி புகழ்ச்சி மாலை
நாம மாலை தாரகை மாலை

யுற்பவ மாலை தானை மாலை
வரலாற்று வஞ்சி செருக்கள வஞ்சி
பலபொருள் வஞ்சி நிலைபெறு குழமகன்
பாதாதி கேசங் கேசாதி பாத
முவாத்தொழில் கூத்தர் முதலோர் தம்மை
யாற்றுப் படுத்தறு தாகு மிருதிணை
போற்றுமஞ் சரியெனப் புலவர் நிலைபெறச்
சாற்றப் படுமத் தனிநிலைச் செய்யுள்.

இது தனிநிலைச் செய்யுள் கூறுவான் தொடங்கியவற்றுள் இஃது அது பெறும் பெயர் வேற்றுமையான் அதன்விரி இத்துணைத்தென்கின்றது.

(இ - ள்.) *வளமடல் முதல் மஞ்சரி ஈறுகச் சொல்லப்பட்ட இருபத்திரண்டும் அதன் விரியாம்.* (எ - று.) (கூரு)

484. அறம்பொருள் வீடெனு மம்முக் கூற்றின்
றிறங்கடிந் தரிவையர் திறத்துறு மின்பம்
பயனெனக் கலிவெண் பாவாற் றலைவன்
பெயரேது கையினிற் பேசுதல் வளமடல்.

இது வளமடல் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *அறனும் பொருளும் வீடுமென்று கூறும் அம்மூன்று கூறு பாட்டின் பயனை எள்ளி மங்கையரைச் சேர்தலான் உளவாகிய மெல்லிய காம வின்பத்தினையே பயனெனக்கொண்டு தனிச் சொலின்றி இன்னிசைக்கலி வெண்பாவாற் றலைவன் இயற்பெயர் எதுகையின் அப்பொருண் முற்றப் பாடுதல் இன்பமடலாம்.* (எ - று.) (கூசு)

485. கனவி னொருத்தியைக் கண்டு புணர்ந்தோ
னனவி னவள்பொருட் டாக நானே
யூர்வேன் மடலென் றுரைப்ப துலாமடல்.

இஃது உலாமடல் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *சாக்கிரத்துநின்று நழுவிய சொப்பனத்தின் ஒரு பெண்ணைக் கண்டு கலவியின்பம் நுகர்ந்தோன் விழித்தபின் அவள் பொருட்டாக மட லூர்வேனென்று கலிவெண்பாற் சாற்றுதல் உலாமடலாம்.* (எ - று.)

கலிவெண்பாவென்பது அதிகாரத்தான் வருவித்துரைக்கப்பட்டது. (கூஎ)

486. குழமக னைக்கலி வெண்பாக் கொண்டு
விழைதோல் குடிமுதல் விளங்க வுரைத்தாங்
கிழைபுனை நல்லா ரிவர்மணி மறுகின்

மற்றவன் பவனி வரவேழ் பருவ
முற்றமா ளூர்தொழப் போந்த துலாவாம்.

இஃது உலா இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) இளமைப்பருவமுற்ற தலைவனைக் குலத்தானுங் குடிப்பிறப்பானும் மங்கலங்களானும் பரம்பரையானும் இன்னானென்பது தோன்றக்கூறி, அணிகலன்களான் அலங்கரித்துக்கொண்டு முதன்மையெய்திய மாளுர் நெருங்கிய அழகிய வீதியிடத்து அன்னோன் பவனிவரப், பேதை முதலிய ஏழ்பருவ மாளுர் கண்டுதொழ உலாவந்தது உலாவாம். (எ - று.)

" சுடர்த்தொடியார் வீதியிலே தோன்றுதலும் "[1] என்றார் பிறரும். (கூஅ)

487. ஐந்து முதலே ழாண்டும் பேதை. (கூகூ)

488. எட்டு முதனான் காண்டும் பெதும்பை. (கoo)

489. ஆறிரண் டோன்றே யாகு மங்கை. (கoக)

490. பதினான் காதிபத் தோன்பான் காறு
மெதிர்தரு மடந்தைமே லாறு மரிவை. (கoஉ)

491. ஆறு தலையிட்ட விருபதின் மேலோ
ராறுந் தெரிவையெண் ணைந்துபே ரிளம்பெணென்
றேரும் பருவத் தோர்க்குரைத் தனரே.

இவ்வைந்து சூத்திரமும் வெளிப்படை. (கoரு)

492. கனவி னொருத்தியைக் கண்டுகேட் டுண்டுயிர்த்
தினிதிற் புணர்ந்ததை யின்னுயிர்ப் பாங்கற்கு
நனவி னுரைத்த லனுராக மாலை.

இஃது அனுராகமாலையாமாறு கூறுகின்றது.

பொருள் வெளிப்படை. இவை மூன்றும் நேரிசைக் கலிவெண்பாவென்று அறிக. (கoசு)

493. சொற்சீ ரடியாற் றொழிற்படு கீர்த்தியைப்
பொற்புற மொழிதன்மெய்க் கீர்த்தி மாலை.

இது மெய்க்கீர்த்திமாலையின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) சொற்சீரடியென்னுங் கட்டுரைச்செய்யுளாற் குலமுறையிற் செய்த கீர்த்தியை அழகுற மொழிதல மெய்க்கீர்த்திமாலையாம். (எ - று.) (கoரு)

494. மயக்க வடிபெறு வஞ்சிப் பாவால்
வியத்தகு நல்லார் விழுச்சீ ருரைத்தல்

---

[1] விக்கிரம சோழனுலா.

புகழ்ச்சி மாலை புருடர்க் குரைப்பி
னும மாலை யாமென நவில்வர்.

இது புகழ்ச்சிமாலையும் நாமமாலையுமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *அகவலடியுங் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவால் வியக்கத்தகும் நல்லாரது விழுமிய சிறப்பைக்கூறுதல் புகழ்ச்சி மாலையாம் ; அவ்வஞ்சிப்பாவால் ஆண்மகனைப் புகழ்ந்துபாடுதல் நாமமாலையாமென்று கூறுவர் புலவர்.* (எ - று.) (கoசு)

495. வகுப்பாற் கற்புடை மகளிர்க் குள்ள
தகைத்திறங் கூறுத றாரகை மாலை.

இது தாரகை மாலை இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *வகுப்பினால் அருந்ததிக்கற்பின் மகளிர்க்குள்ள இயற்கைக் குணங்களைக் கூறுதல் தாரகை மாலையாம்.* (எ - று.) (கoஎ)

496. அரிபிறப் பொருபது மகவல் விருத்தத்
துரிதிற் புகற லுற்பவ மாலை.

இஃது உற்பவமாலையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *மாயன் பிறப்புப் பத்தினையும் அகவல் விருத்தத்தாற் கூறல் உற்பவமாலையாம்.* (எ - று.) (கoஅ)

497. ஆசற வுணர்ந்த வரசர் பாவாற்
றூசிப் படையைச் சொல்வது தானை
மாலை யாகும் வரலாற்று வஞ்சி
ஞாலமேற் றானை நடப்பது சொல்லின்
செருக்களங் கூறிற் செருக்கள வஞ்சி
விரித்தொரு பொருளை விளம்பினப் பெயராம்.

இது தானைமாலையும் வரலாற்று வஞ்சியுஞ் செருக்கள வஞ்சியும் பொருள் வஞ்சியுமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *அகவலோசையிற் பிறழாது உயர்ந்த அரசர்க்கு உரிய ஆசிரியப் பாவால் முன்னரெடுத்துச் செல்லுங் கொடிப்படையைச் சொல்வது தானை மாலையாகும் ; போர்க்களத்திற் செல்லும் படையெழுச்சியைக் கூறின் வரலாற்று வஞ்சியாம் ; செருக்களத்தினைக் கூறிற் செருக்கள வஞ்சியென்னும் பெயர் பெறும் ; ஏனைப் புறத்திணைக்கட் டுறைத்திக் கூறுந் துறைப்பொருளை விரித்துக்கூறின் அத்துறைப் பெயர் பெறும்.* (எ - று.) (கoகூ)

498. கலிவெண் பாவாற் கையினிற் கண்ட
குழமக னைச்சொலிற் குழமக னாகும்.

இது குழமகனாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) கலிவெண்பாவினுன் மங்கைமார் தங் கையிற்கண்ட இளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து பாடிற் குழமகனும். (எ - று.) (கக0)

499. அடிமுதன் முடியளவாக வின்சொற்
படர்வுறு கலிவெண் பாவாற் கூறல்
பாதாதி கேசங் கேசாதி பாத
மோதினப் பெயரா னுரைக்கப் படுமே.

இது பாதாதி கேசமுங் கேசாதி பாதமுமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) கலி வெண்பாவாற் பாதமுதல் முடியளவுங் கூறல் பாதாதி கேசமாம்; முடிமுதல் அடியளவுங் கூறல் கேசாதி பாதமாமென்று கூறப் படும். (எ - று.) (கக்க)

500. நிலமெழி லுயர நேர்ந்த வயது
குலமள விலக்கண மும்மதங் கோட
லடுத்திடிற் கோறல்கண் டரசனை யறித
ரேடுத்தல் வஞ்சி யானைத் தொழிலாம்.

இஃது யானைத்தொழிலாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) கிரிசரம் நதிசரம் வனசரமாகிய நிலம், அவயவங்களின் அழகு, எழுமுழவுயரங், தருண வயது, பிறந்த நிலத்தான் வீரம் பெறுங் குலநன்மை, ஒன்பதுமுழ நீளமும் முப்பத்திரண்டு முழச் சுற்றும் உடைத்தாய இலக்கணம், மும்மதங் கோடல், அடுத்தபொழுதிற் கோறல், அரசனைக் கண்டறிதல் இவை யிற்றை வஞ்சிப்பாவாற் றொடுத்துப் பாடுதல் யானைத்தொழிலாம். (எ-று.) ()

501. அரசர் பாவா லாற்றுப் படையே
லுரைசெய் தவையென் ரோர்ந்தனர் கொளலே.

இஃது ஆற்றுப்படை யிலக்கணம் மாட்டேற்ருன் உணர்த்துகின்றது.

(இ - ள்.) ஆற்றுப்படையாவது மேலே புறத்திணையின்கட்,

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரத் " —[தொல். பொ. சூ - 91]

தெரித்த ஆற்றுப்படை யெனக் கூறிய பொருண்மேல் ஆசிரியப்பாவாற் சொல்லைச் சேர்த்துப் பாடப்படுவதென்று ஆராய்ந்துகொள்க. (எ - று.)

ஓர்ந்துகொள்கவென முற்றெச்சமாக்கிக் கொள்க. (ககஙு)

502. பயிறருங் கலிவெண் பாவி னலே
யுயர்திணைப் பொருளையு மஃறிணைப் பொருளையுஞ்

சந்தின் விடுத்தன் முந்துறு தூதெனப்
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே.

இது தூதிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *அகலக்கவியிற் பயின்றுவருங் கலி வெண்பாவினாலே பாணன் முதலாகப் பாங்கன் ஈறாக விடுக்கும் உயர்திணையிருபாலினையும், கேளாமரபின வற்றைக் கேட்பனவாகக் கூறிவிடுக்கும் அன்னமுங் கிளியும் வண்டும் மயிலுங் குயிலும் முதலாயின அஃறிணைப் பொருளையும், இளையகலாம் முதியகலாம் இவற்றின் துனிநீங்கற்கு வாயிலாக விடுத்தல் முன்னர் உடன்படுத்துந் தூதெனப் பாட்டிலக்கணத்தை உணர்ந்த புலவர் ஆராய்ந்து கூறினார்.*(எ - று.)

இத்துணையும் அகலக்கவியிலக்கணங் கூறினார். (கக௪)

503. அகப்பொருள் கூறு மாசிரி யத்துட்
புகப்பெறு வஞ்சி யடிபொரு ளன்றி
மிகக்கலி வாரா மேவும் வஞ்சி
தொகைப்பெறு தனித்துச் சொல்லப் படுமே.

இது மேற்கூறப்பட்ட அகலக்கவிகளிற் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ - ள்.) *அகப்பொருளைக்கூறும் ஆசிரியப்பாவினுள் வஞ்சியடி உற லாகா ; அவ்வகப்பொருளினன்றி ஏனைப்பொருண்மேற் பெரும்பான்மையுங் கலிவாரா ; வஞ்சிப்பாத் தொகைபெற்று நிற்கப்பெறு, தனித்துச் சொல்லப் படும்.* (எ - று.) (கக௫)

504. பொருளிடங் காலந் தொழிலுறுப் பெல்லை
செய்தோன் செய்வித் தோன்பெய ராலே
யெய்து மகலக் கவிக்கிரும் பெயரே.

இஃது அகலக்கவியுட் சிலவற்றிற்குப் பெயராமாறு விதந்துகூறுகின்றது.

(இ - ள்.) *பொருளானும் இடத்தானுங் காலத்தானுந் தொழிலானும் உறுப்பானும் அளவானுஞ் செய்தோன் பெயரானுஞ் செய்வித்தோன் பெய ரானும் அகலக்கவி பெயர்பெறும்.* (எ - று.)

பொருள்பற்றி வந்தன: ஆசாரக்கோவை முதலியன; இடம்பற்றி வந்தன: மதுரைக்காஞ்சி பட்டினப்பாலை என்பன ; காலம்பற்றி வந்தன : வேனில் விருத்தம் வசந்தமாலை என்பன ; தொழில்பற்றி வந்தன : யானைத்தொழில் ஊசல் முதலியன ; உறுப்புப்பற்றி வந்தன : பயோதரப்பத்து நயனப்பத்து முதலியன ; எல்லைப்பற்றி வந்தன : பாதாதிகேசங் கேசாதிபாதம் முதலியன ; செய்தோன் பெயர்பற்றி வந்தன: அகத்தியம் தொல்காப்பியம் முதலியன; செய் வித்தோன் பெயரான் வந்தன: பாண்டிக்கோவை முதலியன. பிறவும் அன்ன.

505. மறையோர் மன்னர் வணிகர் சூத்திரர்க்கு
முறையான் வெள்ளை முதனுன் கெய்தும்.

இது செய்யுளியலுட் கூறிய வெண்பா முதலிய நான்கு பாவிற்கும் வருண உரிமை கூறுகின்றது.

(இ - ள்.) *அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்க்கும் முறையானே வெண்பா அந்தணர்க்கு உரிய பாவென்றும் அகவல் அரசர்க்கு உரிய பாவென்றுங் கலிப்பா வணிகர்க்கு உரிய பாவென்றும் வஞ்சிப்பா சூத்திரர்க்கு உரிய பாவென்றும் பெயர்பெற்று நடக்கும். (எ - று.)* (கஎ)

506. முல்லை குறிஞ்சி மருத நெய்தல்
வெள்ளை முதற்பா வினுக்குரி யனவே.

இது நான்கு பாவிற்குந் திணையுரிமை கூறுகின்றது.

(இ - ள்.) *முல்லைத்திணைக்கு வெண்பாவுங் குறிஞ்சித்திணைக்கு ஆசிரியப் பாவும் மருதத்திணைக்குக் கலிப்பாவும் நெய்தற்றிணைக்கு வஞ்சிப்பாவும் உரியவாம். (எ - று.)*

குறிஞ்சித்திணை முற்கூறப்பெருத முறையல கூற்ருனே பாலைத்திணைக்கு மருட்பா உரித்தாதல் கொள்க. (கஅ)

507. வெண்மை செம்மை கருமை பொன்மை
யுண்மை நிறம்பா வொருநான் கினுக்கே.

இது நான்கு பாவிற்கும் நிறவுரிமை கூறுகின்றது.

(இ - ள்.) *வெண்பா முதல் நான்குபாவிற்கும் முறையானே வெண்மை யுஞ் செம்மையுங் கருமையும் பொன்மையும் உரியவாம். (எ - று.)* (ககூ)

508. கார்த்திகை முதலாக் கட்செவி காறுஞ்
சீர்த்தகு வெண்பாச் சிறந்த நாளே.

இது நான்குபாவிற்கும் நாளுரிமை கூறுவனவற்றுள் வெண்பாவுக்கு உரிய நாள் இவையென்கின்றது.

(இ - ள்.) *கார்த்திகை முதலாக ஆயிலியம் ஈருக ஏழுநாளுஞ் சிறப்புடைய வெண்பாவுக்குச் சிறந்த நாட்களாம். (எ - று.)* (கஉ0)

509. மகமுதல் விசாக வரையக வற்கும்
பனைமுதற் புள்வரை பகர்ந்திடு கலிக்குஞ்
சதய முதற்சோ றளவும் வஞ்சிக்கு
முரிய வென்ப வுணர்ந்திசி னேரே.

இஃது ஏனைய மூன்று பாவிற்கும் நாளுரிமை கூறுகின்றது.

(இ - ள்.) *மகம் முதல் விசாகம் வரை ஏழுநாளும் அரசர்பாவுக்கும் அனுடம் முதல் அவிட்டங்காறும் ஏழுநாளுங் கலிப்பாவுக்கும் சதயம் முதற் பரணிவரை ஆறுநாளும் வஞ்சிப்பாவுக்கும் உரிய நாளாம். (எ - று.)* (கஉக)

510. கற்கட கந்தேண் மீன மூன்று
முற்படு பாவி னிற்படு மிராசி
மேடமுஞ் சிங்கமும் வேணுவு மகவற்
பாடுறு மிதுனமுந் துலையுங் கும்பமுங்
கலிக்குரித் தாகு மிடபமுங் கன்னியு
மொலிப்படு மகரமும் வஞ்சிக் குரிய.

இது நான்குபாவுக்கும் இராசியுரிமை கூறுகின்றது.

பொருள் வெளிப்படை.

நாளும் இராசியுங் கூறியமுறையாற் பாட்டுடைத்தலைவன் பெயர்க்குப் பொருத்தமுடையன கொண்டு பாடுகவென்பது பயன்.

511. திங்கள் வியாழஞ் செங்கதிர் செவ்வாய்
புந்திகன் மந்தன் புகர்பெறும் பாந்தள்
வெள்ளை முதலன் கினுக்கு மிரண்டிரண்
டேள்ளா வகையாற் கோள்ளுங் கோளே.

இது நான்குபாவிற்குங் கோளுரிமை கூறுகின்றது.

(இ - ள்.) *சந்திரனும் பிரகஸ்பதியும் வெண்பாவுக்கு உரியோர் ; ஆதித்தனுஞ் செவ்வாயும் ஆசிரியப்பாவுக்கு உரியோர் ; புதனுஞ் சனியுங் கலிப்பாவிற்கு உரியோர் ; சுக்கிரனும் பாம்பும் வஞ்சிப்பாவுக்கு உரியோர்.* (எ - று.)

இதுவும் உரிமையறிந்து கூறுகவென்பது பயன். (கஉரு)

512. பூவுஞ் சாந்துங் கலையு மணியும்
பாவுறு நிறமேனப் பாத்தனர் கோளலே.

இது நான்குபாவிற்கும் உரிய கோள்களின் பூவும் சாந்தும் கலையும் கலனும் இப்பண்பின என்கின்றது.

(இ - ள்.) *சூடுவன பூவும் பூசுவன சாந்தும் உடுப்பன கலையும் அலங்கரிப்பன அணியும் வெள்ளையுஞ் சிவப்புங் கருமையும் பொன்மை நிறமுமாம்.* (எ - று.) (கஉச)

513. தலைவன் பேரூர் சாதித் தேதுகையி
னிலையுற லனுவி னிறுத்தல் சிறப்பே.

இது மேற்கூறிப்போந்த கவிக்கு ஓர் சிறப்புக் கூறுகின்றது.

(இ - ள்.) *பாட்டுடைத்தலைவன் இயற்பெயரையும் ஊர்ப்பெயரையும் உகந்து எதுகையினிலையுறல் அனுவெழுத்தினிலையுறலாகப் பாடுதல் சிறப்பு.* (எ - று.) (கஉரு)

514. தேளிந்த வழக்கோடு சிறந்த போருள்படூஉ
மின்ப மோரீஇவட வேழுத்தே மிக்கு

முதிர்சோற் புணர்க்கா தெதிர்சோற் புணர்த்து
மாலுறச்செய்தல் வழுவா மென்பர்.

இது மேலனவற்றிற்கெல்லாம் வழு இவை யென்கின்றது.

(இ - ள்.) *பலரானும் உடன்பட்ட வழக்கோடு நூற்பயன் பயக்கும் இன்பத்தினைவிட்டு மறுதலையாற் புணர்த்தலும் வடவெழுத்தே மிகப்புணர்த்தலும் பழையோர் கூறிய இலக்கணச் சொற்களைவிட்டுக் காலத்தாற் கூறும் வழூஉச்சொற்புணர்த்தலும் வினவின்றி மயங்கக் கூறுதலுஞ் செய்யுட்கு வழுவென்று கூறுவர் புலவர்.* (எ - று.)

என்னை ?

" *ஆதி முதல்வ னோதி வகுத்த*
வறுவகை மரபி னானந் தம்மே
லெழுவகைப் பட்டசொல் வழுவு மொரீஇ
இயம்பா வேழும் யாப்பினு மிழுக்காது
பாடுக வென்று கூறினர் புலவர் "

என்பது வருணர் பாட்டியலாகலின். (கஉசு)

515. உறுபுக ழாக்கிய வரவோர் கூறிய
வறுவகை யானுறு மானந் தந்தா
மியனெறி திரிந்த வெழுத்தா னந்தமுஞ்
சொன்முறை வழீஇய சொல்லா னந்தமும்
புகழ்ச்சிநிலை திரிந்த பொருளா னந்தமும்
யாப்புநிலை திரிந்த யாப்பா னந்தமும்
தூக்குநிலை திரிந்த தூக்கா னந்தமும்
தொடையியல் திரிந்த தொடையா னந்தமு
நடையறி புலவர் நவையிவை யென்ப.

இஃது இயற்பெயர்க்கண் விலக்கப்படும் ஆனந்தம் இவையென்கின்றது.

(இ - ள்.) *நிலவுலகிற் பெரிய புகழுடம்பு நிலையுதலுறத் தேவருலகிற் தேவருடம்போடு கூடிய அறிவுடையோர் கூறிய அறுவகைப்பட்ட ஆனந்த மாவன :—எழுத்தியலில் திரிந்த எழுத்தானந்தமுஞ் சொல்லியலிற் திரிந்த சொல்லானந்தமும் புகழ்வசையாய்த் திரிந்த பொருளானந்தமும் யாப்பென்னும் உறுப்பிற் திரிந்த யாப்பானந்தமும் தூக்கென்னும் உறுப்பிற்றிரிந்த தூக்கானந்தமும் தொடையுறுப்பிற் திரிந்த தொடையானந்தமுமாம். இலக்கிய நடையும் இலக்கண நடையும் ஆராய்ந்த புலவர் அவ்வானந்தக் களிப்பிற் பெயர் சார்ந்து வாராமல் நீக்குதலை விரும்புப.* (எ - று.)

அதிகாரத்தான் இயற்பெயர் வருவிக்கப்பட்டது ; என்னை ?

“ இயற்பெயர் சார்த்தி யெழுத்தள பெழினே
யியற்பா டில்லா வெழுத்தா னந்தம் ” —[யா. வி. பக். 45]

“ இயற்பெயர் மருங்கின் மங்கல மழியத்
தொழிற்சொற் புணர்ப்பினது சொல்லா னந்தம்”—[ஷை 519]

“ புகழ்ச்சிப் பொருளை யூறுபடக் கிளப்பினும்
புகழ்ச்சிக் கிளவியது பொருந்தக் கூறினு
மூவர் காட்சியி னூனந் தோன்றினு
மிவைபல பிறவு மின்னவை யின்வரி
னவமொழி யாக்கும் பொருளா னந்தம் ”

“ முதற்றொடை மயங்கின மொழியரி றாத்திருப்
பெயரிடைப் படுத்த வழியிரு பாட்டினுள்
வாய்ப்ப நோக்கி வல்லோர் கூறிய
தியாப்பா னந்தமென் றியம்பல் வேண்டும் ”

“ பாவகை யொருவனைப் பாடுங் காலைத்
தொடைவகை யிடையின் வந்தபெயர் தோற்றி
யேங்கினு மெழுத்துப் பிரிந்தி சைப்பினுந்
தூங்கினுஞ் சுழலினுந் தூக்கா னந்தம் ”

“ அளபெடை மருங்கின் பாடுவோன் பெயரொடு
பிறப்பின் வழாஅத் தொடைவரத் தொடுப்பின்
தொடையா னந்தமெனத் துணிதல் வேண்டும் ”

என ஆசிரியர் அகத்தியனார் ஆனந்தவோத்துட் கூறுதலான் அறிக.

எழுத்தானந்தத்திற்குச் செய்யுள் :—

“ ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாந்
தோழி துணையாத் துயர்தீர்வன்—றோழி
நறுமாலை தாவு திரையவோஓ வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போழ்து ” —[யா. வி. பக். 45]

இதனுட் திரையவோஓ என்னும் இயற்பெயர் மருங்கின் எழுத்து அளபெழுந்து எழுத்தானந்தமாயிற்று. சொல்லானந்தத்திற்குச் செய்யுள் :—

“ என்னிற் பொலிந்த திவள்முக மென்றெண்ணித்
தன்னிற் குறைபடுவான் றண்மதிய—மின்னி
விரிந்திலங்கும் வெண்குடைக்கீழ்ச் செங்கோல் விசய
னெரிந்திலங்கும் வேல்கொண் டெழும் ”—[யா. வி. பக். 519]

இதனுள் விசயன் எரிந்தென இயற்பெயர் மருங்கின் அமங்கலமான தொழிற்சொல் வந்து சொல்லானந்தமாயிற்று.

பொருளானந்தத்திற்குச் செய்யுள் :—

" முரணில் பொதிய முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—யரணிலா
வானந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
றானந்தஞ் சேர்க சுவா கா " —[நக்கீரரங்கதம்]

இதனுட் புகழ்ச்சிப்பொருளை ஊறுபடக்கூறிப் பொருளானந்தமாயிற்று. ஏனையவும் வந்துழிக் காண்க. (கஉஎ)

516. அவையடக் கியலே யரிறபத் தெரியின்
வல்லோன் கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.

இது செய்யுட் செய்யும் புலவர்க்கு வேண்டுவதாயதோர் ஒழிபு அவை யடக்கங் கூறுகின்றது.

(இ - ள்.) அவையடக்கங்கூறும் இலக்கணத்தைக் குற்றமற ஆராய்ந்து கூறிற் கற்றுவல்லோன் நாற்பொருளையும் அறிந்து கூறுமாயினும் அவையினுள் ளார்க்குத் தான் குறைபாடுடையனாக நீயிர் குற்றங்களைந்து ஆக்கிக்கொள்வீ ரென்று வழிபடுசொல்லாற் கூறுவதாம். (எ - று.)

உதாரணம் :—

" கற்பா லுமிழ்ந்த மணியுங் கழுவாது விட்டா
னற்பாலழியு நகைவெண்மதி போனிறைந்த
சொற்பாலுமிழ்ந்த மறுவும்மதி யாற்கழூஉவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமைமிக்கார்"—[சீவக. 4]

எனவும்,

" சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமா
யிருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றேவிவ் விருநிலமே "

எனவுங் கூறியவாற்றான் உணர்க. —[யா. கா. சூ. 3]

இச்சூத்திரஞ் சிங்கநோக்காய் நின்றது.

இத்துணையும் அளவியற்படச் செய்யுளியலுட் கூறிப்போந்த செய்யு ளின்கட் கிடக்கும் இலக்கணங்களைத் தொகுத்தும் வகுத்தும் விரித்துங் கூறி அளவியற்படாச் செய்யுளிலக்கணக் கூறுகின்றார் ; என்னை ?

" எழுநிலத் தெழுந்த செய்யுட் டெரியி
னடிவரை யில்லன வாறென மொழிப "

“ அவைதாம், நூலி னான வுரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
வேது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான”—[தொல்.பொருள்.சூ.476-7]

என ஆசிரியர் தொல்காப்பியனார் எடுத்தோதலானென்று உணர்க. (கஉஅ)

517. பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே.

இது நூன்முகமென்று சொல்லப்பட்ட பாயிரம் இத்துணைத் தென்கின்றது.

(இ - ள்.) பாயிரமாவது எல்லா நூன்முகத்து உரைக்கப்படும் பொதுப் பாயிரமும் தன்னூற்கு இன்றியமையாச் சிறப்புப்பாயிரமுமென இரண்டு பகுதியினையுடைத்து. (எ - று.)

இதன்விரி எழுத்தோத்தினுட் கூறியவாற்றான் உணர்க. (கஉகூ)

518. நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
யீரைங் குற்றமு மின்றி நேரிதி
னெண்ணான் குத்தி யண்ணுத லுடைத்தா
யொருபொரு ணுதலிய சூத்திரத் தானு
மினமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானு
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுந்
தோன்று மென்னச் சொல்லினர் புலவர்.

நிறுத்த முறையானே நூலின் இலக்கணங் கூறுவான் புகுந்தவற்றுள் இஃது அதன் பொது இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) நூலென்று சிறப்பித்துச் சொல்லப்படுவதனைக் கூறு மிடத்து, முதல் தொடங்கி முடிவளவும் மாறுகோளுறக் கிடத்தலின்றித், தொகையானும் வகையானும் பொருட்டன்மையை விளக்கித், தன் கண்ணினின்றும் அகன்ற உரைக்கூறுபாடுகளோடு பொருந்திப் பத்துவகைக் குற்றமும் இலதாய், நேர்மையான முப்பத்திரண்டு தந்திரவுத்தியோடும் அணுகுதலுடைத்தாய், ஒரு பொருள் குறித்துவருஞ் சூத்திரத்தானும் இனப்பொருளையுணர்த்தும் இயலானும் பலபொருட்கும் பொதுவாகிய இலக்கணங்களைக்கூறும் படலத் தானும் படலமும் ஓத்துஞ் சூத்திரமுமாகிய மூன்றுறுப்பினையும் அடக்கிய பிண்டத்தானும் விளங்கித் தோன்றுமென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.)

519. அவற்றுட்,
சூத்திரந்தானே
யாடி நிழலி னறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருணனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே.

இது சூத்திரத்தின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *ஒரு பொருணுதலிய சூத்திரமாவது கண்ணாடி சிறிதாயினும் பெரியபொருள் முழுதினையும் தோற்றுவித்தல்போலச் சில்வகை எழுத்தாயினுந் தன்கண் அகன்றபொருள் சொல்லான் விளங்கத் தோன்றி உய்த்துணர்ச்சியின்றித் தொடர்மொழிப் பொருள்படத் தொகைவகை விரியென்னும் இலக்கணத்துள் ஒன்றுபயப்பத் தொடர்ச்சிகொண்டு செய்யப்படுவது.* (எ-று.)

520. யாற்ற தொழுக்கே தேரைப் பாய்வே
சீய நோக்கே பருந்தின் வீழ்வென்
றுவகை நான்கே கிடக்கை முறையே.

இது மேற்கூறிய சூத்திரத்தின் கிடக்கைமுறை கூறுகின்றது.

(இ - ள்.) *நிறுத்த முறையே கூறுதலும் இடைவிட்டுக் கூறுதலும் முன்னும் பின்னும் பொருளெய்தக் கூறுதலும் நடுக்கொண்டு கூறுதலுமென நான்கு கூற்றே சூத்திரத்தின் கிடக்கைமுறைமை.* (எ - று.) (கா௨)

521. உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்
புரைதப வுடம்படக் காண்டிகை புணர்ப்பினும்
விளம்பலும் விலக்கலு முரையோர் வகையொடு
புரைதப நாடிப் புணர்க்கவும் பட்டுச்
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
யளக்க லாகா வரும்பொருட் டாதல்
சூத்திரத் தழகென யாத்தனர் புலவர்.

இது மேற்கூறிய சூத்திரத்திற்கு ஓர் சிறப்புக்கூறுகின்றது.

(இ - ள்.) *சூத்திரத்திற்கு முன் உளவாகிச் சுவைபடநின்ற கட்டுரையைச் சூத்திரமாகக் கொண்டு செய்தலும் காண்டிகையுரையைக் குற்றமற்ற சூத்திரமாகச் செய்தலுங் கருத்துப்பொருளாய்க் கிடந்ததனை எடுத்துக் கூறலும் எய்தியதனை விலக்கிக் கூறுதலும் நால்வகையுரையான் ஒருந் திறத்துடனே குற்றமற நாடிப் புணர்க்கப் படுதலுஞ் சில்வகைப்பட்ட எழுத்துக்களாற் சுருங்கக்*

செய்தலுடைத்தாகி ஆசிரியன் முதலியோர் கூற்றுவகையான் உரைக்கு மிடத்து முறைபிறழாமல் அடக்கிச் சொல்லுதலுற்று நுண்ணிய பொருளோடு புணர்ந்ததனுன் உபகாரமுடைத்தாகிப் பிறராற் பெயர்க்கப்படாத நிலைமைத் தாய் அளவுபடாத அரும் பொருளினையுடைத்தாதல் சூத்திரத்திற்குச் சிறந்த வனப்பாமென்று வகுத்துக் கூறுவர் புலவர். (எ - று.)

சூத்திரத்திற்குமுன் உரையெடுத்து யாப்பினுமென மாறிக்கூட்டுக. யாப்பினும் புணர்ப்பினும் என்பன அழகென்பதனோடு புணர்க்கப்பட்டுச் செய் யுட்டாகி அடக்கி ஆகி எய்தி என்பன ஆதலென்பதனோடு முடிந்தன. உடம்பட வென்பது எல்லாரும் உடன்படச் செய்தலென்க. ஈண்டுக் கூறிய செய்யு ளென்பது செய்தற்றொழின்மேல் நின்றது. தொழிற்பெயராமென்க. (கஙு)

522. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

இஃது இயலின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) இனமொழிகிளந்த ஒத்தாவது சிதர்ந்துகிடப்பனவற்றைப் பல ஒத்தாகச் செய்யாது ஒத்தமணிகளை ஒருகோவையுறச் செய்தாற்போல ஓரினப் பொருளையெல்லாம் ஓரிடத்தே தொகுத்துக் கூறுவது ஒத்தாம். (எ - று.)

நேரினமணியெனவே ஒரு சாதியாயினுந் தம்மின் ஒத்தனவென்பதாம்.

523. ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

இது படலத்தின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) ஒரு நெறியன்வன்றிப் பல்வேறு வகையவாம் எழுத்திலக்கணத் தினையுஞ் சொல்லிலக்கணத்தினையும் பொருளிலக்கணத்தினையும் பொருளென் பதோர் முறைமைபற்றி இயைபுநோக்கிப் பொதுவகையாற் தொகுத்துக் கூறு வது படலமாம். (எ - று.) (கஙு)

படலமெனினும் அதிகாரமெனினும் ஒக்கும்.

524. மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற்
றோன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப.

இது பிண்டத்தின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) சூத்திரமும் ஒத்தும் படலமும் என்னும் மூன்றுறுப்பினையும் அகப்படுத்தி நிற்குந் தன்மையுடைத்தாயின் அதனை உலகினின்றும் விளங்கும் மொழியைக்கூறும் புலவர் பிண்டமென்று கூறுவர். (எ - று.)

உறுப்படக்கியபிண்டமெனவே பிண்டமென்பது ஓர் முதலென்பதாம். அப்பிண்டமும் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்னும் முத்தமிழை

யுங் கூறும் அகத்தியத்திற்குறுப்பாதலாற் பிண்டமென்பது முதலாமாறென்னை யெனின்,

"முதலிவை சினையிவை யெனவே றுளவில
வுரைப்போர் குறிப்பி னவற்றே பிண்டமும்" —[இ.வி.சூ.222]

என்றதனாற் சொல்லுவான் கருத்தொடுபட்டு முதலென்றார். எனவே படல மென்பது இரண்டுறுப்படக்கியதெனவும் இயலென்பது ஒருறுப்பு அடக்கியதெனவுமாயின. (கருசு)

525. ஈரைங் குற்றமு நேரிதி னுடிற்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
பொருளில மொழிதன் மயங்கக் கூறல்
கேட்டோர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியா னிழுக்கங் கூறல்
தன்னா னொருபொருள் கருதிக் கூற
லென்ன வகையினு மனங்கோ ளின்மை
யன்ன பிறவு மவற்றுவிரி யாகும்.

இஃது ஈரைங்குற்றமாவன இவையென்கின்றது.

(இ - ள்.) பத்துவகைக் குற்றத்தினையும் நேர்மையான் ஆராயுமிடத்து முன்னர்க் கூறிய பொருளைப் பின்னர்க் கூறுதலும் முன்னர்க் கூறியதற்குப் பின்னர் மாறுபடக் கூறுதலுங் குறைபாடுறக் கூறுதலும் ஒரு பொருட்கு இலக்கணங் கூறுமிடத்துப் பொருட்குச் சிறப்பிலக்கணந்தோன்றக் கூறாது ஏனைப்பொருட்கண்ணுஞ் செல்லும் பொது இலக்கணத்தாற்கூறுதலும் கூறும் பொருள் பெறாமற்கூறுதலுந் தெளிவுறாமற் கவர்படுமொழியால் மயங்கக்கூறுதலுங் கேட்டோர்க்கு இன்னாப்பொருளாய்த் தொடர்ச்சியின்றிக் கூறுதலும் பழிப்புடைய சொல்லான் இழிபுதோன்றக் கூறுதலும் வரலாற்று முறைமையோடு படாது செய்வோன் தானொருபொருளைக் கற்பித்துக் கூறுதலும் எவ்வகையானுங் கேட்போர் மனங்கொள்ளாதிருக்கக் கூறுதலும் இவை போல்வன பிறவுமாம். (எ - று.)

வடநூலார் கூறிய அவ்வியாத்தி அதிவியாத்தி அசம்பவமென்னுந் தூடணங்களும் இவற்றுள்ளே அடங்குமாறு அறிந்து அடக்கிக்கொள்க. (கருஎ)

526. ஒத்த காட்சியி னுத்திவகை விரிப்பி
னுதலி யறித லதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய் நிறுத்தன்
மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்
மொழியா ததனை முட்டின்று முடித்தல்

வாரா ததனால் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராத துணர்த்தல்
முந்து மொழிந்ததன் றலைதடு மாற்றே
யொப்பக் கூற லொருதலை மொழியே
தன்கோட் கூறன் முறைபிறழாமை
பிறனுடம் பட்டது தானுடம் படுத
லிறந்தது காத்த லெதிரது போற்றன்
மொழிவா மென்றல் கூறிற் றென்ற
ருன்குறி யிடுத லொருதலை யன்மை
முடிந்தது காட்ட லாணை கூறல்
பல்பொருட் கேற்பி னல்லது கோட
லேருத்த மொழியான் வகுத்தனர் கோடன்
மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்
பிறன்கோட் கூற லறியா துடம்படல்
பொருளிடை யிடுத லெதிர்பொரு ளுணர்த்தல்
சொல்லி னெச்சஞ் சொல்லியாங் குணர்த்த
றந்துபுணர்ந் துரைத்தன் ஞாபகங் கூற
லுய்த்துக்கொண் டுணர்த்தலொடு மெய்ப்பட நாடிச்
சொல்லிய வல்ல பிறவவண் வரினுஞ்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டு
நுனித்தகு புலவர் கூறிய நூலே.

இஃது எண்ணான்கு உத்தியின் பெயரும் இயலுங் கூறுகின்றது.

(இ - ள்.) சாத்துவிககுணமற்ற அறிவினாலே தெளிந்தோர் கண்ட உத்தி வசனத்தின் வேறுபாடுகளை விரித்துக் கூறப்புகின் கருதியதறிதல் முதலாக உய்த்துக்கொண்டுணர்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டனோடும் அவைபோல்வன பிறவும் நூலின்கண்ணவைகளைக் கூறிய திறத்தான் இலக்கணங்களெல்லாம் அகப்பட ஆராய்ந்து மனத்தினாலே எண்ணுங் குற்றம் நீங்க ஆராய்ந்து அப்பொருளை எடுத்துக்கொண்டு கூறியவற்றிற்கு இனமாகவுஞ் சேர்வித்து அறிவித்தலை விரும்புக நூன்முடிபு அறிந்து அதனான் மேதக்க அறிவுடையோர் செய்த நூற்கண். (எ - று.)

உத்தியினையும் உத்திக்கு இனமாதலையும் ஈண்டு எடுத்துக்காட்டப்புகின் அவை விரிந்துகிடத்தலான் அவை நுண்ணுணர்வான் ஆராய்ந்து இந்நூற் கண்ணுந் தொல்காப்பியம் முதலிய பெருநூற்கண்ணும் ஆங்காங்கு உணர்க.

527. முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

இது நூலின்வகை கூறுகின்றது.

(இ - ள்.) *கூறிய இலக்கணங்களை எய்திய அந்நூல் முதனூலென்றும் வழிநூலென்றும் சார்புநூலென்றும் மூன்றாய் வழங்கப்படும்.* (எ - று.)

முதல் வழி சார்பென்பன, ஆகுபெயர். கூறிய இலக்கணங்களாவன:— சூத்திரமும் ஓத்தும் படலமும் பிண்டமுமாம். அவையிற்றினை அடக்கிய வேறு பிண்டம் இவைகளின் இலக்கணமென்றே கோடும். (கஙக)

528. அவற்றுள்,
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

இது முதனூலின் இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ - ள்.) *முதல்வழி சார்பென்ற மூன்றனுள் அநாதியே அவிச்சை காரணமாக வரும் இருவினைப் பந்திப்பினின்று நீங்கி, இறைவனது அருளால் தன்னை யறிவதாக அறியும் பரஞானத்தான் உளதாய சீவன்முத்தி பெற்றோனாற் செய்யப்படுவது முதனூலாம்.* (எ - று.)

என்றது, யோகமுயற்சியின்றலைநிற்க மெய்யுணர்வு பிறந்து யானென தென்னுஞ் செருக்குக்களற்று இருவினைப் பயனினுஞ் சமஞ்செய்கோல்போலப் புடைபெயர்ச்சியின்றி ஒருநிலையின்மேனேக்கியவழி இறைவனருள் வதிய அத்தனுள் விரிந்த மெய்ஞ்ஞானம் விளங்குதலாம். முனைவன் போன்று நிற்றலின் முனைவனென்றார்; அஃது உபசாரவழக்கு. அவர்கள் மக்களுயிர்க்கு உறுதிபயப்ப அருளாற் கூறியவாறுமென்க. இறைவனருளால் அறிவு விளங்கு மென்பதென்னை?

"*காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்*
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி" —[*திருவா*]

எனத் தென்னவன் பிரமராயரும்,

"*மயர்வறமதிநல மருளின னெவனவன்*" —[*திருவாய்*]

எனக் குருகூரரும் *பொருண்மொழிக்காஞ்சி கூறியவாற்றான் அறிக.* (கசo)

529. வழியெனப் படுவ ததன்வழித் தாகித்
தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே.

இது வழிநூலின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *வழிநூலென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன முதனூலிற் கூறிய பொருளோடு வேறுபடாமற் பின் தோன்றுவனவாகி முதனூலில் எழுத்திலக்கணமுஞ் சொல்லிலக்கணமும் மயங்கக் கூறினூற்போற் கூறாது,*

"மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி"

என வேறோரதிகாரமாகத் தொகுத்துக்கூறுதலும், விரித்த சூத்திரப் பொருளைத் தொகைமரபாற் றொகுத்துக் கூறுதலும்,

"வினைநிலை யுரைத்தலும் வினாவிற் கேற்றலும்
பெயர்கொள வருதலும் பெயர்ப்பய னிலையே"

என ஆசிரியர் அகத்தியனார் தொகுத்துக் கூறிய பொருளைப்,

"பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே"
—[தொல். சொல். சூ. 67]

என விரித்துக் கூறுதலும்,

"எழுத்தெனப் படுப
அகரமுத, னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே"
—[ஷை எழுத். சூ. 1]

எனத் தொகையும் விரியுமாகக் கூறுதலும், வடசொல்லாற் கூறிய அறநூற் பொருளைத் தமிழ்மொழியாற் கூறுதலும், மொழிபெயர்த்தலொழித்து ஏனை யிலக்கணம்பெற முதனூற்சூத்திர யாப்போடு சேர்த்துக் கூறுதலுமாகிய அவ் விலக்கணங்களையுடையனவாம். (எ - று).

மொழிபெயர்த்தல் ஆசாரக்கோவையும், அதர்ப்பட யாத்தல் திருவள்ளுவப் பயனும் முதலியன. (கசக)

530. இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்.

இது புடைநூலின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) முதனூற்கும் வழிநூற்கும் ஒருமருங்கு ஒப்பஎடுத்துக்கொண்டு முடிவொன்றாய்க் கூறுமாறு வேறுபாடுடையது சார்பு நூலாம். (எ - று).

புடைநூலெனினுஞ் சார்புநூலெனினும் ஒக்கும். திரிபாவது படலத்தின் இலக்கணம் ஓத்திற் கிடக்கவும், படலத்தின் இலக்கணங்களைத் தொகுத்து ஒரு சூத்திரத்திற் கிடக்கவும், ஓத்தின் இலக்கணம் ஒருசூத்திரத்திற் கிடக்கவும், ஒரு படலத்திற் கூறும் இலக்கணம் மற்றொரு படலத்தின் இயைபு நோக்கிக் கிடக்கவும் படலத்து ஒழிபோடு பிண்டத்து ஒழிபு சேர்ந்து கிடக்கவுங் கால வேறுபாட்டாற் பெறுவனவுஞ் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க்கு அறி வுறுத்தற்பொருட்டுத் தொகை வகை விரிபடச் செய்தலாமென்று உணர்க.

அவற்றுட் படலத்தின் இலக்கணம் ஓத்திற்கிடத்தலாவது :—ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்திற் கூறிய பொதுவகையாற் புணரும்

இயல்பும் விரிந்த சூத்திரப் பொருளவன்றித் தொக்குப் புணரும் இயல்பும் குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் நின்று புணரும் இயல்பும் இந்நூலுள் உயிரீற்றுப் புணரியலுட் கூறப்படுதலும், அவர் சொல்லதிகாரத்திற் கூறிய கிளவியாக்கமும் வேற்றுமையியலும் வேற்றுமை மயங்கியலும் விளிமரபும் இதன்கட் பெயரியலுட் கூறப்படுதலும், பொருளதிகாரத்திற் களவியலுங் கற்பியலுங் பொருளியலும் மெய்ப்பாட்டியலும் அகத்திணையியலுட் கூறப்படுதலுமாமென்று உணர்க.

படலத்தின் இலக்கணங்களை ஒரு சூத்திரத்திற் தொகுத்தலாவது எழுத்ததிகாரத்தின்,

“ எண்பெயர் முறைபிறப்பு ” —[இ. வி. சூ. 2]

எனவுஞ் சொல்லதிகாரத்திற்,

“ தனிமொழி தொடர்மொழி ” —[ஷை 160]

எனவும் பொருளதிகாரத்திற்,

“ போக்கரு மரபிற் பொருளெனப் படுவது ”—[ஷை 374]

எனவுங் கூறலாமென்று உணர்க.

ஓத்தின் இலக்கணம் ஒரு சூத்திரத்திற் கிடத்தலாவது,

“ மொழிக்காரணமாம் ” —[ஷை 3]

எனவும்,

“ எழுத்தே தனித்து மிணைந்துந் தொடர்ந்தும் ”

எனவும்,

“ மெய்யுயிர் முதலீ ருமிரு பதங்கள் ” —[ஷை 53]

எனவும்,

“ பெயரெனப் படுபவை தெரியுங் காலை ”—[ஷை 176]

எனவும்,

“ வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது”—[ஷை 227]

எனவும்,

“ வேற்றுமை வினைசாரியையொப் புருபுகள் ”—[ஷை 251]

எனவும்,

“ குறிப்பும் பண்பு மிசையுந் தோற்றி ” —[ஷை 280]

எனவும்,

“ அதுவே, கைக்கிளை யைந்திணை ” —[இ. வி. பொ. சூ. 4]

எனவும்,

“ வெட்சிவஞ்சி யுழிஞைதும்பை ” —[ஷை 228]

எனவும்,

“ அணியெனப்படுவது ” —[ஷை 248]

எனவுஞ்,

"செய்யுளென்பது" —[இ. வி. பொ. சூ. 338]

எனவும்,

"எஞ்சியவிலக்கணம்" —[௸ 389]

எனவும் கூறப்படுதலாமென்று உணர்க.

ஒரு படலத்திற் கூறும் இலக்கணம் மற்றோர் படலத்திற் கூறலாவது:—செய்யுளியலுட் கூறவேண்டும் ஒற்றளபெடையை எழுத்தியலுட் கூறலாமென்று உணர்க.

படலத்தொழிபோடு பிண்டத்தொழிபு சேர்தலாவது:—இவ்வோத்துட் கூறப்படும் பாட்டினியல் முதலிய ஏழும் படலத்தொழிபெனவும் மரபு முதலிய ஏழும் பிண்டத்தொழிபெனவுஞ் சேர்ந்து நிற்றலா மென்று உணர்க.

காலவேறுபாட்டாற் பெறுதலாவது :—அகரத்தோடுகூடிச் சகரம் மொழிக்கு முதலாம் எனக்கூறுதலும்,

"சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்"

என ஆசிரியர் தொல்காப்பியனார் பாதீடிட்ட சொல்லை விகுதிப் புணர்ச்சியென விரித்துக்கூறுதலும், அவர் உவமமொன்றனையே கூறியொழிய இவர் குணவணியென்றும் பொருளணியென்றுஞ் சொல்லணியென்றும் மொழிபெயர்த்துக் கூறுதலுமாமென்று உணர்க. முதனூல் வழிநூல் சார்புநூல் இலக்கணங் கூறுதலான் முதனூலில் வழிநூல் சார்புநூற்கு இலக்கணம் பெருமையும் வழி நூலிற் சார்பு நூலிற்கு இலக்கணம் பெருமையும் அறிக. (கசஉ)

531. பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப.

இது மேல் நிறுத்தமுறையானே உரைச்செய்யுளாமாறும் அதன் பகுதியுங் கூறுகின்றது.

(இ - ள்.) ஒரு பாட்டின் இடையிடை கொண்டுநிற்குங் கருத்தான் வருவன உரையெனப்படும். என்னை ? பாட்டுறுவது சிறுபான்மையாகலின். அவை தகடூர்யாத்திரை போல்வன. மற்றுப் பிறபாடைவிரவி வருவனவோவெனின், அவற்றுளுந் தமிழுரையாயின ஈண்டு அடங்கும். பிறபாடைக்கு ஈண்டு ஆராய்ச்சியின்று. பாவின்றெழுந்தகிளவி-பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருளெழுதுவனபோல்வன. சூத்திரம் பாட்டெனப்படாவோவெனின் ? படா ; பாட்டும் உரையும் நூலுமென வேறோதினமையின். இதனாற் போந்தது சொற்சீரடியான் இற்ற சூத்திரம் உரைச்செய்யுளென்பதாம். பொருளொடுபுணராப் பொய்மொழி-பொருளின்றிப் பொய்படத்தொடர்ந்து சொல்லுவன. பொருளொடு புணர்ந்த நகைமொழி-பொய்யெனப்படாது மெய்யொடுபட்டு நகுதற்கு

ஏதுவாகுந் தொடர்நிலை. இந்நான்கும் உரைச்செய்யுளென்று கூறுவர் புலவர். (எ - று.)

வகையென்றதனான் இவ்வுரைப்பகுதி பிறவும் உள. அவை மேற் பாயிரத்துட்

“ பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்
பழிப்பில் சூத்திரம் பன்ன ஹண்கே ”

என்பதனாற் பெறப்பட்டன. (கசங)

532. ஒப்போடு புணர்ந்த வுவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னானு
மென்றிரு தகைத்தே பிசிவரு நிலையே.

இது பிசியாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஒப்புமையோடு பொருந்திவரும் உவமைப்பொருளானும் ஒன்றுசொல ஒன்றுதோன்றுதல் துணிவுடையவாகச் சொல்லுஞ் சொல்லானு மென இருகூறுபாடுடைத்து பிசிதோன்றும் நிலை. (எ - று.)

ஒப்பொடுபுணர்ந்த உவமம் “ பிறைகவ்வி மலைநடக்கும் ” என்பது யானை யெனவும்,

“ முத்துப்போற் பூத்து முதிரிற் களாவண்ண
நெய்த்தோர் குருதி நிறங்கொண்டு வித்துதிர்த்து ”

என்பது கமுகெனவும் வரும். தோன்றுவதுகிளந்த துணிவென்பது :

“ நீராடான் பார்ப்பா னிறஞ்செய்யா னீராடி
னூராடு நாட்டிற்காக் கை ”

இது நெருப்பென்றுவது.

பிசி நிகிர்தம் என்பன ஒருபொருட்கிளவி. (கசச)

533. நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடை மையு
மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ
மேது நுதலிய முதுமொழி யென்ப.

இது முதுமொழியாமாறு கூறுகின்றது.

(இ - ள்) நுண்ணியபொருளுடைமையும் எழுத்தானுஞ் சொல்லானுஞ் சுருக்கமுடைமையும் எல்லாச் சமயத்தாரானுங் கூறும் பொருள்களிற் தான் சென்று விளங்குதலுடைமையும் அறிவோர்க்குப் பிரவேசிக்க எளிதாத லுடைமையுமென்று கூறப்படும் இந்நான்குந் தோன்ற எப்பொருளுந் தன் னகத்து அடங்கத் தான்மேற்பட்டுப் பிரதிக்கினை மாத்திரத்தாற் கருதிய பொருளை முற்றுவிக்க அவாய்நிலைதோன்றியவழித் தோன்றும் காரகமாத

வரும் திட்டாந்தம் உபநயம் நிகமனமென்னும் வாக்கியங்களை உட்கொண்டு வராநிற்கும் ஏதுப்பொருளைக் கருதியனவே முதுமொழிச் செய்யுளென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.)

இவற்றின் விகற்பமெல்லாம் அளவைநூன்முகத்தான் ஆராய்ந்தறிக.

அளவையும் பொருட்கூற்ருகலான் ஆசிரியர் தொல்காப்பியனார் பொருளதிகாரத்திற் படலத்தொழிபாக அடக்கிக் கூறினார். மூன்ரும் வேற்றுமைக்கும் ஐந்தாம் வேற்றுமைக்கும் ஆசிரியர் அகத்தியனார் ஏதுப்பொருள் கூறினமையான் "அதர்ப்படயாத்தல்" என்பதனான் இந்நூலுடையாரும் ஆசிரியர் தொல்காப்பியனார் ஓதிய பாடமே இந்நூற்கும் பாடமாகக்கொண்டு கூறினார். இவ்வாறு வருவனவற்றிற்கெல்லாம் இஃதொக்கும்.

மொழியானன்றி மனத்தானுணரும் நுண்ணிய பொருளாகலின் நுண்மையென்ருர். தான் சிறிதாய்ப் பாலிற்பிரைபொத்துக் கலந்துநிற்குந் தன்மையிற் சுருக்கமென்ருர். சொல்லாற் பொருள் விளங்குமாறின்றிப் பொருளாற்றலாற் பலரும் உடம்படத் தோன்றுதலின் ஒளியுடைமையென்ருர். இயல்பாற் பொருட்டன்மை யுணராநிற்போர்க்கு மெலிதாதற்றன்மையின் மென்மையென்ருர். இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள்கூருக்காற் குன்றக்கூறலென்னுங் குற்றந்தங்கி முதனூலின்வழித்தன்றென்பதாம், அதனல் இவ்வாறு பொருள் கூறல்வேண்டுமென்க. (கசரு)

534. நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.

இது மந்திரச்செய்யுளாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப் பயங்களைப் பயக்கும் நிறைந்த மொழியையுடைய குரவர் தாம் அனுபவத்தான் அறிந்த பொருளைப் பிறர்க்கு உணர்த்தலாகாமையான் அவர்க்குப் பயப்பாடு நோக்கி ஆக்கினையான் மறைந்த பொருளைக்கூறப்பட்ட சொற்களே மந்திரச்செய்யுள். (எ - று.)

செய்தலின்றிச் சொல்லுஞ் செய்யுளாதல் பெற்ரும். சொல்லெனவே ஓரெழுத்தொருமொழியும் ஈரெழுத்தொருமொழியும் தொடர்மொழியும் கொள்க. அவை மந்திரமொழி வல்லுநர்வாய்க்கேட்டு உணர்க.

இச்சூத்திரமும் மேலைச்சூத்திரமும் ஆசிரியன்கூற்று. (கசசு)

535. எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்புமொழி யென்ப.

இது குறிப்புமொழியாமாறு கூறுமுகத்தான் எய்தாதது எய்துவிக்கின்றது; சொல்லாற்பொருளுணர்த்தலேயன்றிப் பொருளானுஞ் சொற்பெறப் படுமென்றலின்.

(இ - ள்.) எழுத்தினோடுஞ் சொல்லினோடும் புணராதாகிப் பொருட்கண் அபிநயத்திற்கிடப்பனவே குறிப்புச்சொல்லாமென்றுகூறுவர் ஆசிரியர். (எ-று.)

உதாரணம் :—

வருகோவைச் சூடி வளைகோவை சாத்தி
யொருகோவை யேறியுயர் கோவை—தருகோவைக்
கைக்கோவை யாய்ந்துரைத்தார் காண்பார்க்குக் காணாதார்க்
கிக்கோவை யாய்ந்துரைத்தா ரீங்கு.

கோவென்பது பலபொருளொருசொல்லாய் நீரையுந் திசையையும் இடபத்தை யுஞ் சுவர்க்கத்தையுங் கூற்றுமொழியையுங் குறிப்புமொழியையும் உணர்த்து மாகலான், 'உயர்கோவை தருகோவைக் கைக்கோவை யாய்ந்துரைத்தார் காண் பார்க்கு' என்பதற்குப் பொருள்:—மேலானசீபாதத்தை வேண்டினவர்களுக்குக் கொடுக்கின்ற உபதேசமாகிய சம்பிரதாயவாக்கின் பொருளை அறியவேண்டு மென்று கருதும் முனிவர்க்குப் பாகம்பிறந்தது கண்டு போதமுத்திரையான் உணர்த்தக் கருதி அபிநயமென்னுங் கைவேறுபாட்டாற் காட்டவுங் காணவும் படுங் குறிப்புமொழிகளை ஆராய்ந்து சேர்த்துக்காட்டிய இறைவனென்பது காண்க.

பாடமுங் கூற்றும் ஆசிரியன்கண்ணவாகலான் பரந்துபட்ட நூலிற் சிதர்ந்து கிடக்கின்ற பொருளை ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துக்கு ஒப்பத் தொகுத்து அடைவாக முன்னுரையிற்பெறாமல் அரிதாகநின்ற பொருளை எளிதாக அறியுமாறு தேடிவைத்ததொகுதி, தானம் வெளித் தோன்றிப் பயன் படுமாறுபோல, இந்நூலுடையார் கண்டுகூறினார். இவ்வாறு பொருள் கூறுதல் ஆசிரியர் கருத்துக்கு ஒப்பென்பது செய்யுட்கோவையுரையான் உணர்க. இக்கருத்தே பற்றியன்றே தென்னவன்பிரமராயரும்,

" வாக்கு மனங்கழிய நின்ற மறை "

என்றார். நக்கீரனாரும்,

" எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே " —[முருகு. 97-98]

எனக் கூறிய திருமுகத்திற்கு ஏற்ப.

" ஒருகை மார்பொடு விளங்க " —[முருகு. 112]

எனக் குறிப்புமொழியுட் கொண்டு கூறியவாற்றானும்,

கடுத்துவர்த்த தேனுங் கடும்பிணிதீர்த் தின்பங்
கொடுத்ததுபோல் யானுரைத்த கோவை—யெடுத்துணர்ந்தோர்
பொய்ப்பொருள்யா வுந்தெளிந்து போக்கியபின் றுங்காணு
மெய்ப்பொருளா னெய்துவார் வீடு.

என்பதனானும் பிறவாற்றானும் அறிக.

குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையி
னடக்கிய *மூக்கி னவர். —[தொல். பொருள். பக். 1247]

என்பதனுட் குஞ்சரமென்பது குறிப்புமொழியெனக் காட்டின் ஆகாது, அது பாட்டிடைவைத்த குறிப்பாய் அடங்குதலின். இத்துணையும் படலத் தொழிபுகூறி இனிப் பிண்டத்தொழிபு கூறுகின்றார். (கரு௩)

536. வழக்கு மரபுஞ் செய்யுண் மரபுமென்
றிழுக்கின் மரபோ ரிருவகைத் தாகும்.

இது மரபு இத்துணைத்தென்பதூஉம் அவை இவையென்பதூஉம் கூறு கின்றது.

(இ - ள்.) வழக்கிடத்து உளவாகிய மரபும் செய்யுளிடத்து உளவாகிய மரபுமென மரபு இலக்கணம் இருவகையினையுடைத்து. (எ - று.) (௬௬௬)

537. அவற்றுள்,
வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான.

இது வழக்காமாறு கூறுகின்றது.

(இ - ள்.) முற்கூறிய இரண்டனுள் வழக்கென்று சிறப்பித்துச் சொல் லப்படுவது உயர்ந்தோரிடத்தாம்; தோன்றுதல் அவரிடத்தாகலான். (எ - று.) உயர்ந்தோராவார்: அகத்தியனாரும் மார்க்கண்டேயனாருந் தலைச்சங்கத் தாரும் முதலியோர். (௬௬௭)

538. பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங்
கன்றும் பிள்ளையு மகவு மறியுங்
குழவியு மென்றிவை யிளமைப் பெயரே.

இது வழக்குமரபு உணர்த்துவனவற்றுள் இளமைக்குரியன இவையென் கின்றது.

(இ - ள்.) பார்ப்புமுதற் குழவி ஈறாக ஒன்பதும் இருதிணையினும் இளமைத்தன்மை உணர்த்தும் பெயர்களாம். (எ - று.)

அவை உணர்த்துமாறு:— பார்ப்பும் பிள்ளையும் பறப்பனவற்றுள்ளுந் தவழ்சாதியுள்ளும், பறழ் குட்டி என்பன மூங்கா வெருகு எலி அணில் என்பன வற்றுள்ளும், குருளை குட்டி பறழ் என்பன முயல் பன்றி நாய் நரியுள்ளும், பிள்ளை என்பது நாயல்லாத ஏனையவற்றுள்ளும், மறி குட்டி என்பன யாடு குதிரை நவ்வி புல்வாய் கோடுவாழ் விலங்கினுள்ளும், மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும் அக்கோடு வாழ்விலங்கினுள்ளும், கன்றென்பது யானை குதிரை கழுதை கடமை மான் எருமை மரை கவரி ஒட்டகம் கராம் இவற் றுள்ளும், குழவி யென்பது குஞ்சரம் எருமை கடமை மரை குரங்கு முசு

பா - ம்:—*முத்தின ராகும்.

சிதல் எறும்பி இவற்றுள்ளும், பின்னின்ற சிதல் எறும்பி இவற்றின் கிளைப் பிறப்பினுள்ளும், குழவி மக பிள்ளை என்பன மக்களுள்ளும், பிள்ளை குழவி கன்று போத்தென்பன ஓரறிவுயிருள்ளும் இளைமைப் பெயர்க்கு உரியன வாதல் ஓர்ந்துணர்க.

ஓரறிவுயிரிற் பைங்கூழும் பசும்புல்லும் இவ்விளமைப் பெயர் எய்தா வென்பதாம். இவையெல்லாஞ் சொற்பற்றிவந்த மரபாகலிற் சொல்லோத்திற் கூறிய மரபுள் அடங்காவென்க. (கறுO)

539. சொல்லிய மரபி னிளைமை தானே
சொல்லுங் காலை யவையல விலவே.

இது மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) கூறப்பட்ட மரபிலக்கணம் எய்தி நின்ற இளமைப பெயரைச் சொல்லுமிடத்து அப்பெயர்களேயன்றி வேறு சில பெயர்களில்லை. (எ-று.) ()

540. ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

இஃது உயர்ந்த ஒழுக்கமும் அல்லவாகிய ஒழுக்கமும் நிகழ்தற்கு ஏது வாகிய அறிவின் திறங் கூறுகின்றது.

(இ - ள்.) ஓரறிவாவது தன்னின் வேறாய பிறிதொன்று மெய்யுறலான் வன்மை மென்மை முதலியன அறிதலாம்; இரண்டறிவாவது அதனோடு நாவாற் சுவையை அறிதலாம்; மூன்றறிவாவது அவ்விரண்டறிவுடனே மூக்காற் கந்தத்தினை அறிதலாம்; நான்கறிவாவது அம்மூவகை யறிவுடனே கண்ணால் உருவத்தினை அறிதலாம்; ஐந்தறிவாவது அந்நால்வகை யறிவுடனே செவியாற் சத்தத்தினை அறிதலாம்; ஆறறிவாவது ஐவகை இந்திரியங்கள் அறியும் அறிவானன்றி ஞாபக ஏதுக்களான் நுண்ணிய பொருள்களை மனத்தான் உணர்தலாமென்று நேர்மையான் எல்லாப் பொருள் மரபினையும் உணர்ந்தோர் இவ்வாறு பிறழாமற் கூறுகவென்று காட்டினார். (எ - று.) (கறுஉ)

541. புல்லு மரனு முரளு நந்துஞ்
சிதலு மெறும்பு ஞெண்டுந் தும்பியு
மாவு மக்களு மேவுமவ் வறிவே.

இது மேற்கூறிய ஓரறிவு முதல் ஆறறிவளவும் உறும் உயிர்கள் இவை யெனத் தொகுத்து உணர்த்துகின்றது.

(இ - ள்.) புல்லும் மரனும் ஓருயிரெனவும், முரளும் நந்தும் ஈரறிவுயிரெனவும், சிதலும் எறும்பும் மூவறிவுயிரெனவும், ஞெண்டுந் தும்பியும் நான்கறிவுயிரெனவும், மாவும் மக்களும் ஐயறிவுயிரெனவும், அவ்வகையிரண்டில் மக்கள் ஆறறிவுயிரெனவும் வழங்கப்படும். (எ - று.) (கருங)

542. அக்கிளைப் பிறப்புமவ் வறிவுறு மென்ப.

இது மேலனவற்றிற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) மேற்கூறிய அறுவகை அறிவுறும் உயிர்கட்கு உரிய கிளைப் பிறப்பும் அவ்வறிவு பெறுமென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.) (கருச)

543. ஒருசார் விலங்கு மதுவென மொழிப.

இஃது ஒருசார் மாவிற்கு எய்துஞ் சிறப்புக் கூறுகின்றது.

(இ - ள்.) மக்கள் யாக்கையிற் பிறந்து ஆறறிவு உற்ற உயிர்கள் வினைவயத்தான் விலங்காய்ப் பிறந்துழியும் முன்னை ஆறறிவு உறுதலும் ஒரோவழி உண்டென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.) (கருரு)

544. ஏறு மேற்றையு மொருத்தலுங் களிறுஞ்
சேவுஞ் சேவலு மிரலையுங் கலையு
மோத்தையுந் தகரு முதளு மும்பலும்
போத்துங் கண்டியுங் கடுவனும் பிறவும்
யாத்த வாண்பாற் பெயரென மொழிப.

இஃது அஃறிணையிடத்து ஆண்பாற்கு உரிய மரபுபெயர் இவையெனத் தொகுத்துணர்த்துகின்றது.

(இ - ள்.) ஏறென்பது முதற் கடுவனென்பது ஈறாகக் கிடந்த பதினைந்தும் அவைபோல்வன பிறவும் அஃறிணையாண்பாற்கு உரிய பெயர்களாமென்று கூறுவர் ஆசிரியர். (எ - று.)

அவை உணர்த்துமாறு :—களிறென்பது வேழத்தாணினையும் பன்றியாணினையும், ஒருத்தலென்பது யானை பன்றி புல்வாய் புலி மான் கவரி கராம் எருமை இவையிற்றிறுணினையும், ஏறென்பது பன்றி புல்வாய் உழை கவரி எருமை மரை பெற்றம் சுறு இவையிற்றிறுணினையும், போத்தென்பது பெற்றம் எருமை புலி மரை புல்வாய் மயில் எழாஅல் நீர்வாழ்சாதியுள் அறுவகைப்பிறப்பு இவையிற்றிறுணினையும், இரலையுங் கலையும் புல்வாய் முசு இவையிற்றிறுணினையும், மோத்தையுந் தகரும் உதளும் உம்பலும் யாட்டிறுணினையுங், கண்டியென்பது எருமையேற்றினையும், கடுவனென்பது குரங்கினேற்றினையும் பூனையேற்றினையும், சேவலென்பது மயிலல்லாத சிறகோடு கூடிய பறவையாணினையும், ஏற்றையென்பதும் ஆணென்பதும் எல்லா ஆணினையும் உணர்த்தலாம். (கருசு)

545. பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணு
மூடு நாகுங் கடமையு மளகு
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவு
மந்தஞ் சான்ற பிடியோடு பெண்ணே.

இது பெண்ணிற்கு உரிய மரபுபெயர் இவையெனத் தொகுத்துணர்த்து கின்றது.

(இ - ள்.) *பேடை முதலாகப் பிடி ஈறுகச் சொல்லப்பட்ட பதின்மூன் றும் பெண்ணினை உணர்த்தும் பெயர்களாம்.* (எ - று.)

அவை உணர்த்துமாறு :—பேடைபெடையென்பன ஒட்டகங் குதிரை மரை இவையிற்றின் பெண்ணினையும் புள்ளின்பெண்ணினையும், அளகென்பது கோழி கூகை மயில் இவையிற்றின்பெண்ணினையும், பிணையென்பது புல்வாய் உழை கவரி இவையிற்றின் பெண்ணினையும், பிணவென்பதும் பிணவலென்ப தும் பன்றி புல்வாய் நாய் இவையிற்றின்பெண்ணினையும், பெண்ணென்பதும் பிணுவென்பதும் மக்களுட் பெண்பாலினையும், பிடியென்பது யானைப்பெண் ணினையும், நாகென்பது எருமை மரை பெற்றம் இவையிற்றின்பெண்ணினையும் நீர்வாழ்சாதியுள் நந்தின்பெண்ணினையும், மூடு கடமையென்பன யாட்டின் பெண்ணினையும், பாட்டியென்பது பன்றி நாய் நரி இவையிற்றின் பெண்ணினை யும், மந்தியென்பது குரங்கு முசு ஊகம் இவையிற்றின் பெண்ணினையும் உணர்த்தலாம்.

'அந்தஞ்சான்ற' என்பதாற் கோட்டானென்பதும் தத்தை யென்பதும் ஏன மென்பதும் முறையே பொதுவாய்க் கூகையினையுங் கிளியினையும் பன்றி யினையும் உணர்த்துதல் கொள்க. (கருஎ)

546. புறக்கா ழனவே புல்லென மொழிப. (கருஅ)

547. அகக்கா ழனவே மரமென மொழிப. (கருகூ)

548. தோடே மடலே யோலை யென்றா
வேடே யிதழே பாளை யென்றா
வீர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்
புல்லோடு வருமெனச் சொல்லினர் புலவர். (கசுo)

549. இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே யரும்பே
நனையுள் ளுறுத்த வனையவை யெல்லா
மரனொடு வருஉங் கிளவி யென்ப. (கசுக)

550. காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையு மன்ன.

இவ்வைந்து சூத்திரத்திற்கும் பொருள் வெளிப்படை. (கசுஉ)

551. தலைமைக் குணச்சொலுந் தத்தமக் குரியதோர்
நிலைமைக் கேற்ப நிகழ்த்துக வென்ப.

இது நூன்மரபு நூலிலக்கணத்திற் பெறப்பட்டமையின் எஞ்சிநின்ற செய்யுண்மரபு கூறுகின்றது.

(இ - ள்.) *அரசருரிமைப்பண்பு உணர்த்துஞ் சொற்களை அவரவர்க்கு ஏற்பச் செய்யுளகத்துக் கூறுகவென்று சொல்வர் ஆசிரியர்.* (எ - று.)

தானைத்தலைவரையும் அரசனால் ஏவல்பெற்றோரையும் வரிசைபெற்றோரையும் குறுநிலமன்னரையும் மணிமுடிகவித்த மதிவெண்குடை மன்னரெனப் புகழ்தலுஞ் செய்யுண்மரபென்பதாம்.

"உண்டற் குரிய வல்லாப் பொருளை
யுண்டன போலக் கூறலு மரபு"—[தொல். பொருள். சூ. 214]

என்பது உரையிற் கொள்க. (கசங)

552. நூலே கரக முக்கோன் மணையே
யாயுங் காலை யந்தணர்க் குரிய.

இது நிறுத்தமுறையானே வருணத்தின் மரபியல் கூறுகின்றது. பொருள் வெளிப்படை. (கசச)

553. படையுங் குடையுங் கொடியு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய.

இதுவும் அது. (கசரு)

554. வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.

இதுவும் அது. (கசசா)

555. வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
திலையென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

இதுவும் அது. (கசஎ)

556. அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.

இஃது அந்தணர்க்கு உரியதோர் சிறப்புரிமை கூறுகின்றது.

(இ - ள்.) *அழகிய தட்பத்தினையுடைய வேதியர்க்கு அரசுரிமையெய்தி நிற்றல் கடிதலின்று.* (எ - று.)

அந்தணர் வேதாந்தத்தை அண்ணினோரென்றுமாம். (கசஅ)

557. கவியே கமகன் வாதி வாக்கியெனப்
புவிமேற் சொல்லும் புலவர் நால்வர். (கசகூ)

558. ஆசு மதுரஞ் சித்திர மகலம்
பாவகை பாடுவோன் கவியெனப் படுமே.

இவை பொருள் வெளிப்படை. (௧௭௦)

559. நிறைந்த கல்வியா னிறைந்த வறிவா
னறைந்த வொருபொரு ளதனை விரிக்க
வல்லவன் கமகன் சொல்லுங் காலை.

இது கமகன் இயல்பு கூறுகின்றது.

(இ - ள்.) *நிறைந்த கல்விப்பயிற்சியானும் அக்கல்விப்பயிற்சியால் தெளிந்த அறிவானும் முன்னர்க் கற்றுவல்லோர் கூறிய பொருளை ஞாபகத்தானுஞ் செம்பொருணடையானும் நேரிட்டு எந்நூற் பொருளினையும் விரித்துச் சொல்ல வல்லோன் கமகன். (எ - று.)* (௧௭௧)

560. ஏதுவு மேற்கோளு மெடுத்துக் காட்டித்
தன்கோ ணிறீஇப் பிறர்கோண் மறுக்கும்
வன்புடை யோனே வாதி யாவான்.

இவை வாதியிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *ஏதுவும் ஏதுவினாற் சாதிக்கும் பொருளுமாகிய அவ்விரண்டற்கும் திட்டாந்தமாகிய எடுத்துக்காட்டு முதலியன கொண்டு தன்கோட்பாட்டினை நிறுவிப் பிறர்கோட்பாட்டினை மறுக்கும் உரனுடையோனே வாதியாவான். (எ - று.)* (௧௭௨)

561. அறம்பொரு ளின்பம் வீடென நான்குந்
திறம்பா திவரச் செஞ்சொற் கொண்டரு
ணோக்கி யுரைப்போன் வாக்கி யாவான்.

இது வாக்கியிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) *அறமும் பொருளும் இன்பமும் இவற்றின் நிலையின்மையான் எய்தும் வீடுமென்று சொல்லப்பட்ட நாற்பொருளினையும், மிகுதி குறைவு உறுமல், கேட்போர் விரும்பச், செஞ்சொல் இலக்கணச்சொல் குறிப்புச் சொல்லென்னும் மூன்றனுள், செஞ்சொல் மிகுதிதோன்ற, உலகந் தவஞ் செய்து வீடுபெற, உயிர்கண்மாட்டுக் கருணைகொண்டு கூறுவோன் வாக்கியாவன். (எ - று.)*

சிந்தையும் மொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய வீடு கூறுமாறென்னை யெனின், கேள்வி விமரிசம் பாவனையென்னும் வீட்டிற்கு ஏதுவாகிய உபாயங் களைக் கூறவே வீடுங்கூறினானாமென்பது. (௧௭௩)

562. ஒருவன் பாவே றொருவற் குரைத்து
வருமவன் சோர கவிமற் றொருவன்

பா்விசைக் கோப்ப மேவி யுரைப்போன்
சாத்துக் கவியெனப் பாத்தனர் புலவர். (கஎச)

563. முன்னோர் பாடிய யாப்பினுட் கிடந்த
சின்மொழி கொண்டு செய்யுள் செய்யுந்
தன்மையன் பிள்ளைக் கவிபின் மொழியாற்
கரைவோன் வெள்ளைக் கவியா மென்க.

இவை இரண்டு சூத்திரமும் பொருள் விளங்கக் கிடந்தன.
புலவரியல் முற்றும். (கஎரு)

564. ஆறுட் பகைசெற் றருங்கலை யோர்ந்து
பாரிற் கீர்த்தி படைத்தோர் வைகுத
னல்லவை யடக்கம் வாய்மை நடுநிலை
சொல்லு நன்மை யுடையோர் தொகைஇ
வல்லார் மொழியினும் வல்லுந ராக்கிக்
கேட்போ ருறையவை நிறையவை யாகும்.

இது நல்லவை நிறையவை இரண்டின் இயல்புங் கூறுகின்றது.

(இ - ள்.) *காமங் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் என்னும் உட்பகையாறினையும் அடக்கி, அரிதாகிய அறுபத்துநாலு கலைகளையும் ஐயந்திரிபற ஆராய்ந்து, அதனாற் புவியின்கட் பிறத்தற்பயனாகப் புகழ்பெற்றோர் இருக்கலுறும் அவை நன்மையுடைய அவையாம். கல்விநிறை அடக்கமும் வாய்மையும் நடுநின்று சொல்லும் நன்மையுமுடையோர் குழீஇ, மாட்டாதார் கவியரங்கேற்று, அவர்கள் குற்றத்தை நினையாது குணமேற்கொண்டு, அவர்களை வல்லமையுடையராக்கி வினவிக்கேட்போர் உறையும் அவை நிறையவையாம்.* (எ - று.)

எனவே, இதனெதிர்மறைமுகத்தாற் குறைந்த கல்வியும் நிறைந்த அழுக்காறும் உடையோர் அவை குறையவையுந் தீயவையுமென்பது பெற்றாம். (கஎசு)

565. அகரமு மிகரமு முகரமு மெகரமு
மொகரமு மினத்தொ டுதிக்குமை யெளவு
முதயந் தொடங்கியோ ராறு றக
விதமுறுங் கடிகை யெண்ணுநண் பகலின்
முதலொரு மூன்றுநன் முகூர்த்த மாக
வகலக் கவிபுனைந் தின்புறல் கடனே.

இது நிறுத்தமுறையானே பிறவெனப்பட்ட ஓரையாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) *அகரமும் இகரமும் உகரமும் எகரமும் ஒகரமுந் தத்தம் இனவெழுத்துக்களோடு சேர்த்தி, ஐகாரம் இகரத்தோடும் ஔகாரம் உகரத்தோடுஞ்*

சார்த்தி, ஐவகையாக்கி, ஆதித்தன் உதயந்தொடங்கி நண்பகலின் இன்பமுறும் நாழிகை ஓராமுருக வகுத்தவற்றுள் முதனின்ற ஓரை மூன்றில் அகலக்கவியைப் புனைந்து இன்பமுறல் முறைமை. (எ - று.)

ஏனையிரண்டோரையும் ஆகாவென்பதாம். (௫எஎ)

இது கவிப்புலவர்க்காவதோர் சிறப்புக் கூறுகின்றது.

566. கற்கப் படுவோர் கடப்பா டெய்தி
நற்கவி நான்கொடு முத்தமிழ் நடைதெரிந்
திருபான் வயது தொடங்கி யெழுபான்
வயதி னேரு மாட்சிமை யுள்ளோ
னகலக் கவிசொலு மாற்ற லோனே.

இது கவிப்புலவர்க்காவதோர் சிறப்புக் கூறுகின்றது.

(இ - ள்.) கற்கப்படும் ஆசிரியருக்கு ஓதிய குலமுதல் எண்வகை முறையும் எய்தி, ஆசு மதுரஞ் சித்திரம் வித்தாரமென்று சொல்லும் நல்ல கவிநான்கும் பாடுந் தன்மையுடனே இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்னும் முத்தமிழ் வழக்கினைமுற்ற உணர்ந்து, இருபதுமுதல் எழுபது வயதின் மிகா திருக்கும் பெருந்தன்மையுள்ளோனே அகலக்கவியைப் பாடும் உரவோன். (எ - று.)

'கற்கப் படுவோர் கடப்பா டெய்தி.' என்றதனாற் கூறுதொழிந்த நற் குணங்களெல்லாம் உளரென்பதாம். (௫எஅ)

567. செயிர்தீர் புலவன் செய்த செய்யுளை
யுயர்தரு மன்றி னொளிமணி விளக்கொடு
மங்கலம் பொலிய மறையோர் வாழ்த்தத்
தொங்கல் கமழத் தூரிய மியம்ப
வஞ்சொன் மாதர் செஞ்சொல்வாழ்த் தெடுக்க
வெண்டுகில் புனைந்து வேறு தவிசிட்
டெண்டிசை பரவத் தண்டமிழ் கொண்டு
தண்ணடை மதரணி தமனியங் களிறு
பண்ணமை யிரதம் பாய்பரி யுதவி
யேழடி பின்போய் மீள்வது மூவர்
வாழ்தமிழ் நாடர்க்கு வகுத்தனர் புலவர்.

இஃது அகலக்கவியைக் கொள்வோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) கற்கப்படா ஆசிரியனுக்கு ஓதிய குற்றத்தினீங்கிக் கற்கப்படும் ஆசிரியனுக்கு ஓதிய நற்குணங்களுடனே இவ்வோத்திற் கூறிய நற்குணங்களை எய்திய புலவனாற் செய்யப்பட்ட செய்யுளை, நல்லவை நிறையவையின்கண் ஒளிகிளரும் அழகிய விளக்கத்தினோடும் ஏனை எழுவகை மங்கலங்களும்

பொலிய, நான்மறையோர் ஆசிகூற, நாலவிட்ட பூமாலைகள் நறுநாற்றத்தைச் செய்யப், பலவகை வாத்தியத் தொகுதிகள் ஒலிக்க, இனிய சொல்லையுடைய மடவார்கள் செவ்விய சொற்களான் வாழ்த்தப், பாமகளை மணம் புணருந் திறத்தான் வெண்டுகிலும் வெண்மலர்மாலையும் வெண்முத்துமாலையும் அலங் கரித்துக்கொண்டு விசித்திரத் தவிசின் இருந்து, பாமகளைப் புணர்த்தும் புலவ னுக்கும் அவ்வாறு வேறோர் தவிசிட்டு, எட்டுத் திசையினுள்ளாருந் துதிக்கக் குளிர்ந்த பாமாலை சூடி, மருதநிலத்துளவாகிய வளம் மாறாத ஊரும் பெரிய ஆபரணமும் பொன்னும் மதவேழமும் உறுப்பா னமைவுபெற்ற தேருஞ் செறு நர்மேல் தாவுங் குதிரையும் பாடிய புலவற்குப் பரிசிலாகக் கொடுத்து, ஏழடி புலவன் பின்போய் மீளுதல் நாவலந் தண்பொழில் வரைப்பின் மூவேந்தரும் வாழ்வுபெற்ற வடவேங்கடந் தென்குமரி யெல்லைக்கண் உளவாகிய தமிழ் நாட்டகத்தின் அகலக்கவியைக் கொள்வோர்க்கு வகுத்த உரிமைத்திறமா மென்று கூறுவர் புலவர். (எ - று.)

> "படைநவின்ற பாய்மாவும் பண்ணமைந்த தேரு
> நடைநவின்ற வெல்பரியு நல்கிக்—கடையிறந்து
> முன்வந்த மன்னர் முடியுரிஞ்சுஞ் சேவடியாற்
> பின்வந்தான் பேரருளி னுன்"

எனப் பிறருங் கூறினார்.

மூவருமென்னும் உம்மை விகாரத்தாற் தொக்கது. (கஎ௬)

568. முன்மொழிக் கேன்று மொழிந்தவும் பெயர்ப்பா
னன்மை தரூஉ நயனு மாராய்ந்
தொண்மையிற் புலவ னுரைத்த கவியை
வண்மையிற் புனைந்தோர் வான்புக ழுருவான்
மாமதி பரிதி யாமெனச் சிறந்து
மன்னிவீற் றிருப்ப ரிந்நிலத் துயர்ந்தே.

இது மேற்கூறிய இலக்கணங்களானமைந்த அகலக்கவியைக் கொண் டோர் பெறும் பயன் கூறுகின்றது.

(இ - ள்) முன்மொழிக்கு இன்றியமையாப பொருத்தம் பத்தும் இயற் பெயரிடத்து நன்மையைப் பயக்கும் எழுத்துஞ் சொல்லும் பொருளும் உணர்ந்து நுட்பத்தாற் புலவனுரைத்த அகலக்கவியைக் கொடை முதலிய வரிசை செய்து புனைந்தோர் பெரிய புகழானும் உருவத்தானும் முறையே நிறைமதியும் இளஞாயிறும் இவனுமெனச் சிறப்புற்று இவ்வுலகிற் புகழுடம் பான் நிலைபெற்றுத் தலைமையெய்தி யிருப்பார். (எ - று.)

> "உருவும் புகழு மாகுவிர் நீர்"

என்றார் பிறரும்.

"நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு" —[குறள், 234]

என வள்ளுவனுர் கூறியவாற்ருனும்,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்தே" —[புறம். 27]

என இருமைப்பயனுங் கூறியவாற்ருனும் ஓர்ந்துணர்க. (கஅ௦)

569. பன்முகங் கொண்டு பரந்த பொருளைச்
சொன்முகத் தானவை துணைமை யெய்தக்
கூறற் கரிய வாயினுங் கூறிய
பொருளொடு மினத்தொடுந் தெருளுற வமைத்துச்
சொல்ல வல்லுந ரெல்லையின் விளங்கிக்
கலைமக ளொடுந்திரு நிலைபெற வாழ்வர்
மலைமக ளொருபான் மணந்தா னெனவே.

இஃது இவ்வதிகாரத்திற்கு ஒரு புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) பலவாகிய முகத்தான் விரிந்த பொருளிலக்கணங்களையெல்லாஞ் சொற்கருவியான் அவை முற்றச் சொல்லத்தொடங்கின் முடிவுகூடா ; ஆயினுங் கூறப்பட்ட பொருளிலக்கணத்தோடும் அவற்றிற்கு இயைபுபட நின்ற ஏனையிலக்கணத்தோடும் அமைத்துக், கேட்போருள்ளத்து உண்மையுறக் கூறவல்லோர், புடவியிடைப் பகலோன்போல விளங்கித், தம்மைப் பிரியா உரிமையுற்ற கலைமடந்தையோடுந் திருமடந்தை அவ்வாறு வதிய, மலையரசன் மகளாகிய உமாதேவியைத் தனதொருகூற்றின்கண்ணே கலந்து உலகுக்கு இன்பம்பயக்கும் இறைவனைப்போல நெடுங்காலம் இனிதுவாழ்வார். (எ - று.)

ஐந்தாவது
பாட்டியல் முற்றிற்று

மூன்றவது
பொருளதிகாரம் முற்றிற்று

இலக்கண விளக்கம் முற்றுப்பெற்றது

திருச்சிற்றம்பலம்

சூத்திர முதற்குறிப்பகராதி

சூத்திரம்.	எண்.	பக்கம்
அக்கிளை	542	52
அகக்காழுனென	547	53
அகப்புறப்பாட்டு	225	257
அகப்பொருள்	503	32
அகமெனப்படுவது	3	3
அகரமுமிகரமும்	565	56
அகவல்விருத்தம்	473	25
அகவல்வெண்பாவசை	443	19
அகவல்வெண்பாகலித்	451	21
அகவலிசையென	360	489
அச்சமுவர்த்த	148	128
அசையுஞ்சீரும்	380	536
அடிமுதற்	379	535
அடிமுதன்	499	31
அடிமுழுதுமடக்கு	316	433
அடியெனைத்	367	508
அடியொரு	359	487
அணிந்துழி	125	67
அணியெனப்படுவது	248	349
அதுவேஇமயவர்	441	19
அதுவேஇறைமை	218	251
அ ,, காமஞ்சான்ற	27	25
அ ,, கைக்கிளை	4	3
அந்தணாளர்க்கு	556	54
அந்தவடியின	362	491
அபாவந்தானுமதன்	286	408
அம்மை	382	538
அயன்மனை	59	35
அரசர்பாவால்	501	31
அரிபிறப்பு	496	30
அரிவைநாட்டம்	119	59
அல்லகுறி	146	123
அல்லாக்கல்வி	66	37
அலைகடற்றுனை	241	297
அவ்வமாக்களும்	211	246
அவண்மனை	42	31
அவருட்காதற்	56	35
அவருள்உயர்ந்தோன்	221	256
அவருளும்	111	50
அவற்றுள்அறப்புறங்	69	37
அ ,, இயற்பெயர்	223	256
அ ,, உடன்போய்	41	31
அ ,, உள்ளுறை	214	248
அ ,, எவ்வகை	266	360
அவற்றுள்எழுத்துமேற்	340	461
அவற்றுள்ஒருபோ	442	19
அ ,, ஒருவழித்	36	30
அ ,, ஓதற்பிரிவு	85	42
அ ,, களவின்	53	34
அ ,, கூதிர்	14	9
அ ,, சூத்திரம்	519	39
அ ,, தொடர்நிலை	396	5
அ ,, பாட்டென	390	2
அ ,, பிறிபொருட்	321	447
அ ,, பின்னைய	435	16
அ ,, பெருங்காப்பிய	255	351
அ ,, முத்தகச்	251	350
அ ,, வழக்கு	537	50
அ ,, வினையின்	528	43
அ ,, வெட்சிதானே	230	260
அவைதாம்ஒருதிற	259	353
அ ,, புனைந்துரை	6	4
அ ,, முதற்பொருள்	8	6
அவையடக்	516	37
அளவிலின்பத்	24	24
அறப்புறங்	68	37
அறம்பொருள்	484	28
அறம்பொருளின்பம்	561	55
அறமுதனுண்கிற்	258	353
அறிவர்கிழவோன்	108	49
அன்பினைந்திணை	113	50
ஆகமமென்பது	335	456
ஆங்கவை	207	226
ஆங்குடன்	50	33
ஆங்குறுநகரத்	419	10
ஆசரவுணர்ந்த	497	30

சூத்திரம்.	எண்.	பக்கம்	சூத்திரம்.	எண்.	பக்கம்
ஆசுமதுஞ்சித்திர	558	55	இறைச்சிதானே	216	249
ஆசுமதுரஞ்	391	3	இறையோன்கூற்று	201	215
ஆடூஉக்குறினெடி	401	7	இறையோனிருட்	145	116
ஆதியிடைகடை	314	428	இறைவன்பெய	453	22
ஆதிபுமிடையு	428	12	இறைவன்பெயர்	424	11
ஆதியொன்றொழித்	172	176	இறைவனைபாங்கி	143	114
ஆயவெள்ளம்	129	70	இறைவிக்கிகுளை	147	123
ஆயிழைமைந்தனா	184	195	இன்பமுமிடும்பை	210	245
ஆர்வமொழி	292	413	இன்னார்க்கின்ன	309	426
ஆரணங்குயர்ந்தோ	15	10	இன்னிசை	458	23
ஆவிமுதனான்	413	10	ஈண்டிய	452	21
ஆறுமூன்று	421	10	ஈரைங்	525	41
ஆற்றாறஞ்சினா	43	31	ஈரசைகூடிய	344	463
ஆறிரண்டொன்றே	489	29	ஈரடியான்வரிற்	358	481
ஆறுட்பகை	564	56	ஈரடிவெண்பாச்	374	521
ஆறுதலையிட்ட	491	29	ஈறில்வன்மை	426	11
ஆன்றகாட்சி	227	258	உடன்போய்	196	210
ஆனையாயிரம்	466	24	உடன்போய்வரைத	40	31
இடமலையாறு	330	453	உண்ணிகழ்தன்மை	293	413
இத்திறந்தசாங்கத்	409	8	உதவியந்தணர்	73	38
இதுநனி	204	216	உமையுரு	1	1
இந்திரனாரன்	19	11	உய்த்துணர்வின்றி	206	217
இயற்கைப்புணர்ச்சி	25	25	உரிப்பொருள்	477	26
இயற்கைப்புணர்ச்சிவன்பு	120	60	உருவகமுவமை	273	387
இயற்கைப்புணர்ச்சி	30	26	உரைக்கப்படும்	386	547
இயற்சீர்வெள்ளடி	373	518	உரையெடுத்	521	39
இயற்றுரிச்சீர்	343	463	உலகறிகாரணம்	281	402
இரங்கல்	140	110	உலகெனப்படுவதீ	333	455
இரந்துபின்னிற்றல்	136	94	உவமப்பொருளு	212	247
இரந்துபின்னிற்றற்கே	123	62	உவமையும்பொருளும்	271	382
இருபதுவெண்பா	447	21	உழிஞைதானே	235	278
இருவகைபாங்கரும்	105	48	உள்ளப்புணர்ச்சி	31	26
இருவர்நூற்கும்	530	44	உள்ளுறை	213	247
இருவரில்லிற்கு	173	176	உற்றனுகர	417	10
இருவருமொருங்கே	224	257	உற்றதசாங்க	431	14
இல்லத்தழுந்தலு	83	41	உற்றபண்பாதி	268	364
இல்வாழ்க்கை	178	180	உற்றயாவொன்று	422	11
இலையேமுறியே	549	53	உறுபுகழாக்கிய	515	35
இவ்விடத்திம்மொழி	205	216	ஊடலவ்வழி	63	36
இழிந்தோர்	75	39	ஊருமயலுஞ்	191	207
இளமையும்	96	45	ஊரையும்	476	26
இளையர்	104	48	எஞ்சியவிலக்கண	389	1
இறப்பேநிகழ்வே	203	215	எட்டாமிராகியும்	425	11

சூத்திரம்.	எண்.	பக்கம்
எட்டுமுதனுன்	488	29
எடுத்தவகரத்து	423	11
எண்ணின்மூன்றைந்	412	9
எம்முறையோரும்	200	214
எழுத்தலிசையன	383	541
எழுத்தின்கூட்டம்	313	427
எழுத்துச்சொற்	392	3
எழுத்தொடுஞ்	535	48
எழுதப்படுதலின்	339	460
எழுதியவல்லியு	118	58
என்பொருட்	155	144
ஏதுவுமேற்	560	55
ஏப்புழைஞாயி	237	286
ஏறியமடற்றிறம்	219	251
ஏறுமேற்றை	544	52
ஐந்துமுதலே	487	29
ஐயந்தீர்த்தல்	124	67
ஓஒயரல	427	12
ஒத்தகாட்சி	526	41
ஒத்தாழிசைக்கலி	365	497
ஒப்பெனப்படுவது	384	542
ஒப்பொடு	532	47
ஒருசார்	543	52
ஒருதலை	455	22
ஒருதலைகாமமு	23	24
ஒருநிரல்முன்	325	450
ஒருநெறி	528	40
ஒருநெறிப்பட்டாங்	202	215
ஒருபதுவெண்பா	450	21
ஒருபுணரொழிந்த	45	32
ஒருபொருடுணிய	324	449
ஒருபோகு	440	18
ஒருவகைசொற்றொடர்	299	418
ஒருவகைநிகழ்	306	424
ஒருவழித்தணத்	35	29
ஒருவன்பாவே	562	55
ஒருவன்றனக்கே	109	49
ஒருவினைபலவினை	300	414
ஒழிந்தோர்	57	31
ஒழுகியலோசை	378	538
ஒளியுமாற்றலு	245	312
ஒன்பதுபதி	439	11
ஒன்பதுவெண்பா	456	25
ஒன்றறிவதுவே	540	59
ஒன்றேவேறே	115	54
ஓதன்முதலா	82	.40
ஓதற்ககன்றோர்	88	43
ஓதற்றொழிலுரி	65	37
ஓரடியானும்	388	548
ஓரடியொழிந்தன	315	428
ஓரெழுத்து	317	436
ககரவருக்கத்து	415	10
கசதபனமவ	407	8
கடவுள்காக்க	471	25
கடவுள்வாழ்த்து	467	24
கடுங்கொலைநீக்கி	434	16
கருங்கழல்வேந்தன்	239	289
கருதியகுணத்தின்	302	422
கருதியதுகிளவா	295	415
கருதியபொருண்	304	423
கருதியபொருடொகுத்து	282	403
கல்விமுதலா	76	39
கலந்துழி	121	60
கலையெனப்படுமவை	332	454
கலிவெண்பா	498	30
கவியேகமகன்	557	54
களவின்வழி	51	33
களவுவெளிப்படா	38	30
கற்கடகம்	510	34
கற்கப்படுவோர்	566	57
கன்னிவிடலை	17	10
கனவினுறுத்தி	492	29
கனவினுறுத்தியை	485	28
கனவுமுரித்தா	199	214
காஞ்சிதானே	242	304
காட்சியையம்	114	54
காட்சிவேட்கை	33	27
சாதலன்பிரிவுழி	182	183
காதலன்முலைவிலை	159	151
காதற்பரத்தை	55	34
காப்பியமிரண்டும்	482	27
காப்புமூன்று	460	23
காமஞ்சாலா	217	249
காயேபழமே	550	53
கார்த்திகை	508	33
காரேகூதிர்	12	8

சூத்திரம்.	எண்.	பக்கம்	சூத்திரம்.	எண்.	பக்கம்
காலம்பொழுது	331	454	சீர்பொன்பூமணி	399	6
காலமிடம்	479	27	செந்தொடை	352	478
காலிற்சேறலும்	79	39	செப்பிலிசையன	356	480
கிழவோன்பிரிந்துழி	141	110	செய்யுள்வழுவே	328	451
கிழவோன்மகிழ்ச்சி	179	180	செய்யுளந்தாதி	260	353
கிழவோன்றன்னோடும்	192	208	செய்யுளென்பது	383	459
கிழவோன்றன்னை	102	47	செய்யுளென்பவை	250	349
குடிப்பிறந்தோரை	101	47	செயிர்தீர்	567	57
குணந்தொழில்	274	390	செல்லுங்கிழத்தி	127	69
குணந்தொழின்	301	421	செல்வம்வாழ்த	93	45
குரவரிற்	52	34	செலவறிவுறுத்தல்	152	138
குழமகனை	486	28	செலவிற்றேற்றலும்	92	44
குளகம்பலபாட்டு	252	350	செவிலிநற்றாய்க்கு	47	32
குற்றெழுத்தைந்தும்	411	9	செவிலிநற்றாய்	107	49
குறளடிசிந்தடி	347	469	செவிலிபுலம்ப	165	164
குறளடிநான்மை	369	511	செய்யுளென்பது	338	459
குறளேநேரிசை	357	481	சேயிழை	98	46
குறளொரு	348	469	சொல்லணி	312	427
குறிஞ்சிபாலை	7	5	சொல்லாதாகலினும்	77	39
குறிப்பினுணர்த்தும்	78	39	சொல்லியதொடை	353	478
குறிப்புவெளிப்படுக்கும்	289	411	சொல்லிய	539	51
குறியிடங்கூறன்	139	110	சொல்லும்	393	3
கூட்டல்கூடல்	138	110	சொல்லொடுங்	209	245
கூற்றினும்	280	400	சொல்வழு	326	450
கூறியநெறியின்	336	456	சொற்சீரடியாற்	493	29
கூறியலிலக்கணம்	432	15	சொற்சீரடியாற்	459	23
கூறியவகப்பொரு	187	205	ஞநபமயரவென	403	7
கூறியவல்ல	226	257	தந்தெய்வந்	131	72
கூறியவுறுப்பிற்	257	352	தமர்வரினிடை	195	209
கெழீஇய	60	35	தரவொன்றாகி	366	497
கைக்கிளை	5	4	தலைமைக்	551	54
கையறுதோழி	161	153	தலைவன்பாங்கனை	133	75
கோளைவலபாணன்	64	36	தலைவன்பேரூர்	513	34
கோமூத்திரியே	318	439	தலைவன்றலைவிமுன்	180	180
கௌடமென்பது	263	354	தலைவன்மாற்றந்	126	69
சகரவருக்கத்து	416	10	தலைவனுட்கோள்	137	95
சந்திவழுவே	329	452	தலைவிசேணகன்	168	172
சார்தல்கேட்டல்	132	75	தலைவிதன்னையு	84	41
சாற்றுதொழிந்த	246	325	தலைவிபாங்கி	44	32
சாற்றுவனவருந்	197	211	தளைசீர்வண்ணந்	370	512
சித்திரகவிமேற்	394	4	தன்சீர்	345	466
சிறப்புப்பெயர்	72	38	தன்பதிக்ககற்சி	153	138
சிறப்பினும்	298	417	தன்மையுவமை	265	359

சூத்திரம்.	எண்.	பக்கம்	சூத்திரம்.	எண்.	பக்கம்
தன்னூர்வரைதலும்	176	178	நெகிழிசையின்றிய	262	354
தாயர்பாங்கியர்	194	209	நெடிலுங்	342	462
தாழிசைத்துறையே	355	479	நெடுந்தொகை	445	20
தானமுநாளும்	429	13	நெடுமால்	18	11
தான்றற்புகழ்வது	294	415	நேர்நிரை	341	462
திங்கள்	511	34	நேர்நேரொன்ற	346	466
திணையேகைக்கோள்	188	205	நேரிசையிணைக்குறள்	361	491
தீதுடைப்புலவி	95	45	நேரிசைவெண்பா	468	25
தும்பைதானே	238	289	நேரின்மணி	522	40
துள்ளல்லிசையன	364	495	நேரீற்றியற்சீர்	430	14
தூங்கலிசையன	368	510	நோயுமின்பமும்	198	211
தூதிற்பிரிவும்	86	42	பகற்குறி	34	29
தூதுந்துணையும்	89	43	படைக்கலம்	67	37
தூரகாரியமு	287	409	படையுங்	553	54
தெய்வந்	29	26	பண்புந்தொழிலும்	267	361
தெய்வந்தெளிதல்	130	72	பணிமொழிநற்றாய்	171	174
தெரிவுவேறு	288	411	பணைமுலை	480	27
தெளித்தன்மகிழ்ச்சி	167	172	பத்துமுதலா	462	23
தெளிந்த	514	34	பதினான்	496	29
தேவராசர்	478	26	பயிறருங்	502	31
தோகைநிலை	253	350	பரத்தையர்	103	48
தோடேமடலே	548	53	பரத்தையிற்	74	39
தோழிசெவிலி	106	49	பரத்தையிற்பிரித	58	35
நற்பகரத்தின்	420	10	பருவரல்வினவிய	149	128
நற்றாயறத்	48	33	பழிப்பது	305	424
நன்மையினிறுத்த	97	46	பன்முகங்கொண்டு	569	59
நாற்றமும்	135	83	பன்னீருயிரும்	402	7
நான்குவகை	39	30	பன்னீருயிரும்முன்	406	8
நியாய	334	455	பாங்கிதலைவற்	164	158
நிரனிறை	291	412	பாங்கிதலைவியை	49	33
நிரைகோட்கேட்ட	232	267	பாட்டிடை	531	46
நிரைந்த	539	55	பாட்டுடைத்தலைவன்	220	256
நிரைநடுவாகிய	372	517	பாடாண்டிணையே	244	311
நிரைமொழி	534	48	பாயிரம்	517	38
நிலப்பெயர்	222	256	பார்ப்பான்	190	206
நிலமும்பொழுது	9	7	பார்ப்பும்	538	50
நிலமெழி	500	31	பாவிகமென்பது	311	427
நிறுவிய	387	548	பிரிபொருட்சொற்	319	446
நீங்குங்கிழத்தி	175	177	பிரிவறிவுறுத்தல்	186	196
நுண்மையும்	533	47	பிரிவறி	154	143
நூலெனப்படுவது	518	38	பிரிவுழிவிலக்கலும்	99	46
நூலேகரக	552	54	பிள்ளைக்கவி	433	15
நூறுவெண்பா	470	25	பிறப்பே	116	57

சூத்திரம்.	எண்.	பக்கம்
பின்னர்	61	35
புகழ்வது	290	412
புகுமுகம்	208	229
புணர்தலும்	21	13
புணர்ந்துடன்	193	209
புல்லுமரனு	541	51
புலத்திற்சிறந்த	80	40
புறக்காழன	546	53
பூத்தககாலை	87	42
பூத்தமைசேடியிற்	90	43
பூவுஞ்சாந்தும்	512	34
பெருங்காப்பியநிலை	256	351
பெரும்பொழு	11	7
பெயர்பொரு	284	406
பேடையும்	545	53
பொய்த்தன்	150	133
பொருட்கிடம்	249	349
பொருவிறந்	32	27
பொருள்பரி	308	426
பொருளணி	264	359
பொருளிடங்	504	32
பொருளினும்	254	351
பொற்பமை	177	179
போக்கறிவுறுத்தல்வரவ	174	176
போக்கறிவுறுத்தல்	163	158
போக்கறுமறபிற்	2	2
போக்கேகற்பொடு	162	158
போலமறுப்ப	270	377
மக்களொடு	112	50
மகமுதல்	509	33
மங்கலஞ்	398	6
மங்கலம்	436	17
மண்டமர்க	231	262
மடந்தையை	169	174
மடந்தையைவாயில்	94	45
மடமானோக்கி	117	57
மயக்கவடிபெறு	494	29
மருளுற்றுரைத்த	128	70
மலைநதிநாடேர்	410	9
மற்றைக்காவல்	70	37
மற்றையமூன்று	414	10
மறையிற்	54	34
மறையோர்மன்னர்	28	26
மறையோர்	505	33
மன்னியதகரத்	418	10
மனப்படு	283	405
மாட்டேற்றுரை	272	382
மாலையாமம்	13	8
மாலைவிருத்தம்	275	392
மாறுபடு	322	448
மாறுபடுசொற்	303	422
மிக்கநேரிசை	474	26
மிக்கவுறுப்பை	463	23
மிகுதலு	269	373
முடிமிசை	236	279
முத்திரப்பொருளும்	22	20
முதல்வழி	527	43
முதலெழுத்து	351	474
முதற்பொருள்	444	20
முந்துதாம்	296	416
முல்லைகுறிஞ்சி	506	33
முன்மொழிக்	568	58
முன்வருநீதி	100	46
முன்வருசொல்லும்	276	393
முன்னத்தின்	277	394
முன்னவை	189	206
முன்னிலை	160	153
முன்னிலைப்புறமொழி	46	32
முன்னுறவுணர்தல்	134	83
முன்னொன்று	279	398
முன்னோர்பாடிய	563	56
மூன்றடியொத்து	363	493
மூன்றுசூத்திரத்தும்	185	196
மூன்றுறுப்	524	40
மூன்றுமுதல்	437	18
மூன்றைந்தேழா	438	18
மெய்க்கிளை	26	25
மெய்பெற	337	458
மேற்கோளேது	320	447
மொழிந்ததுமொழிதல்	323	449
மொழிப்பட்ட	310	426
மோனையெதுகை	350	473
யதிவழு	327	451
யரலளவென்னும்	408	8
யாதன்றிறத்தினு	285	407
யாரையுநயவா	110	49

சூத்திரம்.	எண்.	பக்கம்
யாற்றதொழுக்கே	520	39
லவறன	404	7
வகுப்பாற்	495	30
வசந்தவருணனே	464	24
வஞ்சிதானே	233	272
வண்ணக	375	523
வண்ணந்தானே	385	542
வருக்கத்	454	22
வருக்கமுநெடிலும்	376	524
வருணன்	20	12
வருபடை	243	305
வரையேசுரமே	10	7
வரைவிடை	37	30
வரைவுமலிவே	157	151
வரைவுமுயல்வுணர்	158	151
வரைவெனபடுவது	156	149
வலனுயர்	81	40
வழக்குமரபுஞ்	536	50
வழிபடுதெய்வ	377	532
வழியெனப்	529	43
வளமடலுலாமட	483	27
வன்சொல்	278	395
வாகைதானே	240	296
வாடாவஞ்சி	234	273
வாயில்வேண்டல்	181	183
வாயில்வேண்டலும்	91	44
வாழ்த்து	381	537
விட்டிசைத்தன்றி	371	516
வித்தாரகவியை	395	4
வியத்தகு	297	416
விரித்த	397	5
விருந்தியற்	62	36
வில்வாள்	481	27
விலக்கல்சேறல்	142	114
விழுப்பொரு	400	6
விழையுமொரு	475	26
விறற்சேய்பொருப்பன்	16	10
வினவியசெவிலிக்கு	151	133
வினவியபாங்கியின்	166	164
விறுதல்செப்பண்	170	174
வினைபண்	307	425
வெட்சியுழிஞை	229	260
வெட்சிவஞ்சி	228	258
வெண்பாவகவல்	349	471
வெண்பாவாசிரியம்	354	479
வெண்பாமுத	465	24
வெண்பாக்கலிவிருத்	449	21
வெண்பாக்கலித்துறை	448	21
வெண்பாப்பத்து	469	25
வெண்பாவகவல்	446	20
வெண்பாவிருத்தம்	457	22
வெண்மை	507	33
வெள்ளணி	183	187
வெள்ளைகலித்துறை	472	25
வெளிப்படை	215	248
வேட்கை	122	62
வேண்டன்	144	116
வேதமாந்தர்	71	38
வேந்திடை	247	325
வேளான்	555	54
வேனிலைப்பாடுதல்	461	22
வைசிகன்	554	54
வைதருப்பம்	261	353
ழுளவெனு	405	7

இலக்கண இலக்கிய மேற்கோளகராதி

எண் - பக்க எண்

அஅவனும் 516
அஅவனும்இஇவனு 529
அஇஉஅய் 543
அஃகாமை 544
அகத்தனவார்கழ 288
அகப்பாட்டுவண்ண 544
அகமலியுவகை 230
அகரமுதல 528, 480, 487, 367, 444, 464
அகரமொட்டாகர 529
அகல்கின்ற 59
அகலல்குற் 444
அகலிடந் 65
அகலிருவிசும்பல் 358
அகிலின் 122
அகன்றுபொருள் 5
அகைப்புவண்ணம் 546
அங்கண்விசும்பி 484
அங்கண்மதிய 520
அங்கட்கிணையன் 266
அங்கண்வானத் 465
அங்கண்வானத் 468
அங்கமிலாத 449
அங்கைமலரும் 383
அங்கையு 270
அச்சாருகவுணரிய 242
அஞ்சுவருந்தானை 299
அஞ்சொற் 347
அடக்கருந்தானை 292
அடங்காவசுரர் 44
அடன்மாமே 224
அடிச்சந்தமால் 101
அடிநோக்கி 388
...டிதாங்கு 422
...டிமலர் 162
...முழுது 433
...வரையின்றி 509
...யதோற்றம் 389
...மர் 155
அடும்புகழ் 329
அடுமரந்துஞ்சு 50
அடைமரை 375
அடையார் 547
அடையாரடையா 430
அடைமரை 362
அணக்கருந் 319
அணங்கர 153
அணங்குடைநோலை 275
அணங்குடைப் 99
அணங்குறு 220
அணிகடற் 124
அணிகிளர் 521
அணிநிழல் 463, 490
அணியுமமிழ்து 59
அணிமலர 476
அணியெனப் 45
அணிவரும் 345
அத்திறத்தா 502
அதுநாமறிந்தில 114
அதிர்ப்பில் 53
அதுவேவகைக்கிளை 45
அதுவேதானே 56
அந்தரத்துள்ளே 527
அந்தரந்தோயும் 283
அந்தணர்சான்ரோ 321
அந்தணரருமறை 53
அந்தியின் 98
அந்தழை 286
அப்புற்ற 184
அப்போதடுப்ப 397
அம்பிகாபதியே 443
அம்பொற்பனை 419
அம்போருக 398
அம்மவாழிதோழி 545
அம்மவாழி 21
அம்மென்கிளவி 340
அமலலகல 437
அழியுமிரும்புன 116
அமருந்து 517
அமிழ்தினும் 530
அயர்வொடு 342
அயிலன்ன 276
அயிலுங்கயிலு 190
அயிரைபரந்த 243
அரசனுவாத்தியான் 149
அரத்தமுடஇ 186
அரவுங்களிறு 137
அரவுக்கு 117
அரவுநுங்கு 363
அரிகொண்ட 324
அரிதாய 227, 472
அரிமானன்ன 363
அரியார்விழவஞ்சி 47
அரியார் 120
அருஅநிலை 263
அருகுங்கலவி 140
அருங்கடியன்னை 130
அருகோடிநீங்கா 336
அருந்தும்பசியு 182
அருந்தும் 145
அரும்பிற்கு 253, 348
அரிமதர்ருண்கண் 51
அருமைத்தலை 272
அருவரைபாய்ந்து 307
அரவிசைக்குந் 203
அருவியங்குன்ற 416
அருவியார்க்கும் 90
அரியவரைகீண்டு 483
அருளல்ல 513
அருளின் 441
அருளொனு 499
அல்லவைநீக்கி 197
அலந்தமஞ்ஞை 490
அலந்தாங்க 238
அலர்முலை 331
அலையேற்றிய 185
அலைகடல்

அலராயிரந்தந்து 131
அவற்றுட்பாவ 543
அவர்நெஞ் 213
அவரேகேடில் 535
அவாப்போல் 376, 374
அவாப்போன்ற 547
அவிகொண்ட 141
அவிழ்மலர்க் 277
அவிழ்ந்தன 393
அவைதாம்நூலினு 38
அழல்போல் 380
அழலடைந்த 275
அழலவிர் 319
அழிவிலர் 210
அழுங்கனி 267
அழுந்தேனர 120
அளகந்திருத்தி 64
அளித்தஞ்ச 140
அளைதாழ் 102
அளிதோ 82
அளந்திரையா 317
அளபெடை 36, 544
அளவியை 61
அளவேவடிவு 367
அளியகழல் 310
அறநிலை 51
அறவோர்மொழிந்த 194
அறிந்தவராய்ந்த 275
அறியாய் 234
அறியார்வயவ 285
அறையுங் 139
அறியே 21
அறிவினு 539
அறுகாணிறை 108
அறத்தா 522
அறிந்தானை 486
அறுவர்க்கறு 535
அன்பீனு 526
அன்பே 177
அன்றெறிந்தானு 282
அன்னான் 181
அன்னாய்வாழி 21, 237
அன்னாயறங் 488
அன்னானொருவன் 223

அன்னைக்கியப்பின 176
அன்னைபோ 443, 367
அன்னையையா 515
அனைத்தாய 173
அனைத்துலகுஞ் 401
அனையகாவலர் 433
அனையவமருள 298
ஆஅவளிய 476
ஆக்கம்புகழ் 356
ஆகங்கண்ட 528
ஆங்ஙனமுரைப்பின் 259
ஆங்குணர்ந்து 85
ஆசிரிய 522
ஆசைபெரிதும் 396
ஆடரவம்பூண்டா 287
ஆடலமர்ந்தான் 323
ஆடலமர்ந்தான் 294
ஆடலிற்பயின்றனை 207
ஆடன்மயிலியலி 412
ஆதரந்துயர் 452
ஆதரந்தீர் 442
ஆதரந்தீரன்னை 442
ஆதிமுதல்வ 35
ஆம்பனுடங்கு 346
ஆம்பால்விரவின 189
ஆமினிமூப்பும் 304
ஆய்தூவி 24
ஆயபெருமை 333
ஆயபொருள்கள் 455
ஆயாதறிவயர்ந்து 333
ஆயின்றெனக்கு 156
ஆயுமடுதிறலார்க 309
ஆர்கலியுலக 525, 527, 535
ஆரத்தழை 100
ஆரம்பரந்து 140
ஆரவடமு 400
ஆலத்தினால் 77
ஆவாவிருவர் 89
ஆவாவென்றே 525,489
ஆவினியன்னாய் 74
ஆவுங்கனகமு 193
ஆவுமானியல் 261

ஆவூரெறிந்து 270
ஆவேறுருவின 522
ஆழமன்றே 97
ஆழவிடுமோ 345
ஆழியிழைப்ப 36, 548
ஆளமர்வெள்ளம் 269
ஆளரிக்கும்மரி 166
ஆளிமணிக்கொடி 266
ஆளும்பரியும் 406
ஆற்றினுணரி 333
ஆன்றகாட்சியி 258
ஆன்றசிறப்பி 258
ஆனந்தமாக்கடல் 115
ஆனாவயவர்முன் 294
இகலிலரெஃகுடை 225
இகலேதுணையா 264
இகன்மதமால் 410
இடங்கை 471
இடம்படு 331
இடர்திறத் 355
இடனின்றி 244
இடிக்கும் 81
இடிக்கொத் 122
இடைநுடங்க 514
இடைச்சுரமருங்கிற் 210
இடைமயக்கம் 53
இணரார் 340
இந்திரனென்னில் 316
இம்மூவுலகின் 300
இமயமுந்துளக்கும் 221
இமையவர்கண் 356
இமையாத 112
இயவர்புகழ 278
இயலுங்கலவ 112
இயற்கைப்புணர்ச்சி 61
இயற்சீர் 480
இயற்பெயசார்த்தி 36
,, மருங்கின் 36
இயைபுவண்ணம் 543
இவ்வகைஏழினும் 85
இவளே 23
இவணிவளைம்பால்
இல்லிதூர்ந்த
இல்லோன்

இல்வழங்கு 221
இலங்குபிறை 380
இலங்குமருவி 55, 249
இலநாமுரைப்பதன் 337
இலமலரன்ன 225
இலாஅஅர்க் 461. 517
இரங்காழன்ன 374
இரங்குகுயின் 495
இரண்டு 469
இரதமுடைய 92
இரந்துகுறையுறு 86
இரவறியா 423
இரவி 453
இருகுன்றனைய 178
இருங்கடலுடுத்த 519
இருங்களி 91
இருங்கற்புடைய 203
இருங்காலு 140
இருங்குன்றன 122
இருதுவேற்று 469
இருநிதிமதிக்கும் 380
இருநிலமருங்கி 268
இரும்பிழி 129
இரும்பிடியை 512
இருமையிலேயும் 195
இருவர்நூற்கு 459
இருள்பரந்துள்ள 479
இரைக்கு 470
இவளளவு 429
இளங்கொம் 77
இளமைநிலைதளர 333
இளவாருயிர் 143
இளிகொண்ட 266
இளையாளவளை 158
இறவார் 105
இறுதிநிலை 517
இறுமுறைஎண்ணு 266
இறைவாலிறைவா 430
இறையோன் 368
இறையேயிறந்தன 344
றுவரைவீழ 295
ளங்கொம் 77
ரபத்தைவெறுத்த 236
பமிடைத்தெரிந் 212

இன்னளாயின 131
இன்னகை 476
இன்னகையினைய 214
இன்னரெனவேண் 276
இன்னுமை 485
இன்னுசொகின 332
இன்னுநெறியுங் 152
இன்னுயிர்காத்து 397
இன்னுயிர்கழிவதா 240
இன்னேயிரங்குமெ 177
இன்றிப்படரே 346
இன்றுகொலன்று 484
இன்றுபகலோ 308
இன்றுமையான் 357
இன்றெருடை 320
இன்னுதை 160
இனமலர்க் 480
இனமாணிகல 423
இனிதெனக்கணவ 235
இனைநல 473
ஈத்துவக்கும் 530
ஈர்ந்துநிலம் 388
ஈண்டரில்சூழ்ந்த 288
ஈண்டியெருவை 319
ஈன்றுபுற 168
ஈரொற்று 517
உடைதலையும் 413
உடைமணிகாட்டிச் 190
உடையார் 483
உடையிவள் 21
உடுக்குங் 93
உண்ணுனெளி 517
உண்ணிலவு 404
உண்ணெகிழ்ந்த 387
உண்டற்குறிய 54
உண்ணீர்மை 373
உணங்குபுலவறு 308
உணர்த்திய 63
உணர்ந்தார்க்கு 61, 515
உதுக்காண்சுரந்தா 535
உமணர் 521
உமாநர 435
உடைதலையு 414
உமையாடலைவன் 139

உய்த்தலறிந்து 187
உய்த்தல்பொருதத் 335
உய்ந்தொழிவா 264
உயிரொன்று 71
உரவெரிவேய்ந்த 330
உரவொலி 340
உரல்புரை 378
உரனுடையுளத் 224
உரனென்னுந் 386
உரிமையின்கண் 468
உருகுதலை 102
உரைப்பினதுவியப் 269
உருட்டுவண்ணம் 547
உருவும்புகழு 57
உருவுகண் 482
உலகினுட்பெருந்த 536
உலகுடன் 479
உலகேழுற்கொடுத் 536
உலவாவளஞ்செய் 299
உவமச்சொல்லே 381
உவமையும் 362
உவவினைவாழிய 225
உவலைப்பதுக்கை 178
உவனின்றுறுதுயர் 285
உவன்றலை 308
உவரும் 94
உழிஞைமுடிபுனைந் 281
உழுதுபயன் 300
உழுந்துதலைப் 150
உள்ளங்குளிர 360
உளளம்புகுந்தே 406
உள்ளத்துவகை 187
உள்ளத்தவலம் 346
உள்ளந்தடுப்ப 139
உள்ளம்பிணிகொண் 213
உள்ளமுருக 341
உள்ளப் 106
உள்ளார்கொல்லோ 467
உள்ளினுள்ளம் 241
உள்ளிக்காண் 28
உளமாம் 76
உளைத்தவர் 348
உளைத்தவர்கூறு 253
உறக்குநதுணைய 223

உருஅ	104
உறுசுடர்வாளோ	292
உறுதுப்பஞ்சா	224
உறுதோறு	64
உறுபுயலெழிலி	544
உறையார்விசும்பு	303
ஊஉரலரெழச்	208
ஊக்கமுரண்மிகுதி	282
ஊசெருழிவிழக்கும்	398
ஊடியவுட	324
ஊதையுளர	334
ஊர்க்கானிவந்த	246
ஊர்கபாக	215
ஊர்வா	102
ஊரனூரன்	239
ஊருங்கலிகெழி	161
ஊழிதோறூழி	335
ஊழிநீஇ	500
ஊறின்றுவகை	302
எஃஃகிலங்கிய	515
எங்கண்மலர	286
எங்கணவனெங்	295
எங்காதலர்செல்ல	141
எச்சார்க்கெளிய	53
எஞ்சிய	46
எஞ்சியபொரு	545, 49
எஞ்சினாரில்லை	415
எஞ்சொல்லெதிர்	321
எடுக்குஞ்சிலை	391
எடுத்தநிரை	391
எண்ணினிகல்	331
எண்ணினிடரெட்	318
எண்ணியமூன்று	226
எண்ணுவண்ணம்	546
எண்ணும்பயன்	399
எண்பெயர்	45
எத்துந்தபதிரை	69
எந்தையுநிலனுறப்	208
எம்மனையாகிழ	328
எம்போற்புல்லுளைக்	243
எம்மாதிரமும்	185
எம்மூரல்லது	163
எம்வெங்காம	208
எயிற்குலம்	79
எரியகைந்தன்ன	379
எருத்துமேனோக்கு	223
எருமையன்ன	223
எல்லாக்கமலத்து	370
எல்லாவிளக்கும்	526
எல்லேயிலக்கம்	543
எல்லைநீர்வையகத்து	408
எவ்வியிழந்த	240
எழுங்குலை	137
எழுத்தெனப்படுப	44
எழுதெழில்சிதைய	220
எழுதெழின்	343
எழுதெழின்மாட	285
எழுத்தே	45
எழுநிலத்	37
எழுவணிசீறூ	264
எழிலிவான	379
எழின்மருப்பு	24
எள்ளிநகினும்	219
எளிதன்று	89
எற்றேகொடிமுல்லை	399
எறிதேனலம்புஞ்	247
எறும்பி	579
என்கடைக்	152
என்பாற்குறையை	188
என்பூடுருவ	452
என்மலைந்தனன்	241
என்னறிவால்	72
என்னுமியம்புவ	175
என்னிற்பொலி	36, 545
என்னுறுநோய்	82
ஏரியிரண்	387
என்னோ	448
எனக்காவி	103
எனைக்கேளிருநின்	175
ஏஎயிஃதொத்தன்	255
ஏஎர்சிதைய	517
ஏங்காமுகில்பொழி	421
ஏந்தல்வண்ணம்	546
ஏந்திசை	496
ஏந்தியசங்கம்	440
ஏந்துவாட்டானை	303
ஏமானெனவஞ்சு	178
ஏரமலர்	503
ஏராடு	306
ஏரியிரண்டுஞ்	387
ஏரியிரண்டு	452
ஏவாரேவிழி	113
ஏவலிகன்மறவர்	285
ஏழுடையான்	60
ஏற்றுவலனுயரிய	315
ஏற்றூர்தி	316
ஏறடர்ந்துவின்	402
ஏனல்	93
ஏனையதா	524
ஏனற்பசுங்கதிர்	118
ஐந்தா	454
ஐந்துகதியும்	337
ஐயங்களைந்திட்டு	307
ஐயவிசிந்தி	310
ஐயுறவாய்நம்	191
ஐயோவிகல்	359
ஐவாயரவுற்ற	143
ஓக்குமே	479
ஒண்டொடீஇ	28
ஒட்டியாரெல்லா	337
ஒதுநின்றுல	436
ஒருக்குமாநாடுங்	235
ஒருகை	49
ஒருகையுடைய	222
ஒருங்கடமூவெயி	90
ஒருநாட்பிரிய	140
ஒருநாள்வந்து	233
ஒருநாள்வரினு	132
ஒருபாற்கிளவி	212
ஒருபேருணர்வுட	357
ஒருபொரு	449
ஒருமால்வரைநின்	530
ஒருவரொருவர்	449
ஒரூஉவண்ணம்	546
ஒரூஉநீயெங்கூந்த	223
ஒல்லெனீர்	301
ஒல்லேங்குவளை	357
ஒலிமணிதிரண்டே	3[illegible]
ஒழிதோற்றிய	1[illegible]
ஒழிபெனப்படுவ	[illegible]

ஒழுகுவண்ணம் 545
ஒள்வாண்மறவர் 289
ஒள்வாளமருள் 316
ஒள்வாண்மலைந்தா 265
ஒளித்தியங்கு 380
ஒள்செங்காந்தார் 328
ஒன்னுமுனையோர் 310
ஒன்றியவஞ்சி 510
ஒன்றிரண்டு 322
ஒன்றேயுளங்கொ 173
ஒன்றுஇரப்பான்போ 222
ஒன்றியவர்நா 286
ஓங்கலிடைவந்து 402
ஓங்கண்ணல் 127
ஓங்கியவேலான் 344
ஓங்கும்பலவும் 175
ஓங்குமொருவிட 118
ஓங்கெழிற் 29, 213
ஓடிக்குங் 139
ஓடுகோல்வளை 343
ஓதங்கரைதவழ் 300
ஓதநின்றல 436
ஓதியநுதலு 232
ஓருயிராகவுணர்க 331
ஓவத்தன்ன 363
ஓரூர்வாழினும் 544
கங்குற்கலைநிறை 136
கங்கைசடிலர் 87
கஞ்சுகம்வாய்த்த 337
கடல்புக்குமண் 270
கடந்தந்த 148
கடல்கண்டன்ன 242
கடற்குட்டம் 484
கடல்போல் 380
கடன்மேவு 434
கடனுன்கும் 457
கடவுட்கற்சனை 156
கடந்தொறும் 136
கடலுமலையும் 364
கடிகமழ் 311
கடிமனைச்சீறூர் 263
கடியவாயின 435
கடியார்பூங்கோதை 537
கடுங்கண்மறவன் 293
கடுத்துவர்த்த 49
கடுந்தே 100
கடுங்காலெறியக் 126
கடைநின்று 340
கடையாவே 403
கடைகொளுநியற் 404
கண்கருவிளை 515
கண்ணுமனமுங் 395
கண்டகம் 452
கண்டான்மலைந்தா 336
கண்டிகுமல்லமோ 23
கண்டுகளித்து 344
கண்டுகேட்டு 66
கண்போல் 363
கண்ணொடு 379
கண்கவர் 500
கண்ணூர்ந்து 329
கணிகொண்டலர்ந் 470
கணியார் 115
கணைகழிகல்லாத 239
கணைக்கால் 378
கதிரோடைவெல்க 281
கந்தாடிய 87
கயக்கிய 304
கயல்போலும் 370
கயநாடுயானை 379
கயமலருண்கண் 220
கயன்மலைப்பன்ன 530
கயமாமலரெனுங் 152
கயலேருண்கண் 526
கயலோ 436
கயற்கூடு 347
கயலேர்மலருண்கண் 51
கரணம் 149
கரத்தான் 408
கரந்தைவிரைஇய 19
கரமருவு 391
கரவொடு 409
கரிக்கும்பகம் 88
கரியபெருந்தடம் 348
கருங்கால் 127, 390
கருங்கால 147
கருங்கோத் 6
கரும்பகடு 319
கரும்பொடு 278
கருமமு 483
கருமாலை 434
கருநாண் 140
கருங்கண் 91
கருங்கழல் 319
கருங்கால்வேங்கை 20
கருங்கோட்டெருமை 23
கருந்தலையும் 309
கருந்தடங்கண் 339
கருந்தினை 146
கருந்துன்றுவார் 190
கரும்பகடு 341
கருமாலை 436
கருவார் 443
கருவார்புயனென்று 162
கரைபொரு 494
கல்கெழுசீறூர் 271
கல்லருவியாடி 339
கல்லாக்கோவல 237
கல்லாசுரத்து 172
கல்லுயர்தோட் 412
கல்லெனீர் 334
கல்விசேர் 375
கலங்கரு 473
கலங்கவிழ்த்த 375, 376
கலங்கழாலிற் 536
கலந்தவனை 330
கலபமாமயில் 389
கலிவெண் 522
கலைநிலாவரு 432
கவ்வைநீர் 310
கவலைமறுகி 301
கவிமுதியார் 445
கலைக்கீழ் 92
கழகத்தியலுங் 338
கழங்காடாயத்து 238
கழல்சேர்ந்ததாள் 415
கழிகின்ற 101
கழித்துறை 256
கழிந்ததிளமை 409
கழியாக்காதல 224
கழியார்கருங்கடற் 155

கழுதார்பறந்தலை	292
கழூவொடுபாகர்	271
களமர்கதிர்மணி	276
களவுடன்	375
களிக்குங்	366
களிச்சாத்தாஅஅ	514
களிற்றிரை	361
களிறுற்ற	136
களிறுகவர்	244
களைகளைய	432
கற்பாலுமிழ்	37
கற்பின்விழுமிய	296
கற்பொறியும்பாம்பு	[illegible]4
கற்றில	[illegible]3
கறியுறுசாரற்	[illegible]8
கன்னின்றான்	302
கன்மிசைமயில்	21
கன்று	494
கன்றும்முன்னாது	237
கன்றும்வயவேந்த	416
கன்னற்சிலைமதன்	200
கன்னவிறோளானை	341
கன்னிதன்	385
கன்னின்றா	302
கனவினானெய்திய	238
கனம்வந்தி	91
கனமேகருங்குழல்	73
கனிகொள்	408
கனிவாயிவள்	429
கனையிருள்	126
காக்கை	437
காட்சியையங்	338
காட்டகஞ்சென்று	271
காட்டாதன	43
காடுகனலக்	329
காடுங்கடுந்திரை	336
காண்டன	340
காண்படுதீயிற்	277
காணிலரனுங்	266
காணாமரபிற்	70
காதல்பெருகிக்	344
காதலன்மெல்லுயிர்	141
காதலர்	454
காதலன்மேலூடல்	408
காதலன்	411
காதலனைத்	385
காதன்மடந்தையர்	65
காந்தளணிமலர்	361
காமர்கடும்புணல்	520
காம்பிணை	74
காமங்கடவ	125
காமப்புணர்ச்சி	85
காமநெடுங்கடல்	343
காமம்	29
காமமுழந்து	101
காமரம்	434
காமருதோ	407
காமருநோக்கினை	239
காமரைவென்ற	119
காமனுருவங்	448
காமனைவென்	426
காய்கதி	458
காய்சின	101
காய்ந்துகடுங்களிறு	293
காய்மாண்ட	526
காயாவீன்ற	81
கார்க்குலமும்	401
கார்கருதி	291
கார்கள்ள	380
கார்நறுநீலம்	537
கார்மழை	380
கார்விரிகொன்றை	378
காரணமின்றி	403
காரார்கொடிமுல்லை	409
காரார்	102
காரிகையார்	413
காலார்கழலார்	268
காலான்மயங்கி	293
காலைமுரசு	285
காலையுமாலையும்	423
காவலமைந்தான்	299
காவலமைந்தான்	299
காவியங்கருங்கண்	531
காவியன்ன	74
காவும்பருமணற்	185
காவைப்பொருவு	113
கானமர்குன்றர்	146
கானயானை	361
கானற்கயலாம்	393
கானலுங்கழறாது	213
ஷெடி	241
கானன்மாலை	18
கானிமிர்தார்	358
கானவாரண	442
கிண்கிணிகளைந்தகா	223
கிழக்கிடுபொருளோ	363
கிளைபாராட்டுங்	16
கிளைத்துக்	147
கிளையாய்ந்து	294
கூடத்தலையர்	50
குடபால்	450
குடநிலை	504, 496
குடிப்பிறப்புக்	301
குடையலர்காந்தள்	328
குடவரையேந்தி	336
குணங்குற்ற	157
குணகடற்றிரையது	221
குந்தங்கொடுவிற்	292
குலாவுஞ்சிலையார்	307
குவவினகொங்கை	97
குவளைநெடுந்தடம்	338
குவளைக்கருங்கட்	90
குவளையுண்க	490
குவளை	78
குயிலை	78
குரவலர்பூங்குழலார்	204
குரவார்குழலாள்	430
குருகுபெயரிய	282
குருகுவெண்	520
குருகோடு	36
குருந்தமொசித்த	316
குருநாண்	65
குரையழன்	278
குலாவணங்கு	518
குழலிசை	488
குழலினி	513
குழைபொருது	373
குழையருகு	372
குளிரும்பருவத்தே	243
குளிறுமுரசங்	276
குளிறுமுரசினான்	283

குற்றிகரங்குற்றுகர 541
குறப்பாவை 160
குறளடி 491
குறிப்பும் 45
குறுஞ்சீர்வண்ணம் 544
குறும்பைவரிமுலை 341
குறைவிற்குந் 137
குன்றங்கிடையுங் 144
குன்றக்குறவன் 464,490
குன்றநாடன் 71
குன்றியுங் 380
கூடம் 457
கூடார் 119
கூடிமுரசி 276
கூடியகொணகன் 344
கூடுவார்கூடல் 545
கூத்தரும் 31
கூம்பலங் 62
கூவிளங் 486, 487
கூர்முண்முண்டகக் 152
கூழின் 362
கூளிநிரைக்க 122
கூற்றினத் 264
கெண்டையை 515
கெடலரு 499
கேட்டிசின் 130, 214
கேழேவரையுமில் 145
கேளிர்வாழி 207
கேள்விமறையோன் 318
கைகவியாச் 212
கைகால்புருவம் 338
கைக்கிளை 250
கையார் 188
கைத்தளிரால் 385
கைபிசையா 415
கைநெரித்து 414
கைகாந்தள் 384
கொங்கார் 321
கொங்கவிழை 321
கொங்கலர்தார் 303
கொங்குதேர் 67
கொங்குதங்கு 471
கொங்குதங்கு 530
கொங்கை 383
கொட்கு 309
கொடித்தேர் 178
கொடிபடு 322
கொடியார் 431
கொடிறுபோல் 6
கொடுங்கோல் 78
கொடுப்போ 149
கொடுமுண் 124
கொடுவரி 265
கொடைத்தொழி 272
கொண்டல் 431, 152
கொண்டன் 448
கொண்டானிற் 195
கொத்தல 204
கொய்தினை 509
கொல்களிறு 328
கொய்யுஞ் 194
கொய்தார 334
கொல்லா 480, 487
கொல்லாண் 189
கொல்லான் 481
கொல்லியம் 434
கொல்லே 543
கொலைவிற் 320
கொலையானு 309
கொழுந்தாரகை 108
கொழுந்தா 158
கொழுநிழன் 246
கொள்பொருள் 422
கொன்றுத்த 309
கொன்று 513
கொன்றூர் 494
கொன்னூர் 126
கொன்னே 155
கொன்னுனை 168
கோட்டந்திருப்புரு 124
கோடலெதிர் 29
கோடலங் 47
கோடீரெல்வளை 99
கோடுயர் 88
கோடுயர்வெற்பி 284
கோடும்வயிரு 286
கோம்பி 76
கோலத்தனி 64
கோவலர்வாய் 400
கோவர்ப்பன 435
கோவையை 148
கோள்வாய்முதலைய 283
கோழியுங்கூவின 542
கோழியெறிந்த 521
கௌவைபெருக 339
கௌவைவிரி 368
சங்கந்தரு 104
சங்கமுழங்க 163
சங்குங் 268
சந்தனத்திற் 371
சந்தார்வனமுலை 142
சரியும் 390
சாந்தங்கமழுந் 201
சாரலோங்கிய 531
சாரற், கருங் 249
சாறுதலை 374
சான்றவிர் 251
சான்றோர் 407
சித்திரவண்ணம் 544
சிந்தாமணி 68
சிமையார் 148
சில்வளைக்கை 321
சிலம்பணி 91
சிலைமேல் 99
சிலைவிலங்கு 528
சிலைவிலங்கு 354
சிலைவிலங்கு 467
சிற்பந்திகழ 182
சிறந்தார் 111, 196
சிறந்ததிதுவென் 303
சிறந்துழி 57
சிறப்புடை 3
சிறப்பே 363
சிறியகட் 492
சிறுகுடியீரே 536
சிறுநன்றி 513
சிறைபடுவ 420
சிறைவான் 76
சினைவாட
சீதமதியின் 370
சீர்செல 345
சீர்மிகு 335

சீர்முழுதும் 528
சீரளவில்லா 197
சீரியலாவியும் 182
சீலத்தான் 446
சீலந்தகை 193
சீறடிபேரகலல் 477
சுட்டிக்கூறு 366
சுடர்தொடீஇ 503
சுடுமண்ணெடு 284
சுருக்கமில் 37
சுத்திய 170
சுரும்புறு 121
சுரும்பெழு 72
சுரும்பிவர் 170
சுரையாழ 486
சுழியாவரு 136
சுனையார் 134
சுற்றினவீழ்பனி 200
சுற்றுங்குழனின் 199
சுற்றுவிற் 401
சுற்றியசுற்றும் 277
சுற்றுஞ்சடை 134
சுறமறிவன 473, 511
சுறவார் 130
சுறவினத்தன்ன 362
சூடியவான் 323
சூடினுள்வாகை 298
சூதார்வன 109
சூரல்பம்பிய 493
சூழ்கதிர்வான் 318
சூழ்ந்த 265
சூழ்ந்துமுரண் 360
சூளாமணி 73
செங்கண் 522, 284
செங்கண்மழ 274
செங்கமல 394
செங்கமலம் 357, 454
செங்கரங்கள் 418
செங்கலச 357
செங்களம்பட 245, 472
செஞ்சேல் 121
செஞ்சாந் 227
செந்திருவும் 372
செந்தீயோட்டிய 378
செந்நிறமேனி 89
செம்மல 118
செம்மைமற 372
செய்குன்று 163
செய்ம்முக 184
செய்யவாய் 530
செய்யுந்தவ 188
செய்யுளென்பது 46
செயிர்க்கண் 301
செருமலி 293
செருமான 357
செல்கை 397
செல்விற் 161
செல்லுநெறி 396
செல்வப்போர் 468, 523, 496, 504
செவ்வாய்தளிரா 383
செவ்வாய்நகை 384
செவ்வாய்பசும் 530
செவ்வான் 380
செவ்வானன்ன 362
செழுங்கார் 118
செழுநீர் 107
செறுஅஅய் 517
செறிவேழ 63
செறுநற் 379
சென்றுசெவி 401
சென்றேவினை 41
சேடார்மலர் 173
சேணுர்கொடி 112
சேணிற்பொலி 76
சேணுந்திகழ் 204
சேந்தன 390
சேயேன் 220
சேர்ந்தபுரவி 414
சேற்றுக்கா 485
சேற்றுநிலை 18
சேற்றுவளர் 364
சொல்லி 146
சொல்லமொழி 413
சொல்லுஞ் 337
சொல்வரைந்த 46
சொற்பால 61
சொன்ன 433
சோகமெவன் 355
சோதியிரவி 420
சோலைபயிலு 423
சோலைமயிலன்ன 331
சோலையார்ந்த 512
தக்கார் 525, 528
தகைமெலியக்கொங் 200
தங்குறிப்பின் 91
தசநான் 359
தடமண்டு 483
தண்கவிகை 398
தண்டளிர் 378
தண்டாமரை 93
தண்டாவிருப்பின் 266
தண்டாரணிய 348
தண்டுறைநீர் 427
தண்ணந்துறைவன் 186
தண்ணளிசேர் 404
தண்ணென் 127
தண்பொருநை 453
தண்மதியேர் 505
தண்மலர் 444
தத்தித்தாது 437
தந்தையிலைச்சுமடன் 537
தம்புரவுபூண்டோர் 410
தம்மாற்பயன் 024
தம்மிலிருந்து 120
தமருட்டலையாத 275
தலைப்படு 77
தலையாய 101
தலையிழந்தான் 400
தவிராமதுவுண் 419
தழங்கு 108
தழல்கண்ட 80
தழைக்கின்ற 93
தள்ளாவிட்டேர் 418
தள்ளரியமுய் 293
தன்கணளியவாய் 341
தன்சொல்லுணர்ந் 378
தன்மதிக்கு 384
தன்னிழலோ 321
தன்னுறுதொழிலே 262
தன்னையுந்தோளையு 135
தனக்கொத்த 52

தனிநிலையளபெடை 517
தனிநிலை 463
தனிமொழி 45
தாஅட்டாஅ 477
தாஅவண்ண 543
தாங்கன்மின் 288
தாங்கியகேளொடு 310
தாட்டாழ்தடக்கை 277
தாதளவிவண்டு 368
தாதிவர்போது 74
தாதுறுமுறிசெறி 545
தாதேய் 104
தாதொன்று 368
தாமரைக்கண்ணியை 20
தாமரைநாண் 369
தாமரைமேல் 339
தாமரையன்று 367
தாமரையின் 483
தாமரைவாண் 366
தாமாகமேவினு 175
தாமேதமக்கொப் 169
தாயன்னாள் 332
தாயாயா 437
தாயிற்சிறந்ததன்று 160
தாயென்செய்தாள் 167
தாயேயா 442
தார்காலமன்ற 146
தாராகநல்கினர் 185
தாருறு 131
தாரென்ன 90
தாவினல்லிசை 4
தாழச்செய் 65
தாழாரமார்பினன் 275
தாளாள 488
தானுற்ற 220
திங்கணுதல் 414
திங்கள்சொரிநிலவு 406
திங்கள்விளங்குந் 335
திண்காட்டி 204
திணைகானு 48
திரண்மாமரகதச் 66
திருத்தியன்போடு 191
திருந்தே 192
திருநகர் 19
திருநுதல்வேர்வு 339, 533
திருமழைதலைஇய 467, 540
திருமருவு 371
திருமாலறியாச் 197
திருமுகம்போன் 369
திருவடிவீழ்ந்தடி 201
திருவளர் 57
திருவூரகத்து 203
திரைத்தசாலிகை 469
திரைத்த 473
தினைக்காவல் 94
தினைக்காவன்மாறி 181
தீட்டச்சொல்லா 177
தீண்டாநாண் 43
தீண்டியுங்கண்டும் 317
தீதாகி 106
தீம்பாலூட்டினும் 238
தீயின்றிவேந்தமி 403
தீர்த்தநீர் 285
தீர்ந்துவணங்கி 334
துடித்தடிந்து 438
துணைவளைத்தோ 504
துணியிரும் 539
துணையேதுமின்றி 193
துதையுஞ்சுரும்பு 188
துப்போதுசேயிதழ் 173
துயிலின்றி 40
துயிலின்றியான் 225
துவைக்குந் 527
துளியிடைமின்னுப் 220
துளியொடு 526
துறைவுளவா 391
துறைமேய் 79
துறைவன்றுறந்தெ 129
துறைவாதுறைவா 429
துன்னருந்தானை 328
துன்னருந்துப்பி 307
துனைவருநீர் 356
தூஉத் 517
தூங்கல்வண்ணம் 546
தூங்கலிசையன 368
தூசுங்கலையுந் 66
தூதவர்விடுதரார் 239
தூதுந்துணையு 201
தூயசெந்தாமரை 71
தேங்கம்பழம் 97
தெம்முனைதேயத் 308
தெம்முனையிடத்திற் 361
தெய்வந்தன் 61
தெய்வம் 456
தெய்வமஞ்சல் 236
தெரிவருங் 443
தெரிவின்றி 345
தெரிவினலமரு 320
தெவ்வரை 105
தெள்ளறல் 14
தெள்வன்புனற் 171
தெளிவளர் 68
தெற்குங் 450
தென்பாற்றிலக 70
தென்மலையின் 452
தென்மாறை 174
தென்றலனங்கன் 390
தென்றலிடை 533
தேங்கானன் 429
தேதாவென 200
தேம்பழுத் 47
தேமாகருவிளங் 487
தேமாம்பொழிற் 131
தேமேகுவனை 470
தேவரிற்பெற்ற 67
தேவாசுரரிறை 184
தேற்றியவஞ்சினம் 181
தேருதவன்பினர் 141
தேன்வந்த 103
தேனக்கலர்கொன் 384
தேனூர்கமழ் 509
தோண்டினமேவுஞ் 182
தொடிக்கண் 225
தொடிடெகிழ் 231
தொடித்தலை 221
தொடிநிலைநெகிழச் 238
தொடிநெகிழ்ந்தன 546
தொடிவைத்த 191
தொடியணி 328
தொடுப்பார் 167

தொடுததவேமபின	546
தொடைவநத	115
தொடைவிடை	301
தொலலூழி	23
தொலலைமறை	421
தொழுதுவணஙகி	41
தொனனலத	473, 511
தோடவிழநதார	342
தோடாரெல	527, 543
தோடுகொணடளி	432
தோலககரி	104
தோளிறகுழைவும	87
தோளுமகூநதலும	99
நகைநீகேளாய	219
நகையமராய	309
நகையாகினறே	219
நடபரணெதிபகை	9
நடணும	102
நடுஙகிநறுநுத	346
நடுஙகுதலகாணமா	219
நடுவணைநதிணை	7
நடைககுதிரை	515
நணணுவாாவினை	535
நணபி	488
நணபோடினிய	173
நநதீவரமெனனு	119
நமபேறுடைமை	127
நமபோலெளிய	125
நரலவே	107
நலகெனிணுமிசை	324
நலததகை	434
நலலாய	145
நலலாாகட்	388
நலவரைநாட	241
நலவளையேக	342
நலிபுவணணம	544
நரிதடதத	372
நறகொறற	485
நறபகற	121
நறருரகலததுக	242
நறறிணை	20
நறவேநதுகோதை	417
நறுநதணகூநதல	99
நறுநதணடகரம	99
நறுநீநல	486
நறைககண	137
நறைகமழதாா	417
நறைபரநத	19
நறைபரநத	91
நனகலமபெறற	225
நனறறி	466
நனறறி	480, 486
நனறுதீதெனறு	369
நனறேஇனியவா	141
நனறேயுமககவா	168
நாடடநதடுமாற	375
நாடடியவாயமொழி	315
நாடடியநடபு	322
நாணபோலும	415
நாணமாதவிமலா	169
நாணகையுடைய	220
நாணவுநடுஙகவும	85
நாணொடு	502
நாநாதாங	437
நாபபுலவாசொன	269
நாமவநத	125
நாலிரணடாகும	225
நாவலபெயரியஞா	286
நாவாயுநதோணியு	284
நாவியுங	67
நாவொடுநவிலா	219
நாளுநாளும	19
நாறறமுநதோறற	84
நிததிலஞசெய	272
நிதியநதுஞசு	358
நிமபிரிகொடுமை	244
நிரையாநிரையா	432
நிலததினும	452
நிலததினுமபெரிதே	222, 492
நிலநீாவளிவிசுமபு	546
நிலனும	417
நிலையுநிரையு	264
நிலையேசெலவந	13
நிலைவரை	57
நிலைவுமணலகன	545
நிலனுமவிசுமபாம	417
நிழறகோப	364
நிழறகோபமலக	371
நிறைசூழெழிலி	198
நிறைபொறிவாயி	283
நினவானமுகம	376
நினறசொலலி	243
நினறபுகழொழிய	283
நினறபுகழொடு	320
நினறனநினறு	490
நினறுநிழமிசை	332
நினனுடை	77
நினனுறுவிழுமங	237
நினனுழை	372
நினனைநா	437
நினைககினுமரிதரோ	211
நினையாநினையா	429
நினைவரிய	424
நீகணட	105
நீஙகரும	69
நீஙகிறசிறிது	68
நீஙகிறறெறறுஉங	75
நீடினாக	525
நீடுஙகொலலோ	73
நீவாத	440
நீவிளையாடுக	210
நீலபபுருவம	375
நீலமணிமிடறற	360
நீாபலகான	300
நீாமலிககணணொடு	330
நீாவாாநிகா	378
நீரதுகணமே	12
நீராடான	49
நீரினறமையுந	492
நீரூாபாறு	544
நீரொடுநிறைநத	221
நீளமபவளம	88
நீளிநெடுநகா	52
நுடஙகருவி	343
நுமமொடுநகக	220
நுமது	439
நேடிபடுகானதது	273
நெடுஞசீா	544
நெடுநிலையாயதது	268
நெடுவெண	522
நெயகொள	335

நெய்தற்படப்பை 125
நெய்யணிகசெவ்வே 287
நெய்வளர் 82
நெருநலும் 98
நெருப்பினன்ன 374
நெறியறிசெறியறு 547
நெறியாரலங்கன் 192
நேயத்தாய் 72
நேர்நே 490
நேரசையாகவும் 13
நேராம்பூண்ட 279
நேரார்படையின் 295
நேரிழைமகளிரு 521
நேரிழையார் 440
நொச்சிவேலித் 240
நொந்துங்கலுழ்ந்துந் 169
நொச்சின் 59
பகடுவாழ்கென்று 304
பகலும்பெறுதி 216
பகலேபல்பூங்கான 525
பகலேபல்பூங் 529
பகலோன் 111
பகைவர்கொண்ட 271
பங்கேருகத்தண் 184
பட்டொட்டி 543
படங்கெழு 381
படமா 107
படைநவின்ற 320
படைநவின்ன 57
படைப்போர் 522
படையொடு 538
படர்ந்த 191
பண்காவல் 198
பண்டாலியலு 103
பண்டிப்புனத்து 89
பண்டுநமக்குப் 154
பண்டுபுரமெரிப்ப 405
பண்டுமொருசால் 537
பண்ணவாம் 348
பண்ணூர் 78
பண்ணைத்தோன்றி 225
பணங்களஞ்சாலும் 168
பணந்தாழ் 79
பணிபவளந்தன் 436, 437
பணிவார்குழை 198
பணையாவரை 343
பத்தித்தகட்ட 360
பதுமங்களிக்கும் 401
பயில்காள 113
பரவிநாடொறும் 432
பரிசைபல 288
பரியுங்கரியும் 204
பரிவுசெய் 115
பருக்காழு 318
பருங்கண் 89
பருதிசெல்வானம் 308
பருதிநிறத்தும் 186
பருந்தார்சுடரிலை 199
பருந்தொன்று 64
பருவமாகவி 439
பருவமடுத்தது 146
பரூஉத்தடக்கை 505
பல்யானைமன்னர் 533
பல்லமர்செய்து 260
பல்லிலநாக 92
பல்லுக்குத் 514
பல்வகை 460
பலமுறையுமோம்ப 533
பலவின்பழத்துட்
பலவுரைத்து 347
பலிபெறுநன்னகரு 275
பவழவாய் 385
பவழமும் 528
பழிதபுஞாயிறே 239
பற்றிப்பலகாலும் 529
பற்றுக 528
பற்றென்றி 137
பறந்திருந் 161
பன்மாடக் 485
பன்மீனுணங்கல் 545
பனித்துண்டஞ் 134
பனிநின்றசோலை 181
பனியிருங்கங்குல் 40
பனியோர் 107
பனைவளர் 118
பாங்கர்ப்பல்லி 238
பாங்காயவின்பப் 181
பாசடை 6
பாசத்தனை 106
பாடல்பயிலும் 411
பாடுநகர்க்கும்மாடு 537
பாணர்சுரும்பு 153
பாம்புரு 378
பாய்திரை 213
பாய்ந்துமெரிந்தும் 336
பாயாதவேங்கை 403
பாயிருள்பரப்பகம் 539
பாயினார்மாயும் 287
பாயும்விடையரன் 58
பாயும்விடையோன் 171
பார்க்கடன் 540
பாரிபாரி 389
பால்போலுமின் 366
பாலன்தனது 392
பாலுமுண்ணான் 207
பாலைபடுமலை 338
பாலையாழ் 431
பாலொடு 481, 466, 480
பாவகை 36
பாற்பகை 363
பாறுறடிசிலு 182
பிடிக்கையன்ன 246
பிடித்தாடியன்ன 299
பிண்ணாக்கோஓ 514
பிணங்கமருட் 270
பிணையுந் 159
பிறங்கிருமுந்நீர் 239
பிறர்க்கின்னா 355
பிறவிப்பெருங்கடல் 381
பிறர்செல்வங்கண்ட 425
பிறனில்விழைவோர் 427
பிறைபுரை 341
பின்னர்நான்கும் 255
பின்னெடுமுடித்த 220
பீடுலாமன்னர் 278
புகழொழிய 332
புகைத்தகை 440
புங்கம்படவண் 198
புணர்ந்தபின்றை 86
புணர்ப்போன் 70

புணரிற்புணராது 41
புத்தேளுலகில் 379
புயல்வள 107
புயலன்றலர் 171
புயலே 449
புயற்கண்ணிய 127
புரிவின்றி 302
புருவச்சிலை 386
புலர்குரலேனற் 238
புலர்பாடும்புகழ் 57
புல்லார்நிரைகருதி 266
புல்லார்புகலொடு 282
புலவுநுனைப்பகழி 379
புலிக்கணமு 268
புலிநாவன்ன 364
புலியென்ன 379
புலிவிறப்ப 379
புலிவுண்டபுணர்ச்சி 253
புலிவொடுநாவினால் 337
புழற்கான் 121
புளிமா 487
புறங்குன்றி 362
புறத்தனவூரன 391
புறத்தாரொருழுகி 186
புறந்தந்திருளி 399
புறந்தாழ் 142
புறந்தாழ்புரிகுழல் 167
புறப்பாட்டுவண்மை 545
புறவார்நறுமுல்லை 82
புன்புலத் 112
புன்மேய்ந்தசைஇ 265
புன்னாடர் 402
புனையும்பொல 334
பூமகள் 441
பூங்கண் 322
பூங்கணையார் 76
பூங்காவிற் 425
பூங்குவளை 184
பூங்கேச 87
பூங்கொடி 20
பூட்டாத 403
பூண்டாங்கு 422
பூண்டபறை 509
பூண்டாங்கு 422
பூணுந்தரள 65
பூத்தவேங்கை 478
பூதலத்து 398
பூந்தண் 523
பூந்தாமரை 319, 465
பூரண 179
பூவேயனையர் 194
பூவையுண்டோ 167
பூவைவிரியு 315
பூவொடுநீர் 329
பேட்டவாயில் 86
பெடைநின்று 108
பெண்டிர் 225
பெண்மேன 341
பெயர்தனன் 207
பெயரும் 413
பெயரென 45
பெயல்காண் 119
பெரியோரு 425
பெருஞ்செல்வ 376
பெருந்தாமரை 87
பெரும்பணை 347
பெரும்புழு 230
பெரும்பூட் 302
பெருமட 340
பெருமையும் 231, 376
பெருவளக் 362
பெற்றோனொடு 169
பேணத்திருத்திய 161
பேடையை 512
பேதைப்பரு 162, 170
பேர்ந்துபேர்ந்து 540
பைந்தார் 171
பைந்தொடி 330
பையென 239
பைவாயர 121
போங்களக 387
பொங்கி 406
பொதுவினிற் 115
பொய்ம்மை 396
பொய்ம்மையுடன் 409
பொய்யகல 270
பொய்யாமை 855
பொய்யாதவர் 125
பொய்யில் 333
பொய்யுடை 75
பொய்யுரையார் 400
பொருகளிற் 379
பொருகின்ற 147
பொருண்மை 44
பொருளா 98
பொருளே 369
பொழிப்பே 47
பொற்கலத்து 381
பொற்றுணின் 446
பொறிமயிலா 337
பொன்றாத 108
பொன்னனை 108
பொன்னார் 111
பொன்னார் 465
பொன்னிவள 410
பொன்னினன்ன 543
பொன்னுரை 380
பொன்னுமணி 42
போஒஓர்த்தது 517
போகக்கரு 45
போதுகுலாய 200
போதுசாந்த 452, 490
போதுந்தளிரும் 424
போதோவிசும் 58
போர்வேலின் 424
போருறை 157
போற்றுந் 133
போதுவிரி 531
போர்க்குப்புணை 310
பௌவம்பணை 174
பௌவம் 274
மங்குன் 323
மங்குன்மாமழை 22
மஞ்சறி 105
மஞ்சுசூழ் 480
மடங்கலிற் 278
மடந்தா 38
மடப்பிடியை 511
மடுக்கோ 97
மடைக்கண் 64
மண்குன்ற 157
மண்டபத்து 450

மண்டமர்த்திண் 296
மண்டமர் 224
மண்டலம் 530
மண்டுமெரி 263
மண்ணகன்று 416
மண்ணலை 157
மண்ணிய 127
மண்படு 407
மண்பதனோக்கி 336
மணமலி 40
மணிகிளர் 506
மணிநிற 378
மணிமாற்றிய 381
மணியக்கணியு 135
மத்தகஞ் 103
மதரரிக்கண் 395
மதிகாட்டிய 148
மதியம்பொற்ப 381
மதியோர் 299
மதுப்பொழி 412
மதுமகிழ்ந்த 386
மதுமலர் 145
மதிமுற்றிய 145
மந்தானிலம் 467, 511
மந்திநல்லவை 222
மயங்காத 282
மயங்காமரபின் 44
மயங்கிமகிழ் 345
மயரறமதிநல 43
மயனார் 107
மயில்களிக்கும் 413
மயில்போல் 71
மயிலென 166
மயிற்கண 283
மரகத 457
மருதமர 6
மருப்பு 294
மருந்திற் 63
மருந்து 117
மருந்தெனின் 216
மருவார்குழலி 189
மருவிற்பெரு 187
மருவின 441
மல்லணிந்த 397
மல்லாடு 342
மலர்த்தார் 222
மலர்மலி 444
மலர்மிசை 537
மலவன் 122
மலர்வாவி 370
மலிதேரான் 401
மலிபொற்பைம் 52
மலைபடுசாந்தம் 324
மலையத்து 371
மலையிற் 388
மலையினலை 408
மலையுமலையு 431
மழவே 155
மழலைவாய் 388
மழையார் 430
மழையில் 22
மழையொன்று 381
மழைவர 126
மழைவிழை 389
மற்கொண்ட 343
மறக்கும் 79
மற்பாய் 160
மறவாகை 160
மறுப்பயின்ற 368
மறைநுவல் 434
மறைவந்தென் 141
மன்பதை 128
மன்மேல் 307
மன்றலங் 541
மன்றற் 389
மன்றுபாடவிந்து 240
மன்னர் 314
மன்னவர் 376
மன்னவன் 183
மன்னவர்சேயா 395.
மன்னும் 191
மன்னுமான் 438
மனங்கா 112
மனமேங் 431
மனைக்கு 392
மனைநெடு 5
மனுப்புவி 417
மாக்கொடி 526
மாட்டிய 269
மாட்டுமெச்சமு 5
மாடஞ்செய் 97
மாடுபயிலும் 451
மாணலங் 348
மாதங்க 155
மாதவா 444
மாதர் 64
மாதர்குறை 98
மாதர்துவரி 395
மாதர்நுழை 394
மாதருமை 411
மாதாருயிர் 430
மாதுற்ற 132
மாயக்கலவி 142
மாயவன் 322
மாரியன்ன 361, 380
மால்கரி 393
மால்கொண்ட 202
மால்வண்டென 147
மால்வரை 113
மாலைக்குமுத 185
மாலைதுயல 329
மாலைநிலவொ 405
மாலைமருவி 419
மாலையருளாது 431
மாலையாக 436
மாலையாமம் 8
மாவழுங்கு 520
மாவழுங்கலின் 536
மாவா 445
மாவரண 192
மாவும் 475, 528
மாவென 101
மாற்றத்தாற் 386
மாறுக்காதலர் 216
மான்விழி 369
மான்மருவி 392
மானமருங் 391
மானமே 438
மானவா 340
மானேர் 356
மானோக்க 379
மிகத்தாய 288

மிகலே	66
மிகைதணித்	199
மிகையணங்கு	329
மின்போல்	163
மின்றங்	163
மின்னங்	124
மின்னார்	292, 448
மின்னாவான்	438
மின்னிகரா	416
மின்னே	93
மின்னேயவர்	131
மின்னேமருங்கு	161
மின்னோ	398
மீள்வது	171
மீன்றியாத	129
மீன்றேர்ந்	531
முகைமொக்குளு	230
முகையவிழ்	52
முட்டுவயிற்கழறன்	236
முடிபொரு	522
முடுகுவண்ணம்	545
முத்தரும்பி	414
முத்திறப்பொரு	247
முத்துக்கோ	388, 389
முத்தேர்	381
முத்துடைவான்	378
முத்துப்போற்	47
முத்தொடு	498
முதலிவை	41
முதற்கணே	18
முதற்றொடை	36
முதுக்குறை	19, 88, 522
முந்தத்தான்	332
முந்தைமுதல்	266
முயங்கல்விடாஅ	244
முரசுமுழங்கு	368
முரணில	37
முருகவிழ	496
முருகவிழுங்குழல்	181
முருகவேள்	390
முருகார்முளரி	44
முல்லை	486
முல்லைக்கொடிநடு	395
முல்லைக்குத்தேரும்	316
முல்லையந்	6
முல்லைவைந்நுனை	17
முவாத்தமிழ்ப்பயந்	426
முழங்குதிரை	489
முள்ளிநீடிய	490
முளிதயிர்	5
முளைக்கும்	142
முற்றாமுலை	344
முற்றும்	80
முறஞ்செவிமறைப்	424
முறுவலக்காற்றந்	166
முன்செல்ல	216
முன்புறந்தான்	334
முன்னங்	392
முன்னர்	275
முன்னரும்	294
முன்னாவி	80
முன்னிட்ட	202
முன்னிலை	4
முன்னுங்	170
முன்னே	100
முன்னேதரு	355
முன்னேய	251, 53
முனிதரு	100
முனிவரு	202
மூத்துத்தலையிறைஞ்	221
மூப்பாளிளையவன்	198
மூரற்கதிர்	120
மூவடிவினாலிரண்டு	470
மூவறழீஇய	111
மூவருநெஞ்சம்	300
மூளாவரும்வழி	199
மூன்றெழுத்து	442
மெய்யுயிர்	45
மெய்யேபொருண்	396
மெல்லியல்	69, 159
மெல்லிசைவண்ண	543
மெழுகுமாப்பிகண்	220
மெய்வாய்	79
மேகஞ்சிறந்த	120
மேயகலவி	412
மேயதிரைபுரந்து	421
மேருசாபமு	444
மேலாரிறையருண்	317
மேவாருயிருணங்க	269
மேவியந்	106
மேவியொன்று	173
மேவிவாழ்	451
மைக்குஞ்சரநிரை	
மைகொண்ட	189
மைசிறந்தன	512
மைத்தழை	105
மைந்நீர்	159
மைமலரோதி	223
மையறவிளங்கிய	218
மையார்கதலி	135
மையுற்றநீலக்கண்	135
மைவார்க்கருங்கண்	88
மைவார்குழன்மட	194
மொய்த்துடன்	477
மொய்ம்மால்	104
மொய்யகத்துமன்ன	294
மொய்யணலாநிரை	265
மொய்யாடகமுடி	147
மொழிக்காரணமாம்	45
மோட்டாங்	118
மோட்டிரும்	378
மௌவல்விரியும்	535
யரலவழள	517
யாண்டுமொழிதிறம்	409
யாணர்க்குழன்	107
யாத்தவறிவின	484
யா தானு	481
யாமுயங்குமென்	344
யாமேயுமின்றி	87
யாமேபகுத்திட	208
யாயுங்கடனு	141
யாரிவனெங்கூந்தல்	217
யாருமில்லை	155
யாவகைய	451
யாவதுமறிகிலர்	112
யாவரறிவா	451
யாழார்மொழி	10
யாழியன்மென்	16
யாழியல்	438
யான்றற்காண்டொ	231
யான்றனறிவ	242
யானக	438

யானுமறிவு	77	வருணகணமே	13	வாள்வரி	509
யானுந்தோழியு	510	வருமந்தமாருதம்	138	வாளமரின்	329
யானைதாக்கினும்	223	வருமந்தவெல்லை	126	வாளரவின்	37
யானைதொடரு	422,345	வருமரை	433	வாளார்ந்த	503
யானோக்குங்காலை	230	வருமுலையன்ன	369	வாளைபிறழும்	295
வசையில்புகழ்	545	வருவன	133	வானக்கதிரவன்	66
வஞ்சமில்கோலா	299	வரையாவரையா	431	வானகந்தரு	435
வஞ்சியர்கோன்	457	வரையென்	117	வானத்தியலும்	347
வஞ்சியே	483	வல்லார்முற்சொல்	224	வானமிறைவன்	296
வடிக்கண்	78	வல்லிசைவண்ண	543	வானவர்	450
வடிக்கண்ணிய	190	வல்லிவதன	387	வானுகி	458
வடிவார்	114	வலத்தியல்சூல	194	வானிலங்கு	362
வடிவுடை	504	வலியரெனவழி	222	வானுழை	106
வடுக்கண்டனைய	201	வழக்குஞ்செய்யுளும்	4	வானுற	494
வடுத்தான்வகிர்மல	166	வழியுமதுவன்னை	135	வானோர்தொழ	511
வண்சினைக்கோங்	21	வழுதியர்	64	விச்சாதரனே	420
வண்டார்மகிழ்நன்	190	வள்வாய்ந்து	346	விசும்பினுக்கு	117
வண்டார்பூங்கோ	535	வளப்பட	472	விட்டிசைத்தன்றி	517
வண்டுபடத்	16	வளம்பட	484	விட்டிடிலென்	308
வண்டுளர்	495	வளருங்கறியறி	142	விட்டில்கிளி	318
வண்ணங்கருக	397	வளிதுரந்தகண்ணு	317	விடஞ்சூழரவி	495
வண்ணந்தானே	542	வளைபயில்	59	விடவாயரவை	142
வண்ணம்தரு	88	வளையும்	287	விடியல்வகறை	9
வண்புயலை	441	வளைவாய்ச்	132	விடியல்வெங்	9
வண்புனலூர்வை	189	வளையுவயிரு	288	விண்டலை	132
வதனமதியம்	376	வளையணி	104	விண்ணதிர்	380
வந்தபடைநோனன்	302	வறியார்க்கு	203	விண்ணிறந்தார்	397
வந்தாய்பவரையில்	145	வறியாரிருமை	202	விண்ணின்	373
வந்துநீ	515	வன்னந்தரு	88	விண்ணுக்கு	119
வயங்குளை	323	வனவேய்	201	விண்ணுயர்	232
வயலாமை	521	வாக்கு	49	விண்பொரு	379
வயலைக்கொடி	38	வாட்புகா	330	விண்வேண்டின்	317
வயிர்மேல்வளை	292	வாடைநலிய	301	விம்முறுதுயரம்	81
வரமாவை	162	வாணுட்	281	வியன்ஞாலம்	392
வரலிங்கரிய	125	வாமானுகளு	136	விரவலராய்	355
வரிசைகருதாது	316	வாயென்ற	381	விரவியும்	362
வரிதருகாஞ்சி	202	வார்த்தன	203	விரிகடல்	384
வரிப்பந்து	324	வார்புருவங்	386	விரிந்தமதி	410
வரியவாங்கி	434	வாரண	154	விரிபுனர்	380
வரிவண்டு	392	வாராதா	237	விரியுளைக்கலிமான்	242
வரிவாயம்பெருத	224	வாருறு	250	விரைமேவு	434
வருகம்புளினம்	432	வால்வெள்ளி	544	வில்லார்குறும்பி	307
வருகோவை	49	வாழும்	203	வில்லும்பிறையும்	100
வருங்குன்ற	68			வில்லேருழவர்	388

வில்லைப்பொலிநுத	186
வில்லோன்	216
விலங்குந	345
விலங்கொடு	364
விழிகுழியும்படி	147
விழியால்	78
விழியேகளி	385
விளங்குதொடி	207
விளங்குமணி	500
விளைபொரு	397
வின்முன்கணை	302
வின்னவிறோளா	303
வின்னிறவானுதல்	92
வினைத்திண்பகை	510
வினைநிலை	44
வினையுயிர்	232
வினையென	45
வீங்குசுரை	380
வீங்குநீர்	248
வீடுணர்ந்தோர்	277
வீதலுற்றார்	197
வெங்கதிர்	402
வெங்கண்	295
வெங்குருதி	269
வெட்சிவஞ்சி	45
வெண்சீர்	480
வெண்சீ	481
வெண்டிங்கள்	389
வெண்ணீர்மை	420
வெதிரேய்	170
வெந்தொழிற்கூ	295
வெய்யகுரற்	399
வெய்யநெடி	347
வெய்யோன்	317
வெல்புரிவி	320
வெல்பொரியும்	291
வெள்வாட்கருங்கழ	282
வெள்ளம்	300
வெள்ளம்பரந்	195
வெள்ளவரம்பின்	73
வெள்ளிமுளைத்த	318
வெளிப்படை	361
வெறிகமழ்	517
வெறிகொள்	323
வெறிகொளினச்	404
வெறியுறு	489
வெறுக்கத்தகுவன	194
வென்றான்	470
வேட்கை	432
வேட்டபொழு	72, 79
வேட்டவை	241
வேண்டார்	328
வேண்டுவங்	425
வேண்டுவதியான்	323
வேந்தார்ப்ப	332
வேப்புநனை	243
வேம்பின்	192
வேமாறு	166
வேய்தலை	510
வேய்பயிலழுவ	216
வேய்மருள்	378
வேயினதோளி	170
வேயினமென்	156
வேயொன்று	381
வேயொடு	381
வேயுங்கரும்பும்	199
வேயுள்	303
வேரல்வேலி	137, 493
வேலுங்கருவிளை	370
வேலொன்று	381
வேளாண்	186
வேற்றுமை	48
வேறுபட	367
வேறொருமாதர்	410
வேனில்வெயிற்	407
வைகலும்வைக	393, 484
வைகுறு	8
வைம்மலர்	169
வையகமெல்லாந்	485
வையந்தகளி	383
வையம்புரக்கு	387
வையம்புரவூக்கு	224
வையமகளை	315

Form 61 to end Printed at the Sadhu Press, Madras.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	30	ஐந்தினை	ஐந்திணை
18	32	மருஅலியரோ	அருலியரோ
51	18	காத்தாற்கு	காத்தார்க்கு
55	12	வேரிடத்து	வேறிடத்து
56	35	தமிரர்	தமியர்
62	20	மெய்தொட்டு	மெய்தொட்டுப்
79	15	குயிர்குலங்	குயிற்குலங்
85	23	இடந்தலைப்பாட்டானல்	இடந்தலைப்பாட்டானதல்
99	8	மணங்கழழ்	மணங்கமழ்
103	20	விழுத்தூணையே	விழுத்துணையே
113	19	எனம்வு	எனவும்
114	3	இன்னான்கு	இந்நான்கு
124	21	முந்தந்தொத்திப்	முத்தந்தொத்திப்
129	21	மகஅரிவ்	மகாஅரிவ்
136	16	துன்மென்ப	துன்பென்ப
138	15	பாடாமை	படாமை
145	9	ணுதிமுற்றிய	ணுதிமுற்றிய
140	1	வலவனுகேனு	வலவனுக்கேனு
170	1	கதமுந்	கதமுங்
175	5	விரியே	விரியே
175	26	நுமக்கியம்பு	நுமர்க்கியம்பு
177	14	நீக்குங்	நீங்குங்
181	29	மூங்குளமேழன்	மூங்குழல்
182	19	வரஙின்	வாஙின்
184	24	பாவியானே	பாவியனே
188	24	திருந்தில்	திருந்தில
195	32	கேழ்புரக்கும்	மேழ்புரக்கும்
203	9	பென்	பொன்
203	14	இத்து	இஃது
62	20	மெய்தொட்டு	மெய்தொட்டுப்
203	23	மொரு	மேரு
206	7	பெருதிணை	பெருந்திணை
206	23	வறுரொடு	வறுவரொடு
214	1–2	கணுக்காண்லும்	கணுக்காண்டலும்
226	13	சுவைவுணர்வும்	சுவையுணர்வும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
239	1	விடுரதார்	விடுதரார்
251	12	குறைமையான்	முறைமையான்
257	10	அகம்புறப்	அகப்புறப்
258	28	புறம்	புறப்
261	33	பெருளுங்	பொருளுங்
266	10	என்பவரும்	எனவரும்
270	4	பெயர்ப்ப	பெயர்ப்பப்
,,	21	நீரைமீட்ட	நிரைமீட்ட
271	4	காணியாற்று	கான்யாற்று
272	25	ஓழியாத	ஒழியாத
280	1	புரைத்தலுங்	புரைத்தலுங்
282	31	வார்முரசு	வார்முரச
287	22	விநி	விரி
288	4	யிளையுங்	மிளையுங்
296	20	பறனே	புறனே
301	20	லறிமுறையேன்	லறிமுறையென்
308	25	சிறய்பு	சிறப்பு
313	20	யெண்ணருஞ்	மெண்ணருஞ்
323	30	தருவான்கொன்	தருவான்கொல்
333	25	ஏனவரும்	எனவரும்
,,	31	,,	,,
358	34	நிதியந்துஞ்சம்	நிதியந்துஞ்சும்
360	10	நான்கு	நான்கும்
370	2	போலுமாஞ்	போலுமாங்
375	6	கய்த்தவே	காய்த்தவே
389	4	சேறினின்குருமெயிற்றின்	னின்சே றிகுதரு மெயிற்றின்
404	23	மயல்பட	அயல்பட
406	28	நிலத்திணையுமாகிய	நிலைத்திணையுமாகிய
407	2	வீண்படர்ந்து	விண்படர்ந்து
,,	14	காரம்பரப்பித்	கரம்பரப்பித்
,,	30	கருத்தாவுஞ்	கருத்தாவுங்
411	30	நிகழ்ச்சி	நெகிழ்ச்சி
414	24	கருநடரைக்	கருநடரைச்
,,	35	னவரும்	எனவரும்
424	28	புகழ	புகழ்வது
429	5	மேற்கூறி	மேற்கூறிய

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
437	4	கிசையாயால்	கிசையாமால்
438	20	வவ்லினமும்	வல்லினமும்
440	30	எமவரும்	எனவரும்
443	15	திரிதரு	திரிதருங்
443	16	றயையா	றையயா
452	24	வருமே	வருமே
467	21	மலைபடுகடாலம்	மலைபடுகடாம்
470	22	ஏனவு	எனவும்
471	7		,,
479	13	தொருளி	தொளி
491	28	மண்டிலவாசியப்பா	மண்டிலவாசிரியப்பா
504	23	கூடலார்க்	கூடலார்
,,	27	துளையாகக்	துணையாகக்
510	25	தளையே	தளையே
512	23	பெய்தலுகுறிலியல்	குறிலியல்பெய்தலு
514	6	ந்தமையன்	வந்தமையின்
517	3	முதற்கட்	முதற்கண்
519	10	ஒருசார்	ஒருசார்
525	26	மோர்னை	மோனை
531	23	முரண்டொடைக்குக்	முரண்டொடைக்குச்
537	11	நேர்க்குங்	நேர்க்கு
543	9	யியக்கம்	யிலக்கம்
547	3	என்பவாகலிள்	என்பவாகலின்
27	10	கலிவெண்பாற்	கலிவெண்பாவாற்
28	29	செய்யுளிலக்கணக்	செய்யுளிலக்கணங்
34	25	பர்விசைக்	பாவிசைக்
35	26	நிலையுதலுறத்	நிலையுறுதலுற
37	33	மெனினுங்	மெனினும்
40	26	கற்பியலுங்	கற்பியலும்
45	5	இன்னுவென்று	இன்னுவென்றும்
52	1	பொன்மை	பொன்மையும்
56	1	ஒருயி	ஓரறிவு